முன்னுரை

தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களில் இனிமேல் சம்பவிக்க வேண்டியவைகள் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் யோவானை அழைத்து "இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன்" (வெளி 4:1) என்று சொன்னார். எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கும் இதுபோன்ற அழைப்பே கொடுக்கப்பட்டது.

கர்த்தர் யோவானிடத்தில் "இங்கே ஏறி வா" என்று சொன்னார். அவர் எசேக்கியேலை நோக்கி "மனுபுத்திரனே, உன் காலூன்றி நில், உன்னுடனே பேசுவேன்" (எசே 2:1) என்று சொன்னார். யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். எரேமியா தீர்க்கதரிசியோ, எசேக்கியேலுக்கு முன்பாக கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய் அறிவித்தார்.

எரேமியா யூதாதேசத்திலிருந்து, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு, கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னார். எசேக்கியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, யூதாதேசத்தில் தங்கியிருக்கிற யூதர்களுக்கு, கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்னார்.

எசேக்கியேல் என்னும் பெயருக்கு, "தேவனுடைய பெலன்" என்று பொருள். கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு, எசேக்கியேல் தன்னுடைய மனதை கச்சையால் இடைக்கட்டி பெலனுள்ளவராயிருந்தார். கர்த்தர் தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு எசேக்கியேலை பலப்படுத்தினார்.

"இதோ, உன் முகத்தை அவர்கள் முகத்துக்கு எதிராகவும், உன் நெற்றியை அவர்கள் நெற்றிக்கு எதிராகவும் கெட்டியாக்கினேன்" (எசே 3:8) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொன்னார்.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை மனுஷருக்கு பயப்படாமலும், கலங்காமலும் தைரியமாய்ச் சொன்னார். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்களே எசேக்கியேலைக் கொன்றுபோட்டார்கள் என்று யூதர்களுடைய பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது. சிறையிருப்பிலிருந்த யூதர்கள் எசேக்கியேலின் தலையை கருங்கல்லின் மேல் மோதி உடைத்துப்போட்டார்கள் என்றும், அவருடைய தலையிலிருந்த மூளை சிதறிப்போயிற்று என்றும் யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது.

அரபு தேசத்து வரலாற்று ஆசிரியர் ஒருவர் எசேக்கியேலின் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தார். எசேக்கியேல் மரித்த பின்பு அவருடைய சரீரத்தை நோவாவின் குமாரனாகிய சேமின் கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள் என்று அரபு தேசத்து ஆசிரியர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த காலத்தில், எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் எழுதப்பட்டது.

யூதர்கள் பாபிலோன் தேசத்தில் எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருந்தார்கள். அவர்களுடைய சிறையிருப்பின் ஆரம்பகாலத்தில் எசேக்கியேல் தீர்க்கதரிசன ஊழியம் செய்தார். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே யூதர்கள் அதிக வேதனைகளையும், பாடுகளையும், துன்பங்களையும் அனுபவித்தார்கள். அவர்களுக்கு தம்முடைய ஆறுதலான செய்திகளை சொல்லுவதற்கு, கர்த்தர் எசேக்கியேலைப்போன்ற தீர்க்கதரிசிகளை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலேயே எழுப்பினார்.

கர்த்தருடைய சித்தம், கர்த்தருடைய ஜனங்கள் பாடுகளை அனுபவிப்பதற்கான காரணங்கள், கர்த்தர் அவர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்போவது ஆகிய செய்திகளை தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு சொன்னார்கள்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த ஆரம்பகாலத்தில், கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவில்லை. அவர்கள் தங்கள் ஆவியில் சோர்ந்துபோயிருந்தார்கள். கர்த்தரிடத்தில் நம்பிக்கையில்லாதிருந்தார்கள். அவர்கள் மத்தியில் எசேக்கியேல் கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னார். கர்த்தருடைய சித்தத்தையும், திட்டத்தையும் அவர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

எசேக்கியேல் சொன்ன தீர்க்கதரிசன வாக்கியங்களை புரிந்துகொள்வது சற்று கடினமாக உள்ளது. இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் ஆரம்ப பகுதியையும், இதன் பின்பகுதியையும் புரிந்துகொள்ளுவது கடினம். இந்தப் புஸ்தகத்தில், எசேக்கியேல் ஆவிக்குரிய செய்திகளை நேரடியாக சொல்லாமல், மறைமுகமாக சொல்லியிருக்கிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் புரிந்துகொள்வதற்கு கடினம். ஆகையினால் இந்தப் புஸ்தகத்தை, தங்கள் பிள்ளைகள் வாசிக்கக்கூடாது என்று, யூதர்கள் தடைபண்ணியிருந்தார்கள். அவர்களுக்கு முப்பது வயது ஆனபின்பே, இந்தப் புஸ்தகத்தை வாசிப்பதற்கு அனுமதி கொடுத்தார்கள். வேதபுஸ்தகத்தை வாசிக்கும்போது, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது அவர்களுக்கு மிகவும் கடினமாயிருந்தால், அவர்களுக்கு வேதபுஸ்தகத்தின்மீது வெறுப்பு வந்துவிடும் என்று நினைத்து யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை விதித்தார்கள்.

நாம் வேதவாக்கியங்களைப் படிக்கும்போது, வசனத்தின் அர்த்தங்கள் நமக்கு புரியாமல் கடினமாயிருந்தாலும், நாம் மனத்தாழ்மையோடும் பயபக்தியோடும் அதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். வேதத்தில் புதைந்திருக்கும் இரகசியங்களை கருத்தாய் தேடவேண்டும். ஒரே வேளையில் நம்மால் எல்லா வசனங்களுக்கும் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் போகலாம்.

ஆனாலும் நாம் வேதவசனங்களை தொடர்ந்து வாசிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர், அதன் இரகசியங்களை நமக்குப் போதிப்பார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகள் மூலமாய் நம்மை உற்சாகப்படுத்துவார். கர்த்தர்மீது நாம் வைத்திருக்கும் விசுவாசம் உறுதிப்படும்.

எசேக்கியேலின் தரிசனங்கள் புரிந்து கொள்ள முடியாமல் குழப்பமாயிருக்கிறது. ஆனாலும் அவருடைய பிரசங்கச் செய்தி மிகவும் தெளிவாகயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளின் மீறுதல்களை அவர்களுக்கு எடுத்து சொல்லுவதே எசேக்கியேலின் நோக்கம். அவர்கள் சிறையிருப்பிலிருக்கும் போது, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தங்களைத் தாழ்த்தவேண்டும். தங்களுடைய பாடுகளை நினைத்து கர்த்தரிடத்தில் விவாதம் பண்ணக்கூடாது.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் ஒடுக்கப்பட்டாலும், கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு வெளிப்படுத்தி சொல்ல, தீர்க்கதரிசிகளும் அவர்களோடு கூடயிருந்தார்கள். யூதர்கள் சிறைப்பட்டதினால் புறஜாதியார்கள் இஸ்ரவேல் ஜனங்களையும், இஸ்ரவேலின் தேவனையும் ஏளனம்பண்ணினார்கள். இவற்றிற்கு மத்தியில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், அவருடைய ஜனத்திற்கு கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். அவர்கள் கர்த்தருக்கு சாட்சியாய் ஜீவித்தார்கள்.

எசேக்கியேல் கர்த்தருடைய கடிந்து சொல்லும் வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கு தைரியமாய்ச் சொன்னார். அவரிடத்தில் கலக்கமில்லை. பயமுமில்லை. ஆனாலும் எசேக்கியேல் தன்னுடைய புஸ்தகத்தின் இறுதிப் பகுதியில், யூதர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை அவர்களுக்கு உறுதிபண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது கிருபையாகவும், இரக்கமாகவும் இருக்கிறார் என்பதை சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு தெளிவுபடுத்துகிறார்.

எசேக்கியேல் - விரிவுரை
EZEKIEL - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL
GOOD NEWS PUBLISHERS

எசேக்கியேல் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் முதல் மூன்று அதிகாரங்களில், யூதாஜனங்களுடைய பாவங்களினிமித்தம், எசேக்கியேல் அவர்களைக் கடிந்துகொள்கிறார். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது இன்னும் அதிகமாய் வரும் என்று எச்சரிக்கிறார்.

எசேக்கியேல் 4-24 ஆகிய அதிகாரங்களில், எசேக்கியேல் யூதர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். எசேக்கியேல் 25-35 ஆகிய அதிகாரங்களில், இஸ்ரவேல் தேசத்தை சுற்றிலுமிருக்கிற அண்டை தேசத்தாருக்கும் கர்த்தருடைய வார்த்தை அறிவிக்கப்படுகிறது. கர்த்தர் புறஜாதியாரின் அழிவை எசேக்கியேல் மூலமாய் வெளிப்படுத்துகிறார்.

எசேக்கியேல் 36-48 ஆகிய அதிகாரங்களில் கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்கள் மறுபடியுமாக மீட்டுக்கொள்ளப்படுவார்கள் என்றும், எருசலேம் நகரமும், தேவாலயமும் திரும்பவும் கட்டப்படும் என்றும் எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

1 அதிகாரம்

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும் காலமும், சூழ்நிலையும் (எசே 1:1). எசேக்கியேல் தீர்க்கதரிசனம் சொல்லும் இடம் (எசே 1:2). எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டான விதம் (எசே 1:3). நாலு ஜீவன்களைப்பற்றிய தரிசனம் (எசே 1:4-14). நாலு முகங்களை உடைய ஒரு சக்கரம் (எசே 1:15-25). சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர் (எசே 1:26-28). இந்த அதிகாரத்தில் தேவனுடைய மகிமை தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

எசேக்கியேல்
எசே 1:1-3

எசே 1:1. முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, சம்பவித்தது என்னவென்றால், வானங்கள் திறக்கப்பட, நான் தேவதரிசனங்களைக் கண்டேன்.

எசே 1:2. அது யோயாக்கீன் ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷமாயிருந்தது.

எசே 1:3. அந்த ஐந்தாந்தேதியிலே கல்தேயர் தேசத்திலுள்ள கேபார் நதியண்டையிலே பூசியென்னும் ஆசாரியனுடைய குமாரனாகிய எசேக்கியேலுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அங்கே கர்த்தருடைய கரம் அவன்மேல் அமர்ந்தது.

எசேக்கியேல் தேவதரிசனங்களைக் காண்கிறார். கர்த்தர் இந்த தரிசனங்களின் மூலமாய் எசேக்கியேலுக்கு தம்முடைய கட்டளைகளைக் கொடுக்கிறார். கர்த்தருடைய வார்த்தை தரிசனங்களோடு வருவதினால், அவையெல்லாம் உறுதிபண்ணப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய சித்தத்தை நமக்கு பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகிறார். கர்த்தருக்கு சித்தமான காரியம் அவரால் வாய்க்கிறது. கர்த்தர் தம்மைப்பற்றி நம்முடைய ஆத்துமாவுக்கு எப்போது, எங்கே, எப்படி வெளிப்படுத்துகிறார் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். கர்த்தர் தம்மை நமக்கு வெளிப்படுத்துவது அவருக்கு பிரியமாயிருக்கிறது.

எசேக்கியேல் முப்பதாம் வருஷம், நாலாம் மாசம், ஐந்தாம் தேதியிலே தேவதரிசனங்களைக் காண்கிறார். "முப்பதாம் வருஷம்" என்பது எசேக்கியேலின் வயதைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். எசேக்கியேல் ஒரு ஆசாரியர். அவர் பூசி என்னும் ஆசாரியனுடைய குமாரன். ஆசாரியருக்கு முப்பது வயதாகும்போது, அவர் ஆசாரிய ஊழியத்தை முழுமையாய்ச் செய்வதற்கு தகுதி பெறுகிறார்.

"முப்பதாம் வருஷம்" என்பது நெபோபொலேசர் ஆட்சிக்கு வந்த முப்பதாவது வருஷத்தை குறிக்கும் என்றும் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இவர் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் தகப்பனார்.

பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா கர்த்தரின் ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடித்தான் (2இராஜா 22:8). இது யோசியா ராஜாவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சம்பவம். "முப்பதாம் வருஷம்" என்பது இல்க்கியா கர்த்தரின் ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடித்த நாளிலிருந்து, முப்பதாவது வருஷத்தைக் குறிக்கும் என்றும் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

முப்பதாம் வருஷம் நாலாம் மாசத்திலே எசேக்கியேல் தேவதரிசனங்களைக் காண்கிறார். யூதருக்கு நாலாம் மாசம் என்பது, நமக்கு ஜூன் மாதத்தைக் குறிக்கும். ஜூன் மாசம் ஐந்தாம் தேதியிலே எசேக்கியேல் தேவதரிசனங்களைக் காண்கிறார்.

எசேக்கியேல் தேவதரிசனங்களைக் கண்ட நாள் ஓய்வுநாளாக இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "ஏழுநாள் முடிந்த பின்பு கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று" (எசே 3:16). இது அடுத்த ஓய்வுநாளாகும். இந்த ஓய்வுநாளில் எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை மறுபடியும் உண்டாயிற்று.

எசேக்கியேல் தேவதரிசனங்களைக் கண்டபோது, அவர் கல்தேயருடைய தேசத்தில், கேபார் நதியண்டையில் சிறைப்பட்டவர்கள் நடுவிலிருக்கிறார். இது யோயாக்கீம் ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷமாயிருக்கிறது. எசேக்கியேலும், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களும் மிகுந்த வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். இப்படிப்பட்ட சோகமான சூழ்நிலையில், கர்த்தர் எசேக்கியேலுக்கு தேவதரிசனங்களைக் காண்பித்து அவரைக் கனப்படுத்துகிறார்.

கர்த்தருடைய ஜனத்தில் பிரபலமானவர்கள் இப்போது கல்தேயர் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். யூதர்களில் மீதமானோர் இன்னும் யூதாதேசத்திலேயே தங்கியிருக்கிறார்கள். கல்தேயர் தேசத்து சிறையிருப்புக்குப் போனவர்கள் யூதர்களில் பிரபலமானவர்கள். இவர்கள் எல்லோருமே யூதாமனுஷரில் பிரசித்திப் பெற்றவர்கள். கல்தேயர்கள் இப்படிப்பட்டவர்களை மாத்திரமே முதலாவதாக சிறைப்பிடித்தார்கள்.

கர்த்தருடைய உபதேச வார்த்தையும், அவருடைய கோலும் நமக்கு அதிக பிரயோஜனமுள்ளவை. கர்த்தருடைய வார்த்தையும் அவருடைய கோலும் நம்மை திருத்தி, சரியான பாதையில் வழிநடத்தும். கர்த்தர் தம்முடைய கோலை நம்மீது பயன்படுத்தும்போது, அவருடைய வார்த்தை, அதற்கான காரணத்தை நமக்கு விளக்கி சொல்லுகிறது. கர்த்தருடைய வார்த்தை நமக்கு பிரயங்கம்பண்ணப்படும் போது, அவருடைய கோல் அந்த வார்த்தைகளை நமக்குள் பதியவைக்கிறது. கர்த்தருடைய வார்த்தையும், அவருடைய கோலும் இணைந்து நமக்கு ஞானத்தைக் கொடுக்கிறது.

யூதாவின் மனுஷர் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்களுடைய ஆவியும் ஆத்துமாவும் சோர்ந்து போயிருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு உதவிசெய்வதற்காகவே கர்த்தர் எசேக்கியேலைப்போன்ற ஊழியக்காரர்களை எழுப்புகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு உபதேசம் பண்ணுகிறார். கர்த்தருடைய உபதேசங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நமக்கு ஏதாவது தடைகள் இருக்கும்போது, கர்த்தர் நமக்கு வேறு வழிகளை திறந்துகொடுக்கிறார். சாதாரண உபாயகளுக்குப் பதிலாக, வேறு சில விசேஷித்த உபாயங்கள் மூலமாய் கர்த்தர் நமக்கு உபதேசம்பண்ணுகிறார்.

யூதர்கள் தங்கள் சொந்த தேசமாகிய யூதாதேசத்திலே இருந்தபோது எரேமியா தீர்க்கதரிசி அவர்களோடு கூடயிருந்தார். அவர் கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு பிரசங்கம்பண்ணினார். யூதர்கள் பாபிலோன் தேசத்துக்கு சிறைப்பட்டுப்போனபோது, எசேக்கியேல் அவர்களோடு கூடயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசம் பண்ணுவதற்கு, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை நியமிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் பல தேசங்களுக்கும் சிதறிப்போயிருந்தாலும், அங்கேயும் கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசம்பண்ணுகிறவர்கள் இருப்பார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தவர்களில் எசேக்கியேல் தீர்க்கதரிசியும் ஒருவர். அவர் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவிலிருக்கும்போது தேவதரிசனங்களைக் காண்கிறார். கேபார் நதி என்றால் என்ன என்றோ, அல்லது அது எங்கே இருக்கிறது என்றோ நிச்சயமாகத் தெரியவில்லை. யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்ததினால், கேபார் நதியானது அக்காலத்து பாபிலோன் தேசத்தில் இருந்திருக்கவேண்டும் என்பது மாத்திரமே தெளிவாகத் தெரிகிறது.

யூதாமனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப் போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வந்தது. கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் இப்போது தங்களுடைய பாவங்களினிமித்தமாய் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள்.

யூதர்களுடைய பாவங்களினிமித்தமாய் யூதாதேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்தது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஒரு தேசத்தின்மீது வரும்போது, அந்த தேசத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் வேதனைகளும் பாடுகளும் வரும். தேசத்திலுள்ள எல்லோருக்குமே சஞ்சலங்களும் குறைவுகளும் உண்டாகும். தேசத்திலுள்ள நல்லோருக்கும் பொல்லாருக்கும் இந்த வேதனைகளில் பங்கு இருக்கும். கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர்களும், கர்த்தருக்கு மிகவும் நெருக்கமாயிருக்கிறவர்களும், தங்கள் தேசத்திற்கு வரும் பொதுவான சஞ்சலங்களில் தங்கள் பங்குகளை அனுபவிப்பார்கள்.

பரிசுத்தவான்களிடத்தில் பாவம் இல்லாவிட்டாலும், கர்த்தர் ஒரு தேசம் முழுவதற்கும் தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுக்கும்போது, அவருடைய நியாயத்தீர்ப்பின் வேதனைகளை பாவிகளோடு சேர்ந்து, பரிசுத்தவான்களும் அனுபவிப்பார்கள்.

எசேக்கியேலிடத்தில் பாவமோ அக்கிரமமோ இல்லை. ஆனால் பாபிலோன் தேசத்திலே சிறைப்பட்டவர்களோடு, எசேக்கியேலும் வேதனைகளை அனுபவிக்கிறார். எசேக்கியேல் சிறைப்பட்டவர்களில் ஒருவராக அவர்கள் நடுவிலிருக்கிறார். யூதா மனுஷர் அனுபவிக்கிற வேதனைகளையும், பாடுகளையும், துக்கங்களையும் சஞ்சலங்களையும் எசேக்கியேலும் அனுபவிக்கிறார். எல்லோரும் ஒன்றுபோல் பாடுகளை அனுபவிக்கிறார்கள்.

எசேக்கியேலும் அவர்களைப்போல கஷ்டங்களை அனுபவிப்பதினால், அவரால் அவர்களுக்கு நடைமுறையில் பிரயோஜனப்படக்கூடிய நல்ல உபதேசங்களை சொல்ல முடிகிறது. எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை சிறையிருப்பிலுள்ளவர்களுக்கு சொல்லும் போது, அந்த வார்த்தைகளை அவர் தன்னுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து உணர்ந்து சொல்லுகிறார்.

நாம் எங்கேயிருந்தாலும் தேவனோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். அப்போஸ்தலர் பவுல் சிறைச்சாலையிலிருந்தார். அங்கே அவர் விடுதலையோடு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார். யோவானை பத்மு தீவுக்கு நாடு கடத்திவிட்டார்கள். அங்கே தனிமையாகயிருந்த அவரை, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வந்து சந்தித்தார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எங்கேயிருந்தாலும், அவர்கள் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். இது கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது. தான் கண்டதையும், தான் கேட்டதையும், தான் உணர்ந்ததையும் எசேக்கியேல் இந்த அதிகாரத்தில் தெளிவாக எழுதுகிறார். "வானங்கள் திறக்கப்பட நான் தேவதரிசனங்களைக் கண்டேன்" (எசே 1:1) என்று எசேக்கியேல் சொல்லுகிறார்.

ஒருவனும் தேவனைக் கண்டதில்லை. தேவனைக் கண்டவர்களால் உயிரோடு இருக்கமுடியாது. ஆனாலும் அநேகர் தேவனுடைய தரிசனங்களை கண்டிருக்கிறார்கள். தேவனுடைய தெய்வீக மகிமையை பார்த்திருக்கிறார்கள். கர்த்தருடைய உபதேசங்களைக் கேட்டிருக்கிறார்கள்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு ஒரு முக்கியமான ஊழியத்தைக் கொடுக்கிறார். அவர் இஸ்ரவேல் ஜனங்களுடைய இருதயத்தை கர்த்தரிடத்திற்கு திருப்ப வேண்டும். கர்த்தரே இஸ்ரவேலின் தேவன். அவர்கள் கர்த்தருடைய இஸ்ரவேலர்கள். இஸ்ரவேல் ஜனங்களின் இருதயங்களை, அவர்களுடைய தேவனிடத்திற்கு திருப்புவது மிகவும் முக்கியமான ஊழியம். எசேக்கியேல் இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தரிடத்திற்கு திருப்ப வேண்டுமென்றால், அவர் தேவதரிசனங்களைக் கண்டிருக்கவேண்டும். அப்போதுதான் எசேக்கியேலால் முழுநிச்சயத்தோடு கர்த்தருடைய ஊழியத்தை செய்ய முடியும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க வேண்டும். கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை தெளிவாகப் புரிந்திருக்கவேண்டும். மற்ற ஜனங்களுக்கு கர்த்தரைப்பற்றிய அறிவையும், அவருடைய அன்பையும் உபதேசம் பண்ணும்போது, உபதேசம் பண்ணுகிறவர்கள் முதலாவதாக கர்த்தரைப்பற்றிய அறிவைப் பெற்றிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய அன்பை ருசித்துப் பார்த்திருக்கவேண்டும்.

எசேக்கியேல் வானங்கள் திறக்கப்பட தேவதரிசனங்களைக் காண்கிறார். தேவதரிசனங்களைப் பார்ப்பதற்கு தடையாகயிருக்கிற கார்மேகங்கள் விலக்கப்படுகிறது. மனுஷருக்கும் தேவனுக்கும் இடையிலுள்ள தூரம் குறைக்கப்படுகிறது. கர்த்தரே வானங்களை திறந்து, தம்மைப்பற்றிய தரிசனங்களை எசேக்கியேலுக்குக் காண்பிக்கிறார்.

எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. அவர் கர்த்தருடைய வார்த்தைகளை தன்னுடைய செவிகளால் கேட்கிறார். அவர் ஏற்கெனவே தேவதரிசனங்களைக் கண்டிருக்கிறார். அவர் கண்ட தரிசனங்கள், அவர் கேட்கப்போகிற வார்த்தைகளை புரிந்து கொள்வதற்கு, அவரை ஆயத்தப்படுத்துகிறது.

கர்த்தரே வார்த்தையாகயிருக்கிறார். "ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவா 1:1). வார்த்தையாகயிருக்கிற தேவனுடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று.

தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார். பரலோகத்தின் தேவன், வானங்களைத் திறந்து, தம்முடைய தரிசனங்களை எசேக்கியேலுக்கு காண்பிக்கிறார். தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் எசேக்கியேலை அனுப்புகிறார்.

எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானபோது, அங்கே கர்த்தருடைய கரம் அவர்மேல் அமருகிறது. எசேக்கியேல் தேவனுடைய வல்லமையை உணருகிறார். தேவதரிசனங்களைக் காண்பதற்கு, கர்த்தர் எசேக்கியேலின் கண்களைத் திறக்கிறார். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு கர்த்தர் எசேக்கியேலின் செவிகளையும் திறக்கிறார். தேவதரிசனங்களையும், தேவவார்த்தைகளையும் பெற்றுக்கொள்வதற்கு கர்த்தர் எசேக்கியேலின் இருதயத்தையும் திறக்கிறார். கர்த்தருடைய கரம் எசேக்கியேலின்மேல் அமருகிறது.

நாலு ஜீவன்கள்
எசே 1:4-14

எசே 1:4. இதோ, வடக்கேயிருந்து புசல்காற்றும் பெரிய மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக்கண்டேன்; அதைச் சுற்றிலும் பிரகாசமும், அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் நிறமும் உண்டாயிருந்தது.

எசே 1:5. அதின் நடுவிலிருந்து நாலு ஜீவன்கள் தோன்றின; அவைகளின் சாயல் மனுஷ சாயலாயிருந்தது.

எசே 1:6. அவைகளில் ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு முகங்களும், ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு செட்டைகளும் இருந்தன.

எசே 1:7. அவைகளுடைய கால்கள் நிமிர்ந்த கால்களாயிருந்தன; அவைகளுடைய உள்ளங்கால்கள் கன்றுக்குட்டியின் உள்ளங்கால்களுக்கு ஒப்பாயிருந்தன; அவைகள் துலக்கப்பட்ட வெண்கலத்தின் வருணமாய் மின்னிக்கொண்டிருந்தன.

எசே 1:8. அவைகளுடைய செட்டைகளின்கீழ் அவைகளின் நாலு பக்கங்களிலும் மனுஷகைகள் இருந்தன; அந்த நாலுக்கும் அதினதின் முகங்களும் அதினதின் செட்டைகளும் உண்டாயிருந்தன.

எசே 1:9. அவைகள் ஒவ்வொன்றின் செட்டைகளும் மற்றதின் செட்டைகளோடே சேர்ந்திருந்தன; அவைகள் செல்லுகையில் திரும்பாமல் ஒவ்வொன்றும் தன்தன் திசைக்கு நேர்முகமாய்ச் சென்றன.

எசே 1:10. அவைகளுடைய முகங்களின் சாயலாவது, வலதுபக்கத்தில் நாலும் மனுஷமுகமும் சிங்கமுகமும், இடதுபக்கத்தில் நாலும் எருது முகமும் கழுகு முகமுமாயிருந்தன.

எசே 1:11. அவைகளுடைய முகங்கள் இப்படியிருக்க, அவைகளுடைய செட்டைகள் மேலே பிரிந்திருந்தன, ஒவ்வொன்றுக்குமுள்ள இரண்டிரண்டு செட்டைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தன; மற்ற இரண்டிரண்டு செட்டைகள் அவைகளுடைய உடல்களை மூடின.

எசே 1:12. அவைகள் ஒவ்வொன்றும் தன்தன் திசைக்கு நேர்முகமாய்ச் சென்றது; ஆவிபோக வேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின; போகையில் அவைகள் திரும்பிப்பார்க்கவில்லை.

எசே 1:13. ஜீவன்களுடைய சாயல் எப்படியிருந்ததென்றால், அவைகள் எரிகிற அக்கினித்தழலின் தோற்றமும் தீவர்த்திகளின் தோற்றமுமாயிருந்தது; அந்த அக்கினி ஜீவன்களுக்குள்ளே உலாவிப் பிரகாசமாயிருந்தது; அக்கினியிலிருந்து மின்னல் புறப்பட்டது.

எசே 1:14. அந்த ஜீவன்கள் மின்னலின் தோற்றம்போல ஓடித்திரிந்தன.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எசேக்கியேலை தம்முடைய ஊழியக்காரியமாக அனுப்புகிறார். எசேக்கியேலின் மனதில் தேவனைப்பற்றிய உன்னதமான சிந்தனைகள் இருக்கவேண்டும். அவர் கர்த்தரை மகிமைப்படுத்தி, கனம்பண்ணவேண்டும். இதற்காகவே கர்த்தர் எசேக்கியேலுக்கு தேவதரிசனங்களைக் காண்பிக்கிறார்.

எசேக்கியேல் கண்ட தேவதரிசனங்கள், "கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருக்கிறது" (எசே 1:28). இந்த தரிசனத்தைப் பார்க்கும்போதே, எசேக்கியேலின் இருதயத்திற்குள் பரிசுத்தமான பயமுண்டாயிற்று. எசேக்கியேல் கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனத்தைக் கண்டபோது முகங்குப்புற விழுகிறார்.

யூதர்களில் பிரதானமானவர்கள் பாபிலோன்தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். இன்னும் ஏராளமான யூதர்கள் சிறையிருப்புக்குப் போகாமல் யூதாதேசத்திலேயே தங்கி விடுகிறார்கள். எருசலேம் நகரம் அழிந்துபோகும் என்பதை யூதர்களில் அநேகர் நம்பவில்லை. அவர்கள் பாவிகளாகயிருந்தாலும், கர்த்தர் தம்முடைய பரிசுத்தமான நகரத்தை பாதுகாத்துக் கொள்வார் என்று நினைத்தார்கள். எசேக்கியேலோ எருசலேமின் அழிவை தரிசனத்தில் காண்கிறார். அவர் இப்போது காண்கிற இந்த தரிசனம், எருசலேமின் அழிவைப்பற்றி அவர் கண்ட தரிசனத்திற்கு ஒப்பாயிருக்கிறது.

"இதோ, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல இருந்தது; அவருடைய மகிமையினால் பூமி பிரகாசித்தது. நான் கண்ட இந்தத் தரிசனம் நகரத்தை அழிக்கவந்தபோது கண்ட தரிசனம்போல இருந்தது; இந்த தரிசனங்கள் கேபார் நதியண்டையிலே நான் கண்டிருந்த தரிசனத்தைப்போலும் இருந்தது; நான் முகங்குப்புற விழுந்தேன்" *(எசே 43:2,3).*

யூதாவின் மனுஷரிலும், எருசலேமின் குடிகளிலும் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிற யூதர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருக்கிறார்கள். கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசி, தான் கண்ட தரிசனத்தின் மூலமாக, அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

பக்தியுள்ள யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு அருகாமையிலேயே இருக்கிறார். பாபிலோன் தேசத்தில் தேவனுடைய ஆலயம் இல்லை. ஆனால் தேவாலயத்தின் கர்த்தர் பாபிலோன் தேசத்தில் தம்முடைய ஜனத்தோடு கூடவே இருக்கிறார்.

கர்த்தருடைய ஜனம் இப்போது அந்நிய தேசத்தில் குடியிருக்கிறார்கள். அவர்கள் எங்கு இருந்தாலும் கர்த்தருடைய ஜனம்தான். கர்த்தர் அவர்களுடைய தேவனாகவே இருக்கிறார். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தர் தம்முடைய மகிமையை அவர்கள் நடுவிலே வெளிப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தருடைய மகிமை அவர்கள் மத்தியிலே பிரத்தியட்சமாய் இறங்கி வந்தது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் அடையாளமாயிருந்தது. கர்த்தருடைய பிள்ளைகள் எங்கே இருக்கிறார்களோ, அங்கே கர்த்தரும் அவர்களோடு கூடவே இருக்கிறார்.

"இரண்டு பேர் அல்லது மூன்று பேர் என்னுடைய நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே, நான் இருக்கிறேன்" என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் வாக்குப்பண்ணுகிறார்.

எசேக்கியேல் கண்ட தேவதரிசனங்களின் முதல் பகுதியில் கர்த்தரோடுகூட தேவதூதர்களும் வருகிறார்கள். தேவதூதர்கள் கர்த்தருக்கு பணிவிடை செய்கிறவர்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறவர்கள். தேவதூதர்கள் கர்த்தருடைய வார்த்தையின் சத்தத்தை மிகவும் கவனமாய்க் கேட்கிறவர்கள்.

எசேக்கியேல் தேவதரிசனங்களைக் காணும்போது, அந்த தரிசனத்திற்கு ஒரு அறிமுகத்தை சொல்லுகிறார். "இதோ, வடக்கேயிருந்து புசல்காற்றும் பெரிய மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக்கண்டேன்; அதைச் சுற்றிலும் பிரகாசமும், அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் நிறமும் உண்டாயிருந்தது" *(எசே 1:4).* தரிசனத்தின் பின்னணியே மிகவும் பிரமாண்டமாயிருக்கிறது. அது எசேக்கியேலின் இருதயத்தையும் சிந்தையையும் தட்டி எழுப்புகிறது.

எசேக்கியேல் முதலில் வானங்கள் திறக்கப்பட்டதைக் காண்கிறார். திறக்கப்பட்ட வானங்களை அவர் நோக்கிப் பார்த்தபோது, அங்கே தேவதரிசனங்களைக் காண்கிறார். வானங்கள் நன்றாக திறக்கப்படவேண்டும். அப்போதுதான் தேவதரிசனங்களை தெளிவாகக் காணமுடியும்.

வானங்கள் திறக்கப்பட்டபோது வடக்கேயிருந்து புசல் காற்று வருவதை எசேக்கியேல் காண்கிறார். இந்தக் காற்று வானத்திலுள்ள கார்மேகங்களையெல்லாம் அப்புறப்படுத்துகிறது. தேவதரிசனங்கள் தெளிவாகத் தெரிவதற்கு புசல் காற்று வானங்களை தெளிவுபடுத்துகிறது. வானத்திலுள்ள மப்பையும், மந்தாரத்தையும் அகற்றிப்போடுகிறது.

கர்த்தரே வடக்கேயிருந்து புசல் காற்றை அனுப்புகிறார். வானத்தையும், காற்றையும் தெளிவுபடுத்துவதற்கு கர்த்தர் புசல் காற்றைப் பயன்படுத்துகிறார். நாம் பரலோகத்திலுள்ள காரியங்களோடு ஐக்கியமாகயிருக்க வேண்டுமென்றால், நம்முடைய மனக்கண்களும் பிரகாசமுள்ளதாயிருக்கவேண்டும். வானமும் மந்தாரமில்லாமல் தெளிவாயிருக்கவேண்டும்.

"அப்பொழுது அவர்: நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார்; அப்பொழுது, இதோ, கர்த்தர் கடந்துபோனார்; கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமிஅதிர்ச்சி உண்டாயிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை" (1இராஜா 19:11).

எலியா பலத்த காற்றைக் கண்டபோல, எசேக்கியேல் தீர்க்கதரிசியும் வடக்கேயிருந்து புசல் காற்று வருவதைக் காண்கிறார். இந்தக் காற்று கர்த்தருக்கு வழியையும் ஆயத்தம்பண்ணுகிறது. கர்த்தர் கார்மேகங்களிலிருந்து வருகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய அக்கினி மயமான இரதத்தைக் காண்கிறார்.

"இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார்; கரும்புனல்களையும், ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம்மைச் சூழக்கூடாரமாக்கினார்" (சங் 18:11).

"தமது மேல்வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவி, மேகங்களைத் தமது இரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின்மேல் செல்லுகிறார்" (சங் 104:3).

எசேக்கியேல் வடக்கேயிருந்து புசல் காற்றும், பெரிய மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக்காண்கிறார். கர்த்தர் சீனாய் மலையிலே கார்மேகத்தில் வாசம்பண்ணினார். எசேக்கியேல் இங்கு காண்கிற தரிசனம், சீனாய் மலையிலே மோசே கண்ட தரிசனத்திற்கு ஒப்பாயிருக்கிறது.

"கர்த்தருடைய மகிமை சீனாய்மலையின்மேல் தங்கியிருந்தது; மேகம் ஆறுநாள் அதை மூடியிருந்தது; ஏழாம்நாளில் அவர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார். மலையின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போல் இருந்தது" (யாத் 24:16,17).

கர்த்தர் மோசேக்கு தம்மை எரிகிற முட்செடியில் வெளிப்படுத்தினார். கர்த்தர் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார். அக்கினியோடு அவருடைய மகிமையும் கலந்திருக்கிறது. அக்கினி மிகவும் பிரகாசமாயிருக்கிறது.

நம்மால் அக்கினியை ஊடுருவிப் பார்க்க முடியாது. நாம் எப்படித்தான் தேடிப்பார்த்தாலும், கர்த்தரை பரிபூரணமாய்த் தரிசிக்க முடியாது. கர்த்தருடைய பரிபூரண மகிமையை ஒருவரும் தரிசித்ததில்லை. ஆனாலும் கர்த்தருடைய மகிமையைச் சுற்றிலும் காணப்படும் பிரகாசத்தை நம்மால் தரிசிக்க முடியும்.

மோசே தேவனுடைய முகத்தை தரிசிக்கவில்லை. அவருடைய பின்பகுதியை மாத்திரமே தரிசித்தார். தேவன் எப்படியிருக்கிறார் என்பதை தீர்மானம்பண்ணுவது மிகவும் எளிது. தேவன் எப்படியிருக்கிறார் என்பதை விவரிப்பது மிகவும் கடினம்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி அக்கினியையும், அதைச் சுற்றிலும் பிரகாசத்தையும் பார்த்தார். "அதின் நடுவிலிருந்து நாலு ஜீவன்கள் தோன்றின; அவைகளின் சாயல் மனுஷ சாயலாயிருந்தது" (எசே 1:5). இந்த நாலு ஜீவன்களும் அக்கினிக்கு நடுவிலிருந்து தோன்றிற்று. இவை கேருபீன்கள்.

தேவதூதர்கள் ஆவிகளாயிருக்கிறார்கள். மனுஷரால் அவற்றை தரிசிக்க முடியாது. அவைகளின் சாயல் மனுஷசாயலாயிருக்கிறது. அவை தங்களுக்குத் தாங்களே ஜீவனுள்ள சிருஷ்டிகளல்ல. அவை ஜீவனுள்ள சிருஷ்டிகளுக்கு ஒப்பானது. கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை வழிநடத்துகிறார். எசேக்கியேலுக்கு எது தேவை என்று கர்த்தர் நினைக்கிறாரோ, அதை மாத்திரமே கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்துகிறார்.

நாலு ஜீவன்களுக்கு ஒப்பானவை அக்கினியின் நடுவிலிருந்து தோன்றுகிறது. இந்த தரிசனத்தை எசேக்கியேல் தீர்க்கதரிசி இவ்வாறு சொல்லுகிறார். "இது நான் கேபார் நதியண்டையிலே இஸ்ரவேலின் தேவனுக்குக் கீழே இருக்கக்கண்ட அந்த ஜீவன்தானே; அவைகள் கேருபீன்கள் என்று அறிந்துகொண்டேன்" (எசே 10:20).

தான் கண்ட நான்கு ஜீவன்களும் ஜீவனுள்ள சிருஷ்டிகள் என்று எசேக்கியேல் சொல்லுகிறார். இவை கர்த்தருடைய சிருஷ்டிகள். கர்த்தர் தம்முடைய கரங்களினால் கேருபீன்களை சிருஷ்டித்தார். வானத்தில் சூரியன் இருக்கிறது. அது அக்கினி பிளம்பாயிருக்கிறது. கர்த்தரே சூரியனை படைத்தார். ஆனாலும் சூரியன் ஜீவனுள்ள சிருஷ்டியல்ல.

எசேக்கியேல் தரிசித்த நாலு ஜீவன்களும் ஜீவனுள்ள சிருஷ்டிகள். "அவைகளில் ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு முகங்களும், ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு செட்டைகளும் இருந்தன" (எசே 1:6). இந்த நாலு ஜீவன்களும் ஒன்றுக்கொன்று நெருக்கமாகவும், ஐக்கியமாகவும் இருக்கிறது. கர்த்தர் இந்த நாலு ஜீவன்களையும் வானத்திலுள்ள நான்கு காற்றுகளை நோக்கி அல்லது, நான்கு திசைகளை நோக்கி அனுப்புகிறார்.

"வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" (மத் 24:31).

சகரியா நான்கு ஜீவன்களையும் நான்கு இரதங்களாக காண்கிறார். இந்த நான்கு இரதங்களும் கிழக்கு, மேற்கு வடக்கு, தெற்கு ஆகிய திசைகளை நோக்கி புறப்பட்டுப்போகிறது.

"நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்து, இதோ, இரண்டு பர்வதங்களின் நடுவாகப் புறப்பட்டுவருகிற நாலு இரதங்களைக் கண்டேன்; அந்தப் பர்வதங்கள் வெண்கலப் பர்வதங்களாயிருந்தன" (சக 6:1).

கர்த்தர் எல்லா திசைகளுக்கும் தம்முடைய தூதர்களை அனுப்புகிறார். கர்த்தர் சொல்லுகிற கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக, அவரிடத்தில் எண்ணிடலங்காத தூதர்கள் இருக்கிறார்கள். எசேக்கியேல் தரிசித்த நான்கு ஜீவன்களின் சாயல் மனுஷசாயலாயிருக்கிறது (எசே 1:5). அவை மனுஷரைப்போலவே சிந்திக்கும். மனுஷருக்கு இருப்பதுபோலவே அவற்றிற்கு ஞானமும் அறிவும் இருக்கிறது. நாலு ஜீவன்களும் மனுஷருடைய ஆவியைப் பெற்றிருக்கிறது. மனுஷருடைய ஆவி கர்த்தருடைய விளக்காயிருக்கிறது.

கர்த்தருடைய தூதர்கள் மனுஷசாயலுக்கு ஒப்பாய் வெளிப்படுகிறார்கள். காலம் நிறைவேறிய போது தேவனுடைய குமாரனும் மனுஷசாயலாக வெளிப்பட்டார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷசாயலையும், மனுஷரூபத்தையும் பெற்றுக்கொண்டு, இந்தப் பூமியிலே தம்மை வெளிப்படுத்தினார்.

எசேக்கியேல் தரிசித்த நாலு ஜீவன்களுக்கும் மனுஷசாயலும், மனுஷமுகமும் இருந்தது. "அவைகளில் ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு முகங்களும், ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு செட்டைகளும் இருந்தன" (எசே 1:6).

"அவைகளுடைய முகங்களின் சாயலாவது, வலதுபக்கத்தில் நாலும் மனுஷமுகமும் சிங்கமுகமும், இடதுபக்கத்தில் நாலும் எருது முகமும் கழுகு முகமுமாயிருந்தன" (எசே 1:10).

இந்த நான்கு சிருஷ்டிகளும் தங்கள் இனத்தில் முக்கியமானவை. சிங்கம் மிருகங்களுக்கெல்லாம் ராஜா. எருது நன்றாய்ப் பழக்கப்பட்டு, தன் கழுத்தில் நுகத்தை சுமக்கும். கடினமான வேலைகளைச் செய்யும். கழுகு வேகமாய்ப் பறக்கும். எசேக்கியேல் தரிசித்த நான்கு ஜீவன்களின் முகங்கள், தங்களுடைய இனத்தின் முக்கியமான முகமாயிருக்கிறது. நாலு ஜீவன்களும் மனுஷசாயலைப் பெற்றிருக்கிறது. மனுஷருடைய அறிவைவிட அவற்றிற்கு அதிகமான அறிவு உண்டு.

மனுஷன் மிகவும் மென்மையானவன். அவனிடத்தில் ஈவு இரக்கம் ஆகிய மனுஷகுணங்கள் உள்ளன. அதுபோலவே இந்த நான்கு ஜீவன்களும் மனுஷருடைய குணத்தைப் பெற்று மனுஷசாயலாயிருக்கிறது.

சிங்கம் மனுஷனைவிட பெலமுள்ளது. மனுஷனைவிட தைரியமுள்ளது. நான்கு ஜீவன்களில் ஒன்றின் முகம் சிங்கமுகமாயிருக்கிறது.

எருது மனுஷனைவிட பொறுமையானது. மனுஷனைவிட கடினமாய் வேலைசெய்யக்கூடியது. நாலு ஜீவன்களும் கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். நாலு ஜீவன்களில் ஒன்றுக்கு எருதின் முகம் உள்ளது. எருது கடினமாயும் பொறுமையாயும் வேலை செய்வதுபோல, இந்த நான்கு ஜீவன்களும் கர்த்தருடைய ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்யும்.

மனுஷனால் பறக்க முடியாது. கழுகு வேகமாக பறக்கக்கூடியது. மனுஷரின் பார்வையைவிட கழுகின் பார்வை மிகவும் கூர்மையாயிருக்கும். அது உயரத்தில் பறக்கும். தேவதூதர்கள் கழுகைப்போல, வானத்திலுள்ள காரியங்களை நோக்கிப் பார்க்கிறார்கள். தெய்வீக இரகசியங்களை உற்றுப் பார்த்து அறிந்துகொள்கிறார்கள். ஆகையினால் நான்கு ஜீவன்களில் ஒன்றின் முகம் கழுகின் முகமாயிருக்கிறது.

விசுவாசமும் நம்பிக்கையும் நம்முடைய ஆத்துமாவுக்கு செட்டைகளைப்போல இருக்கிறது. எசேக்கியேல் தரிசித்த நான்கு ஜீவன்களில் ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு முகங்களும், ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு செட்டைகளும் இருந்தன (எசே 1:6).

நம்முடைய ஆத்துமாவில் விசுவாசமும் நம்பிக்கையும் இருக்கும்போது, நாம் பரலோகத்தின் காரியங்களை நம்பிக்கையோடு தரிசிப்போம். நம்மிடத்தில் தெய்வபக்தியும், அர்ப்பணிப்பும் இருக்கவேண்டும். இவை இரண்டும் இருந்தால்தான் கர்த்தர் நமக்கு நியமித்த பாதையில் நம்மால் முன்னோக்கி செல்ல முடியும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி நான்கு ஜீவன்களின் செட்டைகளைப்பற்றி விவரிக்கிறார். அவை பரிபூரண ஒற்றுமைக்கு அடையாளமாகயிருக்கிறது.

"அவைகள் ஒவ்வொன்றின் செட்டைகளும் மற்றதின் செட்டைகளோடே சேர்ந்திருந்தன; அவைகள் செல்லுகையில் திரும்பாமல் ஒவ்வொன்றும் தன்தன் திசைக்கு நேர்முகமாய்ச் சென்றன. அவைகளுடைய செட்டைகள் மேலே பிரிந்திருந்தன, ஒவ்வொன்றுக்குமுள்ள இரண்டிரண்டு செட்டைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தன; மற்ற இரண்டிரண்டு செட்டைகள் அவைகளுடைய உடல்களை மூடின" (எசே 1:9,11).

அவைகளுடைய கால்கள் நிமிர்ந்த கால்களாயிருந்தன; அவைகளுடைய உள்ளங்கால்கள் கன்றுக்குட்டியின் உள்ளங்கால்களுக்கு ஒப்பாயிருந்தன; அவைகள் துலக்கப்பட்ட வெண்கலத்தின் வருணமாய் மின்னிக்கொண்டிருந்தன (எசே 1:7). அவற்றின் கால்களில் செட்டைகள் இருக்கிறது என்று செப்துவஜிந்த் பதிப்பில் எழுதப்பட்டிருக்கிறது. நான்கு ஜீவன்களும் ஆகாயத்தில் பறப்பதுபோல, வேகமாய்ப் புறப்பட்டுப்போகும்.

நான்கு ஜீவன்களுக்கும் பறப்பதற்கு செட்டைகளும், கிரியை செய்வதற்கு கைகளும் உள்ளது. "அவைகளுடைய செட்டைகளின்கீழ் அவைகளின் நாலு பக்கங்களிலும் மனுஷகைகள் இருந்தன; அந்த நாலுக்கும் அதினதின் முகங்களும் அதினதின் செட்டைகளும் உண்டாயிருந்தன" (எசே 1:8).

நான்கு ஜீவன்களுக்கும் மனுஷர் கைகள் இருந்தன. தம்முடைய ஊழியத்தை செய்வதற்காக கர்த்தர் இந்த நான்கு ஜீவன்களையும் அற்புதமாய் சிருஷ்டித்திருக்கிறார். இவற்றிற்கு அறிவும் புத்தியும் உண்டு. கர்த்தர் சொல்லும் கட்டளைகளை புரிந்துகொண்டு, தாங்கள் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் இவை நேர்த்தியாய்ச் செய்யும்.

நாலு ஜீவன்களும் எப்போதுமே சுறுசுறுப்பாய் இயங்கிக்கொண்டிருக்கும். கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற நாலு ஜீவன்களும் செல்லும்போது அவை நேர்முகமாகவே செல்லும். கண்ணே சரீரத்திற்கு வெளிச்சமாயிருக்கிறது. நான்கு ஜீவன்களும் செல்லுகையில் திரும்பாமல், ஒவ்வொன்றும் தன் தன் திசைக்கு நேர்முகமாய்ச் செல்லும். அவற்றின் பார்வை நேராகயிருக்கும். அவை அங்கும் இங்கும் திரும்பாமல் இலக்கை நோக்கிப் பார்த்து முன்னேறும்.

நம்முடைய கண்களின் கூர்மையான பார்வை, நம்முடைய இருதயத்தின் உத்தமத்தை வெளிப்படுத்துகிறது. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தங்கள் பார்வையிலும், பாதையிலும் தடுமாறமாட்டார்கள். கர்த்தர் தங்களுக்கு நியமித்த பாதையில் அவர்கள் இடறாமல் நேராகச் செல்வார்கள். அவர்களுடைய சிந்தையில் குழப்பம் இருக்காது. அவர்கள் பின்னிட்டு திரும்பிப் பார்த்து பின்வாங்கிப்போகமாட்டார்கள்.

நான்கு ஜீவன்களும் ஒவ்வொன்றும் தன்தன் திசைக்கு நேர்முகமாய்ச் சென்றது; ஆவிபோகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின; போகையில் அவைகள் திரும்பிப்பார்க்கவில்லை (எசே 1:12).

தேவனுடைய ஆவியானவர் நாலு ஜீவன்களையும் எங்கே போகவேண்டும் என்று சொல்லுகிறாரோ, அங்கே அவைகள் விரைவாகப் போகும். எசேக்கியேல் தீர்க்கதரிசி நான்கு ஜீவன்களையும் தரிசித்து, அவற்றின் சாயலை இவ்வாறு விவரிக்கிறார்.

"ஜீவன்களுடைய சாயல் எப்படியிருந்ததென்றால், அவைகள் எரிகிற அக்கினித்தழலின் தோற்றமும் தீவர்த்திகளின் தோற்றமுமாயிருந்தது; அந்த அக்கினி ஜீவன்களுக்குள்ளே உலாவிப் பிரகாசமாயிருந்தது; அக்கினியிலிருந்து மின்னல் புறப்பட்டது. அந்த ஜீவன்கள் மின்னலின் தோற்றம்போல ஓடித்திரிந்தன" (எசே 1:13,14).

அந்த நான்கு ஜீவன்களுடைய சாயல் எரிகிற அக்கினி தழலின் தோற்றமாயிருக்கிறது. அது தீவர்த்திகளின் தோற்றமுமாயிருக்கிறது. அவை தங்களுடைய வெளிச்சத்திலேயே புறப்பட்டுப்போகும். எரிகிற அக்கினி நான்கு ஜீவன்களுக்குள்ளே மேலும் கீழுமாக உலாவும். அது பிரகாசமாயிருக்கும்.

நான்கு ஜீவன்களும் எரிகிற அக்கினி தழலின் தோற்றமாயிருந்தாலும், அவை தங்களுடைய வேலைகளை தீவர்த்திகளின் வெளிச்சத்திலேயே செய்கிறது. தீவர்த்திகளின் வெளிச்சம் எரிகிற அக்கினி தழலின் வெளிச்சத்தைவிட மங்கலாகயிருக்கும். ஆனாலும் அதன் வெளிச்சம் ஜீவன்களுக்குள்ளே மேலும் கீழுமாக உலாவி, அவற்றிற்கு பிரகாசத்தைக் கொடுக்கிறது. அருணோதயம் உதிக்கும்போது, மேகங்கள் கலையும்போது நாமும் நாலு ஜீவன்களையும் தெளிவாக தரிசிப்போம்.

சக்கரங்கள்
எசே 1:15-25

எசே 1:15. நான் அந்த ஜீவன்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, பூமியில் ஜீவன்களண்டையிலே நாலு முகங்களையுடைய ஒரு சக்கரத்தைக் கண்டேன்.

எசே 1:16. சக்கரங்களின் ரூபமும் அவைகளின் வேலையும் படிகப்பச்சை வருணமாயிருந்தது; அவைகள் நாலுக்கும் ஒரேவித சாயல் இருந்தது; அவைகளின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாபோல் இருந்தது.

எசே 1:17. அவைகள் ஓடுகையில் தங்கள் நாலு பக்கங்களிலும் ஓடும், ஓடுகையில் அவைகள் திரும்புகிறதில்லை.

எசே 1:18. அவைகளின் வட்டங்கள் பயங்கரப்படத்தக்க உயரமாயிருந்தன; அந்த நாலுவட்டங்களும் சுற்றிலும் கண்களால் நிறைந்திருந்தன.

எசே 1:19. அந்த ஜீவன்கள் செல்லும்போது, அந்தச் சக்கரங்கள் அவைகள் அருகே ஓடின; அந்த ஜீவன்கள் பூமியிலிருந்து எழும்பும் போது சக்கரங்களும் எழும்பின.

எசே 1:20. ஆவி போகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின; அவ்விடத்துக்கு அவைகளின் ஆவியும் போகவேண்டுமென்றிருந்தது; சக்கரங்களும் அவைகளின் அருகே எழும்பின; ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது.

எசே 1:21. அவைகள் செல்லும்போது இவைகளும் சென்றன; அவைகள் நிற்கும்போது இவைகளும் நின்றன; அவைகள் பூமியிலிருந்து எழும்பும் போது, சக்கரங்களும் அவைகள் அருகே எழும்பின; ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது.

எசே 1:22. ஜீவனுடைய தலைகளின்மேல் பிரமிக்கத்தக்க வச்சிரப்பிரகாசமான ஒரு மண்டலம் இருந்தது; அது அவைகளுடைய தலைகளின்மேல் உயர விரிந்திருந்தது.

எசே 1:23. மண்டலத்தின்கீழ் அவைகளுடைய செட்டைகள் ஒன்றுக்கொன்று எதிர்நேராய் விரிந்திருந்தன; தங்கள்தங்கள் உடல்களை மூடிக்கொள்ளுகிற இரண்டிரண்டு செட்டைகள் இருபக்கத்திலும் இருக்கிற ஒவ்வொன்றுக்கும் இருந்தன.

எசே 1:24. அவைகள் செல்லும்போது அவைகளுடைய செட்டைகளின் இரைச்சலைக் கேட்டேன்; அது பெருவெள்ளத்தின் இரைச்சல் போலவும், சர்வவல்லவருடைய சத்தம்போலவும், ஒரு இராணுவத்தின் இரைச்சலுக்கு ஒத்த ஆரவாரத்தின் சத்தம்போலவுமிருந்தது; அவைகள் நிற்கும் போது தங்கள் செட்டைகளைத் தளரவிட்டிருந்தன.

எசே 1:25. அவைகள் நின்று தங்கள் செட்டைகளைத் தளரவிட்டிருக்கையில், அவைகளுடைய தலைகளுக்கு மேலான மண்டலத்தின்மேலிருந்து ஒரு சத்தம் பிறந்தது.

எசேக்கியேல் தீர்க்கதரிசி நாலு ஜீவன்களை தரிசித்த பின்பு, சக்கரங்களையும் தரிசிக்கிறார். தேவனுடைய மகிமை மேலே பரலோகத்திலும் காணப்படுகிறது, கீழே பூலோகத்திலும் காணப்படுகிறது. எசேக்கியேல் வானத்திலே நாலு ஜீவன்களைப் பார்த்தார். அவற்றின் செட்டைகளையும், முகங்களையும், கால்களையும், கைகளையும் பார்த்தார். நாலு ஜீவன்களின் சாயல் எரிகிற அக்கினி தழலின் தோற்றமாயும், தீவர்த்திகளின் தோற்றமாயும் பிரகாசமாயிருப்பதைப் பார்த்தார். இவையெல்லாமே மேலே வானத்தில் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். வானத்தில் தேவனுடைய மகிமை வெளிப்படுவதுபோல, பூமியிலும் அவருடைய மகிமை வெளிப்படுகிறது. தேவனுடைய ஆளுகை இந்தப் பூமியிலே ஸ்திரமாக நடைபெறுகிறது. தேவனுடைய திட்டத்தின் பிரகாரமாகவும், அவருடைய பராமரிப்பின் பிரகாரமாகவும், இந்தப் பூமியிலுள்ள எல்லா காரியங்களும் நடைபெறுகிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசி அந்த ஜீவன்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, பூமியில் ஜீவன்களண்டையிலே நாலு முகங்களையுடைய ஒரு சக்கரத்தைக் கண்டார் (எசே 1:15). தேவனுடைய பராமரிப்பின் காலங்கள் இந்த அதிகாரத்தில் சக்கரங்களோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை இரதங்களின் சக்கரங்களாகும்.

சக்கரங்கள் தானாக இயங்காது. நான்கு ஜீவன்கள் தானாக இயங்கும். அவை ஓடித்திரியும். சக்கரங்கள் தானாக இயங்காவிட்டாலும், அவற்றை இயக்க முடியும். இந்த சக்கரங்கள் ஜீவன்களண்டையில் இருக்கிறது. சக்கரங்களுக்கும் நாலு ஜீவன்களுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஜீவன்கள் ஓடித்திரியும்போது, சக்கரங்களும் அவற்றோடுகூட ஓடித்திரியும்.

கர்த்தர் தேவதூதர்களுடைய ஊழியங்கள் மூலமாக தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். தேவதூதர்கள் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, சாதகமான எல்லா காரியங்களையும் கர்த்தர் உண்டுபண்ணிக்கொடுக்கிறார். நான்கு ஜீவன்களும் பூமியிலிருந்து உயரே எழும்பும். கர்த்தர் சொல்லும் எந்த வேலையையும் செய்வதற்கு அவை ஆயத்தமாயிருக்கும். கர்த்தருடைய ஆவியானவர் போகவேண்டும் என்று இருந்த எவ்விடத்திற்கும் அந்த நான்கு ஜீவன்களும் போகும். நாலு ஜீவன்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியைகளை நடப்பிக்கும் வல்லமையுடையவை.

"அந்த ஜீவன்கள் செல்லும்போது, அந்தச் சக்கரங்கள் அவைகள் அருகே ஓடின; அந்த ஜீவன்கள் பூமியிலிருந்து எழும்பும்போது சக்கரங்களும் எழும்பின. ஆவி போகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின; அவ்விடத்துக்கு அவைகளின் ஆவியும் போகவேண்டுமென்றிருந்தது; சக்கரங்களும் அவைகளின் அருகே எழும்பின; ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது. அவைகள் செல்லும்போது இவைகளும் சென்றன; அவைகள் நிற்கும்போது இவைகளும் நின்றன; அவைகள் பூமியிலிருந்து எழும்பும்போது, சக்கரங்களும் அவைகள் அருகே எழும்பின; ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது" (எசே 1:19-21).

ஜீவன்களின் ஆவி சக்கரங்களிலிருக்கிறது. கர்த்தருடைய ஞானமும், வல்லமையும், பரிசுத்தமும் தேவதூதர்களை வழிநடத்துகிறது. அவர்களை ஆளுகை செய்கிறது. இந்த உலகத்தில் அவை எங்கே போகவேண்டும் என்று கர்த்தருடைய ஆவியானவர் தேவதூதர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் இந்தப் பூமிக்கு ஆவியாயிருக்கிறார். கர்த்தர் இந்தப் பூமியை இயக்குகிறார். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பரலோகத்தின் தேவன் வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும், வானத்தையும் பூமியையும் இயக்குகிறார். அவை கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரம், ஒழுங்காக இயங்குகிறது.

வானத்திலுள்ளவைகளும், பூமியிலுள்ளவைகளும், கர்த்தருடைய ஆவியானவரின் திட்டத்தின்படி எல்லா இடங்களுக்கும் போகிறது. சர்வசிருஷ்டிகளும் கர்த்தருடைய சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றுகின்றன.

எசேக்கியேல் கண்ட சக்கரத்திற்கு நாலு முகங்கள் உள்ளது (எசே 1:15). தேவனுடைய பராமரிப்பு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளுக்கும் பரவியிருக்கிறது. பூமியின் எல்லா மூலைகளிலும் கர்த்தருடைய சித்தம் மாத்திரமே நடைபெறுகிறது. எசேக்கியேல் ஆரம்பத்தில் ஒரு சக்கரத்தை மாத்திரமே கண்டார் (எசே 1:15). அதன் பின்பு அவர் நாலு சக்கரங்களைக் காண்கிறார். நாலு சக்கரங்களுக்கும் ஒரேவித சாயல் இருக்கிறது.

"நான் அந்த ஜீவன்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, பூமியில் ஜீவன்களண்டையிலே நாலு முகங்களையுடைய ஒரு சக்கரத்தைக் கண்டேன். சக்கரங்களின் ரூபமும் அவைகளின் வேலையும் படிகப்பச்சை வருணமாயிருந்தது; அவைகள் நாலுக்கும் ஒரேவித சாயல் இருந்தது; அவைகளின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாபோல் இருந்தது" (எசே 1:15,16).

சக்கரங்களின் ரூபமும், அவைகளின் வேலையும் படிகப்பச்சை வருணமாயிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு தர்ஷீசின் கடலைப்போன்ற நிறத்திலிருக்கிறது என்று பொருள் சொல்லலாம். இந்தப் பூமியிலுள்ள காரியங்கள், கடலிலுள்ள காரியங்களைப் போலவே இருக்கிறது. கடலின் அலைகள் தொடர்ந்து அடித்துக்கொண்டேயிருக்கிறது. ஆனாலும் கடலிலுள்ள தண்ணீர் அலைகளாகப் பிரிந்திராமல், சர்வமும் ஒன்றாய்க் கலந்திருக்கிறது.

கடலின் நீர்மட்டம் சில சமயங்களில் உயரும். சில சமயங்களில் குறையும். இதுபோலவே தேவனுடைய பராமரிப்புக்களும் ஒன்றுபோல் இராமல் வித்தியாசமாயிருக்கும். ஒரு வருஷத்தில் மழை அதிகமாய்ப் பெய்யும். மற்றொரு வருஷத்தில் மழை சரியாகப் பெய்யாமல் மழைத்தாழ்ச்சி உண்டாகிவிடும். சில சமயங்களில் காற்று தென்றலாகயிருக்கும். வேறு சில சமயங்களிலோ புயல் காற்று வீசும்.

சமுத்திரத்தின் நிறம் படிகப்பச்சை அல்லது நீலவருணமாயிருக்கிறது. காற்றின் நிறமும் நீலமாகவே உள்ளது. நம்முடைய கண்ணின் பார்வை குறுகியது. நம்மால் தொலை தூரத்திலுள்ளவற்றை தெளிவாகப் பார்க்க முடியாது. கர்த்தர் நமக்காக உண்டுபண்ணி வைத்திருக்கிறவர்களை நம்முடைய கண்கள் இதுவரையிலும் பூரணமாய்க் கண்டதில்லை. கர்த்தர் ஆதியிலிருந்து அந்தம் வரையிலும் நடப்பித்திருக்கிற கிரியைகளை நம்மால் முழுவதுமாய்ப் புரிந்துகொள்ள முடியாது.

"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்" (பிர 3:11).

"தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்; அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று. இதோ, இவைகள் அவருடைய கிரியையில் கடைகோடியானவைகள், அவரைக்குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம்; அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் என்றான்" (யோபு 26:13,14).

நம்முடைய கண்களால் எவ்வளவு தூரத்திற்கு தெளிவாகப் பார்க்க முடியுமோ, அது வரையிலும் நமக்கு நிறங்களில் வித்தியாசம் தெரியும். நம்முடைய கண்களால் தூரத்திலுள்ளவைகளை தெளிவாகப் பார்க்க முடியாது. அவையெல்லாம் நமக்கு நீலநிறமாகவோ அல்லது படிகப்பச்சை நிறமாகவோ இருக்கும். இவை நம்முடைய கண்களின் பார்வைக்கு அப்பாற்பட்டவை.

சக்கரங்களின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்திற்குள் சக்கரம் இருப்பதுபோல இருக்கிறது (எசே 1:16). இந்த வாக்கியத்திற்கு விஞ்ஞான அடிப்படையிலோ அல்லது கணித அடிப்படையிலோ வியாக்கியானம் கொடுக்க முடியாது. தேவனுடைய கிரியைகளை நம்முடைய ஞானத்தினால் விவரிக்க முடியாது. அவை நமக்கு புரியாதவையாகயிருந்தாலும், கர்த்தர் அவற்றை ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் வடிவமைத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தின் பிரகாரம் அவற்றை உண்டாக்கியிருக்கிறார். அவையெல்லாமே கர்த்தருடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றும்.

நாலு சக்கரங்களும் ஓடுகையில் தங்கள் நாலு பக்கங்களிலும் ஓடும், ஓடுகையில் அவைகள் திரும்புகிறதில்லை (எசே 1:17). சக்கரங்கள் திரும்ப வேண்டிய அவசியம் எதுவுமில்லை. அவை எந்த திசையில் போனாலும் தெளிவாகப் போகும். அவற்றிற்கு குழப்பம் எதுவுமில்லை. கர்த்தர் தம்முடைய கிரியைகளை நேர்த்தியாகச் செய்திருக்கிறார். கர்த்தருடைய கிரியைகளெல்லாமே அவருடைய கண்பார்வைக்கு முன்பாக இருக்கிறது.

கர்த்தருடைய கிரியைகளெல்லாம் முன்னோக்கியே ஓடுகிறது. எதுவும் பின்னோக்கி திரும்பி ஓடாது. நம்முடைய பார்வையில் ஒரு சில காரியங்கள் பின்னோக்கிப்போவது போல தெரியும். ஆனால் கர்த்தருடைய காலங்கள் ஒருபோதும் பின்னோக்கிப் போகாது. அது முன்னோக்கி மாத்திரமே போகும்.

"ஆவி போகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின; அவ்விடத்துக்கு அவைகளின் ஆவியும் போகவேண்டுமென்றிருந்தது; சக்கரங்களும் அவைகளின் அருகே எழும்பின; ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது" (எசே 1:20).

ஆவியானவர் ஜீவன்களை எங்கே போகவேண்டும் என்று கட்டளையிடுகிறாரோ, அவை அங்கே போகும். அவை தாங்கள் போகும் பாதையைவிட்டு, ஒருபோதும் திரும்பிப்போவதில்லை. நாலு ஜீவன்களும் ஆவியானவர் கட்டளையிட்ட காரியங்களை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கும். அவை ஏற்கெனவே செய்தவற்றை அழித்துவிட்டு, அதை மறுபடியும் திரும்பச் செய்யாது.

மனுஷர் பல சமயங்களில் சில வேலைகளை ஒழுங்காய்ச் செய்யமாட்டார்கள். தாங்கள் செய்த வேலைகளை அழித்துவிட்டு, அதை மறுபடியும் திரும்பச் செய்வார்கள். தங்களுடைய கிரியைகளுக்காக மனம் வருந்துவார்கள். செய்ததையே திரும்ப செய்வதும், முன்னோக்கிப்போனவர்கள் பின்னோக்கிப்போவதும், பின்மாற்றமும் மனுஷருடைய சுபாவம். கர்த்தருடைய ஆவியானவர் நம்மை ஆளுகை செய்யும்போது, நாம் கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படியும்போது, நம்முடைய வாழ்க்கையில் பின்மாற்றம் இருக்காது. நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி முன்னோக்கிப்போவோம்.

"ஜீவனுடைய ஆவி சக்கரங்களிலிருந்தது" (எசே 1:20) என்று எசேக்கியேல் சொல்லுகிறார். இந்த ஆவி சக்கரங்களை ஒழுங்காக வழிநடத்துகிறது. சக்கரங்களின் வட்டங்கள் பயங்கரப்படத்தக்க உயரமாயிருந்தன; அந்த நாலுவட்டங்களும் சுற்றிலும் கண்களால் நிறைந்திருந்தன (எசே 1:18).

தேவனுடைய தெய்வீக பராமரிப்பு, அவருடைய தெய்வீக ஞானத்தினால் வழிநடத்தப்படுகிறது. கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவருக்கு சகலமும் தெரியும். கர்த்தரே இந்த உலகம் முழுவதையும் இயக்குகிறவர். இந்த உலகம் எவ்வாறு இயங்கவேண்டும் என்னும் ஞானமும் கர்த்தரிடத்திலுள்ளது. இந்த உலகத்தை தம்முடைய சித்தத்தின்படி இயக்கும் வல்லமையும் கர்த்தரிடத்திலுள்ளது.

இந்த உலகத்தில் ஏராளமான காரியங்கள் நடைபெறுகிறது. சில காரியங்கள் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மனுஷர்கள் தங்களுடைய சொந்த கற்பனைகளைப் பயன்படுத்தி, அன்றாடம் நடைபெறும் காரியங்களுக்கு விளக்கம் சொல்லுகிறார்கள். தங்களுக்கு எதிர்பாராத நன்மை வரும்போது அதை அதிர்ஷ்டம் என்று சொல்லுகிறார்கள். தங்களுக்கு எதிர்பாராத தீமை வரும்போதோ அதை துரதிர்ஷ்டம் என்றும் சொல்லுகிறார்கள்.

நமக்கு அதிர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமோ வருவதில்லை. சகலமும் கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமே வரும். கர்த்தருடைய கண்கள் சகலவற்றையும் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

"கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது" (நீதி 15:3).

எசேக்கியேல் தீர்க்கதரிசி வானத்திலே ஒரு மண்டலத்தை தரிசிக்கிறார். ஜீவனுடைய தலைகளின்மேல் பிரமிக்கத்தக்க வச்சிரப்பிரகாசமான ஒரு மண்டலம் இருந்தது; அது அவைகளுடைய தலைகளின்மேல் உயர விரிந்திருந்தது (எசே 1:22).

பூமியின்மேல் செய்யப்படுவது எதுவோ, அது வானத்தின் கீழே செய்யப்படுகிறது. பரலோகத்தின் மேற்பார்வையிலும், பரலோகத்தின் ஆளுகையிலும் பூமியிலுள்ள ஒவ்வொரு காரியங்களும் நடைபெறுகிறது. வானத்திலுள்ள மண்டலம் வச்சிரப்பிரகாசமான நிறமாயிருக்கிறது. மண்டலம் பரவி விரிந்திருக்கிறது. அது மிகவும் பிரகாசமாயிருக்கிறது. அதைப் பார்த்தபோது எசேக்கியேலுக்கு பிரமிப்பு உண்டாயிற்று.

தேவன் மண்டலத்தின்மேல் உன்னதத்திலிருக்கிறார். தேவதூதர்கள் மண்டலத்திற்கு கீழே இருக்கிறார்கள். மண்டலம் தேவதூதர்களுடைய தலைகளின் மேல் உயர விரிந்திருக்கிறது. தேவனே சர்வஆளுகையுள்ளவர். தேவதூதர்கள் அவருடைய ஆளுகைக்கு கீழ்ப்படிந்திருக்கிறவர்கள்.

மண்டலத்தின்கீழ் அவைகளுடைய செட்டைகள் ஒன்றுக்கொன்று எதிர்நேராய் விரிந்திருந்தன; தங்கள் தங்கள் உடல்களை மூடிக்கொள்ளுகிற இரண்டிரண்டு செட்டைகள் இருபக்கத்திலும் இருக்கிற ஒவ்வொன்றுக்கும் இருந்தன (எசே 1:23).

எசேக்கியேல் தேவதூதர்களுடைய செட்டைகளின் இரைச்சலைக் கேட்கிறார். "அவைகள் செல்லும்போது அவைகளுடைய செட்டைகளின் இரைச்சலைக் கேட்டேன்; அது பெருவெள்ளத்தின் இரைச்சல்போலவும், சர்வவல்லவருடைய சத்தம்போலவும், ஒரு இராணுவத்தின் இரைச்சலுக்கு ஒத்த ஆரவாரத்தின் சத்தம்போலவுமிருந்தது" (எசே 1:24) என்று எசேக்கியேல் சொல்லுகிறது.

தேவதூதர்கள் நிற்கும் போது தங்கள் செட்டைகளைத் தளரவிட்டிருந்தன. அவைகள் நின்று தங்கள் செட்டைகளைத் தளரவிட்டிருக்கையில், அவைகளுடைய தலைகளுக்கு மேலான மண்டலத்தின் மேலிருந்து ஒரு சத்தம் பிறந்தது (எசே 1:25).

எசேக்கியேல் மண்டலத்தின் மேலிருந்து பிறந்த ஒரு சத்தத்தைக் கேட்கிறார். இந்த சத்தம் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரின் சத்தம். தேவதூதர்கள் அங்கும் இங்கும் போகும்போது அவர்களுடைய செட்டைகளின் இரைச்சல் கேட்கிறது. சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் பேசும்போது, தேவதூதர்கள் எங்கும் போகாமல் நின்றுவிடுகிறார்கள். அவர்கள் தங்கள் செட்டைகளை தளரவிடுகிறார்கள். அப்போது செட்டைகளின் சத்தம் கேட்கவில்லை. அங்கே மிகுந்த அமைதலுண்டாயிற்று.

அப்போது தேவதூதர்களுடைய தலைகளுக்கு மேலான மண்டலத்திலிருந்து ஒரு சத்தம் பிறக்கிறது. தேவனுடைய சத்தம் தெளிவாகக் கேட்கிறது. கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரம், அவர் பேசும்போது சகலமும் அமைதியாயிருக்கிறது. மனுஷருடைய செவிகள் விரிவாய்த் திறந்து கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கிறது.

கர்த்தருடைய மகிமையின் சாயல்
எசே 1:26-28

எசே 1:26. அவைகளின் தலைகளுக்குமேலுள்ள மண்டலத்தின் மீதில் நீலரத்தினம்போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்தச் சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷசாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது.

எசே 1:27. அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக்கண்டேன்; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன்.

எசே 1:28. மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது; இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன்; அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன்.

கர்த்தர் தம்மை தேவதூதர்களுக்கு ஆண்டவராக வெளிப்படுத்துகிறார். இந்தப் பூமியில் நடைபெறுகிற அனைத்து காரியங்களும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. கர்த்தர் சொல்ல நடக்கிறது. அவர் சொல்ல நிற்கிறது. கர்த்தரே சர்வத்தையும் ஆளுகை செய்கிறார். அவரே எல்லாவற்றையும் வழிநடத்துகிறார்.

எசேக்கியேல் இதுவரையிலும் நாலு ஜீவன்களையும், சக்கரங்களையும் பார்த்தார். அவர் தன்னுடைய கண்களை இன்னும் ஏறெடுத்துப் பார்க்கவேண்டும். அவர் நான்கு ஜீவன்களுக்கு மேலாகவும், சக்கரங்களுக்கு மேலாகவும் உயரே பார்க்கும்போது, அவரால் நித்திய வார்த்தையைப் பார்க்க முடியும். அவருடைய சத்தத்தைக் கேட்க முடியும்.

எசேக்கியேல் தேவதூதர்களுடைய தலைகளுக்கு மேலான மண்டலத்தின் மேலிருந்து பிறந்த ஒரு சத்தத்தைக் கேட்கிறார். அவர் தன்னுடைய தலையை ஏறெடுத்துப் பார்க்கிறார். பத்மு தீவிலே யோவான் தன்னுடைய கண்களை ஏறெடுத்ததுபோல, எசேக்கியேலும் கேபார் நதியண்டையிலே தன் கண்களை ஏறெடுக்கிறார்.

"அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்" (வெளி 1:12,13) என்று யோவான் சொல்லுகிறார்.

எசேக்கியேல் மண்டலத்தின் மீதில் சிங்காசனத்தின் மகிமையைக் காண்கிறார். அந்த சிங்காசனம் கிருபையின் சிங்காசனம். அது வெற்றியின் சிங்காசனமாகவும், ஆளுகை செய்கிற சிங்காசனமாகவும், நியாயத்தீர்ப்பின் சிங்காசனமாகவும் இருக்கிறது. எசேக்கியேல் பார்த்த சிங்காசனத்தின் சாயல் நீலஇரத்தினம் போல விளங்கிற்று. அந்த சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷசாயலுக்கொத்த ஒரு சாயலும் இருந்தது (எசே 1:26).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் அவதரிப்பதற்கு முன்பாக, மீட்பருடைய ஆளுகையையும், மகிமையையும், கண்ணியத்தையும் எசேக்கியேல் தரிசிக்கிறார். எசேக்கியேல் மண்டலத்தின்மேலே ஒரு சிங்காசனத்தின் சாயலைக் காண்கிறார். தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு, அவருடைய இராஜரீக அதிகாரத்தினால் உறுதிபண்ணப்படுகிறது. நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய விசுவாசக்கண்களினால் தரிசிக்கும்போது, அவரை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவராகப் பார்க்கவேண்டும்.

யோவான் பரமதரிசனத்தை தரிசித்தபோது, முதலாவதாக வானத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிங்காசனத்தையே பார்த்தார். சர்வஅதிகாரமும், சர்வஆளுகையுமுள்ள கர்த்தர் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.

"உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்" (வெளி 4:2).

எசேக்கியேல் பார்த்த தரிசனம் மனுபுத்திரர் எல்லோருக்கும் ஒரு நற்செய்தியாகும். மண்டலத்தின் மேலேயுள்ள சிங்காசனத்தில் மனுஷசாயலுக்கு ஒத்த ஒருவர் இருக்கிறார். அவர் தம்மை வெளிப்படுத்தவோ, அதிலும் தம்மை மனுஷசாயலுக்கு ஒப்பாக வெளிப்படுத்தவோ வெட்கப்படவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை மனுஷசாயலாக மனுக்குலத்திற்கு வெளிப்படுத்துவது, தேவனுடைய சித்தமாகவும், அவருக்கு பிரியமானதாகவும் இருக்கிறது.

எசேக்கியேல் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரை நியாயாதிபதியாகவும், ராஜாவாகவும், பிரபுவாகவும் பார்க்கிறார். மனுஷருடைய சரித்திரத்தில் மனுஷசாயலுக்கு ஒத்த அவரைப்போல, இதுவரையிலும் யாரும் வெளிப்பட்டதில்லை.

அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கிறது; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கிறது.

தேவன் ஒளியில் வாசம்பண்ணுகிறார். அவர் வெளிச்சத்தை தம்முடைய வஸ்திரமாகத் தரித்திருக்கிறார். தேவனுடைய சரீரம் முழுவதும் அக்கினி மயமான சொகுசாவின் நிறமாயிருக்கிறது. அவருடைய இடுப்பு பகுதியெல்லாம் அக்கினி மயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாரமாகவும் இருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனாகவும், மனுஷராகவும் இருக்கிறார். அவரிடத்தில் தெய்வீக சுபாவமும், மனுஷசுபாவமும் காணப்படுகிறது. அவர் தேவசாயலானவர். அதே வேளையில் மனுஷசாயலுக்கு ஒத்த சாயலும் அவரிடத்தில் இருக்கிறது. எசேக்கியேல் பார்த்த சொகுசாவின் நிறமும் அக்கினி மயமான பிரகாசமுள்ள நிறமும் இயேசுகிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தையும், மனுஷசுபாவத்தையும் வெளிப்படுத்துகிறது.

இயேசுகிறிஸ்துவின் தெய்வீக சுபாவம் சொகுசாவின் நிறத்திற்குள் மறைவாகயிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொகுசாவின் நிறத்திற்கு வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இந்த மகிமையையும், இந்த தெய்வீக சுபாவத்தையும் ஒரு மனுஷனும் இதுவரையிலும் பார்த்ததுமில்லை. இந்த மகிமையை எந்த மனுஷனாலும் பார்க்கவும் முடியாது.

தேவனுடைய இடுப்பு பகுதி அக்கினி மயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கிறது. இது தேவனுடைய மனுஷத்துவத்தை வெளிப்படுத்துகிறது என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை முகமுகமாய்த் தரிசித்தவர்கள், அவருடைய மனுஷசுபாவத்தையே தரிசித்தார்கள்.

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையிலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா 1:14).

தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிலும் வானவில் காணப்படுகிறது. "மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது" இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது (எசே 1:28).

யோவானும் எசேக்கியேலின் தரிசனத்திற்கு ஒத்த தரிசனத்தை பத்மு தீவிலே பார்த்தார். "வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லி ருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று" (வெளி 4:3).

சிங்காசனத்தின் தரிசனமும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரின் தரிசனமும், சிங்காசனத்தைச் சுற்றிலுமிருக்கிற வானவில்லின் தரிசனமும் தேவனுடைய மகிமையையும், மகத்துவத்தையும், அவருடைய கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் காணப்படுவது, தேவனுடைய கிருபையான வாக்குத்தத்தத்திற்கு அடையாளம். கர்த்தர் நோவாவின் காலத்தில் இந்தப் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழித்துப்போட்டார். அவர் மறுபடியுமாக இந்தப் பூமியை ஜலத்தினால் அழிக்கமாட்டார் என்பதற்கு வானவில் அடையாளமாயிருக்கிறது.

இப்போது தேவனுடைய கோபாக்கினையின் அக்கினி எருசலேமுக்கு விரோதமாக பற்றியெரிகிறது. கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தில் கோபத்தோடு வீற்றிருக்கும்போது, சிங்காசனத்தைச் சுற்றிலுமிருக்கிற வானவில்லையும் பார்ப்பார். அப்போது அவர் தம்முடைய கிருபையின் உடன்படிக்கையை நினைவுகூருவார்.

"நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன்" (லேவி 26:42).

எசேக்கியேல் தான் கண்ட தேவதரிசனங்களின் முடிவில், "இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருக்கிறது" (எசே 1:28) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் மிகவும் கவனமாகப் பேசுகிறார். அவர் தேவதரிசனங்களைப் பற்றிச் சொல்லும்போது, "இதுவே கர்த்தருடைய தரிசனம்" என்று சொல்லவில்லை. அல்லது "இதுவே கர்த்தருடைய மகிமை" என்றும் சொல்லவில்லை. எசேக்கியேல் பார்த்தது கர்த்தருடைய மகிமையல்ல. அது கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரியது. கர்த்தருடைய மகிமை எப்படியிருக்குமோ, அப்படிப்பட்ட சாயலில், எசேக்கியேல் இந்த தரிசனத்தைப் பார்த்திருக்கிறார். கர்த்தருடைய மகிமையின் நிழலைப் பார்த்திருக்கிறார். எசேக்கியேல் பார்த்தது பொருளாயிராமல் நிழலாயிருக்கிறது.

"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது" (எபி 10:1).

எசேக்கியேல் பார்த்த தரிசனம் அவருக்குள் மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணிற்று. அந்த தரிசனத்தை எசேக்கியேல் கண்டபோது அவர் முகங்குப்புற விழுகிறார். அந்த தரிசனம் அவரை மேற்கொள்கிறது. முகங்குப்புற விழுவது பரிசுத்தமான பயபக்திக்கு அடையாளம். எசேக்கியேல் இதுவரையிலும் பார்த்த தேவதரிசனங்கள், கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு அவரை ஆயத்தம்பண்ணுகிறது.

விசுவாசம் கேள்வியினால் வரும். கர்த்தர் மனத்தாழ்மையுள்ளவர்களுக்கு உபதேசம்பண்ண விரும்புகிறார். எசேக்கியேல் தேவதரிசனங்களைப் பார்த்து முகங்குப்புற விழுகிறார். அப்பொழுது அவர் பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்கிறார். இந்த சத்தம் தேவதூதர்களுடைய தலைகளுக்கு மேலான மண்டலத்திலிருந்து பிறந்த சத்தமாகும். இது சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் பேசுகிற சத்தமாகும். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எசேக்கியேலுக்கு சொல்லுகிறார்.

2 அதிகாரம்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அப்போஸ்தலர் பவுலிடம், "இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்" (அப் 26:16) என்று சொன்னார்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு சொன்ன வார்த்தை, அவர் பவுலுக்கு சொன்ன வார்த்தைக்கு ஒப்பாயிருக்கிறது. "மனுபுத்திரனே, உன் காலூன்றி நில், உன்னுடனே பேசுவேன்" (எசே 2:1) என்று கர்த்தர் எசேக்கியேலிடம் சொன்னார்.

கர்த்தர் எசேக்கியேலை தம்முடைய ஊழியத்திற்காக அபிஷேகம்பண்ணுகிறார். எசேக்கியேல் இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு தீர்க்கதரிசியாகப் போகவேண்டும். அவர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள் (எசே 2:1-5). எசேக்கியேல் அவர்களைப் பார்த்து பயப்படக்கூடாது (எசே 2:6). எசேக்கியேல் அவர்களுக்கு என்ன சொல்லவேண்டும் என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். எசேக்கியேல் ஒரு புஸ்தக சுருளை தன்னுடைய தரிசனத்தில் காண்கிறார் (எசே 2:7-10).

மனுபுத்திரனே
எசே. 2:1-5

எசே 2:1. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, உன் காலூன்றி நில்; உன்னுடனே பேசுவேன் என்றார்.

எசே 2:2. இப்படி அவர் என்னோடே பேசும்போது, ஆவி எனக்குள் வந்து, என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது; அப்பொழுது அவர் என்னுடனே பேசுகிறதைக் கேட்டேன்.

எசே 2:3. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, எனக்கு விரோதமாய் எழும்பின கலகக்கார ஜாதியாகிய இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு நான் உன்னை அனுப்புகிறேன்; அவர்களும் அவர்கள் பிதாக்களும் இந்நாள்வரைக்கும் எனக்கு விரோதமாய்த் துரோகஞ்செய்தார்கள்.

எசே 2:4. அவர்கள் கடினமுகமும் முரட்டாட்ட இருதயமுமுள்ள புத்திரர்; அவர்களிடத்திற்கு நான் உன்னை அனுப்புகிறேன்; கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைக்கிறார் என்று அவர்களோடே சொல்லு.

எசே 2:5. கலகவீட்டாராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, தங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசி உண்டென்கிறதை அவர்கள் அறியவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலை "மனுபுத்திரனே" (எசே 2:1,3) என்று அழைக்கிறார். மனுபுத்திரனே என்னும் வார்த்தைக்கு "ஆதாமின் புத்திரனே" என்றும், "பூமியின் புத்திரனே" என்றும் பொருள் சொல்லலாம். மனுபுத்திரனே என்னும் பெயர் ஒரு தாழ்மையான பெயர். இதில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. கர்த்தர் எசேக்கியேலுக்கு தேவதரிசனங்களைக் காண்பித்தார். அவரை உயர்த்தினார். எசேக்கியேல் தேவதரிசனங்களைப் பார்த்ததினால் பெருமைப்படக்கூடாது. தான் இன்னும் மனுபுத்திரனாகவே இருப்பதை எசேக்கியேல் நினைவுகூரவேண்டும்.

"மனுபுத்திரனே" என்னும் பெயர் மிகவும் மகிமையான பெயராகும். பழைய ஏற்பாட்டில் மேசியாவுக்குகூட "மனுஷகுமாரன்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இட மட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்" (தானி 7:13).

கர்த்தருடைய ஊழியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எசேக்கியேல் காலூன்றி நிற்கவேண்டும். "மனுபுத்திரனே, உன் காலூன்றி நில்" என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளையிடுகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனத்தைக் கண்டார். அவர் அதைக் கண்டபோது முகங்குப்புற விழுந்துவிட்டார் (எசே 1:28). அவர் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக பயபக்தியோடு விழுந்துகிடக்கிறார். கர்த்தருக்கு முன்பாக முகங்குப்புற விழுவது பயபக்திக்கு அடையாளம். "எழுந்து காலூன்றி நிற்பது" ஆயத்தமாயிருப்பதற்கு அடையாளம்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே உன் காலூன்றி நில்" என்று சொல்லும்போது, கர்த்தருடைய வார்த்தைகளில் அவருடைய தெய்வீக வல்லமையும் கலந்திருக்கிறது. கர்த்தரே எசேக்கியேலை காலூன்றி நிற்கச் செய்கிறார். எசேக்கியேலிடம் பெலமோ பராக்கிரமமோ இல்லை. எசேக்கியேல் தேவதரிசனங்களைப் பார்த்தார். கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனங்களையும் கண்டார். அதைக் கண்டபோது எசேக்கியேல் முகங்குப்புற விழுந்துவிட்டார். அவரால் நிற்க முடியவில்லை. கர்த்தருக்கு முன்பாக காலூன்றி நிற்குமளவுக்கு அவரிடத்தில் பெலனில்லை.

எசேக்கியேலால் தேவதரிசனத்தை தைரியமாய் நின்று பார்க்க முடியவில்லை. கர்த்தர் எசேக்கியேலிடம், "உன் காலூன்றி நில், உன்னுடனே பேசுவேன்" என்று சொல்லுகிறார். அப்படி அவர் எசேக்கியேலோடு பேசும்போது, "ஆவி எசேக்கியேலுக்குள் வந்து, அவரை காலூன்றி நிற்கும்படி செய்தது (எசே 2:2). எசேக்கியேல் சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ காலூன்றி நிற்கமுடியவில்லை. கர்த்தருடைய ஆவியினால், எசேக்கியேலால் காலூன்றி நிற்கமுடிகிறது.

பரிசுத்த ஆவியானவர் எசேக்கியேலைப் பெலப்படுத்துகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய விருப்பமுள்ளவராயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய எசேக்கியேலைப் பெலப்படுத்துகிறார். அப்போது கர்த்தர் தன்னோடே பேசுகிறதை எசேக்கியேல் கேட்கிறார்.

கர்த்தர் எசேக்கியேலிடம் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டிய செய்தியைக் கொடுத்து அவரை அவர்கள் மத்தியிலே அனுப்புகிறார். "மனுபுத்திரனே, எனக்கு விரோதமாக எழும்பின கலகக்கார ஜாதியாகிய இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு நான் உன்னை அனுப்புகிறேன்" (எசே 2:3) என்று கர்த்தர் எசேக்கியேலிடம் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் யூதாதேசத்திலிருந்தபோது, தங்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொன்ன தீர்க்கதரிசிகளை அவமானப்படுத்தினார்கள். அவர்களைத் துன்பப்படுத்தினார்கள். இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. என்றாலும், கர்த்தர் இப்போது எசேக்கியேலை இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு அனுப்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரரும் அவர்கள் பிதாக்களும் இந்நாள் வரைக்கும் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் செய்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக எழும்பின கலகக்கார ஜாதியார். ஆனாலும் கர்த்தர் அவர்களை "இஸ்ரவேல் புத்திரர்" என்றே அழைக்கிறார். இவர்களுடைய முற்பிதாக்கள் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தார்கள். ஆனால் இவர்களோ கர்த்தரைவிட்டு தூரமாய் விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை "இஸ்ரவேல் புத்திரர்" என்று சொன்னாலும், அவர்களை கலகக்கார ஜாதி என்றும் சொல்லுகிறார். இந்த வார்த்தைக்கு "கோயிம்" என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த எபிரெய வார்த்தை பொதுவாக அந்நிய ஜாதியாராகிய புறஜாதியாரைக் குறிக்கும் வார்த்தையாகும்.

இஸ்ரவேல் புத்திரர் கடினமுகமும், முரட்டாட்டமான இருதயமுமுள்ள புத்திரர். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்கள். அவர்கள் இன்னும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமல்ல, அவர்களுடைய பிதாக்களும் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் செய்தார்கள். இப்போது அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். பாம்பின் குணம் கொண்டவர்களாகயிருக்கிறார்கள். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், தங்களுடைய சுயசித்தத்தின் பிரகாரமாகவும், சுயவிருப்பத்தின் பிரகாரமாகவும் நடந்துகொள்கிறார்கள்.

கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு அனுப்புகிறார். அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை அவமானப்படுத்தி, கொடுமைப்படுத்தியிருந்தாலும், கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை இன்னும் அவர்கள் மத்தியில் அனுப்பிக் கொண்டிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் கடினமுகமும், முரட்டாட்ட இருதயமுமுள்ள புத்திரர் என்று சொல்லுகிறார். அவர்கள் மத்தியில் கர்த்தர் எசேக்கியேலை அனுப்புகிறார்.

கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் புத்திரர்களிடத்தில் அனுப்பும்போது, அவர்களிடத்தில் சொல்ல வேண்டிய செய்தியையும், கர்த்தர் எசேக்கியேலிடம் சொல்லுகிறார். "கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைக்கிறார் என்று அவர்களோடே சொல்லு" (எசே 2:4) என்று கர்த்தர் எசேக்கியேலிடம் சொல்லுகிறார்.

எசேக்கியேல் தேவனுடைய நாமத்தினால் இஸ்ரவேல் புத்திரரிடம் பேசவேண்டும். கர்த்தருடைய அதிகாரத்தை அவர்கள் மத்தியில் உறுதிபண்ணவேண்டும். எசேக்கியேல் சொல்லுகிற செய்தி கர்த்தரிடத்திலிருந்து வந்த செய்தி என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகளை எழுதுகிறார்கள். ஆகையினால் ஜனங்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், கர்த்தருடைய வார்த்தைகளைப் பேசும்போது, அந்த வார்த்தைகளைக் கேட்டு மனுஷருடைய இருதயங்கள் கொழுந்துவிட்டு எரியும். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் விருப்பம் அவர்களுடைய மனதில் உண்டாகும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பேசுவது மனுஷருடைய வார்த்தையல்ல என்றும், அது தேவனுடைய வார்த்தை என்றும் அவர்கள் சாட்சி சொல்லுவார்கள்.

தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லும்போது ஜனங்கள் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி, தங்களுடைய செவிகளை அடைத்துக் கொண்டால், அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தும். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமலும், கீழ்ப்படியாமலும் போகிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்.

"கலகவீட்டாராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, தங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசி உண்டென்கிறதை அவர்கள் அறியவேண்டும்" (எசே 2:5) என்று கர்த்தர் எசேக்கியேலுக்குச் சொல்லுகிறார்.

நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம் எசே 2:6,7

எசே 2:6. மனுபுத்திரனே, நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; அவர்கள் வார்த்தைகளுக்கும் அஞ்சவேண்டாம்; நெரிஞ்சில்களுக்குள்ளும் முள்ளுகளுக்குள்ளும் நீ தங்கியிருந்தாலும், நீ தேள்களுக்குள் வாசம்பண்ணினாலும், நீ அவர்கள் வார்த்தைகளுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகத்துக்குக் கலங்காமலுமிரு; அவர்கள் கலகவீட்டார்.

எசே 2:7. கலகக்காரராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு.

கர்த்தரே எசேக்கியேலை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். கர்த்தரே அவரை அனுப்புகிறார். எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தரிடத்திலிருந்து செய்தியைப் பெற்றுக்கொள்கிறார். கர்த்தருடைய ஊழியத்தை செய்ய எசேக்கியேலிடம் ஒரு சில தகுதிகள் காணப்படவேண்டும். அவர் பயப்படாமல் தைரியமாயிருக்கவேண்டும். கர்த்தர் தனக்குச் சொன்னதை எசேக்கியேல் இஸ்ரவேல் புத்திரருக்கு உண்மையாய் அறிவிக்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலைப் பார்த்து, "மனுபுத்திரனே, நீ அவர்களுக்கு பயப்படவேண்டாம். அவர்கள் வார்த்தைகளுக்கும் அஞ்சவேண்டாம்" (எசே 2:6) என்று சொல்லுகிறார். கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அனுப்புகிறார். அவர்கள் நெரிஞ்சிலைப்போலவும், முள்ளுகளைப் போலவும் இருக்கிறார்கள். எசேக்கியேல் எந்தப் பக்கம் திரும்பினாலும், அவர்கள் எசேக்கியேலை முட்களைப்போல குத்துவார்கள்.

துன்மார்க்கர் நெரிஞ்சில்களைப்போலவும் முள்ளுகளைப்போலவும் இருக்கிறார்கள். கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் அவர்கள் களைகளாகவும், இடையூறு பண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தேள்களைப்போலவும் இருக்கிறார்கள். தேள் விஷத்தன்மையுடையது. தேளுக்கு அருகில் போனால் அது கொட்டிவிடும். நெரிஞ்சில்களும் முள்ளுகளும் குத்தும்போது ஏற்படும் வலியைவிட, தேள் கொட்டும்போது ஏற்படும் வலி மிகவும் அதிகமாயிருக்கும். இஸ்ரவேல் மனுஷரிடத்தில் நற்குணம் எதுவுமில்லை.

எசேக்கியேல் இதுவரையிலும் தேவதரிசனங்களைக் கண்டார். தேவதூதர்கள் அவரோடு பேசினார்கள். அவர் தன்னுடைய ஆவிக்குரிய அனுபவித்தில் உயர்ந்த நிலமையிலிருந்தார். இப்போதோ உயர்ந்த நிலையிலிருந்து கீழே இறங்கி வந்திருக்கிறார். அவர் நெரிஞ்சில்களுக்குள்ளும் முள்ளுகளுக்குள்ளும் தங்கியிருக்கிறார். தேள்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எசேக்கியேலின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். அவர்மீது கோபப்பட்டு அவரைத் துன்பப்படுத்துவார்கள். எசேக்கியேலை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரிக்கமாட்டார்கள். அவரை கொன்றுபோட முயற்சிபண்ணுவார்கள். எசேக்கியேல் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எசேக்கியேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றி அவர்களுக்குச் சொல்லி அவர்களை எச்சரிக்கிறார். இதன் நிமித்தமாய் இஸ்ரவேல் புத்திரருக்கு எசேக்கியேல் மீது கோபமுண்டாயிற்று.

கர்த்தர் எசேக்கியேலை பெலப்படுத்துகிறார். "மனுபுத்திரனே நீ அவர்களுக்கு பயப்படவேண்டாம், அவர்கள் வார்த்தைகளுக்கு அஞ்சவேண்டாம்" என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி அவரைத் தைரியப்படுத்துகிறார்.

எசேக்கியேல் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் ஊழியம் செய்யவேண்டும். அவர்கள் எப்படிப்பட்ட சுபாவமுள்ளவர்கள் என்பதை கர்த்தர் எசேக்கியேலுக்கு தெளிவுபடுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் வாசம்பண்ணுவது, எசேக்கியேலுக்கு நெரிஞ்சில்களுக்குள்ளும், முள்ளுகளுக்குள்ளும் தங்கியிருப்பதுபோலவும், தேள்களுக்குள் வாசம்பண்ணுவது போலவும் இருக்கும்.

ஆனாலும் எசேக்கியேல் அவர்களுடைய வார்த்தைகளுக்கு பயப்படக்கூடாது. அவர்களுடைய முகத்திற்கு கலங்கக்கூடாது. இஸ்ரவேல் வம்சத்தார் கலகவீட்டாராயிருக்கிறார்கள். கலகம்பண்ணுவது அவர்களுடைய சுபாவம். யூதர்கள் சிறையிருப்புக்கு வந்தபோதிலும் அவர்களுடைய கலககுணம் அவர்களை விட்டு நீங்கவில்லை.

எசேக்கியேல் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை எசேக்கியேல் இஸ்ரவேல் புத்திரருக்கு பயப்படாமல் சொல்லவேண்டும். கர்த்தரே எசேக்கியேலை தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு அனுப்பியிருக்கிறார். தம்மை அனுப்பின கர்த்தருக்கு எசேக்கியேல் உண்மையுள்ளவராயிருக்கவேண்டும்.

கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருக்கு, எசேக்கியேல் மூலமாக தம்முடைய செய்தியை சொல்லியனுப்புகிறார். எசேக்கியேல் அவர்கள் மத்தியிலே ஊழியம் செய்யவேண்டும். எசேக்கியேல் அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு உண்மையுள்ளவராயிருந்து, உத்திரவாதம் கொடுக்கவேண்டும். அவர்கள் கலகவீட்டார் என்பது மெய்தான். அவர்கள் எசேக்கியேல் சொல்லும் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என்பதும் மெய்தான். ஆனாலும் எசேக்கியேல் கர்த்தர் தனக்கு கொடுத்த செய்திகளை அவர்களுக்கு சொல்லவேண்டும்.

"கலகக்காரராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு" (எசே 2:7) என்று கர்த்தர் எசேக்கியேலுக்குச் சொல்லுகிறார்.

ஒரு புஸ்தகச் சுருள்
எசே 2:8-10

எசே 2:8. மனுபுத்திரனே, நீ அந்தக் கலகவீட்டாரைப்போலக் கலகக்காரனாயிராமல், நான் உன்னோடே சொல்லுகிறதைக் கேள்; உன் வாயைத் திறந்து நான் உனக்குக் கொடுக்கிறதைப் புசி என்றார்.

எசே 2:9. அப்பொழுது இதோ, என்னிடத்திற்கு நீட்டப்பட்ட ஒரு கையைக் கண்டேன்; அந்தக் கையிலே ஒரு புஸ்தகச் சுருள் இருந்தது.

எசே 2:10. அவர் அதை எனக்குமுன்பாக விரித்தார்; அதில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டிருந்தது; அதிலே புலம்பல்களும், தவிப்பும், ஐயோ என்பதும் எழுதியிருந்தது.

கர்த்தர் தனக்கு சொல்லுகிற செய்திகளை எசேக்கியேல் கவனித்துக் கேட்கவேண்டும். அவர் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் எசேக்கியேலுக்கு முன்பாக ஒரு புஸ்தக சுருளை விரிக்கிறார். அதில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு புறத்தில் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களும், மற்றொரு புறத்தில் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கப்போகும் நியாயத்தீர்ப்பும் எழுதப்பட்டிருக்கிறது.

புஸ்தக சுருளில் நற்செய்தி எதுவும் எழுதப்படவில்லை. அதிலே புலம்பல்களும், தவிப்பும், ஐயோ என்பதும் எழுதப்பட்டிருக்கிறது (எசே 2:10). எசேக்கியேல் இந்தப் புஸ்தக சுருளில் எழுதப்பட்டிருக்கிற சோகமான செய்திகளை, இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். ஆனால் அவர்கள் இப்போது, பாவத்தில் விழுந்து அசுத்தமாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு பிரியமானவர்களாக இருக்கவேண்டிய ஜனங்கள், இப்போது கர்த்தருக்கு சத்துருக்களைப்போல இருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது பிரியமாயில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரவாளிகள். ஆனால் இப்போது, கர்த்தர் அவர்களுக்கு ஆசீர்வாதத்தைச் சொல்லாமல், புலம்பல்களையும், தவிப்பையும், ஐயோ என்பதையும் சொல்லுகிறார்.

எசேக்கியேல் கர்த்தரிடத்திலிருந்து செய்தியைப் பெற்றுக்கொண்டபோது, அந்தச் செய்தியை இஸ்ரவேல் புத்திரரிடத்தில் எப்படி சொல்லவேண்டும் என்பதையும் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். "நான் உன்னோடே சொல்லுகிறதை கேள்" (எசே 2:8) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லும்போது, அவர்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், ஊழியக்காரர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கவேண்டும். நாம் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை ஜனங்களுக்கு சொன்னால், அவர்கள் வருத்தப்படுவார்களோ என்றும், நம்மீது கோபப்படுவார்களோ என்றும் நினைத்து அவர்களுக்கு பயப்படக்கூடாது. அவர்களுக்கு சொல்ல வேண்டிய செய்திகளை சொல்லாமல் மறைத்துவிடக்கூடாது. நம்முடைய ஊழியத்தை நாம் ஒழுங்காய்ச் செய்யவில்லையென்றால் குற்றம் நம்மீது சுமரும். பாவிகளை நாம் எச்சரிக்கவில்லையென்றால், அவர்கள் அழிந்துபோகும்போது, அவர்களுடைய அழிவில் நமக்கும் பங்கு இருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கலகவீட்டாராயிருக்கிறார்கள். எசேக்கியேல் அவர்களைப்போல கலகக்காரராயிருக்கக் கூடாது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கமாட்டார்கள். ஆனால் எசேக்கியேல் கர்த்தர் தன்னோடே சொல்லுகிறதைக் கேட்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு எப்படி ஊழியம் செய்யவேண்டும் என்று கற்றுத் தருகிறார். அதைத் தொடர்ந்து, "உன் வாயைத் திறந்து நான் உனக்கு கொடுக்கிறதை புசி" என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார். எசேக்கியேல் தன் கண்களைத் திறந்து பார்க்கும்போது, தன்னிடத்திற்கு நீட்டப்பட்ட கையைக் காண்கிறார். அந்தக் கையிலே ஒரு புஸ்தக சுருள் இருக்கிறது. கர்த்தர் அந்தப் புஸ்தக சுருளை எசேக்கியேலுக்கு முன்பாக விரிக்கிறார். அதில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே புலம்பல்களும் தவிப்பும், ஐயோ என்பதும் எழுதப்பட்டிருக்கிறது.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவர் தனக்கு கொடுக்கிற புஸ்தக சுருளை புசிக்கவேண்டும். எசேக்கியேல் அந்தப் புஸ்தக சுருளை மனப்பூர்வமாய் ரசித்து, ருசித்து புசிக்கவேண்டும். கர்த்தர் அந்தப் புஸ்தக சுருளை எசேக்கியேலுக்கு முன்பாக விரிக்கிறார். அந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற எல்லா செய்திகளையும் எசேக்கியேல் புரிந்துகொள்கிறார். அந்தச் செய்திகளை அவர் தனக்கு சொந்தமாக்கிக்கொள்கிறார்.

3 அதிகாரம்

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். தம்முடைய ஊழியத்தை உண்மையாயும், தைரியமாயும் செய்வதற்கு, கர்த்தர் எசேக்கியேலை ஆயத்தம்பண்ணுகிறார். எசேக்கியேல் புஸ்தக சுருளை புசிக்கிறார் (எசே 3:1-3). கர்த்தர் எசேக்கியேலுக்கு மேலும் சில கட்டளைகளையும், உற்சாகப்படுத்தும் வார்த்தைகளையும் சொல்லுகிறார் (எசே 3:4-11). கர்த்தருடைய ஆவி எசேக்கியேலை உயர எடுத்துக்கொள்கிறது. எசேக்கியேல் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே ஏழுநாட்களுக்கு பிரமித்தவராய் தங்கியிருக்கிறார் (எசே 3:12-15).

கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவலாளனாக வைத்திருக்கிறார் (எசே 3:16-21). கர்த்தர் நியமித்த காலம் வரையிலும் எசேக்கியேல் ஊமையனாயிருப்பார் (எசே 3:22-27).

இஸ்ரவேல் சந்ததியார் எசே 3:1-15

எசே 3:1. பின்பு அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ காண்கிறதைப் புசி; இந்தச் சுருளை நீ புசித்து, இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் அவர்களோடே பேசு என்றார்.

எசே 3:2. அப்படியே என் வாயைத் திறந்தேன்; அப்பொழுது அவர் அந்தச் சுருளை எனக்குப் புசிக்கக்கொடுத்து:

எசே 3:3. மனுபுத்திரனே, நான் உனக்குக் கொடுக்கிற இந்தச் சுருளை நீ உன் வயிற்றிலே உட்கொண்டு, அதினால் உன் குடல்களை நிரப்புவாயாக என்றார்; அப்பொழுது நான் அதைப் புசித்தேன்; அது என் வாய்க்குத் தேனைப்போல் தித்திப்பாயிருந்தது.

எசே 3:4. பின்பு அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ போய், இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் சேர்ந்து, என் வார்த்தைகளைக் கொண்டு அவர்களோடே பேசு.

எசே 3:5. விளங்காத பேச்சும், கடினமான பாஷையுமுள்ள ஜனத்தண்டைக்கல்ல, இஸ்ரவேல் சந்ததியாரிடத்திற்கே நீ அனுப்பப்படுகிறாய்.

எசே 3:6. விளங்காத பேச்சும், தாங்கள் சொல்லும் வார்த்தைகளை நீ அறியாத கடினமான பாஷையுமுள்ள அநேகமான ஜனங்களிடத்திற்கு நீ அனுப்பப்படவில்லை; நான் அவர்களிடத்திற்கு உன்னை அனுப்பினாலும், அவர்கள் உனக்குச் செவிகொடுப்பார்களோ?

எசே 3:7. இஸ்ரவேல் வீட்டாரோவெனில், உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்; எனக்கே செவிகொடுக்கமாட்டோம் என்கிறார்களே; இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் கடினமான நெற்றியும் முரட்டாட்டமுள்ள இருதயமும் உள்ளவர்கள்.

எசே 3:8. இதோ, உன் முகத்தை அவர்கள் முகத்துக்கு எதிராகவும், உன் நெற்றியை அவர்கள் நெற்றிக்கு எதிராகவும் கெட்டியாக்கினேன்.

எசே 3:9. உன் நெற்றியை வச்சிரக்கல்லைப்போலாக்கினேன், கன்மலையைப்பார்க்கிலும் கெட்டியாக்கினேன்; அவர்கள் கலகமுள்ள வீட்டாரென்று நீ அவர்களுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகங்களுக்குக் கலங்காமலும் இரு என்றார்.

எசே 3:10. பின்னும் அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நான் உன்னுடனே சொல்லும் என் வார்த்தைகளையெல்லாம் நீ உன் செவிகளாலே கேட்டு, உன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு,

எசே 3:11. நீ போய், சிறைப்பட்ட உன் ஜனத்தின் புத்திரரிடத்திலே சேர்ந்து, அவர்கள் கேட்டாலும் கேளாவிட்டாலும் அவர்களோடே பேசி, கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைக்கிறார் என்று அவர்களோடே சொல் என்றார்.

எசே 3:12. அப்பொழுது ஆவி, என்னை உயர எடுத்துக்கொண்டது; கர்த்தருடைய ஸ்தானத்திலிருந்து விளங்கிய அவருடைய மகிமைக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக என்று எனக்குப் பின்னாக கூப்பிட்ட மகா சத்தத்தின் இரைச்சலைக் கேட்டேன்.

எசே 3:13. ஒன்றோடொன்று இணைந்திருக்கிற ஜீவன்களுடைய செட்டைகளின் இரைச்சலையும், அதற்கெதிரே ஓடிய சக்கரங்களின் இரைச்சலையும், மகா சத்தத்தின் இரைச்சலையும் கேட்டேன்.

எசே 3:14. ஆவி என்னை உயர எடுத்துக்கொண்டது; நான் என் ஆவியின் உக்கிரத்தினாலே மனங்கசந்துபோனேன்; ஆனாலும் கர்த்தருடைய கரம் என்மேல் பலமாக இருந்தது.

எசே 3:15. கேபார் நதியண்டையிலே தெலாபீபிலே தாபரிக்கிற சிறைப்பட்டவர்களிடத்துக்கு நான் வந்து, அவர்கள் தாபரிக்கிற ஸ்தலத்திலே தாபரித்து, ஏழுநாள் அவர்கள் நடுவிலே பிரமித்தவனாய்த் தங்கினேன்.

எசேக்கியேல் 2-ஆவது அதிகாரத்தின் இறுதியில் எழுதப்பட்டிருக்கிற தரிசனத்தின் தொடர்ச்சி, 3-ஆவது அதிகாரத்தின் ஆரம்பத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் பரிசுத்த வேதாகமத்தை மொழிபெயர்க்கிறவர்களில் சிலர், இவ்விரண்டு அதிகாரங்களையும், ஒரே அதிகாரமாகப் பாவித்து எழுதுவது வழக்கம். இவ்விரண்டு அதிகாரத்திலும் ஒரே தரிசனமே எழுதப்பட்டிருக்கிறது.

எசேக்கியேல் தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்கிறார். கர்த்தர் அவரிடம் "மனுபுத்திரனே, நீ காண்கிறதைப் புசி" (எசே 3:1) என்று சொல்லுகிறார். புஸ்தக சுருளில் எழுதப்பட்டிருக்கிற எல்லா வார்த்தைகளையும் எசேக்கியேல் தன்னுடைய மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும். புஸ்தக சுருளின் வார்த்தைகள் அவருடைய ஆத்துமாவுக்கு போஜனமாயிருக்கவேண்டும். அவர் அதைப் புசித்து பெலனடையவேண்டும். எசேக்கியேல் புஸ்தக சுருளில் எழுதப்பட்டிருக்கிற எல்லா வார்த்தைகளையும் திருப்தியாய்ப் புசிக்கவேண்டும்.

நாம் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது, அதை போஜனத்தைப் புசிப்பதுபோல, நம்முடைய மனதிலே பதிய வைத்துக்கொள்ளவேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற சத்திய வார்த்தைகளை தர்க்கம்பண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு சொல்லுகிற வேதவாக்கியங்களை, விவாதம் பண்ணாமல் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தரே நமக்கு வார்த்தையைக் கொடுக்கிறார். அவரே தேவனுடைய வார்த்தையாகயிருக்கிறார். நாம் கர்த்தருடைய வார்த்தையைத் தியானிக்க தியானிக்க, நமக்கு கர்த்தரைப்பற்றிய வெளிப்பாடுகள் அதிகமாய்க் கிடைக்கும்.

கர்த்தரே தமது கையிலுள்ள புஸ்தக சுருளை விரிக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் அந்த சுருளில் எழுதப்பட்டிருக்கிற வசனங்களை நமக்கு முன்பாக விரித்து காண்பிக்கிறார். புஸ்தக சுருளை விரிக்கிறவர், நம்முடைய மனதையும் திறப்பார். புஸ்தக சுருளில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளை புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்வார். கர்த்தரே தம்முடைய ஆவியினால் நமக்கு ஞானத்தையும் அறிவையும் கொடுக்கிறார். கர்த்தருடைய வசனங்களை நாம் புசிப்பதற்கு ஆவியானவர் நமக்கு உதவியும் செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் சத்திய வசனங்களை நமக்கு புரியவைக்கவில்லையென்றால், நாம் கர்த்தருடைய வார்த்தைகளை புரிந்து கொள்ளாமல், அதற்கு அந்நியராகவே இருப்போம்.

கர்த்தருடைய கையிலுள்ள புஸ்தகத்தில் புலம்பல்களும், தவிப்பும், ஐயோ என்பதும் எழுதியிருக்கிறது. அதில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டிருக்கிறது. வார்த்தைகள் கசப்பாகயிருந்தாலும் எசேக்கியேல் அதைப் புசித்தபோது அது அவருடைய வாய்க்கு தேனைப்போல தித்திப்பாயிருக்கிறது (எசே 3:3).

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எசேக்கியேலுக்குச் சொல்லுகிறார். எசேக்கியேல் கர்த்தரிடத்திலிருந்து தெய்வீக வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்கிறார். தான் பெற்றுக்கொண்ட வெளிப்பாடுகளை அவர் மற்றவர்களுக்கும் சொல்லவேண்டும். கர்த்தர் எசேக்கியேலை நோக்கி, "மனுபுத்திரனே, நீ காண்கிறதைப் புசி; இந்தச் சுருளை நீ புசித்து, இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் அவர்களோடே பேசு" (எசே 3:1) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எசேக்கியேலை கல்தேயரிடத்திற்கு அனுப்பவில்லை. கல்தேயரும் பாவம் செய்திருக்கிறார்கள். கல்தேயருடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்த எசேக்கியேல் அனுப்பப்படவில்லை. கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் சந்ததியாரிடத்திற்கு அனுப்புகிறார். இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்தவேண்டும். இதுவே எசேக்கியேலின் ஊழியம்.

பிள்ளைகள் தப்பு செய்யும்போது பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மாத்திரமே கண்டித்து திருத்துவார்கள். பெற்றோர் தங்கள் வீட்டு பிள்ளைகளைத் திருத்தாமல், மற்ற வீட்டு பிள்ளைகளை திருத்தமாட்டார்கள். தன்னுடைய பிள்ளைகள் தப்பு செய்யும்போது, பெற்றோர் அவர்களுக்குத்தான் நல்ல புத்திமதிகளைச் சொல்லுவார்கள். வழியில் போவோருக்கும் வருவோருக்கும் புத்தி சொல்லமாட்டார்கள்.

எசேக்கியேல் இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, அவர்கள் கர்த்தருடைய ஜனம் என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும். இஸ்ரவேல் வீட்டார் கர்த்தருடைய வீட்டாராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு சொந்தமானவர்கள். கர்த்தர் அவர்களோடு நெருங்கிய ஐக்கியம் வைத்திருக்கிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியும் இஸ்ரவேல் சந்ததியைச் சேர்ந்தவர். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் எசேக்கியேலும் ஒருவர். இவர்கள் எல்லோருமே ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள். எல்லோரும் ஒன்றுபோல பாடுகளை அனுபவிக்கிறார்கள். கர்த்தர் எசேக்கியேலை அவர்கள் மத்தியில் அனுப்புகிறார்.

இஸ்ரவேல் சந்ததியார் எப்படிப்பட்டவர்கள் என்பதையும், அவர்களுடைய குணம் எப்படிப்பட்டது என்பதையும் கர்த்தர் எசேக்கியேலுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ஒருவேளை எசேக்கியேல் இஸ்ரவேல் சந்ததியார் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது, அவருக்கு ஏமாற்றங்கள் உண்டாகலாம். ஊழியத்தில் சோர்வுகள் ஏற்படலாம். எசேக்கியேலுக்கு இஸ்ரவேல் சந்ததியார் மூலமாய் பிரச்சனைகள் வரலாம். தனக்கு வரும் வேதனைகளைப் பார்த்து, எசேக்கியேல் கர்த்தருடைய ஊழியத்தை செய்யாமல் பின்வாங்கிப்போய்விடக்கூடாது.

இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் கடின நெற்றியும் முரட்டாட்டமுள்ள இருதயமுமுள்ளவர்கள் (எசே 3:7). அவர்களுடைய பாவங்களை கண்டித்து சொன்னால், அவர்கள் மனந்திரும்ப மாட்டார்கள். இஸ்ரவேல் வீட்டார் எசேக்கியேலுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். அவர்கள் கர்த்தருக்கே செவிகொடுக்காதவர்கள். அப்படிப்பட்டவர்கள் நிச்சயமாய் எசேக்கியேலுக்கு செவிகொடுக்கமாட்டார்கள்.

தங்களுக்கு நல்ல வார்த்தைகளைச் சொன்ன எசேக்கியேல்மீது அவர்கள் கோபப்படுவார்கள். அவர்களுடைய இருதயம் கடினமாயிருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவதற்குப் பதிலாக, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்வார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நம்முடைய பாவங்களை நமக்கு கண்டித்து உணர்த்தும்போது, நமக்குள்ளே பரிசுத்தமான பயமுண்டாகவேண்டும். நம்முடைய ஆத்துமாவில் நடுக்கமும், கலக்கமும் ஏற்படவேண்டும். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ தங்களுடைய பாவங்களைக் குறித்து எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் சொல்லியும் கேட்காதவர்கள், மனுஷர் சொல்லுவதை நிச்சமாய்க் கேட்கமாட்டார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பிரமாணத்தை வெறுக்கிறார்கள். அதனால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய பிரமாணங்களை இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவிக்கிறார்கள். அதனால் இஸ்ரவேல் வம்சத்தார் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கவில்லை.

கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் சந்ததியார் மத்தியில் அனுப்புகிறார். "மனுபுத்திரனே, நீ போய், இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் சேர்ந்து, என் வார்த்தைகளைக் கொண்டு அவர்களோடே பேசு. இஸ்ரவேல் சந்ததியாரிடத்திற்கே நீ அனுப்பப்படுகிறாய்" (எசே 3:4,5) என்று கர்த்தர் எசேக்கியேலுக்குச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் கடினமான நெற்றியும், முரட்டாட்டமுமான இருதயமுமுள்ளவர்கள். அவர்கள் மத்தியில் ஊழியம் செய்யவேண்டுமென்றால் எசேக்கியேலுக்கு விசேஷித்த தகுதிகள் வேண்டும். கர்த்தர் எசேக்கியேலின் முகத்தை அவர்கள் முகத்திற்கு எதிராக கெட்டியாக்குகிறார். எசேக்கியேலின் நெற்றியையும் அவர்களுடைய நெற்றிக்கு எதிராக கெட்டியாக்குகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டோம் என்று இஸ்ரவேல் புத்திரர் உறுதியாயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லியே ஆகவேண்டும் என்று எசேக்கியேலும் உறுதியாயிருக்கிறார். எசேக்கியேலின் இருதயத்தில் பயமோ, கலக்கமோ இல்லை.

துன்மார்க்கர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய பிரமாணத்திற்கு விரோதமாகவும் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட துன்மார்க்கர் மத்தியில் நாம் ஊழியம் செய்யும்போது, பயப்படாமல் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தரிடத்திலிருந்து பெலத்தையும், துணிவையும் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய நியாயத்தீர்ப்புகளையும் அவர்களுக்கு வெளிப்படையாகச் சொல்லவேண்டும்.

பாவத்தின் சம்பளம் மரணம் என்பது கர்த்தருடைய வார்த்தை. துன்மார்க்கர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். துன்மார்க்கன் அழிந்துபோவான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் துன்மார்க்கர் மத்தியில், கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்ல கலங்கக்கூடாது. பயப்படக்கூடாது. துன்மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால், சத்தியமார்க்கம் காணாமல் போய்விடும்.

கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் அனுப்பும்போது, தம்முடைய ஊழியத்திற்கு அவரை ஆயத்தம்பண்ணுகிறார். கர்த்தர் எசேக்கியேலைப் பெலப்படுத்துகிறார். எசேக்கியேல் சத்துருக்களின் கோபத்தைப் பார்த்தோ, அச்சுறுத்துதல்களைப் பார்த்தோ பயந்துவிடக்கூடாது. துன்மார்க்கரின் முகம் கடினமாயிருக்கலாம். அவர்களுடைய கண்களில் கோபம் இருக்கலாம். அவர்களுடைய வார்த்தைகளில் வேகம் இருக்கலாம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பாவிகளுடைய ஆத்துமாவைப்பற்றிய கரிசனையோடு ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய கண்களில் இரக்கமும், மனதுருக்கமும் காணப்படவேண்டும். நம்முடைய வார்த்தைகளில் உண்மையும் உறுதியும் இருக்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, நான் உன்னுடனே சொல்லும் என் வார்த்தைகளையெல்லாம் நீ உன் செவிகளாலே கேட்டு, உன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, நீ போய், சிறைப்பட்ட உன் ஜனத்தின் புத்திரரிடத்திலே சேர்ந்து, அவர்கள் கேட்டாலும் கேளாவிட்டாலும் அவர்களோடே பேசி, கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைக்கிறார் என்று அவர்களோடே சொல்" (எசே 3:10,11) என்று சொல்லுகிறார்.

நம்முடைய ஊழியத்தில் எவ்வளவு வெற்றி உண்டாயிருக்கிறது என்பது முக்கியமல்ல. நாம் யாருக்காக ஊழியம் செய்கிறோம் என்பதும், யாரிடத்தில் ஊழியம் செய்கிறோம் என்பதும், எப்படி ஊழியம் செய்கிறோம் என்பதுமே முக்கியம். நம்முடைய ஊழியத்தில் வெற்றிகள் உடனே ஏற்படவில்லையென்றாலும், அதையே நினைத்து சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தர்மேல் நம்முடைய பாரங்களை வைத்துவிட்டு, கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியங்களை தொடர்ந்து செய்யவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை இஸ்ரவேல் சந்ததியார் மத்தியிலே அனுப்புகிறார். எசேக்கியேல் அவர்கள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தைகளைக் கொண்டு பேசவேண்டும். கர்த்தர் எசேக்கியேலை அவர்களிடத்தில் அனுப்பினாலும், அவர்கள் எசேக்கியேலுக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என்று கர்த்தர் முன்கூட்டியே சொல்லிவிடுகிறார் (எசே 3:6).

கர்த்தர் எசேக்கியேலை கல்தேயர்கள் மத்தியில் அனுப்பவில்லை. கல்தேயர்கள் விளங்காத பேச்சும் கடினமான பாஷையுமுள்ள ஜனங்கள். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாஷை எசேக்கியேலுக்கு விளங்கும். எசேக்கியேலும் அவர்களுடைய பாஷையைத்தான் பேசுகிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் கடினமான நெற்றியும் முரட்டாட்டமுள்ள இருதயமுமுள்ளவர்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் எசேக்கியேலின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காவிட்டாலும், எசேக்கியேல் சோர்ந்துபோய்விடக்கூடாது. அவர்கள் முரட்டுக்குணமுள்ளவர்கள். அவர்கள் கலகமுள்ள வீட்டார். இஸ்ரவேல் சந்ததியார் எசேக்கியேலின்மீது கோபப்படுவார்கள். அவரைக் கொன்றுபோட முயற்சிபண்ணுவார்கள். ஆனாலும் எசேக்கியேல் அவர்களுக்கு பயப்படக்கூடாது. அவர்களுடைய முகங்களுக்கு கலங்கக்கூடாது. கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை, எசேக்கியேல் தொடர்ந்து செய்யவேண்டும். உண்மையோடு ஊழியம் செய்யவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலோடு பேசிக்கொண்டிருக்கும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவரை உயரே எடுத்துக்கொள்கிறார். அப்போது எசேக்கியேல் தனக்கு பின்னாகக் கூப்பிட்ட மகாசத்தத்தின் இரைச்சலைக் கேட்கிறார். "கர்த்தருடைய ஸ்தானத்திலிருந்து விளங்கிய அவருடைய மகிமைக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று எசேக்கியேலுக்கு பின்னாக மகாசத்தத்தின் இரைச்சல் கேட்கிறது (எசே 3:12).

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்போகிறார். அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தைப் பார்ப்பதற்காக ஏராளமான தேவதூதர்கள் அங்கே கூட்டமாய்க் கூடிவருகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய மகிமையைத் துதிக்கிறார்கள். துதியின் சத்தம் மகாசத்தத்தின் இரைச்சலாயிருக்கிறது.

எசேக்கியேல் துதியின் சத்தத்தோடு, ஜீவன்களுடைய செட்டைகளின் இரைச்சலையும், சக்கரங்களின் இரைச்சலையும், மகாசத்தத்தின் இரைச்சலையும் கேட்கிறார். ஜீவன்களுடைய செட்டைகள் ஒன்றோடொன்று இணைந்திருக்கிறது. சக்கரங்கள் அதற்கு எதிரே ஓடுகிறது (எசே 3:13).

எசேக்கியேல் மகாசத்தத்தின் இரைச்சலை கேட்டுக்கொண்டிருக்கும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவரை உயரே எடுத்துக்கொள்கிறார். எசேக்கியேல் தன் ஆவியின் உக்கிரத்தினால் மனங்கசந்துபோகிறார். ஆனாலும் கர்த்தருடைய கரம் எசேக்கியேலின் மேல் பலமாகயிருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போகுமாறு சொன்னார். அவர்கள் மத்தியில் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுமாறும் சொன்னார். ஆனாலும் கர்த்தர் எசேக்கியேலை உயரே எடுத்துக்கொள்ளும் வரையிலும், அவர் எங்கும் போகவில்லை. கர்த்தருடைய கரம் எசேக்கியேலின்மேல் பலமாகயிருக்கிறது. எசேக்கியேல் எங்கே போகவேண்டுமென்று கர்த்தர் சித்தமாயிருக்கிறாரோ, அந்த இடத்திற்கு, கர்த்தருடைய ஆவியானவர், அவரை எடுத்துக்கொண்டு போகிறார்.

கர்த்தர் தனக்கு சொன்ன எல்லா வார்த்தைகளையும் எசேக்கியேல் தன்னுடைய மனதில் பதிய வைத்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தைகளை எசேக்கியேல் தன்னுடைய செவிகளால் கேட்டார். தேவதரிசனங்களை அவர் தன்னுடைய கண்களால் பார்த்தார். ஆனாலும் எசேக்கியேல் தன்னுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ கர்த்தருடைய ஊழியத்தை செய்யவில்லை. கர்த்தர் தன்னை எடுத்துக்கொண்டு போகும் வரையிலும், அவர் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருக்கிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் எசேக்கியேலை முழுவதுமாய் ஆளுகை செய்கிறார். இனிமேல் எசேக்கியேல் தன்னுடைய சொந்த வார்த்தைகளை பேசமாட்டார். அவர் கர்த்தருடைய வார்த்தைகளை மாத்திரமே பேசுவார். எசேக்கியேல் இனிமேல் தன்னுடைய சுயசித்தத்தையோ, சுயவிருப்பத்தையோ நிறைவேற்றமாட்டார். கர்த்தருடைய சித்தத்தையும், விருப்பத்தையும் மாத்திரமே நிறைவேற்றுவார்.

அப்போஸ்தலர்கள் "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்" (அப் 4:20). அதுபோலவே எசேக்கியேலும், தான் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாது.

கர்த்தருடைய ஆவியானவர் எசேக்கியேலை உயர எடுத்துக்கொள்கிறார். ஆனால் எசேக்கியேலோ தன்னுடைய ஆவியின் உக்கிரத்தினாலே மனங்கசந்து போகிறார். அவருடைய இருதயம் வருத்தப்படுகிறது. ஒருவேளை எசேக்கியேல் இந்த சமயத்தில் எரேமியாவை நினைத்துப் பார்த்திருக்கலாம். எரேமியா எருசலேம் நகரத்திலே எவ்வளவு கஷ்டங்களையும், பாடுகளையும் அனுபவித்தார் என்று எசேக்கியேல் சிந்தித்துப் பார்த்திருக்கலாம். சத்துருக்கள் எரேமியாவை எப்படியெல்லாம் துன்பப்படுத்தினார்கள் என்பதை நினைத்துப் பார்த்து, எசேக்கியேல் தன்னுடைய ஆவியின் உக்கிரத்தினால் மனங்கசந்து போயிருக்கலாம்.

எசேக்கியேலின் இருதயம் வருத்தப்பட்டாலும், ஆவியானவர் தன்னை வழிநடத்துகிற பிரகாரம், அவரோடு கூடப்போகிறார். தான் கண்ட பரமதரிசனத்திற்கு எசேக்கியேல் கீழ்ப்படிகிறார். கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை குறைத்துக்கொள்ளவேண்டும் என்று நினைக்கவில்லை. யோனா நினிவேக்குப் போகாமல், தர்ஷீசுக்குப் போனதுபோல, எசேக்கியேல் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாகப் போகவில்லை.

கர்த்தருடைய கரம் எசேக்கியேலின்மேல் பலமாகயிருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவர் அவரை உயரே எடுத்துக்கொள்கிறார். எசேக்கியேல் தன்னுடைய ஆவியின் உக்கிரத்தோடு, ஆவியானவர் தன்னை எடுத்துக்கொண்டு போகும் இடத்திற்கு போகிறார்.

எசேக்கியேலின் உள்ளத்தில் சோர்வுகள் உண்டாயிற்று. இனிமேல் நடைபெறப்போகிற சம்பவங்களை நினைத்து அவருடைய மனதில் கலக்கங்களும், வேதனைகளும் உண்டாயிற்று. ஆனாலும் கர்த்தருடைய கரம் அவர்மேல் பலமாகயிருக்கிறது. கர்த்தர் எசேக்கியேலைப் பலப்படுத்துகிறார். அவரிடத்தில் காணப்படுகிற சோர்வுகளை நீக்கிப்போடுகிறார்.

எசேக்கியேல் கேபார் நதியண்டையிலே தெலாபீபிலே தாபரிக்கிற சிறைப்பட்டவர்களிடத்துக்கு வருகிறார். அவர்கள் தாபரிக்கிற ஸ்தலத்திலே தாபரித்து, ஏழுநாள் அவர்கள் நடுவிலே பிரமித்தவராய்த் தங்குகிறார் (எசே 3:15).

சிறையிருப்பிலுள்ள யூதர்கள் தாபரிக்கிற ஸ்தலத்திலே எசேக்கியேலும் ஸ்தாபரிக்கிறார். அவர்கள் உட்கார்ந்திருக்கிற இடத்திலே எசேக்கியேலும் உட்கார்ந்திருக்கிறார். எசேக்கியேல் அவர்கள் நடுவில் பிரமித்தவராய் ஏழு நாள் தங்கியிருக்கிறார். அவர்கள் தன்னிடத்தில் சொல்லுகிற எல்லா வார்த்தைகளையும் பிரமிப்போடு கேட்கிறார். அவர்கள் செய்யும் எல்லா கிரியைகளையும் பிரமிப்போடு கவனித்துப் பார்க்கிறார். எசேக்கியேல் ஏழு நாட்களாக, இஸ்ரவேல் வம்சத்தாரிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. கர்த்தருடைய வார்த்தை தனக்கு வரும் வரையிலும் எசேக்கியேல் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். மிகுந்த துன்பங்களையும், பாடுகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பாமல் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது எசேக்கியேலுக்கு பிரமிப்பு உண்டாயிற்று. அவர் ஏற்கெனவே தேவதரிசனங்களைக் கண்ட பிரமிப்பிலிருக்கிறார். அந்த பிரமிப்போடு இந்த பிரமிப்பும் சேர்ந்து கொள்கிறது. எசேக்கியேல் சிறையிருப்பிலுள்ள யூதர்கள் நடுவில், பிரமித்தவராக, ஏழு நாட்களாக உட்கார்ந்திருக்கிறார்.

காவல்காரர்
எசே 3:16-21

எசே 3:16. ஏழுநாள் முடிந்தபின்பு கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 3:17. மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவல்காரனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.

எசே 3:18. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப் பழியையோ உன் கையிலே கேட்பேன்.

எசே 3:19. நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்.

எசே 3:20. அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும், நான் அவன்முன் இடறலை வைக்கும்போதும், அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.

எசே 3:21. நீதிமான் பாவஞ் செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்தபின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன் பிழைக்கவே பிழைப்பான்; அவன் எச்சரிக்கப்பட்டான்; நீயும் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய் என்றார்.

ஏழுநாள் முடிந்த பின்பு எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. எசேக்கியேல் தேவதரிசனங்களைக் கண்டு, ஏழு நாட்களுக்கு பின்பு, கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. எசேக்கியேல் தேவதரிசனங்களைக் கண்ட நாளும், அவருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டான நாளும் ஓய்வுநாளாக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஏழு நாளுக்கு முன்பு எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை தரிசனத்தில் கண்டார். இப்போது கர்த்தருடைய வார்த்தையானவர் அவரிடத்தில் வந்திருக்கிறார். எசேக்கியேல் தேவதரிசனங்களைக் கண்ட நாளிலிருந்து, இந்த ஏழு நாட்களாக, தேவனுடைய காரியங்களை தியானித்துக் கொண்டு வருகிறார். ஒரு ஓய்வுநாளிலிருந்து அடுத்த ஓய்வுநாள் வரையிலும், எசேக்கியேல் கர்த்தருடைய காரியத்திற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒய்வுநாளிலே, கர்த்தருடைய நாமத்தினால், கர்த்தருடைய வார்த்தைகளை, ஜனங்களுக்கு சொல்லவேண்டும். கர்த்தர் தங்களுக்கு சொல்லும் சத்திய வார்த்தைகளை செவிகொடுத்து கவனமாய்க் கேட்கவேண்டும். கர்த்தர் எசேக்கியேலுக்கு இப்போது தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எசேக்கியேல் செய்ய வேண்டிய ஊழியத்தைப்பற்றியும், அவர் ஜனங்களிடத்தில் பேசவேண்டிய வார்த்தைகளைப்பற்றியும் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை ஓர் உவமையினால் வெளிப்படுத்தப்படுகிறது.

கர்த்தர் எசேக்கியேலிடம், ''மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக'' (எசே 3:17) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் கர்த்தரால் நியமிக்கப்பட்ட காவலாளன். அவர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவலாளன். மந்தைக்கு காவலாளர்கள் இருப்பதுபோல, பாளயத்திற்கு காவலாளர்கள் இருப்பதுபோல எசேக்கியேல் நகரத்திற்கு காவலாளனாக இருக்கிறார். கர்த்தரே எசேக்கியேலை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவலாளனாக வைத்திருக்கிறார்.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். எருசலேமின் அலங்கங்களின்மீது காவலாளர்கள் நின்றுகொண்டு, சத்துருக்களின் நடமாட்டங்களை கவனித்துப் பார்க்கிறார்கள். எருசலேம் நகரத்திற்கு சத்துருக்கள் மூலமாய் ஆபத்து வரும்போது, காவலாளர்கள் நகரத்திலுள்ளவர்களுக்கு ஆபத்தைப்பற்றிய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லவேண்டும். எசேக்கியேலுக்கு இப்படிப்பட்ட காவலாளனின் ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது யுத்தக்களத்திலே இருக்கிறார்கள். சத்துருக்கள் அவர்களைச் சுற்றிலும் வந்திருக்கிறார்கள். யூதாவின் பட்டணங்களை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருக்குமே சத்துருக்கள் மூலமாய் ஆபத்து அருகாமையில் வந்திருக்கிறது. சாதாரண ஜனங்களைவிட காவல்காரரின் உயிருக்குத்தான் பேராபத்து வரும்.

சத்துருக்கள் நகரத்தை முற்றிக்கைப்போடும்போது, கோட்டைச்சுவரின் மேலே விழிப்போடிருக்கிற காவல்காரனைத்தான் முதலாவதாக கொன்றுபோடுவார்கள். காவல்காரனைக் கொன்றுபோட்டால், சத்துருக்களைப்பற்றிய எச்சரிப்பின் வார்த்தைகளை, நகரத்திலுள்ளவர்களுக்கு சொல்ல ஒருவரும் இருக்கமாட்டார்கள். அவர்கள் எதிர்பாராத வேளையில், சத்துருக்கள் நகரத்திற்குள் பிரவேசித்து, அவர்களைப் பிடித்துக்கொள்வார்கள்.

காவல்காரர்கள் தங்களுடைய கடமைகளை செய்யாமல், தோற்று ஓடிப்போய்விடமாட்டார்கள். தங்களுடைய உயிருக்கு ஆபத்து வந்தாலும், உயிருக்கு போராடிக்கொண்டிருந்தாலும், காவல்காரர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவார்கள். தங்களை நம்பி ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற வேலைகளுக்கு அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள்.

திருச்சபையிலுள்ள தலைவர்களுக்கு காவல்காரர்களைப்போன்ற ஊழியமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சபைக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தால், பாவிகளும் துன்மார்க்கர்களும் அவர்களை சபிப்பார்கள். சபையின் தலைவர்கள் சபைக்கு உண்மையுள்ளவர்களாயில்லையென்றால், கர்த்தர் அவர்களை சபிப்பார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மனுஷருடைய சாபங்களை ஏற்றுக்கொண்டு, கர்த்தருடைய சாபங்களுக்கு விலகியிருக்கவேண்டும்.

காவல்காரன் கோட்டை மதில்சுவரின் மேல் நின்றுகொண்டு, சத்துருக்களின் நடமாட்டத்தை கவனித்து பார்ப்பான். காவல்காரன் சத்துருக்களைப் பார்த்தால் மாத்திரம் போதாது. சத்துருக்கள் தங்களுக்கு அருகாமையில் வருகிறார்கள் என்னும் செய்தியையும், அவன் நகரத்திலுள்ளவர்களுக்கு சொல்லவேண்டும். கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவலாளனாக வைத்திருக்கிறார்.

தீர்க்கதரிசிகள் எல்லோருமே, கர்த்தரால் வைக்கப்பட்டிருக்கிற காவலாளர்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கவனித்துப் பார்க்கவேண்டும். கர்த்தர் ஜனங்களைக் குறித்து என்ன சொல்லுகிறார் என்பதை காவல்காரர்கள் கவனிக்கவேண்டும்.

உலகப்பிரகாரமான காவல்காரர்கள் சத்துருக்கள் வருகிறார்களா என்பதை நோக்கிப் பார்ப்பார்கள். ஆபத்து வருகிறதா என்பதை கவனித்துப் பார்ப்பார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களோ கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். அவர்கள் அங்கும் இங்குமாக, வேறு எங்கும் பார்க்கக்கூடாது. உலகப்பிரகாரமான காவல்காரர்கள், எல்லா பக்கங்களிலும் சுற்றிப் பார்க்கவேண்டும். அது அவர்களுடைய வேலை. கர்த்தருடைய ஊழியக்காரர்களோ கர்த்தரை மாத்திரமே நோக்கிப் பார்க்கவேண்டும். இது நம்முடைய கடமை.

கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ என் வாயினாலே வார்த்தையைக் கேள்" (எசே 3:17) என்று சொல்லுகிறார். எசேக்கியேல் தனக்கு விரோதமாகப் பேசுகிற மனுஷருடைய வார்த்தைகளைக் கேட்கக்கூடாது. அவர் கர்த்தர் தனக்கு சொல்லுகிற வார்த்தைகளை மாத்திரமே கேட்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக" (எசே 3:17) என்று சொல்லுகிறார். எசேக்கியேல் கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை கேட்கவும் வேண்டும். அதை இஸ்ரவேல் வம்சத்தாரிடம் சொல்லவும் வேண்டும். எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை தன்னுடைய நாமத்தினால் சொல்லக்கூடாது. அதை கர்த்தருடைய நாமத்தினால் மாத்திரமே சொல்லவேண்டும். வார்த்தை கர்த்தருடையது.

கர்த்தர் துன்மார்க்கனைப் பார்த்து "சாகவே சாவாய்" என்று சொல்லுகிறார். எசேக்கியேலும் துன்மார்க்கனைப் பார்த்து, அவன் தன்னுடைய துன்மார்க்கமான வழியிலிராதபடிக்கு, அவனை எச்சரிக்க வேண்டும். துன்மார்க்கன் எச்சரிப்படைந்து, தன்னுடைய துன்மார்க்கமான வழியைவிட்டு விலகிவந்தால், அவன் பிழைத்துக் கொள்வான். எசேக்கியேலும் துன்மார்க்கனை உயிரோடே காத்துக்கொள்வார். இது கர்த்தர் எசேக்கியேலுக்கு கொடுத்திருக்கிற ஊழியம்.

கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வார்த்தைகளை, எசேக்கியேல் துன்மார்க்கனுக்கு சொல்லாமல் இருந்துவிடக் கூடாது. அவனை எச்சரிக்காமலும் இருந்துவிடக்கூடாது. துன்மார்க்கன் தன்னுடைய துன்மார்க்கத்தில் சாவான். அவனுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை எசேக்கியேல் சொல்லவில்லை. அவன் தன்னுடைய துன்மார்க்கத்தில் நிலைத்திருந்ததினால், அவன் செத்துப்போகிறான். கர்த்தர் துன்மார்க்கனுடைய இரத்தப்பழியை எசேக்கியேலின் கையிலே கேட்பார்.

எசேக்கியேல் துன்மார்க்கனுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, அவனை எச்சரித்திருந்தால், அவன் ஒருவேளை தன்னுடைய துன்மார்க்கமான வழியிலிருந்து மனந்திரும்பியிருப்பான். எசேக்கியேல் துன்மார்க்கனுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லாததினால், அவனுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளையும் கேட்க வாய்ப்பில்லை, மனந்திரும்பவும் வழியில்லை. அந்த துன்மார்க்கன் தன்னுடைய துன்மார்க்கத்தில் செத்துப்போகிறான்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிற எச்சரிப்பின் வார்த்தை, எல்லா ஊழியர்களுக்கும் பொதுவாக சொல்லப்படுகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பாவிகளுடைய பாவங்களை அவர்களுக்கு எச்சரித்துச் சொல்லவேண்டும். பாவத்தின் விளைவுகளையும், அதன் ஆபத்துக்களையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அதே வேளையில், பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்களையும் அவர்களுக்கு உறுதிபண்ணவேண்டும்.

பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாவிட்டாலும், ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். உண்மையுள்ள ஊழியக்காரர்களை கர்த்தர் கனம்பண்ணுவார். எசேக்கியேல் துன்மார்க்கர் மத்தியிலும் ஊழியம் செய்கிறார், நீதிமான்கள் மத்தியிலும் ஊழியம் செய்கிறார்.

"நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்" (எசே 3:19) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார்.

நீதிமான் தன் நீதியை விட்டுத்திரும்பி நீதிகேடு செய்யும்போது, கர்த்தர் அவனுக்கு முன்பாக இடறலை வைக்கிறார். அவன் தன்னுடைய நீதி கேட்டினால் செத்துப்போவான். எசேக்கியேல் நீதிகேடு செய்யும் நீதிமானை கர்த்தருடைய நாமத்தினால் எச்சரிக்கவேண்டும். எசேக்கியேல் அவனை எச்சரிக்காமல் விட்டுவிட்டால், நீதிகேடு செய்யும் நீதிமான் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்பதற்கு வாய்ப்பில்லை. அவன் தன்னுடைய நீதிகேட்டில் செத்துப்போவான். அவன் தன் பாவத்திலே செத்துப்போவான். அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை. எசேக்கியேல் அந்த நீதிமானை எச்சரிக்காதபடியினால், அவனுடைய இரத்தப்பழியை, கர்த்தர் எசேக்கியேலினிடத்தில் கேட்பார்.

எசேக்கியேல் நீதிமானை எச்சரித்து, அவனும் எச்சரிப்பைப்பெற்று, பாவம் செய்யாவிட்டால் அவன் பிழைப்பான். எசேக்கியேலும் தன்னுடைய ஆத்துமாவைத் தப்புவித்துக்கொள்வார்.

கர்த்தர் எசேக்கியேலிடம் "அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும், நான் அவன்முன் இடறலை வைக்கும்போதும், அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். நீதிமான் பாவஞ்செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்தபின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன் பிழைக்கவே பிழைப்பான்; அவன் எச்சரிக்கப்பட்டான்; நீயும் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய் என்றார்" (எசே 3:20,21) என்று சொல்லுகிறார்.

"ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபி 4:1).

மனுஷர் தங்களுடைய நீதியை விட்டுத் திரும்பும்போது, அவர்கள் அக்கிரமம் செய்யக் கற்றுக்கொள்வார்கள். தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் கவனக்குறைவாயிருப்பார்கள். கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனைகளை அசட்டைபண்ணுவார்கள். இவர்கள் சோதனைக்காரனுக்கு எளிதாக இரையாகிவிடுவார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மிகவும் கவனமாகவும், எச்சரிப்பாகவும் இருக்கவேண்டும். நீதிமான்களாயிருக்கிறவர்கள், தொடர்ந்து நீதிமான்களாகயிருக்கவேண்டும் என்று பிரயாசப்படவேண்டும். சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம்போல, யாரை விழுங்கலாம் என்று, சுற்றி அலைந்து கொண்டிருக்கிறான். அவன் நீதிமான்களுக்கு மறைவாக கண்ணிகளையும், வலைகளையும் விரித்திருக்கிறான். நீதிமான்கள் சாத்தானுடைய வஞ்சக வலைகளில் சிக்கிக்கொள்ளக்கூடாது.

நீதிமான்கள் தங்கள் நீதியைவிட்டுத் திரும்பி, நீதிகேடு செய்தாலும், அவர்களை கர்த்தருடைய ஊழியக்காரர்கள், கர்த்தருடைய நாமத்தினால் எச்சரிக்க வேண்டும். நீதிகேடு செய்கிற நீதிமான்கள், மறுபடியும் நீதிமான்களாவதற்கு வாய்ப்புக்கள் உள்ளது. ஊழியக்காரர்கள் நீதிமான்களை அதிகமாகப் புகழ்ந்து பேசவேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு அதிகமான முகஸ்துதிகளையும் பண்ணக்கூடாது. நீதிமான்கள் தங்களுடைய நீதியில் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அவர்கள் பாவத்தில் விழுந்துவிடாதவாறு அவர்களை எச்சரிக்கவேண்டும்.

துன்மார்க்கனை எச்சரிக்கும்போது, அவனை சபிக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. அவன் தன் துன்மார்க்கத்தையும், ஆகாத வழியையும் விட்டு, நீதியின் பாதைக்கு திரும்ப வேண்டும். அவனுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லி, அவனை நீதியின் பாதையில் வழிநடத்தவேண்டும். இப்போது துன்மார்க்கனாயிருக்கிறவன், எப்போதுமே துன்மார்க்கனாயிருப்பான் என்று சொல்ல முடியாது. எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

நாம் எல்லோருமே பூமியில் வாசம்பண்ணுகிறோம். நாம் பரலோகத்திற்குப் போகவேண்டியவர்கள். பூமியில் நீதிமான்களாக இருந்தாலும், அவர்கள் பரலோகத்திற்குப் போவார்கள் என்னும் நிச்சயம் எதுவுமில்லை. கடைசி வரையிலும் அவர்கள் நீதிமான்களாய் இருந்தால்தான், அவர்களால் பரலோகத்திற்குப் போகமுடியும். ஆகையினால் நீதிமான்கள் பாவம் செய்யாதபடிக்கு, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, அவருடைய கிருபைக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுப்பது எல்லோருக்குமே நல்லது. கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு, அதற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, நாம் கர்த்தருடைய ஆளுகையிலிருப்போம். கர்த்தர் நம்மை பாதுகாப்பார். நம்மை பராமரிப்பார். நம்மைக் கரம்பிடித்து வழிநடத்துவார். நாம் ஒவ்வொரு நாளும் நம்மை கர்த்தருடைய சித்தத்திற்கும், ஆளுகைக்கும் ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உன்னதமான ஊழியத்தை செய்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கனை எச்சரித்து, அவனுடைய ஆத்துமாவை மரணத்திற்கு தப்புவிக்கப்பண்ணுகிறார்கள். ஊழியக்காரர்கள் நீதிமான்களை எச்சரித்து, தங்களுடைய ஆத்துமாவையும் தப்புவித்துக்கொள்கிறார்கள். எல்லோருக்கும் ஜீவனைக் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தார். நம்முடைய ஜீவன் பரிபூரணமாயிருக்க வேண்டும் என்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தம்.

நீ ஊமையனாயிருப்பாய்
எசே 3:22-27

எசே 3:22. அவ்விடத்திலே கர்த்தருடைய கரம் என்மேல் அமர்ந்தது; அவர்: நீ எழுந்திருந்து பள்ளத்தாக்குக்குப் புறப்பட்டுப் போ, அங்கே உன்னுடனே பேசுவேன் என்றார்.

எசே 3:23. அப்படியே நான் எழுந்திருந்து, பள்ளத்தாக்குக்குப் புறப்பட்டுப் போனேன்; இதோ, கேபார் நதியாண்டையிலே நான் கண்ட மகிமைக்குச் சரியாக அங்கே கர்த்தருடைய மகிமை விளங்கினது; அப்பொழுது நான் முகங்குப்புற விழுந்தேன்.

எசே 3:24. உடனே ஆவி எனக்குள்ளே புகுந்து, என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது, அப்பொழுது அவர் என்னுடனே பேசி: நீ போய், உன் வீட்டுக்குள்ளே உன்னை அடைத்துக்கொண்டிரு.

எசே 3:25. இதோ, மனுபுத்திரனே, உன்மேல் கயிறுகளைப்போட்டு, அவைகளால் உன்னைக் கட்டப்போகிறார்கள்; ஆகையால் நீ அவர்களுக்குள்ளே போகவேண்டாம்.

எசே 3:26. நான் உன் நாவை உன் மேல்வாயோடே ஒட்டிக்கொள்ளப்பண்ணுவேன்; நீ அவர்களைக் கடிந்துகொள்ளுகிற மனுஷனாயிராமல், ஊமையனாயிருப்பாய்; அவர்கள் கலகவீட்டார்.

எசே 3:27. நான் உன்னோடே பேசும்போது, உன் வாயைத் திறப்பேன்; அப்பொழுது கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைத்தார் என்று அவர்களோடே சொல்வாய்; கேட்கிறவன் கேட்கட்டும், கேளாதவன் கேளாதிருக்கட்டும்; அவர்கள் கலக வீட்டார்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு தேவதரிசனங்களைக் காண்பிக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அவருக்கு வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் செய்ய வேண்டிய ஊழியங்களைத் தெளிவுபடுத்துகிறார். எசேக்கியேலின் ஊழிய அழைப்பு பெரிதாயிருக்கிறது. ஆனால் கர்த்தர் அவருக்கு ஊழியவாய்ப்புக்களை உடனே கொடுக்கவில்லை.

கர்த்தர் தம்முடைய மகிமையை மற்றொரு தரிசனத்தின் மூலமாய் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய கரம் எசேக்கியேலின் மேல் அமருகிறது. கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ எழுந்திருந்து பள்ளத்தாக்குக்குப் புறப்பட்டுப் போ, அங்கே உன்னுடனே பேசுவேன்" (எசே 3:22) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் தேவதரிசனங்களைப் பார்த்து தன்னுடைய ஆவியில் சந்தோஷமாயிருக்கிறார். ஆனாலும் தனக்கு வரப்போகிற பாடுகளையும் வேதனைகளையும் நினைத்து, எசேக்கியேல் தன்னுடைய ஆவியின் உக்கிரத்தினால் மனங்கசந்துபோயிருக்கிறார். எசேக்கியேலின் ஆவியில் சோர்வும் கவலையும் வந்திருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தை சந்தோஷமாய் செய்யவேண்டும் என்று விரும்பிய எசேக்கியேல், இப்போது மனங்கசந்துபோயிருக்கிறார்.

வேதனையிலும் வருத்தத்திலும் நிரம்பியிருக்கிற எசேக்கியேலுக்கு கர்த்தர் இப்போது ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். தேவனோடு தனிமையிலிருப்பது நம்முடைய ஆத்துமாவுக்கு இன்பமானது. இந்த உலகத்தின் ஆசாபாசங்களுக்கும், ஆரவாரங்களுக்கும் விலகி, கர்த்தருடைய சமுகத்தில் நாம் தனித்திருக்கும்போது, நம்முடைய ஆத்துமாவுக்கு ஆறுதல் உண்டாகும். நமக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

நாம் கர்த்தருடைய சமுகத்தில் தனித்திருக்கும்போது கர்த்தருக்கும் நமக்கும் இடையில் நெருங்கிய ஐக்கியமுண்டாகும். கர்த்தர் நம்மோடு பேசுவார். நாமும் கர்த்தரோடு தாராளமாய்ப் பேசலாம். எசேக்கியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களில் ஒருவர். அவரிடத்தில் விசேஷித்த குணம் எதுவுமில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையையும், சிலாக்கியத்தையும் அவருக்கு காண்பிக்கிறார். கர்த்தருடைய கரம் எசேக்கியேலின்மேல் அமர்ந்திருக்கிறது. கர்த்தருடைய கரம் ஏற்கெனவே எசேக்கியேலின்மேல் பலமாகயிருந்தது (எசே 3:14). கர்த்தருடைய கரம் எசேக்கியேலோடு கூடவே இருப்பது அவருடைய சுத்த கிருபை.

கர்த்தர் எசேக்கியேலைப் பார்த்து "நீ எழுந்து பள்ளத்தாக்குக்கு புறப்பட்டுப்போ" என்று சொல்கிறார். அப்படியே எசேக்கியேலும் எழுந்திருந்து பள்ளத்தாக்குக்கு புறப்பட்டுப்போகிறார். எசேக்கியேல் மனப்பூர்வமாயும் சந்தோஷமாயும் பள்ளத்தாக்குக்கு புறப்பட்டுப்போகிறார்.

எசேக்கியேல் ஏற்கெனவே கேபார் நதியண்டையிலே, சிறைப்பட்டவர்களிடத்திற்கு வந்தார். அப்போது அவருடைய மனதிலே சந்தோஷமோ உற்சாகமோ இல்லை. எசேக்கியேல் அவர்கள் நடுவிலே ஏழுநாள் பிரமித்தவராக தங்கியிருந்தார் (எசே 3:15). எசேக்கியேல் இப்போது பள்ளத்தாக்குக்கு கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, சந்தோஷமாயும் சமாதானமாயும் புறப்பட்டுப்போகிறார்.

எசேக்கியேல் கேபார் நதியண்டையில் சிறைப்பட்டவர்கள் நடுவிலிருந்தபோது, தேவதரிசனங்களைக் கண்டார். அதற்கு ஒப்பான தரிசனத்தை அவர் இப்போது பள்ளத்தாக்கிலும் பார்க்கிறார். "இதோ, கேபார் நதியாண்டையிலே நான் கண்ட மகிமைக்குச் சரியாக அங்கே கர்த்தருடைய மகிமை விளங்கினது" (எசே 3:23) என்று எசேக்கியேல் சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய மகிமையை விசுவாசத்தோடு தரிசிக்கும்போது, அவருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றுக்கொள்கிறோம். கர்த்தருடைய மகிமையை ஏற்கெனவே தரிசித்தவர்கள், அவருடைய மகிமையை இன்னும் அதிகமாய்த் தரிசிக்கவேண்டும் என்று விரும்பவேண்டும். தேடுகிறவர்கள் மாத்திரமே கண்டடைவார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால், தம்முடைய மகிமையை நமக்கு வெளிப்படுத்தி, நமக்கு விசேஷித்த சிலாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் உணரவேண்டும்.

கர்த்தர் நம்மை ஊழியத்திற்கு அழைக்கும்போது, நாம் கர்த்தரிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்ப்போம். கர்த்தர் நமக்கு அனுகூலமான வாசல்களை திறந்து கொடுப்பார் என்று கர்த்தரை நோக்கிப் பார்ப்போம். நம்முடைய ஊழியத்தின் மூலமாய் ஏராளமான ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும், திரளான ஜனங்கள் நம்முடைய பிரசங்கச் செய்திக்கு செவிகொடுப்பார்கள் என்றும் நாம் திட்டமிடுவோம்.

கர்த்தரோ எசேக்கியேலுக்கு இப்படிப்பட்ட பெரிய ஆசீர்வாதங்கள் எதையும் கொடுக்கவில்லை. கர்த்தர் எசேக்கியேலைப் பார்த்து "நீ போய் உன் வீட்டிற்குள்ளே உன்னை அடைத்துக் கொண்டிரு" (எசே 3:24) என்று சொல்லுகிறார். கர்த்தர் எசேக்கியேலை அவருடைய வீட்டிலேயே அடைத்துப் போடுகிறார். எசேக்கியேல் தன்னுடைய வீட்டைவிட்டு வெளியேறி வருவதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கவில்லை.

கர்த்தர் தாமே எசேக்கியேலை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தார். இஸ்ரவேல் வம்சத்தார் நடுவிலே தம்முடைய வார்த்தையைச் சொல்லுமாறு கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளை கொடுத்தார். ஆனால் இப்போதோ கர்த்தர் எசேக்கியேலுக்கு ஊழிய வாய்ப்புக்களைக் கொடுக்காமல், அவரை தன்னுடைய வீட்டிற்குள்ளே அடைத்துக்கொண்டிருக்குமாறு சொல்லுகிறார். எசேக்கியேல் புறப்பட்டுப்போய் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் கர்த்தரோ எசேக்கியேலை வெளியே ஊழியம் செய்ய அனுமதிக்கவில்லை. ஊழிய அழைப்பு இருக்கிறது. ஊழிய வாய்ப்பு இல்லை.

எசேக்கியேல் ஆரம்பத்தில் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தயங்கினார். கர்த்தர் அவரைப் பெலப்படுத்தினார். எசேக்கியேல் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னபோதோ, அவர்கள் எசேக்கியேலின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. எசேக்கியேலை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரித்து கனம்பண்ணவில்லை. அவர்கள் எசேக்கியேலையும் ஏளனம்பண்ணினார்கள், எசேக்கியேலை ஊழியத்திற்கு அனுப்பின கர்த்தரையும் ஏளனம்பண்ணினார்கள்.

கர்த்தர் இந்த சம்பவங்களையெல்லாம் நோக்கிப் பார்க்கிறார். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு எசேக்கியேல்மீதும், இஸ்ரவேல் வம்சத்தார்மீதும் வருகிறது. எசேக்கியேல் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தயங்கியதினிமித்தமாகவும், பேசுவதற்கு வெட்கப்பட்டதினிமித்தமாகவும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்மீது வருகிறது. கர்த்தர் எசேக்கியேலை அவருடைய வீட்டிற்குள்ளேயே அடைத்துப் போடுகிறார். இதனால் எசேக்கியேல் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு அழைக்கப்பட்டிருந்தாலும், அந்த ஊழியத்தை செய்ய முடியாதபடிக்கு அவருக்கு தடை உண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் குளிர்ந்த நிலமையிலிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரையும் கனம்பண்ணவில்லை. கர்த்தருடைய தீர்க்கதரிசியையும் அங்கீகரிக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை. இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் வம்சத்தார் மீது வருகிறது. எசேக்கியேல் அவர்கள் மத்தியிலே போய் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லாத படிக்கு, கர்த்தர் அவரை தடைபண்ணிவிடுகிறார். எசேக்கியேலை அவருடைய வீட்டிற்குள்ளேயே அடைத்துப்போடுகிறார். இதனால் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கும் வாய்ப்பு இல்லாமல்போயிற்று.

எசேக்கியேல் தன்னுடைய வீட்டிற்குள்ளே தன்னை அடைத்துக் கொண்டு தனிமையிலிருக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்தையும், அவருடைய விருப்பத்தையும், அவருடைய திட்டத்தையும் இன்னும் அதிகமாய்ப் புரிந்துகொள்ள வேண்டும். எசேக்கியேல் தன்னுடைய வீட்டிலே தன்னை அடைத்துக்கொண்டிருந்த போது, யூதாவின் மூப்பர்கள் எசேக்கியேலை அவருடைய வீட்டிலே வந்து பார்க்க வந்தார்கள். மூப்பர்கள் எசேக்கியேலுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள் (எசே 8:1). அப்போதும் எசேக்கியேல் அவர்களோடு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவில்லை.

இதற்கு பின்பு கர்த்தருடைய ஆவியானவர் எசேக்கியேலை எடுத்து, அவரை தேவனுடைய ஆவிக்குள்ளான தரிசனத்திலே கல்தேயாவுக்குச் சிறைப்பட்டுப்போனவர்கள் இடத்திலே கொண்டு போய் விட்டார்; அப்பொழுது எசேக்கியேல் கண்ட தரிசனம் அவரிடத்திலிருந்து எடுபட்டுப்போயிற்று. அப்போதுதான் எசேக்கியேலால் கர்த்தருடைய வார்த்தையை பேச முடிந்தது. கர்த்தர் தனக்குக் காண்பித்த யாவையும் சிறையிருப்பிலிருந்தவர்களுக்குச் எசேக்கியேல் சொன்னார் (எசே 11:24,25).

எசேக்கியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியில் கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தார் எசேக்கியேல் சொல்லும் வார்த்தைகளை செவிகொடுத்து கேட்கமாட்டார்கள். அவர்கள் எசேக்கியேலின்மீது கோபப்படுவார்கள். கர்த்தர் எசேக்கியேலை தம்முடைய வல்லமையினால் பாதுகாக்கமாட்டார். இஸ்ரவேல் வம்சத்தார் எசேக்கியேலுக்கு எப்படிப்பட்ட தீங்குகளை செய்வார்கள் என்று கர்த்தர் வெளிப்படுத்துகிறார்.

"இதோ, மனுபுத்திரனே, உன்மேல் கயிறுகளைப்போட்டு, அவைகளால் உன்னைக் கட்டப்போகிறார்கள்; ஆகையால் நீ அவர்களுக்குள்ளே போகவேண்டாம்" (எசே 3:25) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார். அவர்கள் எசேக்கியேலை கயிறுகளால் கட்டும்போது, கர்த்தர் அவரை பாதுகாப்பதாகவோ அல்லது விடுவிப்பதாகவோ வாக்குப்பண்ணவில்லை. அதற்கு பதிலாக எசேக்கியேல் அவர்களுக்குள்ளே போகவேண்டாம் என்று, கர்த்தர் அவரை தடைபண்ணிவிடுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார்மீது ஏற்கெனவே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தினார்கள். இதனால் கர்த்தர் அவர்கள்மீது கோபங்கொண்டு, அவர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பிவிட்டார். இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள்.

தம்முடைய தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்தியதற்காக, கர்த்தர் அவர்களுக்கு இந்த தண்டனையைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ இன்னும் மனந்திரும்பவில்லை. அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை இன்னும் துன்பப்படுத்துகிறார்கள். எசேக்கியேலின்மேல் கயிறுகளைப்போட்டு, அவைகளால் அவரைக் கட்டப்போகிறார்கள். பைத்தியக்காரர்களை கட்டுவதுபோல அவர்கள் எசேக்கியேலைக் கட்டப்போகிறார்கள்.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் அவரை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று அங்கீகரிக்கமாட்டார்கள். அதற்கு பதிலாக எசேக்கியேல் ஒரு பைத்தியக்காரன் என்று தீர்மானம்பண்ணி, அவரை கயிறுகளால் கட்டிப்போடுவார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கலகவீட்டார். எசேக்கியேல் இப்போது என்ன சொன்னாலும் அது அவருக்கு தீங்காகவே முடியும். எசேக்கியேல் சிறிதுகாலம் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லாமல் அமைதியாகயிருப்பது அவருக்கு நல்லது. கர்த்தர் எசேக்கியேலிடம் "நான் உன் நாவை உன் மேல்வாயோடே ஒட்டிக்கொள்ளப்பண்ணுவேன்; நீ அவர்களைக் கடிந்துகொள்ளுகிற மனுஷனாயிராமல், ஊமையனாயிருப்பாய்; அவர்கள் கலகவீட்டார்" (எசே 3:26) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேலால் இப்போது கர்த்தருடைய வார்த்தைகளைப் பேசமுடியும். ஆனால் கர்த்தரோ எசேக்கியேலுக்கு தம்முடைய வார்த்தைகளைப் பேச இப்போது அனுமதி கொடுக்கவில்லை. எசேக்கியேலினிடத்தில் ஒரு தப்பிதமும் இல்லை. கர்த்தருடைய ஊழியக்காரர் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்க ஆயத்தமாயில்லை.

அவர்கள் கலகவீட்டாராயிருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. கடிந்துகொள்ளும் வார்த்தைகளை அங்கீகரிக்க விரும்பவில்லை. அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய விரும்பவில்லை. தங்கள் சுயசித்தத்தின் பிரகாரமாகவும், சுயவிருப்பத்தின் பிரகாரமாகவும் ஜீவிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

பாபிலோன் தேசத்தார் தங்களை அடக்கி ஆளுகை செய்தாலும், கர்த்தர் தங்களை ஆளுகை செய்யக்கூடாது என்று தீர்மானமாயிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை கலகவீட்டார் என்று சொல்லுகிறார். கலகவீட்டாருக்கு சமாதானத்தின் வார்த்தைகளும், ஆறுதலின் வார்த்தைகளும், ஆசீர்வாதங்களின் வார்த்தைகளும் தேவையில்லை என்று கர்த்தர் தீர்மானித்து விடுகிறார். அவர்களை இப்போது கடிந்து சொல்லவேண்டிய அவசியமுமில்லை என்று கர்த்தர் தீர்மானித்திருக்கிறார்.

சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இப்போது கர்த்தருடைய வார்த்தைகள் சொல்லப்படவில்லை. ஆனாலும் கர்த்தருக்கு ஏற்ற சமயம் வரும்போது, அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகள் சொல்லப்படும்.

கர்த்தர் எசேக்கியேலிடம் "நான் உன்னோடே பேசும்போது, உன் வாயைத் திறப்பேன்; அப்பொழுது கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைத்தார் என்று அவர்களோடே சொல்வாய்; கேட்கிறவன் கேட்கட்டும், கேளாதவன் கேளாதிருக்கட்டும்; அவர்கள் கலக வீட்டார்" (எசே 3:27) என்று சொல்லுகிறார்.

BELLWETHER INTERNATIONAL

எசேக்கியேல் - விரிவுரை
EZEKIEL - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

எசேக்கியேலின் ஊழியத்தில் மிகப்பெரிய வெற்றி கிடைக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் தம்முடைய வார்த்தைக்கு செவிகொடுப்பார்கள் என்றும் கர்த்தர் சொல்லவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டாலும், கேட்காவிட்டாலும், எசேக்கியேல் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லவேண்டும்.

எசேக்கியேல் கர்த்தருடைய ஊழியத்தில் சோர்ந்துபோய்விடக்கூடாது. அவர் கர்த்தருடைய சித்தத்திற்கு எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கவேண்டும். எசேக்கியேலின் ஆரம்பகால ஊழியம் மிகவும் கடினமாயிருக்கிறது. தரிசனம் பெரிதாயிருக்கிறது. ஆனால் ஊழியத்தில் பாடுகள் அதிகமாயிருக்கிறது.

4 அதிகாரம்

பாபிலோன்தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் இன்னும் எருசலேமையே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பக்தியுள்ளவர்கள் எருசலேம் நகரத்தை விசுவாச கண்களோடு நோக்கிப் பார்க்கிறார்கள். கர்த்தர் தங்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவித்து, எருசலேம் நகரத்திற்கு திரும்பவும் அழைத்துக்கொண்டு போவார் என்று ஆவலாய்க் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல் எருசலேம் நகரத்திலேயே தங்கியிருக்கிற யூதர்கள், தங்களைப்பற்றி பெருமையாய் நினைக்கிறார்கள். எருசலேம் நகரம் உறுதியாய் நிலைத்திருக்கும் வரையிலும், தங்களுக்கு ஒரு தீங்கும் வராது என்று தங்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள்.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலமாய் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிடுவார்கள். எருசலேம் நகரத்திற்குள்ளே கொடிய பஞ்சங்களும், வேதனைகளும் உண்டாகும்.

எருசலேம் நகரத்திற்கு விரோதமாக சத்துருக்கள் அரண்களை எழுப்புவார்கள் (எசே 4:1-8) எருசலேம் நகரத்திற்குள்ளே கொடிய பஞ்சமுண்டாகும் (எசே 4:9-17).

எருசலேம் நகரத்திற்கு விரோதமாக முற்றிக்கை எசே 4:1-8

எசே 4:1. மனுபுத்திரனே, நீ ஒரு செங்கலை எடுத்து, அதை உன் முன் வைத்து, அதின்மேல் எருசலேம் நகரத்தை வரைந்து,

எசே 4:2. அதற்கு விரோதமாக முற்றிக்கைபோட்டு, அதற்கு விரோதமாகக் கொத்தளங்களைக் கட்டி, அதற்கு விரோதமாக மண்மேடுபோட்டு, அதற்கு விரோதமாக இராணுவங்களை நிறுத்தி, சுற்றிலும் அதற்கு விரோதமாக மதிலிடிக்கும் யந்திரங்களை வை.

எசே 4:3. மேலும் நீ ஒரு இருப்புச்சட்டியை வாங்கி, அதை உனக்கும் நகரத்துக்கும் நடுவாக இருப்புச்சுவராக்கி, அது முற்றிக்கையாய்க் கிடக்கும்படிக்கு உன் முகத்தை அதற்கு நேராய்க் திருப்பி, அதை முற்றிக்கைபோட்டுக் கொண்டிரு; இது இஸ்ரவேல் வம்சத்துக்கு அடையாளம்.

எசே 4:4. நீ உன் இடதுபக்கமாய் ஒருக்களித்துப் படுத்து, அதின்மேல் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தைச் சுமத்திக்கொள்; நீ அந்தப்பக்கமாய் ஒருக்களித்திருக்கும் நாட்களின் இலக்கத்தின்படியே அவர்களுடைய அக்கிரமத்தைச் சுமப்பாய்.

எசே 4:5. அவர்களுடைய அக்கிரமத்தின் வருஷங்களை உனக்கு நாட்கணக்காய் எண்ணக் கட்டளையிட்டேன்; முந்நூற்றுத் தொண்ணூறு நாட்கள்வரைக்கும் நீ இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும்.

எசே 4:6. நீ இவைகளை நிறைவேற்றினபின்பு, மறுபடியும் உன் வலதுபக்கமாய் ஒருக்களித்து, யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பதுநாள் வரைக்கும் சுமக்க வேண்டும்; ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்.

எசே 4:7. நீ எருசலேமின் முற்றிக்கைக்கு நேராகத் திருப்பிய முகமும், திறந்த புயமுமாக இருந்து, அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு.

எசே 4:8. இதோ, நீ அதை முற்றிக்கைப் போடும் நாட்களை நிறைவேற்றுமட்டும் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்தில் புரளக்கூடாதபடிக்கு உன்னைக் கயிறுகளால் கட்டுவேன்.

எருசலேம் நகரம் முற்றிக்கைப்போடப்படும். எசேக்கியேல் தீர்க்கதரிசி எருசலேமின் முற்றிக்கையை அடையாளங்களினால் விளக்கவேண்டும். கர்த்தர் எசேக்கியேலிடம், ஒரு செங்கலில் எருசலேம் நகரத்தை வரையுமாறு சொல்லுகிறார்.

எருசலேம் கர்த்தருடைய பரிசுத்தமான நகரம். கர்த்தர் எருசலேம் நகரத்தை தம்முடைய உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறார் "சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது" (ஏசா 49:15,16).

ஆனால் இப்போதோ அவர் எருசலேமை ஒரு செங்கலில் வரையச் சொல்லுகிறார். "மனுபுத்திரனே, நீ ஒரு செங்கலை எடுத்து, அதை உன் முன் வைத்து, அதின்மேல் எருசலேம் நகரத்தை வரை" (எசே 4:1).

எருசலேம் நகரம் கர்த்தருக்கு பிரியமான நகரம். அது அவருடைய பரிசுத்த நகரம். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது மிகவும் பிரியமாயிருக்கிறார். பிரதான ஆசாரியன், தன்னுடைய மார்பில் அணிந்திருக்கும் மார்ப்பதக்கத்தில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுடைய பெயர்களை விலையுயர்ந்த கற்களில் பதித்து எழுதியிருப்பார்.

ஒரு காலத்தில் கர்த்தருக்கு பிரியமான நகரமாகவும், உண்மையுள்ள நகரமாகவும் பரிசுத்தமான நகரமாகவும் இருந்த எருசலேம் நகரம், இப்போது ஒரு வேசியாயிற்று. கர்த்தருடைய உள்ளங்கைகளில் வரையப்பட்டிருந்த எருசலேம் நகரம் இப்போது, ஒரு செங்கலில் வரையப்பட்டிருக்கிறது.

செங்கல் வலுவான உலோகமல்ல. அது மண்ணால் செய்யப்பட்டது. கீழே விழுந்தால் உடைந்துபோகும். எருசலேம் நகரமும் சாதாரண செங்கலைப்போல மகிமையில்லாமலும், பெலமில்லாமலும் இருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலிடம் ஒரு செங்கலை எடுத்து, அதை தனக்கு முன்பாக வைத்து, அதின்மேல் எருசலேம் நகரத்தை வரையுமாறு சொல்லுகிறார். செங்கலில் வரையப்பட்ட எருசலேம் நகரத்திற்கு விரோதமாக முற்றிக்கைப்போடுமாறும், அதற்கு விரோதமாக கொத்தளங்களைக் கட்டுமாறும் சொல்லுகிறார். மேலும் அதற்கு விரோதமாக மண்மேடுபோட்டு, அதற்கு விரோதமாக இராணுவங்களை நிறுத்தி, சுற்றிலும் அதற்கு விரோதமாக மதிலிடிக்கும் யந்திரங்களை வை என்றும் கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளையிடுகிறார்.

நகரத்திற்கும், கொத்தளத்திற்கும் நடுவாக ஒரு இருப்புச்சட்டியை வைக்குமாறு கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார். இது இருப்புச்சுவருக்கு ஒப்புமையாயிருக்கிறது. இரும்பு உறுதியானது. நகரத்திற்குள்ளே இருக்கிற யூதர்களும், நகரத்திற்கு வெளியே அதை முற்றிக்கைபோட்டிருக்கிற கல்தேயர்களும் இரும்பைப்போல உறுதியாயிருக்கிறார்கள். எருசலேம் நகரத்தை கைப்பற்றாமல் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போவதில்லை என்று கல்தேயர்கள் உறுதியாய் நிற்கிறார்கள். நகரத்திற்குள்ளே இருக்கிற யூதர்களும், கல்தேயரிடம் சரணடையப்போவதில்லை என்று உறுதியாயிருக்கிறார்கள்.

இதற்கு அடையாளமாக கர்த்தர் எசேக்கியேலிடம் "மேலும் நீ ஒரு இருப்புச்சட்டியை வாங்கி, அதை உனக்கும் நகரத்துக்கும் நடுவாக இருப்புச்சுவராக்கி, அது முற்றிக்கையாய்க் கிடக்கும்படிக்கு உன் முகத்தை அதற்கு நேராய்க் திருப்பி, அதை முற்றிக்கைபோட்டுக்கொண்டிரு; இது இஸ்ரவேல் வம்சத்துக்கு அடையாளம்" (எசே 4:3) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் எருசலேம் நகரத்தை வரைந்திருக்கிற செங்கலுக்கு நேராக தன்னுடைய முகத்தைத் திருப்பி, தன்னுடைய இடதுபக்கமாய் ஒருக்களித்து படுத்துக் கொள்ளவேண்டும். கல்தேயர்கள் எருசலேமைச் சுற்றி வளைத்து முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள் என்பதற்கு இது அடையாளமாயிருக்கும். எசேக்கியேல் தனக்கு முன்பாகயிருக்கும் எருசலேமுக்கு அடையாளமான செங்கலின்மேல் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை சுமத்திக்கொள்ளவேண்டும்.

எசேக்கியேல் தன்னுடைய இடதுபக்கமாய் ஒருக்களித்து படுத்திருக்கும் நாட்களின் இலக்கத்தின்படியே எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை சுமக்கவேண்டும். கர்த்தர் அவர்களுடைய அக்கிரமங்களின் வருஷங்களை நாட்கணக்காய் எண்ணுமாறு எசேக்கியேலுக்கு கட்டளை கொடுக்கிறார். முன்னூற்று தொண்ணூறு நாட்கள் வரைக்கும் எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை சுமக்கவேண்டும் (எசே 4:5).

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக பதினெட்டு மாதங்களாக முற்றிக்கைப்போட்டிருந்தார்கள். "அவன் ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிராகப் பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள். அப்படியே சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் நகரம் முற்றிக்கை போடப்பட்டிருந்தது. நாலாம் மாதம் ஒன்பதாம் தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்துக்கு ஆகாரமில்லாமல்போயிற்று" (எரே 52:4-6).

கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கைப்போட்டிருந்த நாட்களில், எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனுடைய சேனை கல்தேயருக்கு விரோதமாய்ப் புறப்பட்டு வந்தது. அப்போது கல்தேயர்கள் ஐந்து மாத காலத்திற்கு எருசலேமை முற்றிக்கைப்போடுவதை தற்காலிகமாக நிறுத்திக்கொண்டார்கள்.

"பார்வோனின் சேனையோவென்றால், எகிப்திலிருந்து புறப்பட்டது; எருசலேமை முற்றிக்கைபோட்ட கல்தேயர் அவர்களுடைய செய்தியைக்கேட்டு, எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள். அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், என்னிடத்தில் விசாரிக்கும்படி உங்களை என்னிடத்துக்கு அனுப்பின யூதாவின் ராஜாவை நீங்கள் நோக்கி: இதோ, உங்களுக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை தன் தேசமாகிய எகிப்துக்குத் திரும்பிப்போகும். கல்தேயரோவென்றால், திரும்பிவந்து இந்த நகரத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடித்து, அக்கினியால் சுட்டெரிப்பார்கள்" (எரே 37:5-8).

பதினெட்டு மாத முற்றிக்கையிலிருந்து, ஐந்து மாத இடைவெளியை கழித்துவிட்டால், மீதமுள்ள பதிமூன்று மாதங்களாக அதாவது 390 நாட்களாக, கல்தேயர்கள் எருசலேம் நகரத்திற்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டார்கள்.

"390 நாட்கள்" என்னும் வாக்கியத்திற்கு "390 வருஷங்கள்" என்றும் ஒரு பொருள் உள்ளது. "கர்த்தர் எசேக்கியேலிடம் "ஒவ்வொரு வருஷத்திற்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்கு கட்டளையிட்டேன்" (எசே 4:6) என்று சொல்லுகிறார். எசேக்கியேல் 390 நாட்கள் வரைக்கும் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை சுமக்கவேண்டும். அவர் 390 நாட்கள் வரைக்கும் இடது பக்கமாய் ஒருக்களித்து படுத்திருக்கவேண்டும். அவர் அந்தப் பக்கமாய் ஒருக்களித்திருக்கும் நாட்களின் இலக்கத்தின்படியே, எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை சுமப்பார். கர்த்தர் ஒவ்வொரு வருஷத்திற்கு பதிலாக ஒவ்வொரு நாளை எசேக்கியேலுக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

ஆரம்பத்தில், சமஸ்த இஸ்ரவேல் தேசமாகயிருந்தது, பின்பு வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தது. இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு பிரிந்துபோனார்கள். மீதமுள்ள இரண்டு கோத்திரத்தார் தெற்கு யூதாதேசத்தில் தங்கிவிட்டார்கள்.

யெரொபெயாமின் ஆட்சிக்காலத்தில் வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ய ஆரம்பித்தார்கள். யெரொபெயாமின் வருஷத்திலிருந்து, கல்தேயர்கள் எருசலேமை அழித்துப்போட்ட வருஷம் வரையிலும் இடையிலுள்ள காலம் 390 வருஷங்களாகும். வேதபண்டிதர்களில் சிலர் 390 வருஷங்கள் என்பதற்கு இப்படி ஒரு வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

எசேக்கியேல் இடதுபுறமாய் 390 நாட்களுக்கு ஒருக்களித்து படுத்த பின்பு, அவர் மறுபடியும் தன்னுடைய வலதுபக்கமாய் 40 நாட்களுக்கு ஒருக்களித்து படுக்கவேண்டும். எசேக்கியேல் யூதாவம்சத்தாரின் அக்கிரமத்தை 40 நாட்கள் வரைக்கும் சுமக்கவேண்டும். யூதா வம்சம் என்பது இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தாரைக் குறிக்கும்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போவதற்கு முன்பாக, 40 வருஷங்களுக்கு கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, துன்மார்க்கமாய் ஜீவித்தார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். எசேக்கியேல் 40 நாள் வரைக்கும் யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை சுமக்கிறார்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு ஒவ்வொரு வருஷத்திற்குப் பதிலாக ஒவ்வொரு நாளை கட்டளையிட்டிருக்கிறார். இதன் பிரகாரம் அவர் யூதாவம்சத்தாரின் அக்கிரமத்தை 40 வருஷங்கள் வரைக்கும் சுமக்கிறார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போவதற்கு முன்பாக, 40 வருஷங்களாக, கர்த்தருக்கு விரோதமாக அக்கிரமங்களையும், அநியாயங்களையும் செய்தார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் 390 வருஷங்களாக தங்கள் அக்கிரமங்களை சுமந்தார்கள். யூதாவம்சத்தாரோ 40 வருஷங்கள் மாத்திரமே தங்கள் அக்கிரமங்களை சுமந்தார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசி ஒவ்வொரு நாளிலும், ஒரு குறிப்பிட்ட வேளையில், ஒருக்களித்து படுத்துக்கொள்கிறார்.

எசேக்கியேல் ஒரு செங்கலில் எருசலேம் நகரத்தை வரைந்து, தனக்கும் அந்த செங்கலுக்கும் நடுவே ஒரு இருப்புச்சட்டியை, இருப்புச்சுவரைப்போல வைத்து, அதற்கு நேராக ஒருக்களித்து படுத்துக்கொள்கிறார். அவர் இடது பக்கமாக 390 நாட்கள் வரைக்கும், வலது பக்கமாக 40 நாட்கள் வரைக்கும் ஒருக்களித்து படுத்துக்கொள்கிறார். இவையெல்லாம் எருசலேம் நகரம் முற்றிக்கைப்போடப்படும் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ எருசலேமின் முற்றிக்கைக்கு நேராகத் திருப்பிய முகமும், திறந்த புயமுமாக இருந்து, அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு" (எசே 4:7) என்று சொல்லுகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளைத் தைரியமாய்ப் பேசவேண்டும். கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிடும்போது எப்படி தைரியமாயிருப்பார்களோ, அப்படியே எசேக்கியேலும் இருக்கவேண்டும்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரோடு, யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா உடன்படிக்கை பண்ணியிருந்தான். ஆனால் சிதேக்கியாவோ அந்த உடன்படிக்கையை மீறி, எகிப்து தேசத்து ராஜாவாகிய பார்வோனோடு உடன்படிக்கை பண்ணினான். நேபுகாத்நேச்சாருக்கு துரோகம்பண்ணினான். இதனால் நேபுகாத்நேச்சாருக்கு சிதேக்கியாவின்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. கல்தேயருடைய சேனை எருசலேமுக்கு விரோதமாய் வந்து, நகரத்தை முற்றிக்கைப்போட்டது. தனக்கு துரோகம்பண்ணிய சிதேக்கியா ராஜாவையும், அவனுக்கு ஆதரவாகயிருந்த யூதாவின் மனுஷரையும் நேபுகாத்நேச்சார் முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானமாயிருந்தான்.

கல்தேயர்கள் தங்களுடைய முழுஇராணுவபலத்தையும் எருசலேமுக்கு விரோதமாய்க் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் எருசலேமின் அலங்கங்களுக்கு விரோதமாக கொத்தளங்களைக் கட்டி, அதற்கு விரோதமாக மண்மேடு போட்டு, தங்கள் இராணுவங்களை அங்கே நிறுத்தி, எருசலேமுக்கு விரோதமாக மதிலிடிக்கும் யந்திரங்களையும் வைத்திருக்கிறார்கள். கல்தேயர்கள் எருசலேமை அழித்துப்போட வேண்டுமென்று தீவிரமாயிருக்கிறார்கள்.

கல்தேயருடைய தீவிரத்தைக் காண்பிக்கும் வண்ணமாக, எசேக்கியேல் எருசலேமின் முற்றிக்கைக்கு நேராக, திருப்பிய முகமும், திறந்த புயமுமாகயிருந்து, கர்த்தருடைய வார்த்தைகளை, அதற்கு விரோதமாக தீர்க்கதரிசனமாய்ச் சொல்லவேண்டும். "திறந்த புயம்" என்னும் வார்த்தை உக்கிர கோபத்தையும், தீவிரத்தையும் குறிக்கிறது.

"எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார்; பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்" (ஏசா 52:10).

கல்தேயர்கள் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், எருசலேமைப் பிடிக்கவேண்டும் என்பதில் முழுக்கவனமாயிருக்கிறார்கள். அவர்களுடைய முற்றிக்கையும் தீவிரமாயிருக்கிறது. எருசலேமைப் பிடித்தே ஆகவேண்டும் என்று கல்தேயர்கள் தீர்மானமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரில் சிலர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்களில் மீதமுள்ளவர்கள் எருசலேமில் தங்கியிருக்கிறார்கள். எசேக்கியேல் ஒரு செங்கலில் எருசலேம் நகரத்தை வரைந்து, அதை முற்றிக்கைப்போடுவது, பாபிலோன் தேசத்திலுள்ள இஸ்ரவேலருக்கும், யூதாதேசத்திலுள்ள இஸ்ரவேலருக்கும் அடையாளம்.

எசேக்கியேல் இதற்கு முன்பு பேசமுடியாத ஊமையனாயிருந்தார். "நான் உன் நாவை உன் மேல்வாயோடே ஒட்டிக்கொள்ளப்பண்ணுவேன்; நீ அவர்களைக் கடிந்துகொள்ளுகிற மனுஷனாயிராமல், ஊமையனாயிருப்பாய்; அவர்கள் கலகவீட்டார்" (எசே 3:26). எசேக்கியேல் பேசுவதற்கு கர்த்தர் அனுமதிக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார்.

எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாரிடம் பேசாவிட்டாலும், அவர் அடையாளங்கள் மூலமாக, கர்த்தருடைய செய்தியை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எப்போதுமே சாட்சிகள் உண்டு. அடையாளங்கள்கூட கர்த்தருடைய மனதை வெளிப்படுத்துகிறது. சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சிறுபிள்ளைகளைப்போல, ஞானத்திலும் அறிவிலும், புரிந்துகொள்ளும் ஆற்றலிலும் குறைவுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆழமான சத்தியங்களைச் சொன்னால், அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. சிறுபிள்ளைகளுக்கு படங்களை வரைந்து கற்றுக்கொடுப்பதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அடையாளங்கள் மூலமாய்க் கற்றுக்கொடுக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய பிரசங்கச் செய்திகளில், ஏராளமான உவமைகளைப் பயன்படுத்தினார். எசேக்கியேலின் அடையாளங்கள், இயேசுகிறிஸ்துவின் உவமைகளுக்கு ஒப்பாயிருக்கிறது. கர்த்தர் சொன்ன பிரகாரம், எசேக்கியேல் திருப்பிய முகமும், திரும்பிய புயமுமாகயிருந்து, அடையாளங்கள் மூலமாக, கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

செவிகளால் கேட்பதைவிட, கண்களால் காண்பது நம்முடைய மனதில் நன்றாய்ப் பதியும். எழுதப்பட்ட வார்த்தைகளை வாசிப்பதைவிட, வரையப்பட்ட படங்களைப் பார்த்து புரிந்துகொள்வது எளிது. படங்கள் நமது மனதில் சீக்கிரத்தில் பதியும். இதற்காகவே கர்த்தர் தம்முடைய தெய்வீக காரியங்களுக்கு நியமங்களை நியமித்திருக்கிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, கர்த்தருடைய பந்தியும், ஞானஸ்நானமும், நியமங்களாக கொடுக்கப்பட்டிருக்கிறது. நியமங்களுக்கு தெய்வீக அர்த்தங்களும், தெய்வீக தாற்பரியங்களும் உண்டு.

நாம் நியமங்களை அனுசரிக்கும்போது, அதன் அர்த்தத்தைப் புரிந்து, விசுவாசத்தோடும், பயபக்தியோடும் அனுசரிக்கவேண்டும். அப்போதுதான் நாம் அனுசரிக்கிற நியமங்கள், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனமாயிருக்கும். அவை நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும். கர்த்தர்மீது நாம் வைத்திருக்கிற பயபக்தியும் அதிகரிக்கும்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுவது, சிறுபிள்ளைகளுக்கு சொல்லுவது போல இருக்கிறது. கர்த்தர் தம்முடைய சத்தியத்தை எப்படி சொல்லுகிறார் என்பது முக்கியமல்ல. கர்த்தருடைய சத்தியமே முக்கியம். நாம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியங்களை உண்மையாயும் நேர்த்தியாயும் செய்ய வேண்டும். நம்மை கர்த்தருக்கு முற்றிலுமாய் அர்ப்பணிக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியம் கடினமானது என்று நாம் ஒருபோதும் சொல்லக்கூடாது.

எருசலேம் நகரம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். அங்கே கர்த்தருடைய தேவாலயமுள்ளது. பழைய ஏற்பாட்டுக்காலத்து யூதர்கள் யாரும் எருசலேம் நகரத்திற்கு விரோதமாக ஒரு வார்த்தையும் பேசமாட்டார்கள். எருசலேம் நகரத்திற்கு விரோதமாக பேசுவதும், நகரத்திற்கு கேடு செய்வதும் மிகப்பெரிய பாவம் என்று யூதர்கள் நினைத்தார்கள்.

எசேக்கியேலும் மற்ற யூதர்களைப்போலவே, எருசலேம் நகரத்தின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார். ஆனாலும் அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தர் தனக்கு சொல்லுகிற வார்த்தைகளை, எசேக்கியேல் அப்படியே சொல்லவேண்டும். கர்த்தருடைய சித்தத்தைவிட, தங்களுடைய சித்தங்களே பெரியது என்று ஊழியக்காரர்கள் ஒருபோதும் நினைக்கக்கூடாது.

எசேக்கியேலுக்கு எருசலேமின்மீது மதிப்பு இருந்தாலும், கர்த்தர் அவரைப் பார்த்து, எருசலேமுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லு என்று கட்டளையிடுகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்.

எருசலேம் நகரம் கர்த்தருடைய பரிசுத்த நகரமாயிருந்தாலும், அங்கே இப்போது பாவம் வாசம்பண்ணுகிறது. கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அங்கே இல்லை. எருசலேமின் குடிகள் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தர் எருசலேமின் நன்மையை விரும்பினாலும், எருசலேமின் குடிகளோ கர்த்தருக்கு விரோதமாக அக்கிரமம் பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் அக்கிரமங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களை தம்மிடத்தில் மறுபடியுமாய்ச் சேர்த்துக்கொள்வார். கர்த்தர் அப்போது அவர்களை ஆசீர்வதிக்கவும் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

எருசலேமை அழிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமோ அல்லது அவருடைய விருப்பமோ அல்ல. எருசலேமின் குடிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். யூதர்கள் மனந்திரும்பினால், கர்த்தருடைய கோபமான நியாயத்தீர்ப்புக்கள் அவர்கள்மீது வராது. கர்த்தர் அவர்களுக்கு செய்ய நினைத்த தீங்குகளுக்காக மனஸ்தாபப்படுவார். எருசலேமை அழிக்காமல் அதை ஆசீர்வதிப்பார்.

எருசலேம் அழிந்துபோகும் என்பதை விளக்குவதற்காகவே, எசேக்கியேல் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் இவ்வளவு காரியங்களையும் செய்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் இவற்றையெல்லாம் பார்த்து, கர்த்தருடைய கோபத்தை புரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதே எசேக்கியேலின் விருப்பம்.

கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் வம்சத்தார்மீதும், யூதாவம்சத்தார்மீதும் மிகவும் அதிகமாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய அக்கிரமத்தின் வருஷங்களை, அவர்களுக்கு நாட்கணக்காய் எண்ணுகிறார். ஒரு வருஷத்து பாவத்திற்கு, ஒரு நாள் மாத்திரமே தண்டனையாகக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வருஷத்திற்கு பதிலாக கர்த்தர் அவர்களுக்கு ஒவ்வொரு நாளை கட்டளையிடுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் 390 வருஷங்களாக கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். ஆனால் கர்த்தர் அவர்களுக்கு 390 நாட்கள் மாத்திரமே தண்டனை கொடுக்கிறார். எருசலேம் நகரம் 390 நாட்களுக்கு தண்டனைகளை அனுபவிக்கிறது.

எருசலேமின் அழிவு
எசே 4:9-17

எசே 4:9. நீ கோதுமையையும் வாற்கோதுமையையும் பெரும்பயற்றையும் சிறுபயற்றையும் தினையையும் கம்பையும் வாங்கி, அவைகளை ஒரு பாத்திரத்திலே போட்டு, அவைகளால் உனக்குக் அப்பஞ்சுடுவாய்; நீ ஒருக்களித்துப்படுக்கும் நாட்களுடைய இலக்கத்தின் படியே முந்நூற்றுத்தொண்ணூறுநாள் அதில் எடுத்து சாப்பிடுவாயாக.

எசே 4:10. நீ சாப்பிடும் போஜனம், நாள் ஒன்றுக்கு இருபது சேக்கல் நிறையாயிருக்கும்; அப்படி நாளுக்குநாள் சாப்பிடுவாயாக.

எசே 4:11. தண்ணீரையும் அளவாய் ஹின் என்னும் படியில் ஆறிலொரு பங்கைக் குடிப்பாய்; அப்படி நாளுக்குநாள் குடிப்பாயாக.

எசே 4:12. அதை வாற்கோதுமை அடையைப்போல் சாப்பிடுவாயாக; அது மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் வறட்டிகளால் அவர்கள் கண்களுக்கு முன்பாகச் சுடப்படுவதாக.

எசே 4:13. அதற்கு ஒத்தபடியே இஸ்ரவேல் புத்திரர், நான் அவர்களைத் துரத்துகிற புற ஜாதிகளுக்குள்ளே தங்கள் அப்பத்தைத் தீட்டுள்ளதாகச் சாப்பிடுவார்கள் என்று கர்த்தர் சொன்னார்.

எசே 4:14. அப்பொழுது நான்: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, என் ஆத்துமா தீட்டுப்படவில்லை; தானாய்ச் செத்ததையாவது, பீறுண்டதையாவது நான் என் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் சாப்பிட்டதில்லை; அருவருப்பான இறைச்சி என் வாய்க்குட்பட்டதுமில்லை என்றேன்.

எசே 4:15. அப்பொழுது அவர் என்னை நோக்கி: பார், மனுஷ கஷ்டத்தின் வறட்டிக்குப் பதிலாக உனக்கு மாட்டுச்சாணி வறட்டியைக் கட்டளையிடுகிறேன்; அதினால் உன் அப்பத்தைச் சுடுவாயாக என்றார்.

எசே 4:16. பின்னும் அவர்: மனுபுத்திரனே, இதோ, அப்பமும் தண்ணீரும் அவர்களுக்குக் குறையவும், அவனவன் திடுக்கிடவும், அவர்கள் தங்கள் அக்கிரமத்திலே வாடிப்போகவும்,

எசே 4:17. நான் எருசலேமிலே அப்பம் என்னும் ஆதரவுகோலை முறிக்கிறேன்; அவர்கள் அப்பத்தை நிறையின்படியே விசாரத்தோடே சாப்பிட்டு, தண்ணீரை அளவின்படியே திடுக்கிடுதலோடே குடிப்பார்கள்.

எருசலேமின் அழிவை எசேக்கியேல் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுவதும், எரேமியா எருசலேமின் அழிவுக்காக புலம்புவதும் ஒன்றுபோலிருக்கிறது.

"திமிங்கிலங்கள் முதலாய்க் கொங்கைகளை நீட்டி, தங்கள் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும்; என் ஜனமாகிய குமாரத்தியோ வனாந்தரத்திலுள்ள தீக்குருவியைப்போல் குரூரமாயிருக்கிறாளே. குழந்தைகளின் நாவு தாகத்தால் மேல்வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது; பிள்ளைகள் அப்பங்கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுப்பாரில்லை" (புல 4:3,4). "இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தன, என் ஜனமாகிய குமாரத்தியின் அழிவில் அவைகள் அவர்களுக்கு ஆகாரமாயின" (புல 4:10).

எசேக்கியேல் தீர்க்கதரிசி எருசலேமின் அழிவை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அடையாளத்தின் மூலமாய் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தாருடைய மனதிலே எருசலேமைப்பற்றிய அழிவின் செய்தி ஆழமாய்ப் பதியவேண்டும். எசேக்கியேல் 390 நாட்கள் வரைக்கும் இடது பக்கமாய் ஒருக்களித்து படுத்திருக்கிறார். கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக 390 நாட்களுக்கு முற்றிக்கைப்போடுவார்கள்.

முற்றிக்கை காலத்தில் எருசலேம் நகரத்திற்குள் இருக்கிறவர்களுக்கு வேதனைகளும் துன்பங்களும் வரும். பஞ்சமுண்டாகும். புசிப்பதற்கு போஜனமும், குடிப்பதற்கு தண்ணீரும் இருக்காது. அவர்களால் சுத்தமான வஸ்திரங்களை அணிந்துகொள்ள முடியாது. அப்பம் சுடுவதற்கு விறகுகூட இருக்காது. எருசலேம் நகரத்திற்குள்ளே சகலமும் குறைவுபடும்.

எருசலேமுக்கு வரப்போகும் பஞ்சத்தையும், அப்பத்தின் குறைவையும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு எசேக்கியேல் அடையாளங்கள் மூலமாக சொல்லுகிறார். கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ கோதுமையையும் வாற்கோதுமையையும் பெரும்பயற்றையும் சிறுபயற்றையும் தினையையும் கம்பையும் வாங்கி, அவைகளை ஒரு பாத்திரத்திலே போட்டு, அவைகளால் உனக்குக் அப்பஞ்சுடுவாய்; நீ ஒருக்களித்துப்படுக்கும் நாட்களுடைய இலக்கத்தின்படியே முந்நூற்றுத் தொண்ணூறுநாள் அதில் எடுத்து சாப்பிடுவாயாக" (எசே 4:9) என்று சொல்லுகிறார்.

யூதர்கள் மத்தியிலே இதுபோன்ற தானியங்களை குதிரைகளுக்கு புசிக்கக் கொடுப்பார்கள். இப்படிப்பட்ட அப்பங்களை நாய்களுக்கு உணவாகப் போடுவார்கள். கர்த்தர் எசேக்கியேலை புசிக்குமாறு சொல்லுகிற அப்பம், யூதாதேசத்திலே பிச்சைக்காரர்கள் புசிக்கும் அப்பமாகும். பிச்சைக்காரர்களுடைய கந்தல் பைகளில் இப்படிப்பட்ட அப்பங்கள் இருக்கும். கர்த்தரோ எசேக்கியேலுக்கு இப்படிப்பட்ட அப்பத்தையே புசிக்கக்கொடுக்கிறார்.

அப்பம் சாதாரணமானதாகயிருந்தாலும், கர்த்தர் அதையும் எசேக்கியேலுக்கு தாராளமாகக் கொடுக்கவில்லை. எசேக்கியேல் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் அப்பம் புசிக்கக்கூடாது. தண்ணீரைக்கூட கொஞ்சமாகக் குடிக்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ சாப்பிடும் போஜனம், நாள் ஒன்றுக்கு இருபது சேக்கல் நிறையாயிருக்கும்; அப்படி நாளுக்குநாள் சாப்பிடுவாயாக. தண்ணீரையும் அளவாய் ஹின் என்னும் படியில் ஆறிலொரு பங்கைக் குடிப்பாய்; அப்படி நாளுக்குநாள் குடிப்பாயாக" (எசே 4:10,11) என்று சொல்லுகிறார்.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கைப்போடும்போது, நகரத்திற்குள்ளே பஞ்சமுண்டாகும். அப்பமும் தண்ணீரும் அங்கே குறைவுபடும். எசேக்கியேல் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். பாபிலோனில் அப்பத்திற்கு குறைவில்லை. அங்கே அவருக்கு போதுமான அளவு அப்பம் கிடைக்கிறது. அவர் அங்கே திருப்தியாய்ப் புசிக்கிறார். எசேக்கியேல் குறைந்த அளவு அப்பத்தைப் புசிப்பதும், குறைந்த அளவு தண்ணீரைக் குடிப்பதும், இஸ்ரவேல் சந்ததியாருக்கு ஓர் அடையாளமாயிருக்கிறது.

எருசலேமிலுள்ள ஜனங்களுக்கு சகலமும் குறைவுபடும் என்பதை எசேக்கியேல் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். இவ்வளவு குறைவாக சாப்பிட்டால், மனுஷரால் ஆரோக்கியமாகவோ, தெம்பாகவோ இருக்க முடியாது. ஜீவன் செத்துப்போகாமலிருக்கும். ஆனால் சரீரத்தில் பெலன் இருக்காது.

எருசலேம் நகரத்திலே அப்பங்களை சுடுவதற்கு விறகு இருக்காது. எசேக்கியேல் தான் சாப்பிடும் அப்பத்தை எப்படி சுடவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். "அதை வாற்கோதுமை அடையைப்போல் சாப்பிடுவாயாக; அது மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் வறட்டிகளால் அவர்கள் கண்களுக்கு முன்பாகச் சுடப்படுவதாக" (எசே 4:12) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளையிடுகிறார்.

மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டம் துர்நாற்றம் வீசும். அந்த கஷ்டத்தினால் வறட்டியை செய்து, அந்த வறட்டிகளால் அப்பத்தை சுடுவது என்பது இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தீட்டானது. அது அவர்களுக்கு அருவருப்பானது. பாபிலோன் தேசத்தில் ஏராளமான விறகுகள் இருந்தாலும், எசேக்கியேல் தன்னுடைய அப்பத்தை சுடுவதற்கு அந்த விறகுகளை பயன்படுத்தக்கூடாது. அவர் மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் வறட்டிகளால் அப்பம் சுடவேண்டும். அதையும் ஒருவருக்கும் தெரியாமல் மறைவாக சுடக்கூடாது. அந்த அப்பத்தை இஸ்ரவேல் வம்சத்தாரின் கண்களுக்கு முன்பாக சுடவேண்டும்.

எசேக்கியேல் மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் வறட்டியால் வாற்கோதுமை அடையைப்போல் சுட்டு சாப்பிடவேண்டும். எசேக்கியேல் இந்த அடையை சுடும்போது, அதை இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் பார்க்கவேண்டும். யூதாதேசத்திலே இதுவரையிலும் யாரும் மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் வறட்டியால் உணவு பதார்த்தங்களை சுட்டு சாப்பிட்டதில்லை. இஸ்ரவேல் வம்சத்தார் இந்த சம்பவத்தை பார்க்கும்போது, தங்களுக்கு வரப்போகும் பேரழிவை உணர்ந்துகொள்வார்கள்.

எருசலேம் நகரத்திலே கொடிய பஞ்சமுண்டாகும்போது புசிப்பதற்கு போஜனம் இருக்காது. புசிக்கும் போஜனமும் சுத்தமாயிருக்காது. கர்த்தர் வாற்கோதுமை அடையை எப்படி சுடவேண்டும் என்று எசேக்கியேலுக்கு கட்டளையிடுகிறார். அதைக் கேட்கும்போதே எசேக்கியேலுக்கு அருவருப்பாயிருக்கிறது. யூதமார்க்கத்தில் மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டம் ஒரு தீட்டான பொருளாக எண்ணப்படுகிறது.

எருசலேம் நகரம் அழிந்துபோகும். கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கைப்போடுவார்கள். யூதர்கள் அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போவார்கள். அங்கே அவர்களுக்கு சுத்தமான போஜனம் கிடைக்காது. இஸ்ரவேல் வம்சத்தார், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணியதினால், அவர்களுக்கு மிகுந்த வேதனையும், பாடுகளும், பஞ்சமும், பட்டினியும் உண்டாகும்.

எசேக்கியேல் மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் வறட்டிகளால் அப்பத்தை சுட்டு, அதை வாற்கோதுமை அடையைப்போல சாப்பிடவேண்டும். "அதற்கு ஒத்தபடியே இஸ்ரவேல் புத்திரர், நான் அவர்களைத் துரத்துகிற புற ஜாதிகளுக்குள்ளே தங்கள் அப்பத்தைத் தீட்டுள்ளதாகச் சாப்பிடுவார்கள்" (எசே 4:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணிய போது, அவர்களிலிருந்து கழிந்த மனுஷகஷ்டங்களை, அவர்கள் குழிதோண்டி அதிலே புதைத்துவிடவேண்டும். இது மோசேயின் பிரமாணம்.

"உன் ஆயுதங்களோடே ஒரு சிறுகோலும் உன்னிடத்தில் இருக்கக்கடவது; நீ மலஜலாதிக்குப் போகும்போது, அதனால் மண்ணைத் தோண்டி, மலஜலாதிக்கிருந்து, உன்னிலிருந்து கழிந்துபோனதை மூடிப்போடக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தைக் கண்டு, உன்னை விட்டுப் போகாதபடிக்கு, உன் பாளயம் சுத்தமாயிருக்கக்கடவது" (உபா 23:13,14).

எசேக்கியேல் தன்னுடைய அப்பத்தை சுடும்போது, அவரே பல இடங்களுக்கும்போய் மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தை சேகரிக்கவேண்டும். அதை வைத்து வறட்டிகளை செய்யவேண்டும். அந்த வறட்டிகளினால், இஸ்ரவேல் வம்சத்தாருடைய கண்களுக்கு முன்பாக தனக்கு அப்பத்தை சுடவேண்டும். அதை வாற்கோதுமையை அடையைப்போல சாப்பிடவேண்டும்.

கர்த்தர் தனக்கு சொன்னதை நினைத்துப் பார்க்கும்போது எசேக்கியேலுக்கு அருவருப்பாயிருக்கிறது. அப்பொழுது எசேக்கியேல், "ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, என் ஆத்துமா தீட்டுப்படவில்லை; தானாய்ச் செத்ததையாவது, பீறுண்டதையாவது நான் என் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் சாப்பிட்டதில்லை; அருவருப்பான இறைச்சி என் வாய்க்குட்பட்டதுமில்லை" (எசே 4:14) என்று கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

மனுஷருடைய பாவங்களினால் அவர்களுடைய ஆத்துமா தீட்டுப்படும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தங்கள் ஆத்துமாவை சுத்தமாக வைத்திருப்பார்கள். நம்முடைய மனச்சாட்சி சுத்தமாயிருந்தால், கர்த்தர் அனுமதிப்பதை நாம் புசிக்கலாம். எதையும் அருவருத்து விலக்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் பல சமயங்களில் நம்முடைய மனச்சாட்சி காரணமில்லாமல் பயப்படுகிறது. நம்மிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் மாத்திரமே இருக்கவேண்டும். பாவத்தைக் குறித்த அருவருப்பு மாத்திரமே காணப்படவேண்டும். கர்த்தர் அனுமதிக்கிற போஜனங்களை நாம் தாராளமாகப் புசிக்கலாம். அதிலே தீட்டு எதுவுமில்லை. அதை அருவருக்க வேண்டிய அவசியமுமில்லை.

"வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் (மத் 15:11). பழைய ஏற்பாட்டுக்காலத்தில், எசேக்கியேலுக்கு இந்த உபதேசம் சொல்லப்படவில்லை. அவர் யூதமார்க்கத்தின் பாரம்பரியங்களுக்கும், மோசேயின் பிரமாணங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். கர்த்தருடைய கட்டளையைக் கேட்டு எசேக்கியேலின் இருதயம் வேதனைப்படுகிறது. அவருடைய மனச்சாட்சி தீட்டுப்பட்டதுபோல இருக்கிறது. கர்த்தரோ தமது கிருபையினால் அவருடைய இருதயத்தின் வேதனைகளைப் பார்க்கிறார்.

கர்த்தர் முதலாவதாக சொன்ன தமது கட்டளையை சிறிது மாற்றி, இப்போது எசேக்கியேலுக்கு புதிய கட்டளையைக் கொடுக்கிறார். "பார், மனுஷ கஷ்டத்தின் வறட்டிக்குப் பதிலாக உனக்கு மாட்டுச்சாணி வறட்டியைக் கட்டளையிடுகிறேன்; அதினால் உன் அப்பத்தைச் சுடுவாயாக" (எசே 4:15) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு புதிய கட்டளையைக் கொடுக்கிறார். மனுஷகஷ்டத்தின் வறட்டியைவிட மாட்டுச்சாணி வறட்டி எசேக்கியேலுக்கு சற்று ஆறுதலைத் தருகிறது.

எசேக்கியேல் அளவாய்ச் சாப்பிடுவதும், அளவாய்த் தண்ணீரைக் குடிப்பதும், அதை மாட்டுச்சாணி வறட்டியினால் சுட்டு, வாற்கோதுமையை அடையைப்போல் சாப்பிடுவதும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அடையாளமாய்ச் சொல்லப்படுகிறது. கர்த்தர் இதற்கான விளக்கத்தையும் எசேக்கியேலுக்கு தெளிவுபடுத்துகிறார்.

"மனுபுத்திரனே, இதோ, அப்பமும் தண்ணீரும் அவர்களுக்குக் குறையவும், அவனவன் திடுக்கிடவும், அவர்கள் தங்கள் அக்கிரமத்திலே வாடிப்போகவும், நான் எருசலேமிலே அப்பம் என்னும் ஆதரவுகோலை முறிக்கிறேன்; அவர்கள் அப்பத்தை நிறையின்படியே விசாரத்தோடே சாப்பிட்டு, தண்ணீரை அளவின்படியே திடுக்கிடுதலோடே குடிப்பார்கள்" (எசே 4:16,17) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு இந்த அடையாளத்தின் பொருளை விளக்குகிறார்.

அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல், எருசலேம் நகரத்திலேயே தங்கியிருக்கிற யூதர்களுக்கு சகலமும் குறைவுபடும். அவர்களுக்கு போதுமான அப்பம் இருக்காது. அவர்கள் பசியாலும் பட்டினியாலும் வேதனைப்படுவார்கள். எருசலேமை முற்றிக்கையிடுகிறவர்கள், நகரத்திற்குள்ளே எந்தப் பொருளும் போகாதவாறு தடுத்து நிறுத்தி விடுவார்கள்.

கர்த்தர் எருசலேமிலே அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்துப்போடுகிறார். இதனால் எருசலேமிலே கொடிய பஞ்சமுண்டாகும். திரளான ஜனங்கள் பசியாலும் பட்டினியாலும் செத்துப்போவார்கள். அவர்கள் தங்களுடைய மரணத்தை உணருவார்கள். பட்டயத்தால் செத்துப்போகிறவர்கள் உடனே செத்துப்போவார்கள். பஞ்சத்தாலும், பட்டினியாலும் செத்துப்போகிறவர்களோ, கொஞ்சம் கொஞ்சமாக, நாளுக்கு நாள் செத்துப்போவார்கள் அவர்கள் ஒவ்வொரு நாளும் மரணத்தின் வேதனையை அனுபவிப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களினிமித்தமாகவே அவர்களுக்கு இவ்வளவு வேதனைகள் உண்டாயிற்று. அவர்கள் தங்கள் அக்கிரமத்திலே வாடிப்போவார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அநியாயங்களும் அக்கிரமங்களும் செய்தார்கள். தாங்கள் செய்த அக்கிரமங்களுக்கு இப்போது தண்டனைகளை அனுபவிக்கிறார்கள்.

நாம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அவர் தம்முடைய நீதியினால், நமக்கு அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்துப்போடுகிறார். நமக்கு புசிக்க அப்பம் இருக்காது. சகலமும் குறைவுபடும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்கள் தங்கள் மரணத்தை கொஞ்சம் கொஞ்சமாக அனுபவிப்பார்கள்.

நம்முடைய பேராசைகளும், மாம்சத்தின் இச்சைகளும், நம்மை அக்கிரமம் செய்யத் தூண்டுகிறது. நம்முடைய அக்கிரமங்களுக்கு, நம்முடைய இச்சைகளே போஜனமாகவும், வறட்டிகளாகவும் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் நம்முடைய அக்கிரமங்களுக்கு ஆதாரமாகயிருக்கிற சகல காரியங்களையும் முறித்துப்போடுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாக அக்கிரமம் செய்ததினால், கர்த்தர் அவர்களை புறஜாதிகளுக்குள்ளே துரத்திவிடுகிறார். அவர்கள் தங்கள் அப்பத்தை புறஜாதிகளுக்குள்ளே தீட்டுள்ளதாக சாப்பிடுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே 4:13). இஸ்ரவேல் வம்சத்தார், புறஜாதி ஜனங்களோடு, போஜனவிஷயங்களில் சம்பந்தங்கலப்பதில்லை. யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், அவர்கள் புறஜாதியார் கைகளால் பண்ணப்பட்ட போஜனங்களை புசிப்பதில்லை. புறஜாதியாரின் போஜனம் யூதர்களுக்கு தீட்டுள்ளதாக கருதப்பட்டது.

இஸ்ரவேல் வம்சத்தார் புறஜாதிகளுக்குள்ளே துரத்தப்பட்டபோது, அவர்களுக்கு போஜனம் கிடைக்கவில்லை. புறஜாதியாரின் கைகளால் பண்ணப்பட்ட போஜனம் மாத்திரமே ஓரளவு கிடைக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தாரும் பசியாலும் பட்டினியாலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு புறஜாதியாரின் போஜனத்தைத் தவிர வேறு போஜனம் எதுவும் கிடைக்கவில்லை.

யூதர்கள் வேறு வழியில்லாமல், தங்களுடைய பசியையும் பட்டினியையும் போக்கிக்கொள்ள, புறஜாதிகளுக்குள்ளே தங்களுடைய அப்பத்தை தீட்டுள்ளதாக சாப்பிடுகிறார்கள். அவர்கள் விரும்பியதை அவர்களால் சாப்பிடமுடியவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் அந்நிய தேசத்து அடிமைத்தனத்திலிருக்கிறார்கள். தங்கள் எஜமான்கள் தங்களுக்கு கொடுப்பதை சாப்பிடவேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்கள். யூதர்கள் தங்கள் தேசத்திலிருந்தபோது, தங்கள் கைகளால் தொடாததைக்கூட, இப்போது அந்நிய தேசத்து சிறையிருப்பிலே, புசிக்கிறார்கள். தாங்கள் புசிப்பது தீட்டானது என்று தெரிந்திருந்தும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு வேறு வழியில்லை.

கர்த்தர் யூதர்களை போஷிக்க மறுத்துவிடுகிறார். எருசலேமிலே அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்துப்போடுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது புறஜாதிகளுக்குள்ளே தங்கள் அப்பத்தை தீட்டுள்ளதாக சாப்பிடுகிறார்கள்.

தீட்டான அப்பங்கள்கூட அவர்களுக்கு தாராளமாய்க் கிடைக்கவில்லை. அவர்கள் அப்பத்தை நிறையின்படியே விசாரத்தோடே சாப்பிடுகிறார்கள். தண்ணீரை அளவின்படியே திடுக்கிடுதலோடே குடிக்கிறார்கள்.

5 அதிகாரம்

தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதாதேசத்தின்மீது வரப்போகிறது. கர்த்தருடைய கோபத்தினால் யூதாதேசத்திற்கு பேரழிவு வரும். யூதாவும் எருசலேமும் அழிந்துபோகும் என்று கர்த்தர் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். எருசலேமின் அழிவை விளக்குவதற்கு கர்த்தர் மூன்று அடையாளங்களை சொல்லுகிறார் (எரே 5:1-4).

எசேக்கியேல் சவரகன் கத்தியினால் தன் தலையையும் தாடியையும் சிரைத்துக்கொள்ளவேண்டும். இதற்கான தாற்பரியத்தை கர்த்தர் விவரிக்கிறார். எருசலேமின் அழிவுக்கு அவர்களுடைய பாவங்களே காரணம். எருசேலமின் குடிகள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை (எரே 5:5-7). அவர்கள் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள் (எரே 5:11).

கர்த்தருடைய கோபம் யூதாதேசத்தின்மீதும் எருசலேமின்மீதும் வருகிறது (எரே 5:8-10). இஸ்ரவேல் வம்சத்தார் பலவிதமான வாதைகளையும், துன்பங்களையும் அனுபவிக்கவேண்டும் (எரே 5:12,16,17). யூதாவும் எருசலேமும் அழிந்துபோகும். அவர்களுக்கு நிந்தை வரும் (எரே 5:13-15).

சவரகன் கத்தி
எசே 5:1-4

எசே 5:1. பின்னும் அவர்: மனுபுத்திரனே, சவரகன் கத்தியாகிய கருக்கான கத்தியை வாங்கி, அதினால் உன் தலையையும் உன் தாடியையும் சிரைத்துக்கொண்டு, பின்பு நிறுக்கும் தராசை எடுத்து, அந்த மயிரைப் பங்கிடக்கடவாய்.

எசே 5:2. மூன்றில் ஒரு பங்கை எடுத்து முற்றிக்கைபோடும் நாட்கள் முடிகிறபோது நகரத்தின் நடுவிலே அக்கினியால் சுட்டெரித்து, மூன்றில் ஒரு பங்கை எடுத்து, அதைச் சுற்றிலும் கத்தியாலே வெட்டி, மூன்றில் ஒரு பங்கை எடுத்துக் காற்றிலே தூற்றக்கடவாய்; அவைகளின் பின்னாக நான் பட்டயத்தை உருவுவேன்.

எசே 5:3. அதில் கொஞ்சம்மாத்திரம் எடுத்து, அதை உன் வஸ்திரத்தோரங்களில் முடிந்துவைப்பாயாக.

எசே 5:4. பின்னும் அதில் கொஞ்சம் எடுத்து, அதைத்தீயின் நடுவில் எறிந்து, அதை அக்கினியால் சுட்டெரிப்பாயாக; அதிலிருந்து இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் விரோதமாக அக்கினி புறப்படும்.

கர்த்தர் எருசலேமின் அழிவை அடையாளங்கள் மூலமாக வெளிப்படுத்துகிறார். இதற்கு முன்பு எசேக்கியேல் தீர்க்கதரிசியே அடையாளமாயிருந்தார். அவர் இடதுபக்கமாகவும், வலதுபக்கமாகவும் ஒருக்களித்து படுத்து, இஸ்ரவேல் வம்சத்தாருடைய அக்கிரமத்தையும், யூதாவம்சத்தாருடைய அக்கிரமத்தையும் சுமந்தார்.

எசேக்கியேல் அனுபவிக்கும் வேதனைகளை பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் இருந்த யூதர்கள் பார்த்தார்கள். எருசலேமுக்கு எப்படிப்பட்ட அழிவு வரும் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். எருசலேமின் அழிவு எசேக்கியேலின் இருதயத்திற்கு அருகாமையிலிருந்தது.

கர்த்தர் இப்போது எசேக்கியேலிடம் மற்றொரு அடையாளத்தைச் சொல்லுகிறார். அவர் சவரகன் கத்தியினால் தன் தலையையும் தன் தாடியையும் சிரைத்துக் கொள்ளவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை முற்றிலுமாய்ப் புறக்கணித்து விடுகிறார். அவர்கள் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத சந்ததியார் என்று கர்த்தர் தீர்மானிக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்தார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு நன்றியில்லாதவர்களாய்ப் போய்விட்டார்கள்.

எருசலேம் இஸ்ரவேல் தேசத்திற்கு தலையாகயிருந்தது. ஆனால் இப்போதோ எருசலேமின் மகிமையும், மேன்மையும் மங்கிப்போயிற்று. தலையாகயிருந்த எருசலேம், இப்போது தலையின் மயிராக தாழ்ந்துபோயிற்று. தலையின் மயிர் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளர்ந்தால், அது தலைக்கு பாரமாகயிருக்கும்.

எசேக்கியேல் தன்னுடைய தலையை சிரைத்துக்கொள்ளவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். தன்னுடைய தலையில் அதிகமாக வளர்ந்திருக்கும் முடியை வெட்டி, தன்னை அழகுபடுத்திக்கொள்ளவேண்டும் என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளை கொடுக்கவில்லை. அவர் தன்னுடைய தலையிலுள்ள மயிரை முற்றிலுமாய் சிரைத்துக்கொள்ளவேண்டும். அவருடைய தலையில் கொஞ்சம்கூட மயிர் இருக்கக்கூடாது. கர்த்தர் எருசலேமை முற்றிலும் அழித்துப்போடுவார் என்பதற்கு இது அடையாளம்.

எசேக்கியேல் தன்னுடைய தலையையும் தாடியையும் சிரைத்துக்கொண்டு, பின்பு நிறுக்கும் தராசை எடுத்து, அந்த மயிரை மூன்று பங்காக பங்கிடவேண்டும் (எசே 5:1). தலையை சிரைப்பது விடுதலையையும், மதிப்பையும் இழந்து போவதற்கு அடையாளம் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய ஆனோன் தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்கள் தாடியைச் சிரைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு, மற்றப் பாதியைக் கத்தரித்துப்போட்டு, அவர்களை அனுப்பிவிட்டான் (1நாளா 19:4). தங்கள் தாடி சிரைக்கப்பட்டதினால், தாவீதின் ஊழியக்காரர்கள் மிகவும் வெட்கப்பட்டார்கள். ஒரு மனுஷனுடைய தாடியை சிரைப்பது அவனை அவமானப்படுத்துவதற்கு அடையாளம்.

யூதர்கள் துக்ககாலத்தில் தங்கள் தலையையும், தாடியையும் சிரைத்துக் கொள்வது வழக்கம். கர்த்தர் எசேக்கியேலிடம் அவருடைய தலையை சிரைத்துக்கொள்ளுமாறு சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தாரின் சந்தோஷம் அவர்களைவிட்டு நீங்கும் என்றும், அவர்களுக்கு துக்கம் வரும் என்றும் இதற்கு அடையாளம்.

எசேக்கியேல் தன்னுடைய தலையையும் தாடியையும் சிரைத்து, அந்த மயிரை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார். எருசலேம் முற்றிலுமாய் அழிக்கப்படும் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது. எசேக்கியேல் தன்னுடைய மயிரை மூன்று பங்காக பங்கிட்டு, மூன்றில் ஒரு பங்கு எடுத்து, முற்றிக்கைப்போடும் நாட்கள் முடிகிறபோது, நகரத்தின் நடுவிலே அக்கினியால் சுட்டெரிக்கவேண்டும். எருசலேம் நகரத்திலே ஏராளமான ஜனங்கள் பட்டினியினாலும், பஞ்சத்தினாலும், கொள்ளைநோயினாலும் செத்துப்போவார்கள் என்பதற்கு இது அடையாளம்.

எருசலேமை அவர்களுடைய சத்துருக்கள் முற்றிக்கைப்போடும் நாட்கள் முடிகிறபோது எருசலேமின் குடிகளில் ஏராளமானோருக்கு அழிவு வரும். கல்தேயர்கள் எருசலேமின் அலங்கங்களில் திறப்புண்டாக்கி, நகரத்திற்குள் பிரவேசித்து, நகரத்திலே பசியினாலும் பட்டினியினாலும் வாடுகிறவர்களை, தங்களுடைய பட்டயங்களினால் வெட்டிக்கொன்று போடுவார்கள்.

எசேக்கியேல் தன்னுடைய மயிரில் மூன்றில் ஒரு பங்கை எடுத்து அதைச் சுற்றிலும் கத்தியால் வெட்டவேண்டும். எருசலேம் நகரம் முற்றிக்கைப்போடப்பட்டிருக்கும் போது, கல்தேயர்கள் யூதர்களில் ஏராளமானோரை தங்கள் பட்டயங்களினால் வெட்டிக்கொன்று போடுவார்கள் என்பதற்கு இது அடையாளம்.

எசேக்கியேல் தன்னுடைய மயிரில் மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கை எடுத்து காற்றிலே தூற்றவேண்டும். கல்தேயர்கள் யூதாவின் மனுஷரில் அநேகரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போவார்கள். மீதமுள்ள யூதர்கள் அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போவார்கள் என்பதற்கு இது அடையாளம்.

எசேக்கியேல் தன்னுடைய தலையையும், தன்னுடைய தாடியையும் சிரைத்து, அந்த மயிரை மூன்று பங்காக பங்கிட்டு, ஒவ்வொரு பங்கையும், கர்த்தர் சொல்லுகிற பிரகாரமாக அழித்துப்போடவேண்டும். மயிரை மொத்தமாக அழித்துப்போடாமல், அதில் கொஞ்சம் மாத்திரம் எடுத்து, அதை தன் வஸ்திரத்து ஓரங்களில் முடிந்து வைத்துக்கொள்ளவேண்டும் (எசே 5:3).

கர்த்தர் எசேக்கியேலைப் பார்த்து, "பின்னும் அதில் கொஞ்சம் எடுத்து, அதைத்தீயின் நடுவில் எறிந்து, அதை அக்கினியால் சுட்டெரிப்பாயாக; அதிலிருந்து இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் விரோதமாக அக்கினி புறப்படும்" (எசே 5:4) என்று சொல்லுகிறார்.

செதலியாவின் ஆட்சிக்காலத்தில், கல்தேயர்கள் யூதாமனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள். யூதர்களில் ஒரு சிலர் மாத்திரமே பாபிலோனுக்கு போகாமல், யூதாதேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள். அவர்கள் ஒரு சிலராகயிருந்தாலும், தாங்கள் எருசலேமிலே பாதுகாப்பாகயிருப்பதாக நினைக்கிறார்கள்.

எசேக்கியேல் தன்னுடைய மயிரில் கொஞ்சம் மாத்திரம் எடுத்து, அதை தன்னுடைய வஸ்திரத்து ஓரங்களில் முடிந்து வைக்கிறார். யூதாமனுஷரில் கொஞ்சம் பேர் மாத்திரமே எருசலேமில் மீதியாயிருப்பார்கள். வஸ்திரத்தில் முடிந்து வைத்திருப்பதுபோல, தாங்கள் எருசலேமிலே பாதுகாப்பாயிருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

எசேக்கியேல் தன்னிடத்திலுள்ள கொஞ்சம் மயிரை எடுத்து அதை தீயின் நடுவில் எறிந்து, அதை அக்கினியால் சுட்டெரிக்கவேண்டும். அதிலிருந்து இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் விரோதமாக அக்கினி புறப்படும். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால், வஸ்திரத்தில் முடிந்து வைக்கப்பட்ட மயிரைப்போல பாதுகாப்பாகயிருப்பார்கள். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால், தீயின் நடுவிலே எறியப்பட்டு, அக்கினியால் சுட்டெரிக்கப்படும் மயிரைப்போல அழிந்துபோவார்கள்.

இதுவே எருசலேம்
எசே 5:5-7

எசே 5:5. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், இதுவே எருசலேம், புறஜாதிகளின் நடுவிலே நான் அதை வைத்தேன், அதைச் சுற்றிலும் தேசங்கள் இருக்கிறது.

எசே 5:6. அது புறஜாதிகளைப்பார்க்கிலும் என் நியாயங்களையும், தன்னைச் சுற்றிலும் இருக்கிற தேசங்களைப்பார்க்கிலும் என் கட்டளைகளையும் அக்கிரமமாக மாற்றிப்போட்டது; அவர்கள் என் நியாயங்களை வெறுத்து, என் கட்டளைகளில் நடவாமற்போனார்கள்.

எசே 5:7. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், உங்களைச் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகளைப்பார்க்கிலும் அதிகரிக்கிறவர்களாகிய நீங்கள் என் கட்டளைகளிலே நடவாமலும், என் நியாயங்களின்படி செய்யாமலும், உங்களைச் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகளுடைய நீதிநியாயங்களின் படியாவது நடவாமலும் போனபடியினாலே.

கர்த்தர் எசேக்கியேலிடம், ஒரு கருக்கான கத்தியினால் தன் தலையையும் தன் தாடியையும் சிரைத்துக்கொள்ளுமாறு சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் அழிந்துபோவார்கள் என்பதற்கு இது அடையாளம். கர்த்தர் இந்த அடையாளத்தின் தாற்பரியத்தை இங்கு விவரிக்கிறார். "இதுவே எருசலேம்" (எசே 5:5) என்று கர்த்தர் சொல்லுகிறார். எசேக்கியேல் தீர்க்கதரிசியின் தலைமயிர் சிரைக்கப்படவேண்டும். இது எருசலேமுக்கு அடையாளமாயிருக்கிறது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் தலையிலுள்ள மயிரெல்லாம் சிரைக்கப்படுகிறது. எருசலேமின் அழகு அதைவிட்டு நீங்கிப்போகிறது. அதிலுள்ள ஆபரணங்களெல்லாம் உரிந்துகொள்ளப் படுகிறது. எருசலேம் நகரத்தில் ஒருவரும் குடியிராதவாறு, எல்லோரும் அழிக்கப் படுகிறார்கள். நகரம் வெறுமையாயிருக்கிறது. தலை சிரைக்கப்பட்ட பின்பு அது முடியில்லாமல் வழுக்கையாகயிருக்கும். எருசலேம் இப்போது ஒன்றுமில்லாமல் வெறுமையாயிருக்கிறது.

"அக்காலத்திலே ஆண்டவர் கூலிக்கு வாங்கினசவரகன் கத்தியினால், அதாவது, நதியின் அக்கரையிலுள்ள அசீரியா ராஜாவினால், தலைமயிரையும் கால்மயிரையும் சிரைப்பித்து, தாடியையும் வாங்கிப்போடுவிப்பார்" (ஏசா 7:20).

எசேக்கியேல் ஒரு ஆசாரியன். அவர் ஒரு தீர்க்கதரிசி. அவர் ஒரு பரிசுத்தவான். எசேக்கியேலின் தலை பரிசுத்த நகரமாகிய எருசலேமுக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் எருசலேமுக்கு ஏராளமான சிலாக்கியங்களைக் கொடுத்திருக்கிறார். அதை கனம்பண்ணி மகிமைப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் எருசலேம் நகரத்தை புறஜாதிகளின் நடுவிலே வைத்தார். அதைச் சுற்றிலும் தேசங்கள் இருக்கிறது (எசே 5:5). எருசலேமைச் சுற்றிலுமுள்ள தேசங்களில் ஜனத்தொகை அதிகமாயிருக்கிறது. அவர்கள் எல்லோருமே நாகரீகம் மிகுந்தவர்கள். கல்வி, கலை, விஞ்ஞானம் ஆகியவற்றில் கற்று தேர்ச்சி பெற்றவர்கள். எருசலேம் புறஜாதிகளின் நடுவிலிருந்தாலும், அந்த தேசத்தார் எல்லோரையும்விட எருசலேம் நகரமே உயர்ந் திருந்தது. எருசலேம் கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்று செழித்திருந்தது.

எருசலேமைச் சுற்றிலும் ஏராளமான தேசங்கள் இருந்தாலும், எருசலேம் நகரமே அந்த தேசங்களுக்கு விளக்குத்தண்டின்மீது வைக்கப்பட்ட விளக்கைப்போல ஒளியைக் கொடுக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தம்முடைய ஜனங்களாக தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அவர்கள் தேவனுடைய வெளிப்பாடுகளை, தங்களைச் சுற்றிலுமிருக்கிற தேசத்தாருக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார்கள்.

புறஜாதி ஜனங்கள் அஞ்ஞானிகளாகவும், தேவனை அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய பிள்ளைகள். கர்த்தருடைய வெளிப்பாட்டைப் பெற்றிருக்கிறவர்கள். அவர்கள் புறஜாதிகளின் நடுவிலே குடியிருக்கிறார்கள். அவர்களைச் சுற்றிலும் புறஜாதி தேசங்கள் இருக்கிறது. தங்களுடைய அண்டை தேசத்தார் எல்லோருக்கும், இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை உபதேசம் பண்ணுகிறார்கள். யூதர்கள் உலகத்தின் கடைசிபரியந்தமும் சென்று கர்த்தருடைய நாமத்தையும், அவருடைய மகிமையையும் பிரசித்தம் பண்ணவேண்டும்.

இருதயம் சரீரத்தின் மையப்பகுதியிலிருக்கிறது. சரீரத்தின் ஜீவன் அதன் இரத்தத்திலிருக்கிறது. இருதயமே சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும் இரத்தத்தை அனுப்புகிறது. எருசலேமும் இந்த உலகத்தின் மையப்பகுதியிலிருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போயிருக்கிறது. எருசலேம் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுக்கிறது.

"சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானாஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள்" (1இராஜா 4:34).

பூமியிலுள்ள எல்லா ஜாதியாரும் எருசலேமின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். அக்காலத்தில் எருசலேம் நகரம் அகில உலகத்திற்கும் பிரபல்யமாயிருந்தது. தன்னைச் சுற்றிலுமுள்ள எல்லா தேசங்களுக்கும் எருசலேம் நகரம் ஆசீர்வாதமாய் விளங்கிற்று.

பழைய ஏற்பாட்டுக்காலத்தைவிட, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, எருசலேம் நகரம் ஆவிக்குரிய ரீதியாக பூரண ஆசீர்வாதம் பெற்றிருக்கிறது. சீயோனிலிருந்து சுவிசேஷம் புறப்பட்டது. எருசலேமிலிருந்து இயேசு கிறிஸ்துவின் வார்த்தை பிரசங்கிக்கப்பட்டது.

எருசலேம் இப்போது தன்னுடைய மகிமையை இழந்து மங்கிப்போயிருக்கிறது. கர்த்தர் எருசலேமின்மீது குற்றம் சொல்லுகிறார். எருசலேம் நகரம் தன்னுடைய ஆதி மேன்மையை இழந்துவிட்டது. ஒரு காலத்தில் எருசலேம் நகரம் பரிசுத்த நகரம் என்று அழைக்கப்பட்டது. இப்போதோ எருசலேம் நகரத்தில் பரிசுத்தமில்லை. அது அசுத்த நகரமாயிருக்கிறது.

எருசலேமின் குடிகள் கர்த்தருடைய கட்டளைகளிலே நடக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய நியாயங்களின்படி செய்யவில்லை. அது மாத்திரமல்ல, எருசலேம் நகரத்தார், தங்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகளுடைய நீதி நியாயங்களின்படிகூட நடவாமல் போனார்கள் (எசே 5:7). இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய நியாயங்களை வெறுத்து, அவருடைய கட்டளைகளில் நடவாமல் போனார்கள்.

புறஜாதி ஜனங்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். அவர்கள்கூட நீதி நியாயங்களின்படி நடக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை மதித்தார்கள். கர்த்தருடைய நியாயங்களை அக்கிரமமாக மாற்றிப்போட வில்லை. ஆனால், எருசலேமின் குடிகளோ கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப்போட்டார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தேவனுடைய பிரமாணங்களை முறித்துப்போட்டது மாத்திரமல்ல, அதை அவமாக்கிப்போட்டார்கள். கர்த்தருடைய நீதி நியாயங்களின்படி நடவாமல், தங்களுடைய அக்கிரமங்களுக்கு கீழ்ப்படிந்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்முடைய கட்டளைகளையும், தம்முடைய நியாயங்களையும் கொடுத்திருக்கிறார். அவர்களோ தேவனுடைய கட்டளைகளில் நடவாமல், அவருடைய நியாயங்களின்படி செய்யாமல், புறஜாதி ஜனங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். புறஜாதியார் அருவருப்பான காரியங்களையும், அருவருப்பான பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய நீதி நியாயங்களின்படி நடவாமல், புறஜாதியாரின் அருவருப்புக்களைப் பின்பற்றுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப் போட்டார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதிப்பதற்கு பதிலாக விக்கிரகங்களை ஆராதித்தார்கள். கர்த்தருக்கு பலிசெலுத்துவதற்குப் பதிலாக, அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டினார்கள். புறஜாதி ஜனங்கள் மத்தியில் காணப்பட்ட விக்கிரகாராதனையைவிட, இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியில் காணப்பட்ட விக்கிரகாராதனை மிகவும் அதிகமாயிருந்தது.

இஸ்ரவேல் வம்சத்தார் எருசலேம் நகரத்திலே விக்கிரகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தார்கள். விக்கிரகங்களுக்கு ஏராளமான பலிபீடங்களைக் கட்டினார்கள். கர்த்தருடைய பரிசுத்த நகரமாகிய எருசலேமிலே ஏராளமான அந்நிய தெய்வங்களை அறிமுகப்படுத்தினார்கள். எருசலேமிலே கர்த்தருடைய பரிசுத்த ஆலயம் இருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தாரோ எருசலேமில் விக்கிரகங்களுக்கு ஏராளமான கோவில்களைக் கட்டுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாருடைய அக்கிரமம், அவர்களைச் சுற்றிலுமிருக்கிற தேசங்களின் அக்கிரமங்களைவிட அதிகமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் தேவன் ஒருவரே. அவருடைய நாமமும் ஒன்றே. அவருடைய பலிபீடமும் ஒன்றே. ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ ஏராளமான அந்நிய தெய்வங்களை யூதாதேசத்தில் அறிமுகப்படுத்தி, அந்நிய தெய்வங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்முடைய நியாயங்களையும், கட்டளைகளையும், பிரமாணங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார். தம்முடைய சத்தியங்களை அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார். புறஜாதியாருக்கு இப்படிப்பட்ட ஆவிக்குரிய சிலாக்கியம் கிடைக்கவில்லை. அவர்கள் தங்கள் சுபாவங்களில் தீட்டுப்பட்டவர்களாகயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப்போட்டு, புறஜாதியாரைவிட தங்களை அதிகமாய்த் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

எருசலேமுடைய அக்கிரமத்தினிமித்தம் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. "ஆதலால், சீயென்றிகழப் படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான உன் கிரியைகளால் நீ என் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினபடியால் என் கண் உன்னைத் தப்பவிடாது, நான் உன்னைக் குறுகிப்போகப்பண்ணுவேன், நான் இரங்கமாட்டேன், இதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (எசே 5:11) என்று கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமைப் பார்த்து உரைக்கிறார்.

எருசலேமுக்குத் தண்டனை எசே 5:8-17

எசே 5:8. இதோ, நான், நானே உனக்கு விரோதமாக வந்து, புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக உன் நடுவிலே நீதி செலுத்தி,

எசே 5:9. நான் முன்பு செய்யாததும் இனிச் செய்யாதிருப்பதுமானவிதமாய் உனக்கு உன் எல்லா அருவருப்புகளினிமித்தமும் செய்வேன்.

எசே 5:10. ஆதலால் உன் நடுவிலே பிதாக்கள் பிள்ளைகளைத் தின்பார்கள்; பிள்ளைகள் பிதாக்களைத் தின்பார்கள்; நான் உன்னில் நீதிசெலுத்தி உன்னில் மீதியாயிருப்பவர்களையெல்லாம் சகல திசைகளிலும் சிதறிப்போகப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 5:11. ஆதலால், சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான உன் கிரியைகளால் நீ என் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினபடியால் என் கண் உன்னைத் தப்பவிடாது, நான் உன்னைக் குறுகிப்போகப்பண்ணுவேன், நான் இரங்கமாட்டேன், இதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 5:12. உன்னிலே மூன்றில் ஒரு பங்கு கொள்ளைநோயால் சாவார்கள், பஞ்சத்தாலும் உன் நடுவிலே மடிந்துபோவார்கள்; மூன்றில் ஒரு பங்கு உன்னைச் சுற்றிலும் இருக்கிற பட்டயத்தால் வெட்டுண்டு விழுவார்கள்; மூன்றில் ஒரு பங்கை நான் சகல திசைகளிலும் சிதறிப்போகப்பண்ணி, அவர்கள் பின்னே பட்டயத்தை உருவுவேன்.

எசே 5:13. இப்படி என் கோபம் நிறைவேறும்; இப்படி நான் என் உக்கிரத்தை அவர்கள்மேல் தங்கப்பண்ணுகிறதினால் என்னை ஆற்றிக்கொள்வேன்; நான் என் உக்கிரத்தை அவர்களில் நிறைவேற்றும்போது, கர்த்தராகிய நான் என் வைராக்கியத்திலே இதைப் பேசினேன் என்று அறிவார்கள்.

எசே 5:14. கடந்துபோகிற யாவருடைய கண்களுக்கு முன்பாகவும் உன் சுற்றுப்புறத்தாராகிய ஜாதிகளுக்குள்ளே நான் உன்னைப் பாழும் நிந்தையுமாக்குவேன்.

எசே 5:15. நான் கோபத்தாலும் உக்கிரத்தாலும் கொடிய தண்டனைகளாலும், உன்னில் நீதிசெலுத்தும்போது, உன் சுற்றுப்புறத்தாராகிய ஜாதிகளுக்கு அது நிந்தையும் துர்க்கீர்த்தியும் எச்சரிப்பும் பிரமிப்புமாய் இருக்கும்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்.

எசே 5:16. உங்களை அழிப்பதற்கு நான் அனுப்பும் அழிவுக்கேதுவான பஞ்சத்தின் கொடிய அம்புகளை நான் அவர்களுக்குள்ளே எய்யும்போது, நான் பஞ்சத்தை உங்கள்மேல் அதிகரிக்கப் பண்ணி, உங்கள் அப்பம் என்னும் ஆதரவுகோலை முறித்துப்போடுவேன்.

எசே 5:17. பஞ்சத்தையும், உன்னைப் பிள்ளையில்லாமற்போகப்பண்ணும் துஷ்டமிருகங்களையும் உங்களுக்கு விரோதமாக அனுப்புவேன்; கொள்ளை நோயும் இரத்தஞ்சிந்துதலும் உன்னில் சுற்றித்திரியும்; பட்டயத்தை நான் உன்மேல் வரப்பண்ணுவேன்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன் என்றார்.

எருசலேம் கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லை. எருசலேமின் குடிகள் கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப்போட்டார்கள். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தர் எருசலேமைத் தண்டிப்பதற்கு வேறு யாரையும் அனுப்பாமல், தாமே அவர்களைத் தண்டிக்கிறார். "இதோ, நான், நானே உனக்கு விரோதமாக வருவேன்" என்று கர்த்தர் எருசலேமைப் பார்த்து சொல்லுகிறார்.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். எருசலேமின் ஜனங்கள் கல்தேயரை மாத்திரமே தங்களுடைய சத்துருக்களாக பார்க்கிறார்கள். கல்தேயர்கள் மூலமாக கர்த்தருடைய கரம் கிரியை செய்வதை இஸ்ரவேல் வம்சத்தார் பார்க்கவில்லை. கல்தேயர்கள் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக எருசலேமுக்கு விரோதமாக வந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கரமாக எருசலேமைத் தண்டிக்கிறார்கள். கல்தேயர்கள் கர்த்தருடைய கரத்திலுள்ள ஒரு கோலாக அல்ல, அவர்கள் கர்த்தருடைய கரமாகவே இருக்கிறார்கள். அவர்கள் எருசலேம் நகரத்தாரைத் தண்டிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக, "இதோ, நான், நானே உனக்கு விரோதமாக வருகிறேன்" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எருசலேமுக்கு விரோதமாக தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பேசினார். தம்முடைய தெய்வீக பராமரிப்புக்கள் மூலமாக எருசலேமுக்கு விரோதமாக கிரியை நடப்பித்தார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் அவருடைய வாயினால் அறிவிக்கப்படும்போது நாம் அதற்கு செவிகொடுக்கவேண்டும். நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தருடைய வாயின் நியாயத்தீர்ப்புகளுக்கு செவிகொடுக்காதவர்கள், அவருடைய கரத்தின் நியாயத்தீர்ப்புகளுக்கு தப்பிக்க முடியாது. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக நீதி செலுத்துவார்.

கர்த்தருடைய கோபத்தினாலேயே எருசலேமின்மீது தண்டனை வருகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிள்ளைகள். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நியாயங்களையும், கட்டளைகளையும் வெளிப்படுத்தினார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய நீதி நியாயங்களின்படி நடக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப்போட்டார்கள். இதனால் கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது நீதி செலுத்துகிறார்.

கர்த்தர் தம்முடைய அன்பினாலும், மென்மையான சுபாவத்தினாலும் அவர்கள்மீது நீதி செலுத்தவில்லை. கர்த்தர் தம்முடைய கோபத்தாலும், உக்கிரத்தாலும், கொடிய தண்டனைகளாலும் இஸ்ரவேல் வம்சத்தார்மீது நீதி செலுத்துகிறார். கர்த்தருடைய கோபத்தையும், உக்கிரத்தையும், கொடிய தண்டனைகளையும் தாங்கிக்கொள்ள முடியாமல் இஸ்ரவேல் வம்சத்தார் வேதனைப்படுவார்கள். மிகுந்த கஷ்டங்களை அனுபவிப்பார்கள்.

அது அவர்களுடைய சுற்றுப்புறத்தாராகிய ஜாதிகளுக்கு, நிந்தையும், தூர்க்கீர்த்தியும், எச்சரிப்பும், பிரமிப்புமாயிருக்கும். கர்த்தர் யாருக்கும் தெரியாமல், இஸ்ரவேல் ஜனத்தாரை இரகசியமாய்த் தண்டிக்கமாட்டார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக வந்து, புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக, அவர்களுக்கு நீதி செலுத்துவார்.

கர்த்தர் தம்முடைய இயல்பான சுபாவத்தில் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நீடிய பொறுமையுள்ளவர். கோபப்படுவதற்கு தாமதிக்கிறவர். அவரிடத்தில் உக்கிர கோபம் இருக்காது. ஆனால் இப்போதோ கர்த்தர் தம்முடைய கோபத்தாலும், உக்கிரத்தாலும், கொடிய தண்டனைகளாலும் இஸ்ரவேல் ஜனத்தார்மீது நீதி செலுத்துகிறார். எருசலேம் குடிகளின் பாவங்கள் கர்த்தரை கோபமடையச் செய்திருக்கிறது.

இரக்கமும் கிருபையுமுள்ள தேவன் இப்போது, கோபமும், உக்கிரமுமுள்ள தேவனாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய சுபாவத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக மாற்றிப்போட்டார். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப்போட்டதின் விளைவாக, கர்த்தருடைய சுபாவமும் அவர்களுக்கு விரோதமாக மாறிப்போயிற்று.

"நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" (சங் 95:10,11).

மனுஷன் தன்னுடைய பாவங்களினால் தேவனை கனவீனம்பண்ணுகிறான். இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். கர்த்தருடைய கோபம் அவருடைய சித்தத்தின் பிரகாரமாக நிறைவேறும். கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை இஸ்ரவேல் வம்சத்தார்மேல் தங்கப்பண்ணி, தம்மை ஆற்றிக்கொள்கிறார். கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை இஸ்ரவேல் ஜனங்களில் நிறைவேற்றுவார். அப்போது கர்த்தராகிய ஆண்டவர் தம்முடைய வைராக்கியத்திலே இதை பேசினார் என்று, இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்துகொள்வார்கள்.

கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வெளிப்படும் வரையிலும், அவர்கள் முரட்டாட்டம் பண்ணுவார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டிக்கும் வரையிலும் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள். கர்த்தர் தம்முடைய கோபத்தினால், துன்மார்க்கமான மனுஷரைத் தண்டிக்கும்போதோ, அவர்கள் தங்கள் வேதனையினால் அழுது புலம்புவார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு ஒருவரும் தப்பிக்க முடியாது.

கர்த்தர் தம்முடைய நீதியினால் பாவிகளை தண்டிப்பார். அவருடைய தண்டனை இரகசியமாக இருக்காது. வெளிப்படையாகவும், எல்லோருடைய கண்களுக்கு முன்பாகவும் கர்த்தருடைய தண்டனை வரும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக வந்து, அவர்களை புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாகத் தண்டிப்பார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது, எல்லோருக்கும் முன்பாக, தம்முடைய நீதியை நிறைவேற்றுவார்.

இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். யூதாதேசத்தார் முழுவதும் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் வெளிப்படையாகவே கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். அவர்கள் புறஜாதிகளுக்கு முன்பாகவும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு முன்பாகவும் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் வெளிப்படையாக பாவம் செய்ததினால், கர்த்தரும் அவர்களை வெளிப்படையாக, எல்லோருடைய கண்களுக்கும் முன்பாக தண்டிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை கடுமையாகத் தண்டிக்கிறார். "நான் முன்பு செய்யாததும் இனிச் செய்யாதிருப்பதுமான விதமாய் உனக்கு உன் எல்லா அருவருப்புகளினிமித்தமும் செய்வேன்" (எசே 5:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தண்டிப்பதை, புறஜாதியார் எல்லோரும் பார்ப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தை அவர்களுடைய சுற்றுப்புறத்தாராகிய ஜாதிகளுக்குள்ளே பாழும் நிந்தையுமாக்குவார். அவர்களை கடந்துபோகிற யாவருடைய கண்களுக்கு முன்பாகவும், எருசலேமுக்கு வந்த அழிவு பிரமிப்பாகயிருக்கும். இஸ்ரவேலுக்கு கிடைத்த தண்டனை, அவர்களுடைய சுற்றுபுறத்தாராகிய ஜாதிகளுக்கு நிந்தையும், தூர்க்கீர்த்தியும், எச்சரிப்பும், பிரமிப்புமாயிருக்கும்.

எருசலேமின் குடிகள் தங்களுடைய சுற்றுப்புறத்தாராகிய ஜாதிகளுக்கு கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய பிரமாணங்களையும், நியமங்களையும், கட்டளைகளையும் போதிக்கவேண்டும். தங்களுடைய பக்தியினாலும், நீதியினாலும் அவர்கள் கர்த்தருடைய சத்தியத்தை புறஜாதியார் மத்தியிலே உபதேசம்பண்ண வேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ பரிசுத்தமாய் ஜீவிக்கவில்லை. கர்த்தருடைய கட்டளைகளிலே நடக்கவில்லை. அவருடைய நியாயங்களின்படி செய்யவில்லை. அவர்கள் தங்களுடைய பரிசுத்தமான ஜீவியத்தின் மூலமாய், புறஜாதிகளுக்கு கர்த்தரைப்பற்றி கற்றுக்கொடுக்கவில்லை. இதனால் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது கோபங்கொண்டு அவர்களை அழித்துப்போடுகிறார். கர்த்தரே இப்போது, இஸ்ரவேல் வம்சத்தாருடைய அழிவின் மூலமாக, புறஜாதி ஜனங்களுக்கு, தம்முடைய சத்தியங்களையும், நியாயங்களையும், நியமங்களையும், பிரமாணங்களையும் கற்றுக்கொடுக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள்மீது வந்த தண்டனை மிகவும் பயங்கரமாயிருக்கிறது. இதற்கு முன்பு அவர்களுக்கு இப்படிப்பட்ட தண்டனை கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக அருவருப்பான காரியங்களைச் செய்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தர் இதற்கு முன்பு இஸ்ரவேல் வம்சத்தாரை இப்படி தண்டித்ததுமில்லை. இனிமேல் அவர்களை இப்படி தண்டிக்கப்போவதுமில்லை. கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை அவர்கள்மேல் தங்கப்பண்ணி, தம்மை ஆற்றிக்கொள்கிறார். கர்த்தருடைய உக்கிரம் இஸ்ரவேல் வம்சத்தார்மீது நிறைவேறும்போது, அவருடைய வைராக்கியம் வெளிப்படுகிறது.

"நான் முன்பு செய்யாததும் இனிச் செய்யாதிருப்பதுமானவிதமாய் உனக்கு உன் எல்லா அருவருப்புகளினிமித்தமும் செய்வேன்" (எசே 5:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியம் கர்த்தருடைய உக்கிரகோபத்தையும், அவருடைய வைராக்கியத்தையும் வெளிப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப்போட்டார்கள்.

எசேக்கியா ராஜா துன்மார்க்கமாய் ஜீவித்தான். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான். அவனைப்போன்ற துன்மார்க்கன் இதற்கு முன்பும் இருந்ததில்லை, இதற்கு பின்பும் இருக்கப்போவதில்லை என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். ஆனால் அவர்களோ பரிசுத்தத்தில் விசேஷமாயிராமல், பாவத்தில் விசேஷமாயிருக்கிறார்கள்.

பெற்றோரும் பிள்ளைகளும் இயற்கையாகவே ஒருவருக்கொருவர் அன்பாயிருப்பார்கள். பாசத்தோடு பழகுவார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாரைத் தண்டிக்கும்போது, அவர்கள் மத்தியிலே காணப்பட்ட இயற்கையான அன்பையும், பாசத்தையும் அகற்றிப்போடுகிறார். இதனால் பிதாக்கள் தங்கள் பிள்ளைகள்மீது அன்பாகயிருக்கமாட்டார்கள். பிள்ளைகளும் தங்கள் பிதாக்கள்மீது அன்பாகயிருக்க மாட்டார்கள். "உன் நடுவிலே பிதாக்கள் பிள்ளைகளைத் தின்பார்கள், பிள்ளைகள் பிதாக்களைத் தின்பார்கள்" (எசே 5:10) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரோடு பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை துணிகரமாய் முறித்துப்போட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய அன்பையும், கிருபையையும், இரக்கத்தையும் அசட்டைபண்ணினார்கள். கர்த்தர் தங்களுக்கு நியமித்த கட்டளைகளிலே நடவாமலும், தங்களுக்கு கொடுத்த நியாயங்களின்படி செய்யாமலும், கர்த்தருடைய கட்டளைகளை அக்கிரமமாக மாற்றிப்போட்டார்கள. இதன் நிமித்தமாக கர்த்தருடைய தண்டனை இஸ்ரவேல் வம்சத்தார்மீது வந்திருக்கிறது. பிதாக்களும் பிள்ளைகளும் ஒருவரையொருவர் தின்று ஏகமாய் அழிந்துபோகிறார்கள்.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். நகரத்திற்குள்ளே பசியும், பஞ்சமும், பட்டினியும் உண்டாயிற்று. ஒருவருக்கும் புசிக்க போஜனம் கிடைக்கவில்லை. ஜனங்கள் தங்கள் பசியை ஆற்றிக்கொள்ள, தங்கள் வம்சத்தையே தின்றுபோடுகிறார்கள். தங்களுடைய இனத்தையே தின்று அழித்துப்போடுகிறார்கள். தங்களுடைய குடும்பத்தாரையே தின்று, குடும்பத்தை குடியற்றவர்களாக்குகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், கர்த்தர் அவர்கள்மீது நீதி செலுத்துகிறார். அவர்களில் மீதியாயிருப்பவர்களையெல்லாம் சகல திசைகளிலும் சிதறிப்போகப்பண்ணுகிறார். எருசலேம் நகரத்தார் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்தினார்கள். இதன் நிமித்தமாக கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. கர்த்தருடைய கண்கள் அவர்களைத் தப்பவிடவில்லை. இஸ்ரவேல் வம்சத்தாரின் கிரியைகள் சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப் படத்தக்கதுமாயிருக்கிறது. கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் குறுகிப்போகப்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்க மறுக்கிறார்.

கர்த்தர் எருசலேமை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும் என்று வைராக்கியத்தோடிருக்கிறார். எருசலேமின் குடிகளுக்கு கர்த்தர் மூன்றுவிதமான அழிவை நியமிக்கிறார். அவர்களில் மூன்றில் ஒரு பங்கு கொள்ளைநோயால் சாவார்கள், பஞ்சத்தாலும் அவர்கள் நடுவிலே மடிந்துபோவார்கள்;

மூன்றில் ஒரு பங்கு அவர்களைச் சுற்றிலும் இருக்கிற பட்டயத்தால் வெட்டுண்டு விழுவார்கள்; யூதர்களில் மூன்றில் ஒரு பங்கை கர்த்தர் சகல திசைகளிலும் சிதறிப்போகப்பண்ணி, அவர்கள் பின்னே தம்முடைய பட்டயத்தை உருவுவார் (எசே 5:12).

கர்த்தர் எருசலேமின் குடிகள்மீது மூன்றுவிதமான வாதைகளை அனுப்புகிறார். இவ்வாறாக கர்த்தருடைய கோபம் நிறைவேறுகிறது. ஆனாலும் கர்த்தருடைய உக்கிரம் ஆறவில்லை. கர்த்தர் தம்முடைய உக்கிர கோபத்தினால், எருசலேமிலே மீதமுள்ள ஜனங்களையும் அழித்துப் போடுவதாக சொல்லுகிறார்.

"பஞ்சத்தையும், உன்னைப் பிள்ளையில்லாமற்போகப்பண்ணும் துஷ்டமிருகங்களையும் உங்களுக்கு விரோதமாக அனுப்புவேன்; கொள்ளைநோயும் இரத்தஞ்சிந்துதலும் உன்னில் சுற்றித்திரியும்; பட்டயத்தை நான் உன்மேல் வரப்பண்ணுவேன்" (எசே 5:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேமிலே பஞ்சமும், பட்டயமும் வரும்போது, நகரத்திலுள்ளவர்களில் சிலர் வனாந்தரங்களுக்கும், பர்வதங்களுக்கும் ஓடிப்போவார்கள். அங்கே துஷ்டமிருகங்கள் அவர்களைக் கொன்றுபோடும். எருசலேம் நகரத்தில் மீதியாயிருப்பவர்களையெல்லாம் கர்த்தர் சகல திசைகளிலும் சிதறிப்போகப்பண்ணுவார் (எசே 5:10,12).

கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் வம்சத்தார்மீது கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்கிறது. அவருடைய உக்கிரம் அதிகரிக்கிறது. கர்த்தர் ஆரம்பத்தில் இஸ்ரவேல் ஜனங்களை குறுகிப்போகப் பண்ணுகிறார் (எசே 5:11). அதன் பின்பு அவர்களை ஒன்றுமில்லாமல் வெறுமையாக்கிப் போடுகிறார். பஞ்சமும் துஷ்டமிருகங்களும் இஸ்ரவேல் வம்சத்தாரை பிள்ளையில்லாமல் போகப்பண்ணுகிறது. ஆரம்பத்தில் குறுகிப்போனவர்கள் இப்போது ஒன்றுமில்லாமல் போகிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் எருசலேமின்மீது அழிவு ஆரம்பமாயிற்று. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ரோமப்பேரரசார் எருசலேமை முற்றிலுமாய் அழித்துப்போட்டார்கள். எருசலேமின் அழிவு பூரணமாயிற்று.

இஸ்ரவேல் வம்சத்தார்மீது கர்த்தரே தம்முடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் அவருடைய அதிகாரமும், உக்கிர கோபமும் வெளிப்படுகிறது. "இதோ, நான், நானே எருசலேமுக்கு விரோதமாக வருகிறேன்" என்று கர்த்தர் உக்கிர கோபத்தோடு சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைக் கேட்கிறவர்கள், அவருடைய சர்வஅதிகாரத்தையும், சர்வஆளுகையையும் புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தரே தம்முடைய வைராக்கியத்தினால் இந்த வார்த்தைகளை பேசுகிறார் என்பதை இஸ்ரவேல் ஜாதியாரும், புறஜாதியாரும் அறிந்துகொள்ளவேண்டும்.

கர்த்தராகிய ஆண்டவர் நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை வைராக்கியதோடு சொன்னாலும், இந்த வார்த்தைகளை கர்த்தர் நேரடியாக இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல்லவில்லை. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளே அவருடைய வார்த்தைகளை, இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் பேசினாலும், ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுப்பதுபோல, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுவார். கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும். அவருடைய கோபமும் நிறைவேறும்.

6 அதிகாரம்

இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகாராதனை செய்கிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது எழும்புகிறது. கர்த்தர் அவர்களையும், அவர்களோடுகூட, அவர்கள் ஆராதிக்கிற விக்கிரகங்களையும் அழிக்கப்போவதாக எச்சரிக்கிறார் (எசே 6:1-7).

இஸ்ரவேல் வம்சத்தாரில் மீதமானவர்கள் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். அவர்கள் உண்மையாய் மனந்திரும்புவார்கள். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கும் (எசே 6:8-10).

இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமங்களுக்காகவும், அவர்களுக்கு வரும் துன்பங்களுக்காகவும் அழுது புலம்புமாறு, கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியிடம் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பர்வதங்கள் எசே 6:1-7

எசே 6:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 6:2. மனுபுத்திரனே, நீ இஸ்ரவேலின் பர்வதங்களுக்கு நேராக உன் முகத்தைத் திருப்பி, அவைகளுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்,

எசே 6:3. இஸ்ரவேலின் பர்வதங்களே, கர்த்தராகிய ஆண்டவரின் வார்த்தையைக் கேளுங்கள்; கர்த்தராகிய ஆண்டவர் பர்வதங்களையும் குன்றுகளையும் ஓடைகளையும் பள்ளத்தாக்குகளையும் நோக்கி: இதோ, உங்கள்மேல் நான், நானே பட்டயத்தை வரப்பண்ணி, உங்கள் மேடைகளை அழித்துப்போடுவேன்.

எசே 6:4. உங்கள் பலிபீடங்கள் பாழாக்கப்பட்டு, உங்கள் சிலைகள் தகர்க்கப்படும்; உங்களில் கொலையுண்கிறவர்களை உங்கள் நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக விழப்பண்ணுவேன்.

எசே 6:5. நான் இஸ்ரவேல் புத்திரருடைய பிரேதங்களை அவர்களுடைய நரகலான விக்கிரகங்களின் முன்னே கிடக்கப்பண்ணி, உங்கள் பலி பீடங்களைச் சுற்றிலும் உங்கள் எலும்புகளைச் சிதறப்பண்ணுவேன்.

எசே 6:6. உங்கள் பலிபீடங்கள் நிர்மூலமும் பாழுமாகும்படிக்கும், உங்கள் நரகலான விக்கிரகங்கள் தகர்க்கப்பட்டு, ஓய்ந்து, உங்கள் சிலைகள் வெட்டுண்டு, உங்கள் கிரியைகள் குலைந்துபோகும்படிக்கும், உங்களுடைய சகல வாசஸ்தலங்களிலுமுள்ள பட்டணங்கள் நிர்மூலமும் உங்கள் மேடைகள் பாழுமாகும்.

எசே 6:7. கொலைசெய்யப்பட்டவர்கள் உங்கள் நடுவில் விழுவார்கள்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசேக்கியேல் இஸ்ரவேலின் பர்வதங்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும். அவர் தன்னுடைய முகத்தை அந்த பர்வதங்களுக்கு நேராக திருப்பிக்கொள்ளவேண்டும். எசேக்கியேல் இஸ்ரவேல் தேசத்தை நோக்கிப் பார்க்கும்போது, உயரமான பர்வதங்களே அவருடைய கண்களில் முதலாவதாக தென்படும். அவர் பர்வதங்களைத்தான் முதலாவதாகப் பார்ப்பார்.

இஸ்ரவேலின் பர்வதங்களுக்கு நேராக தன்னுடைய முகத்தைத் திருப்பி, அவைகளுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும் என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளை கொடுக்கிறார். நீதிமன்றத்தில், வழக்குகள் விசாரிக்கப்பட்ட பின்பு, நீதிபதி குற்றவாளியை நோக்கிப் பார்த்து, அவருக்கு தண்டனை கொடுப்பார். அதுபோல எசேக்கியேலும் தன்னுடைய முகத்தை இஸ்ரவேலின் பர்வதங்களுக்கு நேராக திருப்பிக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேலின் பர்வதங்கள் மிகவும் உறுதியானவை. அவை எப்போதுமே வலுவாகயிருக்கிறது. ஆனாலும் எசேக்கியேல் அந்த பர்வதங்களுக்கு நேராக தன்னுடைய முகத்தை திருப்பிக்கொள்ளவேண்டும். கர்த்தர் இஸ்ரவேலுக்கு சொல்லும் நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை எசேக்கியேல் தயங்காமல் தெளிவாகச் சொல்லவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் அந்த பர்வதங்களின் அஸ்திபாரங்களை அசைக்கும்.

இஸ்ரவேலின் பர்வதங்கள் பூர்வகாலம் முதல் பரிசுத்த பர்வதங்களாயிருந்தது. ஆனால் இப்போதோ அது தீட்டுப்பட்டிருக்கிறது. அதன் மேடைகளிலெல்லாம் இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். இஸ்ரவேலின் பர்வதங்களில் விக்கிரகாராதனை அதிகமாய் நடைபெறுகிறது. கர்த்தர் இஸ்ரவேலின் பர்வதங்களுக்கு விரோதமாக நோக்கிப் பார்க்கிறார். கர்த்தரைப்போலவே, எசேக்கியேல் தீர்க்கதரிசியும் அந்தப் பர்வதங்களுக்கு விரோதமாக தன்னுடைய முகத்தைத் திருப்பிக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைகள் பர்வதங்களில் வெளிப்படுத்தப்படும்போது, அது குன்றுகளிலும், ஓடைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் எதிரொலிக்கும். கர்த்தர் இஸ்ரவேலின் பர்வதங்களுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, அதன் எதிரொலிகள் மூலமாக, அவர் குன்றுகளுக்கும், ஓடைகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும், இஸ்ரவேல் தேசம் முழுவதற்கும் விரோதமாக தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார்.

"இஸ்ரவேலின் பர்வதங்களே, கர்த்தராகிய ஆண்டவரின் வார்த்தையைக் கேளுங்கள்; கர்த்தராகிய ஆண்டவர் பர்வதங்களையும் குன்றுகளையும் ஓடைகளையும் பள்ளத்தாக்குகளையும் நோக்கி: இதோ, உங்கள்மேல் நான், நானே பட்டயத்தை வரப்பண்ணி, உங்கள் மேடைகளை அழித்துப்போடுவேன்" (எசே 6:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விக்கிரகங்களுக்கும், விக்கிரகாராதனைக்காரருக்கும் அழிவு வரும். "இதோ, உங்கள்மேல் நான், நானே பட்டயத்தை வரப்பண்ணி, உங்கள் மேடைகளை அழித்துப்போடுவேன்" (எசே 6:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். கல்தேயருடைய பட்டயம் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் கிரியை செய்யும். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் கல்தேயருடைய பட்டயத்தை வரப்பண்ணுவார்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் மேடைகள், இஸ்ரவேலின் பர்வதங்கள் மேலிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய மேடைகளை அழித்துப்போடுவார். அவர்களுடைய பலிபீடங்கள் நிர்மூலமும் பாழுமாகும். அவர்களுடைய நரகலான விக்கிரங்கள் தகர்க்கப்படும். அவர்களுடைய சிலைகள் வெட்டுண்டு போகும். அவர்களுடைய மேடைகளெல்லாம் பாழாய்ப்போகும் (எசே 6:6).

இஸ்ரவேல் வம்சத்தார் அந்நிய தெய்வங்களுக்கு பலிபீடங்களை கட்டுகிறார்கள். அதன்மீது விக்கிரங்களுக்கு பலிசெலுத்துகிறார்கள். அவர்களுடைய பலிபீடங்கள் பாழாக்கப்படும் என்றும், அவர்களுடைய சிலைகள் தகர்க்கப்படும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுடைய விக்கிரகங்கள் நரகலைப்போல அருவருப்பாயிருக்கிறது. அவைகளெல்லாமே தகர்க்கப்பட்டு ஒய்ந்துபோகும்.

கர்த்தர் தம்முடைய கோபத்தினால் விக்கிரகங்களுடைய பலிபீடங்களையும், விக்கிரகங்களையும் அழித்துப்போடுவார். அவர்களுடைய மேடைகளை பாழாக்குவார். கர்த்தருடைய கோபம் இத்துடன் முடிவு பெறாது. கர்த்தர் அவர்களுடைய சகல வாசஸ்தலங்களிலுமுள்ள பட்டணங்களையெல்லாம் நிர்மூலம் பண்ணுவார் (எசே 6:6).

கர்த்தர் விக்கிரகங்களையும், சிலைகளையும், பலிபீடங்களையும் தப்ர்த்துப் போடுவார். அத்தோடு, அந்த விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களையும் பட்டயத்திற்கு ஒப்புக்கொடுப்பார். விக்கிரகாராதனைக்காரர்கள் கல்தேயரின் பட்டயத்திற்கு இரையாவார்கள். அவர்களுடைய பிரேதங்கள், அவர்கள் நம்பின நரகலான விக்கிரங்களுக்கு முன்பாக விழும். விக்கிரகங்களால் அவர்களுக்கு உதவிசெய்ய முடியாது.

விக்கிரகாராதனைக்காரர்கள் விக்கிரங்கள்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால் விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை, பெலனுமில்லை. விக்கிரகங்களும் தகர்க்கப்படுகிறது, விக்கிரகாராதனைக் காரரும் கொலையுண்டு போகிறார்கள். "கொலைசெய்யப்பட்டவர்கள் உங்கள் நடுவில் விழுவார்கள்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசே 6:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மீதியானவர்கள்
எசே 6:8-10

எசே 6:8. நீங்கள் தேசங்களில் சிதறடிக்கப்படும்போது, புறஜாதிகளுக்குள்ளே பட்டயத்துக்குத் தப்புவாரை உங்களுக்கு மீதியாக வைப்பேன்.

எசே 6:9. என்னை விட்டுச் சோரம்போகிற இருதயத்தைக் குறித்தும், தங்கள் நரகலான விக்கிரகங்களின் பின்னே சோரம்போகிற தங்கள் கண்களைக் குறித்தும் மனமடிவானேன் என்று உங்களில் தப்பிப்போன அவர்கள் தாங்கள் சிறைப்பட்டிருக்கும் புறஜாதிகளுக்குள்ளே என்னை நினைத்து, தங்களுடைய சகல அருவருப்புகளினாலும் தாங்கள் செய்த பொல்லாப்புகளினிமித்தம் தங்களையே வெறுத்து,

எசே 6:10. இந்தத் தீங்குகளையெல்லாம் தங்களுக்கு நேரிடப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய நான் விருதாவாய்ச் சொன்னதில்லையென்று அறிந்துகொள்வார்கள் என்றார்.

கர்த்தர் விக்கிரகாரதனைக்காரருக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். இந்த வாக்கியங்களில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பே பிரதானமாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புக்கு மத்தியில், விரோதமாக, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய கோபத்தினால் இஸ்ரவேல் தேசத்திற்கு பேரழிவு உண்டாகிறது. தேசம் முழுவதுமே அழிந்துபோகிறது. அவர்களுடைய சகல வாசஸ்தலங்களும், பட்டணங்களும் நிர்மூலமாகிறது. ஆனாலும் கர்த்தர் தமக்கென்று ஒரு கூட்டம் ஜனத்தை மீதியாக வைக்கிறார். "நீங்கள் தேசங்களில் சிதறடிக்கப்படும்போது, புறஜாதிகளுக்குள்ளே பட்டயத்துக்குத் தப்புவாரை உங்களுக்கு மீதியாக வைப்பேன்" (எசே 6:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரில், பட்டயத்திற்கு தப்பி, உயிரோடிருக்கிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் இவர்களை மாத்திரமே தமக்கு மீதியாக வைக்கிறார். இவர்கள் பட்டயத்திற்கு தப்பி, அந்நிய தேசங்களிலே சிதறிப்போனார்கள். எருசலேமிலே இருந்தவர்களில் ஒருவர்கூட பட்டயத்திற்கு தப்பவில்லை. அவர்கள் தங்கள் நம்பிக்கையை எருசலேமின் அலங்கங்கள் மீது வைத்தார்கள். அந்த அலங்கங்கள் அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்கவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தாரில், ஒரு சிலர் பட்டயத்திற்கு தப்பி அந்நிய தேசங்களுக்கு சிதறி ஓடிப்போனார்கள். அவர்கள் எருசலேமின் அலங்கங்களை நம்பவில்லை. தங்களுடைய விக்கிரகாராதனையினால், கர்த்தருடைய கோபம் தங்கள்மீது வந்திருக்கிறது என்பதை இவர்கள் புரிந்துகொண்டார்கள்.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைபோட்டபோது, எருசலேமின் குடிகள் தங்கள் நகரத்தையும், நகரத்தின் அலங்கங்களையும், தங்களோடு உடன்படிக்கை செய்துகொண்ட தேசங்களையும், ஜாதிகளையும் நம்பினார்கள். ஆனால் அவர்களுக்கு யாருமே உதவி செய்ய வரவில்லை. அவர்களெல்லோரும் கல்தேயருடைய பட்டயத்தால் வெட்டுண்டு செத்துப்போனார்கள்.

கல்தேயருடைய பட்டயத்திற்கு தப்பினவர்கள் அந்நிய தேசங்களுக்கு சிதறி ஓடிப்போனார்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே நம்பினார்கள். பட்டயத்திற்கு தப்பினவர்களை கர்த்தர் அழித்துப் போடாமல், பாதுகாக்கிறார். அவர்களை இஸ்ரவேல் வம்சத்தாரில் மீதியாக வைக்கிறார். இவர்களே புதிய சந்ததிக்கு வித்தாகயிருக்கிறார்கள். கர்த்தர் இவர்கள் மூலமாக எருசலேமை மறுபடியும் ஆசீர்வதிப்பார். இவர்களுடைய சந்ததியினால் எருசலேமை நிரப்புவார்.

கல்தேயருடைய பட்டயத்திற்கு தப்பி, அந்நிய தேசங்களுக்கு சிதறி ஓடிப்போன யூதர்கள், கர்த்தரை நினைத்துப் பார்ப்பார்கள். கர்த்தர் அவர்களுக்கு மனந்திரும்புவதற்கு ஏதுவான கிருபைகளையும், வாய்ப்புக்களையும் கொடுக்கிறார். கிருபையை திட்டமிடுகிற தேவன், தம்முடைய கிருபையை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக்களையும் திட்டமிடுகிறார்.

அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போன யூதர்கள் பட்டயத்திற்கு தப்பித்துக் கொள்கிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய கிருபைகளையும், வாய்ப்புக்களையும் கொடுக்கிறார். ஆனால் அவர்களில் அநேகர் கர்த்தருடைய கிருபையை அசட்டை பண்ணி விடுகிறார்கள். கர்த்தர் கொடுக்கும் நல்ல வாய்ப்புக்களை, தங்களுடைய ஆத்துமாவுக்கு பிரயோஜனமுள்ளதாக பயன்படுத்த தவறிவிடுகிறார்கள். அவர்கள் பட்டயத்திற்கு தப்பினாலும், தங்கள் பாவத்திற்கு தப்பவில்லை. பாவத்தினால் வரும் தண்டனைக்குத் தப்பவில்லை.

பட்டயத்திற்கு தப்பி அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போனவர்களில் அநேகர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். அவர்களுடைய ஜீவியங்களில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், அவருடைய இரக்கமும் கலந்து வெளிப்படுகிறது. பட்டயத்திற்கு தப்பினவர்கள் அந்நியதேசத்து சிறையிருப்புக்குப் போகிறார்கள். இது கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் நீதியான நியாயத்தீர்ப்பு. இவர்கள் கல்தேயரின் பட்டயத்திற்கு தப்பி ஜீவனோடிருக்கிறார்கள். இது கர்த்தர் அவர்களுக்கு காண்பிக்கும் கிருபை.

நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது, கர்த்தர் நம்மை தம்மிடமாகச் சேர்த்துக்கொள்கிறார். நாம் மனந்திரும்புவதற்கு, நம்முடைய பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும், நமக்கு உதவிபுரியும் உபாயங்களாகயிருக்கலாம். பாடுகள் வழியாக கடந்து வருகிறவர்கள் அநேகர் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள்.

நமக்கு பரிசுத்தமான நெருக்கங்கள் வரும்போது, நம்முடைய இருதயத்தில் பாவத்தைக் குறித்த வெறுப்பு உண்டாகும். நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்புவோம். கர்த்தர் நமக்கு பாடுகளை அனுமதிக்கும்போது, நாம் கர்த்தருடைய சித்தத்தையும், அவருடைய திட்டத்தையும் அசட்டை பண்ணிவிடக்கூடாது. நம்முடைய பாடுகளையும் துக்கங்களையும், நம்முடைய மனந்திரும்புதலுக்கேதுவாக, பிரயோஜனமாக்கிக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தாரில் கல்தேயருடைய பட்டயத்திற்கு தப்பினவர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் புற ஜாதிகளுக்குள்ளே சிறைப்பட்டிருக்கும்போது, கர்த்தரை நினைக்கிறார்கள். கெட்ட குமாரன் தன்னுடைய சொத்துக்களையெல்லாம் பிரித்துக்கொண்டு, தன் தகப்பனை விட்டு விலகி தூரதேசத்திற்குப்போனான். தன்னுடைய சொத்தையெல்லாம் துன்மார்க்கமாய் செலவு பண்ணினான். அவனுக்கு சகலமும் குறைவுபட்டது. அவன் தூரதேசத்திலே பசியிலும் பட்டினியிலும் வேதனைப்பட்டான். பன்றி சாப்பிடும் தவிடுகூட அவனுக்கு கிடைக்கவில்லை. அப்போதுதான் அவனுடைய புத்தி தெளிகிறது.

இஸ்ரவேல் வம்சத்தாரும் கெட்ட குமாரனைப்போல இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தேசத்தில் அமைதியாகவும், பாதுகாப்பாகவும், சம்பூரண ஆசீர்வாதங்களோடும், சந்தோஷமாய் ஜீவித்தபோது அவர்கள் கர்த்தரை நினைத்துப் பார்க்கவில்லை. பாபிலோன் தேசத்து சிறையிருப்பில், புறஜாதி ஜனங்கள் மத்தியிலே பாடுகளையும், உபத்திரவங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கும்போது அவர்களுடைய புத்தி தெளிகிறது. அவர்கள் கர்த்தரை நினைத்துப் பார்க்கிறார்கள்.

அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டுமென்றால், முதலாவதாக கர்த்தரை நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் ஏற்கெனவே கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தரை விட்டு சோரம்போயிருக்கிறது. அவர்கள் நரகலான விக்கிரங்களின் பின்னே சோரம் போனார்கள். கர்த்தரை மறந்தார்கள். விக்கிரகங்களை மாத்திரம் நினைத்தார்கள். இப்போதோ பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வேதனைகளை அனுபவிக்கும்போது, அவர்கள் மறுபடியுமாய் கர்த்தரை நினைக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனபோது, அவருடைய வார்த்தைகளை விட்டும் விலகிப்போனார்கள். கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படியாமல் விலகிப்போனார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டியவர்கள். ஆனால் அவர்களுடைய இருதயமோ கர்த்தரைவிட்டு விலகி சோரம்போயிருக்கிறது. அவர்களுடைய கண்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், விக்கிரகங்களை நோக்கிப் பார்க்கிறது.

இஸ்ரவேல் சந்ததியார் கர்த்தருக்குரியவர்கள். ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனை ஆவிக்குரிய விபச்சாரமாயிருக்கிறது. அவர்களுடைய இருதயம் சோரம்போன படியினால், அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தம்மைவிட்டு விலகிப்போனதைப் பார்க்கும்போது, கர்த்தர் மனமடிவாகிறார். தம்முடைய ஜனத்தை நினைத்து கர்த்தருடைய இருதயம் வேதனைப்படுகிறது. இஸ்ரவேல் வம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது, தங்களுடைய பாவங்களை நினைத்துப் பார்க்கிறார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் மனமடிவானதையும் நினைத்துப் பார்க்கிறார்கள். உண்மையான மனந்திரும்புதல் அவர்களுடைய இருதயத்தில் தாழ்மையைக் கொடுக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவத்தினால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. இஸ்ரவேல் வம்சத்தார் அழிந்துபோனார்கள். அவர்களுடைய சமாதானம் உடைந்துபோயிற்று. அவர்களுடைய தேசம் நிர்மூலமாயிற்று. அவர்களுடைய பாவங்களினால் கர்த்தருடைய இருதயமும் உடைந்துபோயிற்று. தம்மைவிட்டு சோரம் போகிற இருதயத்தைக் குறித்தும், தங்கள் நரகலான விக்கிரகங்களின் பின்னே சோரம்போகிற அவர்களுடைய கண்களைக் குறித்தும், கர்த்தர் மனமடிவாகிறார். கர்த்தருடைய இருதயம் வேதனைப்படுகிறது (எசே 6:9).

தங்களுடைய பாவங்களைக் குறித்து இஸ்ரவேல் ஜனங்கள் முதலில் நினைத்துப் பார்க்கவில்லை. அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போனபோதுதான், அவர்கள் கர்த்தரைப்பற்றி நினைத்துப் பார்க்கிறார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாக கர்த்தர் மனமடிவானதை வேதனையோடு நினைவுகூருகிறார்கள். தங்களுடைய சகல அருவருப்புக்களினாலும், தாங்கள் செய்த பொல்லாப்புகளினாலும் சிறைப்பட்டிருக்கும் யூதர்கள் தங்களையே வெறுத்து விடுகிறார்கள் (எசே 6:9).

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் கர்த்தரை நினைத்துப் பார்ப்பதும், தங்களுடைய பாவங்களை நினைத்துப் பார்ப்பதும், தங்களை வெறுப்பதும் அவர்களுடைய மனந்திரும்புதலுக்கு அடையாளமாயிருக்கிறது. மனந்திரும்புகிறவர்கள் தங்களுடைய பாவங்களை அருவருப்பார்கள். கர்த்தருக்கு அருவருப்பானது அவர்களுக்கும் அருவருப்பாயிருக்கும். கர்த்தர் வெறுப்பதை அவர்களும் வெறுப்பார்கள்.

"நான் வெறுக்கிற இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யாதிருங்க ளென்று, தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக் காரரைக் கொண்டு உங்களுக்கு ஏற்கனவே சொல்லியனுப்பிக்கொண்டிருந்தேன்" (எரே 44:4).

"உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது; காளைகள், ஆட்டுக் குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப் பிரியமில்லை" (ஏசா 1:11).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்களுடைய மனச்சாட்சியும், அவர்களுடைய பாவங்களை நினைத்து வேதனைப்படுகிறது. கடந்த காலங்களில் அவர்கள் செய்த பாவங்கள் அவர்களுக்கு அருவருப்பாகயில்லை.

இப்போது அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய கடந்தகால பாவங்களெல்லாம் அவர்களுக்கு அருவருப்புக்களாயிருக்கிறது. அவர்களுடைய கடந்தகால பாவமான கிரியைகளெல்லாம், இப்போது அவர்களுக்கு பொல்லாத கிரியைகளாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, கர்த்தர் மகிமைப்படுகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், இந்த தீங்குகளை யெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணுவதாக கர்த்தர் ஏற்கெனவே அவர்களுக்கு சொல்லியிருந்தார். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, இஸ்ரவேலின் தேவனை தங்கள் கர்த்தராக அங்கீகரிக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகள் ஒருபோதும் விருதாவாய்ச் சொல்லப்படுவதில்லை என்பதையும், கர்த்தர் தங்களுடைய நன்மைகளுக்காகவே தங்களை எச்சரிக்கிறார் என்பதையும், தங்களை கண்டிக்கிறார் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்கிறார்கள்.

"இந்தத் தீங்குகளையெல்லாம் தங்களுக்கு நேரிடப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய நான் விருதாவாய்ச் சொன்னதில்லையென்று அறிந்து கொள்வார்கள்" (எசே 6:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் அழிவு எசே 6:11-14

எசே 6:11. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ உன் கையில் அடித்து, உன் காலால் தட்டி, இஸ்ரவேல் வம்சத்தாருடைய சகல பொல்லாத அருவருப்புகளினிமித்தமும் ஐயோ! என்று சொல்; அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் விழுவார்கள்.

எசே 6:12. தூரத்திலிருக்கிறவன் கொள்ளை நோயால் சாவான்; சமீபத்திலிருக்கிறவன் பட்டயத்தால் விழுவான்; மீதியாயிருந்து, முற்றிக்கைபோடப்பட்டவன் பஞ்சத்தால் சாவான்; இப்படி அவர்களில் என் உக்கிரத்தைத் தீர்த்துக்கொள்ளுவேன்.

எசே 6:13. அவர்கள் தங்கள் நரகலான சகல விக்கிரகங்களுக்கும் மதுரவாசனையான தூபத்தைக் காட்டின ஸ்தலங்களாகிய உயர்ந்த சகல மேடுகளிலும், பர்வதங்களுடைய சகல சிகரங்களிலும், பச்சையான சகல விருட்சங்களின் கீழும், தழைத்திருக்கிற சகல கர்வாலி மரங்களின் கீழும், அவர்களுடைய நரகலான விக்கிரகங்களின் நடுவிலும் அவர்களுடைய பலிபீடங்களைச் சுற்றிலும், அவர்களில் கொலையுண்டவர்கள் கிடக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள்.

எசே 6:14. நான் என் கையை அவர்களுக்கு விரோதமாக நீட்டி, அவர்களுடைய எல்லா வாசஸ்தலங்களுமுள்ள தேசத்தை அழித்து, அதைத் திப்லாத்தின் வனாந்தரத்தைப்பார்க்கிலும் அதிகமாய்ப் பாழாக்குவேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்றார்.

கர்த்தர் எசேக்கியேலிடம் இஸ்ரவேலின் அழிவுக்காக புலம்புமாறு கட்டளையிடுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார்மீது ஏற்கெனவே சொல்லப்பட்ட நியாயத்தீர்ப்புக்கள் இங்கு மறுபடியும் சொல்லப்படுகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை பிரசங்கம் பண்ணும்போது, அதை தன்னுடைய அங்க அடையாளங்களின் செய்கைகளினால் வெளிப்படுத்தவேண்டும். அவர் தன்னுடைய கையில் அடித்து, தன் காலால் தட்டி, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய செய்தியை அறிவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும், அவர்கள் அனுபவிக்கிற வேதனைகளையும் எசேக்கியேல் தீர்க்கதரிசியும் அறிந்திருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தின் பாவங்களுக்காகவும், அவர்களுக்கு வரப்போகும் அழிவுக்காகவும் எசேக்கியேல் அழுது புலம்பவேண்டுமென்று கர்த்தர் அவருக்கு கட்டளை கொடுக்கிறார்.

எசேக்கியேல், "இஸ்ரவேல் வம்சத்தாருடைய சகல பொல்லாத அருவருப்புக்களினிமித்தமும் ஐயோ" என்று அவர்களுக்கு சொல்லவேண்டும். பாவிகளுடைய பாவங்கள் கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கு வருத்தங்களாயிருக்கிறது. மற்றவர்கள் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தங்கள் இருதயங்களில் வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்த இஸ்ரவேல் வம்சத்தார் பட்டயத்தாலும், கொள்ளைநோயாலும், பஞ்சத்தாலும் விழுவார்கள். நம்முடைய பாவங்களும், பாவங்களினிமித்தமாய் நாம் அனுபவிக்கும் வேதனைகளும் நம்முடைய இருதயங்களில் மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணவேண்டும். அது மாத்திரமல்ல, மற்றவர்களுடைய பாவங்களும், அவர்களுடைய வேதனைகளும் நம்முடைய இருதயங்களில் பாதிப்பை உண்டுபண்ணவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எருசலேமைப் பார்த்து, அதற்காக கண்ணீர் விட்டு அழுதார். அந்த நகரத்திற்கு வரப்போகும் அழிவைப் பார்த்து கிறிஸ்துவானவர் தம்முடைய மனதிலே கலங்கினார். கிறிஸ்துவைப் போலவே நம்முடைய இருதயங்களிலும் மனதுருக்கம் காணப்படவேண்டும். துன்மார்க்கர்கள் தங்களுடைய பாவங்களினிமித்தமாய் வேதனைகளை அனுபவித்தாலும், அவர்கள் அனுபவிக்கும் பாடுகளுக்காகவும், வேதனைகளுக்காகவும், உபத்திரவங்களுக்காகவும் நாமும் மனதுருக வேண்டும்.

எருசலேம் நகரத்திற்கு அழிவு வரும் என்பதை கர்த்தர் ஏற்கெனவே எச்சரித்து சொல்லியிருந்தார். அவர்களுடைய பாவங்களும் அநேகமாயிருக்கிறது. அவர்கள் மீது வரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளும் அநேகமாயிருக்கிறது. "தூரத்திலிருக்கிறவன் கொள்ளை நோயால் சாவான்; சமீபத்திலிருக்கிறவன் பட்டயத்தால் விழுவான்; மீதியாயிருந்து, முற்றிக்கை போடப்பட்டவன் பஞ்சத்தால் சாவான்; இப்படி அவர்களில் என் உக்கிரத்தைத் தீர்த்துக்கொள்ளுவேன்" (எசே 6:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்கள் எந்த இடத்திற்குப் போனாலும், பாவத்திற்கான நியாயத்தீர்ப்பு அவர்களை பின்தொடரும். அவர்கள் தூரத்திலிருந்தாலும், சமீபத்திலிருந்தாலும், அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது.

பாவிகள்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும்போது, அவர்கள் இஸ்ரவேலின் தேவனை கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் வம்சத்தார்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்களுக்கு வரும் வரையிலும், அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல் விக்கிரகங்களை நோக்கிப் பார்த்தார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் எங்கெல்லாம் விக்கிரகாராதனை செய்தார்களோ, அங்கெல்லாம் அவர்களுடைய பிரேதங்கள் கிடக்கும். "அவர்கள் தங்கள் நரகலான சகல விக்கிரகங்களுக்கும் மதுரவாசனையான தூபத்தைக் காட்டின ஸ்தலங்களாகிய உயர்ந்த சகல மேடுகளிலும், பர்வதங்களுடைய சகல சிகரங்களிலும், பச்சையான சகல விருட்சங்களின்கீழும், தழைத்திருக்கிற சகல கர்வாலி மரங்களின்கீழும், அவர்களுடைய நரகலான விக்கிரகங்களின் நடுவிலும் அவர்களுடைய பலிபீடங்களைச் சுற்றிலும், அவர்களில் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்" (எசே 6:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டுவார். அவர்களுடைய எல்லா வாசஸ்தலங்களுமுள்ள தேசத்தை அழித்துப்போடுவார். திப்லாத்தின் வனாந்தரம் பாழாய்க்கிடக்கும். கர்த்தரோ தம்முடைய கோபத்தினால் இஸ்ரவேல் தேசத்தை, திப்லாத்தின் வனாந்தரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பாழாக்குவார். அப்பொழுது இஸ்ரவேல் ஜனத்தார், தங்கள் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன் என்பதை அறிந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார்மீது கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு வரும்போது, இஸ்ரவேலின் தேவனே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள்.

"நான் இஸ்ரவேல் புத்திரருடைய பிரேதங்களை அவர்களுடைய நரகலான விக்கிரகங்களின் முன்னே கிடக்கப்பண்ணி, உங்கள் பலிபீடங்களைச் சுற்றிலும் உங்கள் எலும்புகளைச் சிதறப்பண்ணுவேன். உங்கள் பலிபீடங்கள் நிர்மூலமும் பாழுமாகும்படிக்கும், உங்கள் நரகலான விக்கிரகங்கள் தகர்க்கப்பட்டு, ஓய்ந்து, உங்கள் சிலைகள் வெட்டுண்டு, உங்கள் கிரியைகள் குலைந்து போகும்படிக்கும், உங்களுடைய சகல வாசஸ்தலங்களிலுமுள்ள பட்டணங்கள் நிர்மூலமும் உங்கள் மேடைகள் பாழுமாகும். கொலைசெய்யப்பட்டவர்கள் உங்கள் நடுவில் விழுவார்கள்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசே 6:5-7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து, அவற்றை வணங்கினார்கள். அவர்கள் எந்த விக்கிரகங்களுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்தார்களோ, அந்த விக்கிரகங்களுக்கு முன்பாக செத்த பிரேதங்களாக கிடப்பார்கள். விக்கிரகங்களை ஆராதித்தவர்கள் செத்துப்போனதினால் அவர்களுக்கும் நிந்தை உண்டாகும், அவர்கள் நம்பி ஆராதித்த விக்கிரகங்களுக்கும் நிந்தை உண்டாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தண்டிக்கும்போது, அவர்களுடைய தேசத்தை நிர்மூலம்பண்ணுவார். அவர்களுடைய வாசஸ்தலங்களுள்ள எல்லா பட்டணங்களின்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். விக்கிரகாராதனைக்காரர் நிர்மூலமாவதுபோல, அவர்களுடைய பட்டணங்களும் நிர்மூலமாகும் (எசே 6:6).

7 அதிகாரம்

இஸ்ரவேல் தேசத்திற்கு முடிவு வருகிறது. அந்த முடிவு சம்பூரணமான முடிவாயிருக்கும் (எசே 7:1-6). அவர்களுடைய முடிவு அவர்களுக்கு சமீபித்து வருகிறது (எசே 7:7-10). தங்களுக்கு வரும் அழிவிலிருந்து இஸ்ரவேல் புத்திரரால் தப்பிக்க முடியாது (எசே 7:10-15). அவர்களுடைய பெலமும் ஐசுவரியமும் அவர்களுக்கு பாதுகாப்பை தராது (எசே 7:16-19). எருசலேமிலுள்ள தேவாலயம் அழிந்துபோகும் (எசே 7:20-22). இஸ்ரவேல் தேசம் முழுவதற்கும் சங்காரம் வருகிறது (எசே 7:23-27).

முடிவு வருகிறது எசே 7:1-15

எசே 7:1. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 7:2. மனுபுத்திரனே, இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: முடிவு வருகிறது, தேசத்தின் நாலு முனைகளின் மேலும் முடிவு வருகிறது.

எசே 7:3. இப்போதே உன்மேல் முடிவு வருகிறது; நான் என் கோபத்தை உன்மேல் வருவித்து, உன் வழிகளுக்குத்தக்கதாக உன்னை நியாயந்தீர்த்து, உன் எல்லா அருவருப்புகளின் பலனையும் உன்மேல் வரப்பண்ணுவேன்.

எசே 7:4. என் கண் உன்னைத் தப்பவிடாது; நான் இரங்காமல் உன் வழிகளுக்குத்தக்கதை உன்மேல் வரப்பண்ணுவேன்; உன் அருவருப்புக்களுக்குத்தக்கது உன் நடுவில் வந்திருக்கும்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 7:5. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: தீங்கு வருகிறது; இதோ, ஏகமான தீங்கு வருகிறது.

எசே 7:6. முடிவு வருகிறது, முடிவு வருகிறது, அது உன்மேல் நோக்கமாயிருக்கிறது, இதோ, வருகிறது.

எசே 7:7. தேசத்தில் குடியிருக்கிறவனே, அந்நாளின் விடியற்காலம் வருகிறது, காலம் வருகிறது, அமளியின் நாள் சமீபித்திருக்கிறது, மலைகளில் சந்தோஷசத்தம் இல்லை.

எசே 7:8. இப்பொழுது விரைவில் என் உக்கிரத்தை உன்மேல் ஊற்றி, என் கோபத்தை உன்னில் தீர்த்துக்கொண்டு, உன்னை உன் வழிகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்த்து, உன் எல்லா அருவருப்புகளின் பலனையும் உன்மேல் வரப்பண்ணுவேன்.

எசே 7:9. என் கண் உன்னைத் தப்பவிடாது; நான் இரங்காமல் உன் வழிகளுக்குத்தக்கதை உன்மேல் வரப்பண்ணுவேன்; உன் அருவருப்புகளுக்குத்தக்கது உன் நடுவில் வந்திருக்கும்; அப்பொழுது அடிக்கிறவராகிய நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்.

எசே 7:10. இதோ, அந்த நாள், இதோ, வருகிறது, அந்நாளின் விடியற்காலம் உதிக்கிறது, மிலாறு பூக்கிறது, அகந்தை செழிக்கிறது.

எசே 7:11. அக்கிரமத்துக்கு மிலாறாகக் கொடுமை எழும்புகிறது; அவர்களிலும் அவர்களுடைய திரளான கும்பிலும் அவர்களுடைய அமளியிலும் ஒன்றும் மீதியாயிருப்பதில்லை; அவர்கள்நிமித்தம் புலம்பல் உண்டாயிருப்பதுமில்லை.

எசே 7:12. அந்தக் காலம் வருகிறது, அந்த நாள் கிட்டுகிறது; கொள்ளுகிறவன் சந்தோஷப்படாமலும், விற்கிறவன் துக்கப்படாமலும் இருப்பானாக; அதின் திரளான கும்பின்மேலும் உக்கிரம் இறங்கும்.

எசே 7:13. அவர்கள் ஜீவனுள்ளோருக்குள்ளே இன்னும் உயிரோடிருந்தாலும், விற்றவன் விற்கப்பட்டதற்குத் திரும்பிவருவதில்லை; அதின் திரளான கும்பின்மேலும் உண்டான தரிசனம் திரும்பாது; தன் அக்கிரமத்திலே வாழுகிற எவனும் தன்னைத் திடப்படுத்தமாட்டான்.

எசே 7:14. அவர்கள் எக்காளம் ஊதி, எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணியும், யுத்தத்துக்குப் போகிறவனில்லை; என் உக்கிரம் அதின் திரளான கும்பின்மேலும் இறங்குகிறது.

எசே 7:15. வெளியே பட்டயமும் உள்ளே கொள்ளைநோயும் பஞ்சமும் உண்டு; வயல்வெளியில் இருக்கிறவன் பட்டயத்தால் சாவான்; நகரத்தில் இருக்கிறவனையோ பஞ்சமும் கொள்ளைநோயும் பட்சிக்கும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி, "முடிவு வருகிறது, தேசத்தின் நாலு முனைகளின் மேலும் முடிவு வருகிறது. இப்போதே உன்மேல் முடிவு வருகிறது" (எசே 7:2,3) என்று சொல்லுகிறார். எசேக்கியேல் சொல்லுகிற எச்சரிப்பின் வார்த்தைகளை காதுள்ளவர்கள் கேட்கவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் ஜனங்கள்மீது எப்படி வரும் என்பதை எசேக்கியேல் ஏற்கெனவே தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருவதற்கு காலதாமதமாகாது. அது சீக்கிரத்தில் வரும். "இப்போதோ உன்மேல் முடிவு வருகிறது" என்று எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் முடிவு பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஓரளவு நிறைவேறிற்று. கல்தேயர்கள்எருசலேம் நகரத்தை பெரும்பாலும் அழித்துப்போட்டார்கள். ஆனாலும் புதிய ஏற்பாட்டுக்காலத்தில், ரோமப்பேரரசின் மூலமாகவே, யூதாதேசத்திற்கு முற்றிலுமான அழிவு உண்டாகும். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபித்திருக்கிறது. எருசலேமின் கடைசி முடிவு, இந்த உலகத்தின் முடிவுக்கு அடையாளமாயிருக்கிறது.

"பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்" (மத் 24:3).

கர்த்தர் தம்முடைய கோபத்தை இஸ்ரவேல் வம்சத்தார்மீது வருவிப்பார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமான வழிகளில் போனார்கள். அவர்களுடைய பாவமான வழிகளுக்குத்தக்கதாக கர்த்தர் அவர்களை நியாயந்தீர்ப்பார். இஸ்ரவேல் வம்சத்தார் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போனார்கள். அவருவருப்பான விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். அவர்களுடைய எல்லா அருவருப்புக்களின் பலனையும், கர்த்தர் அவர்கள்மேல் வரப்பண்ணுவார் (எசே 7:3).

கர்த்தர் இயல்பாகவே கிருபையும் இரக்கமுமுள்ளவர். கோபப்படுவதற்கு தாமதம்பண்ணுகிறவர். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை, அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் பலமுறை எச்சரித்திருக்கிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், அவர்கள் மத்தியிலே தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்னார்கள். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தர் அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாயும், பாவங்களினிமித்தமாயும், அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கண் அவர்களைத் தப்பவிடாது. கர்த்தர் அவர்களுக்கு இரங்கமாட்டார். இஸ்ரவேல் வம்சத்தார் பாவமான வழிகளில் போகிறார்கள். அவர்களுடைய பாவங்களுக்குத்தக்க தண்டனைகளை கர்த்தர் அவர்கள்மேல் வரப்பண்ணுவார். அவர்களுடைய அருவருப்புக்களுக்கு தக்க தண்டனை, அவர்களுடைய நடுவில் வந்திருக்கும்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்கும், ஆசீர்வாதங்களுக்கும் சுதந்தரமுள்ளவர்கள். இஸ்ரவேல் வம்சத்தார் புறஜாதியார் மத்தியிலே இருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு சாட்சியாக ஜீவிக்கவேண்டும். புறஜாதியார் ஆவிக்குரிய இருளிலிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளோ கர்த்தருடைய வெளிச்சத்திலிருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் மூலமாக, கர்த்தருடைய வெளிச்சம், இருளிலிருக்கிற புறஜாதி ஜனங்கள் மத்தியில் பிரகாசமாய் எரியவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், அவருக்கு கீழ்ப்படியாமல், அவரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். கர்த்தரும் தம்முடைய நீடியபொறுமையினால், அவர்கள் தம்மிடத்தில் திரும்பி வருவதற்காக காத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி கர்த்தரை மறந்துவிடுகிறார்கள்.

அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுக்கு வேதனைகளும், பாடுகளும், கஷ்டங்களும் வருகிறது. அப்போது அவர்களுடைய புத்தி தெளிகிறது. தங்களுக்கு அழிவு வரும்போதுதான், அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே, பரிசுத்தர் என்பதை அறிந்துகொள்கிறார்கள்.

"தீங்கு வருகிறது; இதோ, ஏகமான தீங்கு வருகிறது. முடிவு வருகிறது, முடிவு வருகிறது, அது உன்மேல் நோக்கமாயிருக்கிறது, இதோ, வருகிறது" என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் *(எசே 7:5,6).*

பாவம் தீங்கானது. பாவம் முற்றிலுமாய் தீங்குள்ளதாயிருக்கிறது. பாவத்தில் தீமையைத் தவிர, நன்மை ஒன்றுமில்லை. எல்லா தீங்குகளிலும் மோசமான தீங்கு பாவமே. கர்த்தர் இங்கு அழிவின் தீங்கைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் வந்திராத பேரழிவு, இனிமேல் வரப்போகிறது. அவர்கள் இதுவரையிலும் அனுபவித்திராத கஷ்டங்களையும், வேதனைகளையும், பாடுகளையும் இனிமேல் அனுபவிக்கப்போகிறார்கள்.

"கலங்கிப்பொங்குகிற மதுபானத்தினால் நிறைந்த பாத்திரம் கர்த்தருடைய கையிலிருக்கிறது, அதிலிருந்த வார்க்கிறார்; பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரும் அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிப்பார்கள்" *(சங் 75:8).*

துன்மார்க்கர் எல்லோரும் கர்த்தருடைய உக்கிரத்தின் பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டும். நீதிமான்களோ கர்த்தருடைய கிருபையின் பாத்திரத்தில் பானம்பண்ணுவார்கள். அந்தப் பாத்திரத்தில் அவருடைய கிருபையும் இரக்கமும் கலந்திருக்கும்.

"தேசத்தில் குடியிருக்கிறவனே, அந்நாளின் விடியற்காலம் வருகிறது, காலம் வருகிறது, அமளியின் நாள் சமீபித்திருக்கிறது, மலைகளில் சந்தோஷசத்தம் இல்லை" *(எசே 7:7)* என்று கர்த்தர் சொல்லுகிறார். எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. கர்த்தருடைய சித்தம் அவருக்கு ஏற்ற காலத்தில் நிறைவேறும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு உடனே நிறைவேறாமல், அதில் காலதாமதம் உண்டாவதுபோல நமக்குத் தெரியும். கர்த்தர் காலதாமதம் பண்ணினாலும், தம்முடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றாமல் தள்ளுபடி பண்ணிவிடமாட்டார்.

கர்த்தர் கிருபையும் இரக்கமும், நீடியபொறுமையுமுள்ளவர். கர்த்தருடைய பொறுமைக்கு ஒரு அளவும் எல்லையும் உண்டு. நம்முடைய பாவங்களுக்காக நாம் உண்மையாய் மனந்திரும்பி, கர்த்தருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தி ஒப்புவிக்கும்போது, கர்த்தர் நம்மைத் தண்டிக்கமாட்டார். நமக்கு கர்த்தருடைய கரத்திலிருந்து தண்டனை வருவதற்கு பதிலாக, ஆசீர்வாதம் வரும். நம்முடைய மனந்திரும்புதல்களும், நம்முடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படுவதும், கர்த்தருடைய கோபத்தை இன்னும் தாமதம்பண்ணும்.

யூதாதேசம் முழுவதுமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறது. கர்த்தர் தம்முடைய உக்கிரத்தின் பாத்திரத்தை இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருக்கும் குடிக்க கொடுக்கிறார். அவர்கள் எல்லோருமே அழிவுக்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய கிருபைகளை அசட்டைபண்ணிப்போட்டார்கள். இதனால் கர்த்தருடைய கிருபைக்கு பதிலாக, அவருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. இது கிருபையில்லாத நியாயத்தீர்ப்பு. இது இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு. இஸ்ரவேல் வம்சத்தார்மீது கர்த்தர் கொடுக்கும் நியாயத்தீர்ப்பும், அவருடைய தண்டனையும் மிகவும் கடுமையாயிருக்கிறது.

"இப்பொழுது விரைவில் என் உக்கிரத்தை உன்மேல் ஊற்றி, என் கோபத்தை உன்னில் தீர்த்துக்கொண்டு, உன்னை உன் வழிகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்த்து, உன் எல்லா அருவருப்புகளின் பலனையும் உன்மேல் வரப்பண்ணுவேன்" (எசே 7:8) என்றும், "என் கண் உன்னைத் தப்பவிடாது; நான் இரங்காமல் உன் வழிகளுக்குத்தக்கதை உன்மேல் வரப்பண்ணுவேன்; உன் அருவருப்புகளுக்குத்தக்கது உன் நடுவில் வந்திருக்கும்" (எசே 7:9) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே அவர்களை அடிக்கிறார். தங்களை அடிக்கிறவர் யார் என்பதுகூட இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தெரியவில்லை. அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் குருடாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு விக்கினத்தின்மேல் விக்கினம் வருகிறது. அவர்களுக்கு சங்காரம் வருகிறது. சமாதானத்தைத் தேடுகிறார்கள். தரிசனத்தைத் தேடுகிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் சித்திக்கவில்லை. அப்போதுதான் தங்களை அடிக்கிறவர் கர்த்தர் என்பதை இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களினிமித்தமாகவே, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், அவர் கொடுக்கும் தண்டனைகளும், அவர்கள்மீது வருகிறது. இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய மதியீனத்தினிமித்தமாக, தங்கள்மீது கர்த்தருடைய கோபத்தையும், அவருடைய நியாயத்தீர்ப்பையும், அவருடைய தண்டனையையும் வருவித்துக் கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களை செய்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய பாவங்களில் இரண்டு பாவங்கள் கர்த்தருடைய பார்வைக்கு மிகவும் அருவருப்பாயிருக்கிறது. அந்தப் பாவங்களே கர்த்தரை அதிகமாய்க் கோபப்படுத்துகிறது. இதன் நிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது. இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பெருமை காணப்படுகிறது. அவர்கள் ஏழைகளை அநியாயமாய் ஒடுக்குகிறார்கள். இவ்விரண்டு பாவங்களும் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் அகந்தை அதிகமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புகள் மூலமாய் அவர்களைத் தாழ்த்துகிறார். தன்னைத்தானே உயர்த்துகிறவன் வாழ்வடையமாட்டான். கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறவனோ அவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வான்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் வம்சத்தாரின் பெருமையையும், அகந்தையையும் பற்றிச் சொல்லும்போது, "இதோ, அந்த நாள், இதோ, வருகிறது, அந்நாளின் விடியற்காலம் உதிக்கிறது, மிலாறு பூக்கிறது, அகந்தை செழிக்கிறது" (எசே 7:10) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் ஜாதியாரில் தரித்திரராயிருந்தவர்களையும், விதவைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் அதிகமாய் ஒடுக்கினார்கள். அவர்களுடைய பாவங்களுக்கு தண்டனையாக, அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை கடினமாய் ஒடுக்குவார்கள்.

அக்கிரமத்திற்கு மிலாறாக கொடுமை எழும்புகிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒன்றும் மீதமாயிருக்காது. அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தம், அவர்களுக்கு எல்லாம் அழிந்துபோகும். இஸ்ரவேல் ஜனங்கள் அழிந்துபோவதைப் பார்த்து, அவர்களுக்காக ஒருவரும் பரிதாபப்படமாட்டார்கள்.

இரக்கம் காண்பிக்கிறவர்கள். இரக்கம் பெறுவார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் பிறருக்கு இரக்கம் காண்பிக்கவில்லை. ஆகையினால் அவர்களுக்கும் யாரும் இரக்கம் காண்பிக்கமாட்டார்கள்.

"அவர்களிலும் அவர்களுடைய திரளான கும்பிலும் அவர்களுடைய அமளியிலும் ஒன்றும் மீதியாயிருப்பதில்லை; அவர்கள் நிமித்தம் புலம்பல் உண்டாயிருப்பதுமில்லை. அந்தக் காலம் வருகிறது, அந்த நாள் கிட்டுகிறது" (எசே 7:11,12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு ஒருவரும் தப்பிக்க முடியாது. வெளியே பட்டயமும் உள்ளே கொள்ளைநோயும் பஞ்சமும் உண்டு; வயல்வெளியில் இருக்கிறவன் பட்டயத்தால் சாவான்; நகரத்தில் இருக்கிறவனையோ பஞ்சமும் கொள்ளைநோயும் பட்சிக்கும் (எசே 7:15).

இஸ்ரவேல் வம்சத்தாரின் வயல்வெளிகள் எல்லாமே யுத்தக்களம் போலவே இருக்கும். எருசலேம் நகரம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். ஆனால் இப்போது இந்த நகரத்திற்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லை. அங்கே கொள்ளைநோயும் பஞ்சமும் அதிகமாயிருக்கிறது. நகரத்திற்குள்ளேயும், நகரத்திற்கு வெளியேயும் பாவம் திரளாயிருக்கிறது. அக்கிரமம் அதிகமாயிருக்கிறது. இதன் நிமித்தமாய், கர்த்தருடைய கோபமும், அவருடைய நியாயத்தீர்ப்பும், அவர்கள்மேல் அதிகமாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் அழியும்போது அவர்கள் நிமித்தமாய் புலம்பல் உண்டாயிருப்பதில்லை. அவர்களுக்காக புலம்ப ஒருவரும் உயிரோடு இருக்க மாட்டார்கள். வெளியே பட்டயத்தினாலும், உள்ளே கொள்ளைநோயாலும் பஞ்சத்தாலும் செத்துப்போயிருப்பார்கள். தன் அக்கிரமத்திலே வாழுகிற எவனும் தன்னைத் திடப்படுத்தமாட்டான். பாவம் செய்கிறவன் செழிக்கமாட்டான். அக்கிரமம் செய்கிறவன் தனக்குத்தானே அழிந்துபோவான். அவன் தன்னைத்தானே அழித்துக்கொள்வான்.

"இதோ, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல், தன் செல்வப்பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள்" (சங் 52:7).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. எத்தனைபேர் மொத்தமாக எழும்பி வந்தாலும் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக அவர்களால் எதிர்த்து நிற்க முடியாது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியத்தை ஒருவராலும் தடைபண்ண முடியாது. கர்த்தருடைய சித்தம் நிறைவேறும். கர்த்தர் சொல்ல ஆகும். அவர் சொல்ல நிற்கும்.

கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பின் பிரகாரமாக, கல்தேயர்கள் எருசலேமின்மீது யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். யூதாவின் மனுஷராலும், எருசலேமின் குடிகளாலும் கல்தேயருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது. யூதர்கள் எக்காளம் ஊதி, எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணியும், யுத்தத்துக்குப் போகிறவன் அவர்கள் மத்தியில் ஒருவனும் இருக்கமாட்டான். கர்த்தருடைய கோபம் யூதாமனுஷருடைய திரளான கும்பின்மேலும், அவர்களுடைய பாளயத்தின்மேலும் இறங்குகிறது. இஸ்ரவேல் மனுஷர் எக்காளம் ஊதுவார்கள். இது யுத்தத்தின் எக்காளம். ஆனால் யுத்தம்பண்ண அவர்கள் யாரும் கூடிவரமாட்டார்கள். எக்காளம் ஊதுவது வீணாய்ப்போகும்.

"கொள்ளுகிறவன் சந்தோஷப்படாமலும், விற்கிறவன் துக்கப்படாமலும் இருப்பானாக" (எசே 7:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். உலகத்தின் காரியங்கள் எல்லாம் மாயையாயிருக்கிறது. அவை கர்த்தருக்கு முன்பாக அற்ப பிரயோஜனமுள்ளது. கொள்ளுகிறவன் திரளான பொருட்களை வாங்குவதினால், தன்னுடைய ஐசுவரியம் அதிகரிக்கும் என்று சந்தோஷப்படுவான். விற்கிறவனோ தன்னுடைய சம்பத்துக்கள் தன்னைவிட்டு பிறருக்கு போவதை நினைத்து துக்கப்படுவான். கர்த்தரோ "கொள்ளுகிறவன் சந்தோஷப்படாமலும், விற்கிறவன் துக்கப்படாமலும் இருப்பானாக" என்று சொல்லுகிறார்.

யூதாதேசத்திற்கு அழிவு வருகிறது. அவர்கள் தங்களுடைய நிலங்களை விற்றாலும், வாங்கினாலும், அதினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. நிலத்தை வாங்கினவன் அதில் பயிர் செய்வதற்கு ஜீவனோடிருக்கமாட்டான். நிலத்தை விற்றவனும், யூபிலி வருஷத்தின்போது, அதை திருப்பிக்கொள்வதற்கு உயிரோடிருக்கமாட்டான். விற்றவனும் கொண்டவனும் உயிரோடிருந்தாலும், அவர்கள் யூதாதேசத்திலிருக்கமாட்டார்கள். அவர்கள் அந்நிய தேசத்திற்கு சிதறிப்போயிருப்பார்கள்.

"அவர்கள் ஜீவனுள்ளோருக்குள்ளே இன்னும் உயிரோடிருந்தாலும், விற்றவன் விற்கப்பட்டதற்குத் திரும்பிவருவதில்லை" (எசே 7:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூபிலி வருஷத்தின்போது, விற்கப்பட்ட நிலங்களெல்லாம் திருப்பப்படவேண்டும். ஆனால் விற்றவர்களும், கொண்டவர்களும் கல்தேயருடைய பட்டயத்தினால் செத்துப் போவார்கள். யூபிலி வருஷத்தின்போது தாங்கள் விற்றதை திருப்புவதற்கு உயிரோடிருக்கமாட்டார்கள். வாங்கியவர்களும், தாங்கள் வாங்கியதை திரும்பக் கொடுப்பதற்கு உயிரோடிருக்கமாட்டார்கள். யூதாதேசம் முழுவதிலும் கர்த்தரால் நியமிக்கப்பட்ட சங்காரம் வரும். ஜனங்கள் சமாதானத்தைத் தேடுவார்கள். ஆனால் அவர்களுக்கு சமாதானம் கிடையாது.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போன யூதர்கள், அங்கே எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருப்பார்கள். யூபிலி வருஷ பிரமாணத்தின்படி, ஏழு வருஷத்திற்கு ஒரு தரம் விற்ற நிலத்தை திருப்பிக்கொள்ளவேண்டும். ஆனால் யூதாதேசத்திலே யூபிலி வருஷத்தின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு, அங்கே ஒருவரும் இருக்கமாட்டார்கள். எழுபது வருஷத்திற்கு பின்புதான், யூதர்களால், யூபிலி வருஷத்து பிரமாணத்தை கடைப்பிடிக்க முடியும். யூதா மனுஷரில் பட்டயத்திற்கு தப்பி ஜீவனோடிருக்கிறவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். மற்றவர்கள் யூதாதேசத்திலேயே, கல்தேயரின் பட்டயத்திற்கு சங்காரமானார்கள்.

தப்புகிறவர்கள் தப்புவார்கள் எசே 7:16-21

எசே 7:16. அவர்களில் தப்புகிறவர்கள் தப்புவார்கள்; ஆனாலும் அவர்கள் அனைவரும் அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல மலைகளில் இருப்பார்கள்.

எசே 7:17. எல்லாக் கைகளும் சலித்து, எல்லா முழங்கால்களும் தண்ணீரைப்போல் தத்தளிக்கும்.

எசே 7:18. இரட்டை உடுத்திக்கொள்வார்கள்; தத்தளிப்பு அவர்களை மூடும்; எல்லா முகங்களும் வெட்கப்படும், எல்லாத் தலைகளும் மொட்டையிடப்படும்.

எசே 7:19. தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டாவெறுப்பாயிருக்கும்; கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது.

எசே 7:20. அவருடைய சிங்காரத்தின் மகிமையை அகந்தைக்கென்று வைத்து, அதிலே அருவருக்கப்படத்தக்கதும் சீயென்றிகழப்படத்தக்கதுமான காரியங்களின் விக்கிரகங்களை உண்டுபண்ணினார்கள்; ஆகையால் நான் அவைகளை அவர்களுக்கு வேண்டாவெறுப்பாக்கி,

எசே 7:21. அதை அந்நியர் கையிலே கொள்ளையாகவும், பூமியில் துஷ்டர்களுக்குச் சூறையாகவும் கொடுப்பேன்; அவர்கள் அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவார்கள்.

யூதாவின் மனுஷரிலும் எருசலேமின் குடிகளிலும் ஒரு சிலர் மாத்திரம் பட்டயத்திற்கு தப்புவார்கள். ஆனாலும் அவர்களுடைய ஜீவியம் மிகவும் கசப்பானதாகயிருக்கும். பாடுகளும், வேதனைகளும் நிரம்பியதாகயிருக்கும். அவர்கள் அனைவரும் அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல மலைகளில் இருப்பார்கள் (எசே 7:16).

நீதிமான் ஒரு தரம் மாத்திரமே மரிப்பான். அவன் உயிரோடிருந்த காலம் வரையிலும் அவனுடைய ஜீவியம் அவனுக்கு பாடுகள் நிரம்பியதாகயிருந்திருக்கும். துன்மார்க்கனோ ஆயிரந்தரம் மரிப்பான். ஒவ்வொரு நாளும் மரண பயத்தின் வேதனைகளை அனுபவிப்பான். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கோ, மரணத்திற்கோ பயப்படமாட்டார்கள். துன்மார்க்கமாய் ஜீவிக்கிறவர்கள் எல்லோருக்கும் பயப்படுவார்கள். எல்லா சம்பவங்களும் தங்களுக்கு விரோதமாக நடக்குமோ என்று நினைத்து மனங்கலங்குவார்கள்.

காயீன் ஆபேலைக் கொன்றுபோட்டான். ஆபேலின் இரத்தப்பழி காயீன்மீது வந்தது. காயீனோ தன்னுடைய ஜீவனுக்கு பயந்து தேசாந்திரியாய் சுற்றி அலைந்தான். தன்னைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும் தன்னைக் கொன்றுபோடுவார்களோ என்னும் பயம் அவனிடத்தில் இருந்தது. யூதாவின் மனுஷரில் கல்தேயருடைய பட்டயத்திற்கு தப்பினவர்கள் ஒவ்வொரு நாளும் மரணபயத்தோடிருக்கிறார்கள்.

அவர்களுடைய கைகள் சலித்துப்போகிறது. அவர்களுடைய முழங்கால்கள் எல்லாம் தண்ணீரைப்போல தத்தளிக்கிறது. அவர்களுக்கு ஆறுதல் சொல்வார் ஒருவருமில்லை. அவர்களுடைய சிந்தையில் அமைதியோ, திருப்தியோ இல்லை. அவர்கள் எங்கே போனாலும் அவர்களுடைய குற்றமுள்ள மனச்சாட்சியும் அவர்களோடு கூடவே போகிறது. அவர்களுடைய பாவம் அவர்களுக்கு மிகுந்த பாரமாயிருக்கிறது.

துன்மார்க்கர் எங்குபோனாலும் அவர்கள் தனிமையிலிருக்கிறார்கள். அவர்கள் பர்வதங்களுக்கு ஏறிப்போனாலும், அங்கேயும் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு வெட்கமும் அவமானமும் உண்டாகும். அவர்கள் தங்கள் அக்கிரமத்தின் துக்கத்தை எங்குபோனாலும் சுமந்து திரிவார்கள். அவர்கள் மலைகளிலிருந்தாலும் தங்களுடைய அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போலவே இருப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் ஒரு காலத்தில் தங்களை சிங்கம்போல நினைத்துக் கொண்டார்கள். காட்டிலுள்ள மிருகங்களில் சிங்கம் அதிக வலிமையுள்ளது. அதுபோல தாங்களும், தங்களுடைய அண்டை தேசங்களுக்கு மத்தியில் அதிக வல்லமையோடு இருப்பதாக நினைத்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் பள்ளத்தாக்குகளின் புறக்களைப்போல இருக்கிறார்கள்.

பள்ளத்தாக்குகளிலுள்ள புறாக்கள் எப்போதும் துக்கத்தோடும், வேதனையோடும் இருக்கும். பயந்து நடுங்கிக்கொண்டிருக்கும். இந்தப் புறாக்களை யாரும் துரத்தாவிட்டாலும், அவை தானாகவே பயத்தினால் அங்கும் இங்குமாக பறக்கும். மரத்திலுள்ள ஒரு இலை ஆடி அசைந்தாலும், பள்ளத்தாக்கிலுள்ள புறாக்கள் பயந்து போய், அவ்விடத்தைவிட்டு பறந்துபோய்விடும். உயிரோடு தப்பியிருக்கிற யூதர்கள் கொஞ்சம்பேராயிருந்தாலும், அவர்கள் பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

யூதாமனுஷரின் பாவம் அவர்களை பின்தொடருகிறது. அவர்கள் எங்குபோனாலும், அவர்களுடைய பாவத்தின் அக்கிரமமும், வேதனையும் அவர்களை பின்தொடருகிறது. அவர்களுக்கு ஏதாவது ஒருவிதத்தில் வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பாதவர்கள் தேவனுடைய கோபத்தை சந்திக்க வேண்டியது வரும். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். மனந்திரும்பாத பாவிகள் தங்களுடைய பாவத்தின் அக்கிரமங்களை சுமக்கவேண்டும்.

துன்மார்க்கருடைய மனதிலும் தெம்பு இருக்காது. அவர்களுடைய சரீரத்திலும் பெலமிருக்காது. அவர்களுடைய பாவம் அவர்களை சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் பலவீனப்படுத்திவிடுகிறது. அவர்களுடைய கைகளெல்லாம் சலித்துப் போகும். அவர்களுடைய முழங்கால்களெல்லாம் தண்ணீரைப்போல தத்தளிக்கும் (எசே 7:17). அவர்கள் இரட்டை உடுத்திக்கொள்வார்கள்; தத்தளிப்பு அவர்களை மூடும்; எல்லா முகங்களும் வெட்கப்படும், எல்லாத் தலைகளும் மொட்டையிடப்படும் (எசே 7:18). அவர்களுடைய நம்பிக்கைகளெல்லாம் அவர்களைவிட்டு அகன்றுபோகும்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் ஐசுவரியங்களும், செல்வங்களும் அவர்களுக்கு பிரயோஜனமாயிராது. தங்களுடைய ஐசுவரியமே தங்களுக்கு அரணான கோட்டை என்று அவர்கள் நினைத்தார்கள். சத்துருக்களுக்கு பணத்தை லஞ்சமாகக் கொடுத்து அவர்களுடைய கோபத்தை குறைத்துப்போடலாம் என்று திட்டமிட்டார்கள். பணத்தினால் சிநேகிதர்களை விலைக்கு வாங்கலாம் என்றும் நினைத்தார்கள். ஆனால் அவர்களுடைய ஐசுவரியம் அவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாரால் தங்களுடைய ஜீவனை மீட்கும் கிரயமாக எதையும் செலுத்த முடியவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் மிகப்பெரிய ஆபத்துக்களிலிருக்கிறார்கள். இது அவர்களுக்கு அழிவின் காலமாயிருக்கிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. தங்களுடைய வெள்ளியாலும், பொன்னாலும், இஸ்ரவேல் வம்சத்தாரால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு விலகி தப்பித்துக்கொள்ள முடியவில்லை. பொன்னும் வெள்ளியும் அவர்களுடைய பசியைப் போக்கவில்லை. தாகத்தைத் தீர்க்கவில்லை. வெள்ளியையும் பொன்னையும் கொடுத்து அவர்களால் ஒருவேளை போஜனத்தைக்கூட கிரயத்திற்கு வாங்க முடியவில்லை. பொன்னுக்கும் வெள்ளிக்கும் மதிப்பு இல்லாமல் போயிற்று.

அவர்கள் தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும்; கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருக்கிறது (எசே 7:19).

நாம் பசியோடிருக்கும் காலத்தில், நமக்கு தங்கச்சுரங்கம் இல்லாவிட்டாலும், கோதுமை விளையும் நிலம் இருக்கவேண்டும். சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டியெடுத்து அதைப் புசிக்க முடியாது. நம்முடைய விளைச்சல் நிலத்திலிருந்து வரும் கோதுமையும், மற்ற தானியங்களும் நமக்கு போஜனமாயிருக்கும். அது நம்முடைய பசியைப் போக்கும்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய மனதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாக்கள் சமாதானமில்லாமல் தவிக்கிறது. அவர்களுடைய உள்ளான மனுஷனுக்கு ஆறுதலும் சந்தோஷமும் தேவை. தங்கள் வெள்ளியாலும் பொன்னாலும் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இஸ்ரவேல் வம்சத்தார் நினைத்தார்கள். ஆனால் அவை அவர்களுக்கு பிரயோஜனமில்லாமல் போயிற்று.

அவர்களுடைய தங்கமும் வெள்ளியும் அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுப்பதற்கு பதிலாக, ஆபத்தையே கொடுத்தது. சத்துருக்கள் அவர்களை நெருங்கும்போது, அவர்களிடத்திலுள்ள பொன்னையும் வெள்ளியையும் கொள்ளையிடவேண்டும் என்று ஆசைப்பட்டு, அவர்களை பட்டயத்தால் கொன்றுபோட்டார்கள். பணத்தின்மீது ஆசைப்படுகிறவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்வார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரிடம் வெள்ளியோ, பொன்னோ இல்லையென்றால், அவர்களுடைய சத்துருக்கள் ஒருவேளை, அவர்களை ஜீவனோடு விட்டு வைத்திருப்பார்கள். இப்போது அவர்களுடைய ஐசுவரியமே அவர்களுக்கு ஆபத்தாயிற்று.

எருசலேமிலே தேவனுடைய ஆலயமுள்ளது. இது கர்த்தருடைய பரிசுத்தஸ்தலம். எருசலேமின் குடிகளோ கர்த்தருடைய ஆலயத்தை அசுத்தப் படுத்தினார்கள். அவர்கள் விக்கிரகங்களை உண்டுபண்ணி, அந்த விக்கிரங்களை தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் கொண்டு போய் வைத்தார்கள். எருசலேமின் குடிகளுக்கு கர்த்தருக்கும் விக்கிரகங்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

கர்த்தர் தம்முடைய சிங்காரத்தின் மகிமையை அவர்களுடைய அகந்தைக்கு ஒப்புக்கொடுக்கிறார். அவர்களோ கர்த்தருடைய ஆலயத்தில் அருவருக்கப் படத்தக்கதும் சீயென்றிகழப்படத்தக்கதுமான காரியங்களின் விக்கிரகங்களை உண்டுபண்ணினார்கள் (எசே 7:20). கர்த்தர் அவர்களுடைய விக்கிரகங்களை அவர்களுக்கு வேண்டா வெறுப்பாக்கிப்போடுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுக்காக உண்டுபண்ணின விக்கிரகங்களை அந்நியர் கையிலே கொள்ளையாகக் கொடுக்கிறார். பூமியிலுள்ள துஷ்டர்களுக்கு அவர்கள் உண்டுபண்ணின விக்கிரகங்களை சூறையாகக் கொடுக்கிறார். அந்நியர்கள் அவர்களுடைய விக்கிரங்களை பரிசுத்த குலைச்சலாக்குவார்கள்.

கர்த்தர் தம்முடைய முகத்தை இஸ்ரவேல் புத்திரரைவிட்டு திருப்புகிறார். இதனால் யூதாதேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும், தேவாலயத்திற்கும் கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்கவில்லை. கல்தேயர்கள் எருசலேமுக்குள் பிரவேசிக்கிறார்கள். எருசலேமின் குடிகளை தங்கள் பட்டயங்களினால் வெட்டிப்போடுகிறார்கள். கல்தேயர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்திற்குள்ளும் பிரவேசிக்கிறார்கள். அவருடைய அந்தரங்க ஸ்தலமான மகாபரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள். பறிகாரர் தேவாலயத்திற்குள் பிரவேசித்து அதை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள்.

கர்த்தருடைய சினத்தின் நாளிலே இஸ்ரவேல் வம்சத்தாரின் வெள்ளியும் பொன்னும் அவர்களை விடுவிக்கவில்லை. அவர்கள் நம்பின விக்கிரகங்களும் அவர்களை விடுவிக்கவில்லை. அவர்களுடைய அக்கிரமமே அவர்களுடைய அழிவுக்கு காரணமாயிற்று. கர்த்தருடைய பாதுகாப்பு எருசலேமையும், தேவாலயத்தையும் விட்டு விலகிப்போனதினால், சத்துருக்கள் அந்த இடங்களுக்கு தாராளமாய்ப் பிரவேசிக்கிறார்கள்.

தேசம் இரத்தப்பழிகளால் நிறைந்திருக்கிறது
எசே 7:22-27

எசே 7:22. என் முகத்தை அவர்களை விட்டுத் திருப்புவேன்; அதினால் என் அந்தரங்க ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவார்கள்; பறிகாரர் அதற்குள் பிரவேசித்து, அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவார்கள்.

எசே 7:23. ஒரு சங்கிலியைப் பண்ணிவை; தேசம் நியாயத் தீர்ப்புக்குள்ளான இரத்தப்பழிகளால் நிறைந்திருக்கிறது; நகரம் கொடுமையால் நிறைந்திருக்கிறது.

எசே 7:24. ஆகையால் புறஜாதிகளின் துஷ்டர்களை வரப்பண்ணுவேன், அவர்கள் இவர்களுடைய வீடுகளைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்; பலவான்களின் பெருமையை ஒழியப்பண்ணுவேன், அவர்கள் பரிசுத்த ஸ்தலங்கள் பரிசுத்தக்குலைச்சலாகும்.

எசே 7:25. சங்காரம் வருகிறது; அப்பொழுது சமாதானத்தைத் தேடுவார்கள்; ஆனாலும் அது கிடையாது.

எசே 7:26. விக்கினத்தின்மேல் விக்கினம் வரும்; துர்ச்செய்தியின்மேல் துர்ச்செய்தி பிறக்கும்; அப்பொழுது தீர்க்கதரிசியினிடத்திலே தரிசனத்தைத் தேடுவார்கள்; ஆனாலும் ஆசாரியனிடத்திலே வேதமும் மூப்பரிடத்திலே ஆலோசனையும் இராமல் ஒழிந்துபோகும்.

எசே 7:27. ராஜா துக்கித்துக்கொண்டிருப்பான்; பிரபுவைத் திகில் மூடிக்கொண்டிருக்கும்; தேசத்து ஜனங்களின் கைகள் தளர்ந்துபோகும்; நான் அவர்கள் வழிகளின்படியே அவர்களுக்குச் செய்து, அவர்கள் நியாயங்களின்படியே அவர்களை நியாயந்தீர்ப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்றார்.

கல்தேயர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போவார்கள். அதற்கு அடையாளமாக கர்த்தர் எசேக்கியேலிடம், "ஒரு சங்கிலியை பண்ணி வை" (எசே 7:23) என்று சொல்லுகிறார். கல்தேயர்கள் யூதர்களை சங்கிலிகளால் கட்டி, தேசத்துரோகிகளைப்போல இழுத்துக்கொண்டு போவார்கள். எருசலேம் முற்றிக்கையிடப்படும் என்பதற்கு இந்த சங்கிலி அடையாளமாயிருக்கிறது.

மேலும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனவர்கள், அந்த தேசத்தில் அந்நியர்களுக்கு அடிமைகளாகயிருப்பார்கள் என்பதற்கும் இந்த சங்கிலி அடையாளமாயிருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் கட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கும் இந்த சங்கிலி அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். "தேசம் நியாயத்தீர்ப்புக்குள்ளான இரத்தப்பழிகளால் நிறைந்திருக்கிறது; நகரம் கொடுமையால் நிறைந்திருக்கிறது" (எசே 7:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாதேசத்திலே, அநியாயமும், அக்கிரமங்களும், குற்றங்களும் அதிகரித்திருக்கிறது. அவர்களுடைய பிரமாணத்தின்படி அவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய இரத்தம் தேசம் முழுவதும் நிரம்பியிருக்கிறது. விக்கிரகாரதனை, வேசித்தனம், தேவதூஷணம் ஆகியவை இஸ்ரவேல் வம்சத்தாரின் பொதுவான இரத்தப்பழிகளாகும்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஆலயத்தை அசுத்தப்படுத்தினார்கள். கர்த்தருடைய பிரசன்னம் தங்கியிருக்கிற மகாபரிசுத்த ஸ்தலத்திலே, அவர்கள் அருவருக்கப்படத்தக்க விக்கிரகங்களைக் கொண்டு வந்து வைத்தார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்திருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, மனுஷருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். மனுஷருடைய வழக்குகளை நீதியாய் விசாரிக்காமல், அவர்களுக்கு நீதியான தீர்ப்பு சொல்லாமல், சத்தியத்தைப் புரட்டுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வழிகளில் நடக்கவேண்டும். அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள்.

கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்கள், புறஜாதி ஜனங்களுடைய வழிகளில் நடக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் புறஜாதியாரின் அக்கிரமத்தைவிட, அதிகமான அக்கிரமங்களை செய்கிறார்கள்.

ஆகையால் கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது புறஜாதியாரின் துஷ்டர்களை வரப்பண்ணுகிறார். அவர்கள் இவர்களுடைய வீடுகளைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்; "பலவான்களின் பெருமையை ஒழியப்பண்ணுவேன், அவர்கள் பரிசுத்த ஸ்தலங்கள் பரிசுத்தக்குலைச்சலாகும்" (எசே 7:24). என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வீடுகளை அக்கிரமங்களினாலும், அநியாயங்களினாலும் நிரப்புகிறார்கள். அவர்களுடைய வீடுகளில் அநியாயமாய் சம்பாதிக்கப்பட்ட ஐசுவரியங்கள் இருக்கிறது. தரித்திரரையும், திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் ஒடுக்கி, அவர்களிடமிருந்து பலவந்தமாய் அபகரித்துக் கொண்ட ஐசுவரியங்கள், இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளில் நிரம்பியிருக்கிறது.

கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளை புறஜாதிகளின் துஷ்டர்களுக்கு ஒப்புக்கொடுக்கிறார். அவர்கள் யூதர்களுடைய வீடுகளை சுதந்தரித்துக்கொள்கிறார்கள். கர்த்தர் பலவான்களின் பெருமையை ஒழியப்பண்ணுகிறார். புறஜாதிகள் இஸ்ரவேல் வம்சத்தாரின் வீடுகளிலிருந்து, தாங்கள் ஆசைப்படுகிற எல்லா பொருட்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தில் விக்கிரகங்களை வைத்தார்கள். கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். கர்த்தரோ தம்முடைய ஆலயத்திலிருந்து, தம்முடைய பிரசன்னத்தை விலக்கிக்கொள்கிறார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருந்த காரியங்களெல்லாம் யூதாதேசத்தைவிட்டு விலகிப்போயிற்று. கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அவர்களுக்கு கிடைக்காமல் போயிற்று. இதனால் சத்துருக்கள் அவர்கள்மீது யுத்தம்பண்ணி, அவர்களை எளிதாக மேற்கொள்கிறார்கள். அவர்களுடைய ஐசுவரியங்களையெல்லாம் கொள்ளையிடுகிறார்கள்.

கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னமும், அவருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் இஸ்ரவேல் தேசத்தைவிட்டு விலகிப்போயிற்று. இதன் நிமித்தமாய் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சங்காரம் வருகிறது. அப்பொழுது அவர்கள் சமாதானத்தைத் தேடுவார்கள். "ஆனாலும் அது கிடையாது" (எசே 7:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விக்கினத்தின்மேல் விக்கினம் வரும்; துர்ச்செய்தியின்மேல் துர்ச்செய்தி பிறக்கும்; அப்பொழுது தீர்க்கதரிசியினிடத்திலே தரிசனத்தைத் தேடுவார்கள்; ஆனாலும் ஆசாரியனிடத்திலே வேதமும் மூப்பரிடத்திலே ஆலோசனையும் இராமல் ஒழிந்துபோகும் (எசே 7:26).

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள் அதிகரிக்கிறது. அவர்களுடைய அநியாயங்களும் அக்கிரமங்களும் பெருகுகிறது. அவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக பாவம் செய்துகொண்டேயிருக்கிறார்கள். தாங்கள் செய்த பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது ஒன்றன்பின் ஒன்றாக வருகிறது. அவர்களுக்கு விக்கினத்தின்மேல் விக்கினம் வருகிறது. அவர்களை அச்சுறுத்தக்கூடிய துர்ச்செய்திகள் ஒவ்வொன்றாய் வருகிறது. புயல்காற்று அலையலையாய் வருவதுபோல, அவர்கள்மீது ஒன்றன்பின் ஒன்றாய் சங்காரம் வருகிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் அழிந்துகொண்டிருக்கும்போது, கர்த்தருடைய உதவியும், ஆதரவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் எப்போதும்போல தீர்க்கதரிசியினிடத்திலே ஆலோசனை கேட்கப்போகிறார்கள். அவர்களிடத்தில் தரிசனத்தைத் தேடுகிறார்கள். தீர்க்கதரிசிகள் தங்களுக்கு ஆறுதலான நல்ல செய்திகளை சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தங்களுடைய பாவங்களினிமித்தமாய் தங்களை கடிந்துகொள்ளும் எச்சரிப்பின் வார்த்தைகளை கேட்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் விரும்பவில்லை. தாங்கள் மனந்திரும்புவதற்கு பிரயோஜனமாயிருக்கும் தரிசனங்களைக் காணவேண்டுமென்று அவர்கள் தீர்க்கதரிசியினிடத்தில் போகவில்லை. தங்களுக்கு வரப்போகும் ஆபத்தைக் குறித்து, தங்களை எச்சரிக்கும் வார்த்தைகளை அவர்கள் கேட்க விரும்பவில்லை. தங்களுக்கு சத்துருக்களிடமிருந்து விடுதலை கிடைக்கும் என்னும் நல்ல செய்தியைக் கேட்கவே ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தர் அவர்களுக்கு இதுவரையிலும் தம்முடைய வார்த்தைகளைச் சொன்னார். அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்தினார். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தருடைய கிருபையும், இரக்கமும் அவர்களுக்கு கிடைத்திருக்கும். கர்த்தர் அவர்களை, அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து விலக்கி பாதுகாத்திருப்பார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை.

யூதர்களுடைய ஆசாரியர்கள், இப்படிப்பட்ட நெருக்கமான சூழ்நிலைகளில், அவர்களை உற்சாகப்படுத்தும் வேதவாக்கியங்களை சொல்லுவார்கள். இஸ்ரவேலின் மூப்பர்களும், இந்த இக்கட்டுக்களிலிருந்து தப்பித்துக்கொள்ளும் உபாயங்களை அவர்களுக்கு ஆலோசனைகளாகச் சொல்லுவார்கள். ஆனால் இப்போது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் வம்சத்தாரிடமிருந்து வந்திருக்கிறது. ஆசாரியரிடத்திலே வேதமும், மூப்பரிடத்திலே ஆலோசனையும் இராமல் ஒழிந்துபோயிற்று (எசே 7:26).

கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாய் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்மை வெளிப்படுத்தினார். ஆனால் அவர்களோ அவரை கர்த்தர் என்று அறிந்துகொள்ளவில்லை. இப்போது கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புக்களின் மூலமாய், தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் இப்போது வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். தங்களுடைய வேதனைகளின் மத்தியில் அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரே தங்களுடைய கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் தேசத்தின்மீது வரும்போது, அதன் ராஜா துக்கித்துக்கொண்டிருப்பான். பிரபுவை திகில் மூடிக்கொள்ளும். யூதாதேசத்து ஜனங்களின் கைகள் தளர்ந்துபோகும். கர்த்தர் அவர்களுடைய வழிகளின்படியே அவர்களுக்கு செய்து, அவர்களுடைய நியாயங்களின்படியே அவர்களை நியாயந்தீர்ப்பார் (எசே 7:27).

8 அதிகாரம்

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சீக்கிரத்தில் வரப்போகும் அழிவையும், சங்காரத்தையும் தரிசனத்திலே காண்பிக்கிறார். இப்போது அவர்களுடைய அக்கிரமங்களையும், பாவங்களையும், துன்மார்க்கங்களையும் கர்த்தர் எசேக்கியேலுக்கு தெளிவாக விளக்குகிறார் (எசே 8:1-4).

கர்த்தர் எசேக்கியேலை தரிசனத்திலே எருசலேமுக்கு அழைத்து வருகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் அங்கே செய்யும் பாவங்களை எசேக்கியேலுக்கு காண்பிப்பதற்காக, கர்த்தர் எசேக்கியேலை அங்கு அழைத்து வருகிறார். எருசலேமிலுள்ள தேவாலயத்தில் எரிச்சல் உண்டாக்குகிற விக்கிரகத்தின் ஸ்தானம் இருக்கிறது (எசே 8:5,6).

இஸ்ரவேலின் மூப்பர்கள் சுரூபங்களையும் விக்கிரங்களின் சித்திர விநோதங்களையும் ஆராதிக்கிறார்கள் (எசே 8:7-12). ஸ்திரீகள் தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிறார்கள் (எசே 8:13,14). புருஷர்கள் சூரியனை நமஸ்கரிக்கிறார்கள் (எசே 8:15,16). கர்த்தர் எசேக்கியேலிடம் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமங்களை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார் (எசே 8:17,18).

எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் எசே 8:1-6

எசே 8:1. ஆறாம் வருஷத்து ஆறாம் மாதம் ஐந்தாந்தேதியிலே, நான் என் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், யூதாவின் மூப்பர்கள் எனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறபோதும், கர்த்தராகிய ஆண்டவருடைய கரம் அங்கே என்மேல் அமர்ந்தது.

எசே 8:2. அப்பொழுது இதோ, அக்கினிச்சாயலாய்த்தோன்றுகிற ஒருவரைக் கண்டேன்; அவருடைய இடுப்புக்குக் கீழெல்லாம் அக்கினியும் அவருடைய இடுப்புக்கு மேலெல்லாம் சொருசாலவைப்போல் பிரகாசிக்கிற சாயலுமாயிருந்தது.

எசே 8:3. கைபோல் தோன்றினதை அவர் நீட்டி, என் தலைமயிரைப் பிடித்து என்னைத் தூக்கினார்; ஆவியானவர் என்னைப் பூமிக்கும் வானத்துக்கும் நடுவே கொண்டுபோய், தேவதரிசனத்திலே என்னை எருசலேமில் வடதிசைக்கு எதிரான உள்வாசலின் நடையிலே விட்டார்; அங்கே எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் ஸ்தானம் இருந்தது.

எசே 8:4. இதோ, நான் பள்ளத்தாக்கிலே கண்டிருந்த தரிசனத்துக்குச் சரியாக இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அங்கே விளங்கினது.

எசே 8:5. அவர் என்னைப்பார்த்து: மனுபுத்திரனே, உன் கண்களை ஏறெடுத்து, வடக்கே பார் என்றார்; அப்பொழுது நான் என் கண்களை ஏறெடுத்து, வடக்கே பார்த்தேன்; இதோ, பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்த்தேன்; நடையிலே எரிச்சலுண்டாக்குகிற அந்த விக்கிரகம் இருந்தது.

எசே 8:6. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, அவர்கள் செய்கிறதைக் காண்கிறாயா? என் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு என்னைத் தூரமாய்ப் போகப்பண்ணும்படியான இஸ்ரவேல் வம்சத்தார் இங்கே செய்கிற மிகுந்த அருவருப்புகளைக் காண்கிறாய் அல்லவா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொல்லி,

எசேக்கியேல் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். எருசலேமோடு தொடர்புடைய செய்திகளை கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமம் அதிகமாயிருக்கிறது. கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் எருசலேமிலே, கர்த்தருக்கு விரோதமாகச் செய்கிற பாவங்களை, கர்த்தர் எசேக்கியேலுக்கு தரிசனத்தின் மூலமாய் வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் 8-ஆவது அதிகாரம் முதல், 11-ஆவது அதிகாரம் வரையிலும் இந்த தரிசனத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

எசேக்கியேலுக்கு முதலாவது தரிசனம், யோயாக்கீம் ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷத்தில், நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே உண்டாயிற்று (எசே 1:1,2). எசேக்கியேல் இந்த தரிசனத்தைக் கண்டு பதினான்கு மாதங்களுக்கு பின்பு, இரண்டாவது தரிசனத்தைக் காண்கிறார்.

எசேக்கியேல் 390 நாட்கள் வரையிலும் இடதுபக்கமாய் ஒருக்களித்து படுத்திருந்தார். அதன் பின்பு மறுபடியும் 40 நாள் வரைகக்கும் வலதுபக்கமாய் ஒருக்களித்து படுத்திருந்தார். இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை 390 நாள் வரைக்கும், யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை 40 நாள் வரைக்கும் சுமந்தார்.

எசேக்கியேல் இப்போது தன்னுடைய வீட்டிலே உட்கார்ந்திருக்கிறார். அவர் எந்தப் பக்கத்திலும் இப்போது ஒருக்களித்து படுக்கவில்லை. ஒருவேளை எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமங்களையும், யூதாவம்சத்தாரின் அக்கிரமங்களையும் நினைத்து, வேதனையோடு உட்கார்ந்திருக்கலாம்.

எசேக்கியேல் தன்னுடைய வீட்டிலே உட்கார்ந்திருக்கிறபோது, யூதாவின் மூப்பர்கள் அவருக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்கள். மூப்பர்கள் ஒருவேளை கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்காக எசேக்கியேலிடம் வந்திருக்கலாம். அல்லது அவர்கள் எசேக்கியேலின் பாதபடியில் அமர்ந்து, அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு வந்திருக்கலாம். ஒருவேளை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மத்தியில் சில ஆச்சரியமான காரியங்கள் நடைபெற்றிருக்கலாம். இது பற்றி விசாரிப்பதற்காக யூதாவின் மூப்பர்கள் எசேக்கியேலுக்கு முன்பாக உட்கார்ந்திருக்கலாம்.

யூதாவின் மூப்பர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு மதிப்பும், மரியாதையும், முக்கியத்துவமும் கொடுக்கிறார்கள். அவர்களுடைய வாயிலிருந்து புறப்படும் கர்த்தருடைய வார்த்தைகளை கவனமாய்ச் செவிகொடுத்து கேட்கிறார்கள். ஊழியக்காரர்களுடைய வீடுகள், அவர்களைச் சுற்றிலுமிருக்கிற அயலகத்தாருக்கு, ஒரு சபையைப்போல இருக்கவேண்டும். பவுல் ரோமாபுரியிலிருந்த போது, தான் தங்கியிருந்த வீட்டிலே, தன்னைப் பார்க்க வந்தவர்களுக்கு கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார். கர்த்தர் ரோமாபுரியிலே பவுலை பயன்படுத்தினார். பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதை ஒருவரும் தடைபண்ணவில்லை.

எசேக்கியேல், பாபிலோன் தேசத்திலே, தன்னுடைய வீட்டிலே, யூதாவின் மூப்பர்களுக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற போது, கர்த்தராகிய ஆண்டவருடைய கரம், அங்கே, அவர்மேல் அமருகிறது. அப்போது எசேக்கியேல் தேவதரிசனத்தைக் காண்கிறார்.

எசேக்கியேல் அப்பொழுது அக்கினிச்சாயலாய்த்தோன்றுகிற ஒருவரைக் காண்கிறார்; அவருடைய இடுப்புக்குக் கீழெல்லாம் அக்கினியும் அவருடைய இடுப்புக்கு மேலெல்லாம் சொகுசாவைப்போல் பிரகாசிக்கிற சாயலுமாயிருக்கிறது (எசே 8:2).

எசேக்கியேல் இப்போது காண்கிற தேவதரிசனம், ஏற்கெனவே அவர் கண்ட தேவதரிசனத்திற்கு ஒப்பாயிருக்கிறது. "அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக்கண்டேன்; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன்" (எசே 1:27) என்று எசேக்கியேல் தனது முதலாவது தரிசனத்தைப்பற்றி சொல்லுகிறார்.

அக்கினி சாயலாகத் தோன்றுகிறவர், கைபோல் தோன்றினதை நீட்டி, எசேக்கியேலின் தலைமயிரைப் பிடித்து, அவரைத் தூக்குகிறார். பரிசுத்த ஆவியானவர், எசேக்கியேலை பூமிக்கும் வானத்திற்கும் நடுவே கொண்டுபோகிறார். அவர் எசேக்கியேலை, தேவதரிசனத்திலே, எருசலேமில் வடதிசைக்கு எதிரான உள்வாசலின் நடையிலே விடுகிறார் (எசே 8:3).

பவுல் ஒரு சமயம் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் அப்பொழுது தன்னுடைய சரீரத்திலிருந்தாரா அல்லது தன்னுடைய சரீரத்திற்கு புறம்பே இருந்தாரா என்பது தெரியவில்லை. எசேக்கியேலுக்கும் இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டிருக்கலாம்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கும் போது, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய தெய்வீக இரகசியங்களை வெளிப்படுத்துகிறார். தம்முடைய தெய்வீக கிருபையினால் அவர்களை பூமிக்கு மேலே அழைத்துச் சென்று, பரலோகத்தின் இரகசியங்களைக் காண்பிக்கிறார். ஆவியானவர் எசேக்கியேலை தரிசனத்திலே எருசலேமுக்கு கொண்டு போகிறார். எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு அவரை கொண்டு போய்விடுகிறார்.

எசேக்கியேல் கர்த்தருடைய ஆலயத்திலே தேவனுடைய மகிமையைக் காண்கிறார். அவர் ஏற்கெனவே தரிசித்த மகிமைக்கு, (எசே 1) இந்த மகிமை ஒப்பாயிருக்கிறது. "இதோ, நான் பள்ளத்தாக்கிலே கண்டிருந்த தரிசனத்துக்குச் சரியாக இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அங்கே விளங்கினது" (எசே 8:4) என்று எசேக்கியேல் சொல்லுகிறார்.

எசேக்கியேலுக்கு தேவதரிசனங்களை மறுபடியும் மறுபடியுமாய் தரிசிக்கிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. தேவனுடைய மகிமையை நாம் எவ்வளவு அதிகமாக தரிசிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நம்மிடத்திலுள்ள பாவங்களும், குறைவுகளும் நமக்கு வெளிச்சமாய்த் தெரியும்.

எசேக்கியேல் எருசலேமிலுள்ள பரிசுத்த ஆலயத்திலே, கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார். அங்கே எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் ஸ்தானம் இருப்பதையும் பார்க்கிறார். இந்த ஸ்தானம் எருசலேமின் வடதிசைக்கு எதிரான, தேவாலயத்தின் உள்வாசல் நடையிலிருக்கிறது.

எரிச்சலுண்டாக்கிற விக்கிரகம் என்பது பாகாலைக் குறிக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மனாசே பாகாலுக்கு ஒரு விக்கிரகத்தை உண்டுபண்ணி, அதை தேவாலயத்திற்குள்ளே வைத்தான்.

"இந்த ஆலயத்திலும், நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து தெரிந்துகொண்ட எருசலேமிலும், என் நாமத்தை என்றைக்கும் விளங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் தாவீதோடும் அவன் குமாரனாகிய சாலொமோனோடும் சொல்லிக் குறித்த ஆலயத்திலே அவன் பண்ணின தோப்புவிக்கிரகத்தை வைத்தான்" (2இராஜா 21:7).

"அவன் தன் தகப்பனாகிய எசேக்கியா தகர்த்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டி, பாகால்களுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து, விக்கிரகத்தோப்புகளை உண்டாக்கி, வானத்தின் சேனையையெல்லாம் பணிந்துகொண்டு, அவைகளைச் சேவித்து, எருசலேமிலே என் நாமம் என்றென்றைக்கும் விளங்கும் என்று கர்த்தர் சொன்ன தம்முடைய ஆலயத்திலே பலிபீடங்களைக் கட்டி, கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிரகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான்" (2நாளா 33:3-5).

யோசியா ராஜா ஆட்சிக்கு வந்தபோது, தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களை அகற்றிப்போட்டான். ஆனால் யோசியாவுக்கு பின்னாக வந்த யூதாவின் ராஜாக்கள், கர்த்தருடைய ஆலயத்திலே மறுபடியும் விக்கிரகங்களை வைத்தார்கள். அவர்கள் சூரியனை நமஸ்கரித்து, கர்த்தருடைய ஆலயத்திலே சூரியனுக்கு இரதங்களை செய்து வைத்தார்கள்.

"கர்த்தரின் ஆலயத்திற்குள் போகிற இடந்தொடங்கி, பட்டணத்துக்குப் புறம்பே இருக்கிற நாத்தான்மெலெக் என்னும் பிரதானியின் அறைவீடுமட்டும் யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகளை அகற்றி, சூரியனின் இரதங்களை அக்கினியில் சுட்டெரித்தான்" (2இராஜா 23:11).

எசேக்கியேல் தேவாலயத்தில் விக்கிரகத்தைப் பார்க்கிறார். ஆனால் இந்த விக்கிரகம் யாருடையது என்று சொல்லாமல் அது "எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம்" என்று மாத்திரமே சொல்லுகிறார். விக்கிரகம் யாருடையதாகயிருந்தாலும், அது கர்த்தருக்கு எரிச்சலுண்டாக்கும். அப்படிப்பட்ட விக்கிரகங்களை நாம் பார்க்கும்போது, நம்முடைய மனச்சாட்சியிலும் எரிச்சலுண்டாக வேண்டும். அதைப் பார்க்கும்போது நமக்குளே அருவருப்பு உண்டாகவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலைப் பார்த்து, "மனுபுத்திரனே, உன் கண்களை ஏறெடுத்து, வடக்கே பார்" என்று சொல்லுகிறார். அப்பொழுது எசேக்கியேல், தன் கண்களை ஏறெடுத்து வடக்கே பார்க்கிறார். அவர் பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்க்கிறார். அங்கே, நடையிலே, எரிச்சலுண்டாக்குகிற அந்த விக்கிரகம் இருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஆலயத்திலே மிகுந்த அருவருப்புக்களைச் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போகிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதிப்பதினால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தரும் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு தூரமாய் விலகிப்போய் விடுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய அக்கிரமங்களினிமித்தமாகவும், விக்கிராகாராதனைகளினிமித்தமாகவும் கர்த்தருக்கு கோபத்தையும், எரிச்சலையும் உண்டுபண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் அருவருப்புக்கள் இத்துடன் முடிந்துபோக வில்லை. அவர்கள் இதிலும் அதிகமான அருவருப்புக்களைச் செய்கிறார்கள். கர்த்தர் எசேக்கியேலுக்கு அவர்களுடைய அருவருப்புக்களையெல்லாம் காண்பிக்கிறார்.

சுரூபங்கள்
எசே 8:7-12

எசே 8:7. என்னைப் பிராகாரத்தின் வாசலுக்குக் கொண்டுபோனார்; அப்பொழுது இதோ, சுவரில் ஒரு துவாரத்தைக் கண்டேன்.

எசே 8:8. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ சுவரிலே துவாரமிடு என்றார்; நான் சுவரிலே துவாரமிட்டபோது, இதோ, ஒரு வாசல் இருந்தது.

எசே 8:9. அவர் என்னைப்பார்த்து: நீ உள்ளேபோய், அவர்கள் இங்கே செய்கிற கொடிய அருவருப்புகளைப் பார் என்றார்.

எசே 8:10. நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந் தீரப்பட்டிருந்தன.

எசே 8:11. இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன் தன் கையிலே தன் தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு அவைகளுக்கு முன்பாக நின்றார்கள்; தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று.

எசே 8:12. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார்.

எருசலேமிலே யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அக்கிரமங்களையும் அருவருப்புக்களையும் செய்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலேயே அவருக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடுகிறார்கள். கர்த்தர் எசேக்கியேலை, தரிசனத்திலே, எருசலேமிலுள்ள தேவாலயத்தின் வாசலுக்கு கொண்டு போகிறார். இது தேவாலயத்திலுள்ள வெளிப்பிரகாரமாகும். இங்கே ஆசாரியர்களுக்கு குடியிருப்புக்கள் உள்ளது.

எசேக்கியேல் தேவாலயத்தின் வெளிப்பிரகாரத்திலுள்ள சுவரிலே ஒரு துவாரத்தைக் காண்கிறார். இது வேவுபார்க்கிற துவாரமாகும். இந்த துவாரம் சிறிதாயிருக்கிறது. எசேக்கியேல் அந்த துவாரத்தை அகலப்படுத்துகிறார். கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ சுவரிலே துவாரமிடு" என்று சொல்லுகிறார். எசேக்கியேல், ஏற்கெனவே கண்ட துவாரத்திலே, துவாரமிட்டு, அந்த துவாரத்தை அகலப்படுத்துகிறார். அங்கே ஒரு வாசல் இருக்கிறது (எசே 8:8).

எசேக்கியேல் அந்த துவாரத்தின் வழியாகப் போகுமளவுக்கு அது பெரிதாயிருக்கிறது. அந்த துவாரத்தின் வழியாக தேவாலயத்தின் பொக்கிஷ அறைகளுக்கும், ஆசாரியரின் குடியிருப்பு பகுதிகளுக்கும் போகலாம். எசேக்கியேல் அங்கே அவர்கள் செய்கிற கொடிய அருவருப்புக்களைப் பார்க்கிறார் (எசே 8:9).

எசேக்கியேல் துவாரத்தின் வழியாக உள்ளே போய், அங்கே பார்த்தபோது, "இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந் தீரப்பட்டிருக்கிறது" (எசே 8:10).

சகலவிதமான ஊரும் பிராணிகள் என்பது பல்லி, ஓணான், பாம்பு ஆகியவற்றின் சுரூபங்களாகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஊரும் பிராணிகள் எல்லாவற்றிக்கும், வகைக்கு ஒரு சுரூபமாக அங்கே செய்து வைத்திருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்த பத்துகற்பனைகளில், இரண்டாம் கற்பனை "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" (யாத் 20:4) என்பதாகும்.

தேவாலயத்தின் சுவரில், சுற்றிலும் விக்கிரகங்களின் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு முன்பாக இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபது பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும் நின்று கொண்டிருக்கிறான். இவர்கள் ஒவ்வொருவரும், தன் தன் கையிலே, தன் தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு, சகல விக்கிரகங்களுக்கு முன்பாகவும், சகல சித்திரங்களுக்கு முன்பாகவும் நிற்கிறார்கள். அந்த ஸ்தலம் முழுவதிலும் தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று (எசே 8:11).

இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே, விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். விநோத அறைகளை தெரிந்தெடுத்து, அதன் சுவற்றில் விக்கிரகங்களின் சித்திரங்களை வரைந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே தங்களை விக்கிரகங்களுக்கு ஆசாரியர்களாகப் பாவித்து, அவற்றிற்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்களுடைய மனது துன்மார்க்கத்தினால் நிரம்பியிருக்கிறது. அவர்களுடைய சிந்தனை கர்த்தருக்கு விரோதமாகயிருக்கிறது.

"கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை" என்றும், "கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார்" என்றும் சொல்லுகிறார்கள் (எசே 8:12). தாங்கள் விக்கிரகங்களை ஆராதித்தாலும் கர்த்தர் தங்களைப் பார்க்கமாட்டார் என்றும், தாங்கள் வேதனைகளை அனுபவித்தாலும், கர்த்தர் தங்களை நோக்கிப் பார்க்கமாட்டார் என்றும் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் எசே 8:13,14

எசே 8:13. பின்னும் அவர்கள் செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று அவர் என்னுடனே சொல்லி,

எசே 8:14. என்னைக் கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டுபோனார்; இதோ, அங்கே தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் செய்கிற அதிகமான அருவருப்புக்களை கர்த்தர் எசேக்கியேலுக்கு காண்பிக்கிறார். கர்த்தர் எசேக்கியேலை, தேவாலயத்தின் வடக்கு வாலின் நடையிலே கொண்டு போய்விடுகிறார். அங்கே தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருக்கிறார்கள். தம்மூஸ் என்பது அதோனிஸ் என்னும் விக்கிரகத்தை குறிக்கும் என்றும், இது கிரேக்கருடைய விக்கிரக தெய்வம் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

தம்மூஸ் என்பது எகிப்தியரின் விக்கிரதெய்வமாகிய ஒசிரிஸ் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். இந்த விக்கிரகம் எப்போதும் அழுதுகொண்டிருக்கும். இந்த விக்கிரகத்தைப் பார்க்கிறவர்களும் உடனே அழ ஆரம்பித்துவிடுவார்கள். தம்மூசை அழுதுகொண்டே ஆராதிக்கவேண்டும் என்று அவர்களுக்குள்ளே ஒரு வழக்கம் இருக்கிறது.

தம்மூஸ் மரித்துப்போயிற்று என்றும், ஸ்திரீகள் மரித்துப்போன தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிறார்கள் என்றும் ஜனங்கள் நம்புகிறார்கள். இவர்கள் அதிகமாக அழும்போது, செத்துப்போன தம்மூஸ் மறுபடியும் உயிரோடு எழும்பும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. தம்மூசுக்காக அழுகிற ஸ்திரீகள் கர்த்தருடைய ஆலயத்திலுள்ள வடக்கு வாசலின் நடையிலே உட்கார்ந்திருக்கிறார்கள்.

இவர்கள் விக்கிரகங்களுக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து, கண்ணீர்விட்டு, புலம்பி அழுகிறார்கள். கர்த்தரை சாஷ்டாங்கமாய் விழுந்து ஆராதிக்க வேண்டிய பரிசுத்த ஸ்தலத்திலே, தம்மூசுக்காக அழுகிற ஸ்திரீகள், தங்கள் விக்கிரகங்களுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து கிடக்கிறார்கள்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு இந்த தரிசனத்தைக் காண்பிக்கிறார். அதன் பின்பு அவர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே இதைக் கண்டாயா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய்" (எசே 8:15) என்று சொல்லுகிறார்.

புருஷர் சூரியனை நமஸ்கரிக்கிறார்கள் எசே 8:15,16

எசே 8:15. அப்பொழுது அவர்: மனுபுத்திரனே இதைக் கண்டாயா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று என்னுடனே சொல்லி,

எசே 8:16. என்னைக் கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிராகாரத்திலே கொண்டுபோனார்; இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே, ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர், தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்த்திசைக்கும் நேராகத் திருப்பினவர்களாய்க் கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்.

கர்த்தர் எசேக்கியேலை தேவாலயத்தின் உட்பிரகாரத்திற்கு கொண்டு போகிறார். அங்கே ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர்கள் கிழக்கேயிருக்கும் சூரியனை நமஸ்கரிக்கிறார்கள். அவர்கள் தங்கள் முதுகை கர்த்தருடைய ஆலயத்திற்கும், தங்கள் முகத்தை சூரியன் உதிக்கும் கீழ்த்திசைக்கும் திருப்பினவர்களாயிருக்கிறார்கள்.

அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே, மண்டபத்திற்கும், பலிபீடத்திற்கும் நடுவிலே நிற்கிறார்கள். சூரியனை நமஸ்கரிக்கும் விக்கிரகாராதனை, கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிரகாரத்தில் நடைபெறுகிறது. சூரியன் உதிக்கும்போது அதை நமஸ்கரிக்கவேண்டும் என்பதற்காக, இவர்கள் கீழ்த்திசைக்கு நேராக, தங்கள் முகத்தை திருப்பியிருக்கிறார்கள்.

கர்த்தரே சிருஷ்டிகர். சூரியன் ஒரு சிருஷ்டி. நாம் சிருஷ்டியைத் தொழுது கொள்ளாமல், சிருஷ்டிகரை தொழுதுகொள்ள வேண்டும். இந்த தெய்வீக சத்தியம், பூர்வகாலத்தில், இஸ்ரவேல் வம்சத்தாருக்கே வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அவர்களோ இப்போது சிருஷ்டிகரை தொழுதுகொள்ளாமல், சிருஷ்டியைத் தொழுது, கர்த்தருக்கு முன்பாக அருவருப்பைச் செய்கிறார்கள்.

மனுபுத்திரனே
எசே 8:17,18

எசே 8:17. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இதைக் கண்டாயா? இங்கே யூதா வம்சத்தார் செய்கிற அருவருப்புகள் அற்பமான காரியமா? அவர்கள் தேசத்தைக் கொடுமையினால் நிரப்பி என்னை அடிக்கடி கோபமூட்டுகிறார்கள்; இதோ, அவர்கள் திராட்சக்கிளையைத் தங்கள் நாசிக்கு நேராகப் பிடிக்கிறார்கள்.

எசே 8:18. ஆகையால் நானும் உக்கிரத்தோடே காரியத்தை நடத்துவேன்; என் கண் தப்பவிடுவதில்லை, நான் இரங்குவதில்லை; அவர்கள் மகா சத்தமாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவிகொடுப்பதில்லை என்றார்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு இந்த தரிசனங்களையெல்லாம் காண்பித்த பின்பு, அவர் எசேக்கியேலிடம் "மனுபுத்திரனே, இதைக் கண்டாயா" என்று கேட்கிறார். கர்த்தருடைய ஆலயத்தில் இப்படிப்பட்ட அருவருப்பான காரியங்கள் நடைபெறுமா என்பது ஆச்சரியமாயிருக்கிறது. "இங்கே யூதாவம்சத்தார் செய்கிற அருவருப்புக்கள் அற்பமான காரியமா" என்று கர்த்தர் எசேக்கியேலிடம் கேட்கிறார். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தை அசுத்தப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய வழக்குகளை எசேக்கியேலுக்கு தெரியப்படுத்துகிறார். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய பிரமாணங்களும், கட்டளைகளும், கற்பனைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். ஆனால், யூதாவம்சத்தாரோ, கர்த்தருக்கு விரோதமாக, அருவருப்பான காரியங்களை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்தைக் கொடுமையினால் நிரப்புகிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் கர்த்தருக்கு அடிக்கடி கோபமூட்டுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களுக்கு தகுந்த தண்டனைகளைக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்.

"அவர்கள் திராட்சக்கிளையை தங்கள் நாசிக்கு நேராக பிடிக்கிறார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இது யூதருடைய பழமொழி வாக்கியம். இந்த வாக்கியத்திற்கு அவர்கள் கர்த்தரை ஏளனம்பண்ணுகிறார்கள் என்றும், அவரை அவமானப்படுத்துகிறார்கள் என்றும், கர்த்தரை பரியாசம்பண்ணுகிறார்கள் என்றும் பொருள் சொல்லலாம்.

தேவனுடைய கோபம் இஸ்ரவேல் வம்சத்தார்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய கோபம் ஏற்கெனவே பற்றியெரிகிறது. அவர்கள் திராட்சக்கிளையை தங்கள் நாசிக்கு நேராகப் பிடித்து, கர்த்தரை ஏளனம் செய்து, அவருடைய கோபத்தை அதிகரிக்கச் செய்கிறார்கள். கர்த்தர் தம்முடைய உக்கிர கோபத்தினால் இஸ்ரவேல் வம்சத்தாரை சங்காரம்பண்ணுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் வேதனைகளைத் தாங்கமுடியாமல், உபத்திரவங்களை பொறுத்துக்கொள்ள முடியாமல், கர்த்தருடைய சமுகத்திலே அழுது புலம்பி, விண்ணப்பம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு செவிகொடுக்கமாட்டார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய பாவங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் மனந்திரும்பவில்லை. கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். "ஆகையால் நானும் உக்கிரத்தோடே காரியத்தை நடத்துவேன்; என் கண் தப்பவிடுவதில்லை, நான் இரங்குவதில்லை; அவர்கள் மகா சத்தமாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவிகொடுப்பதில்லை" (எசே 8:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, கர்த்தரை நோக்கி மகாசத்தமாய்க் கூப்பிட்டாலும், அவர்களுடைய அக்கிரமத்தின் தொனி, அதைவிட மகாசத்தமாய்க் கூப்பிடுகிறது.

9 அதிகாரம்

எருசலேம் நகரத்தை அழிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய கருவிகளை கர்த்தர் ஆயத்தம்பண்ணுகிறார் (எசே 9:1,2). இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கேரூபின் மேலிருந்து எழும்பி, ஆலயத்தைவிட்டு வெளியேறுகிற (எசே 9:3). எருசலேம் நகரத்திற்கு பொதுவான அழிவு வரும்போது, கர்த்தருக்கு பீதியானவர்கள் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள் (எசே 9:3,4).

நகரமெங்கும் உருவப்போய் எருசலேமின் குடிகளை வெட்டுமாறு கட்டளை உண்டாயிற்று (எசே 9:5-7). அழிந்துபோகும் ஜனங்களுக்காக எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார் (எசே 9:8-10). கர்த்தருடைய கட்டளை நிறைவேற்றப்படுகிறது (எசே 9:11).

நகரத்தின் விசாரிப்புக்காரர் எசே 9:1-4

எசே 9:1. பின்பு அவர் என் காதுகள் கேட்க மகா சத்தமாய்: நகரத்தின் விசாரிப்புக்காரர் சங்கரிக்கும் ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு வரக்கடவர்கள் என்று சொன்னார்.

எசே 9:2. அப்பொழுது இதோ, ஆறு புருஷர், வெட்டுகிற ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு, வடக்கே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வந்தார்கள்; அவர்களில் சணல்நூல் அங்கிதரித்து, தன் அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற ஒருவன் இருந்தான்; அவர்கள் உள்ளே பிரவேசித்து, வெண்கல பலிபீடத்தண்டையிலே நின்றார்கள்.

எசே 9:3. அப்பொழுது இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கேருபீன் மேலிருந்தெழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வந்து, சணல்நூல் அங்கிதரித்து, தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனைக் கூப்பிட்டு,

எசே 9:4. கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்.

கர்த்தர் எருசலேம் நகரத்தை அழிக்கப்போகிறவர்களை தம்மிடத்தில் வரவழைக்கிறார். கர்த்தர் தம்முடைய தூதர்களுக்கு எருசலேம் நகரத்தை அழித்துப்போடும் கட்டளைகளை கொடுக்கிறார். கர்த்தருடைய தூதர்கள் இதுவரையிலும் எருசலேம் நகரத்தைப் பாதுகாத்தார்கள். அவர்கள் நகரத்திற்கு காவல்காரர்கள்போல விழித்திருந்தார்கள். இப்போதோ அதே தூதர்கள், கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், எருசலேம் நகரத்தை அழிக்கிறவர்களாயும், எருசலேமின் குடிகளை சங்காரம்பண்ணுகிறவர்களாயும் இருக்கிறார்கள்.

நகரத்தின் விசாரிப்புக்காரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கைகளில் சங்கரிக்கும் ஆயுதங்களை பிடித்துக்கொண்டு கர்த்தரிடத்தில் வருகிறார்கள். ஏதேன் தோட்டத்தில் ஜீவவிருட்சத்திற்குப் போகும் வழியை கர்த்தருடைய தூதர்கள் சுடரொளி பட்டயத்தை பிடித்துக்கொண்டு காவல் காத்தார்கள். அதுபோல எருசலேம் நகரத்தின் விசாரிப்புக்காரர் சங்கரிக்கும் ஆயுதங்களை தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு கர்த்தரிடத்தில் வருகிறார்கள்.

கர்த்தர் நகரத்தின் விசாரிப்புக்காரர்களை "வரக்கடவர்கள்" என்று சொன்னவுடனேயே, ஆறு புருஷர், வெட்டுகிற ஆயுதங்களை தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு, வடக்கே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வருகிறார்கள் (எசே 9:2). எருசலேம் நகரத்திற்கு ஆறு பிரதான வாசல்கள் உள்ளன. இந்த புருஷர் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பிரதான வாசலின் வழியிலிருந்து வருகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சேனையில் ஆறு படைபிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு படைபிரிவுக்கும் ஒவ்வொரு தளபதியாக, பாபிலோன் சேனையில் ஆறு சேனைத்தலைவர்கள் இருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இந்த ஆறு பிரபுக்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது பாபிலோன் ராஜாவின் பிரபுக்களாகிய நெர்கல்சரேத்சேர், சம்கார்நேபோ, சர்சேகிம், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் என்பவர்களும், பாபிலோன் ராஜாவின் மற்ற எல்லாப் பிரபுக்களும் உட்பிரவேசித்து, நடு வாசலில் இருந்தார்கள்" (எரே 39:3).

இவர்கள் தங்களுடைய கைகளில் வெட்டுகிற ஆயுதங்களை பிடித்துக் கொண்டு வருகிறார்கள். தேவதூதர்களுடைய கரங்களில், பாபிலோன் ராஜாவின் ஆறு பிரபுக்களும், வெட்டுகிற ஆயுதங்களாகயிருக்கிறார்கள். அந்த ஆறு புருஷரும் வடக்கே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வருகிறார்கள். பாபிலோன் தேசம் எருசலேமுக்கு வடக்கு திசையிலுள்ளது.

"அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார்மேலும் வரும்" (எரே 1:14).

ஆவியானவர் எசேக்கியேலை, தேவதரிசனத்திலே, எருசலேமில் வட திசைக்கு எதிரான உள்வாசலின் நடையிலே விடுகிறார். அங்கே எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் ஸ்தானம் இருக்கிறது (எசே 8:3). எசேக்கியேல் பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்த்தபோது, நடையிலே எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தைப் பார்க்கிறார் (எசே 8:5). எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் வடதிசையிலிருப்பதினால், ஆறு புருஷர்களும் வடக்கே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வருகிறார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

சங்கார தூதர்களில் ஒருவரைப்பற்றி இங்கு விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஆறு புருஷரில் ஒருவரல்ல என்றும், ஆனாலும் இவர் சங்கார தூதர்களில் ஒருவர் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அவருடைய நியாயத்தீர்ப்போடு கலந்திருக்கிறது. ஆறு புருஷரும் வடகே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வருகிறார்கள். அவர்களில் ஒருவன் சணல்நூல் அங்கி தரித்திருக்கிறான். அவன் தன்னுடைய அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிறான்.

ஆறுபுருஷரும் சங்கார தூதர்களாயிருக்கிறார்கள். அவர்கள் வெட்டுகிற ஆயுதங்களை தங்கள் கைகளில் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவனோ தன்னுடைய அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிறான். பூர்வகாலத்தில் கணக்கர்களும், வேதபாரகரும், வழக்கறிஞர்களும் தங்கள் அரைகளில் மைக்கூட்டை வைத்திருப்பது வழக்கம். ஆறு மனுஷரும் வெட்டுகிற ஆயுதங்களை பயன்படுத்துகிறார்கள். இந்த மனுஷனோ கணக்கனுடைய மைக்கூட்டை பயன்படுத்துகிறான்.

பட்டயத்தின் வல்லமையைவிட எழுதுகோலின் வல்லமையே பெரியது. எழுத்தாணியே கனமுள்ளது. கணக்கனுடைய மைக்கூடும், எழுத்தாணியும் கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பு, பாவியான மனுஷர்மீது சுடரொளி பட்டயமாக புறப்பட்டு வரும்போது, கிறிஸ்துவானவர் மனுக்குலத்திற்காக பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறார்.

பிரதான ஆசாரியர் சணல்நூல் அங்கி தரித்திருப்பார்கள். "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" (வெளி 19:8). தீர்க்கதரிசிகள் தங்கள் அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருப்பார்கள். இந்த மனுஷனும் பிரதான ஆசாரியனைப்போல, சணல்நூல் அங்கி தரித்து, தீர்க்கதரிசியைப்போல தன் அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிறான்.

ஜீவப்புஸ்தகமே ஆட்டுக்குட்டியானவரின் புஸ்தகம். நியாயப்பிரமாணத்திலும், சுவிசேஷத்திலும் கர்த்தர் நமக்காக எழுதியிருக்கிற வார்த்தைகள் எல்லாமே, கர்த்தருடைய வார்த்தைகள். பரிசுத்த வேதாகமம் இயேசுகிறிஸ்துவைப்பற்றி எழுதப்பட்ட வெளிப்பாடு ஆகும்.

நகரத்தின் விசாரிப்புக்காரர் சங்கரிக்கும் ஆயுதங்களோடு நிற்கிறார்கள். அவர்கள் எருசலேமின் குடிகளை சங்காரம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். எருசலேம் நகரத்திற்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. சங்காரம் பண்ணுகிறவர்களுக்கு நடுவில் ஒரு மத்தியஸ்தரும் இருக்கிறார். அவர் மகாபிரதான ஆசாரியராய் பரிந்து பேசும் ஊழியத்தை செய்கிறார்.

தேவாலயத்தில் கர்த்தருடைய ஷேக்கைனா மகிமை தங்கியிருக்கும். ஆறுபுருஷரும், மைக்கூட்டை வைத்திருக்கிற ஒருவனும், தேவாலயத்திற்குள் பிரவேசித்து, வெண்கல பலிபீடத்தண்டையில் நிற்கிறார்கள். அப்பொழுது இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கேருபின் மேலிருந்து எழும்புகிறது. அது ஆலயத்தின் வாசற்படியிலே வந்து நிற்கிறது. கர்த்தருடைய மகிமை தேவாலயத்தைவிட்டு வெளியே புறப்பட்டுப் போகிறது. கர்த்தருடைய மகிமை போனபின்பு, தேவதூதர்களின் தரிசனத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியிலே வந்து, சணல்நூல் அங்கி தரித்து, தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனைக் கூப்பிடுகிறது. கர்த்தரே அந்த மனுஷனைக் கூப்பிடுகிறார் (எசே 9:3). கர்த்தர் அவனுக்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் அவனை நோக்கி: "நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச் சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு" (எசே 9:4) என்று கட்டளையிடுகிறார்.

எருசலேமிலே பக்தியுள்ள யூதர்கள் இருக்கிறார்கள். எருசலேம் நகரத்திற்கு பொதுவான அழிவு வரும்போது, பக்தியுள்ளவர்கள் அழிவுக்கு தப்பிக்க வேண்டும். இவர்கள் கர்த்தருக்கு மீதியானவர்கள். கர்த்தர் நகரத்தின் விசாரிப்புக்காரர் தங்கள் கைகளில் சங்கரிக்கும் ஆயுதங்களை பிடித்துக்கொண்டு வரக்கடவர்கள் (எசே 9:1) என்று கட்டளை கொடுத்தார்.

இப்படிப்பட்ட கட்டளையை, கர்த்தர் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனுக்கு கொடுக்கவில்லை. இந்த புருஷன் இரட்சகரைப்போல இருக்கிறார். இவர் எப்போதுமே கர்த்தருடைய பிரசன்னத்தில் நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறவர். கர்த்தர் இரட்சகரை அழைக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. நம்முடைய இரட்சகர் எப்போதுமே பிதாவோடு கூடவே இருக்கிறவர். பிதாவின் சமுகத்தில் நமக்காக எப்போதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறவர்.

கர்த்தருக்கு மீதமானவர்கள் எருசலேம் நகரத்திற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புக்களினிமித்தம் பெருமூச்சு விட்டு அழுகிறார்கள். ஜனங்களுடைய பாவங்களை நினைத்து துக்கப்படுகிறார்கள். வேதனைப் படுகிறார்கள். அவர்களுக்காக பரிதபிக்கிறார்கள். கர்த்தருடைய சமுகத்தில் அழுகையோடும், கண்ணீரோடும் பாவிகளுக்காக விண்ணப்பம் பண்ணுகிறார்கள். பெருமூச்சு விட்டழுகிற பரிசுத்தவான்களின் எண்ணிகை சொற்பமாயிருக்கிறது.

எருசலேம் நகரத்திலே யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக அருவருப்பான காரியங்களை செய்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை திரளாயிருக்கிறது. பரிசுத்தவான்களின் எண்ணிக்கை குறைவாயிருக்கிறது. யூதர்களுடைய அருவருப்புக்களுக்கு பரிசுத்தவான்கள் எதிர்த்து நிற்கிறார்கள். அவர்களுடைய அருவருப்புக்களை அகற்றுவதற்கு பரிசுத்தவான்கள் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்கிறார்கள். கர்த்தரிடத்தில் அவர்களுக்காக அழுது புலம்பி, பெருமூச்சு விட்டு விண்ணப்பம் பண்ணுகிறார்கள்.

எருசலேம் நகரத்தில் பக்தியுள்ள யூதர்களை தேடி கண்டுபிடிக்குமாறு, கர்த்தர் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற மனுஷனுக்கு கட்டளை கொடுக்கிறார். அவன் எருசலேம் நகரமெங்கும் உருவப்போய், கர்த்தருடைய பரிசுத்தவான்களை தேடி கண்டுபிடிக்கவேண்டும். அவர்களுடைய நெற்றிகளில் அடையாளம் போடவேண்டும்.

கர்த்தருடைய கோபம் எருசலேமை சங்காரம்பண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. அதே வேளையில் கர்த்தருடைய கிருபை, அவருக்கு மீதியானவர்களை, அழிவுக்கு தப்புவிக்கிறது. கர்த்தர் தம்முடைய கிருபையினால், தம்முடைய பரிசுத்தவான்களின் நெற்றிகளில் அடையாளம் போடுகிறார். கர்த்தர் இந்த அடையாளத்தைப் பார்க்கும்போது, அதை தம்முடைய அடையாளமாக அங்கீகரிப்பார். அவர்கள் தமக்குரியவர்கள் என்பதை உறுதிபண்ணுவார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்காக பெருமூச்சு விட்டு அழுகிற பரிசுத்தவான்கள் மேல் பிரியமாயிருக்கிறார். கர்த்தர் அவர்களுடைய பெருமூச்சுகளையெல்லாம் தம்முடைய ஞாபகபுஸ்தகத்தில் எழுதி வைப்பார். அவர்களுடைய கண்ணீர்கள் ஒருபோதும் வீணாய்ப்போகாது. கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களின் கண்ணீர்களை துருத்திகளில் பிடித்து வைப்பார்.

என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள் எசே 9:5-7

எசே 9:5. பின்பு அவர் என் காதுகள் கேட்க மற்றவர்களை நோக்கி: நீங்கள் இவன் பின்னாலே நகரமெங்கும் உருவப்போய் வெட்டுங்கள்; உங்கள் கண் தப்பவிடாமலும், நீங்கள் இரங்காமலும்,

எசே 9:6. முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும், சங்கரித்துக் கொன்றுபோடுங்கள்; அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள், என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள் என்று என் காதுகள் கேட்கச் சொன்னார்; அப்பொழுது அவர்கள் ஆலயத்துக்கு முன்னே இருந்த மூப்பரிடத்தில் துவக்கம் பண்ணினார்கள்.

எசே 9:7. அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி, பிராகாரங்களைக் கொலையுண்டவர்களாலே நிரப்பி, புறப்பட்டுப்போங்கள் என்றார்; அவர்கள் நகரத்தில் போய் வெட்டினார்கள்.

கர்த்தர் சங்காரதூதர்களுக்கு கட்டளைகொடுக்கிறார். இவர்கள் நகரத்தின் விசாரிப்புக்காரர்கள். தங்கள் கைகளில் இவர்கள் சங்கரிக்கும் ஆயுதங்களை பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆயுங்களெல்லாம் வெட்டுகிற ஆயுதங்களாயிருக்கிறது. கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் கட்டளைகளை இவர்கள் நிறைவேற்றவேண்டும்.

கர்த்தர் ஆறு புருஷரையும் நோக்கி, "நீங்கள் இவன் பின்னாலே நகரமெங்கும் உருவப்போய் வெட்டுங்கள்; உங்கள் கண் தப்பவிடாமலும், நீங்கள் இரங்காமலும், முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும், சங்கரித்துக் கொன்று போடுங்கள்" (எசே 9:5,6) என்று கட்டளையிடுகிறார். அவர்கள் எருசலேம் நகரத்திலுள்ள எல்லோரையும் அழித்துப்போட வேண்டும். நகரத்தில் ஏராளமான ஜனங்கள் பஞ்சத்தினாலும், கொள்ளைநோயினாலும் செத்துப்போகிறார்கள். கல்தேயருடைய பட்டயத்தினால் எருசலேம் நகரத்திலே ஏராளமான ஜனங்கள் வெட்டப்பட்டு மடிந்துபோகிறார்கள். எருசலேம் நகரம் முழுவதிலும் சர்வநாசமும், சர்வமோசமும், சர்வசங்காரமும் உண்டாயிற்று. அவர்களுடைய அழிவுக்கு அவர்களுடைய பாவங்களே காரணம்.

கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருக்கு விரோதமாக பாவங்களையும், அக்கிரமங்களையும் செய்து கர்த்தரை கோபப்படுத்துகிறார்கள். இரக்கத்தைக் காண்பிக்கிற தேவன், அவர்களுடைய அருவருப்புக்களினிமித்தமாய், அவர்களுக்கு கோபத்தைக் காண்பிக்கிறார். "உங்கள் கண் தப்பவிடாமலும், நீங்கள் இரங்காமலும், எல்லோரையும் சங்கரித்து கொன்று போடுங்கள்" என்று கர்த்தர் சங்கார தூதர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

பாவம் செய்கிறவர்கள், தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தொடர்ந்து பாவத்திலே ஜீவித்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறவர்கள், தங்கள் பாவங்களில் அழிந்துபோவார்கள். அவர்களால் இந்த அழிவுக்கு எளிதாக தப்பிக்க முடியும். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை அழிக்காமல் பாதுகாப்பார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமாய்ப் பாவம் செய்து, தங்கள்மீது தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள்.

தன்னுடைய அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிறவன், எருசலேம் நகரத்திலே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போட்டிருக்கிறான். கர்த்தர் நகரத்தின் விசாரிப்புக்காரராகிய ஆறு புருஷரிடத்திலும், "அடையாளம் போட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள்" என்றும் கட்டளையிடுகிறார்.

சங்காரம்பண்ணுகிறவர்கள் யாருக்கும் இரக்கம் காண்பிக்கக்கூடாது. அவர்களுடைய கண்கள் யாரையும் தப்பவிடக்கூடாது. அவர்கள் எல்லோரையும் சங்கரித்து கொன்றுபோடவேண்டும். அதே வேளையில் தங்கள் நெற்றிகளில் அடையாளம் போட்டிருக்கிற ஒருவனையும் அவர்கள் கொன்றுபோடக்கூடாது. அவர்களைக் கிட்டக் கூடாது. அவர்களை பயமுறுத்தக்கூடாது.

தமக்கு மீதியாயிருக்கிற ஜனங்கள்மீது கர்த்தர் பிரியமாயிருக்கிறார். அவர்களை பாதுகாத்து பராமரிப்பதாகவும், அவர்களை மறுபடியும் நாட்டுவதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

"உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்" (எரே 15:11).

கர்த்தருக்கு மீதியானவர்கள், அழிந்துபோகிற ஜனங்களுக்காக கர்த்தருடைய சமுகத்தில் பெருமூச்சு விட்டு அழுது ஜெபிக்கிறார்கள். அவர்களில் ஒருவரும் கல்தேயருடைய பட்டயத்திற்கு இரையாகவில்லை.

ரோமப்பேரரசார் எருசலேம் நகரத்தை அழித்துப்போட்டார்கள். எல்லா யூதர்களையும் கொன்று குவித்தார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பெல்லா என்னும் நகரத்தில், ஒன்றுகூடி, அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்காக ஜெபம்பண்ணினார்கள். ஜெபம்பண்ணின விசுவாசிகள் எல்லோரும் ரோமப்பேரரசுக்கு தப்பித்துக்கொண்டார்கள். கர்த்தர் அவர்களை பாதுகாத்தார். அவர்கள் அழிவுக்கு தப்பினார்கள்.

கர்த்தர் சங்காரம்பண்ணுகிறவர்களை நோக்கி, "நகரமெங்கும் உருவப்போய் வெட்டுங்கள்" என்று கட்டளை கொடுக்கிறார். அந்தக் கட்டளையைத் தொடர்ந்து, "என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள்" என்றும் கட்டளையிடுகிறார். கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது. கர்த்தருக்கு விரோதமான அருவருப்புக்கள் தேவாலயத்தில் ஆரம்பமாயிற்று. மூப்பர்களும் ஆசாரியர்களும் தேவாலயத்திலே விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி கர்த்தருக்கு கோபம் உண்டு பண்ணினார்கள். இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவருடைய பரிசுத்த ஸ்தலத்திலே துவங்குகிறது.

கர்த்தருடைய ஆலயம் அவருடைய பரிசுத்த ஸ்தலம். மனந்திரும்பிய பாவிகள் கர்த்தருடைய ஆலயத்திலே வந்து அடைக்கலம் பெற்று, பாதுகாப்பாயிருப்பார்கள். மனந்திரும்பிய பாவிகளுக்கு கர்த்தருடைய ஆலயம் பாதுகாப்பான ஸ்தலம். தங்கள் பாவங்களில் தொடர்ந்து ஜீவிக்கிறவர்களுக்கும், துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களுக்கும், கர்த்தருடைய ஆலயம் பாதுகாப்பான ஸ்தலமல்ல. அது அவர்கள் நியாயந்தீர்க்கப்படும் ஸ்தலம்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கினாலும், அது அங்கேயே முடிந்துபோவதில்லை. சங்காரம்பண்ணுகிறவர்கள் நகரமெங்கும் உருவப்போய் வெட்டவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

தங்கள் கைகளில் வெட்டுகிற ஆயுதங்களைப் பிடித்திருக்கிற ஆறு புருஷரும், கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும் சங்கரித்து கொன்று போடுகிறார்கள். தங்கள் நெற்றிகளில் அடையாளம் போடப்பட்டிருக்கிற மனுஷரை அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. சங்காரம்பண்ணுகிறவர்கள். ஆலயத்திற்கு முன்னேயிருந்த மூப்பரிடத்தில், சங்காரம் பண்ணுவதை துவக்கம் பண்ணுகிறார்கள்.

எருசலேமிலுள்ள பரிசுத்த ஆலயத்தில் "இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன் தன் கையிலே தன் தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு அவைகளுக்கு முன்பாக நின்றார்கள்; தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று" (எசே 8:11). சங்காரம்பண்ணுகிறவர்கள் இந்த எழுபது மூப்பர்களையும் முதலாவதாக சங்கரித்து கொன்று போட்டிருக்கலாம்.

"கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே, ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர், தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்த்திசைக்கும் நேராகத் திருப்பினவர்களாய்க் கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்" (எசே 8:16). சங்காரம் பண்ணுகிறவர்கள இந்த இருபத்தைந்து புருஷரையும் முதலாவதாக சங்கரித்து கொன்று போட்டிருக்கலாம்.

அதன் பின்பு கர்த்தர் சங்காரம்பண்ணுகிறவர்களை நோக்கி, "நீங்கள் ஆலயத்தைப் தீட்டுப்படுத்தி, பிராகாரங்களைக் கொலையுண்டவர்களாலே நிரப்பி, புறப்பட்டுப்போங்கள்" (எசே 9:7) என்று கட்டளை கொடுக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் நகரமெங்கும் உருவப்போய், ஒருவரையும் தப்பவிடாமல், ஒருவருக்கும் இரக்கம் காண்பிக்காமல், எல்லோரையும் சங்கரித்து கொன்றுபோடுகிறார்கள். தேவாலயத்தில் வெட்ட ஆரம்பித்தவர்கள், இப்போது நகரத்தில் போய் வெட்டுகிறார்கள்.

ஆ, கர்த்தராகிய ஆண்டவரே எசே 9:8-11

எசே 9:8. அவர்கள் வெட்டிக் கொண்டுபோகையில் நான் மாத்திரம் தனித்து, முகங்குப்புற விழுந்து: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின்மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலின் மீதியானவர்களையெல்லாம் அழிப்பீரோ என்று முறையிட்டேன்.

எசே 9:9. அதற்கு அவர்: இஸ்ரவேலும் யூதாவுமாகிய வம்சத்தாரின் அக்கிரமம் மிகவும் பெரிது; தேசம் இரத்தப்பழிகளால் நிறைந்திருக்கிறது; நகரமும் மாறுபாட்டினால் நிரப்பப்பட்டிருக்கிறது; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார்; கர்த்தர் பார்க்கமாட்டார் என்று சொல்லுகிறார்கள்.

எசே 9:10. ஆகையால் என் கண் தப்பவிடுவதுமில்லை, நான் இரக்கஞ்செய்வதுமில்லை; அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் சிரசின்மேல் இறங்கப்பண்ணுவேன் என்றார்.

எசே 9:11. இதோ, சணல்நூல் அங்கி தரித்து, தன் அரையில் மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷன் வந்து: நீர் எனக்குக் கட்டளையிட்டபடியே செய்தேன் என்று காரியத்தைத் தெரிவித்தான்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். சங்காரம்பண்ணுகிறவர்கள் நகரமெங்கும் உருவப்போய், ஒருவரையும் தப்பவிடாமல், ஒருவருக்கும் இரக்கம் காண்பியாமல், ஜனங்களை சங்கரித்து கொன்று போடுகிறார்கள். அவர்கள் வெட்டிக்கொண்டு போகையில், எசேக்கியேல் மாத்திரம் தனித்து, கர்த்தருக்கு முன்பாக முகங்குப்புற விழுகிறார்.

"ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின்மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலின் மீதியானவர்களையெல்லாம் அழிப்பீரோ" (எசே 9:8) என்று எசேக்கியேல் கர்த்தரிடத்தில் முறையிடுக்கிறார். எசேக்கியேல் சங்காரத்திற்கு தப்பினவர் போல, முகங்குப்புற விழுந்துகிடக்கிறார். கர்த்தர் நல்லவர். அவருடைய கிருபை என்றுமுள்ளது. நம்முடைய சுயநீதியும், சுயபரிசுத்தமும் பிரயோஜனமற்றது. கர்த்தருடைய கிருபையே நம்மைத் தாங்கும். நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் கர்த்தருடைய சுத்தகிருபை.

நம்முடைய கிரியைகளினாலும் நாம் நன்மை செய்யவேண்டும். நம்முடைய ஜெபங்களினாலும் நாம் மற்றவர்களுக்கு பரிந்துபேசி, அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். எசேக்கியேல் இஸ்ரவேலின் மீதியானவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

கர்த்தர் எருசலேமின்மேல் தமது கோபத்தை ஊற்றுகிறார். இஸ்ரவேலின் மீதியானவர்கள் எல்லோரையும் கர்த்தர் அழிக்கமாட்டார். நெற்றிகளில் அடையாளம் போடப்பட்டிருக்கிறவர்களை கர்த்தர் அழிக்கமாட்டார். அவர்கள் கர்த்தருக்கு மீதியானவர்கள். மற்றவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தவர்கள்.

எசேக்கியேல் இஸ்ரவேலின் ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை, எசேக்கியேலுக்கு தெளிவாகச் சொல்லுகிறார்.

"இஸ்ரவேலும் யூதாவுமாகிய வம்சத்தாரின் அக்கிரமம் மிகவும் பெரிது; தேசம் இரத்தப்பழிகளால் நிறைந்திருக்கிறது; நகரமும்மாறுபாட்டினால் நிரப்பப்பட்டிருக்கிறது; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார்; கர்த்தர் பார்க்கமாட்டார் என்று சொல்லுகிறார்கள். ஆகையால் என் கண் தப்பவிடுவதுமில்லை, நான் இரக்கஞ்செய்வதுமில்லை; அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் சிரசின்மேல் இறங்கப்பண்ணுவேன்" (எசே 9:9,10) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு பிரதியுத்தரம் சொல்லகிறார்.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எசேக்கியேலின் விண்ணப்பத்தை கர்த்தர் ஏற்க மறுத்துவிடுகிறார். எசேக்கியேல் விரும்புகிற பிரகாரம், கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய கிருபை மாறாதது. அவர் தம்முடைய சுபாவத்தில் கிருபையும், இரக்கமும், நீடிய பொறுமையுமுள்ளவர்.

ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள். கர்த்தர் இரக்கமுள்ளவராக இருக்கிறார். அதே வேளையில் அவர் நீதியுள்ளவராகவும் இருக்கிறார். கர்த்தர் இரக்கம் காண்பிக்கவேண்டும் என்பதற்காக, தம்முடைய நீதியை ஒருபோதும் தவறாக பயன்படுத்தமாட்டார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் முதலில் காண்பித்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் அசட்டைபண்ணினார்கள். அவர்கள் மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் நீடியபொறுமையோடு காத்திருந்தார். ஆனால் அவர்களோ தங்களுடைய பாவங்களில் தொடர்ந்து ஜீவித்தார்கள். கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய் அக்கிரமங்களையும், அருவருப்புக்களையும் செய்தார்கள்.

கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துவதை நிறுத்திவிட்டு, இப்போது தம்முடைய நீதியை வெளிப்படுத்துகிறார். அவர்கள்மீது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது.

கர்த்தர் தங்களைத் தண்டிக்கும்போது, பாவிகள் கர்த்தருடைய தண்டனையை ஏற்றுக்கொள்வதில்லை. "கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார்" என்றும், "கர்த்தர் பார்க்கமாட்டார்" என்றும் பாவிகள் கர்த்தருக்கு விரோதமாகச் சொல்லுகிறார்கள். பாவிகள் கர்த்தர்மீது இதுபோல குற்றம் சொல்லுவது புதுமையானதல்ல. விக்கிரகாராதனைக்காரர்களும் கர்த்தருக்கு விரோதமாக இப்படியே பேசுகிறார்கள்.

"அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார்" *(எசே 8:12).*

கர்த்தர் தங்களை பார்க்கமாட்டார் என்று பாவிகள் சொல்லுகிறார்கள். ஆகையினால் தங்களுக்கு பிரியமானபடி எதை வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று பாவிகள் நினைக்கிறார்கள். கர்த்தர் தங்களுடைய கிரியைகளில் தலையிடமாட்டார் என்று நினைத்து, துன்மார்க்கர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். தாங்கள் எப்படிப்பட்ட பாவம் செய்தாலும், கர்த்தர் தங்களை பார்க்கமாட்டார் என்றும், அவர் தங்களுடைய பாவங்களை கண்டுகொள்ளமாட்டார் என்றும் பாவிகள் நினைக்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்கள், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை நினைத்துக்கூட பார்க்க மாட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபையையும் அசட்டைபண்ணுவார்கள். அவருடைய நியாயத்தீர்ப்பையும் அசட்டைபண்ணுவார்கள். அவர்கள் முடிவில் கர்த்தரையும் அசட்டைபண்ணுவார்கள்.

இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கமாட்டார்கள். கர்த்தருடைய கண்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களை தப்பவிடாது. கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் அசட்டைபண்ணுகிறவர்களுக்கு, கர்த்தர் இரக்கம் செய்யமாட்டார். துன்மார்க்கருடைய வழியின் பலனை, கர்த்தர் அவர்களுடைய சிரசின்மேல் இரங்கப்பண்ணுவார்.

எருசலேம் நகரத்திற்குள்ளே, யூதாவின் மனுஷர் ஏராளமான அக்கிரமங்களையும், அருவருப்புக்களையும் செய்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள், அவர்களுடைய சகல அருவருப்புக்களினிமித்தம் பெருமூச்சுவிட்டழுது, கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுகிறார்கள். இவர்களுடைய நெற்றிகளில் கர்த்தர் அடையாளம் போடுமாறு கட்டளை கொடுக்கிறார். அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள் என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். எருசலேம் நகரம் அழியும்போது, எருசலேமிலுள்ள ஜனங்கள் சங்காரமாகும்போது, நெற்றிகளில் அடையாளம் போடப்பட்டிருக்கிறவர்கள் மாத்திரம் அழிவுக்கு தப்பிக்கிறார்கள்.

BELLWETHER INTERNATIONAL

எசேக்கியேல் - விரிவுரை
EZEKIEL - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இதோ, சணல்நூல் அங்கி தரித்து, தன் அரையில் மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷன் வந்து: "நீர் எனக்குக் கட்டளையிட்டபடியே செய்தேன்" என்று காரியத்தைத் தெரிவிக்கிறான் (எசே 9:11). கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தைக் குறித்து இவன் கணக்கு ஒப்புவிக்கிறான். இவன் கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரம், இஸ்ரவேல் ஜனங்களின் அருவருப்புக்களுக்காக பெருமூச் சுவிட்டு அழுத மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போட்டான்.

சங்காரம்பண்ணுகிறவர்கள் நகரமெங்கும் உருவப்போய் எல்லோரையும் சங்கரித்து கொன்றுபோட்டபோது, அவர்கள் அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாத படிக்கு, கர்த்தருடைய பரிசுத்தவான்களை பாதுகாத்துக்கொண்டான். கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை செய்து முடித்ததாக, அவரிடத்தில் வந்து கணக்கு ஒப்புவிக்கிறான். "நீர் எனக்கு கட்டளையிட்டபடியே செய்தேன்" என்று காரியத்தை தெரிவிக்கிறான்.

10 அதிகாரம்

எசேக்கியேல் தீர்க்கதரிசி, கர்த்தருடைய மகிமையை தரிசித்ததுபோல, மறுபடியுமாக இப்போது தரிசனம் காண்கிறார். கர்த்தர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனிடம், சக்கரங்களின் நடுவிலிருந்து அக்கினியை எடுக்குமாறு கட்டளையிடுகிறார் (எசே 10:1-7) கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டு புறப்படுகிறது (எசே 10:8-22).

சிங்காசனச் சாயலான ஒரு தோற்றம் எசே 10:1-7

எசே 10:1. இதோ, கேருபீன்களுடைய தலைக்குமேல் இருந்த மண்டலத்தில் இந்திரநீலரத்தினம்போன்ற சிங்காசனச் சாயலான ஒரு தோற்றத்தைக் கண்டேன்; அது அவைகளுக்குமேல் காணப்பட்டது.

எசே 10:2. அவர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி: நீ கேருபீனின்கீழ் இருக்கிற சக்கரங்களுக்கு நடுவிலே பிரவேசித்து, கேருபீன்களின் நடுவே இருக்கிற அக்கினித் தழலில் உன் கை நிறைய எடுத்து, அதை நகரத்தின்மேல் இறையென்றார்; அப்படியே அவன் என் கண்காண உள்ளே பிரவேசித்தான்.

எசே 10:3. அந்தப் புருஷன் உள்ளே பிரவேசிக்கையில்,கேருபீன்கள் ஆலயத்தின் வலது புறத்தில் நின்றன; ஒரு மேகம் உட்பிராகாரத்தை திரப்பிற்று.

எசே 10:4. கர்த்தருடைய மகிமை கேருபீனின் மேலிருந்து எழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வந்தது; ஆலயம் மேகத்தினாலே நிறைந்திருந்தது, பிரகாரமும் கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தினால் நிரம்பிற்று.

எசே 10:5. கேருபீன்களுடைய செட்டைகளின் இரைச்சல்சர்வத்துக்கும் வல்ல தேவன் பேசுகையில் உண்டாகும் சத்தம்போல வெளிப்பிராகாரமட்டும் கேட்கப்பட்டது.

எசே 10:6. அவர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி: நீ கேருபீன்களுக்குள் சக்கரங்களின் நடுவிலிருந்து அக்கினியை எடு என்று கட்டளையிட்டவுடனே, அவன் உள்ளே பிரவேசித்து சக்கரங்களண்டையிலே நின்றான்.

எசே 10:7. அப்பொழுது கேருபீன்களுக்குள்ளே ஒரு கேருபீன் தன் கையைக் கேருபீன்களின் நடுவில் இருக்கிற அக்கினியில் நீட்டி, அதில் எடுத்து, சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனுடைய கையில் கொடுத்தான்; அவன் அதை வாங்கிக் கொண்டு வெளியே வந்தான்.

தேவனுடைய தெய்வீக மகிமை எசேக்கியேலுக்கு மறுபடியும் வெளிப்படுகிறது. காணமுடியாத உலகத்திலுள்ளதை, எசேக்கியேல் இப்போது காண்கிறார். கேருபின்களுடைய தலைக்குமேல் இருந்த மண்டலத்தில், எசேக்கியேல் சிங்காசன சாயலான ஒரு தோற்றத்தைக் காண்கிறார். அது இந்திர நீல இரத்தினம் போன்றிருக்கிறது. அது அழகாகவும் பிரகாசமாகவும் இருக்கிறது. எசேக்கியேல் கர்த்தருடைய சிங்காசனத்தைப் பார்க்கவில்லை. சிங்காசன சாயலான ஒரு தோற்றத்தையே பார்க்கிறார்.

மனுபுத்திரர் இப்படிப்பட்ட தோற்றத்தை இதுவரையிலும் பார்த்ததில்லை. சிங்காசன சாயலை மனுஷருடைய வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நமக்குத் தெரிந்த எந்தப்பொருளோடும் அதை ஒப்பிட்டுச் சொல்லவும் முடியாது. நமக்குத் தெரிந்த உண்மைகளாலும், நாம் பார்க்கிற பொருள்களாலும் சிங்காசன சாயலான தோற்றத்தை விவரிக்க முடியாது. அதை நாம் எப்படித்தான் விவரித்தாலும், நம்முடைய விவரிப்பு குறைவுள்ளதாகவே இருக்கும்.

சிங்காசன சாயலான தோற்றம் கேரூபின்களுடைய தலைக்குமேலிருந்த மண்டலத்திலிருக்கிறது. இந்த மண்டலம் கர்த்தருடைய வல்லமையின் மண்டலமாகும். இது அவருடைய பராக்கிரமத்தின் மண்டலம். இது அவருடைய ஆளுகையின் மண்டலம். கர்த்தர் இந்த மண்டலத்திலிருந்து மனுபுத்திரர் எல்லோரையும் கண்ணோக்கிப் பார்க்கிறார். கர்த்தர் இந்த மண்டலத்தில், தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.

கர்த்தருடைய மகிமையையும், அவருடைய ஆளுகையையும் நம்மால் பூரணமாய்ப் புரிந்துகொள்ள முடியாது. கர்த்தருடைய மகிமை மிகவும் பிரகாசமானது. அந்த பிரகாசத்தை நம்முடைய வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அதை நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க இயலாது. கர்த்தருடைய மகிமையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, நமக்கு தெரிந்த வேறு மகிமை ஒன்றுமே இல்லை.

கர்த்தருடைய மகிமை மேகத்தினால் மூடப்பட்டிருக்கிறது. அது கரியமேகமாகயிருந்தாலும், கர்த்தருடைய மகிமையின் பிரகாசம், அந்த மேகத்தையும் தாண்டி பிரகாசமாய்ப் பிரதிபலிக்கிறது. ஆலயத்தின் உட்பிரகாரத்தை மேகம் நிரப்பிற்று. ஆலயம் மேகத்தினாலே நிறைந்திருந்தது. ஆலயம் முழுவதும் காரிருளாயிருந்தது. ஆனாலும் ஆலயத்தின் வெளிப்பிரகாரம் கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தினால் நிரம்பிற்று (எசே 10:3,4).

"கர்த்தருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது; அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின; அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது" (ஆப 3:4).

கர்த்தருடைய பிரகாசத்தைப்போல தெளிவானது வேறு ஒன்றுமேயில்லை. அதே வேளையில் கர்த்தருடைய மகிமையைப்போல இருளானதும் வேறு ஒன்றுமில்லை. கர்த்தரை நம்மால் தரிசிக்க முடியாது. அவருடைய மகிமையை நம்மால் முழுவதுமாய்ப் பார்க்க முடியாது. கர்த்தர் தம்மை ஒளியினால் மூடிக்கொள்கிறார். ஆனாலும் கர்த்தருடைய ஆலயம் மேகத்தினால் நிரம்பியிருக்கிறது.

நம்மால் அக்கினியை ஊடுருவிப் பார்க்க முடியாது. நாம் எப்படித்தான் தேடிப்பார்த்தாலும், கர்த்தரை பரிபூரணமாய்த் தரிசிக்க முடியாது. கர்த்தருடைய பரிபூரண மகிமையை ஒருவரும் தரிசித்ததில்லை. ஆனாலும் கர்த்தருடைய மகிமையைச் சுற்றிலும் காணப்படும் பிரகாசத்தை நம்மால் தரிசிக்க முடியும்.

சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷன் கர்த்தருக்கு அருகாமையில் நிற்கிறான். கர்த்தர் அவனை நோக்கி, "நீ கேருபீனின்கீழ் இருக்கிற சக்கரங்களுக்கு நடுவிலே பிரவேசித்து, கேருபீன்களின் நடுவே இருக்கிற அக்கினித் தழலில் உன் கை நிறைய எடுத்து, அதை நகரத்தின்மேல் இறை" (எசே 10:2) என்று கட்டளையிடுகிறார். அவன் எருசலேம் நகரத்தை அக்கினியினால் சுட்டெரிக்கவேண்டும்.

அக்கினி தழல் கேரூபின்களின் நடுவே இருக்கிறது. சணல்நூல் அங்கி தரித்தவன் கேரூபினின் கீழிருக்கிற சக்கரங்களுக்கு நடுவே பிரவேசிக்கவேண்டும். அங்கே இருக்கிற அக்கினி தழலில் அவன் கை நிறைய எடுக்கவேண்டும். அதை எருசலேம் நகரத்தின்மேல் இறைக்கவேண்டும்.

கர்த்தருடைய மகிமை கேரூபினின் மேலிருந்து எழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வருகிறது (எசே 10:4). இஸ்ரவேலின் மூப்பர்கள் தேவாலயத்தின் வாசற்படியில் அமர்ந்து வழக்குகளை விசாரித்து, தீர்ப்பு சொல்லுவது வழக்கம். அதற்கு ஒப்பாக கர்த்தருடைய மகிமை இப்போது ஆலயத்தின் வாசற்படியிலே வந்திருக்கிறது. கர்த்தர் இங்கிருந்து எருசலேம் நகரத்திற்கு தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். இஸ்ரவேலின் மூப்பர்கள் தங்களுடைய பட்டணங்களின் வாசல்களில் வழக்குகளை விசாரித்து நியாயத் தீர்ப்பு கொடுப்பார்கள். கர்த்தரோ தம்முடைய ஆலயத்தின் வாசற்படியிலே எருசலேம் நகரத்திற்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார்.

கர்த்தர் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர். அவர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி, "அக்கினி தழலில் உன் கை நிறைய எடுத்து, அதை நகரத்தின்மேல் இறை" என்று கட்டளையிடுகிறார். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தையும், தேவாலயத்தையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுவார்கள் என்பதற்கு இது அடையாளம்.

தேவனுடைய பலிபீடத்தின்மேல் அக்கினி எரிந்துகொண்டிருக்கும். அங்கு மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு பாவநிவாரண பலிகளும், சர்வாங்க தகனபலிகளும் செலுத்தப்படும். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய ஆலயத்தில் விக்கிரகங்களைக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். தேவாலயத்திலுள்ள பலிபீடத்தில் விக்கிரப்ங்களுக்கு பலிசெலுத்தி, தூபங்காட்டுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார்.

சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷன், கர்த்தருடைய கட்டளையைப் பெற்றுக்கொண்டு, தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறான். அவன் அங்கே பிரவேசிப்பதை எசேக்கியேலும் காண்கிறார். அந்த புருஷன் உள்ளே பிரவேசிக்கையில், கேரூபின்கள் ஆலயத்தின் வலதுபுறத்தில் நிற்கிறது. ஒரு மேகம் ஆலயத்தின் உட்பிரகாரத்தை நிரப்பிற்று.

"கர்த்தருடைய மகிமை கேருபீனின் மேலிருந்து எழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வந்தது; ஆலயம் மேகத்தினாலே நிறைந்திருந்தது, பிரகாரமும் கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தினால் நிரம்பிற்று. கேருபீன்களுடைய செட்டைகளின் இரைச்சல்சர்வத்துக்கும் வல்ல தேவன் பேசுகையில் உண்டாகும் சத்தம்போல வெளிப்பிராகாரமட்டும் கேட்கப்பட்டது" (எசே 10:4,5).

எசேக்கியேல் நான்கு ஜீவன்களை முதலாவதாக தரிசித்தபோது, அந்த ஜீவன்களின் சாயல் எரிகிற அக்கினி தழலின் தோற்றமாகவும், தீவர்த்திகளின் தோற்றமாகவும் இருந்தது. அந்த அக்கினி ஜீவன்களுக்குள்ளே உலாவி பிரகாசமாயிருந்தது. அக்கினியிலிருந்து மின்னல் புறப்பட்டது. அந்த ஜீவன்கள் மின்னலின் தோற்றம்போல ஓடித்திரிந்தன (எசே 1:13,14).

கர்த்தர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி, "நீ கேருபீன்களுக்குள் சக்கரங்களின் நடுவிலிருந்து அக்கினியை எடு" (எசே 10:6) என்று கட்டளையிடுகிறார். கர்த்தர் கட்டளையிட்ட உடனேயே, அவன் கேருபீன்களுக்குள்ளே பிரவேசித்து, சக்கரங்களண்டையில் நிற்கிறான்.

அப்பொழுது கேருபீன்களுக்குள்ளே ஒரு கேருபீன் தன் கையைக் கேருபீன்களின் நடுவில் இருக்கிற அக்கினியில் நீட்டி, அதில் எடுத்து, சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனுடைய கையில் கொடுக்கிறான்; அவன் அதை வாங்கிக் கொண்டு வெளியே வருகிறான் (எசே 10:7).

கிறிஸ்துவானவர் பட்சிக்கிற ஆவியினாலும், புடமிடுகிற அக்கினியினாலும் தம்முடைய சபையை சுத்திகரிக்கிறார்.

கேருபீன்களும் சக்கரங்களும் எசே 10:8-17

எசே 10:8. கேருபீன்களுடைய செட்டைகளின் கீழ் மனுஷர் கையின் சாயலானது காணப்பட்டது.

எசே 10:9. இதோ, கேருபீன்களண்டையில் நாலு சக்கரங்கள் இருக்கக் கண்டேன்; ஒவ்வொரு கேருபீன் அண்டையில் ஒவ்வொரு சக்கரம் இருந்தது; சக்கரங்களின் தோற்றம் படிகப்பச்சை வருணம் போலிருந்தது.

எசே 10:10. அவைகள் நாலுக்கும் ஒரே சாயலான ரூபம் இருந்தது; சக்கரங்களின் நடுவிலே சக்கரம் இருக்குமாப்போல் காணப்பட்டது.

எசே 10:11. அவைகள் ஓடுகையில் தங்கள் நாலு பக்கங்களிலும் ஓடும்; ஓடுகையில் அவைகள் திரும்பினதில்லை; தலைநோக்கும் இடத்துக்கே அவைகள் அதின் பின்னாலே ஓடின; ஓடுகையில் அவைகள் திரும்பினதில்லை.

எசே 10:12. அவைகளின் உடல் அனைத்தும், அவைகளின் முதுகுகளும், அவைகளின் கைகளும், அவைகளின் செட்டைகளும், அந்தச் சக்கரங்களும், சுற்றிலும் கண்களினாலே நிறைந்திருந்தன; அவைகள் நாலுக்கும் இருந்த சக்கரங்களும் அப்படியே இருந்தன.

எசே 10:13. அந்தச் சக்கரங்களைப் பார்த்து: சக்கரமே என்று ஒருவன் கூப்பிடுகிற சத்தத்தைக் கேட்டேன்.

எசே 10:14. ஒவ்வொன்றுக்கும் நாலு முகங்கள் இருந்தன; முதலாம் முகம் கேருபீன் முகமும் இரண்டாம் முகம் மனுஷமுகமும், மூன்றாம் முகம் சிங்கமுகமும், நாலாம் முகம் கழுகுமுகமுமாயிருந்தது.

எசே 10:15. கேருபீன்கள் மேலே எழும்பின; இதுதான், நான் கேபார் நதியண்டையிலே கண்டிருந்தஜீவன்.

எசே 10:16. கேருபீன்கள் செல்லுகையில் சக்கரங்கள் அவைகள் அருகே ஓடின; பூமியிலிருந்து எழும்பக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்தபோது, சக்கரங்களும் அவைகளை விட்டு விலகிப்போகவில்லை.

எசே 10:17. அவைகள் நிற்கையில் இவைகளும் நின்றன; அவைகள் எழும்புகையில் இவைகளும் எழும்பின; ஜீவனுடைய ஆவி இவைகளில் இருந்தது.

எசேக்கியேல் கண்ட தேவனுடைய மகிமையின் சாயல் இங்கு இன்னும் விரிவாகச் சொல்லப்படுகிறது. கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியை விட்டு புறப்படுகிறது. இதை எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்திலே காண்கிறார். கர்த்தருடைய மகிமை ஆலயத்திலே பிரகாசிப்பதை எசேக்கியேல் தரிசிக்கிறார். இந்த தரிசனம் அவர் கேபார் நதியண்டையில் தரிசித்த முதலாவது தரிசனத்திற்கு ஒப்பாயிருக்கிறது.

தேவனுடைய தெய்வீக பராமரிப்பும், அவருடைய ஆளுகையும் இந்தப் பூமியில் எவ்வாறு நடத்தப்படுகிறது என்பதை எசேக்கியேல் இங்கு பார்க்கிறார். இந்தப் பூமியிலுள்ள காரியங்களை கர்த்தருடைய தூதர்கள், அவருடைய கட்டளைகளின் பிரகாரம், வழிநடத்துகிறார்கள். தேவதூதர்களுக்கு மத்தியிலே குழப்பம் இருக்காது. அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாயும், ஒருமனதோடும் இருந்து கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவார்கள்.

இந்த சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு கர்த்தர் எசேக்கியேலுக்கு ஜீவன்களையும், சக்கரங்களையும் பற்றிய தரிசனத்தைக் காண்பிக்கிறார். கேருபீன்களுடைய செட்டைகளின்கீழ் மனுஷர் கையின் சாயலானது காணப்படுகிறது. எசேக்கியேல் கேருபீன்களண்டையில் நாலு சக்கரங்கள் இருப்பதைப் பார்க்கிறார்.

ஒவ்வொரு கேருபீன் அண்டையில் ஒவ்வொரு சக்கரம் இருக்கிறது; சக்கரங்களின் தோற்றம் படிகப்பச்சை வருணம் போலிருக்கிறது. அவைகள் நாலுக்கும் ஒரே சாயலான ரூபம் இருக்கிறது; சக்கரங்களின் நடுவிலே சக்கரம் இருக்குமாப்போல் காணப்படுகிறது (எசே 10:9,10).

கேருபீன்கள் சக்கரங்களை இயக்குகிறது. கேருபீன்கள் நிற்கையில் சக்கரங்களும் நிற்கிறது. அவைகள் எழும்புகையில் சக்கரங்களும் எழும்புகிறது. ஜீவனுடைய ஆவி சக்கரங்களிலிருக்கிறது. ஒரு சாரதி தன்னுடைய இரதத்தை இயக்குவதுபோல, கேருபீன்கள் இந்த சக்கரங்களை இயக்குகின்றன.

கேருபீன்களிடத்தில் ஜீவனுடைய ஆவியிருப்பதுபோல, சக்கரங்களிடத்திலும் ஜீஹனுடைய ஆவியிருக்கிறது. ஒரே ஆவியானவரே, கேருபீன்களுக்கும் சக்கரங்களுக்கும் ஜீவனைக்கொடுத்து அவற்றை இயக்குகிறார்.

தேவதூதர்கள் இந்தப் பூமியிலே கர்த்தருடைய பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தின் பிரகாரம், தம்முடைய சித்தங்களை செயல்படுத்துவதற்கு, தம்முடைய தூதர்களைப் பயன்படுத்துகிறார். கர்த்தருடைய ஆவியானவர் ஜீவனுடைய ஆவியானவராயிருக்கிறார். நாலுஜீவன்களுக்கும் நாலுசக்கரங்களுக்கும் கர்த்தரே ஜீவனைக்கொடுக்கிறார். அவற்றை இயக்குகிறார். அவை கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், பிசகாமல் இயங்குகிறது.

எசேக்கியேல் இங்கு காண்கிற தரிசனம், அவர் கேபார் நதியண்டையிலே கண்ட ஜீவனுக்கு ஒப்பாயிருக்கிறது "கேருபீன்கள் மேலே எழும்பின; இதுதான், நான் கேபார் நதியண்டையிலே கண்டிருந்த ஜீவன்" (எசே 10:15) என்றும், "அவைகளுடைய முகங்கள் நான் கேபார் நதியண்டையிலே கண்டிருந்த அந்த முகங்களின் சாயலாயிருந்தது; ஒவ்வொன்றும் தன்தன் முகத்துக்கு எதிரான திசையை நோக்கிச் சென்றது" (எசே 10:22) என்றும், எசேக்கியேல் தான் கண்ட தரிசனத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

இந்த உலகத்தில் ஏராளமான மாற்றங்கள் உண்டாகும். எல்லா காரியங்களும், எல்லா காலங்களிலும் ஒன்றுபோல் நடைபெறுவதில்லை. சீதோஷ்ண நிலைகளில் மாற்றம் வரும். அதே வேளையில் ஏற்கெனவே நடைபெற்ற சம்பவங்கள், மறுபடியும் நடைபெறும். மழைகாலம் முடிந்த பின்பு, மறுபடியும் மழைகாலம் வருவதற்கு வாய்ப்புள்ளது. இந்த சத்தியம் "சக்கரங்கள்" மூலமாக விவரிக்கப்படுகிறது (எசே 10:9). அந்த சக்கரங்களின் நடுவிலே சக்கரம் இருப்பதுபோலிருக்கிறது (எசே 10:10).

கர்த்தருடைய பராமரிப்புக்கள் ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது. இந்தப் பூமியில் நடைபெறும் எல்லா காரியங்களும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. இவை ஒன்றுக்கொன்று முரண்படுவது போன்று நமக்கு தோன்றினாலும், மெய்யாகவே அவற்றில் முரண்பாடுகள் இல்லை. அவையெல்லாவற்றிற்கும் ஒரு பொதுவான முடிவு நியமிக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரம், இந்தப் பூமியில் ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது. இவற்றிற்கு மத்தியிலே ஒழுங்கும் ஒற்றுமையும் உண்டு. இவை நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. சக்கரங்கள் ஓடுகையில் தங்கள் நாலுபக்கங்களிலும் அவை ஓடும். அவை ஓடும்போது திரும்புகிறதில்லை. தலைநோக்கும் இடத்திற்கே, அவைகள் அதின் பின்னாலே ஓடுகிறது. சக்கரங்கள் ஓடும்போது அவைகள் திரும்புகிறதில்லை என்று எசேக்கியேல் காண்கிறார் (எசே 10:11).

எசேக்கியேல் கேருபீன்களண்டையில் நாலுசக்கரங்களைக் காண்கிறார். அவைகள் ஓடுகையில், தங்கள் நாலுபக்கங்களிலும் ஓடுகிறது. அந்த சக்கரங்களைப் பார்த்து, "சக்கரமே" என்று ஒருவன் கூப்பிடுகிற சத்தத்தை எசேக்கியேல் கேட்கிறார். அவை நான்கு சக்கரங்களாகயிருந்தாலும், அவற்றை கூப்பிடும்போது, பன்மை வார்த்தையான "சக்கரங்களே" என்னும் வார்த்தையை பயன்படுத்தி கூப்பிடாமல், "சக்கரமே" என்று ஒருவன் கூப்பிடுகிறான்.

சக்கரங்கள் நான்காகயிருந்தாலும், அந்த நான்கு சக்கரங்களையும் ஒரே ஆவியானவரே வழிநடத்துகிறார். அவையெல்லாமே கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக இயங்குகிறது. அவை கர்த்தர் நியமித்த இலக்கை நோக்கி ஓடுகிறது.

கர்த்தருடைய பராமரிப்புக்கள் உறுதியாயிருக்கும். கர்த்தருடைய தெய்வீக திட்டங்கள் ஒருபோதும் மாறுவதில்லை. இயற்கையில் நாம் பார்க்கிற சகலமும், தேவனுடைய பிரமாணத்தின்படி இயங்குகிறது. காலையில் உதிக்கிற சூரியன், மறுநாள் காலையிலும் உதிக்கிறது. சக்கரங்கள் ஓடுகையில் தங்கள் நாலுபக்கங்களிலும் ஓடும். ஓடுகையில் அவைகள் திரும்பினதில்லை (எசே 10:11). ஜீவன்கள் ஒவ்வொன்றும் தன்தன் முகத்திற்கு எதிரான திசையை நோக்கிச் செல்லுகிறது (எசே 10:22).

தேவனுடைய ஆவியானவரே சர்வசிருஷ்டிகளையும் ஆளுகை செய்கிறார். அவரே எல்லா சிருஷ்டிகளையும் வழிநடத்துகிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், வானத்திலுள்ள சிருஷ்டிகளையும், பூமியிலுள்ள சிருஷ்டிகளையும் இயக்குகிறார். சர்வசிருஷ்டிகளும் தேவனுடைய தெய்வீக சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, அவருடைய தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றும்.

இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான சம்பவங்கள் நடைபெறுகிறது. இந்த சம்பவங்கள் அதிர்ஷ்ட சக்கரத்தின் பிரகாரம் நடைபெறுவதில்லை. இவையெல்லாமே தேவனுடைய தெய்வீக பராமரிப்பு என்னும் சக்கரங்களின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. அதிர்ஷ்ட சக்கரத்திற்கு கண்கள் இல்லை. அதால் பார்க்க முடியாது. அது குருடாயிருக்கிறது. எசேக்கியேல் தரிசிக்கிற சக்கரங்களால் பார்க்க முடியும். அந்த சக்கரங்களும், சுற்றிலும், கண்களால் நிறைந்திருக்கிறது (எசே 10:12).

எசேக்கியேல் தான் தரிசித்த நாலுஜீவன்களைப்பற்றிச் சொல்லும்போது, "அவைகளின் உடல் அனைத்தும், அவைகளின் முதுகுகளும், அவைகளின் கைகளும், அவைகளின் செட்டைகளும், அந்தச் சக்கரங்களும், சுற்றிலும் கண்களினாலே நிறைந்திருந்தன; அவைகள் நாலுக்கும் இருந்த சக்கரங்களும் அப்படியே இருந்தன" (எசே 10:12) என்றும், "ஒவ்வொன்றுக்கும் நாலு முகங்கள் இருந்தன; முதலாம் முகம் கேருபீன் முகமும் இரண்டாம் முகம் மனுஷமுகமும், மூன்றாம் முகம் சிங்கமுகமும், நாலாம் முகம் கழுகுமுகமுமாயிருந்தது" (எசே 10:14) என்றும் சொல்லுகிறார்.

கேருபீன்களும் சக்கரங்களும் ஒன்றாய் இசைந்து இயங்குகின்றன. கேருபீன்கள் செல்லுகையில் சக்கரங்கள் அவைகள் அருகே ஓடுகிறது; பூமியிலிருந்து எழும்பக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்தபோது, சக்கரங்களும் அவைகளை விட்டு விலகிப்போகவில்லை. அவைகள் நிற்கையில் இவைகளும் நிற்கிறது; அவைகள் எழும்புகையில் இவைகளும் எழும்புகிறது; ஜீவனுடைய ஆவி இவைகளில் இருக்கிறது (எசே 10:16,17).

கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டுப் புறப்பட்டது எசே 10:18-22

எசே 10:18. கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டுப் புறப்பட்டு, கேருபீன்களின்மேல் நின்றது.

எசே 10:19. அப்பொழுது கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து, என் கண் காண பூமியைவிட்டு எழும்பினது; அவைகள் புறப்படுகையில் சக்கரங்களும் அவைகளுக்குச் சரியாய்ச் சென்றன; கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு வாசலிலே போய் நிற்க, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அவைகளின்மேல் உயர இருந்தது.

எசே 10:20. இது நான் கேபார் நதியண்டையிலே இஸ்ரவேலின் தேவனுக்குக் கீழே இருக்கக்கண்ட அந்த ஜீவன்தானே; அவைகள் கேருபீன்கள் என்று அறிந்துகொண்டேன்.

எசே 10:21. அவைகளில் ஒவ்வொன்றுக்கு நாலு முகமும், ஒவ்வொன்றுக்கு நாலு செட்டைகளும் இருந்தன; அவைகளுடைய செட்டைகளின் கீழ் மனுஷகைகளின் சாயல் இருந்தது.

எசே 10:22. அவைகளுடைய முகங்கள் நான் கேபார் நதியண்டையிலே கண்டிருந்த அந்த முகங்களின் சாயலாயிருந்தது; ஒவ்வொன்றும் தன்தன் முகத்துக்கு எதிரான திசையை நோக்கிச் சென்றது.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டுப் புறப்படுவதை எசேக்கியேல் தரிசிக்கிறார். கர்த்தருடைய கனமும் மகிமையும் இவ்வளவு காலமாக, அவருடைய ஆலயத்தில்தான் தங்கியிருந்தது. ஆனால் இப்போதோ, அவருடைய மகிமை ஆலயத்தைவிட்டு வெளியே புறப்படுகிறது. இந்த தரிசனம் எசேக்கியேலுக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டு புறப்பட்டு கேருபீன்களின்மேல் நிற்கிறது. அப்பொழுது கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து, பூமியைவிட்டு எழும்புகிறது; அவைகள் புறப்படுகையில் சக்கரங்களும் அவைகளுக்குச் சரியாய்ச் செல்கிறது; அவை கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு வாசலிலே போய் நிற்க, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அவைகளின்மேல் உயர இருக்கிறது (எசே 10:19).

கேருபீன்கள் புறப்பட்டுப்போகும்போது, சக்கரங்களும் அவைகளுக்கு சரியாய்ப் போகிறது. சக்கரங்கள் கேருபீன்களை பின்தொடருகிறது. கேருபீன்கள் ஒரு திசையிலும், சக்கரங்கள் அதற்கு எதிரான மற்றொரு திசையிலும் முரண்பட்டுப்போகவில்லை. ஜீவனுடைய ஆவி கேருபீன்களிலிருப்பதுபோல, சக்கரங்களிலும் இருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரங்களில், இஸ்ரவேல் வம்சத்தார், கர்த்தரை கனம்பண்ணாமல் அவரை கனவீனம்பண்ணினார்கள். தேவாலயத்தில் அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தருடைய பிரசன்னம் தேவாலயத்தைவிட்டு வெளியேறிப்போகிறது.

கேருபீன்களுக்குமேல் கர்த்தருடைய மகிமையிருக்கிறது. கேருபீன்கள் கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு வாசலில் போய் நிற்கிறது. அவை தேவாலயத்தைவிட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனுடைய மகிமையும் கேருபீன்களின்மேல் உயர இருக்கிறது. கர்த்தருடைய மகிமை தேவாலயத்தைவிட்டு வெளியேறும்போது, கேருபீன்களும் தேவாலயத்தைவிட்டு வெளியேறிவிடும்.

கர்த்தர் தம்முடைய ஆலயத்தைவிட்டு உடனே வெளியேறிப்போய்விடவில்லை. கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் கிழக்கு வாசலிலே போய் நிற்கிறது. கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உடனே வெளியேறிப்போய்விடாமல், ஆலயத்தின் பல இடங்களில் நின்றுகொண்டிருக்கிறார். தம்மோடு யாராவது ஒப்புரவாவார்களா என்பதை பார்ப்பதற்காக கர்த்தர் ஆலயத்தில் நிற்கிறார். தம்மிடத்தில் யாராவது பரிந்து பேசுவார்களா என்பதை கேட்பதற்கு கர்த்தர் அங்கே நிற்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரங்களை விட்டு விலகி தம்மிடத்தில் திரும்பி வருவார்களா என்பதைப் பார்ப்பதற்கு கர்த்தர் ஆலயத்திலேயே நிற்கிறார்.

கர்த்தருடைய மகிமை, தேவாலயத்தில், மகாபரிசுத்த ஸ்தலத்தில் தங்கியிருந்தது. கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து, இஸ்ரவேல் வம்சத்தாரை கண்ணோக்கிப் பார்க்கிறார். அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும், விக்கிரகாராதனை களையும், ஆவிக்குரிய வேசித்தனங்களையும் கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து பார்க்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாரோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்களில் பாவங்களில் நிலைத்திருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் வம்சத்தார்மீது வருகிறது. கர்த்தர் தேவாலயத்திலிருந்து வெளியேறிவிடவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தர் ஒரே நாளில், மொத்தமாக, தேவாலயத்தைவிட்டு வெளியே போய்விடாமல், கொஞ்சம் கொஞ்சமாக தேவாலயத்தைவிட்டு வெளியேறுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்கள் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறது. அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்வதைப் பார்க்கும்போதெல்லாம், கர்த்தருடைய மகிமை தேவாலயத்தைவிட்டு, கொஞ்சம் கொஞ்சமாய் வெளியேறுகிறது. கர்த்தர் இப்போது தேவாலயத்தின் கிழக்கு வாசல் வரைக்கும் வந்துவிடுகிறார். இது ஆலயத்தின் வெளிவாசல்.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டு புறப்பட்டு வெளியேறிவிடுகிறது. தேவாலயம் இருக்கிறது. தேவாலயத்தில் கர்த்தருடைய பிரசன்னம் இல்லை. அவருடைய மகிமை அங்கே வாசம்பண்ணவில்லை. கர்த்தருடைய பிரசன்னம் இல்லாத தேவாலயம், கல்லுகளால் கட்டப்பட்ட சாதாரண கட்டிடமாகவே இருக்கும்.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டுப் புறப்பட்டுப்போனாலும், இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தர் மறுபடியும் தம்முடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

எசேக்கியேல் தாம் கண்ட கேருபீன்களைப்பற்றி இங்கு விவரமாய்ச் சொல்லுகிறார். "இது நான் கேபார் நதியண்டையிலே இஸ்ரவேலின் தேவனுக்குக் கீழே இருக்கக்கண்ட அந்த ஜீவன்தானே; அவைகள் கேருபீன்கள் என்று அறிந்து கொண்டேன். அவைகளில் ஒவ்வொன்றுக்கு நாலு முகமும், ஒவ்வொன்றுக்கு நாலு செட்டைகளும் இருந்தன; அவைகளுடைய செட்டைகளின் கீழ் மனுஷகைகளின் சாயல் இருந்தது. அவைகளுடைய முகங்கள் நான் கேபார் நதியண்டையிலே கண்டிருந்த அந்த முகங்களின் சாயலாயிருந்தது; ஒவ்வொன்றும் தன்தன் முகத்துக்கு எதிரான திசையை நோக்கிச் சென்றது" (எசே 10:20-22).

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களினிமித்தமாய், கர்த்தருடைய மகிமை ஆலயத்தை விட்டு வெளியேறினாலும், கர்த்தர் இன்னும் கிருபையும், இரக்கமுமுள்ளவராகவே இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். விக்கிரகாராதனையை நிறுத்திவிட்டு, கர்த்தரை மாத்திரம் ஆராதனை செய்யவேண்டும். கர்த்தரே துதிகளுக்கு பாத்திரர். அவர் மாத்திரமே நித்திய மகிமையுள்ளவர். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஆலயத்தை அசுத்தப்படுத்தி, தீட்டுப்படுத்தின படியினால், கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டு வெளியே புறப்பட்டுப்போயிற்று.

11 அதிகாரம்

எசேக்கியேல் கண்ட தரிசனம் இந்த அதிகாரத்தில் நிறைவுபெறுகிறது. எருசலேமில் தங்கியிருக்கிறவர்களுக்கு விரோதமாக, எசேக்கியேல் கர்த்தருடைய கோபமான வார்த்தைகளை எசேக்கியேல் தொடர்ந்து சொல்லுகிறார் (எசே 11:1-13). பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனவர்களுக்கு, கர்த்தருடைய ஆறுதலான செய்தியை சொல்லுகிறார். எருசலேமில் தங்கியிருக்கிற யூதர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்கள், இப்போது வேதனைகளை அனுபவித்தாலும், அவர்களுக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கிடைக்கும் (எசே 11:14-21).

தேவனுடைய மகிமை கடந்துபோகிறது (எசே 11:22,23). எசேக்கியேல் கண்ட தரிசனம் அவரிடத்திலிருந்து எடுபட்டுப் போயிற்று (எசே 11:24). கர்த்தர் தனக்கு காண்பித்த யாவையும் எசேக்கியேல் சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு சொல்லுகிறார் (எசே 11:25).

எருசலேமின் பிரபுக்கள் எசே 11:1-13

எசே 11:1. பின்பு ஆவியானவர் என்னை எடுத்து, என்னைக் கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு முகமாயிருக்கிற வாசலுக்குக் கொண்டுபோனார்; இதோ, அந்த வாசலின் நடையில் இருபத்தைந்து புருஷர் இருந்தார்கள்; அவர்களின் நடுவே ஜனத்தின் பிரபுக்களாகிய ஆசூரின் குமாரனாகிய யசனியாவையும், பெனாயாவின் குமாரனாகிய பெலத்தியாவையும் கண்டேன்.

எசே 11:2. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இவர்கள் இந்த நகரத்திலே அக்கிரமமான நினைவுகளை நினைத்து, துராலோசனை சொல்லுகிற மனுஷர்.

எசே 11:3. இது வீடுகளைக் கட்டுவதற்குக் காலமல்ல என்றும், இந்த நகரம் பானை, நாங்கள் அதிலுள்ள இறைச்சியென்றும் சொல்லுகிறார்கள்.

எசே 11:4. ஆகையால் அவர்களுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனஞ்சொல்லு, மனுபுத்திரனே, தீர்க்கதரிசனஞ்சொல்லு என்றார்.

எசே 11:5. அப்பொழுது கர்த்தருடைய ஆவி என்மேல் இறங்கினார்; அவர் என்னை நோக்கி: நீ சொல்லவேண்டியது என்னவென்றால், இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் இப்படிப் பேசுகிறது உண்டு; உங்கள் மனதில் எழும்புகிறதை நான் அறிவேன்.

எசே 11:6. இந்த நகரத்தில் நீங்கள் அநேகரைக் கொலைசெய்தீர்கள்; அதின் வீதிகளைக் கொலையுண்டவர்களால் நிரப்பினீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எசே 11:7. ஆகையால் நீங்கள் கொலைசெய்து, அதின் நடுவிலே போட்டுவிட்டவர்களே இறைச்சியும், இந்த நகரம் பானையுமாமே; உங்களையோ அதற்குள் இராதபடிக்குப் புறம்பாக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 11:8. பட்டயத்துக்குப் பயப்பட்டீர்கள், பட்டயத்தையே உங்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 11:9. நான் உங்களை அதற்குள் இராதபடிக்குப் புறம்பாக்கி, உங்களை அந்நியரின் கையில் ஒப்புக்கொடுத்து, உங்களில் நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றுவேன்.

எசே 11:10. பட்டயத்தால் விழுவீர்கள்; இஸ்ரவேல் தேசத்தின் எல்லையிலே உங்களை நியாயந்தீர்ப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 11:11. இந்த நகரம் உங்களுக்குப் பானையாயிருப்பதுமில்லை, நீங்கள் அதிலுள்ள இறைச்சியாயிருப்பதுமில்லை; இஸ்ரவேல் தேசத்தின் எல்லையிலே உங்களை நியாயந்தீர்ப்பேன்.

எசே 11:12. என் கட்டளைகளின்படி நடவாமலும், என் நியாயங்களின்படி செய்யாமலும், உங்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகளுடைய முறைமைகளின்படி செய்த நீங்கள் அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார்.

எசே 11:13. நான் இப்படித் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில், பெனாயாவின் குமாரனாகிய பெலத்தியா செத்தான்; அப்பொழுது நான் முகங்குப்புற விழுந்து, மகா சத்தமாய்: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் இஸ்ரவேலில் மீதியானவர்களைச் சர்வசங்காரஞ்செய்வீரோ என்று முறையிட்டேன்.

எருசலேமின் பிரபுக்கள் தேவாலயத்திலிருக்கிறார்கள். அங்கே அவர்கள் கூடிவந்து ஆலோசனை பண்ணுகிறார்கள். ஆவியானவர் எசேக்கியேலை எடுத்து, கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு முகமாயிருக்கிற வாசலுக்கு கொண்டு போகிறார். அந்த வாசலின் நடையில் இருபத்தைந்து புருஷர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லோரும் எருசலேமின் பிரபுக்கள்.

இந்தப் பிரபுக்கள் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை. ஆனால் இவர்கள் ஏழைகளை ஒடுக்குகிறார்கள். ஜனங்களை நீதியாய் ஆளுகை செய்யவில்லை. இருபத்தைந்து பிரபுக்களில் இரண்டு பிரபுக்களின் பெயர்கள் மாத்திரம் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் ஒருவர் ஆசூரின் குமாரனாகிய யசனியா. மற்றொருவர் பெனாயாவின் குமாரனாகிய பெலத்தியா.

எசேக்கியேல் கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு முகமாயிருக்கிற வாசலிலே இவ்விரண்டு பிரபுக்களையும் காண்கிறார். இவர்களோடு கூட அங்கே மேலும் இருபத்துமூன்று பிரபுக்கள், ஆகமொத்தம் இருபத்தைந்து பிரபுக்கள் இருக்கிறார்கள்.

எருசலேம் நகரத்தை ஆராய்ச்சி பண்ணுகிற வேதபண்டிதர்கள், நகரத்தில் இருபத்துநான்கு தொகுதிகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு தொகுதியையும் ஒரு பிரபு ஆளுகை செய்கிறார். இருபத்து நான்கு தொகுதிகளையும், இருபத்து நான்கு பிரபுக்கள் ஆளுகை செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு முகமாயிருக்கிற வாசலிலே கூடியிருக்கிறார்கள்.

கர்த்தர் இந்தப் பிரபுக்களைப்பற்றிச் சொல்லும்போது, "இவர்கள் இந்த நகரத்திலே அக்கிரமமான நினைவுகளை நினைத்து, துராலோசனை சொல்லுகிற மனுஷர்" (எசே 11:2) என்று சொல்லுகிறார். இவர்கள் ஜனங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதாகச் சொல்லி, அவர்களை வேதனைப்படுத்துகிறார்கள். ஜனங்களின் மத்தியிலே இவர்கள் நல்லவர்கள்போல நடித்து மாய்மாலம்பண்ணுகிறார்கள்.

எருசலேமின் பிரபுக்கள், ஜனங்களை பாவத்தின் வழியிலே நடத்துகிறார்கள். கர்த்தருக்கும், அவருடைய நியாயத்தீர்ப்புக்கும் பயப்படவேண்டுமென்று தீர்க்கதரிசிகள் போதிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு பயப்படவேண்டியதில்லை என்று, எருசலேமின் பிரபுக்கள் துணிகரமாய்ச் சொல்லுகிறார்கள். இவர்கள் நகரத்திற்கு நன்மை உண்டாக்கும் யோசனைகளை சொல்லமாட்டார்கள். இவர்கள் அக்கிரமக்காரர்கள். இவர்களுடைய நினைவுகளும் அக்கிரமமான நினைவுகளாயிருக்கிறது.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு எதிர்த்து நிற்கவேண்டும் என்றும், அவர்களை பேசுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்றும் பிரபுக்கள் ஜனங்களுக்கு போதிக்கிறார்கள். பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ணவேண்டும் என்றும், தங்களால் முடிந்த வரையிலும் கல்தேயருக்கு எதிர்த்து நிற்கவேண்டும் என்றும் பிரபுக்கள் எருசலேமின் குடிகளுக்கு துராலோசனை சொல்லுகிறார்கள்.

"இது வீடுகளைக் கட்டுவதற்குக் காலமல்ல" என்று கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். எருசலேமின் பிரபுக்களோ, "இந்த நகரம் பானை, நாங்கள் அதிலுள்ள இறைச்சி" என்று சொல்லுகிறார்கள் (எசே 11:3). எருசலேம் நகரம் சீக்கிரத்தில் அழிந்துபோகும் என்று தீர்க்கதரிசிகள் எச்சரிக்கிறார்கள். இது சீக்கிரத்தில் அழியாது என்று எருசலேமின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள்.

சாத்தான் ஜனங்களை வஞ்சிப்பான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஜனங்கள்மீது வராது என்று சொல்லுவான். ஜனங்கள் சாத்தானுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லையென்றால், அவர்களுடைய மனதில் சந்தேகத்தை ஏற்படுத்துவான். சாத்தானுக்கு செவிகொடுக்கிற ஜனங்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து சந்தேகப்படுவார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மெய்யாகவே வருமா என்று, சந்தேகத்தோடு யோசித்துப் பார்ப்பார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்தாலும், அது சீக்கிரத்தில் வராது என்றும், அது வருவதற்கு வெகுகாலம் ஆகும் என்றும் சாத்தான் வஞ்சமாய்ப் பேசுவான்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு சீக்கிரமாய் வராது என்றால் எருசலேம் நகரமும் சீக்கிரத்தில் அழிந்துபோகாது. ஆகையினால் நாம் வீடுகளைக் கட்டுவோம் என்று சாத்தானை பின்பற்றுகிறவர்கள் வஞ்சனையான ஆலோசனைகளைச் சொல்லுவார்கள். தாங்கள் இப்போது பாதுகாப்பாகயிருப்பதுபோல, எப்போதுமே பாதுகாப்பாகயிருப்பதாகச் சொல்லுவார்கள்.

இந்த நகரம் பானை என்றும், தாங்கள் அதிலுள்ள இறைச்சி என்றும் எருசலேமின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள். இது யூதர் மத்தியிலே வழங்கப்படும் பழமொழி வாக்கியமாகும். கொதிக்கிற பானையில், இறைச்சி பாதுகாப்பாயிருக்கும். அதுபோலவே தாங்கள் எருசலேம் நகரத்தில் பாதுகாப்பாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். எருசலேமின் அலங்கங்கள் இவர்களுக்கு வெண்கல அலங்கங்களைப்போல இருக்கிறது.

பானைக்கு அடியில் நெருப்பை எவ்வளவு எரித்தாலும், பானைக்கு ஒரு சேதமும் உண்டாகாது. அதுபோலவே கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக எவ்வளவு காலம் முற்றிக்கைப்போட்டாலும், அவர்களால் எருசலேமின் அலங்கங்களுக்கு ஒரு சேதமும் உண்டாகாது.

பானையிலுள்ள இறைச்சி என்பது சமாதான பலிகளைக் குறிக்கலாம். அது பானையிலே பாதுகாப்பாகயிருக்கவேண்டும். பானையிலிருக்கிற இறைச்சியை எடுப்பது கர்த்தருக்கு விரோதமான பாவம். அது கர்த்தருடைய பிரன்ஈணத்தை மீறுகிற செய்கை. ஏலியின் குமாரர்கள் பானையிலுள்ள இறைச்சியை எடுத்து, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள்.

"அந்த ஆசாரியர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூறுள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதை யெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள்" (1சாமு 2:13,14).

ஏலியின் புத்திரர் பானையிலுள்ள இறைச்சியை எடுத்து பாவம் செய்தார்கள். கல்தேயர் எருசலேமின் அலங்கத்திற்குள்ளிருக்கிற யூதாவின் குடிகளை பட்டயத்தால் வெட்டிப்போட்டால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்கள் என்று எருசலேமின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள்.

எருசலேம் கர்த்தருடைய பரிசுத்தமான நகரம். எருசலேம் நகரத்திற்குள்ளே இருக்கிற யூதர்களை கர்த்தர் பாதுகாக்கிறார். எருசலேம் நகரத்திலிருப்பது, எருசலேமின் குடிகளுக்கு பரிசுத்தமான பாதுகாப்பாயிருக்கிறது. தாங்கள் பரிசுத்த நகரத்திலிருப்பதினால், யூதர்கள் தங்களை பரிசுத்தவான்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லக்கூடாது என்று எருசலேமின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி எருசலேமின் பிரபுக்களுக்கு விரோதமாகவும், எருசலேமின் குடிகளுக்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார். "மனுபுத்திரனே, தீர்க்க தரிசனஞ்சொல்லு" (எசே 11:4) என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை புறக்கணித்துவிட்டார். எருசலேம் நகரம் இப்போது கர்த்தருக்கு பரிசுத்தமான நகரமல்ல. இந்த நகரத்தில் இப்போது பரிசுத்தத்திற்குப் பதிலாக பாவம் நிரம்பியிருக்கிறது. நகரம் அசுத்தத்தினால் தீட்டுப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் எருசலேமிலே தங்கவில்லை. கர்த்தர் எருசலேம் நகரத்தை பாதுகாக்கவில்லை. இந்த சத்தியத்தை எருசலேமின் குடிகளுக்கு புரிய வைப்பதற்காக, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை, எசேக்கியேல் மூலமாய்ச் சொல்லுகிறார்.

எருசலேமின் குடிகள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். எருசலேமின் பிரபுக்களும் அவர்களை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் அக்கிரமமான நினைவுகளை நினைத்து, அவர்களுக்கு துராலோசனை சொல்லுகிறார்கள். எசேக்கியேல் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை, எருசலேமின் குடிகளுக்கு சொல்லி, அவர்களை அழிவுக்கு தப்பிக்கச் செய்யவேண்டும். எருசலேமின் குடிகள் உலர்ந்த எலும்புகளைப்போல மரித்துப்போயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் எசேக்கியேலின்மேல் இறங்குகிறார். கர்த்தர் எசேக்கியேலை நோக்கி, நீ சொல்லவேண்டியது என்னவென்றால், இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் இப்படிப் பேசுகிறது உண்டு; உங்கள் மனதில் எழும்புகிறதை நான் அறிவேன். இந்த நகரத்தில் நீங்கள் அநேகரைக் கொலைசெய்தீர்கள்; அதின் வீதிகளைக் கொலையுண்டவர்களால் நிரப்பினீர்கள்" (எசே 11:5,6) என்று சொல்லுகிறார்.

எருசலேம் நகரத்தார் மனதில் எழும்புகிற நினைவுகளை கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிறார். நம்முடைய வாயிலிருந்து வார்த்தைகள் பிரவாததற்கு முன்னமே, கர்த்தர் நம்முடைய இருதயத்தின் நினைவுகளை அறிந்திருக்கிறார். நாம் எவ்வளவுதான் மாய்மாலம் பண்ணினாலும், நம்முடைய பாவசுபாவங்களை மறைப்பதற்கு எவ்வளவுதான் வேஷம் போட்டாலும், கர்த்தர் நம்முடைய மனதை அறிந்திருக்கிறார்.

எருசலேமின் பிரபுக்கள் இந்த நகரத்தில் அநேகரைக் கொலை செய்திருக்கிறார்கள். இந்த நகரத்தின் வீதிகளை கொலையுண்டவர்களால் நிரப்பியிருக்கிறார்கள் (எசே 11:6). பிரபுக்களால் கொலைசெய்யப்பட்டவர்களே பானையிலுள்ள இறைச்சிகளாகயிருக்கிறார்கள். "ஆகையால் நீங்கள் கொலைசெய்து, அதின் நடுவிலே போட்டுவிட்டவர்களே இறைச்சியும், இந்த நகரம் பானையுமாமே; உங்களையோ அதற்குள் இராதபடிக்குப் புறம்பாக்குவேன்" (எசே 11:7) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவருக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். எருசலேம் கர்த்தருடைய நகரமாயிருந்தாலும், மனுஷருடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் எருசலேம் நகரத்தை புறக்கணித்துவிடுகிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் எருசலேமைவிட்டு விலகிப்போகிறது. கர்த்தர் தங்களைவிட்டுப் போனாலும், தங்களுடைய பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும், தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியுமென்று எருசலேமின் குடிகள் நினைக்கிறார்கள்.

எருசலேமில் கர்த்தருடைய பிரசன்னம் இல்லையென்றால், நகரத்திலிருக்கிறவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. சந்தோஷமில்லை, சமாதானமும் ஆறுதலும் இல்லை. கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள், தங்கள் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் விட்டு விலகிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எப்போதுமே நீதியானது. கர்த்தர் தம்முடைய நீதியினாலேயே அவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தர் அவர்களை இஸ்ரவேல் தேசத்தின் எல்லையிலே நியாயந்தீர்க்கிறார். அவர்கள் பட்டயத்தால் விழுகிறார்கள். தாங்கள் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும்போது தங்களைத் தண்டிக்கிறவர் கர்த்தர் என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள் (எசே 11:10).

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய கட்டளையின்படி நடக்கவில்லை. அவருடைய நியாயங்களின்படி செய்யவில்லை. இஸ்ரவேல் வம்சத்தார் தங்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகளுடைய முறைமைகளின்படி செய்தார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் புத்திரர்மீது வந்தது. கர்த்தர் அவர்களை தம்முடைய நீதியினால் நியாயந்தீர்த்து தண்டிக்கிறார். அப்பொழுது தங்களை தண்டிக்கிறவர் கர்த்தர் என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள் (எசே 11:12).

எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அவர் கர்த்தருடைய வார்த்தையை சொல்லும்போது, பெனாயாவின் குமாரனாகிய பெலத்தியா செத்துப்போகிறான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு காலதாமதமில்லாமல் உடனே நிறைவேறுகிறது.

இந்த சம்பவம் எசேக்கியேலின் தரிசனத்தில் நடைபெறுகிறது. தான் தீர்க்கதரிசனம் சொல்லுவதையும், அப்போது பெலத்தியா செத்துப்போவதையும், எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்தில் காண்கிறார். எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது.

எசேக்கியேல் சொல்லுகிற எல்லா தீர்க்கதரிசன வார்த்தைகளும் நிச்சயமாய் நிறைவேறும். இதற்கு பெலத்தியா செத்துப்போனது அச்சாரமாயிருக்கிறது. பெலத்தியா உடனே செத்துப்போனது, எசேக்கியேலின் தீர்க்கதரிசன வார்த்தைகளை உறுதிபண்ணினாலும், பெலத்தியாவின் மரணம், எசேக்கியேலின் இருதயத்தில் மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணுகிறது.

பெலத்தியா செத்துப்போனதுபோது, எசேக்கியேல் முகங்குப்புற விழுந்து, கர்த்தரை நோக்கி மகாசத்தமாய் முறையிடுகிறார். "ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் இஸ்ரவேலில் மீதியானவர்களைச் சர்வசங்காரஞ்செய்வீரோ" (எசே 11:13) என்று எசேக்கியேல் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். கல்தேயரின் பட்டயத்திற்கு தப்பினவர்கள், பரலோகத்தின் கரத்தினால் உடனடியாக செத்துப் போவார்களோ என்று எசேக்கியேல் கர்த்தரிடத்தில் கேட்கிறார்.

புறஜாதிகளுக்குள்ளே துரத்தப்பட்டவர்கள் எரே 11:14-21

எரே 11:14. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 11:15. மனுபுத்திரனே, நீங்கள் கர்த்தரை விட்டுத் தூரமாய்ப் போங்கள், எங்களுக்கு இந்தத் தேசம் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டதென்று, உன் சகோதரருக்கும், உன் குடும்பத்தாருக்கும் உன் பந்து ஜனங்களுக்கும், இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும், எருசலேமின் குடிகள் சொல்லுகிறார்கள்.

எசே 11:16. ஆகையால் நான் அவர்களைத் தூரமாகப் புறஜாதிகளுக்குள்ளே துரத்தியிருந்தாலும், நான் அவர்களை தேசங்களிலே சிதறடித்திருந்தாலும், நான் அவர்கள் போன தேசங்களில் அவர்களுக்குக் கொஞ்ச காலத்துக்குப் பரிசுத்த ஸ்தலமாக இருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்.

எசே 11:17. ஆதலால் நான் உங்களை ஜனங்களிடத்திலிருந்து சேர்த்து, நீங்கள் சிதறடிக்கப்பட்ட தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு.

எசே 11:18. அவர்கள் அங்கே வந்து, அதில் சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமாயிருக்கிறதையெல்லாம் அதிலிருந்து அகற்றுவார்கள்.

எசே 11:19. அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்.

எசே 11:20. அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.

எசே 11:21. ஆனாலும் சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான தங்கள் இருதயத்தின் இச்சையிலே எவர்கள் நடக்கிறார்களோ அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலைகளின்மேல் சுமரப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

சீயோனிலே நிர்விசாரமாய் ஜீவிக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருக்கு எசேக்கியேல் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். பாபிலோன் தேசத்திலே சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், சீயோனை நினைத்து துக்கித்துப் புலம்புகிறார்கள். எசேக்கியேல் அவர்களுக்கு கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சிறையிருப்புக்குப் போனவர்களில் பரிசுத்தவான்களும் இருக்கிறார்கள். அவர்கள் அந்நிய தேசத்திலிருந்தாலும், அங்கே, கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறார்கள். சிறையிருப்புக்குப் போகாமல் எருசலேமிலே தங்கியிருக்கிற யூதர்களோ, சிறையிருப்புக்குப் போனவர்களை அவமானப்படுத்துகிறார்கள். தூஷண வார்த்தைகளினால் அவர்களை வேதனைப்படுத்துகிறார்கள்.

"நீங்கள் கர்த்தரை விட்டுத் தூரமாய்ப் போங்கள், எங்களுக்கு இந்தத் தேசம் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது" (எசே 11:15) என்று, சிறையிருப்புக்குப்போன தங்கள் சகோதரருக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் தங்கள் பந்து ஜனங்களுக்கும், இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும், எருசலேமிலே தங்கியிருக்கிற யூதர்கள் சொல்லுகிறார்கள்.

சிறையிருப்புக்குப்போனவர்கள் எசேக்கியேலுக்கு சகோதரரும், அவருடைய குடும்பத்தாரும், அவருடைய பந்து ஜனங்களுமாயிருக்கிறார்கள். கர்த்தர் சிறையிருப்புக்குப்போன யூதர்கள்மேலும் பிரியமாயிருக்கிறார். அவர்கள் அந்நிய தேசத்திலே இருந்தாலும், தங்கள் சொந்த பந்தங்களினால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எசேக்கியேலைப்போல அவர்களும் யூதாதேசத்திலிருந்து சிறையிருப்புக்கு வந்திருக்கிறவர்கள். இவையெல்லாவற்றையும்விட அவர்கள் எல்லோரையும் ஒரே ஆவியானவரே ஆளுகை செய்கிறார்.

சிறையிருப்புக்குப் போகாமல் எருசலேமிலே தங்கியிருக்கிற யூதர்கள், சிறையிருப்பிலிருக்கிற தங்கள் சகோதரரை நிந்திக்கிறார்கள். சிறையிருப்பிலிருக்கிறவர்கள் தங்கள் ஆவியில் சோர்ந்துபோயிருக்கிறார்கள். தங்கள் சரீரத்தில் பலவீனமாயிருக்கிறார்கள். அவர்கள் குறைவுபட்டிருக்கிறார்கள். எருசலேம் நகரத்திலே அவர்களுடைய உற்றார் உறவினர்கள் எல்லோரையும் விட்டுவிட்டு, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே தனிமையில் வாடுகிறார்கள்.

எருசலேமிலுள்ள யூதர்கள் பாபிலோன் ராஜாவுக்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். இதன் நிமித்தமாய் எருசலேமில் தங்கியிருக்கிற யூதர்கள் அவர்களை யூதமார்க்கத்திலிருந்து புறம்பே தள்ளிவிடுகிறார்கள். "நீங்கள் கர்த்தரைவிட்டு தூரமாய்ப் போங்கள்" என்று சிறையிருப்பிலிருக்கிறவர்களிடத்தில் சொல்லுகிறார்கள்.

எருசலேமிலே தங்கியிருக்கிற யூதர்கள், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களோடு எந்தவித ஐக்கியமும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அவர்களோடு தங்களுக்கு பங்கோ, பாத்தியமோ எதுவுமில்லை என்று எருசலேமின் குடிகள் தீர்மானமாயிருக்கிறார்கள்.

"எங்களுக்கு இந்த தேசம் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது" என்று எருசலேமின் குடிகள் சொல்லுகிறார்கள். சிறையிருப்புக்குப்போனவர்களோ, பாபிலோன் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து, அவனுடைய நுகத்தை தங்கள் கழுத்தின்மேல் சுமந்து கொண்டு, யூதாதேசத்தைவிட்டு, பாபிலோன் தேசத்திற்கு சிறையாய்ப்போனவர்கள். ஆகையினால் அவர்களுக்கு யூதாதேசத்தில் சுதந்தரமில்லை என்று எருசலேமின் குடிகள் சொல்லுகிறார்கள்.

கர்த்தரே இஸ்ரவேல் வம்சத்தாரை புறஜாதிகளுக்குள்ளே தூரமாய்த் துரத்தினார். கர்த்தரே அவர்களை தேசங்களிலே சிதறடித்தார். சிறையிருப்புக்குப் போனவர்களுக்கு கர்த்தர் கிருபையுள்ள வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார்.

"கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" (ஏசா 66:5).

தம்முடைய கரம் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக கிரியை செய்ததை கர்த்தர் அங்கீகரிக்கிறார். கர்த்தருடைய கோபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் தங்களை கைவிட்டுவிட்டாரோ என்று அவர்கள் வேதனை யோடிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்கள்மீது இரக்கம் காண்பிக்க சித்த முள்ளவராயிருக்கிறார். அவர்கள் போன தேசங்களில், அவர்களுக்கு கொஞ்சகாலத்திற்கு தாமே பரிசுத்த ஸ்தலமாகயிருப்பதாக கர்த்தராகிய ஆண்டவர் வாக்குப்பண்ணுகிறார்.

எருசலேமில் வாசம்பண்ணுகிற யூதாவின் மனுஷருக்கு தேவாலயம் இருக்கிறது. ஆனால் அந்த தேவாலயத்தில் கர்த்தருடைய பிரசன்னம் வாசம்பண்ண வில்லை. பாபிலோன் தேசத்திலிருக்கிற யூதர்களுக்கு தேவாலயம் இல்லை. ஆனால் கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கிறார்.

சிறையிருப்பிலிருக்கிறவர்கள் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய வேதனைகளுக்கு முடிவு வரும். அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பிலிருந்து அவர்களை விடுவிப்பார். அவர்களை மறுபடியுமாய் அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்து வந்து, அங்கே அவர்களை குடியேற்றுவார்.

"நான் உங்களை ஜனங்களிடத்திலிருந்து சேர்த்து, நீங்கள் சிதறடிக்கப்பட்ட தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" (எசே 11:17) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய முற்பிதாக்கள் கானான் தேசத்திற்குள்ளே, முதல் முதலாக பிரவேசித்தபோது, அவர்களுக்கு கொஞ்சம் நிலம் மாத்திரமே கொடுக்கப்பட்டது. அதன் பின்பு கர்த்தர் அவர்களுடைய எல்லைகளை விஸ்தாரம் பண்ணினார். சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிறவர்களுக்கு, இஸ்ரவேல் தேசத்திலே, ஆரம்பத்தில் கொஞ்சம் நிலம் மாத்திரமே கொடுக்கப்படும், கர்த்தர் ஏற்ற வேளையிலே, அவர்களுக்கு இஸ்ரவேல் தேசத்தை முழுவதுமாகக் கொடுப்பார்.

இஸ்ரவேல் வம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வேதனைகளை அனுபவித்ததினால், அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டது. அவர்களுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. அவர்கள் விக்கிரகாராதனை என்னும் பாவத்திலிருந்து குணமாக்கப்பட்டார்கள்.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். கர்த்தர் அவர்களுக்கு ஏகஇருதயத்தைத் தந்தார். அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்தார். கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டார். அவர்களுக்கு சதையான இருதயத்தை அருளினார்.

சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிற யூதர்களை, கர்த்தர் புதிய விருட்சங்களாக நாட்டுவார். அவர்கள் அங்கே வந்து, அதில் சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமாயிருக்கிறதை யெல்லாம் அதிலிருந்து அகற்றுவார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்து, அவருடைய நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யவார்கள் (எசே 11:18,19). காட்டு ஒலிவமரங்களைப் போல இருந்த அவர்களை, கர்த்தர் நல்ல ஒலிவமரங்களாக மாற்றுவார்.

கர்த்தர் இங்கு வாக்குப்பண்ணுவது, சுவிசேஷத்தின் வாக்குத்தத்தமாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை விசுவாசிக்கிறவர்களுடைய இருதயங்களைப் புதுப்பிக்கிறார். ஆவியானவர் அவர்களுக்குள் கிரியை நடப்பித்து, அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் உருவாக்குகிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை பரமகானானுக்குள் பிரவேசிக்க தகுதிப்படுத்துகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை கர்த்தர் பரிசுத்தப்படுத்துகிறார். அவர்களுடைய உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு புதிய பிரமாணங்களைக் கொடுக்கிறார். சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், தங்கள் ஜீவியத்தில் புதிய இலக்குகளையும், புதிய முடிவுகளையும் நோக்கிப் பார்க்கிறார்கள்.

நமக்கு புதிய பெயரும், புதிய முகமும் இருந்தாலும், நம்முடைய ஆவி புதுப்பிக்கப்படாமல், நம்மால் ஒரு நன்மையும் செய்ய முடியாது. சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தர் புதிய ஆவியைக் கொடுப்பது, அவருடைய கிருபையுள்ள ஈவாகும். இது இஸ்ரவேல் வம்சத்தாரின் சுயமுயற்சியினாலோ, சுயபக்தியினாலோ சுயபுத்தியினாலோ உண்டானதல்ல. இது கர்த்தருடைய சுத்த கிருபை. இது அவருடைய கிருபையுள்ள கிரியை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்கிறார்கள். கர்த்தருடைய நியாயங்களை கைக்கொள்கிறார்கள். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு நியமித்த வழிகளில் அவரைப் பின்பற்றுகிறார்கள். வழிவிலகிப் போகாமல் கர்த்தரையே நோக்கிப் பார்க்கிறார்கள். "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" (எசே 11:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கிருபையை புறக்கணித்தவர்கள், கர்த்தரை பின்பற்றாமல், விக்கிரகங்களை பின்பற்றுவார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடவாமல் தங்கள் இருதயத்தின் இச்சையிலே நடப்பார்கள். அவர்கள்மீது கர்த்தருடைய கோபமும், சாபமும் வரும்.

"ஆனாலும் சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான தங்கள் இருதயத்தின் இச்சையிலே எவர்கள் நடக்கிறார்களோ அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலைகளின்மேல் சுமரப்பண்ணுவேன்" (எசே 11:21) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய மகிமை புறப்பட்டது எசே 11:22-25

எசே 11:22. அப்பொழுது கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து எழும்பின; சக்கரங்களும் அவைகளுக்கு அருகே சென்றன; இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அவைகளின்மேல் உயர இருந்தது.

எசே 11:23. கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவிலிருந்தெழும்பி, நகரத்துக்குக் கிழக்கே இருக்கிற மலையின்மேல் போய் நின்றது.

எசே 11:24. பின்பு ஆவியானவர் என்னை எடுத்து, என்னை தேவனுடைய ஆவிக்குள்ளான தரிசனத்திலே கல்தேயாவுக்குச் சிறைப்பட்டுப்போனவர்கள் இடத்திலே கொண்டு போய் விட்டார்; அப்பொழுது நான் கண்ட தரிசனம் என்னிலிருந்து எடுபட்டுப்போயிற்று.

எசே 11:25. கர்த்தர் எனக்குக் காண்பித்த யாவையும்சிறையிருப்பிலிருந்தவர்களுக்குச் சொன்னேன்.

கர்த்தருடைய மகிமை எருசலேமிலிருந்தும், தேவாலயத்திலிருந்தும் புறப்பட்டுப்போகிறது. கர்த்தர் தம்முடைய செய்தியை எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு சொல்லுகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய மகிமையின் சாயலை தரிசித்துக் கொண்டிருக்கிறார்.

அப்பொழுது கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து எழும்புகிறது; சக்கரங்களும் அவைகளுக்கு அருகே செல்லுகிறது; இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அவைகளின்மேல் உயர இருக்கிறது (எசே 11:22).

எசேக்கியேல் இதுபோன்ற தரிசனத்தை ஏற்கெனவே தரிசித்திருக்கிறார். "கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டுப் புறப்பட்டு, கேருபீன்களின்மேல் நின்றது. அப்பொழுது கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து, என் கண் காண பூமியைவிட்டு எழும்பின; அவைகள் புறப்படுகையில் சக்கரங்களும் அவைகளுக்குச் சரியாய்ச் சென்றன; கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு வாசலிலே போய் நிற்க, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அவைகளின்மேல் உயர இருந்தது" (எசே 10:18,19).

கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவிலிருந்தெழும்பி, நகரத்துக்குக் கிழக்கே இருக்கிற மலையின்மேல் போய் நிற்கிறது (எசே 11:23). கர்த்தருடைய மகிமை ஒலிவமலையின்மேல் நிற்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் இந்த மலையில்தான் தங்கள் விக்கிரங்களை நிறுவினார்கள்.

"அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான்" (1இராஜா 11:7).

ஒலிவமலையிலிருந்து எருசலேம் நகரத்தை தெளிவாகவும், முழுமையாகவும் பார்க்க முடியும். கர்த்தர் அந்த மலையிலிருந்து புறப்பட்டுப்போய்விடுகிறார். கர்த்தர் சொன்ன பிரகாரமாக, தம்முடைய முகத்தை அவர்களுக்கு மறைக்கிறார்.

"என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று பார்ப்பேன்; அவர்கள் மகா மாறுபாடுள்ள சந்ததி; உண்மையில்லாத பிள்ளைகள்" (உபா 32:20).

புதிய ஏற்பாட்டிலும், ஒலிவமலை மிகவும் முக்கியமானதாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒலிவமலையிலிருந்து எருசலேமைப் பார்த்து அதற்காக கண்ணீர் விட்டழுதார். ரோமப்பேரரசின் மூலமாக எருசலேமுக்கு வரப்போகும் பேரழிவை முன்னறிந்து, கிறிஸ்துவானவர் எருசலேம் நகரத்திற்காக கண்ணீர் விடுகிறார்.

கர்த்தருடைய மகிமை எருசலேம் நகரத்திலிருந்து, நகரத்திற்கு கிழக்கேயிருக்கிற ஒலிவமலையில் போய் நிற்கிறது. நகரத்திலிருக்கிறவர்கள் கூப்பிடும் தூரத்தில்தான் ஒலிவமலையிருக்கிறது. அவர்கள் தம்முடைய சமாதானத்திற்காக கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

அவர்களுடைய பிரச்சனைகளை எசேக்கியேலால் தீர்த்து வைக்க முடியாது. எசேக்கியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற ஏராளமான யூதர்களில் ஒருவர். கர்த்தர் தம்முடைய தெய்வீக தரிசனங்களை அவருக்கு காண்பித்தார். கர்த்தர் எசேக்கியேலுக்குக் காண்பித்த எல்லாவற்றையும் அவர் சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு சொல்ல வேண்டும். இதுவே எசேக்கியேலின் ஊழியம். எசேக்கியேலால் சிறையிருப்பிலிருக்கிறவர்களை இரட்சிக்க முடியாது. இரட்சிப்பு கர்த்தருடையது.

BELLWETHER INTERNATIONAL

எசேக்கியேல் - விரிவுரை
EZEKIEL - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

கர்த்தருடைய தரிசனம் எசேக்கியேலுக்கு நிரந்தரமாககிடைக்க வில்லை. கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவிலிருந்து எழும்பி, நகரத்திற்கு கிழக்கேயிருக்கிற மலையின்மேல்போய் நின்றபின்பு, ஆவியானவர் எசேக்கியேலை எடுத்து, கல்தேயாவுக்கு சிறைப்பட்டுப்போனவர்களிடத்தில் கொண்டு போய்விடுகிறார். ஆவியானவரே அவரை தரிசனத்திலே எருசலேமுக்கு கொண்டு போனார். இப்போது, அதே ஆவியானவரே அவரை, பாபிலோன் தேசத்திற்கு திரும்பவும் கொண்டு வந்து விடுகிறார். அப்பொழுது எசேக்கியேல் கண்ட தரிசனம் அவரிடத்திலிருந்து எடுபட்டுப்போயிற்று.

கர்த்தருடைய மகிமை ஒலிவமலையின் மேல் போய் நின்றபோது, எசேக்கியேல் தன்னுடைய கண்களை ஏறிட்டுப் பார்க்கிறார். ஒலிவன்லையையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதன்பின்பு அவர் கண்ட தரிசனம் அவரிடத்திலிருந்து எடுபட்டுப் போகிறது. தான் கண்டது பரலோக தரிசனம் என்பதை, எசேக்கியேல் தன்னுடைய விசுவாசத்தினால் உறுதிபடுத்திக்கொள்கிறார்.

எசேக்கியேல் தரிசனத்திலே எருசலேமுக்குப் போனார். அவர் ஊழியம் செய்ய வேண்டிய ஸ்தலம் கல்தேயருடைய தேசம். எருசலேமுக்கு எசேக்கியேலை எடுத்துக்கொண்டுபோன ஆவியானவர், மறுபடியுமாய் அவரை கல்தேயருடைய தேசத்திற்கு திரும்பவும் கொண்டு வந்து விடுகிறார். எசேக்கியேல் கல்தேயருடைய தேசத்தில், தன்னோடுகூட சிறையிருப்பிலிருக்கிற ஜனங்களுக்கு, கர்த்தர் தனக்கு காண்பித்த யாவையும் சொல்லவேண்டும்.

கர்த்தருடைய கோபத்தினால் எருசலேமிலே வேதனைகளையும், சாபங்களையும் அனுபவிப்பதைப் பார்க்கிலும், கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருப்பதே எசேக்கியேலுக்கு உத்தமமாய்த் தெரிகிறது.

12 அதிகாரம்

எசேக்கியேல் கர்த்தருடைய மகிமையை தரிசித்தார். அவர் கண்ட தரிசனம் அவரிடத்திலிருந்து எடுபட்டுப்போயிற்று. எசேக்கியேலுக்கு தரிசனம் நின்றுபோனாலும், கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாகிறது.

எசேக்கியேல் பரதேசம் போகும்படி பிரயாண சாமான்களை ஆஸ்த்தப்படுத்த வேண்டும். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தைப் பிடித்துக்கொள்வார்கள். சிதேக்கியா கல்தேயருக்கு பயந்து, தப்பித்து ஓடுவான். ஆனாலும் கல்தேயருடைய போர்வீரர்கள் அவனைப் பிடித்துக் கொள்வார்கள். சிதேக்கியா ராஜா எருசலேமிலிருந்து பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போவான் என்பதற்கு எசேக்கியேலின் பிரயாணம் அடையாளமாயிருக்கிறது (எசே 12:1-16).

எசேக்கியேல் தன்னுடைய அப்பத்தை நடுக்கத்தோடே புசித்து, தன்னுடைய தண்ணீரை தத்தளிப்போடும் விசாரத்தோடும் குடிக்கவேண்டும். கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிடும்போது நகரத்திற்குள்ளே பஞ்சமுண்டாகும் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது (எசே 12:17-20).

கர்த்தர் முன்னறிவிக்கிற காரியங்கள் நிறைவேறுவதற்கு அநேக நாள் செல்லாது. அவை சீக்கிரத்தில் நிறைவேறும். கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் தாமதமில்லாமல் விரைவில் நிறைவேறும் (எசே 12:21-28).

பிரயாணம்
எசே. 12:1-7

எசே 12:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 12:2. மனுபுத்திரனே, நீ கலகவீட்டாரின் நடுவிலே தங்கியிருக்கிறாய்; காணும்படிக்கு அவர்களுக்குக் கண்கள் இருந்தாலும் காணாமற்போகிறார்கள்; கேட்கும்படிக்கு அவர்களுக்குக் காதுகள் இருந்தாலும் கேளாமற்போகிறார்கள்; அவர்கள் கலகவீட்டார்.

எசே 12:3. இப்போதும் மனுபுத்திரனே, நீ பரதேசம் போகும்படி பிரயாண சாமான்களை ஆயத்தப்படுத்தி, பகற்காலத்திலே அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பிரயாணப்படு; உன் ஸ்தலத்தைவிட்டு வேறே ஸ்தலத்துக்கு அவர்களுடைய கண்களுக்கு முன்பாகப் புறப்பட்டுப்போ; அவர்கள் கலகவீட்டாரானபோதிலும் ஒருவேளை சிந்தித்து உணருவார்கள்.

எசே 12:4. சிறையிருப்புக்குப் போகிறவனைப் போல் உன் சாமான்களை நீ பகற்காலத்திலே அவர்கள் கண்களுக்கு முன்பாக வெளியே வைத்து, நீ சாயங்காலத்திலே அவர்கள் கண்களுக்கு முன்பாகச் சிறையிருப்புக்குப் போகிறவனைப் போல் புறப்படுவாயாக.

எசே 12:5. அவர்களுடைய கண்களுக்கு முன்பாக நீ சுவரிலே துவாரமிட்டு, அதின் வழியாய் அவைகளை வெளியே கொண்டு போவாயாக.

எசே 12:6. அவர்களுடைய கண்களுக்கு முன்பாக அவைகளை உன் தோளின்மேல் எடுத்து, மாலைமயங்கும் வேளையிலே வெளியே கொண்டு போவாயாக; நீ தேசத்தைப் பாராதபடி உன் முகத்தை மூடிக்கொள்; இஸ்ரவேல் வம்சத்தாருக்கு உன்னை அடையாளமாக்கினேன் என்றார்.

எசே 12:7. எனக்குக் கட்டளையிட்டபடியே நான் செய்தேன்; சிறைப்பட்டுப்போகும் போது சாமான்களைக் கொண்டு போவதுபோல என் சாமான்களைப் பகற்காலத்தில் வெளியே வைத்தேன்; சாயங்காலத்திலோ கையினால் சுவரிலே துவாரமிட்டு, மாலை மயங்கும் வேளையிலே அவைகளை வெளியே கொண்டுபோய், அவர்கள் கண்களுக்கு முன்பாக அவைகளைத் தோளின் மேல் எடுத்துக்கொண்டுபோனேன்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். கர்த்தர் தனக்கு காண்பித்த தேவதரிசனங்களைப் பற்றி அவர் சிந்தித்துக்கொண்டிருக்கிறார். அதுபோன்ற தரிசனங்களை இன்னும் காணவேண்டும் என்னும் ஆவல் அவருக்குள் உண்டாயிற்று. தேவனுடைய மகிமையைக் காண்பதே மிகப்பெரிய சிலாக்கியம். ஆனால் எசேக்கியேலுக்கு தேவனுடைய மகிமையைப் பற்றிய தரிசனம் இதற்கு பின்பு உண்டாகவில்லை. அவர் இதற்குமேல் தேவனுடைய மகிமையைக் கண்டார் என்று வேதத்திலும் எழுதப்படவில்லை.

ஆனாலும் எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. கர்த்தர் அவருக்கு தம்முடைய மகிமையை தரிசனத்தின் மூலமாய் வெளிப்படுத்தா விட்டாலும், தம்முடைய வார்த்தைகளை அவருக்கு சொல்லுகிறார். நாமும் எசேக்கியேலைப்போல கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தர் நம்மோடு பேசும் வார்த்தைகளை நாம் கவனித்து கேட்கவேண்டும்.

ஒருவேளை நம்முடைய ஆவியில் நாம் பரலோகத்திற்குப் போகாமலிருக்கலாம். நாம் தேவதரிசனங்களை பார்க்காமலிருக்கலாம். கர்த்தருடைய மகிமையை தரிசிக்கக்கூடிய சிலாக்கியம் நமக்கு கிடைக்காமல் போகலாம். ஆனாலும் கர்த்தர் நம்மோடு சொல்லுகிற வார்த்தைகளை நாம் கவனமாய்க் கேட்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

யூதாதேசத்திலே சிதேக்கியா ராஜா யூதர்களை ஆட்சிசெய்துகொண்டிருக்கிறான். அவன் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு போகும் காலம் சமீபித்து வருகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி, கர்த்தருடைய வார்த்தைகளை, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு சொல்லுகிறார்.

யூதர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் யூதாதேசத்தில் ராஜாவாயிருக்கிற சிதேக்கியாவை நம்புகிறார்கள். சிதேக்கியா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்களை விடுவிக்க வருவான் என்று எதிர்பார்க்கிறார்கள். சிதேக்கியா ராஜா யூதாதேசத்தின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் வரையிலும், யூதர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், அவனையே நோக்கிப் பார்ப்பார்கள். அவர்கள் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காமல், சிதேக்கியா ராஜாவின்மீது நம்பிக்கை வைப்பார்கள்.

இந்த சூழ்நிலையில், சிதேக்கியா ராஜா, சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுதலை பண்ணுவதற்கு வரமாட்டான் என்பதை தெளிவுபடுத்துவது கர்த்தருடைய சித்தமாயிற்று. சிதேக்கியா யூதர்களை விடுவிக்கமாட்டான். பாபிலோன் தேசத்தில் சிறையிருப்பிலிருக்கிற மற்ற யூதர்களைப்போல, அவனுடைய சிறைப்பட்டுப்போவான். இந்த சம்பவம் காலதாமதமில்லாமல் சீக்கிரத்தில் நிறைவேறும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய செய்தியை தன்னுடைய வாயினால் சொல்லுவதற்கு முன்பாக, அதை அடையாளங்கள் மூலமாய் வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் யூதர்களுடைய காதுகளில் பேசுவதற்கு முன்பாக, அவர்களுடைய கண்களோடு பேசுகிறார். செவிடர்களுக்கு கற்றுக்கொடுப்பதுபோல, எசேக்கியேல் யூதர்களுக்கு அடையாளங்கள் மூலமாய்க் கற்றுக்கொடுக்கிறார்.

எசேக்கியேல் கலகவீட்டாரின் நடுவிலே தங்கியிருக்கிறார். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், இஸ்ரவேல் வீட்டாராயிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய பார்வையில் கலகவீட்டாராயிருக்கிறார்கள். அவர்களுக்கு கண்கள் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் காண்பதில்லை. கேட்கும்படிக்கு அவர்களுக்கு காதுகள் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை கேட்பதில்லை. எசேக்கியேல் தீர்க்கதரிசி அவர்கள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லவேண்டும்.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், எசேக்கியேல் சிறையிருப்பிலிருக்கிற யூதர்களோடு, வார்த்தைகளால் பேசாமல், அடையாளங்களால் பேசுகிறார். அவர் பரதேசம் போகும்படி பிரயாண சாமான்களை ஆயத்தப்படுத்திக்கொள்கிறார். யூதர்களுடைய கண்களுக்கு முன்பாக எசேக்கியேல் பகற்காலத்திலே பிரயாணப்படுகிறார். அவர் தன்னுடைய ஸ்தலத்தைவிட்டு வேறே ஸ்தலத்திற்கு, அவர்களுடைய கண்களுக்கு முன்பாக புறப்பட்டுப்போகிறார்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் இஸ்ரவேல் வீட்டாராயிருந்தாலும், அவர்கள் கலகவீட்டாராயிருக்கிறார்கள். எசேக்கியேல் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் அவர்கள் பார்க்கிறார்கள். எசேக்கியேல் தனக்கு தேவையான வஸ்திரங்களையும், பணத்தையும் எடுத்துக்கொண்டு பிரயாணம் பண்ணுகிறார். அவர் தங்கியிருக்கிற ஸ்தலத்தில், அவரால் இனிமேல் தங்கமுடியவில்லை. அந்த இடத்தைவிட்டு வெளியேறிப்போகுமாறு கட்டாயம்பண்ணப் படுகிறார். தான் பிரயாணப்பட்டுப்போவதை ஜனங்களெல்லோரும் பார்க்கவேண்டும் என்பதற்காக, எசேக்கியேல் பகற்காலத்திலே, அவர்களுடைய கண்களுக்கு முன்பாக பிரயாணப்படுகிறார்.

சிறையிருப்புக்குப்போகிறவர்கள் தங்களுடைய சாமான்களையெல்லாம், தங்கள் வீடுகளுக்கு முன்பாக வைப்பார்கள். அதுபோலவே எசேக்கியேலும் தன்னுடைய சாமான்களை, தன்னுடைய ஸ்தலத்திற்கு முன்பாக வைக்கிறார். அதை பகற்காலத்திலே, யூதாமனுஷருடைய கண்களுக்கு முன்பாக வெளியே வைக்கிறார். அவர் சாயங்காலத்திலே,எல்லோருடைய கண்களுக்கு முன்பாக சிறையிருப்புக்குப்போகிறவனைப் போல புறப்பட்டுப்போகிறார்.

எசேக்கியேல் பண்டிகையை அனுசரிப்பதற்காகவோ, விருந்துகளில் பங்கு பெறுவதற்காகவோ பிரயாணப்படவில்லை. அவர்கள் சந்தோஷமாக பிரயாணம் பண்ணுவார்கள். எசேக்கியேலோ சிறையிருப்புக்குப்போகிறவனைப்போல புறப்பட்டுப்போகிறார். சிறையிருப்புக்குப் போகிறவர்கள் துக்கத்தோடும், வேதனை யோடும், அழுகையோடும் புறப்பட்டுப் போவார்கள். எசேக்கியேலும் சிறையிருப்புக்குப் போகிறவனைப்போல, அழுதுகொண்டு புறப்பட்டுப்போகிறார்.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். அலங்கத்திலுள்ள எல்லா வாசல்களும் அடைக்கப்பட்டிருக்கிறது. நகரத்திற்குள்ளே போகிறவர் ஒருவருமில்லை. நகரத்திலிருந்து வெளியே போகிறவரும் ஒருவருமில்லை. கதவுகள் திறக்கப்பட்டிருந்தாலும் அங்கே காவல் அதிகமாயிருக்கிறது. அலங்கத்திற்குள்ளே சிதேக்கியாவின் யுத்தவீரர்களும், அலங்கத்திற்கு வெளியே கல்தேயருடைய யுத்தவீரர்களும் கூட்டமாய்க் கூடியிருக்கிறார்கள். எசேக்கியேலால் அலங்கத்தின் வாசல் வழியாய் பிரயாணம்பண்ண முடியாது.

கர்த்தர் எசேக்கியேலிடம் "அவர்களுடைய கண்களுக்கு முன்பாக நீ சுவரிலே துவாரமிட்டு, அதின் வழியாய் அவைகளை வெளியே கொண்டு போவாயாக" (எசே 12:5) என்று சொல்லுகிறார். எருசலேமைச் சுற்றிலும் கல்தேயர்கள் முற்றிக்கைபோட்டிருக்கிறார்கள். அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ண தைரியமில்லாதவர்கள், பயத்தினால் நடுங்குவார்கள். தப்பித்து ஓடுவதற்கு முயற்சி பண்ணுவார்கள்.

யுத்தம் பண்ணுவதற்கு பயந்து தப்பித்து ஓடுகிறவர்கள், சுவரிலே துவாரமிட்டு, யாருக்கும் தெரியாமல், அதன் வழியாக தப்பித்து ஓடிவிடுவார்கள். எசேக்கியேலும் அதுபோலவே சுவரிலே துவாரமிட்டு, அதன் வழியாய் புறப்பட்டுப்போகவேண்டும். அவர் போகும்போது தன்னுடைய பிரயாண சாமான்களை, தன்னுடைய தோளின்மேல் சுமந்துகொண்டு, வெளியே கொண்டுபோக வேண்டும்.

எசேக்கியேல் நகரத்திற்கு வெளியே பகற்காலத்தில் போகாமல் மாலை மயங்கும் வேளையிலே வெளியேறவேண்டும். அவர் போகும்போது இரகசியமாய்ப் போகாமல், எல்லோரும் பார்க்கும்படி, அவர்களுடைய கண்களுக்கு முன்பாக போகவேண்டும். தன்னுடைய தோளின்மேல் பிரயாண சாமான்களை எடுத்துக்கொண்டு போகவேண்டும்.

எசேக்கியேல் வெளியிலே போகும்போது தேசத்தைப் பாராதபடி தன்னுடைய முகத்தை மூடிக்கொள்ளவேண்டும். கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அடையாளமாக்கியிருக்கிறார் (எசே 12:6). நகரத்தைவிட்டு வெளியேறும்போது, யுத்தவீரர்கள் யாரும் தன்னை பார்த்துவிடக் கூடாது. இதற்காக, எசேக்கியேல் வெளிச்சமில்லாத மாலைவேளையிலே, பயத்தோடும் நடுக்கத்தோடும் புறப்பட்டுப்போகிறார். அவர் யூதர்களுடைய கண்களுக்கு முன்பாக சிறையிருப்புக்குப் போகிறவனைப்போல புறப்பட்டுப்போகிறார்.

எசேக்கியேல் தேசத்தைப் பாராதபடி தன் முகத்தை மூடிக்கொண்டு போகிறார். முகத்தை மூடுவது அவருடைய வேதனைகளுக்கும், துக்கத்திற்கும் அடையாளம். யுத்தம்பண்ண பெலமில்லாத ஒருவனைப்போல, ஒரு கோழை தப்பித்துப்போவதைப்போல, எசேக்கியேல் மாலைமயங்கும் வேளையிலே, தன் முகத்தை மூடிக்கொண்டு போகிறார்.

எசேக்கியேல் புறப்பட்டு வெளியேறிப்போவதை, யூதர்கள் பார்ப்பார்கள். "அவர்கள் கலகவீட்டாரானபோதிலும், ஒருவேளை சிந்தித்து உணருவார்கள்" என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். எசேக்கியேல் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார்.

"எனக்குக் கட்டளையிட்டபடியே நான் செய்தேன்; சிறைப்பட்டுப்போகும்போது சாமான்களைக் கொண்டுபோவதுபோல என் சாமான்களைப் பகற்காலத்தில் வெளியே வைத்தேன்; சாயங்காலத்திலோ கையினால் சுவரிலே துவாரமிட்டு, மாலை மயங்கும் வேளையிலே அவைகளை வெளியே கொண்டுபோய், அவர்கள் கண்களுக்கு முன்பாக அவைகளைத் தோளின் மேல் எடுத்துக்கொண்டுபோனேன்" (எசே 12:7) என்று எசேக்கியேல் சொல்லுகிறார்.

எருசலேமில் இருக்கிற அதிபதி எசே. 12:8-16

எசே 12:8. விடியற்காலத்திலே கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 12:9. மனுபுத்திரனே, கலகவீட்டாராகிய இஸ்ரவேல் வம்சத்தார் உன்னைப் பார்த்து: நீ செய்கிறது என்னவென்று உன்னைக் கேட்டார்கள் அல்லவா?

எசே 12:10. இது எருசலேமில் இருக்கிற அதிபதியின்மேலும் அதின் நடுவில் இருக்கிற இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரின்மேலும் சுமரும் பாரம் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று அவர்களிடத்தில் சொல்லு.

எசே 12:11. நீ அவர்களை நோக்கி: நான் உங்களுக்கு அடையாளமாயிருக்கிறேன்; நான் செய்வது எப்படியோ, அப்படியே அவர்களுக்கும் செய்யப்படும்; சிறைப்பட்டுப் பரதேசம் போவார்கள்.

எசே 12:12. அவர்கள் நடுவில் இருக்கிற அதிபதி மாலைமயங்கும் போது தோளின்மேல் சுமைசுமந்து புறப்படுவான்; வெளியே சுமைகொண்டு போகச் சுவரிலே துவாரமிடுவார்கள்; கண்ணினாலே அவன் தன் தேசத்தைக் காணாதபடி தன் முகத்தை மூடிக்கொள்வான்.

எசே 12:13. நான் என் வலையை அவன்மேல் வீசுவேன், அவன் என் கண்ணியிலே பிடிபடுவான்; அவனைக் கல்தேயர் தேசமாகிய பாபிலோனுக்குக் கொண்டுபோவேன்; அங்கே அவன் சாவான்; ஆகிலும் அதைக் காணமாட்டான்.

எசே 12:14. அவனுக்கு உதவியாக அவனைச் சுற்றிலும் இருக்கிற யாவரையும் அவனுடைய எல்லா இராணுவங்களையும் நான் சகல திசைகளிலும் தூற்றி, அவர்கள் பின்னே பட்டயத்தை உருவுவேன்.

எசே 12:15. அப்படி நான் அவர்களை ஜாதிகளுக்குள்ளே தூற்றி, அவர்களை தேசங்களிலே சிதறடிக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 12:16. ஆனாலும் தாங்கள் போய்ச்சேரும் ஜாதிகளுக்குள்ளே தங்கள் அருவருப்புகளையெல்லாம் விவரிக்கும்படி, நான் அவர்களில் கொஞ்சம்பேரைப் பஞ்சத்துக்கும் பட்டயத்துக்கும் கொள்ளைநோய்க்கும் தப்பி மீந்திருக்கப்பண்ணுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள் என்று சொல் என்றார்.

எசேக்கியேல் கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே செய்கிறார். இவையெல்லாம் கர்த்தருடைய வார்த்தைக்கு அடையாளமாயிருக்கிறது. கலகவீட்டாராகிய இஸ்ரவேல் வம்சத்தார் எசேக்கியேலைப் பார்ப்பார்கள். அவருடைய கிரியைகளெல்லாம் காண்பார்கள். "நீ செய்கிறது என்ன" என்று யூதர்கள் எசேக்கியேலிடம் கேட்பார்கள் (எசே 12:9).

தான் செய்வதைப்பற்றி கேள்வி கேட்கும் யூதர்களுக்கு, என்ன பதில் சொல்லவேண்டும் என்றும், கர்த்தர் எசேக்கியேலுக்கு தெளிவுபடுத்துகிறார். விடியற்காலத்திலே கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று. யூதர்கள் எசேக்கியேலிடம் என்ன கேட்பார்கள் என்பது கர்த்தருக்கு தெரியும். கர்த்தருக்கு தெரியாத இரகசியம் ஒன்றுமே இல்லை.

கர்த்தர் எசேக்கியேலைப் பார்த்து, "மனுபுத்திரனே, கலகவீட்டாராகிய இஸ்ரவேல் வம்சத்தார் உன்னைப் பார்த்து: நீ செய்கிறது என்னவென்று உன்னைக் கேட்டார்கள் அல்லவா?" (எசே 12:9) என்று கேட்கிறார். அவர்களுக்கு என்ன பதில் சொல்லவேண்டும் என்றும் கர்த்தர் எசேக்கியேலிடம் சொல்லுகிறார்.

"இது எருசலேமில் இருக்கிற அதிபதியின்மேலும் அதின் நடுவில் இருக்கிற இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரின்மேலும் சுமரும் பாரம் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்" (எசே 12:10) என்று எசேக்கியேல் அவர்களிடத்தில் சொல்லவேண்டும்.

எசேக்கியேல் இதுவரையிலும் அடையாளங்கள் மூலமாக அவர்களோடு பேசினார். இனிமேல் அவர் வார்த்தைகள் மூலமாய் அவர்களோடு பேசவேண்டும். எசேக்கியேலின் கிரியைகளுக்கு கர்த்தர் விளக்கம் கொடுக்கிறார். எசேக்கியேல் யூதர்களோடு பேசும்போது, தான் பேசும் வார்த்தைகள், கர்த்தராகிய ஆண்டவருடைய வார்த்தைகள் என்பதை தெளிவாகச் சொல்லவேண்டும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், யூதா தேசத்திலிருக்கிற சிதேக்கியா ராஜாவை நம்புகிறார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற தங்களை விடுவிக்க எருசலேமிலுள்ளவர்கள், வருவார்கள் என்று நம்புகிறார்கள்.

எருசலேமிலுள்ள யூதர்கள் பாபிலோனிலுள்ள யூதர்களுக்கு உதவிசெய்ய வரமாட்டார்கள். அவர்களுக்கு அழிவு வரும். கல்தேயர்கள் எருசலேமிலுள்ள யூதர்களையும் சிறைப்பிடிப்பார்கள். அவர்களை பாபிலோனுக்கு விலங்கிட்டு அழைத்து வருவார்கள். பாபிலோன் சிறையிருப்பிலுள்ள யூதர்கள், எருசலேமிலுள்ள தங்கள் இனத்தாரை நம்பியது வீணாய்ப்போகும். அவர்களுடைய நம்பிக்கை நிறைவேறாது.

எருசலேமிலுள்ள யூதர்களும் சிறைப்பட்டுப்போவார்கள் என்பதற்கு எசேக்கியேல் தீர்க்கதரிசி அடையாளமாயிருக்கிறார். எசேக்கியேல் பாபிலோனிலுள்ள யூதர்களிடம் "நான் செய்வது எப்படியோ, அப்படியே அவர்களுக்கும் செய்யப்படும்; சிறைப்பட்டுப் பரதேசம் போவார்கள்" (எசே 12:11) என்று சொல்லுகிறார்.

கல்தேயர்கள் எருசலேமிலுள்ள யூதர்களை சிறைப்பிடிக்கும்போது, அவர்களுடைய வீட்டைவிட்டு துரத்தி விடுவார்கள். அவர்களுடைய வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம், வீட்டிற்கு வெளியே தூக்கி எறிந்துவிடுவார்கள். தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு, கல்தேயர்கள் அவர்களை கட்டாயம் பண்ணுவார்கள். கல்தேயர்கள் யூதர்களை சிறைப்பிடித்து, விலங்கிட்டு, பாபிலோன் தேசத்திற்கு கொண்டுபோவார்கள். யூதர்கள் எல்லோரும் எசேக்கியேல் பிரயாணம் பண்ணியதைப்போல, பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போவார்கள். இந்த சம்பவத்தை எசேக்கியேல் அடையாளம் மூலமாய் செய்து காண்பித்தார். அவர் செய்தபடியே, யூதாதேசத்திலிருக்கிற யூதர்களுக்கும் செய்யப்படும். அவர்கள் சிறைப்பட்டு பரதேசம் போவார்கள்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவை நம்புகிறார்கள். அவன் தங்களை விடுவிக்க வருவான் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சிதேக்கியா ராஜா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுவிக்க வரமாட்டான். அவனும் எருசலேம் குடிகளைப்போல சிறைப்பிடிக்கப்பட்டு, பாபிலோன் தேசத்திற்கு கொண்டு வரப்படுவான்.

"அவர்கள் நடுவில் இருக்கிற அதிபதி மாலைமயங்கும்போது தோளின்மேல் சுமைசுமந்து புறப்படுவான்; வெளியே சுமைகொண்டுபோகச் சுவரிலே துவாரமிடுவார்கள்; கண்ணினாலே அவன் தன் தேசத்தைக் காணாதபடி தன் முகத்தை மூடிக்கொள்வான்" (எசே 12:12) என்று எசேக்கியேல் சிதேக்கியா ராஜாவைப்பற்றிச் சொல்லுகிறார்.

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவால் கல்தேயரோடு யுத்தம்பண்ணமுடியாது. ராஜா ஜனங்களைப் பாதுகாக்கவேண்டும். ஆனால் சிதேக்கியா ராஜாவோ கல்தேயருக்கு பயந்து, தப்பித்து ஓட முயற்சிபண்ணுவான். ஜனங்களுடைய ஜீவனை பாதுகாப்பதைவிட, தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்வது அவனுக்கு முக்கியமானதாயிருக்கும். சிதேக்கியாவால் கல்தேயருக்கு தப்பிக்க முடியாது. அவர்கள் அவனையும் பிடிப்பார்கள். அவனை சிறைப்பிடித்து பாபிலோன் தேசத்திற்கு இழுத்துக்கொண்டு போவார்கள்.

சிதேக்கியா ராஜா கல்தேயருக்கு பயந்து, தன் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள தப்பித்து ஓடுவான். "நான் என் வலையை அவன்மேல் வீசுவேன், அவன் என் கண்ணியிலே பிடிபடுவான்; அவனைக் கல்தேயர் தேசமாகிய பாபிலோனுக்குக் கொண்டுபோவேன்; அங்கே அவன் சாவான்; ஆகிலும் அதைக் காணமாட்டான். அவனுக்கு உதவியாக அவனைச் சுற்றிலும் இருக்கிற யாவரையும் அவனுடைய எல்லா இராணுவங்களையும் நான் சகல திசைகளிலும் தூற்றி, அவர்கள் பின்னே பட்டயத்தை உருவுவேன்" (எசே 12:13,14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிதேக்கியா ராஜா மூலமாய் தங்களுக்கு விடுதலை உண்டாகும் என்று பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே நம்பிக்கொண்டிருக்கிற யூதர்களுக்கு, எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

சிதேக்கியா ராஜாவும், தன்னுடைய சாமான்களை, தன்னுடைய தோளின்மேல் எடுத்துக்கொண்டு, புறப்பட்டுப்போவான். சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சிபுரிந்த சிதேக்கியா ராஜாவை, கர்த்தர் சுமை தூக்குகிறவனாக மாற்றுகிறார். சிதேக்கியா ராஜா இதற்கு முன்பு சுமை சுமந்து பழக்கப்படாதவன். ஆனால் இப்போதோ எசேக்கியேல் செய்து காண்பித்த பிரகாரம், சிதேக்கியா ராஜாவும் தன்னுடைய சுமைகளை தோளின்மேல் எடுத்துக்கொண்டு போகிறான்.

கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். நகரத்திலே திறப்பு உண்டாயிற்று. கல்தேயர்கள் எருசலேம் நகரத்திற்குள்ளே பிரவேசித்து யூதர்களை தங்கள் பட்டயங்களினால் சங்காரம்பண்ணுகிறார்கள். அரமனையிலிருக்கிற சிதேக்கியா ராஜா, கல்தேயருக்கு பயந்து, தன்னுடைய ஜீவனை தப்புவித்துக்கொள்வதற்காக, மாலைமயங்கும் வேளையிலே, யாருக்கும் தெரியாமல், தன் தோட்டத்தின் வழியாக தப்பித்து ஓடுகிறான்.

கல்தேயருடைய யுத்தவீரர்கள் ராஜாவின் அரமனையை உன்னிப்பாய்க் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். சிதேக்கியா ராஜாவோ, கல்தேயருடைய கண்களில் படாமல் அரமனையைவிட்டு தப்பித்து வெளியேறிப் போகிறான். சிதேக்கியா ராஜாவின் போர்வீரர்கள், அரமனையின் சுவரிலே துவாரமிடுகிறார்கள். சிதேக்கியா மாலைமயங்கும் வேளையிலே தன்னுடைய சாமான்களை தன் தோளின்மேல் எடுத்துக்கொண்டு, அரமனையைவிட்டு தப்பித்து ஓடுகிறான்.

சிதேக்கியா தப்பித்து ஓடும்போது தன்னுடைய முகத்தை மூடிக்கொண்டு போகிறான். கல்தேயர்கள் தன்னைக் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக, சிதேக்கியா தன் முகத்தை மூடிக்கொள்கிறான். கல்தேயரோ அவனைக் கண்டுபிடிக்கிறார்கள். அவனுடைய கைகளில் விலங்கைப்போட்டு, தங்களுடைய தேசமாகிய பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி சிதேக்கியா ராஜாவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொன்னபோது, அவன் பாபிலோன் ராஜாவைப் பார்ப்பான் என்றும், பாபிலோனுக்கு போவான் என்றும் சொன்னார். எசேக்கியேல் தீர்க்கதரிசியோ, "சிதேக்கியாவை கல்தேயர்கள் பாபிலோனுக்கு கொண்டுபோவார்கள் என்றும், அங்கே அவன் சாவான் என்றும், ஆகிலும் அதை காணமாட்டான்" என்றும் சொல்லுகிறார் (எசே 12:13).

"சிதேக்கியா பாபிலோன் ராஜாவைப் பார்ப்பான்" என்று எரேமியா சொல்லுகிறார். "அவன் பாபிலோனை பார்க்கமாட்டான்" என்று எசேக்கியேல் சொல்லுகிறார். இவ்விரண்டு வாக்கியங்களும் முரண்படுவதுபோல இருந்தாலும், இவை இரண்டுமே நிறைவேறிற்று.

சிதேக்கியா ரிப்லாவிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைப் பார்த்தான். சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். நேபுகாத்நேச்சார் ரிப்லாவிலே சிதேக்கியாவுக்கு தீர்ப்பு சொன்னான். சிதேக்கியாவின் குமாரர்கள் அவனுடைய கண்களுக்கு முன்பாக பட்டயத்தினால் வெட்டி கொல்லப்பட்டார்கள். தன்னுடைய பிள்ளைகள் தன்னுடைய கண்களுக்கு முன்பாக சாவதை சிதேக்கியா வேதனையோடு பார்த்தான்.

அதன் பின்பு நேபுகாத்நேச்சார் சிதேக்கியா ராஜாவின் இரண்டு கண்களையும் பிடுங்கி, அவனைக் குருடாக்கிப்போட்டான். அதன் பின்பு கல்தேயர்கள் சிதேக்கியாவை பாபிலோன் தேசத்திற்கு கொண்டு போனார்கள். சிதேக்கியாவின் கண்கள் குருடாயிருக்கிறது. ஆகையினால் சிதேக்கியாவால் பாபிலோன் தேசத்தைப் பார்க்க முடியவில்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், தங்கள் விடுதலைக்காக, சிதேக்கியாவை நம்பினார்கள். சிதேக்கியாவோ சிறைப்பிடிக்கப்பட்டவனாக, கண்பார்வையற்ற குருடனாக, பாபிலோன் தேசத்து சிறையிலே அடைக்கப்படுகிறான். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற மற்ற யூதர்களைப்போல, சிதேக்கியாவும் சிறையிருப்பிலிருக்கிறான்.

சிதேக்கியா ராஜா அரமனையிலிருந்து தப்பித்து ஓடினபோது, அவனுடைய யுத்தவீரர்களும் அவனோடேகூட ஓடிப்போகிறார்கள். கல்தேயர்கள் சிதேக்கியாவைப் பிடித்தபோது, சிதேக்கியாவின் போர்வீரர்கள் அவனைவிட்டு விட்டு தப்பித்து ஓடிவிடுகிறார்கள்.

"அவனுக்கு உதவியாக அவனைச் சுற்றிலும் இருக்கிற யாவரையும் அவனுடைய எல்லா இராணுவங்களையும் நான் சகல திசைகளிலும் தூற்றி, அவர்கள் பின்னே பட்டயத்தை உருவுவேன்" (எசே 12:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாமனுஷரையும், எருசலேமின் குடிகளையும் கர்த்தர் ஜாதிகளுக்குள்ளே தூற்றிப்போடுகிறார். அவர்களை அந்நிய தேசங்களிலே சிதறடிக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுக்கிற நியாயத்தீர்ப்புக்களையெல்லாம் பார்க்கும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய பரிசுத்தரே கர்த்தர் என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள் (எசே 12:15).

கல்தேயர்கள் எசேக்கியேலின் போர்ச்சேவகர்களில் அநேகரை பிடித்து கொன்றுபோடுகிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களில் கொஞ்சம் பேரை பஞ்சத்திற்கும், பட்டயத்திற்கும், கொள்ளைநோயுக்கும் தப்பிக்க வைக்கிறார். சிதேக்கியா ராஜாவின் போர்ச்சேவர்களைப்போலவே, எருசலேமின் குடிகளில் சிலரையும் கர்த்தர் தமக்கு மீதியாக வைக்கிறார்.

அவர்கள் எல்லோரும் இஸ்ரவேலின் தேவனே கர்த்தர் என்பதை அறிஃ கொள்வார்கள். தங்களுக்கு வந்திருக்கும் உபத்திரவங்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் வந்திருக்கிறது என்பதை அங்கீகரிப்பார்கள். தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்வார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், தங்களை பஞ்சத்திற்கும், பட்டயத்திற்கும், கொள்ளைநோய்க்கும் தப்புவிக்கச் செய்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்வார்கள்.

யூதாதேசம் பாழாய்ப்போகும் எசே 12:17-20

எசே 12:17. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 12:18. மனுபுத்திரனே, நீ உன் அப்பத்தை நடுக்கத்தோடே புசித்து, உன் தண்ணீரைத் தத்தளிப்போடும் விசாரத்தோடும் குடித்து,

எசே 12:19. தேசத்திலுள்ள ஜனங்களை நோக்கி: இஸ்ரவேல் தேசத்திலுள்ள எருசலேமின் குடிகளைக்குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், தங்கள் அப்பத்தை விசாரத்தோடே புசித்து, தங்கள் தண்ணீரைத் திகிலோடே குடிப்பார்கள்; அவர்களுடைய தேசத்துக் குடிகளுடைய கொடுமைகளினிமித்தம் அதிலுள்ளதெல்லாம் அழிய, அது பாழாகும்.

எசே 12:20. குடியேறியிருக்கிற பட்டணங்கள் வனாந்தரங்களாகி, தேசம் பாழாய்ப்போகும்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள் என்று சொல் என்றார்.

யூதாதேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் அழிவு வரப்போகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி இந்த அழிவைப்பற்றிச் சொல்லுவதற்கு, மறுபடியுமாய் ஒரு அடையாளத்தைக் காண்பிக்கிறார். அவர் தன்னுடைய அப்பத்தை நடுக்கத்தோடே புசிக்கிறார். தன்னுடைய தண்ணீரை தத்தளிப்போடும் விசாரத்தோடும் குடிக்கிறார் (எசே 12:17).

கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிட்டிருக்கும் போது, நகரத்திற்குள்ளே இருக்கிற யூதர்களுக்கு நடுக்கமும், தத்தளிப்பும், விசாரமும் உண்டாகும். எசேக்கியேல் தன்னுடைய அப்பத்தை நடுக்கத்தோடே புசிப்பதுபோல, எருசலேமின் குடிகளும் தங்களுடைய அப்பத்தை நடுக்கத்தோடும், விசாரத்தோடும் புசிப்பார்கள்.

எசேக்கியேல் தன்னுடைய தண்ணீரை தத்தளிப்போடும் விசாரத்தோடும் குடிப்பது போல அவர்களும் தங்கள் தண்ணீரை திகிலோடே குடிப்பார்கள். தங்களுக்கு விரோதமாக சத்துருக்கள் எப்போது வேண்டுமானாலும் வந்துவிடுவார்கள் என்னும் பயம் அவர்களிடத்தில் இருக்கும். தாங்கள் இப்போது புசிக்கிற அப்பமும், தாங்கள் குடிக்கிற தண்ணீரும், தங்களுக்கு தொடர்ந்து கிடைக்காது என்னும் சந்தேகமும், திகிலும் அவருடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கும்.

யூதாதேசத்து குடிகள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் துணிகரமாக அநியாயங்களையும் அக்கிரமங்களையும் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். யூதாதேசத்து குடிகளுடைய கொடுமைகளினிமித்தம் தேசத்திலுள்ளதெல்லாம் அழிந்துபோகும். யூதாதேசம் பாழாய்ப்போகும்.

ஒரு தேசத்தின் நீதி அழியும்போது, அந்த தேசத்திலுள்ள பொருட்களெல்லாம் அழிந்துபோகும். எருசலேம் நகரத்திலும், யூதாவின் மற்ற பட்டணங்களிலும் ஏராளமான ஜனங்கள் குடியிருக்கிறார்கள். அந்தப் பட்டணங்களெல்லாம் குடியற்றுப்போகும். இப்போது அந்தப் பட்டணங்கள் செழித்திருக்கிறது.

யூதாதேசத்திற்கு அழிவு வரும்போது அதன் பட்டணங்களெல்லாம் பாழாய்ப்போகும். அப்போது யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய தேவனே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள்.

கர்த்தருடைய வார்த்தைகள் தாமதிப்பதில்லை எசே 12:21-28

எசே 12:21. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 12:22. மனுபுத்திரனே, நாட்கள் நீடிக்கும், தரிசனம் எல்லாம் அவமாகும் என்று இஸ்ரவேல் தேசத்திலே வழங்கும் பழமொழி என்ன?

எசே 12:23. ஆகையால் நீ அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், அவர்கள் இனி இஸ்ரவேலிலே இந்தப் பழமொழியைச் சொல்லி வராதபடிக்கு நான் அதை ஒழியப்பண்ணுவேன்; நாட்களும் எல்லாத் தரிசனத்தின் பொருளும் சமீபித்து வந்தன என்று அவர்களோடே சொல்லு.

எசே 12:24. இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவில் இனிச் சகல கள்ளத்தரிசனமும் முகஸ்துதியான குறிசொல்லுதலும் இராமற்போகும்.

எசே 12:25. நான் கர்த்தர், நான் சொல்லுவேன், நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும்; இனித் தாமதியாது; கலகவீட்டாரே, உங்கள் நாட்களிலே நான் வார்த்தையைச் சொல்லுவேன், அதை நிறைவேறவும் பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எசே 12:26. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 12:27. மனுபுத்திரனே, இதோ, இஸ்ரவேல் வம்சத்தார்: இவன் காண்கிற தரிசனம் நிறைவேற அநேகநாள் செல்லும்; தூரமாயிருக்கிற காலங்களைக்குறித்து இவன் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான் என்கிறார்கள்.

எசே 12:28. ஆகையால் என் வார்த்தைகளில் ஒன்றாகிலும் இனித் தாமதிப்பதில்லையென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; நான் சொன்ன வார்த்தை நிறைவேறும் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று அவர்களோடே சொல் என்றார்.

யூதாதேசத்திலே குடியிருக்கிற யூதர்கள் நிர்விசாரமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. அவர்கள் தேவனுடைய கோபத்தையும், அவருடைய நியாயத்தீர்ப்பையும் குறித்து கரிசனையற்றவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களும் புதுப்பிக்கப்படவில்லை. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய், தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும், நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும் அவர்களுக்கு சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். தங்கள் பாவங்களில் தொடர்ந்து நிலைத்திருக்கிறார்கள்.

யூதாவிலே குடியிருக்கிற யூதர்கள் கர்த்தரை நம்பாமல், தங்கள் ராஜாவை நம்புகிறார்கள். எருசலேமின் அலங்கங்களை நம்புகிறார்கள். தங்களுடைய சுயபலத்தையும், தங்கள் ஐசுவரியங்களையும் நம்புகிறார்கள். கர்த்தரோ அவர்களை எச்சரித்தும், அவர்கள் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை.

யூதாதேசத்து குடிகளுடைய கொடுமைகளினிமித்தம், அவர்களுடைய தேசம் பாழாய்ப்போகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். தம்முடைய வார்த்தைகளை தரிசனங்கள் மூலமாகவும், அடையாளங்கள் மூலமாகவும் உறுதிபண்ணுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைகள் உடனே நிறைவேறாது என்று சொல்லி, தங்கள் இருதயத்தில் இறுமாப்பாயிருக்கிறார்கள்.

"கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு சீக்கிரத்தில் வரும்" என்று தீர்க்கதரிசிகள் சொன்னாலும், அவர்கள் "நாட்கள் நீடிக்கும், தரிசனமெல்லாம் அவமாகும்" என்று இஸ்ரவேல் தேசத்தில் வழங்கும் பழமொழியை நம்புகிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு உடனே நிறைவேறாது என்றும், அது நிறைவேற காலதாமதமாகும் என்றும் நினைக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும் நம்பாமல், தங்கள் தேசத்தில் வழங்கும் பழமொழியை நம்புகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பழமொழியை ஒழியப்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். "அவர்கள் இனி இஸ்ரவேலிலே இந்தப் பழமொழியைச் சொல்லி வராதபடிக்கு நான் அதை ஒழியப்பண்ணுவேன்" (எசே 12:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைகள் காலதாமதமில்லாமல், சீக்கிரத்தில் நிறைவேறும் என்பதை எருசலேமின் குடிகள் அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் எசேக்கியேலிடம், "நாட்களும் எல்லாத் தரிசனத்தின் பொருளும் சமீபித்து வந்தன என்று அவர்களோடே சொல்லு" (எசே 12:23) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் எசேக்கியேலின் தரிசனத்தை நம்புகிறார்கள். ஆனால் அந்த தரிசனம் உடனே நிறைவேறாது என்றும் சொல்லுகிறார்கள். "இவன் காண்கிற தரிசனம் நிறைவேற அநேகநாள் செல்லும்; தூரமாயிருக்கிற காலங்களைக்குறித்து இவன் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான்" (எசே 12:27) என்று இஸ்ரவேல் வம்சத்தார் எசேக்கியேலின் தரிசனத்தைக் குறித்து சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு அக்கறை காண்பிக்கவில்லை. எசேக்கியேல் காண்கிற தரிசனம் சீக்கிரத்தில் நிறைவேறாது என்று சொல்லி, அவர்கள் எசேக்கியேலையும், அவர் காண்கிற தரிசனங்களையும் அசட்டைபண்ணிவிடுகிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்னும் எண்ணம் அவர்களிடத்தில் சிறிதுமில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்தில் வழங்கும் பழமொழிகளை நம்பி, தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். "நாட்களும் எல்லா தரிசனத்தின் பொருளும் சமீபித்து வந்தன" (எசே 12:23) என்றும், "என் வார்த்தைகளில் ஒன்றாகிலும் இனி தாமதிப்பதில்லை" (எசே 12:28) என்றும் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் வழங்கும் பழமொழியில் உண்மையில்லை. அது சத்தியத்திற்கு விரோதமாயிருக்கிறது. கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசனங்களையும், கள்ளவார்த்தைகளையும் ஒழியப்பண்ணுவார். கர்த்தருடைய வார்த்தைகள் மாத்திரமே நிறைவேறும். அதுவும் காலதாமதமில்லாமல், சீக்கிரத்தில் நிறைவேறும்.

கள்ளத்தீர்க்கதரிசனங்களும், கள்ளவார்த்தைகளும் ஜனங்களுக்கு மாயையான நம்பிக்கையைக் கொடுக்கிறது. அவர்கள் மாயையை நம்பி அழிந்து போகிறார்கள். "இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவில் இனிச் சகல கள்ளத்தரிசனமும் முகஸ்துதியான குறிசொல்லுதலும் இராமற்போகும்" (எசே 12:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே வார்த்தையாகயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையைச் சொல்லுவார். அவர் சொல்லும் வார்த்தை தாமதமில்லாமல் நிறைவேறும். "கலகவீட்டாரே, உங்கள் நாட்களிலே நான் வார்த்தையைச் சொல்லுவேன், அதை நிறைவேறவும் பண்ணுவேன்" (எசே 12:25) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகள் நிறைவேறும். கர்த்தரே தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தும் தரிசனங்களையும், வார்த்தைகளையும், ஜனங்கள் மத்தியிலே உண்மையாய்ச் சொல்லவேண்டும். கர்த்தர் காண்பிக்கும் ஒவ்வொரு தரிசனத்தின் பொருளும் நிறைவேறும் காலம் சமீபத்திலிருக்கிறது (எசே 12:23).

13 அதிகாரம்

கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகள், மனுஷருடைய பாவங்களை கண்டித்து உணர்த்துகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளோ பாவிகளுக்கு சாதகமாகப் பேசுகிறார்கள். அவர்களுடைய பாவங்களுக்கு தண்டனை வராது என்று சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருக்கு விரோதமான காரியங்களை நடப்பிக்கிறார்கள். அவர்களுடைய பொய்யான தீர்க்கதரிசன வார்த்தைகள் ஜனங்களை மோசம்போக்குகிறது.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு கள்ளத்தீர்க்கதரிசிகளின் பாவங்களைப்பற்றி வெளிப்படுத்துகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளின் பாவங்களும், அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற தண்டனைகளும் (எசே 13:1-16) கள்ளத்தீர்க்கதரிசினிகளின் பாவங்கள் (எசே 13:17-23).

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு பிரியமான வார்த்தைகளைச் சொல்லு கிறார்கள். அவர்களை பாவங்களில் வழிநடத்துகிறார்கள். பாவிகளுக்கு சமாதானமில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகளோ பாவிகளுக்கு சமாதானம் உண்டு என்று சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அவர்களுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறாது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் எசே 13:1-9

எசே 13:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 13:2. மனுபுத்திரனே, தீர்க்கதரிசனம் சொல்லுகிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக நீ தீர்க்கதரிசனம் உரைத்து, தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே எடுத்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வர்களோடே நீ சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எசே 13:3. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!

எசே 13:4. இஸ்ரவேலே, உன் தீர்க்கதரிசிகள் வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

எசே 13:5. நீங்கள் கர்த்தருடைய நாளிலே யுத்தத்தில் நிலைநிற்கும்படிக்கு, திறப்புகளில் ஏறினதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாருக்காகச் சுவரை அடைத்ததுமில்லை.

எசே 13:6. கர்த்தர் தங்களை அனுப்பாதிருந்தும், கர்த்தர் உரைத்தாரென்று சொல்லி, அவர்கள் அபத்தத்தையும் பொய்க்குறியையும் தரிசித்து, காரியத்தை திர்வாகம் பண்ணலாமென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள்.

எசே 13:7. நான் உரைக்காதிருந்தும், நீங்கள் கர்த்தர் உரைத்தார் என்று சொல்லும்போது, அபத்தமான தரிசனையைத் தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லுகிறீர்கள் அல்லவா?

எசே 13:8. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நீங்கள் அபத்தமானதைச் சொல்லி, பொய்யானதைத் தரிசிக்கிறபடியினால், இதோ, நான் உங்களுக்கு விரோதமானவர் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 13:9. அபத்தமானதைத் தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு என் கை விரோதமாயிருக்கும்; அவர்கள் என் ஜனத்தின் சங்கத்தில் இருப்பதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாரின் அட்டவணையில் எழுதப்படுவதுமில்லை; இஸ்ரவேல் தேசத்துக்குள் பிரவேசிப்பதுமில்லை; அப்பொழுது நான் கர்த்தராகிய ஆண்டவரென்று அறிந்துகொள்வீர்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் எருசலேமிலும் இருக்கிறார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலும் இருக்கிறார்கள். இவர்களைக் குறித்து எரேமியா ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன்; விபசாரம்பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத் திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள்; அவர்கள் எல்லாரும் எனக்குச் சோதோமைப்போலும், அதின் குடிகள் கொமோராவைப்போலும் இருக்கிறார்கள்" (எரே 23:14).

"மேலும், உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம்போக்க வொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக்காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 29:8).

எசேக்கியேல் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும். ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கக்கூடாது. அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளையும், அவர்களுடைய பொய்யான வார்த்தைகளையும் நம்பக்கூடாது.

"மனுபுத்திரனே, தீர்க்கதரிசனம் சொல்லுகிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக நீ தீர்க்கதரிசனம் உரை" (எசே 13:2) என்று கர்த்தர் எசேக்கியேலிடம் சொல்லுகிறார். இவர்கள் தங்கள் இருதயத்திலிருக்கிறதையே எடுத்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். இவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள். கர்த்தர் இவர்களுக்கு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்தவில்லை. இவர்கள் தங்கள் சொந்த வார்த்தைகளை, கர்த்தருடைய வார்த்தைகளாக சொல்லிவிடுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் வம்சத்தாரை மோசம்போக்குகிறார்கள். இவர்கள் தங்களுடைய கபடவார்த்தைகளினாலும், சாதுரிய பேச்சுக்களினாலும், ஆசை வார்த்தைகளினாலும் இஸ்ரவேல் வம்சத்தாரை வஞ்சிக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள். எசேக்கியேல் இவர்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எசேக்கியேல் கள்ளத்தீர்க்கதரிசிகளை மதிகெட்ட தீர்க்கதரிசிகள் என்று சொல்லுகிறார். இவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளின் பாவங்களை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். கர்த்தர் இவர்களை தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கவில்லை. இவர்கள் தாங்களாகவே தங்களை தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

"தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!" (எசே 13:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். இவர்கள் வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் (எசே 13:4).

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தருடைய வெளிப்பாடு கிடைக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய இரகசியங்களை தரிசிக்கவில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தில் இருக்கிறதை எடுத்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தங்களை அனுப்பாதிருந்தும், கர்த்தர் உரைத்தாரென்று சொல்லி, அவர்கள் அபத்தத்தையும் பொய்க்குறியையும் தரிசித்து, காரியத்தை நிர்வாகம்பண்ணலாமென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள் (எசே 13:6).

கர்த்தருடைய வார்த்தைகளும், வெளிப்பாடுகளும், தரிசனங்களும் பரிசுத்தமானவை. ஆனால் இவர்களோ கர்த்தருடைய வார்த்தைகளை நிந்திக்கிறார்கள். கர்த்தருடைய வெளிப்பாடுகளையும் தரிசனங்களையும் கள்ளத்தீர்க்கதரிசிகள் மதிப்பதில்லை. கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களை, கள்ளத்தீர்க்கதரிசிகள் அசுத்தப்படுத்தி, அதை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் நிறைவேறாது. ஜனங்களை வஞ்சிப்பதற்காக, இவர்கள் தங்கள் இருதயத்தில் இருக்கிறதை தீர்க்கதரிசனங்களாக சொல்லிவிடுகிறார்கள். நிறைவேறாத வார்த்தைகளை சொல்லுவதினால், ஜனங்கள் மத்தியில் தீர்க்கதரிசிகளுக்கும், தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கும் மதிப்பும், முக்கியத்துவமும் இல்லாமல் போய்விடும்.

கர்த்தரை நம்பாத நாஸ்திகர்கள்கூட, கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பார்த்து, தாங்களும் தீர்க்கதரிசிகள் என்று சொல்லிவிடுவார்கள். இவர்கள் ஒன்றும் தரிசிக்கமாட்டார்கள். கர்த்தரும் இவர்களை அனுப்பவில்லை. இவர்கள் தங்களுடைய சொந்த ஆவியின் ஏவுதலை பின்பற்றுகிறார்கள். ஆனால் தங்களுடைய சொந்த வார்த்தைகளைச் சொல்லும்போது, அவையெல்லாமே கர்த்தருடைய வார்த்தைகள் என்று சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் சுயமாய்ப் பேசினாலும், கர்த்தருடைய நாமத்தினால் பேசுவார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளெல்லாமே அவர்களுடைய சுயகண்டுபிடிப்புகள். அவை கர்த்தருடைய வெளிப்பாடுகளல்ல. ஜனங்களுக்கு எது பிரியமானது என்பதை யோசித்துப் பார்த்து, அந்த வார்த்தைகளை, கர்த்தருடைய நாமத்தினால் சொல்லுவார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பரலோகத்தின் தரிசனங்களை தரிசிப்பதில்லை. அவர்கள் அபத்தமானதை தரிசித்து பொய்க்குறியைச் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய கை இவர்களுக்கு விரோதமாயிருக்கும். "இவர்கள் என் ஜனத்தின் சங்கத்தில் இருப்பதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாரின் அட்டவணையில் எழுதப்படுவதுமில்லை; இஸ்ரவேல் தேசத்துக்குள் பிரவேசிப்பதுமில்லை" (எசே 13:9) என்று கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஒன்றையும் தரிசிக்கமாட்டார்கள். அவர்கள் அபத்தமானதையே தரிசிப்பார்கள். ஆனாலும் தாங்கள் பரமதரிசனங்களை தரிசித்ததாக பொய்சொல்லுவார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளின் பேச்சுக்கள், நல்ல தீர்க்கதரிசிகளின் பேச்சுக்களைப்போலவே இருக்கும். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் எல்லாமே பொய்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யை தரிசிக்கிறார்கள். பொய்க்குறியை சொல்லுகிறார்கள். இவர்களுடைய சிந்தையிலும் உண்மையில்லை. வார்த்தையிலும் உண்மையில்லை. தங்கள் இருதயத்திலிருக்கிறதையே எடுத்து, கர்த்தருடைய வார்த்தைகளாகச் சொல்லுகிறார்கள். கர்த்தர் இவர்களோடு பேசுகிறதுமில்லை. பரிசுத்த ஆவியானவர் இவர்களை ஏவுகிறதுமில்லை.

கள்ளத்தீர்க்கதரிசிகள் வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். காட்டு நரிகள் எந்த இடத்திலும் நிலையாய் தங்கியிருக்காது. அது எல்லா இடங்களுக்கும் சுற்றி அலைந்து கொண்டிருக்கும். காட்டு நரிகள் தங்களுடைய பாதுகாப்புக்களுக்காக ஒவ்வொரு இடமாக ஓடிக்கொண்டிருக்கும்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் எந்த ஊரிலும் நிலையாய்த் தங்கியிருக்கமாட்டார்கள். அவர்கள் ஒவ்வொரு ஊராக சுற்றி அலைந்துகொண்டிருப்பார்கள். காட்டு நரிகளால் யாருக்கும் ஒரு நன்மையும் உண்டாகாது. கள்ளத்தீர்க்கதரிசிகளும் வனாந்தரங்களிலுள்ள நரிகளைப்போல பிரயோஜனமில்லாதவர்கள்.

மனுஷருடைய பாவங்களினிமித்தமாய் தேவனுடைய கோபம் அவர்கள்மீது வருகிறது. கள்ளத்தீர்க்கதரிசிகளோ அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுவதாக வாக்குப்பண்ணுகிறார்கள். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜெபிக்கிற தீர்க்கதரிசிகளல்ல. அவர்கள் ஒருபோதும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வந்து, தங்களுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ ஜெபம்பண்ணமாட்டார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்கள் மத்தியில் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, அவர்களுக்கு ஏராளமான ஆலோசனைகளைச் சொல்லுவார்கள். ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்றும் அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படவேண்டும் என்றும், நல்லதீர்க்கதரிசிகளைப்போலவே பிரசங்கம் பண்ணுவார்கள். ஜனங்களும் இவர்களுடைய மாய்மாலமான வார்த்தைகளை நம்பி இவர்களிடத்தில் கூடிவருவார்கள்.

ஜனங்களை எவ்வாறு பிரியப்படுத்த வேண்டும் என்பது கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு நன்றாகத் தெரியும். ஜனங்கள் மூலமாய் எவ்வளவு ஆதாயங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமோ, அவ்வளவு ஆதாயங்களையும் கள்ளத்தீர்க்கதரிசிகள் பெற்றுக்கொள்வார்கள். தங்களுக்கு ஆதாயமில்லாத எந்தக் காரியத்தையும் கள்ளத்தீர்க்கதரிசிகள் செய்வதில்லை.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றிச் சொல்லும்போது, "நீங்கள் கர்த்தருடைய நாளிலே யுத்தத்தில் நிலைநிற்கும்படிக்கு, திறப்புகளில் ஏறினதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாருக்காகச் சுவரை அடைத்ததுமில்லை. கர்த்தர் தங்களை அனுப்பாதிருந்தும், கர்த்தர் உரைத்தாரென்று சொல்லி, அவர்கள் அபத்தத்தையும் பொய்க்குறியையும் தரிசித்து, காரியத்தை நிர்வாகம்பண்ணலாமென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள்" (எசே 13:5,6) என்று சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். அபத்தமானதை தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு, கர்த்தருடைய கை விரோதமாயிருக்கும் (எசே 13:9). கள்ளத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குள்ளே இருந்தாலும், அவர்கள் இஸ்ரவேலின் ஆசீர்வாதங்களுக்கு அந்நியராகவே இருப்பார்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களிலும், அவருடைய ஆசீர்வாதங்களிலும் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு பங்கு இருக்காது.

"கள்ளத்தீர்க்கதரிசிகள், "என் ஜனத்தின் சங்கத்தில் இருப்பதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாரின் அட்டவணையில் எழுதப்படுவதுமில்லை; இஸ்ரவேல் தேசத்துக்குள் பிரவேசிப்பதுமில்லை" (எசே 13:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகள் மதிகெட்ட தீர்க்கதரிசிகள். அவர்களுடைய மதியீனம் வெளிப்படும். கர்த்தருடைய பிள்ளைகள் கள்ளத்தீர்க்கதரிசிகளிடம் ஆலோசனை கேட்கமாட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனத்தின் சங்கத்திலிருக்கமாட்டார்கள். கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளை புறம்பே தள்ளிவிடுவார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள், "இஸ்ரவேல் வம்சத்தாரின் அட்டவணையில் எழுதப்படுவதில்லை" என்னும் வாக்கியத்திற்கு, அவர்கள் பிள்ளையில்லாதவர்களாக செத்துப் போவார்கள் என்பது பொருளாகும். அவர்கள் "இஸ்ரவேல் தேசத்திற்குள் பிரவேசிப்பதில்லை" என்னும் வாக்கியத்திற்கு, அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலேயே செத்துப்போவார்கள் என்பது பொருளாகும். கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளை சபிக்கிறார்.

மோசம்போக்குகிறவர்கள் எசே 13:10-16

எசே 13:10. சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானமென்று சொல்லி, அவர்கள் என் ஜனத்தை மோசம்போக்குகிறார்கள்; ஒருவன் மண்சுவரை வைக்கிறான்; இதோ, மற்றவர்கள் சாரமில்லாத சாந்தை அதற்குப் பூசுகிறார்கள்.

எசே 13:11. சாரமில்லாத சாந்தைப் பூசுகிறவர்களை நோக்கி: அது இடிந்துவிழுமென்று சொல்; வெள்ளமாகப் பெருகுகிற மழை பெய்யும்; மகா கல்மழையே, நீ சொரிவாய்; கொடிய புசல்காற்றும் அதைப் பீறிக்கும்.

எசே 13:12. இதோ, சுவர் விழும்போது: நீங்கள் பூசின பூச்சு எங்கே என்று சொல்வார்கள் அல்லவா?

எசே 13:13. ஆகையால் என் உக்கிரத்திலே கொடிய புசல்காற்றை எழும்பி அடிக்கப்பண்ணுவேன்; என் கோபத்திலே வெள்ளமாக அடிக்கிற மழையும், என் உக்கிரத்திலே நிர்மூலமாக்கத்தக்க பெருங்கல் மழையும் சொரியும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 13:14. அப்பொழுது நீங்கள் சாரமில்லாத சாந்தைப் பூசின சுவரை நான் இடித்து, அதின் அஸ்திபாரம் திறந்துகிடக்கும்படி அதைத் தரையிலே விழப்பண்ணுவேன்; உள்ளே இருக்கிற நீங்கள் நிர்மூலமாகும்படி அது விழும்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 13:15. இப்படிச் சுவரிலும், அதற்குச் சாரமில்லாத சாந்தைப் பூசினவர்களிலும் நான் என் உக்கிரத்தைத் தீர்த்துக் கொண்டு: சுவருமில்லை, அதற்குச் சாந்து பூசினவர்களுமில்லை.

எசே 13:16. எருசலேமைக்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்லி, சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம் உண்டென்று தரிசனங் காண்கிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் இல்லாமற்போவார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் வம்சத்தாரை மோசம்போக்குகிறார்கள். ஜனங்களுக்கு சமாதானமில்லாதிருந்தும், அவர்களுக்கு சமாதானம் உண்டு என்று சொல்லுகிறார்கள். தங்களுடைய பொய்யான வார்த்தைகளினால் அவர்கள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். விக்கிரகாராதனைக்காரர்மீதும், துணிகரமாய்ப் பாவம் செய்கிற மற்ற பாவிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்களுக்கு ஆபத்தும் அழிவும் வரும். ஆனால் அவர்களுடைய வழிகளில் ஆபத்து இராது என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய்யான வார்த்தைகளை, கர்த்தர் மண்சுவரோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். "ஒருவன் மண்சுவரை வைக்கிறான்; இதோ, மற்றவர்கள் சாரமில்லாத சாந்தை அதற்குப் பூசுகிறார்கள். சாரமில்லாத சாந்தைப் பூசுகிறவர்களை நோக்கி: அது இடிந்துவிழுமென்று சொல்; வெள்ளமாகப் பெருகுகிற மழை பெய்யும்; மகா கல்மழையே, நீ சொரிவாய்; கொடிய புசல்காற்றும் அதைப் பிளக்கும். இதோ, சுவர் விழும்போது: நீங்கள் பூசின பூச்சு எங்கே என்று சொல்வார்கள் அல்லவா?" (எசே 13:10-13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மண்சுவர் உறுதியானதல்ல. மழைகாலத்தில் மண்சுவரை நம்பி, அந்த வீட்டில் ஒதுங்க முடியாது. புயல்காற்று வரும்போது மண்சுவர் கீழே விழுந்துவிடும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் மணலின்மீது கட்டிய வீட்டை உவமையாகச் சொல்லியிருக்கிறார்.

"நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்" (மத் 7:26).

கள்ளத்தீர்க்கதரிசிகள் மண்சுவரை வைக்கிறார்கள். கர்த்தர் எருசலேமின்மீது பிரியமாயிருக்கிறார் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். எருசலேமுக்கு விரோதமாக கல்தேயர்கள் முற்றிக்கைப்போட்டாலும், யூதர்கள் அவர்களை யுத்தத்திலே ஜெயிப்பார்கள் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகள் கேட்பதற்கு சந்தோஷமாகவும், இனிமையாகவும் இருக்கிறது. ஆனால் இந்த வார்த்தையில் உண்மையில்லை.

ஜனங்கள் நம்மைப் புகழவேண்டும் என்பதற்காக, நாம் சத்தியத்தைப் புரட்டக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் சொல்லவேண்டும். ஜனங்கள் நம்மீது பிரியமாகயிருந்தாலும், அவர்கள் நம்மீது கோபமாயிருந்தாலும், நாம் அவர்களுடைய முகத்தைப் பார்த்து, சத்தியத்திற்கு மாறுபாடாகப் பேசக்கூடாது. நாம் மனுஷருடைய முகத்தைப் பார்க்காமல் கர்த்தருடைய முகத்தையே பார்க்கவேண்டும். நாம் மனுஷரைப் பிரியப்படுத்த நினையாமல், கர்த்தரையே பிரியப்படுத்த நினைக்கவேண்டும்.

கள்ளத்தீர்க்கதரிசிகளில் ஒருவன் மண்சுவரை வைக்கிறான். மற்ற கள்ளத்தீர்க்கதரிசிகள் அதற்கு சாரமில்லாத சாந்தைப் பூசுகிறார்கள். இவ்விரண்டுமே பெலனற்றவை. இவை இரண்டும் இடிந்து விழும். மண்சுவர் மழைக்கு தாங்காது. மகாகல்மழை பெய்யும்போது சாரமில்லாத சாந்து உடைந்துபோகும். இஸ்ரவேல் வம்சத்தார்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும்போது, அவர்களுக்கு பாடுகளும், வேதனைகளும் உண்டாகும். அந்த வேதனைகளை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களை அவர்களுக்கு எச்சரித்து சொல்லவில்லை. அவர்கள் எதிர்பாராத வேளையில், அவர்களுடைய பாவங்களுக்கு, கர்த்தரிடத்திலிருந்து நியாயத்தீர்ப்பு வருகிறது. பட்டயமும், பஞ்சமும், கொள்ளைநோயும் அவர்கள்மீது வருகிறது. இந்த அழிவைப்பற்றி கள்ளத்தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு இதுவரையிலும் எச்சரித்து சொல்லவில்லை. அவர்கள் பாவம் செய்தாலும், அவர்களுக்கு ஆபத்து வராது என்றும், அவர்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் என்றும், கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான வார்த்தைகளைச் சொல்லி, கர்த்தருடைய ஜனங்களை மோசம்போக்கியிருக்கிறார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியாயும், நியாயமாயும் இருக்கும். கர்த்தர் தம்முடைய சத்தியத்தின்படி நியாயந்தீர்ப்பார். இஸ்ரவேல் வம்சத்தார்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது, தாங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளால் வஞ்சிக்கப்பட்டதை ஜனங்கள் அறிந்துகொள்வார்கள்.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவார்கள். அவர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிடுவார்கள். கல்தேயருடைய முற்றிக்கை "வெள்ளமாக பெருகுகிற மழை பெய்யும்" என்று ஒப்புமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நேபுகாத்நேச்சாரும் அவனுடைய பிரபுக்களும் சிதேக்கியா ராஜாவின்மீது மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு துரோகம் செய்து, எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோனோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். சிதேக்கியாவின் துரோகத்தை நேபுகாத்நேச்சாரால் மன்னிக்க முடியவில்லை. கர்த்தர் யூதா மனுஷர்மீதும் எருசலேமின் குடிகள்மீதும் கோபமாயிருப்பதுபோல, நேபுகாத்நேச்சாரும் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவின்மீது கோபமாயிருக்கிறான்.

"கொடிய புசல் காற்று அதைப் பிளக்கும், சுவர் இடிந்து விழும்" என்று சொல்லப்பட்ட பிரகாரமாக நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிளப்பான். எருசலேமின் அலங்கங்கள் இடிந்துவிழும். பெருங்கல் மழை சொரியும். சாரமில்லாத சாந்தைப் பூசின சுவர் இடிந்து விழும். அதன் அஸ்திபாரம் தரையிலே விழும். மண்சுவர் பலமாயில்லை. அது வெளிப்பார்வைக்கு பெலமுள்ளதுபோல தோற்றமளிக்கிறது. ஆனால் அந்தச் சுவற்றிற்கு உண்மையிலேயே பெலமில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் வம்சத்தாரை மேற்பூச்சாய்ப் பூசியிருக்கிறார்கள். அவர்கள் யூதர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் பலப்படுத்தவில்லை.

மனுஷருடைய கோபம் கர்த்தர் கட்டியதை ஒன்றும் செய்யாது. ஆனால் தேவனுடைய கோபம் மனுஷர் கட்டியதை நிர்மூலம் பண்ணிவிடும். கர்த்தருக்கு விரோதமாக கட்டியது எல்லாம், அவருடைய உக்கிரத்தினால் அழிந்துபோகும். கர்த்தருடைய கோபம் அவருக்கு விரோதமாக கட்டியெழுப்பப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் நிர்மூலம்பண்ணும்.

மண்சுவரை கட்டியவர்களும், அதன்மீது சாரமில்லாத சாந்தை பூசினவர்களும், மண்சுவர் இடிந்து விழும்போது, அவர்களும் மண்ணோடு மண்ணாக புதைந்துபோவார்கள். கர்த்தர் சாரமில்லாத சாந்தைப் பூசின சுவரை இடிப்பார். அதன் அஸ்திபாரம் திறந்துகிடக்கும்படி அதை தரையிலே விழப்பண்ணுவார். மண்சுவரைக் கட்டியவர்களும், அதற்கு சாரமில்லாத சாந்தைப் பூசினவர்களும் அதற்குள்ளே இருப்பார்கள். மண்சுவர் விழும்போது அவர்களும் அதோடுகூட நிர்மூலமாவார்கள்.

இஸ்ரவேல் தேசத்திற்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அழிவு வரும்போது, இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தர் என்பதை யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அறிந்துகொள்வார்கள்.

ஜனங்களை வஞ்சித்த கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளத்தீர்க்கதரிசிகளால் வஞ்சிக்கப்பட்ட ஜனங்களும் ஏகமாய் அழிந்துபோவார்கள். "இதோ, சுவர் விழும்போது: நீங்கள் பூசின பூச்சு எங்கே என்று சொல்வார்கள் அல்லவா?" (எசே 13:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். அழிவுக்குத் தப்பினவர்கள் அழிந்துபோனவர்களையும், கள்ளத்தீர்க்கதரிசிகளையும் பரியாசம்பண்ணுவார்கள்.

சுவர் விழும்போதுதான் அது பலவீனமான மண்சுவர் என்பது ஜனங்களுக்கு தெரியவரும். அதன்மீது சாந்தைப் பூசினவர்கள் சாரமில்லாத சாந்தையே பூசினார்கள் என்னும் உண்மையும் வெளிப்படும். எருசலேமுக்கு அழிவு வரும்போதுதான், ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும், நல்ல தீர்க்கதரிசிகளுக்கும் வித்தியாசம் காண்பார்கள். அது வரையிலும் அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் குருடாயிருக்கும். அவர்களுக்கு உண்மைக்கும் பொய்க்கும் வித்தியாசம் தெரியாது. கர்த்தருக்கும் பாகாலுக்கும் அவர்களால் வித்தியாசம் காணமுடியாது. எல்லாம் அழிந்துபோகும்போதுதான், கர்த்தர் யார் என்பதையும், அவருடைய வார்த்தைகள் என்ன என்பதையும், கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகள் யார் என்பதையும் ஜனங்கள் அறிந்துகொள்வார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு பொய்யான வாக்குத்தத்தங்களைச் சொன்னார்கள். கர்த்தருடைய நாமத்தினாலே அவர்கள் ஜனங்களை அதிகமாய் ஆசீர்வதித்தார்கள். கர்த்தருடைய கோபமும் சாபமும் இஸ்ரவேல் வம்சத்தார்மீது நெருங்கி வரும்போது, கள்ளத்தீர்க்கதரிசிகள் அவர்களை மோசம்போக்கிவிட்டார்கள். கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் வம்சத்தார்மீதும், அவர்கள் மத்தியிலே ஊழியம் செய்த கள்ளத்தீர்க்கதரிசிகள்மீதும் வந்து இறங்குகிறது. கர்த்தர், சுவரிலும், அதற்குச் சாரமில்லாத சாந்தைப் பூசினவர்களிலும் தம்முடைய உக்கிரத்தைத் தீர்த்துக் கொள்கிறார் (எசே 13:15).

இஸ்ரவேல் வம்சத்தாரின் நம்பிக்கைகள் எல்லாமே அழிந்துபோயிற்று. அவர்களுக்கு பொய்யான நம்பிக்கைகளை கொடுத்தவர்களும் அழிந்துபோனார்கள். சுவருமில்லை, அதற்குச் சாந்து பூசினவர்களுமில்லை. "எருசலேமைக்குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லி, சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம் உண்டென்று தரிசனங் காண்கிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் இல்லாமற்போவார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (எசே 13:16) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசினிகள் எசே 13:17-23

எசே 13:17. மனுபுத்திரனே, தங்களுடைய இருதயத்தில் இருக்கிறதையே எடுத்து, தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற உன் ஜனத்தின் குமாரத்திகளுக்கு எதிராக உன் முகத்தைத் திருப்பி, அவர்களுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டியது என்னவென்றால்:

எசே 13:18. ஆத்துமாக்களை வேட்டையாடும்படிக்குச் சகல கைகளுக்கும் தழுவணைகளைத் தைத்து, அந்தந்த வயதுள்ளவர்களுடைய தலைக்கும் தலையணைகளை உண்டுபண்ணுகிறவர்களுக்கு ஐயோ! நீங்கள் என் ஜனத்தின் ஆத்துமாக்களை வேட்டையாடி, அவைகளை உங்களுக்கு உயிரோடே காப்பாற்றுவீர்களோ?

எசே 13:19. சாகத்தகாத ஆத்துமாக்களைக்கொல்வதற்கும், உயிரோடே இருக்கத்தகாத ஆத்துமாக்களை உயிரோடே காப்பாற்றுவதற்குமாக நீங்கள் பொய்க்குச் செவிகொடுக்கிற என் ஜனத்துக்குப் பொய் சொல்லுகிறதினாலே சில சிறங்கை வாற்கோதுமைக்காகவும் அப்பத்துண்டுகளுக்காகவும் என்னை என் ஜனத்துக்குள்ளே பரிசுத்தக்குலைச்சலாக்குவீர்களோ என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 13:20. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நீங்கள் ஆத்துமாக்களைப் பறக்கடிக்கும்படி வேட்டையாடுகிற உங்கள் தழுவணைகளுக்கு விரோதமாக நான் வந்து, அவைகளை உங்கள் புயங்களிலிருந்து பிடுங்கிக்கிழித்து, நீங்கள் பறக்கடிக்க வேட்டையாடுகிற ஆத்துமாக்களை நான் விடுதலைபண்ணி,

எசே 13:21. உங்கள் தலையணைகளைக் கிழித்து, என் ஜனத்தை உங்கள் கைகளுக்கு நீங்கலாக்கிவிடுவேன்; அவர்கள் இனி வேட்டையாடப்படும்படி உங்கள் கைகளில் இரார்கள்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 13:22. நான் சஞ்சலப்படுத்தாத நீதிமானின் இருதயத்தை நீங்கள் வீணாய் முறியப்பண்ணின படியினாலும், துன்மார்க்கன் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பவும் நான் அவனை உயிரோடே காக்கவுங் கூடாதபடிக்கு நீங்கள் அவனுடைய கைகளைத் திடப்படுத்தின படியினாலும்,

எசே 13:23. நீங்கள் இனி அபத்தமானதைத் தரிசிப்பதுமில்லை, சாஸ்திரம் பார்ப்பதுமில்லை; நான் என் ஜனத்தை உங்கள் கைகளுக்கு நீங்கலாக்கிவிடுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள் என்று சொல் என்றார்.

கடைசி நாட்களிலே கர்த்தர் மாம்சமான யாவர்மேலும் தம்முடைய ஆவியை ஊற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். அப்பொழுது அவர்களுடைய குமாரர்களும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைப்போலவே, பிசாசானவனும் பொய்யான வாக்குத்தத்தத்தைச் சொல்லுகிறான். பிசாசு பொய்யின் ஆவியாகயிருக்கிறான். கள்ளத்தீர்க்க தரிசிகளுடைய வாயின் மூலமாகவும், கள்ளத்தீர்க்கதரிசினிகளுடைய வாயின் மூலமாகவும் பிசாசானவன் பொய்யான வார்த்தைகளைப் பேசுகிறான்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, தங்களுடைய இருதயத்தில் இருக்கிறதையே எடுத்து, தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற உன் ஜனத்தின் குமாரத்திகளுக்கு எதிராக உன் முகத்தைத் திருப்பு" (எசே 13:17) என்று சொல்லுகிறார். எசேக்கியேல் கள்ளத்தீர்க்கதரிசினிகளுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும்.

தம்மிடத்தில் தீர்க்கதரிசனத்தின் ஆவியிருப்பதாக, புருஷரைப்போலவே, ஸ்திரீகளும் பொய்சொல்லுகிறார்கள். புருஷர்கள் பாடுகிற பொய்யான பாடலை ஸ்திரீகளும் அவர்களோடு கூட சேர்ந்து பாடுகிறார்கள். இந்த ஸ்திரீகள் தங்கள் இருதயத்திலிருக்கிறதையே எடுத்து, தீர்க்கதரிசனம் சொல்லுகிறர்கள். அப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசினிகளுக்கு விரோதமாக எசேக்கியேல் தன்னுடைய முகத்தை திருப்பவேண்டும்.

கள்ளத்தீர்க்கதரிசினிகளின் பாவங்களை கர்த்தர் இங்கு தெளிவுபடுத்துகிறார். தங்களிடத்தில் விசாரிக்க வருகிறவர்களுக்கு அவர்கள் பொய்யான ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். ஜனங்களுடைய எதிர்காலம் எப்படியிருக்கும் என்றும், அவர்களுக்கு எப்படிப்பட்ட அதிர்ஷ்டங்களெல்லாம் வரும் என்றும் கள்ளத்தீர்க்கதரிசினிகள் பொய்யான வார்த்தைகளைச் சொல்லி, ஜனங்களை வஞ்சித்து மோசம் போக்குகிறார்கள்.

ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசினிகளின் பொய்க்கு செவிகொடுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனத்திற்குள்ளே, கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள். ஜனங்களுடைய விருப்பங்களும் ஆசைகளும் வினோதமாயிருக்கிறது. அவர்கள் சாகத்தகாத ஆத்துமாக்களை கொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். உயிரோடே இருக்கத்தகாத ஆத்துமாக்களை உயிரோடே காப்பாற்றவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இதற்காகவே அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசினிகளிடத்திற்கு வந்து, அவர்களுடைய பொய்க்கு செவிகொடுக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசினிகளும் தங்களுடைய சுயஆதாயத்திற்காகவும், பொருளாதார வருமானத்திற்காகவும் அவர்களிடத்தில் பொய்சொல்லுகிறார்கள். இதன் மூலமாய் கள்ளத்தீர்க்கதரிசினிகள் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள். பலசமயங்களில் கள்ளத்தீர்க்கதரிசினிகளுக்கு அதிகமான பொருளாதார நன்மை உண்டாகாது. ஆனாலும் அவர்கள் சொற்ப வருமானத்திற்குக்கூட கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை ஜனங்களுக்குள்ளே பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள்.

சில சிறங்கை வாற்கோதுமைக்காகவும், ஒரு சில அப்பத்துண்டுகளுக்காகவும், கள்ளத்தீர்க்கதரிசினிகள் கர்த்தருடைய நாமத்தை பொய்சொல்லி விற்றுப்போடுகிறார்கள். ஜனங்கள் மத்தியிலே கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள். இதுவே கள்ளத்தீர்க்கதரிசனத்தின் கிரயம். கிரயம் குறைவாகயிருந்தாலும், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு சகலமும் லாபமே.

கள்ளத்தீர்க்கதரிசினிகள் பொய்களையும் தகாதவார்த்தைகளையும் சொல்லி, ஜனங்களை பயமுறுத்துகிறார்கள். "ஐயோ, நீங்கள் என் ஜனத்தின் ஆத்துமாக்களை வேட்டையாடினீர்கள்" (எசே 13:18) என்றும், "இதோ நீங்கள் ஆத்துமாக்களை பறக்கடிக்கும்படி வேட்டையாடினீர்கள்" (எசே 13:20) என்றும் சொல்லி ஜனங்களை பயப்பட வைக்கிறார்கள்.

தங்களுடைய சிந்தனையிலும், செயலிலும் உறுதியில்லாதவர்கள் கள்ளத்தீர்க்கதரிசினிகளின் வார்த்தைகளைக் கேட்டு அவர்களுக்கு பயப்படுகிறார்கள். தங்கள் ஆத்துமாவில் பலவீனமாயிருக்கிற ஜனங்களுக்கு, கள்ளத்தீர்க்கதரிசினிகளின் கோபமான வார்த்தைகளைக் கேட்டு, பயமுண்டாகிறது.

கள்ளத்தீர்க்கதரிசினிகள் நல்லவர்களையும், கண்ணியமானவர்களையும், உண்மையுள்ளவர்களையும் உதாசீனம் பண்ணுகிறார்கள். துன்மார்க்கரையும், பாவிகளையும் உற்சாகப்படுத்துகிறார்கள். பாவிகளுக்கு அவர்களுடைய பாவமான வழிகளில் ஜீவன் உண்டாகும் என்று கள்ளத்தீர்க்கதரிசினிகள் வாக்குப்பண்ணுகிறார்கள். அவர்கள் தொடர்ந்து பாவம் செய்தால் அவர்களுக்கு சமாதானம் உண்டாகும் என்றும் அவர்களுடைய கைகள் பலப்படும் என்றும், அவர்களுடைய இருதயங்கள் உறுதிப்படும் என்றும் சொல்லுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசினிகள், நல்ல தீர்க்கதரிசிகளைப்போலவே அடையாளங்களைக் காண்பிக்கிறார்கள். அனனியா நல்ல தீர்க்கதரிசியைப்போல அடையாளம் காண்பித்தான்.

"அப்பொழுது அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை உடைத்துப்போட்டான்" (எரே 28:10).

கள்ளத்தீர்க்கதரிசிகள், ஸ்திரீகள் சம்பந்தப்பட்ட பிரத்தியேகமான வேலைகளை செய்து, அதை தங்களுடைய கள்ளத்தீர்க்கதரிசன ஊழியங்களில் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் கைகளுக்கு தழுவணைகளை தைக்கிறார்கள். மேலும் அந்தந்த வயதுள்ளவர்களுடைய தலைகளுக்கு தலையணைகளை உண்டுபண்ணுகிறார்கள். இவற்றை ஜனங்கள் தங்கள் கைகளிலும், தலைகளிலும் அணிந்துகொண்டால் அவர்களுக்கு நன்மை உண்டாகும் என்றும், அதிர்ஷ்டம் அவர்களைத் தேடிவரும் என்றும், தீங்கு அவர்களை அணுகாது என்றும் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசினிகளைப் பார்த்து, "ஆத்துமாக்களை வேட்டையாடும்படிக்குச் சகல கைகளுக்கும் தழுவணைகளைத் தைத்து, அந்தந்த வயதுள்ளவர்களுடைய தலைக்கும் தலையணைகளை உண்டுபண்ணுகிறவர்களுக்கு ஐயோ! நீங்கள் என் ஜனத்தின் ஆத்துமாக்களை வேட்டையாடி, அவைகளை உங்களுக்கு உயிரோடே காப்பாற்றுவீர்களோ?" (எசே 13:18) என்று கேட்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசினிகள் கொடுக்கும் தழுவணைகளையும், தலையணைகளையும் அணிந்துகொண்டால், கல்தேயரிடமிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். இவற்றை அணிந்துகொண்டால் கல்தேயரின் பட்டயம் தங்களை சேதப்படுத்தாது என்பது ஜனங்களுடைய நம்பிக்கை. இது புறஜாதியாரின் மாய்மாலமான மாயாஜாலமாயும், மந்திர வித்தையாயும் இருக்கிறது. கள்ளத்தீர்க்கதரிசினிகள், ஜனங்களுக்கு இதுபோன்ற பொய்களை சொல்லி, அவர்களுடைய ஆத்துமாக்களை வேட்டையாடுகிறார்கள். அவர்களை உயிரோடே காப்பாற்றுவதாகச் சொல்லி, அவர்களுடைய ஆத்துமாக்களைக் கொன்றுபோடுகிறார்கள்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசினிகளுக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். "இதோ, நீங்கள் ஆத்துமாக்களைப் பறக்கடிக்கும்படி வேட்டையாடுகிற உங்கள் தழுவணைகளுக்கு விரோதமாக நான் வந்து, அவைகளை உங்கள் புயங்களிலிருந்து பிடுங்கிக்கிழித்து, நீங்கள் பறக்கடிக்க வேட்டையாடுகிற ஆத்துமாக்களை நான் விடுதலைபண்ணி, உங்கள் தலையணைகளைக் கிழித்து, என் ஜனத்தை உங்கள் கைகளுக்கு நீங்கலாக்கிவிடுவேன்; அவர்கள் இனி வேட்டையாடப்படும்படி உங்கள் கைகளில் இரார்கள்" (எசே 13:20,21) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசினிகள் கர்த்தருக்கு விரோதமாகக் கிரியை செய்கிறார்கள். கர்த்தர் நீதிமானின் இருதயத்தை சஞ்சலப்படுத்தமாட்டார். கள்ளத்தீர்க்கதரிசினிகளோ அவர்களுடைய இருதயத்தை வீணாய் முறியப்பண்ணுகிறார்கள். துன்மார்க்கன் அழிந்துபோவதில் கர்த்தருக்கு பிரியமில்லை. அவன் தன்னுடைய பொல்லாத வழியை விட்டு திரும்பவேண்டும். இதுவே கர்த்தருக்கு பிரியமானது. கர்த்தர் துன்மார்க்கனை அழித்துப்போடாமல், அவனை உயிரோடே காக்கவேண்டும் என்று சித்தமுள்ளவராயிருக்கிறார்.

ஆனால் கள்ளத்தீர்க்கதரிசினிகளோ, துன்மார்க்கனுக்கு துணைபோகிறார்கள். அவனை தன்னுடைய துன்மார்க்கமான பொல்லாத வழிகளில் நிலைத்திருக்கச் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு துன்மார்க்கன் மீது வருகிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் துன்மார்க்கனை அழித்துப்போடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை கள்ளத்தீர்க்கதரிசினிகளின் வஞ்சக வலைகளிலிருந்து விடுதலை பண்ணுகிறார். அவர்களுடைய தலையணைகளை கிழித்துப்போடுகிறார். தம்முடைய ஜனங்களை அவர்களுடைய கைகளுக்கு நீங்கலாக்கிவிடுகிறார். இனிமேல் கள்ளத்தீர்க்கதரிசினிகளால், கர்த்தருடைய ஜனத்தின் ஆத்துமாக்களை வேட்டையாட முடியாது.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசினிகளை சபிக்கிறார். "நீங்கள் இனி அபத்தமானதைத் தரிசிப்பதுமில்லை, சாஸ்திரம் பார்ப்பதுமில்லை" (எசே 13:23) என்று கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசினிகளிடத்தில் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை, அவர்களுடைய கைகளுக்கு நீங்கலாக்கிவிடுவார். அப்பொழுது இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தர் என்பதை, கள்ளத்தீர்க்கதரிசினிகளும் அறிந்துகொள்வார்கள்.

14 அதிகாரம்

இஸ்ரவேலுடைய மூப்பர்களில் சிலர் எசேக்கியேலினிடத்திற்கு வருகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை எசேக்கியேல் மூலமாய்க் கேட்பதற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தில் பரிசுத்தமில்லை. கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல், கடிந்துகொள்கிறார் (எசே 14:1-5).

இஸ்ரவேலின் மூப்பர்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய ஜீவியங்கள் புதுப்பிக்கப்படவேண்டும் (எசே 14:6-11). நோவா, தானியேல், யோபு ஆகியோர் இவர்களுக்காக ஜெபம்பண்ணினாலும், கர்த்தர் அவர்களுடைய ஜெபங்களை அங்கீகரிக்கமாட்டார் (எசே 14:12-21). கர்த்தருக்கு மீதமானவர்கள் அழிவுக்கு தப்பித்துக்கொள்வார்கள் (எசே 14:22,23).

இஸ்ரவேலுடைய மூப்பரில் சிலர் எசே 14:1-11

எசே 14:1. இஸ்ரவேலுடைய மூப்பரில் சிலர் என்னிடத்தில் வந்து, எனக்கு முன்பாக உட்கார்ந்தார்கள்.

எசே 14:2. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 14:3. மனுபுத்திரனே, இந்த மனுஷர் தங்கள் நரகலான விக்கிரகங்களைத் தங்கள் இருதயத்தின்மேல் நாட்டி, தங்கள் அக்கிரமமாகிய இடறலைத் தங்கள் முகத்துக்கு எதிராக வைத்துக் கொண்டிருக்கிறார்களே; இவர்கள் என்னிடத்தில் விசாரிக்கத்தகுமா?

எசே 14:4. ஆகையால், நீ அவர்களோடே பேசிச் சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் வம்சத்தாரில் தன்னுடைய நரகலான விக்கிரகங்களைத் தன் இருதயத்தின்மேல் நாட்டி, தன் அக்கிரமமாகிய இடறலைத் தன் முகத்துக்கு எதிராக வைத்துக்கொண்டிருக்கிற எவனாகிலும் தீர்க்கதரிசியினிடத்தில் வந்தால், கர்த்தராகிய நான் இஸ்ரவேல் வம்சத்தாருடைய இருதயத்தில் இருக்கிறதைப் பிடிக்கும்படியாக அப்படிப்பட்டவனுடைய நரகலான விக்கிரகங்களின் திரட்சிக்குத்தக்கதாக உத்தரவு கொடுப்பேன்.

எசே 14:5. அவர்கள் எல்லாரும் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, என்னை விட்டுப் பேதலித்துப்போனார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 14:6. ஆகையால், நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: திரும்புங்கள், உங்கள் நரகலான விக்கிரங்களை விட்டுத் திரும்புங்கள்; உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 14:7. இஸ்ரவேல் வம்சத்தாரிலும் இஸ்ரவேலில் தங்குகிற அந்நியரிலும் என்னைப் பின்பற்றாமல் பேதலித்து, தன் நரகலான விக்கிரகங்களைத் தன் இருதயத்தின்மேல் நாட்டி, தன் அக்கிரமமாகிய இடறலைத் தன் முகத்துக்கெதிராக வைத்துக்கொண்டிருக்கிற எவனாகிலும் தீர்க்கதரிசியின் மூலமாய் என்னிடத்தில் விசாரிக்க வந்தால், அவனுக்குக் கர்த்தராகிய நானே உத்தரவுகொடுத்து,

எசே 14:8. அந்த மனுஷனுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்பி, அவனை அடையாளமாகவும் பழமொழியாகவும் வைத்து, அவனை என் ஜனத்தின் நடுவில் இராதபடிக்குச் சங்கரித்துப்போடுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்.

எசே 14:9. ஒரு தீர்க்கதரிசி எத்தப்பட்டு ஒரு விசேஷத்தைச் சொன்னானாகில், அப்படிக்கொத்த தீர்க்கதரிசியைக் கர்த்தராகிய நானே எத்தப்படப்பண்ணினேன்; நான் அவனுக்கு விரோதமாக என் கையை நீட்டி, அவனை இஸ்ரவேல் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அழிப்பேன்.

எசே 14:10. அப்படியே அவரவர் தங்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்; தீர்க்கதரிசியினிடத்தில் விசாரிக்கிறவனுடைய தண்டனை எப்படியோ அப்படியே தீர்க்கதரிசியினுடைய தண்டனையும் இருக்கும்.

எசே 14:11. இஸ்ரவேல் வம்சத்தார் இனி என்னை விட்டு வழிதப்பிப்போகாமலும், தங்கள் எல்லா மீறுதல்களாலும் இனி அசுசிப்படாமலும் இருக்கும்பொருட்டாக இப்படிச் சம்பவிக்கும்; அப்பொழுது அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

இஸ்ரவேலுடைய மூப்பரில் சிலர் எசேக்கியேலினிடத்திற்கு வருகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை எசேக்கியேல் மூலமாய்க் கேட்பதற்காக வந்திருக்கிறார்கள். அவர்கள் எசேக்கியேலினிடத்திற்கு வந்து அவருக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறார்கள். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று (எசே 14:1,2).

கர்த்தர் இந்த மூப்பர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லவில்லை. அவர்களைக் கடிந்துகொள்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறார். இந்த மூப்பர்கள் ஒருவேளை எசேக்கியேலுக்கு விரோதமாக வஞ்சக எண்ணத்தோடும், தீயதிட்டத்தோடும் வந்திருக்கலாம். எசேக்கியேல்மீது அவருடைய வார்த்தையினால் குற்றம் கண்டுபிடிக்கவேண்டும் என்று வஞ்சகமாக திட்டம்பண்ணியிருக்கலாம்.

இவர்கள் எசேக்கியேலுக்கு மறைவாக கண்ணியை விரிக்க வந்திருக்கிறார்கள். ஆகையினால் இவர்களுக்கு கர்த்தருடைய ஆறுதலான வார்த்தை உண்டாகவில்லை. கர்த்தர் இவர்களைக் கடிந்துகொள்கிறார்.

எசேக்கியேலைப் பார்க்க வந்திருக்கிற மூப்பர்களின் உண்மையான சுபாவத்தை கர்த்தர் எசேக்கியேலுக்கு தெளிவுபடுத்துகிறார். அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்க வரவில்லை. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க வந்ததுபோல நடிக்கிறார்கள். அவர்களோ விக்கிரகாராதனைக் காரர்கள். எசேக்கியேலிடம் தங்களுடைய விக்கிரகாராதனையை நியாயப்படுத்துவதற்காக வந்திருக்கிறார்கள்.

"மனுபுத்திரனே, இந்த மனுஷர் தங்கள் நரகலான விக்கிரகங்களைத் தங்கள் இருதயத்தின்மேல் நாட்டி, தங்கள் அக்கிரமமாகிய இடறலைத் தங்கள் முகத்துக்கு எதிராக வைத்துக்கொண்டிருக்கிறார்களே; இவர்கள் என்னிடத்தில் விசாரிக்கத்தகுமா?" (எசே 14:3) என்று கர்த்தர் எசேக்கியேலிடம் இஸ்ரவேலுடைய மூப்பரைப்பற்றிச் சொல்லுகிறார்.

இந்த மனுஷர் தங்கள் நரகலான விக்கிரகங்களை தங்கள் இருதயத்தின்மேல் நாட்டியிருக்கிறார். விக்கிரகாரதனை என்பது ஆவிக்குரிய விக்கிரகாராதனையையும் குறிக்கும். ஒரு சிலர் இந்த உலகத்தையும், உலகப்பிரகாரமான காரியங்களையும், ஐசுவரியங்களையும், உலகப்பொருட்களையும் தங்கள் இருதயத்தின்மேல் நாட்டி வைத்திருக்கிறார்கள். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. ஏராளமான மனுஷருக்கு பணமே தேவனாயிருக்கிறது. அவர்களுடைய தேவன் வயிறு என்று பவுல் சொல்லுகிறார்.

எசேக்கியேலைப் பார்க்க வந்திருக்கிற இஸ்ரவேலின் மூப்பர்கள் நரகலான விக்கிரகங்களை தங்கள் இருதயத்தின்மேல் நாட்டி வைத்திருக்கிறார்கள். இவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றாலும், விக்கிராகாராதனையைவிட்டு விலகி வரக்கூடாது என்று தீர்மானமாயிருக்கிறார்கள். இவர்கள் அந்நியர்களை நேசித்து, அவர்களுக்கு பின்பாக போகவிரும்புகிறவர்கள். இவர்களுக்கு எப்போதுமே நூதனமான காரியங்கள்மீது பிரியம் இருக்கும்.

விக்கிரகாராதனைக்காரர் கர்த்தருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற துன்மார்க்கர். துன்மார்க்கருக்கு சமாதானமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். இவர்கள் கர்த்தருடைய சமுகத்திலிருந்து சமாதானத்தையோ, ஆறுதலையோ எதிர்பார்க்கக்கூடாது.

இஸ்ரவேலின் மூப்பர்களுக்கு சொல்லவேண்டிய பிரதியுத்தரத்தை, கர்த்தர் எசேக்கியேலுக்கு தெளிவுபடுத்துகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருக்கும் கர்த்தர் ஒரே மாதிரியான பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய நீதியினாலும், நியாயத்தினாலும் அவர்களை ஆளுகை செய்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் நரகலான விக்கிரகங்களை தங்கள் இருதயத்தின்மேல் நாட்டக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களோடு எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் விக்கிரகங்களை நேசித்து, அவற்றிற்கு தூபங்காட்டக்கூடாது.

இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகாராதனை செய்து, கர்த்தருடைய வார்த்தைகளை விசாரிப்பதற்கு அவருடைய தீர்க்கதரிசிகளிடத்தில் வந்தால், கர்த்தர் அவர்களுடைய விக்கிரகாராதனைக்குத் தக்கதாக பிரதியுத்தரம் கொடுப்பார். அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அதே வேளையில் அவர்கள் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள் போல மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

கர்த்தர் அப்படிப்பட்டவர்களுக்கு எப்படிப்பட்ட உத்தரவு கொடுப்பார் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். "கர்த்தராகிய நான் இஸ்ரவேல் வம்சத்தாருடைய இருதயத்தில் இருக்கிறதைப் பிடிக்கும்படியாக அப்படிப்பட்டவனுடைய நரகலான விக்கிரகங்களின் திரட்சிக்குத்தக்கதாக உத்தரவு கொடுப்பேன்" (எசே 14:4).

இவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாராயிருந்தாலும், தங்களுடைய நரகலான விக்கிரகங்களை தங்கள் இருதயத்தின்மேல் நாட்டியிருக்கிறார்கள். தங்கள் அக்கிரமமாகிய இடறலை தங்கள் முகத்திற்கு எதிராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களை அவர்களுடைய இருதயங்களின் இச்சைகளுக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்களுக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் கிடைக்காது. அவர்களுடைய மனது அசுத்தமாயிருப்பதுபோல, கர்த்தர் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்கள் தங்கள் அக்கிரமமாகிய இடறலை தங்கள் முகத்திற்கு எதிராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களை, அவர்களுடைய அக்கிரமத்திற்கும், இடறலுக்கும் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள்போல மாய்மாலம் பண்ணினாலும், கர்த்தர் அவர்களுடைய இருதயத்தின் யோசனைகளை அறிந்திருக்கிறார். அவர்கள் விக்கிரப்ங்கள் மீது ஆசைப்பட்டு, அவற்றிற்கு தூபங்காட்டுவதையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். இப்படிப்பட்ட மாய்மாலக் காரர்களை கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் கட்டிப்போடுவார். அவர்களுடைய இருதயங்களிலுள்ள இச்சைகளின் பிரகாரம் அவர்கள்மீது நீதியான நியாயத்தீர்ப்பு கொடுப்பார்.

இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய விக்கிரகாராதனையினால் தங்களைத் தாங்களே அழித்துப்போடுகிறார்கள். "அவர்கள் எல்லாரும் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, என்னை விட்டுப் பேதலித்துப்போனார்கள்" (எசே 14:5) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தர் சொல்லுகிற பிரதியுத்தரம் இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருக்கும் பொதுவானது. அவர்களுக்கு மாத்திரமல்ல, இஸ்ரவேலில் தங்குகிற அந்நியருக்கும் கர்த்தருடைய பிரதியுத்தரம் பொருந்தும். அந்நியர்கள் இஸ்ரவேல் தேசத்தில் தங்கும்போது, அவர்களும் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தரைப் பின்பற்றாமல், பேதலித்து, தங்கள் நரகலான விக்கிரகங்களை, தங்கள் இருதயத்தின்மேல் நாட்டியிருந்தால், கர்த்தருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும், இஸ்ரவேல் வம்சத்தார்மீது வருவதுபோல, இஸ்ரவேலில் தங்குகிற அந்நியர்மேலும் வரும்.

விக்கிரகங்களை ஆராதிக்கிற அந்நியர்கள், இஸ்ரவேல் தேசத்திலே தங்கியிருந்து, தீர்க்கதரிசிகள் மூலமாய் கர்த்தரிடத்தில் விசாரிக்க வருவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தீர்க்கதரிசிகள் உத்தரவு கொடுக்கமாட்டார்கள். கர்த்தரே அவர்களுக்கு உத்தரவு கொடுப்பார். இஸ்ரவேல் தேசத்தில் தங்குகிற அந்நியர்கள் கர்த்தரைப் பின்பற்றாமல், விக்கிரகங்களை பின்பற்றினால், அவர்கள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்.

விக்கிரகங்களோடு ஐக்கியமாயிருக்கிறவர்களால் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்க முடியாது. அவர்கள் மாய்மாலக்காரர்கள். விக்கிரகங்களைப் பின்பற்றுகிறவர்கள், கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருப்பார்கள். அவர்கள் தாங்களாகவே தேவனோடுள்ள ஐக்கியத்தையும், தொடர்பையும் துண்டித்துக்கொள்வார்கள். ஆனாலும் தங்களை பக்தியுள்ளவர்கள்போல காண்பித்து, தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிக்க வருவார்கள். இவர்களுக்கு தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் பிரதியுத்தரமாகக் கொடுக்கப்படாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளே அவர்களுக்கு பிரதியுத்தரமாய்க் கொடுக்கப்படும்.

இஸ்ரவேலில் தங்குகிற அந்நியர்கள், கர்த்தரைப்பின்பற்றாமல், விக்கிரகங்களை பின்பற்றி, தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிக்க வரும்போது, கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக தம்முடைய முகத்தைத் திருப்பிக்கொள்வார். அவர்களை அடையாளமாகவும் பழமொழியாகவும் வைப்பார். அவர்கள் தம்முடைய ஜனத்தின் நடுவிலிராதபடிக்கு, கர்த்தர் அவர்களை சங்கரித்துப்போடுவார். அப்போது அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள் (எசே 14:8). அந்நியர்கள் தங்களுடைய மாய்மாலங்களினால், தங்களை இஸ்ரவேல் ஜனத்தார்போல காண்பித்துக்கொள்வார்கள். ஆனால் கர்த்தரோ அப்படிப்பட்ட மாய்மாலக்காரர்களை தம்முடைய ஜனத்தின் நடுவில் இருப்பதற்கு அனுமதிக்கமாட்டார்.

இஸ்ரவேல் வம்சத்தார் மாய்மாலக்காரராயிருப்பதுபோல, கள்ளத்தீர்க்கதரிசிகளும் மாய்மாலக்காரராயிருக்கிறார்கள். கர்த்தர் இவர்களுக்கு வார்த்தைகளையும், தரிசனங்களையும் கொடுக்காவிட்டாலும், இவர்கள் தங்களை கர்த்தருடைய தீர்க்கதரிசிகள்போல காண்பித்துக் கொள்கிறார்கள். தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிக்க வருகிறவர்களும் மாய்மாலக்காரராயிருக்கிறார்கள். தீர்க்கதரிசிகளும் மாய்மாலக்காரராயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரில் விக்கிரகாராதனை செய்கிறவர்கள், எசேக்கியேலிடத்தில் கர்த்தருடைய வார்த்தைகளை விசாரிக்க வந்தால், எசேக்கியேல் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையோ, சமாதான வார்த்தைகளையோ சொல்லமாட்டார். எசேக்கியேல் அவர்களுக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையே சொல்லுவார். அவர்களுக்கு எசேக்கியேலின் வார்த்தைகள் சந்தோஷத்தைக் கொடுக்காது. இதனால், அவர்கள் தங்களுக்கு ஏற்ற வார்த்தைகளைச் சொல்லும் மற்ற தீர்க்கதரிசிகளை தேடிப்போவார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் கர்த்தருடைய நல்ல தீர்க்கதரிசிகள் இருப்பதுபோல, கள்ளத்தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய இருதயத்தின் நினைவுகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லுவார்கள். இவர்கள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுவதை கர்த்தர் சிறிதுகாலம் அனுமதிக்கிறார். "ஒரு தீர்க்கதரிசி எத்தப்பட்டு ஒரு விசேஷத்தைச் சொன்னானாகில், அப்படிக்கொத்த தீர்க்கதரிசியைக் கர்த்தராகிய நானே எத்தப்படப்பண்ணினேன்" (எசே 14:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய்யான ஊழியம் நிலைத்திருக்காது. கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டுவார். அவர்களை இஸ்ரவேல் ஜனத்தின் நடுவிலிராதபடிக்கு அழித்துப்போடுவார். இது கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு கிடைக்கும் தண்டனை. கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இது ஜனங்களுக்கு கிடைக்கும் தண்டனை.

அப்படியே அவரவர் தங்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்; தீர்க்கதரிசியினிடத்தில் விசாரிக்கிறவனுடைய தண்டனை எப்படியோ அப்படியே தீர்க்கதரிசியினுடைய தண்டனையும் இருக்கும் (எசே 14:10).

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்பவேண்டும். அவர்கள் தங்கள் சகல அருவருப்புக்களையும் விட்டு தங்கள் முகத்தைத் திருப்பவேண்டும் (எசே 14:6). அவர்கள் தங்கள் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் பற்றியெரியும். அவர்களுக்கு அழிவு வரும். அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிக்க வருவதற்கு முன்பாக, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அதன் பின்புதான் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை விசாரித்து கேட்கவேண்டும்.

பாவிகள் மனந்திரும்பும்போது, கர்த்தர் அவர்கள்மீது பிரியமாயிருக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய வார்த்தைகளையும் பிரமாணங்களையும் வெளிப்படுத்துகிறார். பாவிகள் மனந்திரும்பவில்லையென்றால், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கமாட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையே கேட்பார்கள்.

மாய்மாலம் பண்ணுகிற தீர்க்கதரிசிகள் அழிந்துபோவதுபோல, மாய்மாலம் பண்ணுகிற இஸ்ரவேல் வம்சத்தாரும் அழிந்துபோவார்கள். பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொள்கிற மாய்மாலக்காரருக்கு, கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகள் உண்டாகாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பே அவர்கள்மீது வந்து தங்கும்.

இஸ்ரவேல் வம்சத்தாரில் ஒரு சிலரை கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாகவும் பழமொழியாகவும் வைக்கிறார். துன்மார்க்கருக்கு வரும் அழிவைப் பார்த்து, மற்ற ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும். கர்த்தர் மாய்மாலக்காரரை சங்காரம்பண்ணுவதைப் பார்த்து, மற்ற ஜனங்கள் தங்களுடைய இருதயங்களில் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

"இஸ்ரவேல் வம்சத்தார் இனி என்னை விட்டு வழிதப்பிப்போகாமலும், தங்கள் எல்லா மீறுதல்களாலும் இனி அசுசிப்படாமலும் இருக்கும்பொருட்டாக இப்படிச் சம்பவிக்கும்" (எசே 14:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தங்கள் பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள், விக்கிரகங்களை ஆராதியாமல் கர்த்தரை உண்மையாய் ஆராதிக்கிறவர்கள், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறவர்கள் ஆகியோர் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தரும் அவர்களுடைய தேவனாயிருப்பார் (எசே 14:11).

கர்த்தருக்கு விரோதமாய் துரோகம்பண்ணின தேசம் எசே 14:12-20

எசே 14:12. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 14:13. மனுபுத்திரனே, ஒரு தேசம் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணிக் கொண்டேயிருந்து, பாவஞ்செய்தால், நான் அதற்கு விரோதமாக என் கையை நீட்டி, அதில் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்து, அதில் பஞ்சத்தை அனுப்பி, மனுஷரையும் மிருகங்களையும் அதில் இராதபடிக்கு நாசம்பண்ணுவேன்.

எசே 14:14. அப்பொழுது நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 14:15. நான் தேசத்தில் துஷ்டமிருகங்களை அனுப்ப, அம்மிருகங்களினிமித்தம் ஒருவரும் அதின் வழியாய் நடக்கக்கூடாதபடி வெறுமையும் பாழுமாகும்போது,

எசே 14:16. அந்த மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், தாங்கள்மாத்திரம் தப்புவார்களே யல்லாமல், குமாரரையாகிலும் குமாரத்தி களையாகிலும் தப்புவிக்க மாட்டார்கள்; தேசமும் பாழாய்ப்போகும் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 14:17. அல்லது நான் அந்த தேசத்தின்மேல் பட்டயத்தை வரப்பண்ணி: பட்டயமே, தேசத்தை உருவப்போ என்று சொல்லி, அதிலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் நாசம்பண்ணும்போது,

எசே 14:18. அந்த மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், தாங்கள்மாத்திரம் தப்புவார்களே யல்லாமல், குமாரரையாகிலும் குமாரத்தி களையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 14:19. அல்லது நான் அந்த தேசத்தில் கொள்ளைநோயை அனுப்பி, அதிலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் நாசம்பண்ணும்படி அதின்மேல் இரத்தப்பழியாக என் உக்கிரத்தை ஊற்றும்போது,

எசே 14:20. நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனை யாகிலும், குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

ஒரு தேசம் முழுவதும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அந்த தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். அந்த தேசம் முழுவதும் கர்த்தருடைய கோபத்தினால் அழிந்துபோகும். ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணும்போது, அந்த துரோகம், அந்த தேசம் முழுவதும் ஒரு கொள்ளைநோயைப்போல பரவும்.

அந்த தேசத்திலுள்ள ஜனங்கள் எல்லோருமே துன்மார்க்கராயும், மாய்மாலக்காரராயும் இருப்பார்கள். அப்படிப்பட்ட தேசத்திற்கு விரோதமாக கர்த்தர் தம்முடைய கையை நீட்டி, அந்த தேசம் முழுவதையும் தண்டிப்பார்.

கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணுகிற தேசங்களைத் தண்டிப்பதற்கு, கர்த்தர் வெவ்வேறு விதமான நியாயத்தீர்ப்புகளை பயன்படுத்துகிறார். அவற்றில் நான்கு நியாயத்தீர்ப்புகள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன: 1. பஞ்சம் 2. துஷ்டமிருகம் 3. பட்டயம் 4. கொள்ளைநோய்.

ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாய் துரோகம்பண்ணிக்கொண்டேயிருந்து, பாவம் செய்தால், கர்த்தர் அதற்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டுவார். அந்த தேசத்தில் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்துப்போடுவார். அந்த தேசத்திற்கு பஞ்சத்தை அனுப்பி, மனுஷரையும் மிருகங்களையும் அந்த தேசத்திலிராதபடிக்கு நாசம்பண்ணுவார் (எசே 14:13).

ஒரு தேசம் முழுவதும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் அந்த தேசத்திற்கு பொதுவான நன்மைகளையும், பொதுவான இரக்கங்களையும், பொதுவான கிருபைகளையும் கொடுக்கமாட்டார். அவர்களுடைய ஜீவனுக்கு ஆதரவாகயிருப்பவற்றை முறித்துப்போடுவார். அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் நிறுத்தப்படும். இயற்கையின் மூலமாக அவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களும் நின்றுபோகும். பூமி தன் விளைச்சலை தராது. வானத்திலிருந்து மழை பெய்யாது. தேசம் முழுவதும் குறைவு உண்டாகும்.

ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, தொடர்ந்து பாவம் செய்தால், கர்த்தர் அந்த தேசத்தில் துஷ்டமிருகங்களை அனுப்புவார். அந்த மிருகங்களினிமித்தமாக, ஒருவரும் அந்த தேசத்தின் வழியாய் நடக்கமாட்டார்கள். நடக்கவும் முடியாது. அந்த தேசம் வெறுமையும் பாழுமாகும்.

மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணும்போது, கலகக்கார மனுஷருக்கு விரோதமாக, கர்த்தர் மிருகங்களை எழுப்புகிறார். இது கர்த்தருடைய நீதியாயிருக்கிறது.

"உங்களுக்குள்ளே வெளியின் துஷ்டமிருகங்களை வரவிடுவேன்; அவைகள் உங்களைப் பிள்ளைகளற்றவர்களாக்கி, உங்கள் மிருகஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப் பண்ணும்; உங்கள் வழிகள் பாழாய்க் கிடக்கும்" (லேவி 26:22).

ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் அந்த தேசத்தில் யுத்தம் நடைபெறுவதை அனுமதிக்கிறார். யுத்தம் வந்தால் பட்டயமும் வரும். கர்த்தர் அந்த தேசத்தின்மேல் பட்டயத்தை வரப்பண்ணுவார். "பட்டயமே, தேசத்தை உருவப்போ" (எசே 14:17) என்று பட்டயத்திற்கு கட்டளை கொடுப்பார். பட்டயம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும். அது அந்த தேசத்திலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் நாசம் பண்ணும்.

ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாய் தொடர்ந்து துரோகம்பண்ணி, பாவம் செய்யும்போது, கர்த்தர் அந்த தேசத்தில் கொள்ளைநோயை அனுப்புவார். அந்த தேசத்தினுடைய அக்கிரமத்தினிமித்தமாகவும், பாவத்தினிமித்தமாகவும், அதின்மேல் இரத்தப்பழியாக கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை ஊற்றுவார். தேசத்தில் கொள்ளை நோய் வரும்போது, அது அந்த தேசத்திலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் நாசம்பண்ணும் (எசே 14:19).

கர்த்தருடைய ஜனங்கள் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணும்போது, கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வரும் என்று எதிர்பார்க்க வேண்டும். கர்த்தர் துன்மார்க்கருடைய பாவங்களை கண்டும் காணாதவர் போல் இருக்கமாட்டார். கர்த்தருடைய கண்கள் மனுபுத்திரர் எல்லோரையும் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பார்வைக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை.

ஒரு தேசத்திலுள்ளவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணி பாவம் செய்யும்போது, அந்த தேசத்திலும் ஒரு சில நல்லவர்கள் இருப்பார்கள். தேசம் அழிவுக்கு நேராக போய்க்கொண்டிருக்கும் போது, இவர்களோ கர்த்தரிடத்தில் பயபக்தியோடு ஜெபம்பண்ணிக் கொண்டிருப்பார்கள். தேசத்திலுள்ள எல்லோரும் கர்த்தருக்கு முன்பாக அநியாயமும், அக்கிரமமும், துரோகமும் செய்துகொண்டிருக்கும்போது, அந்த தேசத்திலே நோவா, தானியேல், யோபு ஆகிய பரிசுத்தவான்களைப்போல மூன்று பேர் நல்லவர்களாக இருப்பார்கள்.

தானியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்பட்டார். "அவர்களுக்குள், யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள்" (தானி 1:6). பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மத்தியிலே தானியேலுக்கு நல்ல பெயர் இருக்கிறது. எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களும் தானியேலை நினைத்து பார்க்கிறார்கள். தானியேல் எருசலேமிலேயே தங்கியிருந்தால், எருசலேமுக்கு அழிவு வந்திருக்காது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

கர்த்தரோ அவர்களுடைய நினைவுக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுக்கிறார். "அந்த மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், தாங்கள்மாத்திரம் தப்புவார்களேயல்லாமல், குமாரரையாகிலும் குமாரத்திகளையாகிலும் தப்புவிக்க மாட்டார்கள்; தேசமும் பாழாய்ப்போகும் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எசே 14:16) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

தேசம் துன்மார்க்கத்தில் நிரம்பியிருக்கும்போது, தேசத்திலுள்ள ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணும்போது, அந்த தேசத்தில் ஒரு சில நல்லவர்கள் இருந்தால், கர்த்தர் அந்த தேசத்தை நாசம்பண்ணாமல் பாதுகாப்பார் என்று ஜனங்கள் பொதுவாக நினைக்கிறார்கள். கர்த்தரோ பரிசுத்தவான்களை மாத்திரம் பாதுகாக்கிறார். பரிசுத்தவான்களினிமித்தமாக, பாவத்திலும், துன்மார்க்கத்திலும் நிரம்பியிருக்கிற முழுதேசத்தையும், கர்த்தர் பாதுகாக்கமாட்டார்.

பூர்வகாலத்திலே நோவா பரிசுத்தவானாயிருந்தார். ஊத்ஸ் தேசத்திலே யோபு நீதிமானாயிருந்தார். ஆனாலும் இவர்கள் மூலமாய், அவர்களுடைய முழுதேசமும் இரட்சிக்கப்படவில்லை. நோவாவின் காலத்தில், ஜலப்பிரளயம் உண்டாயிற்று.

கர்த்தர் பொதுவாக, ஒரு சில பரிசுத்தவான்கள் நிமித்தமாக, அந்த தேசத்திலிருக்கிற துன்மார்க்கரை அழிக்காமல் விட்டுவிடுகிறார். இது கர்த்தருடைய பொதுவான சுபாவம். எருசலேமிலுள்ள ஜனங்கள் கர்த்தருடைய இந்த கிருபையுள்ள பொதுவான சுபாவத்தையே நினைத்துப் பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தரோ தம்முடைய பொதுவான சுபாவத்தின்படி, ஒரு சில பரிசுத்தவான்களினிமித்தமாய், துன்மார்க்கரை அழிக்காமல் விட்டுவிடமாட்டார். அவர்களுடைய அக்கிரமமும், துரோகமும் மிகவும் அதிகமாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் அக்கிரமக்காரரை அழிப்பார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தங்களுடைய தேசத்திலே கர்த்தருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும், கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார்கள். ஆனாலும், துன்மார்க்கருடைய அக்கிரமம் மிகவும் அதிகமாயிருக்கிறது. தேசத்திலே ஜெபத்தைவிட துன்மார்க்கம் அதிகரித்திருக்கிறது. துன்மார்க்கமும், துரோகமும், அக்கிரமமும் முழுதேசத்தையும் நிரப்புகிறது.

கர்த்தர் துன்மார்க்கரோடு நீதிமான்களை அழித்துப்போடமாட்டார். அதே வேளையில் நீதிமான்களோடு துன்மார்க்கரைப் பாதுகாக்கவும் மாட்டார். நீதிமான்களை மாத்திரம் பாதுகாப்பார். துன்மார்க்கரையோ அழித்துப்போடுகிறார். கர்த்தர் ஒரு சில நீதிமான்களினிமித்தமாக, அந்த தேசத்திலுள்ள துன்மார்க்கர் எல்லோரையும் பாதுகாக்க மறுத்துவிடுகிறார்.

நோவா, தானியேல், யோபு ஆகியோர் பரிசுத்தவான்கள். பாவிகள் மீது கர்த்தருடைய கோபம் வந்திருக்கிறது. பரிசுத்தவான்கள் தங்களுடைய பரிந்து பேசும் ஜெபங்களினால், கர்த்தருடைய கோபத்தை அமைதிப்படுத்த முடியுமென்றால், அவர்கள் அதை நிச்சயமாக செய்திருப்பார்கள். அவர்கள் ஜெபம்பண்ணியும், கர்த்தருடைய கோபம் துன்மார்க்கர்மீது நிலைத்திருக்கிறது.

நோவா தன்னுடைய காலத்தில் நீதிமானாயிருந்தார். கர்த்தர் நோவாவின் நிமித்தமாக அவருடைய குடும்பத்தாரை பாதுகாத்தார். நோவாவின் குமாரரில் ஒருவராகிய காம் துன்மார்க்கனாயிருந்தாலும், அவரும் பேழைக்குள் பிரவேசித்து, ஜலப்பிரளயத்திற்கு தப்பினார்.

யோபு தன்னுடைய பிள்ளைகளுக்காகவும், தன்னுடைய சிநேகிதர்களுக்காகவும் கருத்தாய் ஜெபித்தார். யோபு ஜெபித்தபோது கர்த்தர் அவருடைய சிறையிருப்பை மாற்றினார். தானியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். சிறையிருப்பிலுள்ள யூதர்கள் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது, தானியேலும் அவர்களோடு சேர்ந்து பாடுகளை அனுபவித்தார். தானியேல் மிகுந்த மனத்தாழ்மையுள்ளவர். கர்த்தருடைய சமுகத்தில் எப்போதும் ஜெபித்துக் கொண்டிருக்கிறவர். நோவாவைப்போலவும், யோபுவைப்போலவும், தானியேலும் பரலோகத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

நோவாவின் காலத்தில் துன்மார்க்கர் தப்பித்ததுபோல, தானியேலின் காலத்தில் துன்மார்க்கர் தப்பிக்கவில்லை. ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் செய்யும்போது, கர்த்தர் அந்த தேசத்திற்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டுகிறார். அந்த தேசத்தின் ஜனங்களுக்காக பரிந்து பேசி ஜெபிக்கும் பரிசுத்தவான்களை மாத்திரம், கர்த்தர் அழிவிலிருந்து பாதுகாக்கிறார். கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து துரோகம்பண்ணி, பாவம் செய்கிறவர்களை, கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் அழித்துப்போடுகிறார்.

பக்தியுள்ள யூதர்களால், துன்மார்க்கமான யூதர்களை கர்த்தருடைய கோபத்திலிருந்து தப்பிக்க வைக்க முடியவில்லை. அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்கள். அவர்கள் நீதிமான்களாயிருந்தாலும், கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபிக்கிறவர்களாயிருந்தாலும், தங்களுடைய துன்மார்க்கரான குமாரரையும், குமாரத்திகளையும் தப்புவிக்கமாட்டார்கள். நோவாவும், தானியேலும், யோபுவும், துன்மார்க்கமான தேசத்தின் நடுவிலிருந்தாலும், அந்த தேசத்திலுள்ள துன்மார்க்கர்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும்.

ஒருதேசம் கர்த்தருக்கு விரோதமாய் தொடர்ந்து துரோகம்பண்ணிக் கொண்டிருக்கும்போது கர்த்தர் அந்த தேசத்தின்மீது பஞ்சம், பட்டயம், துஷ்டமிருகம், கொள்ளை நோய் ஆகிய வாதைகளை அனுப்புவார். நோவா, தானியேல், யோபு, ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் (எசே 14:14). அவர்கள், தாங்கள்மாத்திரம் தப்புவார்களேயல்லாமல், தங்கள் குமாரரையாகிலும் குமாரத்திகளையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள்; தேசமும் பாழாய்ப்போகும் (எசே 14:16).

கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணுகிற தேசத்தின்மீது, கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு வரும். அந்த தேசத்திலுள்ளவர்களுக்கு பொதுவான தீங்குகளும், துன்பங்களும், வாதைகளும் வரும். அந்த சேதத்திலுள்ள பொல்லாதவர்கள் கஷ்டங்களை அனுபவிப்பதுபோல, அங்கேயுள்ள நல்லவர்களும் கஷ்டங்களை அனுபவிப்பார்கள்.

துன்மார்க்கர் அனுபவிக்கிற கஷ்டங்கள், அவர்கள்மீது வந்த தண்டனையாகயிருக்கும். பரிசுத்தவான்கள் அனுபவிக்கிற கஷ்டங்கள், அவர்களுடைய நன்மைக்கேதுவாகயிருக்கும். உபத்திரவமும், வாதைகளும், கஷ்டங்களும் நீதிமான்களை இன்னும் பரிசுத்தப்படுத்தும். உபத்திரவங்கள் வரும்போது பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் மீட்கப்படாவிட்டாலும், அவர்களுடைய ஆத்துமா மீட்கப்படும்.

மீதியானவர்கள்
எசே 14:21-23

எசே 14:21. ஆகையால், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் மனுஷரையும் மிருகங்களையும் நாசம்பண்ணும்படி, எருசலேமுக்கு விரோதமாகப் பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளைநோய் என்னும் இந்நான்கு கொடிய தண்டனைகளையும் அனுப்பும் போது எவ்வளவு அதிக சங்காரமாகும்?

எசே 14:22. ஆகிலும், இதோ, அதிலே தப்பி மீதியாகி வெளியே கொண்டுவரப்படுகிற குமாரரும் குமாரத்திகளும் சிலர் இருப்பார்கள்; இதோ, அவர்கள் உங்களண்டைக்குப் புறப்பட்டு வருவார்கள்; அப்பொழுது நீங்கள் அவர்கள் மார்க்கத்தையும் அவர்கள் கிரியைகளையும் கண்டு, நான் எருசலேமின்மேல் வரப்பண்ணின தீங்கையும் அதின்மேல் நான் வரப்பண்ணின எல்லாவற்றையுங் குறித்துத் தேற்றப்படுவீர்கள்.

எசே 14:23. நீங்கள் அவர்கள் மார்க்கத்தையும் அவர்கள் கிரியையையும் காணும்போது, அவர்கள் உங்களுக்குத் தேற்றரவாயிருப்பார்கள்; நான் அதிலே செய்த எல்லாவற்றையும் முகாந்தரமில்லாமல் செய்யவில்லையென்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொன்னார்.

கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புகளினால் முழுதேசத்தையும் அழித்துப்போட்டாலும், கர்த்தருடைய இரக்கத்திற்கு அடையாளமாக, அந்த தேசத்தில் ஒரு சிலர் அழிவுக்கு தப்பி மீதமாயிருப்பார்கள். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் எருசலேம் நகரம் அழிந்துபோயிற்று. கர்த்தர் அந்த நகரத்திலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் நாசம் பண்ணினார். கர்த்தர் எருசலேமுக்கு விரோதமாய் பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளை நோய் என்னும் இந்த நான்கு கொடிய தண்டனைகளையும் அனுப்பினார். இதனால் எருசலேம் நகரம் முற்றிலுமாய் சங்காரமாயிற்று.

எருசலேம் நகரம் அழிந்துபோனாலும், எருசலேமின் குடிகள் சங்காரமானாலும், அதிலே தப்பி மீதியாகி வெளியே கொண்டுவரப்படுகிற குமாரரும், குமாரத்திகளும் சிலர் இருப்பார்கள். கல்தேயர்கள் அவர்களை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போவார்கள். சங்காரத்திற்கு தப்பி மீதமாயிருக்கிற இந்த குமாரரும் குமாரத்திகளும், புதிய சந்ததிக்கு வித்தாகயிருப்பார்கள்.

எருசலேம் நகரத்திலே இருக்கிற வாலிபரையும், கன்னிகைகளையும் கல்தேயர்கள் சிறைப்பிடிப்பார்கள். அவர்களை பாபிலோன் தேசத்திற்கு அழைத்து வருவார்கள். "இதோ, அவர்கள் உங்களண்டைக்கு புறப்பட்டு வருவார்கள்" (எசே 14:22) என்று கர்த்தர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு சொல்லுகிறார். சிறையிருப்புக்கு வருகிறவர்கள் பாபிலோனுக்கு மனப்பூர்வமாய் வருவார்கள். ஏனெனில் அவர்களுடைய சிநேகிதர்களில் அநேகர், ஏற்கெனவே பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போயிருக்கிறார்கள்.

எருசலேமில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் பாபிலோன் தேசத்திற்கு வரும்போது, ஏற்கெனவே சிறையிருப்பிலிருக்கிறவர்கள் அவர்களுடைய மார்க்கத்தையும், அவர்களுடைய கிரியைகளையும் காண்பார்கள். கர்த்தர் எருசலேமின்மேல் வரப்பண்ணின தீங்கையும், அவர் அதின்மேல் வரப்பண்ணின எல்லாவற்றையும் குறித்து தேற்றப்படுவார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்கள், எருசலேமிலிருந்து சிறையிருப்புக்கு வருகிறவர்களுடைய மார்க்கத்தையும், கிரியைகளையும் காண்பார்கள். அப்போது, அவர்கள் சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு தேற்றரவாயிருப்பார்கள்.

எருசலேமிலிருந்து பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு வருகிறவர்கள் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்வார்கள். தங்களை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தி தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படும். அவர்கள் வேதனைகளையும், உபத்திரவங் களையும் அனுபவித்ததினால், அவர்களுடைய ஜீவியங்களில் நன்மைக்கேதுவான மாற்றம் உண்டாயிருக்கிறது.

ஏற்கெனவே சிறையிருப்பிலிருக்கிற வர்கள், சிறையிருப்புக்கு புதிதாய் வருகிறவர்களின் மனந்திரும்புதல்களையும், புதுப்பிக்கப்பட்ட இருதயங்களையும் அவர்களுடைய பக்திமார்க்கங்களையும், அவர்களுடைய பரிசுத்தமான கிரியைகளையும் பார்ப்பார்கள். அதைப் பார்க்கும்போது ஏற்கெனவே பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் உண்டாகும்.

கர்த்தர் எந்தக் கிரியையையும் முகாந்தரமில்லாமல் செய்யமாட்டார். கர்த்தருடைய கிரியைகளுக்கு நிச்சயமாகவே முகாந்தரம் இருக்கும். எருசலேம் நகரம் அழிந்துபோனதற்கும் முகாந்தரம் இருக்கும். எருசலேமின் குடிகள் சங்காரமானதற்கும், யூதர்களில் கொஞ்சம்பேர் பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளைநோய் ஆகிய கொடிய தண்டனைகளை அனுபவித்து, அதிலிருந்து தப்பித்து, பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு வந்ததற்கும் நிச்சயமாகவே முகாந்தரம் இருக்கும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்கள், கர்த்தர் எல்லாவற்றையும் முகாந்தரமில்லாமல் செய்யவில்லை என்பதை அறிந்துகொள்வார்கள். எருசலேம் அழியும்போது கர்த்தருடைய நீதி வெளிப்படுகிறது. கர்த்தருக்கு மீதமானவர்கள் தப்பிக்கும்போது அவருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படுகிறது. கர்த்தர் செய்கிற எல்லாவற்றிற்கும் முகாந்தரமுண்டு.

15 அதிகாரம்

எசேக்கியேல், கர்த்தருடைய நாமத்தினால், எருசலேமின் அழிவைக் குறித்து, மறுபடியும் மறுபடியுமாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். ஆனால் எருசலேமின் குடிகளோ தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தருக்கு விரோதமாய்க் கடினமாயிருக்கிறது.

எருசலேம் அழிக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எருசலேமின் அழிவை விவரிப்பதற்கு, காட்டுச்செடிகளுக்குள்ளிருக்கிற திராட்சச்செடியை ஒரு உவமையாகச் சொல்லுகிறார். ஒரு பிரயோஜனமுமில்லாத காட்டு திராட்சச்செடி வெட்டப்பட்டு, அக்கினியிலே சுட்டெரிக்கப்படும்.

கர்த்தர் எருசலேமின் குடிகளை அக்கினிக்கு ஒப்புக்கொடுப்பார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணினார்கள். கர்த்தர் யூதாதேசத்தை பாழாய்ப்போகப்பண்ணுவார் (எசே 15:1-8).

காட்டிலிருக்கிற திராட்சச்செடி. எசே 15:1,2

எசே 15:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 15:2. மனுபுத்திரனே, காட்டிலிருக்கிற செடிகளுக்குள் மற்ற எல்லாச் செடிகொடிகளைப்பார்க்கிலும் திராட்சச்செடிக்கு மேன்மை என்ன?

எசேக்கியேல் தீர்க்கதரிசி எருசலேம் நகரத்தின் மகிமையை நினைத்துப் பார்க்கிறார். அது கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். ஆனால் எருசலேமின் குடிகளோ கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு எருசலேமின்மீது வருகிறது. எருசலேமுக்கு பேரழிவு வரப்போகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி எருசலேமுக்கு வரப்போகும் அழிவை வேதனையோடு நினைத்துப் பார்க்கிறார்.

கர்த்தர் எருசலேம் நகரத்தை ஒரு திராட்சச்செடிக்கு ஒப்புமையாய்ச் சொல்லுகிறார். இது தோட்டத்திலிருக்கிற திராட்சச்செடியல்ல. இது காட்டிலிருக்கிற திராட்சச்செடி. திராட்சச்செடி காட்டிலிருந்தாலும், அது மற்ற எல்லா செடி கொடிகளைப் பார்க்கிலும் அழகாயிருக்கும். திராட்சச்செடி அதிகமாய்க் கனிகொடுக்கும்போது, அது மிகவும் பயனுள்ள செடியாகயிருக்கும். இதுவே திராட்சச்செடியின் மேன்மை.

கர்த்தர் எருசலேம் நகரத்தை நற்கனிதரும் உயர்குல திராட்சச்செடியாக நாட்டியிருக்கிறார். "நான் உன்னை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன? (எரே 2:21).

எருசலேம் நகரம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். எருசலேமின் குடிகள் பரிசுத்தமாயிருக்கவேண்டும். எருசலேமின் பரிசுத்தமே, தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் மகிமை. கர்த்தர் எந்த நோக்கத்தோடு எருசலேம் நகரத்தை ஸ்தாபித்திருக்கிறாரோ, அந்த நோக்கத்தை அது நிறைவேற்றவேண்டும். எருசலேமிலிருந்து பரிசுத்தமும், கர்த்தருக்கு பயப்படும் பயமும் நற்கனிகளைப்போல வெளிப்படவேண்டும்.

காட்டிலிருக்கிற திராட்சச்செடி கனிகொடுக்கவில்லையென்றால், அந்தச் செடியால் ஒரு பிரயோஜனமுமில்லை. இது காட்டிலுள்ள மற்ற நெரிஞ்சில் செடிகளைப்போலவும், முட்செடிகளைப்போலவும் பிரயோஜனமற்றதாயிருக்கும்.

"காட்டிலிருக்கிற செடிகளுக்குள் மற்ற எல்லாச் செடிகொடிகளைப்பார்க்கிலும் திராட்சச்செடிக்கு மேன்மை என்ன?" (எசே 15:2) என்று கர்த்தர் கேட்கிறார். காட்டிலுள்ள செடிகள் பொதுவாக கனிதராது. சில விருட்சங்கள் கனிதரவில்லையென்றாலும், அதன் மரங்கள் உறுதியாயிருக்கும். அந்த மரத்திலே உறுதியான கட்டைகளை எடுக்கலாம். அதை பலகைகளாக செய்து பயன்படுத்தலாம்.

திராட்சச்செடி ஒரு சாதாரணமான கொடி. அது நற்கனிகளைக் கொடுத்தால்தான், திராட்சச்செடி பிரயோஜனமுள்ளதாயிருக்கும். திராட்சச்செடியில் கனியில்லையென்றால், அந்தச்செடி ஒன்றுக்கும் பயன்படாது. திராட்சச்செடியிலிருந்து கட்டைகளையோ, பலகைகளையோ எடுக்க முடியாது. காட்டிலுள்ள திராட்சச்செடி கனிகளைக் கொடுக்கவில்லையென்றால், அது ஒன்றுக்கும் உதவாது. அதைப் பிடுங்கி அக்கினியிலே போட்டுவிடுவார்கள்.

ஒரு வேலைக்கும் உதவாத திராட்சச்செடி. எசே 15:3,4

எசே 15:3. யாதொரு வேலைசெய்ய அதிலே ஒரு கட்டை எடுக்கப்படுமோ? யாதொரு தட்டுமுட்டைத் தூக்கிவைக்கும்படி ஒரு முளையை அதினால் செய்வார்களோ?

எசே 15:4. இதோ, அது அக்கினிக்கு இரையாக எறியப்படும்; அதின் இரண்டு முனைகளையும் அக்கினி எரித்துப்போடும்; அதின் நடுத்துண்டும் வெந்துபோம்; அது எந்த வேலைக்காவது உதவுமோ?

காட்டிலுள்ள கனிதராத திராட்சச்செடி, பரிசுத்தமில்லாத எருசலேம் நகரத்திற்கு ஒப்புமையாகச் சொல்லப்படுகிறது.

"இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது; அவன் தன் கனியின் திரளுக்குச் சரியாய்ப் பலிபீடங்களைத் திரளாக்குகிறான்; தங்கள் தேசத்தின் செழிப்புக்குச் சரியாய்ச் சிறப்பான சிலைகளைச் செய்கிறார்கள்" (ஓசி 10:1).

காட்டு திராட்சச்செடியிலிருந்து கட்டையை எடுக்க முடியாது. அதிலிருந்து தட்டுமுட்டை தூக்கி வைக்கும்படி ஒரு பலகையை செய்ய முடியாது. கனிதராத காட்டு திராட்சச்செடி எதற்கும் பிரயோஜனப்படாது.

ஒரு சில விருட்சங்களின் வேர்கள் பிரயோஜனமாயிருக்கும். வேறு சில விருட்சங்களில் கனிகளும் அதன் விதைகளும் பயனுள்ளதாயிருக்கும். ஒரு சில விருட்சங்களின் இலைகள்கூட நமக்கு பயன்படும். சில விருட்சங்கள் கனிதராது. ஆனால் அவை உறுதியான மரமாயிருக்கும் . சில விருட்சங்கள் கனிதரும். ஆனால் அவை உறுதியான மரமாயிராது. இவையெல்லாமே நமக்கு ஏதாவது ஒரு வழியில் பிரயோஜனமுள்ளது.

கனிதராத காட்டு திராட்சச்செடியோ ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது. அது கனியும் தராது. அதன் மரமும் உறுதியானதல்ல. பிரயோஜனமில்லாத காட்டு திராட்சச்செடி அக்கினிக்கு இரையாக எரியப்படும். அதின் இரண்டு முனைகளையும் அக்கினி எரித்துப்போடும். அதின் நடுத்துண்டும் வெந்துபோகும். கனிகொடுக்காத காட்டு திராட்சச்செடி எந்த வேலைக்கும் உதவாது.

எருசலேம் எசே 15:5-8

எசே 15:5. இதோ, அது வேகாதிருக்கும்போதே ஒரு வேலைக்கும் உதவாதிருக்க, அக்கினி அதை எரித்து, அது வெந்துபோனபின்பு, அது இனி ஒரு வேலைக்கு உதவுவதெப்படி?

எசே 15:6. ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: காட்டுச் செடிகளுக்குள்ளிருக்கிற திராட்சச் செடியை நான் அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுத்ததுபோல, எருசலேமின் குடிகளையும் அப்படியே ஒப்புக்கொடுத்து,

எசே 15:7. என் முகத்தை அவர்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்; அவர்கள் ஒரு அக்கினியிலிருந்து நீங்கித் தப்பினாலும், வேறே அக்கினி அவர்களைப் பட்சிக்கும், அப்படியே நான் என் முகத்தை அவர்களுக்கு விரோதமாய்த் திருப்பும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 15:8. அவர்கள் துரோகம்பண்ணினபடியினால், நான் தேசத்தைப் பாழாய்ப் போகப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

கனிதராத காட்டு திராட்சச்செடி எருசலேமுக்கு ஒப்புமையாகச் சொல்லப்படுகிறது. பரிசுத்தமான எருசலேம் நகரத்தில் இப்போது பரிசுத்தமில்லை. அது ஆவிக்குரிய காரியங்களுக்கு பிரயோஜனமற்றுப்போயிற்று. ஒரு காலத்தில் எருசலேம் நகரம் திராட்சத்தோட்டத்தில் நாட்டப்பட்ட, உயர்குல திராட்சச்செடியைப்போல இருந்தது. அந்தத் திராட்சச்செடியில் சுவையான கனிகள் ஏராளமாய் முளைத்தன. எருசலேம் நகரத்தில் தேவனுடைய நாமத்திற்கு மகிமையாக நீதியின் கனிகள் தாராளமாய்க் காணப்பட்டது.

எருசலேமில் கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அங்கே, ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டார்கள். எருசலேமிலே கர்த்தரை ஆராதிக்கிற வருகிறவர்கள் எல்லோருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் தாராளமாய்க் கிடைத்தது. யூதாதேசம் முழுவதிலுமிருந்து, இஸ்ரவேல் வம்சத்தார் எருசலேமுக்கு வந்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

அவர்கள் திராட்சத்தோட்டத்திலிருந்து ஏராளமான திராட்சப்பழங்களைப் பறிப்பதுபோல, கர்த்தருடைய நன்மைகளைப் பெற்றுக்கொண்டார்கள். பழம் பறிப்பதும் அதிகமாயிருந்தது. பழத்தை சேகரிப்பதும் அதிகமாயிருந்தது. கர்த்தரும் எருசலேமின்மேல் பிரியமாயிருந்தார்.

"சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே" *(ஏசா 5:7)*. "கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப்பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும்பகலும் காத்துக்கொள்வேன்" *(ஏசா 27:3)*.

கர்த்தர் எருசலேம் என்னும் தம்முடைய திராட்சத்தோட்டத்தை பாதுகாத்து பராமரித்தார். அதற்கு வேலியடைத்து நீர்ப்பாய்ச்சினார். ஆனால் அதிலுள்ள திராட்சக்கொடிகளோ இனிப்பான பழங்களைத் தருவதற்குப் பதிலாக, கசப்பான பழங்களைத் தந்தது.

"நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன?" *(ஏசா 5:4)*.

"அவர்களுடைய திராட்சச்செடி, சோதோமிலும் கொமோரா நிலங்களிலும் பயிரான திராட்சச்செடியிலும் தாழ்ந்த ஜாதியாயிருக்கிறது, அவைகளின் பழங்கள் பித்தும் அவைகளின் குலைகள் கசப்புமாய் இருக்கிறது" *(உபா 32:32)*.

எருசலேம் நகரத்தார் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினார்கள். கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத் தீர்ப்பினால், யூதாதேசத்தை பாழாய்ப்போகப் பண்ணுவார் (எசே 15:8). காட்டிலிருக்கிற திராட்சச்செடி கனிகொடுக்கவில்லையென்றால், அது ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது. அது எந்த வேலைக்கும் உதவாது. கனிதராத காட்டு திராட்சச்செடி அக்கினிக்கு இரையாக எரியப்படும்.

கனிகொடுக்காத காட்டு திராட்சச்செடி அக்கினிக்கு இரையாக எரியப்படுவதற்கு முன்பு, அது எந்த வேலைக்கும் உதவவில்லை. அக்கினி அதை எரிக்கும்போது, அந்த திராட்சச்செடி வெந்துபோகும். வெந்துபோன திராட்சச்செடி இனிமேல் ஒரு வேலைக்கும் உதவாது. கர்த்தர் காட்டு திராட்சச்செடியை அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுத்ததுபோல, எருசலேமின் குடிகளையும் அழிவுக்கு ஒப்புக்கொடுப்பார்.

"காட்டுச் செடிகளுக்குள்ளிருக்கிற திராட்சச்செடியை நான் அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுத்ததுபோல, எருசலேமின் குடிகளையும் அப்படியே ஒப்புக்கொடுத்து, என் முகத்தை அவர்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்; அவர்கள் ஒரு அக்கினியிலிருந்து நீங்கித் தப்பினாலும், வேறே அக்கினி அவர்களைப் பட்சிக்கும்" (எசே 15:6,7) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு விரோதமாய்த் திருப்பும்போது, இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தர் என்று அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு துரோகம்பண்ணினார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். அவர்களுடைய அக்கிரமங்களும், மீறுதல்களும், துரோகங்களும் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணிற்று.

யூதாதேசம் கர்த்தருக்கு பரிசுத்த தேசமாயிருந்தது. யூதர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஜாதியாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணியபோதோ, அவர்கள் ஒன்றுக்கும் பிரயோஜனமற்றவர்களாய் போய்விட்டார்கள். அவர்களிடத்தில் பரிசுத்தமில்லை. கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. அவர்கள் பூமியிலே, சூரியனுக்கு கீழே மிகவும் தாழ்ந்துபோனார்கள். அவர்களுக்கு குறைச்சல் உண்டாயிற்று. புறஜாதியார் அவர்களை மிதித்துப்போட்டார்கள்.

தேவனுடைய கிருபையின் மகிமைக்கேற்ற கனிதராதவர்களுக்கு அழிவு வரும். கர்த்தருடைய கோபம் பற்றியெரிவதற்கு, அவர்கள் விறகாகப் பயன்படுத்தப்படுவார்கள். காட்டு செடிகளுக்குள்ளே இருக்கிற திராட்சச்செடி அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுக்கப்படும். அதுபோலவே கர்த்தரும், பிரயோஜனமில்லாத எருசலேமை அழிவுக்கு ஒப்புக்கொடுப்பார்.

எருசலேமின் குடிகள் கனிதராத காட்டு திராட்சச்செடியைப் போலிருக்கிறார்கள். அவர்கள் காய்ந்து, உலர்ந்து, அழுகிப்போயிருக்கிறார்கள். பார்ப்பதற்கு அசுத்தமாகவும் தீட்டாகவும் இருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் எருசலேமின் குடிகளுக்கு விரோதமாக தம்முடைய முகத்தைத் திருப்புகிறார். எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு விரோதமாக தங்கள் முகத்தைத் திருப்பினார்கள். இப்போதோ கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக தம்முடைய முகத்தைத் திருப்புகிறார்.

கர்த்தர் எருசலேமை அழிப்பதற்கு வாதைகளை அனுப்புகிறார். அவர்கள் ஒரு வாதையிலிருந்து நீங்கி தப்பித்தாலும், வேறு வாதை அவர்களைப் பட்சிக்கும். அவர்கள்மீது அக்கினியின்மேல் அக்கினி வந்து இறங்கும். யூதாதேசம் பாழாய்ப்போகும். கல்தேயர்கள் எருசலேமை அக்கினியால் எரித்துப்போடுவார்கள். எருசலேம் ஒரு அக்கினிக்கு நீங்கி தப்பினாலும், வேறொரு அக்கினி அந்த நகரத்தைப் பட்சிக்கும்.

எருசலேமின் குடிகளுக்கு கஷ்டங்களுக்குமேல் கஷ்டங்களும், துன்பங்களுக்குமேல் துன்பங்களும், வாதைகளுக்குமேல் வாதைகளும், உபத்திரவங்களுக்கு மேல் உபத்திரவங்களும் வரும். அவர்கள் எருசலேமின் உபத்திரவங்களுக்கு தப்பித்தாலும், அவர்கள்மீது பாபிலோன் தேசத்தின் உபத்திரவங்கள் வரும்.

16 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்களுடைய பாவங்களினிமித்தமாய்த் தண்டிக்கிறார். அவர்களுடைய பாவங்களுக்குத் தக்க தண்டனை அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இதற்கு முந்திய அதிகாரத்தில், கனிகொடாத காட்டு திராட்சச்செடியோடு எருசலேம் நகரம் ஒப்பிட்டுச் சொல்லப்பட்டது. இந்த அதிகாரத்திலோ கர்த்தர் எருசலேம் நகரத்தை ஒரு சோரஸ்திரீயோடு ஒப்பிடுகிறார். கர்த்தருடைய நீதியின் பிரகாரம், எருசலேம் தன்னுடைய வேசித்தனத்தினிமித்தமாய் கடினமாய்த் தண்டிக்கப்படவேண்டும்.

கானான் தேசத்தின் ஆரம்பம் சிறுமையாயிருந்தது (எசே 16:3-5). கர்த்தர் கானான் தேசத்தின்மீது அதிகமான கிருபைகளையும், சிலாக்கியங்களையும் காண்பித்தார் (எசே 16:6-14). கர்த்தர் தங்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருந்தாலும், இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக ஜீவிக்கவில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள் (எசே 16:15-34).

இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் (எசே 16:35-43). எருசலேம் நகரம் சோதோமோடும், சமாரியாவோடும் ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது (எசே 16:44-59). கர்த்தருக்கு பயந்தவர்கள் அவருக்கு மீதியான ஜனமாயிருப்பார்கள். தமக்கு மீதியானவர்கள்மீது கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிப்பார் (எசே 16:60-68).

கானான் தேசத்தினுடைய பிறப்பின் வர்த்தமானம் எசே 16:1-5

எசே 16:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 16:2. மனுபுத்திரனே, நீ எருசலேமின் அருவருப்புகளை அதற்கு அறிவித்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்:

எசே 16:3. கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமுக்குச் சொல்லுகிறார், கானான் தேசமே உன் உற்பத்திக்கும் உன் பிறப்புக்கும் இடம், உன் தகப்பன் எமோரியன், உன் தாய் ஏத்தித்தி.

எசே 16:4. உன் பிறப்பின் வர்த்தமானம் என்னவென்றால், நீ பிறந்த நாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவுமில்லை; நீ சுத்தமாவதற்குத் தண்ணீரினால் குளிப்பாட்டப்படவுமில்லை; உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை; துணிகளில் சுற்றப்படவுமில்லை.

எசே 16:5. உனக்காகப் பரிதபித்து, இவைகளில் ஒன்றையாகிலும் உனக்குச் செய்ய ஒரு கண்ணும் உன் பேரில் இரக்கமாயிருந்ததுமில்லை; நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்துவிடப்பட்டாய்.

எசேக்கியேல் இப்போது கானான் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மத்தியிலே இருக்கிறார். எரேமியா தீர்க்கதரிசி எருசலேமிலிருந்து, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு பிரயோஜனமான வார்த்தைகளைச் சொன்னார். (எரே 29-ஆவது அதிகாரம்). எசேக்கியேல் பாபிலோனிலிருந்து, எருசலேமிலுள்ள யூதர்களுக்கு பிரயோஜனமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மிகுந்த வேதனைகளை அனுபவிக்கிறார்கள். எரேமியா அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை எழுதியனுப்பினார். எருசலேமிலுள்ள யூதர்களோ தங்கள் மனதில் மேட்டிமையோடும், இருதயக்கடினத்தோடும், கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களை உணர்த்துவதற்காகவும், அவர்களுடைய மேட்டிமைகளை அகற்றிப் போட்டு, அவர்களைத் தாழ்த்துவதற்காகவும் எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு எழுதியனுப்புகிறார்.

எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. கர்த்தர் எசேக்கியேலிடம் "மனுபுத்திரனே, நீ எருசலேமின் அருவருப்புகளை அதற்கு அறிவித்துச் சொல்லவேண்டும்" (எசே 16:2) என்று சொல்லுகிறார். எருசலேமின் பாவங்களை எசேக்கியேல் அவர்களுக்கு அறிவித்து சொல்லவேண்டும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை செய்யவேண்டுமென்றால், நம்முடைய பாவங்கள் என்ன என்பது நமக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

எருசலேமுக்கு அதன் அக்கிரமங்கள் தெரிந்திருக்கவேண்டும். எருசலேமின் அருவருப்புக்களை, அதற்கு அறிவித்து சொல்ல வேண்டிய ஊழியத்தை கர்த்தர் எசேக்கியேலுக்கு கொடுக்கிறார். எருசலேம் தன்னுடைய அருவருப்புக்களை நினைத்துப் பார்க்கவேண்டுமென்றால், கர்த்தர் இதுவரையிலும் தனக்காக செய்த பெரிய காரியங்களையும், நன்மையான காரியங்களையும் அது நினைத்து பார்க்கவேண்டும்.

இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பம் மிகவும் அற்பமானதாயிருந்தது. எளிமையான ஆரம்பத்திலிருந்து, கர்த்தர் கானான் தேசத்தை உயர்த்தினார். கர்த்தருடைய இவ்வளவு பெரிதான சிலாக்கியத்தைப் பெறுவதற்கு இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு தகுதியும் இல்லை.

கர்த்தர் எருசலேம் நகரத்தையும், கானான் தேசத்தையும் பிறந்த நாளிலேயே அருவருக்கப்பட்டு, வெளியிலே எரிந்துவிடப்பட்ட பிள்ளையோடு ஒப்பிடுகிறார். கர்த்தர் கானான் தேசத்தினுடைய பிறப்பின் வர்த்தமானத்தைச் சொல்லுகிறார்.

"நீ பிறந்த நாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவுமில்லை; நீ சுத்தமாவதற்குத் தண்ணீரினால் குளிப்பாட்டப்படவுமில்லை; உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை; துணிகளில் சுற்றப்படவுமில்லை. உனக்காகப் பரிதபித்து, இவைகளில் ஒன்றையாகிலும் உனக்குச் செய்ய ஒரு கண்ணும் உன் பேரில் இரக்கமாயிருந்ததுமில்லை; நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்துவிடப்பட்டாய்" (எசே 16:4,5) என்று கர்த்தர் கானான் தேசத்தின் பிறப்பைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்கள் கானான் தேசத்திலே குடியிருந்தார்கள். அங்கே அவர்கள் பரதேசிகளாய் சஞ்சரித்தார்கள். அவர்களுக்கென்று அந்த தேசத்திலே ஒரு அடி நிலம்கூட இல்லை. முற்பிதாக்களை அடக்கம்பண்ணுவதற்கு மாத்திரம் கானான் தேசத்திலே அவர்களுக்கு இடம் இருந்தது. ஆபிரகாமும் சாராளும் இஸ்ரவேல் வம்சத்தாரின் தகப்பனாரும் தாயாரும் ஆவார்கள். அவர்கள் கானான் தேசத்திலிருந்தபோது, அந்த தேசத்திலே எமோரியரும், ஏத்தியரும் இருந்தார்கள்.

கானான் தேசத்திலே ஏத்தியருடைய செல்வாக்கு அதிகமாயிருந்தது. ஆபிரகாமின் சந்ததிக்கு அவர்களே பெற்றோராக இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருடைய பிறப்பின் வர்த்தமானத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கானான் தேசமே உன் உற்பத்திக்கும் உன் பிறப்புக்கும் இடம், உன் தகப்பன் எமோரியன், உன் தாய் ஏத்தித்தி" (எசே 16:3) என்று சொல்லுகிறார்.

"நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்; என்னிடத்திலிருக்கிற இந்தப் பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு நான் அதை அடக்கம் பண்ணுவதற்கு, உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தரவேண்டும் என்றான்" (ஆதி 23:4).

"அவர்களோடே பேசி: என்னிடத்திலிருக்கிற பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு, நான் அதை அடக்கம்பண்ண உங்களுக்குச் சம்மதியானால், நீங்கள் என் வார்த்தையைக் கேட்டு, சோகாருடைய குமாரனாகிய எப்பெரோன்" (ஆதி 23:,8).

இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்கள் கானானியருக்கு கீழ்ப்படிந்திருந்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் எமோரியரைப்பற்றியும் ஏத்தியரைப்பற்றியும் பயமிருந்தது.

"ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள்" (ஆதி 13:7).

"அப்பொழுது யாக்கோபு சிமியோனையும் லேவியையும் பார்த்து: இந்தத் தேசத்தில் குடியிருக்கிற கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே என்னைக் கலங்கப்பண்ணினீர்கள்; நான் கொஞ்ச ஜனமுள்ளவன்; அவர்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, நானும் என் குடும்பமும் அழியும்படி என்னை வெட்டிப்போடுவார்களே என்றான்" (ஆதி 34:30).

இஸ்ரவேல் வம்சத்தாருடைய முற்பிதாக்கள் அக்காலத்திலே கொஞ்சம் தொகைக்குட்பட்ட சொற்ப ஜனங்களும், பரதேசிகளுமாயிருந்தார்கள். அவர்கள் ஒரு ஜனத்தைவிட்டு மறுஜனத்தண்டைக்கும், ஒரு ராஜ்யத்தைவிட்டு மறுதேசத்தார் அண்டைக்கும் போனார்கள் (சங் 105:12,13). அவர்கள் ஒவ்வொரு விவசாய நிலத்திலும் விவசாயம் செய்து பிழைத்தார்கள். கானான் தேசத்திலே அவர்களுக்கு நிலையான இடமில்லை. அவர்கள் அந்த தேசத்தில் பரதேசிகளைப்போல ஒவ்வொரு இடமாகப் போய் வாசம்பண்ணினார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய முற்பிதாக்கள் ஆரம்பத்தில் அந்நிய தெய்வங்களை ஆராதித்தார்கள். அவர்கள் கல்தேயருடைய ஊர் என்னும் பட்டணத்திலிருந்தார்கள்.

"அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள்" (யோசு 24:2).

யாக்கோபின் குடும்பத்தாரும் ஆரம்பத்தில் அந்நிய தெய்வங்களை ஆராதித்தார்கள். "அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்" (ஆதி 35:2).

இஸ்ரவேல் புத்திரர் ஆரம்பத்தில் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருந்தார்கள். அதன் பின்பு அவர்கள் எண்ணிக்கையில் பலுகிப்பெருகினார்கள். கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். ஆனால் அவர்களால் அந்த தேசத்தில் குடியிருக்க முடியவில்லை. கானான் தேசத்தில் உண்டான பஞ்சம், இஸ்ரவேல் புத்திரரை அந்த தேசத்திலிருந்து துரத்திவிட்டது.

எகிப்து தேசம் அக்காலத்தில் திறந்த தேசமாயிருந்தது. அவர்கள் எகிப்திற்கு துரத்தப்பட்டவர்கள்போல அந்த தேசத்திற்கு வந்தார்கள். எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோன் இஸ்ரவேல் வம்சத்தாரை அடிமைப்படுத்தி, அவர்களிடத்தில் கடினமாக வேலை வாங்கினான். அவர்களுடைய ஜீவியம் அவர்களுக்கு கசப்பாயிற்று.

இஸ்ரவேல் தேசம் அழிந்துபோவதற்கு ஏதுவாயிற்று. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின் பிறப்பைப்பற்றிச் சொல்லும்போது, "நீ பிறந்த நாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவுமில்லை; நீ சுத்தமாவதற்குத் தண்ணீரினால் குளிப்பாட்டப்படவுமில்லை; உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை; துணிகளில் சுற்றப்படவுமில்லை" (எசே 16:4) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலுக்காக பரிதபிக்க அக்காலத்தில் ஒரு ஜாதியாரும் முன்வரவில்லை. அவர்களுக்கு ஒருவரும் இரக்கம் காண்பிக்கவில்லை. இஸ்ரவேல் தேசம் பிறந்த நாளிலே, மற்ற ஜாதியார் எல்லோரும் அதை அருவருத்தார்கள். பிறந்த குழந்தையை வெளியில் எறிந்துவிடுவதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாரை மற்ற ஜாதியார் துரத்திவிட்டார்கள். பிறந்த குழந்தையால் தனக்குத்தானே உதவிசெய்து கொள்ள முடியாது.

கானான்தேசம் இன்னும் ஒரு வல்லமையான தேசமாக ஸ்தாபிக்கப்படவில்லை. அது இப்போதுதான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் தொப்புள்கூட இன்னும் அறுக்கப்படவில்லை. அது துணிகளில் சுற்றப்படவுமில்லை. ஒருவரும் கானான் தேசத்தை விரும்பவில்லை.

கர்த்தர் கானான் தேசத்தின் பரிதாபமான நிலமையைப்பற்றிச் சொல்லும்போது, "உனக்காகப் பரிதபித்து, இவைகளில் ஒன்றையாகிலும் உனக்குச் செய்ய ஒரு கண்ணும் உன் பேரில் இரக்கமாயிருந்ததுமில்லை; நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்துவிடப்பட்டாய்" (எசே 16:5) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலர்கள் எகிப்தியருக்கு அருவருப்பாயிருந்தார்கள்.

"எகிப்தியர் எபிரெயரோடே சாப்பிட மாட்டார்கள்; அப்படிச் செய்வது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்; ஆகையால், அவனுக்குத் தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும், அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் அவர்களுக்குத் தனிப்படவும் வைத்தார்கள்" (ஆதி 43:32).

"நீங்கள், கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி, அவனை நோக்கி: எங்கள் பிதாக்களைப்போல, உமது அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் மேய்ப்பர்களாயிருக்கிறோம் என்று சொல்லுங்கள்; மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள் என்றான்" (ஆதி 46:34).

கானான் தேசம் இன்னும் அழகுபடுத்தப்படவில்லை. பிறந்த குழந்தை தண்ணீரினால் குளிப்பாட்டப்படாததுபோல, கானான் தேசம் அசுத்தமாயிருக்கிறது. அதன் அசுத்தங்கள் இன்னும் கழுவப்படவில்லை. கானான் தேசத்திற்காக ஒருவரும் பரிதபிக்கவில்லை. அதற்கு ஒருவரும் இரக்கம் காண்பிக்கவுமில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொண்டார். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் கர்த்தர் விரும்புகிற சுபாவம் எதுவுமில்லை. இஸ்ரவேல் வம்சத்தார் அருவருக்கப்பட்டவர்களாகயிருந்தாலும், அவர்களை தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்வது கர்த்தருடைய பார்வையில் பிரியமாயிருந்தது.

இஸ்ரவேலின் கீர்த்தி
எசே 16:6-14

எசே 16:6. நான் உன் அருகே கடந்துபோகும்போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து: பிழைத்திரு என்றேன்; ஆம், உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து: பிழைத்திரு என்று சொன்னேன்.

எசே 16:7. உன்னை வயலின் பயிரைப்போல அநேகமாயிரமாய்ப் பெருகும்படி வைத்தேன்; நீ வளர்ந்து பெரியவளாகி, மகா சௌந்தரியவதியானாய்; உன் ஸ்தனங்கள் எழும்பின, உன் மயிர் வளர்ந்தது; ஆனாலும் நீ நிர்வாணமும் அம்மணமுமாயிருந்தாய்.

எசே 16:8. நான் உன் அருகே கடந்துபோனபோது, உன்னைப் பார்த்தேன்; இதோ, உன் காலம் பருவகாலமாயிருந்தது; அப்பொழுது என் வஸ்திரத்தை உன்மேல் விரித்து, உன் நிர்வாணத்தை மூடி, உனக்கு ஆணையிட்டுக்கொடுத்து, உன்னோடு உடன்படிக்கை பண்ணினேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; இவ்விதமாய் நீ என்னுடையவளானாய்.

எசே 16:9. நான் உன்னை ஜலத்தினால் முழுக்காட்டி, உன்னை இரத்தமற ஸ்நானம் பண்ணுவித்து, உனக்கு எண்ணெய் பூசி,

எசே 16:10. சித்திரத்தையலாடையை உனக்கு உடுத்தி, சாயந்தீர்ந்த பாதரட்சைகளை உனக்குத் தரித்து, கட்ட மெல்லிய புடவையையும், மூடிக்கொள்ளப் பட்டுச் சால்வையையும் உனக்குக் கொடுத்து,

எசே 16:11. உன்னை ஆபரணங்களால் அலங்கரித்து, உன் கைகளிலே கடகங்களையும், உன் கழுத்திலே சரப்பணியையும் போட்டு,

எசே 16:12. உன் நெற்றியில் நெற்றிப்பட்டத்தையும், உன் காதுகளில் காதணியையும், உன் தலையின்மேல் சிங்காரமான கிரீடத்தையும் தரித்தேன்.

எசே 16:13. இவ்விதமாய்ப் பொன்னினாலும் வெள்ளியினாலும் நீ அலங்கரிக்கப்பட்டாய்; உன் உடுப்பு மெல்லிய புடவையும் பட்டும் சித்திரத்தையலாடையுமாயிருந்தது; மெல்லிய மாவையும் தேனையும் நெய்யையும் சாப்பிட்டாய்; நீ மிகவும் அழகுள்ளவளாகி, ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றாய்.

எசே 16:14. உன் அழகினாலே உன் கீர்த்தி புறஜாதிகளுக்குள்ளே பிரசித்தமாயிற்று; நான் உன்மேல் வைத்த என் மகிமையினாலே அது குறைவற்றதாய் இருந்ததென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திற்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். சாதாரண தேசமாயிருந்த இஸ்ரவேல் தேசத்தை கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதித்து, அதை பெரிய தேசமாக உயர்த்தினார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார் அருகே கடந்துபோகும்போது அவர்கள் மிதிக்கப்படுவதற்கு ஏதுவாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் இரத்தத்தில் கிடக்கிறதைக் கர்த்தர் பார்த்தார். கர்த்தர் அவர்களைப் பார்த்து, "பிழைத்திரு" என்று சொன்னார்.

இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்து தேசத்திலே அழிந்துபோகும் நிலமையிலிருந்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு ஜீவனைக் கட்டளையிட்டார். கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகள் நிறைவேறும். இந்த உலகத்திலுள்ள மனுக்குலத்திற்கு ஜீவனைக் கொடுக்கவேண்டும் என்றும், அந்த ஜீவன் பரிபூரணமுள்ளதாயிருக்க வேண்டும் என்றும் கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார் அருகே கடந்துபோனபோது அவர்களை பார்க்கிறார். அவர்களுடைய காலம் பருவகாலமாயிருக்கிறது. அப்பொழுது கர்த்தர் தம்முடைய வஸ்திரத்தை அவர்கள்மேல் விரித்து, அவர்களுடைய நிர்வாணத்தை மூடினார். அவர்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்து, அவர்களோடே உடன்படிக்கை பண்ணினார் (எசே 16:8). இஸ்ரவேல் வம்சத்தார் உடன்படிக்கையின் மூலமாக கர்த்தருடையவர்களானார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தை கிருபையோடும், இரக்கத்தோடும், மனதுருக்கத்தோடும் நோக்கிப் பார்க்கிறார். தம்முடைய அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் வம்சத்தாரிடத்தில் நேசிக்கப்படத்தக்கதான சுபாவம் எதுவும் காணப்படவில்லை. ஆனாலும் கர்த்தர் அவர்களைப் பார்த்து, அவர்கள்மீது அன்புகூருகிறார். அவர்களுடைய காலம் பருவகாலமாயிருக்கிறது. அது அன்புகூரும் காலமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய அன்பினாலே, மனுக்குலத்தை மீட்பதற்காக, இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். நம்மை பரிசுத்தப்படுத்துவதற்காக கர்த்தர் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நியாயப்பிரமாணத்திற்கு கீழே இருந்த நாம், அவருடைய கிருபையின் பிரமாணத்திற்கு கீழ் வந்திருக்கிறோம்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தம்முடைய பாதுகாப்புக்கு கீழ் கொண்டுவருகிறார். கழுகு தன் குஞ்சுகளை, தன்னுடைய சிறகிலே தூக்கி சுமப்பதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாத்து வழிநடத்துகிறார்.

"கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டுபோகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை" (உபா 32:11,12).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தபோது, அவர்களை விடுதலை பண்ணுவதற்கு கர்த்தர் மோசேயை எகிப்து தேசத்திற்கு அனுப்பினார். அப்பொழுது கர்த்தர் தம்முடைய வஸ்திரத்தை அவர்மேல் விரித்தார். அதுபோலவே, இப்போதும் கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் தம்முடைய வஸ்திரத்தை விரித்து, அவர்களுடைய நிர்வாணத்தை மூடுகிறார் (எசே 16:8).

இஸ்ரவேல் ஜனங்கள் 430 வருஷங்களாக எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்தார்கள். கர்த்தருடைய ஜனங்களுக்கு "எகிப்து தேசத்தின் அடிமைகள்" என்னும் நிந்தையும் அவமானமும் உண்டாயிற்று. இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்குப் பிரியமானவர்கள். ஆனால் அவர்களுடைய இருதயங்களிலோ எகிப்தியருக்கு அடிமைகளாகயிருந்த சுபாவம் நீங்காமலிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய அடிமைத்தனத்தின் நிந்தைகளை நீக்குகிறார்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தர் தம்முடைய பலத்த கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் விடுதலை பண்ணினார். எகிப்தியருக்கு அடிமைகளாகயிருந்த இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தர் தமக்கு பிரியமான பிள்ளைகளாக மாற்றினார். இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது கர்த்தரை விடுதலையோடு ஆராதிக்கும் ஜனமாயிருக்கிறார்கள்.

"நான் உன்னை ஜலத்தினால் முழுக்காட்டி, உன்னை இரத்தமற ஸ்நானம் பண்ணுவித்து, உனக்கு எண்ணெய் பூசினேன்" (எசே 16:9) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சுத்தம்பண்ணின விதத்தை தெளிவுபடுத்துகிறார். அவர்களுடைய இருதயத்திலிருந்த அடிமைத்தனத்தின் சுபாவங்களையெல்லாம் கர்த்தர் நீக்கிப்போட்டு, அவர்களை தம்முடைய ஜனமாக சுத்தம்பண்ணினார்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆரம்பத்தில் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருந்தார்கள். கர்த்தரோ அவர்களை பலுகிப்பெருகச் செய்தார். அவர்களை ஒரு தேசமாக கட்டியெழுப்பினார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை வயலின் பயிரைப்போல அநேகமாயிரமாய் பெருகும்படி வைத்தார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பலுகிப் பெருகச் செய்த சம்பவம், அவர் தம்முடைய வஸ்திரத்தை அவர்கள்மேல் விரித்ததற்கு முன்பாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்த காலத்திலேயே திரளாய்ப் பலுகிப்பெருகினார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்க செய்து, அவர்களை தம்முடைய ஜனங்களாக சேர்த்துக்கொண்டார். கர்த்தர் சீனாய் மலையிலே இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்து, அவர்களை தம்முடையவர்களாக உறுதிபண்ணிக்கொண்டார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய இஸ்ரவேலராயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அநேகமாயிரமாய் பலுகிப்பெருகிறார்கள். கர்த்தர் அவர்களை அழகுபடுத்தி அலங்கரிக்கிறார். மணவாட்டி தன்னுடைய ஆபரணங்களை மறக்கமாட்டாள். கர்த்தர் அவர்களை ஏராளமான ஆபரணங்களினால் அலங்கரிக்கிறார்.

"சித்திரத்தையலாடையை உனக்கு உடுத்தி, சாயந்தீர்ந்த பாதரட்சைகளை உனக்குத் தரித்து, கட்ட மெல்லிய புடவையையும், மூடிக்கொள்ளப் பட்டுச் சால்வையையும் உனக்குக் கொடுத்து, உன்னை ஆபரணங்களால் அலங்கரித்து, உன் கைகளிலே கடகங்களையும், உன் கழுத்திலே சரப்பணியையும் போட்டு, உன் நெற்றியில் நெற்றிப்பட்டத்தையும், உன் காதுகளில் காதணியையும், உன் தலையின்மேல் சிங்காரமான கிரீடத்தையும் தரித்தேன். இவ்விதமாய்ப் பொன்னினாலும் வெள்ளியினாலும் நீ அலங்கரிக்கப்பட்டாய்; உன் உடுப்பு மெல்லிய புடவையும் பட்டும் சித்திரத்தையலாடையுமாயிருந்தது; மெல்லிய மாவையும் தேனையும் நெய்யையும் சாப்பிட்டாய்; நீ மிகவும் அழகுள்ளவளாகி, ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றாய்" (எசே 16:10-13) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஆபரணங்களைக் கொடுத்து அழகுபடுத்தியதை விவரிக்கிறார்.

இந்த வாக்கியங்களில் பல்வேறு விதமான ஆபரணங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. வேதபண்டிதர்கள் ஒவ்வொரு ஆபரணத்திற்கும் விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தர் கொடுக்கும் ஆபரணங்களெல்லாம் நேர்த்தியானவை. அவை இஸ்ரவேல் வம்சத்தாரை அலங்கரிப்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனங்களை, பரலோகத்தின் ஆசீர்வாதங்களினால் அலங்கரிப்பார் என்பதற்கு இந்த ஆபரணங்களெல்லாம் அடையாளமாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய வார்த்தைகளையும், பிரமாணங்களையும் கொடுக்கிறார். "அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும்" (நீதி 1:9).

கர்த்தர் தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்தை, இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே ஸ்தாபனம்பண்ணுகிறார். கர்த்தருடைய வாசஸ்தலம் அவர்களுடைய தலைக்கு கிரீடம் போலிருக்கிறது. பரிசுத்தமே ஆலயத்தின் அலங்காரம்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கானான் தேசத்தில் ஒரு குறையுமில்லை. அங்கே அவர்களுக்கு சகலமும் சம்பூரணமாய்க் கிடைக்கிறது. கர்த்தர் அவர்களை உச்சிதமான கோதுமையினால் போஷிக்கிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசம். இஸ்ரவேல் வம்சத்தார் கானான் தேசத்திலே தங்களுடைய அப்பங்களை திருப்தியாய்ப் புசிக்கிறார்கள். அவர்கள் அங்கே மெல்லிய மாவையும், தேனையும், நெய்யையும் சாப்பிடுகிறார்கள்.

"பூமியிலுள்ள உயர்ந்த ஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப்பண்ணினார்; வயலில் விளையும் பலனை அவனுக்குப் புசிக்கக் கொடுத்தார்; கன்மலையிலுள்ள தேனையும், கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெயையும் அவன் உண்ணும்படி செய்தார். பசுவின் வெண்ணெயையும், ஆட்டின் பாலையும், பாசானில் மேயும் ஆட்டுக்குட்டிகள் ஆட்டுக்கடாக்கள் வெள்ளாட்டுக்கடாக்கள் இவைகளுடைய கொழுப்பையும், கொழுமையான கோதுமையையும், இரத்தம்போன்ற சுயமான திராட்சரசத்தையும் சாப்பிட்டாய்" (உபா 32:13,14).

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை ஆபரணங்களினால் அலங்கரிக்கிறார். அவர்களுக்கு மெல்லிய புடவையையும், பட்டையும், சித்திரதையலாடையையும் உடுத்துகிறார். அவர்கள் நேர்த்தியான போஜனங்களை புசிக்கிறார்கள். அவர்கள் மிகவும் அழகுள்ளவர்களாகி, ராஜ்யத்தை சுதந்தரிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் அழகினாலே, அவர்களுடைய கீர்த்தி புறஜாதிகளுக்குள்ளே பிரசித்தமாயிற்று. கர்த்தர் அவர்கள்மேல் வைத்த தம்முடைய மகிமையினாலே, அவர்களுடைய அழகும் கீர்த்தியும் குறைவற்றதாயிருக்கிறது.

சாலொமோனுடைய ஞானமும், அவர் கட்டிய தேவாலயமும், அக்காலத்திலே எல்லா தேசங்களுக்கு மத்தியிலும் பிரசித்திப் பெற்று விளங்கிற்று. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை அதிகமாய் ஆசீர்வதித்தார். கானான் தேசத்திற்கு விசேஷித்த ஆசீர்வாதங்களைக் கட்டளையிட்டார். இஸ்ரவேல் தேசம் பூமியிலுள்ள எல்லா தேசங்களிலும் அழகும் சவுந்தரியமும் உள்ளதாய் விளங்கிற்று.

நம்முடைய ஆத்துமா பரிசுத்தமாயிருக்கும்போது, அது அழகாயிருக்கும். மனுஷருடைய பார்வையில் பரிசுத்தவான்கள் அழகாயில்லாவிட்டாலும், கர்த்தருடைய பார்வையில் அவர்கள் அழகாயிருப்பார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அவருடைய சமுகத்தில் ஆறுதலைப் பெற்றுக்கொள்வார்கள்.

இஸ்ரவேலின் விக்கிரகாராதனை எசே 16:15-34

எசே 16:15. நீயோவென்றால் உன் அழகை நம்பி, உன் கீர்த்தியினால் சோரமார்க்கமாய் நடந்து, வழிப்போக்கரில் உனக்கு நேர்பட்ட யாவரோடும் வேசித்தனம்பண்ணி,

எசே 16:16. உன் வஸ்திரங்களில் சிலவற்றை எடுத்து, பலவருணச் சோடிப்பான மேடைகளை உனக்கு உண்டாக்கி, அவைகளின்மேல் வேசித்தனம்பண்ணினாய்; அப்படிக்கொத்த காரியங்கள் ஒருக்காலும் சம்பவித்ததுமில்லை, சம்பவிப்பதுமில்லை.

எசே 16:17. நான் உனக்குக் கொடுத்த என் பொன்னும் என் வெள்ளியுமான உன் சிங்கார ஆபரணங்களை நீ எடுத்து, உனக்கு ஆண்சுருபங்களை உண்டாக்கி, அவைகளோடே வேசித்தனம்பண்ணி,

எசே 16:18. உன் சித்திரத்தையலாடைகளை எடுத்து, அவைகளை மூடி, என் எண்ணெயையும் என் தூபவர்க்கத்தையும் அவைகளின்முன் படைத்து,

எசே 16:19. நான் உனக்குக் கொடுத்த என் அப்பத்தையும், நீ சாப்பிடும்படி உனக்குக் கொடுத்த மெல்லிய மாவையும் நெய்யையும் தேனையும் நீ அவைகளின்முன் சுகந்த வாசனையாகப் படைத்தாய்; காரியம் இப்படி ஆயிற்றென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 16:20. நீ எனக்குப் பெற்ற உன் குமாரரையும் உன் குமாரத்திகளையும் எடுத்து, அவர்களை அவைகளுக்கு இரையாகப் பலியிட்டாய்.

எசே 16:21. நீ செய்த வேசித்தனங்கள் போதாதென்று, நீ என் பிள்ளைகளை அவைகளுக்குத் தீக்கடக்கப்பண்ண ஒப்புக்கொடுத்து, அவர்களைக் கொலைசெய்தாய்.

எசே 16:22. நீ உன் எல்லா அருவருப்புகளிலும் வேசித்தனங்களிலும் நடக்கும்போது, நிர்வாணமும் அம்மணமுமாயிருந்ததும், உன் இரத்தத்திலே மிதிக்கப்பட ஏதுவாய்க் கிடந்ததுமான உன் சிறுவயதின் நாட்களை நினையாமற்போனாய்.

எசே 16:23. ஐயோ! உனக்கு ஐயோ! என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீ செய்த பொல்லாப்புகளெல்லாம் தவிர,

எசே 16:24. நீ உனக்கு மண்டபங்களைக் கட்டி, உனக்குச் சகல வீதிகளிலும் உயர்ந்த மேடைகளை உண்டுபண்ணினாய்.

எசே 16:25. நீ சகல வழிமுகனையிலும் உன் உயர்ந்த மேடைகளைக் கட்டி, உன் அழகை அருவருப்பாக்கி, வழிப்போக்கர் யாவருக்கும் உன் கால்களை விரித்து, உன் வேசித்தனங்களைத் திரளாய்ப் பெருகப்பண்ணி,

எசே 16:26. சதை பெருத்த உன் அயல் தேசத்தாராகிய எகிப்திய புத்திரரோடே வேசித்தனம்பண்ணி, எனக்குக் கோபம் உண்டாக்கும்படி உன் வேசித்தனங்களைப் பெருகப்பண்ணினாய்.

எசே 16:27. ஆதலால், இதோ, நான் என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உனக்கு நியமித்த போஜனத்தைக் குறுக்கி, உன் முறைகேடான மார்க்கத்தைக் குறித்து வெட்கப்பட்ட உன் பகையாளிகளாகிய பெலிஸ்தருடைய குமாரத்திகளின் இச்சைக்கு உன்னை ஒப்புக்கொடுத்தேன்.

எசே 16:28. நீ திருப்தியடையாததினால் அசீரிய புத்திரரோடும் வேசித்தனம் பண்ணினாய்; அவர்களோடே வேசித்தனம்பண்ணியும் நீ திருப்தியடையவில்லை.

எசே 16:29. நீ கானான் தேசத்திலே செய்த வேசித்தனத்தை கல்தேயர்மட்டும் எட்டச் செய்தாய்; அதினாலும் நீ திருப்தியடையாமற்போனாய்.

எசே 16:30. வெட்கங்கெட்ட வேசியின் கிரியைகளாகிய இவைகளையெல்லாம் நீ செய்து,

எசே 16:31. சகல வழிமுகனையிலும் உன் மண்டபங்களைக் கட்டி, சகல வீதிகளிலும் உன் மேடைகளை உண்டாக்கினபடியால், உன் இருதயம் எவ்வளவாய்க் களைத்துப் போயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீ பணையத்தை அலட்சியம் பண்ணுகிறதினால், நீ வேசியைப் போல இராமல்,

எசே 16:32. தன் புருஷனுக்குப் பதிலாக அந்நியரைச் சேர்த்துக்கொள்ளுகிற விபசார ஸ்திரீயைப்போல இருக்கிறாய்.

எசே 16:33. எல்லா வேசிகளுக்கும் பணையங்கொடுக்கிறார்கள்; நீயோ உன் நேசர்கள் சுற்றுப்புறங்களிலிருந்து உன்னிடத்தில் வேசித்தனஞ்செய்ய வரும்படி அவர்களுக்கெல்லாம் நீயே பணையங்கொடுத்து, அவர்களுக்கு வெகுமதிகளைத் தருகிறாய்.

எசே 16:34. இவ்விதமாய் உன் வேசித்தனங்களுக்கும் வேறே ஸ்திரீகளின் வேசித்தனங்களுக்கும் வித்தியாசமுண்டு; வேசித்தம்பண்ண அவர்கள் உன்னைப் பின்செல்லமாட்டார்கள்; பணையம் உனக்குக் கொடுக்கப்படாமல் நீயே பணையம் கொடுக்கிறபடியால் நீ செய்வது விபரீதம்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர்களுக்கு மிகப்பெரிய சிலாக்கியங்களைக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாகயில்லை. அவர்கள் கர்த்தருக்கு துரோகம் செய்து விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய துன்மார்க்கங்களை அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் விக்கிரகாராதனை கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கிறது. அவர்கள் தங்களுடைய பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் தாவீதின் காலத்திலே கர்த்தரை மாத்திரமே ஆராதனை செய்தார்கள். சாலொமோன் ராஜாவின் ஆரம்ப கால ஆட்சியில், சமஸ்த இஸ்ரவேலிலும், கர்த்தருடைய ஆராதனை மாத்திரமே நடைபெற்றது.

சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தின் பின்பகுதியில், இஸ்ரவேல் தேசத்திலே விக்கிரகாராதனை பிரவேசித்தது. இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சிறையிருப்புக்குப்போகும் வரையிலும், விக்கிரகங்களை ஆராதித்தார்கள். ஒரு சில ராஜாக்கள் கர்த்தருக்கு பயந்து நல்லவர்களாகயிருந்தார்கள். அவர்களுடைய காலத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. ஒரு சில ராஜாக்கள் அந்நிய தெய்வங்களின் சிலைகளை உடைத்துப் போட்டார்கள். ஆனாலும் விக்கிரகாராதனை முற்றிலுமாய் ஒழிக்கப்படவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் விக்கிரகாராதனையைப்பற்றிச் சொல்லும்போது, அதை வேசித்தனத்தோடும் விபசாரத்தோடும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகங்களை ஆராதிப்பது ஆவிக்குரிய விபச்சாரமாயிருக்கிறது.

யூதர்கள் வேசித்தனத்திற்கும் விபசாரத்திற்கும் வித்தியாசம் சொல்லுகிறார்கள். வேசித்தனம் என்பது, திருமணமாகாத ஸ்திரீ மற்ற புருஷர்களோடு சேருவது. விபசாரம் என்பது, திருமணமான ஸ்திரீ, தன்னுடைய புருஷனுக்கு துரோகம் செய்துவிட்டு, மற்ற புருஷர்களோடு சேருவது.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரோடு திருமண உடன்படிக்கையிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு மணவாளனாகவும், இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு மணவாட்டியாகவும் இருக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ தங்களுடைய திருமண உடன்படிக்கையை முறித்துப்போட்டு, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் இருதயமும் மனதும் தீட்டுப்பட்டிருக்கிறது. அவர்கள் விக்கிரகாராதனைக்கு அடிமையாயிருக்கிறார்கள். மனுஷருடைய ஆவிக்குரிய சுபாவம் விக்கிரகங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறது. அவர்களால் இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முடியவில்லை. விக்கிரகாராதனையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்னும் விருப்பமும் அவர்களுக்கு இல்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகங்களை ஆராதனை செய்ய ஆரம்பித்தபோது, அவர்களுடைய மனச்சாட்சி ஆரம்பத்தில் குற்றவுணர்வோடு இருந்தது. அவர்கள் விக்கிரகாராதனையில் தொடர்ந்தபோது, அவர்களுடைய மனச்சாட்சியின் கூர்மை மழுங்கிப்போயிற்று. அதன் பின்பு, அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்தாலும், அவர்களுடைய மனச்சாட்சி அவர்களை குற்றப்படுத்தவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகங்களை ஆராதிப்பதற்கான காரணங்களையும் கர்த்தர் இங்கு தெளிவுபடுத்துகிறார். அவர்கள் தங்கள் இருதயத்தில் பெருமையாயும், மேட்டிமையாயும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அழகை நம்புகிறார்கள். அழகு நிலையானதல்ல என்பது அவர்களுக்கு புரியவில்லை.

தங்களுடைய அழகினால் தங்களுக்கு புறஜாதியார் மத்தியிலே கீர்த்தி உண்டாயிற்று என்று நினைக்கிறார்கள். இந்த கீர்த்தி கர்த்தரால் உண்டாயிற்று என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. தம்முடைய மகிமை மங்கிவிடக்கூடாது என்பதற்காகவே, கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திற்கு மேன்மையையும் கீர்த்தியையும் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய கீர்த்தியினால் சோரமார்க்கமாய் நடக்கிறார்கள். வழிப்போக்கரில் தங்களுக்கு நேர்ப்பட்ட யாவரோடும் வேசித்தனம் பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பம் மிகவும் அற்பமாயிருந்தது. அப்போது அவர்களை ஒருவரும் நேசிக்கவில்லை. அவர்களுக்கு ஒருவரும் இரக்கம் காண்பிக்கவில்லை. இஸ்ரவேல் வம்சத்தார் ஆரம்பத்தில் அருவருக்கப்படத்தக்கவர்களாயிருந்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஆதரவு கொடுத்தார். அவர்களை பலுகிப் பெருகச் செய்தார். அவர்களை ஒரு தேசமாய் உருவாக்கினார். ஆனால் இப்போது இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அழகை நம்பி, தங்கள் கீர்த்தியினால் சோரமார்க்கமாய் நடக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சிறுவயதின் நாட்களை நினையாமல் போனார்கள். அவர்கள் ஒரு காலத்தில் நிர்வாணமும் அம்மணமுமாயிருந்தார்கள். அவர்கள் இரத்தத்திலே மிதிக்கப்பட ஏதுவாய்க் கிடந்தார்கள். இப்போதோ அவர்கள் அழகாகயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சிறுவயதின் நாட்களை நினையாமல், இப்போது எல்லா அருவருப்புக்களிலும் நடக்கிறார்கள். எல்லாவிதமான வேசித்தனங்களையும் செய்கிறார்கள் (எசே 16:22).

இஸ்ரவேல் வம்சத்தாரின் புத்தி மந்தமாயிருக்கிறது. அவர்களால் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களை தியானிக்கவில்லை. மனுஷருடைய மாம்சப்பிரகாரமான ஆசைகள் பலமுள்ளதாகயிருக்கிறது. அவர்களுடைய இருதயம் பலவீனமாயிருக்கிறது என்பதற்கு அது அடையாளமாயிருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் வெட்கங்கெட்ட வேசியின் கிரியைகளை செய்கிறார்கள் (எசே 16:30).

இஸ்ரவேல் வம்சத்தாரின் விக்கிரகாராதனையை கர்த்தர் இங்கு தெளிவுபடுத்துகிறார். அவர்கள் தங்கள் வழியில் காண்கிற எல்லா விக்கிரகங்களையும் ஆராதிக்கிறார்கள். எல்லா விக்கிரங்களுக்கும் பாகுபாடில்லாமல் தூபங்காட்டுகிறார்கள். "வழிப்போக்கரில் உனக்கு நேர்ப்பட்ட யாவரோடும் வேசித்தனம் பண்ணினாய்" (எசே 16:15) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் வேசித்தனத்தைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகாராதனை செய்வதில், எல்லா ஜாதியாரோடும், எல்லா தேசத்தாரோடும் பங்காளிகளாயிருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு, எருசலேமிலே தேவாலயத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் தேவாலயத்தில் தங்கியிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரோ, எல்லா விக்கிரகங்களுக்கும் கோவில்களைக் கட்டி அதை அழகுபடுத்துகிறார்கள். தோப்புகளிலும், உயர்ந்த மேடைகளிலும் விக்கிரகங்களை நிறுவுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை ஆசீர்வதிக்கும் வண்ணமாய், அவர்களுக்கு பொன்னையும் வெள்ளியையும் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு சிங்கார ஆபரணங்களையும், வஸ்திரங்களையும் கொடுத்து அவர்களை அழகுபடுத்தி அலங்கரிக்கிறார்.

ஆனால் அவர்களோ, கர்த்தர் தங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களை விக்கிரகங்களுக்கு படைக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த பொன் ஆபரணங்களையும், வெள்ளி ஆபரணங்களையும் எடுத்து, தங்களுக்கு ஆண்சுரூபங்களை உண்டாக்கி, அவைகளோடு வேசித்தனம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் தங்களுக்கு கொடுத்த சித்திரதையலாடைகளை எடுத்து, தாங்கள் செய்த விக்கிரகங்களை மூடுகிறார்கள். கர்த்தருடைய எண்ணெயையும், அவருடைய தூபவர்க்கத்தையும் எடுத்து, அவர்கள் தங்கள் விக்கிரகங்களுக்கு முன்பாக படைக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தர் ஏராளமான வஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறார். இது கர்த்தருடைய கிருபை. ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய கிருபையை அசட்டை பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த வஸ்திரங்களில் சிலவற்றை எடுத்து, அவற்றால் பலவருண சோடிப்பான மேடைகளை தங்களுக்கு உண்டாக்குகிறார்கள். அவைகளின்மேல் விக்கிரகாராதனை என்னும் வேசித்தனம் பண்ணுகிறார்கள். "அப்படிக்கொத்த காரியங்கள் ஒருக்காலும் சம்பவித்ததுமில்லை, சம்பவிப்பதுமில்லை" (எசே 16:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் ஆரம்பகாலத்தில் ஆதரவில்லாமலிருந்தார்கள். அவர்களுக்கு சரியான போஜனம் இல்லை. அவர்கள் போஜனத்தைத்தேடி ஒவ்வொரு தேசமாக பரதேசிகளைப்போல சுற்றி அலைந்தார்கள். கர்த்தரோ அவர்களுக்கு கிருபை காண்பித்து, அவர்கள் சாப்பிடும்படிக்கு, அவர்களுக்கு அப்பத்தையும், மெல்லிய மாவையும், நெய்யையும், தேனையும் கொடுத்தார். ஆனால் அவர்களோ, கர்த்தர் தங்களுக்கு கொடுத்த போஜனங்களை, தாங்கள் செய்த விக்கிரகங்களுக்கு முன்பு சுகந்த வாசனையாய்ப் படைக்கிறார்கள் (எசே 16:19).

கர்த்தரே நமக்கு பொன்னையும் வெள்ளியையும் கொடுக்கிறார். இவை இப்போது நம்மிடத்தில் இருந்தாலும், இவை எக்காலத்திலும் கர்த்தருக்கு மாத்திரமே உரியது. நம்மிடத்திலுள்ள பொன்னினாலும், வெள்ளியினாலும் நாம் கர்த்தரை கனம்பண்ணவேண்டும். இவற்றை எப்படி செலவு பண்ணுகிறோம் என்பதைக் குறித்து நாம் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இராயனுக்குரியதை இராயனுக்கும், கர்த்தருக்குரியதை கர்த்தருக்கும் செலவு பண்ணவேண்டியது நம்முடைய கடமை.

கானான்தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசம். இது கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதம். இஸ்ரவேல் வம்சத்தாரோ பாலையும் தேனையும் விக்கிரகங்களுடைய பலிபீடத்திலே போஜனபலியாகவும், பானபலியாகவும் வார்க்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த மேலான ஆசீர்வாதங்களை, அவர்கள் விக்கிரகங்களுக்கு முன் சுகந்த வாசனையாக படைக்கிறார்கள். "காரியம் இப்படி ஆயிற்று" (எசே 16:19) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். எல்லாவற்றையும் அறிந்திருக்கிற கர்த்தர் இதையும் அறிந்திருக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய குமாரரையும் குமாரத்திகளையும் எடுத்து, அவர்களை விக்கிரகங்களுக்கு இரையாக பலியிடுகிறார்கள். பிள்ளைகள் கர்த்தரால் வந்த சுதந்தரம். அவர்கள் தங்கள் பிள்ளைகளை தீக்கடக்கப்பண்ணினார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையின் மோகம் அதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் மோளேகுக்கு தங்கள் பிள்ளைகளை அக்கினியிலே உயிரோடு சுட்டெரித்தார்கள் (எசே 16:20).

இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரங்களுக்கு இரையாக பலியிட்ட பிள்ளைகள், கர்த்தருடைய பிள்ளைகள். அவர்கள், "நீ எனக்கு பெற்ற உன் குமாரரும், உன் குமாரத்திகளும்" (எசே 16:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களும் பாவங்களும் மிகவும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் மனந்திரும்ப முடியாமல் போகுமளவுக்கு விக்கிரகாராதனை என்னும் கண்ணியில் சிக்கியிருக்கிறார்கள்.

பிதாவாகிய தேவன் ஆவிகளின் பிதாவாயிருக்கிறார். நம்முடைய ஆத்துமாக்கள் எல்லாமே கர்த்தருக்கு சொந்தம். கர்த்தர் தமக்கு சித்தமான வேளையிலே நமக்கு ஜீவனைக் கொடுக்கிறார். அதுபோலவே தம்முடைய சித்தத்தின் பிரகாரம் நம்முடைய ஜீவனை நம்மிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளவும் செய்கிறார். கர்த்தர் கொடுக்கிறார், கர்த்தர் எடுக்கிறார். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. நம்முடைய ஜீவன் கர்த்தருக்குரியது. நம்முடைய ஜீவன் மூலமாய் நாம் கர்த்தரை மகிமைப்படுத்தவேண்டும். நம்முடைய ஜீவனுள்ள நாளெல்லாம் நாம் கர்த்தருக்கு சேவை செய்யவேண்டும். நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும். நாம் கர்த்தரை நம்பி நன்மை செய்ய வேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு பெற்ற பிள்ளைகளை விக்கிரகங்களுக்கு பலியிடுகிறார்கள். தங்களுக்கு உரிமையில்லாத ஜீவன்களை, விக்கிரகங்களுக்கு இரையாகப் பலியிட்டு, கர்த்தரை கோபப்படுத்துகிறார்கள். நம்முடைய பிள்ளைகள் கர்த்தருக்குரியவர்கள். அவர்கள் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள். நம்முடைய பிள்ளைகளை நாம் பார்க்கும்போது அவர்கள் கர்த்தருக்கு பிறந்தவர்கள் என்னும் எண்ணம் நமக்குள் காணப்பட வேண்டும்.

நம்முடைய சபையும் கர்த்தருக்கு பிறந்திருக்கிறது. சபையிலுள்ள விசுவாசிகளும் கர்த்தருக்கு பிறந்திருக்கிறார்கள். நம்முடைய மனதில், சபையைக் குறித்தும், விசுவாசிகளைக் குறித்தும் இப்படிப்பட்ட எண்ணமே இருக்கவேண்டும். இந்த எண்ணத்தோடு, நம்முடைய பிள்ளைகளை நாம் நேசிக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகளுக்காக நாம் ஜெபிக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகளை நாம் கர்த்தருக்காக வளர்க்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை நம்மிடத்தில் கேட்கும்போது, நாம் பயபக்தியோடும், மிகுந்த சந்தோஷத்தோடும், கர்த்தருடைய பாதபடியிலே அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களை கர்த்தருக்காக பிரதிஷ்டைபண்ணவேண்டும். தமக்கு சொந்தமானவர்களை, தம்முடைய சித்தத்தின்படி பயன்படுத்த, கர்த்தருக்கு உரிமை உண்டு.

இஸ்ரவேல் வம்சத்தார் தாங்கள் ஆராதிக்கிற விக்கிரகங்களை கனப்படுத்தும் வண்ணமாக, அவைகளுக்கு கோவில்களைக் கட்டுகிறார்கள். தாங்கள் இரகசியமாய் செய்த வேசித்தனங்கள் போதாதென்று, இப்போது எல்லோரும் கூடிவரும் பொதுவான இடங்களில், வேசித்தனம் பண்ணுகிறார்கள். அவர்கள் விக்கிரகங்களுக்கு கோவில்களைக்கட்டி, வெளிப்படையாகவே வேசித்தனம் பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகங்களுக்கு கட்டும் கோவில்களைப்பற்றி கர்த்தர் இவ்வாறு சொல்லுகிறார். "நீ செய்த பொல்லாப்புகளெல்லாம் தவிர, நீ உனக்கு மண்டபங்களைக் கட்டி, உனக்குச் சகல வீதிகளிலும் உயர்ந்த மேடைகளை உண்டுபண்ணினாய். நீ சகல வழிமுகனையிலும் உன் உயர்ந்த மேடைகளைக் கட்டினாய்" (எசே 16:23-25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வசனங்களில், மண்டபங்கள், உயர்ந்த மேடைகள் ஆகிய வார்த்தைகள் வேசிகளின் வீட்டைக் குறிக்கும். அவர்கள் விக்கிரகங்களுக்கு கட்டும் கோவில்கள் வேசிகளின் வீடுகளாகயிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு துரோகம் செய்து, அவரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். இவர்களுடைய விக்கிரகாராதனை புறஜாதியாருக்கும் அருவருப்பாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனை செய்வதினால் அவர்களுடைய அழகு அருவருப்பாகிறது. அவர்களுடைய வேசித்தனங்கள் திரளாய்ப் பெருகுகிறது.

இஸ்ரவேல் வம்சத்தாரை எகிப்தியரும் அசீரியரும் ஒடுக்கினார்கள். அவர்கள் யூதர்களை துன்பப்படுத்தினார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவர்கள் மூலமாய் ஏராளமான வேதனைகளும், பாடுகளும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் அந்நிய தேசத்தாருடைய விக்கிரகங்கள்மீது பிரியமாயிருக்கிறார்கள். தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு துரோகம் செய்து, விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. கர்த்தர் அவர்களை கடிந்துகொள்கிறார். தம்முடைய ஆசீர்வாதங்களையும், தெய்வீக பராமரிப்புக்களையும் அவர்களைவிட்டு நீக்கிப்போடுகிறார். ஆனாலும் அவர்கள் தங்கள் விக்கிரகாராதனையில் தொடர்ந்து நீடிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் சதை பெருத்த தங்கள் அயல் தேசத்தாராகிய எகிப்து புத்திரரோடே வேசித்தனம் பண்ணுகிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் பெருகுகிறது. இஸ்ரவேல் வம்சத்தாரும் தங்கள் வேசித்தனங்களை பெருகப்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களினிமித்தமாய், அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார். "இதோ, நான் என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உனக்கு நியமித்த போஜனத்தைக் குறுக்கி, உன் முறைகேடான மார்க்கத்தைக் குறித்து வெட்கப்பட்ட உன் பகையாளிகளாகிய பெலிஸ்தருடைய குமாரத்திகளின் இச்சைக்கு உன்னை ஒப்புக்கொடுத்தேன்" (எசே 16:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இதுவரையிலும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவித்த இஸ்ரவேல் வம்சத்தார்மீது, இப்போது கர்த்தருடைய சாபம் வருகிறது. இதுவரையிலும் கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது அன்பாகயிருந்தார். இப்போதோ கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை அழிப்பதற்கு முன்பாக, அவர்களுக்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டுகிறார். இது கர்த்தருடைய பிரமாணம்.

கர்த்தர் நம்மை அழிப்பதற்கு முன்பாக, தம்முடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைச் சொல்லி, நம்மை மனந்திரும்புமாறு எச்சரிக்கிறார். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், கர்த்தருடைய கோபம் நம்மீது வரும். அவர் நம்மை அழித்துப்போடுவார்.

இஸ்ரவேல் வம்சத்தார் ஆவிக்குரிய வேசித்தனங்களையும், ஆவிக்குரிய விபச்சாரங்களையும் செய்கிறார்கள். ஆனாலும் தங்களுடைய வேசித்தனங்களில் அவர்களுக்கு திருப்தி உண்டாகவில்லை. அவர்கள் அசீரிய புத்திரரோடும் வேசித்தனம்பண்ணினார்கள். அவர்களோடே வேசித்தனம்பண்ணியும் அவர்கள் திருப்தியடையவில்லை (எசே 16:28). அவர்கள் கானான் தேசத்திலே செய்த வேசித்தனத்தை கல்தேயர் மட்டும் எட்டச்செய்தார்கள். அதினாலும் அவர்கள் திருப்தியடையாமல் போனார்கள் (எசே 16:29). இஸ்ரவேல் வம்சத்தார் வெட்கங்கெட்ட வேசியின் கிரியைகளாகிய இவைகளையெல்லாம் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதற்காக செய்கிறார்கள். ஆனாலும் அவர்கள் திருப்தியடையவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் ஆவிக்குரிய வேசித்தனங்களை விரிவாகச் சொல்லுகிறார். அவர்கள் சகல வழிமுனைகளிலும் விக்கிரகங்களுக்கு மண்டபங்களைக் கட்டுகிறார்கள். ஆனாலும் அவர்களுடைய இருதயங்களில் உற்சாகமில்லை. அவர்களுடைய இருதயங்கள் களைத்துப்போயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனைகளில், தங்களுடைய ஐசுவரியங்களையெல்லாம் செலவு பண்ணுகிறார்கள். இந்த ஐசுவரியங்கள் கர்த்தர் இவர்களுக்கு தம்முடைய கிருபையினால் கொடுத்த ஈவு. இஸ்ரவேல் வம்சத்தார் செய்வது விபரீதம்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் விபரீதமான விக்கிரகாராதனைகளைக் குறித்து இவ்வாறு விவரிக்கிறார். "வெட்கங்கெட்ட வேசியின் கிரியைகளாகிய இவைகளையெல்லாம் நீ செய்து, சகல வழிமுகனையிலும் உன் மண்டபங்களைக் கட்டி, சகல வீதிகளிலும் உன் மேடைகளை உண்டாக்கினபடியால், உன் இருதயம் எவ்வளவாய்க் களைத்துப்போயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீ பணையத்தை அலட்சியம்பண்ணுகிறதினால், நீ வேசியைப் போல இராமல், தன் புருஷனுக்குப் பதிலாக அந்நியரைச் சேர்த்துக்கொள்ளுகிற விபசார ஸ்திரீயைப்போல இருக்கிறாய். எல்லா வேசிகளுக்கும் பணையங் கொடுக்கிறார்கள்; நீயோ உன் நேசர்கள் சுற்றுப்புறங்களிலிருந்து உன்னிடத்தில் வேசித்தனஞ்செய்ய வரும்படி அவர்களுக்கெல்லாம் நீயே பணையங் கொடுத்து, அவர்களுக்கு வெகுமதிகளைத் தருகிறாய். இவ்விதமாய் உன் வேசித்தனங்களுக்கும் வேறே ஸ்திரீகளின் வேசித்தனங்களுக்கும் வித்தியாசமுண்டு; வேசித்தம்பண்ண அவர்கள் உன்னைப் பின்செல்லமாட்டார்கள்; பணையம் உனக்குக் கொடுக்கப்படாமல் நீயே பணையம் கொடுக்கிறபடியால் நீ செய்வது விபரீதம்" (எசே 16:30-34) என்று கர்த்தர் இஸ்ரவேலின் விக்கிரகாராதனையைப்பற்றிச் சொல்லுகிறார்.

எருசலேமுக்கு தன்னுடைய விக்கிரகாராதனையின் விபரீதங்கள் புரியவில்லை. அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய அருவருப்புக்களை உணரவில்லை. கர்த்தர் அவர்களை எச்சரித்தார். ஆனால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. இதனால் கர்த்தர், இஸ்ரவேல் வம்சத்தாரை, அவர்களுடைய கேடான சிந்தனைகளுக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்புக்களும், பராமரிப்புக்களும் கிடையாமல் போகிறது. கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கிடையாமல் போகிறது. கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கு பாத்திரமான இஸ்ரவேல் வம்சத்தார், இப்போது கர்த்தருடைய கோபத்திற்கும், சாபத்திற்கும் பாத்திரவான்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எசே 16:35-43

எசே 16:35. ஆகையால், வேசியே, கர்த்தருடைய வார்த்தையைக் கேள்.

எசே 16:36. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் வேசித்தனத்தின் அசுத்தம்பாய்ந்தபடியினாலும், நீ உன் காமவிகாரிகளோடும் அருவருப்பாகிய உன் நரகலான விக்கிரகங்களோடும் வேசித்தனம்பண்ணி, இவைகளுக்கு உன் பிள்ளைகளின் இரத்தத்தைப் படைத்ததினால் உன் நிர்வாணம் திறக்கப்பட்டபடியினாலும்,

எசே 16:37. இதோ, நீ சம்போகம்பண்ணின உன் எல்லாக் காமவிகாரிகளையும், நீ நேசித்தயாவரையும், நீ பகைத்திருக்கிற அனைவரோடும் நான் கூடிவரச்செய்து, சுற்றிலுமிருந்து அவர்களை உனக்கு விரோதமாகச் சேர்த்து, அவர்கள் உன் நிர்வாணத்தையெல்லாம் காணும்படி உன் நிர்வாணத்தை அவர்களுக்கு முன்பாகத் திறந்துவைத்து,

எசே 16:38. விபசாரிகளையும் இரத்தஞ்சிந்தினவர்களையும் நியாயந்தீர்க்கிறபடியே உன்னை நியாயந்தீர்த்து, உக்கிரகத்தோடும் எரிச்சலோடும் இரத்தப்பழியை உன்பேரில் சுமத்தி,

எசே 16:39. உன்னை அவர்கள் கையில் ஒப்புக் கொடுப்பேன்; அவர்கள் உன் மண்டபங்களை இடித்து, உன் மேடைகளைத் தரையாக்கிப்போட்டு, உன் வஸ்திரங்களை உரிந்து, உன் சிங்கார ஆபரணங்களை எடுத்துக்கொண்டு, உன்னை அம்மணமும் நிர்வாணமுமாக விட்டுப்போய்,

எசே 16:40. உனக்கு விரோதமாக ஒரு கூட்டத்தைக் கொண்டுவந்து, உன்னைக் கல்லெறிந்து, உன்னைத் தங்கள் பட்டயங்களால் குத்திபோட்டு,

எசே 16:41. உன் வீடுகளை அக்கினியால் சுட்டெரித்து, அநேக ஸ்திரீகளின் கண்களுக்கு முன்பாக உன்னில் நியாயத்தீர்ப்புகளைச் செய்வார்கள்; உன் வேசித்தனத்தை ஒழியப்பண்ணுவேன்; நீ இனிப்பணையங்கொடுப்பதில்லை.

எசே 16:42. இவ்விதமாய் என் எரிச்சல் உன்னை விட்டு நீங்கும்படி, நான் என் உக்கிரத்தை உன்னில் ஆறப்பண்ணி, இனி கோபமாயிராமல் அமருவேன்.

எசே 16:43. நீ உன் இளவயதின் நாட்களை நினையாமல், இவைகளெல்லாவற்றினாலும் எனக்குக் கோபம் உண்டாக்கினபடியினால், இதோ, நான் உன் வழியின் பலனை உன் தலையின்மேல் சுமரப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; அதினாலே இனி உன் எல்லா அருவருப்புகளினாலும் இப்படிப்பட்ட முறைகேடான காரியத்தைச் செய்யமாட்டாய்.

இஸ்ரவேல் தேசம் வெளிப்படையாகவே வேசித்தனம் பண்ணுகிறது. அதன் துன்மார்க்கமான கிரியை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார். "ஆகையால், வேசியே, கர்த்தருடைய வார்த்தையைக் கேள்" (எசே 16:35) என்று கர்த்தராகிய ஆண்டவர் இஸ்ரவேல் தேசத்தின்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்ல ஆரம்பிக்கிறார்.

கர்த்தருக்கு துரோகம் செய்து அவரை விட்டு பின்வாங்கிப்போன சபை ஆவிக்குரிய விபசாரம் பண்ணுகிறது. அது கர்த்தருடைய பார்வைக்கு முன்பாக ஒரு வேசியாகயிருக்கிறது. எருசலேம் நகரத்தில் விக்கிரகாராதனை நடைபெறுகிறது. கர்த்தருக்கு பரிசுத்தமும் உண்மையுமான நகரம், இப்போது வேசியாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாருக்கு அவர்களுடைய பாவங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறார். கர்த்தருடைய ஜனமாயிருந்தவர்கள், இப்போது கர்த்தரைவிட்டு விலகி, சகல பாவங்களையும் செய்கிறார்கள். கர்த்தருடைய பத்துக்கட்டளைகளில், முதல் இரண்டு கட்டளைகளில் விக்கிரகாராதனை தடைபண்ணப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தாரோ விக்கிரகங்களை ஆராதனை செய்கிறார்கள்.

பத்துக்கட்டளைகளில் முதல் இரண்டு கட்டளைகளின் இரண்டாவது சாரம்சத்தையும் இஸ்ரவேல் வம்சத்தார் மீறுகிறார்கள். அவர்கள் ஒரு பாவமும் அறியாத, குற்றமில்லாத தங்களுடைய பிள்ளைகளைக் கொன்றுபோடுகிறார்கள். கொலை செய்யாதிருப்பாயாக என்று கர்த்தருடைய கட்டளை சொல்லுகிறது. இவர்களோ தங்களுடைய சொந்த பிள்ளைகளையே கொன்றுபோடுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்குள்ளே அவர்களுடைய வேசித்தனத்தின் அசுத்தம் பாய்ந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய காமவிகாரிகளோடும், அருவருப்பான தங்கள் நரகலான விக்கிரகங்களோடும் வேசித்தனம்பண்ணுகிறார்கள். "யாதொரு சொரூபத்தையும், விக்கிரகத்தையும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" (யாத் 20:4,5) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ விக்கிரகங்களை ஆராதனை செய்கிறார்கள்.

"கொலைசெய்யாதிருப்பாயாக" (யாத் 20:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களோ விக்கிரகங்களுக்கு தங்களுடைய பிள்ளைகளின் இரத்தத்தைப் படைக்கிறார்கள். விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக தங்கள் பிள்ளைகளைக் கொன்றுபோடுகிறார்கள். அவர்களை தீக்கடக்கப்பண்ணுகிறார்கள். தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலிகொடுக்கும் வண்ணமாக, அவர்களை அக்கினியினால் சுட்டெரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் இளம்பிராயத்தின் நாட்களை மறந்துவிடுகிறார்கள். இஸ்ரவேல் தேசம் சிறுபிள்ளையாகயிருந்தபோது, ஆதரவில்லாமல், வீதியிலே வீசி எரியப்பட்டது. கர்த்தர் அதன்மீது அன்புகூர்ந்து, அதை தமக்கு சொந்தமாக்கிக்கொண்டார். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தைப் பாதுகாத்து பராமரித்தார். அதைப் பலுகிப்பெருகச் செய்தார். கர்த்தர் அவர்களுடைய இளம்பிராயத்தில் அவர்களுக்கு உதவி செய்யவில்லையென்றால், அவர்கள் எப்போதோ அழிந்துபோயிருப்பார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய இளம்பிராயத்தை நினைத்துப் பார்க்காமல், தங்களுடைய பிள்ளைகளின் இரத்தத்தை விக்கிரகங்களுக்கு படைக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் இளவயதின் நாட்களை நினையாமல், விக்கிரகங்களுக்கு தங்கள் பிள்ளைகளை பலியிட்டு, கர்த்தருக்கு கோபமுண்டாக்கினார்கள். "இதோ, நான் உன் வழியின் பலனை உன் தலையின்மேல் சுமரப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; அதினாலே இனி உன் எல்லா அருவருப்புகளினாலும் இப்படிப்பட்ட முறைகேடான காரியத்தைச் செய்யமாட்டாய்" (எசே 16:43) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் விக்கிரகாராதனையினிமித்தமாய், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் விபசாரிகளையும், இரத்தஞ்சிந்தினவர்களையும் நியாயந்தீர்க்கிறபடியே இஸ்ரவேல் வம்சத்தாரையும் நியாயந்தீர்ப்பார். கர்த்தர் அவர்களுடைய ஆவிக்குரிய வேசித்தனத்தையும், ஆவிக்குரிய விபசாரத்தையும் நியாயந்தீர்ப்பார். கர்த்தர் உக்கிரத்தோடும், எரிச்சலோடும் அவர்களுடைய இரத்தப்பழியை அவர்கள் பேரில் சுமத்துவார் (எசே 16:38).

இஸ்ரவேல் வம்சத்தார் சம்யோகம்பண்ணின தங்களுடைய எல்லா காமவிகாரிகளையும், அவர்கள் நேசித்த யாவரையும் கர்த்தர் கூடிவரச் செய்வார். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு பகைஞராயிருக்கிறவர்களையும், கர்த்தர் அவர்களுக்கு விரோதமாகக் கூடிவரச்செய்வார். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் நிர்வாணத்தைக் காண்பார்கள். கர்த்தரே அவர்களுடைய நிர்வாணத்தை, அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக திறந்து வைப்பார் (எசே 16:37).

இஸ்ரவேல் தேசம் மிகுந்த நெருக்கங்களையும், துன்பங்களையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கும். இஸ்ரவேலுக்கு ஒரு சிலர் சிநேகிதர்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரின் பாடுகளும் வேதனைகளும் அவர்களுடைய சிநேகிதர்களுக்கு துக்கமாயிருக்கும். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சத்துருக்களும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரின் நெருக்கங்களும் உபத்திரவங்களும், அவர்களுடைய சத்துருக்களுக்கு இன்பமாயும், சந்தோஷமாயும் இருக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக, அவர்களுடைய சத்துருக்களை வரவழைப்பார். இஸ்ரவேல் ஜனங்களை அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுப்பார். அவர்கள் இஸ்ரவேலின் மண்டபங்களை இடித்துப்போடுவார்கள். இஸ்ரவேல் புத்திரரின் மேடைகளை தரையாக்கிப்போடுவார்கள். அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரின் வஸ்திரங்களை உரிந்து, அவர்களுடைய சிங்கார ஆபரணங்களை எடுத்துக்கொண்டு, அவர்களை அம்மணமும், நிர்வாணமுமாக விட்டுப்போய்விடுவார்கள் (எசே 16:39).

கர்த்தரே இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக ஒரு கூட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை கல்லெறிந்து, அவர்களை தங்கள் பட்டயங்களால் குத்திப்போடுவார்கள். கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். அவர்கள் மதிலிடிக்கும் ஏந்திரங்களினால் எருசலேமின் அலங்கங்களை இடித்துப்போடுவார்கள். கல்தேயர்கள் மதில் சுவர்களிலுள்ள கற்களை, எருசலேம் நகரத்திற்குள்ளே வீசி எறிவார்கள்.

கல்தேயர்கள் தங்கள் பட்டயங்களால் எருசலேம் நகரத்திற்குள்ளே இருக்கிற யூதர்களை குத்திப்போடுவார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரின் வீடுகளை அக்கினியால் சுட்டெரித்துப்போடுவார்கள். அவர்களுடைய ஸ்திரீகளின் கண்களுக்கு முன்பாக, கல்தேயர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயத்தீர்ப்பு கொடுப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் வேசித்தனத்தை ஒழியப்பண்ணுவார். கல்தேயர்கள் எருசலேமிலுள்ள புருஷரையும் ஸ்திரீகளையும் தங்கள் பட்டயத்தால் வெட்டிக்கொன்றுபோடுவார்கள். வேசிகளின் வீடுகளை அக்கினியால் சுட்டெரிப்பதுபோல, கல்தேயர்கள் எருசலேமின் குடிகளுடைய வீடுகளை அக்கினியால் சுட்டெரித்துப்போடுவார்கள்.

யூதாதேசத்திலே ஏராளமான ராஜாக்கள் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதர்களை ஆட்சிசெய்திருக்கிறார்கள். அவர்களில் கர்த்தருக்கு பயந்து ஆட்சிசெய்த நல்ல ராஜாக்களும் இருந்தார்கள். அவர்கள் ஜனங்களுக்கு பலவிதமான நன்மைகளை செய்திருந்தாலும், யூதாதேசத்திலுள்ள விக்கிரகங்களை உடைக்காமலும், மேடைகளை அழிக்காமலும் விட்டுவிட்டார்கள்.

யூதாவின் ராஜாக்கள் செய்யாத காரியங்களை, கல்தேயருடைய இராணுவத்தார் செய்கிறார்கள். யூதர்கள் விக்கிரகங்களுக்கு கட்டின மண்டபங்களை கல்தேயர்கள் இடித்துப்போடுகிறார்கள். விக்கிரகங்களின் மேடைகளை தரையாக்கிப்போடுகிறார்கள். கல்தேயர்கள் இஸ்ரவேல் ஜனங்களை சிறைப்பிடிப்பார்கள். இவ்விதமாக கர்த்தருடைய எரிச்சல் அவர்களைவிட்டு நீங்கும். கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே ஆறப்பண்ணுவார். கர்த்தர் இனி கோபமாயிராமல் அமைதியாயிருப்பார் (எசே 16:42).

கல்தேயர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது, அவர்கள் விக்கிரகாராதனையை நிறுத்திவிட்டு, கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களில் காணப்பட்ட விக்கிரகாராதனை என்னும் ஆவிக்குரிய நோயை, கர்த்தர் குணப்படுத்துகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பும், சிறையிருப்பிலே யூதர்கள் அனுபவித்த நெருக்கங்களும், உபத்திரவங்களும், அவர்களைக் குணப்படுத்தும் நல்ல மருந்தாகயிருக்கிறது. அவர்கள் விக்கிரகாராதனை என்னும் பாவத்திலிருந்து குணப்படுத்தப்படுகிறார்கள். கர்த்தரைவிட்டு விக்கிரகங்களைத் தேடிப்போனவர்கள், இப்போது விக்கிரகங்களை விட்டு, கர்த்தரை தேடி வந்திருக்கிறார்கள்.

தாயைப்போல மகள்
எசே 16:44-58

எசே 16:44. இதோ, பழமொழி சொல்லுகிறவர்கள் எல்லாரும்: தாயைப்போல மகள் என்று உன்னைக் குறித்துப் பழமொழி சொல்லுவார்கள்.

எசே 16:45. நீ, தன் புருஷனையும் தன் பிள்ளைகளையும் அருவருத்த உன் தாயின் மகள்; நீ, தங்கள் புருஷரையும் தங்கள் பிள்ளைகளையும் அருவருத்த உன் சகோதரிகளின் சகோதரி; உங்கள் தாய் ஏத்தித்தி; உங்கள் தகப்பன் எமோரியன்.

எசே 16:46. உன் இடதுபுறத்திலே, தானும் தன் குமாரத்திகளுமாய்க் குடியிருந்த சமாரியா உன் தமக்கை; உன் வலதுபுறத்திலே, தானும் தன் குமாரத்திகளுமாய்க் குடியிருந்த சோதோம் உன் தங்கை.

எசே 16:47. ஆகிலும் நீ அவர்களுடைய மார்க்கங்களிலே நடவாமலும், அவர்களுடைய அருவருப்புகளின்படி செய்யாமலும், அது மகா அற்பகாரியம் என்கிறதுபோல நீ உன் எல்லா வழிகளிலேயும் அவர்களைப் பார்க்கிலும் கேடாய் நடந்தாய்.

எசே 16:48. நீயும் உன் குமாரத்திகளும் செய்ததுபோல், உன் சகோதரியாகிய சோதோமும் அவளுடைய குமாரத்திகளும் செய்யவில்லை என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 16:49. இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை.

எசே 16:50. அவர்கள் தங்களை உயர்த்தி, என் முகத்துக்கு முன்பாக அருவருப்பானதைச் செய்தார்கள்; அதை நான் கண்டபோது, அவர்களை ஒழித்துவிட்டேன்.

எசே 16:51. நீ செய்த பாவங்களில் அரைவாசியும் சமாரியா செய்யவில்லை; நீ உன் சகோதரிகளைப்பார்க்கிலும் உன் பாவங்களைப் பெருகப்பண்ணி, நீ செய்த உன் எல்லா அருவருப்புகளினாலும் அவர்களை நீதியுள்ளவர்களென்று விளங்கப்பண்ணினாய்.

எசே 16:52. இப்போதும் உன் சகோதரிகளைக் குற்றவாளிகள் என்று தீர்த்த நீ அவர்களைப்பார்க்கிலும் அருவருப்பாகச் செய்த உன் பாவங்களினிமித்தம் உன் இலச்சையைச் சுமந்துகொள்; உன்னைப் பார்க்கிலும் அவர்கள் நீதியுள்ளவர்கள்; உன் சகோதரிகளை நீதியுள்ளவர்களென்று விளங்கப்பண்ணின நீ வெட்கமடைந்து, உன் இலச்சையைச் சுமந்துகொள்.

எசே 16:53. நான் சோதோமும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற அவர்களுடைய சிறையிருப்பையும், சமாரியாவும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற சிறையிருப்பையும் திருப்பும்போது, அவர்கள் நடுவிலே நீ சிறையிருக்கிற உன்னுடைய சிறையிருப்பையும் திருப்புவேன்.

எசே 16:54. அதினால் நீ அவர்களுக்கு ஆறுதலாக இருந்து, உன் இலச்சையைச் சுமந்து, நீ செய்த எல்லாவற்றினாலும் வெட்கமடைவாய்.

எசே 16:55. உன் சகோதரிகளாகிய சோதோமும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள்; சமாரியாவும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள்; நீயும் உன் குமாரத்திகளும் உங்கள் முந்தின சீருக்குத் திரும்புவீர்கள்.

எசே 16:56. உன்னை வெறுக்கும் சீரியாவின் குமாரத்திகளும், அவளைச் சுற்றிலும் இருக்கிற பெலிஸ்தரின் குமாரத்திகளும் அவமானம் பண்ணினபோது உன் பொல்லாப்பு வெளியாயிற்றே.

எசே 16:57. அதற்குமுன் உன் கெர்வத்தின் நாளிலே உன் சகோதரியாகிய சோதோமின் பெயரை உன் வாயினாலே உச்சரிக்கவுமட்டாய்.

எசே 16:58. உன் முறைகேட்டையும் உன் அருவருப்புகளையும் நீ சுமப்பாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாய் எருசலேமுக்கு, அதன் பாவங்களையெல்லாம் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். எருசலேம் தேசம் தன்னுடைய தாயைப்போலவே மோசமாயிருக்கிறது. கானான் தேசத்திலே, இஸ்ரவேல் வம்சத்தார் குடியேறுவதற்கு முன்பாக, அங்கே கானானியர்கள் குடியிருந்தார்கள். அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள்.

யூதர்கள் மத்தியிலே, "தாயைப்போல மகள்" என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். இஸ்ரவேல் தேசம் இந்த பழமொழியைப்போலவே இருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள் தாயாகிய கானானியரைப்போலவே விக்கிரகாராதனைக்காரராயிருக்கிறார்கள்.

கானானியரில் காணப்பட்ட ஆவிக்குரிய வேசித்தனங்களும், ஆவிக்குரிய விபசாரங்களும் அவர்களுடைய மகளாகிய இஸ்ரவேல் வம்சத்தாரிடமும் காணப்படுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்குள்ளே அழைத்து வந்தபோது, கானானியரின் விக்கிரகாராதனையை பின்பற்றக்கூடாது என்று எச்சரிப்பாய்ச் சொல்லியிருந்தார்.

"இப்பொழுதும் உங்களுக்கு முன் இருந்த ஜாதிகளை தேசம் கக்கிப்போட்டதுபோல, நீங்கள் அதைத் தீட்டுப்படுத்தும்போது அது உங்களையும் கக்கிப் போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்ய வேண்டாம்" (லேவி 18:27,28).

இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கானானியரின் வழிகளை கற்றுக்கொண்டு, அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப்போனார்கள். இஸ்ரவேல் புத்திரரும் விக்கிரகாரானைக்காரரானார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரைப்பற்றிச் சொல்லும்போது "தாயைப்போல மகள்" என்று அவர்களைக் குறித்து பழமொழி சொல்லுவார்கள் என்று சொல்லுகிறார். மேலும் "உங்கள் தாய் ஏத்தித்தி" என்றும், "உங்கள் தகப்பன் எமோரியன்" (எசே 16:45) என்றும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரின் தாயாகிய ஏத்தித்தி, தன் புருஷனையும், தன்னுடைய பிள்ளைகளையும் அருவருத்தவள்.

இஸ்ரவேல் புத்திரர் ஆபிரகாம், சாராள் ஆகியோருக்கு பிறந்தவர்கள். ஆனால் இவர்களிடத்தில் ஆபிரகாமின் சுபாவமோ, சாராளின் சுபாவமோ காணப்படவில்லை. அதற்கு பதிலாக இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கானானியரான ஏத்தியர், எமோரியர் ஆகியோரின் சுபாவங்களே காணப்படுகிறது.

சோதோமும் சமாரியாவும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சகோதரிகளாகயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, சோதோமிலும், சமாரியாவிலும் இருக்கிற சுபாவங்கள் காணப்படுகிறது. இஸ்ரவேல் வம்சத்தார் சோதோமைப் போலவும், சமாரியாவைப்போலவும், ஆவிக்குரிய விபசாரம்பண்ணுகிறார்கள். அவர்களுக்கு தங்கள் பிதாக்களின் தெய்வங்கள் திருப்தியாயில்லை. இதனால் அவர்கள் புதிய தெய்வங்களை கண்டுபிடிக்கிறார்கள். புதிய ஆராதனை முறைமைகளை வகுக்கிறார்கள்.

எருசலேமுக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்களில் சமாரியா எருசலேமுக்கு தமக்கை, அதாவது மூத்த சகோதரி. சமாரியாவை எருசலேமின் பெரிய சகோதரி என்றும் சொல்லலாம். சமாரியா இஸ்ரவேலோடு உடன்படிக்கை செய்திருக்கிறது. எருசலேமைவிட சமாரியா பெரிய நகரமாயிருக்கிறது. சமாரியாவும், அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களும் ஆவிக்குரிய விபசாரம் செய்கிறது. இதன் நிமித்தமாக சமாரியா அழிந்துபோயிற்று.

சோதோம் எருசலேமுக்கு தங்கையாயிருக்கிறது. சோதோம் நகரமும், அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களும் எருசலேமைவிட சிறியது. ஆகையினால் சோதோமை எருசலேமின் தங்கை என்றும், சிறிய சகோதரி என்றும் சொல்லலாம். சமாரியாவும் சோதோமும் ஆவிக்குரிய விபசாரமும், ஆவிக்குரிய வேசித்தனமும் செய்து அழிந்துபோயிற்று.

"அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்" (யூதா 7).

எருசலேமின் தாயைப்போலவே, அவளுடைய சகோதரிகளும், தங்கள் புருஷரையும், தங்கள் பிள்ளைகளையும் அருவருத்தார்கள். சமாரியாவும் அதன் குமாரத்திகளும் எருசலேமுக்கு இடதுபுறத்திலே குடியிருக்கிறார்கள். எருசலேமுக்கு வலதுபுறத்திலே, சோதோமும், அதன் குமாரத்திகளும் குடியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் சோதோமிலிருந்தும், சமாரியாவிலிருந்தும் விக்கிரகாராதனையைக் கற்றுக் கொண்டார்கள். ஆனாலும் எருசலேமின் விக்கிரகாராதனை, சமாரியாவின் விக்கிரகாராதனையைவிடவும், சோதோமின் விக்கிரகாராதனையைவிடவும் அதிகமாயிருக்கிறது.

கர்த்தர் எருசலேமின் விக்கிரகாராதனையை, அவர்களுடைய விக்கிரகாராதனைகளோடு ஒப்பிட்டுச் சொல்லும்போது, "ஆகிலும் நீ அவர்களுடைய மார்க்கங்களிலே நடவாமலும், அவர்களுடைய அருவருப்புகளின்படி செய்யாமலும், அது மகா அற்பகாரியம் என்கிறதுபோல நீ உன் எல்லா வழிகளிலேயும் அவர்களைப் பார்க்கிலும் கேடாய் நடந்தாய். நீயும் உன் குமாரத்திகளும் செய்ததுபோல, உன் சகோதரியாகிய சோதோமும் அவளுடைய குமாரத்திகளும் செய்யவில்லை" (எசே 16:47,48) என்று சொல்லுகிறார்.

கர்த்தராகிய ஆண்டவர் இந்த வாக்கியத்தைச் சொல்லும்போது, தம்முடைய ஜீவனைக்கொண்டு சொல்லுவதாக உறுதிபண்ணுகிறார்.

கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே சோதோமின் அக்கிரமம்; இவைகளே சோதோமிடத்திலும், அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை (எசே 16:49). சோதோமின் புத்திரர் தங்களை உயர்த்தி, கர்த்தருடைய முகத்துக்கு முன்பாக அருவருப்பானதைச் செய்தார்கள்; அதை கர்த்தர் கண்டபோது, அவர்களை ஒழித்துவிட்டார் (எசே 16:50).

சோதோமிலே கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமும் இருக்கிறது. அவர்களுடைய சரீரங்கள் பெருந்தீனியினால் கொழுத்திருக்கிறது. இதுவே அவர்களுடைய திரளான அக்கிரமங்களுக்கு அடிப்படை காரணம். அவர்களுடைய சரீரம் கொழுத்திருக்கும்போது, எல்லா அக்கிரமங்களையும் செய்ய அவர்கள் தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

கெர்வம் மிகவும் ஆபத்தானது. தேவதூதர்கள் கெர்வம் கொண்டு, கர்த்தருக்கு விரோதமாகத் தங்களை உயர்த்தினார்கள். அவர்களுடைய கெர்வத்தினிமித்தமாய் கர்த்தர் அவர்களை தண்டித்தார். கர்த்தருடைய தூதர்கள் பிசாசுகளானார்கள். பெருமையினாலும் கெர்வத்தினாலும் கர்த்தருடைய தோட்டமாயிருந்தது, பூமியின்மீது நரகமாயிற்று.

கர்த்தர் இங்கு பெருந்தீனியைக் குறிப்பதற்கு, ஆகாரத் திராட்சி என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். பெருந்தீனி உண்கிறவர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துப்போடுவார்கள். நிர்விசாரமான சாங்கோபாங்கம் என்பது, ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாயிருப்பதைக் குறிக்கும் வார்த்தை. ஒரு மனுஷன் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கும்போது, அவனுக்குள் பாவம் எளிதாக பிரவேசிக்கும். சோம்பேறியாயிருக்கிறவனுடைய இருதயத்தில் சாத்தான் தனக்குப் பிரியமான கிரியைகளை நடப்பிப்பான்.

ஓடுகிற நீரோடை சுத்தமாயிருக்கும். ஓடாமல் கெட்டிக் கிடக்கிற தண்ணீரோ அசுத்தமாயிருக்கும். எங்கும் பறக்காமல், மரக்கிளையிலே சோம்பேறியாய் உட்கார்ந்திருக்கிற பறவையை, வேடன் குறிபார்த்து எளிதாக வேட்டையாடி விடுவான்.

சோதோமியர்கள் சிறுமையும் எளிமையுமானவனுடைய கைகளை பலப்படுத்தவில்லை. அவர்கள் மனுஷருடைய கைகளை பலவீனப்படுத்தி, அவர்களுடைய புயங்களை முறித்துப்போட்டார்கள். சோதோம் மனுஷரிடத்தில் கெர்வம் இருக்கிறது. ஆகையினால் அவர்கள் தங்களைத் தாங்களே உயர்த்துகிறார்கள். கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார். சோதோமின் குடிகள் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக அருவருப்பான காரியங்களை செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய அருவருப்பைக் கண்டபோது, அவர்களை ஒழித்துவிடுகிறார்.

எருசலேமின் பாவங்கள் சோதோமின் பாவங்களைவிடவும், சமாரியாவின் பாவங்களை விடவும் அதிகமாயிருக்கிறது. எருசலேம் கர்த்தருக்கு பிரியமான நகரம். அது கர்த்தருடைய பரிசுத்த நகரம். கர்த்தருடைய பரிசுத்த நகரத்தில் துன்மார்க்கம் இருக்கும்போது, அது கர்த்தரை அதிகமாய்க் கோபப்படுத்துகிறது.

கர்த்தர் சோதோமுக்கும், சமாரியாவுக்கும் விசேஷித்த கிருபைகளையோ, விசேஷித்த சிலாக்கியங்களையோ காண்பிக்கவில்லை. ஆகையினால் சோதோம், சமாரியா ஆகியோருடைய துன்மார்க்கத்தினால் கர்த்தர் அதிகமாய்க் கோபப்படவில்லை.

"நீயும் உன் குமாரத்திகளும் செய்ததுபோல, உன் சகோதரியாகிய சோதோமும் அவளுடைய குமாரத்திகளும் செய்யவில்லை என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எசே 16:48) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எருசலேம் செய்த பாவங்களில் சமாரியா அரைவாசியும் செய்யவில்லை. எருசலேமில் ஏராளமான விக்கிரகங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் எண்ணிக்கையில் பாதிகூட சமாரியாவில் இல்லை. எருசலேமின் குடிகள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் அநேகரை கொலைசெய்தார்கள். சமாரியாவிலோ, அவர்களில் பாதிபேர்கூட கொலைசெய்யப்படவில்லை.

"நீ செய்த பாவங்களில் அரைவாசியும் சமாரியா செய்யவில்லை; நீ உன் சகோதரிகளைப்பார்க்கிலும் உன் பாவங்களைப் பெருகப்பண்ணி, நீ செய்த உன் எல்லா அருவருப்புகளினாலும் அவர்களை நீதியுள்ளவர்களென்று விளங்கப்பண்ணினாய்" (எசே 16:51) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் திரளான பாவங்களினாலும், அவர்களுடைய எல்லா அருவருப்புக்களினாலும் சோதோமும் சமாரியாவும் நீதியுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் எருசலேமோ தன்னுடைய இருதயத்தில் அகந்தையோடும், பெருமையோடும் இருக்கிறது. எருசலேம் கர்த்தருடைய பரிசுத்தநகரமாயிருப்பதினால், சமாரியாவையும், சோதோமையும்விட தாங்கள் நீதியுள்ளவர்கள் என்று எருசலேமின் குடிகள் சொல்லுகிறார்கள். பூர்வகாலங்களில் எருசலேமின் குடிகள் மெய்யாகவே நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய நீதி அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. இப்போது அவர்கள் விக்கிரகாராதனைக்காரராயிருக்கிறார்கள்.

எருசலேமின் குடிகள் சோதோமையும் சமாரியாவையும் குற்றவாளிகள் என்றும், அருவருப்பானவர்கள் என்றும் நியாயந்தீர்க்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பாவங்களைவிட எருசலேமின் பாவங்களே அதிகமாயிருக்கிறது. ஆகையினால், சோதோமையும் சமாரியாவையும் தப்பிதமாய் நியாயந்தீர்க்கிற எருசலேமின்மீது கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார்.

"இப்போதும் உன் சகோதரிகளைக் குற்றவாளிகள் என்று தீர்த்த நீ அவர்களைப்பார்க்கிலும் அருவருப்பாகச் செய்த உன் பாவங்களினிமித்தம் உன் இலச்சையைச் சுமந்துகொள்; உன்னைப் பார்க்கிலும் அவர்கள் நீதியுள்ளவர்கள்; உன் சகோதரிகளை நீதியுள்ளவர்களென்று விளங்கப்பண்ணின நீ வெட்கமடைந்து, உன் இலச்சையைச் சுமந்துகொள்" (எசே 16:52) என்று கர்த்தர் எருசலேமைக் குறித்து சொல்லுகிறார்.

எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள். அவர்களில் யாருடைய பாவங்கள் அதிகமானவை என்பதை தீர்மானம் பண்ணுவது மிகவும் கடினமாயிருக்கும். நம்முடைய கண்களுக்கு நம்முடைய பாவங்கள் தெரியாது. மற்றவர்களுடைய பாவங்கள்தான் பெரியதாய்த் தெரியும். நம்முடைய கண்களிலுள்ள உத்திரத்தை நாம் பார்க்கமாட்டோம். ஆனால் பிறருடைய கண்களிலுள்ள துரும்பு நமக்குத் தெளிவாய்த் தெரியும்.

எருசலேமின் குடிகள் தங்களுடைய பாவங்களை நினைத்துப் பார்க்காமல், சோதோமின் பாவங்களையும், சமாரியாவின் பாவங்களையும் நோக்கிப் பார்க்கிறார்கள். எருசலேமின் குடிகளுக்கு அவர்களுடைய பாவங்கள் அதிகமாய்த் தெரிகிறது. சமாரியாவும் சோதோமும் மோசமானவர்களென்றால், எருசலேமின் குடிகள் மிகவும் மோசமானவர்களாயிருக்கிறார்கள்.

தங்களுடைய உண்மையான நிலமையை அறிந்துகொள்ளாமல், எருசலேமின் குடிகள் சோதோமையும், சமாரியாவையும் தப்பிதமாய் நியாயந்தீர்க்கிறார்கள். இதன் நிமித்தமாக எருசலேமின் குடிகளுக்கு வெட்கமும், இலச்சையும் உண்டாகும். நம்முடைய பாவங்களினிமித்தமாய் நாம் வெட்கப்படுவதிலும், இலச்சையடைவதிலும், வேதனைப்படுவதிலும் தப்பிதம் ஒன்றுமில்லை.

நாம் மற்றவர்களுடைய பாவங்களுக்கு துணைபோகும்போது, மெய்யாகவே நம்முடைய செய்கைகளைக் குறித்து நாம் வெட்கப்பட வேண்டும். நம்மைவிட மற்றவர்கள் பெரிய பாவிகள் என்று தீர்மானித்து, நாம் துணிகரமாய்ப் பாவம் செய்யக்கூடாது. மற்றவர்களுடைய பாவங்களை நாம் ஆராய்ந்து பார்ப்பதைவிட, நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பது நமக்கு நல்லது.

எருசலேமின் குடிகள் தங்களைப்பற்றி பெருமையாகவும் கெர்வமாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய கெர்வத்தின் நாளிலே, தங்கள் சகோதரியாகிய சோதோமின் பெயரை, தங்கள் வாயினால் உச்சரிக்கவும் மாட்டார்கள் (எசே 16:57). யூதர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றி தங்களுக்குள்ளே பேசிக்கொள்ளும்போதும், தங்களுடைய பிள்ளைகளிடத்தில் அதைப்பற்றி பேசும்போதும், சோதோமுக்கு விரோதமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்றே சொல்லுவார்கள்.

சோதோம் அநீதியான பட்டணமென்றும், அங்கே பக்தியுள்ளவர்கள் ஒருவருமில்லை என்றும், எருசலேமின் குடிகள் சோதோமைப்பற்றி கேவலாகப் பேசுவார்கள். ஆனாலும் தங்களிடத்தில் முறைகேடுகளும், அருவருப்புக்களும் இருக்கிறது என்பதை எருசலேமின் குடிகள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. கர்த்தர் எருசலேமைப் பார்த்து, "உன் முறை கேட்டையும், உன் அருவருப்புக்களையும் நீ சுமப்பாய்" (எசே 16:58) என்று சொல்லுகிறார்.

எருசலேமின் பாவங்கள் சோதோமின் பாவங்களைவிடவும், சமாரியாவின் பாவங்களைவிடவும் அதிகமாயிருக்கிறது. எருசலேமின் அக்கிரமங்களினிமித்தமாய் கர்த்தர் அந்த நகரத்தை அழித்துப்போடுவார். எருசலேமின் குடிகளிடத்தில் பெருமையும் கர்வமும் இருக்கிறது. இதன் நிமித்தமாய் எருசலேம் நகரம், மற்ற தேசங்கள் மத்தியிலே தாழ்ந்துபோகும். அதற்கு நிந்தையும், அவமானமும், அழிவும் உண்டாகும்.

எருசலேம் நகரத்தார் மற்ற ஜாதியாரை குற்றப்படுத்தினார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய பாவங்களை நோக்கிப் பார்க்கவில்லை. கர்த்தர் எருசலேம் குடிகளுடைய முறைகேட்டையும், அருவருப்புக்களையும் நோக்கிப் பார்க்கிறார். அவர்களை சிறையிருப்புக்கு அனுப்புகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் முறைகேட்டையும், தங்கள் அருவருப்புகளையும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே சுமக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்து, அவர்களுக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். அவர்களோ கர்த்தருடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆணையை அசட்டைபண்ணினார்கள். "நீ செய்ததுபோலவே நான் உனக்கும் செய்வேன்" (எசே 16:59) என்று கர்த்தர் எருசலேமின் குடிகளுக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் தேவனாயிருந்தார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஜனமாயிருந்தார்கள். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையை முறித்துப்போடுகிறார்கள். ஆகையினால் அவர்கள் கர்த்தருடைய இஸ்ரவேலராய் இனிமேல் இருக்கமாட்டார்கள். கர்த்தரும் அவர்களுடைய தேவனாயிருக்கமாட்டார்.

கர்த்தர் சோதோமையும் சமாரியாவையும் சிறையிருப்புக்கு அனுப்பி தண்டித்ததுபோல, எருசலேமையும் தண்டிக்கிறார். எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு பிரியமானவர்களாயிருந்தாலும், அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாய், அவர்கள் கர்த்தருக்கு அந்நியரானார்கள். அவர்கள் சோதோமைப்போலவும், சமாரியாவைப்போலவும் துன்மார்க்கரானார்கள்.

சோதோமும் சமாரியாவும் சிறையிருப்புக்குப்போனதுபோல, எருசலேமின் குடிகளும் சிறையிருப்புக்குப் போனார்கள். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பைத் திருப்பும்போதுதான், இஸ்ரவேல் வம்சத்தாரின் சிறையிருப்பையும் திருப்புவார். எருசலேமின் குடிகள் தமக்கு விசேஷமானவர்கள் என்பதற்காக, கர்த்தர் அவர்களுக்கு விசேஷித்த சிலாக்கியங்கள் எதையும் காண்பிக்கமாட்டார்.

"நான் சோதோமும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற அவர்களுடைய சிறையிருப்பையும், சமாரியாவும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற சிறையிருப்பையும் திருப்பும்போது, அவர்கள் நடுவிலே நீ சிறையிருக்கிற உன்னுடைய சிறையிருப்பையும் திருப்புவேன். அதினால் நீ அவர்களுக்கு ஆறுதலாக இருந்து, உன் இலச்சையைச் சுமந்து, நீ செய்த எல்லாவற்றினாலும் வெட்கமடைவாய்" (எசே 16:53,54) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சோதோமும், சமாரியாவும் அவர்களுடைய முந்தின சீருக்கு திரும்புவார்கள். அப்போதுதான் எருசலேமும் தன்னுடைய முந்திய சீருக்குத் திரும்பும். கர்த்தர் எருசலேமுக்கு விசேஷித்த சலுகைகளை காண்பிக்கமாட்டார். சமாரியாவின் பாவங்களைவிட, சோதோமின் பாவங்களைவிட எருசலேமின் பாவம் அதிகமாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் புறஜாதியாரை நடத்துவதுபோலவே, எருசலேம் நகரத்தாரையும் நடத்துகிறார்.

"உன் சகோதரிகளாகிய சோதோமும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள்; சமாரியாவும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள்; நீயும் உன் குமாரத்திகளும் உங்கள் முந்தின சீருக்குத் திரும்புவீர்கள். உன்னை வெறுக்கும் சீரியாவின் குமாரத்திகளும், அவளைச் சுற்றிலும் இருக்கிற பெலிஸ்தரின் குமாரத்திகளும் அவமானம் பண்ணினபோது உன் பொல்லாப்பு வெளியாயிற்றே" (எசே 16:55,56) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் சோதோமையும் சமாரியாவையும் சிறையிருப்பிலிருந்து திருப்பவில்லையென்றால், அவர் எருசலேமையும் சிறையிருப்பிலிருந்து திருப்பமாட்டார். சோதோமும் சமாரியாவும் தங்கள் முந்தின சீருக்கு திரும்பவில்லையென்றால், எருசலேமும் தன்னுடைய முந்திய சீருக்குத் திரும்பாது.

"புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களைத் தள்ளிவிடுவதுபோல, நான் சிதேக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய பிரபுக்களையும், இந்தத் தேசத்திலே மீதியான எருசலேமின் குடிகளையும், எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் தள்ளிவிட்டு, அவர்களுக்குத் தீமையுண்டாக அவர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா இடங்களிலும் நிந்தையாகவும், பழமொழியாகவும், வசைச்சொல்லாகவும், சாபமாகவும் வைத்து, அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்தில் அவர்கள் இராதபடிக்கு நிர்மூலமாகுமட்டும், அவர்களுக்குள்ளே பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளை நோயையும் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 24:8-10).

கர்த்தருடைய உடன்படிக்கை எசே 16:59-63

எசே 16:59. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: உடன்படிக்கையை முறித்துப் போடுகிறதினால் ஆணையை அசட்டைபண்ணின நீ செய்ததுபோல நான் உனக்கும் செய்வேன்.

எசே 16:60. ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து, நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன்.

எசே 16:61. அப்பொழுது உன் தமக்கைகளையும் உன் தங்கைகளையும் நீ சேர்த்துக்கொள்ளுகையில், உன் வழிகளை நினைத்து, நாணுவாய்; அவர்களை நான் உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன்; உன்னுடைய உடன்படிக்கையைப் பார்த்து கொடுப்பதில்லை.

எசே 16:62. உன்னோடே என் உடன்படிக்கையைப்பண்ணி ஏற்படுத்துவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிவாய்.

எசே 16:63. நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது, நீ நினைத்து வெட்கி, உன் நாணத்தினால் உன் வாயை இனித் திறக்கமாட்டாதிருப்பாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் இதுவரையிலும் எருசலேமின் அக்கிரமங்களையும், பாவங்களையும் உணர்த்தினார். அவர்கள்மீது வரும் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்புகளையும் கர்த்தர் வெளிப்படுத்தினார். இஸ்ரவேல் வம்சத்தார்மீது கர்த்தர் கோபத்தை வெளிப்படுத்தினாலும், இப்போது கர்த்தர் தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும் நினைவுகூருகிறார். கர்த்தருடைய ஜனத்தின்மீது நியாயத்தீர்ப்பு வருகிறது. ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு இரக்கம் காண்பித்து, அவர்களுக்கு தமது கிருபைகளை வெளிப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணினார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்கு வழிநடத்தி சென்றபோது, அவர்கள் வனாந்தரத்திலே கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். அவர்களில் ஒருவரும் கானான் தேசத்தில் பிரவேசிப்பதில்லை என்று கர்த்தர் தம்முடைய கோபத்தில் ஆணையிட்டார். கர்த்தர் கோபத்தோடு பேசினாலும், அவர்களுடைய சிறுபிள்ளைகள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்று, தம்முடைய கிருபையுள்ள வார்த்தைகளையும் சொன்னார்.

கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக, சோதோமும், சமாரியாவும், அவர்களோடுகூட எருசலேமும் சிறையிருப்பிலிருந்து திரும்புவார்கள். "நான் சோதோமும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற அவர்களுடைய சிறையிருப்பையும், சமாரியாவும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற சிறையிருப்பையும் திருப்பும்போது, அவர்கள் நடுவிலே நீ சிறையிருக்கிற உன்னுடைய சிறையிருப்பையும் திருப்புவேன்" (எசே 16:53) என்று கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூர்ந்து சொல்லுகிறார்.

சோதோமும் சமாரியாவும் தங்கள் முந்தின சீருக்கு திரும்பும்போது, எருசலேமும் தன்னுடைய முந்தின சீருக்கு திரும்பும்.

"உன் சகோதரிகளாகிய சோதோமும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள்; சமாரியாவும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள்; நீயும் உன் குமாரத்திகளும் உங்கள் முந்தின சீருக்குத் திரும்புவீர்கள்" (எசே 16:55).

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூர்ந்து இந்த வாக்குத்தத்தையும் சொல்லுகிறார்.

சோதோம் என்பது மோவாபியரையும் அம்மோனியரையும் குறிக்கும் வார்த்தையாகும். இவர்கள் லோத்தின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லோருமே ஒரு காலத்தில் சோதோமில் குடியிருந்தார்கள்.

"ஆனாலும் கடைசிநாட்களில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். மோவாபின்மேல் வரும் நியாயத்தீர்ப்பின் செய்தி இத்தோடே முடிந்தது" (எரே 48:47).

"அதற்குப்பின்பு அம்மோன் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 49:6).

கர்த்தர் எருசலேமின் சிறையிருப்பைத் திருப்புவார். அவர்கள் முந்தின சீருக்கு திரும்புவார்கள் (எசே 16:53,55). தங்கள் பாவத்திற்கு மனந்திரும்பின யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலைபெற்று தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்தார்கள். அப்போது கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதி நிறைவேறிற்று.

இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் காலத்தில், இந்த வாக்குத்தத்தம் பூரணமாய் நிறைவேறும். அப்போது எருசலேம் துவங்கி, எல்லா தேசங்களுக்கும் மனந்திரும்புதலைப்பற்றிய செய்தியும், பாவமன்னிப்பைப்பற்றிய செய்யும் பிரசங்கிக்கப்படும். உலகம் முழுவதிலுமுள்ள பாவிகள், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். அவர்கள் தங்கள் பாவமாகிய சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். தங்கள் பரிசுத்தமாகிய முந்தின சீருக்கு திரும்புவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் இளவயதில் அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார். கர்த்தர் அந்த உடன்படிக்கையை நினைத்துப் பார்த்து, அவர்களோடு நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார் (எசே 16:6). கர்த்தர் ஏற்கெனவே பண்ணின உடன்படிக்கையை இப்போது மறுபடியுமாய் புதுப்பிக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரோடு பண்ணின அந்த உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள் (எசே 16:59).

கர்த்தரோ தம்முடைய கோபத்தினால், "நீ செய்ததுபோல நான் உனக்கும் செய்வேன்" என்று சொன்னார். ஆனாலும் கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை நினைத்துப் பார்க்கிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை முறித்துப்போடாமல், அதைப் புதுப்பித்து, இஸ்ரவேல் வம்சத்தாரோடு நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு தங்களை ஆயத்தம்பண்ணவேண்டும், தங்களைத் தகுதிப்படுத்தவேண்டும். அவர்கள் தங்களுடைய வழிகளை நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்களுடைய வழிகளெல்லாமே பாவமான வழிகளாகவும், அக்கிரமமான வழிகளாகவும் இருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பாவமான வழிகளை அவர்களுக்கு நினைவுபடுத்துவார். அப்போது அவர்கள் தங்களுடைய அக்கிரமமான வழிகளை நினைத்து நாணுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு எப்போதுமே இரக்கம் காண்பிக்கிறார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அவருக்கு பிரியமான இஸ்ரவேல் ஜனத்திற்கு தாராளமாய் வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் அவர்களுடைய இளவயதில், அவர்களோடு பண்ணின தம்முடைய உடன்படிக்கையை நினைத்து, அவர்களோடு மறுபடியுமாய் நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை புதுப்பிக்கிறார். அதை மறுபடியும் புதுப்பித்து உறுதிபடுத்துகிறார். கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத நித்திய உடன்படிக்கையாகும் வரையிலும், கர்த்தர் அவர்களோடு பண்ணின உடன்படிக்கையை முறித்துப்போடாமல், புதுப்பித்துக்கொண்டேயிருக்கிறார். இதுவும் கர்த்தருடைய கிருபையே.

கர்த்தர் தம்முடைய சபையிலே புறஜாதியாரையும் சேர்த்துக்கொள்கிறார். அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரோடு ஐக்கியமாயிருப்பார்கள். "அப்பொழுது உன் தமக்கைகளையும் உன் தங்கைகளையும் நீ சேர்த்துக்கொள்வாய்" (எசே 16:61) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றிலும் புறஜாதியார் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே இஸ்ரவேல்வம்சத்தாருக்கு தமக்கைகளாகவும், தங்கைகளாகவும் இருக்கிறார்கள். அவர்களில் பூர்வதேசத்தாரும் இருக்கிறார்கள். தற்கால தேசத்தாரும் இருக்கிறார்கள். "அவர்களை நான் உனக்கு குமாரத்திகளாகக் கொடுப்பேன்" (எசே 16:61) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களுக்கு கர்த்தருடைய பிரமாணங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டும். ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளுக்கு போஜனம் கொடுப்பதுபோல, இஸ்ரவேல் ஜனங்கள், புறஜாதி ஜனங்களை, தங்களுடைய குமாரத்திகளாகப் பாவித்து, அவர்களுக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கவேண்டும். சீயோனிலிருந்து இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் புறப்பட்டுப்போகவேண்டும். எருசலேமிலிருந்து கர்த்தருடைய வார்த்தைகள் அறிவிக்கப்படவேண்டும். சுவிசேஷம் அறிவிக்கப்பட்டால்தான், புறஜாதியார் கிறிஸ்துவைப்பற்றித் தெரிந்துகொள்வார்கள். அப்போதுதான் எருசலேம் எல்லா ஜாதியாருக்கும் தாயாகயிருக்கும்.

புறஜாதியார் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு குமாரத்திகளாயிருப்பார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய உடன்படிக்கையின் பிரகாரம் அவர்களுக்கு குமாரத்திகளாகயிருக்கமாட்டார்கள். "உன்னுடைய உடன்படிக்கையைப் பார்த்து கொடுப்பதில்லை" (எசே 16:62) என்று கர்த்தர் சொல்லுகிறார். புறஜாதி ஜனங்கள் யூதாமார்க்கத்தில் அமைந்தவர்கள்போல இருக்கமாட்டார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாகயிருப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் உடன்படிக்கை, யூதாமார்க்கத்தின் பாரம்பரிய பழக்க வழக்கங்களோடும், பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணங்களோடும் தொடர்புடையது. புறஜாதி மார்க்கத்திலிருந்து இயேசுகிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படுகிற புதிய விசுவாசிகள்மீது, யூதமார்க்கத்தின் பழக்க வழக்கங்களை திணிக்கக்கூடாது. அவர்கள் பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணங்களுக்கு அடிமைகளல்ல.

இயேசுகிறிஸ்துவின் விசுவாசிகள் எல்லோருமே, அவருடைய உடன்படிக்கைக்கு குமாரத்திகளாகயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் உடன்படிக்கை கிருபையின் உடன்படிக்கையாகும். கிறிஸ்துவானவர் தம்முடைய கிருபையின் உடன்படிக்கையையே, விசுவாசிகள் எல்லோருக்கும் மாறாத நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவானவர் யூதருக்கும் புறஜாதியாருக்கும் பிதாவாகயிருக்கிறார். அவரை விசுவாசிக்கிறவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் சகோதரிகளாயிருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். இதன் மூலமாக கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. "உன்னோடே என் உடன்படிக்கையைப்பண்ணி ஏற்படுத்துவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிவாய்" (எசே 16:62) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவன் வல்லமையுள்ள தேவன் என்பதையும், அவர் தம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர் என்பதையும் இஸ்ரவேல் ஜனங்கள் அறிந்து கொள்வார்கள். கர்த்தரைப்பற்றிய அறிவும், ஞானமும் நமக்கு கிடைக்கும்போது, நம்முடைய இருதயத்திலும் ஆத்துமாவிலும் மிகப்பெரிய ஆறுதலும், சமாதானமும், சந்தோஷமும் உண்டாகும்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களையும் சகலவிதமான அக்கிரமங்களையும் செய்தார்கள். கர்த்தரோ தம்முடைய பெரிதான கிருபையினால் அவர்கள் செய்த எல்லா பாவங்களையும் அக்கிரமங்களையும் மன்னித்தருளுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் இதை நினைத்துப் பார்ப்பார்கள். கர்த்தருடைய மன்னிக்கும் கிருபையையும், தங்களுடைய மன்னிக்காத சுபாவத்தையும் நினைத்து, தங்கள் இருதயத்தில் வெட்கப்படுவார்கள். நாணத்தினால் தங்கள் வாயை இனிமேல் திறக்கமாட்டாதிருப்பார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பேசமாட்டார்கள். பிறர்மீது குற்றம் சொல்லமாட்டார்கள். அவர்கள் வெட்கப்பட்டிருக்கும்போது, மற்றவர்களை வெட்கப்படுத்தமாட்டார்கள்.

17 அதிகாரம்

சிதேக்கியா ராஜா பாபிலோன் தேசத்து ராஜாவோடு உடன்படிக்கை செய்திருந்தான். அவன் தன்னுடைய உடன்படிக்கையை மீறி, எகிப்து தேசத்தின் ராஜாவோடு இரகசியமாய் உடன்படிக்கை பண்ணினான். பாபிலோன் ராஜாவுக்கு கப்பம் கட்டாமல், எகிப்தின் ராஜாவுக்கு கப்பம் கட்டினான். கர்த்தர் சிதேக்கியா ராஜாவின் துரோகத்தை எசேக்கியேல் மூலமாக கடிந்துகொள்கிறார்.

எசேக்கியாவுக்கும் யூதாதேசத்திற்கும் அழிவு வரும். அவனுக்கு வரும் அழிவை விவரிப்பதற்கு கர்த்தர் இரண்டு கழுகுகளையும், ஒரு திராட்சச்செடியையும் உவமையாகச் சொல்லுகிறார் (எசே 17:1-10). கர்த்தர் இந்த உவமையின் விளக்கத்தையும் சொல்லுகிறார் (எசே 17:11-21).

கர்த்தர் யூதாதேசத்திலே, தாவீதின் வம்சத்திலே, ஒரு புதிய ராஜாவை எழுப்புவார். மேசியாவின் ஆளுகையின்கீழ், அவருடைய ராஜ்யம் ஸ்திரப்படும் (எசே 17:22-24).

சிதேக்கியா ராஜா
எசே 17:1-21

எசே 17:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 17:2. மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஒரு விடுகதையையும் உவமையையும்கூறி, சொல்லவேண்டியது என்னவென்றால்:

எசே 17:3. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார், பெரிய செட்டைகளையும் நீளமான இறகுகளையும் உடையதும், பலவருணமான இறகுகளால் நிறைந்ததுமாகிய ஒரு பெரிய கழுகு லீபனோனில் வந்து, ஒரு கேதுருவின் நுனிக்கிளையைப் பிடித்து,

எசே 17:4. அதின் இளங்கிளைகளிலுள்ள கொழுந்துகளைக்கொய்து, அதை வர்த்தக தேசத்துக்குக் கொண்டுபோய், அதை வர்த்தகருடைய நகரத்திலே வைத்தது;

எசே 17:5. தேசத்தின் விதையில் ஒன்றை எடுத்து, அதைப் பயிர்நிலத்திலே போட்டு, அதை எடுத்து, மிகுந்த தண்ணீர் ஓரத்திலே பத்திரமாய் நட்டது.

எசே 17:6. அது துளிர்த்து, படர்ந்து, தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச்செடியாயிற்று; அதின் கொடிகள் அந்த கழுகுக்கு நேராகவும், அதின் வேர்கள் அதின் கீழாகவும் இருந்தன; இவ்விதமாய் அது திராட்சச்செடியாகி, கிளைகளை வீசி, கொப்புகளை விட்டது.

எசே 17:7. அன்றியும் பெரிய செட்டைகளையும் திரளான இறகுகளையும் உடைய வேறொரு பெரிய கழுகு இருந்தது; இதோ, அது தன் நடவாகிய பாத்திகளிலிருந்து அதற்குத் தண்ணீர்பாய்ச்சும்படி இந்த திராட்சச்செடி அதற்கு நேராகத் தன் வேர்களை விட்டு, அதற்கு நேராகத் தன் கொடிகளை வீசினது.

எசே 17:8. கொப்புகளை விடுகிறதற்கும், கனியைத் தருகிறதற்கும், மகிமையான திராட்சச்செடியாகிறதற்கும், இது மிகுந்த தண்ணீர்களின் ஓரமாகிய நல்ல நிலத்தில் நடப்பட்டிருந்தது.

எசே 17:9. இது செழிக்குமா? இது பட்டுப்போகத்தக்கதாய் ஒருவன் இதின் வேர்களைப் பிடுங்காமலும், இதின் கனியை வெட்டாமலும் இருப்பானோ? துளிர்த்த எல்லா இலைகளோடும் இது பட்டுப் போகும்; இதை வேரோடே பிடுங்கும்படி ஒருவன் பலத்த புயத்தோடும் திரண்ட ஜனத்தோடும் வரத்தேவையில்லை.

எசே 17:10. இதோ, நடப்பட்ட இது செழிப்பாயிருக்குமோ? கொண்டல்காற்று இதின் பேரில் படும்போது இது வாடி உலர்ந்து போகாதோ? இது நடப்பட்ட பாத்திகளிலே வாடிப்போமென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எசே 17:11. பின்பு கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 17:12. இப்போதும் இவைகளின் தாற்பரியம் தெரியுமா என்று நீ கலகவீட்டாரைக் கேட்டுச் சொல்ல வேண்டியது என்னவென்றால், இதோ, பாபிலோன் ராஜா எருசலேமுக்கு வந்து, அதின் ராஜாவையும் அதின் பிரபுக்களையும் பிடித்து, அவர்களைத் தன்னிடமாகப் பாபிலோனுக்குக் கொண்டுபோகும்போது,

எசே 17:13. அவன் ராஜவம்சத்திலே ஒருவனைத் தெரிந்தெடுத்து, அவனோடே உடன்படிக்கைபண்ணி,

எசே 17:14. ராஜ்யம் தன்னை உயர்த்தாமல் தாழ்ந்திருக்கும்படிக்கும், தன் உடன்படிக்கையை அவன் கைக்கொள்ளுகிறதினால் அது நிலைநிற்கும்படிக்கும், அவனை ஆணைப்பிரமாணத்துக்கு உட்படுத்தி, தேசத்தில் பலசாலிகளைப் பிடித்துக் கொண்டுபோனானே.

எசே 17:15. இவன் அவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து, தனக்குக் குதிரைகளையும் அநேகம் ஆட்களையும் அனுப்பவேண்டுமென்று தன் ஸ்தானாபதிகளை எகிப்துக்கு அனுப்பினான்; இப்படிப்பட்டவனுக்கு வாய்க்குமோ? இப்படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ? உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ?

எசே 17:16. தன்னை ராஜாவாக ஏற்படுத்திய ராஜாவினுடைய ஆணையை அசட்டைபண்ணி, அவனுடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டவன், அந்த ராஜாவினுடைய ஸ்தானமாகிய பாபிலோன் நடுவிலே அவனண்டையில் இருந்து மரணமடைவானென்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 17:17. அவன் அநேகம் ஜனங்களை நாசம்பண்ணும்படி அணைபோட்டு, கொத்தளங்களைக் கட்டும்போது, பார்வோன் பெரிய சேனையோடும், திரளான கூட்டத்தோடும் வந்து இவனுக்காக யுத்தத்தில் உதவமாட்டான்.

எசே 17:18. இதோ, இவன் கையடித்துக் கொடுத்திருந்தும் உடன்படிக்கையை முறித்துப்போட்டு, ஆணையை அசட்டைபண்ணினான்; இப்படியெல்லாம் செய்தவன் தப்புவதில்லை.

எசே 17:19. அதினிமித்தம் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அவன் என் ஆணையை அசட்டைபண்ணினதையும், என் உடன்படிக்கையை முறித்துப் போட்டதையும், நான் அவனுடைய தலையின்மேல் வரப்பண்ணுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.

எசே 17:20. அவன் என்னுடைய கண்ணியில் அகப்படும்படிக்கு நான் என் வலையை அவன்மேல் வீசி, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோய், அவன் எனக்கு விரோதமாய்ப் பண்ணின துரோகத்தினிமித்தம் அங்கே அவனை நியாயம் விசாரிப்பேன்.

எசே 17:21. அவனோடேகூட ஓடிப்போகிற யாவரும் அவனுடைய எல்லா இராணுவங்களும் பட்டயத்தால் விழுவார்கள்; மீதியானவர்களோ சகல திசைகளிலும் சிதறடிக்கப்படுவார்கள்; அப்பொழுது கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஒரு விடுகதையையும், உவமையையும் சொல்லவேண்டும். அவர்களை ஆச்சரியப்படவைப்பதற்காகவோ, அவர்களைக் குழப்புவதற்காகவோ இந்த விடுகதை சொல்லப்படவில்லை. கர்த்தர் இந்த விடுகதையைச் சொல்லிவிட்டு, இதன் தாற்பரியத்தையும் விவரிக்கிறார்.

தாற்பரியமும் விளக்கமும் வேதத்தின் இரகசியங்களைப் புரிந்துகொள்வதற்கு மிகவும் அவசியம். ஆனாலும் எசேக்கியேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு முதலாவதாக விடுகதையையும் உவமையையுமே சொல்லவேண்டும். ஜனங்கள் தாற்பரியத்தை நினைவில் வைத்திருப்பதைவிட, விடுகதையையும் உவமையையும் எளிதாக நினைவில் வைத்திருப்பார்கள். மற்றவர்களுக்கும் விடுகதைகளை எளிதாகச் சொல்லுவார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், சத்திய வசனங்களை பிரசங்கம்பண்ணும்போது, பல்வேறுவிதமான முறைகளையும் கையாளவேண்டும். ஜனங்களுக்கு நன்மை செய்வது நம்முடைய ஊழியம். எந்த வழிகளில் நன்மைசெய்தால், அது ஜனங்களுக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும் என்பதை யோசித்துப் பார்த்து, ஞானமாய் நன்மை செய்யவேண்டும். நம்முடைய பிரசங்கச் செய்திகளிலும், உபதேசங்களிலும், ஜனங்களுக்கு புரியும் காரியங்களை எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம்.

இஸ்ரவேல் வீட்டாரோ கலகவீட்டாராயிருக்கிறார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, கர்த்தர் சொன்ன விடுகதையையும், உவமையையும் சொல்லவேண்டும். அதன் பின்பு "இதன் தாற்பரியம் தெரியுமா" (எசே 17:12) என்றும் எசேக்கியேல் இஸ்ரவேல் என்னும் கலகவீட்டாரைக் கேட்கவேண்டும். எசேக்கியேல் விடுகதையையும் சொல்லவேண்டும், அதன் தாற்பரியத்தையும் சொல்லவேண்டும்.

யூதாதேசத்தை யோயாக்கீன் என்னும் ராஜா ஆட்சி செய்துகொண்டிருக்கிறான். அவனுக்கு எக்கோனியா என்னும் மறுபெயருமுள்ளது. அவன் தன்னுடைய பதினெட்டாவது வயதில் எருசலேமை ஆட்சி செய்து கொண்டிருக்கும்போது, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அவனுக்கு விரோதமாக வந்தான்.

யோயாக்கீன் மூன்றுமாதங்கள் மாத்திரமே ஆட்சிசெய்தான். பாபிலோன் ராஜாவோ யோயாக்கீனையும், அவனுடைய அரண்மனையிலுள்ளவர்களையும், பிரபுக்களையும், தேசத்தில் பிரதானமானவர்களையும் சிறைப்பிடித்து, பாபிலோன் தேசத்திற்கு கொண்டுபோய்விட்டான்.

"அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனும், அவன் தாயும், அவன் ஊழியக்காரரும், அவன் பிரபுக்களும், பிரதானிகளும் பாபிலோன் ராஜாவினிடத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள்; அவனைப் பாபிலோன் ராஜா தன் ஆளுகையின் எட்டாம் வருஷத்திலே பிடித்துக் கொண்டான்" (2இராஜா 24:12).

நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனை சிறைப்பிடித்துக்கொண்டுபோன சம்பவம் இங்கு ஒரு விடுகதையின் மூலமாக விவரிக்கப்படுகிறது. இந்த விடுகதையை கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

"பெரிய செட்டைகளையும் நீளமான இறகுகளையும் உடையதும், பலவருணமான இறகுகளால் நிறைந்ததுமாகிய ஒரு பெரிய கழுகு லீபனோனில் வந்து, ஒரு கேதுருவின் நுனிக்கிளையைப் பிடித்து, அதின் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளைக் கொய்து, அதை வர்த்தக தேசத்துக்குக் கொண்டுபோய், அதை வர்த்தகருடைய நகரத்திலே வைத்தது" (எசே 17:3,4).

கர்த்தர் இந்த விடுகதைக்கு விளக்கம் சொல்லும்போது "இதோ, பாபிலோன் ராஜா எருசலேமுக்கு வந்து, அதின் ராஜாவையும் அதின் பிரபுக்களையும் பிடித்து, அவர்களைத் தன்னிடமாகப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்" (எசே 17:12) என்று சொல்லுகிறார்.

எருசலேம் ராஜாவாகிய யோயாக்கீனால், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம் பண்ண முடியவில்லை. நேபுகாத்நேச்சார் பெரிய செட்டைகளையும், நீளமான இறகுகளையும் உடைய கழுகைப்போல இருக்கிறான். யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனோ கேதுருவின் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளைப்போல இருக்கிறான். மென்மையான கொழுந்தால் பெரிய கழுகுக்கு எதிர்த்து நிற்கமுடியாது. கழுகு பெலமுள்ளதாயிருக்கிறது. அது வேகமாக பறந்துவந்து, இளங்கிளையிலுள்ள கொழுந்தைக் கொய்து கொண்டுபோய்விடுகிறது.

இந்த கழுகு ஒருவேளை தன்னுடைய கூட்டைக் கட்டுவதற்கு, இளங்கிளையிலுள்ள கொழுந்தை கொய்து கொண்டுபோயிருக்கலாம். இதுபோலவே பாபிலோன் ராஜாவும், தன்னுடைய தேசத்தை விஸ்தாரம்பண்ணுவதற்காக, யூதாவின் ராஜாவை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோயிருக்கலாம்.

நேபுகாத்நேச்சார் இந்த உவமையில் "ஒரு பெரிய கழுகு" என்று சொல்லப்படுகிறான். கழுகு பறவைகளுக்கெல்லாம் ராஜாவைப்போல இருக்கிறது. அது பிராணிகளைக் கொத்தித் தின்னும். மற்ற உயிரினங்களின் ஜீவன்களே கழுகுக்கு ஆகாரம். நேபுகாத்நேச்சாரும் பல தேசங்கள்மீது யுத்தம்பண்ணி, அவர்களைக் கொள்ளையடித்து, தன்னுடைய தேசத்தை பெரியதாகக் கட்டியெழுப்பியிருக்கிறான்.

நேபுகாத்நேச்சாரின் பாபிலோன் தேசம் எல்லா திசைகளிலும் பரவி விரிந்திருக்கிறது. பெரிய கழுகுக்கு பெரிய செட்டைகளும், நீளமான இறகுகளும் உள்ளது. அதுபோலவே பாபிலோன் தேசமும் பெரியதாகவும், நீளமாகவும் பரவி விரிந்திருக்கிறது. பாபிலோன் தேசத்திலே ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள். நேபுகாத்நேச்சாருக்கு உவமையாகச் சொல்லப்பட்டிருக்கிற பெரிய கழுகும், இறகுகளால் நிறைந்திருக்கிறது.

பாபிலோன் ராஜாவின் அரண்மனை ஆடம்பரமாயிருக்கிறது. அவனுடைய அரண்மனை விலையுயர்ந்த பொருட்களினால் அழகுபடுத்தப்பட்டு அலங்காரமாயிருக்கிறது. பெரிய கழுகும் பல வருணமான இறகுகளால் நிறைந்திருக்கிறது.

எருசலேம் லீபனோன் வனத்தைப் போன்றது. இந்த வனத்தில் ஏராளமான விருட்சங்கள் உள்ளன. எருசலேமில் ராஜகுடும்பத்தார் இருக்கிறார்கள். இவர்கள் கேதுரு மரங்களைப் போன்றவர்கள். யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீன், கேதுரு விருட்சத்தின் நுனி கிளையைப்போல இருக்கிறான். அவன் அந்த மரத்தில் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளாகயிருக்கிறான்.

பாபிலோன் தேசமோ வர்த்தகர்களின் தேசம். பெரிய கழுகு கேதுரு மரத்தின் இளங்கிளையிலுள்ள கொழுந்தைகளைக் கொய்து, அதை வர்த்தக தேசத்திற்கு கொண்டுபோகிறது. அங்கே அதை வர்த்தகருடைய நகரத்தில் வைக்கிறது. வர்த்தக தேசம் என்பது பாபிலோன் தேசத்தையும், வர்த்தகருடைய நகரம் என்பது பாபிலோன் நகரத்தையும் குறிக்கும்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனை சிறைப்பிடித்து, தன்னுடைய தேசத்திற்கு கொண்டுபோகிறான். அதன் பின்பு, நேபுகாத்நேச்சார், யோயாக்கீனுடைய சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை, அவனுடைய ஸ்தானத்திலே, யூதாதேசத்தின்மீது ராஜாவாக்குகிறான்.

சிதேக்கியாவின் பழைய பெயர் "மத்தனியா" என்பதாகும். இந்தப் பெயருக்கு "கர்த்தருடைய ஈவு" என்று பொருள். நேபுகாத்நேச்சாரோ மத்தனியா என்னும் பெயரை மாற்றி, அவனுக்கு "சிதேக்கியா" என்னும் பெயரைக்கொடுக்கிறான். சிதேக்கியா என்னும் பெயருக்கு, "கர்த்தருடைய நீதி" என்று பொருள்.

கர்த்தர் சிதேக்கியாவைப்பற்றிச் சொல்லும்போது, அவனை, "தேசத்தின் விதையில் ஒன்று" (எசே 17:5) என்று சொல்லுகிறார். சிதேக்கியா பாபிலோன் தேசத்து பிரபுக்களில் ஒருவனல்ல. அவன் யூதாதேசத்தைச் சேர்ந்தவன்.

நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை, யூதாதேசத்திற்கு ராஜாவாக்கின சம்பவத்தை, கர்த்தர் ஒரு விடுகதையின் மூலமாக சொல்லுகிறார்.

"தேசத்தின் விதையில் ஒன்றை எடுத்து, அதைப் பயிர்நிலத்திலே போட்டு, அதை எடுத்து, மிகுந்த தண்ணீர் ஓரத்திலே பத்திரமாய் நட்டது. அது துளிர்த்து, படர்ந்து, தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச்செடியாயிற்று; அதின் கொடிகள் அந்த கழுகுக்கு நேராகவும், அதின் வேர்கள் அதின் கீழாகவும் இருந்தன; இவ்விதமாய் அது திராட்சச்செடியாகி, கிளைகளை வீசி, கொப்புகளை விட்டது" (எசே 17:5,6).

நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை எருசலேமிலே ராஜாவாக்குகிறான். எருசலேம் ஒரு பயிர்நிலத்தைப்போல இருக்கிறது. நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை, எருசலேம் என்னும் பயிர் நிலத்திலே போடுகிறான். அதை மிகுந்த தண்ணீர் ஓரத்திலே பத்திரமாய் நாட்டுகிறான். நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை யூதாவின் அரண்மனையில்போட்டு, அதன் சிங்காசனத்தின்மேல் அமரச்செய்கிறான்.

தண்ணீர் ஓரத்திலே பத்திரமாய் நடப்பட்ட விதை வேகமாக வளரும். அது ஆரோக்கியமாயிருக்கும். அதற்கு தேவையான தண்ணீர் அதன் ஓரத்திலேயே கிடைக்கிறது. இந்த செடி ஒருபோதும் மரமாவதில்லை. இது தண்ணீர் ஓரத்தில் இருக்கும் வரையில்தான் நன்றாய் வளரும். இதற்கு தேவையான தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் இந்த செடி பட்டுப்போகும்.

நேபுகாத்நேச்சாரோ தேசத்தின் விதையில் ஒன்றாகிய சிதேக்கியாவை, எருசலேமிலே பத்திரமாய் நடுகிறான். அவனை மிகவும் ஜாக்கிரதையாய் யூதாவுக்கு ராஜாவாக்குகிறான். அந்த விதை வளரவேண்டும். ஆனால் அது வளர்ந்து பெரிய மரமாகிவிடக்கூடாது என்பது நேபுகாத்நேச்சாரின் திட்டம். அதற்கேற்ற பிரகாரமாக, நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை, மிகவும் பத்திரமாய் நடுகிறான்.

சிதேக்கியா யூதாதேசத்தை ஆளுகை செய்யவேண்டும். அவன் பாபிலோனுக்கு கீழ்ப்படிந்து யூதாவை ஆட்சிசெய்யவேண்டும். சிதேக்கியா பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, யூதாதேசத்தை தன்னிச்சையாக ஆட்சிசெய்துவிடக்கூடாது. அவன் எப்போதுமே பாபிலோனுக்கு அடிமையாகயிருக்கவேண்டும். இதுவே நேபுகாத்நேச்சாரின் திட்டம். இதற்கேற்ற பிரகாரமாக, நேபுகாத்நேச்சார், சிதேக்கியாவை, மிகவும் பத்திரமாய், யூதாதேசத்து சிங்காசனத்தில் நாட்டுகிறான்.

பெரிய கழுகு தேசத்தின் விதையில் ஒன்றை எடுத்தது. கர்த்தர் இந்த வாக்கியத்திற்கு தாற்பரியம் சொல்லும்போது, "நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தின் ராஜவம்சத்திலே ஒருவனைத் தெரிந்தெடுத்தான்" (எசே 17:13) என்று சொல்லுகிறார்.

"நேபுகாத்நேச்சார் ராஜவம்சத்திலே ஒருவனைத் தெரிந்தெடுத்து, அவனோடே உடன்படிக்கைபண்ணி, ராஜ்யம் தன்னை உயர்த்தாமல் தாழ்ந்திருக்கும்படிக்கும், தன் உடன்படிக்கையை அவன் கைக்கொள்ளுகிறதினால் அது நிலைநிற்கும்படிக்கும், அவனை ஆணைப்பிரமாணத்துக்கு உட்படுத்தி, தேசத்தில் பலசாலிகளைப் பிடித்துக் கொண்டுபோனான்" (எசே 17:13,14).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதாவின் ராஜவாகிய சிதேக்கியாவோடு உடன்படிக்கை பண்ணினான். இந்த உடன்படிக்கையின் பிரகாரம், சிதேக்கியா யூதாதேசத்திற்கு ராஜாவாகயிருப்பான். ஆனாலும் அவன் பாபிலோன் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து யூதாதேசத்தை ஆளுகைசெய்யவேண்டும். சிதேக்கியா உடன்படிக்கையை மீறினால், பாபிலோன் ராஜா அவனைத் தண்டிப்பான்.

"தேவன்மேல் தன்னை ஆணையிடுவித்துக்கொண்ட நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பாதபடிக்கு, தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான்" (2நாளா 36:13).

சிதேக்கியா தேவன் பேரில் ஆணை செய்தான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிட்டான். "சிதேக்கியா பாபிலோன் தேசத்து விக்கிரகங்கள் பேரில் ஆணையிடாமல், இஸ்ரவேலுடைய தேவன் பேரில் ஆணையிட்டால், அவன் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவனாயிருப்பான்" என்று நேபுகாத்நேச்சார் எதிர்பார்த்தான். இந்த உடன்படிக்கையின் பிரகாரம், சிதேக்கியா பாபிலோன் தேசத்திற்கு கப்பம் கட்டவேண்டும். யூதாதேசம் பாபிலோன் தேசத்திற்கு அடிமை தேசமாகயிருக்கும்.

நேபுகாத்நேச்சார் சிதேக்கியா ராஜாவை தன்னுடைய ஆணைப்பிரமாணத்திற்குட்படுத்தினான். யூதாதேசத்திலுள்ள பலசாலிகளையெல்லாம் சிறைப்பிடித்து தன்னுடைய தேசத்திற்கு கொண்டுபோய்விட்டான். இப்போது யூதாதேசத்திலே ராஜா இருக்கிறான். ஆனால் யுத்தவீரர்கள் இல்லை. எருசலேமிலே பலசாலிகள் இல்லை. அவர்களெல்லோரும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போய்விட்டார்கள்.

சிதேக்கியா ராஜாவுக்கு பலமுள்ள இராணுவமில்லை. சிதேக்கியா பாபிலோனுக்கு விரோதமாக தன்னை உயர்த்தாமல், எப்போதும் தாழ்ந்திருக்கவேண்டும். அவன் தன்னுடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு அதில் நிலைத்திருக்க வேண்டும். சிதேக்கியாவுக்கு இராணுவபலம் அதிகரித்தால், அவன் பாபிலோனுக்கு விரோதாமாகக் கலகம்பண்ணுவான். அவன் எப்போதுமே தாழ்ந்திருக்கவேண்டும் என்பதற்காக, நேபுகாத்நேச்சார், யூதாதேசத்திலுள்ள பலசாலிகளையெல்லாம், பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போய்விடுகிறான்.

பூர்வகாலத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கு அண்டை தேசத்தில் இருந்தவர்களெல்லோரும், இஸ்ரவேலின் ராஜாவோடு உடன்படிக்கை பண்ணினார்கள். அவர்கள் தங்கள் தலைகளை உயர்த்தாமல், இஸ்ரவேலுக்கு கீழ்ப்படிந்தார்கள். ஆனால் இப்போதோ யூதாதேசம், பாபிலோன் தேசத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறது. யூதாதேசத்தாரால் தங்கள் தலைகளை உயர்த்த முடியவில்லை. யூதாதேசம் தாழ்ந்துபோயிற்று.

சாலொமோன் ஆட்சிக்காலத்தில் மற்ற தேசத்து ராஜாக்களெல்லோரும், தங்கள் பொக்கிஷங்களை எருசலேமுக்கு கப்பமாக செலுத்த வந்தார்கள். இப்போதோ யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா, பாபிலோன் தேசத்திற்கு கப்பம் செலுத்துகிறான்.

சிதேக்கியா ராஜா, நேபுகாத்நேச்சாரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், சிறிதுகாலம் பாபிலோன் தேசத்திற்கு உண்மையுள்ளவனாயிருக்கிறான். அவர்களுக்கு ஒழுங்காக கப்பம் கட்டுகிறான். யூதாதேசத்தில் சிதேக்கியாவுக்கு ஒரு பிரச்சனையுமில்லை. யூதாதேசத்தாரும் பாபிலோன் தேசத்தின் பராமரிப்பில் நன்றாயிருக்கிறார்கள்.

சிதேக்கியா ராஜா கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, தன்னுடைய இருதயத்தைச் சுத்தப்படுத்தி, புதுப்பித்துக் கொண்டால், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவனுக்கு கிடைக்கும். சிதேக்கியா கர்த்தரிடத்திற்கு திரும்பி வந்து, கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அப்போது கர்த்தர் அவன் இழந்துபோன மேன்மையைத் திரும்பக் கொடுத்திருப்பார்.

சிதேக்கியா ராஜா நேபுகாத்நேச்சாருக்கு கீழ்ப்படிந்திருந்தபோது அவன் செழிப்பாயிருந்தான். கர்த்தர் சிதேக்கியாவின் செழிப்பைப்பற்றி இந்த விடுகதையில் இவ்வாறு சொல்லுகிறார்.

"அது துளிர்த்து, படர்ந்து, தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச்செடியாயிற்று; அதின் கொடிகள் அந்த கழுகுக்கு நேராகவும், அதின் வேர்கள் அதின் கீழாகவும் இருந்தன; இவ்விதமாய் அது திராட்சச்செடியாகி, கிளைகளை வீசி, கொப்புகளை விட்டது" (எசே 17:6).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், சிதேக்கியா ராஜாவை, யூதாதேசத்தின் சிங்காசனத்தில் அமரச்செய்தான். பெரிய கழுகு தேசத்தின் விதையில் ஒன்றை எடுத்து, அதை தண்ணீர் ஓரத்திலே நட்டது. அந்த விதை துளிர்த்து, படர்ந்து, தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச்செடியாயிற்று. அந்த விதை செழித்ததுபோல, சிதேக்கியா ராஜாவும் செழிப்பாயிருக்கிறான்.

திராட்சச்செடி துளிர்த்து படர்ந்திருக்கிறது. அதன் கிளைகள் தாழ்ந்திருக்கிறது. திராட்சப்பழங்களைப் பறிக்கிறவர்கள், தாழ்ந்த கிளையில் அதிக சிரமமில்லாமல் எளிதாய்ப் பறிப்பார்கள். யூதாதேசத்தாருக்கும், சிதேக்கியா ராஜாவின் மூலமாய் நன்மை உண்டாயிற்று. திராட்சப்பழங்கள் இருதயத்திற்கு சந்தோஷத்தைக் கொடுப்பதுபோல, சிதேக்கியாவும் யூதாவின் மனுஷருக்கு சந்தோஷத்தைக் கொடுத்தான்.

சிதேக்கியா தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச்செடியைப்போல இருக்கிறான். உயரம் குட்டையாகயிருக்கிறது. அது ஓங்கி உயர்ந்து வளர்ந்த கேதுரு மரத்தைப்போல் இல்லை. சிதேக்கியா தாழ்ந்திருந்தாலும், அவன் திராட்சச்செடியைப்போல கனிகொடுக்கிறான். ஜனங்களுக்கு பிரயோஜனமுள்ளவனாயிருக்கிறான்.

ஒருவருக்கும் பிரயோஜனமில்லாமல், உயர்ந்த கேதுரு மரத்தைப்போல இருப்பதைவிட, எல்லோருக்கும் பிரயோஜனமாய், தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச்செடியாயிருப்பது மிகவும் நல்லது. பிறருக்கு உதவி செய்யாத ஐசுவரியவான்களைவிட, பிறருக்கு உதவிசெய்கிற தரித்திரரே பாக்கியவான்கள்.

சிதேக்கியா ராஜாவின் ஆட்சியைப் பார்த்து நேபுகாத்நேச்சாரும் சந்தோஷப்படுகிறான். திராட்சச்செடியின் கொடிகள் அந்த கழுகுக்கு நேராகயிருக்கிறது. சிதேக்கியா ராஜாவின் ஆளுகையும், யூதாதேசமும், நேபுகாத்நேச்சாரின் மேற்பார்வையில் இருக்கிறது. திராட்சச்செடி ஒரு சுவற்றில் படருவதுபோல, சிதேக்கியா ராஜா நேபுகாத்நேச்சாரின் ஆதரவில் யூதாதேசத்தை ஆளுகை செய்கிறான்.

பாபிலோன் தேசத்து ராஜா தான் நட்டின திராட்சச்செடியிலிருந்து, தன் பங்குக்கு பழங்களைப் பெற்றுக்கொள்கிறான். திராட்சச்செடியின் வேர்கள் அதின் கீழாகயிருப்பதுபோல, சிதேக்கியா ராஜாவின் ஆளுகை, பாபிலோன் ராஜாவுக்கு கீழாகயிருக்கிறது.

யூதாதேசம் என்னும் திராட்சச்செடி இன்னும் அழிந்துபோகவில்லை. அது துளிர்த்து படர்ந்திருக்கிறது. அதற்கு இன்னும் வேர்கள் இருக்கிறது. திராட்சச்செடியின் வேர்கள் செடிக்கு கீழே இருக்கிறது. யூதாதேசத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், கர்த்தர் அவர்களை இன்னும் முற்றிலுமாய் அழித்துப்போடவில்லை. அவர்கள் கிருபையின் காலத்திலிருக்கிறார்கள். அவர்கள் மனந்திரும்புவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன.

யூதர்கள் மனந்திரும்பவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் அவர்களை தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச் செடியாக வைத்திருக்கிறார். யூதர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களை உயர்த்தாமல், தங்களைத் தாழ்த்தவேண்டும். அவர்கள் உயர்ந்த கேதுருவைப்போல இருந்தால், அவர்களுடைய இருதயத்தில் பெருமையும் மேட்டிமையும் வந்துவிடும். அவர்கள் தங்களைத் தாழ்த்தி, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதற்காக கர்த்தர் அவர்களை தாழ்ந்த அடிமரமுள்ள திராட்சச்செடியாக வைத்திருக்கிறார்.

சிதேக்கியா செழித்திருந்தபோது, அவனுடைய இருதயத்தில் பெருமையும் ஆணவமும் உண்டாயிற்று. பாபிலோன் ராஜாவுக்கு கப்பம் கட்டுவதை அவனுடைய மனது வெறுத்தது. அவனால் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாக தனித்திருந்து யுத்தம்பண்ண முடியாது. சிதேக்கியா எகிப்து தேசத்தின் ராஜாவோடு இரகசியமாய் உடன்படிக்கை செய்துகொள்கிறான். பாபிலோன் ராஜாவுக்கு கப்பம் கட்டுவதையும் நிறுத்திவிடுகிறான்.

சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து, அவன் ஒழுங்காக கப்பம் கட்டி வந்தால், அவனுக்கு ஒரு பிரச்சனையும் வந்திருக்காது. யூதாவின் மனுஷருக்கும் பாபிலோன் தேசம் மூலமாய் பாதுகாப்பு கிடைக்கும். சிதேக்கியா ராஜாவும் நல்ல பழங்களைக் கொடுக்கும் திராட்சச்செடியாகயிருப்பான். சிதேக்கியா எகிப்து தேசத்து ராஜாவோடு இரகசிய உடன்படிக்கை செய்ததினால் அவனுக்கு கேடுண்டாயிற்று.

சிதேக்கியா ராஜாவையும், எகிப்து தேசத்தையும், சிதேக்கியா எகிப்து தேசத்து ராஜாவோடு செய்து கொண்ட உடன்படிக்கையையும் கர்த்தர் இந்த விடுகதையின் மூலமாய் சொல்லுகிறார்.

"அன்றியும் பெரிய செட்டைகளையும் திரளான இறகுகளையும் உடைய வேறொரு பெரிய கழுகு இருந்தது; இதோ, அது தன் நடவாகிய பாத்திகளிலிருந்து அதற்குத் தண்ணீர்பாய்ச்சும்படி இந்த திராட்சச்செடி அதற்கு நேராகத் தன் வேர்களை விட்டு, அதற்கு நேராகத் தன் கொடிகளை வீசினது" (எசே 17:7).

இந்த விடுகதையில் "வேறொரு பெரிய கழுகு" என்பது எகிப்து தேசத்தின் ராஜாவைக் குறிக்கும். எகிப்தின் ராஜாவும், பாபிலோன் ராஜாவும் பெரிய கழுகளாகயிருக்கிறார்கள். கழுகு தன்னுடைய இரைகளை பட்சிப்பதுபோல, இவ்விரண்டு ராஜாக்களும் மற்ற தேசங்களைப் பட்சிக்கிறார்கள்.

எகிப்து தேசமாகிய பெரிய கழுகுக்கு பெரிய செட்டைகளும், திரளான இறகுகளும் உள்ளது. ஆனால் பாபிலோன் தேசத்து ராஜாவாகிய கழுகிடம் இருப்பதுபோல, நீளமான இறகுகள் இல்லை. பாபிலோன் தேசம் நீளமாக விரிந்து பரவியிருந்தது. எகிப்து தேசம், பாபிலோனைப்போல பரப்பளவில் நீளமாகயில்லை.

இரண்டு கழுகுகளிடத்திலும் பெரிய செட்டைகள் இருக்கிறது. பாபிலோன் என்னும் கழுகினிடத்தில் நீளமான இறகுகளும், எகிப்து என்னும் கழுகினிடத்தில் திரளான இறகுகளும் உள்ளன. எகிப்து தேசத்திலே ஏராளமான செல்வங்களும், ஐசுவரியங்களும் பொக்கிஷங்களும் உள்ளன. எகிப்து தேசத்து சேனையிலே ஏராளமான யுத்தவீரர்கள் இருக்கிறார்கள்.

சிதேக்கியா எகிப்து ராஜாவோடு உடன்படிக்கை பண்ணுகிறான். எகிப்தின் ராஜாவும் சிதேக்கியாவை விடுதலை பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறான். பாபிலோன் தேசத்தார் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ண வந்தால், எகிப்தின் ராஜா யூதாவை பாதுகாக்க வருவதாகவும் சொல்லுகிறான். இந்த உடன்படிக்கையின்படி, சிதேக்கியா எகிப்து தேசத்திற்கு கப்பம் கட்டுகிறான்.

"தண்ணீர் ஓரத்திலே நடப்பட்ட திராட்சச்செடி, தன் நடவாகிய பாத்திகளிலிருந்து, எகிப்திற்கு நேராக தன் வேர்களைவிட்டு தன் கொடிகளை அதற்கு நேராக வீசுகிறது" (எசே 17:7).

ஆரம்பத்தில், சிதேக்கியா ராஜா, ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாக, எகிப்தின் ராஜாவோடு உடன்படிக்கைபண்ணியிருந்தான். வேர் வெளியே தெரியாமல் பூமிக்குள்ளேயே வளர்வதுபோல, அவன் எகிப்து தேசத்தின்மீது இரகசிய சிநேகம் காண்பித்தான்.

அதன் பின்போ, எல்லோருக்கும் தெரியும் வண்ணமாக, சிதேக்கியா பாபிலோன் ராஜாவின்மீது உடன்படிக்கை பண்ணி, அவனோடு வெளிப்படையாகவே சிநேகமாயிருந்தான். எசேக்கியேல் தன்னுடைய கொடிகளை எல்லோருடைய கொடிகளுக்கு முன்பாக எகிப்து தேசத்தின்மீது வீசிய திராட்சச்செடி போல இருக்கிறான்.

சிதேக்கியா எகிப்தின் ராஜாவை சிநேகிக்கிறான். அவனோடு உடன்படிக்கை பண்ண ஆசையாயிருக்கிறான். சிதேக்கியா மிகுந்த தண்ணீர் ஓரமாய் நடப்பட்டிருந்தாலும், தனக்கு எகிப்திலிருந்து தண்ணீர் பாய்ச்சவேண்டும் என்று விரும்புகிறான். அவன் நாட்டப்பட்ட இடத்திலேயே அவனுக்கு தண்ணீர் இருக்கிறது. அவனுக்கு தண்ணீர் தேவையில்லை. ஆனாலும் அவன் எகிப்தின் தண்ணீரை நாடிப்போகிறான்.

கர்த்தர் இந்த உவமையை இவ்வாறு விவரிக்கிறார். சிதேக்கியா பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக கலகம் செய்தான் என்றும், தனக்கு குதிரைகளையும் அநேகம் ஆட்களையும் அனுப்பவேண்டும் என்று தன்னுடைய ஸ்தானாபதிகளை எகிப்திற்கு அனுப்பினான் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தன்னுடைய இராணுவபலம் அதிகரித்தால், தன்னால் பாபிலோன் ராஜாவுக்கு எதிர்த்து யுத்தம்பண்ண முடியும் என்று சிதேக்கியா நம்புகிறான். "இப்படிப்பட்டவனுக்கு வாய்க்குமோ? இப்படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ? உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ?" (எசே 17:15) என்று கர்த்தர் கேட்கிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு சிதேக்கியாவின்மீது வருகிறது. அவன் பாபிலோன் ராஜாவோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறிப்போட்டதினிமித்தமாக, சிதேக்கியாவுக்கு அழிவு வரும். அவனோடு யூதாதேசமும் அழிந்துபோகும். கர்த்தர் சிதேக்கியாவின் அழிவையும் ஒரு உவமையினால் சொல்லுகிறார்.

"இது செழிக்குமா? இது பட்டுப்போகத்தக்கதாய் ஒருவன் இதின் வேர்களைப் பிடுங்காமலும், இதின் கனியை வெட்டாமலும் இருப்பானோ? துளிர்த்த எல்லா இலைகளோடும் இது பட்டுப் போகும்; இதை வேரோடே பிடுங்கும்படி ஒருவன் பலத்த புயத்தோடும் திரண்ட ஜனத்தோடும் வரத்தேவையில்லை" (எசே 17:9).

"அதினிமித்தம் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அவன் என் ஆணையை அசட்டைபண்ணினதையும், என் உடன்படிக்கையை முறித்துப்போட்டதையும், நான் அவனுடைய தலையின்மேல் வரப்பண்ணுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எசே 17:19).

யூதாதேசம் வேரோடு பிடுங்கப்படும். யூதாதேசத்தின் வேர்களெல்லாம் பிடுங்கப்படும். அது துளிர்த்த இலைகளோடு பட்டுப்போகும். யூதாதேசத்திலுள்ள கனிகளெல்லாம் வெட்டப்படும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாதேசத்தின்மீது வருகிறது. சிதேக்கியா ராஜா நேபுகாத்நேச்சாரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்துப்போட்டதினால், யூதாதேசம் முற்றிலுமாய் அழிந்துபோகும்.

சிதேக்கியா ராஜா நேபுகாத்நேச்சாரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை முறித்துப்போட்டாலும், அவனுடைய ஆணையை அசட்டைபண்ணினாலும், சிதேக்கியா தமக்கு விரோதமாக பாவம் செய்ததாக கர்த்தர் சொல்லுகிறார். அவன் தம்முடைய ஆணையை அசட்டைபண்ணினான் என்றும், தம்முடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டான் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். சிதேக்கியா கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணியதினால், கர்த்தருடைய கோபமும், நியாயத்தீர்ப்பும் அவன்மீது வரும்.

சிதேக்கியா ராஜாவுடைய துரோகத்தினிமித்தமாகவும், கலகத்தினிமித்தமாகவும் கர்த்தர் அவன்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, அந்த வார்த்தைகளை தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறார்.

"தன்னை ராஜாவாக ஏற்படுத்திய ராஜாவினுடைய ஆணையை அசட்டைபண்ணி, அவனுடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டவன், அந்த ராஜாவினுடைய ஸ்தானமாகிய பாபிலோன் நடுவிலே அவனண்டையில் இருந்து மரணமடைவானென்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே 17:16).

சிதேக்கியா மரணமடைவான் என்று ஜீவனுள்ள கர்த்தர் சொல்லுகிறார். சிதேக்கியாவின் பாவத்தினிமித்தமாய் அவன்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. தனக்கு உதவிசெய்த நேபுகாத்நேச்சாருக்கு அவன் நன்றியுள்ளவனாகயில்லை.

நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை ராஜாவாக்கினான். நேபுகாத்நேச்சார் நினைத்திருந்தால், யோயாக்கீனோடு, சிதேக்கியாவையும் சிறைப்பிடித்து, பாபிலோன் தேசத்திற்கு கொண்டுபோயிருக்கலாம்.

ஆனால் நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை சிறைப்பிடிக்காமல், அவனுக்கு இரக்கம் காண்பித்தான். அவனை உயர்த்தினான். அவனோடு உடன்படிக்கை பண்ணினான். சிதேக்கியாவோ ஆணையையும் உடன்படிக்கையையும் முறித்துப்போட்டான்.

கர்த்தர் சிதேக்கியாவைப்பற்றிச் சொல்லும்போது, "இப்படிப்பட்டவனுக்கு வாய்க்குமோ? இப்படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ? உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ?" (எசே 17:15) என்றும்,

"தன்னை ராஜாவாக ஏற்படுத்திய ராஜாவினுடைய ஆணையை அசட்டைபண்ணி, அவனுடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டவன், அந்த ராஜாவினுடைய ஸ்தானமாகிய பாபிலோன் நடுவிலே அவனண்டையில் இருந்து மரணமடைவான்" (எசே 17:16) என்றும்,

"இதோ, இவன் கையடித்துக் கொடுத்திருந்தும் உடன்படிக்கையை முறித்துப் போட்டு, ஆணையை அசட்டைபண்ணினான்; இப்படியெல்லாம் செய்தவன் தப்புவதில்லை" (எசே 17:18) என்றும்,

"என் உடன்படிக்கையை முறித்துப்போட்டதையும், நான் அவனுடைய தலையின்மேல் வரப்பண்ணுவேன்" (எசே 17:19) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

சிதேக்கியா பாபிலோன் ராஜாவோடு செய்து கொண்ட ஆணை பரிசுத்தமானது. அந்த ஆணைக்கும் உடன்படிக்கைக்கும் சிதேக்கியாவும் கீழ்ப்படியவேண்டும், நேபுகாத்நேச்சாரும் கீழ்ப்படியவேண்டும். சிதேக்கியா தான் கையடித்து கொடுத்திருந்தும், உடன்படிக்கையை முறித்துப்போட்டான்.

"கையடித்து கொடுப்பது" என்பது, இரண்டு சிநேகிதர்கள் தங்களுடைய சிநேகத்தை உறுதிபண்ணிக்கொள்வதற்கு சமமானது. அவர்களுடைய இருதயங்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக, அவர்கள் தங்களுடைய கைககளை இணைத்துக்கொள்கிறார்கள்.

சிதேக்கியா பாபிலோன் ராஜாவோடு உடன்படிக்கையை முறித்துப்போட்டாலும், அவன் தம்முடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டான் என்று கர்த்தர் சொல்லுகிறார். ராஜாவோடு செய்து கொள்ளும் உடன்படிக்கை, கர்த்தரோடு செய்து கொள்ளும் உடன்படிக்கைக்கு சமமானது.

"ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட என்று நான் உனக்கு எச்சரிக்கிறேன்; நீ தேவனுக்கு இட்ட ஆணையின்படியே இதைச் செய்" (பிர 8:2).

சிதேக்கியா கர்த்தருடைய ஆணையை அசட்டைபண்ணியதினாலும் அவன் கர்த்தருடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டதினாலும், கர்த்தர் அவனுடைய தலையின்மேல் தீங்கை வரப்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய வலையை சிதேக்கியாவின் மேல் வீசுகிறார். சிதேக்கியா கர்த்தருடைய கண்ணியில் அகப்படுவான். கர்த்தர் அவனை பாபிலோனுக்கு கொண்டுபோவார்.

சிதேக்கியா நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினாலும், அவன் தமக்கு விரோதமாக துரோகம்பண்ணுகிறான் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த துரோகத்தினிமித்தம், கர்த்தர் எசேக்கியாவை நியாயம் விசாரிப்பதாகவும் சொல்லுகிறார் (எசே 17:20).

நேபுகாத்நேச்சார் விக்கிரகங்களை ஆராதிக்கிறவனாகயிருந்தாலும், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரோ, சிதேக்கியாவை நியாயம் விசாரிக்கிறார். சிதேக்கியா கர்த்தரை ஆராதிக்கிறவன் நேபுகாத்நேச்சார் விக்கிரகாராதனைக்காரன். கர்த்தருடைய பிள்ளைகள் யாருக்கும் துரோகம்பண்ணக்கூடாது. சத்தியம் எல்லோருக்கும் பொதுவானது.

எசேக்கியா ராஜா கர்த்தரை ஆராதித்தாலும், அவன் செய்த துரோகத்தினிமித்தமாய், அவனும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கவில்லை. கர்த்தருடைய ஆணையை அசட்டைபண்ணியவனும், கர்த்தருடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டவனும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கமாட்டான்.

சிதேக்கியா ராஜாவின் பாவத்தினிமித்தமாய் அவன்மீது தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு வருகிறது. சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான். தன்னை ராஜாவாக ஏற்படுத்திய பாபிலோன் ராஜாவுடைய ஆணையை அசட்டைபண்ணினான். சிதேக்கியா நேபுகாத்நேச்சாருடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டான். சிதேக்கியா பாபிலோனுக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் துரோகம்பண்ணினான்.

சிதேக்கியாவுக்கு பாபிலோன் ராஜாவின் ஸ்தானமாகிய பாபிலோன் தேசத்திலேயே தண்டனை கொடுக்கப்படுகிறது. அவன் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருப்பான். அவன் பாபிலோன் நடுவிலே, பாபிலோன் ராஜாவின் அருகாமையில், தன் ஆயுசுகாலம் வரையிலும் சிறையிருப்பிலிருப்பான். பாபிலோன் சிறையிருப்பிலேயே மரணமடைவான்.

சிதேக்கியா ராஜாவை நியாயம் விசாரிப்பதற்கு, கர்த்தர் பாபிலோன் ராஜாவுக்கு உதவிசெய்கிறார். கர்த்தர் தம்முடைய வலையை சிதேக்கியாவின்மீது வீசுவார் (எசே 17:20). எகிப்தின் ராஜாவால் சிதேக்கியாவுக்கு உதவிசெய்ய முடியாது.

பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைபோட்டான். சிதேக்கியா எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய உதவியை நாடினான். பார்வோனும் பெரிய சேனையோடும், திரளான கூட்டத்தோடும் சிதேக்கியாவுக்கு உதவி செய்ய வருவான். ஆனாலும் பார்வோனால், சிதேக்கியாவுக்காக யுத்தத்திலே உதவிசெய்யமுடியாது.

எகிப்தியரின் சேனை சிதேக்கியாவுக்கு உதவிசெய்ய வருவதை கல்தேயர்கள் கேள்விப்படுகிறார்கள். கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிடுவதை நிறுத்திவிட்டு தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போய்விடுகிறார்கள். கல்தேயர்கள் போனபின்பு எகிப்தியரும் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போய்விடுகிறார்கள்.

கல்தேயர்கள் தங்கள் தேசத்திற்கு விரோதமாக மறுபடியும் வரமாட்டார்கள் என்று சிதேக்கியா நினைத்தான். ஆனால் கல்தேயர்களோ மறுபடியுமாய் எருசலேமுக்கு விரோதமாய் வருகிறார்கள். கல்தேயர்கள் எருசலேமை மறுபடியும் முற்றிக்கையிட்டு நரகத்தைப் பிடிக்கிறார்கள்.

சிதேக்கியாவின் அரண்மனையில் அவனுடைய இராணுவீரர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பலசாலிகளல்ல. தேசத்திலே பிரதானமானவர்களையும், பலசாலிகளையும் நேபுகாத்நேச்சார் தன்னுடைய தேசத்திற்கு ஏற்கெனவே சிறைப்பிடித்து கொண்டுபோய்விட்டான். இப்போது சிதேக்கியாவோடு கூடயிருக்கிறவர்கள் கோழைகள். இவர்கள் கல்தேயரைப் பார்த்து பயந்து ஓடுவார்கள். சிதேக்கியா ராஜாவோடு கூட ஓடிப்போகிற யாவரும், அவனுடைய எல்லா இராணுவங்களும், கல்தேயரின் பட்டயத்தால் விழுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே 17:25).

கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். நகரத்தில் திறப்பு உண்டாயிற்று. சிதேக்கியா ராஜாவும், அவனுடைய இராணுவ வீரர்களும் தோட்டத்தின் வழியாக தப்பி ஓடுகிறார்கள்.

"நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது; அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையில், யுத்தமனுஷர் எல்லாரும் இராத்திரிகாலத்தில் ஓடி, ராஜாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கும் நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டு, வயல் வெளியின் வழியே போய்விட்டார்கள்" (எரே 52:7).

செருபாபேல்
எசே 17:22-24

எசே 17:22. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளைகளில் ஒன்றை எடுத்து, அதை நடுவேன்; அதின் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிற ஒன்றைக் கொய்து, அதை உயரமும் உன்னதமுமான ஒரு பர்வதத்தின் மேல் நாட்டுவேன்.

எசே 17:23. இஸ்ரவேலின் உயரமான பர்வதத்திலே அதை நாட்டுவேன்; அது கொப்புகளை விட்டு, கனிதந்து, மகிமையான கேதுருவாகும்; அதின் கீழே சகலவித பட்சிஜாதிகளும் தங்கி, அதின் கிளைகளின் நிழலிலே தாபரிக்கும்.

எசே 17:24. அப்படியே கர்த்தராகிய நான் உயர்ந்த விருட்சத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த விருட்சத்தை உயர்த்தினேன் என்றும், நான் பச்சையான விருட்சத்தைப் பட்டுப்போகப்பண்ணி, பட்டுப் போன விருட்சத்தைத் தழைக்கப்பண்ணினேன் என்றும் வெளியின் விருட்சங்களுக்கு எல்லாம் தெரியவரும்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதை நிறைவேற்றினேன் என்று உரைத்தார் என்று சொல் என்றார்.

மனுஷனுடைய அவிசுவாசம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை அவமாக்காது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. சிதேக்கியா ராஜா கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினாலும், கர்த்தர் தம்முடைய நீதியினால் அவனைத் தண்டித்தாலும், கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தை, தமக்கு பிரியமான மற்றொருவர் மூலமாய் நிறைவேற்றுவார்.

தாவீதின் குடும்பத்திலே சிதேக்கியா பிரயோஜனமற்றவனாயிருப்பானானாலும், தாவீதின் வம்சத்தில் கர்த்தர் மற்றொரு விதையைத் தெரிந்தெடுப்பார். கர்த்தர் தம்முடைய சித்தத்ததை நிச்சயமாய் நிறைவேற்றுவார்.

தாவீதின் வம்சத்தார் மறுபடியும் உயர்த்தப்படுவார்கள். தாவீதின் வம்சத்திலுள்ளவர்கள் அழிந்து போயிருந்தாலும், கர்த்தர் அந்த அழிவிலிருந்து ஒருவனைத் தெரிந்தெடுப்பார். அவனை உயர்த்துவார். கர்த்தர் தம்முடைய சித்தத்தை ஒரு விடுகதையின் மூலமாக சொல்லுகிறார்.

"நான் உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளைகளில் ஒன்றை எடுத்து, அதை நடுவேன்; அதின் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிற ஒன்றைக் கொய்து, அதை உயரமும் உன்னதமுமான ஒரு பர்வதத்தின் மேல் நாட்டுவேன். இஸ்ரவேலின் உயரமான பர்வதத்திலே அதை நாட்டுவேன்; அது கொப்புகளை விட்டு, கனிதந்து, மகிமையான கேதுருவாகும்; அதின் கீழே சகலவித பட்சிஜாதிகளும் தங்கி, அதின் கிளைகளின் நிழலிலே தாபரிக்கும்" (எசே 17:22,23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதி செருபாபேல் மூலமாய் நிறைவேறிற்று. செருபாபேல் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவன். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, கோரேசு ராஜா அவர்களை விடுதலைபண்ணினான். செருபாபேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட யூதர்களில் அநேகரை, யூதாதேசத்திற்கு திரும்பவும் அழைத்து வந்தான். செருபாபேல் எருசலேம் நகரத்தையும், அதிலே தேவாலயத்தையும் திரும்பவும் எடுப்பித்துக் கட்டினான்.

யூதாதேசம் அழிந்துபோயிற்று. அங்கே அரண்மனையுமில்லை. ராஜாவுமில்லை. யூதர்களை ஆளுகை செய்ய தாவீதின் வம்சத்தில் ஒருவருமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், செருபாபேல் யூதாதேசத்தின் ஆளுகையை மறுபடியுமாய் ஸ்தாபித்தான். இது கர்த்தருடைய வாக்குத்தத்தம். அவருடைய வாக்குத்தத்தின் ஒரு பகுதி மாத்திரமே செருபாபேல் மூலமாய் நிறைவேறிற்று. இந்த வாக்குத்தத்தம் மேசியாவின் ராஜ்யத்தில் பூரணமாய் நிறைவேறும்.

"அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக் 1:32,33).

தாவீதின் வம்சத்தாரை மறுபடியும் கட்டியெழுப்புகிற பொறுப்பை கர்த்தர் தாமே ஏற்றுக்கொள்கிறார். நேபுகாத்நேச்சார் தாவீதின் வீட்டாரை திரும்ப ஸ்தாபிக்கிற வேலையை முயற்சி செய்து பார்த்தான். அவன் யூதாதேசத்தின் விதையில் ஒன்றை எடுத்து, அதை பயிர் நிலத்திலே போட்டான். அவன் அந்த விதையை எடுத்து மிகுந்த தண்ணீர் ஓரத்திலே பத்திரமாய் நட்டினான் (எசே 17:5). ஆனால் அவன் நட்டியது நிலைத்திருக்கவில்லை. அதின் வேர்கள் பிடுங்கப்பட்டது. அதன் கனிகள் வெட்டப்பட்டது. நேபுகாத்நேச்சார் நட்டிய செடி இலைகளோடு துளிர்த்திருந்தாலும் அது பட்டுப்போயிற்று. அந்த செடி வேரோடே பிடுங்கப்பட்டது (எசே 17:9).

தாவீதின் வம்சத்தாரை திரும்பவும் நட்டுவதற்கு கர்த்தர் நேபுகாத்நேச்சாரை அனுமதித்தார். ஆனால் அவனுடைய பிரயாசங்கள் நிறைவேறவில்லை. அவனுடைய முயற்சிகள் தோல்வியடைந்தது. இப்போது தாவீதின் வம்சத்தை திரும்பவும் கட்டியெழுப்புகிற பொறுப்பை கர்த்தரே ஏற்றுக்கொள்கிறார்.

"நான் உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளைகளில் ஒன்றை எடுத்து, அதை நடுவேன்" (எசே 17:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். "அதை உயரமும் உன்னதமுமான ஒரு பர்வதத்தின்மேல் நாட்டுவேன்" என்றும், "இஸ்ரவேலின் உயரமான பர்வதத்திலே அதை நாட்டுவேன்" (எசே 17:22,23) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் வீட்டார் இப்போது கேதுருவின் நுனிக்கிளைகளில் ஒன்றைப்போல இருக்கிறார்கள். அது இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிறது. தாவீதின் வம்சத்தாரிடத்தில் இப்போது பெலனுமில்லை. பராக்கிரமமுமில்லை. அவர்கள் கொழுந்துகளைப்போல இளசாயிருக்கிறார்கள். செருபாபேல் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிறான்.

"அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது என்றார்" (சக 4:10).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு செருபாபேல் அடையாளமாயிருக்கிறார். செருபாபேலுடைய ஆரம்பத்தின் நாள் அற்பமாயிருக்கிறது. மற்றவர்கள் செருபாபேலை அசட்டைபண்ணுகிறார்கள். செருபாபேலைப் போலவே, இயேசுகிறிஸ்துவையும், யூதர்கள் ஆரம்பத்திலே அசட்டைபண்ணினார்கள். ஆனாலும் பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக, உயர்ந்த பர்வதங்களை சமபூமியாக்குகிறார். தடைகளை நீக்கிப்போடுகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளையாகயிருக்கிறார். கேதுரு மரத்தின் வேர் பூமிக்குள்ளே இருக்கிறது. எல்லா கிளைகளும் அதன் வேரிலிருந்து தூரத்திலிருக்கும். நுனிக்கிளையோ, எல்லா கிளைகளைவிடவும் அதிக தூரத்திலிருக்கும்.

நுனிக்கிளை கேதுரு மரத்தின் உயரத்திலிருக்கிறது. அது தன்னுடைய வேரிலிருந்தும், பூமியிலிருந்தும் தூரத்திலிருந்தாலும், உயரத்திலுள்ள நுனிக்கிளையே பரலோகத்திற்கு சமீபமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இந்தப் பூமிக்குரியதல்ல. அது பரலோகத்திற்குரியது.

"இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" (ஏசா 53:2).

பிதாவானவர், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளைகளில் ஒன்றை எடுத்து அதை நடுவதுபோல, நடுகிறார். அதின் இளங்கிளைகளிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிற ஒன்றைக் கொய்து, அதை உயரமும் உன்னதமுமான பர்வதத்தின்மேல் நாட்டுகிறார். கிறிஸ்துவானவர் நீதியின் கிளையாகயிருக்கிறார். அவரே கர்த்தரால் நாட்டப்பட்டவராகவும் இருக்கிறார்.

கர்த்தர் இந்தக் கிளையை உயரமும் உன்னதமுமான ஒரு பர்வதத்தின்மேல் நாட்டுகிறார். இந்தப் பர்வதம் இஸ்ரவேலின் உயரமான பர்வதமாகும் (எசே 17:22,23). கர்த்தர் செருபாபேலை இந்தப் பர்வதத்திற்கு அழைத்துக்கொண்டு வருகிறார். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, இந்தப் பர்வதத்திலேயே வளர்க்கிறார்.

இஸ்ரவேலின் வீட்டாரில் காணாமல் போன ஆடுகளைப் போன்றவர்கள், இந்த மலைகளில் சிதறி ஓடிப்போனார்கள்.

பிதாவானவர் தம்முடைய ராஜாவை, உயரமும் உன்னதமுமான சீயோன் பர்வதத்திலே ராஜாவாக நியமிக்கிறார். சீயோன் மலையிலிருந்து சுவிசேஷம் புறப்பட்டுப்போகிறது. எருசலேமிலிருந்து கர்த்தருடைய வார்த்தை அறிவிக்கப்படுகிறது. யூதேயாவில் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள், ஆரம்பத்தில் கொழுந்துகளைப்போல இளசாயிருந்தது.

கர்த்தர் உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளைகளில், இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிற ஒன்றைக் கொய்து, அதை உயரமும் உன்னதமுமான ஒரு பர்வதத்தின்மேல் நாட்டுகிறார். அது கொப்புகளைவிட்டு, கனிதந்து, மகிமையான கேதுருவாகிறது.

செருபாபேலின் காலத்திலே, யூதருடைய ராஜ்யம் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் ஆரம்பம் அற்பமாயிருக்கிறது. அது கொழுந்துகளில் இளசாயிருப்பதினால், அதை யார் வேண்டுமானாலும், எளிதாக கொய்துவிடலாம்.

கர்த்தரோ தாம் நாட்டின இளங்கிளையை சுற்றிலுமாக வேலியடைத்து பாதுகாக்கிறார். சத்துருவால் அதைக் கொய்ய முடியவில்லை. கர்த்தர் நாட்டின இளங்கிளை வேர் விடுகிறது. கொப்புகளை விடுகிறது. அது கொப்புகளை விட்டு, கனிதந்து, மகிமையான கேதுருவாகிறது. அதின் கீழே சகலவித பட்சி ஜாதிகளும் தங்குகிறது. அதின் கிளைகளின் நிழலிலே எல்லா பட்சி ஜாதிகளும் வந்த தாபரிக்கிறது.

"அதின் இலைகள் நேர்த்தியும், அதின் கனி மிகுதியுமாயிருந்தது; எல்லா ஜீவனுக்கும் அதில்ஆகாரம் உண்டாயிருந்தது; அதின் கீழே வெளியின் மிருகங்கள் தங்கினது, அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்தது" (தானி 4:21).

கர்த்தரே எல்லா துதிகளுக்கும், மகிமைக்கும் பாத்திரராயிருக்கிறார். கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவருடைய தெய்வீக பாதுகாப்புக்களும், பராமரிப்புக்களும் மிகவும் உன்னதமானது. பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உயர்த்துகிறார். கர்த்தர் மனுஷர் மத்தியிலே கிறிஸ்துவின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். கர்த்தருடைய அற்புதமான கிரியைகள் வெளியின் விருட்சங்களுக்கெல்லாம் தெரியவரும்.

கர்த்தர் உயர்ந்த விருட்சத்தைத் தாழ்த்துகிறார். தாழ்ந்த விருட்சத்தை உயர்த்துகிறார். பச்சையான விருட்சத்தை பட்டுப்போகப்பண்ணுகிறார். பட்டுப்போன விருட்சத்தை தழைக்கப்பண்ணுகிறார். கர்த்தரே இதை உரைக்கிறார். அவரே இதை நிறைவேற்றுகிறார். இவையெல்லாமே கர்த்தருடைய கிரியை என்பது வெளியின் விருட்சங்களுக்கெல்லாம் தெரியவரும்.

நேபுகாத்நேச்சாரின் வம்சத்தார் செழித்திருக்கிறார்கள். மற்ற ஜாதியார் மத்தியில் அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள். கர்த்தரே பாபிலோன் தேசத்தாரை உயர்த்தினார். கர்த்தருக்கு சித்தமான காலம் வரையிலும் அவர்கள் உயர்ந்திருந்தார்கள். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றி முடித்த பின்பு, அவர் நேபுகாத்நேச்சாரைத் தாழ்த்துகிறார்.

நேபுகாத்நேச்சாரின் குடும்பத்தார் உயர்ந்திருக்கும்போது, தாவீதின் குடும்பத்தார் தாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் பட்டுப்போன விருட்சத்தைப்போல இருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களை மறுபடியுமாய் உயர்த்துகிறார். பட்டுப்போன அவர்களை மறுபடியும் தழைக்கப்பண்ணுகிறார்.

எசேக்கியேல் - விரிவுரை

EZEKIEL - COMMENTARY

கிறிஸ்துவின் ராஜ்யம் நிலைத்திருக்கும். அது உயர்ந்திருக்கும். அது செழிப்பாயிருக்கும். சாத்தானுடைய ராஜ்யமோ தாழ்ந்துபோகும். அது பட்டுப்போகும். பிசாசின் ராஜ்யம் உடைந்துபோகும். அதை திரும்பவும் ஒட்டவைக்க முடியாத அளவுக்கு அது உடைந்து கிடக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகள் செழித்திருப்பார்கள். நீதிமான்கள் கீழே விழுந்தாலும், கர்த்தர் அவர்களை மறுபடியும் எழுந்திருக்கச் செய்வார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் உலர்ந்த எலும்புகளைப்போல ஜீவனில்லாமலிருந்தாலும், கர்த்தர் அவர்களை உயிரடையச்செய்வார்.

18 அதிகாரம்

எசேக்கியேல் 18-ஆவது அதிகாரத்தில் யூதாவைப்பற்றியோ, எருசலேமைப்பற்றியோ விசேஷமாக எதுவும் சொல்லப்படவில்லை. இந்த அதிகாரம் நம் எல்லோருக்கும் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் மனுபுத்திரரை எந்தப் பிரமாணத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கிறார் என்பது பற்றி இந்த அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தரை விட்டு பின்மாறிப்போன யூதர்கள், தங்களுக்கு சாதகமாக ஒரு பழமொழியைச் சொல்லுகிறார்கள். இந்தப் பழமொழி தப்பிதமானது. கர்த்தர் இந்தப் பழமொழியை ஆதாரமாக வைத்து, எசேக்கியேல் மூலமாக, யூதர்களுக்கு தம்முடைய செய்தியைச் சொல்லுகிறார் (எசே 18:1-3).

கர்த்தர் சர்வஅதிகாரமும், சர்வஆளுகையுமுள்ளவர். அவர் தம்முடைய நீதியின் பிரகாரம் மனுபுத்திரரை நியாயம் விசாரிக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கும், மனுஷருடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கும், மனுஷர் பயன்படுத்துகிற பழமொழிகளுக்கும் சம்பந்தம் எதுவுமில்லை (எசே 18:4).

நீதிமான்கள் செழித்திருப்பார்கள் (எசே 18:5-9). துன்மார்க்கனுடைய தகப்பன் நீதிமானாயிருந்தாலும், துன்மார்க்கமான மகனை கர்த்தர் தண்டிப்பார் (எசே 18:10-13). தகப்பன் துன்மார்க்கனாயிருந்தாலும், அவனுடைய மகன் நீதிமானாயிருக்கும்போது, கர்த்தர் நீதிமானான மகனைத் தண்டிக்கமாட்டார் (எசே 18:14-18).

கர்த்தர் நீதியுள்ளவர் (எசே 18:19,20). ஒருவன் துன்மார்க்கனாயிருந்து, அவன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தர் அவனுடைய பாவங்களை மன்னிப்பார் (எசே 18:21-23,27,28). ஒருவன் ஆரம்பகாலத்தில் நீதிமானாயிருந்து, அதன் பின்பு பின்மாறிப்போய், துன்மார்க்கனாய் மாறிவிட்டால், கர்த்தர் அவனைத் தண்டிப்பார் (எசே 18:24,26).

பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்
எசே 18:1-9

எசே 18:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர்:

எசே 18:2. பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துச் சொல்லுகிறது என்ன?

எசே 18:3. இனி இஸ்ரவேலில் இந்தப் பழமொழியைச் சொல்வது இல்லை என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 18:4. இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.

எசே 18:5. ஒருவன் நீதிமானாயிருந்து, நியாயத்தையும் நீதியையும் செய்து,

எசே 18:6. மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும் தூர ஸ்திரீயோடே சேராமலும்,

எசே 18:7. ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலுமிருந்து, கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக் கொடுத்து, தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து,

எசே 18:8. வட்டிக்குக் கொடாமலும், பொலிசைவாங்காமலும், அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து,

எசே 18:9. என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

யூதர்கள் மத்தியிலே, "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயின" (எசே 18:2) என்னும் பழமொழி வழக்கத்திலுள்ளது. இந்தப் பழமொழியில் உண்மையில்லை. கர்த்தர் இந்தப் பழமொழியை பயன்படுத்தி, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய செய்தியைச் சொல்லுகிறார். பழமொழி தப்பிதமாயிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தை சத்தியமானதாயிருக்கிறது.

யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சிறையிருப்பைப் பற்றிப் பேசிக்கொள்ளும்போதும், எருசலேம் நகரம் அழிந்துபோனதைப்பற்றி வேதனைப்படும்போதும், இந்தப் பழமொழியை தங்களுக்குள் சொல்லிக்கொள்வது வழக்கம். தங்களுடைய முன்னோர்களின் பாவத்தினால், தாங்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருப்பதாகவும், தங்களுடைய எருசலேம் நகரம் அழிந்துபோனதாகவும், சிறையிருப்பிலுள்ள யூதர்கள் சொல்லுகிறார்கள்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், இந்தப் பழமொழியின் மூலமாக, கர்த்தர் மீது குற்றம் சொல்லுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு அநீதி செய்துவிட்டதாக விவாதம்பண்ணுகிறார்கள். அவர்கள் இந்தப் பழமொழியை இஸ்ரவேல் தேசத்தைக் குறித்து சொல்லுகிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பினால், இஸ்ரவேல் தேசம் அழிந்துபோயிற்று என்பது இவர்களுடைய விவாதம்.

"பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயின" (எசே 18:2). தங்களுடைய முன்னோர்களின் பாவங்களினிமித்தமாக, கர்த்தர் தங்களை இதுபோல தண்டித்திருக்கிறார் என்று பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்கள் சொல்லுகிறார்கள். திராட்சக்காய்களை தாங்கள் தின்னவில்லை என்றும், தங்களுடைய பிதாக்களே அவற்றை தின்றார்கள் என்றும், ஆனாலும் தங்களுடைய பற்கள் கூசிப்போனதாகவும் இவர்கள் விவாதம்பண்ணுகிறார்கள். தங்களுடைய பெற்றோர் செய்த தப்பிதங்களுக்காக, தாங்கள் வேதனைகளை அனுபவிப்பதாக சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பூர்வகாலங்களில், விக்கிரகாராதனை செய்தார்கள். அப்போது அவர்களுடைய பிதாக்களின் அக்கிரமங்களை, அவர்களுடைய பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் விசாரிப்பதாக கர்த்தர் சொன்னார். விக்கிரகாராதனையின் கொடுமையையும், அதன் உக்கிரத்தையும் விளக்கும் வண்ணமாக கர்த்தர் பெற்றோரையும் பிள்ளைகளையும் சேர்த்து பல சமயங்களில் சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் யூதாசேத்தின் அழிவையும், எருசலேமின் அழிவையும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். மனாசேயின் பாவங்களினிமித்தமாகவும், அவனுக்கு முந்தி யூதாதேசத்தை ஆட்சி செய்த துன்மார்க்கமான ராஜாக்கள் நிமித்தமாகவும், கர்த்தர் இந்த தண்டனையை யூதாவுக்கும், எருசலேமுக்கும் கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்.

சிறையிருப்பிலுள்ள யூதர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை தப்பிதமாக புரிந்துகொள்கிறார்கள். பெற்றோரின் பாவங்களுக்காக, பிள்ளைகளைத் தண்டிப்பது கர்த்தருடைய சுபாவம் என்று நினைக்கிறார்கள்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்கள், மெய்யாகவே புளிப்பான திராட்சக்காய்களைத் தின்கிறார்கள். அவர்களுடைய பற்கள் மெய்யாகவே கூசிப்போகும். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தும்போது, அவர்களுடைய சந்தோஷமும், சமாதானமும் அவர்களைவிட்டு நீங்கிப்போகும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்களோ, கர்த்தர் தங்களைத் தண்டித்து அநீதி செய்துவிட்டார் என்று சொல்லுகிறார்கள். தங்களுடைய பெற்றோரின் மதியீனத்திற்காகவும், அவர்களுடைய பாவங்களுக்காகவும், தாங்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பில், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்து வேதனைப்படுவதாக அழுது புலம்புகிறார்கள். தங்களுக்கு இதுபோன்ற வேதனை இதற்கு முன்பு வந்ததில்லை என்றும், இந்த வேதனைகளை அனுபவிப்பதற்கு தாங்கள் ஒரு பாவமும் செய்யவில்லை என்றும் சிறையிருப்பிலுள்ள யூதர்கள் கர்த்தரிடத்தில் விவாதம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியின் பிரகாரம் தண்டிக்கவேண்டுமென்றால், அவர் பாவம் செய்யாத தங்களைத் தண்டிக்கக்கூடாது என்றும், பாவம் செய்த தங்களுடைய பெற்றோரைத் தண்டிக்கவேண்டும் என்றும் சிறையிருப்பிலுள்ள யூதர்கள் விவாதம்பண்ணுகிறார்கள்.

யூதர்கள் மத்தியில் பொதுவாக வழங்கப்படும் இந்தப் பழமொழிக்கு கர்த்தர் பிரதியுத்தரம் சொல்லுகிறார். சிறையிருப்பிலுள்ள யூதர்கள் தங்களுடைய மனச்சாட்சியின் சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களை ஆராய்ந்து பார்த்தால், அவர்களுடைய பெற்றோர்களைப் போலவே, அவர்களும் பாவம் செய்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வார்கள்.

அவர்களுடைய பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றதுபோல, இவர்களும் திராட்சக்காய்களைத் தின்றார்கள். இதன் நிமித்தமாகவே இவர்களுடைய பற்கள் கூசிப்போயிற்று. கர்த்தர் பெற்றோரின் பாவங்களுக்காக, அவர்களுடைய பிள்ளைகளைத் தண்டிக்கமாட்டார்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பாவமான அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் போனால், பிள்ளைகளுக்கும் தண்டனை கிடைக்கும். "நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள்" (மத் 23:32).

சில சமயங்களில் பெற்றோருடைய பாவங்களினிமித்தமாக, அவர்களுடைய பிள்ளைகள் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். ஆனால் இந்த கஷ்டம் நிலைத்திருக்காது. கர்த்தர் இந்த தீமைகளை அவர்களுக்கு நன்மையாக மாற்றுவார். பெற்றோரின் பாவங்களுக்காக, அவர்களுடைய பிள்ளைகள் தண்டனைகளை அனுபவிக்கவேண்டிய அவசியம் எதுவுமில்லை. பெற்றோர் பாவம் செய்தால் அவர்களுக்கு ஆவிக்குரிய மரணமுண்டாகும். அவர்களுடைய பிள்ளைகள் பாவம் செய்யாமல், நீதி செய்தால், அவர்களுக்கு ஆவிக்குரிய மரணமுண்டாகாது. நீதி செய்கிற பிள்ளைகள் ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள்.

யூதர்கள் மத்தியில் வழங்கப்படும் பழமொழியைப்பற்றி கர்த்தர் சொல்லும்போது, "இனி இஸ்ரவேலில் இந்தப் பழமொழியை சொல்வதில்லை" (எசே 18:3) என்று தம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார். மேலும் "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே 18:4) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவரே சர்வத்தையும் உண்டாக்கினவர். அவர் ஆவிகளின் பிதாவாகயிருக்கிறார். கர்த்தர் மனுபுத்திரரை தம்முடைய சாயலாக சிருஷ்டித்திருக்கிறார். மனுபுத்திரருடைய ஆத்துமாக்களில் கர்த்தர் தம்முடைய சாயலை முத்திரையாகப் பதித்திருக்கிறார். ஆகையினால்தான் கர்த்தர், "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்" (எசே 18:4) என்று தெளிவாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் மனுஷருக்குள்ளே ஆவியை ஊற்றியிருக்கிறார். பிதாக்களுக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் சுமுகமான நல்ல உறவை கர்த்தரே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரையும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளையும் நன்றாய்க் கவனித்துக்கொள்ளவேண்டும் என்பதும், ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து நன்மை செய்யவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தம். பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் சண்டை போடவேண்டும் என்பதோ, ஒருவருக்கொருவர் விரோதமாயிருக்கவேண்டும் என்பதோ, ஒருவருக்கொருவர் தீங்கு செய்யவேண்டும் என்பதோ கர்த்தருடைய விருப்பமல்ல.

எல்லா ஆத்துமாக்களும் கர்த்தருடையவைகள். பெற்றோரின் ஆத்துமா கர்த்தருடையதாயிருப்பதுபோல, அவர்களுடைய பிள்ளைகளின் ஆத்துமாவும் கர்த்தருடையதாயிருக்கிறது. கர்த்தர் எல்லா ஆத்துமாக்களின்மீதும் பிரியமாயிருக்கிறார். மனுஷர் தங்களுடைய பாவங்களினாலேயே, தங்களுடைய ஆத்துமாவுக்கு அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். யார் பாவம் செய்கிறார்களோ, அவர்களுக்கு ஆவிக்குரிய மரணமுண்டாகும். ஆத்துமாவே பாவம் செய்கிறது ஆகையினால் பாவத்திற்கான தண்டனை ஆத்துமாவிற்கே பிரதானமாய் கிடைக்கிறது. ஆத்துமா தண்டனையை அனுபவிக்கும்போது, அதன் சரீரமும் வேதனையை அனுபவிக்கிறது.

"முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்குசெய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்" *(ரோம 2:9).*

ஒருவன் நீதிமானாயிருந்து, நியாயத்தையும் நீதியையும் செய்வானானால் அவனே நீதிமான் என்றும், அவன் பிழைக்கவே பிழைப்பான் என்றும் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் *(எசே 18:5,9).*

நீதிமான் பாவங்களுக்கு விலகி ஜீவிப்பான். தன்னுடைய ஆத்துமாவை பரிசுத்தமாய்க் காத்துக்கொள்வான். நீதிமான் விக்கிரகங்களை ஆராதிக்கமாட்டான். அவன் மலைகளின்மேலும், தோப்புகளின் மேலும் விக்கிரகங்களுக்கு படைத்ததை சாப்பிடமாட்டான். நீதிமான் நரகலான விக்கிரகங்களுக்கு நேராக தன் கண்களை ஏறெடுக்கமாட்டான்.

"அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக் கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே" *(1கொரி 10:20,21).*

நீதிமான்கள் அயலானுடைய மனைவியை தீட்டுப்படுத்தமாட்டார்கள், தூரஸ்திரீயோடே சேரவும் மாட்டார்கள். நீதிமான்கள் ஒருவனையும் ஒடுக்கமாட்டார்கள். பிறரைக் கொள்ளையிட மாட்டார்கள். கடன்வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக்கொடுப்பார்கள். தன் அப்பத்தை பசித்தவனுக்கு பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பிப்பார்கள்.

நீதிமான்கள் வட்டிக்கு கடன்கொடுக்கமாட்டார்கள். பொலிசை வாங்கமாட்டார்கள். தங்கள் கைகளை அநியாயத்திற்கு விலக்குவார்கள். மனிதருக்குள்ளே வழக்கை உண்மையாய்த் தீர்ப்பார்கள். நீதிமான்கள் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய நியாயங்களைக் கைக்கொண்டு உண்மையாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களே நீதிமான்கள். இவர்கள் பிழைக்கவே பிழைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நீதிமானுடைய நீதி
எசே 18:10-20

எசே 18:10. ஆனாலும் அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் கள்ளனும் இரத்தஞ்சிந்துகிறவனும், மேற்சொல்லிய கடமைகளின்படி நடவாமல்,

எசே 18:11. இவைகளில் ஒன்றுக்கொப்பானதைச் செய்கிறவனுமாயிருந்து, மலைகளின் மேல் சாப்பிட்டு, தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தி,

எசே 18:12. சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி, கொள்ளைக்காரனாயிருந்து, அடைமானத்தைத் திரும்பக் கொடாமல், நரகலான விக்கிரகங்களுக்கு நேராக தன் கண்களை ஏறெடுத்து, அருவருப்பானதைச் செய்து,

எசே 18:13. வட்டிக்குக் கொடுத்து, பொலிசை வாங்கினால், அவன் பிழைப்பானோ? அவன் பிழைப்பதில்லை; இந்த எல்லா அருவருப்புகளையும் செய்தானே; அவன் சாகவேசாவான்; அவன் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்.

எசே 18:14. பின்னும், இதோ, அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் தன் தகப்பன் செய்த எல்லாப் பாவங்களையும் கண்டு, தான் அவைகளின்படி செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து,

எசே 18:15. மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும்,

எசே 18:16. ஒருவனையும் ஒடுக்காமலும், அடைமானத்தை வைத்துக் கொண்டிராமலும், கொள்ளையிடாமலும், தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரந்தரிப்பித்து,

எசே 18:17. சிறுமையானவனுக்கு நோவுண்டாக்காதபடித் தன் கையை விலக்கி, வட்டியும் பொலிசையும் வாங்காமலிருந்து என் நியாயங்களின்படி செய்து, என் கட்டளைகளில் நடந்தால், அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான்.

எசே 18:18. அவன் தகப்பனோவென்றால் கொடுமை செய்து, சகோதரனைக் கொள்ளையிட்டு, தகாததைத் தன் ஜனங்களின் நடுவிலே செய்தபடியினால், இதோ, அவன் தன் அக்கிரமத்திலே சாவான்.

எசே 18:19. இதெப்படி, குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமக்கிறதில்லையா என்று நீங்கள் கேட்டால், குமாரன் நியாயத்தையும் நீதியையும் செய்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ததினால், அவன் பிழைக்கவே பிழைப்பான்.

எசே 18:20. பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்.

கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பின் பொதுவான பிரமாணத்தை, எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாய் சொல்லுகிறார். பெற்றோரின் நீதியோ அல்லது அவர்களுடைய அக்கிரமமோ, அவர்களுடைய பிள்ளைகளை பாதிக்காது. நாம் ஒவ்வொருவரும் செய்கிற நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் ஏற்ற பிரகாரமே, கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார்.

சில சமயங்களில் பக்தியுள்ள பெற்றோருக்கு, துன்மார்க்கமான பிள்ளைகள் பிறக்கிறார்கள். அதே வேளையில் துன்மார்க்கமான பெற்றோருக்கு பக்தியுள்ள பிள்ளைகளும் பிறக்கிறார்கள். துன்மார்க்கன் தான் செய்கிற பாவங்களுக்குத் தக்கதாக தண்டிக்கப்படுவான். அவன் தன்னுடைய அக்கிரமத்தில் அழிந்துபோவான். அவன் ஒரு வேளை பக்தியுள்ள பெற்றோருக்கு மகனாக பிறந்திருந்தாலும், அவனுடைய துன்மார்க்கத்திற்கேற்ற தண்டனையை, கர்த்தர் அவனுக்கு கொடுப்பார்.

"நீதிமானுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் கள்ளனும் இரத்தஞ்சிந்துகிறவனும், மேற்சொல்லிய கடமைகளின்படி நடவாமல், இவைகளில் ஒன்றுக்கொப்பானதைச் செய்கிறவனுமாயிருந்து, மலைகளின் மேல் சாப்பிட்டு, தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தி, சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி, கொள்ளைக்காரனாயிருந்து, அடைமானத்தைத் திரும்பக் கொடாமல், நரகலான விக்கிரகங்களுக்கு நேராக தன் கண்களை ஏறெடுத்து, அருவருப்பானதைச் செய்து, வட்டிக்குக் கொடுத்து, பொலிசை வாங்கினால், அவன் பிழைப்பானோ? அவன் பிழைப்பதில்லை; இந்த எல்லா அருவருப்புகளையும் செய்தானே; அவன் சாகவேசாவான்; அவன் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்" (எசே 18:10-13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நீதிமானுடைய நீதி அவன் தலையின் மேலிருக்கும். நீதிமான் சந்தோஷமாயிருப்பான். நீதிமானுடைய பெற்றோர் துன்மார்க்கராயிருந்தாலும், அவர்கள் நிமித்தமாக நீதிமானுக்கு தண்டனை கிடைக்காது. நீதிமானுடைய பெற்றோர் புளிப்பான திராட்சக்காய்களை தின்றார்கள். அவர்களுடைய பிள்ளைகளோ அந்தக் காய்களை தின்னவில்லை. திராட்சக்காய்களைத் தின்ற பெற்றோரின் பற்கள் மாத்திரமே கூசிப்போகும். புளிப்பான திராட்சக்காய்களை தின்னாத பிள்ளைகளுடைய பற்கள் கூசிப்போகாது.

அக்கிரமம் செய்கிற பெற்றோர் தங்களுடைய பாவத்தில் அழிந்துபோவார்கள். அவர்களுடைய பாவத்திற்கு ஏற்ற தண்டனை, அவர்களுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கப்படாது.

"துன்மார்க்கனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் தன் தகப்பன் செய்த எல்லாப் பாவங்களையும் கண்டு, தான் அவைகளின்படி செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும், ஒருவனையும் ஒடுக்காமலும், அடைமானத்தை வைத்துக் கொண்டிராமலும், கொள்ளையிடாமலும், தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரந்தரிப்பித்து, சிறுமையானவனுக்கு நோவுண்டாக்காதபடித் தன் கையை விலக்கி, வட்டியும் பொலிசையும் வாங்காமலிருந்து என் நியாயங்களின்படி செய்து, என் கட்டளைகளில் நடந்தால், அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். அவன் தகப்பனோவென்றால் கொடுமைசெய்து, சகோதரனைக் கொள்ளையிட்டு, தகாததைத் தன் ஜனங்களின் நடுவிலே செய்தபடியினால், இதோ, அவன் தன் அக்கிரமத்திலே சாவான்" (எசே 18:14-18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்கள், தங்களுடைய பூர்வீக பழமொழியைத் தப்பிதமாகப் பயன்படுத்துகிறார்கள். பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றால் அவர்களுடைய பற்கள்தான் கூசிப்போகும். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போகாது. அதே வேளையில், பிள்ளைகள் திராட்சக்காய்களைத் தின்றால், அவர்களுடைய பற்கள்தான் கூசிப்போகும். அவர்களுடைய பெற்றோரின் பற்கள் கூசிப்போகாது.

இஸ்ரவேல் வம்சத்தார், "குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தை சுமக்கிறதில்லையா" என்று கேட்கிறார்கள். அவர்களுடைய கேள்விக்கு பிரதியுத்தரம் சொல்லும் வண்ணமாக, "குமாரன் நியாயத்தையும், நீதியையும் செய்து, கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ததினால், அவன் பிழைக்கவே பிழைப்பான்" (எசே 18:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், தங்களுடைய பிதாக்களின் பாவங்களினிமித்தமாக தாங்கள் இந்தத் தண்டனையை அனுபவிப்பதாகச் சொல்லுகிறார்கள். கர்த்தரோ இவர்களும் பாவம் செய்தார்கள் என்று தெளிவுபடுத்துகிறார். சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் அக்கிரமம் செய்தார்கள். விக்கிரகாராதனை செய்தார்கள். ஏழைகளை ஒடுக்கினார்கள். கர்த்தருடைய கட்டளைகளின்படி நடவாமல், அவருடைய நியாயங்களைக் கைக்கொள்ளாமல் துன்மார்க்கராய் ஜீவித்தார்கள். இதன் நிமித்தமாகவே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இவர்கள்மீது வந்திருக்கிறது. சிறையிருப்பிலிருக்கிற யூதர்களோ, தங்களுடைய பாவங்களை உணராமல், தங்களுடைய பிதாக்களுடைய பாவங்களினிமித்தமாய், தாங்கள் சிறையிருப்பிலிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

ஒருவேளை, இப்போது சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுடைய பெற்றோர்களும், அக்காலத்தில் அக்கிரமக்காரராயிருந்திருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இவர்கள் தங்கள் பெற்றோரின் பாவங்களைக் கண்டு, அவைகளின்படி செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்திருக்க வேண்டும். இவர்கள் பாவத்திற்கு விலகி ஜீவித்திருக்க வேண்டும். இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்கள், தங்கள் பெற்றோர் விக்கிரகாராதனை செய்ததுபோல, இவர்கள் விக்கிரகாராதனை செய்திருக்கக் கூடாது. ஆனால் இவர்களோ தங்கள் பெற்றோரைப்போலவே அநியாயமும், அக்கிரமமும், பாவமும் செய்தார்கள். கர்த்தர் இவர்களுடைய அக்கிரமங்களுக்கேற்ற தண்டனையைக் கொடுத்திருக்கிறார்.

"எங்கள் பிதாக்கள் பாவஞ்செய்து மாண்டுபோனார்கள்; நாங்கள் அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமக்கிறோம்" (புல 5:7).

துன்மார்க்கமான குடும்பத்தில் சாபம் தங்கியிருக்கும். நம்முடைய முன்னோர்களின் பாவங்களினிமித்தமாக, நம்முடைய குடும்பத்தில் சாபம் நிரம்பியிருக்கலாம். ஆனாலும் நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பி, நம்முடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படும்போது, நம்முடைய குடும்பத்திலுள்ள சாபங்களிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்கும்.

"பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" (எசே 18:20) என்பதே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் பிரமாணம்.

"பிள்ளைகளுக்காகப் பிதாக்களும், பிதாக்களுக்காகப் பிள்ளைகளும் கொலை செய்யப்படவேண்டாம்; அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்படவேண்டும்" (உபா 24:16).

பெற்றோரின் பாவங்களினிமித்தமாய், பிள்ளைகளுக்கு நித்திய மரணமுண்டாகாது. பெற்றோரின் பாவங்களை, பெற்றோரே சுமக்கவேண்டும். பிள்ளைகள் பெற்றோரின் பாவமான வழிகளில் போகக்கூடாது. அவர்களுடைய துன்மார்க்கமான அடிச்சுவடுகளைப் பின்பற்றவும் கூடாது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றிய சத்தியங்கள் நமக்கு இன்னும் மறைவான இரகசியமாகவே இருக்கிறது. வெளிப்படுத்தப்படாத இரகசியங்கள் கர்த்தருக்கே உரியது. நியாயத்தீர்ப்பு நாளிலே கர்த்தர் தம்முடைய நீதியை வெளிப்படுத்துவார்.

துன்மார்க்கனுடைய பாவங்கள் எசே 18:21-29

எசே 18:21. துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும் விட்டுத் திரும்பி, என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை.

எசே 18:22. அவன் செய்த எல்லா மீறுதல்களும் நினைக்கப்படுவதில்லை; அவன் தான் செய்த நீதியிலே பிழைப்பான்.

எசே 18:23. துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 18:24. நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான்.

எசே 18:25. நீங்களோ, ஆண்டவருடைய வழி செம்மையாய் இருக்கவில்லை என்கிறீர்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, கேளுங்கள்; என் வழி செம்மையாயிராதோ? உங்கள் வழிகள் அல்லவோ செம்மையல்லாததாயிருக்கிறது.

எசே 18:26. நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதிசெய்து அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான்.

எசே 18:27. துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான்.

எசே 18:28. அவன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை.

எசே 18:29. இஸ்ரவேல் வம்சத்தாரோ: ஆண்டவருடைய வழி செம்மையாய் இருக்கவில்லை என்கிறார்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, என் வழிகள் செம்மையாயிராதோ? உங்கள் வழிகள் அல்லவோ செம்மையல்லாததாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பின் பிரமாணத்தை இங்கு தொடர்ந்து விவரிக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தில் சகலமும் நீதியாயும் நியாயமாயும் இருக்கும். ஒரு மனுஷனுடைய ஜீவியத்தில் ஏற்படுகிற மாற்றத்திற்கு ஏற்ற பிரகாரம், அவனைக் குறித்த கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும் மாறும்.

கர்த்தர் துன்மார்க்கனைத் தண்டிப்பார். துன்மார்க்கன் தன் பாவங்களுக்கு மனந்திரும்பி, நீதியாய் ஜீவித்தால் கர்த்தர் அவனை தண்டிக்கமாட்டார்.

"துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும் விட்டுத் திரும்பி, என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை. அவன் செய்த எல்லா மீறுதல்களும் நினைக்கப்படுவதில்லை; அவன் தான் செய்த நீதியிலே பிழைப்பான்" (எசே 18:21,22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

துன்மார்க்கன் சாகிறது கர்த்தருக்கு பிரியமானதல்ல. துன்மார்க்கன் தன்னுடைய பாவமான வழியைவிட்டு திரும்பி பிழைக்கவேண்டும். இதுவே கர்த்தருக்கு பிரியம்.

கர்த்தர் நீதிமானைத் தண்டிக்கமாட்டார். ஆனாலும் அவன் நீதி செய்யாமல், துன்மார்க்கமான காரியங்களை செய்தால் கர்த்தர் அவனைத் தண்டிப்பார். "நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான்" (எசே 18:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆண்டவருடைய வழி செம்மையாயிருக்கிறது. ஆனால் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களோ, "ஆண்டவருடைய வழி செம்மையாயிருக்கவில்லை" (எசே 28:25) என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார். தம்முடைய வழி செம்மையாயிருக்கிறது என்றும், அவர்களுடைய வழி செம்மையாயில்லை என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதிசெய்து அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான். துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான். அவன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை" (எசே 18:26-28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

துன்மார்க்கர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தங்களுடைய எல்லா பாவங்களையும் விட்டு திரும்பி, கர்த்தருடைய நியாயத்தையும், நீதியையும் செய்யவேண்டும். அப்போது அவன் பிழைக்கவே பிழைப்பான். அவன் தன் ஆத்துமாவை பிழைக்கப்பண்ணுவான். அவன் சாவதில்லை. அவன் நித்திய மரணமடைவதில்லை. அவன் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வான்.

துன்மார்க்கன் தன் பாவத்தைக் குறித்து எச்சரிப்படையவேண்டும். ஒருவன் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டுமென்றால், முதலாவதாக அவன் தன் பாவத்தைக் குறித்து எச்சரிப்படையவேண்டும். பாவத்தைக் குறித்து எச்சரிப்படையும்போது, அவனுடைய இருதயத்தில் பாவத்தைக் குறித்து வெறுப்பு உண்டாகும். அவன் எல்லா பாவங்களையும் விட்டுத் திரும்பவேண்டும். ஒரு சில பாவங்கள் தனக்கு பிரியமானது என்று தீர்மானித்து, அந்த பாவத்தை மாத்திரம் தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளக்கூடாது. துன்மார்க்கன் தான் செய்த எல்லா பாவங்களையும் விட்டு திரும்பவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

துன்மார்க்கன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா பாவங்களையும், எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்பினால் மாத்திரம் போதாது. அவனுடைய ஆத்துமா பிழைக்கவேண்டுமென்றால், அவன் கர்த்தருடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ளவேண்டும். நியாயத்தையும் நீதியையும் செய்யவேண்டும். அப்போதுதான் அவனுடைய ஆத்துமா பிழைக்கும்.

நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், நாம் கர்த்தரிடத்திற்கு மனந்திரும்பி வரவேண்டும். அதே வேளையில் கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற நியாயத்தையும் நீதியையும் கைக்கொள்ளவேண்டும். இதுவே பூரணமான மனந்திரும்புதல். இவ்வாறு மனந்திரும்புகிறவர்கள் மாத்திரமே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள்.

ஒரு சில பாவிகள், தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்து, விநோதமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு எப்படித்தான் மனந்திரும்பினாலும், இனிமேல் பாவமே செய்யக்கூடாது என்று தீர்மானம்பண்ணினாலும், தங்களுடைய கடந்தகால பாவங்களை கர்த்தர் மன்னிக்கவே மாட்டார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு கர்த்தருடைய குணாதிசயம் புரியவில்லை.

துன்மார்க்கன் சாகிறது கர்த்தருக்கு பிரியமில்லை. அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பி பிழைப்பதுதான் கர்த்தருக்கு பிரியம். கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு அவர் தயை பெருத்தவர். நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது, கர்த்தர் நம்முடைய கடந்தகால பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து மறந்துவிடுகிறார்.

நிற்கிறவர்கள் விழாதிருப்பதற்கு எச்சரிப்போடிருக்கவேண்டும். நீதிமான்கள் தங்கள் நீதிகளை விட்டு விலகிவிடக்கூடாது. அவர்கள் பாவத்தில் விழுந்துவிடாதபடி மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

"நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான்" (எசே 18:24) என்றும்,

"நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதிசெய்து அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான்" (எசே 18:26) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய சிந்தையும், மனச்சாட்சியும் பாவத்தினால் கறைபட்டிருக்கிறது. அவர்களுடைய மனக்கண்கள் மங்கிப்போயிருக்கிறது. ஆண்டவருடைய வழி செம்மையாயிருக்கவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தரிடத்தில் நீதியுமில்லை, நியாயமுமில்லை என்று அவர்கள் கர்த்தர் பேரில் தப்பிதமாக குற்றம் சொல்லுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக அவர்கள் இவ்வாறு பேசுவது தேவதூஷணம்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாக தேவதூஷணம் சொன்னாலும், அவர்கள் தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களையும் மன்னிப்பதற்கு கிருபையுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தர்மீது குற்றம் சொல்லுவதற்கு பதிலாக, அவர்கள் தங்களுடைய பாவங்களைக் குறித்து எச்சரிப்படையவேண்டும். தாங்கள் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்பவேண்டும். இவர்கள் துன்மார்க்கராயிருந்தாலும், இவர்கள் சாகிறது கர்த்தருக்கு பிரியமில்லை. இவர்கள் மனந்திரும்பி பிழைக்கவேண்டும் என்பதே கர்த்தருக்கு பிரியம்.

மனந்திரும்புங்கள்
எசே 18:30-32

எசே 18:30. ஆகையால் இஸ்ரவேல் வம்சத்தாரே, நான் உங்களில் அவனவனை அவனவன் வழிகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்ப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்; அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருப்பதில்லை.

எசே 18:31. நீங்கள் துரோகம்பண்ணின உங்களுடைய எல்லாத் துரோகங்களையும் உங்கள்மேல் இராதபடிக்கு விலக்கி, உங்களுக்குப் புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டுபண்ணிக் கொள்ளுங்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்.

எசே 18:32. மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஏராளமான அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்திருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே அற்புதமானவர். அவருடைய கிருபையும் இரக்கமும் அற்புதமானது. கர்த்தருடைய கிருபையின் நாளும், அவருடைய தெய்வீக பொறுமையின் நாளும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய வழிகளின், பிரகாரம் நீதியாய் நியாயந்தீர்ப்பார். நீதியையும், நியாயத்தையும் வெளிப்படுத்துகிற கர்த்தர், தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.

"இஸ்ரவேல் வம்சத்தாரே, நான் உங்களில் அவனவனை அவனவன் வழிகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்ப்பேன்" (எசே 18:30) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அதே கர்த்தராகிய ஆண்டவர், "நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்; அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருப்பதில்லை" (எசே 18:30) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களில் செத்துப்போவது கர்த்தருக்கு பிரியமாயில்லை. கர்த்தர் அவர்களிடம், "இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்" (எசே 18:31) என்று கேட்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினவர்கள். தாங்கள் பண்ணின எல்லா துரோகங்களையும், தங்கள் மேலிராதபடிக்கு அவர்கள் விலக்கிக்கொள்ளவேண்டும். தங்களுக்கு புதுஇருதயத்தையும், புதுஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பின் பிரமாணத்தை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லும்போது, "மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்" (எசே 18:32) என்று சொல்லுகிறார்.

கர்த்தராகிய ஆண்டவர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தும் வண்ணமாக, "சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை" (எசே 18:32) என்றும் சொல்லுகிறார்.

19 அதிகாரம்

தாவீதின் வம்சத்தாருடைய அழிவை எசேக்கியேல் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். "அவர்களுக்காக புலம்பல் பாடவேண்டும்" என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளை கொடுக்கிறார் (எசே 19:1) எசேக்கியேல் உவமையினாலும், விடுகதையினாலும் புலம்பல் பாடுகிறார்.

எசேக்கியேல் யூதாதேசத்தையும், தாவீதின் வீட்டாரையும் ஒரு பெண்சிங்கத்தோடு ஒப்புமையாய்ச் சொல்லுகிறார். அவர்களுடைய பிரபுக்கள் பாலசிங்கங்களாயிருக்கிறார்கள். பெண்சிங்கம் இரைதேடி பழகிற்று. மனுஷரை பட்சித்தது. சுற்றுப்புறத்து ஜாதிகள் பாலசிங்கத்திற்கு விரோதமாக எழும்பி வந்து, அதை வலை வீசி பிடித்தார்கள் (எசே 19:2-9).

எசேக்கியேல் யூதாதேசத்தையும், தாவீதின் வீட்டாரையும் திராட்சச்செடியோடு ஒப்புமையாய்ச் சொல்லுகிறார். அதற்கு பலத்த கொப்புக்கள் இருந்தது. அது உயர ஓங்கி வளர்ந்தது. ஆனால் இப்போதோ அதன் பலத்த கொப்புகள் முறித்து, பட்டுப்போயின. அக்கினி அவைகளை பட்சித்தது (எசே 19:10-14).

பெண்சிங்கம்
எசே 19:1-9

எசே 19:1. நீ இஸ்ரவேல் பிரபுக்களின்பேரில் ஒரு புலம்பல் பாடி,

எசே 19:2. சொல்லவேண்டியது என்னவென்றால்: உன் தாய் எப்படிப்பட்டவள்? அவள் ஒரு பெண்சிங்கம், அவள் சிங்கங்களுக்குள்ளே படுத்திருந்து, பாலசிங்கங்களின் நடுவிலே தன் குட்டிகளை வளர்த்தாள்.

எசே 19:3. தன் குட்டிகளில் ஒன்று வளர்ந்து, பாலசிங்கமாகி, இரைதேடப் பழகி, மனுஷரைப் பட்சித்தது.

எசே 19:4. புறஜாதிகளும் அதின் செய்தியைக் கேட்டார்கள்; அது அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டது; அதைச் சங்கிலிகளினால் கட்டி, எகிப்துதேசத்திற்குக் கொண்டுபோனார்கள்.

எசே 19:5. தாய்ச்சிங்கம் காத்திருந்து, தன் நம்பிக்கை அபத்தமாய்ப் போயிற்றென்று கண்டு, அது தன் குட்டிகளில் வேறொன்றை எடுத்து, அதை பாலசிங்கமாக வைத்தது.

எசே 19:6. அது சிங்கங்களுக்குள்ளே சஞ்சரித்து, பாலசிங்கமாகி, இரைதேடப் பழகி, மனுஷரைப் பட்சித்தது.

எசே 19:7. அவர்களுடைய பாழான அரமனைகளில் திரிந்து, அவர்களுடைய பட்டணங்களைப் பாழாக்கிற்று; அதினுடைய கெர்ச்சிப்பின் சத்தத்துக்கு தேசமும் அதிலுள்ள யாவும் திகைத்தது.

எசே 19:8. அப்பொழுது சுற்றுப்புறத்து ஜாதிகள் அதற்கு விரோதமாக எழும்பிவந்து, தங்கள் வலையை அதின்மேல் வீசினார்கள்; அது அவர்களுடைய படுகுழியிலே அகப்பட்டது.

எசே 19:9. அவர்கள் அதைச் சங்கிலிகளினால் கட்டி, ஒரு கூட்டுக்குட்படுத்தி, அதைப் பாபிலோன் ராஜாவினிடத்துக்குக் கொண்டு போனார்கள்; இனி அதின் சத்தம் இஸ்ரவேலின் பர்வதங்களின்மேல் கேட்கப்படாதபடிக்கு அதை அரணான இடங்களில் கொண்டுபோய் அடைத்தார்கள்.

தாவீதின் ராஜகுடும்பத்தார் அழிந்துபோவார்கள். எசேக்கியேல் அவர்களுக்காக புலம்பல் பாடவேண்டும். யூதாவின் ராஜாக்கள் இங்கு "இஸ்ரவேல் பிரபுக்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய ராஜரீக மேன்மையும், மகிமையும் மங்கிப்போயிற்று.

எசேக்கியேல் தீர்க்கதரிசி யூதாதேசத்தை ஒரு பெண்சிங்கத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார் (எசே 19:2). யூதாதேசத்திற்கு, தாவீதின் ராஜகுடும்பத்தார் ஒரு தாயாரைப்போல இருக்கிறார்கள். அவர்கள் ஒரு பெண்சிங்கத்தைப்போல இருக்கிறார்கள். பெண்சிங்கம் முரட்டுக்குணமுள்ளது. அது இரைகளை பட்சிக்கும் சுபாவமுள்ளது.

பெண்சிங்கம் மற்ற சிங்கங்களுக்குள்ளே படுத்திருந்து, பாலசிங்கங்களின் நடுவிலே தன் குட்டிகளை வளர்க்கிறது. அந்தக் குட்டிகளில் ஒன்று வளர்ந்து பாலசிங்கமாயிற்று. அது இரைதேடி பழகி மனுஷரைப் பட்சித்தது (எசே 18:3). பெண்சிங்கம், தன்னுடைய குட்டிக்கு, இரைதேடக் கற்றுக்கொடுக்கிறது. எப்படிப் பட்சிக்கவேண்டும் என்றும், எப்படி வேட்டையாடவேண்டும் என்றும், எப்படி கொடூரகுணத்தோடு தாக்கவேண்டும் என்றும் தாய் சிங்கம், தன் குட்டிக்கு கற்றுக்கொடுக்கிறது.

யூதாதேசத்தின் ராஜாக்களும், தங்களுடைய பிள்ளைகளுக்கு யுத்தம்பண்ணுவது பற்றியும், ஜனங்களை அடக்கி ஆளுகை செய்வது பற்றியும் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால் தாவீதின் வம்சத்தில் தோன்றிய ராஜாக்கள், தங்கள் பிள்ளைகளுக்கோ, பிரபுக்களுக்கோ கர்த்தருடைய பிரமாணத்தையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும், கற்றுக்கொடுக்கவில்லை.

தாவீதின் வம்சத்தார் தேவனுடைய தெய்வீக பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, கர்த்தருக்கு பயபக்தியோடிருந்து, யூதாதேசத்தாரை அன்போடும், கரிசனையோடும் ஆளுகை செய்தால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார். கர்த்தர் தாவீதின் குடும்பத்தாருக்கு ஏராளமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு பயந்தவர்களாகவும், அவர்களுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், கர்த்தருடைய வாக்குத்தத்தம் அவர்களுக்கு சித்திக்கும்.

தாவீதின் ராஜகுடும்பத்தார் கர்த்தரிடத்தில் பயபக்தியோடு இருந்திருந்தால், கர்த்தர் அவர்களை பாதுகாத்து பராமரித்திருப்பார். அவர்கள் சிங்கங்களைப்போல பெலமுள்ளவர்களாயிருந்திருப்பார்கள். இயேசுகிறிஸ்து "யூதாராஜசிங்கமாக" இருந்ததுபோல, தாவீதின் ராஜவம்சத்தாரும், ராஜசிங்கங்களாகயிருந்திருப்பார்கள்.

ஆனால் தாவீதின் வம்சத்தில் வந்த ராஜகுடும்பத்தாரும், இஸ்ரவேலின் பிரபுக்களும், கர்த்தருக்கு பயப்படவில்லை. அவர்கள் இரைதேடப் பழகி மனுஷரை பட்சித்தார்கள். தங்களுடைய தேசத்து ஜனங்களை துன்பப்படுத்தினார்கள். அவர்களை ஒடுக்கினார்கள்.

யோவாகாஸ் பெண்சிங்கங்களின் குட்டிகளில் ஒன்றைப்போலிருந்தான். அவன் வளர்ந்து பாலசிங்கமானான். யோவாகாஸ் தாவீதின் வம்சத்தில் வந்தவன். அவன் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாவம்சத்தாரை ஆட்சி செய்தான்.

பாலசிங்கம் தனக்கு இஷ்டமானபடி நடந்துகொள்ளும். அது எந்த மிருகத்திற்கும் கட்டுப்படாது. அதை யாரும் அடக்கவும் முடியாது. யோவாகாசும் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், தன் இஷ்டம்போல நடந்துகொண்டான். தன் மனதிற்கு பிரியமானதையெல்லாம் செய்தான். அவன் துஷ்டனாயிருந்தான். கர்த்தர் யோவாகாசை ஆசீர்வதிக்கவில்லை. அவனுடைய ஆட்சிக்காலம் நீடித்து நிலைக்கவில்லை.

பாலசிங்கம் மனுஷரைப் பட்சித்தபோது, புறஜாதிகளும் அதன் செய்திகளைக் கேட்டார்கள். சுற்றுப்புறத்து ஜாதிகள் பாலசிங்கத்திற்கு எதிராக எழும்பி வந்தார்கள். சிங்கத்தைப் பிடிப்பதற்கு படுகுழியை வெட்டினார்கள். சிங்கம் அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டது. அவர்கள் அதை சங்கிலிகளினால் கட்டி எகிப்து தேசத்திற்கு கொண்டு போனார்கள் (எசே 18:4).

யோவாகாசுக்கு அழிவு உண்டாயிற்று. யோவாகாசின் ஸ்தானத்தில், அவனுடைய சகோதரன் யோயாக்கீம் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து யூதாதேசத்தை ஆட்சிபுரிந்தான். தன்னுடைய சகோதரன் துன்மார்க்கத்தினால் அழிந்துபோனதை யோயாக்கீம் பார்த்து, எச்சரிப்படைந்திருக்கவேண்டும். ஆனால் யோயாக்கீமோ துணிகரமாய்ப் பாவம் செய்தான். துன்மார்க்கமாய் ஜீவிப்பதில், யோயாக்கீம் தன்னுடைய சகோதரனாகிய யோவாகாசின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினான்.

பெண்சிங்கம் தன் குட்டிகளில் ஒன்றை எடுத்து, அதை பாலசிங்கமாக வைத்தது. அது சிங்கங்களுக்குள்ளே சஞ்சரித்து, பாலசிங்கமாகி, இரைதேடப்பழகி மனுஷரைப் பட்சித்தது (எசே 18:5,6). பாலசிங்கம் இரைதேடப்பழகியவுடன், அது மனுஷரைப் பட்சிக்க ஆரம்பித்துவிடுகிறது. யோயாக்கீமும், மனுஷரைத் துன்பப்படுத்த படித்துக்கொள்கிறான். தன்னுடைய தேசத்திலுள்ளவர்களின் சொத்துக்களையும், தோட்டங்களையும் அநியாயமாக அபகரித்துக்கொள்கிறான். தனக்கு விரோதமாக யார் எழும்பினாலும் யோயாக்கீம் அவர்களை அழித்துப்போடுகிறான்.

தன்னுடைய தேசத்தில் பொக்கிஷங்கள் எங்கே சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது யோயாக்கீமுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. தானியங்கள் களஞ்சியங்களில் எங்கே குவித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் யோயாக்கீம் அறிந்துகொள்கிறான். பாலசிங்கம் சிங்கங்களுக்குள்ளே சஞ்சரித்து, மனுஷரைப் பட்சிப்பதுபோல, யோயாக்கீமும், தன்னுடைய தேசத்தின் எல்லா இடங்களுக்கும் சுற்றி அலைகிறான். யூதாமனுஷருடைய பாழான அரமனைகளில் அலைந்து திரிகிறான். அவர்களுடைய பட்டணங்களைப் பாழாக்குகிறான்.

பாலசிங்கத்தினுடைய கெர்ச்சிப்பின் சத்தத்திற்கு, தேசமும் அதிலுள்ள யாவும் திகைத்தது. யோயாக்கீமுடைய துன்மார்க்க குணத்திற்கு யூதாதேசத்தார் எல்லோரும் பயப்பட்டார்கள். யோயாக்கீமுடைய துன்மார்க்கம் அவனுடைய அழிவுக்கு காரணமாயிற்று. அவன் தனக்கு கேடுண்டாகவே, பிறருக்கு தீங்கு செய்தான்.

யோயாக்கீமுக்கு விரோதமாக கர்த்தர் சீரியரையும், மோவாபியரையும், அம்மோன் புத்திரரையும், கல்தேயரையும் வரவழைத்தார்.

"அப்பொழுது கர்த்தர் கல்தேயரின் தண்டுகளையும், சீரியரின் தண்டுகளையும், மோவாபியரின் தண்டுகளையும், அம்மோன் புத்திரரின் தண்டுகளையும் அவன் மேல் வரவிட்டார்; தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே அவர் அவைகளை யூதாவை அழிக்கும்படிக்கு வரவிட்டார்" *(2இராஜா 24:2).*

பாலசிங்கம் இரைதேடப்பழகி மனுஷரைப் பட்சித்தபோது, சுற்றுப்புறத்து ஜாதிகள் அதற்கு விரோதமாக எழும்பி வந்தார்கள். தங்கள் வலையை அதின்மேல் வீசினார்கள். பாலசிங்கம் அவர்களுடைய படுகுழியிலே அகப்பட்டது. யோயாக்கீமுக்கு விரோதமாக சுற்றுப்புறத்து ராஜாக்கள் எல்லோரும் வந்தார்கள். நேபுகாத்நேச்சார் யோயாக்கீமுக்கு விலங்கிட்டு, அவனைப் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனான்.

"அவனுக்கு விரோதமாகப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்து, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோக இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டினான்" *(2நாளா 36:6).*

யோயாக்கீமின் கொடுமையான ஆட்சிக்கு முடிவு உண்டாயிற்று. அவன் மரித்தபோது அவனுக்கு நல்ல அடக்கம் கிடைக்கவில்லை. செத்துப்போன ஒரு கழுதை குழியிலே தள்ளப்படும் வண்ணமாக, யோயாக்கீமின் பிரேதம் புதைக்கப்பட்டது.

"ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான் என்று சொல்லுகிறார்" *(எரே 22:19).*

திராட்சச்செடி
எரே 19:10-14

எரே 19:10. நீ அமரிக்கையோடு இருக்கையில் உன் தாய் தண்ணீர் ஓரமாய் நாட்டப்பட்டதும், மிகுதியான நீர்ப்பாய்ச்சலால் கனிதருகிறதும் தழைத்திருக்கிறதுமான திராட்சச்செடியாயிருந்தாள்.

எரே 19:11. ஆளுகிறவர்களின் செங்கோலுக்கேற்ற பலத்த கொப்புகள் அதற்கு இருந்தது; அதின் வளர்த்தி அடர்த்தியான கிளைகளுக்குள்ளே உயர ஓங்கி, தன் உயர்த்தியினாலே தன் திரளான கொடிகளோடுங்கூடத் தோன்றிற்று.

எரே 19:12. ஆனாலும் அது உக்கிரமாய்ப் பிடுங்கப்பட்டு, தரையிலே தள்ளுண்டது; கீழ்காற்றினால் அதின் கனி காய்ந்து போயிற்று; அதின் பலத்த கொப்புகள் முறிந்து, பட்டுப்போயின; அக்கினி அவைகளைப் பட்சித்தது.

எரே 19:13. இப்பொழுது அது வறண்டதும் தண்ணீர் இல்லாததுமான வனாந்தர பூமியிலே நடப்பட்டிருக்கிறது.

எரே 19:14. அதின் கொடிகளிலுள்ள ஒரு கொப்பிலிருந்து அக்கினி புறப்பட்டு, அதின் கனியைப் பட்சித்தது; ஆளுகிற செங்கோலுக்கேற்ற பலத்த கொப்பு இனி அதில் இல்லையென்று சொல்; இதுவே புலம்பல், இதுவே புலம்பலாயிருக்கும் என்றார்.

எருசலேம் எல்லா பட்டணங்களுக்கும் தாயானவள். எசேக்கியேல் எருசலேம் நகரத்தை மற்றொரு ஒப்புமையோடு எடுத்துக்காட்டுகிறார். எருசலேம் நகரம் திராட்சச்செடிக்கு ஒப்பாயிருக்கிறது. அதன் பிரபுக்கள், திராட்சச்செடியிலுள்ள கொடிகளாயிருக்கிறார்கள். இதுபோன்ற ஒப்புமையை, எசேக்கியேல் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார் (எசே 15-ஆவது அதிகாரம்).

எருசலேம் ஒரு திராட்சச்செடியாக இருக்கிறது. அது தண்ணீர் ஓரமாய் நாட்டப்பட்டதும், மிகுதியான நீர்ப்பாய்ச்சலால் கனிதருகிறதும் தழைத்திருக்கிறதுமான திராட்சச்செடியாயிருக்கிறது. துன்மார்க்கர் சிறிது காலம் செழித்திருப்பார்கள். ஆனாலும் அவர்களுடைய செழிப்பு நிலைத்திருக்காது. அதுபோலவே, துன்மார்க்கமான ஸ்தலங்களும் சிறிது காலம் நீர்ப்பாய்ச்சலான இடங்களைப்போல தழைத்திருக்கும். ஆனாலும் அது சீக்கிரத்தில் வறண்டு போகும்.

தண்ணீர் ஓரமாய் நாட்டப்பட்ட திராட்சச்செடி நன்றாய்த் தழைத்திருக்கிறது. மிகுதியான நீர்ப்பாய்ச்சலால், மிகுதியான கனிதருகிறது. எருசலேமும் இதுபோலவே தழைத்து, கனிகொடுக்கிறது. எருசலேம் நகரத்தில் நியாயாதிபதிகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். "ஆளுகிறவர்களின் செங்கோலுக்கேற்ற பலத்த கொப்புகள் அதற்கு இருந்தது" (எசே 19:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். எருசலேமில் பிரபுக்களும், நியாயாதிபதிகளும், பலசாலிகளும் ஏராளமானோர் இருக்கிறார்கள்.

தண்ணீர் ஓரமாய் நாட்டப்பட்ட திராட்சச்செடியின் வளர்த்தி, அடர்த்தியான கிளைகளுக்குள்ளே, உயர ஓங்கி வளரும். தன் உயர்த்தியினாலே, தன் திரளான கொடிகளோடும் செழிப்பாயிருக்கும் (எசே 19:11). அடர்த்தியான கிளைகளிலிருந்து, செங்கோலுக்கேற்ற பலத்த கொப்புகள் தோன்றும்.

எருசலேமும் அடர்த்தியாய் வளர்ந்திருக்கிறது. அதில் திரளான கொடிகள் தோன்றியிருக்கிறது. எருசலேமின் குடிகள் பிறரை ஆளுகை செய்யும் பிரபுக்களாகயிருக்கிறார்கள். யுத்தத்தில் ஜெயிக்கிற பலசாலிகளாயிருக்கிறார்கள். எருசலேமிலே பலமும், பராக்கிரமமும், ஞானமும், நீதியும் மிகுதியாய்க் காணப்படுகிறது.

யூதாவின் ராஜகுடும்பத்தை சேர்ந்தவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்களுடைய அரண்மனைகளிலும், நியாயவிசாரிப்பு சாலைகளிலும், பக்தியுள்ளவர்களும், ஞானமுள்ளவர்களும், நீதிமான்களும் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். எருசலேமின் மதிப்பும் மரியாதையும், மகிமையும் மேன்மையும், மற்ற தேசங்களைவிட உயர்ந்திருக்கிறது.

சிதேக்கியா பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கட்டுப்பாட்டின் கீழ், எருசலேமை ஆளுகை செய்தான். அவன் பாபிலோன் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து, கப்பம் கட்டி, ஆட்சிபுரிந்த காலத்தில், எருசலேம் செழிப்பாயிருந்தது. எருசலேமின் குடிகள் பாபிலோன் தேசத்து பாதுகாப்பிலிருந்தார்கள். தேசத்தில் அமைதி நிலவிற்று.

சிதேக்கியா ராஜா பாபிலோன் ராஜாவுக்கு துரோகம்பண்ணினான். அவன் பாபிலோன் ராஜாவோடு பண்ணின உடன்படிக்கையை மீறி, எகிப்தின் ராஜாவோடு இரகசியமாய் உடன்படிக்கை பண்ணினான். இதன் நிமித்தமாக பாபிலோன் ராஜாவுக்கு சிதேக்கியாவின்மீது கோபமுண்டாயிற்று. கல்தேயரின் சேனை எருசலேமுக்கு விரோதமாக வந்து நகரத்தை அழித்துப்போட்டது. பாபிலோன் ராஜா சிதேக்கியா ராஜாவை சிறைப்பிடித்தான்.

திராட்சச்செடி பலத்த கொப்புக்களோடு, உயர ஓங்கி வளர்ந்தது. ஆனாலும் அது உக்கிரமாய்ப் பிடுங்கப்பட்டு, தரையிலே தள்ளுண்டது; கீழ்காற்றினால் அதின் கனி காய்ந்து போயிற்று; அதின் பலத்த கொப்புகள் முறிந்து, பட்டுப்போயின; அக்கினி அவைகளைப் பட்சித்தது (எசே 19:12).

பாபிலோன் ராஜா எருசலேம் நகரத்தைப் பாழாக்கினான். நகரத்தை அக்கினியினால் சுட்டெரித்தான். திராட்சச்செடியின் பலத்த கொப்புகள் முறிந்து, பட்டுப்போனதுபோல, எருசலேமின் ராஜகுடும்பத்தார் எல்லோரும் பட்டுப்போனார்கள். பலத்த கொப்புகள் முறிக்கப்பட்டதுபோல, யூதாவின் பிரபுக்களெல்லாம் அழிக்கப்பட்டார்கள்.

இப்பொழுது பட்டுப்போன திராட்சச்செடி, வறண்டதும், தண்ணீர் இல்லாததுமான வனாந்தர பூமியிலே நடப்பட்டிருக்கிறது (எசே 19:13). பாபிலோன் தேசம் வறண்டதும், தண்ணீரில்லாத வனாந்தர பூமியாகவும் இருக்கிறது. தண்ணீர் ஓரமாய் நாட்டப்பட்ட திராட்சச்செடி இப்போது வனாந்தர பூமியிலே நடப்பட்டிருக்கிறது. மிகுதியான நீர்ப்பாய்ச்சலால் கனிதந்த திராட்சச்செடி, இப்பொழுது கீழ்க்காற்றினால் அதின் கனி காய்ந்துபோயிற்று. தழைத்திருந்த திராட்சச்செடி இப்பொழுது அதன் பலத்த கொப்புகள் முறிந்து, பட்டுப்போயிற்று. கிளைகளுக்குள்ளே உயர ஓங்கி வளர்ந்த திராட்சச்செடியை, அக்கினி பட்சித்துப்போட்டது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கானான் தேசத்திலிருந்தவர்கள், இப்போது தண்ணீரில்லாத வனாந்தர பூமியாகிய பாபிலோன் தேசத்திலிருக்கிறார்கள். யூதாதேசமும் எருசலேமுக்கு இப்போது வனாந்தர பூமியாயிருக்கிறது.

யூதாதேசத்தில் ஆளுகிறவர்களின் செங்கோல் இருந்தது. அவர்கள் தங்கள் செங்கோலை நீதியாகவும், நியாயமாகவும் பயன்படுத்தவில்லை. யூதாவின் ராஜாக்கள், யூதாவின் ஜனங்களுக்கும், எருசலேமின் குடிகளுக்கும் உதவி செய்யவில்லை. அவர்கள்மீது கரிசனையோடில்லை. யூதாவின் ராஜாக்கள் ஜனங்களை ஒடுக்கினார்கள். தங்கள் செங்கோலை அதிகார துஷ்பிரயோகம் செய்தார்கள். திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும், தரித்திரருக்கும் உதவிசெய்யாமல், அவர்களை துன்பப்படுத்தினார்கள். இப்போது யூதாவின் செங்கோல் முறிந்துபோயிற்று.

கர்த்தரே ராஜாக்களை சிங்காசனத்தில் அமரச்செய்கிறார். ஜனங்களை ஆளுகை செய்கிறவர்கள், கர்த்தருக்கு பயந்து, நீதியாகவும் நியாயமாகவும் ஆளுகை செய்யவேண்டும். ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும். ராஜாக்கள் கர்த்தருக்கு பயந்து ஆளுகை செய்தால், அவர்களுடைய செங்கோல் நீதியின் கோலாகயிருக்கும். ராஜாக்கள் துன்மார்க்கராயிருந்தால், அவர்களுடைய கையில் செங்கோல் இருக்காது, பிசாசானவனாகிய சர்ப்பத்தின் கோலே அவர்கள் கையிலிருக்கும்.

எருசலேம் என்னும் திராட்சச்செடியின் கொடிகளிலுள்ள ஒரு கொப்பிலிருந்து, அக்கினி புறப்பட்டு, அதின் கனியை பட்சித்தது. ஆளுகிற செங்கோலுக்கேற்ற பலத்த கொப்பு இனிமேல் யூதாதேசத்திலோ, எருசலேம் நகரத்திலோ இல்லை. "இதுவே புலம்பல், இதுவே புலம்பலாயிருக்கும்" (எசே 19:14) என்று கர்த்தர் எசேக்கியேலிடம் சொல்லுகிறார்.

20 அதிகாரம்

கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி இஸ்ரவேலின் மூப்பர்களில் சிலர் எசேக்கியேலினிடத்தில் வருகிறார்கள் (எசே 20:1). அவர்களுக்கு சொல்ல வேண்டிய பிரதியுத்தரத்தை, கர்த்தர் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாய் கோபமாயிருக்கிறார் (எசே 20:2,3). தம்முடைய கோபத்திற்கான நீதியான காரணத்தையும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருடைய முற்பிதாக்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயும், உண்மையுள்ளவர்களாயும் ஜீவிக்கவில்லை.

எகிப்து தேசத்து அனுபவம் (எசே 20:5-9). வனாந்தர பிரயாண அனுபவம் (எசே 20:10-26). கானான் தேச அனுபவம் (எசே 20:27-32).

இஸ்ரவேல் வம்சத்தார்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் (எசே 20:33-36). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொன்னாலும், அவர் அவர்கள்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார் (எசே 20:37-44). எருசலேமுக்குச் சொல்லப்படும் வார்த்தை (எசே 20:45-49).

பிதாக்களின் அருவருப்புகள் எசே 20:1-4

எசே 20:1. ஏழாம் வருஷத்து ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே இஸ்ரவேலின் மூப்பரில் சிலர் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி வந்து, எனக்கு முன்பாக உட்கார்ந்தார்கள்.

எசே 20:2. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 20:3. மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் மூப்பரோடே பேசி, அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நீங்கள் என்னிடத்தில் விசாரிக்க வந்தீர்களோ? நீங்கள் என்னிடத்தில் விசாரிக்க இடங்கொடேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்.

எசே 20:4. மனுபுத்திரனே, நீ அவர்களுக்காக வழக்காடுவாயோ? வழக்காட மனதானால், நீ அவர்கள் பிதாக்களின் அருவருப்புகளை அவர்களுக்குத் தெரியக்காட்டி, அவர்களை நோக்கி:

இஸ்ரவேலின் முற்பிதாக்களில் சிலர் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி, எசேக்கியேலினிடத்தில் வந்திருக்கிறார்கள். இவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள். பாபிலோன் தேசத்தில் கர்த்தருடைய தேவாலயம் இல்லை. அங்கே யூதருடைய ஜெபாலங்களும் இல்லை. கர்த்தரை ஆராதிப்பதற்கு, பாபிலோன் தேசத்தில் பரிசுத்த ஸ்தலங்கள் எதுவுமே இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி விசாரிக்கும்படி, இஸ்ரவேலின் மூப்பர்கள் எசேக்கியேலினிடத்தில் வந்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் எந்த தேசத்துக்கு போனாலும், விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது. அந்நிய மார்க்கத்தைப் பின்பற்றக்கூடாது. புறஜாதி ஜனங்களோடு சேர்ந்து, விக்கிரகாராதனையில் பங்குபெறக்கூடாது. ஆனால் பாபிலோன் தேசத்திலிருக்கிற யூதர்களோ, விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கல்தேயரோடு சேர்ந்து விக்கிரகங்களை ஆராதனை செய்கிறார்கள்.

இஸ்ரவேலின் மூப்பர்கள் எசேக்கியேலினிடத்தில், விக்கிரகாராதனையைப்பற்றி விசாரிக்க வந்திருக்கிறார்கள். தாங்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருப்பதினால், அவர்களுடைய விக்கிரகாராதனையில் பங்குபெறுவதில் தப்பிதம் ஒன்றுமில்லை என்பது அவர்களுடைய எண்ணம். தங்களுடைய எண்ணத்தை உறுதிபண்ணிக்கொள்வதற்காக, அவர்கள் எசேக்கியேலினிடத்தில் வந்திருக்கிறார்கள்.

கர்த்தரோ விக்கிரகாராதனை செய்கிற யூதர்கள்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய கோபத்தை, எசேக்கியேல் மூலமாய் வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேலின் மூப்பர்கள் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி வந்திருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களுக்கு, "நீங்கள் என்னிடத்தில் விசாரிக்க வந்தீர்களே, நீங்கள் என்னிடத்தில் விசாரிக்க இடங்கொடேன்" *(எசே 20:3)* என்று தம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார். தம்மிடத்தில் விசாரிக்க வந்திருக்கிற இஸ்ரவேலின் மூப்பர்களுக்கு, இதுவே கர்த்தர் சொல்லுகிற பிரதியுத்தரம்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு விக்கிரகாராதனைக்காரர்மீது வந்திருக்கிறது. புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிப்பது போல, சிறையிருப்பிலிருக்கிற யூதர்களும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். யூதர்கள் கர்த்தருடைய ஜனமாகயிருந்தாலும், கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு விரோதமாக வந்திருக்கிறது.

எசேக்கியேல் பாபிலோன் தேசத்திலிருக்கிற யூதர்கள்மீது அன்பாகவும், பிரியமாகவும், கரிசனையாகவும் இருக்கிறார். எசேக்கியேலும் ஒரு யூதர். எசேக்கியேல் யூதர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசுகிறார். அவர்களுக்காக வழக்காட வேண்டும் என்று விரும்புகிறார். கர்த்தரோ அவர்களுக்காக தம்மிடத்தில் வழக்காட வேண்டாம் என்று எசேக்கியேலினிடத்தில் தீர்மானமாய்ச் சொல்லிவிடுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு தங்களுடைய முற்பிதாக்களின் பாவங்களைப்பற்றியும், மீறுதல்களைப்பற்றியும், அருவருப்புக்களைப்பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அவர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய ஜனமாகத் தெரிந்து கொண்டு, அவர்களை ஆசீர்வதித்தார். ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டு விலகி விக்கிரகங்களை ஆராதித்தார்கள். இதன் நிமித்தமாய், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது.

இந்த வரலாற்று சம்பவங்களை, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, நீ அவர்களுக்காக வழக்காடுவாயோ? வழக்காட மனதானால், நீ அவர்கள் பிதாக்களின் அருவருப்புகளை அவர்களுக்குத் தெரியக்காட்டு" *(எசே 20:4)* என்று சொல்லுகிறார்.

எகிப்து தேசம்
எசே 20:5-9

எசே 20:5. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நான் இஸ்ரவேலைத் தெரிந்துகொண்ட நாளிலே யாக்கோபு வம்சத்து ஜனங்களுக்கு நான் ஆணையிட்டு, எகிப்துதேசத்தில் என்னை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று ஆணையிட்டேன்.

எசே 20:6. நான் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து அழைப்பேன் என்றும், அவர்களுக்காக நான் பார்த்துவைத்ததும், பாலும் தேனும் ஓடுகிறதும் எல்லா தேசங்களின் சிங்காரமுமான தேசத்திலே அவர்களைக் கொண்டுவந்து விடுவேன் என்றும் அந்நாளிலே ஆணையிட்டு,

எசே 20:7. உங்களில் அவரவர் தங்கள் கண்களால் நோக்கின அருவருப்புகளைத் தள்ளிவிட்டு, எகிப்தின் நரகலான விக்கிரகங்களால் உங்களைத் தீட்டுப்படுத்தாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அவர்களோடே சொன்னேன்.

எசே 20:8. அவர்களோ, என் சொல்லைக் கேட்க மனதில்லாமல் எனக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணினார்கள்; அவரவர் தங்கள் கண்களால் நோக்கின அருவருப்புகளைத் தள்ளிப் போடாமலும், எகிப்தின் நரகலான விக்கிரகங்களை விடாமலும் இருந்தார்கள்; ஆதலால் எகிப்து தேசத்தின் நடுவிலே என் கோபத்தை அவர்களிலே தீர்த்துக்கொள்ளும்படிக்கு என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன் என்றேன்.

எசே 20:9. ஆகிலும் நான் என்னை இவர்களுக்கு வெளிப்படுத்தி, இவர்களுக்கு முன்பாக என் நாமம் பரிசுத்தக்குலைச்சலாகாதபடிக்கு, இவர்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, என் நாமத்தினிமித்தம் கிருபைசெய்தேன்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். எகிப்தின் அதிபதியாகிய பார்வோன் அவர்களை ஒடுக்கினான். துன்பப்படுத்தினான். அவர்களை அடிமைகளாக வேலை வாங்கினான். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது கிருபையாய் இரங்கினார்.

கர்த்தர் இஸ்ரவேலை தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொண்டார். அவர்கள் கர்த்தருக்குரியவர்கள். கர்த்தருக்கு விசேஷமானவர்கள். இஸ்ரவேல் புத்திரர் இப்போது எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருந்தாலும், கர்த்தர் அவர்களை தமக்கு விசேஷமான ஜனமாகத் தெரிந்துகொண்டார்.

இஸ்ரவேல் வம்சத்தாரிடத்தில் நல்ல சுபாவங்கள் எதுவும் காணப்படவில்லை. எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரர்கள் முறுமுறுக்கிறவர்களாகவும், நன்றியில்லாதவர்களாகவும், கலகக்காரர்களாகவும் இருந்தார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை, தமக்கு விசேஷமானவர்களாகத் தெரிந்துகொண்டார். அவர்கள் மூலமாய் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவது கர்த்தருக்கு சித்தமாயிற்று.

எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தவர்கள் யாக்கோபு வம்சத்து ஜனங்கள். கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலே தெரிந்துகொண்டார். அங்கே அவர்களுக்கு தம்மை தெரியப்படுத்தினார். "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று அவர்களுக்கு ஆணையிட்டார்.

"சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" *(யாத் 6:3).*

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருடைய முற்பிதாக்களுக்கு, "சர்வவல்லமையுள்ள தேவன்" என்னும் நாமத்தினாலேயே தம்மை வெளிப்படுத்தினார். ஆனால் இப்போதோ அவர், எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருக்கிற யாக்கோபின் வம்சத்து ஜனங்களுக்கு, "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று தம்மை வெளிப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தில் நீண்டகாலமாய் வேதனைகளை அனுபவித்தார்கள். அவர்களுடைய பார்வையில், எகிப்தின் அதிபதியாகிய பார்வோனே வல்லமையுள்ளவனாக காணப்பட்டான். அவர்கள் கர்த்தருடைய வல்லமையை மறந்துவிட்டார்கள். "கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர்" என்னும் சத்தியத்தையும் அவர்கள் மறந்துவிட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். அவர் தம்முடைய ஆணையினால் அவர்களுக்கு தம்மை தெரியப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்தமான கரத்தை, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நேராக நீட்டி, தம்முடைய ஆணையை உறுதிபடுத்தியிருக்கிறார். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர் என்பதை, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரர் மறந்துவிட்டாலும், கர்த்தர் மறுபடியுமாய் அவர்களுக்கு, "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று தம்மை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை விடுதலைபண்ணுவார் என்பதும், அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்து வந்து, அங்கே அவர்களை குடியேற்றுவார் என்பதும் கர்த்தருடைய வாக்குத்தத்தம்.

கர்த்தர் இதுபற்றிச் சொல்லும்போது, "நான் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து அழைப்பேன் என்றும், அவர்களுக்காக நான் பார்த்துவைத்ததும், பாலும் தேனும் ஓடுகிறதும் எல்லா தேசங்களின் சிங்காரமுமான தேசத்திலே அவர்களைக் கொண்டுவந்து விடுவேன் என்றும் அந்நாளிலே ஆணையிட்டேன்" (எசே 20:6) என்று சொல்லுகிறார்.

கானான் தேசம் என்பது, ஏதேனிலுள்ள இரண்டாவது தோட்டத்தைப்போலிருக்கிறது. அங்கு பாலும் தேனும் ஓடுகிறது. மற்ற தேசங்களைவிட கானான் தேசமே சிங்காரமான தேசம். எகிப்து தேசமோ இஸ்ரவேல் புத்திரருக்கு அடிமைத்தனத்தின் தேசம். கர்த்தர் அவர்களுடைய அடிமைத்தனத்தின் விலங்குகளை முறிக்கிறார். கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை செய்து, அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து, அங்கே அவர்களை குடியேற்றி, ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரவாளிகள். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவருடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

கர்த்தர் எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருக்கிற இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் விக்கிரகாராதனையைவிட்டு விலகிவர வேண்டும் என்று கட்டளை கொடுக்கிறார்.

"உங்களில் அவரவர் தங்கள் கண்களால் நோக்கின அருவருப்புகளைத் தள்ளிவிட்டு, எகிப்தின் நரகலான விக்கிரகங்களால் உங்களைத் தீட்டுப்படுத்தாதிருப்பீர்களாக" (எசே 20:7) என்று தேவனாகிய கர்த்தர் அவர்களோடே சொல்கிறார். எகிப்தின் நரகலான விக்கிரகங்களெல்லாம் கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கிறது. கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் விக்கிரகாராதனையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள். அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். கர்த்தருடைய சொல்லைக் கேட்க அவர்களுக்கு மனதில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணினார்கள்.

எகிப்தின் நரகலான விக்கிரகங்களால் தங்களை தீட்டுப்படுத்தக்கூடாது என்பது கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொன்ன கட்டளை. ஆனால் அவர்களோ எகிப்தின் நரகலான விக்கிரகங்களை விடவில்லை. அவற்றைப் பற்றிக்கொண்டார்கள். அவற்றிற்கு தூபங்காட்டினார்கள்.

எகிப்து தேசத்தில் ஏராளமான விக்கிரகங்கள் இருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருந்தபோது, அவர்கள் எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும், எல்லா பக்கங்களிலும் விக்கிரகங்கள் இருக்கும். கர்த்தர் அவர்களிடத்தில், "உங்களில் அவரவர் தங்கள் கண்கள் நோக்கின அருவருப்புக்களை தள்ளிவிடவேண்டும்" என்று கட்டளை கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ, "அவரவர் தங்கள் கண்களால் நோக்கின அருவருப்புக்களை தள்ளிப்போடாமலிருந்தார்கள்".

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தமக்கு விசேஷமானவர்களாகத் தெரிந்தெடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய சொல்லைக் கேட்க மனதில்லாதவர்களாயிருக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் அவர்கள்மேல் வந்தது. எகிப்து தேசத்தின் நடுவிலே, கர்த்தர் தம்முடைய கோபத்தை அவர்களிலே தீர்த்துக்கொள்ளும்படிக்கு சித்தமுள்ளவரானார். இஸ்ரவேல் புத்திரர்மீது, தம்முடைய உக்கிரத்தை ஊற்றவேண்டுமென்று, கர்த்தர் தீர்மானம்பண்ணினார்.

கர்த்தர் எகிப்து தேசத்திலே பல வாதைகளை அனுப்பினார். இந்த வாதைகளைப் பார்த்து, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய விக்கிரகாராதனையைவிட்டு தம்மிடத்தில் திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்த்தார். எகிப்தின் நரகலான விக்கிரகங்களால் இஸ்ரவேல் வம்சத்தார் தங்களை தீட்டுப்படுத்தாதிருப்பார்கள் என்று கர்த்தர் எதிர்பார்த்தார். ஆனால் கர்த்தர் எகிப்து தேசத்தில் அனுப்பிய வாதைகளினால், இஸ்ரவேல் வம்சத்தார் குணப்படவில்லை. அவர்கள் எகிப்தின் விக்கிரகங்களை விட்டு கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை.

எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரர், வாதைகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தாலும், அவர்கள் இன்னும் எகிப்தின் நரகலான விக்கிரகங்கள்மீது பிரியமாயிருக்கிறார்கள்.

தம்முடைய சொல்லைக்கேட்க மனதில்லாத இஸ்ரவேல் வம்சத்தாரை, கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அழித்திருக்கலாம். "எகிப்தியரோடு இஸ்ரவேல் புத்திரரும் அழிந்துபோவார்களாக" என்று கர்த்தர் தம்முடைய கோபத்தில் ஆணையிட்டிருக்கலாம். ஆனால் கர்த்தரோ, தமக்கு சொந்தமாகத் தெரிந்துகொண்ட, இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போடாமல், அவர்களுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார்.

"ஆகிலும் நான் என்னை இவர்களுக்கு வெளிப்படுத்தி, இவர்களுக்கு முன்பாக என் நாமம் பரிசுத்தக்குலைச்சலாகாதபடிக்கு, இவர்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, என் நாமத்தினிமித்தம் கிருபைசெய்தேன்" *(எசே 20:9)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்து அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரர்கள், கர்த்தருடைய சொல்லைக்கேட்க மனதில்லாதவர்களாயிருந்தாலும், எகிப்து தேசத்தின் நரகலான விக்கிரகங்களையும், அருவருப்புக்களையும் தள்ளிப்போடாமலும், விட்டுவிடாமலும் இருந்தாலும், கர்த்தர் தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களுக்கு கிருபை செய்கிறார். கர்த்தர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணுகிறார்.

கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதவர்கள்மீது, அவருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் வரும். ஆனால் இங்கோ கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைவிட, அவருடைய கிருபை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய நாமத்தினிமித்தம் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கிருபை செய்கிறார்.

கர்த்தருடைய நாமம் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக பரிசுத்த குலைச்சலாகக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தம். ஆகையினால் கர்த்தர் அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களுக்கு கிருபை செய்கிறார். கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு, நம்மிடத்தில் ஒரு தகுதியும் இல்லையென்றாலும், கர்த்தர் தம்முடைய பரிசுத்தமான நாமத்தை காரணமாகச் சொல்லி, அதன் நிமித்தமாக, கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நமக்கு காண்பிக்கிறார். தம்முடைய நாமத்தினிமித்தம் கர்த்தர் நமக்கு கிருபை செய்கிறார்.

வனாந்தரம்
எசே 20:10-26

எசே 20:10. ஆகையால் நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவர்களை வனாந்தரத்தில் அழைத்து வந்து,

எசே 20:11. என் கட்டளைகளை அவர்களுக்குக் கொடுத்து, என் நியாயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; அவைகளின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான்.

எசே 20:12. நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்.

எசே 20:13. ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் வனாந்தரத்தில் எனக்கு விரோதமாய் இரண்டகம் பண்ணினார்கள்; என் கட்டளைகளின்படியே மனுஷன் செய்தால் அவைகளால் பிழைப்பான்; அவர்களோ அவைகளில் நடவாமல், என் நியாயங்களை வெறுத்து, என் ஓய்வுநாட்களின் பரிசுத்தத்தை மிகவும் குலைத்துப்போட்டார்கள்; ஆதலால் அவர்களை நிர்மூலமாக்கும்படி வனாந்தரத்திலே என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன் என்றேன்.

எசே 20:14. ஆகிலும் நான் இவர்களைப் புறப்படப்பண்ணினதைக் கண்ட புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக என் நாமம் பரிசுத்தக்குலைச்சலாகாதபடிக்கு, என் நாமத்தினிமித்தம் கிருபைசெய்தேன்.

எசே 20:15. ஆனாலும் அவர்களுடைய இருதயம் அவர்களுடைய நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, அவர்கள் என் நியாயங்களை வெறுத்து, என் கட்டளைகளில் நடவாமற்போய், என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினபடியால்,

எசே 20:16. நான் வாக்குத்தத்தம்பண்ணினதும், பாலும்தேனும் ஓடுகிறதும், எல்லா தேசங்களின் சிங்காரமாயிருக்கிறதுமான தேசத்திலே அவர்களைக் கொண்டுவந்து விடுவதில்லை என்று வனாந்தரத்தில் ஆணையிட்டேன்.

எசே 20:17. ஆகிலும் அவர்களை அழிக்காதபடிக்கு, என் கண் அவர்களைத் தப்பவிட்டது; நான் அவர்களை வனாந்தரத்தில் நிர்மூலமாக்கவில்லை.

எசே 20:18. வனாந்தரத்தில் அவர்களுடைய பிள்ளைகளை நோக்கி: நீங்கள் உங்கள் பிதாக்களின் முறைமைகளில் நடவாமலும் அவர்களுடைய நியாயங்களைக் கைக்கொள்ளாமலும், அவர்களுடைய நரகலான விக்கிரகங்களால் உங்களைத் தீட்டுப்படுத்தாமலும் இருங்கள்.

எசே 20:19. உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே; நீங்கள் என் கட்டளைகளில் நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படியே செய்து,

எசே 20:20. என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றேன்.

எசே 20:21. ஆனாலும் பிள்ளைகளும் எனக்கு விரோதமாய் எழும்பினார்கள்; என் கட்டளைகளின்படியே மனுஷன் செய்தால் அவைகளால் பிழைப்பானே; அவர்களோ அவைகளில் நடவாமலும், என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்யாமலும், என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்கிப்போட்டார்கள்; ஆகையால் வனாந்தரத்திலே என் கோபத்தை அவர்களில் தீர்த்துக் கொள்ளும்படி என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன் என்றேன்.

எசே 20:22. ஆகிலும் நான் என் கையைத் திருப்பி, நான் இவர்களை புறப்படப்பண்ணினதைக் கண்ட புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக என் நாமம் பரிசுத்தக்குலைச்சலாகாதபடிக்கு, என் நாமத்தினிமித்தம் கிருபைசெய்தேன்.

எசே 20:23. ஆனாலும் அவர்கள் என் நியாயங்களின்படி செய்யாமல், என் கட்டளைகளை வெறுத்து, என் ஓய்வுநாட்களை பரிசுத்தக் குலைச்சலாக்கினபடியாலும், அவர்களுடைய கண்கள் அவர்கள் பிதாக்களின் நரகலான விக்கிரகங்களின்மேல் நோக்கமாயிருந்தபடியாலும்,

எசே 20:24. நான் அவர்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, அவர்களை தேசங்களிலே தூற்றிப்போடுகிறதற்கு வனாந்தரத்திலே ஆணையிட்டேன்.

எசே 20:25. ஆகையால் நன்மைக்கேதுவல்லாத கட்டளைகளையும் ஜீவனுக்கேதுவல்லாத நியாயங்களையும் நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

எசே 20:26. நான் கர்த்தர் என்று அவர்கள் அறியத்தக்கதாக, நான் அவர்களைப் பாழாக்கும்படி, அவர்கள் கர்ப்பந்திறந்து பிறக்கிறதையெல்லாம் தீக்கடக்கப்பண்ணி, இவ்விதமாய் அவர்களுடைய பலிகளினாலே அவர்களைத் தீட்டுப்படப்பண்ணினேன்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் புத்திரரோ தங்களுக்கு கேடுண்டாகவே பாவம் செய்கிறார்கள். தங்களுடைய பாவங்களினால் அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துப்போடுகிறார்கள். கர்த்தரோ கிருபையுள்ளவர். அவர் நீதியுள்ளவர். கர்த்தர் தம்முடைய நீதியினால், இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களினிமித்தமாய், அவர்களைத் தண்டிக்கிறார். அதே கர்த்தர், தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்திருந்தாலும், அவர்களைத் தண்டியாமல் அவர்களுக்கு கிருபை செய்கிறார், இரக்கம் காண்பிக்கிறார்.

எகிப்து தேசத்திலே அடிமைகளாக வேதனைப்படுகிற இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர் விடுதலைபண்ணி, அந்த தேசத்திலிருந்து அவர்களை புறப்படபண்ணுகிறார். அவர்களை வனாந்தரத்தில் அழைத்து வருகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தரத்தில் ஏற்பட்ட அனுபவங்கள், புதிய ஏற்பாட்டில், 1கொரிந்தியர் 10-ஆவது அதிகாரம், எபிரெயர் 3-ஆவது அதிகாரம் ஆகியவற்றில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த சம்பவம் பழைய ஏற்பாட்டிலும் பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் விசுவாசிகளாகிய நமக்கு எச்சரிப்பாக சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மிகப்பெரிய காரியங்களைச் செய்கிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருக்கு நன்றியில்லாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அவர்களுக்கு தாராளமாய்க் காண்பித்தாலும், அவர்களிடத்தில் உண்மையில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் அவர்களுடைய கலககுணத்தை பல இடங்களில் தெளிவுபடுத்துகிறார். தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் இஸ்ரவேல் புத்திரருக்கு காண்பிக்கக்கூடாது என்னும் கஞ்சத்தனம் கர்த்தரிடத்தில் இல்லை. கர்த்தர் தயவு பெருத்தவர். அவர் தம்முடைய கிருபையிலும் இரக்கத்திலும் ஐசுவரியமுள்ளவர்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படபண்ணினார். ஆனாலும் அவர்களை, எகிப்திலிருந்து நேரடியாக கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகவில்லை. அதற்கு பதிலாக, கர்த்தர் அவர்களை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டு வருகிறார். செழிப்பான எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருப்பதைவிட, வனாந்தரத்தில் விடுதலையோடிருப்பதே இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஆசீர்வாதம்.

இஸ்ரவேல் வம்சத்தாரோ வனாந்தரத்தின் ஆசீர்வாதங்களைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு வனாந்தரத்தில் ஒரு சில கஷ்டங்கள் உண்டாயிற்று. அதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் எகிப்து தேசத்திற்கே திரும்பப்போய்விட வேண்டுமென்று விரும்பினார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் வனாந்தரத்திலிருந்தபோது, கர்த்தர் தம்முடைய கட்டளைகளை அவர்களுக்கு கொடுத்தார். தம்முடைய நியாயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். கர்த்தர் தம்முடைய கட்டளைகளையும் நியாயங்களையும் அவர்களுக்கு கொடுத்து, அவைகளின்படி செய்கிறதினால் வரும் ஆசீர்வாதங்களையும் அவர்களுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய கட்டளைகளின்படியும், அவருடைய நியாயங்களின்படியும் செய்கிற மனுஷன் பிழைப்பான். கர்த்தருடைய கட்டளைகளின்படியும், அவருடைய நியாயங்களின்படியும் செய்யாத மனுஷன் செத்துப்போவான் என்பதே இதன் விளக்கம். கர்த்தருக்கு கீழ்ப்பந்தால் நமக்கு நித்திய ஜீவன் கிடைக்கும். கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால் நமக்கு ஆவிக்குரிய மரணம் உண்டாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்களுக்கு ஓய்வுநாள் பிரமாணத்தைக் கொடுத்தார். அந்த பழைய பிரமாணத்தை கர்த்தர் இங்கு மறுபடியும் புதுப்பிக்கிறார். அவர்கள் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திற்கு வருவதற்கு முன்பாக, கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணத்தை பரிசுத்தமாய் ஆசரித்தார்கள். அவர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தபோது, அவர்களுக்கு ஓய்வுநாள் கிடைக்கவில்லை. எகிப்தின் ஆளோட்டிகள் அவர்களை எல்லா நாட்களிலும் கடினமாக வேலை வாங்கினார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரோ எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருக்கிறார்கள். அவர்களால் எகிப்தின் அதிபதியாகிய பார்வோனுக்கு எதிர்த்து நிற்க முடியவில்லை.

அநேக வருஷங்களாக இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்ததினால், அவர்கள் கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணத்தையே மறந்துவிட்டார்கள். கர்த்தர் இப்போது, தம்முடைய ஓய்வுநாள் பிரமாணத்தை, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு, வனாந்தரத்திலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாரிடத்தில் மறுபடியுமாய் நினைவுபடுத்துகிறார்.

"நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்" (எசே 20:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஓய்வுநாள் பிரமாணம் இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தங்களை பரிசுத்தம்பண்ணுகிறவர் என்பதை இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய ஓய்வுநாள், கர்த்தருக்கும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் அடையாளமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணவேண்டும். அதைப் பரிசுத்தகுலைச்சலாக்கக்கூடாது. ஓய்வுநாளில் கர்த்தரைப்பற்றியும், அவருடைய வார்த்தைகளைப்பற்றியும், அவருடைய பிரமாணங்களைப்பற்றியும் அதிகமாய்த் தியானிக்கவேண்டும். நாம் ஓய்வுநாளைப் பரிசுத்தம்பண்ணும்போது, நம்முடைய ஆத்துமாவை நாம் பரிசுத்தம்பண்ணிக் கொள்வதற்கு அது உதவியாயிருக்கும்.

இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் மீறுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் வனாந்தரத்தில் கர்த்தருக்கு விரோதமாய் இரண்டகம் பண்ணுகிறார்கள். கர்த்தருடைய கட்டளைகளின்படியும், அவருடைய நியாயங்களின்படியும் செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்கவில்லை. அவருடைய நியாயங்களின்படி செய்யவில்லை. அவர்கள் கர்த்தருடைய நியாயங்களை வெறுத்துவிடுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஓய்வுநாட்களின் பரிசுத்தத்தை மிகவும் குலைத்துப்போடுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தமக்கு கீழ்ப்படியாமல் போனதினிமித்தம், கர்த்தர் அவர்களோடு செய்துகொண்ட தம்முடைய உடன்படிக்கையை முறித்துப்போடலாம். அவர்களை தம்முடைய விசேஷமான ஜனமாயிராதபடிக்கு, அவர்களை தம்முடைய சமுகத்திலிருந்து துரத்திவிடலாம். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நாமத்தினிமித்தம் கிருபை செய்யாமலிருக்கலாம்.

இஸ்ரவேல் வம்சத்தார், வனாந்தரத்திலே கர்த்தருக்கு விரோதமாய் இரண்டகம் பண்ணுகிறார்கள். அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் இதே வனாந்தரத்தில், கர்த்தரிடத்திலிருந்து ஏராளமான கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றிருக்கிறார்கள். கர்த்தருடைய அநேக ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் பெற்று அனுபவிக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். அவர்கள் கானானுக்குப் போகும் வழியில், வனாந்தர பாதையின் வழியாகச் செல்லுகிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர், இந்த வனாந்தரத்தில் தானே, கர்த்தருக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தரத்தில் பாதை தெரியாது. கானான் தேசத்திற்கு எப்படி போகவேண்டும் என்பதும் தெரியாது. கர்த்தரே அவர்களை வழிநடத்துகிறார். பகலிலே மேகஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினி ஸ்தம்பமாகவும் கர்த்தர் தமது ஜனங்களுக்கு தம்மை வெளிப்படுத்தி, அவர்களை வனாந்தரப்பாதையில் வழிநடத்திச் செல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் போஜனமும் இல்லை. தண்ணீரும் இல்லை. கர்த்தரோ அவர்களுக்கு வானத்திலிருந்து மன்னாவை பெய்யப்பண்ணுகிறார். கன்மலையைப் பிளந்து அவர்களுக்கு தண்ணீரைக் குடிக்க கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்திலிருந்து ஏராளமான நன்மைகளை பெற்றிருக்கிறார்கள்.

ஆனாலும், இஸ்ரவேல் வம்சத்தார், வனாந்தரத்திலே, தங்களை வழிநடத்துகிற கர்த்தருக்கு விரோதமாக இரண்டகம்பண்ணுகிறார்கள். தங்களுக்கு வனாந்தரத்திலே போஜனம்கொடுக்கிற, தாகம் தீர்க்கிற கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் அவர்களுடைய கீழ்ப்படியாமையைப் பார்த்து, அவர்கள் தமக்கு விரோதமாக இரண்டகம்பண்ணுவதைப் பார்த்து, "அவர்களை நிர்மூலமாக்கும்படி வனாந்தரத்திலே என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன்" (எசே 20:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் வனாந்தரத்திலிருந்தாலும், அவர்களுடைய இருதயமோ எகிப்து தேசத்திலிருக்கிறது. அவர்களுடைய சரீரம் மாத்திரமே வனாந்தரத்திலிருக்கிறது. "அவர்களுடைய இருதயம் அவர்களுடைய நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, அவர்கள் என் நியாயங்களை வெறுத்து, என் கட்டளைகளில் நடவாமற்போய், என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினார்கள்"(எசே 20:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தமக்கு விரோதமாக இரண்டகம் பண்ணுகிற இஸ்ரவேல் வம்சத்தார்மீது கர்த்தர் கோபமாயிருக்கிறார். அவர்களை ஆசீர்வதிக்கக்கூடாது என்றும், அவர்களுக்கு நன்மை செய்யக்கூடாது என்றும் தீர்மானம்பண்ணுகிறார். "நான் வாக்குத்தத்தம்பண்ணினதும், பாலும்தேனும் ஓடுகிறதும், எல்லா தேசங்களின் சிங்காரமாயிருக்கிறதுமான தேசத்திலே அவர்களைக் கொண்டுவந்து விடுவதில்லை" (எசே 20:16) என்று கர்த்தர் வனாந்தரத்தில் ஆணையிடுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய இருதயங்கள் விக்கிரகங்களை பின்பற்றிப்போனதினால் அவர்கள் கர்த்தருடைய சொல்லைக்கேட்க மனதில்லாமலிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய கட்டளைகளின்படியும், அவருடைய நியாயங்களின்படியும் செய்ய விருப்பமில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்திருந்தாலும், இஸ்ரவேல் வம்சத்தாரோ எகிப்து தேசத்திலுள்ள நரகலான விக்கிரகங்களோடு, தங்களுடைய இருதயங்களில், இரகசியமான உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையைவிட, எகிப்தின் விக்கிரகங்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையே முக்கியமானதாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது பிரியமாயிருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாரோ எகிப்து தேசத்தின் விக்கிரகங்கள்மீது பிரியமாயிருக்கிறார்கள். இதன் நிமித்தமாக அவர்கள் கர்த்தருடைய கட்டளையின்படி நடவாமல், அவருடைய நியாயங்களை வெறுத்து, கர்த்தருடைய ஓய்வுநாட்களின் பரிசுத்தத்தை மிகவும் குலைத்துப்போடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தபோதும், அவர்கள் கர்த்தருடைய சொல்லைக்கேட்க மனதில்லாமல், அவருக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணினார்கள். எகிப்தின் நரகலான விக்கிரங்களைத் தள்ளிவிடாமல், அவற்றை ஆராதித்தார்கள். ஆனாலும் கர்த்தர், அவர்களை உடனே தண்டித்துவிடவில்லை. அவர்களுக்கு முன்பாக தம்முடைய நாமம் பரிசுத்த குலைச்சலாகாதபடி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களுக்கு கிருபை செய்தார் (எசே 20:8,9).

இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்து தேசத்தில், கர்த்தருக்கு விரோதமாக இரண்டகம் பண்ணியதுபோல, வனாந்தரத்திலும் அவருக்கு விரோதமாக இரண்டகம் பண்ணுகிறார்கள். கர்த்தர் இப்போதும் அவர்களைத் தண்டிக்காமல் அவர்களுக்கு கிருபை செய்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கிப் பார்க்கும்போது, அவரிடத்திலிருந்து கோபமும் நீதியும் வெளிப்படுவதற்கு பதிலாக, கிருபையும் இரக்கமும் வெளிப்படுகிறது.

கர்த்தர் அவர்களை அழித்துப்போடவில்லை. அவர்களை முற்றிலுமாய் சங்காரம்பண்ணி, இஸ்ரவேல் வம்சத்தாரையே அதம்பண்ணிப்போடவில்லை. இஸ்ரவேல் வம்சத்தாரிலிருந்து, ஒரு புதிய சந்ததி தோன்றும் என்று, கர்த்தர் பொறுமையோடு காத்திருக்கிறார்.

"ஆகிலும் நான் இவர்களைப் புறப்படப்பண்ணினதைக் கண்ட புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக என் நாமம் பரிசுத்தக்குலைச்சலாகாதபடிக்கு, என் நாமத்தினிமித்தம் கிருபைசெய்தேன்" (எசே 20:14) என்று கர்த்தர் தம்முடைய கிருபையுள்ள வார்த்தைகளை சொல்லுகிறார்.

"ஆகிலும் அவர்களை அழிக்காதபடிக்கு, என் கண் அவர்களைத் தப்பவிட்டது; நான் அவர்களை வனாந்தரத்தில் நிர்மூலமாக்கவில்லை. வனாந்தரத்தில் அவர்களுடைய பிள்ளைகளை நோக்கி: நீங்கள் உங்கள் பிதாக்களின் முறைமைகளில் நடவாமலும் அவர்களுடைய நியாயங்களைக் கைக்கொள்ளாமலும், அவர்களுடைய நரகலான விக்கிரகங்களால் உங்களைத் தீட்டுப்படுத்தாமலும் இருங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே; நீங்கள் என் கட்டளைகளில் நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படியே செய்து, என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்" (எசே 20:17-20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார், வனாந்தரத்தில் கர்த்தருக்கு விரோதமாய் இரண்டகம் பண்ணினதுபோலவே, அவர்களுடைய பிள்ளைகளும் கர்த்தருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். கர்த்தருடைய கட்டளைகளின்படியும், அவருடைய நியாயங்களின்படியும் செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான். அவர்களோ, அவைகளின்படி நடவாமலும், கர்த்தருடைய நியாயங்களைக் கைக்கொள்ளாமலும், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். அவர்கள் கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்த குலைச்சலாக்கிப்போட்டார்கள்.

"ஆகையால் வனாந்தரத்திலே என் கோபத்தை அவர்களில் தீர்த்துக் கொள்ளும்படி என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன்" (எசே 20:21) என்று கர்த்தர் தம்முடைய கோபத்தில் சொல்லுகிறார். இவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை இவர்கள்மேல் ஊற்றவேண்டும் என்று தீர்மானம்பண்ணினார்.

"ஆகிலும் நான் என் கையைத் திருப்பி, நான் இவர்களை புறப்படப்பண்ணினதைக் கண்ட புறஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக என் நாமம் பரிசுத்தக்குலைச்சலாகாதபடிக்கு, என் நாமத்தினிமித்தம் கிருபைசெய்தேன்" (எசே 20:22) என்று கர்த்தர் தம்முடைய கிருபையான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

பிள்ளைகளும் தங்கள் பிதாக்களைப்போலவே, கர்த்தருக்கு விரோதமாக இரண்டகம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய கண்களும், அவர்கள் பிதாக்களின் நரகலான விக்கிரகங்கள் மேல் நோக்கமாயிருந்தது. அவர்களும் கர்த்தருடைய நியாயங்களின்படி செய்யாமல் அவருடைய கட்டளைகளை வெறுத்தார்கள். அவருடைய ஓய்வுநாட்களை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். பெற்றோர்களைப் போலவே, அவர்களுடைய பிள்ளைகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள் (எசே 20:23).

தங்களுக்கு ஏராளமான தெய்வங்கள் வேண்டுமென்றும், அந்த தெய்வங்களை தங்களுடைய கண்கள் பார்க்கவேண்டும் என்றும் இஸ்ரவேல் வம்சத்தார் விரும்புகிறார்கள். இவர்களுடைய பிதாக்களின் கண்கள் நரகலான விக்கிரகங்களின்மேல் நோக்கமாயிருந்தது போல, இவர்களுடைய கண்களும் அவற்றின்மீது நோக்கமாயிருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார், வனாந்தரத்திலே, கர்த்தருக்கு விரோதமாக இரண்டகம்பண்ணினதுபோல, அவர்களுடைய பிள்ளைகளும், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய துரோகங்களினிமித்தமாகவும், பாவங்களினிமித்தமாகவும், அக்கிரமங்களினிமித்தமாகவும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் அவர்கள்மேல் வருகிறது.

"நான் அவர்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, அவர்களை தேசங்களிலே தூற்றிப்போடுகிறதற்கு வனாந்தரத்திலே ஆணையிட்டேன்" (எசே 20:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"மேலும், நன்மைக்கேதுவல்லாத கட்டளைகளையும் ஜீவனுக்கேதுவல்லாத நியாயங்களையும் நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (எசே 20:25) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள், வனாந்தரத்திலே, கர்த்தருக்கு விரோதமாக இரண்டகம்பண்ணியபோது, கர்த்தர் அவர்களை தண்டிப்பதற்கு, பல்வேறு உபாயங்களைக் கையாளுகிறார். அவர்கள்மீது வாதை வந்தது. அவர்களைக் கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடித்தது. கர்த்தர் இவற்றை தண்டனை என்று சொல்லாமல், "நியாயங்கள்" என்று சொல்லுகிறார். இவையெல்லாம் தேவனுடைய நியாயங்களாகவும், அவருடைய கட்டளைகளாகவும் இருக்கிறது. இந்த கட்டளைகள் இஸ்ரவேல் வம்சத்தாருடைய நன்மைக்கேதுவானவையல்ல. இந்த நியாயங்கள் அவர்களுடைய ஜீவனுக்கு ஏதுவானவையல்ல.

இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்தபோது, கர்த்தர் அவர்களை விடுவிப்பதாக கட்டளையிட்டார். அது அவர்களுடைய நன்மைக்கேதுவான கட்டளை. இப்போதோ அவர்களைத் தண்டிக்கவேண்டும் என்பதற்காக, கர்த்தர் அவர்களுக்கு நன்மைக்கேதுவல்லாத கட்டளைகளை கொடுக்கிறார்.

தமக்கு விரோதமாக இரண்டகம் பண்ணுகிற ஜனங்களுக்கு, கர்த்தர் சரீரப்பிரகாரமான தண்டனைகளையும் கொடுக்கிறார், சில சமயங்களில் அவர் ஆவிக்குரிய தண்டனைகளையும் கொடுக்கிறார். சரீரப்பிரகாரமான தண்டனைகளைவிட, ஆவிக்குரிய தண்டனைகளே, மிகவும் பயங்கரமானது. ஆவிக்குரிய தண்டனை அதிகரிக்கும்போது ஆவிக்குரிய மரணமுண்டாகும். அது நித்திய மரணமாயிருக்கும்.

தமக்கு விரோதமாக இரண்டகம்பண்ணுகிற ஜனங்களுக்கு, கர்த்தர் பாவத்தையே தண்டனையாகக் கொடுத்துவிடுகிறார்.

"அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்" (ரோம 1:23-26).

பாவிகள் பாவத்தின்மீது பிரியமாயிருக்கிறார்கள். பாவம் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். கர்த்தர் சில சமயங்களில், பாவிகளுக்கு, அவர்கள் விரும்புகிற பாவங்களையே, அவர்களுக்கு தண்டனையாகக் கொடுக்கிறார். முன்பு அவர்கள் பாவங்களை சந்தோஷமாய்ச் செய்தார்கள். அந்தப் பாவங்களே அவர்களுக்கு தண்டனையாக வரும்போது, பாவிகளின் ஜீவியம் பரிதாபமாயிருக்கும்.

"நான் கர்த்தர் என்று அவர்கள் அறியத்தக்கதாக, நான் அவர்களைப் பாழாக்கும்படி, அவர்கள் கர்ப்பந்திறந்து பிறக்கிறதையெல்லாம் தீக்கடக்கப்பண்ணி, இவ்விதமாய் அவர்களுடைய பலிகளினாலே அவர்களைத் தீட்டுப்படப்பண்ணினேன்" (எசே 20:26) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார், இஸ்ரவேலின் பரிசுத்தரை தங்கள் கர்த்தர் என்று அறிந்துகொள்ளவேண்டும். இதுவே கர்த்தருடைய நோக்கம்.

கானான் தேசம்
எசே 20:27-32

எசே 20:27. ஆகையால் மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் வம்சத்தாரோடே பேசி, அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், உங்கள் பிதாக்கள் இன்னும் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, என்னைத் தூஷித்தார்கள்.

எசே 20:28. அவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்திலே நான் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணினபின்பு, அவர்கள் உயர்ந்த ஒரு மேட்டையும் தழைத்த ஒரு விருட்சத்தையும் எங்கெங்கே கண்டார்களோ, அங்கங்கே தங்கள் பலிகளைச் செலுத்தி, அவ்விடங்களிலெல்லாம் எனக்கு எரிச்சல் உண்டாக்குகிற தங்கள் காணிக்கைகளைப் படைத்து, சுகந்த வாசனையான தங்கள் தூபங்களைக்காட்டி, தங்கள் பானபலிகளை வார்த்தார்கள்.

எசே 20:29. அப்பொழுது நான் அவர்களை நோக்கி: நீங்கள் போகிற அந்த மேடு என்னவென்று கேட்டேன்; அதினால் இந்நாள்வரைக்கும் அதற்குப் பாமா என்று பேர்.

எசே 20:30. ஆகையால் நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், உங்கள் பிதாக்களுடைய மார்க்கத்தின்படியே நீங்களும் தீட்டுப்பட்டவர்கள் அல்லவோ? அவர்களுடைய அருவருப்புகளை நீங்களும் பின்பற்றிச் சோரம்போகிறீர்கள் அல்லவோ?

எசே 20:31. நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் தீக்கடக்கப்பண்ணி, உங்கள் பலிகளைச் செலுத்துகிறபோது, இந்நாள்வரைக்கும் அவர்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களாலும் நீங்கள் தீட்டுப்படுவீர்களே; நீங்கள் என்னிடத்தில் விசாரிக்க இடங்கொடுப்பேனோ? இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் என்னிடத்தில் விசாரிக்கும்படி இடங்கொடுப்பதில்லை என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 20:32. மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே; உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லவேண்டிய செய்திகளை, கர்த்தர் எசேக்கியேலுக்கு தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கானான் தேசத்தில் பிரவேசித்து, அங்கே குடியேறினார்கள். "அவர்களுக்கு கொடுப்பேன்" என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஆணையிட்ட தேசத்திலே, அவர்களை பிரவேசிக்க பண்ணினார். அவர்களோ கர்த்தருக்கு விரோதமாய் இன்னும் துரோகம்பண்ணி, அவரைத் தூஷித்தார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்கள் பலமுறை கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். கர்த்தரோ தம்முடைய கோபத்தினாலும், நீதியினாலும் அவர்களை அழித்துப்போட சித்தமுள்ளவராயிருந்தார். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்களும் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பித்துக்கொண்டார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் நாற்பது வருஷங்களாக வனாந்தரத்திலே சுற்றி அலைந்தார்கள். அதன் பின்பு அவர்கள் கானான் தேசத்திலே பிரவேசித்தார்கள். இவர்கள் நரகத்தின் வாசல்கள் வழியாய் கடந்துவந்து, முடிவிலே பரலோகத்தில் பிரவேசித்திருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய இஸ்ரவேல் ஜனங்கள். ஆனாலும் இவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், உண்மையினாலும், அவர்களை கானான் தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணினார்.

இஸ்ரவேல் வம்சத்தார், வனாந்தரத்திலே, பலசமயங்களில் கர்த்தருக்கு விரோதமாக இரண்டாகம்பண்ணினாலும், கர்த்தர் தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அவர்களுக்கு காண்பித்தார். கர்த்தருடைய கிருபை மெய்யாகவே, இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே, மிகப்பெரிய அற்புதமாயிருக்கிறது. பாவம் செய்தவர்களுக்கு கர்த்தர் தம்முடைய நீதியான தண்டனையைக் கொடுக்காமல், அவர்களுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிப்பது மிகப்பெரிய அற்புதம்.

இஸ்ரவேல் வம்சத்தார், தங்களுடைய வனாந்தர பிரயாணத்தின் முடிவிலே, கானான் தேசத்திலே பிரவேசித்தார்கள். அவர்களெல்லோரும் சந்தோஷமாய் கானானிலே குடியேறினார்கள்.

கர்த்தருடைய ஜனங்கள், பல சமயங்களில், நரகத்தின் வாசல்கள் வழியாய் கடந்து வந்தாலும், அவர்கள் முடிவிலே பரலோகத்திற்குள் பிரவேசிப்பார்கள். பாவிகளும், துன்மார்க்கரும், மாய்மாலக்காரருமோ, பரலோகத்தின் வாசல்கள் வழியாய்க் கடந்து வந்தாலும், அவர்கள் முடிவிலே நரகத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தாலும், அவர்களுடைய இருதயத்தில் பரிசுத்தமான மாற்றம் எதுவும் உண்டாகவில்லை. அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்படவில்லை. அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தாலும், அவர்கள் தங்களுடைய பழைய பாவங்களோடேயே, அங்கே பிரவேசிக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை கானான் தேசத்திலே பிரவேசிக்கப் பண்ணின பின்பு, "அவர்கள் உயர்ந்த ஒரு மேட்டையும் தழைத்த ஒரு விருட்சத்தையும் எங்கெங்கே கண்டார்களோ, அங்கங்கே தங்கள் பலிகளைச் செலுத்தி, அவ்விடங்களிலெல்லாம் எனக்கு எரிச்சல் உண்டாக்குகிற தங்கள் காணிக்கைகளைப் படைத்து, சுகந்த வாசனையான தங்கள் தூபங்களைக்காட்டி, தங்கள் பானபலிகளை வார்த்தார்கள்" (எசே 20:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய கட்டளைகளைக் கொடுத்தார். தம்முடைய நியாயங்களைக் காண்பித்தார். அவர்களுக்கு போஜனம் கொடுத்தார். தண்ணீர் கொடுத்து, அவர்களுடைய தாகத்தைத் தீர்த்தார். அவர்கள் தமக்கு கீழ்ப்படிந்தபோது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களைப் பாதுகாத்து பராமரித்தார்.

அவர்கள் தமக்கு விரோதமாக கலகம்பண்ணியபோதோ, கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் ஜீவிக்கவில்லை. கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளுக்கு அவர்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கவில்லை. அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பும், கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள்.

கர்த்தர் அவர்களுடைய அருவருப்புக்களையும், விக்கிராராதனையையும் பார்த்து, "நீங்கள் போகிற அந்த மேடு என்ன" என்று கேட்கிறார். அதினால் இந்நாள் வரைக்கும் அதற்கு பாமா என்று பெயர் (எசே 20:29).

இஸ்ரவேலின் மூப்பர்களில் சிலர், கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி, எசேக்கியேலுக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறார்கள். எசேக்கியேல் அவர்களிடம், "உங்கள் பிதாக்களுடைய மார்க்கத்தின்படியே நீங்களும் தீட்டுப்பட்டவர்கள் அல்லவோ? அவர்களுடைய அருவருப்புகளை நீங்களும் பின்பற்றிச் சோரம்போகிறீர்கள் அல்லவோ?" (எசே 20:30) என்று கேட்கவேண்டும்.

இஸ்ரவேலின் மூப்பர் விக்கிரகாராதனைக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். தாங்கள் புறஜாதி ஜனத்தோடு எல்லா விஷயங்களிலும் ஒத்துப்போகவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். பாபிலோன் தேசம் விக்கிரகாராதனை நிரம்பிய தேசம். யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்திலிருப்பதினால், அவர்கள் கல்தேயரைப் பின்பற்றி, விக்கிரகங்களுக்கு தூபங்காட்டவேண்டும் என்று, இஸ்ரவேலின் மூப்பர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தை இஸ்ரவேலின் மூப்பருக்கு விரோதமாய் வருகிறது. கர்த்தருக்கும் பாகாலுக்கும் சம்பந்தமில்லை. நீதிக்கும் அநீதிக்கும் தொடர்பு இல்லை. அவர்கள் கர்த்தரையும் ஆராதித்து, விக்கிரகத்தையும் ஆராதித்தால், கர்த்தரும் அவர்களை ஆசீர்வதிக்கமாட்டார். விக்கிரகங்களும் அவர்களுக்கு உதவிசெய்யாது.

நாம் பாவமான காரியங்களோடு சமரசம் செய்துகொண்டால், நமக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள், கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய தேவனாயிருப்பார். நாம் அவருடைய பிள்ளைகளாகயிருப்போம்.

இஸ்ரவேலின் மூப்பர் மாய்மாலக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கேற்ற பிரகாரம் சிந்திக்காமல், தங்களுடைய சுயவிருப்பத்தின் பிரகாரம், தங்களுடைய சுயலாபத்திற்காக சிந்திக்கிறார்கள். அவர்கள் கர்த்தரையும் ஆராதிக்கவேண்டும் என்றும், அதே வேளையில் விக்கிரகங்களை ஆராதிப்பதினால் தப்பிதம் ஒன்றுமில்லை என்றும் புதிய உபதேசத்தைச் சொல்லுகிறார்கள். இது சம்பந்தமாக கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்காகவே, இஸ்ரவேலின் மூப்பர்கள் எசேக்கியேலினிடத்திற்கு வந்திருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேலின் மூப்பருக்கு தம்முடைய வார்த்தைகளை தெளிவாகச் சொல்லுகிறார். "நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் தீக்கடக்கப்பண்ணி, உங்கள் பலிகளைச் செலுத்துகிறபோது, இந்நாள்வரைக்கும் அவர்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களாலும் நீங்கள் தீட்டுப்படுவீர்களே; நீங்கள் என்னிடத்தில் விசாரிக்க இடங்கொடுப்பேனோ? இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் என்னிடத்தில் விசாரிக்கும்படி இடங்கொடுப்பதில்லை என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எசே 20:31) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

இஸ்ரவேலின் மூப்பர் கர்த்தரையும் ஆராதிக்கலாம், மரத்திற்கும் கல்லுக்கும் ஆராதனை செய்யலாம் என்று நினைக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய யோசனைக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே; உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை" (எசே 20:32) என்று கர்த்தர் தம்முடைய நீதியான வார்த்தைகளை இஸ்ரவேலின் மூப்பருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எசே 20:33-44

எசே 20:33. பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும், உங்களை ஆளுவேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 20:34. நீங்கள் ஜனங்களுக்குள் இராதபடிக்கு நான் உங்களைப் புறப்படப்பண்ணி, நீங்கள் சிதறியிருக்கிற தேசங்களில் இராதபடிக்கு நான் உங்களைப் பலத்தகையினாலும், ஓங்கிய புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும் கூடி வரச்செய்து,

எசே 20:35. உங்களை ஜனசதனங்களின் வனாந்தரத்திலே கொண்டுபோய், அங்கே உங்களோடே முகமுகமாய் வழக்காடுவேன்.

எசே 20:36. நான் எகிப்துதேசத்தின் வனாந்தரத்தில் உங்கள் பிதாக்களோடு வழக்காடினதுபோல உங்களோடும் வழக்காடுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 20:37. நான் உங்களைக் கோலின்கீழ் செல்லும்படி செய்து, உங்களை உடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்தி,

எசே 20:38. கலகக்காரரையும் துரோகிகளையும் உங்களைவிட்டுப் பிரித்துப்போடுவேன்; அவர்களைத் தாங்கள் தங்கும் தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுவேன்; ஆனாலும் அவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் பிரவேசிப்பதில்லை; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 20:39. இப்போதும் இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் என் சொல்லைக்கேட்க மனதில்லாதிருந்தால், நீங்கள் போய், அவனவன் தன் தன் நரகலான விக்கிரகங்களை இன்னும் சேவியுங்கள்; ஆனாலும் என் பரிசுத்த நாமத்தை உங்கள் காணிக்கைகளாலும் உங்கள் நரகலான விக்கிரகங்களாலும் இனிப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 20:40. இஸ்ரவேலின் உயரமான மலையாகிய என் பரிசுத்த மலையிலே இஸ்ரவேலுடைய எல்லா வம்சத்தாருமாகிய தேசத்திலுள்ள அனைவரும் என்னைச் சேவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; அங்கே அவர்கள்மேல் பிரியம் வைப்பேன்; அங்கே நீங்கள் பரிசுத்தம்பண்ணுகிற எல்லாவற்றிலும் உங்கள் காணிக்கைகளையும் உங்கள் முதற்பலன்களையும் செலுத்தும்படி கேட்பேன்.

எசே 20:41. நான் உங்களை ஜனங்களிலிருந்து புறப்படப்பண்ணி, நீங்கள் சிதறுண்டிருக்கிற தேசங்களிலிருந்து உங்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, சுகந்த வாசனையினிமித்தம் நான் உங்கள்பேரில் பிரியமாயிருப்பேன்; அப்பொழுது புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உங்களால் பரிசுத்தம்பண்ணப்படுவேன்.

எசே 20:42. உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசமாகிய இஸ்ரவேல் தேசத்திலே நான் உங்களைத் திரும்பிவரப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று நீங்கள் அறிந்துகொண்டு,

எசே 20:43. அங்கே உங்களுடைய எல்லா வழிகளையும் உங்களைத் தீட்டுப்படுத்தின உங்களுடைய எல்லாக் கிரியைகளையும் நினைத்து, நீங்கள் செய்திருந்த உங்களுடைய எல்லாப் பொல்லாப்புகளினிமித்தமும் உங்களை நீங்களே அருவருப்பீர்கள்.

எசே 20:44. இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளுக்குத் தக்கதாகவும், உங்கள் கெட்ட கிரியைகளுக்குத் தக்கதாகவும் நான் உங்களுக்குச் செய்யாமல், என் நாமத்தினிமித்தம் உங்களுக்குக் கிருபை செய்யும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் என்கிறதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். தாங்கள் பாபிலோன் தேசத்திலிருக்கும்போது, அந்த தேசத்தாருக்கு எல்லா விஷயங்களிலும் கீழ்ப்படியவேண்டும் என்றும், எல்லா காரியங்களிலும் அவர்களோடு ஒத்துப்போகவேண்டும் என்றும் இஸ்ரவேலின் மூப்பர் நினைக்கிறார்கள். யூதர்கள் கர்த்தரை ஆராதிக்கிறார்கள். கல்தேயரோ விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள், ஆராதனை விஷயத்திலும், கல்தேயரோடு ஒத்துப்போகவேண்டும் என்றும், அவர்களுடைய விக்கிரகாராதனையில் பங்குபெறவேண்டும் என்றும் இஸ்ரவேலின் மூப்பர்கள் நினைக்கிறார்கள். இதுவே அவர்களுடைய திட்டம். இதுவே அவர்களுடைய மனதில் எழும்புகிற நினைவு.

ஆனால் கர்த்தரோ அவர்களுடைய நினைவுக்கு விரோதமாக, தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே; உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை" *(எசே 20:32)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது, அவர்கள் தங்களுடைய பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும், கர்த்தரை நம்பாமல், கல்தேயரை நம்புகிறார்கள். பாபிலோன் அவர்களை பாதுகாக்காது என்றும், புறஜாதி தேசத்தார் அவர்களைப் பராமரிக்கமாட்டார்கள் என்றும், கர்த்தர் இஸ்ரவேலின் மூப்பருக்கு தெளிவாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய சமுகத்திலிருந்து தள்ளிவிட்டார். அவர்களுக்கு இதுவரையிலும் தாம் கொடுத்து வந்த பாதுகாப்பையும் பராமரிப்பையும் நிறுத்திவிட்டார். இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியில், இப்போது கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் இல்லை. கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்யவில்லையென்றால், மற்ற உதவிகளெல்லாமே அவர்களுக்கு வீணாயிருக்கும்.

கர்த்தரே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு ராஜாதி ராஜாவாகிய கர்த்தருடைய உதவி கிடைக்கவில்லையென்றால், அவர்களுக்கு இந்த உலகத்தின் எந்த ராஜாவாலும் உதவி செய்யமுடியாது. கர்த்தருடைய பிரசன்னம் தேவாலயத்தில் இல்லை. ஆகையினால் தேவாலயமும் அவர்களுக்கு உதவிசெய்யாது.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை, ஜனசதளங்களின் வனாந்தரத்திலே கொண்டுபோய், அங்கே அவர்களோடே முகமுகமாய் வழக்காடுவதாகச் சொல்லுகிறார் (எசே 20:35).

"நான் எகிப்துதேசத்தின் வனாந்தரத்தில் உங்கள் பிதாக்களோடு வழக்காடினதுபோல உங்களோடும் வழக்காடுவேன்" (எசே 20:36) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

வனாந்தரம் என்னும் வார்த்தை பாபிலோன் தேசத்தைக் குறிக்கலாம். "இப்பொழுது அது வறண்டதும் தண்ணீர் இல்லாததுமான வனாந்தர பூமியிலே நடப்பட்டிருக்கிறது" (எசே 19:13). அல்லது இந்த வார்த்தை எகிப்து தேசத்தின் வனாந்தரத்தைக் குறிக்கலாம். இந்த வனாந்தரத்தில் கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு வழக்காடுவார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக இரண்டகம்பண்ணினார்கள். கர்த்தருடைய கட்டளைகளுக்கும், நியாயங்களுக்கும் அவர்கள் கீழ்ப்படியவில்லை.

கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலே, மோசே மூலமாக, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, தம்முடைய பிரமாணங்களைக் கொடுத்தார். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தர் கொடுத்த பிரமாணத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய கட்டளைகள் வெளிப்படுத்தப்பட்டபோது, இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியில், பயமும், கலக்கமும், நடுக்கமும் உண்டாயிற்று. கர்த்தர் இப்போது அவர்களோடு வழக்காடும்போது, அவர்களுக்கு மறுபடியும் பயமும், கலக்கமும், நடுக்கமும் உண்டாகும்.

இஸ்ரவேல் வம்சத்தாரால் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியாது. அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்கவில்லையென்றால், வேறு எந்தப் பாதுகாப்பும் கிடைக்காது. இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருமே கர்த்தருடைய ஜனமாயிருந்தாலும், கர்த்தர் அவர்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கிறார். தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களை ஒரு பிரிவாகவும், தம்முடைய கட்டளைகளுக்கும் நியாயங்களுக்கும் கீழ்ப்படியாமல், தமக்கு விரோதமாக இரண்டகம்பண்ணுகிறவர்களை மற்றொரு பிரிவாகவும் கர்த்தர் பிரிக்கிறார்.

"நான் உங்களைக் கோலின்கீழ் செல்லும்படி செய்து, உங்களை உடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்தி, கலகக்காரரையும் துரோகிகளையும் உங்களைவிட்டுப் பிரித்துப்போடுவேன்; அவர்களைத் தாங்கள் தங்கும் தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுவேன்; ஆனாலும் அவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் பிரவேசிப்பதில்லை; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசே 20:37,38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், மேய்ப்பர்கள் தங்கள் மந்தையிலுள்ள ஆடுகளில் கர்த்தருக்கு தசமபாகம் செலுத்துவது வழக்கம். அதற்காக அவர்கள் தங்கள் மந்தையை, தங்கள் கோலின்கீழ் செல்லும்படி செய்வார்கள். எந்த ஆடு கர்த்தருக்குரியது என்று பிரித்து எடுப்பார்கள்.

"கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது" (லேவி 27:32).

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை, தம்முடைய கோலின்கீழ் செல்லும்படி செய்கிறார். அவர்களில் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டவர்களை, கர்த்தர் தமக்குரியவர்களாகப் பிரித்தெடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை உபத்திரவத்தின் கோலுக்கு கீழ் வழிநடத்தினார். அவர்களை மறுபடியுமாய் தம்முடைய உடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்தினார். கலகக்காரர்மீதும், துரோகிகள்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்தது. இஸ்ரவேல் வம்சத்தாரில் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் மாத்திரமே, இனிமேல் "இஸ்ரவேலர்" என்று அழைக்கப்படுவார்கள். இவர்கள் மாத்திரமே கர்த்தருக்கு பிரியமானவர்களாயிருப்பார்கள்.

கர்த்தருடைய சொல்லை, இஸ்ரவேல் வம்சத்தார் கேட்டு, அதற்கு கீழ்ப்படிந்தால், அவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். அவர்கள் கர்த்தருடையவர்களாயிருப்பார்கள். தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்களை கர்த்தர் தண்டித்தார். அவர்களை தம்முடைய உபத்திரவத்தின் கோலின்கீழ் செல்லும்படி செய்தார். இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை, அவர்களுடைய மனதின் விருப்பத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

"இப்போதும் இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் என் சொல்லைக்கேட்க மனதாயிருந்தால், கேளுங்கள்" (எசே 20:39) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய சொல்லைக்கேட்க மனதில்லாதிருந்தால், "நீங்கள் போய், அவனவன் தன் தன் நரகலான விக்கிரகங்களை இன்னும் சேவியுங்கள்; ஆனாலும் என் பரிசுத்த நாமத்தை உங்கள் காணிக்கைகளாலும் உங்கள் நரகலான விக்கிரகங்களாலும் இனிப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருங்கள்" (எசே 20:39) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் எந்த தேசத்திலிருந்தாலும், அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது. அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தர் அவர்களை மறுபடியுமாய், அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார். இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் பாபிலோனிலே இருந்தாலும், கல்தேயரின் விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது. கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும்.

கர்த்தர் தமக்கு சித்தமான வேளையில், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை, அங்கே இருந்து விடுதலைபண்ணி, அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து, அங்கே மறுபடியுமாய் குடியேற்றுவார். அப்பொழுது இஸ்ரவேலின் உயரமான மலையாகிய என் பரிசுத்த மலையிலே இஸ்ரவேலுடைய எல்லா வம்சத்தாருமாகிய தேசத்திலுள்ள அனைவரும் என்னைச் சேவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசே 20:40).

"அங்கே அவர்கள்மேல் பிரியம் வைப்பேன்; அங்கே நீங்கள் பரிசுத்தம்பண்ணுகிற எல்லாவற்றிலும் உங்கள் காணிக்கைகளையும் உங்கள் முதற்பலன்களையும் செலுத்தும்படி கேட்பேன். நான் உங்களை ஜனங்களிலிருந்து புறப்படப்பண்ணி, நீங்கள் சிதறுண்டிருக்கிற தேசங்களிலிருந்து உங்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, சுகந்த வாசனையினிமித்தம் நான் உங்கள்பேரில் பிரியமாயிருப்பேன்; அப்பொழுது புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உங்களால் பரிசுத்தம்பண்ணப்படுவேன்" (எசே 20:40,41) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்துவார். அப்போது அவர்கள் கர்த்தரை அறிந்துகொள்வார்கள். தாங்கள் செய்த விக்கிரகாராதனையை இஸ்ரவேல் புத்திரர் அருவருப்பார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் தங்களைத் தண்டிக்காமல், கர்த்தர் தங்களுக்கு கிருபையையும், இரக்கத்தையும் காண்பித்ததை இஸ்ரவேல் வம்சத்தார் புரிந்துகொள்வார்கள்.

"உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசமாகிய இஸ்ரவேல் தேசத்திலே நான் உங்களைத் திரும்பிவரப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று நீங்கள் அறிந்துகொண்டு, அங்கே உங்களுடைய எல்லா வழிகளையும் உங்களைத் தீட்டுப்படுத்தின உங்களுடைய எல்லாக் கிரியைகளையும் நினைத்து, நீங்கள் செய்திருந்த உங்களுடைய எல்லாப் பொல்லாப்புகளினிமித்தமும் உங்களை நீங்களே அருவருப்பீர்கள். இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளுக்குத் தக்கதாகவும், உங்கள் கெட்ட கிரியைகளுக்குத்தக்கதாகவும் நான் உங்களுக்குச் செய்யாமல், என் நாமத்தினிமித்தம் உங்களுக்குக் கிருபை செய்யும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசே 20:42-44) என்கிறதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எருசலேம்
எசே 20:45-49

எசே 20:45. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர்:

எசே 20:46. மனுபுத்திரனே, நீ உன் முகத்தைத் தென்திசைக்கு நேரே திருப்பி, தெற்குக்கு விரோதமாக உன் வசனத்தைப் பொழிந்து, தென்புறமான வயல்வெளியின் காட்டுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து,

எசே 20:47. தென்திசைக் காட்டை நோக்கி: கர்த்தருடைய வார்த்தையைக் கேள், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன்னில் அக்கினியைக் கொளுத்துவேன்; அது உன்னில் பச்சையான சகல மரங்களையும் பட்டுப் போன சகல மரங்களையும் பட்சிக்கும்; ஜுவாலிக்கிற ஜுவாலை அவிக்கப்படமாட்டாது; தெற்கு துவக்கி வடக்குமட்டுமுள்ள தேசமெங்கும் அதினால் வெந்துபோகும்.

எசே 20:48. கர்த்தராகிய நான் அதைக் கொளுத்தினேன் என்பதை எல்லா மாம்சமும் காணும்; அது அவிக்கப்படுவதில்லை என்று சொல் என்றார்.

எசே 20:49. அப்பொழுது நான்: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இவன் உவமைகளையல்லவோ சொல்லுகிறான் என்று அவர்கள் என்னைக் குறித்துச் சொல்லுகிறார்கள் என்றேன்.

கர்த்தர் யூதாவுக்கு விரோதமாகவும், எருசலேமுக்கு விரோதமாகவும் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எசேக்கியேல் 21-ஆவது அதிகாரத்தின் முன்னுரையாக, இந்த வார்த்தைகள், இந்த அதிகாரத்தின் பின்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் யூதாவுக்கு விரோதமாகவும், எருசலேமுக்கு விரோதமாகவும் சொல்லுகிற தீர்க்கதரிசனத்தின் தாற்பரியம், அடுத்த அதிகாரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் மூப்பரில் சிலர் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி, எசேக்கியேலினிடத்திற்கு வந்திருக்கிறார்கள். எசேக்கியேல் அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எசேக்கியேல் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள் உவமைகளாயிருக்கிறது. இஸ்ரவேலின் மூப்பர்களால் அந்த உவமைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள், "இவன் உவமைகளையல்லவோ சொல்லுகிறான்" (எசே 20:49) என்று எசேக்கியேலைக் குறித்து சொல்லுகிறார்கள்.

எசேக்கியேல் வயல்வெளியின் காட்டுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அவர் தன்னுடைய முகத்தை தென்திசைக்கு நேரே திருப்பி, தெற்குக்கு விரோதமாக, கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "வயல்வெளியின் காடு" என்பது யூதாவையும், எருசலேமையும் குறிக்கும் வார்த்தையாகும். இவை இரண்டும் பாபிலோன் தேசத்திற்கு தென்திசையிலிருக்கிறது. ஆகையினால் எசேக்கியேல் தன் முகத்தை தென்திசைக்கு நேரே திருப்பி, கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று. கர்த்தர் அன்பான வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தர் எசேக்கியேலிடம், யூதாவுக்கு விரோதமாகவும், எருசலேமுக்கு விரோதமாகவும், தம்முடைய கோபமான வார்த்தைகளைச் சொன்னாலும், எசேக்கியேல் அந்த வார்த்தைகளை மிகுந்த கரிசனையோடும், அன்போடும் சொல்லுகிறார்.

"மனுபுத்திரனே, நீ தெற்குக்கு விரோதமாக உன் வசனத்தைப் பொழிந்து, தென்புறமான வயல்வெளியின் காட்டுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரை" என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார். மழை தொடர்ந்து பொழிவதுபோல, எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை, யூதாவுக்கு விரோதமாகப் பொழியவேண்டும். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையினால் அவர்களுடைய இருதயங்கள் மென்மையாகவேண்டும்.

"மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்" (உபா 32:2).

யூதாவும் எருசலேமும் இந்த வசனப்பகுதியில், "வயல்வெளியின் காடு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. எருசலேம் வனாந்தரத்தைப்போலவும், காட்டைப்போலவும், கனியில்லாமல் வெறுமையாயிருக்கிறது. வயல்வெளியின் காட்டில் கனிவிருட்சங்கள் முளைக்காது. யூதாவும் எருசலேமும் ஒரு காலத்தில் கர்த்தருடைய தோட்டமாகயிருந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் வயல்வெளியின் காடாகயிருக்கிறார்கள். யூதாவிலும் எருசலேமிலும் திராட்சச்செடிகள் முளைப்பதற்குப் பதிலாக, முள்ளும் நெரிஞ்சிலும் முளைத்திருக்கிறது.

கர்த்தர் யூதாவின்மேலும், எருசலேமின்மேலும் அக்கினியை கொழுத்தபோவதாகச் சொல்லுகிறார். "இதோ, நான் உன்னில் அக்கினியைக் கொளுத்துவேன்; அது உன்னில் பச்சையான சகல மரங்களையும் பட்டுப் போன சகல மரங்களையும் பட்சிக்கும்; ஜுவாலிக்கிற ஜுவாலை அவிக்கப்படமாட்டாது; தெற்கு துவக்கி வடக்குமட்டுமுள்ள தேசமெங்கும் அதினால் வெந்துபோகும்" (எசே 20:47) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பூர்வகாலத்தில், கர்த்தர் யூதாதேசத்தையும் எருசலேமையும் பாதுகாத்தார். அவர்களுக்கு அக்கினி மதிலாகயிருந்து, அவர்களை சத்துருக்களுக்கு விலக்கி காத்துக்கொண்டார். இப்போதோ கர்த்தரே அவர்களில் அக்கினியை கொளுத்துகிறார். "கர்த்தராகிய நான் அதைக் கொளுத்தினேன் என்பதை எல்லா மாம்சமும் காணும்; அது அவிக்கப்படுவதில்லை" (எசே 20:48) என்று கர்த்தர் தமது கோபத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் கொளுத்தும் அக்கினியினால் தெற்கு துவக்கி வடக்கு மட்டுமுள்ள தேசமெங்கும் வெந்துபோகும். கானான் தேசத்தின் தெற்கு பகுதியிலிருந்து வடக்கு பகுதி வரையிலும், பெயர்செபாவிலிருந்து தாண் வரையிலும், அந்த அக்கினியினால் வெந்துபோகும்.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளை உவமையினால் சொல்லுகிறார். இஸ்ரவேலின் மூப்பர்களால் இந்த உவமைகளின் விளக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

21 அதிகாரம்

எசேக்கியேல் 20-ஆவது அதிகாரத்தில், கர்த்தர் தென்புறமான வயல்வெளியின் காட்டில் அக்கினியைக் கொளுத்துவதாகச் சொன்னார். இந்த அதிகாரத்தில் அந்த தீர்க்கதரிசனத்திற்கு விளக்கம் சொல்லுகிறார் (எசே 21:1-5). எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, அவர் தன்னுடைய இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடவேண்டும் (எசே 21:6,7).

யூதாதேசத்திற்கு விரோதமாக கர்த்தருடைய பட்டயம் வருகிறது (எசே 21:8-17). பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாக வருவான் (எசே 21:18-24). யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவுக்கு தண்டனை கொடுக்கப்படும் (எசே 21:25-27). அம்மோன் புத்திரருக்கு அழிவு வரும் (எசே 21:28-32).

எருசலேமுக்கு விரோதமாக துர்ச்செய்தி எசே 21:1-7

எசே 21:1. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 21:2. மனுபுத்திரனே, நீ உன் முகத்தை எருசலேமுக்கு நேராகத் திருப்பி, பரிசுத்த ஸ்தலங்களுக்கு விரோதமாக உன் வசனத்தைப் பொழிந்து, இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து,

எசே 21:3. இஸ்ரவேல் தேசத்தை நோக்கி, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து, என் பட்டயத்தை அதின் உறையிலிருந்து உருவி, உன்னில் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணுவேன்.

எசே 21:4. நான் உன்னில் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணப்போகிறபடியினால் தெற்கு துவக்கி வடக்குமட்டுமுள்ள எல்லா மாம்சத்துக்கும் விரோதமாய் என் பட்டயம் அதின் உறையிலிருந்து புறப்படும்.

எசே 21:5. அப்பொழுது கர்த்தராகிய நான் என் பட்டயத்தை அதின் உறையிலிருந்து உருவினேன் என்பதை எல்லா மாம்சமும் அறியும்; அது இனி உறைக்குள் திரும்புவதில்லை.

எசே 21:6. ஆதலால் மனுபுத்திரனே, உன் இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடு; அவர்கள் கண்களுக்கு முன்பாக மனங்கசந்து பெருமூச்சுவிடு.

எசே 21:7. நீ எதினிமித்தம் பெருமூச்சு விடுகிறாய் என்று அவர்கள் உன்னிடத்தில் கேட்டால், நீ அவர்களை நோக்கி: துர்ச்செய்தி வருகிறதினிமித்தமே; அதினால், இருதயங்களெல்லாம் உருகி, கைகளெல்லாம் தளர்ந்து, மனமெல்லாம் தியங்கி, முழங்கால்களெல்லாம் தண்ணீரைப்போல அலைவுண்ணும்; இதோ, அது வந்து சம்பவிக்கும் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எசேக்கியேல் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட செய்திகளை, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, உண்மையாய் அறிவிக்கிறார். கர்த்தருடைய வார்த்தை அவருக்கு மறுபடியும் உண்டாயிற்று. கர்த்தர் விடுகதைகள் மூலமாகவும், உவமைகள் மூலமாகவும் இஸ்ரவேல் வம்சத்தாரோடு பேசுகிறார். கர்த்தர் அந்த விடுகதைகளுக்கும் உவமைகளுக்கும் விளக்கத்தையும் சொல்லுகிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி எருசலேமுக்கு நேராக தன்னுடைய முகத்தைத் திருப்பிக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும். எசேக்கியேல் பரிசுத்த ஸ்தலங்களுக்கு விரோதமாக தன்னுடைய வசனத்தை மழை போல் பொழியவேண்டும்.

யுத்தவீரர் அம்பைக்குறி பார்த்து எய்வதுபோல, எசேக்கியேல் தீர்க்கதரிசி தன்னுடைய வில்லையும் அம்பையும் எருசலேமுக்கு நேராக திருப்பி குறிபார்த்துக்கொண்டிருக்கிறார். கானான் தேசம் பரிசுத்தமான தேசம். எருசலேம் பரிசுத்தமான நகரம். தேவாலயம் பரிசுத்த ஸ்தலம். எசேக்கியேல் இந்த பரிசுத்த ஸ்தலங்களுக்கு விரோதமாக தன்னுடைய வசனத்தை மழையைப்போல் பொழியவேண்டும்.

கர்த்தர் எருசலேமின் அழிவைப்பற்றிச் சொன்னபோது, "தென்புறமான வயல்வெளியின் காட்டில் அக்கினியைக் கொளுத்துவேன்" *(எசே 20:46,47)* என்று சொன்னார். இந்த அக்கினி யுத்தத்தின் பட்டயத்தைக் குறிக்கிறது. யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம் வரும். கானான் தேசம் அழிந்துபோகும்.

கர்த்தர் கானான் தேசத்திற்கும், யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் வரும் அழிவைப்பற்றிச் சொல்லுகிறார். "இதோ, நான் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வந்து, என் பட்டயத்தை அதின் உறையிலிருந்து உருவி, உன்னில் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணுவேன்" *(எசே 21:3)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அக்கினி பச்சையான சகல மரங்களையும், பட்டுப்போன சகல மரங்களையும் பட்சிக்கும். அதுபோலவே கர்த்தருடைய பட்டயம் இஸ்ரவேல் வம்சத்தாரில், சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணும்.

நீதிமான்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு புறப்பட்டுப்போவார்கள். இஸ்ரவேல் தேசத்தில் நீதிமான்கள் இருக்கமாட்டார்கள். "கர்த்தர் நீதிமானை சங்காரம்பண்ணுவார்" என்னும் வாக்கியத்திற்கு, அவர்களை யூதாதேசத்தில் இருக்க முடியாதபடி, பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்புவார் என்பது பொருளாகும்.

நேபுகாத்நேச்சார் யூதாவின்மீது யுத்தம்பண்ணி, தேசத்திலுள்ள பிரதானிகளையும், ஞானிகளையும், பராக்கிரமசாலிகளையும் சிறைப்பிடித்து, தன்னுடைய தேசத்திற்கு கொண்டு போனான். அவர்களில் தானியேல், எசேக்கியேல், மேலும் இவர்களைப்போன்ற நீதிமான்கள் அநேகர் இருந்தார்கள். இவர்களெல்லோரும் இஸ்ரவேல் தேசத்திலிருந்து சங்காரமாகி, பாபிலோன் தேசத்திற்கு புறப்பட்டுப்போனார்கள்.

துன்மார்க்கருக்கு ஜீவமோசம் வருகிறது. கல்தேயர்கள் அவர்களை பட்டயத்தால் வெட்டிக் கொன்றுபோடுகிறார்கள். நீதிமான்களையோ கல்தேயர்கள் தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகிறார்கள். மொத்தத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கு சங்காரமுண்டாயிற்று. தேசத்தில் துன்மார்க்கனும் இல்லை. சன்மார்க்கனும் இல்லை. இஸ்ரவேல் தேசம் குடியில்லாத வனாந்தரமாயிற்று.

சன்மார்க்கனுக்கு கர்த்தருடைய கிருபைகளும், ஆறுதலும் கிடைக்கும். இஸ்ரவேல் தேசத்திலுள்ள நல்ல அத்திபழங்களெல்லாம், அவர்களுக்கு நன்மையுண்டாக, பாபிலோன் தேசத்திற்கு அனுப்பப்படுகிறது.

"நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன். அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்" *(எரே 24:5,6)*.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கல்தேயர் மூலமாய் அழிவு உண்டாயிற்று. நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டான். அவன் உலகப்பிரகாரமான மனுஷனாகயிருந்தாலும், கர்த்தர் தம்முடைய சித்தத்தை நேபுகாத்நேச்சார் மூலமாய் நிறைவேற்றுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் மனந்திரும்புவதற்கு கர்த்தர் ஏராளமான வாய்ப்புக்களைக் கொடுத்தார். ஆனால் அவர்களோ, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்கள் பாவங்களில் நிலைத்திருக்கிறார்கள். தொடர்ந்து துணிகரமான பாவங்களை செய்கிறார்கள். கர்த்தருடைய கோபமும், நீதியான நியாயத்தீர்ப்பும் அவர்கள்மீது வருகிறது.

"நான் உன்னில் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணப் போகிறபடியினால் தெற்கு துவக்கி வடக்குமட்டுமுள்ள எல்லா மாம்சத்துக்கும் விரோதமாய் என் பட்டயம் அதின் உறையிலிருந்து புறப்படும். அப்பொழுது கர்த்தராகிய நான் என் பட்டயத்தை அதின் உறையிலிருந்து உருவினேன் என்பதை எல்லா மாம்சமும் அறியும்; அது இனி உறைக்குள் திரும்புவதில்லை" (எசே 21:4,5) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாகச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தின்மீது தேவனுடைய கோபம் வந்து இறங்கும்போது, அந்த தேசம் அழிந்துபோகும். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பட்டயத்தினால் சங்காரமாவார்கள். ஒருவரும் மீதியாயிருக்க மாட்டார்கள். யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் சர்வநாசமும், சர்வமோசமும், சர்வசங்காரமும் உண்டாகும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக, கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, அவருடைய இருதயத்தில் துக்கம் நிரம்பியிருக்கவேண்டும். அவர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது கரிசனையோடு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். யூதாமனுஷரின் அழிவைப் பார்த்து, எசேக்கியேலும் கலங்கவேண்டும்.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, உணர்வில்லாத எந்திரம்போல பேசாமல், உணர்வோடும், இஸ்ரவேல் வம்சத்தார்மீது கரிசனையோடும் பேசவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எசேக்கியேல் தன்னுடைய இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடவேண்டும். அவர்கள் கண்களுக்கு முன்பாக எசேக்கியேல் மனங்கசந்து பெருமூச்சுவிடவேண்டும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி, இஸ்ரவேல் வம்சத்தாரிடம், கர்த்தருடைய வார்த்தைகளை, பெருமூச்சுவிட்டு சொல்லும்போது, பெருமூச்சு விடுவதற்கான காரணத்தை அவர்கள் விசாரிப்பார்கள். "நீ எதினிமித்தம் பெருமூச்சுவிடுகிறாய்" என்று அவர்கள் எசேக்கியேலினிடத்தில் கேட்பார்கள். எசேக்கியேல் அவர்களுக்கு என்ன பிரதியுத்தரம் சொல்லவேண்டும் என்றும், கர்த்தர் இங்கு வெளிப்படுத்துகிறார்.

எசேக்கியேல் அவர்களை நோக்கி, "துர்ச்செய்தி வருகிறதினிமித்தமே; அதினால், இருதயங்களெல்லாம் உருகி, கைகளெல்லாம் தளர்ந்து, மனமெல்லாம் தியங்கி, முழங்கால்களெல்லாம் தண்ணீரைப்போல அலைவுண்ணும்; இதோ, அது வந்து சம்பவிக்கும் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்" (எசே 21:7) என்று சொல்லவேண்டும்.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, அவருடைய வாய் பேசவேண்டும். அவருடைய இருதயம் அவர்களுக்காக மனங்கசந்து அழவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மிகப்பெரிய அழிவும், நாசமும், மோசமும் வரப்போகிறது.

கர்த்தருடைய பட்டயம் எசே 21:8-17

எசே 21:8. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 21:9. மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டியது என்னவென்றால்: பட்டயம் கூர்மையாக்கப்பட்டது, பட்டயம் கூர்மையாக்கப்பட்டது; அது துலக்கப்பட்டுமிருக்கிறது.

எசே 21:10. மகா சங்காரஞ்செய்வதற்கு அது கூர்மையாக்கப்பட்டிருக்கிறது; மின்னத்தக்கதாய் அது துலக்கப்பட்டிருக்கிறது; சந்தோஷப்படுவோமோ? அது என் குமாரனுடைய கோல், அது சகல விருட்சங்களையும் அலட்சியம்பண்ணும்.

எசே 21:11. அதைக் கையாடும்படி அதைத் துலக்கக் கொடுத்தார்; கொல்லுகிறவன் கையிலே கொடுக்கும்படி அந்தப் பட்டயம் கூர்மையாக்கப்பட்டிருக்கிறது; அது துலக்கப்பட்டதுமாயிருக்கிறது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்.

எசே 21:12. மனுபுத்திரனே, நீ ஓலமிட்டு அலறு; பட்டயம் என் ஜனத்தின்மேல் வரும்; அது இஸ்ரவேல் பிரபுக்கள் எல்லார் மேலும் வரும்; அதினிமித்தம் என் ஜனத்துக்குள்ளே திகில் உண்டாயிருக்கும்; ஆகையால் உன் விலாவிலே அடித்துக்கொள்.

எசே 21:13. யாவையும் கண்டிக்கிற கோல் வந்தாலொழிய இனிச் சோதனையினால் தீருகிறதென்னவென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 21:14. ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் சொல்லி, கையோடே கைகொட்டு; பட்டயம் மூன்றுதரம் இரட்டித்துவரும்; அது கொலையுண்டவர்களின் பட்டயம்; அது கொலையுண்ணப்போகிற பெரியவர்களின் உள்ளறைகளில் பிரவேசிக்கிற பட்டயம்.

எசே 21:15. அவர்களுடைய இருதயம் கரைந்து, அவர்களுடைய இடையூறுகள் திரளாகும்படி, பட்டயத்தின் கூர்மையை அவர்களுடைய எல்லா வாசல்களுக்கும் நேரிடக் கட்டளையிடுவேன்; ஆ, அது மின்னும்படியாகப் பதமிடப்பட்டது, வெட்டும்படியாகத் தீட்டிவைக்கப்பட்டது.

எசே 21:16. ஏகபலமாய் வலதுபுறமாக வெட்டு, திரும்பி இடதுபுறமாகவும் வெட்டு; உன்முகம் திரும்புகிற திக்கெல்லாம் வெட்டு.

எசே 21:17. நானும் கையோடே கைகொட்டி, என் உக்கிரத்தை ஆறப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய நான் சொன்னேன் என்றார்.

கர்த்தருடைய பட்டயத்தைப்பற்றி எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. கர்த்தர் தம்முடைய பட்டயத்தை அதன் உரையிலிருந்து உருவுவார். இஸ்ரவேல் தேசத்தில் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணுவார். கர்த்தருடைய பட்டயம் அதின் உரையிலிருந்து தெற்கு துவக்கி, வடக்கு மட்டுமுள்ள எல்லா மாம்சத்திற்கு விரோதமாகப் புறப்படும் (எசே 21:3,4). தம்முடைய பட்டயம் இனி உரைக்குள் திரும்புவதில்லை (எசே 21:5) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இந்த வசனப்பகுதியில், தம்முடைய பட்டயத்தைப்பற்றி இன்னும் ஏராளமான காரியங்களை எசேக்கியேலுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய பட்டயம் கூர்மையாக்கப்பட்டிருக்கிறது. அது துலக்கப்பட்டிருக்கிறது. "மகா சங்காரஞ் செய்வதற்கு அது கூர்மையாக்கப்பட்டிருக்கிறது; மின்னத்தக்கதாய் அது துலக்கப்பட்டிருக்கிறது" (எசே 21:10) என்று கர்த்தர் தம்முடைய பட்டயத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பட்டயம் யாருக்கு விரோதமாக நீட்டப்படுகிறதோ, அவர்களுக்கு திகிலும், கலக்கமும், பயமும் உண்டாகும். கர்த்தருடைய பட்டயம் இரும்பு ஆயுதம். அது சகல விருட்சங்களையும் அலட்சியம்பண்ணும். எல்லா விருட்சங்களையும் வெட்டி கீழே தள்ளிவிடும். கர்த்தருக்கு விரோதமாக யார் பெருமை பாராட்டினாலும், கர்த்தருடைய பட்டயம் அவர்களை வெட்டி, கீழே சாய்த்து, அவர்களைத் தாழ்த்திப்போடும். அவர்களை அலட்சியம் பண்ணிவிடும்.

கர்த்தருடைய பட்டயம் அவருடைய குமாரனுடைய கோலாகவும் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் பாவம் செய்யும்போது, குமாரனுடைய கோல் அவர்களை கண்டித்து திருத்துகிறது. கர்த்தருடைய பட்டயம் அவருடைய பிள்ளைகளை சிட்சிக்கும் மிலாறாகவும் இருக்கிறது.

"நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்; அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்" (2சாமு 7:14).

கர்த்தருடைய பட்டயம் அவருக்கு பிரியமான ஜனங்களை முற்றிலுமாய் அதம்பண்ணிப்போடாது. கர்த்தருடைய பட்டயம், அவருடைய சத்துருக்களுக்கு பட்டயமாகயிருக்கும், அவருடைய பிள்ளைகளுக்கோ, அவருடைய குமாரனின் கோலாகயிருக்கும்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தை கொல்லுகிறவன் கையிலே கொடுக்கிறார். கர்த்தருடைய பட்டயத்தை ஒரு விளையாட்டுப்பொருளாகவோ, அல்லது வேடிக்கை காண்பிக்கும் பொருளாகவோ யாரும் பயன்படுத்த முடியாது. கர்த்தருடைய பட்டயம் கூர்மையாக்கப்பட்டிருக்கிறது. அது துலக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் பட்டயத்தின் தம்முடைய அழகை பார்த்து ரசிப்பதற்காக, அதைக் கூர்மைப்படுத்தவில்லை. தம்முடைய சித்தத்தின் பிரகாரம் அந்தப் பட்டயத்தை கையாடும்படி, கர்த்தர் அதை துலக்கக் கொடுத்திருக்கிறார். கூர்மையாக்கப்பட்டு, துலக்கப்பட்டிருக்கிற பட்டயம், கொல்லுகிறவன் கையிலே கொடுக்கப்படும். அவன் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவான் (எசே 21:11).

கர்த்தர் தம்முடைய பட்டயத்தை யாருக்கு விரோதமாக அனுப்புவார் என்பதையும் கர்த்தர் வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய பட்டயம் அவருடைய ஜனத்தின்மேல் வரும். அது இஸ்ரவேல் பிரபுக்கள் எல்லார்மேலும் வரும் (எசே 21:12).

கர்த்தர் தம்முடைய பட்டயத்தினால், சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணுவார். புறஜாதியாரின் பட்டயம் கர்த்தருடைய ஜனத்தின்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய பட்டயம் தங்களைப் பாதுகாக்கும் பட்டயம் என்று இஸ்ரவேல் வம்சத்தார் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய பட்டயமோ, அவருடைய ஜனத்தின்மேல் வருகிறது. இதன் நிமித்தம் கர்த்தருடைய ஜனத்திற்குள்ளே திகில் உண்டாயிருக்கும்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தை இஸ்ரவேல் பிரபுக்கள் மேல் விசேஷமாய் அனுப்புகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருமே பாவிகளாகயிருக்கிறார்கள். அவர்களுடைய பிரபுக்களோ பாவிகளில் பிரதான பாவிகளாகயிருக்கிறார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியில் கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, அவர் தன்னுடைய விலாவில் அடித்துக்கொண்டு, தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும்.

கர்த்தருடைய பட்டயம் அவருடைய ஜனத்தின்மேலும் வந்திருக்கிறது. இஸ்ரவேல் பிரபுக்கள் எல்லார்மேலும் வந்திருக்கிறது. "யாவையும் கண்டிக்கிற கோல் வந்தாலொழிய இனிச் சோதனையினால் தீருகிறது என்ன" (எசே 21:13) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை சோதனைகள் மூலமாய் திருத்துவதற்கு முயற்சி பண்ணினார். ஆனால் அது பலன் தரவில்லை. அவர்கள் திருந்தவில்லை. இப்போது அவர்களை கண்டிப்பதற்கு கர்த்தர் தம்முடைய கோலாகிய பட்டயத்தைப் பயன்படுத்துகிறார்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தைப்பற்றி விவரிக்கிறார். கர்த்தருடைய பட்டயம் கூர்மையாக்கப்பட்டிருந்தாலும், அது துலக்கப்பட்டிருந்தாலும், அந்த பட்டயம் கர்த்தருடைய பிள்ளைகளை மட்டாய்த் தண்டிக்கும். தம்முடைய பிள்ளைகளை திருத்தவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். அவர்கள் பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைக்கவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகங்களைவிட்டு விலகி கர்த்தரிடத்திற்கு திரும்பி வரவேண்டும். இதுவே கர்த்தருக்குப் பிரியம். பாவிகளை அழிப்பது கர்த்தருக்கு பிரியமல்ல.

கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை கோபத்தோடு சொல்லுகிறார். இந்த கோபத்திற்கு மத்தியிலும் கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அன்பும், கரிசனையும் வெளிப்படுகிறது. கர்த்தருடைய பட்டயம் சத்துருக்களுக்கு பட்டயமாகவே இருக்கும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கோ அது கோலாகயிருக்கும்.

கர்த்தருடைய பட்டயம் இஸ்ரவேல் ஜனத்தின்மேலும், இஸ்ரவேல் பிரபுக்கள் மேலும் வரும்போது, கர்த்தருடைய ஜனத்திற்குள்ளே திகில் உண்டாயிருக்கும். அவர்கள் திகிலடைந்து, பயத்தினால் நடுங்கும்போது, கர்த்தருடைய ஆறுதலான வார்த்தையும் அவர்களுக்கு வருகிறது.

கர்த்தர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு தம்முடைய பட்டயத்தை, இஸ்ரவேல் வம்சத்தார்மீது அனுப்புகிறார். இது அவர்களுக்கு "ஒரு சோதனை". கர்த்தர் தம்முடைய ஜனத்தை பட்டயத்தினால் சோதிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, அவருடைய பட்டயம் சோதனையே அல்லாமல், அது அவர்களுக்கு சங்காரமல்ல.

இஸ்ரவேல் ஜனங்கள் பட்டயத்தினால் சோதிக்கப்படுகிறார்கள். சோதிக்கப்பட்ட பின்பு அவர்கள் பொன்னாக விளங்குவார்கள். சோதனையும் அவர்களுடைய நன்மைக்காகவே வந்திருக்கிறது. சோதனையினால், அவர்கள் கர்த்தர்மீது வைத்திருக்கும் விசுவாசம் உறுதிப்படும். அவர்கள் விசுவாசத்தில் தேர்ச்சி பெறுவார்கள்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லும்போது, அந்த வார்த்தைகள் இஸ்ரவேல் வம்சத்தாரையும் பாதிக்கவேண்டும், எசேக்கியேல் தீர்க்கதரிசியையும் பாதிக்கவேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாகச் சொல்லப்படுகிறது. கர்த்தருடைய கோபமான வார்த்தைகளைக்கேட்டு யூதாவின் மனுஷரும் திகிலடையவேண்டும். எசேக்கியேலும் வேதனைப்படவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியைப் பார்த்து, "ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் சொல்லி, கையோடே கைகொட்டு; பட்டயம் மூன்றுதரம் இரட்டித்துவரும்; அது கொலையுண்டவர்களின் பட்டயம்; அது கொலையுண்ணப்போகிற பெரியவர்களின் உள்ளறைகளில் பிரவேசிக்கிற பட்டயம்" (எசே 21:14) என்று சொல்லுகிறார்.

"கையோடு கைகொட்டுதல்" என்னும் வார்த்தைக்கு அழுது புலம்புதல் என்று பொருள். புலம்பற்காரர்கள் அழும்போது, அவர்கள் தங்கள் கைகளால் தங்கள் மார்பில் அடித்துக்கொள்வார்கள். தங்கள் கையோடு கைகொட்டுவார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை, புலம்பல் பாடுவதுபோல பாடி சொல்லவேண்டும்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தின் கூர்மையை, இஸ்ரவேலின் எல்லா வாசல்களுக்கு விரோதமாகவும் நீட்டுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பட்டயத்திற்கு தப்பிக்கும்படி பல உபாயங்களை யோசிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உபாயங்கள் எதுவும் சித்திக்காது. கர்த்தருடைய பட்டயம் அவர்கள் நம்புகிற எல்லா உபாயங்களுக்கு விரோதமாக வரும்.

அவர்களுடைய நம்பிக்கையெல்லாம் அற்றுப்போகும். அவர்களுடைய இருதயம் கரைந்துபோகும். அவர்களுடைய இடையூறுகள் திரளாகும். கர்த்தர் தம்முடைய பட்டயத்தின் கூர்மையை அவர்களுடைய எல்லா வாசல்களுக்கும் நேரிட கட்டளையிடுவார்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தைப்பற்றி இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். "ஆ, அது மின்னும்படியாகப் பதமிடப்பட்டது, வெட்டும்படியாகத் தீட்டிவைக்கப்பட்டது" (எசே 21:15) என்று இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் தம்முடைய பட்டயத்திற்கு ஏகமாய் வெட்டுமாறு கட்டளைகொடுக்கிறார். "ஏகபலமாய் வலதுபுறமாக வெட்டு, திரும்பி இடதுபுறமாகவும் வெட்டு; உன்முகம் திரும்புகிற திக்கெல்லாம் வெட்டு" (எசே 21:16) என்று கர்த்தர் தம்முடைய பட்டயத்திற்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தருடைய பட்டயம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறது. இஸ்ரவேல் தேசத்திலே சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும் சங்காரமுண்டாகிறது. கர்த்தருடைய பட்டயம் தெற்கு துவக்கி, வடக்கு மட்டுமுள்ள எல்லா மாம்சத்திற்கு விரோதமாய் வெட்டுகிறது. எல்லோரையும் சங்காரம்பண்ணுகிறது. கர்த்தருடைய உக்கிரமமும் குறைந்துபோகிறது. “நானும் கையோடே கைகொட்டி, என் உக்கிரத்தை ஆறப்பண்ணுவேன்” (எசே 21:17) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

பாபிலோன் ராஜாவின் பட்டயம் எசே 21:18-27

எசே 21:18. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 21:19. மனுபுத்திரனே, பாபிலோன் ராஜாவின் பட்டயம் வரத்தக்கதாக இரண்டு வழிகளைக் குறித்துக்கொள்; இரண்டும் ஒரே தேசத்திலிருந்து வரவேண்டும்; நீ ஒரு இடத்தைத் தெரிந்துகொள், நகரத்துக்குப் போகிற வழியின் முனையில் அந்த இடத்தைத் தெரிந்துகொள்.

எசே 21:20. பட்டயம் அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவுக்கு விரோதமாக வரத்தக்க ஒரு வழியையும், யூதாவில் இருக்கிற அரணான எருசலேமுக்கு விரோதமாக வரத்தக்க ஒரு வழியையும் குறித்துக்கொள்.

எசே 21:21. பாபிலோன் ராஜா இரண்டு வழிகளின் முனையாகிய வழிப்பிரிவிலே நிமித்தம் பார்க்கிறதற்காக நிற்பான்; அம்புகளைத் தீட்டி, விக்கிரகங்களை உசாவி, ஈரலால் குறிபார்ப்பான்.

எசே 21:22. தலைவரை நியமிக்கிறதற்கும், சங்காரஞ் செய்யும்படி ஆர்ப்பரிக்கிறதற்கும், கெம்பீரமாய்ச் சத்தமிடுகிறதற்கும், வாசல்களை முட்டும் யந்திரங்களை வைக்கிறதற்கும், மண்மேடு போடுகிறதற்கும், கொத்தளங்களைக் கட்டுகிறதற்கும், எருசலேமைக்குறித்து நிமித்தம் பார்க்குதல் அவனுடைய வலதுபுறத்திலே உண்டாயிருக்கும்.

எசே 21:23. இந்த நிமித்தமானது ஆணையிட்டவர்களுக்கு முன்பாகப் பொய்யாகத் தோன்றும்; ஆயினும் அவர்கள் பிடிக்கப்படும்படி அவன் அவர்கள் துரோகத்தை நினைப்பான்.

எசே 21:24. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: உங்கள் துரோகங்கள் வெளியரங்கமாகிறதினாலும், உங்கள் செய்கைகளிலெல்லாம் உங்கள் பாவங்கள் தெரியவருகிறதினாலும், நீங்கள் உங்கள் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணுகிறீர்களே; நீங்கள் இப்படிப்பட்டவர்களென்று நினைக்கப்படுகிறீர்களே; ஆதலால் கைப்பிடியாய் பிடிக்கப்படுவீர்கள்.

எசே 21:25. இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவுவருங்காலத்தில் உன் நாள் வந்தது.

எசே 21:26. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன்.

எசே 21:27. அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எருசலேமுக்கு விரோதமாக கல்தேயருடைய சேனை வருகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி இரண்டு வழிகளைக் குறித்துக் கொள்ளவேண்டும். இவ்விரண்டு வழிகளும் ஆரம்பமாகும் இடத்திற்கு பாபிலோனின் சேனை வரும். இவ்விரண்டு வழிகளில் ஒரு வழி அம்மோன் புத்திரரின் பட்டணமாகிற ரப்பாவுக்கு போகிற வழி. மற்றொரு வழி எருசலேமுக்கு போகிற வழி.

ரப்பா பட்டணத்தையும், எருசலேம் நகரத்தையும் அழித்துப்போடவேண்டும் என்பது பாபிலோன் ராஜாவின் திட்டம். இவ்விரண்டு பட்டணங்களில் எந்தப் பட்டணத்தை முதலாவதாக அழிப்பது என்று பாபிலோன் ராஜா யோசித்துக் கொண்டிருக்கிறான்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, பாபிலோன் ராஜாவின் பட்டயம் வரத்தக்கதாக இரண்டு வழிகளைக் குறித்துக்கொள்; இரண்டும் ஒரே தேசத்திலிருந்து வரவேண்டும்; நீ ஒரு இடத்தைத் தெரிந்துகொள், நகரத்துக்குப் போகிற வழியின் முனையில் அந்த இடத்தைத் தெரிந்துகொள். பட்டயம் அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவுக்கு விரோதமாக வரத்தக்க ஒரு வழியையும், யூதாவில் இருக்கிற அரணான எருசலேமுக்கு விரோதமாக வரத்தக்க ஒரு வழியையும் குறித்துக்கொள்" *(எசே 21:19,20)* என்று சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரில் அநேகர் இப்போது எருசலேமிலே தங்கியிருக்கிறார்கள். எருசலேம் அரணான நகரம். கல்தேயர்கள் யூதாவுக்கு விரோதமாக வரும்போது, யூதாவின் மற்ற பட்டணங்களைவிட, எருசலேம் நகரமே தங்களுக்கு பாதுகாப்பாயிருக்குமென்று யூதர்கள் நினைக்கிறார்கள்.

பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாகவும், அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவுக்கு விரோதமாகவும் வருகிறான். பாபிலோன் தேசத்திலிருந்து ஒரே வழியாக வருகிறான். இப்போது அந்த வழி இரண்டு பிரிவாகப் பிரிகிறது. அவன் இரண்டு வழிகளின் முனையாகிய வழிப் பிரிவிலே நிற்கிறான். ரப்பாவுக்கு போகும் வழியில் போவதா அல்லது எருசலேமுக்கு போகும் வழியில் போவதா என்று யோசித்துக்கொண்டிருக்கிறான்.

பாபிலோன் ராஜாவுக்கு தெளிவான சிந்தனையில்லை. அவனிடத்தில் தெளிவான திட்டமும் இல்லை. ஆகையினால் அவன் தன் சுயபுத்தியை நம்பாமல், நிமித்தம் பார்க்கிறான். ஜோசியக்காரரையும், குறிசொல்லுகிறவர்களையும் அணுகி, இவ்விரண்டு வழிகளில் எந்த வழியில் போகவேண்டும் என்று, அவர்களிடத்தில் ஆலோசனை கேட்கிறான்.

பாபிலோன் ராஜாவின் அம்புகள் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அவனோ தன்னை நம்பாமல், தன் பலத்தை நம்பாமல், தன்னுடைய விக்கிரகங்களை நம்புகிறான். ஒருவேளை யுத்தம்பண்ணுவதற்கு முன்பாக, அவன் தன்னுடைய விக்கிரகங்களுக்கு பலிசெலுத்தியிருக்கலாம்.

பாபிலோன் ராஜாவுடைய அம்பாறாத்தூணியிலே இரண்டு அம்புகள் இருக்கிறது. ஒரு அம்பில் எருசலேமின் பெயரும், மற்றொரு அம்பில் ரப்பாவின் பெயரும் எழுதப்பட்டிருக்கிறது. பாபிலோன் ராஜா, தன் விக்கிரகங்களை வணங்கி, தன்னுடைய அம்பாறாத்தூணியிலுள்ள இரண்டு அம்புகளில் ஒன்றை எடுக்கிறான். அந்த அம்பில் என்ன பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ, அதற்கு விரோதமாக அவன் முதலாவதாக யுத்தம்பண்ணுகிறான்.

"விக்கிரகங்களை உசாவி, ஈரலால் குறிபார்ப்பான்" என்னும் வாக்கியத்திற்கு, வேதபண்டிதர்கள் மற்றொரு விளக்கம் சொல்லுகிறார்கள். பாபிலோன் ராஜா தன்னுடைய விக்கிரகங்களுக்கு பலிசெலுத்துவான் என்றும், பலிசெலுத்தப்பட்ட விக்கிரகங்களின் ஈரலைப் பார்த்து, எந்த வழியாக முதலாவது யுத்தம்பண்ணப் போகவேண்டும் என்று தீர்மானம்பண்ணுவான் என்றும் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

பாபிலோன் ராஜா விக்கிரகங்களை உசாவி, ஈரலால் குறிபார்த்து, எருசலேமுக்கு விரோதமாக, முதலாவதாக யுத்தம்பண்ணப்போகிறான். யுத்தத்திற்கான ஆயத்தம் நடைபெறுகிறது. "தலைவரை நியமிக்கிறதற்கும், சங்காரஞ்செய்யும்படி ஆர்ப்பரிக்கிறதற்கும், கெம்பீரமாய்ச் சத்தமிடுகிறதற்கும், வாசல்களை முட்டும் யந்திரங்களை வைக்கிறதற்கும், மண்மேடு போடுகிறதற்கும், கொத்தளங்களைக் கட்டுகிறதற்கும், எருசலேமைக்குறித்து நிமித்தம் பார்க்குதல் அவனுடைய வலதுபுறத்திலே உண்டாயிருக்கும் *(எசே 21:22)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேமுக்கு அழிவு வரப்போகிறது. எருசலேமின் குடிகள் சங்காரமாகப்போகிறார்கள். தங்களுடைய அழிவுக்கு, தங்களுடைய பாவங்களே காரணம் என்பதை, இஸ்ரவேல் வம்சத்தார் உணரவேண்டும். இஸ்ரவேல் பிரபுக்களின் பாவங்கள் அதிகமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது சீக்கிரத்தில் வருகிறது.

எருசலேமுக்கு அழிவு வரப்போகிறது என்று கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் சொன்னார்கள். ஆனால் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், கர்த்தர் தங்களுக்கு விரோதமாகச் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளை நம்பவில்லை. இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களினிமித்தமாய், அவர்கள்மீது பேரழிவு வரும் என்று கர்த்தர் எசேக்கியேல் மூலமாய் எச்சரித்தார். ஆனால் எசேக்கியேலின் வார்த்தைகள் அவர்களுக்கு பொய்யாய்த் தோன்றிற்று.

"இந்த நிமித்தமானது ஆணையிட்டவர்களுக்கு முன்பாக பொய்யாய்த் தோன்றும்" (எசே 21:23) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும். அவர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்தாலும், செவிகொடுக்காவிட்டாலும், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை நம்பினாலும், நம்பாவிட்டாலும், கர்த்தருடைய சித்தம் நிச்சயமாய் நிறைவேறும்.

இஸ்ரவேல் வம்சத்தார்மீது, தம்முடைய நியாயத்தீர்ப்பு வரும் என்றும், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"உங்கள் துரோகங்கள் வெளியரங்கமாகிறதினாலும், உங்கள் செய்கைகளிலெல்லாம் உங்கள் பாவங்கள் தெரியவருகிறதினாலும், நீங்கள் உங்கள் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணுகிறீர்களே; நீங்கள் இப்படிப்பட்டவர்களென்று நினைக்கப்படுகிறீர்களே; ஆதலால் கைப்பிடியாய் பிடிக்கப்படுவீர்கள்" (எசே 21:24) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் அழிவைப்பற்றிச் சொல்லுகிறார்.

தங்கள் பாவங்களினிமித்தமாய், இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள்மீது அழிவை வரவழைத்துக்கொண்டார்கள். அதுபோலவே யூதாவின் ராஜாவும், தன்னுடைய அக்கிரமத்தினிமித்தமாய், தன்மீது அழிவை வரவழைத்துக்கொள்கிறான். நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, சிதேக்கியா யூதாவுக்கு ராஜாவாயிருக்கிறான். அவன் அவபக்தியுள்ள, துன்மார்க்கமான அதிபதி. அக்கிரமத்திற்கு முடிவு வரும் காலத்தில், அவனுடைய நாள் வருகிறது.

சிதேக்கியா கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வது மாத்திரமல்ல, அவன் இஸ்ரவேல் வம்சத்தாரையும் பாவம் செய்யத் தூண்டுகிறான். அவன் இஸ்ரவேலை பாவத்தில் ஆளுகை செய்கிறான். அவர்களை பாவத்திற்கு நேராக வழிநடத்துகிறான்.

கர்த்தர் தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனை தாழ்த்துகிறார். சிதேக்கியா ராஜா இப்போது பாகையோடும், கிரீடத்தோடும் இருக்கிறான். கர்த்தருடைய வார்த்தை சிதேக்கியாவுக்கு விரோதமாய் உண்டாயிற்று. "இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவுவருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது" (எசே 21:25,26) என்று கர்த்தர் சிதேக்கியாவுக்கு விரோதமாய் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சிதேக்கியா தன்னுடைய பாவத்தினாலும், அக்கிரமத்தினாலும் தன்னுடைய கிரீடத்தை தீட்டுப்படுத்துகிறான். கர்த்தரோ அவனுடைய கிரீடத்தை தரையிலே தள்ளிப்போடுகிறார். கிரீடமும் பாகையும் உலகப்பிரகாரமான மேன்மைகள். இவை யாருடைய தலையிலும் நிரந்தரமாக தங்கியிருக்காது.

கர்த்தர் தமக்கு சித்தமானவர்களுக்கு கிரீடத்தை அணிவிக்கிறார். அதே வேளையில் கர்த்தர் தம்முடைய சித்தத்தின்படி ராஜாக்களுடைய தலையிலுள்ள கிரீடத்தை கவிழ்த்துப்போடுகிறார்.

"அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்" (எசே 21:27) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

நாம் பரலோகத்தில் பிரவேசிக்கும்போது, கர்த்தர் நமக்கு கிரீடத்தைக் கொடுப்பார். அந்த கிரீடமே நமக்கு மகிமையுள்ள நித்திய கிரீடமாயிருக்கும். அது மங்காத கிரீடமாயிருக்கும். கர்த்தர் இந்தப் பூமியில் தாழ்ந்தவனை உயர்த்துகிறார், உயர்ந்தவனை தாழ்த்துகிறார். ஒரு சில ராஜாக்களின் கிரீடங்கள் கீழே விழுந்துவிட்டாலும், அதை அவர்கள் மறுபடியும் எடுத்து, தங்கள் தலையின்மேல் சூட்டிக்கொள்ள முயற்சி பண்ணுகிறார்கள். தாங்கள் இழந்துபோன மேன்மையை திரும்பவும் பெற்றுக்கொள்ள பிரயாசப்படுகிறார்கள். தாங்கள் இழந்துபோன ராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதற்கு முயற்சிபண்ணுகிறார்கள்.

கர்த்தரே ராஜாதி ராஜாவாகயிருக்கிறார். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து ராஜ்யபாரம் பண்ணினால், அந்த ராஜாங்கம் நிலைத்திருக்கும். கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக ராஜ்யபாரம் பண்ணினால், அந்த ராஜாங்கம் அழிந்துபோகும். ராஜ்யங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறான். அவனுடைய அக்கிரமத்திற்கு முடிவு வந்திருக்கிறது. கர்த்தர் அவனுடைய பாகையை கழற்றிப்போடுகிறார். அவனுடைய கிரீடத்தை எடுத்துப்போடுகிறார். "அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்" (எசே 21:27) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய ராஜ்யத்தை மேசியாவின் கையில் கொடுப்பார்.

அம்மோன் புத்திரர்
எசே 21:28-32

எசே 21:28. பின்னும் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் சொல்லு: அம்மோன் புத்திரரையும் அவர்கள் சொல்லும் நிந்தனைகளையும் குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்,

எசே 21:29. அக்கிரமத்துக்கு முடிவுவருங்காலத்தில் வந்த தங்களுடைய நாளுக்கு ஏதுவாகி, கொலையுண்டுபோனவர்களுடைய பிடரிகளோடேகூட உன்னைத் துன்மார்க்கரின் கையினால் விழப்பண்ணும்படிக்கு, உனக்கு அபத்தமானது தரிசிக்கப்படுகிறபோதும், உனக்குப் பொய்நிமித்தம் பார்க்கப்படுகிறபோதும் பட்டயம் உருவப்பட்டது, பட்டயமே உருவப்பட்டது; வெட்டவும் சங்கரிக்கவும் அது மின்னத்தக்கதாய்த் துலக்கப்பட்டிருக்கிறது.

எசே 21:30. உன் பட்டயத்தை நீ திரும்ப அதின் உறையிலே போடு; நீ சிருஷ்டிக்கப்பட்ட ஸ்தானமாகிய உன் ஜெந்மதேசத்திலே நான் உன்னை நியாயந்தீர்த்து,

எசே 21:31. என் சினத்தை உன்மேல் ஊற்றுவேன்; நான் என் மூர்க்கத்தின் அக்கினியை உன்மேல் ஊதி, மிருககுணமுள்ளவர்களும், அழிக்கிறதற்குத் திறமையுள்ளவர்களுமாகிய மனுஷரின் கையில் உன்னை ஒப்புக்கொடுப்பேன்.

எசே 21:32. நீ அக்கினிக்கு இரையாவாய்; உன் இரத்தம் உன் தேசத்தின் நடுவில் சிந்திக்கிடக்கும்; நீ இனி நினைக்கப்படுவதில்லை; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன் என்றார்.

அம்மோன் புத்திரர் அழிந்துபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்தை அழித்துப்போட்டான். எருசலேம் அழிந்து ஐந்து வருஷங்களுக்கு பின்பு, நேபுகாத்நேச்சார் அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவையும் அழித்துப்போட்டான்.

கர்த்தர் அம்மோன் புத்திரரின் பாவத்தைப்பற்றி இங்கு சொல்லுகிறார். அவர்கள் தேவனுடைய இஸ்ரவேல் மீது நிந்தனையான வார்த்தைகளைச் சொன்னார்கள். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் வந்தபோது, அம்மோன் புத்திரர் அவர்களை பரியாசம்பண்ணினார்கள். அம்மோன் புத்திரர்களிடத்தில் மனிதநேயம் இல்லை.

நேபுகாத்நேச்சார் இஸ்ரவேல் வம்சத்தாரை சிறைப்பிடித்தான். எருசலேம் நகரத்தை அழித்துப்போட்டான். அவன் யுத்தம் பண்ண வந்தபோது இரண்டு வழிகளின் முனையாகிய வழிப்பிரிவிலே நின்றான். எருசலேமின்மீதும், ரப்பாவின்மீதும் யுத்தம்பண்ணவேண்டும் என்பது பாபிலோன் ராஜாவின் திட்டம்.

ஆனால் அவன் விக்கிரகங்களை உசாவி, நிமித்தம் பார்த்து, எருசலேமின்மீது முதலாவதாக யுத்தம்பண்ணவேண்டும் என்று தீர்மானம்பண்ணினான். அப்போது கல்தேயரின் படைகள், அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவுக்கு விரோதமாகப் போகாமல், யூதர்களின் பரிசுத்த நகரமாகிய எருசலேமுக்கு விரோதமாகப் போனார்கள். எருசலேம் அழிந்தது. ரப்பா தப்பித்துக்கொண்டது.

தாங்கள் இஸ்ரவேல் வம்சத்தாரைவிட நீதியுள்ளவர்கள் என்றும், இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் அக்கிரமக்காரர் என்றும் அம்மோன் புத்திரர் சொன்னார்கள். இதன் நிமித்தமாகவே, நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்துப்போட்டான் என்றும், தங்களுடைய பட்டணமாகிய ரப்பா நேபுகாத்நேச்சாரின் கைக்கு தப்பித்துக்கொண்டது என்றும் அம்மோன் புத்திரர் பெருமையோடு சொன்னார்கள்.

இஸ்ரவேல் புத்திரரைப்போலவே, அம்மோன் புத்திரரும் பாவிகளாகயிருக்கிறார்கள். அவர்கள் அக்கிரமக்காரராயும், துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களாயும் இருக்கிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் வம்சத்தார்மீது வந்ததுபோலவே, அம்மோன் புத்திரர்மீதும் வருகிறது. கொலையுண்டு போன இஸ்ரவேல் வம்சத்தாருடைய பிடரிகளோடேகூட, கர்த்தர் அம்மோன் புத்திரரையும், துன்மார்க்கரின் கையினால் விழப்பண்ணினார்.

அம்மோன் புத்திரருடைய அக்கிரமத்திற்கு முடிவு காலம் வரும். அவர்கள் தங்களுடைய முடிவு காலத்தில், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குட்படுத்தப் படுவார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் அழிந்துபோனதுபோல அம்மோன் புத்திரரும் அழிந்துபோவார்கள். அவர்களுக்கு விரோதமாக பாபிலோன் ராஜாவின் பட்டயம் உருவப்படும். அது அவர்களை வெட்டவும், சங்கரிக்கவும் மின்னத்தக்கதாய் துலக்கப்பட்டிருக்கிறது (எசே 21:29).

அம்மோன் புத்திரருக்கு சர்வநாசமும், சர்வமோசமும், சர்வசங்காரமும் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அம்மோன் புத்திரர் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாகத் தீங்குசெய்தார்கள். தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாக செய்யப்பட்ட தீங்குகளை, தமக்கு விரோதமாக செய்யப்பட்ட தீங்குகளாக கர்த்தர் தீர்மானிக்கிறார். அம்மோன் புத்திரர் கர்த்தருடைய பிள்ளைகளை நிந்தித்தார்கள். கர்த்தரோ அவர்கள் தம்மையே நிந்தித்தாக, அம்மோன் புத்திரர்மீது குற்றம் சொல்லுகிறார்.

கர்த்தர் அவர்களை, அவர்களுடைய ஜென்மதேசத்திலே நியாயந்தீர்க்கப்போவதாக சொல்லுகிறார். அம்மோன் புத்திரர் எந்த தேசத்தில், ஒரு ஜாதியாக, ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்பட்டார்களோ, அந்த தேசத்திலே கர்த்தர் அவர்களை நியாயந்தீர்ப்பார். அம்மோன் புத்திரரின் சொந்த தேசத்திலேயே அவர்களுக்கு அழிவு வரும். அவர்கள் தங்கள் தேசத்தில் வேரூன்றி பாதுகாப்பாக இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அம்மோன் புத்திரருக்கு பாதுகாப்பு இல்லை. கர்த்தர் அவர்களை சர்வசங்காரம்பண்ணுவார்.

"என் சினத்தை உன்மேல் ஊற்றுவேன்; நான் என் மூர்க்கத்தின் அக்கினியை உன்மேல் ஊதி, மிருககுணமுள்ளவர்களும், அழிக்கிறதற்குத் திறமையுள்ளவர்களுமாகிய மனுஷரின் கையில் உன்னை ஒப்புக்கொடுப்பேன். நீ அக்கினிக்கு இரையாவாய்; உன் இரத்தம் உன் தேசத்தின் நடுவில் சிந்திக்கிடக்கும்; நீ இனி நினைக்கப்படுவதில்லை" (எசே 21:31,32) என்று கர்த்தராகிய ஆண்டவர் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். அம்மோன் புத்திரரின் ஜென்ம தேசம், அவர்களுக்கு சங்காரதேசமாகும்.

22 அதிகாரம்

கர்த்தர் யூதாவின் பாவங்களையும், எருசலேமின் பாவங்களையும், அவர்களுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்புகளையும் இங்கே சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களின் விவரம் (எசே 22:1-16). அவர்கள் கர்த்தருக்கு களிம்பாய் இருக்கிறார்கள் (எசே 22:17-22). எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள் (எசே 22:23-31).

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்கள்
எசே 22:1-16

எசே 22:1. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 22:2. இப்போதும் மனுபுத்திரனே, இரத்தஞ்சிந்தின நகரத்துக்காக நீ வழக்காடுவாயோ? வழக்காட மனதானால், நீ அதின் அருவருப்புகளையெல்லாம் அதற்குத் தெரியக்காட்டி,

எசே 22:3. அதை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், உன் காலம் வரத்தக்கதாக உன் நடுவிலே இரத்தஞ்சிந்துகிறதும், உன்னைத் தீட்டுப்படுத்தத்தக்கதாக உனக்கே விரோதமாய் நரகலான விக்கிரகங்களை உண்டுபண்ணுகிறதுமான நகரமே,

எசே 22:4. நீ சிந்தின உன் இரத்தத்தினால் நீ குற்றஞ்சுமந்ததாகி, நீ உண்டுபண்ணின உன் நரகலான விக்கிரகங்களால் நீ தீட்டுப்பட்டு, உன் நாட்களைச் சமீபிக்கப்பண்ணி, உன் வருஷங்களை நிறைவேற்றினாய்; ஆகையால் நான் உன்னைப் புறஜாதிகளுக்கு நிந்தையாகவும், தேசங்களுக்கெல்லாம் பரியாசமாகவும் வைப்பேன்.

எசே 22:5. உனக்குச் சமீபமும் உனக்குத் தூரமுமான தேசங்களின் மனுஷர் நீ அவகீர்த்தியுள்ளதென்றும், அமளி பெருத்ததென்றும் உன்னைப் பரியாசம்பண்ணுவார்கள்.

எசே 22:6. இதோ, இஸ்ரவேலின் அதிபதிகளில் அவரவர் தங்கள் புயபலத்துக்குத் தக்கதாக, உன்னில் இரத்தஞ்சிந்தினார்கள்.

எசே 22:7. உன்னிலுள்ள தாய் தகப்பனை அற்பமாய் எண்ணினார்கள்; உன் நடுவில் பரதேசிக்கு இடுக்கண் செய்தார்கள்; உனக்குள் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்கினார்கள்.

எசே 22:8. நீ என் பரிசுத்த வஸ்துக்களை அசட்டைப்பண்ணி, என் ஓய்வுநாட்களை பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்.

எசே 22:9. இரத்தஞ்சிந்தும்படிக்கு அபாண்டம் பேசுகிறவர்கள் உன்னிடத்தில் இருக்கிறார்கள்; மலைகளின்மேல் சாப்பிடுகிறவர்களும் உன்னிடத்தில் இருக்கிறார்கள்; முறைகேடு செய்கிறவர்கள் உன் நடுவில் இருக்கிறார்கள்.

எசே 22:10. தகப்பனை நிர்வாணமாக்கினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்; தூரஸ்திரீயைப் பலவந்தப்படுத்தினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்.

எசே 22:11. உன்னில் ஒருவன் தன் அயலானுடைய மனைவியோடே அருவருப்பானதைச் செய்கிறான்; வேறொருவன் முறைகேடாய்த் தன் மருமகளைத் தீட்டுப்படுத்துகிறான்; வேறொருவன் தன் தகப்பனுக்குப் பிறந்த தன் சகோதரியைப் பலவந்தம் பண்ணுகிறான்.

எசே 22:12. இரத்தஞ்சிந்தும்படிக்குப் பரிதானம் வாங்கினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்; நீ வட்டியையும் பொலிசையையும் வாங்கி, பொருளாசையினால் உன் அயலானுக்கு இடுக்கண் செய்து, என்னை மறந்துபோனாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 22:13. இதோ, நீ அநியாயமாய்ச் சம்பாதித்த பொருளினிமித்தமும், உன் நடுவில் நீ சிந்தின இரத்தத்தினிமித்தமும் நான் கைகொட்டுகிறேன்.

எசே 22:14. நான் உன்னில் நியாயஞ்செய்யும் நாட்களில் உன் இருதயம் தாங்குமோ? அப்பொழுது உன் கைகள் திடமாயிருக்குமோ? கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதை நிறைவேற்றுவேன்.

எசே 22:15. நான் உன்னைப் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, உன்னை தேசங்களிலே தூற்றி, உன் அசுத்தத்தை உன்னில் ஒழியப்பண்ணுவேன்.

எசே 22:16. நீ புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்தக் குலைச்சலாயிருந்து, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வாய், என்று சொல் என்றார்.

கர்த்தர் எருசலேம் நகரத்தை இரத்தம் சிந்தின நகரம் என்று சொல்லுகிறார். எருசலேமிலே பாவங்களும், அக்கிரமங்களும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் குற்றமற்றவர்களின் இரத்தத்தை சிந்துகிறார்கள்.

"ஒரு சங்கிலியைப் பண்ணிவை; தேசம் நியாயத்தீர்ப்புக்குள்ளான இரத்தப்பழிகளால் நிறைந்திருக்கிறது; நகரம் கொடுமையால் நிறைந்திருக்கிறது" *(எசே 7:23).*

எசேக்கியேல் தீர்க்கதரிசி எருசலேம் நகரத்திற்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். கர்த்தரோ எருசலேம் நகரத்தின் அருவருப்புக்களையெல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு, எசேக்கியேலுக்கு கட்டளை கொடுக்கிறார். எசேக்கியேல் கர்த்தரிடத்தில், இரத்தம் சிந்தின எருசலேம் நகரத்திற்காக வழக்காடுவதற்கு முன்பு, அவர் எருசலேமின் குடிகளிடத்தில், அவர்களுடைய பாவங்களை எடுத்துச் சொல்லவேண்டும்.

எருசலேமில் பாவங்களும், அக்கிரமங்களும் திரளாயிருக்கிறது. அவர்கள் நடுவிலே இரத்தம் சிந்துகிறது காணப்படுகிறது. அவர்கள் விக்கிரகங்களை உண்டுபண்ணுகிறார்கள். எருசலேமின் நியாயாதிபதிகள் வழக்குகளை நீதியாய் விசாரிப்பதில்லை. அவர்கள் திக்கற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் அநியாயம் பண்ணுகிறார்கள். குற்றமில்லாதவர்களின் இரத்தத்தை சிந்துகிறார்கள்.

எருசலேம் நகரத்தார் நரகலான விக்கிரகங்களை உண்டுபண்ணுகிறார்கள். இதன் மூலமாய் அவர்கள் தங்களுக்கு விரோதமாக, தங்களையே தீட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்களுடைய அழிவுக்கு, அவர்களுடைய பாவங்களும், விக்கிரகாராதனைகளும் காரணமாயிருக்கிறது.

எருசலேமின் குடிகள் குற்றமற்ற இரத்தத்தை சிந்துவதினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப, கர்த்தர் அநேக வாய்ப்புக்களைக் கொடுத்தார். ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தொடர்ந்து அக்கிரமங்களையும், அநியாயங்களையும் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் பெருகுகிறது. அவர்களுக்கு இப்போது நியாயத்தீர்ப்பின் காலம் வந்திருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் நடுவில் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தை ஏராளமாய் சிந்துவதினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது சீக்கிரமாய் வருகிறது. "நீ சிந்தின உன் இரத்தத்தினால் நீ குற்றஞ்சுமந்ததாகி, நீ உண்டுபண்ணின உன் நரகலான விக்கிரகங்களால் நீ தீட்டுப்பட்டு, உன் நாட்களைச் சமீபிக்கப்பண்ணி, உன் வருஷங்களை நிறைவேற்றினாய்" *(எசே 22:4)* என்று கர்த்தர் எருசலேமைக் குறித்து சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களை கர்த்தர் புறஜாதியாருக்கும் தெரியப்படுத்துகிறார். கர்த்தர் அவர்களை புறஜாதிகளுக்கு நிந்தையாகவும், தேசங்களுக்கெல்லாம் பரியாசமாகவும் வைக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திற்கு சமீபத்திலும் தூரத்திலும் ஏராளமான தேசங்கள் இருக்கிறது. அந்த தேசங்களின் மனுஷருக்கு, இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களும் அக்கிரமங்களும் தெரிந்திருக்கிறது. அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை அவகீர்த்தியுள்ளவர்கள் என்றும், அமளிபெருத்தவர்கள் என்றும் சொல்லி, அவர்களை பரியாசம்பண்ணுவார்கள். இஸ்ரவேலின் அதிபதிகளில் அவரவர் தங்கள் புயபலத்திற்கு தக்கதாக, இஸ்ரவேலின் நடுவிலே இரத்தம் சிந்துகிறார்கள் (எசே 22:6).

கர்த்தர் இஸ்ரவேலின் பாவங்களை வரிசையாகச் சொல்லுகிறார். பிள்ளைகள் தங்கள் தாய் தகப்பனை அற்பமாய் எண்ணுகிறார்கள். தங்கள் நடுவில் வாசம்பண்ணுகிற பரதேசிக்கு இடுக்கண் செய்கிறார்கள். தங்கள் மத்தியிலே இருக்கிற திக்கற்றவனையும், விதவைகளையும் ஒடுக்குகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த வஸ்துக்களை அசட்டை பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஓய்வுநாட்களை பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பரிசுத்த பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல், அதை அசட்டைபண்ணுகிறார்கள் (எசே 22:7,8).

எருசலேம் பரிசுத்தமான நகரம். பரிசுத்தமே அந்த நகரத்தின் அழகு. ஆனால், "இரத்தஞ்சிந்தும்படிக்கு அபாண்டம் பேசுகிறவர்கள் உன்னிடத்தில் இருக்கிறார்கள்; மலைகளின்மேல் சாப்பிடுகிறவர்களும் உன்னிடத்தில் இருக்கிறார்கள்; முறைகேடு செய்கிறவர்கள் உன் நடுவில் இருக்கிறார்கள். தகப்பனை நிர்வாணமாக்கினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்; தூரஸ்திரீயைப் பலவந்தப்படுத்தினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்" (எசே 22:9,10) என்று கர்த்தர் எருசலேமுக்கு விரோதமாக தம்முடைய குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்.

எருசலேமின் குடிகள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். அவர்களில் ஒருவன் தன் அயலானுடைய மனைவியோடே அருவருப்பானதைச் செய்கிறான்; வேறொருவன் முறைகேடாய்த் தன் மருமகளைத் தீட்டுப்படுத்துகிறான்; வேறொருவன் தன் தகப்பனுக்குப் பிறந்த தன் சகோதரியைப் பலவந்தம் பண்ணுகிறான் (எசே 22:11).

கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். இஸ்ரவேல் வம்சத்தாரிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. அவர்கள் கர்த்தரையும், அவருடைய பிரமாணத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள். அவர்களுடைய நிர்விசாரமும், அசட்டையுமே, அவர்களுடைய பாவங்களுக்கு அடிப்படை காரணம்.

இஸ்ரவேல் வம்சத்தார் இரத்தம் சிந்தும்படிக்கு பரிதானம் வாங்குகிறார்கள். வட்டியையும், பொலிசையையும் வாங்குகிறார்கள். பொருளாசையினால் தங்கள் அயலானுக்கு இடுக்கண் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மறந்துபோனார்கள். அவர்களுடைய அக்கிரமத்திற்கு, அவர்கள் கர்த்தரை மறந்துபோனதே அடிப்படை காரணம். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தரைப் பற்றிய கரிசனை இருக்குமென்றால், அவர்கள் துன்மார்க்கமாய் ஜீவிக்கமாட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்புக்களைச் சொல்லுகிறார். "இதோ, நீ அநியாயமாய்ச் சம்பாதித்த பொருளினிமித்தமும், உன் நடுவில் நீ சிந்தின இரத்தத்தினிமித்தமும் நான் கைகொட்டுகிறேன். நான் உன்னில் நியாயஞ்செய்யும் நாட்களில் உன் இருதயம் தாங்குமோ? அப்பொழுது உன் கைகள் திடமாயிருக்குமோ? கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதை நிறைவேற்றுவேன்" (எசே 22:13,14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரை ஆராதிக்காமல், அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப் போனார்கள். அவர்கள் புறஜாதியாரிடத்தில் விக்கிரகங்களை எவ்வாறு செய்வது என்பதைக் கற்றுக்கொண்டார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை புறஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பதாகச் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களை அந்நிய தேசங்களில் தூற்றிப்போடுவார். கர்த்தர் அவர்களுக்கு தண்டனைகளைக் கொடுத்து, அவர்களிடத்தில் காணப்படுகிற அசுத்தங்களையும், அருவருப்புக்களையும் ஒழியப்பண்ணுவார். இஸ்ரவேல் வம்சத்தார் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக பரிசுத்தக்குலைச்சலாயிருப்பார்கள். அப்பொழுது, "நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வாய்" (எசே 22:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வெள்ளியின் களிம்பு எசே 22:17-22

எசே 22:17. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 22:18. மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தார் எனக்குக் களிம்பாய்ப் போனார்கள்; அவர்களெல்லாரும் குகையிலுள்ள பித்தளையும் தகரமும் இரும்பும் ஈயமுமாயிருக்கிறார்கள்; அவர்கள் வெள்ளியின் களிம்பாய்ப் போனார்கள்.

எசே 22:19. ஆதலால், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்களெல்லாரும் களிம்பாய்ப் போனபடியினால், இதோ, நான் உங்களை எருசலேமுக்குள் சேர்ப்பேன்.

எசே 22:20. வெள்ளியையும் பித்தளையையும் இரும்பையும் ஈயத்தையும் தகரத்தையும் அக்கினியில் ஊதி உருக்குவதற்காகக் குகைக்குள் சேர்க்கிறதுபோல், நான் என் கோபத்தினாலும் என் உக்கிரத்தினாலும் உங்களைச் சேர்த்துவைத்து உருக்குவேன்.

எசே 22:21. நான் உங்களைக் கூட்டி, என் கோபமாகிய அக்கினியை உங்கள்மேல் ஊதுவேன்; அதற்குள்ளே நீங்கள் உருகுவீர்கள்.

எசே 22:22. குகைக்குள் வெள்ளி உருகுமாப்போல, நீங்கள் அதற்குள் உருகுவீர்கள்; அப்பொழுது கர்த்தராகிய நான் என் உக்கிரத்தை உங்கள்மேல் ஊற்றிவிட்டேன் என்று அறிந்துகொள்வீர்கள் என்றார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தமக்கு பிரியமான ஜாதியாயும், தமக்கு விசேஷமான ஜனமாயும் தெரிந்துகொண்டார். ஆனால் இஸ்ரவேல் வீட்டாரோ கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போனார்கள். கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டியவர்கள், அருவருப்பான காரியங்களை செய்தார்கள்.

தாவீதின் காலத்திலும், சாலொமோனின் காலத்திலும் இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு பசும்பொன்னாய் விளங்கினார்கள். சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தது. பசும்பொன்னாயிருந்தவர்கள் அதன் பின்பு, வெள்ளியாய்ப் போனார்கள். பொன்னாயிருந்தவர்கள் வெள்ளியானார்கள். அதன் பின்பும் இஸ்ரவேல் வம்சத்தார் அதிகமான அருவருப்புக்களை செய்து பித்தளையாகவும், தகரமாகவும், இரும்பாகவும், ஈயமாகவும் போனார்கள். அவர்கள் மத்தியில் எல்லாவிதமான பாவிகளும் இருக்கிறார்கள்.

"இஸ்ரவேல் வம்சத்தார் எனக்குக் களிம்பாய்ப் போனார்கள்; அவர்களெல்லாரும் குகையிலுள்ள பித்தளையும் தகரமும் இரும்பும் ஈயமுமாயிருக்கிறார்கள்; அவர்கள் வெள்ளியின் களிம்பாய்ப் போனார்கள்" (எசே 22:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பார்வையில் களிம்பாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை கணித்துப் பார்க்கும்போது, அவர்கள் வெள்ளியின் களிம்பாயிருக்கிறார்கள். ஒரு காலத்தில் வெள்ளியாகயிருந்தவர்கள். இப்போது வெள்ளியின் களிம்பாயிருக்கிறார்கள்.

"களிம்பு" என்னும் வார்த்தைக்கு "அசுத்தம்" என்று பொருள். இஸ்ரவேல் வம்சத்தாரிடம் எல்லாவிதமான அசுத்தங்களும், அருவருப்புக்களும் காணப்படுகிறது. அவர்கள் ஒரு காலத்தில் கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் இருந்தவர்கள். ஆனால் இப்போதோ அவர்கள் கர்த்தருக்கு பிரயோஜனமற்றவர்களாகயிருக்கிறார்கள். களிம்பு ஒன்றுக்கும் பயன்படாது. அது வெள்ளியிலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டிய கழிவு பொருள். அதை அலசியோ, அல்லது உருக்கியோ, அல்லது புடமிட்டோ நீக்கிப்போடவேண்டும்.

கர்த்தருக்கு பரிசுத்தமான இஸ்ரவேல் வம்சத்தார், இப்போது அசுத்தமானவர்களாகவும், தீட்டானவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை அழித்துப்போடுவதாகச் சொல்லுகிறார். "நீங்களெல்லாரும் களிம்பாய்ப் போனபடியினால், இதோ, நான் உங்களை எருசலேமுக்குள் சேர்ப்பேன்" (எசே 22:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் எல்லா தேசங்களிலும் சிதறிப்போயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை எருசலேம் நகரத்திற்குள் மறுபடியுமாய்க் கூட்டிச்சேர்ப்பார். பலவிதமான உலோகங்களை உருக்குவதற்கு குகையில் சேர்ப்பார்கள். அதுபோலவே கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை எருசலேமுக்குள் கூட்டிச்சேர்க்கிறார்.

"வெள்ளியையும் பித்தளையையும் இரும்பையும் ஈயத்தையும் தகரத்தையும் அக்கினியில் ஊதி உருக்குவதற்காகக் குகைக்குள் சேர்க்கிறதுபோல, நான் என் கோபத்தினாலும் என் உக்கிரத்தினாலும் உங்களைச் சேர்த்துவைத்து உருக்குவேன். நான் உங்களைக் கூட்டி, என் கோபமாகிய அக்கினியை உங்கள்மேல் ஊதுவேன்; அதற்குள்ளே நீங்கள் உருகுவீர்கள்" (எசே 22:20,21).

குகையை அக்கினியில் ஊதி உருக்கும்போது, வெள்ளியில் கலப்படமாய்ச் சேர்ந்துள்ள களிம்புகளெல்லாம் தனியாகப் பிரியும். அதுபோலவே, கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை எருசலேமுக்குள் கூட்டிச் சேர்த்து, அவர்களை உருக்குவார். அப்போது கர்த்தருடைய ஜனத்தாரில் துன்மார்க்கரும், சன்மார்க்கரும் தனித்தனியாகப் பிரிக்கப்படுவார்கள். வெள்ளியிலுள்ள களிம்பு தனியாகப் பிரிக்கப்படும். இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலிருக்கிற பாவிகளும் துன்மார்க்கரும் தனியாகப் பிரிக்கப்படுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை பல தேசங்களிலிருந்து எருசலேமுக்குள் கூட்டிச் சேர்ப்பார். அங்கே தம்முடைய கோபமாகிய அக்கினியை அவர்கள்மீது ஊதுவார். அவர்கள் அதற்குள்ளே உருகுவார்கள். குகைக்குள் வெள்ளி உருகுவதுபோல, இஸ்ரவேல் வம்சத்தார் அதற்குள் உருகுவார்கள். "அப்பொழுது கர்த்தராகிய நான் என் உக்கிரத்தை உங்கள்மேல் ஊற்றிவிட்டேன் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசே 22:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சுத்தம்பண்ணப்படாத தேசம்
எசே. 22:23-31

எசே 22:23. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 22:24. மனுபுத்திரனே, நீ தேசத்தைப் பார்த்து: நீ சுத்தம்பண்ணப்படாத தேசம், கோபத்தின் காலத்தில் மழை பெய்யாத தேசம் என்று அதற்குச் சொல்லு.

எசே 22:25. அதிலுள்ள தீர்க்கதரிசிகள் அதின் நடுவில் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள்; கெர்ச்சிக்கிற சிங்கம் இரை கவ்வுகிறது போல, ஆத்துமாக்களை அவர்கள் பட்சிக்கிறார்கள்; திரவியத்தையும் விலையுயர்ந்த பொருள்களையும் வாங்கிக்கொள்ளுகிறார்கள்; அதின் நடுவில் அநேகரை விதவைகளாக்குகிறார்கள்.

எசே 22:26. அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயஞ்செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள்; பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து, என் ஓய்வு நாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் நடுவிலே நான் கனவீனம்பண்ணப்படுகிறேன்.

எசே 22:27. அதின் நடுவில் இருக்கிற அதின் பிரபுக்கள் இரை கவ்வுகிற ஓநாய்களைப்போல் இருக்கிறார்கள்; அநியாயமாய்ப் பொருள் சம்பாதிக்கிறதற்கு இரத்தஞ் சிந்துகிறார்கள், ஆத்துமாக்களைக் கொள்ளையிடுகிறார்கள்.

எசே 22:28. அதின் தீர்க்கதரிசிகள் அபத்தமானதைத் தரிசித்து, பொய்ச்சாஸ்திரத்தை அவர்களுக்குச் சொல்லி, கர்த்தர் உரைக்காதிருந்தும், கர்த்தராகிய ஆண்டவர் உரைத்தாரென்று சொல்லி, அவர்களுக்குச் சாரமற்ற சாந்தைப் பூசுகிறார்கள்.

எசே 22:29. தேசத்தின் ஜனங்கள் இடுக்கண்செய்து, கொள்ளையடித்து, சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி, அந்நியனை அநியாயமாய்த் துன்பப்படுத்துகிறார்கள்.

எசே 22:30. நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்.

எசே 22:31. ஆகையால், நான் அவர்கள்மேல் என் கோபத்தை ஊற்றி, என் மூர்க்கத்தின் அக்கினியால் அவர்களை நிர்மூலமாக்கி, அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலையின்மேல் சுமரப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்றார்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின் பொதுவான நிலமையைப்பற்றி இங்கு சொல்லுகிறார். அது சுத்தம்பண்ணப்படாத தேசமாகயிருக்கிறது. அது கோபத்தின் காலத்தில் மழை பெய்யாத தேசமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் அக்கிரமமும், அநியாயமும் நிரம்பியிருக்கிறது. அங்கு குற்றமற்றவர்களின் இரத்தம் சிந்தப்படுகிறது. இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் தேசத்தின்மீது வருவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. தன்னுடைய அசுத்தத்தினாலும், அக்கிரமத்தினாலும், இஸ்ரவேல் தேசம் கர்த்தருடைய கோபத்திற்கும் நியாயத்தீர்ப்புக்கும் பாத்திரமானதாயிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தில் ஏராளமான தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை ஜனங்களுக்கு உண்மையாய் சொல்லுவதில்லை. அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தை சுத்திகரிப்பதற்கு, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவைப்படுகிறது. தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் தேசத்திடம், "நீ சுத்தம்பண்ணப்படாத தேசம் கோபத்தின் காலத்தில் மழை பெய்யாத தேசம்" என்று சொல்லவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் தேசத்திலுள்ள தீர்க்கதரிசிகளோ, கர்த்தருடைய வார்த்தைகளை உண்மையாய்ச் சொல்லவில்லை. இஸ்ரவேல் தேசத்திலுள்ள தீர்க்கதரிசிகள் அதின் நடுவில் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள். மாய்மாலம்பண்ணுகிறார்கள். தங்களுக்கு தேவனுடைய மனதும் சிந்தையும் தெரிந்திருப்பதுபோல நடிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை உண்மையாய்ச் சொல்வதில்லை.

இஸ்ரவேல் தேசத்திலுள்ள கள்ளத்தீர்க்கதரிசிகள், கெர்ச்சிக்கிற சிங்கம் இரை கவ்வுகிறது போல, ஆத்துமாக்களை பட்சிக்கிறார்கள்; திரவியத்தையும் விலையுயர்ந்த பொருள்களையும் வாங்கிக்கொள்ளுகிறார்கள்; அதின் நடுவில் அநேகரை விதவைகளாக்குகிறார்கள் (எசே 22:25). ஜனங்களுக்கு சமாதானம் இல்லாதிருந்தும், அவர்களுக்கு சமாதானம் உண்டு என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலுள்ள கள்ளத்தீர்க்கதரிசிகள் அபத்தமானதைத் தரிசித்து, பொய்ச்சாஸ்திரத்தை அவர்களுக்குச் சொல்லுகிறார்கள். கர்த்தர் உரைக்காதிருந்தும், கர்த்தராகிய ஆண்டவர் உரைத்தாரென்று சொல்லி, அவர்களுக்குச் சாரமற்ற சாந்தைப் பூசுகிறார்கள் (எசே 22:28).

கள்ளத்தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களுடைய வார்த்தைகளில் உண்மையில்லை. அது சாரமற்ற சாந்தைப் போல இருக்கிறது. கள்ளத்தீர்க்கதரிசிகள் ஓநாய்களைப்போல பட்சிக்கிற பிரபுக்களுக்கு ஆதரவாகயிருக்கிறார்கள்.

ஆசாரியர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கவேண்டும். தேவனுடைய நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். ஆனால், இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஆசாரியர்கள், கர்த்தருடைய வேதத்திற்கு அநியாயம் செய்கிறார்கள். அவருடைய பரிசுத்த வஸ்துக்களை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசிகளாயிருப்பதுபோல, அதிலுள்ள ஆசாரியர்களும் கள்ள ஆசாரியர்களாயிருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம்பண்ணுவதில்லை. அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பிப்பதில்லை. அவர்கள் கர்த்தருடைய ஓய்வு நாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள் (எசே 22:26).

இஸ்ரவேல் தேசத்திலுள்ள கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தரைக் கனம்பண்ணாமல், அவரை கனஈனம்பண்ணுகிறார்கள். "அவர்கள் நடுவில் நான் கனஈனம்பண்ணப்படுகிறேன்" (எசே 22:26) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கு பதிலாக, அவர்கள் வேறு சில உபாயங்களை தந்திரமாய் யோசிக்கிறார்கள். கள்ளஆசாரியர்கள் கர்த்தருக்கு பிரியமானதை செய்யாமல் மனுஷருக்கு பிரியமானதை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலிருக்கிற கள்ளதீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் நடுவிலிருக்கிற அதின் பிரபுக்கள் இரை கவ்வுகிற ஓநாய்களைப்போல் இருக்கிறார்கள்; அநியாயமாய்ப் பொருள் சம்பாதிக்கிறதற்கு இரத்தஞ்சிந்துகிறார்கள், ஆத்துமாக்களைக் கொள்ளையிடுகிறார்கள் (எசே 22:27).

இஸ்ரவேலின் பிரபுக்கள் மனுஷருடைய வழக்குகளை நீதியாய் நியாயம் விசாரிக்கவேண்டும். ஜனங்களுக்கு நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும். அவர்கள் அதிகாரத்திலிருக்கிறார்கள். கர்த்தரே அவர்களுக்கு ஆளுகை செய்யும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் கொடுத்திருக்கிற அதிகாரத்தை பிரபுக்கள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஆடுகளுக்கு பாதுகாப்பாக மேய்ப்பரைப்போல இருக்கவேண்டியவர்கள், ஆடுகளை பட்சிக்கிற ஓநாய்களைப்போல இருக்கிறார்கள்.

தேசத்தின் பிரபுக்கள் அக்கிரமக்காரராயிருக்கும்போது, அந்த தேசத்தின் ஜனங்களும், அக்கிரமம் செய்யக் கற்றுக்கொள்கிறார்கள். சண்டாளர்கள் தேசத்தை ஆட்சிசெய்யும்போது, அங்கே துன்மார்க்கம் மிகுதியாயிருக்கும்.

இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்கள் இடுக்கண்செய்து, கொள்ளையடித்து, சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி, அந்நியனை அநியாயமாய்த் துன்பப்படுத்துகிறார்கள் (எசே 22:29). இஸ்ரவேல் தேசத்திலுள்ள தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசிகளாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஆசாரியர்கள் கள்ளஆசாரியர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய பிரபுக்களும் பட்சிக்கிற ஓநாய்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்களும் அக்கிரமக்காரராயிருக்கிறார்கள். தேசத்தில் நீதியுமில்லை, நியாயமுமில்லை. உண்மையுள்ளவன் ஒருவனுமில்லை. கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறவன் யாருமில்லை.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களினிமித்தமாய், கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை அழித்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் தேசத்தில் ஒருவர்கூட, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வந்து, அவர்களுக்காக பரிந்து பேசவில்லை. கர்த்தர் தம்முடைய கோபத்தினால் தேசத்தை அழிக்காதபடிக்கு, திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனாவது தம்மிடத்தில் பரிந்துபேச வருவானா என்று கர்த்தர் தேடிப் பார்க்கிறார். "ஒருவனையும் காணேன்" *(எசே 22:30)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் பாவம் நிரம்பியிருக்கிறது. மனுஷருடைய பாவம் கர்த்தருக்கும் அவர்களுக்கும் நடுவில் இடைவெளியை உண்டுபண்ணிவிடுகிறது. அலங்கத்திலே திறப்பு காணப்பட்டால் நகரத்திற்கு பாதுகாப்பு இருக்காது. இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவமோ, அவர்களுடைய அலங்கத்திற்கு திறப்பைப்போல இருக்கிறது. அந்த திறப்பிலே நின்று சுவரை அடைக்க ஒருவரும் முன்வரவில்லை. திறப்பு அடைக்கப்படவில்லையென்றால் சத்துரு நகரத்திற்குள் எளிதாக பிரவேசித்துவிடுவான்.

இஸ்ரவேல் தேசத்தின் அலங்கத்தில் பாவம் என்னும் திறப்பு காணப்படுகிறது. இதனால் நகரத்திற்குள்ளே இருந்து நன்மையான ஈவுகள், நகரத்தைவிட்டு வெளியேறிப்போய்விடுகிறது. நகரத்திற்கு வெளியேயிருந்து தீமையான காரியங்கள் நகரத்திற்குள்ளே பிரவேசித்து விடுகிறது. இந்த திறப்பு அடைக்கப்படவேண்டுமென்றால், இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும். கர்த்தரிடத்தில் அழிந்துபோகும் ஜனங்களுக்காக மன்றாடி ஜெபம்பண்ணவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தாரின் இருதயங்கள் புதுப்பிக்கப்படவேண்டும். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தங்கள்மீது ஊற்றப்படவேண்டும் என்று ஊக்கமாய் ஜெபம்பண்ணவேண்டும். ஆனால் அப்படிப்பட்ட மனுஷன் ஒருவனும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரவில்லை.

கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் தேசத்தின்மீது வருகிறது. ஜனங்கள் பாவம் செய்கிறார்கள். மனந்திரும்ப மறுக்கிறார்கள். "ஆகையால், நான் அவர்கள்மேல் என் கோபத்தை ஊற்றி, என் மூர்க்கத்தின் அக்கினியால் அவர்களை நிர்மூலமாக்கி, அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலையின்மேல் சுமரப்பண்ணுவேன்" *(எசே 22:31)* என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாகத் திரும்பியபோது, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, மோசே கர்த்தருக்கு முன்பாக, திறப்பின் வாயிலே நின்றார்.

"ஆகையால், அவர்களை நாசம்பண்ணுவேன் என்றார்; அப்பொழுது அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்" *(சங் 106:23).*

23 அதிகாரம்

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பின்மாற்றத்தின் வரலாற்றை இங்கு சொல்லுகிறார். அவர்களுடைய பின்மாற்றத்திற்கு வேசித்தனமும் விபசாரமும் ஒப்புமையாகச் சொல்லப்படுகிறது.

சமஸ்த இஸ்ரவேல் தேசம், வடக்கு இஸ்ரவேல் ராஜ்யம் என்றும், தெற்கு யூதா ராஜ்யம் என்று இரண்டாய்ப் பிரிந்தது. வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே யாக்கோபின் பத்துக்கோத்திரத்தார் இருக்கிறார்கள். தெற்கு இஸ்ரவேல் தேசத்திலே யாக்கோபின் இரண்டு கோத்திரத்தார் இருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திற்கு சமாரியா தலைநகரமாகவும், யூதாதேசத்திற்கு எருசலேம் தலைநகரமாகவும் இருக்கிறது. இவ்விரண்டு தேசங்களுமே கர்த்தரைவிட்டு விலகிப்போயிற்று. கர்த்தர் அவர்களுடைய பின்மாற்றத்தை இந்த அதிகாரத்தில், தனித்தனியாக விவரித்துச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலும் சமாரியாவும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போகிறார்கள் (எசே 23:1-8). அவர்களுடைய அழிவு (எசே 23:9,10).

யூதாவும் எருசலேமும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போகிறார்கள் (எசே 23:11-21). சமாரியாவைப்போலவே, யூதாவும் எருசலேமும் அழிந்துபோகும் (எசே 23:22-35).

சமாரியாவும் எருசலேமும் இணைந்து கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கத்திற்குப் பங்காளிகளாயிருக்கிறார்கள் (எசே 23:36-44). இவர்களுக்கு அழிவு சேர்ந்து வரும் (எசே 23:45-49).

சமாரியாவும் எருசலேமும் எசே 23:1-10

எசே 23:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 23:2. மனுபுத்திரனே, ஒரே தாயின் குமாரத்திகளாகிய இரண்டு ஸ்திரீகள் இருந்தார்கள்.

எசே 23:3. அவர்கள் எகிப்திலே வேசித்தனம் பண்ணினார்கள்; தங்கள் இளம்பிராயத்திலே வேசித்தனம்பண்ணினார்கள்; அங்கே அவர்களுடைய ஸ்தனங்கள் அமுக்கப்பட்டு, அவர்களுடைய கன்னிமையின் கொங்கைகள் தொடப்பட்டது.

எசே 23:4. அவர்களில் மூத்தவளின் பெயர் அகோலாள், அவளுடைய தங்கையின் பெயர் அகோலிபாள்; அவர்கள் என்னுடையவர்களாகி, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றார்கள்; இவைகளே அவர்களுடைய பெயர்கள்; அகோலாள் என்பதற்குச் சமாரியா என்றும், அகோலிபாள் என்பதற்கு எருசலேம் என்றும் பொருளாம்.

எசே 23:5. அகோலாள் என்னுடையவளாயிருக்கும்போது சோரம்போனாள்.

எசே 23:6. நீலாம்பரந்தரித்த தலைவரும், அதிபதிகளும், சௌந்தரிய வாலிபரும், குதிரைகளின்மேல்ஏறுகிற வீரருமாயிருந்த சமீபதேசத்தாராகிய அசீரியரென்கிற தன் சிநேகிதர்மேல் அவள் மோகித்து,

எசே 23:7. அசீரியரின் புத்திரரில் சிரேஷ்டமான அனைவரோடும், தான் மோகித்த அனைவரோடும் தன் வேசித்தனங்களை நடப்பித்து, அவர்களுடைய நரகலான சகல விக்கிரகங்களாலும் தீட்டுப்பட்டுப் போனாள்.

எசே 23:8. தான் எகிப்திலே பண்ணின வேசித்தனங்களை அவள் விடவில்லை; அவர்கள் அவளுடைய வாலிபத்திலே அவளோடே சயனித்து, அவளுடைய கன்னிமையின் கொங்கைகளைத் தொட்டு, அவளிடத்தில் தங்கள் வேசித்தனத்தை நடப்பித்தார்கள்.

எசே 23:9. ஆகையால் அவளுடைய சிநேகிதரின் கையிலே, அவள் மோகித்திருந்த அசீரிய புத்திரரின் கையிலே, நான் அவளை ஒப்புக்கொடுத்தேன்.

எசே 23:10. அவர்கள் அவளை நிர்வாணமாக்கினார்கள்; அவளுடைய குமாரரையும் அவளுடைய குமாரத்திகளையும் சிறைபிடித்து, அவளையோ பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; அப்படியே அவளிடத்தில் ஆக்கினைகள் செய்யப்பட்டபடியினால் ஸ்திரீகளுக்குள் அவகீர்த்தியுள்ளவளானாள்.

கர்த்தர் இஸ்ரவேலின் இரண்டு ராஜ்யங்களையும், இரண்டு ஸ்திரீகளாகப் பாவித்து, அவர்களைப்பற்றிச் சொல்லுகிறார். இவ்விரண்டு ஸ்திரீகளும் ஒரே தாயின் குமாரத்திகள். இவ்விரண்டு தேசங்களும் சகோதரிகளாயிருக்கிறார்கள். இஸ்ரவேலும் யூதாவும் ஒரே தாயின் பிள்ளைகள். அவர்கள் பல வருஷங்களாக ஒரே ஜனமாகவே இருந்தார்கள். தாவீதின் காலத்திலும், சாலொமோனுடைய காலத்திலும் இஸ்ரவேல் தேசம் பிளவுபடாமல், சமஸ்த இஸ்ரவேலாயிருந்தது. அதன் பின்பு அது வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தது.

இஸ்ரவேல் வம்சத்தார் சமஸ்த இஸ்ரவேலாயிருந்தபோது அவர்கள் எகிப்திலே வேசித்தனம் பண்ணினார்கள்; தங்கள் இளம்பிராயத்திலே வேசித்தனம்பண்ணினார்கள்; அங்கே அவர்களுடைய ஸ்தனங்கள் அமுக்கப்பட்டு, அவர்களுடைய கன்னிமையின் கொங்கைகள் தொடப்பட்டது (எசே 23:3).

எகிப்து தேசத்தில் ஏராளமான விக்கிரகங்கள் இருக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தபோது, அங்கே விக்கிரகங்களைச் செய்யக் கற்றுக்கொண்டார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்தார்கள்.

"அவர்களோ, என் சொல்லைக் கேட்க மனதில்லாமல் எனக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணினார்கள்; அவரவர் தங்கள் கண்களால் நோக்கின அருவருப்புகளைத் தள்ளிப்போடாமலும், எகிப்தின் நரகலான விக்கிரகங்களை விடாமலும் இருந்தார்கள்; ஆதலால் எகிப்து தேசத்தின் நடுவிலே என் கோபத்தை அவர்களிலே தீர்த்துக்கொள்ளும்படிக்கு என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன் என்றேன்" (எசே 20:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் சமாரியாவுக்கும், எருசலேமுக்கும் தனித்தனி பெயர்களைக் கொடுக்கிறார். அவர்களில் மூத்தவளின் பெயர் அகோலாள், அவளுடைய தங்கையின் பெயர் அகோலிபாள் (எசே 23:4). கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை மூத்தவள் என்று அழைக்கிறார். சமஸ்த இஸ்ரவேல் தேசம், இரண்டாகப் பிரிந்தபோது, வடக்கு இஸ்ரவேல் தேசமே முதலாவதாகப் பிரிந்துபோயிற்று. இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார், வடக்கு இஸ்ரவேல் தேசமாகப் பிரிந்தார்கள். அவர்கள் முதலாவதாகப் பிரிந்துபோனதினால், கர்த்தர் அவர்களை "மூத்தவள்" என்று அழைக்கிறார்.

யூதாதேசத்தில், இஸ்ரவேல் வம்சத்தாரில் மீதமுள்ள, இரண்டு கோத்திரங்கள் மாத்திரமே இருக்கிறார்கள். கர்த்தர் யூதாதேசத்தை, "அவளுடைய தங்கை" என்று அழைக்கிறார்.

கர்த்தர் சமாரியாவையும், இஸ்ரவேலையும் பற்றிச் சொல்லும்போது, சமாரியாவுக்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் "அகோலாள்" என்னும் பெயரைக் கொடுக்கிறார். இந்தப் பெயருக்கு "அவளுடைய ஆசரிப்புக்கூடாரம்" என்று பொருள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் சமாரியாவிலே, தங்களுடைய சுயசித்தத்தின் பிரகாரமாகவும், சுயதிட்டத்தின் பிரகாரமாகவும், சுயவிருப்பத்தின் பிரகாரமாகவும் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினார்கள். தங்களுடைய விருப்பப்படி கர்த்தரை ஆராதித்தார்கள். ஆகையினால் கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தை "அகோலாள்" என்று அழைக்கிறார்.

கர்த்தர் தெற்கு யூதாதேசத்தையும், எருசலேமையும் "அகோலிபாள்" என்று அழைக்கிறார். இந்தப் பெயருக்கு "என்னுடைய கூடாரம் அவளிலிருக்கிறது" என்று பொருள். எருசலேமிலுள்ள தேவாலயம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்த ஸ்தலத்திலே அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் எருசலேமிலுள்ள தேவாலயத்தில், தம்முடைய பரிசுத்த நாமத்தை விளங்கப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரையும், தெற்கு யூதாதேசத்தாரையும் பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் என்னுடையவர்களாகி, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றார்கள்; இவைகளே அவர்களுடைய பெயர்கள்; அகோலாள் என்பதற்குச் சமாரியா என்றும், அகோலிபாள் என்பதற்கு எருசலேம் என்றும் பொருளாம்" (எசே 23:4) என்று சொல்லுகிறார்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போனார்கள். "அகோலாள் என்னுடையவளாயிருக்கும்போது சோரம்போனாள்" (எசே 23:5) என்று கர்த்தர் சொல்லுகிறார். யாக்கோபின் பத்துக்கோத்திரத்தாரும், தாவீதின் குடும்பத்தைவிட்டுப் பிரிந்துபோய் விடுகிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை தம்முடையவர்களாகவே பாவிக்கிறார். அவர்கள் இஸ்ரவேலின் தேவனை ஆராதிக்கும் வரையிலும், அவர்கள் கர்த்தருக்குரியவர்களாகவே இருக்கிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக, சமாரியாவிலே ஆலயத்தைக் கட்டவில்லை. அவர்களுடைய ஆராதனை முறைமைகளும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகயில்லை. ஆனாலும் அவர்கள் அந்நிய தெய்வங்களை ஆராதிக்காமல், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரையே ஆராதிக்கிறார்கள். அவர்கள் தம்மை ஆராதிக்கும் வரையிலும், கர்த்தர் அவர்களை தம்முடையவர்களாக அங்கீகரிக்கிறார். கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரை, தம்முடைய சமுகத்தைவிட்டு மொத்தமாய்த் துரத்திவிடவில்லை.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரை ஆராதித்துக்கொண்டிருக்கும் போதே, அவர்கள் விக்கிரகங்களுக்கு தூபங்காட்ட ஆரம்பிக்கிறார்கள். அகோலாள் தம்முடையவளாயிருக்கும்போது சோரம்போனாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவள் பாகாலை ஆராதித்து, ஆவிக்குரிய வேசித்தனம் பண்ணினாள்.

"நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான்" (1இராஜா 16:31,32).

"அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை" (1இராஜா 18:21).

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்கள், இஸ்ரவேல் தேசத்தில், கர்த்தருக்கு போட்டியாக, பாகாலை ஆராதிக்கிறார்கள். பாகால் அசீரியரின் தெய்வம். அசீரியர்கள் இஸ்ரவேலுக்கு அண்டை தேசத்தார். இஸ்ரவேல் வம்சத்தார் அசீரியரோடு சிநேகம் வைத்து, அவர்களுடைய விக்கிரகங்கள்மீதும், விக்கிரகாராதனைமீதும் ஆசைப்படுகிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் விக்கிரகாராதனையையும், அவர்கள் தங்களை தீட்டுப்படுத்தினதையும் கர்த்தர் தெளிவாகச் சொல்லுகிறார்.

"நீலாம்பரந்தரித்த தலைவரும், அதிபதிகளும், சௌந்தரிய வாலிபரும், குதிரைகளின்மேல்ஏறுகிற வீரருமாயிருந்த சமீபதேசத்தாராகிய அசீரியரென்கிற தன் சிநேகிதர்மேல் அவள் மோகித்து, அசீரியரின் புத்திரரில் சிரேஷ்டமான அனைவரோடும், தான் மோகித்த அனைவரோடும் தன் வேசித்தனங்களை நடப்பித்து, அவர்களுடைய நரகலான சகல விக்கிரகங்களாலும் தீட்டுப்பட்டுப்போனாள்" (எசே 23:6,7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால் அவர்களுக்கு அழிவு வந்தது. அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். அவர்கள் ஏற்கெனவே எகிப்து தேசத்திலே விக்கிரகாராதனை செய்தார்கள். அவர்கள் எகிப்து தேசத்தின் விக்கிரகாராதனையையும் விடவில்லை. அதோடு சேர்ந்து, அசீரியரின் விக்கிரகாராதனைகளையும் பின்பற்றுகிறார்கள்.

"தான் எகிப்திலே பண்ணின வேசித்தனங்களை அவள் விடவில்லை; அவர்கள் அவளுடைய வாலிபத்திலே அவளோடே சயனித்து, அவளுடைய கன்னிமையின் கொங்கைகளைத் தொட்டு, அவளிடத்தில் தங்கள் வேசித்தனத்தை நடப்பித்தார்கள்" (எசே 23:8) என்று கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் விக்கிரகாராதனையைப்பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கோபம் வடக்கு இஸ்ரவேல் தேசத்தார்மீது வருகிறது. கர்த்தர் அவர்களை அவர்களுடைய காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார். அதன் பின்பு அவர்கள் மோகித்திருந்த அசீரிய புத்திரரின் கையிலே ஒப்புக்கொடுத்துவிடுகிறார். "ஆகையால் அவளுடைய சிநேகிதரின் கையிலே, அவள் மோகித்திருந்த அசீரிய புத்திரரின் கையிலே, நான் அவளை ஒப்புக்கொடுத்தேன்" (எசே 23:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரைத் தண்டிப்பதற்கு கர்த்தர் அசீரியரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். அவர்கள் அவளை நிர்வாணமாக்கினார்கள்; அவளுடைய குமாரரையும் அவளுடைய குமாரத்திகளையும் சிறைபிடித்து, அவளையோ பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; அப்படியே அவளிடத்தில் ஆக்கினைகள் செய்யப்பட்டபடியினால் ஸ்திரீகளுக்குள் அவகீர்த்தியுள்ளவளானாள் (எசே 23:10).

வடக்கு இஸ்ரவேல் தேசம் அழிந்துபோன வரலாற்று சம்பவம் 2இராஜா 17:6 ஆவது வசனம் முதல் எழுதப்பட்டிருக்கிறது.

யூதாவும் எருசலேமும்
எசே 23:11-21

எசே 23:11. அவளுடைய தங்கையாகிய அகோலிபாள் இதைக் கண்டும், தன் மோகவிகாரத்தில் அவளைப் பார்க்கிலும் கெட்டவளானாள்; தன் சகோதரியின் வேசித்தனங்களிலும் தன் வேசித்தனங்கள் அதிகமாயிற்று.

எசே 23:12. மகா அலங்கார உடுப்புள்ள தலைவரும், அதிபதிகளும், குதிரைகள்மேல் ஏறுகிற வீரரும், சௌந்தரியமுள்ள வாலிபருமான சமீபதேசத்தாராகிய அசீரிய புத்திரர்மேல் மோகங்கொண்டாள்.

எசே 23:13. அவளும் அசுத்தமானாளென்றும், அவர்கள் இருவரும் ஒரே வழியில் போனார்களென்றும் கண்டேன்.

எசே 23:14. அவள் தன் வேசித்தனங்களில் அதிகரித்தாள்; சுவரில் ஜாதிலிங்கத்தால் சித்திரந்தீர்ந்த கல்தேயரின் புருஷ சுரூபங்களைக் கண்டாள்.

எசே 23:15. அவர்கள் எல்லாரும் தங்கள் ஜென்மதேசமாகிய கல்தேயாவில் உள்ள பாபிலோன் புத்திரரின் சாயலாகத் தங்கள் அரைகளில் கச்சை கட்டினவர்களும், தங்கள் தலைகளில் சாயந்தீர்ந்த பெரிய பாகைகளைத் தரித்தவர்களும், பார்வைக்கு ராஜகுமாரர்களுமாக இருந்தார்கள்.

எசே 23:16. அவளுடைய கண்கள் அவர்களைப் பார்த்தவுடனே, அவள் அவர்கள்மேல் மோகித்து, கல்தேயாவுக்கு அவர்களண்டையிலே ஸ்தானாதிபதிகளை அனுப்பினாள்.

எசே 23:17. அப்பொழுது பாபிலோன் புத்திரர் அவளண்டையிலே சிநேக சம்போகத்துக்கு வந்து, தங்கள் வேசித்தனங்களால் அவளைத் தீட்டுப்படுத்தினார்கள்; அவள் இவர்களால் தீட்டுப்பட்டுப்போனபின்பு, அவள் மனது அவர்களை விட்டுப் பிரிந்தது.

எசே 23:18. இவ்விதமாய் அவள் தன் வேசித்தனங்களை வெளிப்படுத்தி, தன்னை நிர்வாணமாக்கினபோது, என் மனம் அவளுடைய சகோதரியை விட்டுப் பிரிந்ததுபோல அவளையும் விட்டுப் பிரிந்தது.

எசே 23:19. அவள் எகிப்து தேசத்திலே வேசித்தனம் பண்ணின தன் வாலிபத்தின் நாட்களை நினைத்து, தன் வேசித்தனங்களில் அதிகரித்துப்போனாள்.

எசே 23:20. கழுதைமாம்சமான மாம்சமும், குதிரை இந்திரியமான இந்திரியமுள்ள அவர்களுக்கு அவள் வைப்பாட்டியாயிருக்கும்படி அவர்கள்மேல் மோகித்தாள்.

எசே 23:21. எகிப்தியரால் உன் கன்னிமையின் ஸ்தனங்களாகிய கொங்கைகள் தொடப்பட்ட காலத்தில், நீ உன் இளம்பிராயத்தில் செய்த முறைகேடுகளை நினைத்துவருகிறாய்.

ஓசியா தீர்க்கதரிசியின் காலத்தில், தெற்கு யூதாதேசத்தின் இரண்டு கோத்திரத்தாரும், கர்த்தருக்கு பயந்து ஜீவித்தார்கள். யூதாதேசத்திலே விக்கிரகாராதனை இன்னும் பிரவேசிக்கவில்லை.

"எப்பிராயீமர் பொய்களினாலும், இஸ்ரவேல் வம்சத்தார் வஞ்சகத்தினாலும் என்னைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்; யூதாவோவெனில் இன்னும் தேவனோடே அரசாண்டு, பரிசுத்தவான்களோடே உண்மையாயிருக்கிறான்" (ஓசி 11:12).

இதற்கு பின்பு ஆகாபின் வீட்டாரைப்போலவே, தாவீதின் வீட்டாரும் பாகாலை ஆராதித்தார்கள். யூதாதேசத்திலே பாகால் ஆராதனை பிரவேசித்தது. ஆனாலும் யூதாவின் ராஜாக்களில் சிலர், யூதாதேசத்திலிருந்து விக்கிரகாராதனையை நீக்கிப்போட்டார்கள். யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று.

வடக்கு இஸ்ரவேல் தேசம் அழிந்தபோது, மனாசேயின் ஆட்சிக்காலத்தில் தெற்கு யூதாதேசத்தில், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் விக்கிரக ஆராதனை செய்தார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரைவிட, தெற்கு யூதாதேசத்தாரின் துன்மார்க்கமும், விக்கிரகாராதனையும் மிகவும் அதிகமாயிருந்தது.

கர்த்தர் தெற்கு யூதாதேசத்தின் பாவத்தைப்பற்றி விரிவாய்ச் சொல்லுகிறார். "அவளுடைய தங்கையாகிய அகோலிபாள் இதைக் கண்டும், தன் மோகவிகாரத்தில் அவளைப் பார்க்கிலும் கெட்டவளானாள்; தன் சகோதரியின் வேசித்தனங்களிலும் தன் வேசித்தனங்கள் அதிகமாயிற்று" (எசே 23:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் விக்கிரகாராதனையினிமித்தமாக, அவர்களுடைய தேசம் அழிந்துபோயிற்று. அதைப் பார்த்த பின்பும், தெற்கு யூதாதேசத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. சமாரியாவைவிட, எருசலேமின் குடிகள் அதிகமாய்ப் பாவம் செய்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தைவிட, தெற்கு யூதாதேசத்தில், விக்கிரகாராதனை அதிகமாய்க் காணப்படுகிறது.

எருசலேம் கர்த்தருக்கு உண்மையுள்ள நகரம். அது கர்த்தருடைய பரிசுத்த நகரம். ஆனால் அந்த நகரம் இப்போது வேசியாயிற்று.

"உண்மையுள்ள நகரம் எப்படி வேசியாய்ப்போயிற்று! அது நியாயத்தால் நிறைந்திருந்தது, நீதி அதில் குடி கொண்டிருந்தது; இப்பொழுதோ அதின் குடிகள் கொலைபாதகர்" (ஏசா 1:21).

வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரைப் போலவே, தெற்கு யூதாதேசத்தாரும் அசீரிய புத்திரர்மேல் மோகங்கொண்டார்கள். அசீரியரின் விக்கிரகாராதனை யூதாதேசத்தில் பிரவேசித்தது.

கர்த்தர் தெற்கு யூதாதேசத்தாரின் பாவங்களை இங்கு விரிவாகச் சொல்லுகிறார்.

"மகா அலங்கார உடுப்புள்ள தலைவரும், அதிபதிகளும், குதிரைகள்மேல் ஏறுகிற வீரரும், சௌந்தரியமுள்ள வாலிபருமான சமீபதேசத்தாராகிய அசீரிய புத்திரர்மேல் மோகங்கொண்டாள். அவளும் அசுத்தமானாளென்றும், அவர்கள் இருவரும் ஒரே வழியில் போனார்களென்றும் கண்டேன். அவள் தன் வேசித்தனங்களில் அதிகரித்தாள்; சுவரில் ஜாதிலிங்கத்தால் சித்திரந்தீர்ந்த கல்தேயரின் புருஷ சுரூபங்களைக் கண்டாள்" (எசே 23:12-14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தெற்கு யூதாதேசத்தார் அசீரிய புத்திரர்மேல் மோகங்கொண்டதுபோல, பாபிலோன் தேசத்து புத்திரர்மேலும் மோகங் கொள்கிறார்கள். அவர்களோடு இராணுவ உடன்படிக்கை செய்துகொள்கிறார்கள். பாபிலோன் தேசத்தின் விக்கிரகாராதனை எருசலேமுக்குள் பிரவேசிக்கிறது.

தெற்கு இஸ்ரவேல் தேசத்தார் பாபிலோன் தேசத்தாரிடம் விக்கிரகாராதனையைக் கற்றுக் கொள்கிறார்கள். விக்கிரகங்களை செய்யும் விதத்தையும், விக்கிரகங்களை ஆராதிக்க வேண்டிய முறைகளையும் யூதாவின் மனுஷர், பாபிலோன் தேசத்தாரிடம் கற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் இதுபற்றி இவ்வாறு தெளிவாகச் சொல்லுகிறார்.

"அவர்கள் எல்லாரும் தங்கள் ஜென்மதேசமாகிய கல்தேயாவில் உள்ள பாபிலோன் புத்திரரின் சாயலாகத் தங்கள் அரைகளில் கச்சை கட்டினவர்களும், தங்கள் தலைகளில் சாயந்தீர்ந்த பெரிய பாகைகளைத் தரித்தவர்களும், பார்வைக்கு ராஜகுமாரர்களுமாக இருந்தார்கள். அவளுடைய கண்கள் அவர்களைப் பார்த்தவுடனே, அவள் அவர்கள்மேல் மோகித்து, கல்தேயாவுக்கு அவர்களண்டையிலே ஸ்தானாதிபதிகளை அனுப்பினாள். அப்பொழுது பாபிலோன் புத்திரர் அவளண்டையிலே சிநேக சம்போகத்துக்கு வந்து, தங்கள் வேசித்தனங்களால் அவளைத் தீட்டுப்படுத்தினார்கள்; அவள் இவர்களால் தீட்டுப்பட்டுப்போனபின்பு, அவள் மனது அவர்களை விட்டுப் பிரிந்தது. இவ்விதமாய் அவள் தன் வேசித்தனங்களை வெளிப்படுத்தி, தன்னை நிர்வாணமாக்கினபோது, என் மனம் அவளுடைய சகோதரியை விட்டுப் பிரிந்ததுபோல அவளையும் விட்டுப் பிரிந்தது" (எசே 23:15-18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்தார் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் துன்பப்படுத்தினார்கள். அவர்களை சிறைப்பிடித்தார்கள். அப்போது யூதாவின் மனுஷர் மறுபடியுமாய் எகிப்து தேசத்தாரோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையோடும் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். இவ்விதமாய் யூதாதேசத்தார் தங்கள் வேசித்தனங்களில் அதிகரித்துப்போகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் ஏற்கெனவே எகிப்து தேசத்தாரின் விக்கிரகாராதனையை கற்றுக்கொண்டவர்கள். இப்போது அவர்கள் மறுபடியுமாய் தங்கள் வாலிபத்தின் நாட்களை நினைத்து, எகிப்து தேசத்திலே வேசித்தனம் பண்ணுகிறார்கள்.

நம்முடைய பழைய பாவங்களைப்பற்றி நாம் நினைக்கும்போது, நமக்கு வெட்கமும், அவமானமும் உண்டாகவேண்டும். அந்தப் பாவங்களை நினைத்து சந்தோஷப்படக்கூடாது. நம்முடைய பழைய பாவங்களை நினைத்துப் பார்த்து, நம்முடைய இருதயத்தில் பெருமைப்படவும் கூடாது. நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவேண்டும். ஆனால் யூதாவின் மனுஷரோ, எகிப்து தேசத்திலே வேசித்தனம்பண்ணின தங்கள் வாலிபத்தின் நாட்களை சந்தோஷமாய் நினைத்துப் பார்க்கிறார்கள். அவர்களோடு தங்கள் வேசித்தனங்களை அதிகரிக்கச் செய்கிறார்கள்.

"கழுதைமாம்சமான மாம்சமும், குதிரை இந்திரியமான இந்திரியமுள்ள அவர்களுக்கு அவள் வைப்பாட்டியாயிருக்கும்படி அவர்கள்மேல் மோகித்தாள். எகிப்தியரால் உன் கன்னிமையின் ஸ்தனங்களாகிய கொங்கைகள் தொடப்பட்ட காலத்தில், நீ உன் இளம்பிராயத்தில் செய்த முறைகேடுகளை நினைத்துவருகிறாய்" (எசே 23:20,21) என்று கர்த்தர் யூதாவம்சத்தாரின் பாவங்களைப்பற்றிச் சொல்லுகிறார்.

எருசலேம் நகரம் ஒரு காலத்தில் கர்த்தருக்கு உண்மையுள்ள நகரமாயிருந்தது. இப்போதோ அது வேசியாய்ப் போயிற்று. அது கர்த்தருக்கு விரோதமாக முறைகேடுகளைச் செய்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால், யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தள்ளிவிடுகிறார். பாவிகளுடைய மனது கர்த்தரை விட்டு பிரிந்து விலகியிருக்கும். பாவம் கர்த்தரையும் மனுஷனையும் பிரித்துவிடுகிறது. இருவருக்கும் நடுவே பெரிய இடைவெளியை உண்டுபண்ணிவிடுகிறது. பாவிகளால் தேவனுடைய சிந்தையைப் புரிந்துகொள்ள முடியாது. பாவிகளின் சிந்தையில் தேவனைப்பற்றிய சிந்தை இருக்காது.

எருசலேமின் அழிவு எசே 23:22-35

எசே 23:22. ஆகையால் அகோலிபாளே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, உன் மனது விட்டுப் பிரிந்த உன் சிநேகிதரை நான் உனக்கு விரோதமாக எழுப்பி, உனக்கு விரோதமாக அவர்களைச் சுற்றிலும் வரப்பண்ணுவேன்.

எசே 23:23. சௌந்தரியமுள்ள வாலிபரும், தலைவரும், அதிபதிகளும், குதிரைகள்மேல் ஏறுகிற வீரருமாகிய பேர்பெற்ற பிரபுக்களான பாபிலோன் புத்திரரையும், கல்தேயர் எல்லாரையும், பேகோடு, சோவா, கோவா என்கிற தேசங்களின் மனுஷரையும் அவர்களோடேகூட அசீரிய புத்திரர் எல்லாரையும் வரப்பண்ணுவேன்.

எசே 23:24. அவர்கள் வண்டில்களோடும், இரதங்களோடும், யந்திரங்களோடும், ஜனக்கூட்டத்தோடும், கேடகங்களும் பரிசைகளும் தலைச்சீராக்களும் தரித்தவர்களாய், உனக்கு விரோதமாக வந்து, உன்னைச் சுற்றிலும் பாளயமிறங்குவார்கள்; அவர்களுக்கு முன்னே நான் நியாயத்தை விளங்கப்பண்ணுவேன்; அவர்கள் தங்கள் நியாயங்களின்படி உன்னை நியாயந்தீர்ப்பார்கள்.

எசே 23:25. உனக்கு விரோதமாக என் எரிச்சலை விளங்கப்பண்ணுவேன்; அவர்கள் உன்னை உக்கிரமாய் நடப்பித்து, உன் மூக்கையும் உன் காதுகளையும் அறுத்துப்போடுவார்கள்; உன்னில் மீதியாயிருப்பவர்கள் பட்டயத்தால் வெட்டுண்டுபோவார்கள்; அவர்கள் உன் குமாரரையும் உன் குமாரத்திகளையும் பிடித்துக்கொள்ளுவார்கள்; உன்னில் மீதியாயிருப்பவர்கள் அக்கினிக்கு இரையாவார்கள்.

எசே 23:26. அவர்கள் உன் வஸ்திரங்களை உரிந்து, உன் சிங்காரமான ஆபரணங்களைப் பறித்துக்கொள்ளுவார்கள்.

எசே 23:27. இவ்விதமாய் உன் முறைகேட்டையும், நீ எகிப்துதேசத்தில் துவக்கின உன் வேசித்தனத்தையும் ஒழியப்பண்ணுவேன்; நீ இனி அவர்களை நோக்க உன் கண்களை ஏறெடுக்காமலும், எகிப்துவை நினையாமலும் இருப்பாய்.

எசே 23:28. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நீ பகைக்கிறவர்களின் கையிலும், உன் மனம் விட்டுப் பிரிந்தவர்களின் கையிலும் நான் உன்னை ஒப்புக்கொடுப்பேன்.

எசே 23:29. அவர்கள் உன்னை வெறுப்பாய் நடத்தி, உன் பிரயாசத்தின் பலனையெல்லாம் எடுத்துக்கொண்டு, உன்னை அம்மணமும் நிர்வாணமுமாக்கி விடுவார்கள்; அப்படியே உன் வெட்கக்கேடும் உன் முறைகேடுமான உன் வேசித்தனத்தின் நிர்வாணம் வெளிப்படுத்தப்படும்.

எசே 23:30. நீ புறஜாதிகளைப் பின்தொடர்ந்து, அவர்களுடைய நரகலான விக்கிரகங்களால் உன்னைத் தீட்டுப்படுத்திக்கொண்ட உன் வேசித்தனத்தினிமித்தம் இவைகள் உனக்குச் செய்யப்படும்.

எசே 23:31. உன் சகோதரியின் வழியிலே நீ நடந்தாய்; ஆகையால் அவளுடைய பாத்திரத்தை உன் கையிலே கொடுப்பேன்.

எசே 23:32. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ உன் சகோதரியினுடைய ஆழமும் அகலமுமானதும் நிறைய வார்க்கப்பட்டதுமான பாத்திரத்தைக் குடித்து, நகைப்பும் பரியாசமுமாவாய்.

எசே 23:33. சமாரியா என்னும் உன் சகோதரியினுடைய பாத்திரமாயிருக்கிற பிரமிப்பும் பாழ்க்கடிப்பும் என்கிற பாத்திரத்தால் வெறியினாலும் சஞ்சலத்தினாலும் நிறையப்படுவாய்.

எசே 23:34. நீ அதில் இருக்கிறதைக் குடித்து, உறிஞ்சி, அதின் ஓடுகளை உடைத்துப்போட்டு, உன் ஸ்தனங்களைக் கீறிக்கொள்வாய்; நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 23:35. ஆகையால், நீ என்னை மறந்து, என்னை உனக்குப் புறம்பே தள்ளிவிட்டதினிமித்தம், நீ உன் முறைகேட்டையும் உன் வேசித்தனங்களையும் சுமப்பாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தர் எருசலேமுக்கு அகோலிபாள் என்னும் பெயர் கொடுத்திருக்கிறார். எருசலேம் நகரம் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறது. எருசலேமின் குடிகளுக்கு கர்த்தர்மீது பயமோ, பக்தியோ இல்லை. அவர்கள் தேவனுடைய ஆளுகைக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் ஆளுகை செய்யவில்லை. பிசாசானவனே அவர்களை ஆளுகை செய்கிறான். யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாயிராமல், பிசாசுகளோடு ஐக்கியமாயிருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் யாரையெல்லாம் தங்கள் சிநேகிதர்கள் என்று நினைத்தார்களோ, அவர்கள் எல்லோரும் யூதாவுக்கு விரோதமாக வருவார்கள். கர்த்தரே யூதா மனுஷருடைய சிநேகிதர்களை, அவர்களுக்கு சத்துருக்களாக மாற்றுவார்.

"ஆகையால் அகோலிபாளே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, உன் மனது விட்டுப் பிரிந்த உன் சிநேகிதரை நான் உனக்கு விரோதமாக எழுப்பி, உனக்கு விரோதமாக அவர்களைச் சுற்றிலும் வரப்பண்ணுவேன். சௌந்தரியமுள்ள வாலிபரும், தலைவரும், அதிபதிகளும், குதிரைகள்மேல் ஏறுகிற வீரருமாகிய பேர்பெற்ற பிரபுக்களான பாபிலோன் புத்திரரையும், கல்தேயர் எல்லாரையும், பேகோடு, சோவா, கோவா என்கிற தேசங்களின் மனுஷரையம் அவர்களோடேகூட அசீரிய புத்திரர் எல்லாரையும் வரப்பண்ணுவேன்" *(எசே 23:22,23)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவுக்கு விரோதமாக எல்லா திசைகளிலிருந்தும் சத்துருக்கள் வருவார்கள். அவர்கள் எருசலேமின் குடிகளோடு யுத்தம்பண்ண ஆயத்தமாய் வருவார்கள். "அவர்கள் வண்டில்களோடும், இரதங்களோடும், யந்திரங்களோடும், ஜனக்கூட்டத்தோடும், கேடகங்களும் பரிசைகளும் தலைச்சீராக்களும் தரித்தவர்களாய், உனக்கு விரோதமாக வந்து, உன்னைச் சுற்றிலும் பாளயமிறங்குவார்கள்; அவர்களுக்கு முன்னே நான் நியாயத்தை விளங்கப்பண்ணுவேன்; அவர்கள் தங்கள் நியாயங்களின்படி உன்னை நியாயந்தீர்ப்பார்கள்" (எசே 23:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயரும், அவர்களோடு இராணுவ ஒப்பந்தம் செய்திருக்கிற தேசத்தாரும் யூதாவுக்கு விரோதமாக வருவார்கள். அவர்களுடைய சேனை பெருந்திரளாயிருக்கும். கர்த்தர் யூதாவுக்கு முன்பாக தம்முடைய நியாயத்தை விளங்கப்பண்ணுவார். கல்தேயர் தங்களுடைய நியாயங்களின்படி யூதாவின் மனுஷரை நியாயந்தீர்ப்பார்கள்.

கல்தேயர்கள் யூதா மனுஷரை வெறுப்பாய் நடத்துவார்கள். எருசலேம் குடிகளுடைய பிரயாசத்தின் பலனையெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அவர்கள் யூதாவின் மனுஷரை அம்மணமும் நிர்வாணமும் ஆக்கிவிடுவார்கள். யூதாதேசத்தாரின் வெட்கக்கேடும், அவர்களுடைய முறைகேடும், அவர்களுடைய வேசித்தனத்தின் நிர்வாணமும் வெளிப்படுத்தப்படும் (எசே 23:29).

யூதாவின் மனுஷர் கர்த்தரை நம்பாமல், தங்களுடைய வஸ்திரங்களையும், சிங்காரமான ஆபரணங்களையும் நம்பினார்கள். இவற்றை பாபிலோன் தேசத்தாருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து, அவர்களோடு உடன்படிக்கை செய்துகொள்ளலாம் என்று நினைத்தார்கள். ஆனால் அவர்களோ யூதாதேசத்தாரின் வஸ்திரங்களை உரிந்துபோடுவார்கள். அவர்களுடைய சிங்காரமான ஆபரணங்களைப் பறித்துக்கொள்வார்கள்.

கர்த்தர் யூதாதேசத்திற்கு விரோதமாக தம்முடைய எரிச்சலை விளங்கப்பண்ணுகிறார். அவர்கள் யூதர்களை பட்சமாய் நடத்தாமல், உக்கிரமாய் நடத்துவார்கள். அவர்களுடைய மூக்கையும், காதுகளையும் அறுத்துப்போடுவார்கள். யூதாதேசத்திலே மீதியாயிருப்பவர்களை கல்தேயர்கள் தங்கள் பட்டயத்தால் வெட்டிப்போடுவார்கள். எருசலேம் குடிகளுடைய குமாரரையும் குமாரத்திகளையும் அவர்கள் சிறைப்பிடித்துக்கொள்வார்கள். அவர்களில் மீதியாயிருப்பவர்களை அக்கினிக்கு இரையாக்குவார்கள் (எசே 23:25).

யூதாதேசத்தாருக்கு அவமானமுண்டாகும். மூக்கையும் காதுகளையும் அறுப்பது வேசிக்கு அடையாளம். யூதா மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக ஆவிக்குரிய வேசித்தனம் பண்ணினார்கள். கர்த்தரோ அவர்களுக்கு வேசிகளுக்கும், விபசாரிகளுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற தண்டனைகளைக் கொடுக்கிறார்.

"மூக்கையும் காதுகளையும் அறுத்துப்போடுவார்கள்" என்னும் வாக்கியத்திற்கு, வேதபண்டிதர்களில் சிலர் வேறுவிதமாகவும் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷர் தங்களுடைய ராஜாவை நம்புகிறார்கள். அவர்கள் கர்த்தரை நம்பாமல், தங்கள் ராஜாவுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். மூக்கு என்பது யூதாதேசத்தினுடைய ராஜாவின் மேன்மையையும், மகத்துவத்தையும் குறிக்கும் வார்த்தையாகும். காதுகள் என்பது ஆசாரியத்துவத்தைக் குறிக்கிற வார்த்தை.

யூதாவின் மனுஷர் சமாரியாவின் வழிகளைப் பின்பற்றினார்கள். இதனால் சமாரியாவுக்கு வந்த தண்டனை, இப்போது யூதாவுக்கும் வருகிறது. " உன் சகோதரியின் வழியிலே நீ நடந்தாய்; ஆகையால் அவளுடைய பாத்திரத்தை உன் கையிலே கொடுப்பேன்" (எசே 23:31) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரைக் குறித்து சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் புறஜாதிகளைப் பின்தொடர்ந்தார்கள். அவர்களுடைய நரகலான விக்கிரகங்களால் தங்களைத் தீட்டுப்படுத்திக்கொண்டார்கள். அவர்களுடைய வேசித்தனத்தினிமித்தம் இவைகள் யூதாவின் மனுஷருக்குச் செய்யப்படும் (எசே 23:30).

யூதாவின் மனுஷர் கர்த்தரை மறந்தார்கள். அவர்கள் கர்த்தரை தங்களைவிட்டு புறம்பே தள்ளிவிட்டார்கள். இதன் நிமித்தம் அவர்கள் தங்கள் முறைகேட்டையும், தங்கள் வேசித்தனங்களையும் சுமப்பார்கள் (எசே 23:35). கர்த்தரை மறப்பதே எல்லா பாவங்களுக்கும் அடிப்படை காரணம். நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப்பற்றிய பயம் இல்லையென்றால், நாம் துணிகரமாய்ப் பாவம் செய்வோம். கர்த்தரைப்பற்றிய பயமில்லாதவர்கள், நியாயத்தீர்ப்பைப்பற்றியும் பயப்படமாட்டார்கள். கர்த்தரை மறந்துவிடுகிறவர்கள், கர்த்தரை விட்டுத் தூரமாய் விலகிப்போய்விடுவார்கள்.

இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தர் யூதாதேசத்தாரின் முறைகேட்டை ஒழியப்பண்ணுவார். அவர்கள் எகிப்து தேசத்தில் துவக்கின, அவர்களுடைய வேசித்தனத்தையும் ஒழியப்பண்ணுவார். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் முன்பாக தம்முடைய நியாயத்தை வழங்கப்பண்ணுவார். அதன் பின்பு அவர்கள் எகிப்தியரை நோக்கிப் பார்க்க தங்கள் கண்களை ஏறெடுக்கமாட்டார்கள். அவர்கள் எகிப்தை நினைக்கவும் மாட்டார்கள் (எசே 23:27).

சமாரியாவும் எருசலேமும் சகோதரிகளாகயிருக்கிறார்கள். சமாரியா மூத்த சகோதரி. எருசலேம் இளைய சகோதரி. எருசலேமின் குடிகள் சமாரியாவின் விக்கிரகாராதனையை பின்பற்றி, கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவத்திற்கு தண்டனை கொடுக்கிறார். யூதாவின் மனுஷர் யாரை பகைக்கிறார்களோ அவர்களுடைய கையிலும், அவர்கள் மனம்விட்டு பிரிந்தவர்களின் கையிலும் கர்த்தர் அவர்களை ஒப்புக்கொடுக்கிறார்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போனது போல, தெற்கு யூதாதேசத்தாரும் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப் போகிறார்கள். யூதாதேசத்தார், வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் வழியிலே நடந்தார்கள். கர்த்தர் சமாரியாவின் பாத்திரத்தை, யூதாவின் கையிலே குடிக்க கொடுக்கிறார்.

கர்த்தர் யூதாதேசத்தாரைப் பார்த்து, "நீ உன் சகோதரியினுடைய ஆழமும் அகலமுமானதும் நிறைய வார்க்கப்பட்டதுமான பாத்திரத்தைக் குடித்து, நகைப்பும் பரியாசமுமாவாய். சமாரியா என்னும் உன் சகோதரியினுடைய பாத்திரமாயிருக்கிற பிரமிப்பும் பாழ்க்கடிப்பும் என்கிற பாத்திரத்தால் வெறியினாலும் சஞ்சலத்தினாலும் நிறையப்படுவாய். நீ அதில் இருக்கிறதைக் குடித்து, உறிஞ்சி, அதின் ஓடுகளை உடைத்துப்போட்டு, உன் ஸ்தனங்களைக் கீறிக்கொள்வாய்" (எசே 23:32-34) என்று சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தரை மறந்துவிட்டார்கள். அவர்கள் கர்த்தரை தங்களைவிட்டுப் புறம்பே தள்ளிவிட்டார்கள். இதன் நிமித்தமாக, யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்களுடைய முறைகேட்டையும், தங்களுடைய வேசித்தனங்களையும் சுமப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசே 23:35).

அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஏராளமான ஜாதியாரும், அநேக தேசத்தாரும் போயிருக்கிறார்கள். ஆனாலும், சிறையிருப்புக்குப் போவதற்கு முன்பு, யூதாதேசத்தைப்போல அதிகமாய் விக்கிரகாராதனை செய்த தேசம் வேறொன்றுமில்லை. அதே வேளையில் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, யூதாதேசத்தைப்போல, விக்கிரகங்களையும், விக்கிரகாராதனையையும் விட்டு விலகி வந்த தேசத்தாரும் வேறு ஒருவருமில்லை. சிறையிருப்புக்கு பின்பு யூதாதேசத்தாருடைய இருதயங்களில் மறுமலர்ச்சி உண்டாயிற்று. அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டது. பாபிலோன் தேசத்து சிறையிருப்பு, யூதாதேசத்தாரை, அவர்களுடைய விக்கிரகாராதனையிலிருந்து குணப்படுத்திற்று.

சமாரியாவின் அழிவும், எருசலேமின் அழிவும் எசே 23:36-49

எசே 23:36. பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ அகோலாளையும் அகோலிபாளையும் குறித்து வழக்காட மனதானால், அவர்களுடைய அருவருப்புகளை அவர்களுக்குத் தெரியக்காட்டு.

எசே 23:37. அவர்கள் விபசாரம்பண்ணினார்கள்; அவர்கள் கைகளில் இரத்தமும் இருக்கிறது; அவர்கள் தங்கள் நரகலான விக்கிரகங்களோடே விபசாரம்பண்ணி, தாங்கள் எனக்குப் பெற்ற தங்கள் பிள்ளைகளையும் அவைகளுக்கு இரையாகத் தீக்கடக்கப்பண்ணினார்கள்.

எசே 23:38. அன்றியும் அவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்தை அந்நாளிலேதானே தீட்டுப்படுத்தி, என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினார்கள்.

எசே 23:39. அவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் நரகலான விக்கிரகங்களுக்கென்று பலியிட்ட பின்பு, அவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்க அந்நாளில்தானே அதற்குள் பிரவேசித்தார்கள்; இதோ, என் ஆலயத்தின் நடுவிலே இப்படிச் செய்தார்கள்.

எசே 23:40. இதுவுமல்லாமல், தூரத்திலுள்ள புருஷரிடத்திற்குத் தூது அனுப்பி, அவர்களை வரவழைத்தார்கள்; அவர்கள் வந்தார்கள்; அவர்களுக்கென்று நீ குளித்து, உன் கண்களில் மையிட்டுக் கொண்டு, ஆபரணங்களால் உன்னை அலங்கரித்து,

எசே 23:41. சிறந்த மஞ்சத்தின்மேல் உட்கார்ந்துகொண்டாய்; அதின் முன்னே ஒரு பீடம் ஆயத்தம்பண்ணப்பட்டிருந்தது; என் தூபவர்க்கத்தையும் என் எண்ணெயையும் அதின்மேல் வைத்தாய்.

எசே 23:42. அவளிடத்திலே அந்தச் சந்தடியின் இரைச்சல் அடங்கின பின்பு, ஜனத்திரளான புருஷரையும் அழைத்தனுப்பினார்கள்; சபேயர் வனாந்தரத்திலிருந்து கொண்டுவரப் பட்டார்கள்; இவர்கள் அவர்களுடைய கைகளில் கடகங்களையும் அவர்களுடைய தலைகளில் அலங்காரமான கிரீடங்களையும் போட்டார்கள்.

எசே 23:43. விபசாரங்களில் கிழவியானவளைக் குறித்து அவள் இன்னும் தன் வேசித்தனங்களைச் செய்வாளோ என்றேன்.

எசே 23:44. பரஸ்திரீயினிடத்திலே பிரவேசிக்குமாப்போல அவளிடத்தில் பிரவேசித்தார்கள்; இந்தப் பிரகாரமாக முறைகேடானவர்களாகிய அகோலாளிடத்திலும் அகோலிபாளிடத்திலும் பிரவேசித்தார்கள்.

எசே 23:45. ஆகையால், விபசாரிகளை நியாயந்தீர்க்கிற பிரகாரமாகவும், இரத்தஞ்சிந்தும் ஸ்திரீகளை நியாயந்தீர்க்கிற பிரகாரமாகவும், நீதிமான்கள் அவர்களை நியாயந்தீர்ப்பார்கள்; அவர்கள் விபசாரிகள், அவர்களுடைய கைகளில் இரத்தம் இருக்கிறது.

எசே 23:46. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்களுக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரப்பண்ணி, அவர்களை அலைச்சலுக்கும் கொள்ளைக்கும் ஒப்புக்கொடுப்பேன்.

எசே 23:47. அந்தக் கூட்டத்தார் அவர்களைக் கல்லெறிந்து, தங்கள் பட்டயங்களால் வெட்டிப் போடுவார்கள்; அவர்களுடைய குமாரரையும் அவர்களுடைய குமாரத்திகளையும் கொன்று, அவர்களுடைய வீடுகளை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்.

எசே 23:48. இவ்விதமாய் எல்லா ஸ்திரீகளும் புத்தியடைந்து, உங்கள் முறைகேடுகளைச் செய்யாதிருக்கும்படி, முறைகேட்டைத் தேசத்தைவிட்டு ஒழியப்பண்ணுவேன்.

எசே 23:49. உங்கள் முறைகேட்டை உங்கள்மேல் சுமத்துவார்கள்; அப்பொழுது நீங்கள் உங்கள் நரகலான விக்கிரகங்களைச் சேவித்த பாவங்களைச் சுமந்து, நான் கர்த்தராகிய ஆண்டவர் என்று அறிந்துகொள்வீர்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள பத்துக்கோத்திரத்தாரும் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப் போய்விடுகிறார்கள். சமாரியாவிலே மீதமானவர்கள், தெற்கு யூதாதேசத்திற்கு வருகிறார்கள். அவர்கள் எருசலேமிலே குடியேறுகிறார்கள். இதற்கு முன்பு சமஸ்த இஸ்ரவேல் தேசமானது, வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தது. அது இப்போது மறுபடியும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது. இரண்டு சகோதரிகளும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசமும், தெற்கு யூதாதேசமும் மறுபடியும் ஒன்று சேர்ந்ததினால், யூதாதேசத்திலே நன்மை உண்டாவதற்கு பதிலாக, தீமையே உண்டாயிற்று.

"மனுபுத்திரனே, நீ அவர்களுக்காக வழக்காடுவாயோ? வழக்காட மனதானால், நீ அவர்கள் பிதாக்களின் அருவருப்புகளை அவர்களுக்குத் தெரியக்காட்டி, அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நான் இஸ்ரவேலைத் தெரிந்துகொண்ட நாளிலே யாக்கோபு வம்சத்து ஜனங்களுக்கு நான் ஆணையிட்டு, எகிப்துதேசத்தில் என்னை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று ஆணையிட்டேன்" (எசே 20:4,5).

எசேக்கியேல் எருசலேமுக்காக வழக்காட மனதாயிருந்தார். அதுபோலவே இப்போது அகோலாளையும், அகோலிபாளையும் குறித்து வழக்காட மனதாயிருக்கிறார். சமாரியாவுக்காகவும், எருசலேமுக்காகவும் எசேக்கியேல் கர்த்தரிடத்தில் பரிந்து பேச விரும்புகிறார். கர்த்தரோ எசேக்கியேலிடம், ஏற்கெனவே சொன்னதுபோல, இப்போதும், "அவர்களுடைய அருவருப்புக்களை அவர்களுக்கு தெரியக்காட்டு" (எசே 23:36) என்று சொல்லுகிறார்.

சமாரியாவில் மீந்திருக்கிறவர்களும், யூதாதேசத்தாரும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தர் விக்கிரகாராதனையை விபசாரம் என்று சொல்லுகிறார். "அவர்கள் விபசாரம்பண்ணினார்கள்; அவர்கள் கைகளில் இரத்தமும் இருக்கிறது; அவர்கள் தங்கள் நரகலான விக்கிரகங்களோடே விபசாரம்பண்ணி, தாங்கள் எனக்குப் பெற்ற தங்கள் பிள்ளைகளையும் அவைகளுக்கு இரையாகத் தீக்கடக்கப்பண்ணினார்கள்" (எசே 23:37) என்று கர்த்தர் அவர்கள்மேல் குற்றம் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரோடு திருமண உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். கர்த்தரே அவர்களுக்கு மணவாளன். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய மணவாட்டியாயிருக்கிறார்கள். மணவாட்டி கறைபடாத கன்னிகையாயிருக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் செய்து விபசாரம் பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தரோடு செய்து கொண்ட திருமண உடன்படிக்கையை முறித்துப்போடுகிறார்கள். அவர்கள் நரகலான விக்கிரகங்களோடே விபசாரம் பண்ணுகிறார்கள். தங்களுடைய பிள்ளைகளை மோளேகுக்கு அக்கினியிலே தகனிக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு பெற்ற தங்கள் பிள்ளைகளை தீக்கடக்கப்பண்ணுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் விக்கிரகங்களோடே விபசாரம் பண்ணுவது மாத்திரமல்ல, அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தையும் தீட்டுப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய ஓய்வுநாட்களை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள். அவர்கள் எந்த நாளில் ஓய்வுநாட்களை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்களோ, அதே நாளிலே, அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்தவும் செய்கிறார்கள்.

"அவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் நரகலான விக்கிரகங்களுக்கென்று பலியிட்டபின்பு, அவர்கள் என் பரிசுத்தஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்க அந்நாளில்தானே அதற்குள் பிரவேசித்தார்கள்; இதோ, என் ஆலயத்தின் நடுவிலே இப்படிச் செய்தார்கள்" *(எசே 23:39)* என்று கர்த்தர் யூதா மனுஷருடைய விக்கிரகாராதனைகளையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும் பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்கள் கர்த்தரை நம்பாமல் அந்நிய தேசத்தாரை நம்புகிறார்கள். யூதாவின் மனுஷர் தங்களுடைய தேசத்தின் பாதுகாப்புக்கு, கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணாமல், அந்நிய தேசத்தாரோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் அந்நியரோடு உடன்படிக்கை பண்ணுவதற்கு மிகுந்த பிரயாசங்களை மேற்கொள்கிறார்கள். தூரத்திலுள்ள புருஷரிடத்திற்கு தூதுஅனுப்பி, அவர்களை வரவழைக்கிறார்கள். அவர்களும் வருகிறார்கள்.

"அவர்களுக்கென்று நீ குளித்து, உன் கண்களில் மையிட்டுக் கொண்டு, ஆபரணங்களால் உன்னை அலங்கரித்து, சிறந்த மஞ்சத்தின்மேல் உட்கார்ந்துகொண்டாய்; அதின் முன்னே ஒரு பீடம் ஆயத்தம்பண்ணப்பட்டிருந்தது; என் தூபவர்க்கத்தையும் என் எண்ணெயையும் அதின்மேல் வைத்தாய்" *(எசே 23:40,41)* என்று கர்த்தர் யூதாமனுஷருடைய பாவங்களை விரிவாய்ச் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் புறஜாதியார் எல்லோரோடும் உடன்படிக்கை செய்கிறார்கள். அவர்களுக்கு மிகப்பெரிய ஆபத்துக்கள் வந்தாலும், அவர்கள் அந்நிய தேசத்தாரை நம்புகிறார்களேயல்லாமல், கர்த்தரை நம்பவில்லை. தூரத்திலுள்ள புருஷர்கள் எல்லோரும் யூதாதேசத்திற்கு வருகிறார்கள். அவர்களுடைய சந்தடியின் இரைச்சல் அடங்கிப்போனது. ஆனாலும் யூதர்கள் அடங்கவில்லை. அவர்களுக்கு அமைதி உண்டாகவில்லை.

யூதாதேசத்தார் தூரத்திலுள்ள புருஷரிடத்திற்கு தூது அனுப்பி, அவர்களை தங்களிடத்திற்கு வரவழைத்ததுபோல, ஜனத்திரளான புருஷரையும் அழைத்து அனுப்பினார்கள். சபேயர் வனாந்தரத்திலிருந்து கொண்டுவரப்பட்டார்கள்; யூதர்கள் அவர்களுடைய கைகளில் கடகங்களையும் அவர்களுடைய தலைகளில் அலங்காரமான கிரீடங்களையும் போட்டார்கள் *(எசே 23:42)*.

"ஜனத்திரளான புருஷர்" என்னும் வாக்கியம், கூட்டத்தைக் கூட்டுவதற்காக கூட்டிச் சேர்க்கப்படும் சாதாரண ஜனங்களைக் குறிக்கும். இவர்கள் பலசாலிகளோ அல்லது பராக்கிரமசாலிகளோ அல்ல. ஆனாலும் தங்கள் பக்கத்தில் மிகுதியான கூட்டம் இருக்கவேண்டும் என்பதைக் காண்பிப்பதற்காக, யூதாவின் மனுஷர் ஜனத்திரளான சாதாரண புருஷரையும் தங்களிடத்தில் கூட்டிச் சேர்க்கிறார்கள்.

"சபேயர் வனாந்தரத்திலிருந்து கொண்டு வரப்பட்டார்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "வனாந்தரத்திலிருந்து அழைத்து வரப்பட்ட குடிகாரர்கள்" என்று பொருள். இஸ்ரவேல் வம்சத்தார் இவர்களோடு உடன்படிக்கை செய்து, தங்களுடைய ஐசுவரியங்களை அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கிறார்கள். யூதர்கள் கடகங்களையும், அலங்காரமான கிரீடங்களையும் சபேயருக்கு கொடுத்து, அவர்களை தங்கள் வசமாக்கிக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் அதிகமாய்ப் பிரயாசப்பட்டு, அதிகமாய்ப் பொருட்களை செலவு செய்து, அந்நிய தேசத்தாரோடு உடன்படிக்கை செய்கிறார்கள். யூதர்களுக்கு கர்த்தரிடத்தில் நம்பிக்கையில்லை. கர்த்தரே தங்களுக்கு அரணான கோட்டையும், பலத்த துருகமுமாயிருக்கிறார் என்னும் எண்ணமும் யூதர்கள் மத்தியிலே இல்லை. ஆகையினால் அவர்கள் கர்த்தரை நம்புவதற்கு பதிலாக, மனுஷரை நம்புகிறார்கள். கர்த்தருக்கு தங்கள் இருதயத்தை ஒப்புக்கொடுப்பதற்கு பதிலாக, அந்நிய தேசத்தாருக்கு தங்கள் ஐசுவரியங்களையும், தங்கள் உழைப்பின் பலனையும் ஒப்புக்கொடுக்கிறார்கள்.

யூதாதேசத்தாரும், புறஜாதி தேசத்தாரும் எப்படித்தான் உடன்படிக்கை பண்ணினாலும், அவர்களுடைய உடன்படிக்கை நிலைக்காது. இந்த உடன்படிக்கையினால் இரண்டு தேசத்தாருக்குமே பிரயோஜனமுண்டாகாது. இரும்பும் களிமண்ணும் ஒன்றாய்க் கலக்காது. அதுபோலவே யூதாதேசத்தாரும், புறஜாதி தேசத்தாரும் ஒன்றாய்க் கலக்க முடியாது.

யூதாதேசத்தார் அந்நிய தேசத்தாரோடு உடன்படிக்கை பண்ணும்போது, கர்த்தர் யூதாதேசத்தாரையும் ஆசீர்வதிக்கமாட்டார். அவர்களோடு உடன்படிக்கை பண்ணின அந்நிய தேசத்தாரையும் ஆசீர்வதிக்கமாட்டார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணாமல், அந்நிய தேசத்தாரோடு உடன்படிக்கை பண்ணுவது, கர்த்தருக்கு விரோதமான உடன்படிக்கை. கர்த்தருக்கு விரோதமான எந்தக் காரியமும் வெற்றி பெறாது.

அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் வம்சத்தாருடைய அழைப்பை ஏற்று, அவர்களோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். கர்த்தர் இதுபற்றிச் சொல்லும்போது, "விபசாரங்களில் கிழவியானவளைக் குறித்து அவள் இன்னும் தன் வேசித்தனங்களைச் செய்வாளோ" (எசே 23:43) என்று சொல்லுகிறார்.

புறஜாதியார், "பரஸ்திரீயினிடத்திலே பிரவேசிக்குமாப்போல அவளிடத்தில் பிரவேசித்தார்கள்; இந்தப் பிரகாரமாக முறைகேடானவர்களாகிய அகோலாளிடத்திலும் அகோலிபாளிடத்திலும் பிரவேசித்தார்கள்" (எசே 23:44).

சமாரியாவில் மீதமானவர்கள்மீதும், யூதாதேசத்தார்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு தண்டனை கிடைக்கும். தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் அவர்களை நியாயந்தீர்ப்பார்கள்.

"விபசாரிகளை நியாயந்தீர்க்கிற பிரகாரமாகவும், இரத்தஞ்சிந்தும் ஸ்திரீகளை நியாயந்தீர்க்கிற பிரகாரமாகவும், நீதிமான்கள் அவர்களை நியாயந்தீர்ப்பார்கள்; அவர்கள் விபசாரிகள், அவர்களுடைய கைகளில் இரத்தம் இருக்கிறது" (எசே 23:45) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் நீதியுள்ளவர். அவருடைய பரிசுத்தவான்களும் நீதியுள்ளவர்கள். துன்மார்க்கருக்கு நியாயத்தீர்ப்பு உண்டு. நீதிபரரும், நீதிமான்களும் பாவிகளை நியாயந்தீர்ப்பார்கள்.

"நான் அவர்களுக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரப்பண்ணி, அவர்களை அலைச்சலுக்கும் கொள்ளைக்கும் ஒப்புக்கொடுப்பேன். அந்தக் கூட்டத்தார் அவர்களைக் கல்லெறிந்து, தங்கள் பட்டயங்களால் வெட்டிப்போடுவார்கள்; அவர்களுடைய குமாரரையும் அவர்களுடைய குமாரத்திகளையும் கொன்று, அவர்களுடைய வீடுகளை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்" (எசே 23:46,47) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எருசலேம் தேவனுடைய நகரம். அது கர்த்தருடைய பரிசுத்த நகரம். அந்த எருசலேம் இப்போது வேசியின் நகரமாயிற்று. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எருசலேமின்மீது வருகிறது. கர்த்தர் எருசலேமுக்கு விரோதமாக ஏற்கெனவே தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லியிருக்கிறார் (எசே 23:22-27). கர்த்தர் இங்கு மறுபடியுமாய் எருசலேமுக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார்.

எருசலேமை அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமல்ல. அதை சுத்தப்படுத்த வேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். பொன்னை அக்கினியில் புடமிடும்போது, அதிலுள்ள களிம்புகள் நீங்கும். பொன் சுத்தப்பொன்னாக விளங்கும். அதுபோலவே, கர்த்தர் எருசலேமை அக்கினியால் சுட்டெரிக்கும்போது, எருசலேமின் பாவங்கள் நீங்கும். அது மறுபடியும் கர்த்தருக்கு பரிசுத்த நகரமாகும்.

கர்த்தர் எருசலேமை புடமிடுகிறார். "இவ்விதமாய் எல்லா ஸ்திரீகளும் புத்தியடைந்து, உங்கள் முறைகேடுகளைச் செய்யாதிருக்கும்படி, முறைகேட்டைத் தேசத்தைவிட்டு ஒழியப்பண்ணுவேன்" (எசே 23:48) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். நரகலான விக்கிரகங்களை சேவித்தார்கள். விக்கிரகாராதனையினால் தங்களுக்கு நன்மை உண்டாகும் என்று எதிர்பார்த்தார்கள். அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை.

இப்போது கர்த்தர் எருசலேம் நகரத்தையே அக்கினியால் சுட்டெரிக்கிறார். யூதாதேசம் அழிந்துபோகிறது. இவையெல்லாவற்றிற்கும் யூதாதேசத்தாருடைய பாவங்களே காரணம்.

யூதாதேசம் அழிவதைப் பார்க்கிறவர்கள் எல்லோரும், யூதாமனுஷருடைய முறைகேட்டை அவர்கள்மேல் சுமத்துவார்கள். அப்போது யூதர்கள் தங்கள் நரகலான விக்கிரகங்களை சேவித்த பாவங்களை சுமப்பார்கள்.

இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தராகிய ஆண்டவர் என்பதை, யூதாதேசத்தார், தங்கள் அழிவுக்கு மத்தியிலே அறிந்துகொள்வார்கள். யூதர்கள் செழித்திருந்த காலத்தில் கர்த்தரை மறந்துவிட்டார்கள். இப்போது அவர்கள் அழிந்துபோகிற காலத்தில், கர்த்தரை அறிந்துகொள்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகளைவிட, அவருடைய கோலினால் உண்டாகும் சிட்சைகளே அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கும்.

24 அதிகாரம்

பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறான். இந்த குறிப்பிட்ட காலத்தில் கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று. பாபிலோன் ராஜா எருசலேமிலே பாளயமிறங்கியிருக்கும்போது, எருசலேம் நகரத்தாருக்கு மிகுந்த துன்பங்களும், வேதனைகளும் உண்டாகும். எசேக்கியேல் அவர்களுடைய வேதனையை, அடுப்பில் வைக்கப்பட்டிருக்கிற கொப்பரையை அடையாளமாகக் காண்பித்து விவரிக்கிறார் (எசே 24:1-14).

எசேக்கியேலின் மனைவி மரித்துப்போனாள். எசேக்கியேலோ மரித்துப்போன தன் மனைவிக்காக அழவில்லை. இது எருசலேமின் அழிவுக்கும் அதன் வேதனைகளுக்கும் அடையாளமாயிருக்கிறது. எருசலேமின் அழிவு மிகவும் பெரியதாயிருக்கும் (எசே 24:15-27).

கொப்பரை
எசே 24:1-14

எசே 24:1. ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 24:2. மனுபுத்திரனே, இந்த நாளின் பேரையும் இந்தத் தேதியையும் நீ எழுதிவை, இந்தத் தேதியில்தானே பாபிலோன் ராஜா எருசலேமில் பாளயமிறங்கினான்.

எசே 24:3. இப்போதும் நீ கலகவீட்டாருக்கு ஒரு உபமானத்தைக் காண்பித்து, அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஒரு கொப்பரையை அடுப்பிலே வை; அதை அடுப்பிலே வைத்து, அதிலே தண்ணீரை விடு.

எசே 24:4. சகல நல்ல கண்டங்களான பின்னந்தொடைகளும் முன்னந்தொடைகளுமாகிய கண்டங்களைச் சேர்த்து அதிலே போடு; நல்ல எலும்புகளால் அதை நிரப்பு.

எசே 24:5. ஆட்டுமந்தையில் தெரிந்துகொள்ளப்பட்டதை அதற்காகக் கொண்டு வந்து, எலும்புகளை அதின் கீழே குவித்து எரிக்கவேண்டும்; அதிலுள்ள எலும்புகளும் வேகத்தக்கதாக அதைப் பொங்கப்பொங்கக் காய்ச்சவேண்டும்.

எசே 24:6. இதற்காகக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நுரை ஒட்டிக்கொண்டிருக்கிறதும் நுரை நீங்காததுமாகிய கொப்பரை என்னப்பட்ட இரத்தஞ்சிந்திய நகரத்துக்கு ஐயோ! அதில் இருக்கிறதைக் கண்டங்கண்டமாக எடுத்துக்கொண்டு போ; அதின்பேரில் சீட்டுப்போடலாகாது.

எசே 24:7. அவள் இரத்தம் அவள் நடுவில் இருக்கிறது; மண்ணிலே மறைந்து போகும்படி அதைத் தரையிலே ஊற்றாமல் கற்பாறையிலே ஊற்றிப்போட்டாள்.

எசே 24:8. நீதியைச் சரிக்கட்டுவதற்காகக் கோபம் மூளும்படி நான் அவள் இரத்தத்தை மறைக்காமல் கன்மலையின்மேல் வைத்தேன்.

எசே 24:9. ஆதலால், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இரத்தஞ்சிந்திய நகரத்துக்கு ஐயோ! நான் பெரிதான கட்டைகளைக் குவித்து எரியப்பண்ணுவேன்.

எசே 24:10. திரளான விறகுகளைக் கூட்டு, தீயை மூட்டு, இறைச்சியை முறுகவேவித்துச் சம்பாரங்களை இடு; எலும்புகளை எரித்துப்போடு.

எசே 24:11. பின்பு கொப்பரை காய்ந்து, அதின் களிம்பு வெந்து, அதற்குள் இருக்கிற அதின் அழுக்கு உருகி, அதின் நுரை நீங்கும்படி, அதை வெறுமையாகத் தழலின்மேல் வை.

எசே 24:12. அது மகா வருத்தத்தை உண்டாக்கியும், அதின் திரளான நுரை அதை விட்டு நீங்கவில்லை; அதின் நுரை அக்கினிக்கு உள்ளாகவேண்டியது.

எசே 24:13. உன் அசுத்தத்தோடே முறைகேடும் இருக்கிறது; நான் உன்னைச் சுத்திகரித்தும், நீ சுத்தமாகாதபடியினால், இனி என் உக்கிரம் உன்னில் ஆறித்தீருமட்டும் உன் அசுத்தம் நீங்கிச் சுத்திகரிக்கப்படமாட்டாய்.

எசே 24:14. கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; இது நிறைவேறும், நான் இதைச் செய்வேன்; நான் பின்வாங்குவதும் தப்பவிடுவதும் மனஸ்தாபப்படுவதும் இல்லை; உன் வழிகளுக்கும் உன் செய்கைகளுக்குந்தக்கதாக உன்னை நியாயந்தீர்ப்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடுகிறான். ஒன்பதாம் வருஷம், பத்தாம் மாதம், பத்தாம் தேதியிலே, பாபிலோன் ராஜா எருசலேமிலே பாளயமிறங்குகிறான். கர்த்தர் எசேக்கியேலை, "மனுபுத்திரனே" என்று அழைக்கிறார். எசேக்கியேல் இந்த நாளின் பெயரையும், இந்த தேதியையும் எழுதி வைத்துக்கொள்ளவேண்டும். இந்தத் தேதியில் தானே, பாபிலோன் ராஜா எருசலேமிலே பாளயமிறங்கினான்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இப்போது எங்கே இருக்கிறான் என்று சொல்லப்படவில்லை. ஆனாலும் இந்தத் தேதியிலே, அவன் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடுவான். எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை ஜனங்கள் மத்தியில் உண்மையோடும் விசுவாசத்தோடும் சொல்லவேண்டும். கர்த்தர் சொல்லுகிற அந்தக் குறிப்பிட்ட தேதியையும் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

கர்த்தருடைய தீர்க்கதரிசனம், முற்குறிக்கப்பட்ட நாளிலே நிறைவேறும்போது, எசேக்கியேல் கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசி என்பதும், அவர் கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய் அறிவிக்கிறவர் என்பதும் நிரூபணமாகும்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு காலத்தையும், நாளையும் துள்ளியமாக வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் கர்த்தர் சொல்லுகிற இந்த நாளின் பெயரையும், இந்தத் தேதியையும் எழுதி வைத்துக்கொள்ளவேண்டும். யோயாக்கீன் சிறையிருப்புக்குப்போன ஒன்பதாம் வருஷத்தில் இந்த சம்பவம் நடைபெறும். பாபிலோன் ராஜா, பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே, எருசலேமிலே பாளயமிறங்குவான். கர்த்தர் இங்கு தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிற தேதி, சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிற தேதிக்கு ஒப்பாயிருக்கிறது.

"அவன் ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிரே பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள்" *(2இராஜா 25:1)*.

இஸ்ரவேல் வீட்டார் இப்போது கலகவீட்டாராயிருக்கிறார்கள். கலகவீட்டாராயிருக்கிறவர்கள், சீக்கிரத்தில் அழிந்துபோகும் வீட்டாராயிருப்பார்கள். எசேக்கியேல் கலகவீட்டாருக்கு ஒரு உபமானத்தைக் காண்பிக்கவேண்டும். கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை, அவர்களுக்கு அந்த உபமானத்தின் மூலமாய் தெளிவுபடுத்த வேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "ஒரு கொப்பரையை அடுப்பிலே வை; அதை அடுப்பிலே வைத்து, அதிலே தண்ணீரை விடு. சகல நல்ல கண்டங்களான பின்னந்தொடைகளும் முன்னந்தொடைகளுமாகிய கண்டங்களைச் சேர்த்து அதிலே போடு; நல்ல எலும்புகளால் அதை நிரப்பு. ஆட்டுமந்தையில் தெரிந்துகொள்ளப்பட்டதை அதற்காகக் கொண்டு வந்து, எலும்புகளை அதின் கீழே குவித்து எரிக்கவேண்டும்; அதிலுள்ள எலும்புகளும் வேகத்தக்கதாக அதைப் பொங்கப்பொங்கக் காய்ச்சவேண்டும்" (எசே 24:3-5) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிற வார்த்தை, அவர் எரேமியாவுக்கு பல வருஷங்களுக்கு முன்பு காண்பித்த தரிசனத்திற்கு ஒப்பாயிருக்கிறது.

"கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் எனக்கு உண்டாகி, அவர்: நீ காண்கிறது என்ன என்று கேட்டார்; பொங்குகிற பானையைக் காண்கிறேன், அதின் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது என்றேன்" (எரே 1:13).

கர்த்தர் இந்தத் தரிசனத்திற்கான விளக்கத்தையும் எரேமியாவுக்குச் சொல்லுகிறார். "இதோ, நான் வடதிசை ராஜ்யங்களின் வம்சங்களையெல்லாம் கூப்பிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் வந்து அவனவன் தன் தன் சிங்காசனத்தை எருசலேமின் ஒலிமுகவாசல்களுக்கும், அதின் சுற்றுமதில்கள் எல்லாவற்றிற்கும் விரோதமாகவும், யூதாதேசத்து எல்லாப் பட்டணங்களுக்கும் விரோதமாகவும் வைப்பார்கள்" (எரே 1:15).

வடதிசை ராஜ்யத்தார் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடுவார்கள். இஸ்ரவேலின் பிரபுக்களோ வீணான நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை நம்பாமல், அந்நிய தேசத்தாரை நம்புகிறார்கள். விக்கிரகங்களை நம்புகிறார்கள். தாங்கள் பானைக்குள் இருப்பதாகவும், அது தங்களுக்கு பாதுகாப்பான ஸ்தலம் என்றும் யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள். பானையின் சுவர்கள் வெண்கலத்தினால் செய்யப்பட்டது என்றும், அதற்கு அழிவு வராது என்றும் யூதர்கள் சொல்லுகிறார்கள்.

பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறான். எருசலேமின் குடிகளோ கர்த்தரை நம்பாமல், எருசலேமின் அலங்கத்தை நம்புகிறார்கள். யூதாவின் மனுஷர் எருசலேமுக்கு நடுவிலே இருந்தாலும், அவர்கள் கொப்பரையில் வைக்கப்பட்ட இறைச்சியைப்போல கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். கொப்பரையிலே இறைச்சிகளும், எலும்புகளும் வெந்துகொண்டிருப்பதுபோல, எருசலேமின் குடிகளும் வெந்துகொண்டிருக்கிறார்கள்.

யூதாதேசத்தின் மற்ற பட்டணங்களிலுள்ளவர்களும், தங்களுடைய பாதுகாப்புக்காக எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் எருசலேமிலிருக்கிறவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. எருசலேம் தங்களுக்கு பாதுகாப்பைத் தரும் என்று நம்பி வந்தவர்களுக்கு ஏமாற்றமே உண்டாகும். அவர்கள் எல்லோருமே கொப்பரையில் நிரப்பப்பட்ட இறைச்சிகளாகவும் எலும்புகளாகவும் இருக்கிறார்கள். எருசலேமின் குடிகளுக்கும், எருசலேமிலே அடைக்கலம் தேடி வந்திருக்கிற யூதாவின் மற்ற பட்டணத்தாருக்கும் சர்வசங்காரமுண்டாகும். அவர்கள் எல்லோருமே அக்கினியினால் சுட்டெரிக்கப்படுவார்கள்.

கொப்பரையில் போடப்பட்ட இறைச்சிகளும் எலும்புகளும், கொப்பரையைவிட்டு வெளியே போகாது. அது கொப்பரைக்குள்ளேயே வெந்து கொண்டிருக்கும். அதுபோலவே எருசலேமுக்கு அடைக்கலம் தேடி வந்தவர்களால், எருசலேமைவிட்டு வெளியேறிப்போகமுடியாது. பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாக வெளியிலே முற்றிக்கைப்போட்டிருக்கிறான். எருசலேமிலிருக்கிறவர்கள் எல்லோரும் வேறு வழியில்லாமல், கொப்பரையிலே கொதித்துக்கொண்டிருக்கவேண்டும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி இந்த உபமானத்திற்கு விளக்கம் சொல்லுகிறார். "இரத்தம் சிந்திய நகரத்திற்கு ஐயோ" என்பதே இதன் விளக்கம். பாபிலோன் ராஜா எருசலேமை முற்றிக்கையிட்டிருக்கும்போது, அது அடுப்பிலே வைக்கப்பட்டிருக்கிற கொப்பரையைப்போல இருக்கிறது. கொப்பரைக்கு கீழே திரளான விறகுகள் கூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. தீ மூட்டப்பட்டிருக்கிறது. இறைச்சியை முறுக வேவிப்பதற்கு சம்பாரங்கள் போடப்பட்டிருக்கிறது. அது எலும்புகளைகூட எரித்துப்போடும் (எசே 24:10).

எருசலேம் நகரம் கொப்பரைக்கு ஒப்பானதாயிருக்கிறது. அது நுரை ஒட்டிக்கொண்டிருக்கிறதும், நுரை நீங்காததுமாகிய கொப்பரையாயிருக்கிறது. எருசலேம் நகரம் இரத்தஞ்சிந்திய நகரம். இந்த நகரத்திற்கு "ஐயோ" என்று கர்த்தர் சொல்லுகிறார். "அதில் இருக்கிறதைக் கண்டங்கண்டமாக எடுத்துக்கொண்டு போ; அதின்பேரில் சீட்டுப்போடலாகாது" (எசே 24:6) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேமின் இரத்தம் அதன் நடுவிலிருக்கிறது. எருசலேம் நகரத்தார் தங்கள் பாவங்களை மறைவாகவோ, இரகசியமாகவோ செய்யாமல், வெளிப்படையாகவும், துணிகரமாகவும் செய்கிறார்கள். அவர்கள் சிந்துகிற இரத்தம் மண்ணிலே மறைந்துபோகும்படி, அது தரையில் ஊற்றப்படவில்லை. அது கற்பாறையின்மேல் ஊற்றப்பட்டிருக்கிறது.

கர்த்தரும் எருசலேமின்மீது தம்முடைய நீதியைச் சரிக்கட்டுகிறார். "நீதியைச் சரிக்கட்டுவதற்காகக் கோபம் மூளும்படி நான் அவள் இரத்தத்தை மறைக்காமல் கன்மலையின்மேல் வைத்தேன்" (எசே 24:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். மேலும் "இரத்தஞ்சிந்திய நகரத்துக்கு ஐயோ! நான் பெரிதான கட்டைகளைக் குவித்து எரியப்பண்ணுவேன்" (எசே 24:9) என்றும் சொல்லுகிறார்.

கொப்பரையின் கீழே விறகுகள் எரிந்துகொண்டிருக்கிறது. தீ நன்றாய் மூட்டப்பட்டிருக்கிறது. பற்றி எரிகிற தீ அணைந்துபோவதற்கு வாய்ப்பேயில்லை. பாபிலோன் ராஜாவினுடைய முற்றிக்கையின் உக்கிரத்தை விவரிப்பதற்காக இந்த வாக்கியம் சொல்லப்பட்டிருக்கிறது. நேபுகாத்நேச்சார் மனதநேயமில்லாதவன். அவன் யாருக்கும் இரக்கம் காண்பிக்கமாட்டான். கல்தேயரின் சேனை எருசலேமை முற்றிலுமாய் அழித்துப்போடுவார்கள். அவர்களுடைய அழிவுக்கு அவர்களுடைய பாவங்களே காரணம்.

எருசலேம் குற்றமற்றவர்களின் இரத்தத்தை சிந்தியது. கர்த்தர் அவர்கள் சிந்திய இரத்தத்தை மறைக்காமல் கன்மலையின்மேல் வைக்கிறார். அவர்களுடைய இரத்தம் எல்லோரும் பிரத்தியட்சமாய் பார்க்கும் வண்ணமாக இருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். எருசலேம் நகரம் கர்த்தருடைய நீதிக்கும், நியாயத்தீர்ப்புக்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது. எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார்.

எருசலேம் நகரத்தில் துன்மார்க்கர் நிரம்பியிருக்கிறார்கள். துன்மார்க்கத்தின் அளவு குணப்படுத்த முடியாதபடி அதிகமாயிருக்கிறது. கர்த்தர் அவர்களைத் திருத்துவதற்கு பல்வேறு உபாயங்களை கைக்கொண்டார். ஆனால் ஒன்றும் பயன் தரவில்லை. அவர்களுடைய அசுத்தத்தோடே முறைகேடும் இருக்கிறது. கர்த்தர் அவர்களை சுத்திகரிக்கிறார். ஆனால் அவர்களோ சுத்தமாகாமலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களைப் பார்த்து, "இனி என் உக்கிரம் உன்னில் ஆறித்தீருமட்டும் உன் அசுத்தம் நீங்கிச் சுத்திகரிக்கப்படமாட்டாய்" (எசே 24:13) என்று சொல்லிவிடுகிறார்.

கர்த்தர் எருசலேமின் குடிகளை சுத்திகரிப்பதை நிறுத்திவிடுகிறார். அவர்களுடைய பாவங்களுக்கு தக்க தண்டனைகளை கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கிறார். கர்த்தர் சொன்னது நிச்சயமாய் நிறைவேறும். கர்த்தருடைய வார்த்தைகளும், அவருடைய கிரியைகளும் ஒன்றாயிருக்கும். கர்த்தர் சொன்னதை செய்கிறவர். செய்கிறதை சொல்லுகிறவர்.

கர்த்தர் ஒரு காரியத்தை செய்ய ஆரம்பிக்கும்போது, அவர் அதிலிருந்து பின்வாங்கிப்போகமாட்டார். தம்முடைய நியாயத்தீர்ப்புக்கு யாரையும் தப்பவிடவும் மாட்டார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் தண்டிக்கும்போது, அவர் மனஸ்தாபப்படவும் மாட்டார். எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கமான வழிகளில் நடக்கிறார்கள். "உன் வழிகளுக்கும், உன் செய்கைகளுக்கும் தக்கதாக உன்னை நியாயந்தீர்ப்பார்கள்" (எசே 24:14). என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசேக்கியேலுடைய மனைவி செத்துப்போனாள்
எசே 24:15-27

எசே 24:15. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 24:16. மனுபுத்திரனே, இதோ, நான் உன் கண்களுக்கு விருப்பமானவளை ஒரே அடியினாலே உன்னைவிட்டு எடுத்துக்கொள்வேன்; ஆனாலும் நீ புலம்பாமலும் அழாமலும் கண்ணீர்விடாமலும் இருப்பாயாக.

எசே 24:17. அலறாமல் பெருமூச்சுவிடு, இழவு கொண்டாடவேண்டாம்; உன் பாகையை உன் தலையிலே கட்டி, உன் பாதரட்சைகளை உன் பாதங்களில் தொடுத்துக்கொள்; உன் தாடியை மூடாமலும் துக்கங்கொண்டாடுகிறவர்களின் அப்பத்தைப் புசியாமலும் இருக்கக்கடவாய் என்றார்.

எசே 24:18. விடியற்காலத்தில் நான் ஜனங்களோடே பேசினேன்; அன்று சாயங்காலத்தில் என் மனைவி செத்துப்போனாள்; எனக்குக் கட்டளையிட்டபடியே விடியற்காலத்தில் செய்தேன்.

எசே 24:19. அப்பொழுது ஜனங்கள் என்னை நோக்கி: நீர் செய்கிறவைகள் எங்களுக்கு என்னத்திற்கு அடையாளம் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கமாட்டீரா என்று கேட்டார்கள்.

எசே 24:20. நான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 24:21. நீ இஸ்ரவேல் வீட்டாரை நோக்கி, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, உங்கள் பலத்தின் முக்கியமும் உங்கள் கண்களின் விருப்பமும் உங்கள் ஆத்துமாவின் வாஞ்சையுமாகிய என் பரிசுத்தஸ்தலத்தை நான் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறேன்; நீங்கள் விட்டுவந்த உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்.

எசே 24:22. அப்பொழுது நான் செய்தது போல நீங்களும் செய்வீர்கள்; தாடியை மூடாமலும் துக்கங்கொண்டாடுகிறவர்களின் அப்பத்தைப் புசியாமலும் இருப்பீர்கள்.

எசே 24:23. உங்கள் பாகைகள் உங்கள் தலைகளிலும், உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் இருக்கும்; நீங்கள் புலம்பாமலும் அழாமலும் இருந்து, உங்கள் அக்கிரமங்களில் வாடிப்போய், ஒருவரையொருவர் பார்த்துத் தவிப்பீர்கள்.

எசே 24:24. அப்படியே எசேக்கியேல் உங்களுக்கு அடையாளமாக இருப்பான்; அவன் செய்தபடி எல்லாம் நீங்களும் செய்வீர்கள்; இப்படி வரும்போது நான் கர்த்தராகிய ஆண்டவர் என்று அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்று உரைத்தார் என்றேன்.

எசே 24:25. பின்னும் மனுபுத்திரனே, நான் எந்த நாளிலே அவர்களுடைய பலத்தையும், அவர்களுடைய அலங்காரத்தின் மகிழ்ச்சியையும், அவர்களுடைய கண்களின் விருப்பத்தையும், அவர்களுடைய ஆத்துமாவின் விசேஷித்த வாஞ்சையையும், அவர்களுடைய குமாரரையும், அவர்களுடைய குமாரத்திகளையும் அவர்களைவிட்டு எடுத்துக் கொள்ளுகிறேனோ.

எசே 24:26. அந்த நாளிலேதானே தப்பிவந்த ஒருவன் உன்னிடத்தில் வந்து உன் காதுகள் கேட்கச் சொல்லுவான் அல்லவோ?

எசே 24:27. அந்தநாளிலேதானே உன் வாய் திறக்கப்பட்டு, நீ தப்பிவந்தவனோடே பேசுவாய்; இனி மவுனமாயிருக்கமாட்டாய்; இப்படி நீ அவர்களுக்கு அடையாளமாக இருப்பாய்; நான் கர்த்தர் என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள் என்றார்.

எசேக்கியேல் எருசலேமின் அழிவைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். அவர் மற்ற தேசங்களுக்கு விரோதமாகவும் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறார். எசேக்கியேல் எருசலேமின் அழிவைப்பற்றி இந்த வசனப்பகுதியில் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். எசேக்கியேல் இந்தச் செய்தியைச் சொன்ன, மூன்று வருஷங்களுக்கு பின்பு எருசலேம் அழிந்து போகிறது.

"எங்கள் சிறையிருப்பின் பன்னிரண்டாம் வருஷம் பத்தாம் மாதம் ஐந்தாந்தேதியிலே எருசலேமிலிருந்து தப்பின ஒருவன் என்னிடத்தில் வந்து: நகரம் அழிக்கப்பட்டது என்றான்" (எசே 33:21).

எருசலேம் நகரம் அழிந்து போன செய்தியைக் கேட்கும் வரையிலும், எசேக்கியேல் எருசலேமைப்பற்றி அதிகமாய் ஒன்றும் சொல்லவில்லை. அவர் மற்ற தேசங்களைப்பற்றியே தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு மறுபடியும் உண்டாயிற்று. எசேக்கியேலின் மனைவி செத்துப்போனாள். அவள் எசேக்கியேலின் கண்களுக்கு விருப்பமானவள். கர்த்தர் அவளை ஒரே அடியினால் எசேக்கியேலை விட்டு எடுத்துக்கொள்கிறார். தன்னுடைய மனைவி செத்துப்போன துக்கத்தை எசேக்கியேலால் தாங்கிக்கொள்ள முடியாது. அவருடைய உள்ளத்தில் வேதனையும், துக்கமும் அதிகமாயிருக்கும். அவர் கண்ணீர்விட்டு அழவேண்டும் என்றும், புலம்ப வேண்டும் என்று விரும்புவார். ஆனால் கர்த்தரோ எசேக்கியேலிடம், "நீ புலம்பாமலும், அழாமலும், கண்ணீர் விடாமலும் இருப்பாயாக" (எசே 24:16) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எசேக்கியேலின் கண்களுக்கு விருப்பமானவளை எடுத்துக்கொள்கிறார். கர்த்தர் எசேக்கியேலுக்கு செய்ததுபோலவே, நம்முடைய வாழ்க்கையிலும், நம்முடைய கண்களுக்கு விருப்பமானதை ஒரே அடியினால் எடுத்துக்கொள்கிறார். நம்முடைய வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் வேதனைகளிலும், துக்கங்களிலும், கர்த்தருடைய கரம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

எசேக்கியேலின் மனைவி செத்துப்போனாள். கர்த்தரே அவளை ஒரே அடியினால் எசேக்கியேலைவிட்டு எடுத்துக்கொண்டார். ஆனாலும் எசேக்கியேல் தன் மனைவிக்காக அழக்கூடாது என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். மேலும் கர்த்தர் எசேக்கியேலிடம், "அலறாமல் பெருமூச்சுவிடு, இழவு கொண்டாடவேண்டாம்; உன் பாகையை உன் தலையிலே கட்டி, உன் பாதரட்சைகளை உன் பாதங்களில் தொடுத்துக்கொள்; உன் தாடியை மூடாமலும் துக்கங்கொண்டாடுகிறவர்களின் அப்பத்தைப் புசியாமலும் இருக்கக்கடவாய்" (எசே 24:17) என்றும் சொல்லுகிறார்.

எசேக்கியேல், செத்துப்போன தன் மனைவிக்காக அழுதால் அவருடைய துக்கம் குறையும். அவருடைய மனதில் ஆறுதல் உண்டாகும். எசேக்கியேல் செத்துப்போன தன் மனைவிக்காக அழுது புலம்பி துக்கங்கொண்டாடுவது, அவளை கனப்படுத்துவதற்கு அடையாளம். அவருடைய இருதயமும் பாரம் நீங்கி இலகுவாயிருக்கும்.

எசேக்கியேலின் மனைவி செத்துக் கிடக்கும்போது, அவர் தன்னுடைய மனைவிக்காக அழவில்லையென்றால், அவரைப் பார்க்கிறவர்கள், அவரைப் பற்றி தப்பிதமாக நினைப்பார்கள். அவருக்கு தன்னுடைய மனைவியின்மீது அன்பு இல்லையென்றும், அவள் செத்துப்போனதினால் எசேக்கியேலுக்கு வருத்தமோ, துக்கமோ, வேதனையோ சிறிதுமில்லை என்றும் அவரைப்பற்றி தப்பிதமாக நினைப்பார்கள்.

எசேக்கியேல் துக்கங்கொண்டாடுகிறவர்களின் அப்பத்தைப் புசிக்கக்கூடாது என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். யூதர்களுடைய குடும்பங்களில், யாராவது ஒருவர் இறந்துவிட்டால், அவருடைய நெருங்கிய உறவினர்கள், துக்கவீட்டாருக்கு போஜனபதார்த்தங்களை கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். துக்கவீட்டாரால் போஜனபதார்த்தங்களை ஆயத்தம் பண்ண முடியாது. மற்றவர்கள் கொடுக்கும் போஜனத்தை துக்கவீட்டார் ஏற்றுக்கொண்டு, அதைப் புசிப்பார்கள். ஆனால் எசேக்கியேலோ அப்பத்தைப் புசிக்கக்கூடாது என்று கர்த்தர் அவருக்கு கட்டளை கொடுக்கிறார்.

நமக்கு மிகவும் பிரியமானவர்கள் செத்துப்போனால் அவர்களுக்காக நம்மால் அழாமலிருக்கமுடியாது. நம்முடைய சரீரமும், சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும், நமக்கு பிரியமானவர்கள் செத்துப்போனதை நினைத்து துக்கமாயிருக்கும். நம்முடைய இரத்தத்தில் துக்க உணர்வுகள் இருக்கும். நம்முடைய நரம்புகள்கூட, நம்முடைய வருத்தத்தை வெளிப்படுத்தும்.

ஆனால் எசேக்கியேலோ, தன்னுடைய மனைவி செத்துப்போனதற்காக, அலறக்கூடாது, இளவு கொண்டாடக்கூடாது, புலம்பக்கூடாது, அழக்கூடாது, கண்ணீர் விடக்கூடாது. அவர் தன்னுடைய துக்கத்தை அடக்கிக்கொண்டு அமைதியாயிருக்க வேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு, அவருடைய மனைவியின் மரணத்தைப்பற்றிச் சொன்ன, அன்று சாயங்காலத்தில், அவருடைய மனைவி செத்துப்போனாள். கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட படியே, எசேக்கியேல் விடியற்காலத்தில் செய்கிறார். அவர் தன் மனைவிக்காக அழாமலும், புலம்பாமலும் இருக்கிறார். அதே வேளையில் அவர் ஜனங்களோடே தாராளமாய்ப் பேசுகிறார். அவரிடத்தில் துக்கத்தின் சாயல் சிறிதுமில்லை.

எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தன்னைத்தானே ஓர் அடையாளமாகக் காண்பிக்கிறார். நாம் நம்மை நாமே வெறுக்கவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. நம்முடைய சுயவிருப்பங்களையும், சுய ஆசைகளையும் நாம் வெறுக்கவேண்டும். கர்த்தருடைய விருப்பங்களே நம்முடைய விருப்பமாய் மாறவேண்டும். நம்முடைய சித்தத்தையும், நம்முடைய திட்டத்தையும் நிறைவேற்றவேண்டும் என்று முயற்சிபண்ணாமல், கர்த்தருடைய சித்தத்தையும், அவருடைய திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

விடியற்காலத்திலே எசேக்கியேல் ஜனங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது ஜனங்கள் எசேக்கியேலை நோக்கி: "நீர் செய்கிறவைகள் எங்களுக்கு என்னத்திற்கு அடையாளம் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கமாட்டீரா" (எசே 24:19) என்று கேட்கிறார்கள்.

எசேக்கியேலின் மனைவி செத்துப்போன விவரம் அவர்களுக்குத் தெரியும். அவருக்கு மிகுந்த துக்கமும், மிகுந்த வேதனையும் உண்டாயிருக்கும் என்பதும் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் தன்னுடைய மனைவி செத்துப்போனாலும், எசேக்கியேல் புலம்பாமலும், அழாமலும், கண்ணீர் விடாமலும் இருக்கிறார். இதற்கான காரணம் என்ன என்பது ஜனங்களுக்குத் தெரியவில்லை.

எசேக்கியேல் அழாமல் அமைதியாயிருப்பது, என்னத்திற்கோ அடையாளம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் அது என்னத்திற்கு அடையாளம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

அப்பொழுது எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. எசேக்கியேல் கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரர். அவர் ஒரு பரிசுத்தவான். அவருக்கே இப்படிப்பட்ட வேதனையும், துக்கமும் உண்டாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இரண்டகம்பண்ணுகிறார்கள். அவர்கள் துன்மார்க்கத்திலும் பாவத்திலும் ஜீவிக்கிறார்கள். எசேக்கியேலுக்கே தண்டனை கிடைக்கும்போது, பாவிகளான ஜனங்களால் தண்டனைக்கு தப்பிக்க முடியாது.

எருசலேம் குடிகளிடத்தில் பெருமையும், மேட்டிமையும் ஆணவமும் இருக்கிறது. அவர்கள் கர்த்தரை நம்பாமல், கர்த்தருடைய ஆலயத்தை நம்புகிறார்கள். கர்த்தர் எசேக்கியேல் மூலமாக இஸ்ரவேல் வீட்டாருக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "இதோ, உங்கள் பலத்தின் முக்கியமும் உங்கள் கண்களின் விருப்பமும் உங்கள் ஆத்துமாவின் வாஞ்சையுமாகிய என் பரிசுத்தஸ்தலத்தை நான் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறேன்" (எசே 24:21) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தர் எருசலேமையும், அதிலுள்ள தேவாலயத்தையும் கல்தேயரின் கையில் ஒப்புக்கொடுத்துவிடுவார். அவர்கள் தேவாலயத்திலுள்ள பணிமுட்டுக்களையெல்லாம் கொள்ளையிட்டு, தேவாலயத்தை சுட்டெரித்துப்போடுவார்கள். யூதர்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்தைக் குறித்து பெருமைப்பட்டார்கள். தேவாலயம் அக்கினியினால் சுட்டெரிக்கப்படும்போது, அவர்களுடைய பெருமை அவர்களை விட்டு நீங்கும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்கள் குடும்ப காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தங்கள் பிள்ளைகள்மீது மிகவும் அன்பாயிருக்கிறார்கள். கர்த்தருடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்கள் பிள்ளைகளின் காரியங்களுக்கு அதிகமாய் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் வீட்டாரை நோக்கி, "நீங்கள் விட்டு வந்த உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்" (எசே 24:21) என்று சொல்லுகிறார். கல்தேயரின் பட்டயம் அவர்களைக் கொன்றுபோடும்.

யூதாதேசத்திலே பஞ்சமும் கொள்ளை நோயும் வரும். இந்த வாதைகளினால் யூதாவின் மனுஷரில் அநேகர் செத்துப்போவார்கள். அவர்களில் மீதமானவர்களை கல்தேயர்கள் தங்கள் பட்டயத்தால் கொன்றுபோடுவார்கள். இது யூதர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையாகும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்த இஸ்ரவேல் வீட்டாருக்கு மரணம் தண்டனையாய்க் கொடுக்கப்படுகிறது.

எசேக்கியேல் தன்னுடைய மனைவி செத்துப்போனபோது, அவர் அழாமலும், புலம்பாமலும் கண்ணீர் விடாமலும் இருக்கிறார். இஸ்ரவேல் வீட்டாரின் குமாரரும் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள். அப்பொழுது எசேக்கியேல் செய்ததுபோல, அவர்களும் செய்வார்கள். அவர்கள் புலம்பாமலும் அழாமலும் இருப்பார்கள். தங்கள் அக்கிரமங்களில் வாடிப்போவார்கள். ஒருவரையொருவர் பார்த்து தவிப்பார்கள் (எசே 24:22,23).

இஸ்ரவேல் வீட்டாரின் துக்கம் மிகவும் அதிகமாயிருக்கும். அவர்களால் தங்கள் துக்கத்தை அழுது புலம்பி, கண்ணீர் விட்டு வெளிப்படுத்த முடியாது. அவர்களுக்கு அதிர்ச்சி உண்டாகும். அந்த அதிர்ச்சியினால் அவர்களால் பேசவும் முடியாது. அழவும் முடியாது. துக்கம் அவர்களை மேற்கொள்ளும். அவர்கள் செயலிழந்து கிடப்பார்கள்.

எசேக்கியேல் செய்ததுபோலவே, இஸ்ரவேல் வீட்டாரும் செய்வார்கள். அவர்கள் தங்கள் தாடியை மூடமாட்டார்கள். துக்கம் கொண்டாடுகிறவர்களின் அப்பத்தைப் புசிக்கமாட்டார்கள். அவர்களுடைய பாகைகள் அவர்கள் தலைகளிலிருக்கும். அவர்கள் பாதரட்சைகள் அவர்கள் கால்களிலிருக்கும். தங்களுடைய குமாரரும் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவதைப் பார்த்து, அவர்கள் அதிர்ச்சியடைவார்கள். அவர்களுடைய சரீரங்களும், உணர்வுகளும் மரத்துப்போகும்.

இஸ்ரவேல் வீட்டார்மீது துக்கமும், வேதனையும், அழிவும், சங்காரமும் சீக்கிரத்தில் வரும். "அப்பொழுதாவது எனக்கு ஆறுதல் இருக்குமே; அப்பொழுது என்னைத் தப்பவிடாத நோவிலே மரத்திருப்பேன்; பரிசுத்தருடைய வார்த்தைகளை நான் மறைத்துவைக்கவில்லை, அவர் என்னைத் தப்பவிடாராக" (யோபு 6:10) என்று யோபு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வீட்டாருக்கு துக்கமுண்டாகும். ஆனால் இது அவர்களுடைய மனந்திரும்புதலுக்கேற்ற துக்கமாயிருக்காது. அவர்களுக்கு பேரழிவு வந்தாலும், எருசலேம் நகரமே அழிந்துபோனாலும், அவர்கள் மனந்திரும்பமாட்டார்கள். அவர்கள் தங்கள் அக்கிரமங்களில் வாடிப்போவார்களேயல்லாமல், தங்களுடைய அக்கிரமங்களுக்கு மனந்திரும்பமாட்டார்கள்.

இஸ்ரவேல் வீட்டார் தங்கள் துக்கங்களினால் அழுது புலம்புவார்கள். ஒருவரையொருவர் பார்த்து தவிப்பார்கள். அவர்களுக்கு எவ்வளவு துக்கங்கள் வந்தாலும், அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் வந்து, தங்கள் பாவங்களை அறிக்கை செய்யமாட்டார்கள். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தாது. அவர்கள் தேவனுக்கு முன்பாக, தங்கள் ஜெபத்திலே, அழுது புலம்பமாட்டார்கள். அதற்குப் பதிலாக, இஸ்ரவேல் வம்சத்தார், ஒருவரையொருவர் பார்த்து தவிப்பார்கள். ஒருவருக்கொருவர் புலம்பிக்கொள்வார்கள்.

எசேக்கியேல் இஸ்ரவேல் வீட்டாருக்கு அடையாளமாயிருக்கிறார். எசேக்கியேல் செய்தபடியெல்லாம் அவர்களும் செய்வார்கள். இப்படிப்பட்ட துக்கம் அவர்களுக்கு வரும்போது இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தராகிய ஆண்டவர் என்பதை இஸ்ரவேல் வீட்டார் அறிந்துகொள்வார்கள்.

கர்த்தர் சொன்ன பிரகாரம் கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிடுவார்கள். நகரத்திற்குள் பிரவேசித்து அதை முற்றிலுமாய் அழித்துப்போடுவார்கள். கர்த்தர் இப்போது, இஸ்ரவேல் வீட்டாரை, தம்முடைய வார்த்தைகள் மூலமாய் எச்சரிக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். இஸ்ரவேல் வீட்டார் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்தாலும், செவிகொடுக்காவிட்டாலும், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை நம்பினாலும், நம்பாவிட்டாலும், கர்த்தர் சொன்ன காரியங்கள் நிச்சயமாய் நிறைவேறும்.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றும் அந்த நாளிலே, அவர்களுடைய பலத்தையும், அவர்களுடைய அலங்காரத்தின் மகிழ்ச்சியையும், அவர்களுடைய கண்களின் விருப்பத்தையும், அவர்களுடைய ஆத்துமாவின் விசேஷித்த வாஞ்சையையும், அவர்களுடைய குமாரரையும், அவர்களுடைய குமாரத்திகளையும் அவர்களைவிட்டு எடுத்துக் கொள்ளுவார் (எசே 24:25).

அந்த நாளிலே, எசேக்கியேல் தன்னுடைய மனைவி செத்துப்போனபோது, ஏன் அழாமலும், புலம்பாமலும், கண்ணீர் விடாமலும் இருந்தார் என்பதற்கான காரணத்தையும், அதன் அடையாளத்தையும், இஸ்ரவேல் வீட்டார் புரிந்துகொள்வார்கள்.

கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரமாக, எருசலேம் அழிந்துபோகிற அந்த நாளில், அங்கிருந்து தப்பித்து வந்த ஒருவன், எசேக்கியேலினிடத்தில் வருவான். அவன் எருசலேமின் அழிவைப்பற்றி, எசேக்கியேலின் காதுகள் சொல்லுவான்.

"எங்கள் சிறையிருப்பின் பன்னிரண்டாம் வருஷம் பத்தாம் மாதம் ஐந்தாந்தேதியிலே எருசலேமிலிருந்து தப்பின ஒருவன் என்னிடத்தில் வந்து: நகரம் அழிக்கப்பட்டது என்றான்" *(எசே 33:21).*

இந்த நாளிலிருந்து, எருசலேம் அழிந்துபோகிற அந்த நாள் வரையிலும், எசேக்கியேல் வாய் பேசாத ஊமையைப்போலிருப்பார். எசேக்கியேல் அதுவரையிலும் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார். எசேக்கியேல் வாய் பேசமுடியாத ஊமையல்ல. அவர் எருசலேமுக்கு விரோதமாக ஒன்றும் சொல்லாவிட்டாலும், மற்ற தேசங்களுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுவார்.

"மனுபுத்திரனே, நீ உன் ஜனத்தின் புத்திரரோடே பேசி, அவர்களோடே சொல்லவேண்டியதாவது: நான் தேசத்தின்மேல் பட்டயத்தை வரப்பண்ணுகையில் தேசத்தின் ஜனம் தங்கள் எல்லைகளிலுள்ள ஒருவனை அழைத்து, அவனைத் தங்களுக்குக் காவற்காரனாக வைத்தபின்பு, இவன் தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக்கண்டு, எக்காளம்ஊதி, ஜனத்தை எச்சரிக்கும்போது, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்கிறவன் அதைக்கேட்டும், எச்சரிக்கையாயிராமல், பட்டயம் வந்து அவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேல் சுமரும்" *(எசே 33:2-4).*

"தப்பினவன் வருகிறதற்கு முந்தின சாயங்காலத்திலே கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து, அவன் காலையில் என்னிடத்தில் வருமட்டும் என் வாயைத் திறந்திருக்கப்பண்ணிற்று; என் வாய் திறக்கப்பட்டது, பின்பு நான் மௌனமாயிருக்கவில்லை" *(எசே 33:22).*

கர்த்தர் தம்முடைய கோலால் உரத்த சத்தமாய்ப் பேசும்போது, அவர் தம்முடைய வார்த்தைகளால் பேசவேண்டிய அவசியம் குறைந்துபோகிறது.

25 அதிகாரம்

எசேக்கியேல் இதுவரையிலும் எருசலேமுக்கு வரப்போகிற அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். இதற்குமேல் சொல்லுவதற்கு அவருக்கு வார்த்தையில்லை. எருசலேமுக்கு விரோதமாக கர்த்தர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறுவதற்காக எசேக்கியேல் காத்துக்கொண்டிருக்கிறார்.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லாமல் அமைதியாயிருக்க முடியாது. இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றிலும் அந்நிய தேசத்தார் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஏசாயா, எரேமியா ஆகியோர் அந்த தேசங்களுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். இப்போது எசேக்கியேலும் அந்நிய தேசத்தாருக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரருக்கு விரோதமான செய்தி (எசே 25:1-7). மோவாபியருக்கு விரோதமான செய்தி (எசே 25:8-11). ஏதோமியருக்கு விரோதமான செய்தி (எசே 25:11-14). பெலிஸ்தருக்கு விரோதமான செய்தி (எசே 25:15-17). கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனத்தார், வேதனைகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்தபோது, புறஜாதி தேசத்தார் அவர்களுக்காக அனுதாபப்படவில்லை. அவர்களுக்கு மனிதாபிமானம் காண்பிக்கவில்லை. அவர்களை ஏளனம்பண்ணினார்கள். இஸ்ரவேல் வம்சத்தாருடைய அழிவில் அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

அம்மோன் புத்திரர்
எசே 25:1-7

எசே 25:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 25:2. மனுபுத்திரனே, நீ அம்மோன் புத்திரருக்கு எதிராக உன் முகத்தைத் திருப்பி, அவர்களுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்உரைத்து,

எசே 25:3. அம்மோன் புத்திரருக்குச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவருடைய வார்த்தையைக்கேளுங்கள்; கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்: என் பரிசுத்தஸ்தலம் பரிசுத்தக்குலைச்சலாக்கப்படுகிறபோதும், இஸ்ரவேல் தேசம்பாழாக்கப்படுகிறபோதும், யூதா வம்சத்தார் சிறையிருப்பிலே போகிறபோதும், நீ அவர்களுக்கு விரோதமாக ஆ, ஆ, என்று நிந்தித்தபடியினால்,

எசே 25:4. இதோ, நான் உன்னைக் கிழக்குத் தேசத்தாருக்குச் சுதந்தரமாக ஒப்புக்கொடுப்பேன், அவர்கள் உன்னில் தங்கள் அரண்களைக் கட்டி, உன்னில் தங்கள் வாசஸ்தலங்களை உண்டுபண்ணுவார்கள்; அவர்கள் உன் கனிகளைப் புசித்து, உன் பாலைக் குடிப்பார்கள்.

எசே 25:5. நான் ரப்பாவை ஒட்டகங்களின் கொட்டகையும், அம்மோன் புத்திரரின் தேசத்தை ஆட்டுக்கிடையுமாக்குவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 25:6. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாக நீ கைகொட்டி, உன் காலால் தட்டி, வர்மம் வைத்து, ஆகடியம் பண்ணினபடியினால்,

எசே 25:7. இதோ, உனக்கு விரோதமாக நான் என் கையை நீட்டி, உன்னை ஜாதிகளுக்குக் கொள்ளையாக ஒப்புக்கொடுத்து, உன்னை ஜனங்களுக்குள்ளே வேரற்றுப்போகப்பண்ணி, உன்னை தேசங்களுக்குள்ளே அழித்து, உன்னை நிர்மூலமாக்குவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வாய்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி அம்மோன் புத்திரருக்கு எதிராக தன்னுடைய முகத்தைத் திருப்பிக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், எல்லா தேசத்திற்கும் கர்த்தராயிருக்கிறார். அவரே கர்த்தாதி கர்த்தர்.

எசேக்கியேல் கர்த்தருடைய சார்பாக பேசுகிறார். அவர் கர்த்தருடைய வார்த்தைகளை பேசுகிறார். கர்த்தருடைய நாமத்தில் பேசுகிறார். எசேக்கியேல் அம்மோன் புத்திரருக்கு எதிராக தன்னுடைய முகத்தைத் திருப்புவது, கர்த்தர் தம்முடைய முகத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராக திருப்புவதற்கு சமம். கர்த்தருடைய முகம் தீமை செய்கிறவர்களுக்கு விரோதமாக திரும்பியிருக்கிறது.

"தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது" *(சங் 34:16)*.

எசேக்கியேல் தீர்க்கதரிசி இதுவரையிலும் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். கர்த்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்தினாலும், அவர் இன்னும் இஸ்ரவேலின் தேவனாகவே இருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தாரும் கர்த்தருடைய இஸ்ரவேலர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வீட்டாரின் நன்மைகளை விரும்புகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களையும், அக்கிரமங்களையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தொடர்ந்து பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு விரோதமாய் வருகிறது. கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் மகிமையடைகிறார்.

எசேக்கியேல் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். அவருக்கு இஸ்ரவேல் தேசத்தின் அண்டை நாடுகளைப்பற்றியும், அங்கு நடைபெறுகிற சம்பவங்களைப்பற்றியும் அதிகமாய் ஒன்றும் தெரியாது. ஆனாலும் கர்த்தர், எசேக்கியேலுக்கு அந்த தேசங்களுக்கு விரோதமாக, தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசத்தார் இப்போது என்ன செய்கிறார்கள் என்றும், கர்த்தர் அவர்களை எப்படி நியாயந்தீர்ப்பார் என்றும் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. அது அவருடைய பரிசுத்த ஸ்தலம். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் பரிசுத்த குலைச்சலாக்கப்படுகிறது. இஸ்ரவேல் தேசம் பாழாக்கப்படுகிறது. யூதாவம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போகிறார்கள். அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிறார்கள். அவர்களுக்கு இஸ்ரவேல் தேசத்தில் நடைபெறுகிற எல்லா சம்பவங்களும் தெரிந்திருக்கிறது. யூதாவம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போகும்போது, அம்மோன் புத்திரர் அவர்களுக்கு விரோதமாக நிந்திக்கிறார்கள். இஸ்ரவேல் தேசம் பாழாக்கப்படும்போது, அம்மோன் புத்திரர் சந்தோஷப்படுகிறார்கள்.

எருசலேம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது அம்மோன் புத்திரர் சந்தோஷப்படக்கூடாது. அவர்கள் ஆர்ப்பரிக்கக்கூடாது. எருசலேமின் அழிவைப் பார்த்து எல்லா தேசத்தாரும் பயந்து நடுங்கவேண்டும். எருசலேமைப்போலவே புறஜாதியாரும் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீதும் கோபமாயிருக்கிறார்.

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது. ஆகையினால் எருசலேம் முதலாவதாக அழிந்து போகிறது. அம்மோன் புத்திரருக்கும், மற்ற புறஜாதியாருக்கும் கர்த்தர் அழிவை நியமித்திருக்கிறார். அவர்கள் இப்போது அழிவுக்குத் தப்பித்தாலும், அவர்களுக்கும் சீக்கிரத்தில் அழிவு வரும்.

"பட்டயம் அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவுக்கு விரோதமாக வரத்தக்க ஒரு வழியையும், யூதாவில் இருக்கிற அரணான எருசலேமுக்கு விரோதமாக வரத்தக்க ஒரு வழியையும் குறித்துக்கொள்" (எசே 21:20).

பாபிலோன் ராஜா இப்போது எருசலேமுக்கு விரோதமாக வந்திருக்கிறான். அவன் எருசலேமை அழித்துப்போடுகிறான். அடுத்ததாக அவன் அம்மோன் தேசத்திற்கு விரோதமாக வருவான். அம்மோன் புத்திரரையும் சங்காரம்பண்ணுவான். ஆனால் அம்மோன் புத்திரருக்கோ தங்களுக்கு வரப்போகிற அழிவைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் இப்போது பாதுகாப்பாயிருப்பதாக நினைக்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்பு நிலைத்திருக்காது. நேபுகாத்நேச்சார் அம்மோன் தேசத்தின்மீது சீக்கிரமாய் வருவான். அம்மோன் புத்திரரை சங்காரம்பண்ணுவான்.

மற்றவர்கள் துன்பப்படும்போது நாமும் அவர்களுடைய துன்பத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். மற்றவர்கள் வேதனைகளை அனுபவிக்கும்போது, நாம் அவர்களுக்காக பரிதாபப்படவேண்டும். மற்றவர்களுடைய வேதனைகளைப் பார்த்து நாம் சந்தோஷப்படக்கூடாது. பிறர் துன்பத்தை அனுபவிக்கும்போது, நாம் அதைப் பார்த்து சந்தோஷப்பட்டால், அது நமக்கு பாவமாயிருக்கும்.

இஸ்ரவேல் தேசம் பாழாக்கப்படுகிறபோது, அம்மோன் புத்திரர் அவர்களுக்கு விரோதமாக நிந்தித்தார்கள். அவர்களை ஏளனம்பண்ணினார்கள். இஸ்ரவேல் தேசம் பாழாக்கப்பட்டதுபோல, அம்மோன் தேசமும் பாழாக்கப்படும். அம்மோன் புத்திரரின் அழிவைப்பற்றி எசேக்கியேல் ஏற்கெனவே கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாக சொல்லியிருக்கிறார்.

"பின்னும் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் சொல்லு: அம்மோன் புத்திரரையும் அவர்கள் சொல்லும் நிந்தனைகளையும் குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், அக்கிரமத்துக்கு முடிவுவருங்காலத்தில் வந்த தங்களுடைய நாளுக்கு ஏதுவாகி, கொலையுண்டுபோனவர்களுடைய பிடரிகளோடேகூட உன்னைத் துன்மார்க்கரின் கையினால் விழப்பண்ணும்படிக்கு, உனக்கு அபத்தமானது தரிசிக்கப்படுகிறபோதும், உனக்குப் பொய்நிமித்தம் பார்க்கப்படுகிறபோதும் பட்டயம் உருவப்பட்டது, பட்டயமே உருவப்பட்டது; வெட்டவும் சங்கரிக்கவும் அது மின்னத்தக்கதாய்த் துலக்கப்பட்டிருக்கிறது" (எசே 21:28,29).

அம்மோன் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால் அவர்களுக்கு அழிவு வராது. அவர்கள் தங்களுக்கு வரப்போகும் அழிவுக்கு தப்பித்துக்கொள்வார்கள். ஆனால் அம்மோன் புத்திரரோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. ஆகையினால் அவர்களுக்கு அழிவு நிச்சயமாய் வருகிறது. கல்தேயர்கள் வடகிழக்கு திசையிலிருந்து அம்மோன் தேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், கல்தேயருடைய சேனைக்கு தலைவனாயிருந்து, அவர்களை வழிநடத்துகிறான். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முதலாவதாக அழித்துப் போட்டார்கள். அதற்கு ஐந்து வருஷங்கள் சென்ற பின்பு கல்தேயர்கள் அம்மோன் தேசத்தையும் அழித்துப் போட்டார்கள்.

கிழக்கு தேசத்தார் என்னும் வார்த்தை அரபியரைக் குறிக்கும். கல்தேயர்கள் யூதாதேசத்தைப் பாழாக்கின பின்பு, அவர்கள் அம்மோன் தேசத்திற்கும் விரோதமாக வருகிறார்கள். கல்தேயர்கள் எருசலேமைப் பாழாக்கிப்போட்டதுபோல, அம்மோன் தேசத்தையும் பாழாக்கிப்போடுவார்கள்.

கர்த்தர் அம்மோன் புத்திரரை கிழக்கு தேசத்தாருக்கு சுதந்தரமாக ஒப்புக்கொடுக்கிறார். கிழக்கு தேசம் என்பது பாபிலோன் தேசத்தைக் குறிக்கும் வார்த்தை. பாபிலோன் தேசத்தார் அம்மோன் தேசத்திலே தங்களுக்கு அரண்களைக் கட்டுவார்கள். அங்கே தங்கள் வாசஸ்தலங்களை உண்டுபண்ணுவார்கள். அம்மோன் தேசத்தின் கனிகளைப் புசித்து, அந்த தேசத்தின் பாலைக் குடிப்பார்கள்.

அம்மோன் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அம்மோன் தேசத்தின்மீது வந்திருக்கிறது. எருசலேம் யூதாதேசத்திற்கு தலைநகரம். ரப்பா அம்மோன் தேசத்திற்கு தலைநகரம். "நான் ரப்பாவை ஒட்டகங்களின் கொட்டகையும், அம்மோன் புத்திரரின் தேசத்தை ஆட்டுக்கிடையுமாக்குவேன்" (எசே 25:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசம் பாழாக்கப்படுகிறபோது, அம்மோன் புத்திரருக்கு இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்னும் சத்தியம் தெரியவில்லை. தங்கள் தேசம் பாழாக்கப்படுகிறபோது, அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்து கொள்கிறார்கள்.

கர்த்தர் ரப்பாவை ஒட்டகங்களின் கொட்டகையாக்குவார். அம்மோன் புத்திரரின் தேசத்தையோ ஆட்டுக்கிடையாக்குவார். கர்த்தர் இதன் மூலமாய் தம்முடைய வல்லமையையும், மகிமையையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை பாபிலோன் தேசத்திற்கு ஒப்புக்கொடுத்தாலும், அவர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்பதை அம்மோன் புத்திரர் அறிந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இதுவரையிலும் அந்நியராகயிருந்தவர்கள், இனிமேல் அவர்கள் வசமாக வருவார்கள். அவர்களோடு நெருக்கமாய்ப் பழகுவார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தம்முடைய நீதியினால் தண்டித்தாலும், தம்முடைய கிருபையினால் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக கைக்கொட்டினார்கள். தங்கள் காலால் தட்டி, வர்மம் வைத்து ஆகடியம் பண்ணினார்கள். அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரரை ஏளனம்பண்ணினார்கள். இதன் நிமித்தமாக, கர்த்தர் தம்முடைய கரத்தை அம்மோன் புத்திரருக்கு விரோதமாக நீட்டியிருக்கிறார்.

"இதோ, உனக்கு விரோதமாக நான் என் கையை நீட்டி, உன்னை ஜாதிகளுக்குக் கொள்ளையாக ஒப்புக்கொடுத்து, உன்னை ஜனங்களுக்குள்ளே வேரற்றுப்போகப்பண்ணி, உன்னை தேசங்களுக்குள்ளே அழித்து, உன்னை நிர்மூலமாக்குவேன்" (எசே 25:7) என்று கர்த்தர் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

மோவாபியர்
எசே 25:8-11

எசே 25:8. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: இதோ, யூதா வம்சத்தார் எல்லா ஜாதிகளுக்கும் ஒத்தவர்களென்று மோவாபும் சேயீரும் சொல்லுகிறபடியினால்,

எசே 25:9. இதோ, அம்மோன் புத்திரரின் பேர் ஜாதிகளுக்குள் இராதபடிக்கு நான் அம்மோன் புத்திரரின் தேசத்தைக் கிழக்குத் தேசத்தாருக்குத் திறந்துவைத்து, சுதந்தரமாய் ஒப்புக்கொடுக்கிறவண்ணமாக,

எசே 25:10. நான் மோவாப் தேசத்தின் பக்கத்திலுள்ள அதின் கடையாந்தர ஊர்களாகிய பட்டணங்கள் முதற்கொண்டுள்ள தேசத்தின் அலங்காரமாகிய பெத்யெசிமோத்தையும், பாகால்மெயோனையும், கீரியாத்தாயீமையும் அவர்களுக்குத் திறந்துவைத்து,

எசே 25:11. மோவாபிலே நியாயங்களைச் செய்வேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ள அம்மோன் புத்திரரைப் போலவே மோவாபியரும், ஏதோமியரும், பெலிஸ்தியரும் மனிதாபமில்லாமல் இருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, இந்த தேசத்தார் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள். தங்களுக்கு வெற்றி கிடைத்ததுபோல நினைக்கிறார்கள்.

சேயீர் ஏதோமியரின் முக்கியமான பட்டணம். இவர்கள் மோவாபியரோடு சேர்ந்து கொள்கிறார்கள். யூதா வம்சத்தார் எல்லா ஜாதிகளுக்கும் ஒத்தவர்கள் என்று இவர்கள் இருவருமே சொல்லுகிறார்கள் (எசே 25:8). யூதாவம்சத்தாருக்கும், புறஜாதியாருக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்பது இவர்களுடைய எண்ணம்.

யூதாவின் வம்சத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். புறஜாதியாரோ இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்கள்.

யூதாவம்சத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். யூதாவம்சத்தாரின் விக்கிராராதனையைப் பார்த்து அம்மோன் புத்திரரைப்போலவே, மோவாபியரும் சந்தோஷப்படுகிறார்கள்.

யூதாவம்சத்தாரில் எல்லோரும் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டவில்லை. அவர்களில் அநேகர் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினாலும், யூதாவம்சத்தாரில் இன்னும் கர்த்தருக்கு மீதியானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை. அவர்கள் புறஜாதியாரைப்போல விக்கிரகங்களுக்கு தூபங்காட்டவில்லை. அவர்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார்கள்.

யூதாவம்சத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போனாலும், அவர்கள் மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள். யூதாதேசம் அழிந்துபோனாலும், கர்த்தர் அந்த தேசத்தை மறுபடியும் கட்டியெழுப்புவார். கர்த்தர் நீதியுள்ளவர். அவர் கிருபையும் இரக்கமுமுள்ளவர்.

மோவாபியர் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை. வல்லமையுமில்லை. அவர்கள் விக்கிரகங்களை நம்புகிறார்கள். விக்கிரகங்களால் அவர்களைப் பாதுகாக்க முடியாது. அவர்களுக்கு நன்மை செய்யமுடியாது.

மோவாபியருக்கு அழிவு வருவதுபோல, இப்போது யூதாவின் வம்சத்தாருக்கும் அழிவு வந்திருக்கிறது. ஆனாலும், இவ்விரண்டு அழிவுகளுக்கும் வித்தியாசமுள்ளது. மோவாபியரின் அழிவு நிரந்தரமாயிருக்கும். அவர்கள் நம்புகிற விக்கிரகங்கள் அவர்களுக்கு உதவி செய்யாது.

யூதாவம்சத்தாரின் அழிவோ நிரந்தரமானதல்ல. அது தற்காலிகமானது. யூதர்கள் மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால், கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்ய கிருபையுள்ளவர். அவர்களை மறுபடியுமாய் கட்டியெழுப்புவதற்கு வல்லமையுள்ளவர்.

கர்த்தருடைய ஜனத்திற்கு சில சமயங்களில் குறைவுகள் வரலாம். இவையெல்லாம் உலகப்பிரகாரமான காரியங்கள். நமக்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் குறைந்துவிட்டால், நாம் கர்த்தருடைய சிலாக்கியங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம் என்பது பொருளல்ல. நமக்கு உலகப்பிரகாரமான நன்மைகள் குறைவாயிருந்தாலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நமக்குள் நிறைந்திருக்கவேண்டும். நாம் பொருளாதாரத்தில் தரித்திரராயிருந்தாலும், கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வதில் ஐசுவரியவான்களாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் அழிவைப் பார்த்து மோவாபியர்கள் சந்தோஷப்பட்டதினால், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அம்மோன் புத்திரரின் தேசத்தைப்போலவே, மோவாபியரின் தேசமும் அழிந்துபோகும். கர்த்தர் அம்மோன் புத்திரரை கிழக்கு தேசத்தாராகிய கல்தேயருடைய கையில் ஒப்புக்கொடுத்தார். அதுபோலவே அவர் மோவாபியரையும் கல்தேயருக்கு சுதந்தரமாய் ஒப்புக்கொடுப்பார்.

மோவாப் தேசத்திலே பெத்யெசிமோத், பாகால்மெயோன், கீரியாத்தாயீம் ஆகியவை பிரதான பட்டணங்களாகும். இவை மோவாப் தேசத்திற்கு அலங்காரமாயிருக்கிறது. கல்தேயர்கள் மோவாபியரின் இந்த பிரதான பட்டணங்களைப் பிடித்துக்கொள்வார்கள். இவர்களால் கல்தேயருக்கு எதிர்த்து நிற்கமுடியாது. கர்த்தர் இந்தப் பட்டணங்களை கல்தேயருடைய சேனைக்கு திறந்து கொடுப்பார். அவர்கள் எந்தவித தடையுமில்லாமல், தங்களைத் தடுப்பார் ஒருவருமில்லாமல், மோவாபின் பிரதான பட்டணங்களுக்குள் பிரவேசிப்பார்கள்.

கர்த்தர் கிழக்கு தேசத்தாருக்கு அம்மோன் புத்திரரின் தேசத்தை ஒப்புக்கொடுத்தார். அதுபோலவே மோவாப் தேசத்தையும் கிழக்கு தேசத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார். கர்த்தர் மோவாபிலே தம்முடைய நியாயங்களை செய்வார். மோவாபியர்கள் எந்தவித ஆபத்தும் இல்லாமல் அமைதியாயிருந்த காலத்தில், இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்ளவில்லை. கல்தேயர்கள் மோவாப் தேசத்தைப் பிடித்து, மோவாபியரை சங்காரம்பண்ணியபோதோ, அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரை கர்த்தர் என்று அறிந்து கொள்கிறார்கள்.

ஏதோமியர்
எசே 25:12-14

எசே 25:12. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: ஏதோம் யூதா வம்சத்தாரிடத்தில் குரோதந்தீர்த்து, பழிவாங்கி, பெரிய குற்றஞ்செய்தபடியினால்,

எசே 25:13. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்: நான் ஏதோம் தேசத்துக்கு விரோதமாக என் கையை நீட்டி அதில் மனுஷரையும் மிருகங்களையும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணி, அதைத் தேமான் துவக்கித் தேதான் மட்டும் வனாந்தரமாக்குவேன்; பட்டயத்தால் விழுவார்கள்.

எசே 25:14. நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தின் கையினால் ஏதோமினிடத்தில் பழிவாங்குவேன்; அவர்கள் என் கோபத்தின்படியும் என் உக்கிரத்தின்படியும் ஏதோமுக்குச் செய்வார்கள்; அப்பொழுது நான் பழிவாங்குவது இன்னதென்று அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஏதோமியர் ஏசாவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் பழைய பகை இருந்தது. யூதாவும் எருசலேமும் அழிந்துபோனபோது ஏதோமியர் சந்தோஷப்பட்டார்கள். மோவாபியரைப் போலவும், அம்மோன் புத்திரரைப்போலவும், ஏதோமியரும் இஸ்ரவேல் வம்சத்தாரின் அழிவைப் பார்த்து அவர்களை ஏளனம்பண்ணினார்கள். தங்களுக்கு ஜெயம் கிடைத்ததுபோல ஆர்ப்பரித்தார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியினால் யூதாவையும் எருசலேமையும் அழித்துப்போடுகிறார். யூதர்கள் தங்களுடைய பாவங்களினால் மிகுந்த வேதனைகளையும், துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய வேதனைகளை ஏதோமியர் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். யூதாதேசத்திற்குள்ளே எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல் பிரவேசிக்கிறார்கள். கல்தேயர்கள் ஏற்கெனவே யூதாதேசத்தை கொள்ளையிட்டு முடித்துவிட்டார்கள். அதில் மீதியாயிருப்பவற்றை அள்ளிக்கொண்டு போவதற்காக ஏதோமியர் அங்கே போகிறார்கள்.

ஏதோம் யூதாவம்சத்தாரிடத்தில் குரோதம் தீர்க்கிறார்கள் என்றும், அவர்களை பழிவாங்குகிறார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். இதன் நிமித்தமாக ஏதோமியர் பெரிய குற்றம் செய்கிறார்கள் (எசே 25:12).

அமத்சியா ஏதோமியரை சங்காரம் பண்ணுகிறான். "அவன் உப்புப்பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பதினாயிரம்பேரை மடங்கடித்து, யுத்தஞ்செய்து சேலாவைப் பிடித்து, அதற்கு இந்நாள்வரைக்கும் இருக்கிற யொக்தியேல் என்னும் பேரைத் தரித்தான்" (2இராஜா 14:7).

கர்த்தர் ஏதோம் தேசத்திற்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டுகிறார். அந்த தேசத்திலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் சங்காரம்பண்ணுகிறார். ஏதோமிலே மனுஷரும் இருக்கமாட்டார்கள். மிருகங்களும் இருக்காது. கர்த்தர் அதை தேமான் துவக்கி தேதான் மட்டும் வனாந்தரமாக்குவதாகச் சொல்லுகிறார் (எசே 25:13). அவர்கள் எல்லோரும் பட்டயத்தால் விழுவார்கள்.

கல்தேயர்கள் ஏதோமியரை சங்காரம் பண்ணுகிறார்கள். "ஏதோமைக்குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தேமானிலே இனி ஞானமில்லையோ? ஆலோசனை விவேகிகளை விட்டு அழிந்ததோ? அவர்களுடைய ஞானம் கெட்டுப்போயிற்றோ? தேதானின் குடிகளே, ஓடுங்கள், முதுகைக்காட்டுங்கள், பள்ளங்களில் பதுங்குங்கள்; ஏசாவை விசாரிக்கும் காலத்தில் அவன் ஆபத்தை அவன் மேல் வரப்பண்ணுவேன். திராட்சப்பழங்களை அறுக்கிறவர்கள் உன்னிடத்திலே வந்தார்களாகில், பின்பறிக்கிறவதற்குக் கொஞ்சம் வையார்களோ? இராத்திரியில் திருடர் வந்தார்களாகில், தங்களுக்குப் போதுமென்கிறமட்டும் கொள்ளையடிப்பார்கள் அல்லவோ? நானோ ஏசாவை வெறுமையாக்கி, அவன் ஒளித்துக்கொள்ளக்கூடாதபடிக்கு அவனுடைய மறைவிடங்களை வெளிப்படுத்திப்போடுவேன்; அவனுடைய சந்ததியாரும் அவனுடைய சகோதரரும் அவனுடைய அயலாரும் அழிக்கப்படுவார்கள்; அவன் இனி இரான்" (எரே 49:7-10).

கர்த்தருடைய கோபம் ஏதோமியர்மேல் பற்றி எரிகிறது. "நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தின் கையினால் ஏதோமினிடத்தில் பழிவாங்குவேன்; அவர்கள் என் கோபத்தின்படியும் என் உக்கிரத்தின்படியும் ஏதோமுக்குச் செய்வார்கள்; அப்பொழுது நான் பழிவாங்குவது இன்னதென்று அறிந்துகொள்வார்கள்" (எசே 25:14) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

பெலிஸ்தியர்
எசே 25:15-17

எசே 25:15. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: பெலிஸ்தியர் குரோதக்காரராயிருந்து, பழம்பகையால் கேடுசெய்யவேண்டுமென்று, வர்மம் வைத்துப் பழிவாங்கினபடியினால்,

எசே 25:16. இதோ, நான் பெலிஸ்தியருக்கு விரோதமாக என் கையை நீட்டி, கிரேத்தியரைச் சங்கரித்து, சமுத்திரக்கரையில் மீதியானவர்களை அழித்து,

எசே 25:17. உக்கிரமான தண்டனைகளினால் அவர்களில் கொடிதாய்ப் பழிவாங்குவேன்; நான் அவர்களில் பழிவாங்கும்போது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஏதோமியரைப்போலவே பெலிஸ்தியரும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். பெலிஸ்தியர் குரோதக்காரராயிருந்து, பழம்பகையால் கேடுசெய்யவேண்டுமென்று, வர்மம் வைத்துப் பழிவாங்குகிறார்கள் (எசே 25:15).

கர்த்தர் ஏதோமியரைத் தண்டிப்பது போலவே பெலிஸ்தியரையும் தண்டிக்கிறார். கர்த்தர் பெலிஸ்தியருக்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டுகிறார். அவர் கிரேத்தியரை சங்கரிக்கிறார். சமுத்திர கரையில் மீதியானவர்களை அழித்துப்போடுகிறார் (எசே 25:16).

கல்தேயருடைய சேனை பெலிஸ்தியருடைய தேசத்தை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார்கள். கல்தேயர்கள் எருசலேமை அழித்து, காலதாமதமில்லாமல், பெலிஸ்தியருடைய தேசத்தையும் அழித்துப்போடுகிறார்கள். இந்த சம்பவத்தை எரேமியா ஏற்கெனவே தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார் (எரே 47-ஆவது அதிகாரம்).

கர்த்தர் பெலிஸ்தியருக்கு உக்கிரமான தண்டனைகளைக் கொடுக்கிறார். அவர்களை கொடிதாய்ப் பழிவாங்குகிறார். கர்த்தர் அவர்களை பழிவாங்கும்போது, இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை பெலிஸ்தியர்கள் அறிந்துகொள்வார்கள் (எசே 25:17).

26 அதிகாரம்

எசேக்கியேல் தீர்க்கதரிசி தீருவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். அக்காலத்திலே தீரு மிகவும் பிரபல்யமான நகரமாயிருந்தது. தீருவின் ஜனத்தார் பல தேசங்களில் வியாபாரம்பண்ணினார்கள். எசேக்கியேல் தீருவின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

ஏசாயா தீர்க்கதரிசி தீருவின் பாரத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார் (ஏசா 23-ஆவது அதிகாரம்). எரேமியாவும் தீருவைப்பற்றி ஓரளவு சொல்லியிருக்கிறார் (எரே 25:22; 27:3; 47:4).

எசேக்கியேல் தீர்க்கதரிசியோ தீருவின் அழிவைப்பற்றி மூன்று அதிகாரங்களில் முழுவதுமாகச் சொல்லுகிறார். எருசலேம் அழிந்துபோவதைப் பார்த்து தீரு சந்தோஷப்படுகிறது (எசே 26:1,2). தீருவின் அழிவு (எசே 26:4-6; 12-14). கர்த்தர் பாபிலோன் ராஜாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தி தீருவை அழிக்கிறார் (எசே 26:3). பாபிலோன் ராஜாவும் அவனுடைய சேனையும் (எசே 26:7-11). அண்டை தேசத்தாருக்கு ஆச்சரியம் (எசே 26:15-21).

தீருவின் அழிவு
எசே 26:1-14

எசே 26:1. பதினோராம் வருஷம் முதலாந்தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 26:2. மனுபுத்திரனே, தீருவானது எருசலேமுக்கு விரோதமாக, ஆ,ஆ, ஜனசதளங்களின் ஒலி முகவாசலாயிருந்த நகரி இடிக்கப்பட்டதென்றும் என்னிடமாக எல்லாம் புரண்டுவரும், அது பாழாக்கப்பட்டிருக்க நான் நிரப்பப்படுவேன் என்றும் சொல்லுகிறபடியினால்,

எசே 26:3. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: தீருவே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருகிறேன்; சமுத்திரம் தன் அலைகளை எழும்பிவரப்பண்ணுகிற வண்ணமாய் நான் அநேகம் ஜாதிகளை உனக்கு விரோதமாக எழும்பி வரப்பண்ணுவேன்.

எசே 26:4. அவர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப் போடுவார்கள்; நான் அதின் மண்ணும் அதில் இராதபடிக்கு விளக்கிப்போட்டு, அதை வெறும் பாறையாக்கிவிடுவேன்.

எசே 26:5. அது வலைகளை விரிக்கிற இடமாகச் சமுத்திரத்தின் நடுவிலே இருக்கும்; நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; அது ஜாதிகளுக்குக் கொள்ளையாகும்.

எசே 26:6. வெளியில் இருக்கிற அதின் குமாரத்திகளோ பட்டயத்தால் கொன்று போடப்படுவார்கள்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 26:7. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் ராஜாதிராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவை வடக்கேயிருந்து குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் கூட்டத்தோடும் திரளான ஜனத்தோடும் தீருவுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்.

எசே 26:8. அவன் வெளியில் இருக்கிற உன் குமாரத்திகளைப் பட்டயத்தினால் கொன்று, உனக்கு விரோதமாகக் கொத்தளங்களைக் கட்டி உனக்கு விரோதமாக அணைபோட்டு, உனக்கு விரோதமாகக் கேடயங்களை எடுத்து,

எசே 26:9. உன் மதில்களை இடிக்கிற யந்திரங்களை எதிரே வைத்து, தன் கட்டைப் பாறைகளால் உன் கொத்தளங்களை இடித்துப்போடுவான்.

எசே 26:10. அவன் குதிரைகளின் ஏராளத்தினால் தூள் எழும்பி உன்னை மூடும்; இடித்துத் திறப்பாக்கப்பட்ட பட்டணத்தில் பிரவேசிக்கும் வண்ணமாக, அவன் உன் வாசல்களுக்குள் பிரவேசிக்கையில், குதிரைவீரரும் வண்டில்களும் இரதங்களும் இரைகிற சத்தத்தினாலே உன் மதில்கள் அதிரும்.

எசே 26:11. தன் குதிரைகளின் குளம்புகளினால் உன் வீதிகளையெல்லாம் மிதிப்பான்; உன் ஜனத்தைப் பட்டயத்தினால் கொன்றுபோடுவான்; உன் பலமான தூண்கள் தரையில் விழுந்துபோகும்.

எசே 26:12. அவர்கள் உன் ஆஸ்தியைக் கொள்ளையிட்டு, உன் சரக்குகளைச் சூறையாடி, உன் மதில்களை இடித்து, உனக்கு விருப்பமான வீடுகளை அழித்து, உன் கல்லுகளையும் உன் மரங்களையும் உன் மண்ணையும் கடலின் நடுவிலே போட்டுவிடுவார்கள்.

எசே 26:13. உன் பாட்டுகளின் சத்தத்தை ஓயப்பண்ணுவேன்; உன் சுரமண்டலங்களின் சத்தம் இனிக் கேட்கப்படுவதில்லை.

எசே 26:14. உன்னை வெறும் பாறையாக்கி விடுவேன்; நீ வலைகளை விரிக்கிற ஸ்தலமாயிருப்பாய்; இனிக் கட்டப்படாய்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு பதினோராம் வருஷத்தில் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. நேபுகாத்நேச்சார் இந்த வருஷத்தில்தானே எருசலேம் நகரத்தை கைப்பற்றுகிறான். பதினோராம் வருஷம் முதலாம் தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று. ஆனால் இது எந்த மாதத்தின் முதலாம் தேதி என்று சொல்லப்படவில்லை.

கல்தேயருடைய சேனை எருசலேமை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார்கள். நகரத்தை அக்கினிக்கு இரையாக்குகிறார்கள். தேவாலயத்தை இடித்துப்போடுகிறார்கள். எருசலேமின் அழிவைப்பார்த்து தீருவின் மனுஷர் அதிகமாய் சந்தோஷப்படுகிறார்கள்.

"ஆ, ஆ, ஜனசதளங்களின் ஒலிமுகவாசலாயிருந்த நகரி இடிக்கப்பட்டதென்றும் என்னிடமாக எல்லாம் புரண்டுவரும், அது பாழாக்கப்பட்டிருக்க நான் நிரப்பப்படுவேன்" (எசே 26:2) என்று தீருவானது எருசலேமுக்கு விரோதமாக சந்தோஷமாய் சொல்லுகிறது.

எருசலேம் ஜனங்களுக்கு ஒலிமுகவாசலாகயிருந்தது. அங்கே ஏராளமான ஐசுவரியங்களும், அதிகாரங்களும் நிரம்பியிருந்தன. கல்தேயர்கள் எருசலேமை அழித்துப் போட்டதினால், அதன் ஐசுவரியங்களெல்லாம் தீருவின் பக்கமாகத் திரும்பி வரும். அவையெல்லாம் தன்னிடமாகப் புரண்டு வரும் என்றும், தீரு எருசலேமின் ஐசுவரியத்தினால் நிரப்பப்படும் என்றும் தீருவின் மனுஷர் சொல்லுகிறார்கள். எருசலேம் பாழாக்கப்படும். தீருவோ அவர்களுடைய ஐசுவரியத்தினால் நிரப்பப்படும். இதுவே தீருவின் சந்தோஷத்திற்கு காரணம்.

தீருவின் மனுஷர் வியாபாரம் பண்ணுகிறவர்கள். அவர்கள் யாரையும் துன்பப்படுத்தமாட்டார்கள். வியாபாரம் பண்ணுகிறவர்கள் எல்லோரோடும் சமாதானமாயிருந்து, தங்களுடைய வியாபாரத்தின் எல்லைகளை விருத்தி பண்ணுவார்கள்.

தீருவின் மனுஷர் எருசலேமைப் பார்க்கும்போது, அதை தங்களுடைய சத்துருவாகப் பார்க்காமல், தங்களுக்கு போட்டியாகயிருக்கும் வியாபார ஸ்தலமாகவே பார்க்கிறார்கள். எருசலேம் அழிந்துபோகும் போது, தீருவுக்கு ஏற்பட்டிருந்த வியாபார போட்டியும் அழிந்துபோகிறது. எருசலேமுடைய அழிவின் நிமித்தமாய், தீருவுக்கு இனிமேல் போட்டியில்லாத வியாபாரம் உண்டாகும். அவர்களுக்கு மிகுந்த லாபம் கிடைக்கும். எருசலேம் பாழாக்கப்பட்டிருக்கிறது. இதனால் தீருவின் பொக்கிஷம் நிரப்பப்படுகிறது.

எருசலேம் அழிந்துபோனதினால், இனிமேல் எருசலேமுக்கு ஒருவரும் வியாபாரம் பண்ண வரமாட்டார்கள். எருசலேமோடு வியாபாரம் பண்ணியவர்களெல்லோரும் இனிமேல் தீருவுக்கு வருவார்கள். இதனால் தீருவின் வியாபாரம் அதிகரிக்கும். அவர்களுடைய பொருளாதாரம் செழிக்கும். எருசலேமின் அழிவினால் தீரு உயர எழும்புகிறது.

மற்றவர்களுடைய அழிவைப் பார்த்து நாம் சந்தோஷப்படக்கூடாது. மற்றவர்களுடைய அழிவின்மீது நம்முடைய வாழ்க்கையை ஆடம்பரமாய்க் கட்டியெழுப்பக் கூடாது. பிறரை அழித்து செழிப்பாய் வாழ நினைப்பது துன்மார்க்கனுடைய திட்டம். கர்த்தர் துன்மார்க்கரின் சதிமோசங்களுக்கு துணைபோகமாட்டார். மற்றவர்கள் வேதனைப்படும்போது நாமும் அவர்களுடைய வேதனைகளில் பங்குபெறவேண்டும். பிறருடைய துன்பங்களை நாமும் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

எருசலேம் அழிந்துபோனதைப் பார்த்து, தீரு சந்தோஷப்பட்டதினால் கர்த்தர் தீருவுக்கு விரோதமாக வருகிறார். "தீருவே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருகிறேன்; சமுத்திரம் தன் அலைகளை எழும்பிவரப்பண்ணுகிற வண்ணமாய் நான் அநேகம் ஜாதிகளை உனக்கு விரோதமாக எழும்பி வரப்பண்ணுவேன். அவர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப்போடுவார்கள்; நான் அதின் மண்ணும் அதில் இராதபடிக்கு விளக்கிப்போட்டு, அதை வெறும் பாறையாக்கிவிடுவேன்" *(எசே 26:3,4)* என்று கர்த்தர் தீருவுக்கு விரோதமாக தம்முடைய கோபமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் தீருவுக்கு விரோதமாக வருவார்கள். அவர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப்போடுவார்கள்; "நான் அதின் மண்ணும் அதில் இராதபடிக்கு விளக்கிப்போட்டு, அதை வெறும் பாறையாக்கிவிடுவேன்" *(எசே 26:4)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீரு வலைகளை விரிக்கிற இடமாகச் சமுத்திரத்தின் நடுவிலே இருக்கும்; அது ஜாதிகளுக்குக் கொள்ளையாகும் *(எசே 26:5)*. தீருவிலே இருக்கிற அதின் குமாரத்திகளை கல்தேயர்கள் தங்கள் பட்டயத்தால் கொன்று போடுவார்கள். தீருவுக்கு பேரழிவு வரும். அவர்கள் எருசலேமின் அழிவைப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள். இப்போதோ தீருவுக்கு அழிவு வந்திருக்கிறது. அவர்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். தங்கள் வேதனைகளுக்கு மத்தியில், இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை தீருவின் மனுஷர் அறிந்துகொள்கிறார்கள் *(எசே 26:6)*.

தீரு ஐசுவரியம் மிகுந்த நகரம். அங்கே எப்போதும் சந்தோஷம் மிகுந்திருக்கும். எருசலேம் அழிந்துபோகும்போது, தீருவின் மனுஷர் எருசலேமுக்காகவும், அதின் குடிகளுக்காகவும் வருத்தப்பட்டிருந்தால், கர்த்தர் தீருவை அழித்திருக்கமாட்டார். தீரு எப்போதும் போல சந்தோஷமான நகரமாகவும், ஐசுவரியம் மிகுந்த நகரமாகவும் இருந்திருக்கும். ஆனால் தீருவோ எருசலேமின் அழிவைப் பார்த்து சந்தோஷப்பட்டது. இதனால் கர்த்தர் தீருவுக்கு விரோதமாக வருகிறார்.

தீருவை அழிப்பதற்கு கர்த்தர் பாபிலோன் தேசத்தை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். அவர் ராஜாதி ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவை தீருவுக்கு விரோதமாக அனுப்புகிறார். அவன் வடக்கேயிருந்து குதிரைகளோடும், இரதங்களோடும், குதிரைவீரரோடும் கூட்டத்தோடும், திரளான ஜனத்தோடும் தீருவுக்கு விரோதமாக வருவான் *(எசே 26:7)*.

பாபிலோன் தேசத்தாரோடு, பல தேசத்தார் இராணுவ உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். கல்தேயருடைய சேனை ஒரு தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, அவர்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிற மற்ற தேசத்தாரும், யுத்தம் பண்ணப்போவார்கள். எல்லா தேசத்தாரும் ஒன்றாய்ச் சேர்ந்திருப்பதினால், கல்தேயரின் சேனை பெரிதாயும், பெலமுள்ளதாயும் இருக்கும். இந்த தேசங்களுக்கெல்லாம் பாபிலோன் தேசமே தலைமை தேசமாயிருக்கிறது. அதன் ராஜாக்களுக்கெல்லாம் நேபுகாத்நேச்சாரே ராஜாதி ராஜாவாயிருக்கிறான்.

பாபிலோன் தேசத்திலே ஏராளமானோர் சிறைப்பட்டிருக்கிறார்கள். பல ராஜாக்கள் நேபுகாத்நேச்சாருக்கு கப்பம் கட்டுகிறார்கள். அவர்கள் எல்லோருக்குமே நேபுகாத்நேச்சார் ராஜாதி ராஜாவாயிருக்கிறான்.

"ராஜாவே, நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர்; பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார். சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே" (தானி 2:37,38).

நேபுகாத்நேச்சார் வடக்கேயிருந்து தீருவுக்கு விரோதமாக வருவான். அவன் குதிரைகளோடும், இரதங்களோடும், குதிரைவீரரோடும், திரளான ஜனத்தோடும் தீருவுக்கு விரோதமாக வருவான். கர்த்தரே அவனை தீருவுக்கு விரோதமாக வரப்பண்ணுகிறார்.

நேபுகாத்நேச்சார், "வெளியில் இருக்கிற உன் குமாரத்திகளைப் பட்டயத்தினால் கொன்று, உனக்கு விரோதமாகக் கொத்தளங்களைக் கட்டி உனக்கு விரோதமாக அணைபோட்டு, உனக்கு விரோதமாகக் கேடயங்களை எடுத்து, உன் மதில்களை இடிக்கிற யந்திரங்களை எதிரே வைத்து, தன் கட்டைப் பாரைகளால் உன் கொத்தளங்களை இடித்துப்போடுவான்" (எசே 26:8,9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நேபுகாத்நேச்சார் ஏராளமான குதிரைகளோடு வருகிறான். அதனால் எழும்பும் தூள் தீரு தேசத்தையே மூடிப்போடும். அவன் இடித்து திறப்பாக்கப்பட்ட பட்டணத்தில் பிரவேசிக்கும் வண்ணமாக, தீருவின் வாசல்களுக்குள் பிரவேசிப்பான். அப்பொழுது குதிரைவீரரும், வண்டில்களும், இரதங்களும் இரைகிற சத்தத்தினால் தீருவின் மதில்கள் அதிரும் (எசே 26:10).

நேபுகாத்நேச்சார் தீருவுக்கு விரோதமாக நீண்டகாலமாய் முற்றிக்கைபோட்டிருப்பான். முடிவிலே நேபுகாத்நேச்சாருக்கு வெற்றி கிடைக்கும். தீருவின் மதிலில் திறப்பு உண்டாகும். அவன் தன் குதிரைகளின் குளம்புகளினால் தீருவின் வீதிகளையெல்லாம் மிதிப்பான்; நேபுகாத்நேச்சார் தீருவின் ஜனத்தைப் பட்டயத்தினால் கொன்றுபோடுவான்; தீருவின் பலமான தூண்கள் தரையில் விழுந்துபோகும் (எசே 26:11).

நேபுகாத்நேச்சார் நீண்டகாலமாக தீருவுக்கு விரோதமாக முற்றிக்கைபோட்டதினால், அவன் மூர்க்க கோபத்தோடு தீருவை அழித்துப்போடுவான். தீருவின் ஜனங்களை பட்டயத்தினால் சங்காரம்பண்ணுவான்.

பாபிலோன் ராஜாவும் அவனுடைய சேனையிலுள்ளவர்களும், தீருவின் ஆஸ்தியைக் கொள்ளையிடுவார்கள். தீருவின் சரக்குகளைச் சூறையாடி, அவர்களுடைய மதில்களை இடித்து, அவர்களுக்கு விருப்பமான வீடுகளை அழிப்பார்கள். தீருவின் கல்லுகளையும், அவர்களுடைய மரங்களையும், மண்ணையும் கடலின் நடுவிலே போட்டுவிடுவார்கள் (எசே 26:12).

தீரு எப்போதுமே சந்தோஷமாயிருக்கிற தேசம். கர்த்தர் அதன் சந்தோஷத்தை ஒழியப்பண்ணுவார். அவர்களுடைய பாட்டுகளின் சத்தத்தை ஓயப்பண்ணுவார். தீருவிலே சுரமண்டலங்களின் சத்தம் இனிமேல் கேட்கப்படுவதில்லை. கல்தேயர்கள் எருசலேமை நிலத்தை உழுவதுபோல உழுது அழித்துப்போட்டார்கள். தீருவின் அழிவு அதைவிட மிகவும் மோசமாயிருக்கிறது. கல்தேயர்கள் தீருவிலுள்ள மண்ணைக்கூட கடலின் நடுவிலே போட்டுவிடுகிறார்கள்.

தீரு தேசத்தில் உழுவதற்குகூட மண்ணில்லை. கர்த்தர் அந்த தேசத்தை வெறும் பாறையாக்கிவிடுகிறார். அந்த தேசம் வலைகளை விரிக்கிற ஸ்தலமாகயிருக்கும். தீரு மறுபடியும் கட்டியெழுப்பப்படாது என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசே 26:14).

கல்தேயர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப்போடுவார்கள்; கர்த்தர் அதின் மண்ணும் அதில் இராதபடிக்கு விளக்கிப்போட்டு, அதை வெறும் பாறையாக்கிவிடுவார் (எசே 26:4). தீருவின் தரையிலே மண்ணே இருக்காது. அது வலைகளை விரிக்கிற வெறும் பாறையாகயிருக்கும். மீன் பிடிக்கிறவர்கள் தீருவின் பாறையிலே தங்கள் வலைகளை விரித்து உலர்த்துவார்கள்.

கடல்ரசரின் புலம்பல் எசே 26:15-21

எசே 26:15. தீருவுக்குக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: காயம்பட்டவர்கள் அலறும்போதும், உன் நடுவில் சங்காரம் நடக்கும்போதும், நீ விழுகிற சத்தத்தினால் தீவுகள் அதிராதோ?

எசே 26:16. கடல்ரசர் எல்லாரும் தங்கள் சிங்காசனங்களைவிட்டு இறங்கி; தங்கள் சால்வைகளைக் கழற்றி, தங்கள் சித்திரத்தையலாடைகளை உரிந்துபோடுவார்கள்; நடுக்கமே அவர்கள் உடையாகும்; தரையிலே உட்கார்ந்து, நிமிஷந்தோறும் தத்தளித்து, உன்னிமித்தம் பிரமிப்பார்கள்.

எசே 26:17. அவர்கள் உன்னிமித்தம் புலம்பி, உன்னைக் குறித்து: கடல் சஞ்சாரிகள் குடியிருந்த புகழ்பெற்ற நகரியே, ஐயோ! உன்னில் தங்கினவர்களுக்கெல்லாம் பயமுண்டாக்கின உன் குடிகளோடுங்கூடச் சமுத்திரத்திலே பலத்திருந்த நீ அழிந்துபோனாயோ!

எசே 26:18. நீ விழும் நாளில் தீவுகள் தத்தளிக்கும்; நீ அகன்றுபோகும்போது சமுத்திரத்திலுள்ள தீவுகள் கலங்கும் என்பார்கள்.

எசே 26:19. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் உன்னைக் குடியில்லாத நகரங்களைப் போலப் பாழான நகரமாக்கும்போதும், மிகுந்த தண்ணீர்கள் உன்னை மூடத்தக்கதாய் நான் உன்மேல் சமுத்திரத்தை வரப்பண்ணும்போது,

எசே 26:20. பூர்வகாலத்து ஜனத்தண்டைக்குக் குழியில் இறங்குகிறவர்களோடே நான் உன்னை இறங்கப்பண்ணுவேன்; நீ குடியேறாதிருக்கும்படி பூர்வகால முதற்கொண்டு பாழாயிருக்கிற பூமியின் தாழ்விடங்களிலே குழியில் இறங்குகிறவர்களோடேகூட நான் உன்னைத் தங்கியிருக்கப்பண்ணுவேன்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலோ மகிமை விளங்கச் செய்வேன்.

எசே 26:21. உன்னை மகா பயங்கரமாக வைப்பேன்; இனி நீ இருக்கமாட்டாய்; நீ தேடப்பட்டாலும் இனி என்றைக்கும் காணப்படமாட்டாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்.

தீரு ஒரு காலத்தில் மிகப்பெரிய தேசமாயிருந்தது. ஆனால் இப்போதோ அது ஒன்றுமில்லாமல் வெறுமையாயிருக்கிறது. தீரு ஒரு காலத்தில் கடல் சஞ்சாரிகள் குடியிருந்த புகழ் பெற்ற நகரமாயிருந்தது. தன்னுடைய தேசத்தில் தங்கினவர்கள் எல்லோருக்கும் தீருவின் தேசத்தார் பயமுண்டாக்கினார்கள்.

தீருவுக்கு முன்பாக உட்காருவதற்குகூட மற்ற தேசத்தார் பயப்படுவார்கள். கடலரசர் எல்லாரும் தங்கள் சிங்காசனங்களைவிட்டு இறங்கி; தங்கள் சால்வைகளைக் கழற்றி, தங்கள் சித்திரத்தையலாடைகளை உரிந்து போடுவார்கள்; நடுக்கமே அவர்கள் உடையாகும்; தரையிலே உட்கார்ந்து, நிமிஷந்தோறும் தத்தளித்து, தீருவினிமித்தம் பிரமிப்பார்கள் (எசே 26:16).

கர்த்தருடைய கோபம் தீருவின்மீது வந்திருக்கிறது. கல்தேயர்கள் தீருவின் குடிகளை தங்கள் பட்டயங்களால் வெட்டிப்போடுகிறார்கள். காயம்பட்டவர்கள் அலறுகிறார்கள். அவர்கள் நடுவிலே சங்காரம் நடைபெறுகிறது. தீருவின் ஜனத்தார் பட்டயத்தினால் வெட்டப்பட்டு, செத்து விழுகிற சத்தத்தினால் தீவுகளெல்லாம் அதிருகிறது.

தீருவின் அழிவைப் பார்த்து கடலரசர் எல்லோரும் அழுது புலம்புகிறார்கள். அவர்கள் தீருவைக் குறித்து, "கடல் சஞ்சாரிகள் குடியிருந்த புகழ்பெற்ற நகரியே, ஐயோ! உன்னில் தங்கினவர்களுக்கெல்லாம் பயமுண்டாக்கின உன் குடிகளோடுங்கூடச் சமுத்திரத்திலே பலத்திருந்த நீ அழிந்துபோனாயோ! நீ விழும் நாளில் தீவுகள் தத்தளிக்கும்; நீ அகன்றுபோகும்போது சமுத்திரத்திலுள்ள தீவுகள் கலங்கும்" (எசே 26:17,18) என்று சொல்லுகிறார்கள்.

தீரு முற்றிலுமாய் அழிந்துபோயிற்று. கர்த்தர் தீருவை குடியில்லாத நகரங்களைப் போலாக்குவார். தீருவின் நகரங்களெல்லாம் பாழான நகரமாகும். கர்த்தர் தீருவை மூடிப்போடுவார். மிகுந்த தண்ணீர் அதன்மீது வரும். கர்த்தர் தீருவின்மீது சமுத்திரத்தை வரப்பண்ணுவார் (எசே 26:19).

கர்த்தர் தீருவை அழிக்கும்போது, அந்த தேசம் காணாமல் போய்விடும். கடலரசர் எல்லோரும் தீரு எங்கே இருக்கிறது என்று தேடிப் பார்ப்பார்கள். அவர்களால் தீருவைக் கண்டுபிடிக்க முடியாது. அவர்களுக்கு ஏமாற்றமே உண்டாகும். கர்த்தர் தீருவின் ஜனங்களை, பூர்வகாலத்து ஜனத்தண்டைக்கு குழியில் இறங்குகிறவர்களோடே இறங்கப்பண்ணுவார். கர்த்தர் அவர்களை தாழ்விடங்களில் தங்கியிருக்க பண்ணுவார். கர்த்தர் தீருவை மகாபயங்கரமாக வைப்பார். "இனி நீ இருக்கமாட்டாய்" என்றும், "நீ தேடப்பட்டாலும் இனி என்றைக்கும் காணப்படமாட்டாய்" (எசே 26:21) என்றும் கர்த்தர் தீருவின் அழிவைப்பற்றிச் சொல்லுகிறார்.

தீருவின் நடுவில் சங்காரம் நடக்கும். கல்தேயர்கள் தீருவின் ஜனத்தாரை பட்டயத்தினால் வெட்டிப்போடுவார்கள். காயம்பட்டவர்கள் அலறும்போதும், அவர்கள் விழும்போதும், அந்த சத்தம் தீருவை அதிரச்செய்யும். தீருவில் உண்டாகிற சத்தத்தைக் கேட்டு, மற்ற தீவுகளும் அதிரும்.

தீருவின் அழிவைப் பார்த்து கடலரசர் எல்லோரும் நடுங்குவார்கள். ஐசுவரியமுள்ள வியாபாரிகள் பிரபுக்களைப்போல சௌகரியமாயிருப்பார்கள். "கிரீடம் தரிப்பிக்கும் தீருவுக்கு விரோதமாக இதை யோசித்துத் தீர்மானித்தவர் யார்? அதின் வர்த்தகர் பிரபுக்களும், அதின் வியாபாரிகள் பூமியின் கனவான்களுமாமே" (ஏசா 23:8).

கனவான்களுக்கு சொந்தமாக கப்பல்கள் இருக்கும். தங்கள் கப்பல்களை கடலிலே செலுத்துவதற்கு அவர்கள் மாலுமிகளை நியமித்திருப்பார்கள். அவர்கள் எல்லோருமே தீருவின் அழிவுக்காக அழுது புலம்புவார்கள். எருசலேம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். எருசலேம் அழிந்தபோது ஒருவரும் அதற்காக அழவில்லை. ஒருவரும் புலம்பவில்லை.

"வழியில் நடந்துபோகிற சகல ஜனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப்பாருங்கள்" (புல 1:12).

ஆனால் தீரு அழிந்தபோதோ, அதற்காக எல்லோரும் அழுது புலம்புகிறார்கள். தீரு மிகப்பெரிய வியாபார நகரம். எல்லா தேசத்தாரும் தீருவுக்கு வந்து வியாபாரம் பண்ணுகிறார்கள். தீருவின் மூலமாய் எல்லோருக்கும் லாபம் கிடைக்கிறது. அவர்களுடைய பொருளாதாரம் செழிப்படைகிறது. தீரு அழிந்துபோனதினால் அவர்களுடைய லாபமும் அழிந்துபோகிறது. இதனால் எல்லா தேசத்தாரும் தீருவின் நிமித்தமாக அழுது புலம்புகிறார்கள்.

தீரு அழிந்துபோகும். அது திரும்பவும் கட்டப்படாது. தீருவைத் தேடினாலும், அது இனிமேல் என்றென்றைக்கும் இருக்காது. கர்த்தர் தீருவை பூமியின் தாழ்விடங்களில், குழியில் இறங்குகிறவர்களோடேகூட தங்கியிருக்கப்பண்ணுகிறார். அவர்கள் மரித்துப்போனவர்களுடைய தேசத்திலே, மரித்தவர்களாயிருப்பார்கள். மறுபடியும் உயிர்பிழைக்கமாட்டார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரோ மறுபடியும் பிழைப்பார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். இஸ்ரவேல் தேசமும் யூதாதேசமும் இப்போது அழிவிலிருந்தாலும், அது சீக்கிரத்தில் திரும்பவும் கட்டப்படும். இஸ்ரவேல் தேசம் ஜீவனுள்ளோருடைய தேசம். கர்த்தர் தம்முடைய தேசத்திலே, தம்முடைய மகிமையை விளங்கச்செய்வார் (எசே 26:20).

பரிசுத்தமான ஆத்துமாக்கள், ஜீவனுள்ள ஆத்துமாக்களாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்வார். அவர்களை திரும்பவும் கட்டுவார். அவர்கள் மறுபடியும் செழித்திருப்பார்கள்.

27 அதிகாரம்

தீருவின் ஐசுவரியமும், ஆடம்பரமும், பெருமையும், புகழும் (எசே 27:1-25). தீருவின் அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம் (எசே 27:26-36). ஐசுவரியமும் உலகசந்தோஷமும் மாயையானது. அது ஒருபோதும் நிலைப்பதில்லை.

தீருவின் பூரண வடிவம் எசே 27:1-25

எசே 27:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 27:2. மனுபுத்திரனாகிய நீ இப்போது தீருவின்பேரிலே புலம்பி,

எசே 27:3. சமுத்திரக் கரைதுறையிலே குடியிருந்து, அநேகம் தீவுகளின் ஜனங்களோடே வியாபாரம்பண்ணுகிற தீருவை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், தீருவை, நீ உன்னைப் பூரண சௌந்தரியவதி என்கிறாய்.

எசே 27:4. கடல்களின் நடுமையத்திலே உன் தாபரம் இருக்கிறது; உன்னைக் கட்டினவர்கள் உன்னைப் பூரணவடிவாய்க் கட்டினார்கள்.

எசே 27:5. சேனீரிலிருந்துவந்த தேவதாரு மரத்தால் உன் கப்பற் பலகைகளைச் செய்தார்கள்; பாய்மரங்களைச் செய்யும்படிக்கு லீபனோனிலிருந்து கேதுரு மரங்களைக் கொண்டுவந்தார்கள்.

எசே 27:6. பாசானின் கர்வாலி மரங்களினாலே உன் துடுப்புகளைச் செய்தார்கள்; கித்தீம் தீவுகளிலிருந்துவந்த ஆஷூர் மரத்தால் உன் வாரிபலகைகளைச் செய்து, அதிலே யானைத்தந்தம் அழுத்தியிருந்தார்கள்.

எசே 27:7. எகிப்திலிருந்து வந்த சித்திரத்தையலுள்ள சணல்நூல் புடவை நீ விரித்த பாயாயிருந்தது; எலீசா தீவுகளின் இளநீலமும் இரத்தாம்பரமும் உன் விதானமாயிருந்தது.

எசே 27:8. சீதோன் அர்வாத் என்னும் பட்டணங்களின் குடிகள் உனக்குத் தண்டு வலிக்கிறவர்களாயிருந்தார்கள். தீருவே, உன்னிடத்திலிருந்த உன் சாஸ்திரிகள் உன் மாலுமிகளாயிருந்தார்கள்.

எசே 27:9. கேபாரின் முதியோரும் அதின் சாஸ்திரிகளும் உன்னில் கம்பத்துப் பார்க்கிறவர்களாயிருந்தார்கள்; சமுத்திரத்தின் சகல கப்பல்களும் அவைகளிலுள்ள கப்பற்காரரும் உன்னோடே தொழில்துறை வியாபாரம் பண்ணுகிறதற்காக உன்னிடத்தில் இருந்தார்கள்.

எசே 27:10. பெர்சியரும், லூதியரும், பூத்தியரும் உன் இராணுவத்தில் யுத்தவீரராயிருந்து உனக்குள் கேடகமும் தலைச்சீராவும் தூக்கிவைத்து, உன்னை அலங்கரித்தார்கள்.

எசே 27:11. அர்வாத் புத்திரரும் உன் இராணுவ மனுஷரும் உன் மதில்கள்மேல் சுற்றிலும், கம்மாத்தியர் உன் கொத்தளங்களிலும் இருந்தார்கள்; இவர்கள் உன் மதில்கள்மேல் சுற்றிலும் தங்கள் பரிசைகளைத் தூக்கிவைத்து, உன் வடிவத்தைப் பூரணப்படுத்தினார்கள்.

எசே 27:12. சகலவித பொருள்களின் திரளினாலும் தர்ஷீஸ் ஊரார் உன்னோடே வியாபாரம் பண்ணினார்கள்; வெள்ளியையும் இரும்பையும் தகரத்தையும் ஈயத்தையும் உன் சந்தைகளில் விற்க வந்தார்கள்.

எசே 27:13. யாவான், தூபால், மேசேக் என்னும் ஜாதியார் உன் வியாபாரிகளாயிருந்து, மனுஷர்களையும் வெண்கலப் பாத்திரங்களையும் உன் தொழில்துறைக்குக் கொண்டுவந்தார்கள்.

எசே 27:14. தொகர்மா வம்சத்தார் குதிரைகளையும் குதிரைவீரரையும் கோவேறு கழுதைகளையும் உன் சந்தைகளுக்குக் கொண்டுவந்தார்கள்.

எசே 27:15. தேதான் புத்திரர் உன் வியாபாரிகளாயிருந்தார்கள்; அநேகம் தீவுகளின் வர்த்தகம் உன் வசமாகச் சேர்ந்தது; யானைத்தந்தங்களையும் கருங்காலி மரங்களையும் அவைகளுக்குப் பதிலாகக் கொண்டுவந்தார்கள்.

எசே 27:16. சீரியர் உன் வேலைப்பாடான பற்பல பொருள்களினிமித்தம் உன்னோடே வியாபாரம்பண்ணி, மரகதங்களையும், இரத்தாம்பரங்களையும், சித்திரத்தையலாடைகளையும், உயர்ந்த வஸ்திரங்களையும், பவளங்களையும், பளிங்கையும் உன் சந்தைகளில் விற்கவந்தார்கள்.

எசே 27:17. யூதரும் இஸ்ரவேல் தேசத்தாரும் உன்னோடே வியாபாரம் பண்ணி, மின்னீத், பன்னாக் என்கிற ஊர்களின் கோதுமையையும், தேனையும், எண்ணெயையும், பிசின்தைலத்தையும் உன் தொழில்துறைக்குக் கொண்டுவந்தார்கள்.

எசே 27:18. தமஸ்கு உன் வேலைப்பாடான பற்பல பொருள்களினிமித்தமும், சகலவிதப் பொருள்களின் திரட்சியினிமித்தமும் உன்னோடே வர்த்தகம்பண்ணி, கெல்போனின் திராட்சரசத்தையும் வெண்மையான ஆட்டுமயிரையும் உனக்கு விற்றார்கள்.

எசே 27:19. தாண் நாட்டாரும், போக்கும்வரத்துமான யாவானரும் துலக்கப்பட்ட இரும்பையும் இலவங்கத்தையும் வசம்பையும் உன் சந்தைகளில் கொண்டு வந்து உன் தொழில்துறையில் விற்றார்கள்.

எசே 27:20. இரதங்களுக்குப் போடுகிற மேன்மையான இரத்தினக் கம்பளங்களை தேதானின் மனுஷர் கொண்டுவந்து, உன்னோடே வியாபாரம்பண்ணினார்கள்.

எசே 27:21. அரபியரும், கேதாரின் சகல பிரபுக்களும் உனக்கு வாடிக்கையான வர்த்தகராகி, ஆட்டுக்குட்டிகளையும் ஆட்டுக்கடாக்களையும் வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டு வந்து, உன்னோடே வியாபாரம் பண்ணினார்கள்.

எசே 27:22. சேபா, ராமா பட்டணங்களின் வியாபாரிகள் உன்னோடே வர்த்தகம்பண்ணி, மேல்தரமான சகலவித சம்பாரங்களையும், சகலவித இரத்தினக்கற்களையும், பொன்னையும் உன் சந்தைகளில் கொண்டுவந்தார்கள்.

எசே 27:23. ஆரான், கன்னே, ஏதேன் என்னும் பட்டணத்தாரும், சேபாவின் வியாபாரிகளும், அசீரியரும், கில்மாத் பட்டணத்தாரும் உன்னோடே வியாபாரம்பண்ணினார்கள்.

எசே 27:24. இவர்கள் சகலவித உயர்ந்த சரக்குகளையும், இளநீலப் பட்டுகளும் விசித்திரத்தையலாடைகளும் அடங்கிய புடவைக்கட்டுகளையும், விலை உயர்ந்த வஸ்திரங்கள் வைக்கப்பட்டு, கயிறுகளால் கட்டியிருக்கும் கேதுருமரப்பெட்டிகளையும் கொண்டுவந்து, உன்னோடே வியாபாரம்பண்ணினார்கள்.

எசே 27:25. உன் தொழில்துறையில் தர்ஷீசின் கப்பலாட்கள் உன்னைப் போற்றிப் பாடினார்கள்; நீ சமுத்திரத்தின் நடுவிலே உன்னைப் பூரணப்படுத்தி, உன்னை மிகவும் மகிமைப்படுத்தினாய்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி தீருவின் பேரிலே புலம்பவேண்டும். தீரு இப்போது தன்னுடைய ஐசுவரியத்தின் மேன்மையிலிருக்கிறது. அது அழிந்துபோவதற்கான அறிகுறியோ அல்லது தாழ்ந்துபோவதற்கான அறிகுறியோ காணப்படவில்லை. தீருவும், தீருவின் தேசத்தாரும் செழித்திருக்கிறார்கள். ஆனாலும் எசேக்கியேல் இப்போது தீருவின் பேரிலே புலம்பவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே 27:2).

தீருவின் ஐசுவரியம் நிலைத்திருக்காது. அவர்களுடைய ஐசுவரியமும், மேன்மையும், ஆடம்பரமும் அவர்களுக்கு கண்ணியாகயிருக்கிறது. தீரு தனக்கு மறைவாக வைக்கப்பட்டிருக்கிற கண்ணியிலே சிக்கிக்கொள்ளும். தீருவின் அழிவு மிகவும் மோசமாயிருக்கும்.

கர்த்தர் தீருவைக் குறித்து தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய நாமத்தினாலே, தீருவின் பேரிலே புலம்பவேண்டும். தீரு தன்னை பூரண சௌந்தரியவதி என்று சொல்லுகிறது (எசே 27:3) இந்த வார்த்தைக்கு தீருவே, முழுஉலகத்திற்கும் அழகுள்ளதாயிருக்கிறது என்று பொருள். தீருவே உலக அழகி. தீரு நேர்த்தியாய்க் கட்டப்பட்டிருக்கிற நகரம். தீருவிலே ஐசுவரிமும் வியாபாரமும் நிரம்பியிருக்கிறது.

தீரு அநேகந்தீவுகளின் ஜனங்களோடே வியாபாரம்பண்ணுகிறது. அது சமுத்திர கரை துறையிலே குடியிருக்கிறது. இதனால் தீருவிலே வியாபாரமும், பொருளாதார வரவு செலவுகளும் அதிகமாயிருக்கிறது. தீரு தன்னுடைய ஐசுவரியத்தைக் குறித்தும், ஆடம்பரத்தைக் குறித்தும் பெருமைப்படுகிறது. இதனால் அது தன்னை பூரண சௌந்தரியவதி என்று சொல்லிக்கொள்கிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசி தீருவின் ஆடம்பரத்தையும், ஐசுவரித்தையும் கடிந்துகொள்ளவேண்டும். அவர்களுடைய ஆடம்பரத்தினால், தீருவுக்கு பெருமை உண்டாயிற்று. மத்தியதரைக்கடலின் கிழக்கு பகுதியில் தீரு பட்டணம் இருக்கிறது. எல்லா தேசத்தாரும் தீருவுக்கு வந்து போகும் வண்ணமாக, இது மிகவும் முக்கியமான இடத்தில் அமைந்திருக்கிறது. தீரு அநேகந்தீவுகளின் ஜனங்களோடே வியாபாரம் பண்ணுவதற்கு ஏதுவாயிருக்கிறது.

தீரு கிரேக்க நாட்டிற்கும் ஆசியா நாட்டிற்கும் இடையிலே அமைந்திருக்கிறது. உலகின் பல பாகங்களிலிருந்தும், கடல் வணிகம் செய்கிறவர்கள் தீருவுக்கு வருவார்கள். தீருவின் தாபரம் கடல்களின் நடுமையத்திலிருக்கிறது. தீருவைக் கட்டினவர்கள் அதை பூரண வடிவாய்க் கட்டினார்கள் (எசே 27:4).

"மகிமையுள்ள கர்த்தர் அங்கே நமக்கு மகா விசாலமான நதிகளும் ஆறுகளுமுள்ள ஸ்தலம்போலிருப்பார்; வலிக்கிற படவு அங்கே ஓடுவதும் இல்லை; பெரிய கப்பல் அங்கே கடந்துவருவதும் இல்லை" (ஏசா 33:21).

தீருவுக்கு பல தேசங்களிலிருந்தும் பலவிதமான பொருட்கள் வரும். அக்காலத்தில் தீருவின் கப்பல்கள் மிகவும் பிரசித்திப் பெற்றவை. சேனீரிலிருந்துவந்த தேவதாரு மரத்தால் தீருவின் கப்பற் பலகைகளைச் செய்தார்கள்; பாய்மரங்களைச் செய்யும்படிக்கு லீபனோனிலிருந்து கேதுரு மரங்களைக் கொண்டுவந்தார்கள். பாசானின் கர்வாலி மரங்களினாலே தீருவின் துடுப்புகளைச் செய்தார்கள்; கித்தீம் தீவுகளிலிருந்துவந்த ஆஷூர் மரத்தால் தீருவின் வாரிபலகைகளைச் செய்து, அதிலே யானைத்தந்தம் அழுத்தியிருந்தார்கள் (எசே 27:5,6).

தீருவுக்கு எகிப்து தேசத்திலிருந்து சித்திர தையலுள்ள சணல்நூல் புடவை வருகிறது. இதை தீருவின் ஜனத்தார் பாயாக விரிக்கிறார்கள். எலிசா தீவுகளின் இளநீலமும், இரத்தாம்பரமும் தீருவின் விதானமாயிருக்கிறது (எசே 27:7). அக்காலத்தில் இளநீலமும் இரத்தம்பாரமும் அதிக விலை மதிப்புள்ளவை. தீருவிலே சகலமும் ஆடம்பரமாயிருக்கிறது.

தீரு இளநீலத்திற்கு பெயர் பெற்ற நகரம். அக்காலத்தில் இளநீலத்தை, "தீருவின் நீலம்" என்றும் சொல்லுவார்கள். தீருவிலே கட்டப்படும் கப்பல்களில் இளநீலமும், இரத்தாம்பரமும் அதிகமாய்ப் பயன்படுத்தப்படுகிறது. சீதோன் அர்வாத் என்னும் பட்டணங்களின் குடிகள் அவர்களுக்குத் தண்டு வலிக்கிறவர்களாயிருக்கிறார்கள். தீருவின் சாஸ்திரிகள் அவர்களுக்கு மாலுமிகளாயிருக்கிறார்கள் (எசே 27:8).

கேபாரின் முதியோரும் அதின் சாஸ்திரிகளும் தீருவில் கம்பத்துப் பார்க்கிறவர்களாயிருக்கிறார்கள்; சமுத்திரத்தின் சகல கப்பல்களும் அவைகளிலுள்ள கப்பற்காரரும் தீருவோடே தொழில்துறை வியாபாரம் பண்ணுகிறதற்காக அவர்களிடத்தில் இருக்கிறார்கள் (எசே 27:9).

பெர்சியரும், லூதியரும், பூத்தியரும் தீருவின் இராணுவத்தில் யுத்தவீரராயிருக்கிறார்கள் அவர்கள் தீருவுக்குள் கேடகமும் தலைச்சீராவும் தூக்கிவைத்து, அவர்களை அலங்கரிக்கிறார்கள். அர்வாத் புத்திரரும் தீருவின் இராணுவ மனுஷரும் அவர்களுடைய மதில்கள்மேல் சுற்றிலும், கம்மாத்தியர் தீருவின் கொத்தளங்களிலும் இருக்கிறார்கள்; இவர்கள் தீருவின் மதில்கள்மேல் சுற்றிலும் தங்கள் பரிசைகளைத் தூக்கிவைத்து, தீருவின் வடிவத்தைப் பூரணப்படுத்துகிறார்கள் (எசே 27:10,11).

இஸ்ரவேல் தேசம் தீருவுக்கு அருகாமையிலுள்ளது. "தன் தகப்பனாகிய தாவீது இஸ்ரவேல் தேசத்திலுண்டான மறுஜாதியாரையெல்லாம் எண்ணித் தொகையிட்டது போல, சாலொமோனும் அவர்களை எண்ணினான்; அவர்கள் லட்சத்துஐம்பத்துமூவாயிரத்து அறுநூறுபேராயிருந்தார்கள். இவர்களில் அவன் எழுபதினாயிரம் பேரைச் சுமைசுமக்கவும், எண்பதினாயிரம்பேரை மலையில் மரம்வெட்டவும், மூவாயிரத்து அறுநூறுபேரை ஜனத்தின் வேலையை விசாரிக்கும் தலைவராயிருக்கவும் வைத்தான்" (2நாளா 2:17,18).

இஸ்ரவேல் ஜனத்தார் தீருவிலே அடிமை வேலை செய்யவில்லை. தீரு இஸ்ரவேல் தேசத்தாரோடு அதிகமாய் வியாபாரம் செய்தார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் தேக்கு மரங்களை கிரயத்திற்கு வாங்கினார்கள். ஆனாலும் தீருவின் வியாபாரிகளால், இஸ்ரவேல் ஜனத்தை கிரயத்திற்கு வாங்கமுடியவில்லை.

எசேக்கியேல் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். அவருக்கு தீருவைப்பற்றியும், தீருவின் வியாபாரத்தைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. எசேக்கியேல் ஒரு ஆசாரியர். அவர் யூதாதேசத்திலிருந்து பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு வரப்பட்டிருக்கிறார். எருசலேம் தீருவிலிருந்து வெகுதூரத்திலுள்ளது. எசேக்கியேல் பாபிலோன் தேசத்தில் இப்போது பதினொரு வருஷமாய் சிறையிலிருக்கிறார். இவருக்கு தீருவின் அழகைப்பற்றியும், ஆடம்பரத்தைப்பற்றியும் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனாலும் எசேக்கியேல் தீருவின் பூரண சௌந்தரியத்தை அழகாய் விவரிக்கிறார். எசேக்கியேல் தீரு தேசத்தின் சுங்கத்துறையிலும், ஆயத்துறையிலும் பணிபுரிந்தவர்போல, தீருவைப்பற்றித் தெளிவாகச் சொல்லுகிறார்.

எசேக்கியேலினிடத்தில் தேவனுடைய ஞானம் நிரம்பியிருக்கிறது. கர்த்தர் எசேக்கியேலை தம்முடைய நன்மையினால் நிரப்பியிருக்கிறார். கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவர் மனுக்குலத்திலுள்ள எல்லோரையும் சிருஷ்டித்திருக்கிறார். மனுபுத்திரர் எல்லோருக்கும் கர்த்தர் பொதுவான தகப்பனாயிருக்கிறார். எல்லா தேசமும் ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது. தனிநபர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டும். தேசங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவாயிருக்கவேண்டும்.

ஒரு தேசத்தில், அந்த தேசத்திற்குத் தேவையான எல்லா பொருட்களும் இருக்காது. அவர்கள் மற்ற தேசத்திலிருந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொள்ள வேண்டும். தேசங்களுக்கிடையே பொதுவான வியாபாரம் நடைபெறவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். எல்லா மனுஷருக்கும் ஒரே இரத்தமே இருக்கிறது.

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" (அப் 17:26).

கர்த்தர் ஒவ்வொரு தேசத்தையும் ஆசீர்வதிக்கிறார். ஒவ்வொரு தேசமும், தங்கள் தேசத்தில் நிரம்பியிருக்கிற ஆசீர்வாதங்களுக்காக கர்த்தரைத் துதிக்க வேண்டும். ஒரு தேசம் மற்ற தேசத்தைவிட ஐசுவரியத்தில் குறைந்திருக்கலாம். ஆனாலும் ஐசுவரியம் குறைவான தேசமும், மற்ற தேசங்களுக்கு ஏதாவது ஒரு வழியில் உதவியாயிருக்கும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி தீருவில் நடைபெறுகிற வியாபாரங்களை விரிவாகச் சொல்லுகிறார். "சகலவித பொருள்களின் திரளினாலும் தர்ஷீஸ் ஊரார் உன்னோடே வியாபாரம் பண்ணினார்கள்; வெள்ளியையும் இரும்பையும் தகரத்தையும் ஈயத்தையும் உன் சந்தைகளில் விற்க வந்தார்கள். யாவான், தூபால், மேசேக் என்னும் ஜாதியார் உன் வியாபாரிகளாயிருந்து, மனுஷர்களையும் வெண்கலப் பாத்திரங்களையும் உன் தொழில்துறைக்குக் கொண்டுவந்தார்கள். தொகர்மா வம்சத்தார் குதிரைகளையும் குதிரைவீரரையும் கோவேறு கழுதைகளையும் உன் சந்தைகளுக்குக் கொண்டுவந்தார்கள். தேதான் புத்திரர் உன் வியாபாரிகளாயிருந்தார்கள்; அநேகம் தீவுகளின் வர்த்தகம் உன் வசமாகச் சேர்ந்தது; யானைத்தந்தங்களையும் கருங்காலி மரங்களையும் அவைகளுக்குப் பதிலாகக் கொண்டுவந்தார்கள்" (எசே 27:12-15).

சீரியரும் தீருவோடே வியாபாரம்பண்ணினார்கள். "சீரியர் உன் வேலைப்பாடான பற்பல பொருள்களினிமித்தம் உன்னோடே வியாபாரம்பண்ணி, மரகதங்களையும், இரத்தாம்பரங்களையும், சித்திரத்தையலாடைகளையும், உயர்ந்த வஸ்திரங்களையும், பவளங்களையும், பளிங்கையும் உன் சந்தைகளில் விற்கவந்தார்கள்" (எசே 27:16).

யூதரும் இஸ்ரவேல் தேசத்தாரும் தீருவோடே வியாபாரம் பண்ணினார்கள். அவர்கள் மின்னீத், பன்னாக் என்கிற ஊர்களின் கோதுமையையும், தேனையும், எண்ணெயையும், பிசின்தைலத்தையும் உன் தொழில்துறைக்குக் கொண்டுவந்தார்கள் (எசே 27:17).

தமஸ்குவும், தாண் நாட்டாரும், தீருவோடு வியாபாரம்பண்ணினார்கள். "தமஸ்கு உன் வேலைப்பாடான பற்பல பொருள்களினிமித்தமும், சகலவிதப் பொருள்களின் திரட்சியினிமித்தமும் உன்னோடே வர்த்தகம்பண்ணி, கெல்போனின் திராட்சரசத்தையும் வெண்மையான ஆட்டுமயிரையும் உனக்கு விற்றார்கள். தாண் நாட்டாரும், போக்கும்வரத்துமான யாவானரும் துலக்கப்பட்ட இரும்பையும் இலவங்கத்தையும் வசம்பையும் உன் சந்தைகளில் கொண்டு வந்து உன் தொழில்துறையில் விற்றார்கள். இரதங்களுக்குப் போடுகிற மேன்மையான இரத்தினக்கம்பளங்களை தேதானின் மனுஷர் கொண்டுவந்து, உன்னோடே வியாபாரம்பண்ணினார்கள்" (எசே 27:18-20).

இந்த தேசங்களைத் தவிர, இன்னும் ஏராளமான தேசத்தாரும் தீருவோடு வியாபாரம்பண்ணினார்கள். "அரபியரும், கேதாரின் சகல பிரபுக்களும் உனக்கு வாடிக்கையான வர்த்தகராகி, ஆட்டுக்குட்டிகளையும் ஆட்டுக்கடாக்களையும் வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து, உன்னோடே வியாபாரம்பண்ணினார்கள். சேபா, ராமா பட்டணங்களின் வியாபாரிகள் உன்னோடே வர்த்தகம்பண்ணி, மேல்தரமான சகலவித சம்பாரங்களையும், சகலவித இரத்தினக்கற்களையும், பொன்னையும் உன் சந்தைகளில் கொண்டுவந்தார்கள். ஆரான், கன்னே, ஏதேன் என்னும் பட்டணத்தாரும், சேபாவின் வியாபாரிகளும், அசீரியரும், கில்மாத் பட்டணத்தாரும் உன்னோடே வியாபாரம்பண்ணினார்கள். இவர்கள் சகலவித உயர்ந்த சரக்குகளையும், இளநீலப் பட்டுகளும் விசித்திரத்தையலாடைகளும் அடங்கிய புடவைக்கட்டுகளையும், விலை உயர்ந்த வஸ்திரங்கள் வைக்கப்பட்டு, கயிறுகளால் கட்டியிருக்கும் கேதுருமரப்பெட்டிகளையும் கொண்டுவந்து, உன்னோடே வியாபாரம்பண்ணினார்கள்" (எசே 27:21-24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீருவின் தொழில்துறையில் தர்ஷீசின் கப்பலாட்கள் அவர்களைப் போற்றிப் பாடுகிறார்கள்; தீரு சமுத்திரத்தின் நடுவிலே தன்னைப் பூரணப்படுத்தி, தன்னை மிகவும் மகிமைப்படுத்திற்று (எசே 27:25).

தீரு நாசமடையும் எசே 27:26-36

எசே 27:26. தண்டுவலிக்கிறவர்கள் ஆழமான தண்ணீர்களில் உன்னை வலித்துக் கொண்டுபோனார்கள்; நடுச்சமுத்திரத்திலே கொண்டற்காற்று உன்னை உடைத்துப்போட்டது.

எசே 27:27. நீ நாசமடையும் நாளிலே உன் ஆஸ்தியோடும், உன் சந்தைகளோடும், உன் தொழில்துறையோடுங்கூட உன் கப்பலாட்களும், உன் மாலுமிகளும், உன்னில் கம்பத்துப்பார்க்கிறவர்களும், உன் வியாபாரிகளும், உன்னிலுள்ள எல்லா யுத்தவீரரும், உன் நடுவில் இருக்கிற எல்லாக் கூட்டத்தாரும் நடுச்சமுத்திரத்திலே விழுவார்கள்.

எசே 27:28. உன் மாலுமிகள் ஓலமிடும் சத்தத்தினால் சுற்றுப்புறங்கள் அதிரும்.

எசே 27:29. தண்டுவலிக்கிற யாவரும், கப்பலாட்களும், கடல் மாலுமிகள் அனைவரும், தங்கள் கப்பல்களை விட்டு இறங்கி, கரையிலே நின்று,

எசே 27:30. உன்னிமித்தம் சத்தமிட்டுப் புலம்பி, மனங்கசந்து அழுது, தங்கள் தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு, சாம்பலில் புரண்டு,

எசே 27:31. உனக்காக மொட்டையிட்டு இரட்டுடுத்திக்கொண்டு, உனக்காக மனங்கசந்து அழுது, துக்கங்கொண்டாடுவார்கள்.

எசே 27:32. அவர்கள் உனக்காகத் தங்கள் துக்கத்திலே ஓலமிட்டு, உன்னிமித்தம் புலம்பி, உன்னைக்குறித்து: சமுத்திரத்தின் நடுவிலே அழிந்துபோன தீருவுக்குச் சமான நகரம் உண்டோ?

எசே 27:33. உன் சந்தைச்சரக்குகள் சமுத்திரங்கள் வழியாய்க் கொண்டுவரப்படுகையில், அநேக ஜனங்களைத் திருப்தியாக்கினாய்; உன் ஆஸ்தியின் திரளினாலும் உன் வியாபாரத்தினாலும் பூமியின் ராஜாக்களை ஐசுவரியவான்களாக்கினாய்.

எசே 27:34. நீ சமுத்திரத் திரைகளினாலே ஆழங்களில் உடைக்கப்பட்டபோது, உன் தொழில் துறையும் உன் நடுவிலுள்ள கூட்டம் அனைத்தும் அழிந்து போயின என்பார்கள்.

எசே 27:35. தீவுகளின் குடிகள் எல்லாம் உன்னிமித்தம் திகைப்பார்கள்; அவர்களுடைய ராஜாக்கள் மிகவும் பிரமித்து, கலங்கின முகமாயிருப்பார்கள்.

எசே 27:36. சகல ஜனங்களிலுமுள்ள வர்த்தகர் உன்பேரில் ஈசல் போடுவார்கள்; நீ பயங்கரமாவாய்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய் என்கிறார் என்று சொல் என்றார்.

தீருவுக்கு திடீரென்று அழிவு வரும். மதியவேளையில் சூரியன் அஸ்தமனமாவது போல, தீருவும் எதிர்பாராத வேளையில், சீக்கிரத்தில் அழிந்துபோகும். தீரு நாசமடையும் நாளிலே, அதன் ஐசுவரியமும், ஆடம்பரமும், வல்லமையும் மொத்தமாய் அழிந்துபோகும். தீருவிலே ஏராளமான கப்பல்கள் உள்ளன. தண்டு வலிருக்கிறவர்களும் மாலுமிகளும் அங்கு ஏராளமானோர் இருக்கிறார்கள்.

"தண்டுவலிக்கிறவர்கள் ஆழமான தண்ணீர்களில் உன்னை வலித்துக் கொண்டுபோனார்கள்; நடுச்சமுத்திரத்திலே கொண்டற்காற்று உன்னை உடைத்துப்போட்டது. நீ நாசமடையும் நாளிலே உன் ஆஸ்தியோடும், உன் சந்தைகளோடும், உன் தொழில்துறையோடுங்கூட உன் கப்பலாட்களும், உன் மாலுமிகளும், உன்னில் கம்பத்துப்பார்க்கிறவர்களும், உன் வியாபாரிகளும், உன்னிலுள்ள எல்லா யுத்தவீரரும், உன் நடுவில் இருக்கிற எல்லாக் கூட்டத்தாரும் நடுச்சமுத்திரத்திலே விழுவார்கள்" (எசே 27:26,27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தண்டுவலிக்கிறவர்கள் ஆழமான தண்ணீர்களிலும் பாதுகாப்பாக போவார்கள். புயல்காற்று வேகமாக அடித்தாலும் மாலுமிகள் கப்பல்களை பாதுகாப்பாக ஓட்டுவார்கள். ஆனால் இப்போது அவர்கள் செயலிழந்தவர்களாகயிருக்கிறார்கள். கர்த்தர் தீருவுக்கு அழிவை நியமித்திருக்கிறார். இந்த பேரழிவுக்கு அவர்களால் தப்பிக்க முடியவில்லை. அவர்கள் எல்லோருமே நடுசமுத்திரத்தில் விழுகிறார்கள்.

தீருவின் அதிபதிகள் நேபுகாத்நேச்சாரோடு யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய யுத்தவீரர்கள் எல்லோரையும், கல்தேயருக்கு விரோதமாக அனுப்புகிறார்கள். ஆனால் தீருவின் யுத்தவீரர்களோ நடுச்சமுத்திரத்திலே விழுந்து அழிந்துபோகிறார்கள்.

நேபுகாத்நேச்சார் தீருவுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடுகிறான். தீருவின் அதிபதியோ பாபிலோன் ராஜாவினிடத்தில் சீக்கிரமாய் சரணடையவில்லை. முற்றிக்கைக்காலம் அதிகரிக்கிறது. இதனால் நேபுகாத்நேச்சாரின் கோபமும் அதிகரிக்கிறது. முடிவிலே, நேபுகாத்நேச்சார் தீருவை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறான். தீரு நாசமடைகிறது. அந்நாளிலே அவர்கள் தங்கள் ஆஸ்தியோடும், தங்கள் சந்தைகளோடும், தங்கள் யுத்தவீரரோடும் நடுச்சமுத்திரத்திலே விழுகிறார்கள்.

தீருவின் கப்பல்கள் எல்லாம் அழிந்துபோகிறது. அவர்களுடைய மாலுமிகள் பயத்தினால் ஓலமிடுகிறார்கள். அவர்களுடைய சத்தத்தினால் சுற்றுப்புறங்கள் அதிருகிறது. அவர்களால் ஆபத்துக்கு தப்பிக்க முடியவில்லை. தீருவின் யுத்தவீரரால் கல்தேயருக்கு எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை.

கல்தேயர்கள் தீருவை அழிக்கும்போது, தீருவுக்கு அருகாமையில் ஏராளமான கப்பல்கள் பிரயாணம் பண்ணுகிறது. அந்தக் கப்பல்களில் தண்டுவலிக்கிறயாவரும், கப்பலாட்களும், கடல் மாலுமிகள் அனைவரும், தங்கள் கப்பல்களை விட்டு இறங்கி, கரையிலே நிற்பார்கள். தீருவினிமித்தம் அவர்கள் சத்தமிட்டுப் புலம்பி, மனங்கசந்து அழுது, தங்கள் தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு, சாம்பலில் புரளுவார்கள். அவர்கள் தீருவுக்காக மொட்டையிட்டு இரட்டுடுத்திக்கொண்டு, மனங்கசந்து அழுது, துக்கங்கொண்டாடுவார்கள் (எசே 27:29-31).

தீரு அழிந்துபோவதைப் பார்த்து மாலுமிகளும், தண்டுவலிக்கிறவர்களும் தங்கள் துக்கத்திலே ஓலமிடுவார்கள். தீருவினிமித்தம் அழுது புலம்புவார்கள். அவர்கள் தீருவை நேசிக்கிறார்கள். தீருவின் மூலமாய் அவர்களுக்கு பொருளாதார வருமானம் அதிகமாய்க் கிடைக்கிறது. தீரு சமுத்திரத்தின் நடுவிலே அழிந்துபோகும்போது, அவர்களுடைய வருமானமும், பொருளாதாரமும் அழிந்துபோகிறது.

அவர்கள் தீருவுக்காக அழுது புலம்பும்போது "சமுத்திரத்தின் நடுவிலே அழிந்துபோன தீருவுக்குச் சமான நகரம் உண்டோ? உன் சந்தைச்சரக்குகள் சமுத்திரங்கள் வழியாய்க் கொண்டுவரப்படுகையில், அநேக ஜனங்களைத் திருப்தியாக்கினாய்; உன் ஆஸ்தியின் திரளினாலும் உன் வியாபாரத்தினாலும் பூமியின் ராஜாக்களை ஐசுவரியவான்களாக்கினாய். நீ சமுத்திரத் திரைகளினாலே ஆழங்களில் உடைக்கப்பட்டபோது, உன் தொழில் துறையும் உன் நடுவிலுள்ள கூட்டம் அனைத்தும் அழிந்து போயின" (எசே 27:31-34) என்று சொல்லி அழுது புலம்புவார்கள்.

தீவுகளின் குடிகள் எல்லாம் தீருவினிமித்தம் திகைப்பார்கள்; அவர்களுடைய ராஜாக்கள் மிகவும் பிரமித்து, கலங்கின முகமாயிருப்பார்கள். சகல ஜனங்களிலுமுள்ள வர்த்தகர் தீருவின்பேரில் ஈசல்போடுவார்கள். (எசே 27:35,36) "நீ பயங்கரமாவாய்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்" (எசே 27:36) என்று கர்த்தர் தீருவின் அழிவைக் குறித்து சொல்லுகிறார்.

தீருவுக்காக புலம்புகிறவர்கள் எல்லோரும் உண்மையான வருத்தத்தோடு புலம்பவில்லை. அவர்களில் சிலர் தீருவின் பெருமையை நினைத்து, அவர்களை ஏளனம்பண்ணுகிறார்கள். அவர்கள் தீருவின் பேரில் ஈசல்போடுகிறார்கள். தீருவில் ஐசுவரியம் இருந்தது. ஆனால் திறமையான நிர்வாகம் இல்லை. அவர்களுடைய ஐசுவரியமே அவர்களுக்கு கண்ணியாயிற்று . அவர்களுடைய இருதயத்தில் பெருமை உண்டாயிற்று. அழிவுக்கு முன்னானது அகந்தை. தீரு தன்னுடைய பெருமையினாலும், அகந்தையினாலும் அழிந்துபோயிற்று.

28 அதிகாரம்

தீருவின் ராஜாவுக்கு அழிவு வரும். தீரு அழியும்போது, அதன் அதிபதியும் அழிந்துபோவான் (எசே 28:1-10). தீருவின் அதிபதி தன்னுடைய அக்கிரமத்தினால் செத்துப்போவான். ஆனாலும் எசேக்கியேல் அவனுக்காக புலம்பவேண்டும் (எசே 28:11-19). தீருவுக்கு அருகாமையில் சீதோன் உள்ளது. சீதோனுடைய அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம் (எசே 28:20-23).

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கஷ்டங்கள் வந்தபோது, அவர்களுடைய அண்டை தேசத்தார் எல்லோரும் அவர்களை ஏளனம்பண்ணினார்கள். ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை திரும்பவும் கட்டியெழுப்புவார் (எசே 28:24-26).

தீருவின் அதிபதி
எசே 28:1-10

எசே 28:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 28:2. மனுபுத்திரனே, நீ தீருவின் அதிபதியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், உன் இருதயம் மேட்டிமைகொண்டு: நான் தேவன், நான் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று நீ சொல்லி, உன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப்போல ஆக்கினாலும், நீ மனுஷனேயல்லாமல் தேவனல்ல.

எசே 28:3. இதோ, தானியேலைப்பார்க்கிலும் நீ ஞானவான்; இரகசியமானதொன்றும் உனக்க மறைபொருள் அல்ல.

எசே 28:4. நீ உன் ஞானத்தினாலும் உன் புத்தியினாலும் பொருள் சம்பாதித்து, பொன்னையும் வெள்ளியையும் உன் பொக்கிஷ சாலைகளில் சேர்த்துக்கொண்டாய்.

எசே 28:5. உன் வியாபாரத்தினாலும் உன் மகா ஞானத்தினாலும் உன் பொருளைப் பெருகப்பண்ணினாய்; உன் இருதயம் உன் செல்வத்தினால் மேட்டிமையாயிற்று.

எசே 28:6. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ உன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப்போல ஆக்குகிறபடியினால்,

எசே 28:7. இதோ, ஜாதிகளில் மகா பலவான்களாகிய மறுதேசத்தாரை உனக்கு விரோதமாய் வரப்பண்ணுவேன்; அவர்கள் உன் ஞானத்தின் அழகுக்கு விரோதமாய்த் தங்கள் பட்டயங்களை உருவி, உன் மினுக்கைக் குலைத்துப் போடுவார்கள்.

எசே 28:8. உன்னைக் குழியிலே விழத்தள்ளுவார்கள்; நீ சமுத்திரங்களின் நடுவே கொலையுண்டு சாகிறவர்களைப்போல் சாவாய்.

எசே 28:9. உன்னைக் கொல்லுகிறவனுக்கு முன்பாக: நான் தேவனென்று நீ சொல்வாயோ? உன்னைக் குத்திப்போடுகிறவன் கைக்கு நீ மனுஷனேயல்லாமல் தேவனல்லவே.

எசே 28:10. மறுதேசத்தாரின் கையினால் நீ விருத்தசேதனமில்லாதவர்கள் சாவது போல் சாவாய்; நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

தீருவின் அதிபதி மற்ற தேசத்து அதிபதிகளிலிருந்து தனியாகப் பிரிக்கப்படுகிறான். கர்த்தருடைய வார்த்தை தீருவின் அதிபதிக்கு விரோதமாக உண்டாயிற்று. தீருவின் அதிபதி மிகுந்த பெருமையுள்ளவன். அவனுடைய இருதயம் மேட்டிமை கொண்டிருக்கிறது. "நான் தேவன், நான் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன்" (எசே 28:2) என்று தீருவின் அதிபதி தன்னைப்பற்றிச் சொல்லுகிறான்.

அவன் தன்னை எப்படித்தான் உயர்த்தினாலும், அவன் தன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப் போலாக்கினாலும், அவன் மனுஷனையல்லாமல் தேவனல்ல. தீருவால் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று அதன் அதிபதி நினைக்கிறான். தீருவின் பாதுகாப்புக்குத் தேவையான எல்லா யுத்த ஆயுதங்களும், யுத்தவீரர்களும் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் தீருவை கல்தேயரிடமிருந்து பாதுகாத்துக்கொள்வார்கள் என்று தீருவின் அதிபதி பெருமையோடு சொல்லுகிறான்.

தீரு தன்னைப்பற்றிச் சொல்லும்போது "நான் தேவன்" என்று சொல்லுகிறான். ஆகையினால் தன்னை யாரும் ஆளுகை செய்ய முடியாது. தன்மீது யாரும் அதிகாரம் செலுத்தக்கூடாது, தன்னுடைய கட்டளைக்கு யாரும் எதிர்த்து நிற்கக்கூடாது. தான் சமுத்திரத்தின் நடுவே, தேவாசனத்தில் வீற்றிருப்பதாகவும் தீருவின் அதிபதி பெருமையோடு சொல்லுகிறான். தேவன் பாதுகாப்பாய் வீற்றிருப்பதுபோல, தானும் பாதுகாப்பாய் வீற்றிருப்பதாக தீருவின் அதிபதி சொல்லுகிறான்.

தீருவின் அதிபதி சமுத்திரத்தின் நடுவே வீற்றிருக்கிறான். மற்ற தேசத்தாரால் இவனை சீக்கிரத்தில் அணுகமுடியாது. மற்ற தேசத்தார் மூலமாக தீருவின் அதிபதிக்கு ஆபத்து வராது. இவன் சமுத்திரத்திலிருப்பதை வானத்தின் உயரத்திலிருப்பதுபோல பாவித்துக் கொள்கிறான். கர்த்தரோ தீருவின் அதிபதியைப் பார்த்து, "நீ மனுஷனேயல்லாமல் தேவனல்ல" என்று சொல்லுகிறார். தீருவின் அதிபதி ஒரு சிருஷ்டி. தேவனாகிய கர்த்தரே சிருஷ்டிகர். தீருவின் அதிபதி மரித்துப்போவான். இவன் ஆவியல்ல. மாம்சமாயிருக்கிறான்.

"எகிப்தியர் தெய்வம் அல்ல, மனுஷர்தானே அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல, மாம்சந்தானே; கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார், அப்பொழுது சகாயம் செய்கிறவனும் இடறி, சகாயம் பெறுகிறவனும் விழுந்து, அனைவரும் ஏகமாய் அழிந்து போவார்கள்" (ஏசா 31:3).

தீருவின் அதிபதி மிகுந்த செல்வாக்கோடு இருக்கிறான். அவனுக்கு திரளான ஐசுவரியம் இருக்கிறது. அவனுடைய அரண்மனையிலும், அரசசபையிலும், எல்லோரும் அவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். கவிஞர்கள் அவனைப் புகழுகிறார்கள். முகஸ்துதி செய்கிறவர்கள் தீருவின் அதிபதியை "தேவன்" என்று சொல்லுகிறார்கள். மனுஷர்கள் அவனை எப்படித்தான் புகழ்ந்தாலும், அவன் மனுஷனல்லாமல் தேவனல்ல. இது தீருவின் அதிபதிக்கே தெரியும்.

தீருவின் அதிபதி தன்னுடைய அறிவையும், ஞானத்தையும் குறித்து பெருமைப்படுகிறான். அவன் ஒருவேளை தன்னுடைய சொப்பனங்களில், தன்னை தேவனுக்கு சமமாக பார்த்திருக்கலாம். அவன் தானியேலைப் பார்க்கிலும் ஞானவான். தீருவின் அதிபதிக்கு இரகசியமானது ஒன்றும் மறைபொருளல்ல. அவனுக்கு அதிக ஞானம் இருக்கிறது. ஆனால் தீருவின் அதிபதியோ மனத்தாழ்மையாயிராமல், மனமேட்டிமையாயிருக்கிறான்.

கர்த்தர் தீருவின் அதிபதியினுடைய ஞானத்தையும், புத்தியையும், ஐசுவரியத்தையும் பற்றி விரிவாகச் சொல்லுகிறார். "நீ உன் ஞானத்தினாலும் உன் புத்தியினாலும் பொருள் சம்பாதித்து, பொன்னையும் வெள்ளியையும் உன் பொக்கிஷசாலைகளில் சேர்த்துக்கொண்டாய். உன் வியாபாரத்தினாலும் உன் மகா ஞானத்தினாலும் உன் பொருளைப் பெருகப்பண்ணினாய்; உன் இருதயம் உன் செல்வத்தினால் மேட்டிமையாயிற்று" (எசே 28:4,5) என்று கர்த்தர் தீருவின் அதிபதியைக் குறித்து சொல்லுகிறார்.

தீருவின் அதிபதி தானியேலைப் பார்க்கிலும் ஞானவானாயிருக்கிறான். அதே வேளையில் அவன் லூசிபரைப் பார்க்கிலும் மனமேட்டிமையாயிருக்கிறான். "அவனுக்குப் பள்ளத்தாக்கிலும் சம பூமியிலும் அநேகம் ஆடுமாடுகளும், மலைகளிலேயும், வயல்வெளியிலேயும் பயிர்க்குடிகளும், திராட்சத்தோட்டக்காரரும் உண்டாயிருந்த படியினால், அவன் வனாந்தரத்திலே கோபுரங்களைக் கட்டி, அநேக துரவுகளை வெட்டினான்; அவன் வெள்ளாண்மைப் பிரியனாயிருந்தான்" (2நாளா 26:10).

இஸ்ரவேலின் ராஜாக்களில் சிலர் வெள்ளாண்மை பிரியர்களாயிருந்தார்கள். தீருவின் அதிபதியோ வியாபார பிரியனாயிருக்கிறான். தன்னுடைய வியாபாரத்தினால் தன் பொக்கிஷத்தைப் பெருகப்பண்ணுகிறான். தீருவின் அதிபதி கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சகலமும் தன்னுடைய சுயபலத்தினாலும், சுயபராக்கிரமத்தினாலும் தனக்கு உண்டாயிற்று என்று நினைக்கிறான். கர்த்தருடைய கிருபையும், அநுக்கிரகமும் அவனுக்கு கிடைக்கவில்லையென்றால், அவனால் பொருளைச் சம்பாதிக்க முடியாது. பொன்னையும் வெள்ளியையும் பொக்கிஷ சாலையில் சேர்த்துக்கொள்ள முடியாது. தீருவின் அதிபதியோ கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தனக்கே முக்கியத்துவம் கொடுத்து கொள்கிறான்.

"என் சாமார்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து, உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்" (உபா 8:17,18).

தனக்கு திரளான ஐசுவரியம் இருப்பதினால், தீருவின் அதிபதி தன்னை ஞானியாகப் பாவித்துக்கொள்கிறான். அவன் தன் ஞானத்தினாலும், புத்தியினாலும் பொருளைச் சம்பாதித்தான்.

"அவன் புத்திமானாயிருப்பானோ, மூடனாயிருப்பானோ அதை யார் அறிவார்? ஆகிலும் சூரியனுக்குக்கீழே நான் பிரயாசப்பட்டு ஞானமாய்ச் சம்பாதித்த சகல வஸ்துக்களின்பேரிலும் அவன் அதிகாரியாவான்; இதுவும் மாயையே" (பிர 2:19).

அழிவுக்கு முன்னானது அகந்தை. பெருமையுள்ள இருதயம் சீக்கிரத்தில் அழிந்துவிடும். தீருவின் ராஜா தன்னுடைய செல்வத்தினால் மனமேட்டிமையாயிருக்கிறான். எசேக்கியேல் தீருவின் அதிபதிக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

"நீ உன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப்போல ஆக்குகிறபடியினால், இதோ, ஜாதிகளில் மகா பலவான்களாகிய மறுதேசத்தாரை உனக்கு விரோதமாய் வரப்பண்ணுவேன்; அவர்கள் உன் ஞானத்தின் அழகுக்கு விரோதமாய்த் தங்கள் பட்டயங்களை உருவி, உன் மினுக்கைக் குலைத்துப் போடுவார்கள்" (எசே 28:6,7) என்று கர்த்தர் தீருவின் அதிபதியைக் குறித்து, தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

தீருவின் அதிபதி தன்னுடைய இருதயத்தை தேவனுடைய இருதயத்தைப்போல் ஆக்கிக்கொண்டான். அவன் தன்னுடைய மனமேட்டிமையினால், தன்னை தேவனாகப் பாவித்துக்கொண்டான். தீருவின் அதிபதி தன்னை தேவனுக்கு நிகராக உயர்த்தியதினால், அவனால் இனிமேல் சாதாரண மனுஷனாகக்கூட இருக்கமுடியாது. ஜாதிகளில் மகா பலவான்களாகிய மறுதேசத்தார் தீருவின் அதிபதிக்கு விரோதமாக வருவார்கள். அவர்கள் அவனை குழியிலே விழத்தள்ளுவார்கள். தீருவின் அதிபதியோ சமுத்திரங்களின் நடுவே கொலையுண்டு சாகிறவர்களைப்போல சாவான் (எசே 28:8).

கர்த்தர் தீருவின் அதிபதிக்கு விரோதமாக மறுதேசத்தாரை அனுப்புவார். மறுதேசத்தார் என்னும் வார்த்தை கல்தேயரைக் குறிக்கிறது. அவர்கள் தீருவின் அதிபதிக்கு புரியாத விநோதமான பாஷையைப் பேசுவார்கள். அவர்கள் ஜாதிகளில் மகாபலவான்கள். தீருவின் அதிபதி எதை நினைத்து பெருமைப்பட்டானோ, அதையெல்லாம் கல்தேயர்கள் அழித்துப்போடுவார்கள். கல்தேயரின் பட்டயம் தீருவின் அதிபதிக்கு விரோதமாகப் புறப்பட்டு வரும். அவர்கள் தீருவின் அதிபதியைக் கொல்ல வருவார்கள். அவர்களுக்கு முன்பாக அவன் தன்னை தேவன் என்று சொல்ல முடியாது. தீருவின் அதிபதியை குத்திப்போடுகிறவன் கைக்கு, அவன் மனுஷனேயல்லாமல் தேவனல்ல.

கல்தேயர்கள் தீருவின் அரண்மனையை அழித்துப்போடுவார்கள். அவனுடைய பொக்கிஷங்களைக் கொள்ளையிடுவார்கள். அவனை குழியிலே விழத்தள்ளுவார்கள். தீருவின் அதிபதிக்கு மரணதண்டனை விதிப்பார்கள். தீருவின் அதிபதி தன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப்போல உயர்த்தினாலும், அவனால் மரணத்திற்கு தப்பிக்க முடியாது. அவன் மறுதேசத்தாரின் கையினால், விருத்தசேதனமில்லாதவர்கள் சாவதுபோல சாவான் (எசே 28:10).

தீருவின் அதிபதிக்கு கர்த்தரே மரணதண்டனை கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக அதிகாரத்தினால் பேசுகிறார். "நான் இதைச் சொன்னேன்" என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். கர்த்தர் சொன்னது நிறைவேறும். அவர் செய்ய நினைக்கிறது தடைபடாது.

கல்தேயர்கள் தங்களுடைய ஆயுதத்தை, தீருவின் அதிபதிக்கு நேராக நீட்டுவார்கள். அவனால் தப்பிக்க முடியாது. அப்போது அவன் தன்னைக் கொல்லுகிறவனுக்கு முன்பாக, "நான் தேவன்" என்று சொல்லமுடியாது. தன்னைக் குத்திப்போடுகிறவன் கைக்கு, தீருவின் அதிபதி மனுஷனேயல்லாமல் தேவனல்ல. அவன் சாதாரண மனுஷன். எல்லோரையும் போல மரித்துப்போகிறவன். அவனுடைய மனதிலே மரணபயமும், நடுக்கமும் இருக்கிறது.

தீருவின் ராஜாவைக் குறித்து புலம்பல் எசே 28:11-19

எசே 28:11. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 28:12. மனுபுத்திரனே, நீ தீரு ராஜாவைக்குறித்துப் புலம்பி, அவனை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்.

எசே 28:13. நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.

எசே 28:14. நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்.

எசே 28:15. நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்.

எசே 28:16. உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ்செய்தாய்; ஆகையால் நான் உன்னை தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போடுவேன்.

எசே 28:17. உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்; ராஜாக்கள் உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்குவேன்.

எசே 28:18. உன் அக்கிரமங்களின் ஏராளத்தினாலும், உன் வியாபாரத்தின் அநீதத்தினாலும் உன் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்; ஆகையால் உன்னைப் பட்சிப்பதாகிய ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்து புறப்படப்பண்ணி, உன்னைப்பார்க்கிற எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்குவேன்.

எசே 28:19. ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னிமித்தம் திகைப்பார்கள்; மகா பயங்கரமாவாய்; இனி ஒரு போதும் இருக்கமாட்டாய் என்று உரைக்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் எசேக்கியேலிடம் தீரு ராஜாவைக் குறித்து புலம்புமாறு சொல்லுகிறார். தீரு ராஜா என்பது, தீருவின் அதிபதியைக் குறிக்கிறது (எசே 28:2). இவனுடைய பெயர் எத்பாகால் அல்லது இத்தோ பாலூஸ் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். நேபுகாத்நேச்சார் தீருவை அழிக்கும்போது, எத்பாகால் என்பவன் தீருவின் அதிபதியாயிருந்தான். இவன் பிரசித்திப் பெற்றவன். இவனுடைய காலத்தில் தீரு தேசம் புகழ்பெற்று விளங்கிற்று. ஆனால் இவனோ தன் இருதயத்தில் பெருமையோடும், அகந்தையோடும் இருந்தான். இவனுடைய பெருமையே இவனுடைய அழிவுக்கு காரணமாயிற்று.

தீரு ராஜா என்னும் வாக்கியம், தீருவின் ராஜகுடும்பத்தார் எல்லோரையும் மொத்தமாக குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். தீருவின் ராஜா ஆடம்பரமாக வாழ்ந்தான். இவன் ஞானத்தால் நிறைந்தவன். பூரண அழகுள்ளவன்.

தீருவின் ராஜா எல்லா காரியங்களையும் நன்றாக அறிந்திருப்பவன் என்று அவனைப்பற்றி பொதுவாக சொல்லுகிறார்கள். அவனிடத்தில் உலக ஐசுவரியம் ஏராளமாயிருந்தது. தன்னுடைய சம்பத்துக்களையெல்லாம் அவன் நன்றாய் அனுபவித்தான். ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பாக, கள்ளம் கபடமில்லாமல் சந்தோஷமாயிருந்தான். அதுபோலவே தீருவின் ராஜாவும் சந்தோஷமாயிருந்தான். "நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனிலிருந்தவன்" (எசே 28:13) என்று கர்த்தர் தீருவின் ராஜாவைப்பற்றிச் சொல்லுகிறார்.

தீருவின் ராஜா தன்னுடைய வாழ்நாளெல்லாம் பரதேசில் தங்கியிருப்பதைப்போல, ஒரு குறைவுமில்லாமல் இருந்தான். ஏதேன் தோட்டத்திலுள்ள எல்லாவற்றிற்கும் ஆதாம் எஜமானைப்போல இருந்தான். அதுபோலவே தீருவின் ராஜாவும் தன் தேசத்திலுள்ள எல்லாவற்றிற்கும் எஜமானாயிருக்கிறான்.

கர்த்தர் தீருவின் ராஜாவைப்பற்றிச் சொல்லும்போது, "நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்" (எசே 28:12) என்று சொல்லுகிறார்.

தீரு ராஜாவினுடைய அரண்மனை மிகவும் பெரியது. அவனுடைய பொக்கிஷ சாலையில் ஏராளமான ஆபரணங்கள் இருக்கிறது. அவற்றிற்கு மத்தியில் அவன் சந்தோஷமாய் உலவுவான். பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் அவனை மூடிக்கொண்டிருக்கிறது (எசே 28:13).

அவன் தன்னுடைய ஆடை ஆபரணங்களைப் பார்த்து, இருதயத்திலே பெருமை கொண்டான். தன்னுடைய இருதயத்தை தேவனுடைய இருதயத்தைப் போல ஆக்கினான். கர்த்தரைச் சுற்றிலும் ஏராளமான தேவதூதர்கள் இருப்பார்கள். தீருவின் ராஜாவைச் சுற்றிலும் ஏராளமான ஆடை ஆபரணங்கள் மூடிக்கொண்டிருக்கிறது.

தீரு ராஜாவுடைய ஆபரணங்களைப்பற்றி வரிசையாய்ச் சொல்லும்போது, பொன்னாது கடைசியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவனிடத்தில் விலையுயர்ந்த கற்கள் ஏராளமாயுள்ளன. அவற்றில் பொன்னே விலை குறைந்தது. அவனுடைய பொக்கிஷ அறையில் பொன்னுக்கு மதிப்போ, முக்கியத்துவமோ இல்லை. ஆகையினால் அது கடைசியாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

தீருவின் ராஜா தன்னுடைய அரண்மனையை பரதேசிபோல பாவித்துக்கொண்டிருக்கிறான். அங்கே மேளவாத்தியங்களின் இசையும், நாகசுரங்களின் இசையும் எப்போதும் தொனித்துக்கொண்டிருக்கும். கைகளினால் வாசிக்கப்படும் இசைக்கருவிகள், காற்று இசைக்கருவிகள், நரம்பு இசைக்கருவிகள் ஆகியவை அவனுடைய அரண்மனையில் ஏராளமாயிருக்கிறது.

தீருவின் ராஜா பிரதான ஆசாரியனைப்போல, விசேஷ வஸ்திரங்களை உடுத்தி நேர்த்தியாயிருந்தான். பிரதான ஆசாரியனுக்கு அவனுடைய ஆசாரிய வஸ்திரங்கள் மகிமையாயும், அழகாயும் இருந்தன. கர்த்தர் தீருவின் ராஜாவைப்பற்றிச் சொல்லும்போது, "நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்" (எசே 28:14) என்று சொல்லுகிறார்.

தீரு ராஜாவினிடத்தில் ஒரு குறைவும், ஒரு குற்றமும் இல்லை. அவன் சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி, அவனிடத்தில் அநியாயம் கண்டுபிடிக்கப்படவில்லை. அவன் தன் வழிகளில் குறைவற்றிருந்தான் (எசே 28:15).

ஆனாலும் அவனுடைய வியாபாரத்தின் மிகுதியினால், அவனுடைய கொடுமை அதிகரித்தது. அவன் பாவம் செய்தான். கர்த்தர் அவனிடத்தில் அநியாயத்தைக் கண்டுபிடித்தார். பாவம் அவனைப் பாழாக்கிற்று.

தன்னுடைய வழிகளில் குறைவற்றிருந்த போது அவன் அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப்பைப்போல இருந்தான். அவன் பாவம் செய்யாதபோது, கர்த்தரும் அவனை தம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வைத்தார்.

அவன் பாவம் செய்தபோதோ கர்த்தர் அவனை தம்முடைய பர்வதத்திலிருந்து தள்ளிவிட்டார். அவனை ஆகாதவன் என்று தீர்மானம் செய்துவிட்டார்.

அவன் குறையற்றிருந்தபோது காப்பாற்றுகிற கேருபாய் இருந்தான். அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினான். அவன் பாவம் செய்தபோதோ, கர்த்தர் அவனை அக்கினி மயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போட்டார் (எசே 28:16).

தீருவின் ராஜா ஞானத்தினால் நிறைந்தவன். அவன் பூரண அழகுள்ளவன். அவனுடைய அழகினால் அவனுடைய இருதயம் மேட்டிமையாயிற்று. தன் மினுக்கினால், அவன் தன் ஞானத்தைக் கெடுத்தான். இதனால் கர்த்தர் அவனை தரையிலே தள்ளிப்போட்டார். இராஜாக்கள் அவனைப் பார்க்கும்படி, கர்த்தர் அவனை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்கினார் (எசே 28:17).

கர்த்தர் தீரு ராஜாவினுடைய அக்கிரமத்தைப்பற்றிச் சொல்லுகிறார். அவனுக்கு தாம் கொடுக்கப்போகும் தண்டனையைப்பற்றியும் விவரிக்கிறார். "உன் அக்கிரமங்களின் ஏராளத்தினாலும், உன் வியாபாரத்தின் அநீதத்தினாலும் உன் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்; ஆகையால் உன்னைப் பட்சிப்பதாகிய ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்து புறப்படப்பண்ணி, உன்னைப்பார்க்கிற எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்குவேன். ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னிமித்தம் திகைப்பார்கள்; மகா பயங்கரமாவாய்; இனி ஒரு போதும் இருக்கமாட்டாய்" (எசே 28:18,19) என்று கர்த்தர் தீருவின் ராஜாவைப்பற்றிச் சொல்லுகிறார்.

சீதோன்
எசே 28:20-24

எசே 28:20. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 28:21. மனுபுத்திரனே, நீ உன் முகத்தைச் சீதோனுக்கு எதிராகக் திருப்பி, அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டியது என்னவென்றால்:

எசே 28:22. கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்: சீதோனே, இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து, உன் நடுவிலே மகிமைப்படுவேன்; நான் அதிலே நியாயத்தீர்ப்புகளைச் செய்து, அதிலே பரிசுத்தரென்று விளங்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 28:23. நான் அதிலே கொள்ளைநோயையும், அதின் வீதிகளில் இரத்தத்தையும் வரப்பண்ணுவேன்; அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் வந்த பட்டயத்தினால் காயம்பட்டவர்கள் அதின் நடுவிலே வெட்டுண்டு விழுவார்கள்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 28:24. இஸ்ரவேல் வம்சத்தாரை இகழ்ந்த அவர்களுடைய சுற்றுப்புறத்தாராகிய அனைவரிலும், இனித் தைக்கிற முள்ளும் நோவுண்டாக்குகிற நெரிஞ்சிலும் அவர்களுக்கு இராது; அப்பொழுது நான் கர்த்தராகிய ஆண்டவரென்று அறிந்துகொள்வார்கள்.

சீதோன் நகரம் தீருவுக்கு அருகாமையிலிருக்கிறது. இது மிகவும் பழமையான நகரம். ஆனாலும் சீதோன் தீருவைப்போல புகழ்பெற்ற நகரமோ அல்லது ஐசுவரியம் மிகுந்த நகரமோ அல்ல. சீதோன் தன்னுடைய பாதுகாப்புக்காக தீருவைச் சார்ந்திருக்கிறது. தீரு அழிந்தபோது, சீதோனும் அதோடுகூட அழிந்துபோகிறது.

சீதோனியர் விக்கிரகாராதனைக்காரர்கள். தீருவைவிட சீதோனிலே விக்கிரகங்கள் அதிகம். தீருவின் மனுஷர் வியாபாரம் பண்ணுகிறவர்கள். அவர்கள் பொருட்களை வாங்குவதிலும், விற்பதிலும், லாபம் சம்பாதிப்பதிலும் அதிக கவனம் செலுத்துவார்கள். அவர்களுக்கு தெய்வங்கள்மீதோ, விக்கிரகாராதனைமீதோ அதிக ஆர்வமில்லை. தீருவின் மனுஷர் எப்போதுமே தங்கள் வியாபாரத்தில் மூழ்கிப்போயிருந்தார்கள்.

சீதோன் நகரத்தில் வியாபாரம் அதிகமாய் நடைபெறவில்லை. சீதோன் நகரத்தார் வெட்டிப்பொழுதைப் போக்குகிறவர்கள். ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாயிருப்பார்கள். சீதோனியருக்கு அஸ்தரோத் பிரதான தெய்வமாய் விளங்கிற்று. யெசபேல் சீதோன் ராஜாவின் குமாரத்தி. இவள் இஸ்ரவேல் தேசத்தில் பாகாலை ஆராதிக்கும் விக்கிரகாராதனையை அறிமுகம் செய்து வைத்தாள்.

"நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான். (1இராஜா 16:31,32).

சீதோனியர் மூலமாய் கர்த்தருடைய நாமம் பரிசுத்த குலைச்சலாக்கப்பட்டது. கர்த்தர் சீதோனியருடைய விக்கிரகாராதனையினிமித்தமாய் அவர்கள் மீது கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை, சீதோனியருக்கு விரோதமாக உண்டாயிற்று.

கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, நீ உன் முகத்தைச் சீதோனுக்கு எதிராகக் திருப்பி, அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டும்" (எசே 28:21) என்று சொல்லுகிறர்.

கர்த்தர் சீதோனுக்கு விரோதமாக வருவார். அவர் அதிலே நியாயத்தீர்ப்புகளைச் செய்வார். அதிலே கொள்ளைநோயையும், அதின் வீதிகளில் இரத்தத்தையும் வரப்பண்ணுவார். தீருவுக்கு விரோதமாக சுற்றிலும் சத்துருவின் பட்டயங்கள் வரும். தீருவின் மனுஷர் அவர்களுடைய பட்டயங்களினால் காயம்படுவார்கள். அவர்கள் தீருவின் வீதியிலே வெட்டுண்டு விழுவார்கள். அப்போது கர்த்தர் பரிசுத்தர் என்று விளங்குவார். தீருவின் மனுஷர், இஸ்ரவேலின் பரிசுத்தரை கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள். கர்த்தர் அவர்கள் நடுவிலே மகிமைப்படுவார் (எசே 28:22,23).

நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்தான். தேவாலயத்தை சுட்டெரித்தான். யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் சங்காரம்பண்ணினான். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மிகுந்த வேதனைகளும், துன்பங்களும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. அவர்களுடைய வேதனைகளைப் பார்த்து, அவர்களுக்கு சுற்றுப்புறத்தாராயிருந்த ஜாதியார், அவர்கள்மீது இரக்கம் காண்பிக்கவில்லை. இஸ்ரவேல் வம்சத்தாரின் வேதனைகளைப் பார்த்து அவர்கள் அனுதாபப்படவில்லை. இஸ்ரவேலின் சுற்றுப்புறத்தார் அனைவரும், எருசலேமின் குடிகளை இகழ்ந்தார்கள். அவர்களை ஏளனம்பண்ணினார்கள். இஸ்ரவேல் தேசத்தாருடைய சுற்றுப்புறத்தார் அனைவரும், அவர்களுக்கு தைக்கிற முள்ளும், நோவு உண்டாக்குகிற நெரிஞ்சிலுமாயிருந்தார்கள்.

கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாரை இகழ்ந்த அவர்களுடைய சுற்றுப்புறத்தாராகிய அனைவர்மீதும் நியாயத்தீர்ப்புகளைச் செய்கிறார். அவர்களுக்கு அழிவு வருகிறது. அவர்கள் இனிமேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, தைக்கிற முள்ளாகவும், நோவு உண்டாக்குகிற நெரிஞ்சிலாகவும் இருக்கமாட்டார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் சுற்றுப்புறத்தாருடைய உபத்திரவமில்லாமல், அவர்களுடைய ஏளனமும், இகழ்ச்சியுமில்லாமல், சாந்தமாயும், சமாதானமாயும் ஜீவிப்பார்கள் (எசே 28:24).

இஸ்ரவேல் வம்சத்தார் எசே 28:25,26

எசே 28:25. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், நான் இஸ்ரவேல் வம்சத்தாரை, அவர்கள் சிதறடிக்கப்பட்டிருக்கிற ஜனங்களிடத்திலிருந்து சேர்த்துக்கொண்டு வந்து, அவர்களால் ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்தரென்று விளங்கும்போது, அவர்கள் என் தாசனாகிய யாக்கோபுக்கு நான் கொடுத்த தங்களுடைய தேசத்திலே குடியிருப்பார்கள்.

எசே 28:26. அவர்களுடைய சுற்றுப்புறத்தாரில் அவர்களை இகழ்ந்த அனைவரிலும் நான் நியாயத்தீர்ப்புகளைச் செய்யும்போது, அவர்கள் அதிலே சுகமாய்க் குடியிருந்து, வீடுகளைக் கட்டி, திராட்சத்தோட்டங்களை நாட்டி, சுகமாய் வாழ்ந்து, நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்கிறார் என்று சொல் என்றார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கல்தேயர் மூலமாய் வேதனைகளை அனுபவித்தபோது, அவர்களுடைய சுற்றுப்புறத்தார் அவர்களை இகழ்ந்தார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாரை இகழ்ந்த அனைவரிலும் தம்முடைய நியாயத்தீர்ப்புகளைச் செய்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் அழிவதைப் பார்த்து சந்தோஷப்பட்ட அவர்களுடைய சுற்றுப்புறத்தாருக்கு இப்போது அழிவு வருகிறது.

கர்த்தராகிய ஆண்டவர் இஸ்ரவேல் வம்சத்தாரை, அவர்கள் சிதறடிக்கப்பட்டிருக்கிற ஜனங்களிடத்திலிருந்து சேர்த்துக்கொண்டு வருவார். கர்த்தர் ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்தரென்று விளங்குவார். அப்போது, அவர்கள் கர்த்தருடைய தாசனாகிய யாக்கோபுக்கு, கர்த்தர் கொடுத்த தங்களுடைய தேசத்திலே குடியிருப்பார்கள் (எசே 28:25).

இஸ்ரவேல் வம்சத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போனாலும், கர்த்தர் அவர்களை மறுபடியுமாய் அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார். அங்கே அவர்களை குடியேற்றுவார். கர்த்தருடைய இஸ்ரவேலர்கள் மறுபடியும் செழிப்பார்கள். அவர்கள் தங்கள் தேசத்திலே சுகமாய்க் குடியிருந்து, வீடுகளைக் கட்டுவார்கள். அங்கே திராட்சத்தோட்டங்களை நாட்டி சுகமாய் வாழ்ந்து, இஸ்ரவேலின் பரிசுத்தரே தங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள் (எசே 28:26).

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம், பரமகானானிலே பரிபூரணமாய் நிறைவேறும். அங்கே நமக்கு துக்கமோ, பயமோ, சஞ்சலமோ, கவலையோ இருக்காது. பரமகானானிலே நாம் கர்த்தரோடு கூடயிருப்போம். கர்த்தரும் நம்மோடு கூடயிருப்பார். அங்கே நமக்கு நித்திய மகிழ்ச்சியும், நித்திய சந்தோஷமும் உண்டாயிருக்கும்.

29 அதிகாரம்

கர்த்தர் எகிப்து தேசத்திற்கு விரோதமாகவும், அதின் ராஜாவாகிய பார்வோனுக்கு விரோதமாகவும் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எசேக்கியேல் நான்கு அதிகாரங்களில் எகிப்து சம்பந்தமான தீர்க்கதரிசன வார்த்தைகளை எழுதுகிறார். பூர்வகாலத்தில் கர்த்தருடைய பிள்ளைகள் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். அதன் பின்புகூட, அவர்கள் தங்கள் பாதுகாப்புக்கு எகிப்து தேசத்தையே நம்பினார்கள்.

கர்த்தருடைய வார்த்தை எகிப்து தேசத்திற்கு விரோதமாக வருகிறது. எகிப்து தேசத்தின் அழிவைப் பார்த்து இஸ்ரவேல் வம்சத்தார் புத்தி தெளியவேண்டும். அவர்கள் எகிப்தியரை நம்பாமல் கர்த்தரை நம்பவேண்டும்.

பார்வோன் இஸ்ரவேலை வஞ்சிக்கிறான். பார்வோனுக்கு அழிவு வரும் (எசே 29:1-7). எகிப்து தேசம் பாழாய்ப்போகும் (எசே 29:8-12). நாற்பது வருஷங்களுக்கு பின்பு எகிப்து தேசத்தின் ஒரு பகுதி மறுபடியும் கட்டியெழுப்பப்படும் (எசே 29:13-16). நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தைக் கைப்பற்றுவான் (எசே 29:17-20). கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கம் காண்பிப்பார் (எசே 29:21).

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் எசே 29:1-7

எசே 29:1. பத்தாம் வருஷம் பத்தாம் மாதம் பன்னிரண்டாந்தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 29:2. மனுபுத்திரனே, நீ எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு எதிராக உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கும் எகிப்து முழுமைக்கும் விரோதமாய்த் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்ல வேண்டியது என்னவென்றால்:

எசே 29:3. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனே, நீ உன் நதிகளின் நடுவிலே படுத்துக்கொண்டு: என் நதி என்னுடையது, நான் அதை எனக்காக உண்டுபண்ணினேன் என்று சொல்லுகிற பெரிய முதலையே, இதோ, நான் உனக்கு விரோதமாய் வந்து,

எசே 29:4. உன் வாயிலே துறடுகளை மாட்டி, உன் நதிகளின் மச்சங்களை உன் செதிள்களில் ஒட்டிக்கொள்ளும்படி செய்து, உன்னை உன் நதிகளின் நடுவிலிருந்து தூக்கிவிடுவேன்; உன் நதிகளின் மச்சங்களெல்லாம் உன் செதிள்களில் ஒட்டிக்கொண்டிருக்கும்.

எசே 29:5. உன்னையும் உன் நதிகளின் எல்லா மச்சங்களையும் வனாந்தரத்திலே போட்டுவிடுவேன்; வெட்டவெளியிலே விழுவாய்; நீ சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை; உன்னை பூமியின் மிருகங்களுக்கும் ஆகாயத்தின் பறவைகளுக்கும் இரையாகக் கொடுப்பேன்.

எசே 29:6. அப்பொழுது எகிப்து தேசத்தின் குடிகளெல்லாரும் நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்; அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நாணற்கோலாயிருந்தார்களே.

எசே 29:7. அவர்கள் உன்னைக் கையிலே பிடிக்கும்போது, நீ ஒடிந்து போய், அவர்கள் விலாவையெல்லாம் பிளப்பாய்; அவர்கள் உன்மேல் சாயும்போது, நீ முறிந்து, அவர்கள் இடுப்பு முழுவதையும் மரத்துப்போகப்பண்ணுவாய்.

சிறையிருப்பின் பத்தாம் வருஷம் பத்தாம் மாதம் பன்னிரண்டாந்தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று (எசே 29:1). பாபிலோன் ராஜா எருசலேமை முற்றிக்கையிட்டிருந்த போது, எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோன், எருசலேமுக்கு உதவியாக வந்தான். அப்போது கர்த்தர் எகிப்து தேசத்திற்கு விரோதமாக தம்முடைய முதலாவது தீர்க்கதரிசன செய்தியை சொன்னார்.

"பார்வோனின் சேனையோவென்றால், எகிப்திலிருந்து புறப்பட்டது; எருசலேமை முற்றிக்கைபோட்ட கல்தேயர் அவர்களுடைய செய்தியைக்கேட்டு, எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள்" (எரே 37:5). எரேமியா எகிப்திற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். ஆனால் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை.

கர்த்தர் இப்போது, எசேக்கியேல் மூலமாய், எகிப்திற்கு விரோதமாக மறுபடியும் தம்முடைய செய்தியைச் சொல்லுகிறார். எசேக்கியேல் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு எதிராக தன் முகத்தைத் திருப்பிக்கொள்ளவேண்டும். பார்வோனுக்கும், எகிப்து தேசம் முழுவதற்கும் விரோதமாக எசேக்கியேல் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும் (எசே 29:2).

கர்த்தருடைய செய்தி முதலாவதாக ராஜாவுக்கு சொல்லப்படுகிறது. எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் இஸ்ரவேல் வம்சத்தாரை வஞ்சிக்கிறான். ஆகையினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு முதலாவதாக பார்வோன் மீது வருகிறது. பார்வோன் அழிந்துபோவான். அதன் பின்பு எகிப்து தேசமும் அழிந்துபோகும்.

"எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்" என்னும் பெயர் "பார்வோன் ஒப்பிரா" என்னும் ராஜாவைக் குறிக்கும். பார்வோன் என்பது எகிப்தின் ராஜாக்களுக்கு வழங்கப்படும் பொதுவான பெயராகும். கர்த்தர் இவனை "பெரிய முதலை" என்று சொல்லுகிறார். இவன் நதிகளின் நடுவிலே படுத்துக்கொண்டிருக்கிறான்.

எகிப்து தேசத்தில் நைல் நதி ஓடுகிறது. நைல் நதியில் ஏராளமான முதலைகள் இருக்கும். அந்த முதலைகளுக்கெல்லாம் பெரிய முதலையாக பார்வோன் நைல் நதியில் படுத்துக்கொண்டிருக்கிறான்.

பார்வோன் தன்னுடைய இருதயத்தில் பெருமையும், அகந்தையும், ஆணவமுமுள்ளவன். அவன் தன்னுடைய நதிகளின் நடுவிலே படுத்துக்கொண்டு, "என் நதி, என்னுடையது, நான் அதை எனக்காக உண்டுபண்ணினேன்" (எசே 29:3) என்று சொல்லுகிறான்.

பார்வோன் எகிப்து தேசத்தின் அதிபதி. எகிப்து தேசத்தில் அவனுக்கு விரோதமாக யாரும் பேசவும் முடியாது. செயல்படவும் முடியாது. பார்வோன் தன்னுடைய பாதுகாப்பை நினைத்து பெருமைப்படுகிறான். எகிப்து தேசத்தில் தனக்கு போட்டியாக ஒருவருமில்லை என்று ஆணவமாய்ச் சொல்லுகிறான். "என் நதி என்னுடையது, நான் அதை எனக்காக உண்டுபண்ணினேன்" என்று ஆணவமாய்ப் பேசுகிறான்.

பார்வோன் தனக்குத்தானே பெருமையாகப் பேசினாலும், அவனுடைய வார்த்தைகள் கர்த்தருக்கு விரோதமாக இருக்கிறது. பார்வோன் தன்னுடைய சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். பார்வோனுக்கு அவனுடைய சுயமே ஒரு விக்கிரகமாகயிருக்கிறது. அவன் தன்னைப் பெருமைப்படுத்தி, தனக்கே விக்கிரகாராதனை செய்கிறான்.

கர்த்தரே இந்த உலகத்தை சிருஷ்டித்தவர்., நாம் இந்த உலகத்தில் ஒன்றையும் சிருஷ்டிக்கவில்லை. இந்த உலகத்திலுள்ளது எதுவுமே நமக்கு சொந்தமானதல்ல. நாம் இந்த உலகத்திற்குள் வரும்போதும் நிர்வாணியாகவே வந்தோம். இந்த உலகத்தைவிட்டு போகும்போதும் நிர்வாணியாகவே போவோம். நாம் ஒன்றையும் கொண்டு வந்ததுமில்லை. இங்கிருந்து ஒன்றையும் கொண்டுபோவதுமில்லை. பார்வோனோ தன்னுடைய ஆணவத்தினால், "என் நதி என்னுடையது, நான் அதை எனக்காக உண்டு பண்ணினேன்" என்று சொல்லுகிறான்.

இந்தப் பிரபஞ்சத்தில் அநேகர் பார்வோனைப்போலவே தங்கள் சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கர்த்தருடைய ஆளுகைக்கு தங்களை ஒப்புக்கொடுக்காமல், தங்களைத் தாங்களே ஆளுகை செய்யவேண்டும் என்று நினைக்கிறார்கள். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. அதுபோலவே சுயசிநேகமும் தேவனுக்கு விரோதமான பகையாகவே இருக்கிறது.

தன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசும் பார்வோனுக்கு விரோதமாக கர்த்தர் வருகிறார். கர்த்தர் பார்வோனை "பெரிய முதலையே" என்று சொல்லுகிறார்.

"இதோ, நான் உனக்கு விரோதமாய் வந்து, உன் வாயிலே துறடுகளை மாட்டி, உன் நதிகளின் மச்சங்களை உன் செதிள்களில் ஒட்டிக்கொள்ளும்படி செய்து, உன்னை உன் நதிகளின் நடுவிலிருந்து தூக்கிவிடுவேன்; உன் நதிகளின் மச்சங்களெல்லாம் உன் செதில்களில் ஒட்டிக்கொண்டிருக்கும். உன்னையும் உன் நதிகளின் எல்லா மச்சங்களையும் வனாந்தரத்திலே போட்டுவிடுவேன்; வெட்டவெளியிலே விழுவாய்; நீ சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை; உன்னை பூமியின் மிருகங்களுக்கும் ஆகாயத்தின் பறவைகளுக்கும் இரையாகக் கொடுப்பேன்" (எசே 29:3-5) என்று கர்த்தர் பார்வோனுக்கு விரோதமாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவனுக்கு கிருபையளிக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக வல்லமையினால் இருதயத்தில் பெருமையும், அகந்தையுமுள்ளவர்களை தாழ்த்துகிறார். பார்வோன் இருபத்தைந்து வருஷங்களாக எகிப்து தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். அவன் பல தேசங்கள்மீது யுத்தம்பண்ணி, தன்னுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டான். தன்னுடைய ராஜ்யத்திலிருந்து தேவனால்கூட தன்னை வெளியேற்ற முடியாது என்று பார்வோன் ஆணவமாய்ச் சொல்லுகிறான்.

கர்த்தரோ பார்வோனுடைய வாயில் துறடுகளை மாட்டி, அவனுடைய நதிகளின் மச்சங்களை, அவன் செதிள்களில் ஒட்டிக்கொள்ளும்படி செய்து, அவனை அவனுடைய நதிகளின் நடுவிலிருந்து தூரத்திவிடுவார். அவனுடைய நதிகளின் மச்சங்களெல்லாம் அவனை விட்டு விலக்கப்படும். அவனுடைய வேலையாட்கள், அவனுடைய யுத்தவீரர்கள் எல்லோரும் அவனை விட்டு விலகிப்போய்விடுவார்கள். இவர்கள் எல்லோரும் பார்வோனை சார்ந்திருந்தார்கள். பார்வோனுக்கு கீழ்ப்படிந்திருந்தார்கள்.

பார்வோனுடைய யுத்தவீரர்கள், அவனுடைய செதிள்களில் ஒட்டிக்கொண்டிருந்தார்கள். ஜீவனானாலும், மரணமானாலும் அவனோடு கூடவே இருப்பதாக தீர்மானம்பண்ணியிருந்தார்கள். அவனுடைய நதிகளின் மச்சங்களெல்லாம் அவனுடைய செதில்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். பார்வோனுடைய யுத்தவீரர்கள் அவனோடு கூட ஒட்டிக்கொண்டிருப்பார்கள்.

கர்த்தர் பார்வோனுடைய வாயிலே துறடுகளை மாட்டி, நதிக்கு வெளியே போட்டுவிடுவார். அப்போது அவனோடுகூட ஒட்டிக்கொண்டிருக்கிற அவனுடைய யுத்த வீரரும் நதிக்கு வெளியே தூக்கி எரியப்படுவார்கள். "உன்னையும் உன் நதிகளின் எல்லா மச்சங்களையும் வனாந்தரத்திலே போட்டுவிடுவேன், வெட்ட வெளியிலே விழுவாய்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பார்வோனும் அவனுடைய சேனையும் வனாந்தரத்திலே மரித்துப்போவார்கள். அவர்கள் பூமியின் மிருகங்களுக்கும், ஆகாயத்தின் பறவைகளுக்கும் இரையாகக் கொடுக்கப்படுவார்கள். அவர்களை யாரும் சேர்த்துக்கொள்ளவும் மாட்டார்கள். அவர்கள் வனாந்தரத்திலே தூக்கியெரிப்பட்டவர்களாக கிடப்பார்கள்.

கர்த்தர் பார்வோனுக்கு விரோதமாக சொன்ன தீர்க்கதரிசனம் சீக்கிரமாய் நிறைவேறிற்று. பார்வோன் லிபியாவின் ராஜாவாகிய அரிக்கோசுக்கு ஆதரவாக யுத்தம்பண்ணினான். கிரேனியர்கள் லிபியரோடு யுத்தம்பண்ணினார்கள். பார்வோனும் அரிகோசுக்கு ஆதரவாக லிபியரோடு யுத்தம்பண்ணினான். யுத்தத்தில் பார்வோனுக்கு தோல்வி உண்டாயிற்று. எகிப்து தேசத்தில் குழப்பம் உண்டாயிற்று.

தன்னுடைய தேசத்தில் தனக்கு விரோதமாக ஒருவரும் எழும்பமாட்டார்கள் என்று பார்வோன் உறுதியாய் நம்பினான். ஆனால் எகிப்து தேசத்தாரோ பார்வோனுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். அவனை சிங்காசனத்திலிருந்து தூக்கி எரிந்துவிட்டார்கள்.

"உன்னையும், உன் நதிகளின் எல்லா மச்சங்களையும் வனாந்தரத்திலே போட்டுவிடுவேன், வெட்ட வெளியிலே விழுவாய்" *(எசே 29:5)* என்று கர்த்தர் சொன்ன பிரகாரமாக, பார்வோனும் அவனுடைய சேனையும் அரண்மனையிலிருந்து வெளியே தூக்கி எரியப்பட்டார்கள்.

கர்த்தருக்கு எகிப்தின்மீது வழக்கு இருக்கிறது. எகிப்தியர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை வஞ்சித்தார்கள். அவர்களை நம்ப வைத்து ஏமாற்றினார்கள். எகிப்தியர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நாணற்கோலாயிருந்தார்கள். "அவர்கள் உன்னைக் கையிலே பிடிக்கும்போது, நீ ஒடிந்துபோய், அவர்கள் விலாவையெல்லாம் பிளப்பாய்; அவர்கள் உன்மேல் சாயும்போது, நீ முறிந்து, அவர்கள் இடுப்பு முழுவதையும் மரத்துப்போகப்பண்ணுவாய்" *(எசே 29:7)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்தியரை நம்பினார்கள். எகிப்தியர்கள் உறுதியான விருட்சம்போன்றவர்கள் என்றும், அவர்கள்மீது சாய்ந்து இளைப்பாறலாம் என்றும் இஸ்ரவேல் வம்சத்தார் எதிர்பார்த்தார்கள். ஆனால் எகிப்தியர்களோ உறுதியான விருட்சங்களல்ல. அவர்கள் நாணற்கோலைப்போன்றவர்கள். நாணலில் சாய்ந்தால் அது முறிந்து கீழே விழும்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாதுகாப்புக்கு எகிப்தை நம்பினார்கள். அவர்கள் எதிர்பார்த்த பிரகாரம், எகிப்தியர்கள் அவர்களைப் பாதுகாக்கவில்லை. சிதேக்கியா யூதா தேசத்திற்கு ராஜவாயிருந்தான். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரோடு உடன்படிக்கையை முறித்துப்போடுமாறு, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் அவனுக்கு ஆலோசனை சொன்னான். நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தான். எகிப்தின் சேனை சிதேக்கியாவினுடைய பாதுகாப்புக்கு உதவியாக வரும் என்று வாக்குப்பண்ணினான். ஆனால் பார்வோன் தன்னுடைய வாக்குறுதியை காப்பாற்றவில்லை. தான் சொன்ன பிரகாரம் பார்வோன் சிதேக்கியாவுக்கு உதவிசெய்ய வரவில்லை. நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டு, நகரத்தை அக்கினியினால் எரித்துப்போட்டான். சிதேக்கியாவுக்கு விலங்குபோட்டு அவனை சிறைப்படுத்தினான்.

எகிப்தியர்கள் முறிந்த நாணலைப்போன்றவர்கள் என்று கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் முறிந்துபோன நாணலை நம்பி ஏமாந்தார்கள்.

"தெற்கேபோகிற மிருகஜீவன்களின் பாரம். துஷ்டசிங்கமும், கிழச்சிங்கமும், விரியனும், பறக்கிறகொள்ளி வாய்ச்சர்ப்பமும் வருகிறதும், நெருக்கமும் இடுக்கமும் அடைவிக்கிறதுமான தேசத்துக்கு, அவர்கள் கழுதை மறிகளுடைய முதுகின்மேல் தங்கள் ஆஸ்திகளையும், ஒட்டகங்களுடைய முதுகின்மேல் தங்கள் பொக்கிஷங்களையும், தங்களுக்கு உதவாத ஜனத்தண்டைக்கு ஏற்றிக்கொண்டு போகிறார்கள். எகிப்தியர் சகாயம்பண்ணுவது வியர்த்தமும் வீணுமாம்; ஆகையால், சும்மாயிருப்பதே அவர்களுக்குப் பெலன் என்று அதற்காகக் கூறுகிறேன்" *(ஏசா 30:6,7)*.

எகிப்து தேசம்
எசே 29:8-16

எசே 29:8. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் உன்மேல் பட்டயத்தை வரப்பண்ணி, உன்னில் மனுஷரையும் மிருகங்களையும் சங்காரம் பண்ணுவேன்.

எசே 29:9. எகிப்து தேசம் பாழும் வனாந்தரமுமாகும்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்; நதி என்னுடையது, நான் அதை உண்டாக்கினேன் என்று சொன்னானே.

எசே 29:10. ஆகையால், இதோ, நான் உனக்கும் உன் நதிகளுக்கும் விரோதமாக வந்து, மிக்தோல்முதல் எத்தியோப்பியாவின் எல்லையிலுள்ள செவெனே வரைக்கும் எகிப்துதேசத்தை அவாந்தரமும் பாழுமான வனாந்தரங்களாக்குவேன்.

எசே 29:11. மனுஷனுடைய கால் அதைக் கடப்பதுமில்லை, மிருகஜீவனுடைய கால் அதை மிதிப்பதுமில்லை; அது நாற்பது வருஷம் குடியற்றிருக்கும்.

எசே 29:12. எகிப்துதேசத்தைப் பாழாய்ப்போன தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போகப்பண்ணுவேன்; அதின் பட்டணங்கள் அவாந்தரமாக்கப்பட்ட பட்டணங்களின் நடுவிலே நாற்பது வருஷம் பாழாய்க் கிடக்கும்; நான் எகிப்தியரை ஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, அவர்களை தேசங்களுக்குள்ளே தூற்றிவிடுவேன்.

எசே 29:13. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நாற்பது வருஷம் முடியும்போது, நான் எகிப்தியரை அவர்கள் சிதறுண்டிருக்கிற ஜனங்களிடத்திலிருந்து சேர்த்துக்கொண்டு,

எசே 29:14. எகிப்தியரின் சிறையிருப்பைத் திருப்பி, அவர்களை அவர்களுடைய ஜநநதேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பி வரப்பண்ணுவேன்; அங்கே அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள்.

எசே 29:15. அது இனி ஜாதிகளின் மேல் தன்னை உயர்த்தாமல், மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும்; அவர்கள் இனி ஜாதிகளை ஆளாதபடிக்கு அவர்களைக் குறுகிப்போகப்பண்ணுவேன்.

எசே 29:16. அவர்களின் பிறகே போய், அவர்களை நோக்கிக் கொண்டிருக்கிறதினால் இஸ்ரவேல் வம்சத்தார் எனக்குத் தங்கள் அக்கிரமத்தை நினைப்பூட்டாதபடிக்கு, இனி அவர்கள் இவர்களுடைய நம்பிக்கையாயிராமற்போவார்கள்; அப்பொழுது நான் கர்த்தராகிய ஆண்டவர் என்று அறிந்து கொள்வார்கள் என்கிறார் என்று சொல் என்றார்.

எகிப்து தேசம் பாழும் வனாந்தரமுமாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் "நதி என்னுடையது, நான் அதை உண்டாக்கினேன்" (எசே 29:9) என்று பெருமையாய்ச் சொன்னான். எகிப்தியரின் அழிவுக்கு அவர்களுடைய பெருமையே காரணம். கர்த்தர் எகிப்து தேசத்திற்கும் அதன் நதிகளுக்கும் விரோதமாக வருவார். "நதிகள்" என்னும் வார்த்தை ஜனங்களையும், ஜனக்கூட்டத்தையும் குறிக்கிறது.

"பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்" (வெளி 17:15).

கர்த்தர் எகிப்து தேசத்தின்மேல் பட்டயத்தை வரப்பண்ணுவார். எகிப்திலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் சங்காரம் பண்ணுவார். அந்நிய தேசத்தாரோடு நடைபெறும் யுத்தத்தினாலும், உள்நாட்டு கலவரத்தினாலும் ஏராளமான ஜனங்கள் செத்துப்போவார்கள். எகிப்து தேசம் பாழும் வனாந்தரமுமாகும்.

"இதோ, நான் உனக்கும் உன் நதிகளுக்கும் விரோதமாக வந்து, மிக்தோல்முதல் எத்தியோப்பியாவின் எல்லையிலுள்ள செவெனே வரைக்கும் எகிப்துதேசத்தை அவாந்தரமும் பாழுமான வனாந்தரங்களாக்குவேன். மனுஷனுடைய கால் அதைக் கடப்பதுமில்லை, மிருகஜீவனுடைய கால் அதை மிதிப்பதுமில்லை; அது நாற்பது வருஷம் குடியற்றிருக்கும்" (எசே 29:10,11) என்று கர்த்தர் எகிப்திற்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தைப்போலவே இன்னும் அநேக ஜனங்கள் பாழாய்ப்போயிருக்கும். அந்த ஜனங்களுக்கு நடுவே எகிப்து தேசமும் பாழாய்க்கிடக்கும். "எகிப்துதேசத்தைப் பாழாய்ப்போன தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போகப்பண்ணுவேன்; அதின் பட்டணங்கள் அவாந்தரமாக்கப்பட்ட பட்டணங்களின் நடுவிலே நாற்பது வருஷம் பாழாய்க் கிடக்கும்; நான் எகிப்தியரை ஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, அவர்களை தேசங்களுக்குள்ளே தூற்றிவிடுவேன்" (எசே 29:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் ராஜா எகிப்து தேசத்தின்மீது யுத்தம்பண்ணுவான். எகிப்து தேசம் பாழாய்ப்போகும். அது பாழும் வனாந்தரமுமாகும். எகிப்து தேசத்தார் மற்ற தேசங்கள் மத்தியிலே சிதறிப்போவார்கள். தங்களுக்கு மிகுந்த செல்வாக்கும், பாதுகாப்பும் இருக்கிறது என்று எகிப்தியர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர்களால் கல்தேயருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. அவர்கள் ஜாதிகளுக்குள்ளே சிதறி ஓடிப்போகிறார்கள்.

எகிப்து தேசம் பாழாய்ப்போவதை கர்த்தர் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் ஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கப்பட்டிருந்தாலும், நாற்பது வருஷம் முடியும்போது, கர்த்தர் எகிப்தியரை அவர்கள் சிதறுண்டிருக்கிற ஜனங்களிடத்திலிருந்து சேர்த்துக்கொள்வார்.

கர்த்தர் எகிப்தியரின் சிறையிருப்பைத் திருப்புவார். அவர்களை அவர்களுடைய ஜநநதேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பி வரப்பண்ணுவார்; அங்கே அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள் (எசே 29:14). எகிப்தியரின் எண்ணிக்கை குறைந்துபோகும். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த எகிப்தியர்கள் சொற்ப எண்ணிக்கையிலிருப்பார்கள். அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள். எகிப்து மறுபடியும் ராஜ்யமாயிருக்கும். ஆனால் அது ஏற்கெனவே இருந்ததுபோல பெரிய ராஜ்யமாயிராமல், அற்பராஜ்யமாயிருக்கும்.

எகிப்து இனிமேல் ஜாதிகளின்மேல் தன்னை உயர்த்தாது. அது மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும். எகிப்தியர்களால் இனிமேல் மற்ற ஜாதிகளை ஆளுகை செய்ய முடியாது. கர்த்தர் எகிப்தியரை குறுகிப்போகப்பண்ணுவார் (எசே 29:15).

எகிப்தியரால் இனிமேல் கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்களை வஞ்சிக்க முடியாது. இஸ்ரவேல் வம்சத்தார் இனிமேல் எகிப்தியரை நம்பமாட்டார்கள். அவர்கள் எகிப்தியரின் பிறகே போகமாட்டார்கள். அவர்கள் தங்கள் பாதுகாப்புக்கு இனிமேல் எகிப்தை நம்பமாட்டார்கள். எகிப்து தேசம் இப்போது அற்ப ராஜ்யமாயிருக்கிறது. அது குறுகிப்போயிருக்கிறது. எகிப்து சேதத்தார் தங்களை பாதுகாக்க முடியாது என்பதை இஸ்ரவேல் வம்சத்தார் புரிந்துகொள்வார்கள்.

கர்த்தரே தங்களுடைய ஆண்டவர் என்றும், அவரே தங்களை பாதுகாக்கிறவர் என்பதையும் இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் இனிமேல் தங்கள் அக்கிரமத்தை கர்த்தருக்கு நினைப்பூட்டமாட்டார்கள். எகிப்தியர்களும் இனிமேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நம்பிக்கையாயிருக்க மாட்டார்கள். கர்த்தர் எகிப்து தேசத்தை குறுகிப்போகப் பண்ணுவதினால், இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்தை நோக்கிப் பார்க்காமல் கர்த்தரை நோக்கிப் பார்ப்பார்கள். அவர்கள் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனை நம்பாமல், தங்கள் ராஜாதி ராஜாவாகிய கர்த்தரை நம்புவார்கள்.

நேபுகாத்நேச்சார்
எசே 29:17-20

எசே 29:17. இருபத்தேழாம் வருஷம் முதலாம் மாதம் முதலாந்தேதியிலே, கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்.

எசே 29:18. மனுபுத்திரனே, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தீருவின் முன்னே தன் சேனையினிடத்தில் கடும் ஊழியம் வாங்கினான்; ஒவ்வொரு தலையும் மொட்டையாயிற்று; ஒவ்வொரு தோள்பட்டையின் தோலும் உரிந்துபோயிற்று; ஆனாலும் அவன் தீருவுக்கு விரோதமாகச் செய்த ஊழியத்தினாலே அவனுக்காவது அவன் சேனைக்காவது கூலி கிடைக்கவில்லை.

எசே 29:19. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு எகிப்துதேசத்தைக் கொடுக்கிறேன்; அவன் அதின் ஏராளமான ஜனத்தைச் சிறைபிடித்து அதின் ஆஸ்தியைச் சூறையாடி, அதின் கொள்ளைப்பொருளை எடுத்துக்கொள்வான்; இது அவனுடைய சேனைக்குக் கூலியாயிருக்கும்.

எசே 29:20. அவன் அதிலே செய்த வேலைக்கு எகிப்துதேசத்தை நான் அவனுக்குக் கூலியாகக் கொடுத்தேன்; எனக்காக அதைச் செய்தார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசேக்கியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற இருபத்தேழாம் வருஷம், முதலாம் மாதம், முதலாம் தேதியிலே, கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில் எசேக்கியேல் ஏற்கெனவே கர்த்தரிடத்திலிருந்து செய்தியைப் பெற்றுக்கொண்டான். பதினாறு வருஷங்கள் சென்றபின்பு, இப்போது மறுபடியுமாய், கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்தை முற்றிலுமாய் அழித்துப்போட்டான். அதன் பின்பு அம்மோனியர், மோவாபியர் ஆகியோர்மீது அவன் யுத்தம்பண்ணினான். நேபுகாத்நேச்சார் இவர்களை அழிப்பதற்கு இரண்டு யுத்தங்களை மேற்கொண்டான் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். இதன் பின்பு நேபுகாத்நேச்சார் பதிமூன்று வருஷங்களாக தீருவை முற்றிக்கையிட்டான்.

இந்தக் காலத்தில் எகிப்து தேசத்தார் கிரேனியரோடு யுத்தம்பண்ணினார்கள். இந்த யுத்தத்தில் எகிப்தியருக்கு ஏராளமான பொருள்சேதமும், உயிர்ச்சேதமும் உண்டாயிற்று. எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பலவீனமடைந்தான்.

நேபுகாத்நேச்சார் தீருவை முற்றிக்கையிட்ட பதிமூன்று வருஷங்களுக்கு பின்பு, அவன் தீருவைக் கைப்பற்றுகிறான். இக்காலத்தில் கர்த்தர் எசேக்கியேலுக்கு இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லுகிறார். பதினைந்து வருஷங்களுக்கு முன்பு, எகிப்து தேசத்தின் அழிவைப்பற்றி, கர்த்தர் எசேக்கியேலுக்கு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்தினார். அந்த தீர்க்கதரிசனம் இப்போது நேபுகாத்நேச்சார் மூலமாய் நிறைவேறுகிறது.

எகிப்து தேசத்தின் அழிவைப்பற்றி, இங்கு சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனம், எசே 30:20 - ஆவது வசனம் வரையிலும் எழுதப்பட்டிருக்கிறது. இதுவே எசேக்கியேல் சொன்ன கடைசி தீர்க்கதரிசனமாகும். இந்த தீர்க்கதரிசனம் இந்த அதிகாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எகிப்து தேசத்திற்கு விரோதமாகச் சொல்லப்பட்ட எல்லா தீர்க்கதரிசனங்களும், ஒரே பகுதியில் மொத்தமாகச் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது.

நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்திற்கு விரோதமாக வருகிறான். கர்த்தர் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு எகிப்து தேசத்தைக் கொடுக்கிறார். நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தில் ஏராளமான ஜனத்தைச் சிறைபிடித்து அதின் ஆஸ்தியைச் சூறையாடி, அதின் கொள்ளைப்பொருளை எடுத்துக்கொள்வான்; இது நேபுகாத்நேச்சாருடைய சேனைக்குக் கூலியாயிருக்கும் (எசே 29:19).

நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக தீருவுக்கு விரோதமாக முற்றிக்கையிட்டு அதைக் கைப்பற்றினான். பாபிலோன் ராஜா தீருவில் செய்த வேலைக்கு, கர்த்தர் எகிப்து தேசத்தை அவனுக்கு கூலியாகக் கொடுக்கிறார். நேபுகாத்நேச்சாரும், அவனுடைய சேனையிலுள்ளவர்களும், கர்த்தருக்காகவே தீருவை முற்றிக்கையிட்டார்கள். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே அவர்கள் தீருவின்மீது யுத்தம்பண்ணினார்கள்.

தீருவின் யுத்தவீரரால் கல்தேயரின் சேனையை எதிர்த்து நிற்கமுடியவில்லை. நேபுகாத்நேச்சார், தீருவை எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல், எளிதாக ஜெயித்தான். எரேமியா தீர்க்கதரிசி நேபுகாத்நேச்சாருக்கு தீருவின்மீது கிடைக்கும் ஜெயத்தைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"எகிப்தின் தேவர்களுடைய கோவில்களில் அக்கினியைக் கொளுத்துவேன்; அவன் அவைகளைச் சுட்டெரித்து, அவைகளைச் சிறைபிடித்துப் போய், ஒரு மேய்ப்பன் தன் கம்பளியைப் போர்த்துக்கொள்ளுமாப்போல் எகிப்துதேசத்தைப் போர்த்துக் கொண்டு, அவ்விடத்திலிருந்து சுகமாய்ப் புறப்பட்டுப்போவான்" (எரே 43:12).

நேபுகாத்நேச்சார் தீருவுக்கு விரோதமாக மிகவும் கடினமாய் யுத்தம்பண்ணினான். அப்போது தன் சேனையினிடத்தில் அவன் கடினமாய் ஊழியம் வாங்கினான். ஒவ்வொரு தலையும் மொட்டையாயிற்று; ஒவ்வொரு தோள்பட்டையின் தோலும் உரிந்துபோயிற்று; ஆனாலும் அவன் தீருவுக்கு விரோதமாகச் செய்த ஊழியத்தினாலே அவனுக்காவது அவன் சேனைக்காவது கூலி கிடைக்கவில்லை (எசே 29:18).

நேபுகாத்நேச்சார் தீருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, அவனுடைய சேனையில் ஏராளமான உயிர்ச்சேதமுண்டாயிற்று. தீருவைப் பிடிப்பதற்கு அவன் மிகவும் பிரயாசப்பட்டான். தன்னுடைய இராணுவத்தாரை கடினமாய் வேலை வாங்கினான். யுத்தம் கடலில் நடைபெற்றது. கடல் அலைகளும் நேபுகாத்நேச்சாருக்கு சாதகமாகயில்லை. இதனால் கல்தேயருடைய தோள்பட்டையின் தோல்களெல்லாம் உரிந்துபோயிற்று. கல்தேயர்கள் புயல்காற்றையும், கடல் அலைகளையும் சமாளித்து, மிகவும் கஷ்டப்பட்டு தீருவைப் பிடித்தார்கள்.

நேபுகாத்நேச்சார் தீருவுக்கு விரோதமாக அதிக பிரயாசப்பட்டு யுத்தம்பண்ணினாலும், அவனுக்காவது, அவன் சேனைக்காவது கூலி கிடைக்கவில்லை. நேபுகாத்நேச்சாரின் சேனைகள் தீருவுக்குள் பிரவேசித்தார்கள். ஆனால் தீருவிலே பொக்கிஷங்கள் இல்லை. தீருவின் மனுஷர், தங்களுக்கு விரோதமாக கல்தேயர் வருவதற்கு முன்பாகவே, தங்கள் பொக்கிஷங்களை, கப்பல்களில் ஏற்றி, மறைவான இடத்திற்கு கொண்டுபோய் ஒளித்துவைத்துவிட்டார்கள். தங்களிடத்தில் மீதமாயிருந்த பொருட்களையும் கடலிலே தூக்கி எரிந்துவிட்டார்கள். இப்போது தீருவிலே ஒன்றுமே இல்லை. வெறும் வீடுகளும், சுவர்களும்தான் இருக்கிறது. நேபுகாத்நேச்சாருக்கு தீருவிலே பொருளாதார லாபம் எதுவும் கிடைக்கவில்லை.

நேபுகாத்நேச்சாருக்கு தீருவிலே ஒன்றும் கிடைக்காவிட்டாலும், கர்த்தர் அவனுக்கு எகிப்து தேசத்தை கூலியாகக் கொடுக்கிறார். எகிப்திலே ஐசுவரியம் நிரம்பியிருக்கிறது. நேபுகாத்நேச்சார் கர்த்தருக்காக தீருவின்மீது யுத்தம் பண்ணினான். அதற்கான கூலியை, கர்த்தர் எகிப்து தேசத்தின் மூலமாய் அவனுக்குக் கொடுக்கிறார். நேபுகாத்நேச்சார் தீருவிலே இழந்துபோன எல்லா பொருட்களையும், எகிப்து தேசத்திலே பெற்றுக்கொள்கிறான்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் கொம்பு
எசே 29:21

எசே 29:21. அந்நாளிலே நான் இஸ்ரவேல் வம்சத்தாரின் கொம்பை முளைக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே தாராளமாய்ப் பேசும் வாயை உனக்குக் கட்டளையிடுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்றார்.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு என்றுமே உள்ளது. கடல் அலைகள் எவ்வளவுதான் உயரமாய் எழும்பி வந்தாலும், அது மறுபடியும் கடலுக்குள் போகும். கடலுக்குள் போன அலைகள் மறுபடியும் கடற்கரையின் பக்கமாக வரும். நேபுகாத்நேச்சார் இஸ்ரவேல் தேசத்தை அழித்துப்போட்டான். கர்த்தரோ இஸ்ரவேல் தேசத்தை திரும்பவும் எடுத்துக்கட்டுகிறார்.

நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தை ஜெயித்தான். அவனுடைய பேரும் புகழும் உயர்ந்தது. ஆனாலும் ஒரு வருஷத்திற்கு பின்பு நேபுகாத்நேச்சார் பயித்தியக்காரனானான் (தானியேல் 4-ஆவது அதிகாரம்). நேபுகாத்நேச்சார் உயர்ந்திருந்தபோது, இஸ்ரவேல் வம்சத்தார் தாழ்ந்திருந்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் தாழ்ந்திருந்தாலும், கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேல் வம்சத்தாரின் கொம்பை முளைக்கப்பண்ணுகிறார்.

இஸ்ரவேலின் பிரபுக்கள், இஸ்ரவேல் வம்சத்தாரின் கொம்புகளாயிருக்கிறார்கள். அவர்களுடைய பிரபுக்களே அவர்களுக்கு பெலனாகவும் மகிமையாகவும் இருக்கிறார்கள். பாபிலோன் தேசத்திலே தானியேலும், அவனுடைய சிநேகிதர்களும் உயர்த்தப்பட்டபோது, இஸ்ரவேல் வம்சத்தாரின் கொம்பு முளைக்கிறது.

"தானியேல் ராஜாவை வேண்டிக்கொண்டதின்பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான்; தானியேலோவென்றால் ராஜாவின் கொலுமண்டபத்தில் இருந்தான்" (தானி 2:49).

நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தை ஜெயித்தான். பாபிலோன் தேசத்திலே நேபுகாத்நேச்சாருக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரித்தது. அப்போது கர்த்தரும் தம்முடைய மகிமையை அங்கு வெளிப்படுத்தினார். எரியும் அக்கினி சூளையிலே கர்த்தருடைய பிரசன்னம் பிரத்தியட்சமாய் உண்டாயிற்று. கர்த்தருடைய மகிமை பாபிலோன் தேசத்திலே வெளிப்பட்டது. பாபிலோன் தேசத்தார் எல்லோரும், இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்கிறார்கள்.

"யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தைந்தாம் தேதியிலே, ஏவில்மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிருந்து வெளிப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி, அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய ஆசனத்தைத் தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக்களுடைய ஆசனங்களுக்கு மேலாகவைத்தான்" (எரே 52:31,32).

யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீன் பாபிலோன் தேசத்திலே உயர்த்தப்படுகிறான். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் கொம்பை அங்கு முளைக்கப்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை கனம்பண்ணுகிறார். "அவர்கள் நடுவிலே தாராளமாய்ப் பேசும் வாயை உனக்கு கட்டளையிடுவேன்" என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திலே தானியேலும், அவனுடைய சிநேகிதரும் பிரதானிகளாயிருக்கிறார்கள். அவர்கள் எசேக்கியேலுக்கு பாதுகாப்பாயிருக்கிறார்கள். எசேக்கியேலும் கர்த்தருடைய வார்த்தையை பயமில்லாமலும் தொடர்ந்து சொல்லுகிறார். எசேக்கியேல் தடையில்லாமல், விடுதலையோடு, கர்த்தருடைய ஊழியத்தை தாராளமாய்ச் செய்கிறார்.

30 அதிகாரம்

எசேக்கியேல் எகிப்து தேசத்திற்கு விரோதமாக தொடர்ந்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அக்காலத்தில் எகிப்து தேசம் செழித்திருந்தது. நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தையும், எகிப்தை ஆதரிக்கிற தேசங்களையும் முற்றிலுமாய் அழித்துப்போடுகிறான் (எசே 30:1-19).

எகிப்தின் அழிவுக்கு அதன் பாவங்களே காரணம். எகிப்து கொஞ்சம் கொஞ்சமாக பலவீனமடைகிறது. பாபிலோன் ராஜா எகிப்து தேசத்திற்குள் பிரவேசித்து அதை அழித்துப்போடுகிறான். எசேக்கியேல் எகிப்திற்கு விரோதமாக ஏற்கெனவே சொன்ன தீர்க்கதரிசன வாக்கியங்களை, இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார் (எசே 30:20-26).

எகிப்து தேசம்
எசே 30:1-19

எசே 30:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 30:2. மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் சொல்லு: கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், ஐயோ! ஆபத்துநாள் வருகிறதென்று அலறுங்கள்.

எசே 30:3. நாள் சமீபமாயிருக்கிறது; ஆம், கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது மந்தாரமான நாள், அது புறஜாதிகளுக்கு வரும் காலம்.

எசே 30:4. பட்டயம் எகிப்திலே வரும்; எகிப்திலே கொலையுண்கிறவர்கள் விழும்போது எத்தியோப்பியாவிலே மகாவேதனை உண்டாயிருக்கும்; அதின் ஏராளமான ஜனத்தைப் பிடித்துக்கொண்டுபோவார்கள். அதின் அஸ்திபாரங்கள் நிர்மூலமாக்கப்படும்.

எசே 30:5. எத்தியோப்பியரும், பூத்தியரும், லூத்தியரும், கலந்த கூட்டமாகிய அனைவரும், கூபியரும், உடன்படிக்கைக்குள்ளான தேசத்தின் புத்திரரும் அவர்களோடேகூடப் பட்டயத்தால் விழுவார்கள்.

எசே 30:6. எகிப்தை ஆதரிக்கிறவர்களும் விழுவார்கள்; அதினுடைய பலத்தின் முக்கியமும் தாழ்ந்துபோம் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதிலே மிகதோல்முதல் செவெனேவரைக்கும் பட்டயத்தினால் விழுவார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 30:7. பாழாய்ப்போன தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போவார்கள்; அவாந்தரமாக்கப்பட்ட பட்டணங்களில் அவர்கள் பட்டணங்களும் அவாந்தரமாகும்.

எசே 30:8. நான் எகிப்திலே தீக்கொளுத்தும்போதும், உனக்குத் துணைநின்ற யாவரும் முறிக்கப்படும்போதும், நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 30:9. நிர்விசாரமான எத்தியோப்பியரைத் தத்தளிக்கப்பண்ண அந்நாளிலே என் கட்டளையினால் தூதாட்கள் கப்பல்களிலே போவார்கள்; அப்பொழுது எகிப்தின் நாளிலே உண்டானதுபோல அவர்களுக்குள்ளே மகா வேதனை உண்டாயிருக்கும்; இதோ, அது வருகிறது.

எசே 30:10. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக்கொண்டு எகிப்தின் சந்ததியை ஒழியப்பண்ணுவேன்.

எசே 30:11. இவனும் இவனோடேகூட ஜாதிகளில் மகா பலசாலிகளான இவனுடைய ஜனங்களும் தேசத்தை அழிப்பதற்காக ஏவப்பட்டு வந்து, தங்கள் பட்டயங்களை எகிப்துக்கு விரோதமாக உருவி, கொலையுண்டவர்களாலே தேசத்தை நிரப்புவார்கள்.

எசே 30:12. அப்பொழுது நான் நதிகளை வற்றிப்போகப்பண்ணி, தேசத்தைத் துஷ்டர்களின் கையிலே விற்று, தேசத்தையும் அதிலுள்ள யாவையும் அந்நிய தேசத்தாரின் கையால் பாழாக்கிப்போடுவேன்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்.

எசே 30:13. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் நரகலான விக்கிரகங்களை அழித்து, நோப்பின் சிலைகளை ஒழியப்பண்ணுவேன்; இனி எகிப்துதேசத்தில் ஒரு அதிபதியும் இரான்; நான் எகிப்துதேசத்தில் பயமுண்டாக்கி,

எசே 30:14. பத்ரோசைப் பாழாக்கி, சோவானிலே தீக்கொளுத்தி, நோபட்டணத்தில் ஆக்கினைகளைச் செய்து,

எசே 30:15. எகிப்தின் பெலனாகிய சீனின்மேல் என் உக்கிரத்தை ஊற்றி, நோபட்டணத்தின் ஏராளமான ஜனத்தைச் சங்கரிப்பேன்.

எசே 30:16. எகிப்தில் தீக்கொளுத்துவேன்; சீன் மகா வேதனை அடையும்; நோபட்டணம் தகர்ந்து இடிந்துபோகும்; நோப்புக்குத் தினந்தோறும் நெருக்கங்களுண்டாகும்.

எசே 30:17. ஆவென், பிபேசெத் என்கிற பட்டணங்களின் வேலைக்காரர் பட்டயத்தால் விழுவார்கள்; அவைகளின் குடிகள் சிறையிருப்புக்குப் போவார்கள்.

எசே 30:18. எகிப்தின் நுகங்களை நான் முறிக்கும்போதும், அதினுடைய பெலத்தின் முக்கியம் அதிலே ஓயும்போதும், மந்தாரம் அதை மூடும்; தக்பானேசிலே பகல் இருண்டுபோகும்; அதின் குமாரத்திகள் சிறைப்பட்டுப் போவார்கள்.

எசே 30:19. இப்படி எகிப்திலே நியாயத்தீர்ப்புகளைச் செய்வேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் எகிப்து தேசத்திற்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எகிப்தின் அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம் முழுவதுமாய் வெளிப்படுத்தப்படுகிறது. எகிப்தின் அழிவு பூரணமாயிருக்கும். அது அழுகையும் புலம்பலும் நிரம்பியதாயிருக்கும். எகிப்து தேசத்தின் அழிவினால் மிகப்பெரிய வருத்தமும் துக்கமும் உண்டாகும்.

எகிப்து தேசத்திற்கு ஆபத்து நாள் வருகிறது. "ஐயோ ஆபத்து நாள் வருகிறது என்று அலறுங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். "நாள் சமீபமாயிருக்கிறது; ஆம், கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது மந்தாரமான நாள், அது புறஜாதிகளுக்கு வரும் காலம்" (எசே 30:3) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. எகிப்து தேசத்திற்கு ஒரு காலம் இருந்ததுபோல, இப்போது கர்த்தர் எகிப்தை அழிக்கும் காலமாயிருக்கிறது.

எகிப்தியர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட நாளிலே, தங்களுக்கு இஷ்டமானதை செய்தார்கள். தங்களை சுற்றிலுமிருந்த அண்டை தேசத்தாரையெல்லாம் அழித்துப்போட்டார்கள். இப்போது எகிப்திற்கு விரோதமாக கர்த்தருடைய நாள் வந்திருக்கிறது. அது சமீபமாயிருக்கிறது. இந்த நாள் எகிப்திற்கு மந்தாரமான நாளாயிருக்கும். இது இருள் சூழ்ந்த நாளாயிருக்கும். புயல்காற்று வேகமாய் வந்து அழித்துப்போடுவதுபோல, கர்த்தருடைய கோபம் எகிப்திற்கு விரோதமாக வேகமாய் வந்து, அந்த தேசத்தை அழித்துப்போடும்.

கர்த்தருடைய நாள் புறஜாதிகளுக்கு வரும் காலமாயிருக்கும். புறஜாதிகள் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். தங்கள் பிள்ளைகளை தீக்கடக்கப்பண்ணினார்கள். அவர்களுடைய துன்மார்க்கமான காரியங்களுக்கு விரோதமாக, கர்த்தர் தம்முடைய நீதியை அவர்கள்மீது சரிக்கட்டுகிறார்.

கர்த்தருடைய நாளிலே எகிப்திற்கு அழிவு வரும். எகிப்தை ஆதரிக்கிற எல்லா தேசத்திற்கும் அழிவு வரும். பட்டயம் எகிப்திலே வரும்; எகிப்திலே கொலையுண்கிறவர்கள் விழும்போது எத்தியோப்பியாவிலே மகாவேதனை உண்டாயிருக்கும்; அதின் ஏராளமான ஜனத்தைப் பிடித்துக்கொண்டுபோவார்கள். அதின் அஸ்திபாரங்கள் நிர்மூலமாக்கப்படும் (எசே 30:4).

பட்டயம் எகிப்திலே வரும்போது, எத்தியோப்பியரும், பூத்தியரும், லூத்தியரும், கலந்த கூட்டமாகிய அனைவரும், கூபியரும், உடன்படிக்கைக்குள்ளான தேசத்தின் புத்திரரும் அவர்களோடேகூடப் பட்டயத்தால் விழுவார்கள் (எசே 30:5).

எகிப்திலே பட்டயம் வரும்போது, எகிப்தை ஆதரிக்கிறவர்களும் விழுவார்கள். எகிப்தினுடைய பலத்தின் முக்கியத்துவம் தாழ்ந்துபோகும். எகிப்திலே கொலையுண்கிறவர்கள் விழும்போது எத்தியோப்பியாவிலே மகாவேதனை உண்டாயிருக்கும்.

எகிப்து தேசத்திலே அதை ஆதரிக்கிற மற்ற தேசத்தாரும் இருக்கிறார்கள். அவர்கள் எகிப்தின் இராணுவத்தை சார்ந்திருக்கிறார்கள். இவர்களெல்லோரும் எகிப்து தேசத்தாரோடு கலந்த கூட்டமாயிருக்கிறார்கள். இஸ்ரவேலிலும், யூதாவிலும் நேபுகாத்நேச்சாரின் பட்டயத்திற்கு தப்பினவர்கள்கூட எகிப்து தேசத்திலே இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்கள். இவர்கள் கர்த்தருடைய கட்டளையைமீறி எகிப்து தேசத்திற்கு போனார்கள். எகிப்து தேசம் அழியும்போது, அந்த தேசத்திலிருக்கிற யூதாதேசத்தாரில் மீதியானவர்களும் அழிந்துபோவார்கள்.

எகிப்து தேசத்திலிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர், "உடன்படிக்கைக்குள்ளான தேசத்தின் புத்திரர்" (எசே 30:5) என்று அழைக்கிறார். எகிப்தியர்கள் பட்டயத்தால் விழும்போது, இவர்களும் அவர்களோடேகூட பட்டயத்தால் விழுவார்கள்.

"நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்" (அப் 3:25).

எகிப்திற்கு அழிவு வரும்போது, அதன் இராணுவத்தை நம்பின எல்லோருக்கும் அழிவு வரும். எகிப்தியர் பட்டயத்தால் விழும்போது, எகிப்தை ஆதரிக்கிறவர்களும் பட்டயத்தால் விழுவார்கள். அவர்கள் மிகதோல்முதல் செவெனேவரைக்கும் பட்டயத்தினால் விழுவார்கள் (எசே 30:6). அவர்கள் பாழாய்ப்போன தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போவார்கள்; அவாந்தரமாக்கப்பட்ட பட்டணங்களில் அவர்கள் பட்டணங்களும் அவாந்தரமாகும் (எசே 30:7).

கர்த்தர் எகிப்திலே தீக்கொளுத்துவார். அப்போது எகிப்திற்கு துணை நின்ற யாவரும் முறிக்கப்படுவார்கள். அவர்கள் அழியும்போது, இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் (எசே 30:8). கர்த்தர் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக்கொண்டு எகிப்தின் சந்ததியை ஒழியப்பண்ணுவார் (எசே 30:10). கர்த்தர் நிர்விசாரமான எத்தியோப்பியரை தத்தளிக்கப்பண்ணுவார். அந்நாளில் கர்த்தருடைய கட்டளையினால், தூதாட்கள் கப்பல்களிலே போவார்கள். எகிப்தின் நாளிலே, எகிப்தியருக்கு மகாவேதனை உண்டாயிருக்கும். அதுபோலவே, எத்தியோப்பியாவின் நாளிலே, எத்தியோப்பியருக்குள்ளே மகாவேதனை உண்டாயிருக்கும். "அந்த நாள் இதோ வருகிறது" (எசே 30:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தில் நைல் நதி பாய்ந்து ஓடுகிறது. இது பல கிளைகளாகப் பிரிந்து எகிப்து தேசத்தை செழிப்படையச் செய்கிறது. கர்த்தரோ எகிப்தின் நதிகளை வற்றிப்போகப்பண்ணுவார் (எசே 30:12). கர்த்தர் எகிப்தின் சந்ததியை ஒழியப்பண்ணுவார். ஜனம் பெருத்த எகிப்து தேசம், ஜனமில்லாத வனாந்தரமாகும். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக்கொண்டு, கர்த்தர் எகிப்து தேசத்தை அழிப்பார்.

நேபுகாத்நேச்சாரும், இவனோடேகூட ஜாதிகளில் மகா பலசாலிகளான இவனுடைய ஜனங்களும், எகிப்து தேசத்தை அழிப்பதற்காக வருவார்கள். அவர்கள் கர்த்தரால் ஏவப்பட்டு எகிப்திற்கு விரோதமாக வருவார்கள். அவர்கள் தங்கள் பட்டயங்களை எகிப்துக்கு விரோதமாக உருவி, கொலையுண்டவர்களாலே தேசத்தை நிரப்புவார்கள் (எசே 30:11).

கர்த்தர் எகிப்து தேசத்தைத் துஷ்டர்களின் கையிலே விற்றுப்போடுவார். எகிப்து தேசத்தையும் அதிலுள்ள யாவையும் அந்நிய தேசத்தாரின் கையால் பாழாக்கிப்போடுவார் (எசே 30:12).

எகிப்து தேசத்தில் ஏராளமான விக்கிரகங்கள் இருக்கிறது. எகிப்தியர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். தங்களுடைய விக்கிரகங்கள் கல்தேயரிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் என்று எகிப்தியர்கள் நம்புகிறார்கள். விக்கிரகங்களுக்கு ஜீவனில்லை. அவற்றிற்கு பெலனுமில்லை. எகிப்தியரின் விக்கிரகங்கள் அவர்களைப் பாதுகாக்காது.

கர்த்தர் எகிப்து தேசத்திலுள்ள நரகலான விக்கிரகங்களை அழித்துப் போடுவார். நோப்பின் சிலைகளை ஒழியப்பண்ணுவார் இனி எகிப்து தேசத்தில் ஒரு அதிபதியும் இரான்.

கர்த்தர் எகிப்துதேசத்தில் பயமுண்டாக்கி, பத்ரோசைப் பாழாக்கி, சோவானிலே தீக்கொளுத்தி, நோபட்டணத்தில் ஆக்கினைகளைச் செய்வார். எகிப்தின் பெலனாகிய சீனின்மேல் கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை ஊற்றி, நோபட்டணத்தின் ஏராளமான ஜனத்தைச் சங்கரிப்பார் (எசே 30:13-15).

எகிப்தியரின் விக்கிரகங்கள் அவர்களுக்கு உதவி செய்யாது. எகிப்து தேசத்திலுள்ள நரகலான விக்கிரகங்களை கர்த்தர் அழித்துப்போடுவார். பார்வோனுடைய குடும்பத்தாரும் எகிப்திற்கு ஆதரவாகயிருக்கமாட்டார்கள். எகிப்து தேசத்திலே பார்வோனின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அதிபதியும் ஜீவனோடிருக்கமாட்டான். "எகிப்து தேசத்தில் ஒரு அதிபதியும் இரான்" (எசே 30:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தார் தங்கள் சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். தங்களுடைய ஆயுதங்களையும், யுத்தவீரர்களையும் நம்புகிறார்கள். கர்த்தரோ அவர்களுடைய நம்பிக்கையை அவமாக்கிப்போடுகிறார். எகிப்து தேசத்திலே பயமுண்டாக்குகிறார். தங்களுடைய சுயபலத்தை நம்பிய எகிப்தியர்கள் இப்போது பயந்து நடுங்குகிறார்கள்.

கர்த்தர் எகிப்தில் தீக்கொளுத்துவார். சீன் மகா வேதனை அடையும்; நோபட்டணம் தகர்ந்து இடிந்துபோகும்; நோப்புக்குத் தினந்தோறும் நெருக்கங்களுண்டாகும். ஆவென், பிபேசெத் என்கிற பட்டணங்களின் வேலைக்காரர் பட்டயத்தால் விழுவார்கள்; அவைகளின் குடிகள் சிறையிருப்புக்குப் போவார்கள் (எசே 30:16,17).

கல்தேயர்கள் எகிப்தியரை தங்கள் பட்டயங்களினால் சர்வசங்காரம் பண்ணுவார்கள். தாங்கள் செத்துப்போனாலும், தங்களுடைய பின்சந்ததியார் தங்கள் தேசத்தை பாதுகாப்பார்கள் என்று எகிப்தியர்கள் நம்புகிறார்கள். ஆனால் கல்தேயரோ எகிப்து தேசத்திலுள்ள குமாரர்களையும் குமாரத்திகளையும் சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போகிறார்கள்.

கர்த்தர் எகிப்தின் நுகங்களை முறிப்பார். அதினுடைய பெலத்தின் முக்கியத்துவம் அதிலே ஒயும். மந்தாரம் அதை மூடும். தக்பானேசிலே பகல் இருண்டு போகும். அதின் குமாரரும், குமாரத்திகளும் சிறைப்பட்டுப்போவதினால், அவர்களுடைய வருங்காலத்து நம்பிக்கையும் அற்றுப்போகும். கல்தேயர்கள் எகிப்தியரை கொள்ளையிடும்போது, அவர்களுடைய நம்பிக்கைகளையும் கொள்ளையிடுகிறார்கள்.

கர்த்தர் எகிப்திலே தீக்கொளுத்துகிறார். எகிப்தியருக்கு துணை நின்ற யாவரையும் முறித்துப்போடுகிறார் (எசே 30:8) பாபிலோன் ராஜாவும் அவனுடைய சேனையும் எகிப்து தேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள். கர்த்தர் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை, தம்முடைய கருவியாகப் பயன்படுத்தி, எகிப்து தேசத்தை அழித்துப்போடுகிறார். எகிப்தின் சந்ததியை ஒழியப்பண்ணுகிறார்.

பாபிலோன் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தபோது, எகிப்தியர்கள் இஸ்ரவேலை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இப்போதோ எகிப்தியர்களால், தங்களைக்கூட பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. கல்தேயர்கள் எகிப்து தேசத்தின் எல்லா பகுதிகளையும் நாசம்பண்ணுகிறார்கள். எகிப்தின் பட்டணங்கள் தூரத்திலிருந்தாலும், அவை அரணிப்பாயிருந்தாலும், கல்தேயர் எல்லாவற்றையும் சர்வநாசம்பண்ணுகிறார்கள். கல்தேயரின் பட்டயம் எகிப்து தேசத்தின் வழியாக கடந்து வருகிறது.

எகிப்து தேசத்திலே கல்தேயர் அழித்துப்போட்ட பல பட்டணங்களின் பெயர்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன: பத்ரோஸ், சோவான், நோ, சீன், நோப், ஆவென், பிபேசெத், தக்பானேஸ் என்பனவாகும் (எசே 30:14-18). கல்தேயர் இந்தப் பட்டணங்களையெல்லாம் பாழாக்கிப்போடுகிறார்கள். கர்த்தர் எகிப்தின் நுகங்களை முறிக்கிறார். எகிப்து தேசத்தினுடைய பட்டணங்கள் அழிந்துபோகும்போது, அதினுடைய பலத்தின் முக்கியத்துவமும், அழிந்துபோகிறது.

கர்த்தர் எகிப்து தேசத்திலே நியாயத்தீர்ப்புகளைச் செய்கிறார். கல்தேயர் எகிப்து தேசத்தில் பிரவேசிக்கும் போது, எகிப்தியரில் அநேகர் தூரதேசங்களிலிருக்கிறார்கள். நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தின் பட்டணங்களை அழிக்கும்போது, எகிப்தியர்கள் எங்கே இருந்தாலும், அவர்களும் எகிப்திற்காக துக்கித்துப் புலம்புகிறார்கள். எகிப்தியரின் புலம்பலில் அவர்களும் பங்குபெறுகிறார்கள்.

கர்த்தர் எகிப்திலே நியாயந்தீர்த்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். தங்கள் தேசம் நியாயந்தீர்க்கப்படும்போது, இஸ்ரவேலின் தேவனே சர்வவல்லமையுள்ள கர்த்தர் என்பதை எகிப்தியர்கள் அறிந்துகொள்கிறார்கள் (எசே 30:19).

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் எசே 30:20-26

எசே 30:20. பதினோராம் வருஷம் முதலாம் மாதம் ஏழாந்தேதியிலே, கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 30:21. மனுபுத்திரனே, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய புயத்தை முறித்துப்போடுவேன்; இதோ, அது குணமாகத்தக்கதாகக் கட்டப்படுவதில்லை; அது பட்டயத்தைப் பிடிக்கத்தக்க பெலனை அடையும்படி பத்தைவைத்துக் கட்டப்படுவதுமில்லை.

எசே 30:22. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு விரோதமாக வந்து, பெலனுள்ளதும் முறிந்ததுமாகிய அவனுடைய புயங்களை முறித்துப்போடுவேன்; பட்டயத்தை நான் அவன் கையிலிருந்து விழப்பண்ணி,

எசே 30:23. எகிப்தியரை ஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, அவர்களை தேசங்களில் தூற்றிவிடுவேன்.

எசே 30:24. பாபிலோன் ராஜாவின் புயங்களைப் பெலப்படுத்தி, அவன் கையிலே என் பட்டயத்தைக் கொடுத்து, பார்வோனின் புயங்களை முறித்துவிடுவேன்; அப்பொழுது அவன் கொலையுண்கிறவன் தவிக்கிறதுபோல அவனுக்கு முன்பாகத் தவிப்பான்.

எசே 30:25. பாபிலோன் ராஜாவின் புயங்களைப் பெலப்படுத்துவேன்; பார்வோனின் புயங்களோ விழுந்துபோம்; என் பட்டயத்தை நான் பாபிலோன் ராஜாவின் கையில் கொடுக்கும்போதும், அவன் அதை எகிப்துதேசத்தின்மேல் நீட்டும்போதும், நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 30:26. நான் எகிப்தியரை ஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, அவர்களை தேசங்களில் தூற்றிப்போடுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எகிப்து தேசத்தின் பெலன் குறைந்துபோகும். கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். அப்போது எகிப்தின் சேனைகள், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு உதவியாக, எருசலேமுக்கு புறப்பட்டுப் போகிறார்கள். கல்தேயரின் முற்றிக்கையை முறித்துப்போடுவதற்காக எகிப்தியர்கள் கல்தேயர்மீது யுத்தம்பண்ணப்போகிறார்கள். ஆனால் எகிப்தியரின் முயற்சிகள் சித்திக்கவில்லை. அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றாமலேயே எகிப்து தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள்.

இந்தக் காலத்தில் எகிப்துதேசத்திற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. பதினொராம் வருஷம், முதலாம் மாதம் ஏழாம் தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாயிற்று.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பலவீனமடைவான். கர்த்தர் பார்வோனுடைய புயத்தை முறித்துப்போடுவார். பாபிலோன் ராஜா கர்கேமிசில் எகிப்தின் ராஜாவாகிய, பார்வோன்நேகோவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தபோது எகிப்தின் ஒரு புயம் முறிந்துபோயிற்று.

"எகிப்தைக்குறித்தும், ஐப்பிராத்து நதியண்டையிலே கர்கேமிசிலே இருந்ததும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே முறிய அடித்ததுமான பார்வோன்நேகோ என்னப்பட்ட எகிப்து ராஜாவின் ராணுவத்தைக்குறித்தும் அவர் சொல்லுகிறது என்னவென்றால்: கேடகங்களையும் பரிசைகளையும் ஆயத்தம்பண்ணி, யுத்தத்துக்கு வாருங்கள்" (எரே 46:2,3).

"எகிப்தின் ராஜா அப்புறம் தன் தேசத்திலிருந்து புறப்பட்டு வரவில்லை; எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதிமட்டும் எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவையும் பாபிலோன் ராஜா பிடித்திருந்தான்" (2இராஜா 24:7).

எகிப்து தேசத்தின் இருதயமும் பிடரியும் முறிந்துபோவதற்கு முன்பாக, அவர்களுடைய புயம் முறிந்துபோகிறது. கர்த்தரே எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய புயத்தை முறித்துப்போடுகிறார். அது குணமாகதக்கதாக கட்டப்படுவதில்லை. முறிந்துபோன புயத்தினால் பட்டயத்தைப் பிடிக்க முடியாது. இந்தப் புயத்தை பத்தை வைத்து கட்டவும் முடியாது. இது மறுபடியும் பட்டயத்தைப் பிடிக்கத்தக்கதாக பெலனடையாது (எசே 30:22).

கர்த்தர் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய புயத்தை மறுபடியுமாக முறித்துப்போடுகிறார். கர்த்தர் ஏற்கெனவே அவனுடைய ஒரு புயத்தை மாத்திரம் முறித்தார். இப்போதோ பார்வோனுடைய இரண்டு புயங்களையும் முறித்துப்போடுகிறார். கர்த்தர் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு விரோதமாக வருகிறார். அவனுடைய புயங்களில் ஒன்று முறிந்ததாகயிருந்தாலும், மற்றொரு புயம் முறியாமல் பெலனுள்ளதாகயிருக்கிறது. கர்த்தரோ இப்போது, பார்வோனுடைய இரண்டு புயங்களையும் முறித்துப்போடுகிறார்.

கர்த்தர் பார்வோனுடைய கையிலிருந்து பட்டயத்தை விழப்பண்ணுகிறார். எகிப்தியரை ஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கிறார். அவர்களை தேசங்களில் தூற்றிவிடுகிறார். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், பாபிலோன் ராஜாவையும், அவனுடைய சேனையையும் பார்த்து பயப்படுகிறான். கல்தேயர் மூலமாய் தனக்கு வரப்போகும் ஆபத்தை நினைத்து கலங்குகிறான். அவனுடைய ஆவி அவனுக்குள் முறிந்துபோயிற்று. எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் காயம்பட்டவன் பெருமூச் சுவிடுவதுபோல, பெருமூச் சுவிட்டு அழுகிறான். கொலையுண்கிறவன் தவிக்கிறதுபோல, பார்வோன் நேபுகாத்நேச்சாருக்கு முன்பாக தவிக்கிறான்.

கர்த்தர் பாபிலோன் ராஜாவின் புயங்களைப் பெலப்படுத்துகிறார். அவனுடைய கையிலே தம்முடைய பட்டயத்தைக் கொடுக்கிறார். கர்த்தர் பாபிலோன் ராஜாவை தம்முடைய கருவியாகப் பயன்படுத்தி, பார்வோனின் புயங்களை முறித்துப்போடுகிறார். அதே வேளையில் கர்த்தர் பாபிலோன் ராஜாவின் புயங்களைப் பெலப்படுத்துகிறார். பார்வோனின் புயங்களோ விழுந்துபோகும்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தை எகிப்து தேசத்தின்மீது நீட்டுகிறார். தம்முடைய பட்டயத்தை பாபிலோன் ராஜாவின் கையில் கொடுத்து எகிப்தின் நுகங்களை முறிக்கிறார். எகிப்திலே நியாயத்தீர்ப்புகளைச் செய்கிறார். அப்போது இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை எகிப்து தேசத்தார் அறிந்துகொள்வார்கள்.

கர்த்தர் எகிப்தியரை ஜாதிகளுக்குள் சிதறடிப்பார். அவர்களை தேசங்களில் தூக்கிப்போடுவார். கர்த்தர் சொல்லுகிற இந்த வாக்கியம் மறுபடியும் மறுபடியுமாகச் சொல்லப்படுகிறது (எசே 30:23,26). பார்வோனின் புயங்களை முறித்துப்போடுகிற கர்த்தர், பாபிலோன் ராஜாவின் புயங்களை பெலப்படுத்தவும் செய்கிறார். இந்த வாக்கியமும் மறுபடியும் மறுபடியுமாகச் சொல்லப்படுகிறது (எசே 30:24,25).

31 அதிகாரம்

கர்த்தர் எகிப்து தேசத்திற்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளை தொடர்ந்து வெளிப்படுத்துகிறார். பார்வோன் மனமேட்டிமையிலிருக்கிறான். அவனைத் தாழ்த்துவது கர்த்தருக்கு சித்தமாயிற்று. பார்வோன் தன்னுடைய இருதயத்தின் பெருமையினாலும் அகந்தையினாலும், கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்களுக்கு தீங்கு செய்கிறான்.

எகிப்து தேசம் இப்போது பெலனுள்ளதாயிருக்கிறது. தனக்கு விரோதமாக யாரும் யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியாது என்று பார்வோன் இறுமாப்பாயிருக்கிறான். தான் எதுவேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்றும், தன்னுடைய செய்கைகளைக் குறித்து, தான் யாருக்கும் கணக்கு ஒப்புவிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் பார்வோன் இறுமாப்பாய்ச் சொல்லுகிறான்.

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாய் பார்வோனுக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். பார்வோனின் தப்பிதங்களை அவனுக்கு உணர்த்துவதற்கு, கர்த்தர் அசீரியாவின் ராஜாவை எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். நினிவே அசீரியாவின் தலைநகரம்.

அசீரியாவின் ராஜா பெலமிக்கவனாயிருந்தான். அசீரிய ராஜ்யம் விஸ்தாரமாய்ப் பரவியிருந்தது (எசே 31:3-9). அசீரியாவின் ராஜா தன் இருதயத்தில் பெருமையுடனும், மனமேட்டிமையுடனும் இருந்தான் (எசே 31:10). அசீரியாவின் ராஜாவுக்கு அழிவு உண்டாயிற்று. அசீரிய தேசத்தின் வீழ்ச்சியைப்பற்றி இங்கு விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது (எசே 31:11-17).

அசீரியாவின் ராஜாவைப்போலவே, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனும் மனமேட்டிமையிலும் பெருமையிலும் இருக்கிறான். அசீரியாவின் ராஜாவுக்கு அழிவு வந்ததுபோல, எகிப்தின் ராஜாவுக்கும் அழிவு வரும் (எசே 3:18).

அசீரியரின் செழிப்பு
எசே 31:1-9

எசே 31:1. பதினோராம் வருஷம் மூன்றாம் மாதம் முதலாந்தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 31:2. மனுபுத்திரனே, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடும் அவனுடைய திரளான ஜனத்தோடும் நீ சொல்லவேண்டியது என்னவென்றால்: நீ உன் மகத்துவத்திலே யாருக்கு ஒப்பாயிருக்கிறாய்?

எசே 31:3. இதோ, அசீரியன் லீபனோனிலே அலங்காரக் கொப்புகளோடும், நிழலிடும் தழைகளோடும், வளர்ந்தோங்கிய கேதுரு விருட்சமாயிருந்தான்; அதின் கிளைகளின் தழைகளுக்குள்ளே அதின் நுனிக்கொழுந்து உயர்ந்திருந்தது.

எசே 31:4. தண்ணீர்கள் அதைப் பெரிதும், ஆழம் அதை உயர்த்தியும் ஆக்கின; அதின் ஆறுகள் அதின் அடிமரத்தைச் சுற்றிலும் ஓடின; தன் நீர்க்கால்களை வெளியின் விருட்சங்களுக்கெல்லாம் பாயவிட்டது.

எசே 31:5. ஆகையால் வெளியின் சகல விருட்சங்களிலும் அது மிகவும் உயர்ந்தது; அது துளிர்விடுகையில் திரளான தண்ணீரினால் அதின் கிளைகள் பெருகி, அதின் கொப்புகள் நீளமாயின.

எசே 31:6. அதின் கொப்புகளில் ஆகாயத்தின் பறவைகளெல்லாம் கூடுகட்டின; அதின் கொப்புகளின்கீழ் வெளியின் மிருகங்களெல்லாம் குட்டிகளைப் போட்டன; பெரிதான சகல ஜாதிகளும் அதின் நிழலிலே குடியிருந்தார்கள்.

எசே 31:7. அப்படியே அதின் வேர் திரளான தண்ணீர்களருகே இருந்ததினால் அது தன் செழிப்பினாலும் தன் கொப்புகளின் நீளத்தினாலும் அலங்காரமாயிருந்தது.

எசே 31:8. தேவனுடைய வனத்திலுள்ள கேதுருக்கள் அதை மறைக்கக்கூடாதிருந்தது; தேவதாரு விருட்சங்கள் அதின் கொப்புகளுக்குச் சமானமல்ல; அர்மோன் மரங்கள் அதின் கிளைகளுக்கு நிகரல்ல; தேவனுடைய வனத்திலுள்ள ஒரு விருட்சமும் அலங்காரத்திலே அதற்கு ஒப்பல்ல.

எசே 31:9. அதின் கிளைகளின் திரளினால் அதை அலங்கரித்தேன்; தேவனுடைய வனமாகிய ஏதேனின் விருட்சங்களெல்லாம் அதின்பேரில் பொறாமைகொண்டன.

கர்த்தருடைய வார்த்தை பதினோராம் வருஷம் மூன்றாம் மாதம் முதலாந்தேதியிலே எசேக்கியேலுக்கு உண்டாயிற்று. கல்தேயர் எருசலேம் நகரத்தைப் பிடிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, இந்த வார்த்தை எசேக்கியேலுக்கு கர்த்தரிடத்திலிருந்து உண்டாயிற்று. கர்த்தருடைய ஜனம் மிகுந்த வேதனையிலும் துக்கத்திலும் இருக்கிறார்கள். தத்தளிப்பின் பாத்திரம் எருசலேமின் குடிகளுக்கு குடிக்கக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாத்திரம் ஒவ்வொரு தேசமாக சுற்றி வருகிறது. எல்லா தேசத்தாரும் கர்த்தருடைய தத்தளிப்பின் பாத்திரத்தில் பானம்பண்ணுகிறார்கள்.

கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். நகரத்திற்குள் பஞ்சமும் கொள்ளைநோயும் உண்டாயிற்று. ஜனங்கள் மிகுந்த வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தர் இப்போது, தம்முடைய உபத்திரவத்தின் பாத்திரத்தை, யூதாவம்சத்தார் கையிலிருந்து எடுத்து, அவர்களை வெறுத்த, விரோதித்த ஜாதிகளின் கையில் கொடுக்கிறார்.

"கர்த்தராகிய உன் ஆண்டவரும் தம்முடைய ஜனத்துக்காக வழக்காடப்போகிற உன் தேவனுமானவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிலிருந்து நீக்கிப்போடுகிறேன், இனி என் உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்களை நீ குடிப்பதில்லை. உன்னை நோக்கி: நாங்கள் கடந்துபோகும்படிக்குக் குனியென்றுசொல்லி, கடந்து போகிறவர்களுக்கு நீ உன் முதுகைத் தரையும் வீதியுமாக்கும்படி, உன்னைச் சஞ்சலப்படுத்தினவர்களின் கையில் அதைக் கொடுப்பேன் என்றார்" *(ஏசா 51:22,23).*

எசேக்கியேல் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடும் அவனுடைய திரளான ஜனத்தோடும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவேண்டும். எகிப்தின் ராஜா மனமேட்டிமையோடும், இருதயத்தில் பெருமையோடும் இருக்கிறான். பெலத்திலும், மகிமையிலும், மகத்துவத்திலும், ஐசுவரியத்திலும் தனக்கு ஒப்பானவன் ஒருவருமில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறான். இருதயத்தில் பெருமையுள்ளவர்களுக்கு அழிவு வரும். அழிவுக்கு முன்னானது அகந்தை.

மற்றவர்கள் பாவங்களிலும், அழிவுகளிலும் விழும்போது, நாம் அவர்களைப் பார்த்து எச்சரிப்படையவேண்டும். தங்களுடைய பெருமையினிமித்தமாக மற்றவர்கள் அழிந்துபோகும்போது, நாம் எச்சரிப்படைந்து, நம்மிடத்திலிருக்கிற பெருமையை நீக்கிப்போடவேண்டும். நாம் இப்போது நின்றுகொண்டிருந்தாலும், விழுந்து விடாதவாறு எச்சரிப்பாயிருக்கவேண்டும். நமக்கும் ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோ, மனமேட்டிமையோடிருக்கிறான். தன்னுடைய மகத்துவத்தில், தனக்கு ஒப்பானவன் ஒருவருமில்லை என்று தனக்குத்தானே நினைத்துக்கொள்கிறான். கர்த்தருடைய வார்த்தை பார்வோனுக்கு விரோதமாக வருகிறது. எசேக்கியேல் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடும் அவனுடைய திரளான ஜனத்தோடும், கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, அசீரியரின் ராஜாவாகிய சனகெரிப்பை, அவர்களுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தைப்போலவே அசீரிய தேசமும் பெலமுள்ளதாயும், மகிமையுள்ளதாயும் இருந்தது. அசீரிய தேசம் பரவி விரிந்திருந்தது. அசீரியரின் ராஜாவாகிய சனகெரிப் வல்லமை மிகுந்தவனாயும், மகிமையும் மகத்துவமும் உள்ளவனாயும் இருந்தான். எகிப்தின் ராஜாவாகிய பார்வோனைப்போலவே, அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பும் தன் இருதயத்தில் பெருமையோடும், மனதில் மேட்டிமையோடும் இருந்தான். அசீரிய சாம்ராஜ்யம் அழிந்துபோயிற்று. அசீரியா அழிந்தபோது, அதன் அதிபதியாகிய சனகெரிப்பும் அதோடுகூட அழிந்துபோனான். பாபிலோன் ராஜாவாகிய நோபுகாத்நேச்சார், அசீரியாவின் அழிவுக்கு மேல், தன்னுடைய சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பினான்.

கர்த்தர் அசீரியாவின் ராஜாவை கேதுரு விருட்சத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். "இதோ, அசீரியன் லீபனோனிலே அலங்காரக் கொப்புகளோடும், நிழலிடும் தழைகளோடும், வளர்ந்தோங்கிய கேதுரு விருட்சமாயிருந்தான்; அதின் கிளைகளின் தழைகளுக்குள்ளே அதின் நுனிக்கொழுந்து உயர்ந்திருந்தது" (எசே 31:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அசீரிய தேசம் ஓங்கி வளர்ந்த கேதுருவைப்போல் இருக்கிறது. அந்த விருட்சத்தில் அலங்கார கொப்புகளும், நிழலிடும் கிளைகளும் இருக்கிறது. மற்ற விருட்சங்களும் செடிகளும் ஓங்கி வளர்ந்திருக்கிற கேதுரு விருட்சத்திற்கு கீழே இருக்கிறது. அசீரிய தேசத்திற்கு அருகாமையிலுள்ள, எல்லா தேசங்களும் சிறிய தேசங்களாகயிருக்கிறது. அவர்களிடத்தில் அசீரியாவின் இராணுவத்தைப்போல பெரிய இராணுவம் இல்லை. அவர்கள் அசீரியரின் பார்வையில் சாதாரணமானவர்களாகயிருக்கிறார்கள்.

அசீரிய தேசம் என்னும் கேதுரு விருட்சமே வளர்ந்தோங்கியிருக்கிறது. அது வெளியின் சகல விருட்சங்களிலும் மிகவும் உயரமாக வளர்ந்திருக்கிறது. அது துளிர்விடுகையில், திரளான தண்ணீரினால், அதின் கிளைகள் பெருகியிருக்கிறது. அதின் கொப்புகளும் நீளமாயிருக்கிறது. மற்ற எல்லா விருட்சங்களைவிட, கேதுரு விருட்சமே மிகவும் உயரமாயிருக்கிறது.

"தேவனுடைய வனத்திலுள்ள கேதுருக்கள் அதை மறைக்கக்கூடாதிருந்தது; தேவதாரு விருட்சங்கள் அதின் கொப்புகளுக்குச் சமானமல்ல; அர்மோன் மரங்கள் அதின் கிளைகளுக்கு நிகரல்ல; தேவனுடைய வனத்திலுள்ள ஒரு விருட்சமும் அலங்காரத்திலே அதற்கு ஒப்பல்ல" (எசே 31:8) என்று கர்த்தர் அசீரியா என்னும் கேதுரு விருட்சத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஓங்கி வளர்ந்திருக்கிற கேதுரு விருட்சத்தின் கிளைகள் பெருகியிருக்கிறது. அதன் கொப்புகளும் நீளமாயிருக்கிறது. அசீரிய தேசம் தன் எல்லைகளை விஸ்தாரம்பண்ணுகிறது. அசீரியரின் சேனை எல்லா திசைகளிலும் யுத்தம்பண்ணி, அந்த தேசங்களை யுத்தத்திலே ஜெயித்து, அதை தன் தேசத்தோடு இணைத்துக் கொள்கிறது. இதனால் அசீரிய தேசத்தின் எல்லை விஸ்தாரமாகிறது. மற்ற தேசத்தார் எல்லோரும் அசீரியாவின் ராஜாவுக்கு கீழ்ப்படிகிறார்கள்.

அசீரியாவின் ராஜா தன்னுடைய தேசத்தை திறமையாக நிர்வாகம் பண்ணுகிறான். அவனுடைய ஆளுகை நேர்த்தியாயிருக்கிறது. எல்லா மனுஷரும் அசீரிய ராஜாவின் ஆளுகையைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். அசீரியாவின் ராஜாவுக்கு ஒப்பானவன், அசீரிய தேசத்திற்கு அருகாமையில் யாருமில்லை. "தேவனுடைய வனத்திலுள்ள ஒரு விருட்சமும், அலங்காரத்திலே அதற்கு ஒப்பல்ல" (எசே 31:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அசீரிய தேசம் எல்லா திசைகளிலும் வளர்ந்து பெருகியிருப்பதை கர்த்தர் விவரிக்கிறார். "அதின் வேர் திரளான தண்ணீர்களருகே இருந்ததினால் அது தன் செழிப்பினாலும் தன் கொப்புகளின் நீளத்தினாலும் அலங்காரமாயிருந்தது" (எசே 31:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் கேதுரு விருட்சத்தை கிளைகளின் திரளினால் அலங்கரிக்கிறார். தேவனுடைய வனமாகிய ஏதேனின் விருட்சங்களெல்லாம் அதின்பேரில் பொறாமைகொண்டன (எசே 31:9). அசீரிய தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசத்தார் எல்லோரும், அசீரியாவின் அழகையும், நேர்த்தியையும், செல்வாக்கையும், பெலத்தையும், ஐசுவரியத்தையும் பொறாமைக்கண்களோடு பார்க்கிறார்கள்.

அசீரிய தேசம் பல தேசங்களுக்கு ஆதரவாயும் ஆசீர்வாதமாயும் இருக்கிறது. அசீரியர்கள் பல ஜாதியாருக்கு உதவியாயிருக்கிறார்கள். கேதுரு விருட்சம் தன்னுடைய நிழலிலே அநேக ஜீவராசிகளுக்கு ஆதரவாயிருக்கும்.

அதின் கொப்புகளில் ஆகாயத்தின் பறவைகளெல்லாம் கூடுகட்டுகிறது; அதின் கொப்புகளின்கீழ் வெளியின் மிருகங்களெல்லாம் குட்டிகளைப்போடுகிறது; பெரிதான சகல ஜாதிகளும் அதின் நிழலிலே குடியிருக்கிறார்கள் (எசே 31:6).

அசீரிய தேசத்தின் ராஜாவாகிய சனகெரிப்பினுடைய நிழலிலே ஏராளமான தேசங்கள் வாசம்பண்ணுகின்றன. தங்களுடைய பாதுகாப்புக்காக அவர்கள் சனகெரிப்பிடம் வருகிறார்கள். அவர்கள் சனகெரிப்போடு இராணுவ ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். அசீரியாவின் ராஜாவும் அவர்களை ஆபத்துக்காலத்தில் பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறான்.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளுக்கு கர்த்தரால் மாத்திரமே மெய்யான பாதுகாப்பைக் கொடுக்க முடியும். மனுஷர் கொடுக்கும் பாதுகாப்புக்களெல்லாம் மெய்யான பாதுகாப்பு அல்ல. அது பாதுகாப்பின் நிழல். அசீரியா ராஜாவின் நிழலிலே பெரிதான ஜாதிகள் குடியிருக்கிறார்கள். அவர்களெல்லோருக்கும் சனகெரிப் பாதுகாப்பின் நிழலாகயிருக்கிறான். அசீரியாவின் ராஜாவுக்கே பாதுகாப்பு தேவைப்படுகிறது. மற்ற தேசத்தார் அவனுக்கு நிழலைப்போன்ற பாதுகாப்பை மாத்திரமே கொடுக்க முடியும். கர்த்தரே மெய்யான பாதுகாப்பைக் கொடுக்கிறவர்.

ஒரு விருட்சத்தின் நிழல் மெய்யான பாதுகாப்பைக் கொடுக்காது. விருட்சத்தின் கிளைகள் காற்றிலே அசையும். கிளை அசையும்போது அதன் நிழலும் அசையும். அதன் நிழலில் தங்கியிருக்கிறவர்களும் அசையவேண்டும். சீதோஷ்ண நிலமை மாறும்போதும், பூமியில் வறட்சி உண்டாகும்போதும் விருட்சத்தின் கிளைகள் பட்டுப்போகும். பட்டுப்போன கிளை அதிகமான நிழலைக்கொடுக்காது. அதன் நிழலில் தங்குகிறவர்கள் ஏமாற்றமடைவார்கள்.

கர்த்தர் தம்முடைய செட்டைகளின் மறைவில் நம்மைப் பாதுகாக்கிறார். இந்த உலகத்தின் பலவான்கள் கேதுரு விருட்சங்களைப்போல இருக்கிறார்கள். அவர்களுடைய நிழலில் பாதுகாப்பு தேடுவதைவிட, கர்த்தருடைய செட்டைகளின் நிழலில் நாம் அடைக்கலம் புகுவதே நமக்கு மெய்யான பாதுகாப்பு.

"கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்" (சங் 17:8). "அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்" (சங் 91:4).

அசீரியாவின் ராஜா தன்னுடைய மகிமையிலும், பெலத்திலும் பாதுகாப்பாயிருப்பதாக நினைக்கிறான். ஓங்கி வளர்ந்திருக்கிற கேதுரு விருட்சம் பாலைவனத்திலுள்ள அரளிச்செடியைப் போன்றதல்ல. அது தண்ணீரில்லாமல் காய்ந்துபோய்கிடக்கும் நெரிஞ்சில் செடியைப்போன்றதுமல்ல. அது உலர்ந்த நிலத்திலே, தண்ணீரில்லாமல் வேரெல்லாம் பட்டுப்போயிருக்கும் பட்டமரமுமல்ல.

"அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்" (எரே 17:6).

"இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" (ஏசா 53:2).

சனகெரிப் நீர்ப்பாய்ச்சலான இடங்களில் இருக்கிறவன். அசீரியாவின் ராஜா பசுமையான கேதுரு விருட்சமாயிருக்கிறான். ஆறுகள் அதின் அடிமரத்தைச் சுற்றிலும் ஓடுகிறது.

அசீரியா ராஜாவிடம் திரளான செல்வங்கள் இருக்கிறது. அவனுடைய அதிகாரத்திற்கும், ஆடம்பரத்திற்கும், அவனுடைய ஐசுவரியம் ஆதரவாயிருக்கிறது.

"தண்ணீர்கள் அதைப் பெரிதும், ஆழம் அதை உயர்த்தியும் ஆக்கின; அதின் ஆறுகள் அதின் அடிமரத்தைச் சுற்றிலும் ஓடின; தன் நீர்க்கால்களை வெளியின் விருட்சங்களுக்கெல்லாம் பாயவிட்டது" (எசே 31:4) என்று கர்த்தர் அசீரியா ராஜாவின் ஐசுவரியத்தைப்பற்றியும், செழிப்பைப்பற்றியும் சொல்லுகிறார்.

அசீரிய தேசத்திலுள்ள நீர்க்கால்களெல்லாம், அந்த தேசத்தை செழிப்படையச் செய்கிறது. அதனுடைய ஐசுவரியத்தையும், பெலத்தையும் பார்த்து, ஏராளமான தேசத்தார், அசீரிய தேசத்தாரிடம் ஆதரவு தேடி வருகிறார்கள். சனகெரிப்பின் இராணுவம் மிகுந்த பெலமுள்ளது. ஏராளமான ஜாதியார் தங்கள் பாதுகாப்புக்காக சனகெரிப்பிடம் வருகிறார்கள். சனகெரிப்பும், தன் நீர்க்கால்களை வெளியின் விருட்சங்களுக்கெல்லாம் பாயவிடுகிறான்.

"அக்காலத்திலே ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர்பேரிலும் மிகவுங் கோபமாயிருந்தான். தங்கள் தேசம் ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்பட்டபடியினால், அவர்கள் ஒருமனப்பட்டு, அவனிடத்தில் வந்து, ராஜாவின் வீட்டு விசாரணைக்காரனாகிய பிலாஸ்துவைத் தங்கள் வசமாக்கிச் சமாதானம் கேட்டுக் கொண்டார்கள்" (அப் 12:20).

அசீரிய தேசம் மற்ற தேசங்களுக்கு ஆதரவாயிருக்கிறது. அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பும், ஏராளமான தேசத்திற்கு பாதுகாப்பைக் கொடுக்கிறான். அநேக ஜாதியார் அவனிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்று அனுபவிக்கிறார்கள். அவர்கள் சனகெரிப்புக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அசீரிய தேசத்திற்கு கப்பம் கட்டுகிறார்கள். தங்களால் செய்ய முடிகிற எல்லா சேவைகளையும், அந்த தேசத்தார், சனகெரிப்புக்கு சந்தோஷமாய்ச் செய்கிறார்கள்.

அசீரியரின் மேட்டிமையும் அழிவும் எசே 31:10-17

எசே 31:10. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அது தன் வளர்த்தியிலே மேட்டிமையாகி, கொப்புகளின் தழைகளுக்குள்ளே தன் நுனிக்கிளையை ஓங்கவிட்டபடியினாலும், அதின் இருதயம் தன் மேட்டிமையினால் உயர்ந்துபோனபடியினாலும்,

எசே 31:11. நான் அதை ஜாதிகளில் மகா வல்லமையுள்ளவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்; அவன் தனக்கு இஷ்டமானபடி அதற்குச் செய்வான்; அதினுடைய அக்கிரமத்தினிமித்தம் அதைத்தள்ளிப்போட்டேன்.

எசே 31:12. ஜாதிகளில் வல்லவராகிய அந்நியதேசத்தார் அதை வெட்டிப்போட்டு, விட்டுப்போனார்கள்; அதின் கொப்புகள் மலைகளின்மேலும் சகல பள்ளத்தாக்குகளிலும் விழுந்தன; அதின் கிளைகள் தேசத்தினுடைய எல்லா ஆன்களினருகே முறிந்தன; பூமியிலுள்ள ஜனங்களெல்லாரும் அதின் நிழலைவிட்டுக் கலைந்து போனார்கள்.

எசே 31:13. விழுந்துகிடக்கிற அதின்மேல் ஆகாயத்துப் பறவைகளெல்லாம் தாபரித்தன; அதின் கொம்புகளின்மேல் வெளியின் மிருகங்களெல்லாம் தங்கின.

எசே 31:14. தண்ணீரின் ஓரமாய் வளருகிற எந்த விருட்சங்களும் தங்கள் உயரத்தினாலே மேட்டிமை கொள்ளாமலும், தங்கள் கொப்புகளின் தழைக்குள்ளே தங்கள் நுனிக்கிளையை ஓங்கவிடாமலும், தண்ணீரைக் குடிக்கிற எந்த மரங்களும் தங்கள் உயர்த்தியினாலே தங்கள் மேல் நம்பிக்கைவைக்காமலும் இருக்கும் பொருட்டு இப்படிச் செய்வேன்; மனுபுத்திரரின் நடுவே அவர்கள் எல்லாரும் குழியில் இறங்குகிறவர்களோடே கூட மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களில் போனார்கள்.

எசே 31:15. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அவன் பாதாளத்தில் இறங்குகிற நாளிலே புலம்பலை வருவித்தேன்; நான் அவனிமித்தம் ஆழத்தை மூடிப்போட்டு, திரளான தண்ணீர்கள் ஓடாதபடிக்கு அதின் ஆறுகளை அடைத்து, அவனிமித்தம் லீபனோனை இருளடையப்பண்ணினேன்; வெளியின் விருட்சங்களெல்லாம் அவனிமித்தம் பட்டுப்போயின.

எசே 31:16. நான் அவனைக் குழியில் இறங்குகிறவர்களோடேகூடப் பாதாளத்தில் இறங்கப்பண்ணுகையில், அவன் விழுகிற சத்தத்தினால் ஜாதிகளை அதிரப்பண்ணினேன்; அப்பொழுது பூமியின் தாழ்விடங்களில் ஏதேனின் விருட்சங்களும், லீபனோனின் மேன்மையான சிறந்த விருட்சங்களும், தண்ணீர் குடிக்கும் சகல மரங்களும் ஆறுதல் அடைந்தன.

எசே 31:17. அவனோடேகூட இவர்களும், ஜாதிகளின் நடுவே அவன் நிழலில் குடியிருந்து அவனுக்குப் புயபலமாயிருந்தவர்களும், பட்டயத்தால் வெட்டுண்டவர்களண்டையிலே பாதாளத்தில் இறங்கினார்கள்.

ஆடம்பரம், ஐசுவரியம், பெலம் ஆகிய எல்லாவற்றிலும் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், அசீரியாவின் ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறான். அசீரியாவின் ராஜாவைப்போலவே, எகிப்தின் ராஜாவினிடத்திலும் மனமேட்டிமையும், இருதயத்தில் பெருமையும் காணப்படுகிறது. அநேகர் தங்கள் இருதயத்தின் பெருமையினால் அழிந்துபோனார்கள்.

மனுபுத்திரரில் அநேகர் தரித்திரராயிருக்கும்போது கர்த்தரைத் தேடுகிறார்கள். தங்களுக்கு ஐசுவரியம் சேர்ந்த பின்போ, அவர்கள் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், தங்களுக்கு கேடுண்டாகவே விருத்தியடைகிறார்கள். மனுஷரைப்போலவே, ஒரு சில தேசங்களுக்கு, செழிப்பும், பெலமும் அதிகரிக்கும்போது, அவர்களுக்கும் பெருமை வந்துவிடுகிறது. தங்கள் ஐசுவரியத்தினால் சோதிக்கப்படுகிறார்கள். இராணுவ பலமும், பணபலமும் அதிகமாயிருக்கும்போது, அந்த தேசத்தார் மற்ற தேசங்களை மதிக்கமாட்டார்கள். மனுஷனுக்கு அகந்தை வந்தால் அழிவு வரும். தேசத்திற்கு பெருமையும் மேட்டிமையும் வந்தால், அந்த தேசமும் விருத்தியடையாது. அது சீக்கிரத்தில் அழிந்துபோகும்.

"எகிப்தின் ராஜாவாகிய பார்வோனே, நீ உன் நதிகளின் நடுவிலே படுத்துக்கொண்டு: என் நதி என்னுடையது, நான் அதை எனக்காக உண்டுபண்ணினேன் என்று சொல்லுகிற பெரிய முதலையே, இதோ, நான் உனக்கு விரோதமாய் வந்து, உன் வாயிலே துறடுகளை மாட்டி, உன் நதிகளின் மச்சங்களை உன் செதிள்களில் ஒட்டிக்கொள்ளும்படி செய்து, உன்னை உன் நதிகளின் நடுவிலிருந்து தூக்கிவிடுவேன்; உன் நதிகளின் மச்சங்களெல்லாம் உன் செதில்களில் ஒட்டிக்கொண்டிருக்கும்" (எசே 29:3,4) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

அசீரியாவின் ராஜா தன் வளர்த்தியிலே மேட்டிமையாகிறான். கொப்புகளின் தழைகளுக்குள்ளே தன் நுனிக்கிளையை ஓங்கவிட்டிருக்கிறான். அவனுடைய இருதயம் தன் மேட்டிமையினால் உயர்ந்துபோயிருக்கிறது (எசே 30:10).

அசீரிய ராஜா பெருமையிலும், மேட்டிமையிலும் நிரம்பியிருக்கிறான். இதனால் கர்த்தர் அவனுக்கு விரோதமாக வருகிறார். அசீரியா தேசத்தை ஜாதிகளில் மகாவல்லமையுள்ளவன் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். அவன் தனக்கு இஷ்டமானபடி அதற்கு செய்வான். கர்த்தர் அசீரிய தேசத்தினுடைய அக்கிரமத்தினிமித்தம், அதைத் தள்ளிப்போடுகிறார்.

கர்த்தர் அசீரிய தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். அந்த தேசத்திற்கு விரோதமாக மாத்திரமல்ல, எந்த தேசம் மனமேட்டிமையாயும், பெருமையாயும், அகந்தையாயும் இருக்கிறதோ, அந்த தேசங்களுக்கு விரோதமாக கர்த்தர் யுத்தம்பண்ணுவார். கர்த்தர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். பெருமையுள்ளவர்களையோ அவர் எதிர்த்து நிற்கிறார்.

"ரப்சாக்கே அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவாகிய மகாராஜாவானவர் உரைக்கிறதும், நீங்கள் எசேக்கியாவுக்குச் சொல்லவேண்டியதும் என்னவென்றால்: நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன? யுத்தத்துக்கு மந்திராலோசனையும் வல்லமையும் உண்டென்று சொல்லுகிறாயே, அது வாய்ப்பேச்சேயன்றி வேறல்ல; நீ என்னை விரோதிக்கும்படி யார்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறாய்?" (ஏசா 36:4,5) என்று பேசுகிறான். ராப்சாக்கே தன்னைப்பற்றியும், தன் தேசத்தைப்பற்றியும் அகந்தையாயும் மேட்டிமையாயும் பேசுகிறான்.

கர்த்தர் அசீரிய தேசத்தை அழித்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். அந்த தேசத்தை ஜாதிகளில் மகாவல்லமையுள்ளவன் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்.

ஜாதிகளில் வல்லவராகிய அந்நியதேசத்தார் அசீரிய தேசத்தை வெட்டிப்போட்டு, விட்டுப்போகிறார்கள்; அதின் கொப்புகள் மலைகளின்மேலும் சகல பள்ளத்தாக்குகளிலும் விழுகிறது; அதின் கிளைகள் தேசத்தினுடைய எல்லா ஆள்களினருகே முறிகிறது; பூமியிலுள்ள ஜனங்களெல்லாரும் அதின் நிழலைவிட்டுக்கலைந்துபோகிறார்கள் (எசே 31:12).

அசீரிய ராஜாவுக்கு அழிவு உண்டாயிற்று. மேதிய தேசத்தின் ராஜாவும் பாபிலோன் தேசத்து ராஜாவும் ஒன்றாய்ச் சேர்ந்து, நினிவே பட்டணத்தை அழித்துப்போடுகிறார்கள். அத்தோடு அசீரிய சாம்ராஜ்யம் அழிந்துபோகிறது.

கர்த்தர் தாமே அசீரிய தேசத்தின் அழிவைக் கட்டளையிடுகிறார். "நான் அதை ஜாதிகளில் மகாவல்லமையுள்ளவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்" (எசே 31:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். "அதினுடைய அக்கிரமத்தினிமித்தம் அதைத் தள்ளிப்போட்டேன்" (எசே 31:11) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

அசீரிய ராஜாவினுடைய பாவமே அவனுடைய அழிவுக்கு காரணம். அவனுடைய இருதயம் தன் மேட்டிமையினால் உயர்ந்து போனது. ஆகையினால் கர்த்தர் அவனைத் தள்ளிவிட்டார். அசீரிய ராஜாவினுடைய அக்கிரமத்தினிமித்தம் கர்த்தர் அவனைத் தள்ளிப்போடுகிறார்.

ஜாதிகளில் வல்லவராகிய அந்நிய தேசத்தார் அசீரியாவின் ராஜாவை வெட்டிப்போடுகிறார்கள். அவன் கேதுரு மரம்போல உயரமாய் வளர்ந்தான். அவன் தன்னுடைய கிளைகளை எல்லா திசையிலும் படரவிட்டான். ஆனாலும் அவனுக்கு அழிவு வந்தது.

கர்த்தர் அசீரியாவின் ராஜாவை ஜாதிகளில் மகாவல்லமையுள்ளவன் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். அவன் அசீரிய ராஜாவை வெட்டிப்போடுகிறான். அவன் முதலாவதாக, கேதுரு மரத்திலுள்ள கொப்புகளை வெட்டுகிறான். அசீரிய தேசத்தின் பட்டணங்களையும், கிராமங்களையும் அசீரிய சாம்ராஜ்யத்திலிருந்து துண்டுபண்ணுகிறான். அவையெல்லாம் அசீரிய தேசத்திலிருந்து பிரிந்துபோகிறது.

அசீரிய தேசம் உயர்ந்து வளர்ந்த கேதுரு மரமாயிருந்தபோது பெரிதான சகல ஜாதிகளும் அதின் நிழலே வந்து குடியிருக்கிறார்கள். இப்போதோ அந்நிய தேசத்தார், அசீரிய தேசத்தை வெட்டிப்போகிறார்கள். அதின் கொப்புகள் மலைகளின்மேலும் சகல பள்ளத்தாக்குகளிலும் விழுகிறது. அதின் கிளைகள் முறிந்துபோகிறது. அப்போது பூமியிலுள்ள ஜனங்கள் எல்லோரும் அதின் நிழலைவிட்டு கலைந்துபோகிறார்கள்.

அசீரிய தேசம் அழிந்துபோகும், பூமியிலுள்ள ஜனங்கள், அந்த தேசத்தைவிட்டுப் பிரிந்துபோகிறார்கள். ஆனாலும் விழுந்த கிடக்கிற அசீரிய தேசத்தின்மேல், ஆகாயத்துப் பறவைகளெல்லாம் தாபரிக்கிறது. அதின் பாழாய்ப்போன பட்டணங்களின்மேலும், நகரங்களின்மேலும் வெளியின் மிருகங்களெல்லாம் தங்குகிறது (எசே 31:13).

"இந்த விருட்சத்தை வெட்டி, இதை அழித்துப்போடுங்கள்; ஆனாலும் இதின்வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டுமென்றும், இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக; ஏழு காலங்கள் அவன்மேல் கடந்துபோகுமட்டும் மிருகங்களோடே அவனுடைய பங்கு இருக்கக்கடவதென்றும், வானத்திலிருந்து இறங்கிச் சொன்ன பரிசுத்த காவலாளனை ராஜாவாகிய நீர் கண்டீரே" (தானி 4:23).

கர்த்தர் அசீரிய தேசத்தை அழித்துப்போடுகிறார். தண்ணீரின் ஓரமாய் வளருகிற எந்த விருட்சங்களும் தங்கள் உயரத்தினாலே மேட்டிமைகொள்ளாமலும், தங்கள் கொப்புகளின் தழைக்குள்ளே தங்கள் நுனிக்கிளையை ஓங்கவிடாமலும், தண்ணீரைக் குடிக்கிற எந்த மரங்களும் தங்கள் உயர்த்தியினாலே தங்கள் மேல் நம்பிக்கைவைக்காமலும் இருக்கும்பொருட்டு கர்த்தர் அசீரிய தேசத்தை அழித்துப்போடுகிறார். இருதயத்தில் மேட்டிமையுள்ளவர்களெல்லோரும், மனுபுத்திரரின் நடுவே குழியில் இறங்குகிறவர்களோடேகூட மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களில் போனார்கள் (எசே 31:14).

அசீரியாவின் ராஜா பாதாளத்தில் இறங்குகிற நாளிலே கர்த்தர் புலம்பலை வருவிக்கிறார். கர்த்தர் அவனிமித்தம் ஆழத்தை மூடிப்போட்டு, திரளான தண்ணீர்கள் ஓடாதபடிக்கு அதின் ஆறுகளை அடைத்து, அவனிமித்தம் லீபனோனை இருளடையப்பண்ணினேன்; வெளியின் விருட்சங்களெல்லாம் அவனிமித்தம் பட்டுப்போயின (எசே 31:15).

அசீரிய தேசம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, மற்ற தேசத்தார் உணர்வடைகிறார்கள். அசீரியாவின் ராஜா அழிந்துபோனதைப் பார்த்து, மற்ற ராஜாக்களும் புத்திதெளிகிறார்கள். அசீரியாவின் ராஜாவைப்போல, தங்களிடத்தில் பெருமையும் மேட்டிமையும் இருந்தால், கர்த்தர் தங்களையும் அழித்துப்போடுவார் என்னும் பயம் அவர்களுக்குள் உண்டாயிற்று.

கர்த்தர் அசீரிய தேசத்தை அழித்தபோது, அந்த தேசத்தோடு உடன்படிக்கை செய்திருந்த மற்ற தேசங்களையும் அழித்துப்போடுகிறார். அசீரிய ராஜாவிடம் மேட்டிமையிருந்ததுபோல, அவனோடுகூடயிருந்த மற்ற ராஜாக்களிடத்திலும் மேட்டிமை இருந்தது. இவர்களெல்லோரும் அசீரிய ராஜாவின் நிழலிலே குடியிருந்தவர்கள். அவனுக்கு புயபலமாயிருந்தவர்கள். இவர்களும் அசீரிய ராஜாவோடுகூட பாதாளத்தில் இறங்கினார்கள். இவர்களும் அழிந்து போனார்கள். இவர்கள் பாதாளத்திலே வெட்டுண்டவர்களண்டையிலே, வெட்டுண்டவர்களாகக் கிடந்தார்கள் (எசே 31:17).

கர்த்தர் அசீரிய தேசத்தை அதன் அக்கிரமத்தினிமித்தமாக அழித்துப் போடுகிறார். அசீரியாவின் அழிவைப் பார்த்து மற்றவர்கள் உணர்வடைய வேண்டும். எச்சரிப்படையவேண்டும். "நான் அவனைக் குழியில் இறங்குகிறவர்களோடே கூடப் பாதாளத்தில் இறங்கப்பண்ணுகையில், அவன் விழுகிற சத்தத்தினால் ஜாதிகளை அதிரப்பண்ணினேன்; அப்பொழுது பூமியின் தாழ்விடங்களில் ஏதேனின் விருட்சங்களும், லீபனோனின் மேன்மையான சிறந்த விருட்சங்களும், தண்ணீர் குடிக்கும் சகல மரங்களும் ஆறுதல் அடைந்தன" (எசே 31:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் அசீரிய தேசத்தை அழித்து, மற்ற தேசத்திற்கு உபதேசம்பண்ணுகிறார். அசீரியாவின் ராஜாவை அழித்து, மற்ற ராஜாக்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லுகிறார். கர்த்தர் நேபுகாத்நேச்சாரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். அவன் கர்த்தருடைய கையில் பட்டயமாகயிருக்கிறான். நேபுகாத்நேச்சார் அசீரியாரை வெட்டிப்போடுகிறான்.

கர்த்தருடைய ஆலோசனைகளை நேபுகாத்நேச்சார் செவிகொடுத்து கேட்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். நேபுகாத்நேச்சாரினிடத்தில் பெருமையும் மனமேட்டிமையும் வந்துவிட்டால், அவனும் அசீரியாவின் ராஜாவைப்போலவே அழிந்துபோவான்.

எகிப்தின் ராஜா
எசே 31:18

எசே 31:18. இப்படிப்பட்ட மகிமையிலும் மகத்துவத்திலும் ஏதேனின் விருட்சங்களில் நீ எதற்கு ஒப்பானவன்? ஏதேனின் விருட்சங்களோடேகூட நீயும் பூமியின் தாழ்விடங்களில் இறக்கப்பட்டு, பட்டயத்தாலே வெட்டுண்டவர்களோடேகூட விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவிலே கிடப்பாய்; பார்வோனும் அவன் கூட்டமும் இதுவே என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் அசீரிய ராஜாவின் அழிவை இங்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை வந்திருக்கிறது. பார்வோன் தன்னை உயர்த்துகிறான். தன்னைப்பற்றிப் பெருமையாய்ப் பேசுகிறான். அசீரியாவின் ராஜா அழிந்துபோனதுபோல, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனும் அழிந்துபோவான்.

"இப்படிப்பட்ட மகிமையிலும் மகத்துவத்திலும் ஏதேனின் விருட்சங்களில் நீ எதற்கு ஒப்பானவன்? ஏதேனின் விருட்சங்களோடேகூட நீயும் பூமியின் தாழ்விடங்களில் இறக்கப்பட்டு, பட்டயத்தாலே வெட்டுண்டவர்களோடேகூட விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவிலே கிடப்பாய்; பார்வோனும் அவன் கூட்டமும் இதுவே" (எசே 31:18) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

32 அதிகாரம்

கர்த்தர் பார்வோனுடைய அழிவைப்பற்றியும், எகிப்து தேசத்தின் அழிவைப்பற்றியும் இங்கு விரிவாகச் சொல்லுகிறார்.

இங்கு சொல்லப்பட்டிருக்கிற சம்பவம், பூர்வகாலத்தில், ஆதியாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவத்தை நினைவுபடுத்துகிறது. "இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள்" (ஆதி 15:14).

வெளிப்படுத்தின விசேஷத்தில் சுவிசேஷ சபைக்கு சத்துருவாகயிருக்கிறவர்கள், "எகிப்து" என்னும் பெயரால் அழைக்கப்படுகிறார்கள்.

"அவர்களுடைய உடல்கள் மகாநகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்" (வெளி 11:8).

கர்த்தர் இங்கு எகிப்து தேசத்தின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் அந்திக்கிறிஸ்துவின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களுக்கும் தொடர்பு இருப்பதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த அதிகாரத்தில், கர்த்தர் எகிப்து தேசத்தைக் குறித்து, இரண்டு தீர்க்கதரிசனங்களைச் சொல்லுகிறார். இவை இரண்டுமே ஒரே மாதத்தில் சொல்லப்பட்டவை. எசேக்கியேல் தீர்க்கதரிசி எகிப்து தேசத்தின் அழிவுக்காக புலம்பவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களிடத்தில் மனுஷநேயம் இருக்கவேண்டும்.

நாம் நம்மை நேசிப்பதுபோல, பிறரையும் நேசிக்கவேண்டும். பிறர் துக்கப்படும்போது, அவர்களுடைய துக்க உணர்வுகளை நாமும் பகிர்ந்துகொள்ள வேண்டும். எகிப்து தேசம் அழிந்துபோகும்போது, எசேக்கியேல் அதைப் பார்த்து அழுது புலம்பவேண்டும்.

கர்த்தர் இந்த அதிகாரத்தில் எகிப்து தேசத்தின் அழிவையும், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் அழிவையும் இரண்டு உவமைகளினால் விவரிக்கிறார். பார்வோன் பெருந்தண்ணீர்களிலுள்ள முதலையைப்போல இருக்கிறான். கர்த்தர் இந்த மிருகஜீவனை அழிப்பார் (எசே 32:1-16). எகிப்தியர்கள் பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடப்படுவார்கள் (எசே 32:17-32).

பார்வோனின் அழிவு
எசே 32:1-16

எசே 32:1. பன்னிரண்டாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் முதலாந்தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 32:2. மனுபுத்திரனே, நீ எகிப்தின் ராஜாவாகிய பார்வோனைக்குறித்துப் புலம்பி, அவனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: ஜாதிகளுக்குள்ளே நீ பாலசிங்கத்துக்கு ஒப்பானவன்; நீ பெருந்தண்ணீர்களில் முதலையைப்போல் இருந்து, உன் நதிகளில் எழும்பி, உன் கால்களால் தண்ணீர்களைக் கலக்கி, அவைகளின் ஆறுகளைக் குழப்பிவிட்டாய்.

எசே 32:3. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்: நான் வெகு ஜனக்கூட்டத்தைக்கொண்டு உன்மேல் என் வலையை வீசுவேன். அவர்கள் என் வலையில் உன்னை இழுத்துக் கொள்வார்கள்.

எசே 32:4. உன்னைத் தரையிலே போட்டுவிடுவேன்; நான் உன்னை வெட்டவெளியில் எறிந்துவிட்டு, ஆகாயத்துப் பறவைகளையெல்லாம் உன்மேல் இறங்கப்பண்ணி, பூமியனைத்தின் மிருகங்களையும் உன்னால் திருப்தியாக்கி,

எசே 32:5. உன் சதையைப் பர்வதங்களின்மேல் போட்டு, உன் உடலினாலே பள்ளத்தாக்குகளை நிரப்பி,

எசே 32:6. நீ நீந்தின தேசத்தின்மேல் உன் இரத்தத்தைப் பர்வதங்கள்மட்டும் பாயச்செய்வேன்; ஆறுகள் உன்னாலே நிரம்பும்.

எசே 32:7. உன்னை நான் அணைத்துப்போடுகையில், வானத்தை மூடி, அதின் நட்சத்திரங்களை இருண்டுபோகப்பண்ணுவேன்; சூரியனை மேகத்தினால் மூடுவேன்; சந்திரனும் தன் ஒளியைக்கொடாதிருக்கும்.

எசே 32:8. நான் வானஜோதியான விளக்குகளையெல்லாம் உன்மேல் இருண்டுபோகப்பண்ணி, உன் தேசத்தின்மேல் அந்தகாரத்தை வரப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 32:9. உன் சங்காரத்தை ஜாதிகள்மட்டும், நீ அறியாத தேசங்கள்மட்டும் நான் எட்டப்பண்ணுகையில், அநேகம் ஜனங்களின் இருதயத்தை விசனமடையப்பண்ணுவேன்.

எசே 32:10. அநேகம் ஜனங்களை உன்னிமித்தம் திகைக்கப்பண்ணுவேன்; அவர்களின் ராஜாக்கள், தங்கள் முகங்களுக்கு முன்பாக என் பட்டயத்தை நான் வீசுகையில் மிகவும் திடுக்கிடுவார்கள்; நீ விழும் நாளில் அவரவர் தம்தம் பிராணனுக்காக நிமிஷந்தோறும் தத்தளிப்பார்கள்.

எசே 32:11. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: பாபிலோன் ராஜாவின் பட்டயம் உன்மேல் வரும்.

எசே 32:12. பராக்கிரமசாலிகளின் பட்டயங்களால் உன் ஜனத்திரளை விழப்பண்ணுவேன்; அவர்களெல்லாரும் ஜாதிகளில் வல்லமையானவர்கள்; அவர்கள் எகிப்தின் ஆடம்பரத்தைக் கெடுப்பார்கள்; அதின் ஏராளமான கூட்டம் அழிக்கப்படும்.

எசே 32:13. திரளான தண்ணீர்களின் கரைகளில் நடமாடுகிற அதின் மிருகஜீவன்களையெல்லாம் அழிப்பேன்; இனி மனுஷனுடைய கால் அவைகளைக் கலக்குவதுமில்லை, மிருகங்களுடைய குளம்புகள் அவைகளைக் குழப்புவதுமில்லை.

எசே 32:14. அப்பொழுது அவர்களுடைய தண்ணீர்களைத் தெளியப்பண்ணி, அவர்கள் ஆறுகளை எண்ணெயைப்போல் ஓடப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 32:15. நான் எகிப்துதேசத்தை பாழாக்கும்போதும், தேசம் தன் நிறைவை இழந்து வெறுமையாய்க் கிடக்கும்போதும், நான் அதில் குடியிருக்கிற யாவரையும் சங்கரிக்கும்போதும், நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 32:16. இது புலம்பல்; இப்படிப் புலம்புவார்கள்; இப்படி ஜாதிகளின் குமாரத்திகள் புலம்புவார்கள்; இப்படி எகிப்துக்காவும், அதினுடைய எல்லாத் திரளான ஜனங்களுக்காகவும் புலம்புவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் பார்வோனுக்கு விரோதமாகவும், எகிப்து தேசத்திற்கு விரோதமாகவும் தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தை பன்னிரண்டாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் முதலாந்தேதியிலே எசேக்கியேலுக்கு உண்டாயிற்று. எகிப்தின் ராஜாவாகிய பார்வோனும், எகிப்து தேசமும் அழிந்துபோகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எசேக்கியேல் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனைக் குறித்து புலம்ப வேண்டும். கர்த்தருடைய செய்தியை எசேக்கியேல் பார்வோனோடு சொல்லும்போது, அவர் புலம்பிக்கொண்டே சொல்லவேண்டும்.

பார்வோன் தேசங்களை குழப்புகிறவன். மற்ற தேசங்களை மாத்திரமல்ல, அவன் தன்னுடைய எகிப்து தேசத்தையும் குழப்புகிறான். அவன் ஜாதிகளுக்குள்ளே பாலசிங்கத்திற்கு ஒப்பானவன். பார்வோன் பெருந்தண்ணீர்களில் முதலையைப்போல் இருக்கிறான். அவன் தன் நதிகளில் எழும்பி, தன் கால்களால் தண்ணீர்களை கலக்கி, அவைகளின் ஆறுகளைக் குழப்பிவிடுகிறான். பாலசிங்கம் கர்ச்சித்து பயமுறுத்தும். அதுபோலவே பார்வோனும் ஜனங்களை பயமுறுத்துகிறான்.

பார்வோன் சமுத்திரத்திலுள்ள திமிங்கலத்தைப்போல இருக்கிறான். பெருந்தண்ணீர்கள் என்பது சமுத்திரத்தைக் குறிக்கிற வார்த்தை. வேதாகமத்தின் ஒரு சில பதிப்புக்களில், திமிங்கலம் என்பதற்கு பதிலாக, முதலை என்னும் வார்த்தை எழுதப்பட்டிருக்கிறது.

"லேவியாதான் ஆழத்தை உலைப்பானையைப் போல் பொங்கப்பண்ணி, கடலைத் தைலம்போலக் கலக்கிவிடும்" (யோபு 41:31). எகிப்தின் ராஜாவாகிய பார்வோனும் லேவியாதானைப்போல ஜனங்களையும், ஜாதிகளையும், தேசங்களையும் கலக்குகிறான். இதனால் கர்த்தருடைய கோபம் அவன்மேல் வருகிறது.

பார்வோன் கிரேனரோடு தேவையில்லாமல் யுத்தம்பண்ணினான். எகிப்து தேசத்தின் சேனைகள் நைல்நதி வழியாக கிரேனரோடு யுத்தம்பண்ணப் போனார்கள். அவர்கள் யுத்தத்திற்குப்போகும் போது, தங்கள் தேசத்திலுள்ள நைல் நதியையும் கலக்கினார்கள். தங்கள் எகிப்து தேசத்தையும் கலக்கினார்கள். தங்கள் தேசத்திற்கு அருகாமையிலுள்ள மற்ற தேசங்களையும் கலக்கினார்கள்.

மற்றவர்களைக் கலக்குகிறவர்களுக்கு கலக்கமுண்டாகும். பிறருக்கு தீங்கு செய்கிறவர்களுக்கு தீங்கு நேரிடும். மற்றவர்களுடைய அமைதியை கெடுத்துப்போடுகிறவர்களுடைய அமைதி கெட்டுப்போகும். கர்த்தர் நீதியுள்ளவர். பாவிகளால் தண்டனைக்கு தப்பிக்க முடியாது. பாவத்தின் சம்பளம் மரணம். பார்வோன் மற்றவர்களைக் கலக்குகிறான். கர்த்தரோ பார்வோனைக் கலக்குகிறார்.

"அங்கே யோசுவா: நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான்; அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி; அவன்மேல் இந்நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இப்படியே கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டு மாறினார்; ஆகையால் அவ்விடம் இந்நாள் வரைக்கும் ஆகோர் பள்ளத்தாக்கு என்னப்படும்" *(யோசு 7:25,26).*

சத்துரு கர்த்தருடைய பிள்ளைகளைக் கலக்கும்போது, கர்த்தர் அவனைக் கலங்கப்பண்ணுவார். இந்த சத்தியம் இங்கு ஒரு ஒப்புமையினால் விவரிக்கப்படுகிறது. பார்வோன் பெருந்தண்ணீர்களில் முதலையைப் போலிருக்கிறான். அவன் சமுத்திரத்திலுள்ள திமிங்கலத்தைப்போல இருக்கிறான். அவன் எவ்வளவு பெரிய பலசாலியாகயிருந்தாலும், கர்த்தர் அவனைவிட பெலமுள்ளவர். கர்த்தர் அவனைப் பிடிப்பதற்கு உபாயங்களை வைத்திருக்கிறார்.

பார்வோன் பெருந்தண்ணீர்களில் முதலையைப்போலிருந்து, தன் கால்வாய் தண்ணீர்களைக் கலக்கி, அவைகளின் ஆறுகளைக் குழப்பிவிடுகிறான். கர்த்தருடைய வார்த்தை பார்வோனுக்கு விரோதமாக வருகிறது.

"நான் வெகு ஜனக்கூட்டத்தைக் கொண்டு உன்மேல் என் வலையை வீசுவேன். அவர்கள் என் வலையில் உன்னை இழுத்துக் கொள்வார்கள்" (எசே 32:3) என்று கர்த்தர் பார்வோனுக்கு விரோதமாகச் சொல்லுகிறார்.

வெகுஜனக்கூட்டம் என்னும் வாக்கியம் கல்தேயருடைய சேனையைக் குறிக்கும். அவர்கள் எகிப்து தேசத்தின்மீது யுத்தம்பண்ண வருவார்கள். கல்தேயரின் சேனை திரளாயிருக்கும். பார்வோன் பெருந்தண்ணீர்களிலுள்ள முதலையைப் போலிருந்தாலும் கர்த்தர் அவனை தரையிலே போட்டுவிடுவார். அவனை வெட்டவெளியிலே எறிந்துவிடுவார். ஆகாயத்துப் பறவைகளையெல்லாம் அவன்மேல் இறங்கப்பண்ணுவார். பூமியின் மிருகங்களை பார்வோனுடைய மாம்சத்தினால் திருப்தியாக்குவார்.

பார்வோன் பெரிய முதலையைப் போலவும், பெரிய திமிங்கலத்தைப்போலவும் இருக்கிறான். இந்த மிருகத்தில் மாம்சம் அதிகமாயிருக்கும். கர்த்தர் அவனுடைய சதையை பர்வதங்களின்மேல் போடுவார். பள்ளத்தாக்குகளை அவனுடைய உடலினாலே நிரப்புவார். பார்வோனின் சேனையில் ஏராளமான யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். கல்தேயர்கள் அவர்களை தங்கள் பட்டயங்களால் வெட்டிப்போடுவார்கள். அவர்களுடைய பிரேதங்களினால் பள்ளத்தாக்குகள் நிரப்பப்படும். அவர்களுடைய சவங்கள் பர்வதங்களின்மேல் தூக்கியெறியப்படும்.

எகிப்தியர்கள் அழிந்துபோவதை, அவர்களுக்கு அருகாமையிலிருக்கிற தேசத்தார் பார்ப்பார்கள். பார்வோனுடைய யுத்தவீரர்கள் சங்காரமாவதை தங்கள் கண்களால் பார்த்து நடுங்குவார்கள். எகிப்தியரின் அழிவு அவர்களுடைய உள்ளங்களில் மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணும்.

பார்வோன் பெரிய முதலையைப் போலவும், பெரிய திமிங்கலத்தைப்போலவும் இருக்கிறான். அவன் எகிப்து தேசத்தில் அங்கும் இங்குமாக ஆணவத்தோடு சுற்றி அலைகிறான். அவன் நீந்தின தேசத்தின்மேல், கர்த்தர் அவனுடைய இரத்தத்தை பர்வதங்கள் மட்டும் பாயச்செய்வார். ஆறுகள் பார்வோனுடைய இரத்தத்தினால் நிரம்பும். நைல் நதிகளில் எகிப்து தேசத்தின் யுத்தவீரருடைய இரத்தங்கள் புரண்டு ஓடும். நைல் நதி இரத்த நதியாக மாறும்.

எகிப்து தேசம் செழித்திருந்தபோது, பார்வோன் எரிகிற விளக்காகயிருந்தான். அவன் பலசமயங்களில் எரிகிற கொள்ளிக்கட்டையாகயிருந்து, அநேகரை சுட்டெரித்துப்போட்டான். கர்த்தரோ எரிகிற அவனை அணைத்துப்போடுவார். வானத்தையும் மூடிப்போடுவார். அதின் நட்சத்திரங்களை இருண்டுபோகப்பண்ணுவார். சூரியனை மேகத்தினால் மூடுவார். அப்போது சந்திரனும் தன் ஒளியைக் கொடாதிருக்கும். கர்த்தர் பார்வோனையும் அவனுடைய சேனையையும் சங்காரம்பண்ணும்போது, இயற்கையிலுள்ள எல்லா காரியங்களும், அவனுடைய அழிவுக்கு சாதகமாயிருக்கும்.

பார்வோன் செழித்திருந்த காலத்தில், எரிகிற விளக்காயிருந்தான். இப்போதோ அவனுடைய விளக்கு அணைந்துபோயிற்று. அவனைச் சுற்றிலும் காரிருள் உண்டாயிற்று. இயற்கையின் வெளிச்சம்கூட அவனுக்கு கிடைக்கவில்லை. கர்த்தர் வானஜோதியான விளக்குகளையெல்லாம் அவன்மேல் இருண்டுபோகப்பண்ணுகிறார். எகிப்து தேசத்தின்மேல் அந்தகாரத்தை வரப்பண்ணுகிறார் (எசே 32:8).

இஸ்ரவேலின் தேவன் எகிப்து தேசத்தையும், அதின் அதிபதியாகிய பார்வோனையும் அழித்துப்போடுகிறார். கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுவதை அநேகம் ஜனங்கள் பிரதியட்சமாய்ப் பார்க்கிறார்கள். கர்த்தர் பார்வோனை சங்காரம்பண்ணின செய்தியை எல்லா ஜாதிகளும் கேள்விப்படுகிறார்கள். இந்தச் செய்தி தூரதேசங்களுக்கும் பரவுகிறது.

கர்த்தர் பார்வோனுடைய அழிவைப்பற்றிய செய்தியை உலகமெங்கிலும் பரவச் செய்கிறார். அந்தச் செய்தி பார்வோன் அறியாத தேசங்கள் மட்டும் எட்டுகிறது. கர்த்தரே அந்தச் செய்தியை பூமியெங்கிலும் எட்டப்பண்ணுகிறார். பார்வோன் சங்காரம்பண்ணப்பட்ட செய்தியைக் கேட்டு அநேக ஜாதிகளின் இருதயம் விசனமடையும். அவர்கள் எல்லோரும் கலங்கிப்போவார்கள். கர்த்தருடைய வார்த்தை பிரத்தியட்சமாய் நிறைவேறுவதைப் பார்த்து, ஜாதிகள் திகிலடைவார்கள்.

எகிப்தியர்கள் விக்கிரங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களுக்கு அழிவு வரும்போது, அவர்கள் நம்பின விக்கிரகங்களால் அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை. பெலனுமில்லை. எகிப்தியர்கள் அழியும்போது, விக்கிரகங்கள் செயலிழந்து கிடக்கும். இதைப் பார்த்து அநேக ஜனங்கள் திகைப்பார்கள்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தை ஜனங்களுடைய முகங்களுக்கு முன்பாக வீசுவார். அவர்களுடைய ராஜாக்கள் அதைப் பார்த்து திடுக்கிடுவார்கள். எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோன் கர்த்தருடைய பட்டயத்தினால் விழுவான். பார்வோன் அதிக பலமுள்ளவன். அவனே கீழே விழுந்துவிடுகிறான். மற்ற ஜனங்களும், மற்ற ராஜாக்களும் பலவீனமானவர்கள். பலமுள்ள பார்வோன் கர்த்தருடைய பட்டயத்தினால் கீழே விழுவதைப் பார்த்து, மற்ற ராஜாக்களும், மற்ற ஜனங்களும், அவரவர் தம் தம் பிராணனுக்காக நிமிஷந்தோறும் தத்தளிப்பார்கள் (எசே 32:10).

"ஐயையோ! சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே! ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே! என்று சொல்லி, அழுது துக்கிப்பார்கள்" (வெளி 18:16).

கல்தேயர்கள் எகிப்தியரை தங்கள் பட்டயத்தினால் சங்காரம்பண்ணுகிறார்கள். எகிப்தியருக்கு பயமுண்டாகிறது. அவர்களுக்கு மாத்திரமல்ல, எகிப்தியரின் அழிவைப் பார்க்கிற மற்ற ஜனங்களுக்கும் பயமுண்டாகிறது. எகிப்தியரின் நிமித்தம், அநேக ஜனங்கள் திகைக்கிறார்கள். திடுக்கிடுகிறார்கள். எகிப்தியர்கள் பட்டயத்தினால் செத்துவிழும்போது, மற்றவர்கள் தங்கள் பிராணனுக்காக தத்தளிக்கிறார்கள்.

மற்றவர்கள் தங்கள் பாவத்தின் நிமித்தமாக அழியும்போது, நமக்குள் ஆவிக்குரிய பயமுண்டாகவேண்டும். அவர்களைப்போலவே நாமும் பாவிகள் என்பதை உணரவேண்டும். தேவனுடைய கோபம் நம்மீதும் வரும் என்னும் பயம் நம்மிடத்தில் காணப்படவேண்டும். கர்த்தர் மற்றவர்களைத்தான் தண்டிப்பார், நம்மை ஒன்றும் செய்யமாட்டார் என்று இறுமாப்பாயிருக்கக்கூடாது. கர்த்தர் நீதியுள்ளவர். அவரிடத்தில் பட்சபாதமில்லை.

பாபிலோன் ராஜாவின் பட்டயம் எகிப்தியரின் மேல் வருகிறது. பராக்கிரமசாலிகளின் பட்டயங்கள் எகிப்தின் ஜனத்திரளை விழப்பண்ணுகிறது. எகிப்தியரில் திரளான ஜனங்கள் பட்டயத்தினால் செத்துப்போகிறார்கள். அவர்கள் எகிப்தின் ஆடம்பரத்தைக் கெடுப்பார்கள். எகிப்தியரின் ஏராளமான கூட்டம் அழிக்கப்படும். எகிப்தியரின் பெருமையும், ஆடம்பரமும் அழிந்துபோகும். கல்தேயர்கள் ஜாதிகளில் வல்லமையானவர்கள். எகிப்தியர்களால் அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ண முடியவில்லை. கல்தேயர் எகிப்தியரை அழிக்கிறார்கள். எகிப்தியர் அழிந்து போகிறார்கள்.

எகிப்து தேசத்தில் ஏராளமான ஆடுமாடுகள் உள்ளன. அவையெல்லாம் நைல் நதியின் புல்வெளியிலே மேயும். அவற்றிற்கு நல்ல மேய்ச்சல் நிலம் உள்ளது. கர்த்தர் திரளான தண்ணீர்களின் கரைகளில் நடமாடுகிற எகிப்தின் மிருக ஜீவன்களையெல்லாம் அழித்துப்போடுகிறார்.

கல்தேயர்கள் எகிப்தியரின் மிருகங்களை தங்கள் பட்டயத்தால் வெட்டிப்போட்டிருக்கலாம். அல்லது கல்தேயர்கள் தங்களுடைய போஜனத்திற்காக, எகிப்தியரின் ஆடுமாடுகளை, கொள்ளையிட்டு, தங்கள் தேசத்திற்கு பிடித்து சென்றிருக்கலாம். கர்த்தர் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, எகிப்தின் ஜனங்களும் அழிந்துபோகிறார்கள். எகிப்தின் மிருகஜீவன்களும் அழிந்து போகிறது.

எகிப்திலுள்ள மிருகஜீவன்கள் அழிந்துபோகும்போது, மனுஷனுடைய கால் திரளான தண்ணீர்களை கலக்குவதில்லை. மிருகங்களுடைய குளம்புகள் அவைகளைக் குழப்புவதுமில்லை. எகிப்தின் தண்ணீர்கள் வேகமாய் ஓடும். நைல் நதி பிரவாகித்து ஓடும். ஆனால் இப்போதோ அது மெதுவாக ஓடுகிறது. எகிப்தியரின் ஆறுகள் எண்ணெயைப்போல் ஓடுகிறது. அவர்களுடைய தண்ணீர்கள் தெளிவாயிருக்கிறது. மிருகங்களுடைய குளம்புகள் எகிப்தின் தண்ணீர்களை குழப்பாததினால், அவையெல்லாம் தெளிவாகவும், சுத்தமாகவும், எண்ணெயைப்போலும் இருக்கிறது (எசே 32:4).

எகிப்து தேசத்தின் ஆறுகள் எண்ணெயைப்போல மெதுவாக ஓடும். இது எகிப்தின் துக்கத்தை விவரிக்கும் அடையாள வார்த்தையாகும். எகிப்து தேசம் முழுவதிலும் துக்கமும், வேதனையும் நிரம்பியிருக்கிறது. அங்கே அழுகையும் புலம்பலும் உண்டாயிருக்கிறது. அழுகிறவர்கள் எந்த வேலையையும் சுறுசுறுப்பாய் செய்யமாட்டார்கள். அவர்கள் அமைதியாக அமர்ந்திருப்பார்கள். எகிப்தின் ஆறுகளும் வேகமாக ஓடாமல் மெதுவாக ஓடுகிறது. அது ஆர்ப்பரித்து, ஆரவாரித்து ஓடாமல், அமைதியாக ஓடுகிறது. எகிப்தின் ஆறுகள் எண்ணெயைப்போல மென்மையாயிருக்கிறது.

கர்த்தர் எகிப்து தேசத்தைப் பாழாக்குகிறார். பாபிலோன் தேசத்தார் எகிப்து தேசத்தை மொத்தமாய்க் கொள்ளையிடுகிறார்கள். இதனால் எகிப்து தேசம் நிறைவை இழந்து வெறுமையாய்க் கிடக்கிறது. கர்த்தர் எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யாவரையும் சங்கரிக்கிறார். எகிப்து தேசத்திற்கும், எகிப்தியருக்கும், பூரண நாசமும், பூரண மோசமும், பூரண அழிவும், பூரண சங்காரமும் உண்டாகிறது. அப்போது எகிப்தியர்கள், இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்னும் சத்தியத்தை அறிந்துகொள்கிறார்கள் (எசே 32:15).

எகிப்து தேசத்தாரின் அழிவு எசே 32:17-32

எசே 32:17. பின்னும் பன்னிரண்டாம் வருஷம் அந்த மாதத்தின் பதினைந்தாந் தேதியிலே கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 32:18. மனுபுத்திரனே, நீ எகிப்தினுடைய ஏராளமான ஜனத்தினிமித்தம் புலம்பி, அவர்களையும் பிரபலமான ஜாதிகளின் குமாரத்திகளையும் குழியில் இறங்கினவர்கள் அண்டையிலே பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடு.

எசே 32:19. மற்றவர்களைப்பார்க்கிலும் நீ அழகில் சிறந்தவனோ? நீ இறங்கி, விருத்தசேதனமில்லாதவர்களிடத்தில் கிட.

எசே 32:20. அவர்கள் பட்டயத்தால் வெட்டுண்டவர்களின் நடுவிலே விழுவார்கள், பட்டயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் அவளையும் அவளுடைய ஜனத்திரள் யாவையும் பிடித்திழுங்கள்.

எசே 32:21. பராக்கிரமசாலிகளில் வல்லவர்களும், அவனுக்குத் துணைநின்றவர்களும், பாதாளத்தின் நடுவிலிருந்து அவனோடே பேசுவார்கள்; அவர்கள் விருத்தசேதனமில்லாதவர்களாய் பட்டயத்தால் வெட்டுண்டு, இறங்கி, அங்கே கிடக்கிறார்கள்.

எசே 32:22. அங்கே அசூரும் அவனுடைய எல்லாக்கூட்டத்தாரும் கிடக்கிறார்கள்; அவனைச் சுற்றிலும் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கிறது; அவர்கள் எல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்தவர்கள்தானே.

எசே 32:23. பாதாளத்தின் பக்கங்களில் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கிறது; அவனுடைய பிரேதக் குழியைச்சுற்றிலும் அவனுடைய கூட்டம் கிடக்கிறது, ஜீவனுள்ளோருடைய தேசத்திலே கெடியுண்டாக்கின அவர்களெல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்தவர்கள்தானே.

எசே 32:24. அங்கே ஏலாமும் அவனுடைய பிரேதக்குழியைச் சுற்றிலும் அவனுடைய எல்லா ஏராளமான ஜனமும் கிடக்கிறார்கள்; அவர்களெல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்து, விருத்தசேதனமில்லாதவர்களாய்ப் பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார்கள்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலே கெடியுண்டாக்கின அவர்கள், குழியில் இறங்கினவர்களோடே கூடத் தங்கள் அவமானத்தைச் சுமக்கிறார்கள்.

எசே 32:25. வெட்டுண்டவர்களின் நடுவே அவனை அவனுடைய எல்லா ஏராளமான ஜனத்துக்குள்ளும் கிடத்தினார்கள்; அவனைச் சுற்றிலும் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கிறது; அவர்களெல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்ட விருத்தசேதனமில்லாதவர்கள்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அவர்கள் கெடியுண்டாக்கினவர்களாயிருந்தும், அவர்கள் குழியில் இறங்கினவர்களோடே கூடத் தங்கள் அவமானத்தைச் சுமக்கிறார்கள்; அவன் வெட்டுண்டவர்களின் நடுவே வைக்கப்பட்டிருக்கிறான்.

எசே 32:26. அங்கே மேசேக்கும் தூபாலும் அவர்களுடைய ஏராளமான ஜனங்களும் கிடக்கிறார்கள்; அவர்களைச்சுற்றிலும் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கிறது; அவனுடைய ஜீவனுள்ளோருடைய தேசத்திலே கெடியுண்டாக்கினவர்களாயிருந்தும், அவர்களெல்லாரும் விருத்தசேதனமில்லாதவர்கள்; பட்டயத்தால் வெட்டுண்டுவிழுவார்கள்.

எசே 32:27. ஜீவனுள்ளோருடைய தேசத்திலே பராக்கிரமசாலிகளுக்குக் கெடியுண்டாக்குகிறவர்களாயிருந்தும், அவர்கள் விருத்தசேதனமில்லாதவர்களாய் விழுந்து, தங்கள் யுத்த ஆயுதங்களோடு பாதாளத்தில் இறங்கின பராக்கிரமசாலிகளோடே இவர்கள் கிடப்பதில்லை; அவர்கள் தங்கள் பட்டயங்களைத் தங்கள் தலைகளின் கீழ் வைத்தார்கள். ஆனாலும் அவர்களுடைய அக்கிரமம் தங்கள் எலும்புகளின்மேல் இருக்கும்.

எசே 32:28. நீயும் விருத்தசேதமில்லாதவர்களின் நடுவே நொறுங்குண்டு, பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடே கிடப்பாய்.

எசே 32:29. அங்கே ஏதோமும் அதின் ராஜாக்களும் அதின் எல்லாப் பிரபுக்களும் கிடக்கிறார்கள்; பட்டயத்தால் வெட்டுண்டவர்களிடத்தில் இவர்கள் தங்கள் வல்லமையோடுங்கூடக் கிடத்தப்பட்டார்கள்; இவர்கள் விருத்தசேதனமில்லாதவர்களிடத்திலும், குழியில் இறங்குகிறவர்களிடத்திலும் கிடக்கிறார்கள்.

எசே 32:30. அங்கே வடதிசை அதிபதிகள் அனைவரும் எல்லாச் சீதோனியரும் கிடக்கிறார்கள்; இவர்கள் கெடியுண்டாக்குகிறவர்களாயிருந்தாலும் தங்கள் பராக்கிரமத்தைக் குறித்து வெட்கப்பட்டு, வெட்டுண்டவர்களிடத்தில் இறங்கி, பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடே விருத்தசேதனமில்லாதவர்களாய்க் கிடந்து, குழியில் இறங்கினவர்களிடத்தில் தங்கள் அவமானத்தைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள்.

எசே 32:31. பார்வோன் அவர்களைப்பார்த்து தன் ஏராளமான ஜனத்தின்பேரிலும் ஆறுதலடைவான்; பட்டயத்தால் வெட்டுண்டார்களென்று, பார்வோனும் அவனுடைய சர்வ சேனையும் ஆறுதலடைவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 32:32. என்னைப்பற்றிய கெடியை ஜீவனுள்ளோர் தேசத்தில் உண்டுபண்ணுகிறேன், பார்வோனும் அவனுடைய ஏராளமான ஜனமும் பட்டயத்தால் வெட்டுண்டவர்களிடத்தில் விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவே கிடத்தப்படுவார்கள் என்கிறதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

இந்த தீர்க்கதரிசன செய்தியோடு எகிப்தின் பாரம் நிறைவு பெறுகிறது. எகிப்து தேசம் ஒரு காலத்தில் செல்வச்செழிப்போடு ஐசுவரியமுள்ளதாயிருந்தது. ஆனால் இப்போதோ அந்த தேசம் சீரழிந்து கிடக்கிறது. எகிப்து தேசத்தில் இப்போது மேன்மையில்லை. மகத்துவமில்லை. ஆடம்பரமும் ஆரவாரமுமில்லை. அது பாதாளத்தின் பக்கங்களில் பிரேதக்குழிகளில் கிடப்பதுபோல, செத்துக்கிடக்கிறது.

எகிப்து தேசம் மரித்துப்போயிற்று. அது இப்போது பிரேக்குழியில் புதைக்கப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி எகிப்து தேசத்தின் அழிவைக் குறித்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, நீ எகிப்தினுடைய ஏராளமான ஜனத்தினிமித்தம் புலம்பி, அவர்களையும் பிரபலமான ஜாதிகளின் குமாரத்திகளையும் குழியில் இறங்கினவர்கள் அண்டையிலே பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடு" (எசே 32:18) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் எகிப்திற்கு விரோதமாக கர்த்தருடைய செய்தியைச் சொல்லும்போது, அதைக் கோபத்தோடு சொல்லக்கூடாது. எசேக்கியேலுக்கு எகிப்து தேசத்தின்மீது கரிசனை இருக்கவேண்டும். அன்பும் நேசமும் இருக்கவேண்டும். எகிப்து தேசத்தின் அழிவைப் பார்த்து எசேக்கியேல் பரிதாபப்படவேண்டும். எசேக்கியேல் எகிப்து தேத்தின் ஏராளமான ஜனங்களினிமித்தம் அழுது புலம்பவேண்டும்.

எசேக்கியேல் எகிப்து தேசத்தாரை தாழ்விடங்களில் தள்ளிவிடவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களைத் தள்ளிவிடும்போது, எசேக்கியேல் அவர்களுக்காக அழுது புலம்பி, பரிதபித்து, அவர்களை குழியில் இறங்கினவர்களண்டையில், பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடவேண்டும். பிரபலமான ஜாதிகளின் குமாரத்திகள் பூமியின் தாழ்விடங்களில் எங்கே தள்ளப்பட்டிருக்கிறார்களோ, அங்கே, அவர்களோடு எகிப்தினுடைய ஏராளமான ஜனத்தையும் எசேக்கியேல் தள்ளிவிடவேண்டும்.

பூமியின் தாழ்விடங்களில் ஏற்கெனவே, ஏராளமான ஜாதிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கிலும் எகிப்து தேசம் அழகில் சிறந்தவளல்ல. அவர்களெல்லோரும் விருத்தசேதனமில்லாதவர்கள். எகிப்து தேசமும் பூமியின் தாழ்விடங்களில் தள்ளப்பட்டு, அது விருத்தசேதனமில்லாதவர்களிடத்தில் கிடக்க வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே 32:19).

எசேக்கியேல் எகிப்து தேசத்தாரை பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடும்போது, அவர்கள் பட்டயத்தால் வெட்டுண்டவர்களின் நடுவிலே விழுவார்கள். எகிப்தியர்கள் பட்டயத்திற்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறார்கள். "எகிப்து தேசத்தையும், அதன் ஜனத்திரள் யாவையும் பிடித்திழுங்கள்" (எசே 32:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாதாளத்தின் நடுவிலே, ஏற்கெனவே பராக்கிரமசாலிகளில் வல்லவர்களும், எகிப்தியருக்கு துணை நின்றவர்களும் விழுந்துகிடக்கிறார்கள். எசேக்கியேல் எகிப்தியரை பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடும்போது, அங்கே எகிப்தியருக்கு துணைநின்றவர்கள் அவர்களோடு பேசுவார்கள். அவர்களெல்லோருமே விருத்தசேதனமில்லாதவர்களாய், பட்டயத்தால் வெட்டுண்டு, பாதாளத்தின் நடுவே இறங்கி, அங்கே கிடக்கிறார்கள்.

இவர்கள் பராக்கிரமசாலிகளில் வல்லவர்களாயிருந்தாலும், இவர்களும் கர்த்தருடைய பட்டயத்திற்கு தப்பிக்கவில்லை. பட்டயத்திற்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறவர்கள், பட்டயத்தால் வெட்டுண்டு விழுவார்கள் (எசே 32:20,21).

எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோனுக்கும், அவனோடுகூட எகிப்து தேசத்தார் அனைவருக்கும் பாதாளத்தின் நடுவிலே அடக்க ஆராதனை நடைபெறுகிறது. அவர்களெல்லோரும் பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடப் படுகிறார்கள். அடக்க ஆராதனை ஆடம்பரமாகவும், ஆரவாரமாகவும் நடைபெறுகிறது.

எகிப்தியர்கள் பாதாளத்தில் தள்ளப்படுவதற்கு முன்பாகவே, அங்கே அசூரும், அவனுடைய எல்லா கூட்டத்தாரும் கிடக்கிறார்கள். பார்வோன் பாதாளத்தின் நடுவிலே தள்ளப்படும்போது, அவனைச் சுற்றிலும், அசீரியின் பிரேதக்குழிகள் இருக்கிறது. பார்வோனைப்போலவே, அவர்களெல்லோரும் பட்டயத்தால் வெட்டுண்டு, பாதாளத்தின் நடுவில் விழுந்துகிடக்கிறார்கள் (எசே 32:22).

பாதாளத்தின் பக்கங்களில் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கிறது; அவனுடைய பிரேதக்குழியைச்சுற்றிலும் அவனுடைய கூட்டம் கிடக்கிறது, ஜீவனுள்ளோருடைய தேசத்திலே கெடியுண்டாக்கின அவர்களெல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்தவர்கள் (எசே 32:23).

பாதாளத்தின் நடுவிலே ஏலாமும் அவனுடைய பிரேதக்குழியைச் சுற்றிலும் அவனுடைய எல்லா ஏராளமான ஜனமும் கிடக்கிறார்கள்; அவர்களெல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்து, விருத்தசேதனமில்லாதவர்களாய்ப் பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார்கள்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலே கெடியுண்டாக்கின அவர்கள், குழியில் இறங்கினவர்களோடேகூடத் தங்கள் அவமானத்தைச் சுமக்கிறார்கள் (எசே 32:24).

பாதாளத்தின் நடுவிலே பெர்சிய தேசமும், ஏலாமும், அதன் ராஜாக்களும், அவனுடைய திரளான சேனைகளும் விழுந்துகிடக்கிறார்கள். வெட்டுண்டவர்களின் நடுவே ஏலாமை அவனுடைய எல்லா ஏராளமான ஜனத்துக்குள்ளும் கிடத்தினார்கள்; அவனைச் சுற்றிலும் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கிறது; அவர்களெல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்ட விருத்தசேதனமில்லாதவர்கள்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அவர்கள் கெடியுண்டாக்கினவர்களாயிருந்தும், அவர்கள் குழியில் இறங்கினவர்களோடேகூடத் தங்கள் அவமானத்தைச் சுமக்கிறார்கள்; ஏலாம் வெட்டுண்டவர்களின் நடுவே வைக்கப்பட்டிருக்கிறான் (எசே 32:25).

பாதாளத்தின் நடுவிலே கீத்தியரின் வல்லமையும் விழுந்துகிடக்கிறது. அங்கே மேசேக்கும் தூபாலும் அவர்களுடைய ஏராளமான ஜனங்களும் கிடக்கிறார்கள்; அவர்களைச்சுற்றிலும் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கிறது; அவனுடைய ஜீவனுள்ளோருடைய தேசத்திலே கெடியுண்டாக்கினவர்களாயிருந்தும், அவர்களெல்லாரும் விருத்தசேதனமில்லாதவர்கள்; பட்டயத்தால் வெட்டுண்டுவிழுவார்கள் (எசே 32:26).

மேசேக்கும் தூபாலும் மனிதநேயமில்லாமல் ஜனங்களை சங்காரம்பண்ணியவர்கள். வடக்கு தேசத்தார் எல்லோரும் இவர்களைப் பார்த்து பயந்தார்கள். இவர்களோடு மற்ற தேசத்தார் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். மேதியரின் ராஜாவாகிய காக்கேரஸ் செத்துப்போனான். இவன் பலசாலியாகயிருந்தாலும் இவனும் பாதாளத்தின் நடுவிலே தள்ளப்பட்டான்.

கீத்தியர்களுக்கு மரியாதையான அடக்க ஆராதனை நடைபெறவில்லை. இவர்களுடைய தேசம் அழியும்போது, இவர்களுக்காக ஒருவரும் துக்கம் கொண்டாடவில்லை. ஏதோம் தேசம் பல வருஷங்களாக வல்லரசாக ஆட்சி செய்தது. செல்வ சிறப்போடிருந்தது. ஏதோமியரும் பாதாளத்தின் நடுவிலே கிடக்கிறார்கள். எகிப்து தேசம் அழிவதற்கு முன்பாகவே ஏதோம் தேசம் அழிந்துபோயிற்று.

"நான் ஏதோம் தேசத்துக்கு விரோதமாக என் கையை நீட்டி அதில் மனுஷரையும் மிருகங்களையும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணி, அதைத் தேமான் துவக்கித் தேதான் மட்டும் வனாந்தரமாக்குவேன்; பட்டயத்தால் விழுவார்கள்" (எசே 25:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏதோமியர் விருத்தசேதனமில்லாதவர்களாய் விழுந்து, தங்கள் யுத்த ஆயுதங்களோடு பாதாளத்திலிறங்கின பராக்கிரமசாலிகளோடே இவர்கள் கிடப்பதில்லை; அவர்கள் தங்கள் பட்டயங்களைத் தங்கள் தலைகளின் கீழ் வைத்தார்கள். ஆனாலும் அவர்களுடைய அக்கிரமம் அவர்கள் எலும்புகளின்மேல் இருக்கும் (எசே 32:27). ஏதோமியர்கள் மிகப்பெரிய பராக்கிரமசாலிகள். இவர்கள் மற்ற பராக்கிரமசாலிகளுக்கு கெடி உண்டாக்குகிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் ஏதோமியரைப் பார்த்து பயந்தார்கள். ஆனால் இப்போதோ ஏதோமியர் பாதாளத்தின் நடுவிலே விழுந்துகிடக்கிறார்கள்.

பாதாளத்தின் நடுவிலே விருத்தசேதனமில்லாதவர்கள் கீழே விழுந்துகிடக்கிறார்கள். அவர்கள் நொறுங்குண்டவர்களாகவும், பட்டயத்தால் வெட்டுண்டவர்களாகவும் கிடக்கிறார்கள். அவர்கள் நடுவே எகிப்தியரும், அவர்களைப்போலவே நொறுங்குண்டு பட்டயத்தால் வெட்டுண்டவர்களாய்க் கிடப்பார்கள் (எசே 32:28).

பாதாளத்தின் நடுவிலே புறஜாதி தேசத்தார் ஏராளமானோர் விழுந்து கிடக்கிறார்கள். அங்கே ஏதோமும் அதின் ராஜாக்களும் அதின் எல்லாப் பிரபுக்களும் கிடக்கிறார்கள் (எசே 32:29). அங்கே வடதிசை அதிபதிகள் அனைவரும், எல்லாச் சீதோனியரும் கிடக்கிறார்கள் (எசே 32:30).

ஏதோமும் அதின் ராஜாக்களும் பட்டயத்தால் வெட்டுண்டவர்களிடத்தில் இவர்கள் தங்கள் வல்லமையோடுங்கூடக் கிடத்தப்பட்டார்கள்; இவர்கள் விருத்தசேதனமில்லாதவர்களிடத்திலும், குழியில் இறங்குகிறவர்களிடத்திலும் கிடக்கிறார்கள் (எசே 32:29).

வடதிசை அதிபதிகளும், சீதோனியரும் கெடியுண்டாக்குகிறவர்களாயிருந்தாலும் தங்கள் பராக்கிரமத்தைக் குறித்து வெட்கப்பட்டு, வெட்டுண்டவர்களிடத்தில் இறங்கி, பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடே விருத்தசேதனமில்லாதவர்களாய்க் கிடந்து, குழியில் இறங்கினவர்களிடத்தில் தங்கள் அவமானத்தைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள் (எசே 32:30).

சீதோனியர்கள் எகிப்தியரோடு கடல் வாணிபம் செய்தார்கள். எகிப்தியருக்கும் சீதோனியருக்கும் நடுவே நெருங்கிய வியாபாரத் தொடர்பு இருந்தது. எகிப்தியர்கள் தங்களுடைய பாதுகாப்புக்கு சீதோனியரை சார்ந்திருந்தார்கள். சீதோனியரோ பாதாளத்தில் விழுந்து கிடக்கிறார்கள்.

புறஜாதி தேசத்தாருக்கு அழிவு வரும்போது, எகிப்து தேசம் அந்த அழிவுக்கு தப்பிக்காது."நீயும் விருத்தசேதமில்லாதவர்களின் நடுவே நொறுங்குண்டு, பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடேகிடப்பாய்" (எசே 32:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தைச் சுற்றிலுமிருந்த மற்ற தேசங்களெல்லாம் அழிந்துபோயிற்று. கல்தேயர்கள் அந்த தேசத்தாரை சர்வநாசம் பண்ணினார்கள். மற்ற ஜாதியார் அழிந்து போவதை பார்வோனும் பார்ப்பான். ஆனாலும் அவன் புத்திதெளியமாட்டான். எகிப்து தேசத்திலே, தன்னிடத்தில் ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள் என்று பார்வோன் தன் தேசத்தைப்பற்றி பெருமையாய் நினைப்பான்.

கல்தேயர்கள் மற்றவர்களைத்தான் வெட்டினார்கள், ஆனால் அவர்கள் தங்களை வெட்டவில்லை என்று பார்வோனும், அவனுடைய சர்வசேனையும் ஆறுதலடைந்திருப்பார்கள். கர்த்தர் பார்வோனைப்பார்த்து, "நீயும் விருத்தசேதமில்லாதவர்களின் நடுவே நொறுங்குண்டு, பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடேகிடப்பாய்" (எசே 32:28) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய கோபமும், அவருடைய நியாயத்தீர்ப்பும் பார்வோன்மேலும், எகிப்து தேசத்தின்மேலும் வந்திருக்கிறது. பார்வோனும் அவனுடைய ஏராளமான ஜனமும் பட்டயத்தால் வெட்டுண்டவர்களிடத்தில் விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவே கிடத்தப்படுவார்கள் *(எசே 32:32)*. பார்வோனும், எகிப்தின் திரளான ஜனங்களும், மற்ற ஜனங்களைப்போலவே பாதாளத்தின் நடுவிலே கிடப்பார்கள். அங்கே அவர்களுடைய பிரேக்குழிகள் கிடக்கும். அவர்களெல்லோரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்து, விருத்தசேதனமில்லாதவர்களாய் பூமியின் தாழ்விடங்களில் தள்ளப்படுவார்கள்.

33 அதிகாரம்

எசேக்கியேல் தீர்க்கதரிசி இப்போது கர்த்தருடைய பிள்ளைகள் பக்கமாகத் திரும்புகிறார். எசேக்கியேல் யூததேசத்தைச் சேர்ந்தவர். யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. கர்த்தர் எசேக்கியேலை எருசலேமின் குடிகளுக்கு காவற்காரனாக வைத்திருக்கிறார். கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை எசேக்கியேல் அவர்களுக்கு அறிவிக்க வேண்டும் (எசே 33:1-9). இந்த செய்தியின் சாரம் ஏற்கெனவே எசே 3:17-ஆவது வசனம் முதல் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமும் ஐக்கியமாயிருக்கவேண்டும். கர்த்தர் அவர்களை சோதித்துப் பார்க்கிறார். கர்த்தர் தம்முடைய பிரமாணங்களை அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறார் (எசே 33:10-20).

இஸ்ரவேல் வம்சத்தாரில் மீதமாயிருக்கிறவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் தங்கியிருக்கிறார்கள். கர்த்தருடைய விசேஷித்த செய்தி அவர்களுக்கு பிரத்தியேகமாக அறிவிக்கப்படுகிறது (எசே 33:21-29).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் அநேகர், எசேக்கியேல் சொல்லுகிற தீர்க்கதரிசன செய்திகளுக்கு கவனமாய்ச் செவிகொடுக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்களுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று (எசே 33:30-33)

காவற்காரன்
எசே 33:1-9

எசே 33:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 33:2. மனுபுத்திரனே, நீ உன் ஜனத்தின் புத்திரரோடே பேசி, அவர்களோடே சொல்ல வேண்டியதாவது: நான் தேசத்தின்மேல் பட்டயத்தை வரப்பண்ணுகையில் தேசத்தின் ஜனம் தங்கள் எல்லைகளிலுள்ள ஒருவனை அழைத்து, அவனைத் தங்களுக்குக் காவற்காரனாக வைத்தபின்பு,

எசே 33:3. இவன் தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக்கண்டு, எக்காளம் ஊதி, ஜனத்தை எச்சரிக்கும்போது,

எசே 33:4. எக்காளத்தின் சத்தத்தைக் கேட்கிறவன் அதைக்கேட்டும், எச்சரிக்கையாயிராமல், பட்டயம் வந்து அவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேல் சுமரும்.

எசே 33:5. அவன் எக்காளத்தின் சத்தத்தைக்கேட்டும், எச்சரிக்கையாயிருக்கவில்லை; அவனுடைய இரத்தப்பழி அவன் பேரிலே சுமரும்; எச்சரிக்கையாயிருக்கிறவனோ தன் ஜீவனைத் தப்புவித்துக்கொள்ளுவான்.

எசே 33:6. காவற்காரன் பட்டயம் வருவதைக் கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும் ஜனங்கள் எச்சரிக்கப்படாமலும், பட்டயம் வந்து அவர்களில் யாதொருவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், அவன் தன் அக்கிரமத்திலே வாரிக்கொள்ளப்பட்டான்; ஆனாலும் அவன் இரத்தப்பழியைக் காவற்காரன் கையிலே கேட்பேன்.

எசே 33:7. மனுபுத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவற்காரனாக வைத்தேன்; ஆகையால் நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.

எசே 33:8. நான் துன்மார்க்கனை நோக்கி: துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அதை அவனுக்குச் சொல்லாமற்போனால், அந்தத் துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான்; ஆனாலும் அவன் இரத்தப்பழியை உன் கையிலே கேட்பேன்.

எசே 33:9. துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பும்படி நீ அவனை எச்சரித்தும், அவன் தன் வழியைவிட்டுத்திரும்பாமற்போனால், அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; நீயோ உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தைப் பிடித்து விடுகிறார்கள். இந்த சமயத்தில் கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக எசேக்கியேலைத் தெரிந்தெடுக்கிறார். எசேக்கியேலின் தீர்க்கதரிசன ஊழியம் புதுப்பிக்கப்படுகிறது. எசேக்கியேல் எருசலேமின் குடிகளுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை அறிவிக்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலின் ஊழியத்தை, ஒரு தேசத்தின் காவற்காரனோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். நகரத்தை காவல் காக்கிற பொறுப்பு காவற்காரனிடம் ஒப்புவிக்கப்படுகிறது. தன்னிடத்தில் நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிற கடமையை காவற்காரன் உண்மையாய்ச் செய்யவேண்டும்.

தேசத்திற்கு ஆபத்து வரும்போது, அந்த தேசத்தார் தங்களுக்கு காவற்காரனை வைப்பது வழக்கம். அந்நிய தேசத்தார் தங்கள் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வருவார்களோ என்னும் சந்தேகமும், பயமும் வரும்போது, அவர்கள் தங்களுக்கு ஒரு காவற்காரனை வைப்பார்கள்.

காவற்காரன் தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக் கண்டு, எக்காளம் ஊதி, ஜனத்தை எச்சரிப்பான் (எசே 33:3). கர்த்தர் தேசத்தின்மேல் பட்டயத்தை வரப்பண்ணுகிறார். அந்த தேசத்தின் ஜனம் தங்கள் எல்லைகளிலுள்ள ஒருவனை அழைத்து, அவனை தங்களுக்கு காவற்காரனாக வைக்கிறார்கள்.

எதிரி தேசத்தார் தங்கள் தேசத்திற்கு விரோதமாக வரும்போது, காவற்காரன் எக்காளம் ஊதி, அந்த தேசத்தின் ஜனங்களை எச்சரிப்பான். தேசத்தின் ஜனங்களும் எச்சரிப்படைந்து, எதிரி தேசத்தாரை எதிர்ப்பதற்கும், தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் ஆயத்தமடைவார்கள். எதிரிகளின் வருகை அந்த தேசத்தாருக்கு ஆச்சரியமாயிருக்காது.

ஒரு தேசத்தார் தங்களுக்கு காவற்காரனை வைக்கும்போது, தங்கள் எல்லைகளிலுள்ள ஒருவனைத் தெரிந்தெடுத்து, அவனையே காவல்காரனாக வைப்பார்கள். இவனுக்கு அந்த எல்லைகளைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அவன் உண்மையுள்ளவனாகயிருக்கவேண்டும். காவல்காரன் முழுதேசத்திற்கும் பொதுவானவன். தேசத்தின் நன்மைக்காக பாடுபடுகிறவன். தேசத்தின் பாதுகாப்பு இவனுடைய கையிலிருக்கிறது.

காவற்காரன் தன்னுடைய வேலையில் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். தேசத்தின் பாதுகாப்பு இவனை நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவன் தன்னுடைய கடமையில் கவனமாயிருந்து, தன்னுடைய வேலைகளைக் குறித்து, தன்னுடைய தேசத்தாருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக் கண்டு, எக்காளம் ஊதி, ஜனத்தை எச்சரித்தால், இவன் தன்னுடைய கடமையை சரியாக செய்கிறான். தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிற வேலையை உண்மையாய் நிறைவேற்றுகிறான். இவன் ஜனங்களை ஆபத்துக்கு தப்புவிக்கப்பண்ணுகிறான். அதே வேளையில் இவனுடைய வேலைக்கு தகுந்த சம்பளமும் இவனுக்கு கொடுக்கப்படும்.

காவற்காரன் எக்காளம் ஊதி, ஜனங்களை எச்சரிக்கும்போது, தேசத்தின் ஜனங்கள் எக்காள சத்தத்தைக் கேட்பார்கள். எச்சரிக்கையடைவார்கள். தங்கள் தேசத்திற்கு விரோதமாக வருகிற சத்துருக்களை எதிர்ப்பதற்கு ஆயத்தமாவார்கள்.

சில சமயங்களில் காவற்காரன் எக்காளம் ஊதுவான். ஜனத்தை எச்சரிப்பான். ஆனால் ஜனங்களோ அவன் எக்காள சத்தத்தைக் கேட்டும் எச்சரிக்கையாயிருக்கமாட்டார்கள். சில சமயங்களில், காவல்காரன் தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக் கண்டும், எக்காளம் ஊதாமலும், ஜனத்தை எச்சரிக்காமலும் இருப்பான்.

"காவற்காரன் தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக்கண்டு, எக்காளம்ஊதி, ஜனத்தை எச்சரிக்கும்போது, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்கிறவன் அதைக்கேட்டும், எச்சரிக்கையாயிராமல், பட்டயம் வந்து அவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேல் சுமரும். அவன் எக்காளத்தின் சத்தத்தைக் கேட்டும், எச்சரிக்கையாயிருக்கவில்லை; அவனுடைய இரத்தப்பழி அவன் பேரிலே சுமரும்; எச்சரிக்கையாயிருக்கிறவனோ தன் ஜீவனைத் தப்புவித்துக்கொள்ளுவான்" (எசே 33:3-5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஜனங்கள் எக்காள சத்தத்தைக் கேட்டும், எச்சரிக்கையாயிருக்கவில்லையென்றால், அது அவர்களுடைய தப்பிதம். காவல்காரன்மீது எந்தவித தப்பிதமுமில்லை. காவல்காரன் எக்காளம் ஊதி, ஜனங்களை எச்சரிக்காமலிருந்தால், அது காவல்காரனின் தப்பிதம்.

"காவற்காரன் பட்டயம் வருவதைக் கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும் ஜனங்கள் எச்சரிக்கப்படாமலும், பட்டயம் வந்து அவர்களில் யாதொருவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், அவன் தன் அக்கிரமத்திலே வாரிக்கொள்ளப்பட்டான்; ஆனாலும் அவன் இரத்தப்பழியைக் காவற்காரன் கையிலே கேட்பேன்" (எசே 33:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக் கண்டு, காவற்காரன் எக்காளம் ஊதி ஜனங்களை எச்சரிக்கவேண்டும். ஜனங்கள் எக்காளத்தின் சத்தத்தைக் கேட்டு, எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இதுவே முழுதேசத்திற்கும் நல்லது. காவற்காரனும் தன் கடமையைச் செய்யவேண்டும். தேசத்தின் ஜனங்களும் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவற்காரனாக வைத்திருக்கிறார். எசேக்கியேல் கர்த்தருடைய வாயினால் வார்த்தையைக் கேட்டு, கர்த்தருடைய நாமத்தினால் இஸ்ரவேல் வம்சத்தாரை எச்சரிக்கவேண்டும் (எசே 33:7).

எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச்சொல்லி எச்சரித்திருக்கிறார். இப்போது கர்த்தர் எசேக்கியேலை அவர்களுக்கு காவற்காரனாக வைக்கிறார். எசேக்கியேலுக்கு வேறு ஊழியம் எதுவும் கொடுக்கப்படவில்லை. கர்த்தர் தனக்கு வெளிப்படுத்துகிற வார்த்தைகளை, எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லவேண்டும். அந்த வார்த்தைகளை தன்னுடைய நாமத்தினால் சொல்லாமல், கர்த்தருடைய நாமத்தினால் சொல்லி அவர்களை எச்சரிக்கவேண்டும்.

கர்த்தர் துன்மார்க்கனை நோக்கி, "துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய்" (எசே 33:8) என்று சொல்லுகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய இந்த வார்த்தையை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லவேண்டும். எசேக்கியேல் துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அதை அவனுக்குச் சொல்லாமற்போனால், அந்தத் துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான் (எசே 33:8). அவனுடைய இரத்தப்பழியை கர்த்தர் எசேக்கியேலின் கையிலே கேட்பார்.

துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பும்படி எசேக்கியேல் அவனை எச்சரித்தும், அவன் தன் வழியைவிட்டுத் திரும்பாமற்போனால், அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; எசேக்கியேலோ தன் ஆத்துமாவைத் தப்புவிப்பார் (எசே 33:9).

எசேக்கியேல் இதுவரையிலும் இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே கர்த்தருடைய தீர்க்கதரிசியாக ஊழியம் செய்தார். இனிமேல் அவர், அவர்கள் மத்தியிலே காவற்காரனாக ஊழியம் செய்யப்போகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் எசேக்கியேலை தங்களுக்கு காவற்காரனாக வைக்கவில்லை. கர்த்தரே எசேக்கியேலை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவற்காரனாக வைத்திருக்கிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம். காவற்காரன் பாவிகளை எச்சரிக்கவேண்டும். பாவத்தினால் வரும் ஆபத்துக்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை எச்சரிக்கவேண்டும். எசேக்கியேல் கர்த்தருடைய வாயினாலே என்ன வார்த்தையைக் கேட்கிறாரோ, அந்த வார்த்தையை அவர் கர்த்தருடைய நாமத்தினாலே சொல்லி, அவர்களை எச்சரிக்கவேண்டும். "துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய்" என்பது கர்த்தருடைய வார்த்தை.

துன்மார்க்கன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், அவன் தன்னுடைய பாவத்திலே மரித்துப்போவான். அவன் கர்த்தருடைய சமுகத்திலிருந்து துண்டிக்கப்படுவான். அவனுக்கு கர்த்தரோடு ஐக்கியம் இருக்காது. கர்த்தருடைய கிருபையும், பாதுகாப்பும், பராமரிப்பும், ஆசீர்வாதமும் துன்மார்க்கனுக்கு கிடைக்காது.

துன்மார்க்கமான தேசங்களுக்கு விரோதமாகவும், துன்மார்க்கருக்கு விரோதமாகவும், தேவனுடைய கோபம் பரலோகத்திலிருந்துவெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. துன்மார்க்கனுடைய பாவத்தை அவனுக்கு எச்சரித்துச் சொல்லவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். துன்மார்க்கனை கர்த்தருடைய நாமத்தினால் எச்சரிக்கவேண்டும்.

துன்மார்க்கன் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பினால், அவன் மரணத்திற்கு தப்பித்துக்கொள்ளலாம். கர்த்தருடைய வார்த்தை துன்மார்க்கனுக்கு சாபமாக சொல்லப்படாமல், எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது. துன்மார்க்கன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லையென்றால், எச்சரிப்பின் வார்த்தை, அவனுக்கு சாபவார்த்தையாக மாறும்.

"துன்மார்க்கனுக்கு ஐயோ! அவனுக்குக் கேடு உண்டாகும்; அவன் கைகளின் பலன் அவனுக்குக் கிடைக்கும்" (ஏசா 3:11).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பாவிகளை எச்சரிக்கவேண்டும். பாவிகளுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, அவர்கள்மீது கோபப்பட்டு பேசக்கூடாது. அவர்கள் கோபப்படுமாறும் பேசக்கூடாது. பாவிகள்மீது கரிசனையோடு பேசவேண்டும். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதே ஊழியக்காரருடைய விருப்பமாயிருக்கவேண்டும். துன்மார்க்கன் தன்னுடைய பாவமான வழியைவிட்டுத் திரும்பினால், அவன் சாகாமல் பிழைத்துக்கொள்வான்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் துன்மார்க்கனை, கர்த்தருடைய நாமத்தினால் எச்சரிக்கவில்லையென்றால், துன்மார்க்கன் சாவான். அவனுடைய இரத்தப்பழி, அவனை கர்த்தருடைய நாமத்தினால் எச்சரிக்காத ஊழியக்காரரின்மேல் விழும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், துன்மார்க்கனை, கர்த்தருடைய நாமத்தினால் எச்சரித்தும், துன்மார்க்கன் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவில்லையென்றால், அவன் சாவான். துன்மார்க்கனுடைய இரத்தப்பழி அவன்மீதே விழும்.

ஆண்டவருடைய வழி செம்மையானது எசே 33:10-20

எசே 33:10. மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: எங்கள் துரோகங்களும் எங்கள் பாவங்களும் எங்கள் மேல் இருக்கிறது, நாங்கள் சோர்ந்து போகிறோம், நாங்கள் பிழைப்பது எப்படியென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.

எசே 33:11. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு.

எசே 33:12. மனுபுத்திரனே, நீ உன் ஜனத்தின் புத்திரரை நோக்கி: நீதிமான் துரோகம் பண்ணுகிற நாளிலே அவனுடைய நீதி அவனைத் தப்புவிப்பதில்லை; துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தைவிட்டுத் திரும்புகிற நாளிலே அவன் தன் அக்கிரமத்தினால் விழுந்து போவதுமில்லை; நீதிமான் பாவஞ்செய்கிற நாளிலே தன் நீதியினால் பிழைப்பதுமில்லை.

எசே 33:13. பிழைக்கவே பிழைப்பாய் என்று நான் நீதிமானுக்குச் சொல்லும்போது, அவன் தன் நீதியை நம்பி, அநியாயஞ்செய்தால், அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப்படுதில்லை, அவன் செய்த தன் அநியாயத்திலே சாவான்.

எசே 33:14. பின்னும் சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லும்போது, அவன் தன் பாவத்தைவிட்டுத்திரும்பி, நியாயமும் நீதியுஞ்செய்து,

எசே 33:15. துன்மார்க்கன் தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக்கொடுத்துவிட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான்.

எசே 33:16. அவன் செய்த அவனுடைய எல்லாப் பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை; அவன் நியாயமும் நீதியும் செய்தான்; பிழைக்கவே பிழைப்பான் என்று சொல்லு.

எசே 33:17. உன் ஜனத்தின் புத்திரரோ, ஆண்டவருடைய வழி செம்மையானதல்ல என்கிறார்கள்; அவர்களுடைய வழியே செம்மையானதல்ல.

எசே 33:18. நீதிமான் தன் நீதியைவிட்டுத் திரும்பி, அநியாயஞ்செய்தால், அவன் அதினால் சாவான்.

எசே 33:19. துன்மார்க்கன் தன் அக்கிரமத்தைவிட்டுத் திரும்பி, நியாயமும் நீதியும் செய்தால், அவன் அவைகளினால் பிழைப்பான்.

எசே 33:20. நீங்களோ, ஆண்டவருடைய வழி செம்மையானதல்ல என்கிறீர்கள்; இஸ்ரவேல் வீட்டாரே, நான் உங்களில் ஒவ்வொருவனையும் அவனவன் வழிகளின்படியே நியாயந்தீர்ப்பேன் என்று சொல் என்றார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே தம்முடைய நீதியான கிரியைகளை நடப்பிக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய கிரியைகளுக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். "எங்கள் துரோகங்களும் எங்கள் பாவங்களும் எங்கள் மேல் இருக்கிறது, நாங்கள் சோர்ந்து போகிறோம், நாங்கள் பிழைப்பது எப்படி" (எசே 33:10) என்று இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு முன்பாக ஜீவனை வைத்திருக்கிறார். ஆனால் அவர்களோ, அந்த ஜீவன் தங்களுக்கு எட்டாத தூரத்தில் இருக்கிறது என்று முறுமுறுக்கிறார்கள்.

"உங்கள் பாகைகள் உங்கள் தலைகளிலும், உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் இருக்கும்; நீங்கள் புலம்பாமலும் அழாமலும் இருந்து, உங்கள் அக்கிரமங்களில் வாடிப்போய், ஒருவரையொருவர் பார்த்துத் தவிப்பீர்கள்" (எசே 24:23) என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அறிவித்தார்.

எசேக்கியேல் தங்களிடத்தில் சொன்ன வார்த்தைகளுக்கு விரோதமாக, இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்றும், கர்த்தர் தங்களை வெறுத்து ஒதுக்கிவிட்டார் என்றும், கர்த்தர் தங்களை தண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டார் என்றும் இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும், அவர்கள் மரணத்திற்கு தப்பித்து ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பம். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய விருப்பத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. கர்த்தர் பட்சபாதமுள்ளவர் என்றும், அவர் பாரபட்சமாக கிரியை நடப்பிக்கிறார் என்றும் இஸ்ரவேல் வம்சத்தார் நினைக்கிறார்கள்.

கர்த்தர் தங்கள்மீது மிகவும் கோபமாயிருப்பதாகவும், அவர் இந்த அளவு கோபப்படுவதற்கு தங்களிடத்தில் பெரிய பாவங்கள் ஏதுவுமில்லை என்றும் இஸ்ரவேல் ஜனங்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் பாவத்தையும், பாவிகளையும் அழித்துப்போட விரும்புகிறார் என்றும் இஸ்ரவேல் வம்சத்தார் நினைக்கிறார்கள்.

"நீங்களோ, ஆண்டவருடைய வழி செம்மையாய் இருக்கவில்லை என்கிறீர்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, கேளுங்கள்; என் வழி செம்மையாயிராதோ? உங்கள் வழிகள் அல்லவோ செம்மையல்லாததாயிருக்கிறது" *(எசே 18:25)* என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரிடம் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய செய்திகளை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறார். கர்த்தர் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பவில்லை. துன்மார்க்கன் தன் பாவமான வழியை விட்டு திரும்பி பிழைப்பதையே கர்த்தர் விரும்புகிறார். "இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும்" *(எசே 33:11)* என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரிடம் கேட்கிறார்.

தாங்கள் பிழைக்கவேண்டுமா என்று இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரிடத்தில் கேட்கிறார்கள். அவர்கள் பிழைக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். கர்த்தர் ஜீவனுள்ளவர். அவருடைய ஜனமும் ஜீவனுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லும்போது, தம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார்.

தங்கள் பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள், பிழைப்பார்கள். அவர்கள் மரிக்கமாட்டார்கள். அவர்களுடைய ஜீவன் இயேசுகிறிஸ்துவுக்குள் மறைவாகயிருக்கும். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பும்போது, கர்த்தர் தமது கிருபையினால் நம்மை மன்னிக்கிறார். அவர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். கிறிஸ்துவே நமக்கு ஜீவனாகயிருக்கிறார். அப்போஸ்தலர் பவுல் இந்த சத்தியத்தைச் சொல்லும்போது, "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று சொல்லுகிறார்.

பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், தங்கள் பாவத்திலே மரித்துப்போவார்கள். கர்த்தர் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பவில்லை. ஆனாலும் துன்மார்க்கர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் போனபடியினால், அவர்கள் மரித்துப்போகிறார்கள்.

நீதிமான் பாவம் செய்யக்கூடாது. நீதிமான் பாவஞ்செய்கிற நாளிலே தன் நீதியினால் பிழைப்பதுமில்லை. நீதிமான் துரோகம் பண்ணுகிற நாளிலே அவனுடைய நீதி அவனைத் தப்புவிப்பதில்லை.

துன்மார்க்கன் பாவம் செய்யாமல், தன்னுடைய துன்மார்க்கத்தைவிட்டு மனந்திரும்பும்போது, அவன் பிழைத்துக்கொள்வான். துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தைவிட்டுத் திரும்புகிற நாளிலே அவன் தன் அக்கிரமத்தினால் விழுந்து போவதுமில்லை *(எசே 33:12)*.

கர்த்தர் நீதிமானைப் பார்த்து, "பிழைக்கவே பிழைப்பாய்" *(எசே 33:13)* என்று சொல்லுகிறார். ஆனாலும் நீதிமான் தன்னுடைய நீதியை நம்பி, அநியாயஞ்செய்தால், அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப்படுதில்லை, அவன் செய்த தன் அநியாயத்திலே சாவான் *(எசே 33:13)*.

கர்த்தர் துன்மார்க்கனைப் பார்த்து, "சாகவே சாவாய்" (எசே 33:14) என்று சொல்லுகிறார். ஆனாலும் துன்மார்க்கன் தன்னுடைய பாவத்தைவிட்டுத்திரும்பி, நியாயமும் நீதியுஞ்செய்து, தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக்கொடுத்துவிட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான் (எசே 33:14,15).

துன்மார்க்கன் நியாயமும் நீதியும் செய்யும்போது, அவன் செய்த அவனுடைய எல்லாப் பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை; அவன் நியாயமும் நீதியும் செய்தான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் (எசே 33:16).

நீதிமான் தன் நீதியைவிட்டுத் திரும்பி, அநியாயஞ்செய்தால், அவன் அதினால் சாவான். துன்மார்க்கன் தன் அக்கிரமத்தைவிட்டுத் திரும்பி, நியாயமும் நீதியும் செய்தால், அவன் அவைகளினால் பிழைப்பான் (எசே 33:18,19).

நீதிமான் நீதிமானாகவே ஜீவிக்க வேண்டும். அவன் துன்மார்க்கனாகிவிடக் கூடாது. ஒரு காலத்தில் நீதிமானாயிருந்து, அதன் பின்பு அவன் பாவம் செய்தால், அவன் தண்டிக்கப்படுவான். தான் செய்த நீதியை நம்பி, யாரும் பாவம் செய்யக்கூடாது. பாவத்தின் சம்பளம் மரணம். துன்மார்க்கன் ஒரு காலத்தில் பாவம் செய்தாலும், அவன் தன் பாவத்திற்கு மனந்திரும்பி நீதியும் நியாயமும் செய்யவேண்டும். அப்போது அவனுடைய பழைய பாவங்கள் மன்னிக்கப்படும். அவன் செய்த நன்மைக்குத்தக்க பலனை அவன் பெற்றுக்கொள்வான்.

பாவம் செய்கிற ஆத்துமா சாகும். நன்மை செய்கிற ஆத்துமா பிழைக்கும். நன்மை செய்கிறவன் தொடர்ந்து நன்மை செய்து கொண்டிருக்க வேண்டும். ஆரம்பத்தில் நன்மை செய்துவிட்டு, அதன் பின்பு தீமை செய்தால், அந்த ஆத்துமா சாகவே சாகும். நீதிமானுக்கு கர்த்தர் அநேக நன்மையான ஈவுகளை வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனாலும் நீதிமான் தனக்கு தீங்கு வராது என்று இறுமாப்பாயிருக்கக்கூடாது. தான் செய்த நீதிக்கு நன்மை வரும் என்று எதிர்பார்த்து, தான் செய்த நீதியை நம்பி பாவம் செய்துவிடக்கூடாது.

நம்முடைய சுயநீதியை நம்பி பாவம் செய்தால் நாம் அழிந்துபோவோம். கர்த்தருடைய நீதியே நம்முடைய நீதியாயிருக்கவேண்டும். துன்மார்க்கமாய் ஜீவிக்கிறவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, கர்த்தர் அவர்களை தம்முடைய கிருபையினால் மன்னிக்கிறார். அவர்கள் ஒரு காலத்தில் பாவிகளாகயிருந்தாலும், இப்போது அவர்கள் மனந்திரும்பி நன்மை செய்வதினால், அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தை ஒரு சிலருக்கு இடறலாயிருக்கிறது. அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தை மரணத்திற்கேதுவான மரணவாசனையாயிருக்கிறது. அதே வேளையில் கர்த்தருடைய கிருபையினால், அவருடைய வார்த்தை அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது. அது அவர்களுக்கு ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாயிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தை ஒரு சிலருக்கு ஆசீர்வாதமாகவும், ஒரு சிலருக்கு சாபமாகவும் இருப்பதைப்பார்த்து, நாம் ஆச்சரியப்படக்கூடாது. தேவன் பட்சபாதமுள்ளவர் என்று தீர்மானித்து விடவும் கூடாது. கர்த்தர் நீதியுள்ளவர். அவர் துன்மார்க்கனைப் பார்த்து சாகவே சாவாய் என்று சொல்லுகிறார். நீதிமானைப் பார்த்து பிழைக்கவே பிழைப்பாய் என்றும் சொல்லுகிறார். ஒருவன் துன்மார்க்கனாயிருந்து, அவன் மனந்திரும்பும்போது, நீதிமானுக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறான். ஒருவன் நீதிமானாயிருந்து, பாவம் செய்யும்போது, அவன் பாவிகளுக்குரிய தண்டனைகளைப் பெற்றுக்கொள்கிறான்.

துன்மார்க்கன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பி, நீதியும் நியாயமும் செய்யும்போது அவனுக்கும் பாவத்திற்கும் நடுவே பிரிவினை வருகிறது. ஆனாலும் அவனுக்கும் கர்த்தருக்கும் நடுவில் ஒருபோதும் பிரிவினை வராது. துன்மார்க்கன் செய்த அவனுடைய எல்லா பழைய பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை. கர்த்தர் அவனை ஆசீர்வதிப்பார். நீதிமானுக்கு நியமித்த ஆசீர்வாதமான பங்கை, அவனுக்கு குறைவில்லாமல் கொடுப்பார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய வழிகளைப் புரிந்துகொள்ளவில்லை. கர்த்தர் நீதிமானைத் தண்டிப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் ஒருபோதும் நீதிமானைத் தண்டிக்கமாட்டார். நீதிமான் பாவம் செய்யும்போது, அவனைத் தண்டிக்காமல்விடவும் மாட்டார். இஸ்ரவேல் புத்திரர், "ஆண்டவருடைய வழி செம்மையானதல்ல" (எசே 33:17) என்று சொல்லுகிறார்கள். கர்த்தரோ, "அவர்களுடைய வழியே செம்மையானதல்ல" என்று சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரில் ஒவ்வொருவரையும், அவனவன் வழிகளின்படியே நியாயந்தீர்ப்பார் (எசே 33:20).

இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருமே இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்குமே வேதனைகளும், கஷ்டங்களும், சஞ்சலங்களும் வந்திருக்கிறது. அவர்கள் அனைவரும் பொதுவான உபத்திரவங்களை அனுபவிக்கிறார்கள். அவர்கள் இப்போது பொதுவான துன்பங்களை அனுபவித்தாலும், கர்த்தர் அவர்களை, அவரவர்களுடைய கிரியைகளின்படியே வேறு பிரிக்கிறார். அவர்களில் ஒவ்வொருவனும், அவனவன் செய்த, நன்மை தீமைகளுக்குத்தக்கபடி, கர்த்தர் அவர்களை நியாயந்தீர்க்கிறார்.

எருசலேமின் குடிகள்
எசே 33:21-29

எசே 33:21. எங்கள் சிறையிருப்பின் பன்னிரண்டாம் வருஷம் பத்தாம் மாதம் ஐந்தாந்தேதியிலே எருசலேமிலிருந்து தப்பின ஒருவன் என்னிடத்தில் வந்து: நகரம் அழிக்கப்பட்டது என்றான்.

எசே 33:22. தப்பினவன் வருகிறதற்கு முந்தின சாயங்காலத்திலே கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து, அவன் காலையில் என்னிடத்தில் வருமட்டும் என் வாயைத் திறந்திருக்கப்பண்ணிற்று; என் வாய் திறக்கப்பட்டது, பின்பு நான் மௌனமாயிருக்கவில்லை.

எசே 33:23. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 33:24. மனுபுத்திரனே, இஸ்ரவேல் தேசத்தின் பாழான இடங்களிலுள்ள குடிகள்: ஆபிரகாம் ஒருவனாயிருந்து, தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டான்; நாங்கள் அநேகராயிருக்கிறோம், எங்களுக்கு இந்த தேசம் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது என்று சொல்லுகிறார்கள்.

எசே 33:25. ஆகையால், நீ அவர்களை நோக்கி: நீங்கள் இரத்தத்தோடே கூடியதைத் தின்று, உங்கள் நரகலான விக்கிரகங்களுக்கு நேராக உங்கள் கண்களை ஏறெடுத்து, இரத்தத்தைச் சிந்தியிருக்கிறீர்கள், நீங்கள் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வீர்களோ?

எசே 33:26. நீங்கள் உங்கள் பட்டயத்தை நம்பிக்கொண்டு, அருவருப்பானதைச்செய்து, உங்களில் அவனவன் தன்தன் அயலான் மனைவியைத் தீட்டுப்படுத்துகிறீர்கள்; நீங்கள் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வீர்களோ என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு.

எசே 33:27. நீ அவர்களை நோக்கி: பாழான இடங்களில் இருக்கிறவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; வெளிகளில் இருக்கிறவனை மிருகங்களுக்கு இரையாக ஒப்புக்கொடுப்பேன்; கோட்டைகளிலும் கெபிகளிலும் இருக்கிறவர்கள் கொள்ளைநோயால் சாவார்கள்.

எசே 33:28. நான் தேசத்தைப் பாழும் அவாந்தரமுமாக்குவேன்; அப்பொழுது அதினுடைய பெலத்தின் பெருமை ஒழிந்துபோகும்; அப்பொழுது இஸ்ரவேலின் மலைகள் கடந்து போவாரில்லாமல் அவாந்தரமாய்க் கிடக்கும்.

எசே 33:29. அவர்கள் செய்த அவர்களுடைய எல்லா அருவருப்புகளினிமித்தமும் நான் தேசத்தைப் பாழும் அவாந்தரமுமாக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள், இதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை அக்கினியினால் எரித்துப்போடுகிறார்கள். எசேக்கியேல் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். அவருடைய சிறையிருப்பின் பன்னிரண்டாம் வருஷம் பத்தாம் மாதம் ஐந்தாந்தேதியிலே, எருசலேமிலிருந்து தப்பின ஒருவன் எசேக்கியேலினிடத்தில் வந்து: "நகரம் அழிக்கப்பட்டது" (எசே 33:21) என்று சொல்லுகிறான்.

"ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்கிறவனாகிய காவற்சேனாதிபதியான நேபுசராதான் எருசலேமுக்கு வந்தான்; அது நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது. அவன் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான்" (எரே 52:12,13).

எசேக்கியேலுக்கு இந்தச் செய்தியைச் சொன்னவன், எருசலேம் அழிந்துபோனதை தன்னுடைய கண்களால் பார்த்தவன். எருசலேம் நகரம் அழிந்து, ஒருவருஷமும் ஐந்து மாதங்களும் சென்றபின்பு, எசேக்கியேலுக்கு இந்த செய்தி அறிவிக்கப்படுகிறது. எருசலேம் நகரத்திலிருந்து தப்பி ஓடி வந்த ஒருவன், எசேக்கியேலிடம் இந்த சோகசெய்தியை சொல்லுகிறான். இந்த சம்பவத்திலும் கர்த்தருடைய சித்தம் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை, சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு சொல்ல, எசேக்கியேலை ஆயத்தம்பண்ணுகிறார்.

தப்பினவன் வருகிறதற்கு முந்தின சாயங்காலத்திலே கர்த்தருடைய கை எசேக்கியேலின்மேல் அமர்ந்தது. அவன் காலையில் எசேக்கியேலினிடத்தில் வருமட்டும் எசேக்கியேலின் வாயைத் திறந்திருக்கப்பண்ணிற்று; எசேக்கியேலின் வாய் திறக்கப்பட்டது, பின்பு எசேக்கியேல் மௌனமாயிருக்கவில்லை (எசே 33:22).

இஸ்ரவேல் வீட்டார் மத்தியிலே, கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுவதற்கு, எசேக்கியேலின் வாய் திறக்கப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் தைரியமாகவும், விடுதலையோடும் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய் அறிவிக்கிறார். கர்த்தருடைய கை எசேக்கியேலின்மேல் அமர்ந்ததினால், எசேக்கியேலின் ஊழியம் புதுப்பிக்கப்படுகிறது. கர்த்தர் எசேக்கியேலுக்கு புதிய கட்டளைகளைக் கொடுக்கிறார். கர்த்தர் எசேக்கியேலின் வாயைத் திறந்து அவரைப் பெலப்படுத்துகிறார். கர்த்தர் எசேக்கியேலின் வாயில் தம்முடைய வார்த்தைகளைப் போடுகிறார். எசேக்கியேல் எதை பேசவேண்டுமோ, அதைப் பேசுவதற்கு கர்த்தர் கிருபை கொடுக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே பட்டயத்திற்கு தப்பின மீதியான யூதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாழாய்ப்போன தங்கள் தேசத்தில் குடியிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் தங்கியிருக்கிற யூதர்களுக்கு கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேல் மூலமாய் உண்டாயிற்று.

யூதாதேசத்திலே மீதமாயிருக்கிறவர்கள் கல்தேயருடைய பட்டயத்திற்கு தப்பினவர்கள். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கும் போகாமல் தப்பித்துக்கொண்டவர்கள். யூதர்களில் மீதியான இவர்கள் தங்கள் தேசத்திலேயே தங்கியிருக்கிறார்கள். தங்கள் தேசத்தில் பயிரிடவேண்டும் என்றும், தேசத்தின் நன்மைகளை அனுபவிக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாரைத் தாழ்த்துகிறார். கர்த்தருடைய பராமரிப்பு அவர்களுக்கு ஆசீர்வாதமாகயில்லை. அவர்களுடைய தேசத்திலேயே அவர்களுக்கு போதுமான அளவு பாதுகாப்பு இல்லை. அவர்கள் இன்னும் பயத்தோடும் நடுக்கத்தோடும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய மனமேட்டிமையும், இருதயத்தின் பெருமையும் இன்னும் குறையவில்லை. கர்த்தர் அவர்களைத் தாழ்த்துகிறார். அவர்களோ தங்களைத் தாழ்த்தாமல், தங்களைக் குறித்து உயர்வாய் நினைக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் இஸ்ரவேல் தேசத்தின் பாழான இடங்களிலுள்ள குடிகள். ஆனால் இவர்களோ தங்களை செழிப்பான இடங்களில் தங்கியிருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். "எங்களுக்கு இந்த தேசம் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது" (எசே 33:24) என்று சொல்லுகிறார்கள்.

யூதாதேசத்தாரில் அநேகர் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போய்விட்டார்கள். இவர்கள் மாத்திரமே யூதாதேசத்தில் மீதமாயிருக்கிறவர்கள். ஆகையினால் தேசம் முழுவதும் தங்களுக்கு மாத்திரமே சொந்தம் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் தேசத்தை தங்களுக்கு பூரணமாய் சொந்தங்கொண்டாடுகிறார்கள்.

பூர்வத்திலே ஆபிரகாம் ஒருவராயிருந்தார். அவர் கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டார். யூதாதேசத்திலே மீதமாயிருக்கிற யூதர்களோ அநேகராயிருக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு இந்த தேசத்தை சுதந்தரமாய்க் கொடுத்தால், தங்களாலும் இந்த தேசத்தை வளப்படுத்த முடியும் என்று நினைக்கிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு இந்த தேசத்தைக் கொடுத்தபோது, அவர் மாத்திரமே கர்த்தரை ஆராதித்தார். அவருடைய விசுவாசத்திற்கும், ஆராதனைக்கும் வெகுமதியாக கர்த்தர் கானான் தேசத்தையே ஆபிரகாமுக்கு சுதந்தரமாகக் கொடுத்தார். யூதாதேசத்திலே இப்போது ஏராளமானோர் பட்டயத்திற்கு தப்பி மீதமாயிருக்கிறார்கள். இவர்களெல்லோருமே கர்த்தரை ஆராதிக்கிறவர்கள். தங்களுடைய பயபக்திக்கு கர்த்தர் மிகப்பெரிய வெகுமதிகளைக் கொடுக்கவேண்டுமென்று இஸ்ரவேல் தேசத்தின் பாழான இடங்களில் குடியிருக்கிற யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கர்த்தருடைய கிரியைகளும், அவருடைய தெய்வீக பராமரிப்புக்களும் இஸ்ரவேல் வம்சத்தாரை தாழ்த்தவுமில்லை. அவர்களைத் திருத்தவுமில்லை, அவர்களை பயமுறுத்தவுமில்லை. யூதர்களை தாழ்த்தவேண்டும் என்பதும், அவர்களை பயமுறுத்தவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தம். ஆனால் கர்த்தருடைய சித்தம் நிறைவேறவில்லை. யூதர்கள் இன்னும் தங்களைத் தாழ்த்தாமல் மனமேட்டிமையிலிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். இதனால் தேவனுடைய கோபமும், ஆக்கினைத்தீர்ப்பும் அவர்கள்மீது வந்தது. கர்த்தர் யூதாதேசத்தையும், எருசலேமின் குடிகளையும் அழித்துப்போட்டார். ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு இன்னும் மனந்திரும்பவில்லை. துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் இரத்தத்தோடே கூடியதை தின்கிறார்கள். தங்கள் நரகலான விக்கிரகங்களுக்கு நேராக தங்கள் கண்களை ஏறெடுக்கிறார்கள். குற்றமற்றவர்களின் இரத்தத்தை சிந்துகிறார்கள். இஸ்ரவேல் தேசத்தின் பாழான இடங்களிலுள்ள யூதர்கள் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே 33:25).

யூதர்கள் தங்கள் துன்மார்க்கத்திலும் பாவத்திலும் தொடர்ந்து ஜீவிப்பதினால், அவர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு தகுதியற்றவர்களாய்ப்போனார்கள். ஆதாமும் ஏவாளும், ஏதேன் தோட்டத்திலே, தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியைக் குறித்து அக்கரையில்லாதவர்களாயிருந்தார்கள். எருசலேமிலுள்ள யூதர்களோ தடைபண்ணப்பட்ட போஜனத்தைக் குறித்து அக்கரையில்லாதவர்களாயிருக்கிறார்கள். யூதர்கள் இரத்தத்தோடே கூடியதைப் புசிக்கிறார்கள். "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்" (ஆதி 9:4).

விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். விக்கிரகங்களை ஆராதிப்பது எப்போதுமே பாவமாகவே கருதப்படும். விக்கிரகங்கள் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் எளிதாக வஞ்சித்துவிடுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் தண்டித்தார். ஆனால் அவர்களோ தண்டனைகளை அனுபவித்தும், இன்னும் மனந்திரும்பாமலிருக்கிறார்கள். எப்போதும் போலவே, இப்போதும் அவர்கள் குற்றமற்றவர்களின் இரத்தத்தை சிந்துகிறார்கள்.

யூதர்கள் தங்கள் பட்டயத்தை நம்புகிறார்கள். தங்கள் சுயபலத்தை நம்புகிறார்கள். தங்களுடைய பட்டயத்தின் வல்லமையினால், தங்களால் எதையும் சாதிக்க முடியுமென்று நினைக்கிறார்கள். அவர்களிடத்தில் எல்லாவிதமான அருவருப்பும் காணப்படுகிறது. அவனவன் தன் தன் அயலான் மனைவியை தீட்டுப்படுத்துகிறான்.

யூதர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளமாட்டார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தர் கொடுக்கிற தண்டனையை அனுபவிக்கிறார்கள். ஆனாலும் இந்த தண்டனை அவர்களுக்கு போதவில்லை. அவர்களைத் திருத்துவதற்கு இன்னும் அதிகமான தண்டனைகள் தேவைப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தை, இஸ்ரவேல் தேசத்தின் பாழான இடங்களிலுள்ள யூதர்களுக்கு விரோதமாக வருகிறது.

பாழான இடங்களில் இருக்கிறவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; வெளிகளில் இருக்கிறவனை கர்த்தர் மிருகங்களுக்கு இரையாக ஒப்புக்கொடுப்பார்; கோட்டைகளிலும் கெபிகளிலும் இருக்கிறவர்கள் கொள்ளைநோயால் சாவார்கள் (எசே 33:27).

கர்த்தர் தேசத்தைப் பாழும் அவாந்தரமுமாக்குவார்; அப்பொழுது அதினுடைய பெலத்தின் பெருமை ஒழிந்துபோகும்; அப்பொழுது இஸ்ரவேலின் மலைகள் கடந்துபோவாரில்லாமல் அவாந்தரமாய்க் கிடக்கும் (எசே 33:28).

யூதாதேசத்திலே குடியிருக்கிற யூதர்கள் எல்லாவிதமான அருவருப்புக்களையும் செய்கிறார்கள். அவர்களுடைய அருவருப்புக்களினிமித்தமாயும், பாவங்களினிமித்தமாயும் கர்த்தர் யூதாதேசத்தை பாழும் அவாந்தரமுமாக்குகிறார். அப்போது இஸ்ரவேல் தேசத்தின் பாழான இடங்களிலுள்ள குடிகள், இஸ்ரவேலின் பரிசுத்தரே, தங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள்.

யூதாதேசத்திலே குடியிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தார்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இன்னும் அதிகமாய் வெளிப்படுகிறது. கல்தேயர்கள் அவர்கள் மீது வருவார்கள். யூதர்கள் பாழான இடங்களிலிருந்தாலும், கல்தேயர்கள் அவர்களை தங்கள் பட்டயத்தால் வெட்டிப்போடுவார்கள். அவர்கள் வயல்வெளிகளிலும், காடுவெளிகளிலிருந்தாலும், மிருகங்கள் அவர்களைப் பட்சித்துப்போடும். பட்டயத்திற்கும் மிருகத்திற்கும் தப்பினவர்கள் கொள்ளைநோயால் சாவார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் மீதமாயிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அழிவும் சங்காரமும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது.

பாபிலோன் சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் எசே 33:30-33

எசே 33:30. மேலும் மனுபுத்திரனே, உன் ஜனத்தின் புத்திரர் சுவர் ஓரங்களிலும் வீட்டுவாசல்களிலும் உன்னைக்குறித்துப்பேசி, கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட வார்த்தை என்னவென்று கேட்போம் வாருங்கள் என்று ஒருவரோடொருவரும் சகோதரனோடே சகோதரனும் சொல்லி,

எசே 33:31. ஜனங்கள் கூடிவருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள்போல் உட்கார்ந்து, உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை; அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப்போகிறது.

எசே 33:32. இதோ, நீ இனிய குரலும் கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுமுடையவன் பாடும் இன்பமான பாட்டுக்குச் சமானமாயிருக்கிறாய்; அவர்கள் உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவைகளின்படி செய்யாமற்போகிறார்கள்.

எசே 33:33. இதோ, அது வருகிறது, அது வருகையில் தங்கள் நடுவிலே ஒரு தீர்க்கதரிசி இருந்தான் என்று அறிந்துகொள்வார்கள் என்றார்.

கர்த்தருடைய வார்த்தை இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு விரோதமாக வருகிறது. அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் இன்னும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்களுடைய இருதயங்கள் இன்னும் புதுப்பிக்கப்படவில்லை. தங்களுக்கு கர்த்தரிடத்தில் பக்தியிருப்பது போல அவர்கள் மாய்மாலம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய இருதயமோ செம்மையாயில்லை. அது கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகிப்போயிருக்கிறது. சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களை ஏளனம்பண்ணுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், எசேக்கியேல் தீர்க்கதரிசியினிடத்தில் அன்பாயிருப்பதுபோலவும், அவருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுப்பதுபோலவும் மாய்மாலம்பண்ணுகிறார்கள். அவர்கள் சுவர் ஓரங்களிலும், வீட்டுவாசல்களிலும் எசேக்கியேலைக் குறித்து புரணி பேசுகிறார்கள். எசேக்கியேலைவிட்டுத் தூரமாயிருக்கும்போது, அவருக்கு விரோதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். அவர்கள் எசேக்கியேலுக்கு அருகாமையிலிருக்கும் போது, அவரைக் குறித்து புகழ்ந்து பேசுகிறார்கள்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் எசேக்கியேலைக் குறித்து பேசும்போது, "கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட வார்த்தை என்னவென்று கேட்போம் வாருங்கள்" (எசே 33:30) என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும் என்னும் மெய்யான அக்கரையில்லை. தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேட்பது அவர்களுக்கு வேடிக்கையும், வாடிக்கையும் ஆயிற்று. யூதாவின் மனுஷர் தனிமையிலிருக்கும்போது, அவர்கள் ஒருவருக்கொருவர், எசேக்கியேலுக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களிடத்தில் உண்மையில்லை. அவர்கள் மாய்மாலக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரையும் ஏளனம்பண்ணுகிறார்கள், கர்த்தருடைய ஊழியக்காரரையும் ஏளனம்பண்ணுகிறார்கள். ஆனாலும் அவர்கள் ஊழியக்காரர்களை சந்திக்கும்போது, அவர்களுக்கு மரியாதை காண்பிக்கிறார்கள். அவர்களுடைய வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளைக் கேட்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் போல நடிக்கிறார்கள்.

"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (மத் 15:8).

மாய்மாலக்காரர்கள் ஜனங்கள் கூடிவருகிற வழக்கத்தின்படியே எசேக்கியேலினிடத்திற்கு வருகிறார்கள். அவருக்கு முன்பாக கர்த்தருடைய ஜனங்களைப்போல் உட்காருகிறார்கள். எசேக்கியேல் சொல்லுகிற வார்த்தைகளைக் கவனித்துக் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்த வார்த்தைகளின்படி செய்கிறதில்லை.

பாபிலோன் தேசத்திலே தேவாலயமில்லை. ஜெபாலயங்களுமில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்கு தீர்க்கதரிசியின் வீட்டிற்குப்போகவேண்டும்.

"ஆறாம் வருஷத்து ஆறாம் மாதம் ஐந்தாந்தேதியிலே, நான் என் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், யூதாவின் மூப்பர்கள் எனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறபோதும், கர்த்தராகிய ஆண்டவருடைய கரம் அங்கே என்மேல் அமர்ந்தது" (எசே 8:1).

ஜனங்கள் தீர்க்கதரிசியினிடத்தில் கூடிவருவது அவர்களுக்கு வழக்கமாயிருந்தது. விசுவாசிகள் சபையாய்க் கூடிவருவதுபோல, சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தீர்க்கதரிசிகளினிடத்திற்கு கூடிவருகிறார்கள். இவர்கள் மாய்மாலக்காரர்கள். இவர்கள் எசேக்கியேல் வீட்டிற்கு ஒழுங்காக வருகிறார்கள். எவ்வளவு சீக்கிரமாக அங்கே வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக வருகிறார்கள். இவர்கள் காலதாமதம் பண்ணுவதில்லை.

எசேக்கியேல் தன்னிடத்தில் கூடிவந்திருக்கிற ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம்பண்ணுகிறார். மாய்மாலக்காரர் எசேக்கியேல் சொல்லுகிற வார்த்தைகளை மிகவும் கவனமாய்க் கேட்கிறார்கள். எல்லோரும் கூடிவந்திருக்கிற இந்த இடத்தில், மாய்மாலக்காரர்கள் தங்களை பரிசுத்தவான்களைப்போல காண்பித்துக்கொள்கிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கு கவனமாய்ச் செவிகொடுப்பது போல மாய்மாலம்பண்ணுகிறார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசியைக் குறித்து உயர்வாய்ப் பேசுகிறார்கள். அவருக்கு அதிக மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறார்கள்.

அவர்கள் தங்கள் வாயினால் இன்பமாய்ப் பேசுகிறார்கள். அவர்களுடைய இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது. எசேக்கியேல் சொல்லுகிற உபதேசத்திற்கு அதிக மதிப்பு கொடுப்பதுபோல நடிக்கிறார்கள். அவர்கள் எசேக்கியேல்மீது அன்பாயிருப்பதுபோல நாடகமாடுகிறார்கள். அவருடைய வார்த்தையை சந்தோஷமாய்க் கேட்பதுபோல பாசாங்கு பண்ணுகிறார்கள்.

எசேக்கியேலின் குரல் மிகவும் இனிமையாயிருக்கும். அவர் கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுள்ளவர். எசேக்கியேல் இன்பமான பாடல்களைப் பாடுவார். எசேக்கியேலினிடத்தில் கூடிவந்திருக்கிற யூதர்கள், அவருடைய வார்த்தைகளைக் கேட்கிறார்கள். ஆனாலும் அவைகளின்படி செய்யாமல் போகிறார்கள் (எசே 33:32).

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் வாயினால் எசேக்கியேலைக் கனம்பண்ணுகிறார்கள். தங்களுடைய வார்த்தைகளினால் அவரைப் போற்றிப் புகழுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயமோ எசேக்கியேலுக்கு விரோதமாய்த் திரும்பியிருக்கிறது. அது பொருளாசையைப் பின்பற்றிப்போகிறது. அவர்கள் உலகப்பிரகாரமான ஜனங்கள். அவர்களுக்கு உலகசிநேகமே பெரிதாய்த் தெரிகிறது.

சிறையிருப்பிலுள்ள யூதர்களிடத்தில் அவிசுவாசமும், நிர்விசாரமும் காணப்படுகிறது. மனுஷருடைய குறைகளும், பாவங்களும் கர்த்தருடைய வார்த்தையை ஒருபோதும் அவமாக்கிப்போடாது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணுவார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும். கர்த்தர் சொன்ன நீதியான நியாயத்தீர்ப்புகளும் நிறைவேறும். "இதோ அது வருகிறது" (எசே 33:33) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொன்னது வரும். கர்த்தருடைய சித்தம் நிறைவேறும். தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை உண்மையாய் அறிவிக்கிறார்கள்.

எசேக்கியேல் கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிசி. கர்த்தர் எசேக்கியேல் மூலமாய் தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் சொன்ன வார்த்தைகள் நிறைவேறும்போது, அவர் கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிசி என்பதை, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்கள் அறிந்து கொள்வார்கள்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி தங்கள் நடுவிலிருந்தாலும், யூதர்கள் அவரை இனிய குரலுக்கு சொந்தக்காரர் என்றும், கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுள்ளவர் என்றும், இன்பமான பாடல்களைப் பாடுகிறவர் என்றும் நினைத்தார்கள். அவருடைய இனிய குரலை ரசித்துக் கேட்டார்கள். ஆனால் எசேக்கியேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி என்பதை அறிந்துகொள்ள தவறிவிட்டார்கள்.

எசேக்கியேல் சொன்ன தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்போது, அவர் இனிமையாய்ப் பாடுகிறவர் மாத்திரமல்ல, கர்த்தருடைய வார்த்தைகளை உண்மையாய்ச் சொல்லுகிறவர் என்பதையும் ஜனங்கள் அறிந்துகொள்வார்கள்.

34 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். இவர்கள் தேசத்திற்கும், ஆலயத்திற்கும் தலைவர்களாகயிருக்கிறவர்கள். அவர்களோ தங்களுடைய கடமைகளை சரியாக செய்யவில்லை. ஜனங்கள் தொடர்புடைய பொதுவான காரியங்களில் அவர்கள் உண்மையில்லாதவர்களாயிருக்கிறார்கள் (எசே 34:1-6,8). இஸ்ரவேலின் மேய்ப்பர்கள், தங்களிடத்தில் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றவில்லை (எசே 34:7-10).

இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் கர்த்தருடைய ஜனத்தை சரியாக வழிநடத்தாவிட்டாலும், கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு நல்ல மேய்ப்பராயிருப்பார் (எசே 34:11-16). பலமுள்ள ஆடுகள், பலவீனமான ஆடுகளுக்கு தீங்கு செய்கிறது (எசே 34:17-22). காலம் நிறைவேறும்போது கர்த்தர் மேசியாவை அனுப்புவார். இவரே ஆடுகளுக்கு நல்ல மேய்ப்பராகவும், பிரதான மேய்ப்பராகவும் இருப்பார். அவர் தம்முடைய மந்தையிலுள்ள எல்லா காரியங்களையும் சீர்படுத்துவார் (எசே 34:23-31).

இஸ்ரவேலின் மேய்ப்பர் எசே 34:1-6

எசே 34:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 34:2. மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்லுகிறார்; தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்கவேண்டும்.

எசே 34:3. நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு, ஆட்டுமயிரை உடுப்பாக்கிக்கொள்ளுகிறீர்கள்; கொழுத்ததை அடிக்கிறீர்கள்; மந்தையையோ மேய்க்காமற்போகிறீர்கள்.

எசே 34:4. நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள்.

எசே 34:5. மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டுபோயின; சிதறுண்டுபோனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின.

எசே 34:6. என் ஆடுகள் சகல மலைகளிலும் உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு, பூமியின் மீதெங்கும் என் ஆடுகள் சிதறித்திரிகிறது; விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை.

கர்த்தர் எசேக்கியேலுக்கு இந்த வார்த்தைகளை எப்போது வெளிப்படுத்தினார் என்பது தெரியவில்லை. இந்த அதிகாரத்திலிருந்து, நாற்பதாவது அதிகாரம் வரையிலும் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களுக்கு, காலம் குறிப்பிடப்படவில்லை. கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை" (எசே 34:2) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பிரபுக்கள், நியாயாதிபதிகள், ஆசாரியர்கள், லேவியர்கள், விசேஷமாய் ராஜாக்கள் ஆகியோர் இஸ்ரவேலின் மேய்ப்பராயிருக்கிறார்கள். அவர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். மேய்ப்பர்களோடு ஆடுகளும் சிறையிருப்பிலிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தின் தலைவர்களோடு, இஸ்ரவேல் வம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள்.

கர்த்தர் இவர்களுடைய மீறுதல்களைப்பற்றி இங்கு சொல்லுகிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் மேய்ப்பராகயிருந்தாலும், அதிலும் விசேஷமாய் அவர்கள் இஸ்ரவேலின் மேய்ப்பராயிருந்தாலும், அவர்களும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குட்படுத்தப் படுவார்கள். அவர்கள் தங்களையே மேய்க்கிறார்கள். மேய்ப்பர்கள்தான் மந்தையை மேய்க்கவேண்டும். ஆனால் அவர்களோ தங்களையே மேய்க்கிறார்கள். "தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ" (எசே 34:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாக இரண்டு குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார். அவையாவன : 1. அவர்கள் தங்களுடைய சுயநலத்தைத் தேடுகிறார்கள். தங்களுக்கு ஐசுவரியத்தை சேமித்துக்கொள்கிறார்கள். 2. தங்களுடைய பொறுப்பில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற தேசத்து ஜனங்களை அவர்கள் சரிவரக் கவனிக்கவில்லை. ஜனங்களுடைய நன்மையைத் தேடவில்லை.

மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்கவேண்டும். இதுவே மேய்ப்பரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியம். ஆனால் மேய்ப்பர்கள் தங்களுடைய ஊழியத்திற்கு உண்மையுள்ளவர்களாயில்லை. தாங்கள் செய்ய வேண்டிய ஊழியத்தை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்க்கிறார்கள். தாங்கள் ஆசைப்பட்டதெல்லாவற்றையும் அனுபவிக்கிறார்கள். தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் நெய்யைச் சாப்பிட்டு, ஆட்டுமயிரை உடுப்பாக்கிக்கொள்கிறார்கள். கொழுத்த ஆடுகளை தங்களுடைய போஜனத்திற்காக அடிக்கிறார்கள்.

மேய்ப்பர்கள் மந்தையை சரிவர மேய்ப்பதில்லை. ஆடுகளின் நன்மையை நாடுவதில்லை. அவர்கள் ஆடுகளுக்கு பிரயோஜனமாக எதையும் செய்வதில்லை. அவர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்துக்கொள்கிறார்கள். ஆடுகளுக்கு போஜனம் கொடுக்காமல், தாங்களே பெருந்தீனி உண்கிறார்கள்.

பிரபுக்களும் நியாயாதிபதிகளும் திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் நியாயம் செய்யவேண்டும். ஆதரவில்லாதவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். ஆனால் இவர்களோ தரித்திரரைக் கவனிப்பதில்லை. ஆசாரியர்கள் சத்திய வசனங்களை உபதேசம் பண்ணுவதில்லை. கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய பிரமாணங்களையும் சரியாகப் புரிந்துகொள்ளாத பாமர ஜனங்களுக்கு, ஆசாரியர்கள் வேதவசனங்களைக் கற்றுக்கொடுப்பதில்லை.

தேசத்திலே அநியாயமும், அக்கிரமமும் அதிகரிக்கும்போது, கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தேவனுடைய நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பதில்லை. மேய்ப்பர்கள் பலவீனமான ஆடுகளை பலப்படுத்துவதில்லை. நசல்கொண்ட ஆடுகளை குணமாக்குவதில்லை. எலும்பு முறிந்தவைகளை காயம்கட்டுவதில்லை. துஷ்டமிருகங்கள் மந்தையிலுள்ள ஆடுகளைத் துரத்திவிடுகிறது. மேய்ப்பர்களோ துரத்துண்ட ஆடுகளை திருப்பிக்கொண்டுவருவதில்லை. மேய்ச்சலுக்குப்போகும் ஆடுகளில் ஒரு சில ஆடுகள் காணாமல் போய்விடுகிறது. ஆனால் இந்த மேய்ப்பர்கள் காணாமல் போன ஆடுகளைத் தேடுவதுமில்லை.

மேய்ப்பர்கள் ஆடுகளின்மீது அன்பு செலுத்துவதுமில்லை. அவர்கள் தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆடுகளை பலாத்காரமும், கடூரமுமாய் ஆளுகை செய்கிறார்கள். மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை சரியாக கவனியாததினாலும், அவர்கள் தங்கள் ஆடுகளோடே கூடயில்லாததினாலும், ஆடுகள் சிதறுண்டு போகிறது. சிதறுண்டு போன ஆடுகள் காட்டு மிருகங்களுக்கு இரையாகிறது (எசே 34:5).

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஜனங்கள். அவர்கள் கர்த்தருடைய ஆடுகள். கர்த்தருடைய ஆடுகள் சகல மலைகளிலும், உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு போகிறது. அவைகள் பூமியின் மீதெங்கும் சிதறித் திரிகிறது. அவர்களுக்கு நியமிக்கப்பட்ட மேய்ப்பர்களோ, அவர்களை விசாரிப்பதுமில்லை, அவர்கள் காணாமல்போகும்போது, அவர்களைத் தேடுவதுமில்லை (எசே 34:6).

"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகினார்" (மத் 9:36).

வேதபாரகரும் பரிசேயரும் மோசேயின் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல இருக்கிறார்கள்.

கர்த்தரே நல்ல மேய்ப்பர் எசே 34:7-16

எசே 34:7. ஆகையால் மேய்ப்பரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எசே 34:8. கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டுமிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின; என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற்போனார்கள், மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள்.

எசே 34:9. ஆகையால் மேய்ப்பரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எசே 34:10. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்: இதோ, நான் மேய்ப்பருக்கு விரோதமாக வந்து, என் ஆடுகளை அவர்கள் கையிலே கேட்டு, மேய்ப்பர் இனித் தங்களையே மேய்க்காதபடி, மந்தையை மேய்க்கும் தொழிலைவிட்டு அவர்களை விலக்கி, என் ஆடுகள் அவர்களுக்கு ஆகாரமாயிராதபடி, அவைகளை அவர்கள் வாய்க்குத் தப்பப்பண்ணுவேன் என்று சொல்லு.

எசே 34:11. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன்.

எசே 34:12. ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல, நான் என் ஆடுகளைத்தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டுபோன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பிவரப்பண்ணி,

எசே 34:13. அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும்பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவைகளைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின் மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பேன்.

எசே 34:14. அவைகளை நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பேன்; இஸ்ரவேலுடைய உயர்ந்த மலைகளில் அவைகளுடைய தொழுவம் இருக்கும்; அங்கே அவைகள் நல்ல தொழுவத்தில் படுத்துக்கொள்ளும், இஸ்ரவேலின் மலைகளின் மேல் நல்ல மேய்ச்சலை மேயும்.

எசே 34:15. என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 34:16. நான் காணாமற் போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல் கொண்டதைத் திடப்படுத்துவேன்; நியாயத்துக்குத்தக்கதாய் அவைகளை மேய்த்து, புஷ்டியும் பெலமுமுள்ளவைகளை அழிப்பேன்.

கர்த்தர் இஸ்ரவேலின் மேய்ப்பர்மீது கோபமாயிருக்கிறார். அவர்களுடைய தப்பிதங்களை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். மேய்ப்பர்கள் தங்கள் கடமைகளை சரியாக நிறைவேற்றாததினால், ஆடுகளெல்லாம் சூறையாயிற்று. கர்த்தருடைய ஆடுகள் காட்டு மிருகங்களுக்கு இரையாய்ப்போயிற்று. இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் கர்த்தருடைய ஆடுகளை விசாரியாமற்போனார்கள். மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள் (எசே 34:8).

கர்த்தருடைய ஜனத்தை அந்நிய தேசத்தார் வஞ்சிக்கிறார்கள். அவர்களை விக்கிரகாராதனைக்கு வழிநடத்துகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரும் அந்நிய தேசத்தாரின் மாய வலையில் சிக்கி, விக்கிரகங்களைப் பின்பற்றுகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தருடைய ஜனத்தார் தங்களை வஞ்சிக்கிறவர்களுக்கு இரையாகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தின்மீது கல்தேயர்கள் யுத்தம்பண்ண வந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனத்தை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போனார்கள். இஸ்ரவேலின் மேய்ப்பர்களோ, கர்த்தருடைய இஸ்ரவேல் வம்சத்தாரை, அவர்களுடைய சத்துருக்களின் கைகளிலிருந்து பாதுகாக்கவோ அல்லது மீட்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகயிருக்கிறார். மேய்ப்பர்கள் கர்த்தருடைய கோபத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இஸ்ரவேலின் மேய்ப்பர் ஒவ்வொருவரும், கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். தங்களுடைய கடமைகளைப்பற்றியும், கர்த்தர் தங்களிடத்தில் ஒப்படைத்த ஆடுகளைப் பற்றியும், மேய்ப்பர்கள் கர்த்தருக்கு கணக்கு கொடுக்கவேண்டும். கர்த்தர் மேய்ப்பருக்கு விரோதமாக வருவார். அவர் தம்முடைய ஆடுகளை அவர்கள் கையிலே கேட்பார்.

மேய்ப்பர்களால் கர்த்தருடைய ஆடுகளை அவரிடத்தில் திரும்பக் கொடுக்க முடியாது. மேய்ப்பர்கள் ஆடுகளை சரியாக கவனியாததினால் அவை சிதறுண்டு போயிற்று. சிதறுண்டு போனவைகள் காட்டுமிருகங்களுக்கு இரையாயிற்று. மேய்ப்பர்களும் கொழுத்த ஆடுகளை தங்களுக்காக அடித்து தின்றுபோட்டார்கள். இப்படிப்பட்ட பொறுப்பில்லாத மேய்ப்பர்களால், கர்த்தருக்கு கணக்கு கொடுக்க முடியாது. கர்த்தர் தம்முடைய ஆடுகளை அவர்கள் கையிலே கேட்கும்போது, அவர்களால் அந்த ஆடுகளை கர்த்தரிடத்தில் திரும்பக் கொடுக்கவும் முடியாது.

கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாக வரும். கர்த்தர் மேய்ப்பர்களுக்கு கொடுத்த ஊழியத்தை அவர்களை விட்டு விலக்குவார். தம்முடைய மந்தையை மேய்க்கும் தொழிலை விட்டு அவர்களை விலக்கிவிடுவார். கர்த்தருடைய ஆடுகள் இனிமேல் அவர்களுக்கு ஆகாரமாயிருக்காது. கர்த்தர் தம்முடைய ஆடுகளை அவர்களுடைய வாய்க்கு தப்பப்பண்ணுவார். மேய்ப்பர்களால் இனிமேல் தங்களையே மேய்க்க முடியாது. கர்த்தர் அவர்களிடத்திலிருந்து மேய்க்கும் தொழிலை விலக்கிப்போடுகிறார் (எசே 34:10).

மேய்ப்பர்கள் ஆடுகளை மேய்க்கவில்லை. ஆனால் அவர்கள் மந்தையை மேய்ப்பதுபோல மாய்மாலம் பண்ணினார்கள். மந்தையை மேய்க்காமலேயே, அதை மேய்த்ததாக கணக்கு சொன்னார்கள். அவர்கள் மனுஷரை ஏமாற்றலாம். அவர்கள் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆடுகளைக்கூட ஏமாற்றலாம். ஆனால் அவர்களால் கர்த்தரை ஏமாற்ற முடியாது. கர்த்தர் இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாக வந்து, தம்முடைய ஆடுகளை அவர்கள் கையிலே கேட்பார். மாயக்காரரான அவர்களை மந்தையை மேய்க்கும் தொழிலை விட்டே, விலக்கி வைத்துவிடுவார்.

கர்த்தர் தம்முடைய மந்தையின்மீது கரிசனையோடிருக்கிறார். மேய்ப்பரில்லாத ஆடுகள், தகப்பனில்லாத பிள்ளைகளைப் போலிருக்கிறார்கள். திக்கற்ற பிள்ளைகளுக்கு இரக்கம் காண்பிக்க வேண்டும். யூதர்கள் இப்போது அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை விடுதலைபண்ணுவார். அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களை அழைத்து வந்து, அங்கே அவர்களை மறுபடியுமாய் ஸ்தாபிப்பார். சிறையிருப்புக்குப்போன யூதர்கள், தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து, அங்கே மறுபடியும் ஸ்தாபிக்கப்படுவார்கள்.

மேய்ப்பர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும் (எசே 34:7,9). கர்த்தர் இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவர்கள் இனிமேல் ஆடுகளை மேய்க்கக்கூடாது. கர்த்தர் அவர்களை மந்தையை மேய்க்கும் தொழிலைவிட்டே விலக்கி வைத்துவிடுகிறார்.

இஸ்ரவேலின் மேய்ப்பர்கள், இஸ்ரவேல் வம்சத்தாரை சரியாகா மேய்க்காததினால், அவர்களெல்லாம் சிதறிப்போனார்கள். ஆடுகள் மேய்ப்பனில்லாமல் சிதறிப்போயிற்று. கர்த்தரோ சிதறிப்போன ஆடுகளை விசாரிப்பார். அவைகளைத் தேடிப்பார்ப்பார்.

ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருப்பார். அதுபோலவே, கர்த்தர் தம்முடைய ஆடுகளைத்தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டுபோன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பிவரப்பண்ணுவார் (எசே 34:12).

கர்த்தர் அந்த ஆடுகளை புறஜாதி ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும், தேசங்களிலிருந்து சேரவும்பண்ணுவார், கர்த்தர் அந்த ஆடுகளை, அவைகளுடைய சுயதேசத்திலே கொண்டுவருவார். இஸ்ரவேல் மலைகளின் மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பார் (எசே 34:13).

கர்த்தர் தம்முடைய ஆடுகளை நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பார்; இஸ்ரவேலுடைய உயர்ந்த மலைகளில் அவைகளுடைய தொழுவம் இருக்கும்; அங்கே அவைகள் நல்ல தொழுவத்தில் படுத்துக்கொள்ளும், இஸ்ரவேலின் மலைகளின் மேல் நல்ல மேய்ச்சலை மேயும் (எசே 34:14).

கர்த்தர் சிதறிப்போன ஆடுகளைக் கூட்டிச்சேர்க்கிறார். அவற்றை தம்முடைய மந்தையில் கொண்டு வந்து சேர்க்கிறார். கர்த்தருடைய ஆடுகள் காணாமல்போனாலும் கர்த்தர் அவற்றை கரிசனையோடு விசாரித்து தேடிப்பார்ப்பார் (எசே 34:11,12). கர்த்தர் காணாமல்போன ஆடுகளைக் கண்டுபிடித்து, அவற்றை தம்முடைய தோளின்மீது சுமப்பதுபோல சுமந்து, தம்முடைய மந்தைக்கு கொண்டு வருவார்.

ஆடுகள் மப்பும் மந்தாரமுமான நாளிலே சிதறிப்போயிற்று. ஆடுகளுக்கு வெளிச்சமில்லாதினால் பாதை தெரியவில்லை, கர்த்தரோ தம்முடைய தெய்வீக பராமரிப்புக்களினால், தம்முடைய ஆடுகளுக்கு அடைக்கப்பட்டிருக்கிற கதவுகளைத் திறந்துகொடுப்பார். அவர்கள் போகும் வழியில் இருக்கிற எல்லா தடைக்கற்களையும், இடையூறுகளையும், கர்த்தர் தாமே நீக்கிப்போடுவார். கர்த்தர் தம்முடைய ஆடுகளை மேய்ப்பார். அவர் தம்முடைய ஆடுகளை மடக்குவார்.

கர்த்தர் காணாமல்போன ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பார். துரத்துண்ட ஆடுகளை திரும்பவும் தம்முடைய தொழுவத்தில் கொண்டு வந்து சேர்ப்பார். எலும்பு முறிந்த ஆடுகளுக்கு காயங்கட்டுவார். நசல்கொண்ட ஆடுகளைத் திடப்படுத்துவார். கர்த்தர் தம்முடைய நியாயத்திற்கு தக்கதாய் அவைகளை மேய்ப்பார் (எசே 34:16).

யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் காணாமல்போன ஆடுகளைப் போலவும், துரத்துண்ட ஆடுகளைப்போலவும், அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். செருபாபேல், எஸ்றா ஆகியோரின் காலத்தில் கர்த்தருடைய ஜனம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பிப் போவார்கள். கர்த்தரே அவர்களை பாபிலோன் தேசத்திலிருந்தும், அந்நிய ஜனங்கள் மத்தியிலிருந்தும் புறப்படப்பண்ணுவார். அவர்களை கானான் தேசத்தில் சேரவும் பண்ணுவார்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கானான் தேசமே அவர்களுடைய சுயதேசமாகும். கர்த்தர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்களை, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு கொண்டு வருவார். அவர்களை இஸ்ரவேல் மலைகளின்மேலும், ஆறுகளண்டையிலும், தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் மேய்ப்பார். கர்த்தர் அவர்களை நல்ல மேய்ச்சலில் மேய்ப்பார். அவர்கள் கர்த்தருடைய ஆடுகள். கர்த்தருடைய தொழுவத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற ஆடுகள் நல்ல மேய்ச்சலை மேயும்.

கர்த்தரே தம்முடைய ஆடுகளை மடக்கி படுக்க வைப்பார். இஸ்ரவேல் ஜனங்கள் பல வருஷங்களாக அலைந்து திரிந்தார்கள். அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தார்கள். ஒய்வில்லாமல் அலைந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் சிதறிப்போனவர்களாக எங்கும் திரிந்துகொண்டிருந்தார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் வம்சத்தாரை மடக்கி படுக்க வைத்து, அவர்களுக்கு ஒய்வைக் கொடுக்கிறார். ஆடுகள் கர்த்தருடைய தொழுவத்தில் படுத்திருக்கும் போது, கர்த்தர் தம்முடைய ஆடுகளுக்கு விசேஷித்த பராமரிப்புக்களைக் கொடுக்கிறார். ஆடுகளுக்கு எலும்பு முறிந்திருந்தால் அதற்கு காயம்கட்டுகிறார். கர்த்தருடைய கிரியைகளெல்லாம் நீதியும் நியாயமுமானவை. கர்த்தர் தம்முடைய ஆடுகளை, தம்முடைய நியாயத்திற்குத்தக்கதாய் மேய்ப்பார். கர்த்தருடைய ஆடுகள் அவருடைய தொழுவத்தில் படுத்திருக்கும்போது, அவற்றின் காயங்கள் குணப்படுத்தப்படும்.

ஆடுகள்
எசே 34:17-22

எசே 34:17. என் மந்தையே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, ஆட்டுக்கும் ஆட்டுக்கும், ஆட்டுக்கடாக்களுக்கும், வெள்ளாட்டுக்கடாக்களுக்கும் நான் நியாயந்தீர்ப்பேன்.

எசே 34:18. நீங்கள் நல்ல மேய்ச்சலை மேய்ந்து, உங்கள் மேய்ச்சல்களில் மீதியானதை உங்கள் கால்களால் மிதிக்கலாமா? தெளிந்த தண்ணீரைக் குடித்து மீதியாயிருக்கிறதை உங்கள் கால்களால் குழப்பிப்போடலாமா?

எசே 34:19. என் ஆடுகள் உங்கள் கால்களால் மிதிக்கப்பட்டதை மேயவும், உங்கள் கால்களால் குழப்பப்பட்டதைக் குடிக்கவும் வேண்டுமோ?

எசே 34:20. ஆகையால், கர்த்தராகிய ஆண்டவர் அவைகளை நோக்கி: இதோ, நான், நானே கொழுத்த ஆடுகளுக்கும் இளைத்த ஆடுகளுக்கும் நியாயந்தீர்ப்பேன்.

எசே 34:21. நீங்கள் பலவீனமாயிருக்கிறவைகளையெல்லாம் புறம்பாக்கிச் சிதறப்பண்ணும்படி, அவைகளைப் பக்கத்தினாலும் முன்னந்தொடையினாலும் தள்ளி உங்கள் கொம்புகளைக்கொண்டு முட்டுகிற படியினாலே,

எசே 34:22. நான் என் ஆடுகளை இனிச் சூறையாகாதபடிக்கு இரட்சித்து, ஆடுகளுக்கும் ஆடுகளுக்கும் நியாயந்தீர்ப்பேன்.

எசேக்கியேல் இப்போது கர்த்தருடைய வார்த்தையை ஆடுகளுக்கு சொல்லுகிறார். எசேக்கியேல் ஆடுகளிடம் பேசும்போது மென்மையாகவும், அமைதியாகவும் பேசவேண்டும். ஆடுகளுக்கு கரிசனையைக் காண்பிக்கவேண்டும். கர்த்தர் ஆடுகள்மீது கிருபையாயும், இரக்கமாயும் இருக்கிறார் என்பதையும் உறுதிபண்ணவேண்டும்.

ஆடுகளில் பலவிதம் இருக்கிறது. ஒரு சில ஆடுகள் கொழுத்த ஆடுகளாயிருக்கும். வேறு சில ஆடுகளோ இளைத்த ஆடுகளாயிருக்கும். மனுஷர் மத்தியிலும் இதுபோல வித்தியாசம் இருக்கிறது. ஒரு சிலர் முரட்டுத்தனமான துன்மார்க்கராயிருப்பார்கள். வேறு சிலரோ மென்மையான நீதிமான்களாயிருப்பார்கள்.

கர்த்தர் ஆட்டுக்கும் ஆட்டுக்கும், ஆட்டுக்கடாக்களுக்கும், வெள்ளாட்டுக் கடாக்களுக்கும் நியாயந்தீர்ப்பார். ஆடுகளிடத்தில் மேய்ப்பனைப்போல வல்லமையோ அதிகாரமோ இல்லை. தேசத்தில் தலைவர்களாகயிருக்கிற இராஜாக்களும் பிரபுக்களும், நியாயாதிபதிகளும், லேவியரும், ஆசாரியரும், அதிகாரமுள்ளவர்கள்.

ஜனங்களிடத்தில் முக்கியமான அதிகாரம் இருக்காது. இவர்கள் பிரபுக்களைப்போலவோ, அல்லது இராஜாக்களைப்போலவோ சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யமாட்டார்கள். ஆனாலும் ஒரு சில ஜனங்களிடத்தில் ஐசுவரியமும், செல்வாக்கும் இருக்கும். தங்களிடத்திலுள்ள ஐசுவரியத்தை இவர்கள் நல்ல காரியங்களுக்கு பயன்படுத்தாமல், தீயகாரியங்களுக்கு பயன்படுத்துவார்கள். தரித்திரருக்கு உதவிசெய்யாமல், அவர்களை ஒடுக்குவார்கள்.

ஆட்டுக்கடாக்களும், வெள்ளாட்டுக் கடாக்களும், நல்ல மேய்ச்சலை மேய்ந்து, தங்கள் மேய்ச்சல்களில் மீதியானதை தங்கள் கால்களால் மிதிக்கும். தெளிந்த தண்ணீரைக் குடித்து மீதியாயிருக்கிறதை தங்கள் கால்களால் குழப்பிப்போடும் (எசே 33:18). கர்த்தருடைய ஆடுகளோ, ஆட்டுக்கடாக்களின் கால்களாலும், வெள்ளாட்டுக்கடாக்களின் கால்களாலும் மிதிக்கப்பட்டதை மேயும். அவற்றின் கால்களால் குழப்பப்பட்டதைக் குடிக்கும்.

ஆட்டுக்கடாக்களும் வெள்ளாட்டுக்கடாக்களும் நல்ல நேர்த்தியான இடங்களில் மேயும். அவற்றிற்கு மலைகளின்மேல் நல்ல மேய்ச்சல் கிடைக்கும். இவை கொழுத்த ஆட்டுக்கடாக்கள். இளைத்த ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சல் கிடைக்காது. ஆட்டுக்கடாக்களே பசுமையான புல்லையெல்லாம் மேய்ந்து தின்றுவிடும். இளைத்த ஆடுகளுக்கு ஒன்றும் மீதமாயிருக்காது. ஆட்டுக்கடாக்கள் தண்ணீரைக்கூட குழப்பிவிடும். இளைத்த ஆடுகள் கலங்கிய தண்ணீரைக் குடிக்கவேண்டும். கர்த்தர் கொழுத்த ஆடுகளுக்கும், இளைத்த ஆடுகளுக்கும் நியாயந்தீர்ப்பார் (எசே 34:20).

கர்த்தர் தம்முடைய ஆடுகளை இனிச் சூறையாகாதபடிக்கு இரட்சிப்பார். ஆடுகளுக்கும் ஆடுகளுக்கும் நியாயந்தீர்ப்பார் (எசே 34:22). கொழுத்த ஆடுகள், தங்களுடைய கொழுத்த சரீத்தின் பக்கத்தினாலும், முன்னந்தொடையினாலும் இளைத்த ஆடுகளைத் தள்ளிவிடும். கொழுத்த ஆட்டுக்கடாக்களும், வெள்ளாட்டுக்கடாக்களும் தங்கள் கொம்புகளைக் கொண்டு, இளைத்த ஆடுகளை முட்டும். கர்த்தரோ இளைத்த ஆடுகளுக்கு பாதுகாப்பு கொடுப்பார். இளைத்த ஆடுகள் இனிமேல் சூறையாகாது. இளைத்த ஆடுகளை முட்டி வேதனைப்படுத்தின கொழுத்த ஆட்டுக்கடாக்களை கர்த்தர் நியாயந்தீர்ப்பார்.

ஜனங்கள் மத்தியிலே ஐசுவரியவான்களும், பிரபல்யமானவர்களும் கொழுத்த ஆட்டுக்கடாக்களைப்போலவும், கொழுத்த வெள்ளாட்டுக்கடாக்களைப் போலவும் இருக்கிறார்கள். இவர்கள் தரித்திரருக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும் தீங்கு செய்கிறார்கள். கர்த்தர் திக்கற்ற பிள்ளைகளின் நியாயத்தை விசாரிப்பார். அவர்களை துன்பப்படுத்தின துன்மார்க்கரை கர்த்தர் நியாயந்தீர்ப்பார்.

மேசியா
எசே 34:23-31

எசே 34:23. அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பவனை நான் அவர்கள்மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார்.

எசே 34:24. கர்த்தாகிய நான் அவர்களுக்குத் தேவனாக இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்.

எசே 34:25. நான் அவர்களோடு சமாதான உடன்படிக்கைசெய்து, துஷ்ட மிருகங்களை தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; அவர்கள் சுகமாய் வனாந்தரத்தில் தாபரித்து, காடுகளில் நித்திரைபண்ணுவார்கள்.

எசே 34:26. நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்.

எசே 34:27. வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத்தரும்; பூமி தன் பலனைக்கொடுக்கும்; அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள்; நான் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து, அவர்களை அடிமை கொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 34:28. இனி அவர்கள் புறஜாதிகளுக்குக் கொள்ளையாவதில்லை, பூமியின் மிருகங்கள் அவர்களைப் பட்சிப்பதுமில்லை; தத்தளிக்கப் பண்ணுவார் இல்லாமல் சுகமாய்த் தங்குவார்கள்.

எசே 34:29. நான் அவர்களுக்குக் கீர்த்தி பொருந்திய ஒரு நாற்றை எழும்பப்பண்ணுவேன்; அவர்கள் இனி தேசத்திலே பஞ்சத்தால் வாரிக்கொள்ளப்படுவதுமில்லை, இனிப் புறஜாதிகள் செய்யும் அவமானத்தைச் சுமப்பதுமில்லை.

எசே 34:30. தங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் தங்களோடே இருக்கிறதையும், இஸ்ரவேல் வம்சத்தாராகிய தாங்கள் என் ஜனமாயிருக்கிறதையும், அவர்கள் அறிந்துகொள்வார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 24:31. என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் இளைத்த ஆடுகளுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரில் தரித்திரராகவும், இளைத்துப் போனவர்களாகவும், பலவீனராகவும் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலின் ஆறுதலுக்காக காத்திருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஆடுகள இரட்சிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இனிமேல் கர்த்தருடைய ஆடுகளை மிருகங்கள் பட்சித்துப்போடாது. கர்த்தருடைய பிள்ளைகள் இனிமேல் சூறையாக மாட்டார்கள்.

இஸ்ரவேலின் மேய்ப்பர்களும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தீங்கு செய்யமாட்டார்கள். மேய்ப்பர்களால் ஆடுகளுக்கு பாதிப்பு ஏற்படாது. ஆடுகள் மத்தியிலே இருக்கிற கொழுத்த வெள்ளாட்டுக்கடாக்களாலும், ஆட்டுக்கடாக்களாலும், இளைத்த ஆடுகளுக்கு பாதிப்பு ஏற்படாது. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தில் தரித்திரராயிருக்கிறவர்களுக்கும், பலவீனராயிருக்கிறவர்களுக்கும் தம்முடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இந்த சூழ்நிலையில் கர்த்தர் மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தத்தையும் முன்னறிவிக்கிறார். மேசியா வருவார். அவர் இந்தப் பூமியிலே தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்.

கர்த்தரே மேசியாவை அனுப்புகிறார். கர்த்தரே மேசியாவுக்கு ஊழியத்தைக் கொடுக்கிறார். "அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பவனை நான் அவர்கள்மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார்" (எசே 34:23) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரே மேசியாவை ஏற்படுத்துகிறார். கர்த்தரே மேசியாவை எழும்பப்பண்ணுகிறார் (எசே 34:29).

மேசியா ஆடுகளுக்கெல்லாம் பிரதான மேய்ப்பராயிருப்பார். கர்த்தருடைய ஆடுகளுக்கு மற்றவர்களால் செய்ய முடியாத உதவிகளை, மேசியா செய்வார். மேசியா ஒருவரே. அவரே பிரதான மேய்ப்பர். பிரதான மேய்ப்பரும் ஒருவரே. பிரதான மேய்ப்பராகிய மேசியாவுக்கு கீழே, யூதரும், புறஜாதியாரும் ஒரே மந்தையாகயிருப்பார்கள்.

மேசியா கர்த்தருடைய தாசர். அவர் கர்த்தருடைய ஊழியக்காரர். மேசியா மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபிக்கும் ஊழியத்தை செய்கிறார். கர்த்தர் தம்முடைய தாசனாகிய தாவீதை இங்கு மேசியா என்று சொல்லுகிறார். தாவீதின் இருதயம் கர்த்தருக்கு ஏற்ற இருதயமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய தாசனாகிய தாவீதை, மனுஷர்மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துகிறார். கர்த்தர் தாவீதை சீயோன் மலையின்மேல் தம்முடைய ராஜாவாக நியமிக்கிறார். அவரை மூலைக்கு தலைக்கல்லாக ஆக்குகிறார்.

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்" (எரே 23:5).

"இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும்; பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்" (ஏசா 4:2).

"சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்" (ஏசா 61:3).

மேசியா மனுஷர் மத்தியிலே தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அப்போது கர்த்தர் பூமியின் மனுஷரோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்வார். துஷ்டமிருகங்களை தேசத்திலிராதபடிக்கு ஒழியப்பண்ணுவார். அவர்கள் சுகமாய் வனாந்தரத்தில் தாபரித்து, காடுகளில் நித்திரை பண்ணுவார்கள். கர்த்தர் அவர்களுக்கு தேவனாயிருப்பார். கர்த்தருடைய தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார் (எசே 34:24,25).

கர்த்தருடைய உடன்படிக்கை கிருபையின் உடன்படிக்கையாகும். அது சமாதானத்தின் உடன்படிக்கையாகவும் இருக்கிறது. "கர்த்தராகிய நான் அவர்களுக்கு தேவனாக இருப்பேன்" என்பதே இந்த உடன்படிக்கையின் முக்கிய சாரம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு போதுமானவராயிருப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தங்களுடைய பிரபுவாக அங்கீகரிக்கிறவர்களுக்கு மாத்திரமே, கர்த்தர் தேவனாகயிருப்பார்.

மேசியாவின் ராஜ்யத்தில் அங்கமாகயிருக்கிறவர்கள், கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாகயிருப்பார்கள். கர்த்தர் தம்முடைய ராஜ்யத்திலுள்ளவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன்" (எசே 34:31) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய மந்தையிலுள்ளவர்கள் ஆடுகள் என்று சொல்லப்பட்டாலும், அவர்கள் மெய்யாகவே மனுஷர்களாக இருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய மந்தையாகவும், அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாகவும் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாகயிருக்கிறார்.

கர்த்தருடைய ராஜ்யத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்கிறவர்களுக்கு, கர்த்தர் ஏராளமான ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு பரிசுத்தமான பாதுகாப்பு கிடைக்கும். அவர்கள் தேவனுடைய தெய்வீக பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருப்பார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய நல்ல மேய்ப்பராயிருக்கிறார். அவர் துஷ்டமிருகங்களை தேசத்திலிராதபடிக்கு ஒழியப்பண்ணுவார். நமக்கு விரோதமாக கிரியை நடப்பிக்கிற ஆவிக்குரிய சத்துருக்களையெல்லாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒழியப் பண்ணுவார். பாவம், சாத்தான், மரணம், நரகம் ஆகியவையே நம்முடைய ஆவிக்குரிய சத்துருக்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த சத்துருக்களையெல்லாம் ஏற்கெனவே ஜெயித்துவிட்டார்.

கர்த்தருடைய பிள்ளைகள் சுகமாய்த் தாபரிப்பார்கள். மந்தைகளில் மாத்திரமல்ல, தொழுவங்களில் மாத்திரமல்ல, விளைச்சல் நிலங்களிலும், காடுகளிலும், வனாந்தரங்களிலும் சுகமாய்த் தாபரிப்பார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. அவர்கள் எங்கேயிருந்தாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களோடு கூடவே இருக்கிறார். இதுவே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பிரதான ஆசீர்வாதம்.

தேவனாகிய கர்த்தர் இயேசுகிறிஸ்து மூலமாக நம்முடைய பயங்களை நம்மைவிட்டு நீக்குகிறார். வனாந்தரம்போல ஒரு சில காரியங்கள் நம்மை பயமுறுத்தலாம். கர்த்தரோ நம்முடைய பயத்தை நீக்கி நமக்கு தைரியத்தைக் கொடுக்கிறார். சாதாரண பயங்கள் மாத்திரமல்ல, மரணபயத்திற்கும் கர்த்தர் நம்மை விடுவிக்கிறார். கர்த்தர் நம்மோடு சமாதான உடன்படிக்கை செய்திருக்கிறார். இது கர்த்தர் கொடுக்கும் சமாதானம். இயேசுகிறிஸ்துவே சமாதான பிரபுவாகயிருக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுக்கிற சமாதானத்தை, நம்மிடத்திலிருந்து யாராலும் பறித்துக்கொள்ள முடியாது. கர்த்தரே நம்மோடு சமாதான உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். உடன்படிக்கை பண்ணினவர் உண்மையுள்ளவர்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் தாராளமாய்க் கிடைக்கும். அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையான எல்லா ஈவுகளையும் கொடுப்பார்.

கர்த்தர் அவர்களுக்குக் கீர்த்தி பொருந்திய ஒரு நாற்றை எழும்பப் பண்ணுவார்; அவர்கள் இனி தேசத்திலே பஞ்சத்தால் வாரிக்கொள்ளப்படுவதுமில்லை, இனிப் புறஜாதிகள் செய்யும் அவமானத்தைச் சுமப்பதுமில்லை (எசே 34:29).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளையும், தம்முடைய மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்குவார். ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவார்; ஆசீர்வாதமான மழை பெய்யும். வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத்தரும்; பூமி தன் பலனைக்கொடுக்கும்; அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள்; கர்த்தர் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து, அவர்களை அடிமை கொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிப்பார். இனி அவர்கள் புறஜாதிகளுக்குக் கொள்ளையாவதில்லை, பூமியின் மிருகங்கள் அவர்களைப் பட்சிப்பதுமில்லை; அவர்கள் தத்தளிக்கப் பண்ணுவார் இல்லாமல் சுகமாய்த் தங்குவார்கள்" (எசே 34:26-28).

கர்த்தருடைய ராஜ்யத்தில் வானம் தன்னுடைய ஆசீர்வாதத்தைத் தரும். பூமியும் தன்னுடைய விளைச்சலைத் தரும். கர்த்தர் சீயோனை ஆசீர்வதிப்பார். சீயோனின் ஆசீர்வாதங்களால், சீயோனுக்கு அருகாமையிலிருக்கிறவர்களும் நன்மைகளை அனுபவிப்பார்கள். நாம் கர்த்தருடைய சபைக்கு அருகாமையில் வரும்போது, சபையின் கர்த்தருக்கு அருகாமையில் வருகிறோம்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். அவர்கள் ஆசீர்வாதமாயிருப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுக்கும் ஆசீர்வாதமாயிருப்பார்கள். தங்களைச் சுற்றிலுமுள்ளவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருப்பார்கள்.

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், இந்த உலகத்திற்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டும். தங்களால் இந்த உலகத்தை எப்படி ஆசீர்வதிக்க முடியும் என்பதை கர்த்தருடைய பிள்ளைகள் தியானித்துப் பார்க்கவேண்டும்.

நல்லவன் நன்மை செய்யவேண்டும். கர்த்தரிடத்திலிருந்து வரங்களைப் பெற்றுக்கொண்டவன், அதைப் பயன்படுத்த வேண்டும். கர்த்தரிடத்திலிருந்து கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றுக்கொண்டவன், மற்றவர்களுக்கு கிருபையும் இரக்கமும் காண்பிக்கவேண்டும். கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டவன், மற்றவர்களை ஆசீர்வதிக்கவேண்டும். நாம் கர்த்தரிடத்திலிருந்து எதைப் பெற்றுக்கொள்கிறோமோ, அதற்கு நாம் ஊழியக்காரர்களாயிருக்கவேண்டும்.

நாம் கர்த்தருடைய நாமத்தினால் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்போது, தேவனாகிய கர்த்தர் நம்மோடே கூடயிருக்கிறார் என்பதையும், நாம் கர்த்தருடைய ஜனமாயிருக்கிறோம் என்பதையும் சாட்சியாய் அறிவிக்கிறோம். நம்முடைய நற்கிரியைகளினால் நாம் கர்த்தருக்கு சாட்சியாயிருக்கவேண்டும்.

35 அதிகாரம்

கர்த்தருடைய சபைக்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்களுக்கு அழிவு வரும். கர்த்தர் தம்முடைய சபையை ஆசீர்வதிப்பார். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்கிறவர்களை கர்த்தர் அழிப்பார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். கர்த்தர் சேயீர் மலைக்கு விரோதமாக தம்முடைய வார்த்தையைச் சொல்லுகிறார். சேயீர் மலை என்பது ஏதோமைக் குறிக்கும் பெயர். ஒபதியா தீர்க்கதரிசி கர்த்தருடைய சபைக்கு விரோதமாகயிருக்கிற எல்லா சத்துருக்களுக்கும் அழிவு வரும் என்று சொல்லுகிறார்.

ஏதோமியரின் பாவங்கள் (எசே 35:5,10-13). கர்த்தர் ஏதோமியருக்கு விரோதமாய்ச் சொல்லுகிற வார்த்தை (எசே 35:1-3). ஏதோமின் பட்டணங்கள் வனாந்தரமாகும் (எசே 35:4). சேயீர் மலை பாழும் அவாந்தர இடமுமாகும் (எசே 35:6-9). அழிந்துபோன மற்ற தேசங்கள் கட்டியெழுப்பப்படும். ஏதோம் தேசமோ நிரந்தரமாக அழிந்துபோகும் (எசே 35:14,15).

சேயீர்மலை
எசே 35:1-9

எசே 35:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 35:2. மனுபுத்திரனே, நீ உன் முகத்தை சேயீர்மலைக்கு நேராகத் திருப்பி அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்உரைத்து,

எசே 35:3. அதற்குச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், சேயீர்மலையே, இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து, என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைப் பாழும் அவாந்தர வெளியுமாக்குவேன்.

எசே 35:4. உன் பட்டணங்களை வனாந்தரமாக்கிப்போடுவேன்; நீ பாழாய்ப்போவாய்; நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வாய்.

எசே 35:5. நீ பழைய பகையை வைத்து, இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமம் நிறைவேறுகையில் அவர்களுக்கு உண்டான ஆபத்தின் காலத்திலே பட்டயத்தின் கூர்மையினால் அவர்களுடைய இரத்தத்தைச் சிந்தினபடியால்,

எசே 35:6. நான் இரத்தப் பழிக்கு உன்னை ஒப்புவிப்பேன்; இரத்தப்பழி உன்னைப் பின்தொடரும் என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீ இரத்தத்தை வெறுக்காதபடியினால் இரத்தம் பின்தொடரும்.

எசே 35:7. நான் சேயீர்மலையைப் பாழும் அவாந்தர இடமுமாக்கி, அதிலே போக்குவரவு செய்வார் இல்லாதபடி சங்காரஞ்செய்து,

எசே 35:8. அதின் மலைகளைக் கொலையுண்டவர்களாலே நிரப்புவேன்; உன் மேடுகளிலும் உன் பள்ளத்தாக்குகளிலும் உன் எல்லா ஆறுகளிலும் பட்டயத்தால் வெட்டுண்டவர்கள் விழுவார்கள்.

எசே 35:9. நீ என்றைக்கும் அவாந்தரவெளியாயிருக்கும்படி செய்வேன்; உன் பட்டணங்கள் குடியேற்றப்படுவதில்லை; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

சேயீர்மலையும் மோவாபும் சேர்ந்து இஸ்ரவேலுக்கு விரோதமாக கிரியை செய்கிறார்கள். எசேக்கியேல் இதைப்பற்றி ஏற்கெனவே தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார். இப்போது சேயீர் மலையின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது.

கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: இதோ, யூதா வம்சத்தார் எல்லா ஜாதிகளுக்கும் ஒத்தவர்களென்று மோவாபும் சேயீரும் சொல்லுகிறபடியினால், இதோ, அம்மோன் புத்திரரின் பேர் ஜாதிகளுக்குள் இராதபடிக்கு நான் அம்மோன் புத்திரரின் தேசத்தைக் கிழக்குத் தேசத்தாருக்குத் திறந்துவைப்பேன் (எசே 25:8,9).

கர்த்தர் தம்முடைய ஜனத்தை பாதுகாக்கிறார். அவர்களைச் சுற்றிலும் தம்முடைய இரத்தத்தினால் வேலியடைகிறார். கர்த்தருடைய ஜனத்தைத் தொடுகிறவர்கள், கர்த்தரையே தொடுகிறார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீங்கு செய்ய நினைக்கிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக தீங்கு செய்ய நினைக்கிறார்கள். இந்த அடிப்படையிலேயே கர்த்தர் ஏதோமியருக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். சேயீர் மலை என்பது ஏதோமைக் குறிக்கும் பெயர்.

கர்த்தருடைய ஜனத்திற்கும் ஏதோமுக்கும் இடையே பழைய விரோதம் இருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்கிறார்கள். இஸ்ரவேலர் என்னும் பெயரையே அவர்கள் வெறுக்கிறார்கள். ஏசா யாக்கோபை வெறுத்ததுபோல, ஏதோமியர் இஸ்ரவேலரை வெறுக்கிறார்கள். ஏசாவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள், யாக்கோபின் சந்ததியாரோடு சிநேகமாயிருப்பதில்லை. அவர்கள் ஒப்புரவாவதற்கும் வாய்ப்பில்லாமல் போயிற்று.

ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் இடையே உள்ள பகை சீக்கிரத்தில் முடியாமல், அது தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஒரு விருட்சத்தின் வேர் பூமியில் ஆழமாக பதிவதுபோல, தேசங்களுக்கு இடையேயும் பகை ஆழமாய்ப் பதிந்திருக்கும். ஏதோமியருக்கும் இஸ்ரவேலருக்கும் இடையே நீண்டகால பகையிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தாருக்கு ஆபத்து வரும்போது ஏதோமியர் சந்தோஷப்படுகிறார்கள்.

ஏதோமியர் கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்கிறார்கள். அவர்களை சேதப்படுத்துகிறார்கள். ஏதோமியர் உண்மையான சத்துருவைப்போல, நேருக்கு நேராக நின்று யுத்தம்பண்ணமாட்டார்கள். அவர்கள் இஸ்ரவேலுக்கு மறைவாக பதிவிருப்பார்கள். அவர்களுக்கு வலைகளையும் கண்ணிகளையும் வைப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தப்பித்து ஓடிப்போனாலும், ஏதோமியர் அவர்களைப் பின்தொடர்ந்து கொன்றுபோடுவார்கள்.

"அவர்களில் தப்பினவர்களைச் சங்கரிக்கும்படி வழிச்சந்திகளிலே நிற்காமலும், இக்கட்டு நாளில் அவர்களில் மீதியானவர்களைக் காட்டிக்கொடாமலும் இருக்கவேண்டியதாயிருந்தது. எல்லா ஜாதிகளுக்கும் விரோதமான நாளாகிய கர்த்தருடைய நாள் சமீபமாய் வந்திருக்கிறது; நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்; உன் செய்கையின் பலன் உன் தலையின்மேல் திரும்பும்" (ஒப 14,15).

கர்த்தருடைய கோபம் ஏதோமியர் மீது வந்திருக்கிறது கர்த்தர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, நீ உன் முகத்தை சேயீர்மலைக்கு நேராகத் திருப்பி அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை" (எசே 35:2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சேயீர் மலைக்கு விரோதமாக வருகிறார். தம்முடைய கையை ஏதோமியருக்கு விரோதமாக நீட்டுகிறார். கர்த்தர் ஏதோமை பாழும் அவாந்தரவெளியுமாக்குகிறார் (எசே 35:3). கர்த்தர் தம்முடைய கையை ஒரு தேசத்திற்கு விரோதமாக நீட்டும்போது, அந்த தேசம் முற்றிலுமாய் பாழாய்ப்போகும். அந்த தேசத்தின் ஜனங்கள் எல்லோரும் அழிந்துபோவார்கள். கர்த்தர் ஏதோமின் பட்டணங்களை வனாந்தரமாக்கிப் போடுகிறார். ஏதோமின் ஜனங்கள் பாழாய்ப்போகிறார்கள்.

"நீ பழைய பகையை வைத்து, இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமம் நிறைவேறுகையில் அவர்களுக்கு உண்டான ஆபத்தின் காலத்திலே பட்டயத்தின் கூர்மையினால் அவர்களுடைய இரத்தத்தைச் சிந்தினபடியால், நான் இரத்தப் பழிக்கு உன்னை ஒப்புவிப்பேன்; இரத்தப்பழி உன்னைப் பின்தொடரும் என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீ இரத்தத்தை வெறுக்காதபடியினால் இரத்தம் பின்தொடரும்" (எசே 35:5,6) என்று கர்த்தர் ஏதோமியரின் அக்கிரமத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஏதோமியரின் இரத்தப்பழி அவர்களைப் பின்தொடருகிறது. இஸ்ரவேல் வம்சத்தார் குற்றமில்லாதவர்கள். ஏதோமியர்கள் குற்றமில்லாத இஸ்ரவேல் வம்சத்தாரின் இரத்தத்தைச் சிந்தினவர்கள். "ஏதோமியர்கள் இரத்தத்தை வெறுக்கவில்லை". இந்த வாக்கியத்திற்கு, ஏதோமியர்கள் குற்றமில்லாத இரத்தத்தை சிந்தியதற்காக வருத்தப்படவில்லை என்றும், அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பவில்லை என்றும் அர்த்தமாகும்.

இஸ்ரவேல் தேசத்தை வனாந்தரமாக்கிப்போடுவதற்கும், அதைப் பாழாக்குவதற்கும் ஏதோமியர்கள் உதவி செய்தார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்தவர்களை, கர்த்தர் இப்போது தண்டிக்கிறார். ஏதோமியர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு என்ன செய்தார்களோ, அது இப்போது ஏதோமியருக்கு செய்யப்படுகிறது. ஏதோமின் பட்டணங்கள் வனாந்தரமாகிறது. ஏதோமின் குடிகள் பாழாய்ப்போகிறார்கள்.

கர்த்தருடைய கோபம் ஏதோமியர்மேல் வருகிறது. ஏதோமியருடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுக்கிறார்.

"நான் சேயீர்மலையைப் பாழும் அவாந்தர இடமுமாக்கி, அதிலே போக்குவரவு செய்வார் இல்லாதபடி சங்காரஞ்செய்து, அதின் மலைகளைக் கொலையுண்டவர்களாலே நிரப்புவேன்; உன் மேடுகளிலும் உன் பள்ளத்தாக்குகளிலும் உன் எல்லா ஆறுகளிலும் பட்டயத்தால் வெட்டுண்டவர்கள் விழுவார்கள்" (எசே 35:7,8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஏதோமின்மீது வரும்போது, ஏதோமியருக்கு நித்திய அழிவு உண்டாகிறது. ஏதோம் தேசம் என்றைக்கும் அவாந்தரவெளியாயிருக்கும். ஏதோமின் பட்டணங்களில் யாரும் குடியேற்றப்படுவதில்லை. ஏதோமியர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக ஏராளமாய்த் தீங்கு செய்தார்கள். அவர்கள்மீது பகையோடிருந்தார்கள். அப்போதெல்லாம் ஏதோமியருக்கு கர்த்தரைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இப்போது ஏதோமியருக்கு பூரணமான அழிவு வந்திருக்கிறது. இந்த அழிவுக்கு மத்தியில், இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை ஏதோமியர் அறிந்துகொள்கிறார்கள் (எசே 35:9).

இஸ்ரவேலின் மலைகள் எசே 35:10-15

எசே 35:10. இரண்டு ஜாதிகளும் இரண்டு தேசங்களும் கர்த்தர் வசமாயிருந்தும், அவைகள் என்னுடையவைகளாகும், நான் அவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுவேன் என்று நீ சொல்லுகிறபடியினால்,

எசே 35:11. நீ அவர்கள்மேல் வைத்த வர்மத்தினால் செய்த உன் கோபத்துக்குத்தக்கதாகவும், உன் பொறாமைக்கு தக்கதாகவும் நான் செய்து, கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் உன்னை நியாயந்தீர்க்கும்போது, என்னை அவர்களுக்குள் அதினால் அறியப்பண்ணுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.

எசே 35:12. இஸ்ரவேலின் மலைகள் பாழாக்கப்பட்டு எங்களுக்கு இரையாகக் கொடுக்கப்பட்டது என்று, நீ அவைகளுக்கு விரோதமாய்ச் சொன்ன உன் நிந்தனைகளையெல்லாம் கர்த்தராகிய நான் கேட்டேன் என்று அப்பொழுது அறிந்துகொள்வாய்.

எசே 35:13. நீங்கள் உங்கள் வாயினால் எனக்கு விரோதமாகப் பெருமை பாராட்டி, எனக்கு விரோதமாக உங்கள் வார்த்தைகளைப் பெருகப் பண்ணினீர்கள்; அதை நான் கேட்டேன்.

எசே 35:14. பூமியெல்லாம் மகிழும்போது நான் உன்னைப் பாழாயிருக்கும்படி செய்வேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 35:15. இஸ்ரவேல் வம்சத்தாரின் சுதந்தரம் பாழாய்ப்போனதைக் கண்டு மகிழ்ந்தாயே, உனக்கும் அப்படியே சம்பவிக்கச்செய்வேன்; சேயீர்மலையே, ஏதோமே, நீ முழுதும் பாழாவாய்; அதினால் நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்களென்று உரைத்தார் என்று சொல்லு.

கர்த்தர் ஏதோமியரின் பாவத்தை இங்கு தொடர்ந்து சொல்லுகிறார். அவர்கள் தேவனுடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்தார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக ஏராளமான ஜாதியார் எழும்பி வருகிறார்கள். எத்தனைபேர் நமக்கு விரோதமாக வந்தாலும், கர்த்தரே நமக்கு பாதுகாப்பாயிருக்கிறார். நம்மைத் தொடுகிறவர்கள், நம்மைப் பாதுகாக்கிற கர்த்தரின் கண்மணியைத் தொடுகிறார்கள். கர்த்தர் நம்மை தம்முடைய உள்ளங்கையில் வரைந்திருக்கிறார்.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டார்கள். யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் பட்டயத்தினால் வெட்டிப்போட்டார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தபோது, ஏதோமியர் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். கல்தேயர்கள் இஸ்ரவேலரை சங்காரம்பண்ணுவதைப் பார்த்து, ஏதோமியர்கள் மகிழ்ந்து களிகூர்ந்தார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரோ தங்களை பட்டயத்தினால் வெட்டிப்போடும் கல்தேயரையும் பார்க்கிறார்கள். தாங்கள் அழியும்போது சந்தோஷப்படுகிற ஏதோமியரையும் பார்க்கிறார்கள். கர்த்தர் அவர்களை நியாயம் விசாரிக்கவேண்டும் என்று, இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார்.

"கர்த்தாவே, எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும்; அவர்கள்: அதை இடித்துப்போடுங்கள், அஸ்திபாரம் மட்டும் இடித்துப்போடுங்கள் என்று சொன்னார்களே" (சங் 137:7).

இஸ்ரவேல் ஜனங்கள் முற்றிலுமாய் அழிந்துவிட்டால், தாங்கள் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளலாம் என்று ஏதோமியர் திட்டமிடுகிறார்கள். இதனால் இஸ்ரவேலரின் அழிவைப் பார்த்து ஏதோமியருக்கு சந்தோஷமுண்டாயிற்று. ஏதோமியர் மற்றவர்களுடைய மரணத்தை விரும்புகிறவர்கள். மற்றவர்கள் அழிந்துபோவதைப் பார்த்து சந்தோஷப்படுகிறவர்கள்.

இக்காலத்திலும் ஒரு சிலரை ஏதோமியரின் ஆவி ஆளுகை செய்கிறது. ஏதோமியரைப்போலவே, இவர்களும் பிறருடைய துக்கத்தைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள். இவர்களுக்கு போட்டியாக யாராவது தொழில்செய்து, நஷ்டமடைந்துவிட்டால், இவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். தங்களுடைய தொழிலுக்கும், வியாபாரத்திற்கும் போட்டியாக ஒருவருமில்லை என்று, ஆணவமாயிருப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். கானான் தேசம் அவர்களுடைய தேசம். அந்த தேசத்தில் ஏதோமியருக்கு பங்குமில்லை. பாத்தியமுமில்லை. கானான் தேசத்தை அபகரிக்க நினைக்கிறவர்கள், கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும். கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி யாராலும் ஜெயிக்க முடியாது.

கல்தேயர்கள் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகிறார்கள். தேசத்திலே மீதியானவர்களை கல்தேயர்கள் பட்டயத்தினால் கொன்றுபோடுகிறார்கள். பட்டயத்திற்கு தப்பினவர்கள் பஞ்சத்தினாலும், கொள்ளைநோயாலும் செத்துப்போகிறார்கள். இஸ்ரவேல் தேசம் குடியில்லாமலிருக்கிறது. கானான் தேசத்தில் குடியில்லாமலிருப்பதைப் பார்த்து ஏதோமியர்கள் சந்தோஷப்படுகிறார்கள். வெறுமையும், பாழுமாயிருக்கிற கானான் தேசத்திலே, தாங்கள் வந்து குடியேறலாம் என்று ஏதோமியர்கள் நினைக்கிறார்கள்.

இரண்டு ஜாதிகளும், இரண்டு தேசங்களும் கர்த்தர் வசமாயிருந்தும், அவைகள் என்னுடையவைகளாகும், நான் அவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன் என்று ஏதோமியர்கள் சொல்லுகிறார்கள் (எசே 35:10). இதனால் கர்த்தருடைய கோபம் ஏதோமியருக்கு விரோதமாய் வருகிறது. கானான் தேசத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் குடியிராமல் போனாலும், கர்த்தர் அங்கே வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் கானான் தேசத்திலிருக்கிறது. ஏதோமியரின் கண்களுக்கு கானான் தேசத்திலே இஸ்ரவேல் வம்சத்தார் குடியிருக்கவில்லை என்பது மாத்திரமே தெரிகிறது. அந்தப் பரிசுத்த கானான் தேசத்திலே, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வாசம்பண்ணுகிறார் என்பது ஏதோமியருக்குத் தெரியவில்லை.

ஏதோமியர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது பொறாமைப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக வர்மம் வைக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் ஏதோமியர்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை நியாயந்தீர்க்கிறார்.

“நீ அவர்கள்மேல் வைத்த வர்மத்தினால் செய்த உன் கோபத்துக்குத்தக்கதாகவும், உன் பொறாமைக்கு தக்கதாகவும் நான் செய்து, கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் உன்னை நியாயந்தீர்க்கும்போது, என்னை அவர்களுக்குள் அதினால் அறியப்பண்ணுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்” (எசே 35:11) என்று கர்த்தர் ஏதோமியருக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கானான் தேசம் கர்த்தருடைய தேசம். இது இம்மானுவேலின் தேசம். “யூதாவுக்குள் புகுந்து பிரவாகித்துக் கடந்து, கழுத்துமட்டும் வரும் என்றார். இம்மானுவேலே, அவன் செட்டைகளின் விரிவு உமது தேசத்தின் விசாலத்தை மூடும்” (ஏசா 8:8). இம்மானுவேல் கானான் தேசத்திலே பிறப்பார். கானான் தேசத்திலே ஏதோமியருக்கு பாத்தியம் எதுவுமில்லை.

ஏதோமியர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக தீங்கு நினைக்கிறார்கள். கல்தேயர்கள் இஸ்ரவேல் தேசத்தை அழித்தபோது, அந்த தேசத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளலாம் என்று ஏதோமியர்கள் பேராசைப்படுகிறார்கள். கர்த்தர் ஏதோமியரின் வார்த்தைகளையெல்லாம் கவனித்துக் கேட்கிறார். “இஸ்ரவேலின் மலைகள் பாழாக்கப்பட்டு, எங்களுக்கு இரையாகக் கொடுக்கப்பட்டது” (எசே 35:12) என்று ஏதோமியர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாகச் சொன்ன நிந்தனைகளையெல்லாம் கர்த்தர் கேட்கிறார்.

ஏதோமியர்கள் தங்கள் வாயினால் கர்த்தருக்கு விரோதமாக பெருமை பாராட்டுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக தங்கள் வார்த்தைகளை பெருகப்பண்ணுகிறார்கள். ஏதோமியரின் வார்த்தைகளையெல்லாம் கர்த்தர் கவனமாய்க் கேட்கிறார்.

இதுவரையிலும் ஏதோமியர் பேசினார்கள். கர்த்தர் கேட்டார். இப்போது கர்த்தர் தம்முடைய வார்த்தையைப் பேசுகிறார் “பூமியெல்லாம் மகிழும்போது நான் உன்னைப் பாழாயிருக்கும்படி செய்வேன்” (எசே 35:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் பேசுகிற இந்த வார்த்தைகளை ஏதோமியர் கேட்கவேண்டும். கர்த்தர் சொன்னது நிறைவேறும்.

ஏதோமியர் கர்த்தருக்கு விரோதமாய்த் தூஷண வார்த்தைகளைப் பேசினார்கள். கர்த்தரோ ஏதோமியருக்கு விரோதமாக சாபவார்த்தைகளைச் சொல்லுகிறார். ஏதோம் தேசம் முழுவதுமே பாவம் செய்கிறது. ஏதோமியரின் பாவம் ஒரு தனிமனுஷனுடைய பாவமல்ல. அது அவர்களுடைய மொத்த தேசத்தின் பாவம். முழுதேசத்தாரும் செய்த பாவத்திற்கு, முழுதேசத்திற்கும் தண்டனை கிடைக்கிறது.

"இஸ்ரவேல் வம்சத்தாரின் சுதந்தரம் பாழாய்ப்போனதைக் கண்டு மகிழ்ந்தாயே, உனக்கும் அப்படியே சம்பவிக்கச்செய்வேன்" (எசே 35:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏதோமியர் மற்றவர்கள் அழிவதைப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள். இப்போது கர்த்தர் ஏதோமியரை அழித்துப்போடுகிறார்.

"சேயீர்மலையே, ஏதோமே, நீ முழுதும் பாழாவாய்" (எசே 35:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏதோமுக்கு பூரண அழிவும், பூரண நாசமும், பூரண மோசமும், பூரண சங்காரமும் வரும். சர்வநாசமும், சர்வமோசமுமே ஏதோமுக்கு கிடைத்த தண்டனை. ஏதோமியர்கள் சர்வநாசமாகும்போது, இஸ்ரவேலின் பரிசுத்தரே தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள்.

36 அதிகாரம்

கர்த்தர் யூதாதேசத்தைப்பற்றிச் சொல்லுகிறார். அந்த தேசம் இப்போது பாழும் வனாந்தரமுமாயிருக்கிறது. கர்த்தரோ யூதாதேசத்தை மறுபடியுமாய் கட்டியெழுப்புவார். யூதர்கள் ஏற்ற காலத்திலே, தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து, அங்கே குடியேறுவார்கள். யூதாதேசத்தில் சந்தோஷமும் செழிப்பும், சமாதானமும் இருக்கும் (எசே 36:1-15).

கர்த்தர் யூதர்களுடைய ஆவிக்குரிய நிலமையைப்பற்றியும் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போனார்கள். கர்த்தரோ அவர்களுக்கு இரக்கம் காண்பித்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார் (எசே 36:21-24). கர்த்தர் யூதர்களை பரிசுத்தப்படுத்துகிறார். அவர்களுக்கு தம்முடைய கிருபையைக் கொடுக்கிறார். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்கு பதில்கொடுத்து, அவர்களை தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு தகுதிப்படுத்துகிறார் (எசே 36:25-38).

இஸ்ரவேல் மலைகளே
எசே 36:1-15

எசே 36:1. மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் மலைகளை நோக்கித் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் மலைகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எசே 36:2. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; பகைஞன் உங்களைக் குறித்து ஆ ஆ, நித்திய மேடுகள் எங்கள் வசமாயிற்று என்று சொல்லுகிறபடியினால்,

எசே 36:3. நீ தீர்க்கதரிசனம் உரைத்துச்சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், நீங்கள் புறஜாதிகளில் மீதியானவர்களுக்குச் சுதந்தரமாயிருக்கும்படி அவர்கள் உங்களைப் பாழாக்கி, உங்களைச் சுற்றிலுமிருந்து விழுங்கினபடியினாலும், நீங்கள் வாயாடிகளுக்குப் பேச்சும் ஜனங்களுக்கு அவதூறுமானவர்களானபடியினாலும்,

எசே 36:4. இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் கர்த்தராகிய ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; மலைகளுக்கும், மேடுகளுக்கும், ஆறுகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும், பாழாக்கப்பட்ட அவாந்தர இடங்களுக்கும், வெறுமையாய் விடப்பட்ட பட்டணங்களுக்கும் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்: உங்களைச் சுற்றிலும் மீதியான புறஜாதிகளுக்கு நீங்கள் கொள்ளையும் பரியாசமுமாய்ப் போனபடியினால்,

எசே 36:5. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்: என் தேசத்தைக் கொள்ளையிடப்பட்ட வெளியாக்கும் படிக்கு அதை முழு இருதயத்தின் சந்தோஷத்தோடும் கர்வமான மனதோடும் தங்களுக்குச் சுதந்தரமாக நியமித்துக்கொண்ட புறஜாதிகளில் மீதியானவர்களுக்கு விரோதமாகவும் ஏதோம் அனைத்துக்கும் விரோதமாகவும், என் அக்கினியான எரிச்சலினால் பேசினேன் என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.

எசே 36:6. ஆகையால், நீ இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, மலைகளுக்கும், மேடுகளுக்கும், ஆறுகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, நீங்கள் புறஜாதிகள் செய்யும் அவமானத்தைச் சுமந்தபடியினால் நான் என் எரிச்சலினாலும் என் உக்கிரத்தினாலும் பேசினேன்;

எசே 36:7. ஆதலால், கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் கரத்தை உயர்த்துவேன், உங்களைச் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகள் தங்களுடைய அவமானத்தை நிச்சயமாய்ச் சுமப்பார்கள் என்று சொல்லுகிறேன்.

எசே 36:8. இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் உங்கள் கொப்புகளை விட்டு, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு உங்கள் கனிகளைக் கொடுப்பீர்கள்; அவர்கள் சமீபமாய் வந்துவிட்டார்கள்.

எசே 36:9. இதோ, நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களைக் கண்ணோக்குவேன்; நீங்கள் பண்படுத்தப்பட்டு விதைக்கப்படுவீர்கள்.

எசே 36:10. நான் உங்கள்மேல் இஸ்ரவேல் வம்சமாகிய மனுஷர் யாவரையும் வர்த்திக்கப்பண்ணுவேன்; பட்டணங்கள் குடியேற்றப்படும், அவாந்தரமான ஸ்தலங்கள் கட்டப்படும்.

எசே 36:11. உங்கள்மேல் மனுஷரையும் மிருகஜீவன்களையும் பெருகிப் பலுகும்படி வர்த்திக்கப்பண்ணுவேன்; பூர்வநாட்களில் நீங்கள் இருந்த நிலைமையில் நான் உங்களை ஸ்தாபித்து, உங்கள் முந்தின சீரைப்பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வேன்; அதினால் நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 36:12. நான் உங்கள்மேல் என் ஜனமாகிய இஸ்ரவேலின் மனுஷரை நடமாடப்பண்ணுவேன், அவர்கள் உன்னைச் கையாளுவார்கள்; அவர்களுக்குச் சுதந்தரமாயிருப்பாய்; நீ இனிமேல் அவர்களைச் சாகக்கொடுப்பதில்லை.

எசே 36:13. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், ஜனங்கள் உன்னைப்பார்த்து: நீ மனுஷரைப் பட்சிக்கிற தேசமென்றும், நீ உன் ஜனங்களைச் சாகக்கொடுக்கிற தேசமென்றும் சொல்லுகிறபடியினால்,

எசே 36:14. நீ இனிமேல் மனுஷரைப் பட்சிப்பதுமில்லை, இனிமேல் உன் ஜனங்களைச் சாகக்கொடுப்பதுமில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 36:15. நான் இனிமேல் புறஜாதிகள் செய்யும் அவமானத்தை உன்னிடத்திலே கேட்கப்பண்ணுவதுமில்லை, நீ ஜனங்களின் நிந்தையை இனிமேல் சுமப்பதுமில்லை; நீ இனிமேல் உன் ஜாதிகளைச் சாகக்கொடுப்பதுமில்லையென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் மறுபடியுமாய் வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் தீர்க்கதரிசி அவர்களுக்கு அன்பான வார்த்தைகளையும், ஆறுதலான வர்த்தைகளையும் சொல்லவேண்டும். எசேக்கியேல் கர்த்தருடைய செய்தியை சொல்லும்போது, "இஸ்ரவேல் மலைகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" என்று சொல்லவேண்டும் (எசே 36:1). எசேக்கியேல் இதே வாக்கியத்தை மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். "இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் கர்த்தராகிய ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள்" (எசே 36:4).

இஸ்ரவேல் தேசம் இப்போது பாழாய்க்கிடக்கிறது. அது வனாந்தரம்போல இருக்கிறது. எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை மலைகளுக்கும், மேடுகளுக்கும், ஆறுகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசம் பாழாக்கப்பட்ட அவாந்தர இடங்களாயிருக்கிறது. யூதாவின் பட்டணங்கள் வெறுமையாய் விடப்பட்ட பட்டணங்களாயிருக்கிறது. எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லாமல், மலைகளுக்கும், பட்டணங்களுக்கும் சொல்லுகிறார் (எசே 36:4).

கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, மலைகளுக்கும், மேடுகளுக்கும், ஆறுகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும் சொல்லவேண்டியது" (எசே 36:6) என்று கட்டளை கொடுக்கிறார். எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் மலைகளுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே இப்போது ஜனங்கள் இல்லை. அங்கு ஒருவரும் குடியிருக்கவில்லை. அது வனாந்தரமாயிருக்கிறது. அங்கே ஜனங்கள் இல்லாவிட்டாலும், அங்கே மலைகளும் பள்ளத்தாக்குகளும் இருக்கிறது. கல்தேயர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டுபோனார்கள். இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஐசுவரியங்களையெல்லாம் கொள்ளையடித்து தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களால் மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதைப் பெயர்த்தெடுத்து தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போகமுடியவில்லை.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவருடைய ஜனத்திற்கு எப்போதுமே உள்ளது. இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்திலிருந்தாலும், அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தர் அவர்கள்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார். அவர்களுக்கு தம்முடைய கரிசனையைக் காண்பிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது அன்பாயிருப்பதுபோலவே, இஸ்ரவேல் தேசத்தின்மீதும் அன்பாயிருக்கிறார். கானான் தேசம் கர்த்தருக்கு பிரியமான தேசம். அது கர்த்தருடைய பரிசுத்தமான தேசம்.

இஸ்ரவேல் தேசம் இப்போது பாழாய்க் கிடக்கிறது. அது வனாந்தரம்போல இருக்கிறது. கர்த்தர் பாழாய்ப்போயிருக்கிற இஸ்ரவேல் தேசத்தை கரிசனையோடு பார்க்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார், அவர்களைச் சுற்றிலும் மீதியான புறஜாதிகளுக்கு கொள்ளையும் பரியாசமுமாய்ப் போனார்கள் (எசே 36:4).

இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதி தேசத்தார், இஸ்ரவேல் வம்சத்தாரைக் கொள்ளையிட்டு, தங்களுடைய ஐசுவரியங்களைப் பெருக்கிக் கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரைக் கொள்ளையிடுவது பாவம் என்னும் உணர்வுகூட அவர்களிடத்தில் இல்லை. புறஜாதிகள் இஸ்ரவேல் வம்சத்தாரை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. கல்தேயர்கள் இஸ்ரவேல் ஜனங்களைக் கொள்ளையிட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து மற்ற புறஜாதிகளும் இஸ்ரவேல் ஜனங்களைக் கொள்ளையிடுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரோ பெலமில்லாமல் சோர்ந்துபோயிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் தாழ்ந்துபோயிருக்கிறார்கள். அவர்களுடைய தாழ்மையைப்பார்த்து அவர்களுக்கு உதவிபுரிய ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் அவர்களை பரியாசம் பண்ணுவதற்கு ஏராளமானோர் வருகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதியார், அந்த தேசத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ள முயற்சிபண்ணுகிறார்கள். இஸ்ரவேல் தேசம் இப்போது பாழாய்க்கிடக்கிறது. வனாந்தரம்போல இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். இஸ்ரவேலுக்கு பகைஞராகயிருக்கிறவர்கள், அவர்களைக் குறித்து, "ஆ ஆ, நித்திய மேடுகள் எங்கள் வசமாயிற்று" (எசே 36:2) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் பகைஞர்கள் ஆணவத்தோடு சொல்லுகிற வார்த்தைகளை கர்த்தர் கவனித்துக் கேட்கிறார். அவர்கள் இஸ்ரவேலின் அழிவைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள். புறஜாதிகள் இஸ்ரவேல் வம்சத்தாரைப் பாழாக்குகிறார்கள். அவர்களைச் சுற்றிலுமிருந்து விழுங்குகிறார்கள். புறஜாதிகள் இஸ்ரவேல் தேசத்தை தங்களுக்கு சுதந்தரமாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரால் தங்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. கர்த்தருடைய ஜனங்கள் பலவீனமடைந்து சோர்ந்துபோயிருக்கிறார்கள். அவர்கள் வாயடிகளுக்கு பேச்சும், ஜனங்களுக்கு அவதூறுமானவர்களாய் இருக்கிறார்கள் (எசே 36:3) இஸ்ரவேல் வம்சத்தார் தங்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகளுக்கு கொள்ளையும், பரியாசமுமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேலை கொள்ளையிட்ட ஜனங்களுக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் எழும்புகிறது. இஸ்ரவேல் தேசம் அழிந்துபோனதைப் பார்த்து பரியாசம் பண்ணின ஜாதிகளுக்கு விரோதமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. இஸ்ரவேல் தேசம் பாழாய்க்கிடப்பதைப் பார்த்து, புறஜாதிகள், அவர்களில் விசேஷமாய் இதுமேயர்கள், தங்கள் இருதயத்தில் பூரணமாய் சந்தோஷப்பட்டார்கள். அழிந்து கிடக்கிற இஸ்ரவேல் தேசத்தை அவர்கள் கர்வமான மனதோடு, ஏளனமாய்ப் பார்த்தார்கள்.

கானான் தேசம் கர்த்தருடைய தேசம். கர்த்தர் கானான் தேசத்தை தம்முடைய பிள்ளைகளுக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் புறஜாதியாரோ கானான் தேசத்தை தங்களுக்கு சுதந்தரமாக்கிக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய தேசத்தை கொள்ளையிடப்பட்ட வெளியாக்கும்படிக்கு தீர்மானம் பண்ணுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தை முழுஇருதயத்தின் சந்தோஷத்தோடும், கர்வமான மனதோடும் தங்களுக்கு சுதந்தரமாக நியமித்துக் கொள்கிறார்கள் (எசே 36:5).

இவர்கள் பிறர் பொருளை இச்சிப்பது மாத்திரமல்ல, கர்த்தருடைய பொருளையே இச்சிக்கிறார்கள். கர்த்தருக்கு சொந்தமானதை அபகரிக்கப் பார்க்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களை ஏளனம் பண்ணுகிறார்கள்.

புறஜாதி தேசத்தாரால் இஸ்ரவேல் தேசத்தை சுதந்தரிக்க முடியவில்லை. புறஜாதியார் ஆசைப்பட்ட பிரகாரம், இஸ்ரவேல் தேசம் அவர்களுக்கு சுதந்தரமாகவில்லை. கர்த்தருடைய ஜனத்தை கொள்ளையிட முடியாதவர்கள் சும்மாயிருக்கமாட்டார்கள்.

அவர்கள் கர்த்தருடைய ஜனத்தைப்பற்றி குறை சொல்லுவார்கள். அவர்களை ஏளனமாயும் பரியாசமாயும் பேசுவார்கள். இஸ்ரவேல் ஜனங்களும் புறஜாதிகள் செய்யும் அவமானத்தை தங்கள்மேல் சுமக்கிறார்கள் (எசே 36:6).

கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக ஏளனமாய்ப் பேசின புறஜாதியார்மீது கர்த்தருடைய கோபம் வருகிறது. கர்த்தருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவர் கனமும் மகிமையுமுள்ளவர். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கிருபையாய் இரங்குகிறவர். அவர்களைப் பாதுகாக்கிறவர். புறஜாதி ஜனங்கள், இஸ்ரவேல் தேசத்தை அபகரித்து, தங்களுக்கு அதை சுதந்தரமாக்கிக்கொள்ள விரும்பியபோது, கர்த்தருடைய கோபம் அவர்களுக்கு விரோதமாக வருகிறது. கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக தம்முடைய அக்கினியான எரிச்சலினால் பேசுகிறார். கர்த்தருடைய கோபமான வார்த்தை புறஜாதியார்மீது பொதுவாக வந்தாலும், அது ஏதோமியர்மீது விசேஷமாய் வருகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதிகள் செய்யும் அவமானத்தை சுமந்தபடியினால், கர்த்தர் தம்முடைய எரிச்சலினாலும், உக்கிரத்தினாலும் அவர்களோடு பேசுகிறார் (எசே 36:6).

இதுவரையிலும் இஸ்ரவேல் வம்சத்தார் புறஜாதிகள் தங்களுக்கு செய்த அவமானத்தை சுமந்தார்கள். கர்த்தர் தம்முடைய கரத்தை புறஜாதிகளுக்கு விரோதமாக உயர்த்துவார். இனிமேல் இஸ்ரவேல் வம்சத்தாரைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகள் தங்களுடைய அவமானத்தை சுமப்பார்கள் (எசே 36:7).

கர்த்தர் தம்முடைய இஸ்ரவேலுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைச் சொல்லுகிறார். கர்த்தருடைய ஜனம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தர் அவர்கள்மீது இன்னும் கண்ணோக்கமாயிருக்கிறார் "இதோ, நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களைக் கண்ணோக்குவேன்; நீங்கள் பண்படுத்தப்பட்டு விதைக்கப்படுவீர்கள்" (எசே 36:9) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தத்தின் செய்தியைச் சொல்லுகிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் மலைகளுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லவேண்டும். இஸ்ரவேல் தேசமோ இப்போது பாழாக்கப்பட்ட அவாந்தர இடங்களாகவும், வெறுமையாய் விடப்பட்ட பட்டணங்களாகவும் இருக்கிறது. ஆனாலும் கர்த்தர் அவர்கள் பட்சத்திலிருக்கிறார். அவர்களைக் கண்ணோக்குகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரே கானானுக்கு சொந்தக்காரர்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய ஜனங்களே இஸ்ரவேலின் காணியாட்சிக்கு சொந்தமானவர்கள். இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் தங்களுக்கு சொந்தமான கானான் தேசத்திற்கு மறுபடியுமாய் திரும்பி வருவார்கள். "என் ஜனமாகிய இஸ்ரவேல், கானான் தேசத்திற்கு சமீபமாய் வந்துவிட்டார்கள்" (எசே 36:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் உங்கள் கொப்புகளை விட்டு, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு உங்கள் கனிகளைக் கொடுப்பீர்கள்; அவர்கள் சமீபமாய் வந்துவிட்டார்கள்" (எசே 36:8).

இஸ்ரவேல் புத்திரர் பல தேசங்களுக்கும் சிதறிப்போயிருந்தாலும், அவர்கள் மறுபடியுமாய் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள்.

"நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 31:16,17).

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்திற்கு திரும்பி வரும் காலம் நெருங்கிவிட்டது. அந்தக் காலமும் சமீபமாயிருக்கிறது. அவர்களும் இஸ்ரவேலுக்கு சமீபமாய் வந்துவிட்டார்கள். இஸ்ரவேலின் மலைகள் இப்போது பாழாக்கப்பட்டிருக்கிறது. அது அவாந்தர இடங்களாயிருக்கிறது. இனிமேல் மனுஷருடைய கால்கள் இஸ்ரவேல் தேசத்தின்மீது நடக்கும். இஸ்ரவேல் வம்சத்தாரும் தங்கள் தேசத்தின்மீது நடந்துபோவார்கள். "நான் உங்கள்மேல் என் ஜனமாகிய இஸ்ரவேலின் மனுஷரை நடமாடப்பண்ணுவேன்" (எசே 36:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்தின்மீது, யாத்திரிகர்களைப் போல நடந்துபோகமாட்டார்கள். அவர்கள் கானான் தேசத்திற்கு சொந்தக்காரர்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தை கையாளுவார்கள்.

கர்த்தர் இங்கு இஸ்ரவேல் தேசத்தைப்பற்றிச் சொல்லுவது பரமகானானுக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருமே பரமகானானுக்கு சொந்தக்காரர்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பரமகானானுக்குள் சந்தோஷமாய்ப் பிரவேசிப்பார்கள்.

கானான் தேசம் இப்போது பாழாக்கப்பட்ட அவாந்தர இடங்களாயிருக்கிறது. அது வெறுமையாய் விடப்பட்ட பட்டணங்களாயிருக்கிறது. விளைச்சல் நிலங்களெல்லாம் விதைப்பாடில்லாமல் தரிசாய்க் கிடக்கிறது. இது இஸ்ரவேல் தேசத்திற்கு ஓய்வு வருஷமாகும். இஸ்ரவேல் தேசம் விதைப்பும் அறுப்புமில்லாமல், பல வருஷங்களாக ஓய்ந்திருந்தது. இப்போது ஓய்வு வருஷகாலம் முடிவு பெற்றது. இனிமேல் இஸ்ரவேல் தேசத்திலுள்ள விளைச்சல் நிலங்களெல்லாம் பண்படுத்தப்பட்டு விதைக்கப்படும். இஸ்ரவேல் மலைகள், கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு தங்கள் கனிகளைக் கொடுக்கும். விதைக்கப்பட்ட விளைநிலத்திலிருந்து நல்ல அறுவடை கிடைக்கும்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்தில் வந்து குடியேறுவார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சமாகிய மனுஷர் யாவரையும் வர்த்திக்கப்பண்ணுவார். இஸ்ரவேலின் பட்டணங்கள் குடியேற்றப்படும். அவாந்தரமான ஸ்தலங்கள் கட்டப்படும் (எசே 36:10).

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின்மேல் மனுஷரையும் மிருகஜீவன்களையும் பெருகிப் பலுகும்படி வர்த்திக்கப்பண்ணுவார்; பூர்வநாட்களில் அவர்கள் இருந்த நிலைமையில் கர்த்தர் அவர்களை ஸ்தாபிப்பார். அவர்களுடைய முந்தின சீரைப்பார்க்கிலும் அவர்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வார்; அதினால் அவர்கள், இஸ்ரவேலின் பரிசுத்தரை கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் (எசே 36:11).

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு பூர்வகாலங்களில் ஏராளமான நன்மைகளைச் செய்திருக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு இப்போது செய்கிற நன்மைகள், பூர்வகாலத்து நன்மைகளைவிட பெரிதாயிருக்கும். கர்த்தர் இஸ்ரவேல் வீட்டார் எல்லோரையும் கானான் தேசத்திற்கு மறுபடியும் அழைத்து வருவார்.

"நான் உங்கள்மேல் இஸ்ரவேல் வம்சமாகிய மனுஷர் யாவரையும் வர்த்திக்கப்பண்ணுவேன்" (எசே 36:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "கர்த்தர் இஸ்ரவேல் வம்சமாகிய மனுஷர் யாவருடைய ஆவியையும், இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வருமாறு ஏவுவார்" என்பது பொருளாகும். கர்த்தர் அவர்களுடைய ஆவியை ஏவுவார். அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள்.

இந்தப் பூமியில் கர்த்தர் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். கர்த்தருடைய ராஜ்யம் வளரும் ராஜ்யம். அதுபோலவே, கர்த்தருடைய சபையும் வளரும் சபையாகயிருக்கிறது. கர்த்தருடைய சபை சிறிதுகாலம் குறைவுபட்டிருக்கலாம். அதன் வளர்ச்சி குறைவாகயிருக்கலாம். சபையின் வளர்ச்சிக்கு பல தடைகள் வரலாம். சபைக்கு எப்படிப்பட்ட பிரச்சனைகள் வந்தாலும், கர்த்தருடைய கிருபையினால், அவருடைய சபை வளரும். அது செழிப்பாயிருக்கும்.

இஸ்ரவேல் தேசத்திலே பல வருஷங்களாக நிந்தையும், உபத்திரவங்களும், வேதனைகளும் அதிகமாயிருந்தது. புறஜாதியாரின் வேவுகாரர்கள் இஸ்ரவேல் தேசத்தை வேவுபார்த்து, அவர்களுக்கு தீங்கு உண்டுபண்ணினார்கள். இஸ்ரவேல் தேசத்தில் கல்தேயர்கள் தங்கள் பட்டயத்தோடு வந்தார்கள். அவர்கள் யூதாதேசத்திலும், எருசலேமிலும் தங்கள் கண்களில் தென்பட்டவர்களையெல்லாம் பட்டயங்களினால் வெட்டினார்கள். பட்டயத்திற்கு தப்பினவர்கள் பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் செத்துப்போனார்கள். இஸ்ரவேல் தேசம் தன்னுடைய ஜனங்களை மொத்தமாய் சாகக்கொடுத்தது.

இஸ்ரவேல் தேசத்திற்கு இதுவரையிலும் இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வந்துவிட்டது. இப்போது கர்த்தர் அவர்கள் பட்சத்திலிருக்கிறார். அவர்களை தம்முடைய கிருபையினால் கண்ணோக்கிப் பார்க்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின் மனுஷரையும் மிருகஜீவன்களையும் பெருகிப் பலுகும்படி வர்த்திக்கப்பண்ணுகிறார். இஸ்ரவேல் தேசம் கர்த்தருடைய ஜனத்திற்கு சுதந்தரமாயிருக்கும். இனிமேல் இஸ்ரவேல் வம்சத்தார், தங்களுடைய ஜனத்தை சாகக்கொடுக்கமாட்டார்கள் (எசே 36:12). சத்துருக்கள் இனிமேல் இஸ்ரவேல் மனுஷரை பட்சிக்கமாட்டார்கள். இஸ்ரவேல் தேசம் தன்னுடைய மனுஷரை ஏராளமாய்ப் பட்சித்துப்போட்டது. அது இனிமேல் மனுஷரை பட்சிப்பதுமில்லை, தன் ஜனங்களை சாகக்கொடுப்பதுமில்லை (எசே 36:14).

இஸ்ரவேல் தேசத்தில் மறுபடியும் சமாதானம் நிரம்பியிருக்கும். கர்த்தர் கானான் தேசத்திலுள்ள பட்டணங்களை திரும்பவும் கட்டுகிறார். அந்தப் பட்டணங்களில் யூதர்கள் குடியேறுகிறார்கள். அவாந்தரமான ஸ்தலங்களெல்லாம் கட்டப்படுகிறது.

கர்த்தர் இதுவரையிலும் இஸ்ரவேல் வம்சத்தார்மீது கோபமாயிருந்தார். தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு கொடுத்தார். இதனால் அவர்களுக்கு வேதனைகளும், துன்பங்களும் உண்டாயிற்று. இஸ்ரவேல் வம்சத்தாரில் அநேகர் செத்துப்போனார்கள். கர்த்தரோ இப்போது மறுபடியும் இஸ்ரவேல் வம்சத்தாருடைய பட்சத்திலிருக்கிறார். அவர்களை தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் கண்ணோக்குகிறார்.

"நான் இனிமேல் புறஜாதிகள் செய்யும் அவமானத்தை உன்னிடத்திலே கேட்கப்பண்ணுவதுமில்லை, நீ ஜனங்களின் நிந்தையை இனிமேல் சுமப்பதுமில்லை; நீ இனிமேல் உன் ஜாதிகளைச் சாகக்கொடுப்பதுமில்லை" (எசே 36:15) என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களே அவர்களுடைய நிந்தைகளுக்கும், அவமானங்களுக்கும் அடிப்படை காரணம். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை சுத்திகரிக்கிறார். அவர்களுடைய இருதயங்களை புதுப்பிக்கிறார்.

கானான் தேசத்திலே யூதர்களுடைய பாவங்களெல்லாம் நீங்கிப்போகிறது. இதன் நிமித்தமாய் இப்போது இஸ்ரவேல் தேசத்திற்கு சமாதானமும், ஆறுதலும், ஆசீர்வாதமும் உண்டாயிற்று. கர்த்தர் இனிமேல் தம்முடைய இஸ்ரவேல்மீது கோபமாயிருக்க மாட்டார். புறஜாதிகள் செய்யும் அவமானத்தை கர்த்தர் இனிமேல் அவர்களிடத்தில் கேட்கப்பண்ணவுமாட்டார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு பிரியமான ஜனமாயும், பிரயோஜனமான ஜனமாயும் இருப்பார்கள். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஜீவிப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார்
எசே 36:16-24

எசே 36:16. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 36:17. மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சுயதேசத்திலே குடியிருக்கையில் அதைத் தங்கள் நடக்கையினாலும் தங்கள் கிரியைகளினாலும் தீட்டுப்படுத்தினார்கள்; அவர்களுடைய நடக்கை என் முகத்துக்கு முன்பாக தாரஸ்திரீயின் தீட்டைப்போல் இருந்தது.

எசே 36:18. ஆகையினால் தேசத்திலே அவர்கள் சிந்தின இரத்தத்தினிமித்தமும், அதை அவர்கள் தங்கள் நரகலான விக்கிரகங்களால் தீட்டுப்படுத்தினதினிமித்தமும் நான் என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றி,

எசே 36:19. அவர்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்தேன்; தேசங்களில் தூற்றிப்போடப் பட்டார்கள்; அவர்களுடைய நடக்கையின்படியேயும் அவர்களுடைய கிரியைகளின்படியேயும் அவர்களை நியாயந்தீர்த்தேன்.

எசே 36:20. அவர்கள் புறஜாதிகளிடத்தில் போனபோது அந்த ஜனங்கள் இவர்களைக்குறித்து: இவர்கள் கர்த்தருடைய ஜனங்கள், அவருடைய தேசத்திலிருந்து வந்தார்கள் என்று சொன்னதினால், இவர்கள் என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினார்கள்.

எசே 36:21. ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் தாங்கள்வந்து சேர்ந்த புறஜாதிகளிடத்திலே பரிசுத்தக்குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமாகவே இரங்குகிறேன்.

எசே 36:22. ஆதலால், நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் நிமித்தம் அல்ல, நீங்கள் வந்து சேர்ந்த புறஜாதிகளிடத்தில் பரிசுத்தக்குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமே நான் இப்படிச் செய்கிறேன்.

எசே 36:23. புறஜாதிகளின் நடுவே நீங்கள் பரிசுத்தக்குலைச்சலாக்கினதும் அவர்களுக்குள் உங்களால் பரிசுத்தக்குலைச்சலாக்கப்பட்டதுமான என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன்; அப்பொழுது புறஜாதிகள் தங்கள் கண்களுக்கு முன்பாக நான் உங்களுக்குள் பரிசுத்தம்பண்ணப்படுகையில், நான் கர்த்தர் என்பதை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 36:24. நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டுவருவேன்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாகவும், அவர்கள் அனுபவிக்கிற துன்பங்களினிமித்தமாகவும், கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சுயதேசத்தில் குடியிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். தங்கள் நடக்கையினாலும், கிரியைகளினாலும் இஸ்ரவேல் தேசத்தை தீட்டுப்படுத்தினார்கள்.

இஸ்ரவேல் தேசம் கர்த்தருக்கு பரிசுத்தமான தேசம். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை தம்முடைய ஜனத்திற்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அவர் தம்முடைய கானான் தேசத்திற்கு பட்சத்திலிருக்கிறார். அவர் கானான் தேசத்தின்மீது கண்ணோக்கமாயிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரோ தங்கள் நடக்கையினாலும், தங்கள் கிரியைகளினாலும் கானான் தேசத்தை தீட்டுப்படுத்துகிறார்கள். எது அசுத்தமாயிருக்கிறதோ, அது ஒருபோதும் பிரயோஜனப்படாது. தீட்டாயிருப்பதை நன்மையான காரியத்திற்கு பயன்படுத்த முடியாது.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு வரங்களைக் கொடுக்கிறார். கர்த்தருடைய கிருபைகளை நாம் தீட்டுப்படுத்தினாலோ, அல்லது தப்பிதமான காரியங்களுக்கு பயன்படுத்தினாலோ, அந்த வரங்களினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களை பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் பயன்படுத்தவேண்டும். கர்த்தர் நமக்கு கிருபையாகக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை தப்பிதமாகப் பயன்படுத்தினால், அதனால் ஒரு நன்மையும் உண்டாகாது.

கர்த்தருடைய ஆசீர்வாதங்களை நாம் தீட்டுப்படுத்தும்போது, நம்முடைய மனச்சாட்சியும் சுத்தமாயிராது. நம்முடைய பாவங்களினாலும், அசுத்தங்களினாலும் மனச்சாட்சியில் குற்றவுணர்வு உண்டாகும். நம்முடைய மனச்சாட்சி தீட்டுப்படும். நம்முடைய இருதயத்தில் சமாதானமோ ஆறுதலோ இருக்காது.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சுயதேசத்திலிருந்தபோது, தங்கள் பாவங்களினால், இஸ்ரவேல் தேசத்தைத் தீட்டுப்படுத்தினார்கள். "அவர்களுடைய நடக்கை என் முகத்துக்கு முன்பாக தூரஸ்திரீயின் தீட்டைப்போல் இருந்தது" (எசே 36:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கானான் தேசத்திலே குற்றமில்லாதவர்களின் இரத்தத்தை சிந்தினார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். தங்கள் நரகலான விக்கிரகங்களினால் அவர்கள் கானான் தேசத்தை தீட்டுப்படுத்தினார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வந்தது. கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றினார். அவர்களை புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்தார். அவர்கள் தேசங்களில் தூற்றிப்போடப்பட்டார்கள். கர்த்தர் அவர்களுடைய நடக்கையின்படியேயும் அவர்களுடைய கிரியைகளின்படியேயும் அவர்களை நியாயந்தீர்த்தார் (எசே 36:18,19).

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை தீட்டுப்படுத்தினார்கள். கர்த்தர் அவர்களை புறஜாதியாரின் கையில் ஒப்புக்கொடுத்தார். கல்தேயர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை சிறைப்பிடித்து, தங்கள் தேசத்தில் அடிமைப்படுத்தினார்கள். கர்த்தருடைய ஜனங்கள் புறஜாதிகளிடத்தில் போனபோது, கர்த்தருடைய நாமம் அவருடைய ஜனங்களால் மகிமைப்படவில்லை. அதற்கு பதிலாக இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் புறஜாதிகளிடத்தில் போனபோது, அவர்கள் இந்த ஜனங்களைக் குறித்து, "இவர்கள் கர்த்தருடைய ஜனங்கள், அவருடைய தேசத்திலிருந்து வந்தார்கள்" (எசே 36:20) என்று சொன்னார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சுயதேசத்திலே கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தகுலைச்சலாக்கினதுபோல, புறஜாதி தேசத்திலும், கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தகுலைச்சலாக்கினார்கள். அவர்கள் தங்களுடைய நடக்கையினாலும், தங்கள் கிரியைகளினாலும் தங்களையும் அசுத்தப்படுத்தினார்கள். கர்த்தருடைய நாமத்தையும் பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.

கர்த்தருக்கு சத்துருவாகயிருக்கிறவர்கள், கர்த்தருடைய நாமத்தை நிந்திப்பதற்கும், தூஷிப்பதற்கும் சமயம் பார்த்துக்கொண்டிருப்பார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய தேசத்திலே அடிமைப்பட்டிருக்கும்போது, புறஜாதி ஜனங்கள் இஸ்ரவேல் புத்திரரையும், அவர்களுடைய கர்த்தரையும் ஏளனமாய்ப் பேசுகிறார்கள். யூதர்கள் கர்த்தருடைய ஜனங்கள் என்றும், அவர்களுடைய தேவனால் அவர்களை பாதுகாக்க முடியவில்லை என்றும் புறஜாதியார் கர்த்தருக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைச் சொல்லுகிறார்கள்.

புறஜாதிகள் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினாலும், கர்த்தருடைய நாமம் எப்போதுமே பரிசுத்தமாகவே இருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்தம் மனுஷருடைய வார்த்தையினால் குறைந்துபோவதுமில்லை, குலைந்து போவதுமில்லை. கர்த்தர் தம்முடைய நாமத்தைப் பார்க்கும்போது, அதைப் பரிசுத்த நாமமாகவே பார்க்கிறார். புறஜாதியார்கள் தம்முடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினதினால், தம்முடைய நாமம் பரிசுத்த குலைச்சலாகிவிட்டதோ என்னும் சந்தேகம் கர்த்தருக்கு ஒருபோதும் வருவதில்லை.

கர்த்தர் தம்முடைய பரிசுத்த நாமத்தில் உறுதியாயிருக்கிறார். தம்முடைய பரிசுத்த நாமத்தினிமித்தமாகவே, கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நன்மை செய்கிறார். அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார்.

புறஜாதியார் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். "ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் தாங்கள்வந்து சேர்ந்த புறஜாதிகளிடத்திலே பரிசுத்தக் குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமாகவே இரங்குகிறேன்" (எசே 36:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்காக இரங்குகிறார். அவர் இஸ்ரவேல் வம்சத்தாரினிமித்தம் இரங்காமல், தம்முடைய பரிசுத்த நாமத்தினிமித்தமே அவர்களுக்கு இரங்குகிறார்.

"இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள்நிமித்தம் அல்ல, நீங்கள் வந்து சேர்ந்த புறஜாதிகளிடத்தில் பரிசுத்தக்குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமே நான் இப்படிச் செய்கிறேன்" (எசே 36:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய நாமத்தை புறஜாதிகளின் நடுவே பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். கர்த்தருடைய நாமம் மகத்தானது. அவர் மகத்துவமுள்ளவர். இஸ்ரவேல் வம்சத்தாரும், புறஜாதியாரும் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினாலும், கர்த்தரோ தம்முடைய மகத்தான நாமத்தை பரிசுத்தம் பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள், கர்த்தருடைய பரிசுத்தமான நாமத்தை, புறஜாதிகளுக்குள் பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். கர்த்தரோ தம்முடைய பரிசுத்தமான நாமத்தை, தம்முடைய ஜனங்களுக்குள் பரிசுத்தம் பண்ணுகிறார்.

கர்த்தர் தம்முடைய மகத்தான நாமத்தை பரிசுத்தம்பண்ணுவதை, புறஜாதிகள் எல்லோரும் தங்கள் கண்களால் காண்பார்கள். புறஜாதிகள் ஏற்கெனவே கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். கர்த்தர் தம்முடைய நாமத்தை பரிசுத்தம் பண்ணுவதை புறஜாதியார் தங்கள் கண்களால் பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரே, கர்த்தராகிய ஆண்டவர் என்பதை அறிந்துகொள்வார்கள் (எசே 36:23).

கர்த்தர் தம்முடைய பரிசுத்த நாமத்தினிமித்தமே, தம்முடைய நாமத்தை பரிசுத்தப்படுத்துகிறார். அவர் இஸ்ரவேல் வம்சத்தாரின் நிமித்தமாக தம்முடைய நாமத்தை பரிசுத்தம்பண்ணவில்லை. அல்லது புறஜாதிகளினிமித்தமாக தம்முடைய நாமத்தை பரிசுத்தம்பண்ணவில்லை. கர்த்தர் தம்முடைய பரிசுத்த நாமத்தினிமித்தமே, தம்முடைய நாமத்தை பரிசுத்தம் பண்ணுகிறார். கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தம்பண்ணுவதற்கு இஸ்ரவேல் வம்சத்தார் அபாத்திரராயும், தகுதியற்றவர்களாயும் இருக்கிறார்கள். கர்த்தருடைய நாமம் பரிசுத்தமானது. அது மகத்தான நாமம். கர்த்தருடைய நாமம் நித்திய பரிசுத்தமுள்ளது.

இஸ்ரவேல் ஆசீர்வதிக்கப்படும் எசே 36:25-38

எசே 36:25. அப்பொழுது நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள்.

எசே 36:26. உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்து போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.

எசே 36:27. உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்.

எசே 36:28. உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருந்து,

எசே 36:29. உங்கள் அசுத்தங்களையெல்லாம் நீக்கி, உங்களை இரட்சித்து, உங்கள்மேல் பஞ்சத்தைக் கட்டளையிடாமல், கோதுமையை வரவழைத்து, அதைப் பெருகப்பண்ணி,

எசே 36:30. நீங்கள் இனிமேல் ஜாதிகளுக்குள்ளே பஞ்சத்தினாலுண்டாகும் நிந்தையை அடையாதபடிக்கு, விருட்சத்தின் கனிகளையும் வயலின் பலன்களையும் பெருகப்பண்ணுவேன்.

எசே 36:31. அப்பொழுது நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங்களினிமித்தமும் உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களையே அரோசிப்பீர்கள்.

எசே 36:32. நான் இப்படிச் செய்வது உங்கள் நிமித்தமாக அல்லவென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார், இது உங்களுக்கு அறியப்பட்டிருக்கக்கடவது; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் வழிகளினிமித்தம் வெட்கி நாணுங்கள்.

எசே 36:33. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் உங்கள் அக்கிரமங்களையெல்லாம் நீக்கி, உங்களைச் சுத்தமாக்கும் காலத்திலே பட்டணங்களில் குடியேற்றுவிப்பேன்; அவாந்தரமான ஸ்தலங்களும் கட்டப்படும்.

எசே 36:34. பாழாக்கப்பட்ட தேசம் கடந்துபோகிற யாவருடைய பார்வைக்கும் பாழாய்க்கிடந்ததற்குப் பதிலாக பயிரிடப்படும்.

எசே 36:35. பாழாய்க்கிடந்த இத்தேசம், ஏதேன் தோட்டத்தைப் போலாயிற்றென்றும், அவாந்தரமும் பாழும் நிர்மூலமாயிருந்த பட்டணங்கள் அரணிப்பானவைகளும் குடியேற்றப்பட்டவைகளுமாய் இருக்கிறது என்றும் சொல்லுவார்கள்.

எசே 36:36. கர்த்தராகிய நான் நிர்மூலமானவைகளைக் கட்டுகிறேன் என்றும், பாழானதைப் பயிர் நிலமாக்குகிறேன் என்றும், அப்பொழுது உங்களைச் சுற்றிலுமுள்ள மீதியான ஜாதிகள் அறிந்துகொள்வார்கள்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதைச் செய்வேன்.

எசே 36:37. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்; மந்தை பெருகுகிறதுபோல் அவர்களில் மனிதரைப் பெருகப்பண்ணுவேன்.

எசே 36:38. பண்டிகை காலங்களில் எருசலேமில் பரிசுத்தம்பண்ணப்பட்டு வருகிற மந்தைகள் எப்படித் திரளாயிருக்கிறதோ, அப்படியே அவாந்தரமாயிருந்த பட்டணங்கள் மனுஷரின் மந்தையால் நிரம்பியிருக்கும்; அதினால் நான் கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள் என்று சொல் என்றார்.

கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்கள் பாவத்தில் விழுந்து கிடக்கிறார்கள். அவர்கள் அசுத்தமானவர்களாகவும், தீட்டுப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி குற்றமுள்ளதாயிருக்கிறது. இதனால் அவர்களுடைய நம்பிக்கை குறைந்துபோயிற்று. தங்களுடைய பாவங்களினிமித்தமாக கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்று இஸ்ரவேல் ஜனங்கள் வேதனையோடு இருக்கிறார்கள்.

கர்த்தர் தங்களை இரட்சிப்பார் என்னும் நம்பிக்கையும், தங்களுடைய தேசத்திலே தங்களை மறுபடியுமாக குடியேற்றுவார் என்னும் நம்பிக்கையும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு குறைந்து போயிற்று. அவர்கள் தங்கள் நம்பிக்கையில் சோர்ந்துபோயிருக்கிறார்கள்.

கர்த்தரோ தம்முடைய ஜனத்தை கண்ணோக்கிப் பார்க்கிறார். அவர்கள்மீது பட்சமாயிருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்ரவேல் வம்சத்தார் தகுதியுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், அவர்களுடைய பாவங்களை நீக்கி, அவர்களை சுத்தப்படுத்தி, தம்முடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்களைத் தகுதிப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலிருந்து பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனபோது, விக்கிரகாராதனைக்காரராயிருந்தார்கள். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த காலத்தில், அவர்களுடைய இருதயங்களில் ஆவிக்குரிய மாற்றமுண்டாயிற்று. யூதர்கள் சிறையிருப்பில் அநேக வேதனைகளையும், துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் விக்கிரகாராதனையிலிருந்து விடுதலைபெற்று வருவதற்கு, அவர்களுடைய துன்பங்களும் வேதனைகளும் அவர்களுக்கு உதவிசெய்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை பாபிலோன் தேசத்திலே சுத்தப்படுத்துகிறார். அவர்களைக் குணப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தர் அவர்களுக்கு கிருபையாக இரங்குகிறார். அவர்களுடைய இருதயங்களில் கர்த்தர் தம்முடைய நற்கிரியைகளை நடப்பிக்கிறார்.

கர்த்தர் சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார். கர்த்தருடைய ஜனம் தங்களுடைய பாவங்களுக்கு விலகி, சுத்திகரிக்கப்படுகிறார்கள். இதுவே பிரதான ஆசீர்வாதம். கர்த்தரே அவர்களை சுத்தம்பண்ணுகிறார்.

"நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள்" (எசே 36:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரிடம் பாவத்தின் கறை இருக்கிறது. அவர்கள் தங்கள் பாவங்களினால் தீட்டுப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது சுத்தமான ஜலம் தெளிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மீது தெளிக்கப்படுவதற்கு இது அடையாளமாயிருக்கிறது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம், நம்முடைய மனச்சாட்சியின்மீது தெளிக்கப்படும்போது, நம்முடைய மனச்சாட்சியிலுள்ள குற்றவுணர்வுகள் அகற்றப்பட்டு, அது சுத்திகரிக்கப்படுகிறது. இயேசுவின் இரத்தம் நம்முடைய மனச்சாட்சியை சுத்தப்படுத்துகிறது. பாவத்தின் கறைகளையும், குற்றவுணர்வுகளையும் கிறிஸ்துவின் இரத்தம் நம்மிடத்திலிருந்து நீக்கிப்போடுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய முழுஆத்துமாவையும் சுத்திகரிக்கிறது.

நாகமான் யோர்தான் நதியிலே ஏழுதரம் முங்கி எழுந்தபோது, அவனுடைய குஷ்டரோகம் நீங்கிற்று. அவன் சுத்தமானான். கர்த்தர் நம்மீது சுத்தமான ஜலம் தெளிக்கும்போது, நம்முடைய பாவங்களும், பாவக்கறைகளும், சாபங்களும் நம்மைவிட்டு நீங்கிப்போகும்.

கர்த்தர் நம்மைச் சுத்தப்படுத்தி, நமக்கு நவமான இருதயத்தைக் கொடுக்கிறார். நம்முடைய உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிடுகிறார். நம்முடைய மாம்சத்திலிருந்து கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை நமக்கு கொடுக்கிறார் (எசே 36:26). கர்த்தர் நமக்கு நவமான இருதயத்தைக் கொடுக்கும்போது, நம்முடைய ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றமுண்டாகும். நம்முடைய பழைய ஜீவியத்திற்கும், புதிய ஜீவியத்திற்கும் அதிகமான வேறுபாடுகள் இருக்கும்.

நம்முடைய இருதயம் கல்லான இருதயமாயிருக்கும்போது, அதற்கு உணர்வு இருக்காது. கர்த்தருடைய வார்த்தையையும், அதன் தாற்பரியத்தையும் நம்முடைய இருதயம் புரிந்துகொள்ளாது. கர்த்தருடைய விருப்பமும், சித்தமும், திட்டமும் என்ன என்பதை கல்லான இருதயம் சிந்தித்துப் பார்க்காது. கர்த்தர் நம்மை மாற்றவேண்டும் என்பதற்காக, நம்முடைய மாம்சத்திலிருந்து கல்லான இருதயத்தை எடுத்துப்போடுகிறார். இருதயமில்லாமல் ஜீவிக்க முடியாது. கர்த்தர் நமக்கு கல்லான இருதயத்திற்குப் பதிலாக சதையான இருதயத்தைக் கொடுக்கிறார். சதையான இருதயம் மென்மையானது. அது கர்த்தருடைய மனதைப் புரிந்துகொள்ளும். ஆவிக்குரிய காரியங்களை அறிந்துகொள்ளும். சதையான இருதயம் மென்மையாயிருப்பதினால், அது தேவனுடைய சித்தத்தோடு பூரணமாய் ஒத்துப்போகும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை சொல்லும்போது, "உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்" (எசே 33:27) என்று சொல்லுகிறார்.

நாம் பாவத்திற்கு அடிமையாயிருக்கும் போது, நம்மால் கர்த்தருடைய கட்டளைகளில் நடக்க முடியாது. கர்த்தருடைய நியாயங்களை கைக்கொள்ளவும், அவைகளின்படி செய்யவும் முடியாது. பாவத்திற்கு அடிமையாயிருக்கிறவர்கள் பாவமான காரியங்களை செய்வார்கள். நம்மிடத்தில் பாவம் இருக்கும்போது கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தையும் நம்மால் சரியாக செய்ய முடியாது.

கர்த்தர் தம்முடைய ஆவியை நமக்குள் வைக்கிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினால் நம்மை அபிஷேகம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். நாம் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்கவும், அவருடைய நியாயங்களைக் கைக்கொள்ளவும், அவைகளின்படி செய்யவும், பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பலப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மை முழுவதுமாய் ஆளுகை செய்கிறார். நன்மை செய்வதற்கு நம்மை தகுதிப்படுத்தி பெலப்படுத்துகிறார். நமக்குத் தேவையான தெய்வீக ஞானத்தைத் தருகிறார். பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய ஊழியத்தை, முழுமனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுபலத்தோடும் செய்வதற்கு நம்மைப் பலப்படுத்துகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கை கிருபையின் உடன்படிக்கையாகும். "உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்" (எசே 36:28) என்பதே கர்த்தருடைய உடன்படிக்கையின் சாரம்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை தம்முடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதிப்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபையினால் அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து, அங்கே மறுபடியுமாய் குடியிருப்பார்கள். இந்த தேசம் கர்த்தருடைய தேசம். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்களுக்கு கானான் தேசத்தை ஆசீர்வாதமாகக் கொடுத்தார். ஆசீர்வதிக்கப்பட்ட கானான் தேசத்திலே, இஸ்ரவேல் வம்சத்தார் குடியிருப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தம்முடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் அவர்களைத் தகுதிப்படுத்துகிறார். "நான் உங்கள் அக்கிரமங்களையெல்லாம் நீக்கி, உங்களைச் சுத்தமாக்கும் காலத்திலே பட்டணங்களில் குடியேற்றுவிப்பேன்; அவாந்தரமான ஸ்தலங்களும் கட்டப்படும்" (எசே 36:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபைகளை ஒழுங்கும் கிரமமுமாக நமக்கு கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களை நமக்கு கொடுப்பதற்கு முன்பாக, நம்முடைய அக்கிரமங்களையெல்லாம் நீக்கி, நம்மை சுத்தமாக்குகிறார். நாம் சுத்தமான பின்பு, கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களை நமக்கு கொடுக்கிறார். நாம் இழந்துபோன ஆசீர்வாதங்களை திரும்ப பெற்றுக் கொள்வதற்கு முன்பாக, நம்முடைய அக்கிரமங்கள் எல்லாம் நீங்கி, நாம் சுத்திகரிக்கப்படுவது மிகவும் அவசியமாயிருக்கிறது.

கர்த்தர் நம்முடைய அசுத்தங்களையெல்லாம் நீக்கிய பின்பு, நம்மை தாராளமாய் ஆசீர்வதிக்கிறார். "உங்கள் அசுத்தங்களையெல்லாம் நீக்கி, உங்களை இரட்சித்து, உங்கள்மேல் பஞ்சத்தைக் கட்டளையிடாமல், கோதுமையை வரவழைத்து, அதைப் பெருகப்பண்ணி, நீங்கள் இனிமேல் ஜாதிகளுக்குள்ளே பஞ்சத்தினாலுண்டாகும் நிந்தையை அடையாதபடிக்கு, விருட்சத்தின் கனிகளையும் வயலின் பலன்களையும் பெருகப்பண்ணுவேன்" (எசே 36:29,30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடவேண்டும். அப்போது கர்த்தர், நம்முடைய அசுத்தங்களையெல்லாம் நீக்கி நம்மைச் சுத்திகரித்து, நம்மை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் தேசம் இப்போது பாழாக்கப்பட்ட தேசமாயிருக்கிறது. அந்த தேசத்தைக் கடந்துபோகிற யாவருடைய பார்வைக்கும் அது பாழாய்க்கிடக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை மறுபடியுமாய் ஆசீர்வதிக்கிறார். பாழாக்கப்பட்ட தேசம் கடந்துபோகிற யாவருடைய பார்வைக்கும் பாழாய்க்கிடந்ததற்குப் பதிலாக பயிரிடப்படும் (எசே 36:34).

இஸ்ரவேல் தேசத்தை கடந்துபோகிற யாவரும் கர்த்தருடைய ஆசீர்வாதமான கிரியைகளை தங்கள் கண்களால் பிரத்தியட்சமாய்க் காண்பார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபையான ஆசீர்வாதங்களுக்கு சாட்சி சொல்லுவார்கள்.

"பாழாய்க்கிடந்த இத்தேசம், ஏதேன் தோட்டத்தைப்போலாயிற்றென்றும், அவாந்தரமும் பாழும் நிர்மூலமாயிருந்த பட்டணங்கள் அரணிப்பானவைகளும் குடியேற்றப்பட்டவைகளுமாய் இருக்கிறது" (எசே 36:35) என்று இஸ்ரவேல் தேசத்தை கடந்துபோகிறவர்கள் சாட்சியாய்ச் சொல்லுவார்கள்.

தேவனுடைய ஆலயத்தில் ஜனத்திரள் கூட்டமாயிருப்பது பார்வைக்கு மகிழ்ச்சியாயிருக்கும். ஜனத்திரள் ராஜாவுக்கு மேன்மை. கர்த்தருடைய சபையில் திரளான ஆத்துமாக்கள் கூடிவருவது நம்முடைய பார்வைக்கு இனிமையாயிருக்கும். சபையில் ஏராளமான ஆத்துமாக்கள் கர்த்தரை ஏகோபித்து துதிப்பதைப் பார்க்கிறவர்கள், கர்த்தருடைய நாமத்தைப் போற்றிப்புகழுவார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபையுள்ள ஆசீர்வாதத்திற்கு சாட்சி சொல்லுவார்கள்.

கர்த்தர் தங்களை ஆசீர்வதிக்கும்போது, இஸ்ரவேல் வம்சத்தாரின் இருதயமும், மனச்சாட்சியும் உணர்த்தப்படும். அவர்கள் தங்களுடைய பழைய பாவங்களை நினைத்து வேதனைப்படுவார்கள். "அப்பொழுது நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங்களினிமித்தமும் உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களையே அரோசிப்பீர்கள்" (எசே 36:31) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தாங்கள் பாவிகளாகயிருந்தாலும், தங்களுடைய மார்க்கங்கள் பொல்லாததாயிருந்தாலும், கர்த்தர் தங்களை ஆசீர்வதிப்பதை இஸ்ரவேல் வம்சத்தார் உணருவார்கள். தங்கள் பாவமான வழிகளினிமித்தம் வெட்கி நாணுவார்கள். கர்த்தர் நிர்மூலமானவைகளை கட்டுகிறார் என்றும், பாழானதை பயிர்நிலமாக்குகிறார் என்றும் இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்து கொள்வார்கள். அவர்கள் மாத்திரமல்ல, அவர்களைச் சுற்றிலுமுள்ள புறஜாதிகளும், கர்த்தரைப்பற்றி அறிந்துகொள்வார்கள் (எசே 36:36).

கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்ரவேல் வம்சத்தாரிடம் எந்தத் தகுதியும், எந்த நன்மையும் காணப்படவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் நற்கிரியைகளைப் பார்த்து அவர்களை ஆசீர்வதிக்கவில்லை. அவர்கள் செய்த நல்ல காரியங்களுக்கு ஈடாக, கர்த்தர் இந்த நன்மையான ஈவுகளை அவர்களுக்கு கொடுக்கவில்லை. அவர்களுடைய ஜெபங்களுக்கு பதில் கொடுக்கும் வண்ணமாகவே கர்த்தர் அவர்களை இவ்வாறு ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய நன்மையான ஈவுகளைப் பெற்றுக்கொள்ளும் போது, இவையெல்லாம் கர்த்தருடைய சுத்த கிருபை என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தங்களுடைய சுயபுத்தியினாலோ, சுயபக்தியினாலோ, தாங்கள் செய்கிற நற்கிரியைகளினாலோ, கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, தங்களுக்கு தகுதியிருக்கிறது என்று இறுமாப்பாய் நினைக்கக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் செய்த நன்மைகளைவிட அவர்கள் செய்த தீமைகளே அதிகம். கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை விசாரித்தால், அவர்களுக்கு தண்டனை மாத்திரமே கிடைக்கும். ஆனால், கர்த்தரோ அவர்களுடைய தகுதியைப் பார்க்காமல், தமது கிருபையினால் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் இதுவரையிலும் தங்களுடைய நற்கிரியைகளைப்பற்றி பெருமையோடு சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போதோ அவர்கள் தங்களுடைய பொல்லாத மார்க்கங்களையும், துர்க்கிரியைகளையும் பார்த்து, தங்கள் வழிகளினிமித்தம் வெட்கி நாணவேண்டும். கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, அவருடைய சமுகத்திலே விண்ணப்பம் பண்ணவேண்டும். "இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்" (எசே 36:37) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய துதிகள் பெருகும்போது கர்த்தருடைய கிருபையும் பெருகும். "மந்தை பெருகுகிறதுபோல் அவர்களில் மனிதரைப் பெருகப்பண்ணுவேன். பண்டிகை காலங்களில் எருசலேமில் பரிசுத்தம்பண்ணப்பட்டு வருகிற மந்தைகள் எப்படித் திரளாயிருக்கிறதோ, அப்படியே அவாந்தரமாயிருந்த பட்டணங்கள் மனுஷரின் மந்தையால் நிரம்பியிருக்கும்" (எசே 36:37,38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். அவர்கள் தம்மிடத்தில் ஏறெடுக்கிற விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்கிறார். அவர்களை தம்முடைய கிருபையினால் ஆசீர்வதிக்கிறார். அப்போது இஸ்ரவேலின் பரிசுத்தரே, தங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

37 அதிகாரம்

கர்த்தர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற தம்முடைய ஜனங்களை விடுவித்து, அவர்களை, அவர்களுடைய சொந்த தேசத்திலே மறுபடியும் குடியேற்றுவார். கர்த்தருடைய ஜனம் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் கானான் தேசத்திலே மறுபடியும் குடியேறுவார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசியினுடைய புஸ்தகத்தின் பின்பகுதியில், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தின் எளிமையான விசுவாசத்தை உற்சாகப்படுத்துகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வீட்டாரை கூட்டிச்சேர்ப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் எல்லோருமே தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள். இந்த சம்பவம் நடைபெறும்போது, வேறு இரண்டு சம்பவங்களும் நடைபெறும் என்று கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் இப்போது அந்நிய தேசத்தார் மத்தியிலே சிதறிப்போயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆவியில் சோர்ந்துபோயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய நிலமையை விவரிப்பதற்கு, எசேக்கியேலுக்கு ஒரு தரிசனத்தைக் காண்பிக்கிறார். கர்த்தருடைய ஜனத்தார் இப்போது பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே திரளாய்க் கிடக்கிற எலும்புகளைப் போல இருக்கிறார்கள். இந்த எலும்புகளெல்லாம் செத்துப்போனவர்களின் உலர்ந்த எலும்புகளாயிருக்கிறது. கர்த்தர் உலர்ந்துபோயிருக்கிற இந்த எலும்புகளையெல்லாம் ஒன்றாய்க் கூட்டிச்சேர்த்து உயிரடையச்செய்கிறார். உலர்ந்த எலும்புகளைப்பற்றிய தரிசனம் (எசே 37:1-10). இந்த தரிசனத்தின் வியாக்கியானம் (எசே 37:11-14).

இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது இரண்டு பிரிவாகப் பிரிந்திருக்கிறார்கள். யூதாவுக்கும் எப்பிராயீமுக்கும் ஏற்கெனவே பழைய பகை இருந்தது. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு வருவதற்கு முன்பாக, வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டு தேசங்களாகப் பிரிந்திருந்தார்கள். இப்போது அவர்கள் பாபிலோன்தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் அந்நிய தேசத்திலும் ஒரே இஸ்ரவேலாயிராமல், யூதா என்றும், எப்பிராயீம் என்றும் இரண்டாய்ப் பிரிந்து பகையோடிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் இரண்டு பிரிவினையை விளக்குவதற்கு, கர்த்தர் எசேக்கியேலிடம் இரண்டு கோல்களை எடுத்துக்கொள்ளுமாறு சொல்லுகிறார். அவர்கள் பாபிலோன் தேசத்திலே இரண்டு பிரிவாகப் பிரிந்திருந்தாலும், அவர்கள் கானான் தேசத்திற்குள் திரும்பி வரும்போது, ஒரே தேசமாவார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் மறுபடியும் சமஸ்த இஸ்ரவேலாக ஒன்றுசேருவார்கள். இரண்டு கோல்களும் ஒரே கோலாக ஒன்றோடொன்று இசையும் (எசே 37:15-22).

வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரும், தெற்கு யூதாதேசத்தாரும், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, விடுவிக்கப்பட்டு, கானான் தேசத்திலே ஒன்றாய்ச் சேருவது, புதிய ஏற்பாட்டு சபைக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய சபையிலே யூதரும் புறஜாதியாரும் இசைவாய்க் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். இயேசுகிறிஸ்துவுக்குள், அவருடைய சபையிலே, யூதரும் சமாரியரும் ஒன்றாய்ச் சேருவார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசி பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் வம்சத்தாரைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தைப்பற்றிய தீர்க்கதரிசன வார்த்தைகளையும் சொல்லுகிறார் (எசே 37:23-28).

உலர்ந்த எலும்புகளே
எசே 37:1-14

எசே 37:1. கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து, கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய், எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி,

எசே 37:2. என்னை அவைகளின் அருகே சுற்றி நடக்கப்பண்ணினார்; இதோ, பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே அந்த எலும்புகள் மகா திரளாய்க்கிடந்தது; அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது.

எசே 37:3. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு நான்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன்.

எசே 37:4. அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப்பார்த்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எசே 37:5. கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்.

எசே 37:6. நான் உங்கள்மேல் நரம்புகளைச்சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால்மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எசே 37:7. எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று; இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது.

எசே 37:8. நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது.

எசே 37:9. அப்பொழுது அவர் என்னைப்பார்த்து: நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம்உரை: மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்துவந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார்.

எசே 37:10. எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

எசே 37:11. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே; இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள்.

எசே 37:12. ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன்.

எசே 37:13. என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும் போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

எசே 37:14. என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி ஒரு பள்ளத்தாக்கின் வெட்டவெளியிலே உலர்ந்த எலும்புகளை தரிசனமாய்க் காண்கிறார். அவை மகாதிரளாய்க் கிடக்கிறது. அந்த எலும்புகள் உயிரடைந்து காலூன்றி, மகாபெரிய சேனையாய் நிற்கிறது. எசேக்கியேல் கண்ட இந்த தரிசனத்திற்கு, வேதபண்டிதர்கள் பல்வேறு விதமான வியாக்கியானங்களைச் சொல்லுகிறார்கள்.

எசேக்கியேல் கண்ட தீர்க்கதரிசனம் மரணத்திலிருந்து ஜீவனுக்கு உயிர்த்தெழுவதை பொதுவாகச் சொல்லுகிறது. வேதபண்டிதர்கள் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொல்லும்போது, மூன்றுவிதமான உயிர்த்தெழுதல்களைச் சொல்லுகிறார்கள். அவையாவன :

1. ஆத்துமாக்களின் உயிர்த்தெழுதல்.
2. சுவிசேஷ சபையின் உயிர்த்தெழுதல்.
3. சரீரத்தின் உயிர்த்தெழுதல்.

மனுஷருடைய ஆத்துமா பாவத்தினால் மரித்துப்போகிறது. மரித்துப்போன ஆத்துமா நீதியின் ஜீவனுக்கேதுவாக உயிர்த்தெழுகிறது. இந்த ஜீவன் பரிசுத்தமானது. இது ஆவிக்குரிய ஜீவன். இது பரலோகத்திற்குரிய ஜீவன். தேவனுடைய தெய்வீக கிருபையினால் பாவத்திற்கு மரித்துப்போன ஆத்துமா, நீதிக்கு பிழைக்கிறது. ஆகையினால் இந்த புதிய ஜீவன் தெய்வீக ஜீவனாயிருக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தை வல்லமையானது. கர்த்தருடைய வார்த்தை மரித்துப்போயிருக்கிற மனுஷருடைய ஆத்துமாவை உயிர்பெறச் செய்கிறது.

"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா 5:24,25).

சுவிசேஷ சபைக்கு பலவிதமான உபத்திரவங்கள் வருகிறது. சபை விடுதலையோடு செயல்படமுடியாமல், பல காரியங்கள் சபையின் ஊழியத்திற்கு தடையாகயிருக்கிறது. சபைக்கு உபத்திரவம் வருகிறது. உபத்திரவங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கிற சபை, உயிர்த்தெழுகிறது. புதிய ஜீவனைப்பெற்றுக் கொள்கிறது. உயிர்த்தெழுந்த சபை சமாதானத்தோடும், விடுதலையோடும் கர்த்தரை ஆராதிக்கிறது. கர்த்தருடைய ஊழியங்களை உற்சாகமாய்ச் செய்கிறது.

மகாநாளின்போது பரிசுத்தவான்களின் சரீரங்களெல்லாம் உயிர்த்தெழும். நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காக, விசுவாசிகளின் சரீரங்கள் உயிர்த்தெழும்.

கர்த்தருடைய கை எசேக்கியேலின் மேல் அமருகிறது. கர்த்தர் அவரை ஆவிக்குள்ளாக்கி, வெளியே கொண்டுபோகிறார். கர்த்தர் எசேக்கியேலை எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்துகிறார். அந்த எலும்புகளின் அருகே கர்த்தர் எசேக்கியேலை சுற்றி நடக்கப்பண்ணுகிறார். அந்த எலும்புகளெல்லாம் பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே மகாதிரளாய்க் கிடக்கிறது. அவையெல்லாம் மிகவும் உலர்ந்ததாயிருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலை ஏற்கெனவே பள்ளத்தாக்குக்கு புறப்பட்டுப்போகுமாறு சொன்னார். அங்கே கர்த்தர் எசேக்கியேலோடு பேசினார். கர்த்தர் இங்கு சொன்ன பள்ளத்தாக்குதான், எலும்புகள் நிறைந்த இந்தப் பள்ளத்தாக்காகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"அவ்விடத்திலே கர்த்தருடைய கரம் என்மேல் அமர்ந்தது; அவர்: நீ எழுந்திருந்து பள்ளத்தாக்குக்குப் புறப்பட்டுப் போ, அங்கே உன்னுடனே பேசுவேன் என்றார்" *(எசே 3:22).*

கர்த்தர் எசேக்கியேலை எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்குக்கு கொண்டு வருகிறார். இந்தப் பள்ளத்தாக்கில், எலும்புகளுக்கு நடுவே கர்த்தர் எசேக்கியேலை நிறுத்துகிறார். அங்கே அவரோடு பேசுகிறார். இந்த எலும்புகளெல்லாம் மரித்துப்போனவர்களுடைய எலும்புகள். இவை மிகவும் உஷ்ர்ந்து போயிருக்கிறது. இந்த எலும்புகளெல்லாம் பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே சிதறிக்கிடக்கிறது.

பூர்வகாலத்தில், இந்தப் பள்ளத்தாக்கிலே மிகப்பெரிய யுத்தம் நடைபெற்றிருக்கவேண்டும். யுத்தக்களத்தில் பட்டயத்தால் செத்துப்போனவர்களை, அடக்கம்பண்ணாமல் அப்படியே வெட்ட வெளியிலே போட்டிருக்கவேண்டும். மரித்த பிரேதங்களுடைய மாம்சமெல்லாம் அழுகிப்போயிருக்கவேண்டும். அந்தப் பிரேதங்களின் எலும்புகள் மாத்திரம் இப்போது மீதமாயிருக்கவேண்டும். இந்த எலும்புகளெல்லாம் இப்போது உலர்ந்துபோயிருக்கிறது. இவையெல்லாம் சிதறிப்போயிருக்கிறது. ஒவ்வொரு எலும்பும் வெட்ட வெளியிலே, அங்கங்கே தனித்தனியாய்க் கிடக்கிறது. ஒரு சரீரத்தின் கை எலும்பு ஒரு பக்கத்திலும், அதன் கால் எலும்பு வேறொரு பக்கத்திலும் கிடக்கிறது.

இந்த எலும்புகளெல்லாம் நீண்ட காலமாக வெட்ட வெளியிலே, சூரியனுடைய உஷ்ணத்திலும், காற்றிலும்பட்டு மிகவும் உலர்ந்துபோயிருக்கிறது. பாபிலோன் தேசத்திலே இருக்கிற யூதர்கள் இந்த எலும்புகளைப்போல இருக்கிறார்கள். அவர்கள் செத்துப்போனவர்களைப்போலவும், உலர்ந்த எலும்புகளைப்போலவும் இருக்கிறார்கள்.

இந்த எலும்புகளையெல்லாம் மறுபடியும் ஒன்றுசேர்த்து, உயிர்பெறச் செய்வது என்பது இயலாத காரியமாயிருக்கிறது. ஒரே சரீரத்தின் எலும்புகள்கூட, பல்வேறு இடங்களில் சிதறிப்போயிருக்கிறது. அந்த எலும்புகளையெல்லாம் ஒன்றாய்க் கூட்டிச்சேர்த்து, ஒரே சரீரத்தின் எலும்புகளாக சேர்ப்பது என்பதுகூட இயலாத காரியம்போல் இருக்கிறது. அப்படியே கூட்டிச்சேர்த்தாலும், அந்த எலும்புகளுக்கு உயிர்கொடுப்பது என்பது மொத்தமும் இயலாத காரியம் போலிருக்கிறது.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் உலர்ந்த எலும்புகளைப்போல சிதறிக்கிடக்கிறார்கள். இந்த எலும்புகளையெல்லாம் கூட்டிச்சேர்த்து, அவற்றிற்கு ஜீவனைக் கொடுப்பது என்பது மனுஷரால் கூடாத காரியம். மனுஷருடைய சொந்த முயற்சியினாலோ, மனுஷருடைய சொந்த வல்லமையினாலோ உலர்ந்துபோன எலும்புகளை கூட்டிச்சேர்த்து, அவற்றிற்கு உயிர்கொடுக்க முடியாது.

கர்த்தர் எசேக்கியேலிடம் "மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா" என்று கேட்கிறார்; அதற்கு எசேக்கியேல், "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர்" *(எசே 37:3)* என்று சொல்லுகிறார்.

மனுஷனுடைய தத்துவங்களும், மனுஷனுடைய கொள்கைகளும், கோட்பாடுகளும் உலர்ந்துபோன எலும்புகளுக்கு உயிர்கொடுக்க முடியாது. மனுஷன் எப்படித்தான் திட்டம் போட்டாலும், தன்னுடைய திட்டத்தினால் உலர்ந்துபோன எலும்புகளை ஒன்றுசேர்த்து, அதற்கு உயிர்கொடுக்கவே முடியாது.

இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் உலர்ந்த எலும்புகளைப்போல இருக்கிறார்கள். மனுஷருடைய சுயபுத்தியினாலோ, சுயசக்தியினாலோ சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுவிக்கவும் முடியாது. அவர்களை ஒன்றாய்க் கூட்டிச்சேர்த்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பவும் அழைத்து வந்து, அவர்களை அங்கே குடியேற்றவும் முடியாது.

இந்தக் காரியம் மனுஷரால் கூடும் என்றால், அவர்கள் ஏற்கெனவே விடுதலை பெற்று, தங்கள் தேசத்திற்கு திரும்பிப் போயிருப்பார்கள். இந்தக் காரியத்தை செய்ய அவர்களால் முடியவில்லை. ஆகையினால் அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள்.

அவர்கள் உலர்ந்த எலும்புகளைப்போல இருக்கிறார்கள். ஜீவனற்றவர்களாகயிருக்கிறார்கள். அவர்களால் தங்களுக்கு ஜீவனைக் கொடுக்க முடியும் என்றால், இப்போது அவர்கள் உயிரோடிருந்திருப்பார்கள். அவர்களால் தங்களுக்கு ஜீவனைக் கொடுக்க முடியவில்லை. ஆகையினால் அவர்கள் செத்துப் போனவர்களாகவும், உலர்ந்த எலும்புகளாகவும் இருக்கிறார்கள்.

கர்த்தர் எசேக்கியேலிடம் உலர்ந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்குமாறு சொல்லுகிறார் (எசே 37:4). அதன் பின்பு எசேக்கியேல் ஆவியை நோக்கியும் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும் (எசே 37:9). கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட படியே எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். எசேக்கியேல் தீர்க்கதரிசனமாய்ச் சொல்ல வேண்டிய வார்த்தைகளையும், கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார்.

"உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள். நான் உங்கள்மேல் நரம்புகளைச்சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால்மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் (எசே 37:4-6) என்பது எசேக்கியேல் சொல்ல வேண்டிய தீர்க்கதரிசன செய்தியாகும்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று; இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது (எசே 37:7).

எசேக்கியேல் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது (எசே 37:8).

கர்த்தருடைய வார்த்தையை எசேக்கியேல் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது உலர்ந்த எலும்புகள் அசைகிறது. ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்து கொள்கிறது. உலர்ந்த எலும்புகள்கூட கர்த்தருடைய வார்த்தையின் வல்லமையினால் அசையும். எசேக்கியேல் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர்" (எசே 37:3) என்று சொல்லி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணுவதும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதும் சேர்ந்து நடைபெறவேண்டும். அப்போது கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுவார்.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். அப்போது எலும்புகளெல்லாம் அசைகிறது. ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொள்கிறது. ஆனாலும் அந்த எலும்புகளில் ஆவியில்லாதிருக்கிறது. எசேக்கியேல் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுகிறார். அப்போது ஜீவஆவி அந்த எலும்புகளுக்குள் பிரவேசிக்கிறது. அவர்கள் உயிரடைகிறார்கள்.

கர்த்தர் எசேக்கியேலிடம், "நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை" என்று சொல்லுகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய கட்டளையின்படியே ஆவியை நோக்கி தீர்க்கதரிசனம் உரைக்கிறார். "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார்" (எசே 37:9) என்று எசேக்கியேல் ஆவியை நோக்கி தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

மரித்துப்போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு கர்த்தருடைய வார்த்தையும், ஜெபமும் சேர்ந்து கிரியை நடப்பிக்கவேண்டும். நம்முடைய பிரசங்கச் செய்தியைக் கேட்கிறவர்கள் மரித்த நிலமையிலிருந்தால், நம்முடைய பிரயாசமெல்லாம் வீணாய்ப்போகும். செத்துப்போனவர்கள் உலர்ந்த எலும்புகளாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய பிரசங்கச் செய்தியைக் கேட்பதற்கு செவிகள்கூட இருக்காது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டுமென்றால், அவர்களுக்கு ஜீவன் வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர், தம்முடைய வார்த்தையோடு சேர்ந்து கிரியை நடப்பிக்கவேண்டும் என்று, நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். "ஜீவஆவியானவரே வாரும்" என்று பரிசுத்த ஆவியானவரை நாம் அழைக்க வேண்டும். செத்துப்போன ஆத்துமாக்கள் உயிரடையும்படிக்கு, "இவர்கள்மேல் ஊதும்" என்று கருத்தாய் விண்ணப்பம்பண்ண வேண்டும். கர்த்தர் தம்முடைய ஜீவஆவியை ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போயிருக்கிறவர்கள்மீது ஊதுவார். அவர்கள் உயிரடைவார்கள்.

கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. நாம் பிரசங்கம்பண்ணாவிட்டாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் ஆத்துமாக்களை இரட்சிக்க முடியும். அதே வேளையில், நாம் எவ்வளவுதான் பிரசங்கம்பண்ணினாலும், கர்த்தருடைய கிருபை இல்லாமல் நம்மால் ஆத்துமாக்களை இரட்சிக்க முடியாது. நம்முடைய ஜெபத்தின் மூலமாகவே கர்த்தருடைய கிருபைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். கர்த்தர் எசேக்கியேலுக்கு தம்முடைய சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம் பண்ணவும் வேண்டும். பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபம்பண்ணவும் வேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆவியிலே உற்சாகமிழந்து, மரித்தவர்கள்போல இருக்கிறார்கள். சிறையிருப்பிலிருந்து விடுலை பெறுவோம் என்னும் நம்பிக்கையே அவர்களிடத்தில் இல்லை. கானான் தேசத்திற்கு மறுபடியும் போவோம் என்னும் நம்பிக்கை அவர்களிடத்தில் சிறிதுமில்லை. அவர்கள் உலர்ந்த எலும்புகளைப் போல ஜீவனில்லாமலிருக்கிறார்கள்.

ஆனாலும் எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் வம்சத்தாரிடம் சொல்லும்போது, அவர்கள் மரித்தவர்களாயிருந்தாலும், அவர்களுக்குள் ஒரு அசைவு உண்டாகிறது. எசேக்கியேல் பரிசுத்த ஆவியானவரிடத்தில் விண்ணப்பம் பண்ணும்போது, ஆவியானவர் தம்முடைய ஜீவசுவாசத்தை, இஸ்ரவேல் வம்சத்தார்மேல் ஊதுகிறார். அவர்கள் உயிரடைந்து காலூன்றி நிற்கிறார்கள்.

எசேக்கியேல் உயிருள்ள மனுஷருக்கு தீர்க்கதரிசனம் சொல்லவில்லை. அவர் பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே மகாதிரளாய் சிதறிக்கிடக்கிற உலர்ந்த எலும்புகளுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அவர் கர்த்தருடைய வார்த்தையை எலும்புகளுக்குச் சொல்லும்போது, அந்த எலும்புகளெல்லாம் தன் தன் எலும்போடே சேர்ந்து, மனுஷசரீரமாகிறது.

எசேக்கியேல் எலும்புகளிடம் சொல்லுகிற கர்த்தருடைய முதலாவது வார்த்தை, "நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள். நான் உங்கள்மேல் நரம்புகளைச்சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால்மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசே 37:5,6) என்பதாகும்.

எசேக்கியேல் கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே தீர்க்கதரிசனம் உரைத்துக்கொண்டிருக்கையில் அங்கு ஒரு இரைச்சல் உண்டாயிற்று. இந்த இரைச்சல் உலர்ந்த எலும்புகள் அசைவதினால் உண்டான இரைச்சல். எலும்புகளெல்லாமே அசைகிறது. ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொள்கிறது. பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே தனித்தனியாக கிடந்த எலும்புகளெல்லாம், இப்போது புதிய வடிவம் பெறுகிறது. அவை மற்ற எலும்புகளோடு சேர்ந்து மனுஷஎலும்புக்கூட்டின் ரூபமாகிறது.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்குமாறு நாம் அழைப்பு கொடுக்கும்போது மரித்துப்போன எலும்புகளும், உலர்ந்த எலும்புகளும் அசையும். கர்த்தர் இங்கு சொன்ன தீர்க்கதரிசனம் கோரேசு ராஜாவின் காலத்தில் நிறைவேறிற்று. அவன் சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விடுதலையை அறிவிக்கிறான். கர்த்தர் யூதர்களுடைய ஆவியை ஏவுகிறார். அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக ஆயத்தமாகிறார்கள்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கையில், உலர்ந்த எலும்புகள் அசைவதோடு மாத்திரமல்ல, ஒவ்வொரு எலும்பும், தன் தன் எலும்போடே சேர்ந்துகொள்கிறது. தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின்படி அவையெல்லாம் ஒன்றாய்ச் சேருகிறது. மனுஷனுடைய சரீரத்தில் ஏராளமான எலும்புகள் இருக்கும். அந்த எலும்புகளெல்லாம் பட்டயத்தால் வெட்டப்பட்டாலும், சரீரத்தின் ஒரு எலும்புகூட காணாமல் போகவில்லை.

எலும்புகளின் மனுஷனுடைய சரீர எண்ணிக்கை திரளாயிருக்கிறது. அவற்றில் ஒன்றுகூட காணாமல் போகாமல், எல்லா எலும்புகளும் தன் தன் எலும்புகளோடே சேர்ந்துகொள்கிறது. ஒவ்வொரு எலும்பும் தன்னுடைய சரீரத்தில் எந்த அவயவமாகயிருக்க வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருக்கிறது. ஒவ்வொரு எலும்புக்கும் எந்த எலும்போடே சேரவேண்டும் என்பதும் தெரிந்திருக்கிறது. பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே சிதறிக்கிடக்கிற எலும்புகளெல்லாம் அசைந்து, தன் தன் சரீரத்தோடே ஒன்றாய் இசைகிறது.

யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வரும்போது இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும். பாபிலோன் தேசம் மிகவும் பெரியது. அந்த தேசத்தில் ஏராளமான மாகாணங்கள் உள்ளது. பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன இஸ்ரவேல் வம்சத்தார், அந்த தேசத்தின் எல்லா மாகாணங்களிலும் சிதறிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களெல்லாம் பிரிந்துகிடக்கிறது. கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரம், பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்களெல்லோரும், தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். கானான் தேசத்திற்கு திரும்பி வருகிற யூதர்கள், தங்கள் தங்கள் குடும்பத்தாரோடு சேர்ந்துகொள்கிறார்கள்.

ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொள்ளும்போது அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று. மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது. அதுபோலவே கானான் தேசத்திற்கு திரும்பி வந்த யூதர்கள், தங்கள் குடும்பத்தாரோடு ஒன்றாய் இணைகிறார்கள். மறுபடியும் குடும்பமாக கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள். பல வருஷங்களாக பிரிந்து கிடந்தவர்கள் இப்போது குடும்பமாக கூடுகிறார்கள்.

"அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருகஜீவன்களையும் கொடுத்து, உதவிசெய்யவேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன்ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம்பண்ணுவித்தான்" (எஸ்றா 1:4).

எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய கட்டளையின்படியே உலர்ந்த எலும்புகளுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அப்போது ஒவ்வொரு எலும்பும் அசைகிறது. அந்த எலும்புகளெல்லாம் தன் தன் எலும்போடே சேர்ந்துகொள்கிறது. அவைகள் மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று. மேற்புறமெங்கும் தோலினால் மூடப்படுகிறது. ஆனாலும் அவைகளில் ஆவியில்லை. எலும்புகளுக்கு ஆவி தேவைப்படுகிறது. எலும்புகளெல்லாம் ஒன்று சேர்ந்து இப்போது சரீரமாகயிருக்கிறது. ஆனால் அது ஆவியில்லாத சரீரம்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப் போகும்போது, அவர்களுக்கு பலவிதமான கஷ்டங்களும், தடைகளும், பிரச்சனைகளும் வரும். இவையெல்லாவற்றையும் அவர்கள் மேற்கொள்ளவேண்டும். அவர்களிடத்தில் ஆவியும் தைரியமும் இருந்தால்தான், அவர்களால் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப் போகமுடியும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய கட்டளையின்படியே ஆவியை நோக்கி தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். "கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது" என்று எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை ஆவிக்கு சொல்லுகிறார். எசேக்கியேல் பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் எசேக்கியேலின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்கிறது. அவர்கள் உயிரடைகிறார்கள். அவர்கள் காலூன்றி மகாபெரிய சேனையாய் நிற்கிறார்கள் (எசே 37:10).

ஜீவஆவியானவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறார். ஆதியிலே தேவன் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார். அவனுடைய நாசியிலே தம்முடைய ஜீவசுவாசத்தை ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். கர்த்தர் ஆதியிலே தம்முடைய ஜீவசுவாசத்தை ஊதியதுபோலவே, கடைசி காலத்தில், பரிசுத்தவான்கள் உயிர்த்தெழும்போது, தம்முடைய ஜீவசுவாசத்தை அவர்கள்மேல் ஊதுவார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சோர்ந்து போயிருக்கிறார்கள். அவர்களுடைய ஆவியில் உற்சாகமில்லை. தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போக அவர்களிடத்தில் தெம்பும் பலனுமில்லை. அவர்களுடைய சோர்வுகளெல்லாம் நீங்கிப்போகவேண்டும். அவர்களுக்கு புதிய பெலனும், புதிய உற்சாகமும் கிடைக்கவேண்டும். அப்போது தான் அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக ஆயத்தமாவார்கள்.

பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் உயிரடைகிறார்கள். அது மாத்திரமல்ல, அவர்கள் காலூன்றி, மகாசேனையாய் நிற்கிறார்கள். அவர்கள் இப்போது ஜீவிக்கிற மனுஷர் மாத்திரமல்ல. அவர்கள் யுத்தம்பண்ணுகிற மகாபெரிய சேனையாகவும் இருக்கிறார்கள். அவர்கள் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கும் யுத்தவீரரைப்போல பலசாலிகளாகவும், பராக்கிரமசாலிகளாகவும் இருக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சோர்ந்துபோயிருக்கிறார்கள். அவர்கள் தங்களைப்பற்றிச் சொல்லும்போது, "எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம்" (எசே 37:11) என்று சொல்லுகிறார்கள். இந்த உலர்ந்த எலும்புகளெல்லாம், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தார். இவர்களே இப்போது ஜீவனில்லாதவர்களாக, உலர்ந்த எலும்புகளாகயிருக்கிறார்கள். "இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே" என்னும் வாக்கியம், வடக்கு இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்த பத்துக்கோத்திரத்தாரையும், தெற்கு யூதாதேசத்தைச் சேர்ந்த இரண்டு கோத்திரத்தையும் குறிக்கும்.

சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருக்கு பிரச்சனைகளுக்குமேல் பிரச்சனைகள் வருகிறது. அவர்களுடைய நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, அது ஒன்றுமில்லாமல் காணாமல் போய்விடுகிறது. அவர்கள் தங்கள் ஆவியில் சோர்ந்துபோயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் உற்சாகம் சிறிதுமில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் விசுவாசிகள் தங்களுடைய பிரச்சனைகளையே பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. தங்களைச் சுற்றிலுமிருக்கிற பாதகமான சூழ்நிலைகளையே பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. நாம் கர்த்தரை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும், அவருடைய தெய்வீக பராமரிப்புக்களையும் விசுவாசிக்கவேண்டும். கர்த்தருக்கேற்ற வேளையில், அவருக்கு சித்தமான காரியம் நடைபெறும் என்று, விசுவாசத்தோடு காத்திருக்கவேண்டும். சோர்ந்துபோய்விடக் கூடாது.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் ஆவியில் சோர்ந்துபோயிருக்கிறார்கள். தங்களுடைய எலும்புகள் உலர்ந்துபோயிற்று என்றும், தங்களுடைய நம்பிக்கையற்றுப் போயிற்று என்றும், தாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்றும் அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

கர்த்தர் சோர்ந்துபோயிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாரை கண்ணோக்கிப் பார்க்கிறார். அவர்களுக்கு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் எசேக்கியேலிடம், "ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்" (எசே 37:12) என்று சொல்லுகிறார். அவர்கள் தங்களுடைய ஜீவியகாலத்தின் கடைசி பகுதிக்கு வந்துவிட்டார்கள். ஆகையால் எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சீக்கிரமாய்ச் சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் காலம் முடிவடைந்தாலும், கர்த்தருடைய காலம் இனிமேல்தான் ஆரம்பமாகப்போகிறது. இதுவரையிலும் இஸ்ரவேல் வம்சத்தார் வேதனைகளை அனுபவித்த காலம். இனிமேல் கர்த்தர் அவர்களோடு கூடயிருந்து, அவர்களுக்கு உதவிசெய்யப்போகிற காலம்.

கர்த்தர் எசேக்கியேல் மூலமாய், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருக்கு தம்முடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். "இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன். என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள். என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன்" (எசே 37:12-14) என்று கர்த்தர் உரைக்கிறார்

ஒரே கோல்
எசே 37:15-28

எசே 37:15. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 37:16. மனுபுத்திரனே, நீ ஒரு கோலை எடுத்து, அதிலே யூதாவுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் புத்திரருக்கும் அடுத்தது என்று எழுதி; பின்பு வேறொரு கோலை எடுத்து, அதிலே எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் அடுத்த யோசேப்பின் கோலென்று எழுதி,

எசே 37:17. அவைகளை ஒரே கோலாகும்படி ஒன்றோடொன்று இசையச்செய், அவைகள் உன் கையில் ஒன்றாகும்.

எசே 37:18. இவைகளின் பொருள் இன்னதென்று எங்களுக்கு அறிவிக்கமாட்டீரோ என்று உன் ஜனத்தின் புத்திரர் உன்னிடத்தில் கேட்டால்,

எசே 37:19. நீ அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் கோத்திரங்களுக்கும் அடுத்த யோசேப்பின் கோலை எடுத்து, அதை யூதாவின் கோலோடே சேர்த்து, அவைகளை ஒரே கோலாக்குவேன்; அவைகள் என் கையில் ஒன்றாகும் என்கிறார் என்று சொல்.

எசே 37:20. சொல்லும்போது, நீ எழுதின கோல்கள் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக உன் கையில் இருக்கவேண்டும்.

எசே 37:21. நீ அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, நான் இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்கள் போயிருக்கும் ஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, சுற்றிலுமிருந்து அவர்களைச் சேர்த்து, அவர்களை அவர்கள் சுயதேசத்திலே வரப்பண்ணி,

எசே 37:22. அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்; அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை; அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை.

எசே 37:23. அவர்கள் இனித் தங்கள் நரகலான விக்கிரகங்களினாலும் தங்கள் அருவருப்புகளினாலும் தங்களுடைய சகல மீறுதல்களினாலும் தங்களைத் தீட்டுப்படுத்துவதுமில்லை; அவர்கள் குடியிருந்து பாவஞ்செய்த எல்லா இடங்களிலிருந்தும் நான் அவர்களை நீங்கலாக்கி இரட்சித்து, அவர்களைச் சுத்தம் பண்ணுவேன்; அப்பொழுது அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.

எசே 37:24. என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள்மேல் ராஜாவாக இருப்பார்; அவர்கள் எல்லாருக்கும் ஒரே மேய்ப்பர் இருப்பார்; அப்பொழுது அவர்கள் என் நியாயங்களில் நடந்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படியே செய்து,

எசே 37:25. நான் என் தாசனாகிய யாக்கோபுக்குக் கொடுத்ததும், உங்கள் பிதாக்கள் குடியிருந்ததுமான தேசத்திலே குடியிருப்பார்கள்; அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்; என் தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார்.

எசே 37:26. நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன்; அது அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருக்கும்; நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன்.

எசே 37:27. என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.

எசே 37:28. அப்படியே என் பரிசுத்தஸ்தலம் அவர்கள் நடுவிலே என்றென்றைக்கும் இருக்கும்போது, நான் இஸ்ரவேலைப் பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று ஜாதிகள் அறிந்துகொள்வார்கள் என்கிறார் என்று சொல் என்றார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்த பின்பு, அவர்களுக்கு ஏராளமான நன்மைகள் உண்டாகும். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு விசேஷித்த வாக்குத்தத்தங்களைச் சொல்லுகிறார். இந்த வாக்குத்தத்தங்களெல்லாம், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள், தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வரும்போது நிறைவேறும். அதேவேளையில் இந்த வாக்குத்தத்தங்கள் மேசியாவின் ராஜ்யத்திற்கும், சுவிசேஷத்தின் மகிமையான காலங்களுக்கும் அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது, அவர்கள் எப்பிராயீம் மனுஷர் என்றும், யூதா மனுஷர் என்றும் இரண்டாகப் பிரிந்திருக்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் ராஜ்யமும், தெற்கு யூதாராஜ்யமும், பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு தனித்தனியாக வந்தார்கள். இப்போது சிறையிருப்பிலே அவர்கள் தனித்தனியாகப் பிரிந்திருக்கிறார்கள். அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, அவர்கள் மறுபடியும் ஒன்றாய்ச் சேர்க்கப்படுவார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

இரண்டாய்ப்பிரிந்திருந்த இஸ்ரவேல் வம்சத்தார், கானான் தேசத்திலே, மறுபடியும் சமஸ்த இஸ்ரவேலாய் ஒன்றுசேருவார்கள். தாவீதின் காலத்திலும், சாலொமோனின் ஆட்சிக்காலத்திலும் இஸ்ரவேல் தேசம் சமஸ்த இஸ்ரவேலாக ஒன்றாயிருந்தது. சாலொமோனின் குமாரன் ரெகொபெயாமின் ஆட்சிக்காலத்தில், யெரொபெயாம் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தை தனியாகப் பிரித்து வடக்கு இஸ்ரவேல் ராஜ்யமாக்கினான். மீதமுள்ள இரண்டு கோத்திரத்தார் தெற்கு யூதாராஜ்யமாயிருந்தார்கள்.

இஸ்ரவேல் ராஜ்யத்திற்கும் யூதாராஜ்யத்திற்கும் இடையே எப்போதும் பிரச்சனைகளும், போட்டிகளும், சண்டைகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தது. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு வந்தபின்பும், அங்கேயும் அவர்கள் இரண்டு பிரிவாகப் பிரிந்திருந்தார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலும் அவர்கள் ஒன்றாய் இணையவில்லை.

இரண்டு பிரிவாகப் பிரிந்திருக்கிற இஸ்ரவேலையும் யூதாவையும் கர்த்தர் ஒன்றாய்ச் சேர்க்கிறார். அவர்கள் ஒன்றாய் இணைவதை கர்த்தர் ஒரு அடையாளத்தின் மூலமாக இங்கு விவரிக்கிறார்.

கர்த்தர் எசேக்கியேலிடம், " மனுபுத்திரனே, நீ ஒரு கோலை எடுத்து, அதிலே யூதாவுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் புத்திரருக்கும் அடுத்தது என்று எழுதி; பின்பு வேறொரு கோலை எடுத்து, அதிலே எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் அடுத்த யோசேப்பின் கோலென்று எழுதி, அவைகளை ஒரே கோலாகும்படி ஒன்றோடொன்று இசையச்செய், அவைகள் உன் கையில் ஒன்றாகும்" (எசே 37:16,17) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் இரண்டு கோலை எடுத்து, கர்த்தர் சொன்ன பிரகாரம், ஒவ்வொரு கோலிலும் எழுதவேண்டும். அதன் பின்பு அவர் அவ்விரண்டு கோல்களையும் ஒரே கோலாகும்படி, ஒன்றோடொன்று இசையச் செய்யவேண்டும். அவ்விரண்டு கோல்களும் எசேக்கியேலின் கையில் ஒன்றாய் இணையும்.

இதன் தாற்பரியம் என்னவென்றால், தெற்கு யூதா தேசமும், வடக்கு இஸ்ரவேல் தேசமும் கர்த்தருடைய கையில் ஒன்றாகும். இவ்விரண்டு தேசங்களும் கர்த்தருடைய கையில் சமஸ்த இஸ்ரவேல் தேசமாக ஒன்றாகும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி இரண்டு கோல்களையும் தன்னுடைய கையிலே எடுத்து, அதிலே கர்த்தர் சொன்ன பிரகாரம் எழுதி, அவைகளை ஒரே கோலாகும்படி ஒன்றோடொன்று இசையச் செய்வதை, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களெல்லோரும் பார்ப்பார்கள். அவர்கள் எசேக்கியேலிடம், இவைகளின் பொருள் இன்னதென்று எங்களுக்கு அறிவிக்கமாட்டீரோ" (எசே 37:17,18) என்று கேட்பார்கள்

எசேக்கியேல் அவர்களிடத்தில், "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் கோத்திரங்களுக்கும் அடுத்த யோசேப்பின் கோலை எடுத்து, அதை யூதாவின் கோலோடே சேர்த்து, அவைகளை ஒரே கோலாக்குவேன்; அவைகள் என்கையில் ஒன்றாகும் என்கிறார்" (எசே 37:19) என்று சொல்லவேண்டும்.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லும்போது, அவர் எழுதின கோல்கள், அவர்களுடைய கண்களுக்கு முன்பாக, அவர் கையிலிருக்கவேண்டும் (எசே 37:20).

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை, அவர்கள் போயிருக்கும் ஜாதிகளிடத்திலிருந்து அழைத்து வருவார். அவர்களெல்லோரும் அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை சுற்றிலுமிருந்து சேர்ப்பார். அவர்களுடைய சுயதேசத்திலே அவர்களை வரப்பண்ணுவார் (எசே 37:21).

கர்த்தர் அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவார்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்; அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை; அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை (எசே 37:22).

வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரும், தெற்கு யூதாதேசத்தாரும் இனிமேல் ஒரே ராஜ்யமாயிருப்பார்கள். அவர்கள் சமஸ்த இஸ்ரவேலாக இணைந்திருப்பார்கள். அவர்களுக்கு இனிமேல் தனித்தனியான நோக்கங்களோ, தனித்தனியான குறிக்கோள்களோ இருக்காது. அவர்களுக்கு வெவ்வேறு சிந்தனையும் இருக்காது. அவர்களுடைய திட்டங்களும், தீர்மானங்களும், குறிக்கோள்களும், சிந்தனைகளும் ஒன்றாகவே இருக்கும்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரும், தெற்கு யூதாதேசத்தாரும் இதுவரையிலும் இரண்டு வெவ்வேறு கோல்களாகயிருந்தார்கள். இந்தக் கோல்கள் ஒன்றுக்கொன்று முட்டிக்கொண்டு, மோதிக்கொண்டு, சண்டை போட்டுக் கொண்டிருந்தது. ஒன்றையொன்று அடித்துக் கொண்டது. ஒன்றையொன்று வாதித்தது. இப்போதோ இவ்விரண்டு தேசத்தாரும், கர்த்தருடைய கையில், சமஸ்த இஸ்ரவேலாக, ஒரே தேசமாகயிருக்கிறார்கள். இவர்கள் இனிமேல் ஒருவருக்கொருவர் ஆதரவாகயிருப்பார்கள். ஒருவரையொருவர் பலப்படுத்திக்கொள்வார்கள்.

கர்த்தர் யோசேப்பின் கோலை எடுத்து, அதை யூதாவின் கோலோடே சேர்ப்பார். அவைகளை ஒரே கோலாக்குவார். அவைகள் கர்த்தருடைய கையில் ஒன்றாகும். கர்த்தருடைய வல்லமையினால் இவ்விரண்டு தேசங்களும் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய மகிமைக்காக, இவ்விரண்டு தேசங்களும், கர்த்தருடைய கையில் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கும். கர்த்தருடைய மகிமையே இவர்களை இணைக்கிறது. கர்த்தருடைய கிருபையே இணைந்த இவர்களை மறுபடியும் பிரிந்துவிடாமல் இசைவாய்ப் சேர்த்திருக்கிறது.

சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த யூதர்கள், ஒரே ஜாதியாய் இணைக்கப்படுவார்கள். அவர்கள் அந்நிய தேசத்திலே ஒன்றாய்ப் பாடுகளை அனுபவித்தார்கள். தாங்கள் அனுபவித்த உபத்திரவங்களில், அவர்கள் பங்காளிகளாயிருந்தார்கள். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு வேதனைகளும், கஷ்டங்களும், நெருக்கங்களும் உண்டாயிற்று. அவர்களுக்கு வந்த பாடுகளும் உபத்திரவங்களும், பிரிந்திருந்த அவர்களை ஒன்றாய் இணைத்தது.

சூளையிலே உலோகங்களை உருக்குவார்கள். சூளையில் தனித்தனியாகயிருக்கும் உலோக தாதுக்களை உள்ளே போடுவார்கள். சூளையை சூடுபடுத்துவார்கள். சூளைக்குள்ளே போடப்பட்ட உலோக தாதுக்களெல்லாம் அக்கினியில் உருகி, ஒன்றாய் இணையும். அதுபோலவே, கர்த்தருடைய ஜனங்கள், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே தனித்தனியாக இருந்தார்கள். அவர்களுக்கு வேதனைகளும் உபத்திரவங்களும் வந்தபோது, உலோகங்கள் உருகுவதுபோல, அவர்களும் உருகி, ஒரே ஜாதியாய் இணைகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களை ஒரே ஜாதியாக்குவார். அவர்கள் எல்லோருக்கும் ஒரே ராஜா ராஜாவாகயிருப்பார். இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் ஒரே ராஜாவின் ஆளுகையின் கீழிருக்கும், ஒரே தேசத்து பிரஜைகளாயிருப்பார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த யூதர்கள், இதற்கு முன்பு வடக்கு இஸ்ரவேல் என்றும், தெற்கு யூதா என்றும் பிரிந்திருந்ததுபோல, இனிமேல் பிரிந்திருக்கமாட்டார்கள். அவர்கள் தங்கள் சொந்த தேசத்தில் ஒரே ஜாதியாயிருப்பார்கள். அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை. அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாக பிரிவதுமில்லை (எசே 37:22).

கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனம் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தில் பூரணமாய் நிறைவேறும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, இந்த தீர்க்கதரிசனத்தில் இங்கு சொல்லப்படுகிற ராஜா. இயேசுகிறிஸ்துவே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். ஆவிக்குரிய இஸ்ரவேலர் எல்லோரும், ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவுக்குள், ஒரே ஜாதியாய் ஒன்று சேருவார்கள்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போவதற்கு முன்பாக, அவர்கள் தங்கள் தேசத்தில் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், கர்த்தருடைய உடன்படிக்கையை மீறினார்கள். கர்த்தரைப் பின்பற்றாமல் நரகலான விக்கிரகங்களை பின்பற்றினார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி அருவருப்பான காரியங்களை செய்தார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் விக்கிரகங்களை ஆராதனை செய்து தங்களைத் தீட்டுப்படுத்தினார்கள். அவர்கள் குடியிருந்த எல்லா இடங்களிலும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தருடைய ஜனம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரின் விக்கிராராதனை அவர்களைவிட்டு நீங்கிப்போகிறது. பாபிலோன் தேசத்தில் ஏராளமான விக்கிரகங்கள் இருந்தாலும், சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், விக்கிரகங்களை பின்பற்றாமல் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள்.

யூதர்கள் எந்த இடங்களில் குடியிருந்து, விக்கிரகங்களை ஆராதித்து பாவம் செய்தார்களோ, அந்த இடங்களிலிருந்து கர்த்தர் அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார். அவர்களுக்கு சோதனையைக் கொடுக்கும் சூழ்நிலைகளிலிருந்து, கர்த்தர் அவர்களை வெளியேற்றுகிறார். கர்த்தர் அவர்களுடைய மனதை சுத்தம்பண்ணுகிறார். இனிமேல் அவர்கள் தங்கள் நரகலான விக்கிரகங்களினாலும், தங்கள் அருவருப்புக்களினாலும், தங்கள் மீறுதல்களினாலும், தங்களை தீட்டுப்படுத்தமாட்டார்கள் (எசே 37:23).

கர்த்தர் தம்முடைய ஜனத்தை சுத்தம்பண்ணுகிறார். அவர்கள் சுத்தமாகிறார்கள். அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களெல்லோரும் கர்த்தருடைய தொழுவத்திலுள்ள ஆடுகளாயிருப்பார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அவர்களுக்கு ராஜாதி ராஜாவாகவும், நல்ல மேய்ப்பராகவும் இருப்பார்.

கர்த்தருடைய தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள்மேல் ராஜாவாக இருப்பார்; அவர்கள் எல்லாருக்கும் ஒரே மேய்ப்பர் இருப்பார்; அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய நியாயங்களில் நடந்து, கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படியே செய்வார்கள் (எசே 37:24).

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து அங்கே சமாதானமாய் குடியிருப்பார்கள். கானான் தேசம் கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபுக்கு கொடுத்த தேசம். இந்த தேசத்தில் இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்கள் குடியிருந்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற கர்த்தருடைய பிள்ளைகள், இந்த தேசத்திலே குடியிருப்பார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் வம்சத்தாரும், அவர்கள் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்; கர்த்தருடைய தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார் (எசே 37:25).

கானான் தேசம் இஸ்ரவேல் வம்சத்தாருடைய முற்பிதாக்களின் தேசம். ஆகையினால் இது பூர்வசந்ததி பரம்பரையாக, இஸ்ரவேல் வம்சத்தாருக்கே சொந்தமானது. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடே சமாதான உடன்படிக்கை செய்வார்; அது அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருக்கும்; கர்த்தர் அவர்களை நிலைப்படுத்துவார். அவர்களை வர்த்திக்கப்பண்ணுவார். கர்த்தர் அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பார் (எசே 37:26).

கர்த்தருடைய வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும், கர்த்தர் அவர்கள் தேவனாயிருப்பார். அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள் (எசே 37:27). சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற இஸ்ரவேல் வம்சத்தார், இஸ்ரவேல் தேசத்திலே குடியிருப்பார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தை உடன்படிக்கையின் மூலமாய் பெற்றிருக்கிறார்கள். இது பூர்வகாலத்து உடன்படிக்கை.

கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபுக்கு, பூர்வகாலத்திலே கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் யாக்கோபின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். யாக்கோபின் ஆசீர்வதங்களுக்கு சுதந்தரவாளிகள். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களும் இஸ்ரவேல் தேசத்தில் குடியிருப்பார்கள். அவர்களுடைய பின்சந்ததியாரும் இந்த தேசத்தில் குடியிருப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் இஸ்ரவேல் தேசத்தில் குடியிருப்பது அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம். அதைவிட பெரிய ஆசீர்வாதம், இஸ்ரவேல் தேசத்தில் கர்த்தர் அவர்களோடுகூட குடியிருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் இஸ்ரவேல் வம்சத்தார் நடுவில் என்றென்றைக்கும் இருக்கிறது. கர்த்தர் அவர்கள் நடுவிலே வாசம்பண்ணுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியம் ஆறுதலாயும் சமாதானமாயும் இருக்கிறது. கர்த்தருடைய பரிபூரண கிருபைகள் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது.

கர்த்தருடைய வாசஸ்தலம் இஸ்ரவேல் வம்சத்தார் நடுவிலிருக்கிறது. இதனால் இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகளுக்கு கர்த்தருடைய பிரமாணங்களையும், கட்டளைகளையும் கற்றுக்கொள்வதற்கு அதிக வாய்ப்பு கிடைக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே அவருடைய வார்த்தையும் சத்தியமும் போதிக்கப்படும். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரைப்பற்றி உபதேசிக்கப்படுவார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரோடு உடன்படிக்கையிலிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு உடன்படிக்கையின் பிள்ளைகள். கர்த்தருக்கும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் நெருங்கிய ஐக்கியம் இருக்கும்போது, அவர்களுக்கு நடுவே இருக்கும் உடன்படிக்கையும் உறுதியாயிருக்கும்.

கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேலை பரிசுத்தம்பண்ணுகிறார். கர்த்தருடைய இஸ்ரவேலும், இஸ்ரவேலின் கர்த்தரும் நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார்கள். புறஜாதியார் கர்த்தருடைய கிரியைகளை பார்க்கிறார்கள். கர்த்தரே இஸ்ரவேலை பரிசுத்தம் பண்ணுகிறவர் என்பதை புறஜாதிகள் அறிந்துகொள்கிறார்கள். தம்முடைய பரிசுத்த ஸ்தலம் இஸ்ரவேல் வம்சத்தார் நடுவிலிருப்பதினால், கர்த்தர் இஸ்ரவேலை பரிசுத்தம்பண்ணுகிறார் (எசே 37:28).

38 அதிகாரம்

கோகும், மாகோகும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். இந்த அதிகாரத்திலும், இதற்கு அடுத்த அதிகாரத்திலும் கோகுக்கு விரோதமாக கர்த்தர் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர்களுடைய திட்டங்கள் தோற்றுப்போகும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேல் ஜனங்கள், தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து குடியேறுகிறார்கள். அதன் பின்பு இந்த சம்பவம் நடைபெற்றிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

சீரியாவின் ராஜாக்கள் கானான் தேசத்திலே மறுபடியும் குடியேறிய இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். கர்த்தருடைய ஜனத்தார் இத்தனை வருஷங்களாக சிறையிருப்பிலிருந்தாலும், அவர்களுக்கு அந்நிய தேசத்தார் மூலமாய் தொடர்ந்து உபத்திரவங்களும், நெருக்கங்களும் வருகிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்தில் சமாதானமாய் குடியிருப்பார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணினார். ஆனால் சத்துருக்களோ அவர்களுக்கு விரோதமாய் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம், இந்த உலகத்தில் அவர்களுக்கு உபத்திரவங்கள் உண்டு என்று சொன்னார். ஆனாலும் அவர்கள் திடன்கொள்ளவேண்டும். சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தர் இந்த உலகத்தை ஜெயித்தார். கர்த்தரை நம்புற நாமும் இந்த உலகத்தை ஜெயிப்போம்.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் பொதுவாக யூதமார்க்கத்தில், யூதர்கள் மத்தியில் நிறைவேறுகிறது. புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களோ கர்த்தருடைய சுவிசேஷ சபையில் நிறைவேறுகிறது.

மாகோகு இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வருகிறான். அவனுடைய சேனை பெரிதாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாய் மாகோகு தன்னுடைய முழுஇராணுவத்தையும் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறான் (எசே 38:4-7). கோகு, மகோகு ஆகியோரின் திட்டம் (எசே 38:8-13). இந்தத் திட்டத்தில் கர்த்தருடைய பங்கு (எசே 38:4).

இஸ்ரவேல் தேசத்தின்மீது வரும் பயங்கரம் (எசே 38:15,16,18-20). இஸ்ரவேல் தேசத்திற்கு கர்த்தருடைய தெய்வீக பாதுகாப்பு (எசே 38:2-4,14). தம்முடைய ஜனத்திற்கு விரோதமாக வரும் சத்துருக்களை கர்த்தர் தண்டிக்கிறார் (எசே 38:21-23).

கோகே
எசே 38:1-13

எசே 38:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எசே 38:2. மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து,

எசே 38:3. சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருவேன்.

எசே 38:4. நான் உன்னைத் திருப்பி, உன் வாயில் துறடுகளைப் போட்டு, உன்னையும் உன்னுடைய எல்லாச் சேனையையும், குதிரைகளையும், சர்வாயுதந்தரித்தகுதிரைவீரர்களையும், பரிசையும் கேடகமுமுடைய திரளான கூட்டத்தையும் புறப்படப்பண்ணுவேன்; அவர்கள் எல்லாரும் பட்டயங்களைப் பிடித்திருப்பார்கள்.

எசே 38:5. அவர்களோடேகூட பெர்சியரும், எத்தியோப்பியரும், லீபியரும் இருப்பார்கள்; அவர்களெல்லாரும் கேடகம் பிடித்து, தலைச்சீராவுந் தரித்திருப்பவர்கள்.

எசே 38:6. கோமேரும் அவனுடைய எல்லா இராணுவங்களும், வடதிசையிலுள்ள தோகர்மா வம்சத்தாரும் அவர்களுடைய எல்லா இராணுவங்களுமாகிய திரளான ஜனங்கள் உன்னுடனேகூட இருப்பார்கள்.

எசே 38:7. நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து; நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு.

எசே 38:8. அநேக நாட்களுக்குப் பிற்பாடு நீ விசாரிக்கப்படுவாய்; பட்டயத்துக்கு நீங்கலாகி, பற்பல ஜனங்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தவர்களின் தேசத்தில் கடைசி வருஷங்களிலே வருவாய்; நெடுநாள் பாழாய்க்கிடந்து, பிற்பாடு ஜாதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள்எல்லாரும் சுகத்தோடே குடியிருக்கும் இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமாய் வருவாய்; அவர்கள் எல்லாரும் அஞ்சாமல் குடியிருக்கும்போது,

எசே 38:9. பெருங்காற்றைப்போல் எழும்பி வருவாய்; நீயும் உன்னுடைய எல்லா இராணுவங்களும் உன்னோடேகூட இருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம்போல் தேசத்தை மூடுவீர்கள்.

எசே 38:10. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அந்நாளிலே பாழாய்க்கிடந்து திரும்பக் குடியேற்றப்பட்ட ஸ்தலங்களுக்கு விரோதமாகவும், ஜாதிகளிடத்திலிருந்து சேர்க்கப்பட்டதும், ஆடுகளையும் மாடுகளையும் ஆஸ்திகளையும் சம்பாதித்து, தேசத்தின் நடுவில் குடியிருக்கிறதுமான ஜனத்துக்கு விரோதமாகவும், நீ உன் கையைத் திருப்பும்படிக்கு,

எசே 38:11. உன் இருதயத்தில் யோசனைகள் எழும்ப, நீ பொல்லாத நினைவை நினைத்து,

எசே 38:12. நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப் போவேன்; நிர்விசாரமாய் சுகத்தோடே குடியிருக்கிறவர்களின்மேல் வருவேன்; அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள்; அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை என்பாய்.

எசே 38:13. சேபா தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தர்ஷீசின் வர்த்தகரும் அதினுடைய பால சிங்கங்களான அனைவரும் உன்னை நோக்கி: நீ கொள்ளையிட அல்லவோ வருகிறாயென்றும், நீ சூறையாடி, வெள்ளியையும் பொன்னையும் ஆஸ்தியையும் எடுத்துக் கொள்ளுகிறதற்கும், ஆடுகளையும் மாடுகளையும் பிடிக்கிறதற்கும், மிகவும் கொள்ளையிடுகிறதற்கும் அல்லவோ உன்னுடைய கூட்டத்தைக் கூட்டினாயென்றும் சொல்லுவார்கள்.

கோகு, மாகோகு ஆகியோரைப்பற்றி வேதபண்டிதர்கள் விரிவான ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவர்கள் சித்திய தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அல்லது அவர்கள் தர்த்தாரி அல்லது ரஷ்யதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ளவர்கள் என்றும் ஒரு சிலர் சொல்லுகிறார்கள். அவர்கள் சீரியா தேசத்திலோ அல்லது சின்ன ஆசியாவிலோ இருந்திருக்கவேண்டும் என்பது இவர்களுடைய கருத்து.

எசேக்கியேல் கோகுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். கர்த்தர் கோகுக்கு விரோதமாக வருவார். கர்த்தர் எசேக்கியேலிடம் "மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை" (எசே 38:2) என்று சொல்லுகிறார்.

கோகு மோசேக், தூபால் ஆகிய ஜாதிகளின் தலைவனாகவும் அதிபதியாகவும் இருக்கிறான். கர்த்தர் கோகுக்கு விரோதமாக வருகிறார். கர்த்தர் சத்துருக்கள் மத்தியிலே குழப்பத்தை உண்டுபண்ணுகிறார். கர்த்தரே கோகை இஸ்ரவேல் ஜனத்திற்கு விரோதமாக வரவழைக்கிறார். கர்த்தர் கோகின் வாயில் துறடுபோடுவார். கர்த்தரே இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களையும் சொல்லுகிறார்.

கர்த்தர் சொல்லுகிற இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களில், கோகு இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக வருவது முதலாவது நடைபெறுகிற சம்பவம். கோகின் வாயில் துறடுகளைப் போட்டு இழுத்துக் கொண்டுபோவது, இரண்டாவதாக நடைபெறுகிற சம்பவம்.

ஆனால் கர்த்தரோ, பிந்தி நடைபெறுகிற சம்பவத்தை முதலாவது தீர்க்கதரிசனமாகவும், முந்தி நடைபெறுகிற சம்பவத்தை இரண்டாவது தீர்க்கதரிசனமாகவும் சொல்லுகிறார்.

"மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருவேன். நான் உன்னைத் திருப்பி, உன் வாயில் துறடுகளைப் போட்டு, உன்னையும் உன்னுடைய எல்லாச் சேனையையும், குதிரைகளையும், சர்வாயுதந்தரித்தகுதிரைவீரர்களையும், பரிசையும் கேடகமுமுடைய திரளான கூட்டத்தையும் புறப்படப்பண்ணுவேன்" (எசே 38:3,4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக அநேக தேசத்தார் ஒன்றாய்க் கூடிவருகிறார்கள். கோகோடுகூட, பெர்சியரும், எத்தியோப்பியரும், லீபியரும் இருப்பார்கள். மேலும் கோமேரும், வடதிசையிலுள்ள தோகர்மா வம்சத்தாரும் கூடயிருப்பார்கள். இவர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாய் வருவார்கள். இவர்கள் எல்லாரும் பட்டயங்களைப் பிடித்திருப்பார்கள். இவர்கள் கேடகம் பிடித்து தலைச்சீராவும் தரித்திருப்பார்கள். இவர்களுடைய இராணுவங்களில் திரளான ஜனங்கள் இருப்பார்கள் (எசே 38:5,6).

கர்த்தர் கோகிடம், "நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து; நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு" (எசே 38:7) என்று சொல்லுகிறார். கோகு தன்னால் முடிந்தவரையிலும் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். ஆனாலும் கர்த்தர் கோகை பழிவாங்குவார். கோகு இஸ்ரவேல் வம்சத்தாருக்கு என்னென்ன தீங்குகளெல்லாம் செய்தானோ, அவையெல்லாம் அவனுக்கும் செய்யப்படும்.

"ஜனங்களே, நீங்கள் கூட்டங்கூடுங்கள், முறியடிக்கப்படுவீர்கள்; தூர தேசத்தாராகிய நீங்கள் எல்லாரும் செவிகொடுங்கள்; இடைக்கட்டிக் கொள்ளுங்கள், முறிந்தோடுவீர்கள், ஆலோசனை செய்யுங்கள், அது அபத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது; தேவன் எங்களோடே இருக்கிறார்" (ஏசா 8:9,10).

கோகு இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமாய் வருவான். இஸ்ரவேல் தேசத்தின்மீது ஏற்கெனவே ஏராளமான ஜாதியார் பட்டயத்தோடு வந்திருக்கிறார்கள். அநேக நாட்களுக்கு பிற்பாடு, இப்போதுதான் இஸ்ரவேல் ஜனத்தார் சமாதானமாயிருக்கிறார்கள். பட்டயத்திற்கு நீங்கலாகியிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசம் நெடுநாள் பாழாய்க்கிடந்தது. பிற்பாடு இப்போதுதான் ஜாதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள் எல்லோரும் இங்கே சுகமாய்க் குடியிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் மலைகளில் தங்கியிருக்கிறார்கள். தங்களுக்கு விரோதமாக சத்துருக்கள் யாரும் வரமாட்டார்கள் என்று நினைத்து, இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் அஞ்சாமல் குடியிருக்கிறார்கள்.

ஆனால் கோகோ பெருங்காற்றைப் போல எழும்பி வருகிறான். அவனும், அவனுடைய எல்லா இராணுவங்களும், அவனோடே கூடயிருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம்போல இஸ்ரவேல் தேசத்தை மூடுவார்கள். இஸ்ரவேல் தேசத்தாரிடம் பெலனில்லை. சத்துருக்கள் அவர்களை பட்டயத்தால் வெட்டிப்போட்டதினால், அவர்கள் பெலமிழந்து காணப்படுகிறார்கள். அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து இப்போதுதான் திரும்பி வந்திருக்கிறார்கள். தாங்கள் இழந்துபோன பெலத்தை இஸ்ரவேல் ஜனங்கள் இன்னும் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு யாரோடும் யுத்தம் பண்ண பெலமில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் யாரோடும் யுத்தம்பண்ணாமல் அமைதியாய்க் குடியிருக்கிறார்கள். அவர்கள் யாருக்கும் தீங்கு செய்வதில்லை. ஆகையினால் அவர்கள் எல்லோரும் அஞ்சாமல் குடியிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசமோ பல வருஷங்களாக பாழாய்க் கிடந்தது. அது இப்போதுதான் திரும்பவும் குடியேற்றப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போனார்கள். கர்த்தர் அவர்களை அந்நிய ஜாதிகளிடத்திலிருந்து கூட்டிச் சேர்த்திருக்கிறார். அவர்கள் தங்கள் சுயதேசத்திற்கு திரும்பி வந்து ஆடுகளையும், மாடுகளையும், ஆஸ்திகளையும் சம்பாதித்திருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் நடுவிலே குடியிருக்கிறார்கள். கோகு தன்னுடைய கையை இஸ்ரவேல் ஜனத்திற்கு விரோதமாகத் திருப்பியிருக்கிறான். அவன் கர்த்தருடைய ஜனத்தைக் குறித்து பொல்லாத நினைவை நினைக்கிறான்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய பாதுகாப்புக்காக கிராமங்களுள்ள தேசத்திலே குடியிருக்கிறார்கள். இந்தக் கிராமங்களுக்கு மதில்கள் இல்லை. கோகோ இவர்களைக் கொள்ளையிடவும் சூறையாடவும், இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வருகிறான். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் கிராமங்களில், நிர்விசாரமாய், சுகத்தோடே குடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள்; அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை (எசே 38:12).

இஸ்ரவேல் வம்சத்தார் அமைதியை விரும்புகிறார்கள். அவர்கள் எந்த தேசத்திற்கும் தீங்கு செய்வதுமில்லை, தீங்கு நினைப்பதுமில்லை. இதனால் மற்ற ஜாதியாரும் தங்களுக்கு தீங்கு செய்யமாட்டார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்புகிறார்கள்.

கோகு தன்னுடைய ஐசுவரியத்தை அதிகரிக்க விரும்புகிறான். நியாயமான முறையில் ஐசுவரியம் சம்பாதிக்க அவனுக்கு மனதில்லை. கடினமாக உழைப்பதற்கு அவனுக்கு விருப்பமில்லை. அவன் இஸ்ரவேல் ஜனங்களை கொள்ளையிடவும், சூறையாடவும் விரும்புகிறான். கொள்ளைப் பொருட்களினால் தன்னுடைய களஞ்சியத்தை நிரப்பவேண்டுமென்று ஆசைப்படுகிறான்.

யூதர்களுடைய வரலாற்றில், அந்தியோகஸ் என்பவன், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக வந்தான். அவன் ஒரு விக்கிரகாராதனைக்காரன். இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தரை ஆராதிக்கிறவர்கள். அந்தியோகசுக்கு யூதமார்க்கத்தைப் பிடிக்கவில்லை. யூதர்கள் விக்கிரகங்களைப் பகைப்பதையும், அருவருப்பதையும் அந்தியோகஸ் ஆதரிக்கவில்லை. இதனால் அந்தியோகஸ் இஸ்ரவேல் வம்சத்தாரை அழித்துப்போட வேண்மென்று திட்டம் பண்ணுகிறான்.

இஸ்ரவேல் வம்சத்தாரிடம் ஏராளமான செல்வங்கள் இருக்கிறது. அவர்கள் ஏராளமான ஆடுகளையும், மாடுகளையும், ஆஸ்திகளையும் சம்பாதித்து வைத்திருக்கிறார்கள்.

கோகு இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வரும்போது, பெருங்காற்றைப் போல் எழும்பி வருகிறான். அவனும், அவனுடைய எல்லா இராணுவங்களும், அவனோடே கூடயிருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம்போல் தேசத்தை மூடுகிறார்கள்.

"பெருங்காற்றைப்போல் எழும்பி வருவாய்; நீயும் உன்னுடைய எல்லா இராணுவங்களும் உன்னோடேகூட இருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம்போல் தேசத்தை மூடுவீர்கள்" (எசே 38:9.

கோகு தன்னுடைய முழுபலத்தோடும், முழுஇராணுவத்தோடும், முழுவல்லமையோடும், முழுஆயுதங்களோடும் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வருகிறான். அவர்களெல்லோரும் பட்டயங்களைப் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் கேடகம் பிடித்து, தலைச்சீராவும் தரித்திருக்கிறார்கள்.

கோகு இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக கொள்ளையிடவும், சூறையாடவும் வருகிறான். "நீ கொள்ளையிட அல்லவோ வருகிறாயென்றும், நீ சூறையாடி, வெள்ளியையும் பொன்னையும் ஆஸ்தியையும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும், ஆடுகளையும் மாடுகளையும் பிடிக்கிறதற்கும், மிகவும் கொள்ளையிடுகிறதற்கும் அல்லவோ உன்னுடைய கூட்டத்தைக் கூட்டினாா்" (எசே 38:13) என்று, சேபா தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தர்ஷீசின் வர்த்தகரும் அதினுடைய பாலசிங்கங்களான அனைவரும் கோகை பார்த்து சொல்லுவார்கள்.

கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேல் எசே 38:14-23

எசே 38:14. ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, கோகை நோக்கிச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; என் ஜனமாகிய இஸ்ரவேல் சுகமாய்க் குடியிருக்கிற அக்காலத்திலே நீ அதை அறிவாய் அல்லவோ?

எசே 38:15. அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள்; அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து, எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள்.

எசே 38:16. நீ தேசத்தைக் கார்மேகம்போல்மூட, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பிவருவாய்; கடைசி நாட்களிலே இது சம்பவிக்கும்; கோகே, ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உன்மூலமாய் நான் பரிசுத்தர் என்று விளங்கப்படுகிறதினால் அவர்கள் என்னை அறியும்படிக்கு உன்னை என் தேசத்துக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்.

எசே 38:17. உன்னை அவர்களுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன் என்று பூர்வநாட்களிலே அநேக வருஷகாலமாய்த் தீர்க்கதரிசனம் உரைத்து, இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரைக்கொண்டு, அந்நாட்களிலே நான் குறித்துச் சொன்னவன் நீ அல்லவோ என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 38:18. இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாக கோகு வரும்காலத்தில் என் உக்கிரமம் என் நாசியில் ஏறுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 38:19. அந்நாளிலே இஸ்ரவேல் தேசத்திலே பெரிய அதிர்ச்சி உண்டாகி,

எசே 38:20. என் பிரசன்னத்தினால் சமுத்திரத்து மச்சங்களும், ஆகாயத்துப் பறவைகளும், வெளியின் மிருகங்களும், தரையில் ஊருகிற சகல பிராணிகளும், தேசமெங்குமுள்ள சகல நரஜீவன்களும் அதிரும்; பர்வதங்கள் இடியும்; செங்குத்தானவைகள் விழும்; எல்லா மதில்களும் தரையிலே விழுந்துபோம் என்று என் எரிச்சலினாலும் என் சினத்தின் அக்கினியினாலும் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.

எசே 38:21. என் எல்லா மலைகளிலும் பட்டயத்தை அவனுக்கு விரோதமாக வரவழைப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; அவனவன் பட்டயம் அவனவன் சகோதரனுக்கு விரோதமாயிருக்கும்.

எசே 38:22. கொள்ளைநோயினாலும் இரத்தம் சிந்துதலினாலும் நான் அவனோடே வழக்காடி, அவன்மேலும் அவன் இராணுவங்களின்மேலும் அவனோடிருக்கும் திரளான ஜனங்களின்மேலும் வெள்ளமாய் அடிக்கும் மழையையும், பெருங்கல் மழையையும், அக்கினியையும், கந்தகத்தையும் வருஷிக்கப் பண்ணுவேன்.

எசே 38:23. இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

இந்த அதிகாரத்தின் முன்பகுதியில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம், இந்த அதிகாரத்தின் பின்பகுதியிலும் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. கோகு இஸ்ரவேல் ஜனத்திற்கு விரோதமாக எழும்பியிருக்கிறான். அவன் இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வருகிறான். கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேல் சுகமாய்க் குடியிருக்கிற காலத்தை கோகு அறிந்திருக்கிறான் (எசே 38:14).

அப்பொழுது, கோகும், அவனோடுகூட திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள தங்களுடைய ஸ்தானத்திலிருந்து இஸ்ரவேலுக்கு விரோதமாக வருவார்கள். அவர்கள் பெரிய கூட்டமும் திரள் சேனையுமாயிருப்பார்கள். அவர்களெல்லோரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள் (எசே 38:15).

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதமில்லை. யாக்கோபுக்கு விரோதமாய் எழும்புகிற எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். கோகு இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வரும்போது இந்த சத்தியத்தை உணர்ந்துகொள்வான். கோகுக்கு வெட்கமும் அவமானமும் உண்டாகும். அவனுடைய சேனையில் பெருத்த உயிர்ச்சேதம் ஏற்படும். அவனுக்கு அழிவு வரும். இந்த அழிவுக்கு மத்தியில் கோகு, கர்த்தருக்கும், இஸ்ரவேல் ஜனத்திற்கும் இடையிலுள்ள ஐக்கியத்தையும், அன்பையும், உறவையும், உடன்படிக்கையையும் அறிந்துகொள்வான்.

இஸ்ரவேல் வம்சத்தார் மதில்கள் இல்லாமல் கிடக்கிற கிராமங்களிலே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு தாழ்ப்பாளுமில்லை. கதவுகளுமில்லை. கர்த்தரே அவர்களைச் சுற்றிலும் அக்கினி மதிலாக இருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாரைத் தொடுகிறவர்கள் கர்த்தருடைய கண்மணியைத் தொடுகிறார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்கிறவர்கள், தங்களுக்கு கேடுண்டாக, தங்களுக்கே தீங்கு செய்து கொள்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய இஸ்ரவேல் வம்சத்தாரையும், இஸ்ரவேல் தேசத்தையும் பாதுகாக்கிறார். ஆனாலும் கர்த்தரே கோகை தம்முடைய தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுகிறார் (எசே 38:16). இது ஒரு விநோதமான செய்தி. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு விரோதமாக, தம்முடைய சத்துரு வருவதற்கு அனுமதி கொடுக்கிறார். அனுமதி கொடுப்பது மாத்திரமல்ல, கர்த்தரே கோகை, இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுகிறார். கர்த்தரே கோகை அழைத்து வருகிறார்.

புறஜாதிகள் கண்களுக்கு முன்பாக கர்த்தர் பரிசுத்தர் என்பது விளங்கவேண்டும். அவர்கள் கர்த்தரை அறியவேண்டும். இதற்காகவே கர்த்தர் கோகை இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுகிறார். கோகும், இஸ்ரவேல் தேசத்தை கார்மேகம்போல மூடிப்போடுவதற்கு புறப்பட்டு வருவான். அவன் கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பி வருவான். கடைசி நாட்களில் இது சம்பவிக்கும் (எசே 38:16).

கர்த்தர் கோகை இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுவார். கோகும் இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பி வருவான். கர்த்தர் கோகோடு யுத்தம்பண்ணுவார். கோகும், அவனோடுகூட வருகிற பெரிய கூட்டமும், திரளான சேனையும் அழிந்துபோவார்கள். அப்போது புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக, கர்த்தர் பரிசுத்தர் என்பது விளங்கும். புறஜாதிகள் கர்த்தருடைய வல்லமையை அறிந்துகொள்வார்கள். புறஜாதிகள் கோகின் மூலமாக, தம்மை அறிந்துகொள்ளவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இதற்காகவே கர்த்தர் கோகை இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுகிறார்.

கோகு அழிந்துபோவதை எல்லா தேசத்தாரும் பார்ப்பார்கள். அவனுடைய பெரிய கூட்டமும், திரளான சேனையும் கர்த்தருடைய பட்டயத்தால் சங்காரமாவதை எல்லா ஜாதிகளும் பார்ப்பார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்போல சர்வவல்லமையுள்ள தேவன் வானத்திலும் பூமியிலும் வேறு ஒருவரும் இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய இஸ்ரவேல் புத்திரருக்கு உதவிபுரிவதற்காக வானத்திலிருந்து வருவார் என்பதையும் புறஜாதிகள் அறிந்து கொள்வார்கள்.

கர்த்தர் கோகை இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுவார் என்னும் தீர்க்கதரிசனம், பூர்வநாட்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி அநேக வருஷகாலமாய் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளாகிய கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கோகை குறித்து ஏற்கெனவே தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்கள் (எசே 38:17).

மோசே கடைசி நாட்களைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொன்னபோது கோகைப்பற்றி சொல்லியிருக்கிறார்.

"ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள்; அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து, தமது தேசத்தின்மேலும் தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவராவார்" (உபா 32:43).

தாவீதும் தன்னுடைய சங்கீதத்திலே கோகைப்பற்றி தீர்க்கதரிசனமாய் எழுதியிருக்கிறார்.

"ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியிலே தாங்களே விழுந்தார்கள்; அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக்கொண்டது" (சங் 9:15).

ஏசாயா லிவியாதானைப்பற்றிச் சொல்லும்போது, அவர் கோகைப்பற்றிச் சொல்லுகிறார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"அக்காலத்திலே கர்த்தர் லிவியாதான் என்னும் நீண்ட பாம்பை, லிவியாதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டிப்பார்; சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்றுபோடுவார்" (ஏசா 27:1).

இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக ஏராளமான தேசத்தார் எழும்பி வருவார்கள். அவர்களெல்லோரும் கோகும், அவனோடுகூட வரும் பெரிய கூட்டமும், திரளான சேனையுமாயிருக்கிறார்கள்.

"இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும், நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரவேலென்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக்கொண்டதினிமித்தமும், அவர்கள் என் ஜனத்தின்பேரில் சீட்டுப்போட்டு, ஆண்குழந்தைகளை வேசிப்பணையமாகக் கொடுத்து, மதுபானம்பண்ணும்படி, பெண் குழந்தைகளைத் திராட்சரசத்துக்குக் கிரயமாகக் கொடுத்ததினிமித்தமும், அங்கே அவர்களோடு வழக்காடுவேன்" (யோவே 3:1-3).

கோகு இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக வரும்போது, கர்த்தர் அவனை முற்றிலுமாய் அழித்துப்போடுவார். மக்கபியரின் காலத்தில் அந்தியோகசும் அவனுடைய சேனையும் இஸ்ரவேலுக்கு விரோதமாக பல சமயங்களில் எழும்பி வந்தார்கள். அந்தியோகசுக்கு தோல்வி உண்டாயிற்று. கோகு இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வரும் காலத்தில் கர்த்தருடைய உக்கிரம் அவருடைய நாசியில் ஏறும் (எசே 38:18). கோகு இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக பெருமையோடும், ஆணவத்தோடும், மனமேட்டிமையோடும் வருவான். கர்த்தருடைய உக்கிர கோபம் கோகை முற்றிலுமாய் அழித்துப்போடும்.

மனுஷர்கள் கோபப்படும்போது அவர்களுடைய முகத்தின் நிறம் மாறும். கர்த்தர் கோபப்படும்போது அவருடைய உக்கிரம், அவருடைய நாசியில் ஏறும். கர்த்தருடைய உக்கிரம் வெளிப்படும்போது இஸ்ரவேல் தேசத்திலே பெரிய அதிர்ச்சி உண்டாகும்.

கர்த்தருடைய பிரசன்னத்தினால் சமுத்திரத்து மச்சங்களும், ஆகாயத்துப் பறவைகளும், வெளியின் மிருகங்களும், தரையில் ஊருகிற சகல பிராணிகளும், தேசமெங்குமுள்ள சகல நரஜீவன்களும் அதிரும்; பர்வதங்கள் இடியும்; செங்குத்தானவைகள் விழும்; எல்லா மதில்களும் தரையிலே விழுந்துபோம். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை, அவருடைய எரிச்சலினாலும், அவருடைய சினத்தின் அக்கினியினாலும் நிச்சயமாய்ச் சொல்லுகிறார்

கர்த்தருடைய உக்கிரமும், எரிச்சலும், சினத்தின் அக்கினியும் கோகுக்கு விரோதமாக வெளிப்படும். அப்பொழுது கர்த்தர் தம்முடைய எல்லா மலைகளிலும், கோகுக்கு விரோதமாக பட்டயத்தை வரவழைப்பார். அவனவன் பட்டயம் அவனவன் சகோதரனுக்கு விரோதமாகயிருக்கும்.

கர்த்தர் கோகோடே கொள்ளைநோயினாலும் இரத்தம் சிந்துதலினாலும் வழக்காடுவார். கோகின் திரளான சேனை கொள்ளை நோயினால் செத்துப்போவார்கள். கொள்ளைநோய்க்கு தப்பினவர்கள் கர்த்தருடைய பட்டயத்தினால் இரத்தம் சிந்துவார்கள்.

கர்த்தர் கோகின் மேலும், அவனுடைய இராணுவங்களின்மேலும், அவனோடிருக்கும் திரளான ஜனங்களின்மேலும் வெள்ளமாய் அடிக்கும் மழையையும், பெருங்கல்மழையையும், அக்கினியையும், கந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணுவார் (எசே 38:22).

கோகுக்கு விரோதமாக பூமியின் ஆயுதங்களும் யுத்தம்பண்ணும். வானத்தின் ஆயுதங்களும் யுத்தம்பண்ணும். கோகு இஸ்ரவேல் வம்சத்தார்மீது பெருங்காற்றைப் போல எழும்பி வந்தான் (எசே 38:9). கர்த்தரே அவன்மீது புயல்காற்றைப்போல வீசுகிறார்.

கோகும், அவனுடைய இராணுவங்களும், அவனோடிருக்கும் திரளான ஜனங்களும் பட்டயத்தாலும், கொள்ளைநோயாலும், வெள்ளமாய் அடிக்கும் மழையாலும், பெருங்கல் மழையாலும், அக்கினியாலும் கந்தகத்தாலும் அழிந்துபோவதை புறஜாதி ஜனங்கள் பார்ப்பார்கள். இந்த சம்பவத்தின் மூலமாக கர்த்தர் தம்முடைய பரிசுத்தத்தையும், தம்முடைய மகத்துவத்தையும் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணுவார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் என்பதையும், அவரே சர்வவல்லமையுள்ளவர் என்பதையும், அவர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்பதையும், புறஜாதிகள் அறிந்துகொள்வார்கள். மேலும் இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய இஸ்ரவேலர்கள் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்வார்கள் (எசே 38:23).

39 அதிகாரம்

கோகுக்கும் மாகோகுக்கும் விரோதமான கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தை இத்துடன் நிறைவு பெறுகிறது. கர்த்தர் கோகையும் மாகோகையும் அழிக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்களிடத்திலிருந்து பாதுகாக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நன்மை செய்கிறார்.

கோகும் மாகோகும் முற்றிலுமாய் அழிந்துபோகும் (எசே 39:1-7). அதன் அழிவு பெரிதாயிருக்கும். அவர்களுடைய யுத்த ஆயுதங்களெல்லாம் அக்கினியினால் சுட்டெரிக்கப்படும் (எசே 39:8-10). கோகும், அவனைச் சேர்ந்த சேனையும் பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்துப் போவார்கள். அவர்களுடைய சரீரங்களை புதைப்பார்கள் (எசே 39:11-16). புதைக்காமல் வெட்ட வெளியிலே கிடக்கிற பிரேதங்கள் ஆகாயத்துப்பறவைகளுக்கு மகா யாகமாக இருக்கும் (எசே 39:17-22). கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீதும் கிருபையாய் இரங்குகிறார். அவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்கிறார் (எசே 39:23-29).

கர்த்தருடைய பரிசுத்த நாமம் எசே 39:1-7

எசே 39:1. இப்போதும் மனுபுத்திரனே, நீ கோகுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருகிறேன்.

எசே 39:2. நான் உன்னைத் திருப்பி உன்னை ஆறு துறடுகளால் இழுத்து, உன்னை வடபுறங்களிலிருந்து எழும்பவும் இஸ்ரவேல் மலைகளில் வரவும்பண்ணி,

எசே 39:3. உன் வில்லை உன் இடதுகையிலிருந்து தட்டிவிட்டு, உன் அம்புகளை வலதுகையிலிருந்து விழப்பண்ணுவேன்.

எசே 39:4. நீயும் உன் எல்லா இராணுவங்களும் உன்னோடிருக்கிற ஜனங்களும் இஸ்ரவேல் மலைகளில் விழுவீர்கள்; உராய்ஞ்சுகிற சகலவித பட்சிகளுக்கும் வெளியின் மிருகங்களுக்கும் உன்னை இரையாகக்கொடுப்பேன்.

எசே 39:5. விசாலமான வெளியில் விழுவாய்; நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

எசே 39:6. நான் மாகோகிடத்திலும் தீவுகளில் நிர்விசாரமாய்க் குடியிருக்கிறவர்களிடத்திலும் அக்கினியை அனுப்புவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 39:7. இவ்விதமாய் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே என் பரிசுத்த நாமத்தைத் தெரிவிப்பேன்; என் பரிசுத்த நாமத்தை இனிப் பரிசுத்தக் குலைச்சலாக்கவொட்டேன்; அதினால் நான் இஸ்ரவேலில் பரிசுத்தராகிய கர்த்தர் என்று புறஜாதிகள் அறிந்து கொள்வார்கள்.

கர்த்தர் கோகுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தர் இங்கு சொல்லுகிற வார்த்தைகள், எசே 38:3,4 ஆகிய வசனங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. கோகுக்கு விரோதமாக கர்த்தர் சொல்லுகிற வார்த்தை இன்னும் மாறவில்லை. கர்த்தருடைய கோபமும் உக்கிரமமும் கோகின்மீது இன்னும் குறையவில்லை. கர்த்தர் கோகுக்கு விரோதமாக வருகிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி கோகுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும். கோகு மேசேக், தூபால் ஆகிய ஜாதிகளின் அதிபதியாகவும் ராஜாவாகவும் இருக்கிறான். கர்த்தர் கோகைத் திருப்பி, அவனை ஆறு துறடுகளால் இழுத்து, அவனை வடபுறங்களிலிருந்து எழும்பவும் இஸ்ரவேல் மலைகளில் வரவும்பண்ணுவார் (எசே 39:2).

கோகும், அவனுடைய மகாசேனையும் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக வில்லையும் அம்பையும் பிடித்து வருகிறார்கள். கர்த்தரோ அவர்களுடைய யுத்த ஆயுதங்களை முறித்துப்போடுவார். கோகின் இடது கையில் வில் இருக்கிறது. அவனுடைய வலது கையில் அம்பு இருக்கிறது. கர்த்தர் அவனுடைய இடது கையிலிருந்து வில்லைத் தட்டிவிடுவார். அவனுடைய வலது கையிலிருந்து அம்புகளை விழப்பண்ணுவார் (எசே 39:3).

கோகும் அவனுடைய எல்லா சேனையும் ஆயுதமில்லாமலிருப்பார்கள். யுத்தக்களத்திலே நிராயுதபாணியாகயிருப்பது மிகவும் ஆபத்தானது. இவர்களால் மற்றவர்களைத் தாக்கவும் முடியாது. மற்றவர்கள் இவர்களைத் தாக்கும்போது, இவர்களால் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் முடியாது. கோகின் நோக்கம் நிறைவேறாது. அவனால் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது.

கோகும், அவனுடைய எல்லா இராணுவங்களும், அவனோடிருக்கிற ஜனங்களும் இஸ்ரவேல் மலைகளில் விழுவார்கள்; கர்த்தர் அவர்களை உராய்ஞ்சுகிற சகலவித பட்சிகளுக்கும் வெளியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுப்பார் (எசே 39:4). கோகும் அவனுடைய எல்லா இராணுவங்களும், யுத்தக்களத்திலே செத்துப்போவார்கள். அவர்கள் விசாலமான வெளியிலே விழுவார்கள் (எசே 39:5).

கோகும் அவனுடைய சேனைகளும் மலைகள்மீது ஏறினாலும், அவர்களால் கர்த்தருடைய பட்டயத்திற்கு தப்பிக்க முடியாது. அவர்கள் திறந்த வெளியிலிருந்தாலும், கர்த்தருடைய பட்டயத்திற்கு தப்பி ஓடிப்போகமுடியாது. கோகையும் அவனுடைய திரளான சேனையையும் சங்காரம்பண்ண வேண்டுமென்று கர்த்தர் தீர்மானித்துவிட்டார். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் அவர்களை சங்காரம்பண்ணுகிறார்.

உலக வரலாற்றில் இதுபோல, எந்த தேசத்தின் இராணுவமும், யுத்தக்களத்திலே மொத்தமாக செத்துப்போனதில்லை. கோகும், அவனுடைய இராணுவங்களும், அவனோடிருக்கிற ஜனங்களும் விசாலமான வெளியிலே மரித்தவர்களாக விழுந்துகிடக்கிறார்கள். அவர்களை புதைப்பதற்குகூட ஆட்கள் இல்லை. வானத்திலுள்ள சகலவித பட்சிகளும், வெளியிலுள்ள மிருகங்களும், அவர்களுடைய பிரேதங்களை தின்கிறது.

கோகுக்கு அழிவு வந்ததுபோல, அவனுடைய தேசமாகிய மாகோகுக்கும் அழிவு வருகிறது. கர்த்தர் மாகோகிடத்தில் தம்முடைய அக்கினியை அனுப்புகிறார். மாகோகு அக்கினிக்கு இரையாகிறது. மாகோகின்மீது மாத்திரமல்ல, தீவுகளில் நிர்விசாரமாய்க் குடியிருக்கிறவர்களிடத்திலும், கர்த்தர் தம்முடைய அக்கினியை அனுப்புகிறார். இந்த தீவிலுள்ளவர்கள் தங்களுக்கு ஆபத்து வராது என்றும், தாங்கள் பாதுகாப்பாகயிருப்பதாகவும் நினைக்கிறார்கள்.

தீவுகளில் குடியிருக்கிறவர்கள் என்னும் வார்த்தை புறஜாதியாரை பொதுவாகக் குறிக்கிறது. அவர்கள் தங்கள் பாதுகாப்புக்கு, தங்களுடைய சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். கர்த்தரோ அவர்கள்மீது அக்கினியை அனுப்பி, அவர்களை சுட்டெரிக்கிறார். அவர்களால் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் அக்கினியினால் எரிந்து அழிந்துபோகும்போது, இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தர் என்பதை அறிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஜனங்கள். அவர்களுக்கு கர்த்தருடைய நாமத்தைப்பற்றி அதிகமாய்த் தெரிந்திருக்க வேண்டும். கர்த்தருடைய மகிமையைப் பற்றியும், அவருடைய மப்த்துவத்தைப் பற்றியும், இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்திருக்கவேண்டும். கர்த்தர் தங்கள்மீது அன்பாயிருக்கிறார் என்பதையும், கர்த்தர் தங்களை பாதுகாத்து பராமரிப்பார் என்பதையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இஸ்ரவேல் வம்சத்தார் பல சந்தர்ப்பங்களில் கர்த்தருக்கு உண்மையில்லாதவர்களாயிருந்தார்கள். ஆனால் கர்த்தரோ தங்கள்மீது எப்போதும் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்திருக்கவேண்டும்.

கர்த்தர் நல்லவர். அவருடைய கிருபை என்றுமுள்ளது. கர்த்தர் தம்முடைய கிருபையினால், தம்மை, தம்முடைய பிள்ளைகளுக்கு வெளிப்படுத்துகிறார். அவர்களுக்கு நன்மை செய்கிறார். முதலாவதாக கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மனக்கண்களை பிரகாசமுள்ளதாக மாற்றுகிறார். தம்மைப்பற்றி அறிந்து கொள்ளும் அறிவை கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை முழுவதுமாய் ஆளுகை செய்து, ஆட்கொள்கிறார்.

நாம் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் முதலாவதாக தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே, தம்முடைய பரிசுத்த நாமத்தைத் தெரிவிக்கிறார். நாம் எந்த சூழ்நிலையிலும் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கிவிடக் கூடாது. கர்த்தர் தம்முடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கவொட்டார். நாம் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தகுலைச்சலாக்கிவிடாதவாறு, கர்த்தர் நம்மை பாதுகாக்கிறார். நாம் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தம் பண்ணவேண்டும். அவருடைய நாமத்தைக் கனம்பண்ண வேண்டும். கர்த்தருடைய நாமத்தை நாம் பரிசுத்தம் பண்ணுமாறு, கர்த்தர் நம்மை வழிநடத்துகிறார்.

புறஜாதியாருக்கு கர்த்தருடைய பரிசுத்த நாமம் வெளிப்படுத்தப்படவில்லை. அவர்களுக்கு கர்த்தர் பரிசுத்தர் என்னும் சத்தியம் கூட தெரியாது. அவர்கள் கர்த்தருடைய பரிசுத்தத்தைப்பற்றித் தெரியாமல், கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தகுலைச்சலாக்குகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் நடுவிலே தம்முடைய பரிசுத்த நாமத்தை தெரிவிக்கும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேலில் பரிசுத்தராகிய கர்த்தர் என்பதை புறஜாதிகள் அறிந்துகொள்வார்கள். இஸ்ரவேலின் தேவன் பரிசுத்தராகிய கர்த்தர்.

ஆமோன்கோகின் பள்ளத்தாக்கு எசே 39:8-22

எசே 39:8. இதோ, அது வந்து, அது சம்பவித்தது என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நான் சொன்ன நாள் இதுவே.

எசே 39:9. இஸ்ரவேல் பட்டணங்களின் குடிகள் வெளியேபோய், கேடகங்களும் பரிசைகளும், வில்லுகளும், அம்புகளும், வளைதடிகளும், ஈட்டிகளுமாகிய ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; ஏழுவருஷம் அவைகளை எடுத்து எரிப்பார்கள்.

எசே 39:10. அவர்கள் வெளியிலிருந்து விறகுகொண்டுவராமலும் காடுகளில் வெட்டாமலும், ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; அவர்கள் தங்களைக் கொள்ளையிட்டவர்களைக் கொள்ளையிட்டு, தங்களைச் சூறையாடினவர்களைச் சூறையாடுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 39:11. அந்நாளிலே இஸ்ரவேல் தேசத்திலே சமுத்திரத்துக்குக் கிழக்கே பிரயாணக்காரரின் பள்ளத்தாக்கைப் புதைக்கிற ஸ்தானமாக கோகுக்குக் கொடுப்பேன்; அது வழிப்போக்கர் மூக்கைப் பொத்திக்கொண்டு போகப்பண்ணும்; அங்கே கோகையும் அவனுடைய எல்லாச் சேனையையும் புதைத்து, அதை ஆமோன்கோகின் பள்ளத்தாக்கு என்பார்கள்.

எசே 39:12. இஸ்ரவேல் வம்சத்தார், தேசத்தைச் சுத்தம்பண்ணும்படிக்கு அவர்களைப் புதைத்துத்தீர ஏழுமாதம் செல்லும்.

எசே 39:13. தேசத்தின் ஜனங்களெல்லாரும் புதைத்துக் கொண்டிருப்பார்கள்; நான் மகிமைப்படும் அந்நாளிலே அது அவர்களுக்குக் கீர்த்தியாக இருக்கும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 39:14. தேசத்தைச் சுத்தம் பண்ணுவதற்காக அதில் கிடக்கும் மற்றப் பிரேதங்களைப் புதைக்கும்படிக்கு நித்தமும் தேசத்தில் சுற்றித்திரியும் மனுஷரையும், சுற்றித் திரிகிறவர்களோடேகூடப் புதைக்கிறவர்களையும் தெரிந்து நியமிப்பார்கள்; ஏழுமாதங்கள் முடிந்தபின்பும் இவர்கள் தேடிக்கொண்டிருப்பார்கள்.

எசே 39:15. தேசத்தில் சுற்றித்திரிகிறவர்கள் திரிந்து கொண்டிருப்பார்கள்; யாராவது ஒருவன் மனுஷனின் எலும்பைக்காணும் போது புதைக்கிறவர்கள் அதை ஆமோன்கோகுடைய பள்ளத்தாக்கிலே புதைக்குமட்டும் அதினண்டையிலே ஒரு அடையாளத்தை நாட்டுவான்.

எசே 39:16. அந்த நகரத்துக்கு ஆமோனா என்று பெயரிடப்படும்; இவ்விதமாய் தேசத்தைச் சுத்தம்பண்ணுவார்கள்.

எசே 39:17. மனுபுத்திரனே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ சகலவித பட்சிகளையும் வெளியில் இருக்கிற சகல மிருகங்களையும் நோக்கி: நீங்கள் ஏகமாய்க் கூடிக்கொண்டு, இஸ்ரவேலின் மலைகளில் நான் உங்களுக்காகச் செய்யும் யாகமாகிய மகா யாகத்துக்குச் சுற்றிலுமிருந்து வந்துசேர்ந்து, மாம்சம் தின்று இரத்தங்குடியுங்கள்.

எசே 39:18. நீங்கள் பராக்கிரமசாலிகளின் மாம்சத்தைத் தின்று, பூமியினுடைய பிரபுக்களின் இரத்தத்தைக் குடிப்பீர்கள்; அவர்கள் எல்லாரும் பாசானிலே கொழுத்துப்போன ஆட்டுக்கடாக்களுக்கும், ஆட்டுக்குட்டிகளுக்கும் வெள்ளாட்டுக்கடாக்களுக்கும் காளைகளுக்கும் சமானமானவர்கள்.

எசே 39:19. நான் உங்களுக்காகச் செய்யும் யாகத்திலே நீங்கள் திருப்தியாகுமளவும் கொழுப்பைத் தின்று, வெறியாகுமளவும் இரத்தத்தைக் குடிப்பீர்கள்.

எசே 39:20. இவ்விதமாய் என் பந்தியிலே குதிரைகளையும், இரதவீரர்களையும், பராக்கிரமசாலிகளையும், சகல யுத்தவீரர்களையும் தின்று, திருப்தியாவீர்களென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு.

எசே 39:21. இவ்விதமாய் என் மகிமையை நான் புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்பண்ணுவேன்; நான் செய்த என் நியாயத்தையும் அவர்கள்மேல் நான் வைத்த என் கையையும் எல்லா ஜாதிகளும் காண்பார்கள்.

எசே 39:22. அன்றுமுதல் என்றும் நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்துகொள்வார்கள்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனங்கள், இனிமேல் வரப்போகிற காலத்தில் நிறைவேறப் போகிறது. ஆனால் கர்த்தரோ, அந்த சம்பவம் நிறைவேறிவிட்டது போல இங்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "இதோ, அது வந்து, அது சம்பவித்தது" என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அந்த சம்பவம் இன்னும் நடைபெறவில்லை. ஆனால் கர்த்தரோ அது சம்பவித்தது என்று சொல்லுகிறார். "நான் சொன்ன நாள் இதுவே" (எசே 39:8) என்று சொல்லி கர்த்தர் தம்முடைய வார்த்தையை உறுதிபண்ணுகிறார்.

கோகும், அவனுடைய எல்லா இராணுவங்களும் இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள். கர்த்தரோ அவர்களுடைய யுத்த ஆயுதங்களை, அவர்களுடைய கைகளிலிருந்து கீழே விழப்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களை தம்முடைய பட்டயத்தினால் சங்காரம் பண்ணுவார். அவர்களெல்லோரும் மலைகளிலும், விசாலமான வெளிகளிலும் விழுந்துகிடப்பார்கள்.

கோகின் சேனைக்கு மிகப்பெரிய அழிவு உண்டாகும். அவர்களுடைய அழிவின் உக்கிரத்தைப்பற்றி கர்த்தர் இங்கு தெளிவாகச் சொல்லுகிறார். கோகும் அவனுடைய சேனையும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். ஆனால், இஸ்ரவேல் வம்சத்தார் கோகுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. கர்த்தரே கோகுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பட்டயத்தை எடுக்கவுமில்லை. அதை உறையிலிருந்து வெளியே எடுத்து யாரையும் வெட்டவுமில்லை. ஆனாலும் கோகும், அவனுடைய எல்லா இராணுவங்களும், அவனோடிருக்கிற ஜனங்களும், மலைகளிலும், விசாலமான வெளிகளிலும் விழுந்துகிடக்கிறார்கள்.

கோகின் ஆயுதங்களெல்லாம் கீழே விழுந்துகிடக்கிறது. கர்த்தர் அவர்களுடைய ஆயுதங்களை அவர்களுடைய கைகளிலிருந்து தட்டிவிட்டு, அவற்றை கீழே விழப்பண்ணுகிறார். அவையெல்லாம் அக்கினியினால் எரியக்கூடிய மரஆயுதங்கள். இஸ்ரவேல் வம்சத்தார் கோகோடு யுத்தம்பண்ணமாட்டார்கள். அவர்கள் கீழே விழுந்துகிடக்கிற ஆயுதங்களை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்.

இஸ்ரவேல் பட்டணங்களின் குடிகள் வெளியேபோய், கேடகங்களும் பரிசைகளும், வில்லுகளும், அம்புகளும், வளைதடிகளும், ஈட்டிகளுமாகிய ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; ஏழுவருஷம் அவைகளை எடுத்து எரிப்பார்கள் (எசே 39:9).

கோகின் ஆயுதங்கள் ஏராளமாயிருக்கும். இஸ்ரவேல் ஜனங்களுக்கு, கோகின் ஆயுதங்களை எரிப்பதே பெரிய வேலையாகயிருக்கும். அவர்களால் தங்கள் வீட்டு வேலைகளைக் கூட சரியாக கவனிக்க முடியாது. ஆகையினால், இஸ்ரவேல் புத்திரர், வெளியிலிருந்து விறகுகொண்டு வராமலும் காடுகளில் வெட்டாமலும், ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; அவர்கள் தங்களைக் கொள்ளையிட்டவர்களைக் கொள்ளையிட்டு, தங்களைச் சூறையாடினவர்களைச் சூறையாடுவார்கள் (எசே 39:10).

கோகும், அவனுடைய எல்லா இராணுவங்களும், அவனோடிருக்கிற ஜனங்களும் மலைகளிலும், விசாலமான வெளிகளிலும் விழுந்துகிடக்கிறார்கள். அவர்களுக்கு அருகாமையில், அவர்களுடைய ஆயுதங்களும் கீழே விழுந்துகிடக்கிறது. இஸ்ரவேல் வம்சத்தார் அந்த ஆயுதங்களையெல்லாம் அக்கினியிலே சுட்டெரிக்கிறார்கள். சில ஆயுதங்களை தங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து, அவற்றை விறகுக்குப் பதிலாக எரிக்கிறார்கள்.

கோகும் அவனுடைய இராணுவத்திலுள்ளவர்களும் வெட்ட வெளியிலே செத்துக்கிடக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் செத்துப் போனவர்களின் பிரேதங்களை புதைக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே, சமுத்திரத்திற்கு கிழக்கே, பிரயாணக்காரரின் பள்ளத்தாக்கு இருக்கிறது. அங்கே இஸ்ரவேல் புத்திரர், செத்துப்போன கோகையும், அவனுடைய இராணுவத்தையும் புதைக்கிறார்கள்.

கர்த்தர் இந்தப் பள்ளத்தாக்கை புதைக்கிற ஸ்தானமாக கோகுக்குக் கொடுக்கிறார். அங்கே துர்நாற்றம் வீசும். அதன் வழியாக கடந்துபோகிற வழிப்போக்கர். துர்நாற்றத்தைத் தாங்கமுடியாமல் தங்கள் மூக்கை பொத்திக் கொண்டு போவார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் அந்தப் பள்ளத்தாக்கிலே கோகையும், அவனுடைய எல்லா சேனையையும் புதைப்பார்கள். அந்தப் பள்ளத்தாக்கை "ஆமோன்கோகின் பள்ளத்தாக்கு" என்று அழைப்பார்கள். இந்தப் பெயருக்கு "கோகின் திரளான ஜனம்" என்று பொருள்.

சத்துருக்களை சங்காரம்பண்ணுவது கர்த்தருடைய வேலை. மரித்துப்போன சத்துருக்களை அடக்கம்பண்ணுவது கர்த்தருடைய ஜனத்தின் வேலை. கர்த்தர் கோகின் சேனையை புதைக்கும் வேலையை, இஸ்ரவேல் வீட்டாருக்குக் கொடுக்கிறார். அவர்களைப் புதைக்க வேண்டிய இடத்தையும் கொடுக்கிறார். இது உப்புக்கடலுக்கு அருகாமையிலோ அல்லது, திபேரியா கடலுக்கு அருகாமையிலோ இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்கிறார்கள். மரித்துப்போன மனுஷரை அடக்கம்பண்ணுவது நாம் செய்யவேண்டிய முக்கியமான வேலை. இது ஒரு நல்ல வேலை. செத்துப்போனவர்கள் நமக்கு அந்நியராயிருந்தாலும், அவர்கள் நம்முடைய சத்துருக்களாயிருந்தாலும், அவர்களை அடக்கம்பண்ணுவதற்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டும். கோகும், அவனுடைய இராணுவங்களும் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். கர்த்தரோ அவர்களை புதைப்பதற்கு இஸ்ரவேலின் காணியாட்சிக்குட்பட்ட நிலத்திலேயே ஒரு ஸ்தலத்தை ஒதுக்கிக் கொடுக்கிறார். அவர்களை அடக்கம் பண்ணுவதற்கு தம்முடைய ஜனத்தையே நியமிக்கிறார்.

மலைகளிலும், விசாலமான வெளிகளிலும் கோகும் அவனுடைய இராணுவங்களும் அவனோடிருக்கிற ஜனங்களும் செத்துக்கிடக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் செத்துப்போனவர்களை அடக்கம்பண்ணி, தங்கள் தேசத்தை சுத்தம்பண்ணுகிறார்கள். அவர்களை புதைத்துத் தீர ஏழுமாதமாயிற்று (எசே 39:12).

இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்களெல்லோரும் செத்துப்போனவர்களை புதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாளில் கர்த்தர் மகிமைப்படுகிறார். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய கிரியைகள் கீர்த்தியாயிருக்கிறது (எசே 39:13).

இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள் தேசத்தைச் சுத்தம்பண்ணுவதற்காக அதில் கிடக்கும் மற்றப் பிரேதங்களைப் புதைக்கும்படிக்கு நித்தமும் தேசத்தில் சுற்றித்திரியும் மனுஷரையும், சுற்றித் திரிகிறவர்களோடேகூடப் புதைக்கிறவர்களையும் தெரிந்து நியமிப்பார்கள்; ஏழுமாதங்கள் முடிந்தபின்பும் இவர்கள் தேடிக்கொண்டிருப்பார்கள். (எசே 39:14).

இஸ்ரவேல் தேசத்தில் சுற்றித்திரிகிறவர்கள் திரிந்து கொண்டிருப்பார்கள்; யாராவது ஒருவன் மனுஷனின் எலும்பைக்காணும்போது புதைக்கிறவர்கள் அதை ஆமோன்கோகுடைய பள்ளத்தாக்கிலே புதைக்குமட்டும் அதினண்டையிலே ஒரு அடையாளத்தை நாட்டுவான். அந்த நகரத்துக்கு "ஆமோனா" என்று பெயரிடப்படும்; இவ்விதமாய் தேசத்தைச் சுத்தம்பண்ணுவார்கள். (எசே 39:15,16).

கர்த்தர் தம்முடைய மகிமையை புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்பண்ணுகிறார். கர்த்தர் கோகின்மீதும், அவனுடைய இராணுவத்தின்மீதும் தம்முடைய நியாயத்தை வெளிப்படுத்துகிறார். அவர்களுக்கு விரோதமாக தம்முடைய கையை நீட்டி, அவர்கள்மீது தம்முடைய பலமுள்ள கையை வைக்கிறார். அவர்களெல்லோரும் செத்துப்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கோகோடு யுத்தம்பண்ணாமல் சும்மாயிருக்கிறார்கள். புறஜாதி ஜனங்களோ, இஸ்ரவேல் வம்சத்தாரையும், செத்துப்போன கோகையும், கோகின் சேனையையும் பார்க்கிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரே கர்த்தர் என்பதை புறஜாதியாரும் அறிந்துகொள்கிறார்கள். அவரே தங்களுடைய தேவனாகிய கர்த்தர் என்பதை இஸ்ரவேல் வம்சத்தாரும் அறிந்து கொள்கிறார்கள் (எசே 39:21,22).

கோகும், அவனுடைய இராணுவங்களும், அவனோடிருக்கிற ஜனங்களும் மலைகளிலும், விசாலமான வெளிகளிலும் விழுந்துகிடப்பார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் அவர்களை ஆமோன்கோகின் பள்ளத்தாக்கில் புதைக்கிறார்கள். ஏழுமாதங்களாக புதைக்கிறார்கள். இன்னும் புதைக்க வேண்டிய பிரேதங்கள் வெளியிலே கிடக்கிறது. அந்தப் பிரேதங்களை தேடி கண்டுபிடிப்பதற்கு, இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள் தேசத்தில் சுற்றித் திரியும் மனுஷரை நியமிக்கிறார்கள். செத்துப்போனவர்களைக் கண்டுபிடித்த பின்பு, அவர்களை புதைப்பதற்கு புதைக்கிறவர்களையும் நியமிக்கிறார்கள். இவர்களாலும் எல்லா பிரேதங்களையும் புதைக்க முடியாது. இன்னும் ஏராளமான பிரேதங்கள் விசாலமான வெளியிலும், மலைகளிலும் விழுந்து கிடக்கும். கர்த்தர் அந்தப் பிரேதங்களை பட்சிகளுக்கும், மிருகங்களுக்கும் இரையாகக் கொடுக்கிறார்.

எசேக்கியேல் இதுவரையிலும் கர்த்தருடைய செய்தியை மனுஷருக்கு சொன்னார். இனிமேல் அவர் சகலவித பட்சிகளுக்கும், வெளியிலிருக்கிற சகல மிருகங்களுக்கும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவேண்டும்.

கர்த்தராகிய ஆண்டவர் எசேக்கியேலிடம், "மனுபுத்திரனே, நீ சகலவித பட்சிகளையும் வெளியில் இருக்கிற சகல மிருகங்களையும் நோக்கி என்னுடைய வார்த்தைகளைச் சொல்லு" என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரம் பட்சிகளையும், மிருகங்களையும் நோக்கி, "நீங்கள் ஏகமாய்க் கூடிக்கொண்டு, இஸ்ரவேலின் மலைகளில் நான் உங்களுக்காகச் செய்யும் யாகமாகிய மகா யாகத்துக்குச் சுற்றிலுமிருந்து வந்துசேர்ந்து, மாம்சம் தின்று இரத்தங்குடியுங்கள். நீங்கள் பராக்கிரமசாலிகளின் மாம்சத்தைத் தின்று, பூமியினுடைய பிரபுக்களின் இரத்தத்தைக் குடிப்பீர்கள்; அவர்கள் எல்லாரும் பாசானிலே கொழுத்துப்போன ஆட்டுக்கடாக்களுக்கும், ஆட்டுக்குட்டிகளுக்கும் வெள்ளாட்டுக் கடாக்களுக்கும் காளைகளுக்கும் சமானமானவர்கள். நான் உங்களுக்காகச் செய்யும் யாகத்திலே நீங்கள் திருப்தியாகுமளவும் கொழுப்பைத் தின்று, வெறியாகுமளவும் இரத்தத்தைக் குடிப்பீர்கள். இவ்விதமாய் என் பந்தியிலே குதிரைகளையும், இரதவீரர்களையும், பராக்கிரமசாலிகளையும், சகல யுத்தவீரர்களையும் தின்று, திருப்தியாவீர்கள்" (எசே 39:17-20) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார்
எசே 39:23-29

எசே 39:23. இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமத்தினிமித்தமே சிறைப்பட்டுப்போனார்கள் என்று அப்பொழுது புறஜாதிகள் அறிந்து கொள்வார்கள்; அவர்கள் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின படியால், என் முகத்தை நான் அவர்களுக்குமறைத்து, அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன்; அவர்கள் அனைவரும் பட்டயத்தால் விழுந்தார்கள்.

எசே 39:24. அவர்களுடைய அசுத்தத்துக்குத்தக்கதாகவும், அவர்களுடைய மீறுதல்களுக்குத் தக்கதாகவும், நான் அவர்களுக்குச் செய்து, என் முகத்தை அவர்களுக்கு மறைத்தேன்.

எசே 39:25. ஆதலால் கர்த்தாகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்:

எசே 39:26. அவர்கள் தங்கள் அவமானத்தையும், பயப்படுத்துவார் இல்லாமல், தாங்கள் சுகமாய்த் தங்கள் தேசத்தில் குடியிருக்கும்போது எனக்கு விரோதமாய்த் தாங்கள் செய்த எல்லாத்துரோகத்தையும் சுமந்து தீர்த்தபின்பு, நான் யாக்கோபின் சிறையிருப்பைத்திருப்பி, இஸ்ரவேல் வம்சமனைத்துக்கும் இரங்கி, என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன்.

எசே 39:27. நான் அவர்களை ஜனசதளங்களிலிருந்து திரும்பிவரப் பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டுவந்து, திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும்போது,

எசே 39:28. தங்களைப் புறஜாதிகளிடத்தில் சிறைப்பட்டுப் போகப்பண்ணின நான் தங்களில் ஒருவரையும் அங்கே அப்புறம் வைக்காமல், தங்களைத் தங்கள் சுயதேசத்திலே திரும்பக்கூட்டிக் கொண்டுவந்தேன் என்பதினால், நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.

எசே 39:29. நான் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்.

கர்த்தர் கோகைக் குறித்தும், மாகோகைக்குறித்தும் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை சத்துருக்களுக்கு விரோதமாகவும், அவருடைய ஜனத்திற்கு ஆதரவாகவும் வருகிறது. இஸ்ரவேல் வீட்டார் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களைத் திரும்பி வரச்செய்வார். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சுயதேசத்திலே குடியிருப்பார்கள்.

கர்த்தருடைய ஜனம் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது, அநேக வேதனைகளையும் உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஏன் கஷ்டங்களும், துன்பங்களும் வந்திருக்கிறது என்பதை, புறஜாதி ஜனங்கள் புரிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரின் துன்பங்களுக்கான காரணங்களை கர்த்தர் புறஜாதி ஜனங்களுக்கு விளங்கப்பண்ணுவார்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள். இதுவரையிலும் அவர்கள் விக்கிரகங்களைப் பின்பற்றிப்போனார்கள். இனிமேல் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பை நீக்கிப்போடுவார். அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களை அழைத்து வருவார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு மிகப்பெரிய இரட்சிப்புக்களை கட்டளையிடுவார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, கர்த்தர் தம்முடைய பாதுகாப்பை அவர்களை விட்டு விலக்கிக்கொள்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகிறது. அவர்களால் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் பலவீனராயிருக்கிறார்கள். சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக வந்து, அவர்களை எளிதாக மேற்கொள்கிறார்கள்.

கல்தேயர்கள் இஸ்ரவேல் வம்சத்தாரை சிறைப்பிடித்து, தங்கள் தேசத்திற்கு கொண்டு போகிறார்கள். கல்தேயர்கள் யூதா தேசத்தையும், எருசலேம் நகரத்தையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் அனுபவிக்கிற வேதனைகளுக்கு, அவர்களுடைய பாவங்களே காரணம் என்பதை புறஜாதி ஜனங்கள் அறிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமத்தினிமித்தமே சிறைப்பட்டுப் போனார்கள் என்று அப்பொழுது புறஜாதிகள் அறிந்துகொள்வார்கள்; அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினபடியால், கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு மறைத்துவிடுகிறார். கர்த்தர் அவர்களை, அவர்களுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்; அவர்கள் அனைவரும் பட்டயத்தால் விழுகிறார்கள். அவர்களுடைய அசுத்தத்துக்குத்தக்கதாகவும், அவர்களுடைய மீறுதல்களுக்குத்தக்கதாகவும், கர்த்தர் அவர்களுக்குச் செய்து, தம்முடைய முகத்தை அவர்களுக்கு மறைக்கிறார்" *(எசே 39:23,24).*

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஜனமாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களையும் தண்டிக்கிறார். கர்த்தர் தமக்கு அருகாமையில் இருக்கிறவர்களிடத்திலும், தமக்கு நெருக்கமாகயிருக்கிறவர்களிடத்திலும் பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார். அவர்களிடத்தில் காணப்படுகிற அசுத்தங்களையும், தீட்டுக்களையும், அருவருப்புக்களையும், பாவங்களையும் கர்த்தர் அதிகமாய் வெறுக்கிறார்.

"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களைமாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன்" (ஆமோ 3:2).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைத் தண்டிக்கும்போது, அவர்களை முற்றிலுமாய் அழித்துவிடவேண்டும் என்பது அவருடைய நோக்கமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்றும், அவர்கள் மறுபடியுமாய் தம்மிடத்தில் திரும்பி வரவேண்டும் என்றும், அவர்கள் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்றும் கர்த்தர் விரும்புகிறார். இதற்காகவே கர்த்தர் அவர்களை கண்டித்து, தண்டித்து திருத்துகிறார். தம்முடைய பிள்ளைகளை சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. சத்துருக்கள் தம்முடைய ஜனத்தை பட்சித்துப்போடுவதை கர்த்தர் ஒருபோதும் விரும்புகிறவரல்ல. கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தமாயிருந்தால்தான், அவர்களால் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க முடியும்.

"அவபக்தியான ஜனங்களுக்கு விரோதமாய் நான் அவனை அனுப்பி, எனக்குக் கோபமூட்டின ஜனத்தைக் கொள்ளையிடவும், சூறையாடவும், அதை வீதிகளின் சேற்றைப்போல் மிதித்துப்போடவும் அவனுக்குக் கட்டளைகொடுப்பேன். அவனோ அப்படி எண்ணுகிறதுமில்லை, அவன் இருதயம் அப்படிப்பட்டதை நினைக்கிறதுமில்லை; அநேகம் ஜாதிகளை அழிக்கவும், சங்கரிக்கவுமே தன் மனதிலே நினைவுகொள்ளுகிறான்" (ஏசா 10:6,7).

"யாக்கோபைச் சூறையிட்டு இஸ்ரவேலைக் கொள்ளைக்காரருக்கு ஒப்புக் கொடுக்கிறவர் யார்? அவர்கள் பாவஞ் செய்து விரோதித்த கர்த்தர் அல்லவோ? அவருடைய வழிகளில் நடக்க மனதாயிராமலும், அவருடைய வேதத்துக்குச் செவிகொடாமலும் போனார்களே" (ஏசா 42:24).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் தண்டிக்கிறார். தம்முடைய கோலால் அவர்களை அடித்து திருத்துகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களுக்கு மறுபடியும் இரக்கம் காண்பிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார். தங்களுக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை, இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்துகொள்ள வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருந்தார்கள். அவர்களை ஒருவரும் பயப்படுத்த வரவில்லை. அவர்கள் பயப்படுத்துவாரில்லாமல், தங்கள் தேசத்தில் சமாதானமாய் குடியிருந்தார்கள். கர்த்தரே தங்களை பாதுகாத்து பராமரிக்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தேசத்தில், சுகமாய்க் குடியிருக்கும்போது, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு துரோகம் செய்தார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரின் அவமானத்தையும், துரோகத்தையும் அவர்கள்மீதே சுமத்துகிறார். அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ச் செய்த எல்லா துரோகத்தையும் சுமந்து தீர்த்த பின்பு, கர்த்தர் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் யாக்கோபின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். கர்த்தர் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்புகிறார். இஸ்ரவேல் வம்சம் அனைத்திற்கும் இரங்குகிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்த நாமத்திற்காக வைராக்கியமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய உண்மையான மனமாற்றத்தைப் பார்த்து, அவர்களுக்கு இரங்குகிறார். கர்த்தர் தம்முடைய நீதியினால், இஸ்ரவேல் வம்சத்தாரை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாகவே, அவர்கள் இப்போது உபத்திரவத்தின் தேசத்திலிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலிருந்தபோது, அவர்களை ஒருவரும் பயப்படுத்தவில்லை. பயப்படுத்துவாரில்லாமல் அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாய்த் தங்கியிருந்தார்கள். இப்போது அவர்கள் அந்நிய தேசத்திலே சிதறிக்கிடக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதியாரும், எல்லா தேசத்தாரும் பயப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய ஜனம் பயப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சமாதான தேசத்திலே கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினார்கள். அதற்கு தண்டனையாக, கர்த்தர் அவர்களை பாடுகளின் தேசத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்திலே, பாடுகளை அனுபவிக்கும் போது, அவர்கள் தங்களைத் தாழ்த்த வேண்டும். கர்த்தருக்கு விரோதமாய்த் தாங்கள் செய்த துரோகங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அப்போது கர்த்தர் அவர்களுக்கு இரங்குவார். அவர்களுடைய சிறையிருப்பைத் திருப்புவார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை ஜனசதளங்களிலிருந்து திரும்பிவரப் பண்ணுவார். அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டுவருவார். அப்பொழுது திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக கர்த்தர் பரிசுத்தர் என்பது விளங்கும் (எசே 39:27).

இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலே வேதனைகளை அனுபவித்தபோது, அவர்களுக்கு அவமானமுண்டாயிற்று. கர்த்தருடைய ஜனம் அவமானப்பட்டபோது, கர்த்தருடைய பரிசுத்த நாமம் பரிசுத்தக்குலைச்சலாயிற்று. இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படுகிறது. கர்த்தருடைய ஜனம் பரிசுத்தமாகும்போது, கர்த்தருடைய நாமமும் பரிசுத்தப்படுத்தப்படுகிறது. கர்த்தர் தம்முடைய பரிசுத்த நாமத்திற்கு எப்போதுமே வைராக்கியமாயிருக்கிறவர். சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள், தங்கள் தேசத்திற்கு திரும்பி வரும்போது, கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது.

கர்த்தரே இஸ்ரவேல் வம்சத்தாரை புறஜாதிகளிடத்தில் சிறைப்பட்டுப்போகப்பண்ணினார். கர்த்தருடைய ஜனம் அந்நிய தேசத்திலே, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் இரக்கம் காண்பித்தார். அவர்களை சிறையிருப்பிலிருந்து விடுவித்தார். கர்த்தர் தம்முடைய ஜனத்தில் ஒருவரையும் அந்நிய தேசத்தில் வைக்காமல், அவர்களை அவர்களுடைய சுயதேசத்திலே திரும்பக் கூட்டிக்கொண்டு வந்தார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தர் தங்கள்மீது கிருபையாகயிருப்பதையும் தங்களைப் பாதுகாத்து பராமரிப்பதையும், தங்களை ஆளுகை செய்வதையும் அறிந்துகொள்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதையும் அறிந்து கொள்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் தம்முடைய ஆவியை ஊற்றுகிறார். கர்த்தர் இனிமேல் தம்முடைய பரிசுத்தமான முகத்தை அவர்களுக்கு மறைக்கமாட்டார். கர்த்தருடைய கிருபை அவருடைய ஜனத்திற்கு எப்போதும் கிடைக்கும். கர்த்தர் பூர்வகாலத்திலே, தம்முடைய ஜனத்தை பாதுகாத்து பராமரித்தது போல, இனிமேலும் பாதுகாப்பார், பராமரிப்பார் (எசே 39:28,29).

40 அதிகாரம்

எசேக்கியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய ஆலயத்திலே தண்ணீரை தரிசித்தார் (எசே 47:1). எசேக்கியேல் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனம், அந்த தீர்க்கதரிசனத்தோடு ஒத்திருக்கிறது. எசேக்கியேல் 40-ஆவது அதிகாரத்திலிருந்து எசேக்கியேல் 48-ஆவது அதிகாரம் வரையிலும் ஒரே தரிசனமே விவரிக்கப்பட்டிருக்கிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசன புஸ்தகத்தில், இந்த அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிற வேதவசனங்கள் புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமாயிருக்கிறது. ஏராளமான வேதபண்டிதர்கள் இந்த வசனங்களுக்கு விளக்கம் சொல்லுகிறார்கள். பழங்காலத்திலும், தற்காலத்திலும், எசேக்கியேலின் தரிசனத்திற்கு அநேகர் விரிவுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

எசேக்கியேல் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள், புரிந்து கொள்வதற்கு கடினமாகயிருந்தாலும், நாம் அதை ஜெபத்தோடும், பயபக்தியோடும் தியானிக்கவேண்டும். கர்த்தருடைய சமுகத்திலே மிகுந்த மனத்தாழ்மையோடு, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்கு வேதவாக்கியங்களில் மறைந்திருக்கிற இரகசியங்களை வெளிப்படுத்திக் காண்பிப்பார்.

எசேக்கியேலின் தீர்க்கதரிசன வார்த்தைகளில் ஒரு சிலவற்றை நம்மால் புரிந்துகொள்ள முடியாமல் போகலாம். நம்முடைய ஆத்தும இரட்சிப்பு இந்த வசனத்தினுடைய வியாக்கியானத்தின் அடிப்படையில் நமக்கு கொடுக்கப்படுவதில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்மை இரட்சிக்கிறவர். வேதவசனங்களைத் தியானிப்பதன் மூலமாக, கர்த்தருடைய கிருபைகளையும், அவருடைய இரக்கங்களையும், அவருடைய மகிமையையும், மகத்துவத்தையும் நம்மால் அதிகமாய் விளங்கிக்கொள்ள முடியும்.

எசேக்கியேல் மகிமையான தேவாலயத்தை தரிசிக்கிறார் (எசே 41,42 ஆகிய அதிகாரங்கள்). கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் வாசம்பண்ணுகிறார் (எசே 43-ஆவது அதிகாரம்). தேவாலயத்தில் ஆசாரியர்கள் ஊழியம் செய்யவேண்டும் (எசே 44-ஆவது அதிகாரம்). கானான் தேசம் பங்கு பிரிக்கப்படும் விதம். பரிசுத்த ஆலயத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிலம், நகரத்திற்கும் பிரபுவுக்கும் கொடுக்கப்பட வேண்டிய நிலம் (எசே 45-ஆவது அதிகாரம்). ஜனங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட வேண்டிய நிலம் (எசே 46-ஆவது அதிகாரம்).

பரிசுத்த தண்ணீரைப்பற்றிய தரிசனத்திற்கு பின்பு, பரிசுத்த நிலத்தின் எல்லைகளைப்பற்றிய தரிசனம் வருகிறது. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டிய நிலம். பரிசுத்த நகரத்தின் வாசல்களும், அதன் அளவுகளும் (எசே 47,48 -ஆகிய அதிகாரங்கள்).

சாலொமோனுடைய தேவாலயம், சமஸ்த இஸ்ரவேலிலே மகிமையுள்ளதாயிருந்தது. சாலொமோனின் ஆட்சிக்காலமே, இஸ்ரவேல் ராஜ்யத்திற்கு பொற்காலமாய் விளங்கிற்று. அந்தக் காலத்தில் கர்த்தருடைய ஆலயம் எவ்வாறு மகிமையோடிருந்தது என்பதை இந்த தரிசனங்கள் விவரிக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

முந்தின ஆலயத்தின் மகிமை மங்கிப்போயிற்று. இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய பாவங்களினால், தேவாலயத்தினால் வரும் ஆசீர்வாதங்களை இழந்துவிட்டார்கள். தங்களுக்கு எப்படிப்பட்ட இழப்புக்கள் வந்திருக்கிறது என்பதை அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இதற்காகவே கர்த்தர் எசேக்கியேலுக்கு இந்த தரிசனத்தைக் கொடுத்திருக்கிறார் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள். அங்கே குடியேறுவார்கள். தங்கள் தேசத்திலே அவர்கள் மற்றும் ஒரு ஆலயத்தைக் கர்த்தருக்கு கட்டவேண்டும். அந்த ஆலயம் கர்த்தருக்கு மகிமையுள்ளதாயிருக்கவேண்டும். கர்த்தருக்கு சொந்தமானதாகவும் இருக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய ஆலயத்தில், தம்முடைய ஜனத்தை சந்திப்பார். அங்கே அவர்களை ஆசீர்வதிப்பார். கர்த்தருடைய ஜனம், அவருடைய ஆலயத்திலே, அவருடைய பிரமாணத்தின் பிரகாரம், அவரை ஆராதிப்பார்கள். கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனை புதிய ஆலயத்திலே புதுப்பிக்கப்படும். பரிசுத்தமான ஆசாரியத்துவம் மறுபடியுமாய் ஸ்தாபிக்கப்படும்.

கர்த்தர் எசேக்கியேலுக்கு தம்முடைய ஆலயத்தைப்பற்றிய தரிசனத்தைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் புதிய ஆலயத்தை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் அதைவிட அதிகமாய், மேசியாவின் வருகையை எதிர்பார்க்கவேண்டும். தீர்க்கதரிசனங்களில் மேசியாவுக்கு "தாவீது" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எசேக்கியேல் கர்த்தருடைய ஆலயத்தை தரிசிக்கிறார். ஆலயத்தின் கட்டிடம் பெரிதாகவும், விஸ்தாரமாகவும் இருக்கிறது. எசேக்கியேலுக்கு ஆலயத்தின் அளவுகளெல்லாம் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த அளவுகளை பிரத்தியட்சமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றும், இதற்கு ஆவிக்குரிய விளக்கம் கொடுக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும் சுவிசேஷ சபையை கட்டியெழுப்பியிருக்கிறார்கள். கர்த்தருடைய சபைக்கும், எருசலேமில் கட்டப்பட்ட இரண்டாவது ஆலயத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. இரண்டாவது ஆலயம் இடிந்துபோகும்போது, சுவிசேஷ சபை கட்டியெழுப்பப்படுகிறது. எசேக்கியேல் கண்ட தரிசனம், பிரத்தியட்சமான ஆலயக்கட்டிடத்தையும், புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையையும் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

எசேக்கியேல் தேவாலயத்தையும், பலிபீடத்தையும், ஆசாரியர்களையும், பலிகளையும் தரிசிக்கிறார். இவையெல்லாம் கர்த்தருடைய மகிமையான ராஜ்யத்திலே அடையாளங்களாகயிருக்கிறது. கடைசி நாட்களிலே, கர்த்தருடைய சபை, இந்தப் பூமியில் மகிமையுள்ளதாயிருக்கும். எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்தில் பார்த்த தேவாலயத்தின் மகிமையைப்போல, சுவிசேஷ சபையினுடைய மகிமையுமிருக்கும்.

தேவாலயத்தையும் நகரத்தையும் பற்றிய பொதுவான தரிசனம் (எசே 40:1-4). ஆலயத்தினுடைய பொதுவான விவரம். ஆலயத்திற்குப் புறம்பே சுற்றிலுமிருக்கிற மதில் (எசே 40:5). கிழக்குமுக வாசல் (எசே 40:6-19). வடதிசைக்கு எதிரான வாசல் (எசே 40:20-23). தென்திசைக்கு எதிரான வாசல் (எசே 40:24-31). அறைகளும் தூண் ஆதாரங்களும் (எசே 40:32-28). பீடங்கள் (எசே 40:39-43). சங்கீதக்காரரின் அறை (எசே 40:44-47). ஆலய மண்டபம் (எசே 40:48,49).

தேவாலய தரிசனம்
எசே 40:1-4

எசே 40:1. நாங்கள் சிறைப்பட்டுப்போன இருபத்தைந்தாம் வருஷத்தின் ஆரம்பத்தில் முதலாம் மாதம் பத்தாந்தேதியாகிய அன்றே கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்தது, அவர் என்னை அவ்விடத்துக்குக் கொண்டுபோனார்; அப்பொழுது நகரம் அழிக்கப்பட்டுப் பதினாலு வருஷமாயிற்று.

எசே 40:2. தேவதரிசனங்களில் அவர் என்னை இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டுபோய், என்னை மகா உயரமான ஒரு மலையின்மேல் நிறுத்தினார்; அதின்மேல் தெற்காக ஒரு நகரம் கட்டியிருக்கிறதுபோல் காணப்பட்டது.

எசே 40:3. அவர் என்னை அங்கே கொண்டுபோனார்; இதோ, அங்கே ஒரு புருஷன் இருந்தார்; அவருடைய தோற்றம் வெண்கலமாயிருந்தது; அவர் கையில் சணற்கயிறும் ஒரு அளவுகோலும் இருந்தது; அவர் வாசலிலே நின்றார்.

எசே 40:4. அந்தப் புருஷன் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ கண்ணாரப்பார்த்து, காதாரக் கேட்டு, நான் உனக்குக் காண்பிப்பதெல்லாவற்றின் மேலும் உன் மனதை வை; நான் உனக்கு அவைகளைக் காண்பிக்கும்படி நீ இங்கே கொண்டுவரப்பட்டாய்; நீ காண்பதையெல்லாம் இஸ்ரவேல் வம்சத்தாருக்குத் தெரிவி என்றார்.

எசேக்கியேல் சிறைப்பட்டுப்போன இருபத்தைந்தாம் வருஷத்தின் ஆரம்பத்தில் முதலாம் மாதம் பத்தாந்தேதியாகிய அன்று கர்த்தருடைய கை எசேக்கியேலின்மீது அமருகிறது. சிறைப்பட்டுப் போன இருபத்தைந்தாம் வருஷம் என்பது, முதலாவது சிறையிருப்பின் முப்பத்துமூன்றாவது வருஷம் என்று வேதபண்டிதர்கள் கணக்கிட்டுச் சொல்லுகிறார்கள். இப்போது எருசலேம் நகரம் அழிக்கப்பட்டு பதிநாலு வருஷமாயிற்று.

கர்த்தர் எசேக்கியேலை எருசலேமுக்கு கொண்டுபோகிறார். எருசலேம் அழிந்துபோயிருக்கிறது. அது பாழும் வனாந்தரமுமாயிருக்கிறது. எருசலேமிலே இப்போது அழகில்லை. அது பார்ப்பதற்கே பரிதாபமாயிருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலை தேவதரிசனங்களில் இஸ்ரவேல் தேசத்திற்கு கொண்டு போகிறார் (எசே 40:2). இஸ்ரவேலின் மகிமையை சந்தோஷமாய்ப் பார்க்கும்படி கர்த்தர் அவரை அங்கே கொண்டுபோகிறார். கர்த்தர் எசேக்கியேலை மகாஉயரமான ஒரு மலையின்மேல் நிறுத்துகிறார்.

மோசே கானான் தேசத்தைப் பார்ப்பதற்கு பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினார். அதுபோலவே கர்த்தர் எசேக்கியேலை மகா உயரமான ஒரு மலையின் மேல் நிறுத்துகிறார்.

எசேக்கியேல் உயரமான மலையின் மேலிருந்து அந்த நகரத்தைப் பார்க்கிறார். அந்த மலையின்மேல் தெற்காக ஒரு நகரம் கட்டப்பட்டிருக்கிறது. நகரத்தைப்போலவே தேவாலயமும் பெரியதாயிருக்கிறது. நகரத்தில் மனுஷர் வாசம்பண்ணுகிறார்கள். தேவாலயத்தில் கர்த்தர் வாசம்பண்ணுகிறார். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சபையில் கர்த்தர் மனுஷர் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். பரலோகத்திலே மனுஷர் தேவன் மத்தியிலே வாசம்பண்ணுவார்கள்.

உயரமான மலையின்மேல், தெற்காக ஒரு நகரம் கட்டப்பட்டிருப்பதை எசேக்கியேல் பார்க்கிறார். கர்த்தர் எசேக்கியேலை அங்கே கொண்டுபோகிறார். அங்கே ஒரு புருஷன் இருக்கிறார். அவருடைய தோற்றம் வெண்கலமாயிருக்கிறது. இவர் இயேசுகிறிஸ்து என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே, விசுவாசிகளாகிய நாம், தேவனுடைய வீட்டிற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறோம்.

கர்த்தர் எசேக்கியேலை அந்த நகரத்திற்கு கொண்டு போகிறார். அங்கே ஒரு புருஷன் இருக்கிறார். அவருடைய தோற்றம் வெண்கலமாயிருக்கிறது. வெண்கலத்தோற்றம் என்பது, அவருடைய பிரகாசத்தையும், அவருடைய வல்லமையையும் காண்பிக்கிறது.

அந்தப் புருஷனுடைய கையில் சணற்கயிறும், ஒரு அளவுகோலும் இருக்கிறது. தேவாலயத்தின் அளவுகளை அல்லது நகரத்தின் அளவுகளை இந்த சணற்கயிற்றாலும் அளவுகோலாலும் அளக்கவேண்டும்.

அந்தப் புருஷன் எசேக்கியேலை நோக்கி, "மனுபுத்திரனே, நீ கண்ணாரப்பார்த்து, காதாரக் கேட்டு, நான் உனக்குக் காண்பிப்பதெல்லாவற்றின் மேலும் உன் மனதை வை; நான் உனக்கு அவைகளைக் காண்பிக்கும்படி நீ இங்கே கொண்டுவரப்பட்டாய்; நீ காண்பதையெல்லாம் இஸ்ரவேல் வம்சத்தாருக்குத் தெரிவி" (எசே 40:4) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் கர்த்தரிடத்திலிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தான் பெற்றுக்கொண்ட சத்தியத்தை, சபைக்கு சுத்தமாகவும், முழுவதுமாகவும் அறிவிக்கவேண்டும்.

தேவாலயத்தின் அளவுகள் எசே 40:5-26

எசே 40:5. இதோ, ஆலயத்துக்குப் புறம்பே சுற்றிலும் ஒரு மதில் இருந்தது; அந்தப்புருஷன் கையிலே ஆறுமுழ நீளமான ஒரு அளவுகோல் இருந்தது; ஒவ்வொரு முழமும் நமது கைமுழத்திலும் நாலு விரற்கடை அதிகமானது; அவர் அந்த மதிலை அளந்தார்; அகலம் ஒரு கோலாகவும் உயரம் ஒரு கோலாகவும் இருந்தது.

எசே 40:6. பின்பு அவர் கிழக்குமுக வாசலுக்கு வந்து, அதின் படிகளின்மேல்ஏறி, வாசற்படியை ஒரு கோல் அகலமாகவும், மறுவாசற்படியை ஒரு கோல் அகலமாகவும் அளந்தார்.

எசே 40:7. ஒவ்வொரு அறையும் ஒரு கோல் நீளமும் ஒரு கோல் அகலுமாயிருந்தது; அறைவீடுகளுக்கு நடுவே ஐந்துமுழ இடம் விட்டிருந்தது; வாசலின் மண்டபத்தருகே உள்வாசற் படி ஒரு கோலளவாயிருந்தது.

எசே 40:8. வாசலின் மண்டபத்தையும் உள்ளே கோலளவாக அளந்தார்.

எசே 40:9. பின்பு வாசலின் மண்டபத்தை எட்டுமுழமாகவும், அதின் தூணாதாரங்களை இரண்டு முழமாகவும் அளந்தார்; வாசலின் மண்டபம் உட்புறத்திலிருந்தது.

எசே 40:10. கீழ்த்திசைக்கெதிரான வாசலின் அறைகள் இந்தப்புறத்தில் மூன்றும், அந்தப்புறத்தில் மூன்றுமாயிருந்தது; அவைகள் மூன்றுக்கும் ஒரே அளவும், இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் இருந்த தூணாதாரங்களுக்கு ஒரே அளவும் இருந்தது.

எசே 40:11. பின்பு வாசல் நடையின் அகலத்தைப் பத்துமுழமாகவும், வாசலின் நீளத்தைப் பதின்மூன்று முழமாகவும் அளந்தார்.

எசே 40:12. அறைகளுக்குமுன்னே இந்தபுறத்தில் ஒரு முழ இடமும் அந்தப்புறத்தில் ஒரு முழ இடமும் இருந்தது; ஒவ்வொரு அறை இந்தப்புறத்தில் ஆறு முழமும் அந்தப்புறத்தில் ஆறு முழமுமாயிருந்தது.

எசே 40:13. பின்பு வாசலில் இருந்த அறையின் மெத்தையினின்று மற்ற அறையின் மெத்தைமட்டும் இருபத்தைந்து முழமாக அளந்தார்; கதவுக்குக் கதவு நேராயிருந்தது.

எசே 40:14. தூணாதாரங்களை அறுபது முழமாக அளந்தார்; இந்தத் தூணாதாரங்களின் அருகே சுற்றிலும் முன்வாசலின் முற்றம் இருந்தது.

எசே 40:15. பிரவேச வாசலின் முகப்புத்துவக்கி, உட்புறவாசல் மண்டபமுகப்புமட்டும் ஐம்பது முழமாயிருந்தது.

எசே 40:16. வாசலுக்கு உட்புறமாகச் சுற்றிலுமுள்ள அறைகளுக்கும் அவைகளின் தூணாதாரங்களுக்கும் ஒடுக்கமான ஜன்னல்கள் இருந்தது; மண்டபங்களிலும் அப்படியே இருந்தது; உட்புறமாய்ச் சுற்றிலும் அந்த ஜன்னல்களும் தூணாதாரங்களில் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இருந்தது.

எசே 40:17. பின்பு என்னை வெளிப்பிராகாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார்; அங்கே அறைவீடுகளும், பிராகாரத்தின் சுற்றிலும் பதித்த தளவரிசையும் இருந்தது; அந்தத் தளவரிசையின்மேல் முப்பது அறைவீடுகள் இருந்தது.

எசே 40:18. வாசலுக்குப் பக்கத்திலும் வாசல்களின் நீளத்துக்கு எதிரிலுமுள்ள அந்தத் தளவரிசை தாழ்வான தளவரிசையாயிருந்தது.

எசே 40:19. பின்பு அவர் கீழ்வாசலின் முகப்புதுவக்கி, உட்பிராகாரத்துப் புறமுகப்புமட்டுமுள்ள விசாலத்தை அளந்தார்; அது கிழக்கும் வடக்கும் நூறு முழமாயிருந்தது.

எசே 40:20. வெளிப்பிராகாரத்துக்கு அடுத்த வடதிசைக்கு எதிரான வாசலின் நீளத்தையும் அகலத்தையும் அளந்தார்.

எசே 40:21. அதற்கு இப்புறத்தில் மூன்று அறைகளும் அப்புறத்தில் மூன்று அறைகளும் இருந்தது; அதின் தூணாதாரங்களும் அதின் மண்டபங்களும் முதல் வாசலின் அளவுக்குச் சரியாயிருந்தது; அதின் நீளம் ஐம்பதுமுழமும், அகலம் இருபத்தைந்து முழமுமாயிருந்தது.

எசே 40:22. அதின் ஜன்னல்களும், அதின் மண்டபங்களும், அதின்மேல் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும், கீழ்த்திசைக்கு எதிரான வாசலின் அளவுக்குச் சரியாயிருந்தது; அதில் ஏறுகிறதற்கு ஏழு படிகளிருந்தது; அதின் மண்டபங்கள் அவைகளுக்கு முன்னாக இருந்தது.

எசே 40:23. வடதிசையிலும் கீழ்த்திசையிலுமுள்ள ஒவ்வொரு வாசலுக்கு எதிராக உட்பிரகாரத்துக்கும் வாசல்கள் இருந்தது; ஒரு வாசல்துவக்கி மற்ற வாசல்மட்டும் நூறு முழமாக அளந்தார்.

எசே 40:24. பின்பு என்னைத் தென்திசைக்கு அழைத்துக்கொண்டு போனார்; அங்கே தென்திசைக்கு எதிரான வாசல் இருந்தது; அதின் தூணாதாரங்களையும் அதின் மண்டபங்களையும் அதற்குரிய அளவின்படி அளந்தார்.

எசே 40:25. அந்த ஜன்னல்களுக்குச் சரியாக அதற்கும் அதின் மண்டபங்களுக்கும் ஜன்னல்கள் சுற்றிலும் இருந்தது; நீளம் ஐம்பதுமுழமும் அகலம் இருபத்தைந்து முழமுமாயிருந்தது.

எசே 40:26. அதில் ஏறுகிறதற்கு ஏழு படிகளிலிருந்தது; அதற்கு முன்பாக அதின் மண்டபங்களும் இருந்தது; அதின் தூணாதாரங்களில் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இந்தப்புறத்தில் ஒன்றும் அந்தப்புறத்தில் ஒன்றுமாக இருந்தது.

புருஷனுடைய கையில் சணற்கயிறும் ஒரு அளவுகோலும் இருக்கிறது. அந்த அளவுகோலின் சரியான அளவு இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. புருஷன் கையிலே இருக்கிற அளவுகோல் ஆறுமுழ நீளமாகும். இது மனுஷருடைய பொதுவான அளவு அல்ல. இது தேவாலயத்தின் அளவு. ஒவ்வொரு முழமும், நமது கை முழத்திலும், நாலு விரற்கடை அதிகமானது. ஒரு முழம் என்பது பொதுவாக பதினெட்டு அங்குலங்கள்.

"முழங்களின்படி அளக்கும் பலிபீடத்தின் அளவுகளாவன: ஒரு கைமுழமும் நாலு விரற்கடையும் கொண்டது ஒரு முழமாகும்; அதின்படி சுற்றாதாரம், ஒரு முழ உயரமும், ஒரு முழ அகலமும், அதின் ஓரத்தைச் சுற்றிலுமுள்ள விளிம்பு ஒரு ஜாணுமாயிருக்கும்; இது பலிபீடத்தின் மேற்புறம்" (எசே 43:13).

புருஷன் கையிலிருந்த அளவுகோல் ஆறுமுழ நீளம் என்பது, மனுஷருடைய பொதுவான ஆறு முழ நீளத்தைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். ஒரு முழம் என்பது மனுஷருடைய கைமுழத்தின் அளவாகவே இருக்கும் என்பது இவர்களுடைய வியாக்கியானம்.

தேவாலயத்திற்கு புறம்பே சுற்றிலும் ஒரு மதில் இருக்கிறது. உலகத்திற்குள் சபை இருக்கிறது. உலகம் சபைக்குள் பிரவேசித்து விடக்கூடாது. உலகத்திற்கும் சபைக்கும் பிரிவு இருக்கவேண்டும். அந்தப் பிரிவை விளக்குவதற்காகவே, தேவாலயத்தைச் சுற்றிலும், இந்த மதில் இருக்கிறது.

அந்தப் புருஷன் மதிலை அளைக்கிறார். அதன் அகலம் ஒரு கோலாகவும், அதன் உயரம் ஒரு கோலாகவும் இருக்கிறது.

தேவாலயத்திற்குப் புறம்பே சுற்றிலுமிருக்கிற மதில்களில் அநேக வாசல்கள் இருக்கிறது. அந்தப் புருஷன் முதலாவதாக கிழக்குமுக வாசலுக்கு வருகிறார். தேவாலத்தின் உள்பகுதிக்கு, கிழக்குமுக வாசல்வழியாக பிரவேசிப்பது வழக்கம். தேவாலயத்தின் மேற்கு பகுதியில் மகா பரிசுத்த ஸ்தலம் இருக்கிறது.

அந்தப் புருஷன் கிழக்குமுக வாசலுக்கு வருகிறார். அதன் படிகளின்மேல் ஏறுகிறார். நாம் கர்த்தரை ஆராதிக்கப்போகும்போது, நம்முடைய இருதயம் உயரவேண்டும். நாம் பரலோகத்தின் கர்த்தரை நோக்கி நம்முடைய கண்களை ஏறெடுக்கவேண்டும். நம்முடைய பரிசுத்தமான கரங்களை வானத்திற்கு நேராக உயர்த்தவேண்டும். வானம் கர்த்தருடைய சிங்காசனம். நாம் கர்த்தருடைய சமுகத்தில் உயரே போகவேண்டும் என்பதற்கு அடையாளமாக, இங்கே அந்தப் புருஷன் படிகளின்மேல் ஏறுகிறார். வாசற்படியை ஒரு கோல் அகலமாகவும், மறுவாசற்படியை ஒரு கோல் அகலமாகவும் அளக்கிறார் (எசே 40:6).

"இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது" (வெளி 4:1).

வாசல்களுக்கு பக்கத்தில் அறைவீடுகள் இருக்கிறது. ஒவ்வொரு அறையும் ஒரு கோல் நீளமும், ஒரு கோல் அகலமுமாயிருக்கிறது. அறைவீடுகளுக்கு நடுவே ஐந்து முழம் இடம் விட்டிருக்கிறது. வாசலின் மண்டபத்தருகே உள்வாசற்படி ஒரு கோல் அளவாயிருக்கிறது. ஒவ்வொரு அறைவீடும் பத்து சதுர அடிகளாகும் (எசே 40:7).

கர்த்தருடைய ஆலயத்தில் சேவை செய்கிறவர்கள் இந்த அறைவீடுகளில் தங்கியிருப்பார்கள். அறைவீடுகளெல்லாம் ஒரே அளவாயிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்தில் சேவை செய்கிற எல்லோருக்கும் ஒரே மாதிரியான வசதிகளே செய்து கொடுக்கப்படுகிறது. அங்கே சமத்துவம் நிலவுகிறது.

வாசல்களுக்கு அருகே அநேக அறைவீடுகள் உள்ளன. "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்" (யோவா 14:2).

பரலோகத்திலே அநேக வாசஸ்தலங்கள் இருப்பதுபோல, பூமியிலுள்ள தேவாலயத்திலும் அநேக அறைவீடுகள் உள்ளன. இந்த அறைவீடுகளுக்கு, வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் சொல்லும்போது, இவை ஒவ்வொன்றும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சபைப்பிரிவுகளைக் குறிக்கும் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பூமியில் ஏராளமான சபைப்பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு சபைப்பிரிவிலும் திரளான விசுவாசிகள் இருக்கிறார்கள். இந்த சபைப்பிரிவுகளெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, உலக சபையாகயிருக்கிறது. இதுவே கர்த்தருடைய பிரதான ஆலயம்.

அந்தப் புருஷன் வாசலின் மண்டபத்தை உள்ளே கோல் அளவாகவும் அளக்கிறார். பின்பு வாசலின் மண்டபத்தை எட்டுமுழமாகவும், அதின் தூணாதாரங்களை இரண்டு முழமாகவும் அளக்கிறார்; வாசலின் மண்டபம் உட்புறத்திலிருக்கிறது. கீழ்த்திசைக்கெதிரான வாசலின் அறைகள் இந்தப்புறத்தில் மூன்றும், அந்தப்புறத்தில் மூன்றுமாயிருக்கிறது; அவைகள் மூன்றுக்கும் ஒரே அளவும், இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் இருந்த தூணாதாரங்களுக்கு ஒரே அளவும் இருக்கிறது.

பின்பு அந்தப் புருஷன் வாசல் நடையின் அகலத்தைப் பத்துமுழமாகவும், வாசலின் நீளத்தைப் பதின்மூன்று முழமாகவும் அளக்கிறார். அறைகளுக்குமுன்னே இந்தபுறத்தில் ஒரு முழ இடமும் அந்தப்புறத்தில் ஒரு முழ இடமும் இருக்கிறது; ஒவ்வொரு அறை இந்தப்புறத்தில் ஆறு முழமும் அந்தப்புறத்தில் ஆறு முழமுமாயிருக்கிறது (எசே 40:9-12).

பின்பு அந்தப் புருஷன் வாசலில் இருந்த அறையின் மெத்தையினின்று மற்ற அறையின் மெத்தைமட்டும் இருபத்தைந்து முழமாக அளக்கிறார்; கதவுக்குக் கதவு நேராயிருக்கிறது (எசே 40:13).

அந்தப் புருஷன் தூணாதாரங்களை அறுபது முழமாக அளக்கிறார்; இந்தத் தூணாதாரங்களின் அருகே சுற்றிலும் முன்வாசலின் முற்றம் இருக்கிறது. பிரவேச வாசலின் முகப்புத்துவக்கி, உட்புறவாசல் மண்டபமுகப்புமட்டும் ஐம்பது முழமாயிருக்கிறது. (எசே 40:14-15).

தூணாதாரங்கள் அறுபது முழமாகும் (எசே 40:14). இந்தத் தீர்க்கதரிசனம் கோரேசின் கட்டளையின் மூலமாய் நிறைவேறிற்று. எருசலேமிலே தேவாலயம் மறுபடியும் கட்டுவதற்கு கோரேசு ஆணையிடுகிறார். தேவாலயத்தின் உயரம் அறுபது முழமாயிருக்கவேண்டும் என்பது கோரேசு ராஜாவின் கட்டளையாகும்.

"ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்தில், கோரேஸ் ராஜா எருசலேமிலிருந்த தேவாலயத்தைக் குறித்துப் பிறப்பித்த உத்தரவு என்னவென்றால்: தேவாலயமானது பலிசெலுத்தப்பட்டுவந்த ஸ்தானத்திலே கட்டப்படக்கடவது; அதின் அஸ்திபாரங்கள் பலமாயிருப்பதாக; அது அறுபது முழ உயரமும், அறுபது முழ அகலமுமாயிருக்க வேண்டும்" (எஸ்றா 6:3).

வாசலுக்கு உட்புறமாகச் சுற்றிலுமுள்ள அறைகளுக்கும் அவைகளின் தூணாதாரங்களுக்கும் ஒடுக்கமான ஜன்னல்கள் இருக்கிறது; மண்டபங்களிலும் அப்படியே இருக்கிறது; உட்புறமாய்ச் சுற்றிலும் அந்த ஜன்னல்களும் தூணாதாரங்களில் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இருக்கிறது (எசே 40:16).

சிறிய அறைகளில் ஒடுக்கமான ஜன்னல்கள் இருக்கிறது. இந்த ஜன்னல்கள் வழியாக பரலோகத்திலிருந்து, தேவாலயத்திற்குள், வெளிச்சம் உட்பிரவேசிக்கும். சபையானது பரலோகத்தின் வெளிச்சத்தினால் நிரம்பியிருக்கவேண்டும். பரலோகத்தின் வெளிச்சம் நமக்கு கிடைத்தால்தான் மறைவான பரமரகசியங்களை நம்மால் அறிந்துகொள்ள முடியும்.

அறைவீடுகள் சிறியதாகயிருந்தாலும் அதற்குள்ளும் வெளிச்சம் பிரவேசிக்கிறது. இந்த ஜன்னல்களோ பெரிய ஜன்னல்களல்ல. இவை ஒடுக்கமான ஜன்னல்கள். கர்த்தர் பூமியிலுள்ள சபைக்கு தம்முடைய பரமரகசியங்களை ஓரளவு மாத்திரமே வெளிப்படுத்தியிருக்கிறார். இனிமேல் வரப்போகிற மகிமையோடு ஒப்பிடும்போது, நமக்கு வெளிப்படுத்தப்பட்ட மகிமை மிகவும் கொஞ்சம். பரலோகத்தின் மகிமை ஒடுக்கமான ஜன்னல்கள் வழியாகவே நமக்கு வருகிறது. நாம் பரமகானானுக்குள் பிரவேசிக்கும்போது, தேவனுடைய மகிமையை பூரணமாய் தரிசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வோம்.

எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்தில் தேவாலயத்தைப் பார்க்கிறார். தேவாலயத்தில் பிரகாரங்கள் இருக்கிறது. அந்தப் புருஷன் எசேக்கியேலை வெளிப்பிராகாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோகிறார்; அங்கே அறைவீடுகளும், பிராகாரத்தின் சுற்றிலும் பதித்த தளவரிசையும் இருக்கிறது; அந்தத் தளவரிசையின்மேல் முப்பது அறைவீடுகள் இருக்கிறது. வாசலுக்குப் பக்கத்திலும் வாசல்களின் நீளத்துக்கு எதிரிலுமுள்ள அந்தத் தளவரிசை தாழ்வான தளவரிசையாயிருக்கிறது (எசே 40:17,18).

தேவாலயத்திற்கு வெளியே ஒரு வெளிப்பிரகாரமும், அதற்குள்ளே ஒரு வெளிப்பிரகாரம், அதற்குள்ளே உட்பிரகாரம், அதற்கும் உள்ளே மற்றொரு உட்பிரகாரமும் இருக்கிறது. உள்ளே இருக்கிற உட்பிரகாரத்தில் ஆசாரியர்கள் மாத்திரமே பிரவேசிக்க முடியும். இந்த உட்பிரகாரங்களில், தேவாலயத்தில் சேவை செய்கிற ஆசாரியர்களும், லேவியர்களும் தங்கியிருப்பார்கள்.

உட்பிரகாரத்தைச் சுற்றிலும் ஜன்னல்களும், அதிலிருக்கிற தூணாதாரங்களில் சித்தரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இருக்கிறது. பேரீச்ச மரம் என்பது பனைமரத்தைக் குறிக்கிற வார்த்தை. நீதிமான் பனையைப்போல் செழிப்பான். அவர்கள் லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவார்கள். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள் (சங் 92:12,13). இந்த வாக்குத்தத்தத்திற்கு அடையாளமாக தூணாதாரங்களில் சித்தரிக்கப்பட்ட பேரீச்சமரங்கள் இருக்கிறது.

எசேக்கியேல் பிரகாரத்தைச் சுற்றிலுமுள்ள தளவரிசையைப் பார்க்கிறார். அங்கே அறைவீடுகளும், பிராகாரத்தின் சுற்றிலும் பதித்த தளவரிசையும் இருக்கிறது; அந்தத் தளவரிசையின்மேல் முப்பது அறைவீடுகள் இருக்கிறது. வாசலுக்குப் பக்கத்திலும் வாசல்களின் நீளத்துக்கு எதிரிலுமுள்ள அந்தத் தளவரிசை தாழ்வான தளவரிசையாயிருக்கிறது (எசே 40:17,18).

"பதித்த தளவரிசை" என்னும் வார்த்தை பளிங்கு கற்களைக் குறிக்கும். இவை எரிகிற அக்கினி தழலைப்போல பிரகாசமாயிருக்கும். இவையெல்லாம் விலை உயர்ந்த கற்கள். இவற்றிற்கு உலகப்பிரகாரமாக அதிக விலைமதிப்புள்ளது. நாம் கர்த்தருடைய சமுகத்தில், அவருக்கு சமீபமாக கிட்டிச் சேரவேண்டுமென்றால், இந்த உலகத்தின் மகிமை, உலக மேன்மை, உலக ஐசுவரியம் ஆகியவையெல்லாமே, நம்முடைய கால்களின் கீழிருக்கவேண்டும். அவையெல்லாம் தளவரிசையில் பதிக்கப்பட்டதுபோல, பதிக்கப்பட்டிருக்கவேண்டும். அதன்மீது நாம் நடந்து செல்லவேண்டும். காலுக்கு கீழ் இருக்கவேண்டியதை நம்முடைய தலைக்குமேல் கிரீடம் போல் தூக்கி வைத்துக்கொள்ளக்கூடாது.

அந்தப் புருஷன் வெளிப்பிராகாரத்துக்கு அடுத்த வடதிசைக்கு எதிரான வாசலின் நீளத்தையும் அகலத்தையும் அளக்கிறார். அதற்கு இப்புறத்தில் மூன்று அறைகளும் அப்புறத்தில் மூன்று அறைகளும் இருக்கிறது; அதின் தூணாதாரங்களும் அதின் மண்டபங்களும் முதல் வாசலின் அளவுக்குச் சரியாயிருக்கிறது; அதின் நீளம் ஐம்பதுமுழமும், அகலம் இருபத்தைந்து முழமுமாயிருக்கிறது (எசே 40:20,21).

வெளிப்பிரகாரத்திலே வடதிசைக்கு எதிராக வாசலும் (எசே 40:20), தென்திசைக்கு எதிராக வாசலும் (எசே 40:24) இருக்கிறது. அதுபோலவே கீழ்த்திசையிலும் ஒரு வாசல் உள்ளது (எசே 40:23). அந்த வாசல்களின் அளவுகளெல்லாம் ஒன்றுபோல் சரியாகயிருக்கிறது.

வெளிப்பிரகாரத்திலே அறைகள் உள்ளன. அதின் ஜன்னல்களும், அதின் மண்டபங்களும், அதின்மேல் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும், கீழ்த்திசைக்கு எதிரான வாசலின் அளவுக்குச் சரியாயிருக்கிறது; அதில் ஏறுகிறதற்கு ஏழு படிகளிருக்கிறது; அதின் மண்டபங்கள் அவைகளுக்கு முன்னாக இருக்கிறது (எசே 40:22).

தேவாலயத்தில், கீழ்த்திசையில் வாசலிருப்பதுபோல, வடதிசையிலும் வாசல் இருக்கிறது. கீழ்த்திசை வாசல் வழியாக, கிழக்கிலிருந்து வரும் புத்திரர்கள் ஆலயத்திற்குள் பிரவேசிப்பார்கள். அக்காலத்தில் கிழக்கு தேசத்தார் ஐசுவரியவான்களாகவும், ஞானிகளாகவும் இருந்தார்கள்.

தேவாலயத்தின் வடதிசையிலும், தென்திசையிலும் வாசல்கள் இருக்கிறது. இந்த திசைகளிலுள்ள தேசத்தார் அக்காலத்தில் தரித்திரராகவும், ஞானத்தில் குறைவுள்ளவர்களாகவும் நாகரீகத்தில் குறைவுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்களும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கலாம். கர்த்தருடைய ஆலயத்திற்குள் பட்சபாதம் எதுவுமில்லை. எல்லோருமே கர்த்தரை ஆராதிக்கலாம்.

வடதிசையிலும் கீழ்த்திசையிலுமுள்ள ஒவ்வொரு வாசலுக்கு எதிராக உட்பிரகாரத்துக்கும் வாசல்கள் இருக்கிறது; அந்தப் புருஷன் ஒரு வாசல்துவக்கி மற்ற வாசல்மட்டும் நூறு முழமாக அளக்கிறார். பின்பு அந்தப் புருஷன் எசேக்கியேலைத் தென்திசைக்கு அழைத்துக்கொண்டு போகிறார்; அங்கே தென்திசைக்கு எதிரான வாசல் இருக்கிறது; அந்தப் புருஷன் அதின் தூணாதாரங்களையும் அதின் மண்டபங்களையும் அதற்குரிய அளவின்படி அளக்கிறார் (எசே 40:23,24).

அந்த ஜன்னல்களுக்குச் சரியாக அதற்கும் அதின் மண்டபங்களுக்கும் ஜன்னல்கள் சுற்றிலும் இருக்கிறது; நீளம் ஐம்பதுமுழமும் அகலம் இருபத்தைந்து முழமுமாயிருக்கிறது. அதில் ஏறுகிறதற்கு ஏழு படிகளிலிருக்கிறது; அதற்கு முன்பாக அதின் மண்டபங்களும் இருக்கிறது; அதின் தூணாதாரங்களில் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இந்தப்புறத்தில் ஒன்றும் அந்தப்புறத்தில் ஒன்றுமாக இருக்கிறது (எசே 40:25,26).

புதிய எருசலேமிலே பன்னிரண்டு வாசல்கள் இருக்கும். ஒவ்வொரு திசைக்கும் மூன்று வாசல்கள் "அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன" (வெளி 21:12).

கர்த்தருடைய ஆலயத்திலே, இந்த உலகத்தின் எல்லா திசைகளிலுமிருந்து, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் வந்து பந்தியிருப்பார்கள். "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்" (மத் 8:11).

உட்பிரகாரம்
எசே 40:27-38

எசே 40:27. உட்பிரகாரத்துக்கும் ஒரு வாசல் தென்திசைக்கு எதிராக இருந்தது; தென்திசையிலுள்ள ஒரு வாசல்துவக்கி மற்ற வாசல்மட்டும் நூறுமுழமாக அளந்தார்.

எசே 40:28. பின்பு அவர் தெற்கு வாசலால் என்னை உட்பிரகாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அந்த அளவுக்குச் சரியாகத் தெற்கு வாசலையும் அளந்தார்.

எசே 40:29. அதின் அறைகளும், அதின் தூணாதாரங்களும், அதின் மண்டபங்களும், அந்த அளவுக்குச் சரியாக இருந்தது, அதற்கும் அதின் மண்டபங்களுக்கும் ஜன்னல்கள் சுற்றிலும் இருந்தது; நீளம் ஐம்பது முழமும் அகலம் இருபத்தைந்து முழமுமாயிருந்தது.

எசே 40:30. இருபத்தைந்து முழ நீளமும் ஐந்துமுழ அகலமுமான மண்டபங்கள் சுற்றிலும் இருந்தது.

எசே 40:31. அதின் மண்டபங்கள் வெளிப்பிராகாரத்தில் இருந்தது; அதின் தூணாதாரங்களில் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இருந்தது; அதில் ஏறுகிறதற்கு எட்டுப்படிகள் இருந்தது.

எசே 40:32. பின்பு அவர் கீழ்த்திசை வழியாய் என்னை உட்பிராகாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அந்த அளவுக்குச் சரியாக அந்த வாசலையும் அளந்தார்.

எசே 40:33. அதின் அறைகளும் அதின் தூணாதாரங்களும் அதின் மண்டபங்களும் அந்த அளவுகளுக்குச் சரியாக இருந்தது; அதற்கும் அதின் மண்டபங்களுக்கும் ஜன்னல்கள் சுற்றிலும் இருந்தது; நீளம் ஐம்பது முழமும் அகலம் இருபத்தைந்து முழமுமாயிருந்தது.

எசே 40:34. அதின் மண்டபங்கள் வெளிப்பிராகாரத்தில் இருந்தது; அதின் தூணாதாரங்களில் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இருந்தது; அதில் ஏறுகிறதற்கு எட்டுப் படிகள் இருந்தது.

எசே 40:35. பின்பு அவர் என்னை வடக்குவாசலுக்கு அழைத்துக்கொண்டு போய், அந்த அளவுக்குச் சரியாய் அதின் வாசலை அளந்தார்.

எசே 40:36. அதின் அறைகளும் அதின் தூணாதாரங்களும் அதின் மண்டபங்களும் அளக்கப்பட்டது; அதைச் சுற்றி ஜன்னல்களும் இருந்தது; நீளம் ஐம்பது முழமும் அகலம் இருபத்தைந்து முழமுமாயிருந்தது.

எசே 40:37. அதின் தூணாதாரங்கள் வெளிப்பிராகாரத்தில் இருந்தது; இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் அதின் தூணாதாரங்களில் பேரீச்ச மரங்களும் சித்திரிக்கப்பட்டிருந்தது; அதில் ஏறுவதற்கு எட்டுப்படிகள் இருந்தது.

எசே 40:38. அதின் அறைகளும் அதின் கதவுகளும் வாசல்களின் தூணாதாரங்களுக்கு அருகில் இருந்தது; அங்கே தகனபலிகளைக் கழுவுவார்கள்.

எசேக்கியேல் தேவாலயத்தின் உட்பிரகாரத்தை தரிசிக்கிறார். உட்பிரகாரத்தின் அளவு விவரம் தென்திசையிலுள்ள வாசலிலிருந்து துவங்குகிறது (எசே 40:27). அங்கே இருந்து அது கீழ்திசை வரையிலும் போகிறது (எசே 40:32). அதன் பின்பு அந்த மனுஷனும் எசேக்கியேலும் வடக்கு வாசலுக்கும் போகிறார்கள் (எசே 40:35).

உட்பிரகாரத்திற்கு போகும் வாசல்களெல்லாம் சரியான அளவிலிருக்கிறது. வெளிப்பிரகாரத்திலுள்ள வாசல்களின் அளவைப்போலவே, உட்பிரகாரத்தின் அளவும் சரியாக இருக்கிறது. கர்த்தருடைய கிருபை வெளிப்பிரகாரத்தில் எப்படி வெளிப்படுகிறதோ, அப்படியே உட்பிரகாரத்திலும் வெளிப்படுகிறது. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தருடைய கிருபை மாறாதது. அது பொதுவானது. ஆரம்ப விசுவாசிகளிடத்தில் கர்த்தருடைய கிருபை எவ்வாறு வெளிப்படுகிறதோ, அப்படியே தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து முதிர்ச்சி பெற்ற மூத்தவிசுவாசிகளிடத்திலும் வெளிப்படும்.

உட்பிரகாரத்துக்கும் ஒரு வாசல் தென்திசைக்கு எதிராக இருக்கிறது; தென்திசையிலுள்ள ஒரு வாசல்துவக்கி மற்ற வாசல்மட்டும் நூறுமுழமாக அந்த மனுஷன் அளக்கிறார். பின்பு அந்த மனுஷன் தெற்கு வாசலால் எசேக்கியேலை உட்பிரகாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அந்த அளவுக்குச் சரியாகத் தெற்கு வாசலையும் அளக்கிறார் (எசே 40:27,28).

அதின் அறைகளும், அதின் தூணாதாரங்களும், அதின் மண்டபங்களும், அந்த அளவுக்குச் சரியாக இருக்கிறது. அதற்கும் அதின் மண்டபங்களுக்கும் ஜன்னல்கள் சுற்றிலும் இருக்கிறது; நீளம் ஐம்பது முழமும் அகலம் இருபத்தைந்து முழமுமாயிருக்கிறது. இருபத்தைந்து முழ நீளமும் ஐந்துமுழ அகலமுமான மண்டபங்கள் சுற்றிலும் இருக்கிறது (எசே 40:29,30).

அதின் மண்டபங்கள் வெளிப்பிராகாரத்தில் இருக்கிறது. அதின் தூணாதாரங்களில் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இருக்கிறது அதில் ஏறுகிறதற்கு எட்டுப்படிகள் இருக்கிறது (எசே 40:31).

உட்பிரகாரத்திற்கு போகும் வாசல் வழியாக வெளிப்பிரகாரத்திற்கு ஏறிப்போவதற்கு எட்டு படிகள் இருக்கிறது. ஒவ்வொரு வாசலிலும் எட்டு படிகள் இருக்கிறது. இந்த தரிசனம் மறுபடியுமாய் எசேக்கியேலுக்கு உறுதிபண்ணப்படுகிறது.

அதின் மண்டபங்கள் வெளிப்பிராகாரத்தில் இருக்கிறது; அதின் தூணாதாரங்களில் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் இருக்கிறது. அதில் ஏறுகிறதற்கு எட்டுப் படிகள் இருக்கிறது (எசே 40:34).

அதின் தூணாதாரங்கள் வெளிப்பிராகாரத்தில் இருக்கிறது; இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் அதின் தூணாதாரங்களில் பேரீச்சமரங்களும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது; அதில் ஏறுவதற்கு எட்டுப்படிகள் இருக்கிறது (எசே 40:37).

நாம் இந்த உலகத்தையும், இந்த உலகத்தின் காரியங்களையும் விட்டு, பரலோகத்திற்கு நேராக நம்முடைய கண்களை ஏறெடுக்கவேண்டும். நாம் ஆவிக்குரிய காரியங்களில் உயரவேண்டும். இதற்காகவே கர்த்தர் எசேக்கியேலுக்கு எட்டு படிகளைப்பற்றிய தரிசனத்தைக் காண்பிக்கிறார்

சாதாரண ஜனங்கள் வெளிப்பிரகாரத்திலிருந்து கர்த்தரை ஆராதிப்பார்கள். வெளிப்பிரகாரத்தில் ஏறுகிறதற்கு ஏழுபடிகள் மாத்திரமே இருக்கிறது (எசே 40:22). உட்பிரகாரத்திலோ ஏறுகிறதற்கு எட்டு படிகள் இருக்கிறது. உட்பிரகாரத்தில், தேவாலயத்தில் கர்த்தருக்கு சேவை செய்கிற ஆசாரியரும் லேவியரும் இருப்பார்கள்.

பொதுஜனங்கள் கூடிவரும் வெளிப்பிரகாரத்தில், ஏறுகிறதற்கு ஏழுபடிகளும், ஆசாரியர்கள் கூடிவருகிற உட்பிரகாரத்தில், ஏறுகிறதற்கு எட்டு படிகளும் இருக்கிறது. பொதுஜனங்களைவிட, கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களின் ஆவிக்குரிய ஜீவியம் வளர்ந்து உயர்ந்திருக்க வேண்டும். சாதாரண ஜனங்களைவிட, கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள், ஜெபத்திலும், வேதவாசிப்பிலும் அதிக நேரம் செலவு செய்து, பொதுஜனங்களைவிட உயர்ந்திருக்கவேண்டும்.

பின்பு அந்த மனுஷன் கீழ்த்திசை வழியாய் எசேக்கியேலை உட்பிராகாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அந்த அளவுக்குச் சரியாக அந்த வாசலையும் அளக்கிறார் (எசே 40:32)

அதின் அறைகளும் அதின் தூணாதாரங்களும் அதின் மண்டபங்களும் அந்த அளவுகளுக்குச் சரியாக இருக்கிறது; அதற்கும் அதின் மண்டபங்களுக்கும் ஜன்னல்கள் சுற்றிலும் இருக்கிறது; நீளம் ஐம்பது முழமும் அகலம் இருபத்தைந்து முழமுமாயிருக்கிறது (எசே 40:33).

அதின் அறைகளும் அதின் கதவுகளும் வாசல்களின் தூணாதாரங்களுக்கு அருகில் இருக்கிறது; அங்கே தகனபலிகளைக் கழுவுவார்கள் (எசே 40:38).

பலி பீடங்கள்
எசே 40:39-49

எசே 40:39. வாசலின் மண்டபத்திலே இந்தப்புறத்தில் இரண்டு பீடங்களும் அந்தபுறத்தில் இரண்டு பீடங்களும் இருந்தது; அவைகளின்மேல் தகனபலியையும் பாவநிவாரண பலியையும் குற்றநிவராணபலியையும் செலுத்துவார்கள்.

எசே 40:40. வடக்குவாசலுக்குள் பிரவேசிக்கிறதற்கு ஏறிப்போகிற வெளிப்புறத்திலே இரண்டு பீடங்களும், வாசலின் மண்டபத்திலுள்ள மறுபுறத்திலே இரண்டு பீடங்களும் இருந்தது.

எசே 40:41. வாசலின் அருகே இந்தப்புறத்தில் நாலு பீடங்களும், அந்தப்புறத்தில் நாலு பீடங்களும், ஆக எட்டுப்பீடங்கள் இருந்தது; அவைகளின்மேல் பலிகளைச் செலுத்துவார்கள்.

எசே 40:42. தகனபலிக்குரிய நாலு பீடங்கள்வெட்டின கல்லாயிருந்தது; அவைகள் ஒன்றரை முழ நீளமும், ஒன்றரை முழ அகலமும், ஒரு முழ உயரமுமாயிருந்தது; அவைகளின்மேல் தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்துகிற ஆயுதங்களை வைப்பார்கள்.

எசே 40:43. நாலு விரற்கடையான முளைகள் உள்ளே சுற்றிலும் வரிசையாய் அடிக்கப்பட்டிருந்தது; செலுத்தும் பலிகளின் மாம்சம் பீடங்களின்மேல் வைக்கப்படும்.

எசே 40:44. உட்பிராகாரத்திலே உள்வாசலுக்குப் புறம்பாகச் சங்கீதக் காரரின் அறைவீடுகள் இருந்தது; அவைகளில் வடக்கு வாசலின் பக்கமாக இருந்தவைகள் தென்திசைக்கு எதிராகவும், கிழக்குவாசலின் பக்கமாக இருந்த வேறொருவரிசை வடதிசைக்கு எதிராகவும் இருந்தது.

எசே 40:45. பின்பு அவர் என்னை நோக்கி: தென்திசைக்கு எதிராயிருக்கிற இந்த அறை ஆலயக்காவலைக் காக்கிற ஆசாரியர்களுடையது.

எசே 40:46. வடதிசைக்கு எதிராயிருக்கிற அறையோ, பலி பீடத்தின் காவலைக்காக்கிற ஆசாரியர்களுடையது; இவர்கள் லேவியின் புத்திரரில் கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்காக அவரிடத்தில் சேருகிற சாதோக்கின் புத்திரர் என்றார்.

எசே 40:47. அவர் பிராகாரத்தை நூறுமுழ நீளமாகவும் நூறுமுழ அகலமாகவும் அளந்தார்; அது சதுரமாயிருந்தது; பலிபீடமோ ஆலயத்துக்கு முன்பாக இருந்தது.

எசே 40:48. பின்பு அவர் என்னை ஆலய மண்டபத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், மண்டபத்தின் தூணாதாரத்தை இந்தப்புறத்தில் ஐந்து முழமும் அந்தப்புறத்தில் ஐந்து முழமுமாக அளந்தார்; வாசலின் அகலம் இந்தப்புறம் மூன்று முழமும் அந்தப்புறம் மூன்று முழமுமாயிருந்தது.

எசே 40:49. மண்டபத்தின் நீளம் இருபது முழமும், அகலம் பதினொரு முழமுமாயிருந்தது; அதற்கு ஏறிப்போகிற படிகளும் இருந்தது; தூணாதாரங்களிலே இந்தப்புறத்தில் ஒரு தூணும் அந்தப்புறத்தில் ஒரு தூணும் இருந்தது.

உட்பிரகாரத்திலுள்ள வாசலின் மண்டபத்திலே பலிபீடங்கள் இருக்கிறது. அங்கு மொத்தம் எட்டு பலிபீடங்கள் உள்ளன. இந்தப் பலிபீடங்களின்மேல் தகனபலியையும், பாவநிவாரண பலியையும், குற்றநிவாரண பலியையும் செலுத்துவார்கள்.

வாசலின் மண்டபத்திலே இந்தப்புறத்தில் இரண்டு பீடங்களும் அந்தபுறத்தில் இரண்டு பீடங்களும் இருக்கிறது; வடக்குவாசலுக்குள் பிரவேசிக்கிறதற்கு ஏறிப்போகிற வெளிப்புறத்திலே இரண்டு பீடங்களும், வாசலின் மண்டபத்திலுள்ள மறுபுறத்திலே இரண்டு பீடங்களும் இருக்கிறது. வாசலின் அருகே இந்தப்புறத்தில் நாலு பீடங்களும், அந்தப்புறத்தில் நாலு பீடங்களும், ஆக எட்டுப்பீடங்கள் இருக்கிறது (எசே 40:39-41).

தேவாலயத்தில் கர்த்தரை ஆராதிக்க வருகிறவர்கள் பலிகளைச் செலுத்தவேண்டும். சுவிசேஷத்தின் காலத்தில், கர்த்தருடைய வீட்டிற்கு வருகிற நாமும் ஆவிக்குரிய பலிகளை திரளாய்க் கொண்டு வரவேண்டும். கர்த்தருடைய சமுகத்திலே நாம் ஸ்தோத்திரபலிகளை ஏறெடுக்கவேண்டும். ஸ்தோத்திர பலிகளுக்கு "உதடுகளின் காளைகள்" என்றும் ஒரு பெயருள்ளது.

தகனபலிக்குரிய நாலு பீடங்கள் வெட்டின கல்லாயிருக்கிறது; அவைகள் ஒன்றரை முழ நீளமும், ஒன்றரை முழ அகலமும், ஒரு முழ உயரமுமாயிருக்கிறது; அவைகளின்மேல் தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்துகிற ஆயுதங்களை வைப்பார்கள். நாலு விரற்கடையான முளைகள் உள்ளே சுற்றிலும் வரிசையாய் அடிக்கப்பட்டிருக்கிறது; செலுத்தும் பலிகளின் மாம்சம் பீடங்களின்மேல் வைக்கப்படும்(எசே 40:42,43).

உட்பிரகாரத்தில் அறைவீடுகள் உள்ளன. இவை சங்கீதக்காரரின் அறைவீடுகள். இந்த அறைவீடுகள் உட்பிரகாரத்திலே, உள்வாசலுக்கு புறம்பாக இருக்கிறது. அவைகளில் வடக்கு வாசலின் பக்கமாக இருந்தவைகள் தென்திசைக்கு எதிராகவும், கிழக்குவாசலின் பக்கமாக இருந்த வேறொருவரிசை வடதிசைக்கு எதிராகவும் இருக்கிறது (எசே 40:44).

தேவாலயத்திலே சங்கீதங்கள் பாடப்பட்டதுபோல, புதிய ஏற்பாட்டு சபையிலும் கர்த்தரைத் துதிக்கும் துதியின் கீதங்களைப் பாடவேண்டும். உள்வாசலுக்கு புறம்பாக சங்கீதக்காரரின் அறைவீடுகள் இருந்ததுபோல, தென்திசைக்கு எதிராகவும் ஒரு அறைவீடு இருக்கிறது. இந்த அறை ஆலயக்காவலைக் காக்கிற ஆசாரியர்களுடையது.

வடதிசைக்கு எதிராயிருக்கிற அறையோ, பலிபீடத்தின் காவலைக்காக்கிற ஆசாரியர்களுடையது; இவர்கள் லேவியின் புத்திரரில் கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்காக அவரிடத்தில் சேருகிற சாதோக்கின் புத்திரர் (எசே 40:46). இவர்கள் தேவாலயத்தை சுத்தம்பண்ணுவது, ஆலயத்தில் ஏற்படும் பழுதுகளை செப்பனிடுவது ஆகிய வேலைகளை செய்கிறவர்கள். சாதோக்கின் புத்திரர் பலிபீடத்தின் காவலைக் காக்கிறார்கள்.

அந்த புருஷன் உள்பிராகாரத்தை நூறுமுழ நீளமாகவும் நூறுமுழ அகலமாகவும் அளக்கிறார்; அது சதுரமாயிருக்கிறது; பலிபீடமோ ஆலயத்துக்கு முன்பாக இருக்கிறது (எசே 40:47). உள்பிரகாரம் ஆசாரியரின் பிரகாரமாகும். இந்தப் பிரகாரத்திற்கு நடுவிலே, ஆலயத்திற்கு முன்பாக பலிபீடம் இருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு பலிபீடமாகவும், நம்முடைய பலியாகவும் இருக்கிறார். நாம் கர்த்தரைக் கிட்டிச் சேரும்போது, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கவேண்டும். கிறிஸ்துவானவர் நம்மை இரட்சிப்பதற்காக, தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். அவரே நம்மை மீட்கும் கிருபாதார பலியாகயிருக்கிறார்.

தேவாலயத்தில் மண்டபம் இருக்கிறது. அந்த புருஷன் எசேக்கியேலை ஆலய மண்டபத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறார். அவர் மண்டபத்தின் தூணாதாரத்தை இந்தப்புறத்தில் ஐந்து முழமும் அந்தப்புறத்தில் ஐந்து முழமுமாக அளக்கிறார்; வாசலின் அகலம் இந்தப்புறம் மூன்று முழமும் அந்தப்புறம் மூன்று முழமுமாயிருக்கிறது. மண்டபத்தின் நீளம் இருபது முழமும், அகலம் பதினொரு முழமுமாயிருக்கிறது; அதற்கு ஏறிப்போகிற படிகளும் இருக்கிறது; தூணாதாரங்களிலே இந்தப்புறத்தில் ஒரு தூணும் அந்தப்புறத்தில் ஒரு தூணும் இருக்கிறது (எசே 40:48,49).

தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறவர்கள் மண்டபத்தைக் கடந்து சென்றுதான், பிரகாரத்திற்குள் போகமுடியும். தேவாலயத்திலே உள்ளே பிரவேசிக்கிறவர்கள், முதலாவதாக மண்டபம், அதன் பின்பு வெளிப்பிரகாரம், அதன் பின்பு உள்பிரகாரம் என்று ஒவ்வொரு பகுதியாக கடந்து வரவேண்டும். யாரும் அவசரப்பட்டு உள்ளே பிரவேசிக்கக்கூடாது. கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிறவர்கள் நிதானமாகவும், பயபக்தியாகவும் வரவேண்டும்.

நாம் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு முன்பாக வருவதற்கு அவசரப்படக்கூடாது. நம்முடைய துதிகளோடும், ஸ்தோத்திரங்களோடும் கர்த்தரைத் துதித்து, அவரைப் புகழ்ந்து, அவருடைய சமுகத்திற்கு பயபக்தியோடு வரவேண்டும். கர்த்தருடைய பிரசன்னத்தில் நாம் அவசரம் காண்பிக்காமல், நிதானம் காண்பிக்கவேண்டும்.

41 அதிகாரம்

கர்த்தர் எசேக்கியேலுக்கு தேவாலயத்தின் தரிசனத்தைக் காண்பிக்கிறார். அதன் விவரமும், அதன் அளவுகளும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதபண்டிதர்கள் இந்த அதிகாரத்தின் ஒவ்வொரு வசனத்திற்கும் ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

தூணாதாரங்களின் அளவுகள் (எசே 41:1). வாசல் நடை (எசே 41:2). ஆலயத்தின் சுவரும் சுற்றுக்கட்டுக்களும் (எசே 41:5,6). சுற்றுக்கட்டுக்களின் அஸ்திபாரங்கள் (எசே 41:8-11). மாளிகை (எசே 41:13).

பிரத்தியேகமான இடத்திற்கு முன்னிருந்த மாளிகை (எசே 41:12-15). மாளிகை கட்டப்பட்டிருக்கிற விதம் (எசே 41:7,16,17). ஆபரணங்கள் (எசே 41:18-20). பலிபீடம் (எசே 41:22). தேவாலயத்திற்கும் பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையேயுள்ள வாசல்கள் (எசே 41:23-26).

பழங்காலத்து கட்டிடங்களுக்கும், தற்காலத்து கட்டிடங்களுக்கும் கட்டுமான முறைகளில் வித்தியாசமிருக்கும். கட்டிடங்களின் அளவுகளும் அமைப்புகளும் இடத்திற்கு இடமும், தேசத்திற்கும் தேசமும் மாறுபட்டிருக்கும். இஸ்ரவேல் வம்சத்தாரில் தச்சுவேலை பார்க்கிறவர்களும், கட்டுமான வேலை பார்க்கிறவர்களும் இந்த அளவுகளை எளிதாகப் புரிந்துகொள்வார்கள்.

தேவாலயம் எசே 41:1-11

எசே 41:1. பின்பு அவர் என்னை தேவாலயத்திற்கு அழைத்துக்கொண்டு போய், தூணாதாரங்களை இந்தப்புறத்தில் ஆறுமுழ அகலமும் அந்தப்புறத்தில் ஆறுமுழ அகலமுமாக அளந்தார்; அது வாசஸ்தலத்தின் அகல அளவாம்.

எசே 41:2. வாசல் நடையின் அகலம் பத்துமுழமும் வாசல் நடையின் பக்கங்கள் இந்தப்புறத்தில் ஐந்து முழமும் அந்தப்புறத்தில் ஐந்து முழமுமாயிருந்தது; அதின் நீளத்தை நாற்பது முழமும் அகலத்தை இருபது முழமுமாக அளந்தார்.

எசே 41:3. பின்பு அவர் உள்ளேபோய் வாசல் நடையின் தூணாதாரங்களை இரண்டு முழமாகவும், வாசல் நடையை ஆறுமுழமாகவும், வாசல் நடையின் அகலத்தை ஏழுமுழமாகவும் அளந்தார்.

எசே 41:4. பின்பு அவர் தேவாலயத்தின் முன்புறத்திலே அதின் நீளத்தை இருபது முழமாகவும், அதின் அகலத்தை இருபது முழமாகவும் அளந்து, என்னை நோக்கி: இது மகா பரிசுத்த ஸ்தலம் என்றார்.

எசே 41:5. பின்பு அவர் ஆலயத்தின் சுவரை ஆறு முழமாகவும், ஆலயத்தைச் சுற்றிலும் இருந்த சுற்றுக்கட்டினுடைய அகலத்தை நாலுமுழமாகவும் அளந்தார்.

எசே 41:6. இந்தச் சுற்றுக்கட்டுகள் பக்கக்கட்டின்மேல் பக்கக்கட்டான வரிசைகளாய் முப்பத்துமூன்று இருந்தது, அவைகள் ஆலயத்தின் சுவருக்குள் ஊன்றியிராமல், சுற்றுக்கட்டுகளுக்காகச் சுற்றிலும் அவைகள் ஊன்றும்படிக்கு ஆலயத்துக்கு அடுத்திருந்த ஒட்டுச்சுவரிலே பாய்ந்திருந்தது.

எசே 41:7. உயர உயரச் சுற்றிலும் சுற்றுக்கட்டுகளுக்கு அகலம் அதிகமாயிருந்தது; ஆலயத்தைச் சுற்றிலும் உயர உயர ஆலயத்தைச் சுற்றிச் சுற்றி அகலம் வரவர அதிகமாயிருந்தது; ஆதலால் இவ்விதமாய்க் கீழ்நிலையிலிருந்து நடுநிலைவழியாய் மேல்நிலைக்கு ஏறும் வழியிருந்தது.

எசே 41:8. மாளிகைக்குச் சுற்றிலும் இருந்த உயரத்தையும் பார்த்தேன், சுற்றுக்கட்டுகளின் அஸ்திபாரங்கள் ஆறுபெரிய முழங்கொண்ட ஒரு முழக்கோலின் உயரமாயிருந்தது.

எசே 41:9. புறம்பே சுற்றுக்கட்டுக்கு இருந்த சுவரின் அகலம் ஐந்துமுழமாயிருந்தது; ஆலயத்துக்கு இருக்கும் சுற்றுக்கட்டுகளின் மாளிகையிலே வெறுமையாய் விட்டிருந்த இடங்களும் அப்படியே இருந்தது.

எசே 41:10. ஆலயத்தைச் சுற்றிலும் அறைவீடுகளுக்கு நடுவாக இருந்த விசாலம் இருபது முழமாயிருந்தது.

எசே 41:11. சுற்றுக்கட்டினுடைய வாசல் நடைகள், வெறுமையாய் விட்டிருந்த இடங்களிலிருந்து, ஒரு வாசல் நடை வடக்கேயும், ஒரு வாசல்நடை தெற்கேயும் இருந்தது; வெறுமையாய் விட்டிருந்த இடங்களின் விசாலம் சுற்றிலும் ஐந்து முழமாயிருந்தது.

எசேக்கியேல் இதுவரையிலும் தேவாலயத்தின் பிரகாரங்களை கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். கர்த்தர் இப்போது எசேக்கியேலை தேவாலயத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார் (எசே 41:1). கர்த்தர் நமக்குப் போதிக்கும் வார்த்தைகளை கவனித்துக் கேட்கவேண்டும். கர்த்தருடைய சத்தியத்திற்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். தம்முடைய சத்தியங்களை நமக்கு இன்னும் அதிகமாய் வெளிப்படுத்துவார். கர்த்தர் பரலோக ராஜ்யத்தின் இரசியங்களை நமக்கு கற்றுக் கொடுப்பார்.

நாம் தேவனுடைய பிரகாரங்களில் வாசம்பண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். கர்த்தருடைய பிரகாரத்தில் கூடிவருவதை விரும்பவேண்டும். நாம் தேவனுடைய ஆலயத்திற்கு பலிகளோடும், காணிக்கைகளோடும் வந்து, கர்த்தரை ஆராதிக்கவேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலை தேவாலயத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். எசேக்கியேல் அந்த ஆலயத்தில் ஒரு மனுஷனைப் பார்க்கிறார். அந்த மனுஷன், தேவாலயத்திலுள்ள தூணாதாரங்களை இந்தப்புறத்தில் ஆறுமுழ அகலமும் அந்தப்புறத்தில் ஆறுமுழ அகலமுமாக அளக்கிறார்; அது வாசஸ்தலத்தின் அகல அளவாம். வாசல் நடையின் அகலம் பத்துமுழமும் வாசல் நடையின் பக்கங்கள் இந்தப்புறத்தில் ஐந்து முழமும் அந்தப்புறத்தில் ஐந்து முழமுமாயிருக்கிறது; அவர் அதின் நீளத்தை நாற்பது முழமும் அகலத்தை இருபது முழமுமாக அளக்கிறார். பின்பு அவர் உள்ளேபோய் வாசல் நடையின் தூணாதாரங்களை இரண்டு முழமாகவும், வாசல் நடையை ஆறுமுழமாகவும், வாசல் நடையின் அகலத்தை ஏழுமுழமாகவும் அளக்கிறார் (எசே 41:1-3).

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்த காலத்தில், தேவாலயம் அழிந்துபோவதைப்பற்றிச் சொன்னார். அவருடைய வார்த்தைகளைக் கேட்டவர்கள் எருசலேமிலுள்ள இரண்டாவது தேவாலயம் அழிந்துபோகும் என்று நினைத்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைப்பற்றிச் சொன்னார். அவர்களோ அவருடைய வார்த்தையின் அர்த்தத்தையும், தாற்பரியத்தையும் புரிந்துகொள்ளவில்லை.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந் தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள்" (யோவா 2:19,21).

எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்திலே, பிரத்தியட்சமான தேவாலயத்தையும் பார்க்கிறார், அங்கே சபையாகிய சரீரத்தையும் பார்க்கிறார். சரீரமாகிய சபை "தேவனுடைய வீடு" என்று அழைக்கப்படுகிறது. சபையிலுள்ள விசுவாசிகள் ஜீவனுள்ள ஆலயங்களாயிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய பிள்ளைகளின் இருதயங்களில் வாசம்பண்ணுகிறார்.

தேவாலயத்தில் பல தூணாதாரங்கள் இருக்கிறது. அங்கே வாசல் நடைகளும் இருக்கிறது. ஒவ்வொரு தூணுக்கும் இடைவெளி உள்ளது. எல்லா வாசல்நடைகளும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. தேவாலத்தின் பல்வேறு இடங்களில் இந்த வாசல் நடைகள் உள்ளன. வாசல் நடையின் பக்கங்கள் இந்தப் புறத்தில் ஐந்து முழமும், அந்தப் புறத்தில் ஐந்து முழமுமாயிருக்கிறது. அதன் நீளம் நாற்பது முழமும், அதன் அகலம் இருபது முழமுமாகும். தேவாலயத்தின் வாசல் நடை அகலமாயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டு சபைக்குப் போகும் வாசல் விசாலமாயிருக்கிறது. சுவிசேஷ சபையில் பாரம்பரிய பிரமாணங்கள் ஏதுவுமில்லை. அங்கே பிரிவினையாகிய நச்சுவர் தகர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் சுவிசேஷ சபையின் வாசல் நடை அகலமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் எல்லோருமே, கர்த்தருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

தேவாலயத்தின் முன்புறத்தில் மகாபரிசுத்த ஸ்தலம் இருக்கிறது. அந்த மனுஷன் தேவாலயத்தின் முன்புறத்திலே அதின் நீளத்தை இருபது முழமாகவும், அதின் அகலத்தை இருபது முழமாகவும் அளக்கிறார், அவர் எசேக்கியேலை நோக்கி "இது மகா பரிசுத்த ஸ்தலம்" என்று சொல்லுகிறார் (எசே 41:4). மகாபரிசுத்த ஸ்தலம் நாற்சதுரமாயிருக்கிறது. புதிய எருசலேமும் நாற்சதுரமாயிருக்கும். நாற்சதுரம் என்பது அதின் ஸ்திரத்தன்மைக்கும், உறுதிக்கும் அடையாளம்.

"அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது" (வெளி 21:16).

அந்த மனுஷன் ஆலயத்தின் சுவரை ஆறு முழமாகவும், ஆலயத்தைச் சுற்றிலும் இருக்கிற சுற்றுக்கட்டினுடைய அகலத்தை நாலுமுழமாகவும் அளக்கிறார். இந்தச் சுற்றுக்கட்டுகள் பக்கக்கட்டின்மேல் பக்கக்கட்டான வரிசைகளாய் முப்பத்துமூன்று இருக்கிறது, அவைகள் ஆலயத்தின் சுவருக்குள் ஊன்றியிராமல், சுற்றுக்கட்டுகளுக்காகச் சுற்றிலும் அவைகள் ஊன்றும்படிக்கு ஆலயத்துக்கு அடுத்திருந்த ஒட்டுச்சுவரிலே பாய்ந்திருக்கிறது (எசே 41:5,6).

கீழேயிருக்கிற சுற்றுக்கட்டுக்களின் அகலத்தைவிட, மேலேயிருக்கிற சுற்றுக் கட்டுக்களின் அகலம் அதிகமாயிருக்கிறது. உயர உயரச் சுற்றிலும் சுற்றுக்கட்டுகளுக்கு அகலம் அதிகமாயிருக்கிறது; ஆலயத்தைச் சுற்றிலும் உயர உயர ஆலயத்தைச் சுற்றிச் சுற்றி அகலம் வரவர அதிகமாயிருக்கிறது; ஆதலால் இவ்விதமாய்க் கீழ்நிலையிலிருந்து நடுநிலைவழியாய் மேல்நிலைக்கு ஏறும் வழியிருக்கிறது (எசே 41:7).

சுற்றுக்கட்டுக்களில் பயன்படுத்தப்படும் மரங்கள் உறுதியானதாகயிருக்கவேண்டும். அவை இசைவாக இணைக்கப்படவேண்டும். கர்த்தர் உயரமாய்க் கட்டும்போது, அதை உறுதியாகவும் கட்டுகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் உயரமாய்க் கட்டியெழுப்பப்படும்போது, நம்முடைய அஸ்திபாரம் வலுவானதாயிருக்கவேண்டும். நம்முடைய விசுவாசம் உறுதியானதாயிருக்க வேண்டும்.

நம்முடைய இருதயமே கர்த்தர் வாசம்பண்ணுகிற ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் வளர்ச்சி பெற்று உயரும்போது, நம்முடைய இருதயத்தின் அகலம் அதிகரிக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் நிலைதடுமாறாமல் உறுதியாயிருக்கும்.

எசேக்கியேல் மாளிகைக்குச் சுற்றிலும் இருக்கிற உயரத்தையும் பார்க்கிறார், சுற்றுக்கட்டுகளின் அஸ்திபாரங்கள் ஆறுபெரிய முழங்கொண்ட ஒரு முழக்கோலின் உயரமாயிருக்கிறது. புறம்பே சுற்றுக்கட்டுக்கு இருந்த சுவரின் அகலம் ஐந்துமுழமாயிருக்கிறது; ஆலயத்துக்கு இருக்கும் சுற்றுக்கட்டுகளின் மாளிகையிலே வெறுமையாய் விட்டிருந்த இடங்களும் அப்படியே இருக்கிறது (எசே 41:8,9).

ஆலயத்தைச் சுற்றிலும் அறைவீடுகளுக்கு நடுவாக இருக்கிற விசாலம் இருபது முழமாயிருக்கிறது. சுற்றுக்கட்டினுடைய வாசல் நடைகள், வெறுமையாய் விட்டிருக்கிற இடங்களிலிருந்து, ஒரு வாசல் நடை வடக்கேயும், ஒரு வாசல்நடை தெற்கேயும் இருக்கிறது; வெறுமையாய் விட்டிருக்கிற இடங்களின் விசாலம் சுற்றிலும் ஐந்து முழமாயிருக்கிறது (எசே 41:10,11).

"தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1தீமோ 3:15).

பிரத்தியேகமான இடமும் மாளிகையும் எசே 41:12-26

எசே 41:12. மேற்றிசையிலே பிரத்தியேகமான இடத்துக்கு முன்னிருந்த மாளிகைமட்டும் அகலம் எழுபது முழமும், மாளிகையினுடைய சுவரின் அகலம் சுற்றிலும் ஐந்து முழமும், அதினுடைய நீளம் தொண்ணூறு முழமாயிருந்தது.

எசே 41:13. அவர் ஆலயத்தை நூறு முழ நீளமாகவும், பிரத்தியேகமான இடத்தையும் மாளிகையையும் அதின் சுவர்களையும் நூறு முழ நீளமாகவும் அளந்தார்.

எசே 41:14. ஆலயத்தின் முற்புறமும் கிழக்குக்கு எதிரான பிரத்தியேகமான இடமும் இருந்த அகலம் நூறுமுழமாயிருந்தது.

எசே 41:15. பிரத்தியேகமான இடத்தின் பின்புறமாக அதற்கு எதிரே இருந்த மாளிகையின் நீளத்தையும், அதற்கு இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் இருந்த நடைகாவணங்களையும் அளந்தார்; உள்வான தேவாலயமும் முற்றத்தின் மண்டபங்களும் உட்பட நூறு முழமாயிருந்தது.

எசே 41:16. வாசற்படிகளும், ஒடுக்கமான ஜன்னல்களும், மூன்று பக்கங்களில் சுற்றிலும் வாசல்களுக்கு எதிரான நடைகாவணங்களும் சுற்றிலும் தரைதுவக்கி ஜன்னல்கள் மட்டாகப் பலகை அடித்திருந்தது; ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தது.

எசே 41:17. வாசலின் மேலேதுவக்கி ஆலயத்தின் உட்புறமும் வெளிப்புறமும் சுற்றிலும் சுவரின் உட்புறமும் வெளிப்புறமும் எல்லாம் அளவிட்டிருந்தது.

எசே 41:18. கேருபீன்களும் பேரீச்சமரங்களும் சித்திரிக்கப் பட்டிருந்தது; கேருபீனுக்கும் கேருபீனுக்கும் நடுவாக ஒவ்வொரு பேரீச்சமரம் இருந்தது; ஒவ்வொரு கேருபீனுக்கும் இரண்டிரண்டு முகங்கள் இருந்தது.

எசே 41:19. பேரீச்சமரத்துக்கு இந்தண்டையில் மனுஷமுகமும், பேரீச்சமரத்துக்கு அந்தண்டையில் சிங்கமுகமும் இருந்தது; இப்படியே ஆலயத்தைச் சுற்றிலும் செய்திருந்தது.

எசே 41:20. தரைதுவக்கி வாசலின் மேற்புறமட்டும், தேவலாயத்தின் சுவரிலும், கேருபீன்களும் பேரீச்ச மரங்களும் சித்திரிக்கப்பட்டிருந்தது.

எசே 41:21. தேவாலயத்தின் கதவு நிலைகள் சதுரமும், பரிசுத்த ஸ்தலத்தினுடைய முகப்பின் உருவம் அந்த உருவத்துக்குச் சரியுமாயிருந்தது.

எசே 41:22. மரத்தினால் செய்யப்பட்ட பலிபீடத்தின் உயரம் மூன்று முழமும், அதின் நீளம் இரண்டு முழமுமாயிருந்தது; அதின் கோடிகளும் அதின்விளிம்புகளும் அதின் பக்கங்களும் மரத்தினால் செய்யப்பட்டிருந்தது; அவர் என்னை நோக்கி: இது கர்த்தருடைய சந்நிதியிலிருக்கிற பீடம் என்றார்.

எசே 41:23. தேவாலயத்துக்கும் பரிசுத்த ஸ்தலத்துக்கும் இரண்டு வாசல்களும்,

எசே 41:24. வாசல்களுக்கு மடக்குக் கதவுகளாகிய இரட்டைக் கதவுகளும் இருந்தது; ஒரு வாசலுக்கு இரண்டு கதவுகளும் மற்ற வாசலுக்கு இரண்டு கதவுகளும் இருந்தது.

எசே 41:25. சுவர்களில் சித்திரிக்கப்பட்டிருந்ததுபோல் ஆலயத்தினுடைய கதவுகளிலும் கேருபீன்களும் பேரீச்சமரங்களும் சித்திரிக்கப்பட்டிருந்தது; புறம்பே மண்டபத்தின் முன்பாக உத்திரங்கள் வைத்திருந்தது.

எசே 41:26. மண்டபத்தின் பக்கங்களில் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் ஆலயத்தின் சுற்றுக்கட்டுகளிலும் ஒடுக்கமான ஜன்னல்களும் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் உத்திரங்களும் இருந்தது.

பிரத்தியேகமான இடத்திற்கு முன்பாக ஒரு மாளிகை இருக்கிறது. பிரத்தியேகமான இடம் என்பது தேவாலயத்தைக் குறிக்கிற வார்த்தை. இந்த மாளிகை மேற்கு திசையிலிருக்கிறது. இந்த மாளிகையின் அகலம் எழுபது முழமும், மாளிகையினுடைய சுவரின் அகலம் சுற்றிலும் ஐந்து முழமும், அதினுடைய நீளம் தொண்ணூறு முழமாயிருக்கிறது (எசே 41:12).

இந்த மாளிகை பிரகாரத்தில் தனியாகயிருக்கிறது. ஒருவேளை இந்த மாளிகையானது புறஜாதியாருக்கு விசேஷமாகக் கட்டப்பட்டிருக்கிற ஆலயமாகயிருக்கலாம். யூதருடைய ஆலயமும் புறஜாதியாரின் ஆலயமும் ஒன்றுபோல் இருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மாளிகையானது, அதன் அழகிலும், அலங்காரத்திலும், அளவிலும் தேவாலயத்திற்கு குறைவானதல்ல. ஆனாலும் மாளிகையும் ஆலயமும் வெவ்வேறாகவும் தனித்தனியாகவும் இருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

அந்த புருஷன் ஆலயத்தை நூறு முழ நீளமாகவும், பிரத்தியேகமான இடத்தையும் மாளிகையையும் அதின் சுவர்களையும் நூறு முழ நீளமாகவும் அளக்கிறார். ஆலயத்தின் முற்புறமும் கிழக்குக்கு எதிரான பிரத்தியேகமான இடமும் இருந்த அகலம் நூறுமுழமாயிருக்கிறது (எசே 41:13,14).

அந்த புருஷன், பிரத்தியேகமான இடத்தின் பின்புறமாக அதற்கு எதிரே இருந்த மாளிகையின் நீளத்தையும், அதற்கு இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் இருந்த நடைகாவணங்களையும் அளக்கிறார்; உள்ளான தேவாலயமும் முற்றத்தின் மண்டபங்களும் உட்பட நூறு முழமாயிருக்கிறது. வாசற்படிகளும், ஒடுக்கமான ஜன்னல்களும், மூன்று பக்கங்களில் சுற்றிலும் வாசல்களுக்கு எதிரான நடைகாவணங்களும் சுற்றிலும் தரைதுவக்கி ஜன்னல்கள் மட்டாகப் பலகை அடித்திருக்கிறது; ஜன்னல்கள் மூடப்பட்டிருக்கிறது. வாசலின் மேலேதுவக்கி ஆலயத்தின் உட்புறமும் வெளிப்புறமும் சுற்றிலும் சுவரின் உட்புறமும் வெளிப்புறமும் எல்லாம் அளவிட்டிருக்கிறது (எசே 41:15-17).

தேவாலயத்தில் அலங்காரமான ஆபணங்கள் உள்ளன. ஆலயத்திலே கேருபீன்களும் பேரீச்சமரங்களும் சித்திரிக்கப் பட்டிருக்கிறது; கேருபீனுக்கும் கேருபீனுக்கும் நடுவாக ஒவ்வொரு பேரீச்சமரம் இருக்கிறது; ஒவ்வொரு கேருபீனுக்கும் இரண்டிரண்டு முகங்கள் இருக்கிறது. பேரீச்சமரத்துக்கு இந்தண்டையில் மனுஷமுகமும், பேரீச்சமரத்துக்கு அந்தண்டையில் சிங்கமுகமும் இருக்கிறது; இப்படியே ஆலயத்தைச் சுற்றிலும் செய்திருக்கிறது (எசே 41:18,19).

மனுஷமுகமும், சிங்கமுகமும் என்பது தேவதூதர்களைக் குறிக்கலாம். இவர்களுக்கு மனுஷரைவிட அதிக ஞானமுண்டு. இவர்கள் சிங்கத்தைப்போல பெலமுள்ளவர்கள். பேரீச்சமரம் ஜெயத்திற்கு அடையாளம். தரைதுவக்கி வாசலின் மேற்புறமட்டும், தேவலாயத்தின் சுவரிலும், கேருபீன்களும் பேரீச்சமரங்களும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது (எசே 41:20).

எசேக்கியேல் தேவாலயத்தின் கதவு நிலைகளை தரிசிக்கிறார். தேவாலயத்தின் கதவு நிலைகள் சதுரமும், பரிசுத்த ஸ்தலத்தினுடைய முகப்பின் உருவம் அந்த உருவத்துக்குச் சரியுமாயிருக்கிறது (எசே 41:21).

ஆசரிப்புக்கூடாரத்திலும், சாலொமோன் கட்டிய தேவாலயத்திலும் பரிசுத்த ஸ்தலத்தினுடைய வாசல் தேவாலயத்தின் வாசலைவிட ஒடுக்கமாயிருக்கும். ஆனால் இங்கோ பரிசுத்த ஸ்தலத்தின் வாசல் அகலமாயிருக்கிறது.

"அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்" (எபி 9:8).

எசேக்கியேல் தேவாலயத்திற்கும் பரிசுத்த ஸ்தலத்திற்கும் போகும் வாசல்களைத் தரிசிக்கிறார். தேவாலயத்துக்கும் பரிசுத்த ஸ்தலத்துக்கும் இரண்டு வாசல்களும், வாசல்களுக்கு மடக்குக் கதவுகளாகிய இரட்டைக் கதவுகளும் இருக்கிறது; ஒரு வாசலுக்கு இரண்டு கதவுகளும் மற்ற வாசலுக்கு இரண்டு கதவுகளும் இருக்கிறது (எசே 41:23,24).

எசேக்கியேல் கர்த்தருடைய சந்நதியிலிருக்கிற பீடத்தையும் தரிசிக்கிறார். இது மரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது. மரத்தினால் செய்யப்பட்ட பலிபீடத்தின் உயரம் மூன்று முழமும், அதின் நீளம் இரண்டு முழமுமாயிருக்கிறது; அதின் கோடிகளும் அதின்விளிம்புகளும் அதின் பக்கங்களும் மரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது (எசே 41:22).

பலிபீடம் மரத்தால் செய்யப்பட்டிருப்பதினால், இதில் தகனபலிகளை செலுத்த முடியாது. கர்த்தருடைய சந்நிதியிலிருக்கிற பீடம். மரத்தினால் செய்யப்பட்டிருப்பதினால், அதன்மீது அக்கினியை எரிக்க முடியாது. இதை தூபபீடமாக பயன்படுத்த முடியாது. சுவிசேஷ சபையிலே எல்லா பலிகளுமே ஆவிக்குரிய பலிகளாகவே இருக்கும். சபையிலே பிரத்தியட்சமான அக்கினி எரியாது. ஆனால் விசுவாசிகள் மத்தியிலே அக்கினி அபிஷேகம் இருக்கும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையில், கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடம் இருக்காது. ஆனால் பிரசங்க பீடம் இருக்கும். கர்த்தருடைய பந்தியை பரிமாறுவதற்கு, மேஜை இருக்கும். இயேசுகிறிஸ்துவே நமக்காக செலுத்தப்பட்ட பலியாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பலிமரணம் எல்லோருடைய பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு போதுமானது. இனிமேல் நமக்கு வேறொரு பலி தேவையில்லை.

ஆலயத்தினுடைய கதவுகளில் கேருபீன்களும் பேரீச்சமரங்களும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது; இது சுவர்களில் சித்திரிக்கப்பட்டிருக்கிறதுபோலிருக்கிறது. புறம்பே மண்டபத்தின் முன்பாக உத்திரங்கள் வைத்திருக்கிறது. மண்டபத்தின் பக்கங்களில் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் ஆலயத்தின் சுற்றுக்கட்டுகளிலும் ஒடுக்கமான ஜன்னல்களும் சித்திரிக்கப்பட்ட பேரீச்சமரங்களும் உத்திரங்களும் இருக்கிறது (எசே 41:25,26).

42 அதிகாரம்

தேவாலயத்தின் அளவைப்பற்றிய விவரம் இந்த அதிகாரத்தோடு நிறைவு பெறுகிறது. வெளிப்பிரகாரத்திலே அறைவீடுகள் உள்ளன (எசே 42:1-13). அறைவீடுகளின் பயன்பாடுகள் (எசே 42:13,14). தேவாலயமும் அதைச் சுற்றிலுமுள்ள வெளிப்பிரகாரமும் (எசே 42:15-20).

அறைவீடுகள்
எசே 42:1-14

எசே 42:1. பின்பு அவர் என்னை வடதிசையின் வழியாக வெளிப்பிராகாரத்திலே புறப்படப் பண்ணி, பிரத்தியேகமான இடத்துக்கு எதிராகவும், மாளிகைக்கு எதிராகவும் வடக்கே இருந்த அறைவீடுகளுக்கு என்னை அழைத்துக்கொண்டுபோனார்.

எசே 42:2. நூறு முழ நீளத்துக்கு முன்னே வடக்கு வாசல் இருந்தது; அவ்விடத்து அகலம் ஐம்பது முழம்.

எசே 42:3. உட்பிராகாரத்தில் இருந்த இருபது முழத்துக்கு எதிராகவும் வெளிப்பிராகாரத்தில் இருந்த தளவரிசைக்கு எதிராகவும் ஒன்றுக்கொன்று எதிரான மூன்று நிலைகளுள்ள நடைகாவணங்கள் இருந்தது.

எசே 42:4. உட்புறத்திலே அறைவீடுகளின் முன்பாகப் பத்து முழ அகலமான வழியும், ஒரு முழ அகலமான பாதையும் இருந்தது; அவைகளின் வாசல்கள் வடக்கே இருந்தது.

எசே 42:5. உயர இருந்த அறை வீடுகள் அகலக்கட்டையாயிருந்தது; நடைகாவணங்கள் கீழேயிருக்கிற அறைவீடுகளுக்கும் நடுவேயிருக்கிறவைகளுக்கும் அதிக உயரமான மாளிகையாயிருந்தது.

எசே 42:6. அவைகள் மூன்று அடுக்குகளாயிருந்தது; பிராகாரங்களின் தூண்களுக்கு இருந்ததுபோல, அவைகளுக்குத் தூண்களில்லை; ஆகையால் தரையிலிருந்து அளக்க, அவைகள் கீழேயும் நடுவேயும் இருக்கிறவைகளைப்பார்க்கிலும் அகலக்கட்டையாயிருந்தது.

எசே 42:7. புறம்பே அறைவீடுகளுக்கு எதிரே வெளிப்பிராகாரத் திசையில் அறைவீடுகளுக்கு முன்பாக இருந்த மதிலின் நீளம் ஐம்பது முழம்.

எசே 42:8. வெளிப்பிராகாரத்திலுள்ள அறைவீடுகளின் நீளம் ஐம்பது முழம், தேவாலயத்துக்கு முன்னே நூறு முழமாயிருந்தது.

எசே 42:9. கிழக்கே வெளிப்பிராகாரத்திலிருந்து அந்த அறைவீடுகளுக்குள் பிரவேசிக்கிற நடை அவைகளின் கீழே இருந்தது.

எசே 42:10. கீழ்த்திசையான பிராகாரத்து மதிலின் அகலத்திலே பிரத்தியேகமான இடத்துக்கு முன்பாகவும் மாளிகைக்கு முன்பாகவும் அறைவீடுகளும் இருந்தது.

எசே 42:11. அவைகளுக்கு முன்னான வழியிலே அந்த அறைவீடுகள் நீளத்திலும் அகலத்திலும், எல்லா வாசற்படிகளிலும், திட்டங்களிலும், வாசல் நடைகளிலும் வடதிசையான அறைவீடுகளின் சாயலாயிருந்தது.

எசே 42:12. தென்திசையான அறைவீடுகளின்வாசல் நடைக்கு ஒப்பாக ஒரு வாசல் நடைவழியின் முகப்பில் இருந்தது; கீழ்த்திசையில் அவைகளுக்குப் பிரவேசிக்கும் இடத்திலே செம்மையான மதிலின் எதிரே இருந்த வழியின் முகப்பில் ஒரு வாசலிருந்தது.

எசே 42:13. அவர் என்னை நோக்கி: பிரத்தியேகமான இடத்துக்கு முன்னிருக்கிற வடபுறமான அறைவீடுகளும், தென்புறமான அறைவீடுகளும், பரிசுத்த அறைவீடுகளாயிருக்கிறது; கர்த்தரிடத்தில் சேருகிற ஆசாரியர் அங்கே மகா பரிசுத்தமானதையும், போஜனபலியையும், பாவநிவாரண பலியையும், குற்றநிவாரண பலியையும் வைப்பார்கள்; அந்த ஸ்தலம் பரிசுத்தமாயிருக்கிறது.

எசே 42:14. ஆசாரியர் உட்பிரவேசிக்கும்போது, அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளிப்பிராகாரத்துக்கு வராததற்கு முன்னே, அங்கே தாங்கள் ஆராதனை செய்து, உடுத்தியிருந்த வஸ்திரங்களைக் கழற்றிவைப்பார்கள்; அவ்வஸ்திரங்கள் பரிசுத்தமானவைகள்; வேறே வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, ஜனத்தின் பிராகாரத்திலே போவார்கள் என்றார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி இதுவரையிலும் தேவாலயத்தின் ஒவ்வொரு பகுதியையும் தரிசித்தார். இப்போது அவர் வடதிசையின் வழியாக வெளிப்பிரகாரத்திற்கு வந்திருக்கிறார். அந்தப் புருஷன் எசேக்கியேலை வடதிசையின் வழியாக வெளிப்பிராகாரத்திலே புறப்படப்பண்ணி, பிரத்தியேகமான இடத்துக்கு எதிராகவும், மாளிகைக்கு எதிராகவும் வடக்கே இருந்த அறைவீடுகளுக்கு என்னை அழைத்துக்கொண்டுபோகிறார் (எசே 42:1).

நூறு முழ நீளத்துக்கு முன்னே வடக்கு வாசல் இருக்கிறது; அவ்விடத்து அகலம் ஐம்பது முழம். உட்பிராகாரத்தில் இருக்கிற இருபது முழத்துக்கு எதிராகவும் வெளிப்பிராகாரத்தில் இருக்கிற தளவரிசைக்கு எதிராகவும் ஒன்றுக்கொன்று எதிரான மூன்று நிலைகளுள்ள நடைகாவணங்கள் இருக்கிறது (எசே 42:2,3).

தேவாலயத்தைச் சுற்றிலும் வெளிப்பிரகாரம் இருக்கிறது. அந்தப் பிரகாரத்தில் அறைவீடுகள் இருக்கிறது. ஆலயத்தின் பிரகாரத்தில் நாம் கர்த்தரை ஆராதிக்கிறோம். எல்லா விசுவாசிகளும் சபை ஆராதனையில் பங்கு பெறவேண்டும். அங்கே கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

தேவாலயத்திற்கு போகிறவர்கள், பிரகாரங்களில் நின்று கர்த்தரை ஆராதித்தால் மாத்திரம் போதாது. அவர்கள் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கும் முன்பும், தேவாலயத்திலிருந்து வெளியே புறப்பட்டுப்போகும் முன்பும் அவர்கள் தங்கள் அறைவீடுகளுக்கு போகவேண்டும். அவர்கள் அங்கே கர்த்தரை தனிமையில் ஆராதிக்கவேண்டும்.

நாம் சபை ஆராதனையில் பங்குபெறுவதற்கு முன்பாகவும், சபை ஆராதனையில் பங்கு பெற்று முடித்த பின்பும், நம்முடைய தனிஅறையில் கர்த்தரைத் துதிக்கவேண்டும். வேதவசனங்களை வாசித்து தியானிக்க வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து, கர்த்தரை பொதுவாக ஆராதிப்பதும் தேவை. நம்முடைய தனிஜெபமும் தேவை.

ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் அநேக அறைவீடுகள் உள்ளன. அவைகள் மூன்று அடுக்குகளாக இருக்கிறது. உயர இருக்கிற அறைவீடுகள் அகலக் கட்டையாயிருக்கிறது; நடைகாவணங்கள் கீழேயிருக்கிற அறைவீடுகளுக்கும் நடுவேயிருக்கிறவைகளுக்கும் அதிக உயரமான மாளிகையாயிருக்கிறது. அவைகள் மூன்று அடுக்குகளாயிருக்கிறது; பிராகாரங்களின் தூண்களுக்கு இருப்பது போல, அவைகளுக்குத் தூண்களில்லை; ஆகையால் தரையிலிருந்து அளக்க, அவைகள் கீழேயும் நடுவேயும் இருக்கிறவைகளைப் பார்க்கிலும் அகலக்கட்டையாயிருக்கிறது (எசே 42:5,6).

தேவாலயத்தில் பக்தியுள்ளவர்கள் தங்கியிருப்பது வழக்கம். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசினியாகிய அன்னாள் தேவாலயத்தை விட்டு வெளியே போகாமல், இரவும் பகலும் அங்கேயே தங்கியிருந்தாள்.

"ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்" (லூக் 2:37).

வெளிப்பிரகாரத்திலுள்ள அறைவீடுகள் தனித்தனியாகயிருந்தாலும், அவை ஆலயத்திற்கு அருகாமையிலுள்ளது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்வதற்கு ஏதுவாக, இந்த அறைவீடுகளெல்லாம், ஆலயத்திற்கு அருகாமையிலேயே உள்ளது.

உட்புறத்திலே அறைவீடுகளின் முன்பாகப் பத்து முழ அகலமான வழியும், ஒரு முழ அகலமான பாதையும் இருக்கிறது; அவைகளின் வாசல்கள் வடக்கே இருக்கிறது (எசே 42:4).

ஒரு அறைவீட்டிலிருந்து மற்றொரு அறைவீட்டிற்கு போகமுடியும். அறைவீடுகளில் தங்கியிருக்கிறவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து, தங்களுடைய ஆவிக்குரிய அனுபவங்களை பகிர்ந்துகொள்ள முடியும். விசுவாசிகள் மற்ற விசுவாசிகளோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். விசுவாசிகள் ஐக்கியமாகயிருப்பது அவர்களுக்கு சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

புறம்பே அறைவீடுகளுக்கு எதிரே வெளிப்பிரா காரத்திசையில் அறைவீடுகளுக்கு முன்பாக இருக்கிற மதிலின் நீளம் ஐம்பது முழம். வெளிப்பிராகாரத்திலுள்ள அறைவீடுகளின் நீளம் ஐம்பது முழம், தேவாலயத்துக்கு முன்னே நூறு முழமாயிருக்கிறது. கிழக்கே வெளிப்பிராகாரத்திலிருந்து அந்த அறைவீடுகளுக்குள் பிரவேசிக்கிற நடை அவைகளின் கீழே இருக்கிறது (எசே 42:7-9).

கீழ்த்திசையான பிராகாரத்து மதிலின் அகலத்திலே பிரத்தியேகமான இடத்துக்கு முன்பாகவும் மாளிகைக்கு முன்பாகவும் அறைவீடுகளும் இருக்கிறது. அவைகளுக்கு முன்னான வழியிலே அந்த அறைவீடுகள் நீளத்திலும் அகலத்திலும், எல்லா வாசற்படிகளிலும், திட்டங்களிலும், வாசல் நடைகளிலும் வடதிசையான அறைவீடுகளின் சாயலாயிருக்கிறது. தென்திசையான அறைவீடுகளின்வாசல் நடைக்கு ஒப்பாக ஒரு வாசல் நடைவழியின் முகப்பில் இருக்கிறது; கீழ்த்திசையில் அவைகளுக்குப் பிரவேசிக்கும் இடத்திலே செம்மையான மதிலின் எதிரே இருக்கிற வழியின் முகப்பில் ஒரு வாசலிருக்கிறது (எசே 42:10-12).

வெளிப்பிரகாரத்திலுள்ள அறை வீடுகளெல்லாம் ஒரு பிரத்தியேகமான நோக்கத்திற்காக கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தரிடத்தில் சேருகிற ஆசாரியர்களுக்காக இந்த அறைவீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆகையினால் அந்த ஸ்தலம் பரிசுத்த ஸ்தலமாயிருக்கிறது.

பிரத்தியேகமான இடத்துக்கு முன்னிருக்கிற வடபுறமான அறைவீடுகளும், தென்புறமான அறைவீடுகளும், பரிசுத்த அறைவீடுகளாயிருக்கிறது; கர்த்தரிடத்தில் சேருகிற ஆசாரியர் அங்கே மகா பரிசுத்தமானதையும், போஜனபலியையும், பாவநிவாரண பலியையும், குற்றநிவாரண பலியையும் வைப்பார்கள்; அந்த ஸ்தலம் பரிசுத்தமாயிருக்கிறது (எசே 42:13).

ஆசாரியர் உட்பிரவேசிக்கும்போது, அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளிப்பிராகாரத்துக்கு வராததற்கு முன்னே, அங்கே தாங்கள் ஆராதனை செய்து, உடுத்தியிருந்த வஸ்திரங்களைக் கழற்றிவைப்பார்கள்; அவ்வஸ்திரங்கள் பரிசுத்தமானவைகள்; வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, ஜனத்தின் பிராகாரத்திலே போவார்கள் (எசே 42:14).

ஆசாரியர்கள் பலிபீடத்திலே கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது, அவர்கள் ஆசாரியரின் வஸ்திரங்களை உடுத்தியிருக்கவேண்டும். இது கர்த்தர் ஆசாரியருக்கு நியமித்திருக்கிற பிரமாணம். இஸ்ரவேல் வம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து வந்த பின்பு, ஆசாரியருக்கு மறுபடியும் ஆசாரிய வஸ்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"வம்சத்தலைவரில் சிலர் வேலைக் கென்று கொடுத்ததாவது: திர்ஷாதா ஆயிரம் தங்கக்காசையும், ஐம்பது கலங்களையும், ஐந்நூற்று முப்பது ஆசாரிய வஸ்திரங்களையும் பொக்கிஷத்துக்குக் கொடுத்தான் (நெகே 7:70).

மற்ற ஜனங்கள் இருபதினாயிரம் தங்கக்காசையும், இரண்டாயிரம் ராத்தல் வெள்ளியையும், அறுபத்தேழு ஆசாரிய வஸ்திரங்களையும் கொடுத்தார்கள்" (நெகே 7:72).

ஆசாரியர்கள் பலிபீடத்திலே, தங்கள் ஆசாரிய ஊழியத்தை முடித்துவிட்டு, அறைவீடுகளுக்கு வருவார்கள். அங்கே தாங்கள் உடுத்தியிருந்த வஸ்திரங்களைக் கழற்றி வைப்பார்கள். அதன் பின்பு வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு ஜனத்தின் பிரகாரத்தில் போவார்கள். வெளிப்பிரகாரத்தில் ஆலயத்திற்கு வந்திருக்கிற ஜனங்கள் கூடியிருப்பார்கள்.

ஆசாரியர்கள் அங்கே ஜனங்களுக்கு கர்த்தருடைய பிரமாணத்தைப் போதிக்கவேண்டும். ஜனங்கள் வேதத்தைக் குறித்தும், பிரமாணங்களைக் குறித்தும் கேள்விகள் கேட்கும்போது, ஆசாரியர்கள் அவர்களுக்கு பிரதியுத்தரம் சொல்லவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் ஆசாரியர்கள் வேறு வஸ்திரங்கள் உடுத்தியிருப்பார்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலுள்ள பலிபீடத்தில் ஊழியம் செய்யும்போது, பரிசுத்தமான ஆசாரிய வஸ்திரத்தை உடுத்தியிருப்பார்கள்.

வெளிப்பக்கம் எசே 42:15-20

எசே 42:15. அவர் உள்வீட்டை அளந்து தீர்ந்தபின்பு, கீழ்த்திசைக்கு எதிரான வாசல்வழியாய் என்னை வெளியே அழைத்துக்கொண்டுபோய், அதைச் சுற்றிலும் அளந்தார்.

எசே 42:16. கீழ்த்திசைப் பக்கத்தை அளவுகோலால் அளந்தார்; அது அளவுகோலின்படியே சுற்றிலும் ஐந்நூறு கோலாயிருந்தது.

எசே 42:17. வடதிசைப்பக்கத்தை அளவு கோலால் சுற்றிலும் ஐந்நூறு கோலாய் அளந்தார்.

எசே 42:18. தென்திசைப்பக்கத்தை அளவுகோலால் ஐந்நூறு கோலாய் அளந்தார்.

எசே 42:19. மேற்றிசைப்பக்கத்துக்குத் திரும்பி அதை அளவுகோலால் ஐந்நூறு கோலாய் அளந்தார்.

எசே 42:20. நாலு பக்கங்களிலும் அதை அளந்தார்; பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணும்படிக்கு அதற்கு ஐந்நூறு கோல் நீளமும் ஐந்நூறு கோல் அகலமுமான மதில் சுற்றிலும் இருந்தது.

அந்தப் புருஷன் தேவாலயத்தின் எல்லா பக்கங்களையும் அளக்கிறார். தேவாலயத்திற்கு வெளியே வெளிப்பக்கத்தில் நிலம் இருக்கிறது. இதுவும் பரிசுத்த நிலம். வெளிப்பக்கத்தின் அளவைப்பற்றி இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தப் புருஷன் உள்வீட்டை அளந்து தீர்ந்தபின்பு, கீழ்த்திசைக்கு எதிரான வாசல்வழியாய் எசேக்கியேலை வெளியே அழைத்துக்கொண்டுபோய், அதைச் சுற்றிலும் அளக்கிறார். கீழ்த்திசைப் பக்கத்தை அளவுகோலால் அளக்கிறார்; அது அளவுகோலின்படியே சுற்றிலும் ஐந்நூறு கோலாயிருக்கிறது. வடதிசைப்பக்கத்தை அளவு கோலால் சுற்றிலும் ஐந்நூறு கோலாய் அளக்கிறார். தென்திசைப்பக்கத்தை அளவுகோலால் ஐந்நூறு கோலாய் அளக்கிறார். மேற்றிசைப்பக்கத்துக்குத் திரும்பி அதை அளவுகோலால் ஐந்நூறு கோலாய் அளக்கிறார் (எசே 42:15-19).

வெளிப்பக்கத்தில் ஒவ்வொரு திசையிலும் ஐந்நூறு கோல் அளவு இருக்கிறது. ஒரு கோல் அளவு என்பது சுமார் மூன்று மீட்டர்கள் ஆகும். இதை தற்போது கணக்கின்படி பார்த்தால், தேவாலயத்தின் வெளிப்பக்கம், ஒவ்வொரு திசையிலும், சுமார் ஒரு மைல் நீளம் இருக்கிறது. தேவாலயத்தைச் சுற்றுலுமாக ஒரு மைல் நீளத்திற்கு, தேவாலயத்திற்கு சொந்தமான பரிசுத்த நிலம் இருக்கிறது.

சுவிசேஷ சபை பெரிதாயிருக்கும். எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட ஆலயத்தின் அளவைவிட, வெளிப்பக்கத்தின் அளவு பெரிதாயிருக்கிறது. புறஜாதியார் வெளிப்பக்கத்திற்கு வந்து கர்த்தரை ஆராதிப்பார்கள். சுவிசேஷ சபையிலும், புறஜாதி மார்க்கத்திலிருந்து, இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கும்.

"உன் கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார்; அவர்களெல்லாரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்தில் வருகிறார்கள்; நீ அவர்களெல்லாரையும் ஆபரணமாகத் தரித்து, மணமகள் அணிந்து கொள்வதுபோல, நீ அவர்களை அணிந்துகொள்வாய் என்று, என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்" (ஏசா 49:18).

"சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார்; அவர்கள் எல்லாரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்திற்கு வருகிறார்கள்; உன் குமாரர் தூரத்திலிருந்து வந்து, உன் குமாரத்திகள் உன் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள்" (ஏசா 60:4).

வெளிப்பக்கத்தின் அளவு மிகவும் பெரிதாயிருக்கிறது. இதில் பரிசுத்தமானதற்கும், பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணப்பட்டிருக்கிறது. அதற்கு ஐநூறு கோல் நீளமும், ஐநூறு கோல் அகலமுமான மதில் சுற்றிலுமிருக்கிறது (எசே 42:20).

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், பொதுவான காரியங்களுக்கும், பரிசுத்தமான காரியங்களுக்கும் நாம் வித்தியாசம் பண்ணவேண்டும். கர்த்தருடைய பரிசுத்த நாமத்தையும், மற்ற நாமங்களையும் நாம் வித்தியாசம்பண்ணவேண்டும். கர்த்தருடைய நாளையும், மற்ற நாட்களையும் நாம் வித்தியாசப்படுத்த வேண்டும். கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தையும், மற்ற புஸ்தகங்களையும் நாம் வித்தியாசம்பண்ண வேண்டும். அசுத்தத்தையும் பரிசுத்தத்தையும் ஒன்றாய் இணைத்துவிடக்கூடாது.

43 அதிகாரம்

எசேக்கியேல் தீர்க்கதரிசி இதுவரையிலும் தேவாலயத்தைத் தரிசித்தார். கர்த்தரே அவருக்கு இந்த தரிசனத்தை காண்பித்தார். எசேக்கியேல் தான் கண்ட தரிசனத்தை இதுவரையிலும் நமக்கு விவரமாகச் சொல்லி வருகிறார். இப்போது அந்த தேவாலயத்தில் நடைபெறவேண்டிய ஆராதனை முறைமைகளைப்பற்றி எசேக்கியேல் இங்கு விரிவாகச் சொல்லுகிறார். இந்த ஆராதனை முறைமைகள், பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆராதனை முறைமைகளுக்கு ஒப்பாயிருக்கிறது.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்புகிறது (எசே 43:1-6). இஸ்ரவேல் வம்சத்தார் அருவருப்புக்களினால் தங்களைத் தீட்டுப்படுத்தாமல், கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்கும்போது, கர்த்தர் அவர்கள் நடுவே தொடர்ந்து வாசம்பண்ணுவார் (எசே 43:7-12).

சர்வாங்க தகனங்களை பலியிடுகிற பலிபீடத்தைப்பற்றிய விவரம் (எசே 43:13-17). பலிபீடத்தை சுத்திகரிக்கும் விவரம் (எசே 43:18-27). எசேக்கியேல் தேவனுக்கும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் நடுவில் நிற்பதுபோலிருக்கிறது. கர்த்தருடைய தாசனாகிய மோசே, ஆசரிப்புக்கூடாரத்தை ஸ்தாபித்தபோது, அவர் கர்த்தருக்கும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் நடுவில் நின்றார். அதுபோலவே இப்போது எசேக்கியேலும் நிற்கிறார்.

கர்த்தருடைய மகிமை எசே 43:1-6

எசே 43:1. பின்பு அவர் என்னைக் கீழ்த்திசைக்கு எதிர் வாசலாகிய வாசலுக்கு அழைத்துக் கொண்டுபோனார்.

எசே 43:2. இதோ, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல இருந்தது; அவருடைய மகிமையினால் பூமி பிரகாசித்தது.

எசே 43:3. நான் கண்ட இந்தத் தரிசனம் நகரத்தை அழிக்கவந்தபோது கண்ட தரிசனம்போல இருந்தது; இந்த தரிசனங்கள் கேபார் நதியண்டையிலே நான் கண்டிருந்த தரிசனத்தைப்போலும் இருந்தது; நான் முகங்குப்புற விழுந்தேன்.

எசே 43:4. கர்த்தருடைய மகிமை கீழ்த்திசைக்கு எதிரான வாசல்வழியாய் ஆலயத்துக்குள் பிரவேசித்தது.

எசே 43:5. அப்பொழுது ஆவி என்னை எடுத்து, உட்பிரகாரத்திலே கொண்டுபோய்விட்டது; இதோ, கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று.

எசே 43:6. அவர் ஆலயத்திலிருந்து என்னோடே பேசுகிறதைக் கேட்டேன். அந்தப்புருஷன் என்னண்டையில் நின்றிருந்தார்.

எசேக்கியேல் இதுவரையிலும் தேவனுடைய ஆலயத்தை தரிசித்துக்கொண்டு வந்தார். இந்தப் பூமியிலே, கர்த்தருடைய மகிமை, அவருடைய ஆலயத்தில் தங்கியிருக்கிறது. பரலோகத்தின் மகிமை கர்த்தருடைய ஆலயத்தில் வந்து தங்குகிறது. எசேக்கியேலுக்கு கர்த்தருடைய மகிமையை தரிசிக்கும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலை கீழ்த்திசைக்கு எதிர்வாசலாகிய வாசலுக்கு அழைத்துக் கொண்டு போகிறார். எசேக்கியேல் தேவாலயத்தின் விஸ்தாரங்களையெல்லாம் பார்க்கிறார். தேவாலயத்திலுள்ள எல்லா பிரகாரங்களையும் தரிசிக்கிறார். தேவாலயம் விஸ்தாரமாயும், அலங்காரமாயும் இருக்கிறது.

தேவனுடைய மகிமை இன்னும் ஆலயத்தில் வந்து தங்கவில்லை. தேவாலயத்தில் கர்த்தருடைய மகிமை வந்து தங்கும்போதுதான், அது பூரண அழகுள்ளதாயிருக்கும். எசேக்கியேல் உலர்ந்த எலும்புகள் நிரம்பிய பள்ளத்தாக்கை தரிசித்தார். அவையெல்லாம் செத்துப்போன எலும்புகள். ஜீவஆவியானவர் அந்த எலும்புகளுக்குள் பிரவேசிக்கும் வரையிலும், அந்த எலும்புகளுக்கு ஜீவனில்லை. உலர்ந்த எலும்புகளுக்குள், கர்த்தருடைய ஜீவஆவியானவர் பிரவேசித்தபோது, அவை உயிர்பெற்றது (எசே 37 -ஆவது அதிகாரம்).

கர்த்தருடைய மகிமை அவருடைய ஆலயத்தில் வந்து தங்கும் வரையிலும், அது சாதாரண கட்டிடமாகவே இருக்கும். கர்த்தருடைய மகிமை ஆலயத்தில் தங்கும்போதுதான், அது ஜீவனுள்ள ஆலயமாயிருக்கும்.

எசேக்கியேல் தேவனுடைய ஆலயத்தைப் பார்க்கும்போது, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வருகிறது. தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இதன் நிமித்தமாக அவர் "இஸ்ரவேலின் தேவன்" என்று அழைக்கப்படுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார், "தேவனுடைய இஸ்ரவேலர்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை, மகிமையுமில்லை. சிற்ப ஆசாரிகள் சிலைகளை நேர்த்தியாய்ச் செய்கிறார்கள். சிலைகளின் அழகு சிற்ப ஆசாரிகளின் கைத்திறமைகளிலிருக்கிறது. அவர்களுக்கு கைத்திறமையில்லையென்றால், சிலைகள் அழகாயிராமல், அலங்கோலமாயிருக்கும்.

இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வருகிறது. இயேசுகிறிஸ்துவின் நட்சத்திரம் கிழக்கு திசையில் காணப்பட்டது. கிறிஸ்துவானவர் விடிவெள்ளியாகயிருக்கிறார். அவர் நீதியின் சூரியனாகயிருக்கிறார். சூரியன் கிழக்கு திசையில் உதிப்பதுபோல, தேவனுடைய மகிமையும் கிழக்கு திசையிலிருந்து வருகிறது.

தேவனுடைய மகிமை வரும்போது இரண்டு காரியங்கள் நடைபெறுகிறது. அவையானவன: 1. தேவனுடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல இருக்கிறது. 2. தேவனுடைய மகிமையினால் பூமி பிரகாசிக்கிறது.

எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறார். அவருடைய வார்த்தை மெல்லிய சத்தமாயிராமல், பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தை மகிமையானது. இயேசுகிறிஸ்துவின் மகிமை அவருடைய சுவிசேஷத்தில் வெளிப்படுகிறது. நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல முழக்கமிடவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை மனதிற்குள்ளே முனங்கிக்கொண்டிருக்கக்கூடாது. சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் தெளிவாகக் கேட்கும் வண்ணமாக, பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல பிரசங்கம்பண்ணவேண்டும்.

எசேக்கியேல் தேவனுடைய மகிமையை தரிசிக்கிறார். அவருடைய மகிமை பிரகாசமாயிருக்கிறது. அவருடைய மகிமையினால் பூமி பிரகாசிக்கிறது. தேவனே வெளிச்சமாகவும், ஒளியாகவும் இருக்கிறார். கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தை யாராலும் முழுமையாய்ப் பார்க்க முடியாது. கர்த்தரை பிரத்தியட்சமாய் தரிசித்தவர் ஒருவருமில்லை. தேவனுடைய மகிமை அவருடைய சபையிலும் பிரகாசிக்கிறது. அந்த மகிமை பூமியின்மீது தன்னுடைய ஒளியையும் வெளிச்சத்தையும் கொடுக்கிறது.

எசேக்கியேல், தேவாலயத்தின் கீழ்த்திசைக்கு எதிர்வாசலாகிய வாசலிலே நிற்கிறார். அங்கே இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வருகிறது. கர்த்தருடைய மகிமை தேவாலயத்திற்குள் பிரவேசிப்பதை எசேக்கியேல் தரிசிக்கிறார். அந்த தரிசனத்தைப் பார்த்தவுடன், எசேக்கியேல் முகங்குப்புற விழுகிறார் (எசே 43:3).

எசேக்கியேல் கர்த்தருடைய மகிமைக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். கர்த்தரை பயபக்தியோடு துதிக்கிறார். எசேக்கியேல் இங்கு காண்கிற இந்த தரிசனம், கர்த்தர் நகரத்தை அழிக்க வந்தபோது, அவர் கண்ட தரிசனம்போலிருக்கிறது. எசேக்கியேல் கேபார் நதியண்டையிலே கர்த்தருடைய மகிமையை தரிசித்தார். அவர் இங்கு காண்கிற தரிசனம், கேபார் நதியண்டையிலே அவர் கண்டிருந்த தரிசனங்களைப் போலிருக்கிறது.

கர்த்தருடைய மகிமை கீழ்த்திசைக்கு எதிராக வாசல் வழியாய் ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறது. அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் எசேக்கியேலை எடுத்து, உட்பிரகாரத்திலே கொண்டு போய்விடுகிறார். கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்புவதை எசேக்கியேல் தரிசிக்கவேண்டும். இதற்காகவே, ஆவியானவர் எசேக்கியேலை உட்பிரகாரத்தில் கொண்டுபோய்விடுகிறார். அப்பொழுது கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்புவது, புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில், கர்த்தருடைய மகிமை வந்து தங்குவதற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய மகிமை பிரகாசமாயிருக்கும். தேவனுடைய கிருபையின் மகிமை சபையிலே வாசம்பண்ணும். கர்த்தருடைய கிருபை சபையை நிரப்பும்.

தேவாலயத்திலே கர்த்தருடைய மகிமை பிரவேசிப்பதைப்பற்றி ஏற்கெனவே வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது தேவனுடைய ஆலயத்தை மேகம் மூடிற்று. ஆலயத்தை மேகம் நிரப்பிற்று. எசேக்கியேல் இப்போது கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்புவதைப் பார்க்கிறார். இங்கு மேகத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. தேவனுடைய மகிமை பிரத்தியட்சமாய்த் தெரிகிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவனுடைய மகிமை மேகத்தின் வழியாக, அடையாளமாகத் தெரிந்தது. புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, கர்த்தருடைய மகிமை, இயேசுகிறிஸ்துவிலே, பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவைத் தரிசிக்கிறவர்கள், அவருக்குள் தேவனுடைய மகிமையை தரிசிக்கிறார்கள்.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று. அப்போது கர்த்தர் ஆலயத்திலிருந்து எசேக்கியேலோடு பேசுகிறார். கர்த்தர் பேசும்போது அந்தப் புருஷனும், எசேக்கியேலண்டையில் நின்றுகொண்டிருக்கிறார்.

மோசே ஆசாரிப்புக்கூடாரத்தை ஸ்தாபித்தபோது கர்த்தருடைய பிரசன்னம் அங்கு வந்து தங்கிற்று. அப்போது மோசே கர்த்தரிடத்திலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொண்டார்.

கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு, அவனை நோக்கி: "நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லவேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் கர்த்தருக்குப் பலி செலுத்த வந்தால், மாட்டுமந்தையிலாவது ஆட்டுமந்தையிலாவது ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து, பலிசெலுத்த வேண்டும்" *(லேவி 1:1,2)* என்று சொன்னார்.

கர்த்தர் ஆசாரிப்புக்கூடாத்திலே மோசேயோடு பேசினதுபோல, இப்போது எசேக்கியேலோடு ஆலயத்திலிருந்து பேசுகிறார். கர்த்தர் தன்னோடு பேசுகிறதை எசேக்கியேல் கேட்கிறார். எசேக்கியேலோடு அந்தப் புருஷனும் கூடயிருக்கிறார் *(எசே 43:6)*.

ஆலயத்தினுடைய பிரமாணம் எசே 43:7-12

எசே 43:7. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இது நான் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே என்றென்றைக்கும் வாசம்பண்ணும் என் சிங்காசனமும் என் பாதபீடத்தின் ஸ்தானமுமாயிருக்கிறது; இனி இஸ்ரவேல் வம்சத்தாரும் அவர்களுடைய ராஜாக்களும் என் பரிசுத்த நாமத்தைத் தங்கள் மேடைகளில் தங்கள் வேசித்தனத்தினாலும் தங்கள் ராஜாக்களின் பிரேதங்களினாலும் தீட்டுப்படுத்துவதில்லை.

எசே 43:8. அவர்கள் எனக்கும் தங்களுக்கும் நடுவே ஒரு சுவர் இருக்கும்படி, தங்கள் வாசற்படியை என் வாசற்படியண்டையிலும், தங்கள் வாசல்நிலைகளை என் வாசல் நிலைகளண்டையிலும் சேர்த்து, என் பரிசுத்த நாமத்தைத் தாங்கள் செய்த அருவருப்புகளினால் தீட்டுப்படுத்தினார்கள்; ஆகையால் என் கோபத்திலே அவர்களை நாசமாக்கினேன்.

எசே 43:9. இப்பொழுதும் அவர்கள் தங்கள் வேசித்தனத்தையும் தங்கள் ராஜாக்களின் பிரேதங்களையும் என் சமுகத்தினின்று அகற்றினால் நான் என்றென்றைக்கும் அவர்கள் நடுவே வாசமாயிருப்பேன்.

எசே 43:10. மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமங்களினிமித்தம் வெட்கப்படும்படிக்கு, நீ அவர்களுக்கு இந்த ஆலயத்தைக் காண்பி; அதின் அளவை அளக்கக்கடவர்கள்.

எசே 43:11. அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெட்கப்பட்டால், அப்பொழுது இந்த ஆலயத்தின் ரூபத்தையும், அதின் அளவையும், அதின் முன்வாசல்களையும், அதின் பின்வாசல்களையும், அதின் எல்லா ஒழுங்குகளையும், அதின் எல்லாக் கட்டளைகளையும், அதின் எல்லா நியமங்களையும், அதின் எல்லாச் சட்டங்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் அதினுடைய எல்லா ஒழுங்குகளையும், அதினுடைய எல்லா முறைமைகளையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யும்படிக்கு அதை அவர்கள் கண்களுக்கு முன்பாக எழுதிவை.

எசே 43:12. ஆலயத்தினுடைய பிரமாணம் என்னவென்றால்: மலையுச்சியின்மேல் சுற்றிலும் அதின் எல்லையெங்கும் மிகவும் பரிசுத்தமாயிருக்கும்; இதுவே ஆலயத்தினுடைய பிரமாணம்.

கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்புகிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஆலயத்திலே வாசம்பண்ணுகிறார். கர்த்தர் மறுபடியுமாக தம்முடைய ஆலயத்தில் வந்து தங்குகிறார். கர்த்தர் ஏற்கெனவே இஸ்ரவேல் வம்சத்தாரோடு உடன்படிக்கை செய்திருந்தார். ஆனால் அவர்களோ உடன்படிக்கையை மீறி பாவம் செய்தார்கள். கர்த்தர் மறுபடியுமாய், இஸ்ரவேல் வம்சத்தாரோடு, தம்முடைய உடன்படிக்கையை புதுப்பிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஆலயத்திலே, இஸ்ரவேல் புத்திரரின் நடுவே என்றென்றைக்கும் வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆலயம் அவருடைய சிங்காசனமும், அவருடைய பாதபீடத்தின் ஸ்தானமுமாயிருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலிடம் இஸ்ரவேல் வம்சத்தாரின் பழைய பாவங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரும் அவர்களுடைய ராஜாக்களும் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை தீட்டுப்படுத்தினார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களுக்கு மேடைகளையும் தோப்புகளையும் உண்டுபண்ணினார்கள். தங்கள் மேடைகளில் வேசித்தனம் பண்ணினார்கள். தங்கள் ராஜாக்களின் பிரேதங்களை கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வந்து, கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை தீட்டுப்படுத்தினார்கள்.

இஸ்ரவேலின் ராஜாக்கள் தேவாலயத்திலேயே விக்கிரகங்களுக்கு பலிபீடங்களைக் கட்டினார்கள். கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிரகாரங்களில், விக்கிரகங்களுக்கு மேடைகளை உண்டு பண்ணி, அதிலே வேசித்தனம்பண்ணினார்கள். தேவனுடைய தெய்வீக மகிமை தங்கியிருக்கும் பரிசுத்த ஸ்தலத்திலே, இஸ்ரவேலின் ராஜாக்கள் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களினிமித்தமாக, கர்த்தர் தமக்கும் அவர்களுக்கும் நடுவே ஒரு சுவரைக் கட்டியெழுப்பினார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அவருடைய சமுகத்திலிருந்து இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியில் கடந்து போகாதபடிக்கு, இந்தச் சுவர் தடைபண்ணிற்று. இஸ்ரவேல் வம்சத்தாருக்கு கர்த்தருடைய அநுக்கிரகம் கிடைக்கவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஆலயத்திற்கு விக்கிரகங்களை ஆராதிக்க வருகிறார்கள். தேவாலயத்திற்கு அருகிலிருக்கிறவர்கள், கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகியிருக்கிறார்கள். நாம் சபைக்கு வரும்போது, கர்த்தருக்கு அருகாமையில் வரவேண்டும். சபைக்கும் வந்து, கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகிப்போய்விட்டால், நம்முடைய நிலமை பரிதாபமாயிருக்கும்.

இஸ்ரவேல் வம்சத்தாரும், அவர்களுடைய ராஜாக்களும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் தங்கள் வேசித்தனத்தை கர்த்தருடைய சமுகத்திலிருந்து அகற்றவேண்டும்.

கர்த்தருடைய ஆலயம் பரிசுத்தமானது. இஸ்ரவேல் ராஜாக்களோ, தங்களுடைய ராஜாக்களின் பிரேதங்களை, தேவாலயத்திலே கொண்டு வந்து அடக்கம்பண்ணுகிறார்கள். தேவாலயத்திலே ராஜாக்களுக்கு சிலைகளைச் செய்து அதற்கு பலிபீடங்களையும் கட்டுகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் ராஜாக்களின் பிரேதங்களை கர்த்தருடைய சமுகத்திலிருந்து அகற்ற வேண்டும். அப்போது கர்த்தர் அவர்கள் நடுவே வாசமாயிருப்பார்.

இஸ்ரவேல் வம்சத்தாரும் அவர்களுடைய ராஜாக்களும் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை இனிமேல் தீட்டுப்படுத்தக் கூடாது. அவர்கள் தங்கள் வாசற்படியை கர்த்தருடைய ஆலயத்தின் வாசற்படியண்டையிலே சேர்த்திருக்கிறார்கள். தங்கள் வாசல் நிலைகளை கர்த்தருடைய வாசல் நிலைகளண்டையில் சேர்த்து கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை தீட்டுப்படுத்துகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமாக அருவருப்புக்களைச் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. கர்த்தர் தம்முடைய கோபத்திலே அவர்களை நாசமாக்கினார். கர்த்தர் தமக்கும் அவர்களுக்கும் நடுவே ஒரு சுவர் இருக்கும்படி செய்தார். இந்தச் சுவர் கர்த்தரையும், இஸ்ரவேல் வம்சத்தாரையும் வெவ்வேறாகப் பிரித்துவிட்டது.

ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, கர்த்தர் அவர்கள் நடுவே மறுபடியும் வாசம்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு முன்பாக தான் தரிசித்த ஆலயத்தை அவர்களுக்கு காண்பிக்கவேண்டும். அவர்கள் ஆலயத்தின் அளவுகளை அளக்கவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார் அருவருப்பான பாவங்களை செய்து, தங்களைத் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தர் வெளிப்படுத்தும் ஆலயத்தைப் பார்க்கும்போது, கர்த்தருடைய மகிமையையும், அவருடைய மகத்துவத்தையும், மாட்சிமையையும் புரிந்துகொள்வார்கள். அவர்கள் கர்த்தர் பரிசுத்தர் என்னும் சத்தியத்தையும் அறிந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமங்களினிமித்தம் வெட்கப்படுவார்கள் (எசே 43:10). கர்த்தர் நமக்கு செய்கிற நன்மைகளை நினைத்து, நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவேண்டும். கர்த்தருடைய கிருபையும், அவருடைய ஆசீர்வாதங்களும், நம்முடைய பரிசுத்தத்திற்கு நேராக நம்மை வழிநடத்தவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தாரே தேவாலயத்தின் எல்லா அளவுகளையும் அளக்கக்கடவர்கள் என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார். தேவாலயம் எவ்வளவு விஸ்தாரமானது என்பதையும், முந்தின ஆலயத்தைவிட, பிந்தின ஆலயம் எவ்வளவு மகிமையானது என்பதையும் இஸ்ரவேல் வம்சத்தார் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தை அளந்து பார்த்து, கர்த்தர் தங்களுக்காக வைத்திருக்கிற ஆசீர்வாதங்களையும், மேன்மைகளையும் புரிந்துகொண்டு, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தார் இனிமேல் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைத் தீட்டுப்படுத்தாமல், பரிசுத்தம்பண்ண வேண்டும் (எசே 43:10).

இஸ்ரவேல் வம்சத்தார் தாங்கள் செய்த எல்லா அக்கிரமங்களினிமித்தமும் வெட்கப்பட்டால், கர்த்தர் அவர்களுக்கு இன்னும் அதிகமான கிருபைகளை வெளிப்படுத்துவார்.

"அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெட்கப்பட்டால், அப்பொழுது இந்த ஆலயத்தின் ரூபத்தையும், அதின் அளவையும், அதின் முன்வாசல்களையும், அதின் பின்வாசல்களையும், அதின் எல்லா ஒழுங்குகளையும், அதின் எல்லாக் கட்டளைகளையும், அதின் எல்லா நியமங்களையும், அதின் எல்லாச் சட்டங்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் அதினுடைய எல்லா ஒழுங்குகளையும், அதினுடைய எல்லா முறைமைகளையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யும்படிக்கு அதை அவர்கள் கண்களுக்கு முன்பாக எழுதிவை" *(எசே 43:11)* என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தாங்கள் செய்த பாவங்களினிமித்தமும், அருவருப்புக்களினிமித்தமும் வெட்கப்பட்டால் கர்த்தர் தம்முடைய ஆலயத்தின் ரூபத்தையும் அவர்களுக்கு காண்பிப்பார். அதன் அளவுகளையும் அவர்களுக்கு தெளிவுபடுத்துவார். அதோடு தேவாலயத்தின் ஒழுங்குகளையும், அதின் எல்லா கட்டளைகளையும், அதின் எல்லா நியமங்களையும், அதின் எல்லா சட்டங்களையும், அவர்களுக்கு தெரியப்படுத்துவார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் பாவங்களுக்காக வெட்கப்பட்டு, மனந்திரும்பும்போது கர்த்தருடைய கிருபை அவர்களுக்கு அதிகமாய்க் கொடுக்கப்படும். அவர்களும், அவர்களுடைய ராஜாக்களும் இனிமேல் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைத் தீட்டுப்படுத்தமாட்டார்கள். அவர்கள் விக்கிரகங்களின் மேடைகளில் வேசித்தனம் பண்ணமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய ராஜாக்களின் பிரேதங்களினால் தேவாலயத்தை தீட்டுப்படுத்தமாட்டார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரும் அவர்களுடைய ராஜாக்களும் கர்த்தருடைய ஆலயத்தின் எல்லா ஒழுங்குகளையும், அதினுடைய எல்லா முறைமைகளையும் கைக்கொண்டு, கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனம். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருக்கவேண்டும். அப்போதுதான் கர்த்தர் அவர்கள் நடுவே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்.

கர்த்தர் தம்முடைய ஆலயத்தின் பொதுவான பிரமாணத்தை இங்கு சொல்லுகிறார். "மலையுச்சியின்மேல் சுற்றிலும் அதின் எல்லையெங்கும் மிகவும் பரிசுத்தமாயிருக்கும்; இதுவே ஆலயத்தினுடைய பிரமாணம்" *(எசே 43:12).*

இதற்கு முன்பு, கர்த்தருடைய ஆலயத்தில், மகா பரிசுத்தஸ்தலம் மாத்திரமே மிகவும் பரிசுத்தமாயிருந்தது. இப்போது தேவாலயத்தின் எல்லையெங்கும் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம். தேவாலயம் பர்வதத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பர்வதம் முழுவதும் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில், சபை முழுவதும் மகாபரிசுத்த ஸ்தலமாகயிருக்கிறது. கர்த்தருடைய சபையிலுள்ள, எல்லா ஸ்தானத்திலும், கர்த்தர் வாசம்பண்ணுகிறார். நாம் சபையில் எந்த இடத்தில் அமர்ந்திருந்தாலும், அந்த இடத்தில் கர்த்தரை கிட்டிச் சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய மகாபரிசுத்த ஸ்தலத்தை தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

"ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" (எபி 10:19-22).

பழைய ஏற்பாட்டுக்காலத்து தேவாலயத்திலே, பிரதான ஆசாரியன், காளைகள், வெள்ளாட்டுக்கடாக்கள் ஆகியவற்றின் இரத்தத்தினால் உண்டாகும் நீதியினால் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் நீதியினால், கர்த்தரை கிட்டிச்சேருகிறோம். நாம் எந்த இடத்திலிருந்தாலும், அந்த இடத்தில் பிதாவாகிய தேவனை கிட்டிச் சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

பலிபீடம்
எசே 43:13-27

எசே 43:13. முழங்களின்படி அளக்கும் பலிபீடத்தின் அளவுகளாவன: ஒரு கைமுழமும் நாலு விரற்கடையும் கொண்டது ஒரு முழமாகும்; அதின்படி சுற்றாதாரம், ஒரு முழ உயரமும், ஒரு முழ அகலமும், அதின் ஓரத்தைச்சுற்றிலுமுள்ள விளிம்பு ஒரு ஜாணுமாயிருக்கும்; இது பலிபீடத்தின் மேற்புறம்.

எசே 43:14. தரையில் இருக்கிற ஆதாரந்துவக்கிக் கீழ்நிலைமட்டும் இரண்டுமுழமும், அகலம் ஒரு முழமும், சின்ன நிலைதுவக்கிப் பெரிய நிலைமட்டும் நாலுமுழமும், அகலம் ஒரு முழமுமாயிருக்கும்.

எசே 43:15. பலிபீடத்தின் சிகரம் நாலு முழ உயரமாயிருக்கும்; பலிபீடத்தின் சிகரத்துக்குமேலே நாலு கொம்புகள் இருக்கும்.

எசே 43:16. பலிபீடத்தின் சிகரம் பன்னிரண்டு முழ நீளமும், பன்னிரண்டுமுழ அகலமும் தன் நாலு பக்கங்களிலும் நாற்சதுரமுமாயிருக்கும்.

எசே 43:17. அதின் நாலு பக்கங்களிலுள்ள சட்டத்தின் நீளம் பதினாலு முழமும், அகலம் பதிநாலு முழமும், அதைச் சுற்றிலுமிருக்கிற விளிம்பு அரை முழமும், அதற்கு ஆதாரமானது சுற்றிலும் ஒரு முழமுமாயிருக்கும்; அதின் படிகள் கிழக்குக்கு எதிராயிருக்கும் என்றார்.

எசே 43:18. பின்னும் அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: பலிபீடத்தை உண்டுபண்ணும் நாளிலே அதின்மேல் தகனபலியிடுகிறதற்கும் அதின்மேல் இரத்தம் தெளிக்கிறதற்குமான கட்டளைகளாவன:

எசே 43:19. எனக்கு ஆராதனை செய்கிறதற்கு என்னிடத்தில் சேருகிற சாதோக்கின் வம்சத்தாரான லேவி கோத்திரத்தாராகிய ஆசாரியர்களுக்கு நீ பாவநிவாரண பலியாக ஒரு இளங்காளையைக் கொடுப்பாயாக என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 43:20. அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதின் நாலு கொம்புகளிலும், சட்டத்தின் நாலு கோடிகளிலும், சுற்றியிருக்கிற விளிம்பிலும் பூசி பாவநிவிர்த்திசெய்து, அதைச் சுத்திகரித்து,

எசே 43:21. பின்பு பாவநிவாரணத்தின் காளையைக் கொண்டுபோய், அதை ஆலயத்திலே பரிசுத்த ஸ்தலத்துக்குப் புறம்பாகக் குறிக்கப்பட்ட இடத்திலே சுட்டெரிக்கவேண்டும்.

எசே 43:22. இரண்டாம் நாளிலே பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக் கடாவைப் பாவநிவாரணத்துக்காகப் பலியிடுவாயாக; அவர்கள் இளங்காளையினாலே பலிபீடத்தைச் சுத்திசெய்ததுபோலப் பாவநிவாரணஞ் செய்யவேண்டும்.

எசே 43:23. நீ பாவநிவாரணத்தை முடித்தபின்பு, பழுதற்ற ஒரு இளங்காளையையும், பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் மந்தையிலிருந் தெடுத்துப் பலியிடுவாயாக.

எசே 43:24. அவைகளைக் கர்த்தருடைய சந்நிதியில் பலியிடுவாயாக; ஆசாரியர்கள் அவைகளின்மேல் உப்புதூவி, அவைகளைக் கர்த்தருக்கு தகனபலியாக இடக்கடவர்கள்.

எசே 43:25. ஏழுநாள்வரைக்கும் தினந்தினம் பாவநிவாரணத்துக்காக ஒரு வெள்ளாட்டுக்கடாவைப் படைப்பாயாக; பழுதற்றவைகளான இளங்காளையையும் மந்தையிலிருந் தெடுத்த ஆட்டுக்கடாவையும் படைப்பார்களாக.

எசே 43:26. ஏழுநாள்வரைக்கும் பலிபீடத்தைப் பாவநிவிர்த்திசெய்து, அதைச் சுத்திகரித்து, பிரதிஷ்டை பண்ணக்கடவர்கள்.

எசே 43:27. அந்நாட்கள் முடிந்தபின்பு, எட்டாம் நாள்முதல் ஆசாரியர்கள் பலிபீடத்தின்மேல் உங்கள் தகனபலிகளையும் உங்கள் ஸ்தோத்திரபலிகளையும் படைப்பார்களாக; அப்பொழுது உங்களை அங்கீகரிப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசேக்கியேல் கர்த்தருடைய ஆலயத்தைத் தரிசிக்கிறார். அங்கே ஒரு பலிபீடம் இருக்கிறது. எசேக்கியேல் தரிசிக்கிற தேவாலயம், அதன் பிரகாரங்கள், அவற்றின் அளவுகள் எல்லாவற்றிற்கும் ஆவிக்குரிய அர்த்தங்கள் உள்ளது. இயேசுகிறிஸ்துவே நம்முடைய பலிபீடமாயிருக்கிறார்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். எருசலேமிலே தேவாலயம் இடிந்து கிடக்கிறது. இடிந்துபோன தேவாலயத்தை அவர்களால் உடனே பயன்படுத்தவும் முடியவில்லை. அவர்களால் தேவாலயத்தையும் உடனே செப்பனிட்டு, சீர்படுத்தி திரும்பக்கட்டவும் முடியவில்லை. தேவாலயம் மறுபடியும் கட்டப்படும் வரையிலும், அவர்களுக்கு ஒரு பலிபீடம் இருந்தது.

"அவர்கள் அத்தேசத்தின் ஜனங்களுக்குப் பயந்ததினால், பலிபீடத்தை அதின் ஆதாரங்களின்மேல் ஸ்தாபித்து, அதின்மேல் அவர்கள் கர்த்தருக்கு அந்திசந்தி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினார்கள்" *(எஸ்றா 3:3).*

எசேக்கியேல் இங்கு தரிசிக்கிற பலிபீடம், தேவாலயத்திற்குள்ளே இருக்கிற பலிபீடமாகும். அவருக்கு பலிபீடத்தின் அளவுகளைப்பற்றியும் தரிசனம் கிடைக்கிறது. "முழங்களின்படி அளக்கும் பலிபீடத்தின் அளவுகளாவன: ஒரு கைமுழமும் நாலு விரற்கடையும் கொண்டது ஒரு முழமாகும்; அதின்படி சுற்றாதாரம், ஒரு முழ உயரமும், ஒரு முழ அகலமும், அதின் ஓரத்தைச்சுற்றிலுமுள்ள விளிம்பு ஒரு ஜாணுமாயிருக்கும்; இது பலிபீடத்தின் மேற்புறம்" *(எசே 43:13).*

பலிபீடத்திலே இரண்டு பகுதி இருக்கிறது. ஒன்று தரையிலிருக்கிற ஆதாரம். மற்றொன்று பலிபீடத்தின் சிகரம்.

தரையில் இருக்கிற ஆதாரந்துவக்கிக் கீழ்நிலைமட்டும் இரண்டுமுழமும், அகலம் ஒரு முழமும், சின்ன நிலைதுவக்கிப் பெரிய நிலைமட்டும் நாலுமுழமும், அகலம் ஒரு முழமுமாயிருக்கும் *(எசே 43:14).*

பலிபீடத்தின் சிகரம் நாலு முழ உயரமாயிருக்கும்; பலிபீடத்தின் சிகரத்துக்குமேலே நாலு கொம்புகள் இருக்கும்.16. பலிபீடத்தின் சிகரம் பன்னிரண்டு முழ நீளமும், பன்னிரண்டுமுழ அகலமும் தன் நாலு பக்கங்களிலும் நாற்சதுரமுமாயிருக்கும். அதின் நாலு பக்கங்களிலுள்ள சட்டத்தின் நீளம் பதினாலு முழமும், அகலம் பதிநாலு முழமும், அதைச் சுற்றிலுமிருக்கிற விளிம்பு அரை முழமும், அதற்கு ஆதாரமானது சுற்றிலும் ஒரு முழமுமாயிருக்கும்; அதின் படிகள் கிழக்குக்கு எதிராயிருக்கும் (எசே 43:15-17).

பலிபீடத்தின் தரையிலிருக்கிற ஆதாரத்தில் ஆசாரியர்களில் சிலர் நின்றுகொண்டிருப்பார்கள். பலிபீடத்தின் சிகரத்திலும் சில ஆசாரியர்கள் நின்றுகொண்டிருப்பார்கள். பலிபீடத்தின் சிகரத்தில் தகனபலிகள் செலுத்தப்படும். பலிபீடத்தின் கீழேயிருக்கிற ஆசாரியர்கள், பலிசெலுத்தவேண்டிய பொருட்களை தங்கள் கைகளில் வாங்கி, அவற்றை பலிபீடத்தின் சிகரத்திலிருக்கிற ஆசாரியர்களுக்கு கொடுப்பார்கள். அந்த ஆசாரியர்கள் பலிபீடத்தின் சிகரத்திலிருந்து, கர்த்தருக்கு பலிசெலுத்துவார்கள்.

பலிபீடத்தை உண்டுபண்ணும் நாளிலே அதன்மேல் தகனபலியிடவேண்டும் என்றும், அதின்மேல் இரத்தம் தெளிக்கவேண்டும் என்றும் கர்த்தர் எசேக்கியேலுக்கு கட்டளைகொடுக்கிறார்.

சாதோக்கின் வம்சத்தார் கர்த்தருக்கு ஆராதனை செய்கிறார்கள். இவர்கள் லேவி கோத்திரத்தாராகிய ஆசாரியர்கள். எசேக்கியேல் அவர்களுக்கு பாவநிவாரண பலியாக ஒரு இளங்காளையைக் கொடுக்கவேண்டும். அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதின் நாலு கொம்புகளிலும், சட்டத்தின் நாலு கோடிகளிலும், சுற்றியிருக்கிற விளிம்பிலும் பூசி பாவநிவிர்த்திசெய்து, அதைச் சுத்திகரிக்கவேண்டும். பின்பு பாவநிவாரணத்தின் காளையைக் கொண்டு போய், அதை ஆலயத்திலே பரிசுத்த ஸ்தலத்துக்குப் புறம்பாகக் குறிக்கப்பட்ட இடத்திலே சுட்டெரிக்கவேண்டும் (எசே 43:19-21).

எசேக்கியேல் பாவநிவாரணத்தை முடித்தபின்பு, பழுதற்ற ஒரு இளங்காளையையும், பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் மந்தையிலிருந்தெடுத்துப் பலியிடவேண்டும். அவைகளைக் கர்த்தருடைய சந்நிதியில் பலியிடவேண்டும்; ஆசாரியர்கள் அவைகளின்மேல் உப்புதூவி, அவைகளைக் கர்த்தருக்கு தகனபலியாக இடவேண்டும் (எசே 43:23,24).

கர்த்தர் எசேக்கியேலுக்கு பலிபீடத்தைப்பற்றிய பிரமாணங்களை கட்டளையாகச் சொல்லுகிறார். எசேக்கியேல் ஏழுநாள்வரைக்கும் தினந்தினம் பாவநிவாரணத்துக்காக ஒரு வெள்ளாட்டுக் கடாவைப் படைக்கவேண்டும்; ஆசாரியர்கள் பழுதற்றவைகளான இளங்காளையையும் மந்தையிலிருந்தெடுத்த ஆட்டுக்கடாவையும் படைக்கவேண்டும் (எசே 43:25).

நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்பட்டால்தான், நாம் செலுத்துகிற பலிகளை கர்த்தர் அங்கீகரிப்பார். நம்முடைய பாவம் நிவிர்த்தி செய்யப்படவில்லையென்றால், கர்த்தர் நம்மையும் அங்கீகரிக்கமாட்டார். நம்முடைய பலிகளையும், நம்முடைய காணிக்கைகளையும், நம்முடைய ஆராதனைகளையும் அங்கீகரிக்கமாட்டார்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்ய முடியும். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் பலிபீடத்தையும் சுத்திகரிக்கிறது. பலிபீடத்தின்மீது செலுத்தப்படுகிற பலியையும் சுத்திகரிக்கிறது.

பலிபீடத்தை பிரதிஷ்டைபண்ணுவதற்கு, "அதை பாவநிவிர்த்தி செய்து, சுத்திகரிப்பது" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (எசே 43:20). "ஏழுநாள்வரைக்கும் பலிபீடத்தைப் பாவநிவிர்த்திசெய்து, அதைச் சுத்திகரித்து, பிரதிஷ்டைபண்ணக்கடவர்கள்" (எசே 43:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் செலுத்தப்படும் எல்லா பலிகளின்மேலும் உப்புத்தூவப்படவேண்டும் (எசே 43:24). தேவனுடைய கிருபையே உப்பாகயிருக்கிறது. நம்முடைய எல்லா ஆராதனைகளிலும், எல்லா ஊழியங்களிலும் தேவனுடைய கிருபை இருக்கவேண்டும்.

"அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" (கொலோ 4:6).

ஏழுநாள் வரைக்கும் பலிபீடத்தை பாவநிவிர்த்தி செய்து, அதைச் சுத்திகரித்தாலும், அந்த ஏழுநாட்கள் முடிந்த பின்பு, எட்டாம் நாள் முதல், ஆசாரியர்கள் பலிபீடத்தின்மேல் தங்கள் தகனபலிகளையும், தங்கள் ஸ்தோத்திரபலிகளையும் படைக்க வேண்டும். தேவாலயத்திலுள்ள பலிபீடத்திலே, தொடர்ந்து பலிகள் செலுத்தப்படவேண்டும். கர்த்தருக்கு பலிகளை செலுத்துவதற்காகவே பலிபீடம் பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறது.

பலிபீடம் பாவநிவிர்த்தி செய்யப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. பலிபீடத்தின்மேல் பலிசெலுத்த வேண்டும் என்பதற்காகவே அது சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. சாதோக்கின் வம்சத்தாரான லேவிகோத்திரத்தாராகிய ஆசாரியர்கள் பலிபீடத்திலே பலிகளைச் செலுத்தவேண்டும். சாதோக்கு என்னும் பெயருக்கு "நீதி" என்று பொருள். சாதோக்கின் வம்சத்தார் தேவனுடைய ஆசாரிய வம்சத்தில் நீதியின் வித்துக்களாகயிருக்கிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய நீதியாயிருக்கிறார்.

நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கு முன்பாக, நம்மை சுத்திகரித்து, கர்த்தருடைய சமுகத்தில் நம்மை பிரதிஷ்டைபண்ணவேண்டும். நம்முடைய பாவங்களை கர்த்தர் நிவிர்த்தி செய்யவேண்டும். ஆசாரியர்கள் பலிபீடத்தின்மேல் பலிகளைச் செலுத்தும் முன்பு, அவர்கள் தங்கள் தகனபலிகளையும், தங்கள் ஸ்தோத்திர பலிகளையும் படைக்கவேண்டும். அப்போதுதான் கர்த்தர், தம்முடைய ஊழியத்திற்கு ஆசாரியர்களை அங்கீகரிப்பார்.

44 அதிகாரம்

பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற கிழக்கு வாசல் (எசே 44:1-3). இஸ்ரவேல் வீட்டார் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள் (எசே 44:4-9). லேவியர்களும் விக்கிரகாராதனைக்காரராயிருந்தார்கள். சாதோக்கின் புத்திரர் ஆசாரிய ஊழியத்திற்கு நியமிக்கப்படுகிறார்கள் (எசே 44:10-15). ஆசாரியர்களைக் குறித்த பிரமாணங்கள் (எசே 44:17-31)

கிழக்கு வாசல் எசே 44:1-3

எசே 44:1. பின்பு, அவர் என்னைக் கிழக்குக்கு எதிரே பரிசுத்த ஸ்தலத்துக்குப் புறவாசல் வழியே திரும்பப்பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது.

எசே 44:2. அப்பொழுது கர்த்தர் என்னைநோக்கி: இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்கவேண்டும்.

எசே 44:3. இது அதிபதிக்கே உரியது, அதிபதி கர்த்தருடைய சந்நிதியில் போஜனம்பண்ணும்படி இதில் உட்காருவான்; அவன் வாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து, மறுபடியும் அதின் வழியாய்ப் புறப்படுவான் என்றார்.

கர்த்தர் எசேக்கியேலை மூன்றாம் முறையாக கிழக்கு வாசலுக்கு அழைத்து வருகிறார். ஆனால் இப்போது அந்த வாசல் பூட்டப்பட்டிருக்கிறது. ஆகையினால் கிழக்கு வாசல் இதற்கு முன்பு திறக்கப்பட்டிருந்தது என்பது பொருளாகும். பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தரை ஆராதிக்க வருகிறவர்களுக்கு, கிழக்கு வாசல் எல்லா வேளையிலும் திறந்திருந்தது. ஆனால் இப்போது அந்த வாசல் பூட்டப்பட்டிருக்கிறது.

கர்த்தரே எசேக்கியேலை கிழக்குக்கு எதிரே பரிசுத்த ஸ்தலத்திற்கு புறவாசல் வழியாக திரும்பப்பண்ணுகிறார். இதுவே கிழக்கு வாசல். இது இப்போது பூட்டப்பட்டிருக்கிறது. ஒரு மகிமையான காரணமாகவே இந்த வாசல் பூட்டப்பட்டிருக்கிறது.

கர்த்தர் எசேக்கியேலிடம், "இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்கவேண்டும்" (எசே 44:2) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தும் வண்ணமாக, கிழக்கு வாசல் பூட்டப்பட்டிருக்கிறது. இந்த வாசல் வழியாக தேவாலயத்தின் உட்பிரகாரத்திற்கு பிரவேசிக்கலாம். அங்கே தேவனுடைய மகிமை தங்கியிருக்கிறது. கர்த்தருடைய மகிமை ஆலயத்தில் தங்கியிருக்கிறது. கர்த்தருடைய மகிமை தங்கியிருக்கும் இடத்தில், யாரும் பிரவேசிக்கக்கூடாத வண்ணமாக, அந்த ஸ்தலத்திற்குப்போகும் கிழக்கு வாசல் பூட்டப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இந்தக் கிழக்கு வாசலுக்குள் பிரவேசித்த படியினால், வேறு யாரும் இதன் வழியாக பிரவேசிக்கக்கூடாது. இதன் நிமித்தமாகவே கிழக்கு வாசல் பூட்டப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலின் அதிபதியை கனம்பண்ணும்விதமாக கிழக்கு வாசல் பூட்டப்பட்டிருக்கிறது. "அதிபதி" என்னும் வார்த்தை பிரதான ஆசாரியனைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கிழக்கு வாசல் அதிபதிக்கே உரியது. அதிபதி கர்த்தருடைய சந்நிதியில் போஜனம்பண்ணும்படி இதில் உட்காருவான்; அவன் வாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து, மறுபடியும் அதின் வழியாய்ப் புறப்படுவான் (எசே 44:3).

பிரதான ஆசாரியன் கர்த்தருடைய சமுகத்திலே வந்து நின்று கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவன். இவன் இஸ்ரவேலின் வம்சத்தாரின் பிரதிநிதியாக இருக்கிறான். ஆகையினால் இவனுக்கு விசேஷித்த மதிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவன் கர்த்தருடைய சந்நிதியில் போஜனம்பண்ணும் சிலாக்கியம் பெற்றிருக்கிறான்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் தாமே மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் நமக்காக பிரவேசித்திருக்கிறார். தம்மை விசுவாசிக்கிறவர்களெல்லோரும் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும்படியாக, கிறிஸ்துவானவர் பரலோகத்தின் வாசல்களை நமக்கு திறந்துகொடுக்கிறார்.

முந்திய அருவருப்புக்கள் எசே 44:4-9

எசே 44:4. பின்பு அவர் என்னை வடக்கு வாசல்வழியாய் ஆலயத்தின் முகப்பிலே அழைத்துக்கொண்டு போனார்; இதோ, கர்த்தருடைய ஆலயம் கர்த்தருடைய மகிமையால் நிறைந்ததை நான் கண்டு, முகங்குப்புற விழுந்தேன்.

எசே 44:5. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, கர்த்தருடைய ஆலயத்தின் சகல நியமங்களையும் அதின் சகல சட்டங்களையுங்குறித்து நான் உன்னோடே சொல்வதையெல்லாம் நீ உன் மனதிலே கவனித்து, உன் கண்களினாலே பார்த்து, உன் காதுகளினாலே கேட்டு, பரிசுத்த ஸ்தலத்தினுடைய எல்லா வாசற்படிகளின் வழியாய் ஆலயத்துக்குள் பிரவேசிப்பதும் அதிலிருந்து புறப்படுவதும் இன்னவிதமென்று நீ ஆலோசித்துப் பார்த்து,

எசே 44:6. இஸ்ரவேல் வம்சத்தாராகிய கலகக்காரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் செய்த சகல அருவருப்புகளும் போதும்.

எசே 44:7. நீங்கள் எனக்குச் செலுத்தவேண்டிய ஆகாரமாகிய நிணத்தையும் இரத்தத்தையும் செலுத்துகையில், என் ஆலயத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும்படி விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நிய புத்திரரை என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் இருக்கிறதற்காக அழைத்துக்கொண்டுவந்தீர்கள்; நீங்கள் செய்த எல்லா அருவருப்புகளினாலும் அவர்கள் என் உடன்படிக்கையை மீறினார்கள்.

எசே 44:8. நீங்கள் என் பரிசுத்த வஸ்துக்களின் காவலைக் காவாமல், உங்களுக்கு இஷ்டமானவர்களை என் பரிசுத்த ஸ்தலத்திலே என் காவலைக் காக்கிறதற்காக வைத்தீர்கள்.

எசே 44:9. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் இருக்கிற சகல அந்நிய புத்திரரிலும், விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நிய புத்திரன் ஒருவனும் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பதில்லை.

கர்த்தர் எசேக்கியேலை வடக்கு வாசல் வழியாய் ஆலயத்தின் முகப்பிலே அழைத்துக்கொண்டு போகிறார். எசேக்கியேல், தான் ஏற்கெனவே கண்ட தரிசனங்களை இங்கு மறுபடியுமாய்க் காண்கிறார். அவர் ஏற்கெனவே கேட்ட செய்திகளை, மறுபடியுமாய்க் கேட்கவேண்டும்.

எசேக்கியேல் ஏற்கெனவே தரிசித்ததுபோல, இப்போதும் கர்த்தருடைய ஆலயம், கர்த்தருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது. எசேக்கியேல் அதைக் கண்டு முகங்குப்புற விழுகிறார். கர்த்தருடைய மகிமையைக் கண்டபோது, எசேக்கியேலின் இருதயத்திற்குள் பரிசுத்த பயமுண்டாயிற்று.

எசேக்கியேல் தான் கண்ட தரிசனங்களையெல்லாம் தன்னுடைய மனதிலே வைத்திருக்கவேண்டும். கர்த்தர் அவருக்கு சொன்ன செய்திகளையெல்லாம் அவர் நினைவிலே வைத்திருக்கவேண்டும். கர்த்தர் எசேக்கியேலிடம், கர்த்தருடைய ஆலயத்தின் சகல நியமங்களையும், அதின் சகல சட்டங்களையும் குறித்து சொன்னார். இவையெல்லாவற்றையும் எசேக்கியேல் தன் மனதிலே வைத்திருக்கவேண்டும்.

எசேக்கியேல் தன்னுடைய கண்களினால் பார்த்தது, தன்னுடைய காதுகளினால் கேட்டது பரிசுத்த ஸ்தலத்தினுடைய எல்லா வாசற்படிகளின் வழியாய் ஆலயத்திற்குள் பிரவேசித்தது, ஆகிய எல்லாவற்றையும் அவர் ஆலோசித்துப் பார்க்கவேண்டும் (எசே 44:5). ஆலயத்திற்குள் பிரவேசித்தது மாத்திரமல்ல, ஆலயத்திலிருந்து புறப்பட்டுப்போவதையும் குறித்து அவர் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். கர்த்தர் தனக்கு சொன்ன செய்திகளை எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பார்வையிலே கலகக்காரராயிருக்கிறார்கள். எசேக்கியேல் அவர்களிடம், "இஸ்ரவேல் வம்சத்தாரே நீங்கள் செய்த சகல அருவருப்புக்களும் போதும்" (எசே 44:6) என்று சொல்லவேண்டும். இது எசேக்கியேலின் வார்த்தையல்ல. இது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை, எசேக்கியேல் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய ஆகாரமாகிய நிணத்தையும் இரத்தத்தையும் செலுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தை பரிசுத்தக்குலைச் சலாக்குகிறார்கள். விருத்தசேதனமில்லாத இருதயமும், விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நிய புத்திரரை கர்த்தருடைய பரிசுத்தஸ்தலத்திற்குள் அழைத்துக்கொண்டு வருகிறார்கள் (எசே 44:7).

எசேக்கியேல் யாக்கோபின் வம்சத்தாருடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். அவர்களுக்கு கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தம்பண்ண வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள்.

அந்நிய புத்திரர் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது. அவர்கள் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாகயிருந்தாலும், அவர்கள் தங்கள் மாம்சத்தில் விருத்தசேதன மில்லாதவர்கள். மாம்சத்தில் விருத்தசேதனமில்லாத பாவத்தை கர்த்தர் எளிதாக மன்னித்துவிடுவார். ஆனால் அவர்களோ தங்கள் இருதயத்தில் விருத்தசேதனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். அந்நியர்கள் கர்த்தருக்கும் அந்நியராயிருக்கிறார்கள். கர்த்தருடைய நன்மைகளுக்கும் அந்நியராயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாவிதமான அருவருப்புக்களையும் செய்து, கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரே கர்த்தருடைய பரிசுத்த வஸ்துக்களின் காவலைக் காக்கவேண்டும். இதுவே கர்த்தருடைய பிரமாணம். ஆனால் அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த வஸ்துக்களின் காவலைக் காக்காமல், தங்களுக்கு இஷ்டமானவர்களை கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே, அவருடைய காவலைக் காக்கிறதற்காக வைத்திருக்கிறார்கள் (எசே 44:8).

ஆசாரியரும் லேவியருமே கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் அந்நியருக்கு பங்குமில்லை. பாத்திமுமில்லை. இது கர்த்தருடைய பிரமாணம். இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தருடைய உடன்படிக்கையைமீறி அருவருப்பான காரியங்களை செய்கிறார்கள்.

"இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் இருக்கிற சகல அந்நிய புத்திரரிலும், விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நிய புத்திரன் ஒருவனும் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பதில்லை" (எசே 44:9) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இது கர்த்தருடைய பிரமாணம். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பிரமாணத்தைமீறி, அவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

லேவியரின் அக்கிரமம்
எசே 44:10-16

எசே 44:10. இஸ்ரவேல் வழிதப்பிப்போகையில், என்னைவிட்டுத் தூரமானவர்களும், என்னைவிட்டு வழிதப்பித் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின் பற்றிபற்றினவர்களுமாகிய லேவியரும் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.

எசே 44:11. ஆகிலும் அவர்கள் என் ஆலயத்தின் வாசல்களைக் காத்து, என் ஆலயத்தில் ஊழியஞ்செய்து, என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்; அவர்கள் ஜனங்களுக்காக தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்தி, இவர்களுக்கு ஊழியஞ்செய்கிறதற்கு இவர்கள் முன்பாக என்பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்.

எசே 44:12. அவர்கள் இவர்களுடைய நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக நின்று இவர்களுக்கு ஊழியஞ்செய்து, இஸ்ரவேல் வம்சத்தாரை அக்கிரமத்தில் விழப்பண்ணினபடியினால், நான் என் கையை அவர்களுக்கு விரோதமாய் உயர்த்தினேன், அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 44:13. அவர்கள் எனக்கு ஆசாரியராய் ஆராதனை செய்யும்படி என் சமீபத்தில் வராமலும், மகா பரிசுத்தமான ஸ்தலத்தில் என் பரிசுத்த வஸ்துக்களில் யாதொன்றையும் கிட்டாமலும் இருக்கவேண்டும், அவர்கள் தங்கள் இலச்சையையும் தாங்கள் செய்த அருவருப்புகளையும் சுமக்கக்கடவர்கள்.

எசே 44:14. ஆலயத்தின் சகல வேலைகளுக்கும் அதில் செய்யப்பட வேண்டிய எல்லாவற்றிற்கும் நான் அவர்களை அதில் காவல்காக்கிறவர்களாயிருக்கக் கட்டளையிடுவேன்.

எசே 44:15. இஸ்ரவேல் புத்திரரே, என்னைவிட்டு வழிதப்பிப்போகையில், என்பரிசுத்த ஸ்தலத்தின் காவலைக் காக்கிற சாதோக்கின் புத்திரராகிய லேவியரென்னும் ஆசாரியர்களே எனக்கு ஆராதனைசெய்ய என் சமீபத்தில் சேர்ந்து, நிணத்தையும் இரத்தத்தையும் எனக்குச் செலுத்த என் சந்நிதியில் நிற்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 44:16. இவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள்; இவர்களே எனக்கு ஆராதனை செய்ய என் பீடத்தைக் கிட்டிவந்து, என் காவலைக் காப்பார்கள்.

கர்த்தரே தம்முடைய ஆலயத்திற்கு ஆண்டவராயிருக்கிறார். அவர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மறுபடியும் ஸ்தாபிக்கிறார். ஆசாரியர்களுக்கும், லேவியருக்கும் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலே செய்ய வேண்டிய ஊழியங்களை அவர்களுக்கு ஒப்புவிக்கிறார். தம்முடைய ஊழியத்தை செய்யக்கூடிய தகுதியுள்ளவர்கள் யார் என்பதை கர்த்தர் ஆராய்ந்து அறிகிறார்.

லேவியர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் வாசலைக் காக்கவேண்டும். அவர்கள் ஆலயத்தில் ஊழியம் செய்து கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக் காரராயிருக்கவேண்டும். அவர்கள் ஜனங்களுக்காக தகனபலிகளையும், மற்ற பலிகளையும் செலுத்தவேண்டும்.

ஆனால் லேவியரோ கர்த்தரை விட்டு வழிதப்பிப்போய்விடுகிறார்கள். அவர்கள் தங்கள் நரகலான விக்கிரகங்களை பின்பற்றிப்போய்விடுகிறார்கள். லேவியர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருந்து ஊழியம் செய்யாமல், கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். இவர்கள் தங்கள் அக்கிரமத்தை சுமப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே 44:10).

இஸ்ரவேல் ஜனங்களெல்லோரும் கர்த்தரைவிட்டும், கர்த்தருடைய பிரமாணத்தை விட்டும் வழிதப்பிப்போகையில், ஆசாரியரும் லேவியரும், அவர்களோடு சேர்ந்து வழிதப்பிப்போகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றிப்போனபோது, ஆசாரியர்களும் லேவியர்களும் அவர்களோடு சேர்ந்து தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள் (எசே 44:11).

லேவியர்களும் ஆசாரியர்களும் இஸ்ரவேல் புத்திரருடைய நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக நின்று, அவர்களுக்கு ஊழியம் செய்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரை அக்கிரமத்தில் விழப்பண்ணுகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் லேவியர்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய கையை அவர்களுக்கு விரோதமாக உயர்த்துகிறார். லேவியர்கள் தங்கள் அக்கிரமத்தை சுமப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நீதியான கோபம் லேவியர்மேலும் ஆசாரியர்மேலும் வருகிறது. அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதனை செய்தபடியால் கர்த்தர் அவர்களை தம்முடைய சமுகத்தைவிட்டே விலக்கி வைத்துவிடுகிறார்.

லேவியர்கள் கர்த்தருக்கு ஆசாரியராய் ஆராதனை செய்யும்படி அவருடைய சமீபத்தில் வரக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய மகாபரிசுத்தமான ஸ்தலத்தில், கர்த்தருடைய பரிசுத்த வஸ்துக்களில் யாதொன்றையும் கிட்டக்கூடாது. ஆசாரியர்களும் லேவியர்களும் தங்களுடைய பாவமான கைகளினால் ஆலயத்தின் பரிசுத்த பணிமுட்டுக்களைத் தொடக்கூடாது. இது கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கும் நீதியான தண்டனை. லேவியர்களும் ஆசாரியர்களும் தங்கள் இலச்சையையும், தாங்கள் செய்த அருவருப்புகளையும் சுமக்கவேண்டுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

லேவியரிடத்திலிருந்தும் ஆசாரியரிடத்திலிருந்தும் ஆசாரிய மேன்மை பறிக்கப்பட்டு விடுகிறது. அவர்களிடத்திலிருந்து கர்த்தருடைய உன்னதமான ஊழியத்தை செய்யும் சிலாக்கியம் பறித்துக்கொள்ளப்படுகிறது. ஆசாரியர்கள் சாதாரண லேவியர்களைப்போல இருப்பார்கள். லேவியர்கள் சாதாரண ஜனங்களைப்போல இருப்பார்கள்.

கர்த்தர் ஆசாரியர்மேலும், லேவியர்மேலும் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார். அதே வேளையில் கர்த்தர் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் அவர்களுக்கு காண்பிக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் அவருடைய இரக்கமும் கலந்திருக்கிறது.

கர்த்தர் லேவியரையும் ஆசாரியரையும், தம்முடைய சமுகத்தைவிட்டும், ஊழியத்தை விட்டும் முற்றிலுமாய்த் துரத்திவிடாமல், அவர்களை மறுபடியுமாய் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார்.

"ஆகிலும் அவர்கள் என் ஆலயத்தின் வாசல்களைக் காத்து, என் ஆலயத்தில் ஊழியஞ்செய்து, என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்; அவர்கள் ஜனங்களுக்காக தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்தி, இவர்களுக்கு ஊழியஞ்செய்கிறதற்கு இவர்கள் முன்பாக என்பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்" (எசே 44:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"இவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள்; இவர்களே எனக்கு ஆராதனை செய்ய என் பீடத்தைக் கிட்டிவந்து, என் காவலைக் காப்பார்கள்" (எசே 44:16) என்று கர்த்தர் தம்முடைய கிருபையினால் சொல்லுகிறார்.

ஆசாரியரும் லேவியரும் மிருகங்களைப் பலியிடுவார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய பலிபீடத்திலே பலியிடமாட்டார்கள். அதற்கு பதிலாக வாசலின் மண்டபத்திலே உள்ள பீடங்களில் பலியிடுவார்கள். இவர்கள் தேவாலயத்தின் வாசலில் சுமை தூக்குகிறவர்களாகயிருப்பார்கள்.

"வாசலின் மண்டபத்திலே இந்தப்புறத்தில் இரண்டு பீடங்களும் அந்தபுறத்தில் இரண்டு பீடங்களும் இருந்தது; அவைகளின்மேல் தகனபலியையும் பாவநிவாரண பலியையும் குற்றநிவாரணபலியையும் செலுத்துவார்கள்" *(எசே 40:39)*.

கர்த்தர் தமக்கு உண்மையுள்ளவர்களைக் கனம்பண்ணுகிறார். அவர்களுக்கு தம்முடைய ஊழியத்தில் பங்குகொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தரைவிட்டு வழிதப்பிப் போகிறார்கள். ஆனாலும் சாதோக்கின் புத்திரராகிய லேவியர் என்னும் ஆசாரியர் கர்த்தரைவிட்டு வழிதப்பிப்போகவில்லை. அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

சாதோக்கின் புத்திரர் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் காவலைக் காக்கிற ஆசாரியர். கர்த்தர் இவர்களுக்கு ஆசாரிய ஊழியத்தைக் கொடுத்து, இவர்களைக் கனம்பண்ணுகிறார்.

"சாதோக்கின் புத்திரராகிய லேவியரென்னும் ஆசாரியர்களே எனக்கு ஆராதனைசெய்ய என் சமீபத்தில் சேர்ந்து, நிணத்தையும் இரத்தத்தையும் எனக்குச் செலுத்த என் சந்நிதியில் நிற்பார்கள். இவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள்; இவர்களே எனக்கு ஆராதனை செய்ய என் பீடத்தைக் கிட்டிவந்து, என் காவலைக் காப்பார்கள்" *(எசே 44:15,16)* என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆசாரியரின் பிரமாணம்
எசே 44:17-31

எசே 44:17. உட்பிராகாரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிக்கிறபோது, சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திகொள்வார்களாக; அவர்கள் உட்பிராகாரத்தின் வாசல்களிலும், உள்ளேயும் ஆராதனை செய்கையில், ஆட்டுமயிர் உடுப்பைத்தரிக்கலாகாது.

எசே 44:18. அவர்களுடைய தலைகளில் சணல்நூல் குல்லாக்களையும், அவர்களுடைய இடைகளில் சணல்நூல் சல்லடங்களையும் தரிக்கவேண்டும்; வேர்வையுண்டாக்கத்தக்கதொன்றையும் அரையில் கட்டலாகாது.

எசே 44:19. அவர்கள் வெளிப்பிராகாரமாகிய புறமுற்றத்திலே ஜனங்களிடத்தில் போகும்போது, அவர்கள் தாங்கள் ஆராதனைசெய்யும் சமயத்தில் உடுத்தியிருந்த தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளைப் பரிசுத்த அறைவீடுகளில் வைத்து, வேறே வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளக்கடவர்கள்; தங்கள் வஸ்திரங்களாலே ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தலாகாது.

எசே 44:20. அவர்கள் தங்கள் தலைகளைச் சிரையாமலும், தங்கள் மயிரை நீளமாய் வளர்க்காமலும், தங்கள் தலைமயிரைக் கத்தரிக்கக்கடவர்கள்.

எசே 44:21. ஆசாரியர்களில் ஒருவனும், உட்பிராகாரத்துக்குள் பிரவேசிக்கும்போது, திராட்சரசம் குடிக்கலாகாது.

எசே 44:22. விதவையையும் தள்ளிவிடப்பட்டவளையும் அவர்கள் விவாகம்பண்ணாமல், இஸ்ரவேல் வம்சத்தாளாகிய கன்னிகையையாகிலும் ஒரு ஆசாரியனின் மனைவியாயிருந்த விதவையையாகிலும் விவாகம் பண்ணலாம்.

எசே 44:23. அவர்கள் பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமல்லாததற்கும், தீட்டானதற்கும் தீட்டல்லாததற்கும் இருக்கும் வித்தியாசத்தை என் ஜனத்துக்குப்போதித்து, அவர்களுக்குத் தெரியப்பண்ணக்கடவர்கள்.

எசே 44:24. வழக்கிருந்தால் அவர்கள் நியாயத்தீர்க்க ஆயத்தமாயிருந்து, என் நியாயங்களின்படி அதைத் தீர்த்து, என்னுடைய பண்டிகைகளில் எல்லாம் என் நியாயப்பிரமாணத்தையும் என் கட்டளைகளையும் கைக்கொண்டு, என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்கக்கடவர்கள்.

எசே 44:25. தகப்பன், தாய், குமாரன், குமாரத்தி, சகோதரன், புருஷனுக்கு வாழ்க்கைப்படாத சகோதரி என்னும் இவர்களுடைய சவத்தினால் அவர்கள் தீட்டுப்படலாமேயல்லாமல், அவர்களில் ஒருவனும் செத்த ஒருவனிடத்தில் போய்த் தீட்டுப்படலாகாது.

எசே 44:26. அவன் சுத்திகரிக்கப்பட்டபின்பு, அவனுக்கு ஏழுநாள் எண்ணப்படவேண்டும்.

எசே 44:27. அவன் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்யும்படி பரிசுத்த ஸ்தலம் இருக்கிற உட்பிரகாரத்துக்குள் பிரவேசிக்கிறநாளிலே, அவன் தனக்காகப் பாவநிவாரண பலியைச் செலுத்தக்கடவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 44:28. அவர்களுக்குரிய சுதந்தரம் என்னவென்றால்: நானே அவர்கள் சுதந்தரம்; ஆகையால் இஸ்ரவேலில் அவர்களுக்குக் காணியாட்சியைக் கொடாதிருப்பீர்களாக; நானே, அவர்கள் காணியாட்சி.

எசே 44:29. போஜனபலியையும் பாவநிவாரணபலியையும் குற்றநிவாரணபலியையும் அவர்கள் புசிப்பார்கள்; இஸ்ரவேலிலே பொருத்தனை பண்ணப்பட்டதெல்லாம் அவர்களுடையதாயிருப்பதாக.

எசே 44:30. சகலவித முதற்கனிகளில் எல்லாம் முந்தின பலனும், நீங்கள் காணிக்கையாய்ச் செலுத்தும் எவ்விதமான பொருள்களும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக; உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்படிக்கு நீங்கள்பிசைந்தமாவில் முதற்பாகத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

எசே 44:31. பறவைகளிலும் மிருகங்களிலும் தானாய்ச் செத்ததும் பீறுண்டதுமான ஒன்றையும் ஆசாரியர்கள் புசிக்கலாகாது.

கர்த்தருடைய ஆசாரியர்கள் அவருக்கு பரிசுத்தமான ஊழியம் செய்கிறவர்கள். ஆசாரிய ஊழியம் உலகப்பிரகாரமான வேலையைப் போன்றதல்ல. கர்த்தர் ஆசாரியருக்கு அநேக பிரமாணங்களை நியமித்திருக்கிறார். ஆசாரியர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டு, பயபக்தியாயும், பரிசுத்தமாயும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும்.

கர்த்தர் ஆசாரியரின் வஸ்திரங்களைப் பற்றிய பிரமாணத்தைச் சொல்லுகிறார். ஆசாரியர்கள் உட்பிராகாரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிக்கிறபோது, சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திகொள்ள வேண்டும். அவர்கள் உட்பிராகாரத்தின் வாசல்களிலும், உள்ளேயும் ஆராதனை செய்கையில், ஆட்டுமயிர் உடுப்பைத்தரிக்கக் கூடாது (எசே 44:17).

ஆசாரியர்கள், தங்களுடைய தலைகளில் சணல்நூல் குல்லாக்களையும், அவர்களுடைய இடைகளில் சணல்நூல் சல்லடங்களையும் தரிக்கவேண்டும்; வேர்வையுண்டாக்கத்தக்கதொன்றையும் அரையில் கட்டக்கூடாது (எசே 44:18).

ஆசாரியர்கள் தங்களுடைய ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றின பின்பு, அவர்கள் ஆசாரிய வஸ்திரங்களை கழற்றி வைத்துவிட்டு, வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளவேண்டும். ஆசாரியர்கள் வெளிப்பிராகாரமாகிய புறமுற்றத்திலே ஜனங்களிடத்தில் போகும்போது, அவர்கள் தாங்கள் ஆராதனைசெய்யும் சமயத்தில் உடுத்தியிருந்த தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளைப் பரிசுத்த அறைவீடுகளில் வைத்து, வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளவேண்டும். தங்கள் வஸ்திரங்களாலே ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தக்கூடாது (எசே 44:19).

கர்த்தர் இந்தப் பிரமாணத்தை எசேக்கியேலுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். "ஆசாரியர் உட்பிரவேசிக்கும்போது, அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளிப்பிராகாரத்துக்கு வராததற்கு முன்னே, அங்கே தாங்கள் ஆராதனை செய்து, உடுத்தியிருந்த வஸ்திரங்களைக் கழற்றிவைப்பார்கள்; அவ்வஸ்திரங்கள் பரிசுத்தமானவைகள்; வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, ஜனத்தின் பிராகாரத்திலே போவார்கள்" (எசே 42:14).

ஆசாரியரின் தலைமயிரைப்பற்றியும் கர்த்தர் தம்முடைய கட்டளையில் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தலைகளைச் சிரையாமலும், தங்கள் மயிரை நீளமாய் வளர்க்காமலும், தங்கள் தலைமயிரைக் கத்தரிக்கக்கடவர்கள் (எசே 44:20).

புறஜாதியாரின் பூஜாசாரிகள் தங்கள் தலைகளை சிரைத்துக்கொள்வார்கள். கர்த்தருடைய ஆசாரியர்கள் தங்களுடைய தலைகளை சிரைத்து, தங்களை புறஜாதியாரின் பூஜாசாரிகளுக்கு ஒப்பாக்கக்கூடாது.

ஆசாரியர்கள் தங்கள் தலைமயிரை நீளமாய் வளர்க்கக்கூடாது என்றும் கர்த்தர் சொல்லுகிறார். நசரேய விரதமிருக்கிறவர்கள் தங்கள் தலைமயிரை கத்தரிக்காமல் நீளமாய் வளர்ப்பார்கள். ஆசாரியருக்கும் நசரேயருக்கும் வித்தியாசமுண்டு. ஆசாரியர்கள் தங்கள் தலைமயிரை கண்ணியமாய் கத்தரித்துக் கொள்ளவேண்டும். தலையில் நீளமான மயிர் இருக்கக்கூடாது. அதை வளர வளர கத்தரித்துவிடவேண்டும்.

ஆசாரியரின் போஜனபானத்தைப் பற்றியும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். ஆசாரியர்களில் ஒருவனும், உட்பிராகாரத்துக்குள் பிரவேசிக்கும்போது, திராட்சரசம் குடிக்கலாகாது (எசே 44:21). குடித்து வெறித்திருக்கிறவனுக்கு நிதானமிருக்காது. அவன் நியாயப்பிரமாணத்தை மறந்துவிடுவான். குடிகாரனால் தெளிவாகப் பேசவும் முடியாது. ஆசாரிய ஊழியம் பேசுகிற ஊழியம். ஆசாரியர்கள் கர்த்தரிடத்திலும் பேச வேண்டும். ஜனங்களிடத்திலும் பேசவேண்டும்.

ஆசாரியரின் விவாக சம்பந்தமான காரியங்களையும் கர்த்தர் கட்டளையாகச் சொல்லுகிறார். ஆசாரியர்கள் விதவையையும் தள்ளிவிடப்பட்டவளையும் விவாகம்பண்ணக் கூடாது. அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாளாகிய கன்னிகையையாகிலும் ஒரு ஆசாரியனின் மனைவியாயிருந்த விதவையையாகிலும் விவாகம் பண்ணலாம் (எசே 44:22).

ஆசாரிய ஊழியம் கண்ணியமான ஊழியம். அவர்கள் தங்கள் ஊழியத்தின் அந்தஸ்தை எந்த விதத்திலும் குறைத்து விடக்கூடாது. ஆசாரியரின் பொதுவாழ்விலும், குடும்பவாழ்விலும் கண்ணியம் இருக்க வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய பிரமாணத்தைப் போதிக்கவேண்டும். சபையின் காரியங்களை நிர்வாகம்பண்ண வேண்டும். ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைப் போதிப்பது ஆசாரிய ஊழியத்தின் ஒரு பகுதி. அவர்கள் போதக ஊழியத்தை திறமையாயும் உண்மையாயும் செய்யவேண்டும்.

ஆசாரியர்கள் பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமல்லாததற்கும், தீட்டானதற்கும் தீட்டல்லாததற்கும் இருக்கும் வித்தியாசத்தை என் ஜனத்துக்குப்போதித்து, அவர்களுக்குத் தெரியப்பண்ண வேண்டும் (எசே 44:23).

வழக்குகளை விசாரிப்பது ஆசாரிய ஊழியத்தில் ஒரு பங்காயிருக்கிறது. "உன் வாசல்களில் இரத்தப்பழிகளைக் குறித்தும், வியாச்சியங்களைக் குறித்தும், காயம்பட்ட சேதங்களைக் குறித்தும் வழக்கு நேரிட்டு, நியாயந்தீர்ப்பது உனக்கு அரிதாயிருந்தால், நீ எழுந்து, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து ஏற்படுத்தின ஸ்தானத்திற்குப் போய், லேவியரான ஆசாரியரிடத்திலும் அந்நாட்களில் இருக்கிற நியாயாதிபதியினிடத்திலும் விசாரிக்க வேண்டும்; நியாயம் இன்னதென்று அவர்கள் உனக்கு அறிவிப்பார்கள்" (உபா 17:8,9).

ஜனங்கள் மத்தியில் வழக்குகள் இருந்தால், ஆசாரியர்கள் அந்த வழக்குகளை நியாயந்தீர்க்க ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய நியாயங்களின்படி வழக்குகளைத் தீர்த்து வைக்கவேண்டும். நீதியான தீர்ப்புக்களை, மனுஷருக்குப் பயப்படாமல், கர்த்தருக்கு பயந்து, தைரியமாய்ச் சொல்லவேண்டும்.

ஆசாரியர்கள் சபையின் காரியங்களை நிர்வாகம்பண்ண வேண்டும். அவர்கள் கர்த்தருடைய பண்டிகைகளில் அவருடைய நியாயப்பிரமாணத்தையும், அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளவேண்டும். ஆசாரியர்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களை பரிசுத்தமாக்கவேண்டும். ஜனங்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்களா என்பதை ஆசாரியர்கள் கவனிக்கவேண்டும். கர்த்தருடைய பரிசுத்தமான ஓய்வுநாளை, யாரும் பரிசுத்தக்குலைச்சலாக்கிவிடாதவாறு, ஆசாரியர்கள் விழிப்பாயிருக்கவேண்டும். ஜனங்களுக்கு ஓய்வுநாளைக் குறித்துப் போதிக்கவேண்டும். ஓய்வுநாள் பிரமாணங்களை மீறுகிறவர்களை தண்டிக்கவேண்டும்.

ஆசாரியர்கள் மரித்துப்போன பிரேதத்தினால் தீட்டுப்படக்கூடாது. ஆசாரியர்கள் தங்களுடைய தகப்பன், தாய், குமாரன், குமாரத்தி, சகோதரன், புருஷனுக்கு வாழ்க்கைப்படாத சகோதரி என்னும் இவர்களுடைய சவத்தினால் அவர்கள் தீட்டுப்படலாமேயல்லாமல், அவர்களில் ஒருவனும் செத்த ஒருவனிடத்தில்போய்த் தீட்டுப்படலாகாது (எசே 44:25).

கர்த்தர் எசேக்கியேலுக்கு சவத்தினால் தீட்டுப்படுவதைப்பற்றி சொல்லுகிற பிரமாணம், மோசேயின் பிரமாணத்தோடு ஒத்திருக்கிறது.

"பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களில் ஒருவனும் தன் ஜனத்தாரில் இறந்து போன யாதொருவருக்காகத் தங்களைத் தீட்டுப்படுத்தலாகாதென்று அவர்களோடே சொல்" (லேவி 21:1)

"பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும், தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமலும், பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பானாக; அவனுடைய தேவனின் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன்மேல் இருக்கிறதே" (லேவி 21:11,12).

ஆசாரியன் சவத்தினால் தீட்டுப்பட்டால், அவன் சுத்திகரிக்கப்பட வேண்டும். அவன் சுத்திகரிக்கப்பட்டபின்பு, அவனுக்கு ஏழுநாள் எண்ணப்படவேண்டும். அவன் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்யும்படி பரிசுத்த ஸ்தலம் இருக்கிற உட்பிரகாரத்துக்குள் பிரவேசிக்கிறநாளிலே, அவன் தனக்காகப் பாவநிவாரண பலியைச் செலுத்த வேண்டும் (எசே 44:26,27).

கர்த்தர் ஆசாரியருக்கு சுதந்தரம் கொடுக்கிறார். "நானே அவர்கள் சுதந்தரம்; ஆகையால் இஸ்ரவேலில் அவர்களுக்குக் காணியாட்சியைக் கொடாதிருப்பீர்களாக; நானே, அவர்கள் காணியாட்சி" (எசே 44:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆசாரியருக்கென்று கொஞ்சம் நிலத்தையும் பங்குவீதமாகக் கொடுத்திருக்கிறார். ஆனாலும் அவர்களுடைய போஜனத்திற்கு ஆதாரம், அவர்கள் செய்கிற ஆசாரிய ஊழியத்தின் மூலமாகவே வருகிறது.

"வடக்கே இருபத்தையாயிரங்கோல் நீளமும், மேற்கே பதினாயிரங்கோல் அகலமும், கிழக்கே பதினாயிரங்கோல் அகலமும், தெற்கே இருபத்தையாயிரங்கோல் நீளமுமாகிய இந்தப் பரிசுத்த அர்ப்பிதநிலமானது ஆசாரியருடையதாயிருக்கும்; கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் அதின் நடுவிலே இருப்பதாக" (எசே 48:10).

பலிபீடத்தில் படைக்கப்படும் காணிக்கைகளில் ஆசாரியருக்கு ஒரு பங்கு உண்டு. போஜனபலியையும் பாவநிவாரணபலியையும் குற்றநிவாரண பலியையும் அவர்கள் புசிப்பார்கள்; இஸ்ரவேலிலே பொருத்தனை பண்ணப்பட்டதெல்லாம் ஆசாரியர்களுடையது (எசே 44:29).

ஆசாரியர்கள் தங்களுடைய போஜனத்தையும், குடும்பத்தை நடத்துவதற்கு தேவையான பொருட்களையும் ஜனங்களிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். கர்த்தருக்கு செலுத்தப்படும் போஜனபலியிலும், பாவநிவாரணபலியிலும், குற்றநிவாரணபலியிலும் ஆசாரியருக்கு பங்கு இருக்கிறது. அவர்கள் அந்த மாம்சத்திலே புசிப்பார்கள்.

இஸ்ரவேலிலே பொருத்தனை பண்ணப்பட்டதெல்லாம் ஆசாரியர்களுடையது. பொருத்தனை பண்ணப்பட்ட பொருட்களை அவர்கள் பணமாக மாற்றிக்கொள்ளலாம். அந்தப் பணத்தை தங்கள் குடும்பச்செலவுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

"சகலவித முதற்கனிகளில் எல்லாம் முந்தின பலனும், நீங்கள் காணிக்கையாய்ச் செலுத்தும் எவ்விதமான பொருள்களும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக; உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்படிக்கு நீங்கள்பிசைந்தமாவில் முதற்பாகத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவீர்கள்" (எசே 44:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் நிலத்தில் விளைந்த தானியத்தை களஞ்சியத்தில் சேர்ப்பதற்கு முன்பாக, அதன் முற்கனியை ஆசாரியருக்குக் கொடுக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வீடுகளில் அப்பம் சுடுவதற்கு மாவைப் பிசையும்போது, பிசைந்த மாவில் முதற்பாகத்தை ஆசாரியருக்குக் கொடுக்க வேண்டும். இவ்விதமாக கர்த்தர், தமக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரைப் போஷிக்கிறார். பராமரிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆசாரியர்களுக்கு தங்கள் முதற்கனிகளில் முந்தின பலனையும், பிசைந்த மாவில் முதற்பாகத்தையும் காணிக்கையாகக் கொடுக்கும்போது, அவர்களுடைய வீட்டில் ஆசீர்வாதம் தங்கும். நம்முடைய குடும்பத்தில் ஆசீர்வாதம் தங்கியிருக்கும்படி, நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

ஆசாரியர்களும், கர்த்தருடைய நாமத்தினாலே ஜனங்களை ஆசீர்வதிக்க வேண்டும். சபையாரையும், குடும்பத்தாரையும், ஆசாரியர்கள் கர்த்தருடைய நாமத்தினால் ஆசாரியர்கள் ஆசீர்வதிக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுடைய வீடுகளில் தங்கியிருக்கும்.

ஆசாரியர்கள் தீட்டான சிலவற்றை புசிக்கக்கூடாது என்றும் கர்த்தர் சொல்லுகிறார். பறவைகளிலும் மிருகங்களிலும் தானாய்ச் செத்ததும் பீறுண்டதுமான ஒன்றையும் ஆசாரியர்கள் புசிக்கக்கூடாது (எசே 44:31). கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின்படி ஆசாரியர்களைப் போஷிக்கும்போது, ஆசாரியர்கள் கர்த்தருடைய பிரமாணத்தைமீறி, தீட்டானவற்றைப் புசிக்கக்கூடாது.

45 அதிகாரம்

பரிசுத்த தேசம் பங்கு பிரிக்கப்படவேண்டிய விதம் பற்றி கர்த்தர் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்துகிறார். தேவாலயத்திற்கும், தேவாலயத்தில் ஊழியம் செய்கிற ஆசாரியர்களுக்கும் தனித்தனியாக நிலம் பிரித்துக்கொடுக்கப்படவேண்டும் (எசே 45:1-4). அதுபோலவே லேவியருக்கும் ஒரு பங்கை பிரித்து வைக்கவேண்டும் (எசே 45:5).

நகரத்தின் காணியாட்சிக்கும் (எசே 45:6). அதிபதிக்கும், பிரிக்கப்படவேண்டிய பங்கும், அவை இருக்க வேண்டிய இடமும் (எசே 45:9-12).

கர்த்தருக்கு செலுத்த வேண்டிய காணிக்கை (எசே 45:13-17). முதலாம் மாதம் முதலாம் தேதியிலே செலுத்த வேண்டிய காணிக்கை (எசே 45:18-20). பஸ்கா பண்டிகையின்போதும், கூடாரங்களின் பண்டிகையின்போதும் செலுத்த வேண்டிய காணிக்கை (எசே 45:21-25).

தேசத்தின் நிலம் எசே 45:1-8

எசே 45:1. நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி, தேசத்தைச் சீட்டுப்போட்டுப் பங்கிடும்போது, தேசத்தில் இருபத்தையாயிரங்கோல் நீளமும், பதினாயிரங்கோல் அகலமுமான பரிசுத்த பங்கைக்கர்த்தருக்கு அர்ப்பிதமாகப் பிரித்துவைக்கக்கடவீர்கள்; இது தன் சுற்றெல்லை எங்கும் பரிசுத்தமாயிருக்கும்.

எசே 45:2. இதிலே பரிசுத்த ஸ்தலத்துக்கென்று ஐந்நூறு கோல் நீளமும் ஐந்நூறுகோல் அகலமுமான நாற்சதுரம் அளக்கப்படக்கடவது; அதற்குச் சுற்றிலும் ஐம்பது முழமான வெளிநிலம் இருக்கவேண்டும்.

எசே 45:3. இந்த அளவு உட்பட இருபத்தையாயிரங்கோல் நீளத்தையும் பதினாயிரங்கோல் அகலத்தையும் அளப்பாயாக; அதற்குள் பரிசுத்த ஸ்தலமும் மகா பரிசுத்த ஸ்தலமும் இருக்கவேண்டும்.

எசே 45:4. தேசத்தில் பரிசுத்த பங்காகிய இது கர்த்தருக்கு ஆராதனைசெய்யச் சேருகிறவர்களும், பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்கிறவர்களுமான ஆசாரியருடையது; இது அவர்களுக்கு வீடுகளுக்கான இடமும், பரிசுத்த ஸ்தலத்துக்கு அடுத்த இடமுமாயிருக்க வேண்டும்.

எசே 45:5. பின்னும் இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினாயிரங்கோல் அகலமுமான இடம் ஆலயத்தின் பணிவிடைக்காரராகிய லேவியருடையதாயிருக்கும்; அது அவர்களுடைய காணியாட்சி; அதில் இருபது அறைவீடுகள் இருக்கவேண்டும்.

எசே 45:6. பரிசுத்த பங்காகப் படைக்கப்பட்டதற்கு எதிரே நகரத்தின் காணியாட்சியாக ஐயாயிரங்கோல் அகலத்தையும் இருபத்தையாயிரங் கோல் நீளத்தையும் அளந்து கொடுப்பீர்களாக; அது இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் சொந்தமாயிருக்கும்.

எசே 45:7. பரிசுத்த பங்காகப் படைக்கப்பட்டதற்கும் நகரத்தின் காணியாட்சிக்கும் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும், பரிசுத்த படைப்புக்கு முன்பாகவும், நகரத்தின் காணிக்கு முன்பாகவும், அதிபதியினுடைய பங்குமேற்கிலே மேற்புறமாகவும் கிழக்கிலே கீழ்ப்புறமாகவும் இருப்பதாக; அதின் நீளம் மேல் எல்லை துவக்கிக் கீழ்எல்லைமட்டும் பங்குகளில் ஒவ்வொன்றுக்கும் எதிராயிருக்கவேண்டும்.

எசே 45:8. இது அவனுக்கு இஸ்ரவேலிலே காணிபூமியாக இருக்கக்கடவது; என் அதிபதிகள் இனி என் ஜனத்தை ஒடுக்காமல் தேசத்தை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அவர்களுடைய கோத்திரங்களுக்குத்தக்கதாக விட்டுவிடுவார்களாக.

இஸ்ரவேல் வம்சத்தார் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, தங்கள் சொந்த தேசத்தை எப்படி பிரிக்கவேண்டும் என்று கர்த்தர் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்துகிறார். முதலாவதாக கர்த்தருக்குரிய பரிசுத்த பங்கு, அர்ப்பிதமாக பிரித்து வைக்கப்படவேண்டும். இது கர்த்தருக்குரியது. இந்த நிலத்தின் சுற்று எல்லையெங்கும் பரிசுத்தமாயிருக்கும்.

இஸ்ரவேல் வம்சத்தார் சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்த பின்பு, தாங்கள் சுதந்தரித்துக்கொள்ளவேண்டிய நிலத்தை, சீட்டுப்போட்டு பங்கிடுவார்கள். அவர்கள் தங்களுக்குரிய நிலத்தை பிரிப்பதற்கு முன்பாக, கர்த்தருக்குரிய பரிசுத்த பங்கை பிரித்து வைக்கவேண்டும்.

"தேசத்தில் இருபத்தையாயிரங்கோல் நீளமும், பதினாயிரங்கோல் அகலமுமான பரிசுத்த பங்கைக்கர்த்தருக்கு அர்ப்பிதமாகப் பிரித்துவைக்கக்கடவீர்கள்" (எசே 45:1) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவாலயத்தில் கர்த்தருடைய ஆராதனைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும், யூதமார்க்கத்தின் பிரமாணங்களை இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே போதிப்பதற்கும் கர்த்தருக்கு அர்ப்பிதமாக பிரித்து வைக்கப்பட்ட பரிசுத்த பங்கு உபயோகமாயிருக்கும். கர்த்தர் தமக்காக பிரித்துக்கொடுக்கும் பங்கை அங்கீகரிக்கிறார்.

கர்த்தருக்கு அர்ப்பிதமாக பிரித்து வைக்கவேண்டிய நிலத்தின் அளவுகள் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதன் எல்லைகளும் தீர்மானம்பண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு அர்ப்பிதமாக பிரித்து வைக்கப்பட்டிருக்கிற பரிசுத்த பங்கிலே, பரிசுத்த ஸ்தலத்துக்கென்று ஐந்நூறு கோல் நீளமும் ஐந்நூறுகோல் அகலமுமான நாற்சதுரம் அளக்கப்படப்படவேண்டும்; அதற்குச் சுற்றிலும் ஐம்பது முழமான வெளிநிலம் இருக்கவேண்டும் (எசே 45:2).

எசேக்கியேல் இந்த அளவு உட்பட இருபத்தையாயிரங்கோல் நீளத்தையும் பதினாயிரங்கோல் அகலத்தையும் அளக்க வேண்டும்; அதற்குள் பரிசுத்த ஸ்தலமும் மகா பரிசுத்த ஸ்தலமும் இருக்கவேண்டும் (எசே 45:3).

ஆசாரியரும் லேவியரும் பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள். அவர்களுக்கு பிரித்து வைக்கப்பட்டிருக்கிற பங்கு, பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையிலிருக்கவேண்டும்.

தேசத்தில் பரிசுத்த பங்காகிய இது கர்த்தருக்கு ஆராதனைசெய்யச் சேருகிறவர்களும், பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்கிறவர்களுமான ஆசாரியருடையது; இது அவர்களுக்கு வீடுகளுக்கான இடமும், பரிசுத்த ஸ்தலத்துக்கு அடுத்த இடமுமாயிருக்க வேண்டும். பின்னும் இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினாயிரங்கோல் அகலமுமான இடம் ஆலயத்தின் பணிவிடைக்காரராகிய லேவியருடையதாயிருக்கும்; அது அவர்களுடைய காணியாட்சி; அதில் இருபது அறைவீடுகள் இருக்கவேண்டும் (எசே 45:4,5).

கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கான பரிசுத்த பங்கை அர்ப்பிதமாக பிரித்து வைத்த பின்பு, ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கு பிரித்துக்கொடுக்கப்படுகிறது. அதன் பின்பு நகரத்திற்கு காணியாட்சி பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இது கர்த்தருடைய பரிசுத்த நகரம். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையிலேயே, கர்த்தருடைய பரிசுத்த நகரத்திற்கும் நிலம் ஒதுக்கப்படவேண்டும். இது இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் சொந்தமாயிருக்கும்.

பரிசுத்த பங்காகப் படைக்கப்பட்டதற்கு எதிரே நகரத்தின் காணியாட்சியாக ஐயாயிரங்கோல் அகலத்தையும் இருபத்தையாயிரங்கோல் நீளத்தையும் அளந்து கொடுக்கவேண்டும்; இது பரிசுத்த நகரத்தின் பங்கு. இது இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் சொந்தமாயிருக்கும் (எசே 45:6).

இஸ்ரவேல் வம்சத்தார் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த தேசத்தில் மறுபடியும் குடியேறும்போது, தேசத்தின் நிலத்தை எப்படி பிரித்துக்கொடுக்கவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் தேசத்தை சீட்டுப்போட்டு பங்கிடுவது வழக்கம்.

அவர்கள் தேசத்தின் நிலத்தைப் பிரிக்கும்போது, முதலாவதாக கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்குரிய நிலத்தை பிரித்துக்கொடுக்கவேண்டும். அதன் பின்பு அதில் ஊழியம் செய்கிற ஆசாரியருக்கும், லேவியருக்கும் அவர்களுக்குரிய பங்கை பிரித்துக்கொடுக்கவேண்டும். அதன் பின்பு நகரத்தின் காணியாட்சிக்குரிய நிலத்தை பிரித்துக்கொடுக்க வேண்டும். நகரம் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் சொந்தமானது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை இவ்வாறு சீட்டுப்போட்டு பங்கிடும்போது, இதற்கு அடுத்த படியாக அதிபதியின் பங்கை பிரித்துக்கொடுக்க வேண்டும். அதிபதியின் பங்கு, பரிசுத்த ஸ்தலத்தின் பங்குக்கும், நகரத்தின் பங்குக்கும் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும் இருக்கிறது. அதிபதியின் ஐசுவரியமும், படைபலமும் பரிசுத்த ஸ்தலத்தையும் நகரத்தையும் பாதுகாப்பதற்கு உதவியாக இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கிறது.

பரிசுத்த பங்காகப் படைக்கப்பட்டதற்கும் நகரத்தின் காணியாட்சிக்கும் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும், பரிசுத்த படைப்புக்கு முன்பாகவும், நகரத்தின் காணிக்கு முன்பாகவும், அதிபதியினுடைய பங்குமேற்கிலே மேற்புறமாகவும் கிழக்கிலே கீழ்ப்புறமாகவும் இருக்கவேண்டும்; அதின் நீளம் மேல் எல்லை துவக்கிக் கீழ்எல்லை மட்டும் பங்குகளில் ஒவ்வொன்றுக்கும் எதிராயிருக்கவேண்டும் (எசே 45:7).

அதிபதிக்கு பிரித்துக்கொடுக்கப்பட்ட பங்கு, அவனுக்கு இஸ்ரவேலிலே காணி பூமியாகயிருக்கும். இஸ்ரவேலின் அதிபதிகள் இனிமேல் இஸ்ரவேல் ஜனத்தை ஒடுக்கக்கூடாது. இஸ்ரவேல் தேசத்தை, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, அவர்களுடைய கோத்திரங்களுக்குத்தக்கதாக விட்டுவிடவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொந்தமான காணி பூமியை, இஸ்ரவேலின் அதிபதி அபகரித்துக்கொள்ளக் கூடாது.

அதிபதிகள் தேசத்திலே சமாதானத்தையும் நீதியையும் நிலைநிறுத்த வேண்டும். நெகேமியாவுக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்கு ஊழியம் செய்யாமல், அவர்களுக்கு பாரமாயிருந்தார்கள். நெகேமியாவோ தேவனுக்கு பயந்து, இஸ்ரவேல் வம்சத்தாருக்கு உதவியாயிருந்தான்.

"எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கிவந்தார்கள்; அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள்; நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை" (நெகே 5:15).

"நாளொன்றுக்கு ஒரு காளையும், முதல்தரமான ஆறு ஆடும் சமைக்கப்பட்டது; பட்சிகளும் சமைக்கப்பட்டது; பத்துநாளைக்கு ஒருதரம் நானாவிதத் திராட்சரசமும் செலவழிந்தது; இப்படியெல்லாம் இருந்த போதும், இந்த ஜனங்கள் பட்டபாடு கடினமாயிருந்தபடியால், அதிபதிகள் வாங்குகிற படியே நான் வாங்கவில்லை" (நெகே 5:18).

இதுவரையிலும் சீட்டுப்போட்டு பங்கிடப்படாத தேசம், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, அவர்களுடைய கோத்திரங்களுக்குத்தக்கதாக பிரித்துக்கொடுக்கப்படவேண்டும் (எசே 45:8).

நீதியின் பிரமாணம்
எசே 45:9-12

எசே 45:9. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலின் அதிபதிகளே, நீங்கள் செய்ததுபோதும்; நீங்கள் கொடுமையையும் கொள்ளையிடு தலையும் தவிர்த்து, நியாயத்தையும் நீதியையும் செய்யுங்கள்; உங்கள் உத்தண்டங்களை என் ஜனத்தைவிட்டு அகற்றுங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 45:10. சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான அளவுகுடமும் உங்களுக்கு இருக்கக்கடவது.

எசே 45:11. மரக்காலும் அளவுகுடமும் ஒரே அளவாயிருந்து, மரக்கால் கலத்திலே பத்தில் ஒரு பங்கும், அளவுகுடம் கலத்திலே பத்தில் ஒரு பங்கும் பிடிக்கக்கடவது; கலத்தின்படியே அதின் அளவு நிருணயிக்கப்படுவதாக.

எசே 45:12. சேக்கலானது இருபது கேரா; இருபது சேக்கலும் இருபத்தைந்து சேக்கலும் பதினைந்து சேக்கலும் உங்களுக்கு ஒரு இராத்தலாகும்.

இஸ்ரவேலின் அதிபதிகளுக்கும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் கர்த்தர் பொதுவான நீதியின் பிரமாணங்களைக் கொடுக்கிறார். இஸ்ரவேலின் அதிபதிகள் கொடுமையையும், கொள்ளையிடுதலையும் தவிர்த்துவிடவேண்டும். அவர்கள் நியாயத்தையும் நீதியையும் செய்யவேண்டும்.

"உங்கள் உத்தண்டங்களை என் ஜனத்தைவிட்டு அகற்றுங்கள்" (எசே 45:9) என்று கர்த்தராகிய ஆண்டவர் இஸ்ரவேலின் அதிபதிகளுக்குச் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தேசத்து ஜனங்களை ஒடுக்கக்கூடாது. திக்கற்ற பிள்ளைகளுக்கும் விதவைகளுக்கும் ஆதரவு கொடுக்கவேண்டும். வழக்குகளை நியாயமாய் விசாரித்து, நீதியான தீர்ப்பு சொல்ல வேண்டும். அவர்களுடைய ஆளுகையில் நீதியும், நியாயமும் இருக்கவேண்டும்.

"உத்தண்டங்கள்" என்பது அநியாயமாக வரிவசூலிப்பதையும், அதிகமாக வரிவிதிப்பதையும் குறிக்கும் வார்த்தை. அதிபதிகள் ஜனங்கள்மீது உத்தண்டங்களை சுமத்தக்கூடாது. இஸ்ரவேல் வம்சத்தார்மீது அதிகமான பாரங்களை சுமத்தி, அவர்களை வேதனைக்குட்படுத்தக்கூடாது. இஸ்ரவேல் தேசத்தின் அதிபதிகள் கர்த்தருக்கு பயந்து, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தாரும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஒருவரும் பிறரை வஞ்சிக்கக்கூடாது. அவர்களுடைய சமுதாய வாழ்க்கையில் உண்மையும், நாணயமும், நம்பிக்கையும், நம்பகத்தன்மையும் இருக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

வியாபாரம்பண்ணுகிறவர்கள் நாணயத்தோடு வியாபாரம்பண்ணவேண்டும். சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான அளவுகுடமும் அவர்களுக்கு இருக்கவேண்டும் (எசே 45:10).

மரக்காலும் அளவுகுடமும் ஒரே அளவாயிருந்து, மரக்கால் கலத்திலே பத்தில் ஒரு பங்கும், அளவுகுடம் கலத்திலே பத்தில் ஒரு பங்கும் பிடிக்கவேண்டும்; கலத்தின்படியே அதின் அளவு நிருணயிக்கப்படவேண்டும். சேக்கலானது இருபது கேரா; இருபது சேக்கலும் இருபத்தைந்து சேக்கலும் பதினைந்து சேக்கலும் உங்களுக்கு ஒரு இராத்தலாகும் (எசே 45:11,12).

தேவனுடைய இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய எல்லா நடவடிக்கைகளிலும் உண்மையுள்ளவர்களாகவும், கண்ணியமுள்ளவர்களாகவும், நீதியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். அவர்களுடைய சிந்தைகளிலும், கிரியைகளிலும் பரிசுத்தமிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் இராயனுக்குரியதை இராயனுக்கும், கர்த்தருக்குரியதை கர்த்தருக்கும் கொடுத்து தங்கள் சாட்சியை உறுதிப்படுத்த வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய கடமைகளை நேர்த்தியாயும் செய்யவேண்டும், உண்மையாயும் செய்யவேண்டும், கண்ணியமாயும் செய்யவேண்டும். நேரம் தவறாமை, சோம்பலாக வேலை செய்யாமல் உற்சாகமாக வேலை செய்வது, உண்மையாய் வேலை செய்வது ஆகிய நற்குணங்கள் கர்த்தருடைய ஜனத்திடம் காணப்பட வேண்டும். நாம் மற்ற மனுஷரை ஏமாற்றும்போது, கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படும்.

காணிக்கை
எசே 45:13-25

எசே 45:13. நீங்கள் செலுத்தவேண்டிய காணிக்கையாவது: ஒரு கலம் கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறிலொரு பங்கையும், ஒரு கலம் வாற்கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறிலொரு பங்கையும் படைக்கக்கடவீர்கள்.

எசே 45:14. அளவுகுடத்தால் அளக்கிற எண்ணெயின் கட்டளையாவது: பத்துக்குடம் பிடிக்கிற கலத்துக்குச் சரியான ஒரு ஜாடி எண்ணெயிலே பத்தில் ஒரு பங்கைப் படைப்பீர்களாக; பத்துஅளவுகுடம் ஒரு கலமாகும்.

எசே 45:15. இஸ்ரவேல் தேசத்திலே நல்லமேய்ச்சலை மேய்க்கிற மந்தையிலே இருநூறு ஆடுகளில் ஒரு ஆடும், அவர்களுடைய பாவநிவாரணத்திற்காக போஜன பலியாகவும் தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்தப்படக் கடவதென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே 45:16. இஸ்ரவேலின் அதிபதிக்கு முன்பாக தேசத்தின் ஜனங்களெல்லாரும் இந்தக் காணிக்கையைச் செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறார்கள்.

எசே 45:17. இஸ்ரவேல் வம்சத்தார் கூடிவரக்குறிக்கப்பட்ட சகலபண்டிகைகளிலும் மாதப்பிறப்புகளிலும் ஓய்வுநாட்களிலும் தகனபலிகளையும் போஜன பலிகளையும் பானபலிகளையும் செலுத்துவது அதிபதியின்மேல் சுமந்த கடனாயிருக்கும்; அவன் இஸ்ரவேல் வம்சத்தாருக்காகப்பாவநிவாரணம் பண்ணும்படிக்குப் பாவநிவாரண பலியையும் போஜனபலியையும் தகனபலியையும் சமாதானபலியையும் படைப்பானாக.

எசே 45:18. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: முதலாம் மாதம் முதலாந்தேதியிலே நீ பழுதற்ற ஒரு காளையைக் கொண்டுவந்து, பரிசுத்த ஸ்தலத்துக்குப் பாவநிவிர்த்தி செய்வாயாக.

எசே 45:19. பாவநிவாரணபலியின் இரத்தத்திலே கொஞ்சம் ஆசாரியன் எடுத்து, ஆலயத்தின் வாசல் நிலைகளிலும், பலிபீடத்துச் சட்டத்தின் நாலு கோடிகளிலும், உட்பிராகாரத்தின் வாசல் நிலைகளிலும் பூசக்கடவன்.

எசே 45:20. பிழைசெய்தவனுக்காகவும், அறியாமல் தப்பிதம் செய்தவனுக்காகவும் அந்தப்பிரகாரமாக ஏழாந்தேதியிலும் செய்வாயாக; இவ்விதமாய் ஆலயத்துக்குப் பாவநிவர்த்தி செய்வாயாக.

எசே 45:21. முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே புளிப்பில்லாத அப்பம் புசிக்கப்படுகிற ஏழுநாள் பண்டிகையாகிய பஸ்கா ஆரம்பமாகும்.

எசே 45:22. அந்நாளிலே அதிபதி தன்னிமித்தமும் தேசத்து எல்லா ஜனங்களிநிமித்தமும் பாவநிவாரணத்துக்காக ஒரு காளையைப் படைப்பானாக.

எசே 45:23. ஏழுநாள் பண்டிகையில், அவன் அந்த ஏழுநாளும் தினந்தோறும் கர்த்தருக்குத் தகனபலியாகப் பழுதற்ற ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும், பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் தினந்தோறும் படைப்பானாக.

எசே 45:24. ஒவ்வொரு காளையோடே ஒரு மரக்கால் மாவும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவுமான போஜனபலியையும், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைப்பானாக.

எசே 45:25. ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதியில் ஆரம்பமாகிற பண்டிகையிலே அவன் அப்படியே ஏழுநாளும் அதற்குச் சரியானபிரகாரமாகப் பாவநிவாரணபலி களையும் தகனபலிகளையும் போஜனபலிகளையும், எண்ணெயையும் படைக்கக்கடவன்.

இஸ்ரவேல் வம்சத்தார் மற்ற ஜனங்கள் மத்தியிலே நீதியுள்ளவர்களாகயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் ஒழுங்கும், கட்டுப்பாடும், கண்ணியமும், பரிசுத்தமும் காணப்பட வேண்டும். இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மனுஷர் மத்தியிலே செய்ய வேண்டிய கடமையிருப்பதுபோல, அவர்கள் கர்த்தருக்கு செய்ய வேண்டிய ஆவிக்குரிய கடமைகளும் இருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தவேண்டும் (எசே 45:13). இஸ்ரவேலின் அதிபதிக்கு முன்பாக தேசத்தின் ஜனங்களெல்லாரும் காணிக்கையைச் செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறார்கள் (எசே 45:16). இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பு தங்களுடைய தேசத்திலே கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு பரிசுத்தமான பங்கைக் கொடுத்தார்கள் (எசே 45:1). இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு பரிசுத்தமான நிலத்தை பிரித்துக்கொடுப்பதோடு, தங்களுடைய விளைச்சலின் பலனையும், தங்களுடைய ஆடுமாடுகளின் ஒரு பகுதியையும் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார் செலுத்த வேண்டிய காணிக்கைகளைப்பற்றி கர்த்தர் இங்கு வெளிப்படுத்துகிறார். இந்த காணிக்கைளின் விவரம் மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு கலம் கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறிலொரு பங்கையும், ஒரு கலம் வாற்கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறிலொரு பங்கையும் படைக்கவேண்டும் (எசே 45:13).

இஸ்ரவேல் வம்சத்தார் எண்ணெயிலும் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தவேண்டும். பத்துக்குடம் பிடிக்கிற கலத்துக்குச் சரியான ஒரு ஜாடி எண்ணெயிலே பத்தில் ஒரு பங்கைப் படைக்கவேண்டும்; பத்துஅளவுகுடம் ஒரு கலமாகும் (எசே 45:14).

அவர்கள் தங்கள் மந்தையிலுள்ள ஆடுகளிலும் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தவேண்டும். இஸ்ரவேல் தேசத்திலே நல்லமேய்ச்சலை மேய்கிற மந்தையிலே இருநூறு ஆடுகளில் ஒரு ஆடும், அவர்களுடைய பாவநிவாரணத்திற்காக போஜனபலியாகவும் தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்தவேண்டும் (எசே 45:15).

கர்த்தர் ஆடுகளின் காணிக்கைகளைப்பற்றிச் சொல்லும்போது, நல்ல மேய்ச்சலை மேய்கிற மந்தையிலிருந்து ஆடுகளை காணிக்கையாக செலுத்தவேண்டும் என்று சொல்லுகிறார். நல்ல மேய்ச்சலை மேய்கிற ஆடுகள் புஷ்டியுள்ளதாயிருக்கும். இவை பாவநிவாரண பலியாக செலுத்தப்படும் ஆடுகள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக, பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்டார். அவருடைய பலிமரணத்தினால் நமக்கு பாவநிவாரண முண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் தேவனோடு ஒப்புரவாகியிருக்கிறோம்.

இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்களெல்லோரும் இந்தக் காணிக்கையை இஸ்ரவேலின் அதிபதிக்கு முன்பாக செலுத்த வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே 45:16). "அதிபதி" என்னும் வார்த்தை பிரபுவைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அதிபதி என்னும் வார்த்தை இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும் என்றும் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக, நாம் நம்முடைய காணிக்கையை செலுத்தவேண்டும். நம்முடைய ஸ்தோத்திர பலிகளையும், துதிகளையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு செலுத்தவேண்டும். நாம் பிதாவாகிய தேவனுக்கு, குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் காணிக்கைகளை செலுத்துகிறோம். கர்த்தருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறோம்.

இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்கள், இஸ்ரவேலின் அதிபதிக்கு முன்பாக தங்கள் காணிக்கைகளை செலுத்துகிறார்கள். அவர்கள் செலுத்தும் காணிக்கைகளை, இஸ்ரவேலின் அதிபதி கர்த்தருக்கு செலுத்துகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கூடிவரக்குறிக்கப்பட்ட சகலபண்டிகைகளிலும் மாதப்பிறப்புகளிலும் ஓய்வுநாட்களிலும் தகனபலிகளையும் போஜனபலிகளையும் பானபலிகளையும் செலுத்துவது அதிபதியின்மேல் சுமந்த கடனாயிருக்கும் (எசே 45:17).

இஸ்ரவேலின் அதிபதி, இஸ்ரவேல் வம்சத்தாருக்காகப் பாவநிவாரணம் பண்ணும்படிக்குப் பாவநிவாரணபலியையும் போஜனபலியையும் தகனபலியையும் சமாதானபலியையும் படைக்கவேண்டும் (எசே 45:17).

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் காணிக்கைளை அதிபதியினிடத்தில் கொண்டு வந்து கொடுக்கவேண்டும். அதிபதி அந்தக் காணிக்கைகளை கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு கொண்டு வரவேண்டும். கர்த்தருக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளில் குறைவாயிருப்பதை, அதிபதி தன்னுடைய சொந்த பொக்கிஷத்திலிருந்து எடுத்து, ஜனங்களுடைய காணிக்கையோடு சேர்த்து, கர்த்தருக்கு பலிகளைச் செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே பரிசுத்தமாய் ஆசரிக்கப்படவேண்டிய சில பண்டிகைகளைக் குறித்து கர்த்தர் இங்கு வெளிப்படுத்துகிறார். முதலாம் மாதம் முதலாந்தேதியிலே, இஸ்ரவேல் புத்திரர் பழுதற்ற ஒரு காளையைக் கொண்டுவந்து, பரிசுத்த ஸ்தலத்துக்குப் பாவநிவிர்த்தி செய்யவேண்டும் (எசே 45:18). இது வருஷத்தின் துவக்கத்தில், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிப்பதற்காக செலுத்தப்படும் பலி.

வருஷத்தின் ஆரம்பத்திலேயே கர்த்தருக்கு பலிகளை செலுத்தும்போது, அந்த வருஷம் முழுவதும் கர்த்தருடைய கிருபை இஸ்ரவேல் வம்சத்தாரோடு தங்கியிருக்கும். பரிசுத்த ஸ்தலத்திலே நடத்தப்படும் எல்லா ஆராதனைகளிலும் கர்த்தருடைய பிரசன்னம் தங்கியிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் அந்த வருஷம் முழுவதும், பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தருடைய ஆலயம் சுத்தமாயிருக்கும்.

முதலாம் மாதம் முதலாம் தேதியிலே முதலாவது பலி, பரிசுத்த ஸ்தலத்தை பாவநிவிர்த்தி செய்வதற்காக செலுத்தப்படுகிறது. பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுவதுபோல, அங்கே கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரும் லேவியரும் சுத்திகரிக்கப்படவேண்டும். ஊழியக்காரர்களோடு, கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வருகிற இஸ்ரவேல் வம்சத்தாரும் சுத்திகரிக்கப்படவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தார், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை, முதலாம் மாதம் முதலாம் தேதியிலே சுத்திகரிக்கவேண்டும். முதலாம் மாதம் பதினான்காம் தேதியிலே இஸ்ரவேல் வம்சத்தார் பஸ்காவைப் புசிக்கவேண்டும். இது பழைய ஏற்பாட்டு பிரமாணம். பஸ்காவைப் புசிப்பதற்கு முன்பாக, பரிசுத்த ஸ்தலமும், ஆசாரியரும், லேவியரும், இஸ்ரவேல் புத்திரரும் தங்கள் பாவங்களை நிவிர்த்தி செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது.

பரிசுத்த ஸ்தலத்திற்கு பாவநிவிர்த்தி செய்யும்போது, ஆசாரியன் பாவநிவாரணபலியின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, ஆலயத்தின் வாசல் நிலைகளிலும், பலிபீடத்துச் சட்டத்தின் நாலு கோடிகளிலும், உட்பிராகாரத்தின் வாசல் நிலைகளிலும் பூசவேண்டும் (எசே 45:19).

முதலாம் மாதம் முதலாம் தேதியிலே செலுத்தப்படும் பலியானது, ஏழாம் தேதியிலும் மறுபடியும் செய்யப்படவேண்டும். பிழைசெய்தவனுக்காகவும், அறியாமல் தப்பிதம் செய்தவனுக்காகவும் அந்தப்பிரகாரமாக ஏழாந்தேதியிலும் செய்யவேண்டும்; இவ்விதமாய் ஆலயத்துக்குப் பாவநிவர்த்தி செய்யவேண்டும் (எசே 45:20). இது கர்த்தருடைய பிரமாணம். எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். பிழை செய்தவனும் இருக்கிறான். அறியாமல் தப்பிதம் செய்தவனும் இருக்கிறான். அவர்கள் எல்லோருடைய பாவங்களும் பாவநிவிர்த்தி செய்யப்படவேண்டும்.

முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே புளிப்பில்லாத அப்பம் புசிக்கப்படுகிற ஏழுநாள் பண்டிகையாகிய பஸ்கா ஆரம்பமாகும். அந்நாளிலே அதிபதி தன்னிமித்தமும் தேசத்து எல்லா ஜனங்களிநிமித்தமும் பாவநிவாரணத்துக்காக ஒரு காளையைப் படைக்கவேண்டும் (எசே 45:21,22).

ஏழுநாள் பண்டிகையில், அதிபதி அந்த ஏழுநாளும் தினந்தோறும் கர்த்தருக்குத் தகனபலியாகப் பழுதற்ற ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும், பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் தினந்தோறும் படைக்கவேண்டும். ஒவ்வொரு காளையோடே ஒரு மரக்கால் மாவும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவுமான போஜனபலியையும், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கவேண்டும் (எசே 45:23,24).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நமக்கு பஸ்காவாகயிருக்கிறார். அவரே நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாயிருக்கிறார். கர்த்தர் நமக்காக கிருபாதார பலியானதை நாம் நினைவுகூரும் வண்ணமாக, கர்த்தருடைய பந்தியிலே பங்குபெறுகிறோம். கர்த்தருடைய பந்தியே நமக்கு பஸ்காவாயிருக்கிறது.

கர்த்தர் பஸ்கா பண்டிகையைப்பற்றி வெளிப்படுத்திவிட்டு, அதன் பின்பு கூடாரங்களின் பண்டிகையைப்பற்றிச் சொல்லுகிறார். யூதருடைய மார்க்கத்தில் பஸ்கா பண்டிகைக்கும், கூடாரங்களின் பண்டிகைக்கும் நடுவே பெந்தெகொஸ்தே பண்டிகை வரும். ஆனால் இந்த வசனப்பகுதியில் பெந்தெகொஸ்தே பண்டிகையைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதியில் ஆரம்பமாகிற பண்டிகையிலே, அதிபதி அப்படியே ஏழுநாளும் அதற்குச் சரியானபிரகாரமாகப் பாவநிவாரண பலிகளையும் தகனபலிகளையும் போஜன பலிகளையும், எண்ணெயையும் படைக்கவேண்டும் (எசே 45:25).

நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக, பாவநிவாரண பலிகளும், தகனபலிகளும், போஜனபலிகளும், எண்ணெயும் படைக்கப்படுகிறது. ஆனாலும் நம்முடைய பாவங்களை முற்றிலுமாய் நிவிர்த்தி பண்ணுவதற்கு, இந்தப் பலிகள் போதுமானதாயில்லை. ஆகையினால் இந்தப் பலிகள் திரும்ப திரும்ப படைக்கப்படுகிறது. இந்தப் பலிகளையெல்லாம் ஒரு தரம் மாத்திரம் படைத்தால் போதாது. இவற்றை அப்படியே ஏழுநாளும், அதற்கு சரியான பிரகாரமாகவும் படைக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக, ஒரே ஒரு தரம் மாத்திரமே சிலுவையிலே தம்மை பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் எல்லோருக்காகவும் ஒரு தரம் மரித்தார். கர்த்தருடைய பலி நம் எல்லோருடைய பாவங்களையும் நிவிர்த்திபண்ணுவதற்கு போதுமானதாயிருக்கிறது.

கர்த்தர் நமக்காக பலியானதை நாம் நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூரவேண்டும். கர்த்தருடைய கிருபாதாரபலியை நம்முடைய இருதயத்தில் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு பதிலாக பலியானதை உடைந்த இருதயத்தோடு தியானம்பண்ணவேண்டும். நம்முடைய இருதயம் கர்த்தருக்கு நன்றி செலுத்தவேண்டும்.

நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாக, பிதாவாகிய தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக, ஆவிக்குரிய பலிகளைச் செலுத்துகிறோம். துதிகளையும் ஸ்தோத்திர பலிகளையும் ஏறெடுக்கிறோம். நாம் இந்தப் பலிகளை ஒருதரம் செலுத்தினால் மாத்திரம் போதாது. கர்த்தருக்கு முன்பாக நம்முடைய ஸ்தோத்திர பலிகளை ஒவ்வொரு நாளும் செலுத்தவேண்டும்.

46 அதிகாரம்

கர்த்தர் ஆசாரியருக்கும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் ஆராதனை பிரமாணங்களைக் கொடுக்கிறார் (எசே 46:1-15). அதிபதி தன்னுடைய சுதந்தரத்தைக் கொடுக்க வேண்டிய விதம் (எசே 46:16-18). பலிகளை சமைக்கிறதற்கும் சுடுகிறதற்குமான ஸ்தலங்கள் (எசே 46:19-24).

ஆராதனை பிரமாணம் எசே 46:1-15

எசே 46:1. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: வேலைசெய்கிற ஆறுநாளிலும் கிழக்குக்கு எதிரான உட்பிராகாரத்தினுடைய வாசல் பூட்டப்பட்டிருந்து, ஓய்வுநாளிலும் மாதப்பிறப்பிலும் திறக்கப்படக்கடவது.

எசே 46:2. அப்பொழுது அதிபதி வெளிவாசல் மண்டபத்தின் வழியாய் பிரவேசித்து, வாசல் நிலையண்டையிலே நிற்கக்கடவன்; ஆசாரியர்களோ அவனுடைய தகனபலியையும், அவனுடைய சமாதான பலிகளையும் படைக்கக்கடவர்கள்; அவன் வாசற்படியிலே ஆராதனை செய்து, பின்பு புறப்படுவானாக; அந்த வாசல் சாயங்காலமட்டும் பூட்டப்படாதிருப்பதாக.

எசே 46:3. தேசத்து ஜனங்களும் ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் அந்த வாசலின் நடையிலே கர்த்தருடைய சந்நிதியில் ஆராதனை செய்யக்கடவர்கள்.

எசே 46:4. அதிபதி ஓய்வுநாளிலே கர்த்தருக்குப் பலியிடும் தகனபலி, பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவுமே.

எசே 46:5. ஆட்டுக்கடாவோடே போஜனபலியாக ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்குட்டிகளோடே போஜனபலியாகத் தன் திராணிக்குத் தக்கதாய்த் தருகிற ஈவையும், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கக்கடவன்.

எசே 46:6. மாதப்பிறப்பான நாளிலோ, அவன் பழுதற்ற ஒரு இளங்காளையையும், பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளையும் ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டு,

எசே 46:7. போஜனபலியாக இளங்காளையோடே ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்குட்டிகளோடே தன் திராணிக்குத் தக்கதாய், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கக்கடவன்.

எசே 46:8. அதிபதி வருகிறபோது வாசல் மண்டபத்தின் வழியாய்ப்பிரவேசித்து, அது வழியாய்த் திரும்பப் புறப்படக்கடவன்.

எசே 46:9. தேசத்தின் ஜனங்கள் குறிக்கப்பட்ட நாட்களில் கர்த்தருடைய சந்நிதியில் வரும்போது, ஆராதனை செய்கிறதற்காக வடக்கு வாசல்வழியாய் உட்பிரவேசித்தவன் தெற்கு வாசல்வழியாய்ப் புறப்படவும், தெற்கு வாசல்வழியாய் உட்பிரவேசித்தவன் வடக்கு வாசல்வழியாய்ப் புறப்படவும் கடவன்; தான் பிரவேசித்த வாசல் வழியாய்த் திரும்பிப்போகாமல், தனக்கு எதிரான வழியாய்ப் புறப்பட்டுப்போவானாக.

எசே 46:10. அவர்கள் உட்பிரவேசிக்கும்போது, அதிபதி அவர்கள் நடுவிலே அவர்களோடே கூட உட்பிரவேசித்து, அவர்கள் புறப்படும்போது அவனும்கூடப் புறப்படுவானாக.

எசே 46:11. பண்டிகைகளிலும் குறிக்கப்பட்ட காலங்களிலும் அவன் படைக்கும்போஜனபலியாவது; காளையோடே ஒரு மரக்கால் மாவும், ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவும், ஆட்டுக்குட்டிகளோடே அவன் திராணிக்குத்தக்கதாய்த் தருகிற ஈவும், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயும் கொடுக்கவேண்டும்.

எசே 46:12. அதிபதி உற்சாகமான தகனபலியாகிலும், சமாதான பலிகளையாகிலும் கர்த்தருக்கு உற்சாகமாய்ச் செலுத்தவேண்டுமென்றால், அவனுக்குக் கிழக்குநோக்கிய எதிரான வாசல் திறக்கப்படுவதாக; அப்பொழுது அவன் ஓய்வுநாளில் செய்கிறதுபோல, தன் தகனபலியையும் தன் சமாதான பலியையும் செலுத்தி, பின்பு புறப்படக்கடவன்; அவன் புறப்பட்டபின்பு வாசல் பூட்டப்படவேண்டும்.

எசே 46:13. தினந்தோறும் ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியைக் கர்த்தருக்குத் தகனபலியாகப் படைக்கக்கடவாய்; காலைதோறும் அதைப்படைக்கவேண்டும்.

எசே 46:14. அதினோடே காலைதோறும் போஜனபலியாக ஒரு மரக்கால் மாவிலே ஆறத்தொரு பங்கையும், மெல்லிய மாவைப் பிசையும்படிக்கு ஒருபடி எண்ணெயிலே மூன்றத்தொரு பங்கையும் படைக்கக்கடவாய்; இது அன்றாடம் கர்த்தருக்குப் படைக்க வேண்டிய நித்திய கட்டளையான போஜனபலி.

எசே 46:15. இப்படிக் காலைதோறும் அன்றாட தகனபலியாக ஆட்டுக் குட்டியையும் போஜனபலியையும் எண்ணெயையும் செலுத்துவார்களாக.

கர்த்தர் எசேக்கியேலுக்கு ஆராதனை பிரமாணத்தை வெளிப்படுத்துகிறார். இந்தப் பிரமாணத்தின் பிரகாரம் ஆசாரியரும், இஸ்ரவேல் வம்சத்தாரும் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். ஆனால் யூதமார்க்கத்தின் சரித்திரத்தில், யூதர்கள் இந்த ஆராதனை பிரமாணத்தின் பிரகாரம் கர்த்தரை ஆராதிக்கவில்லை. அவர்கள் மோசேயின் பிரமாணத்தையே பின்பற்றி, கர்த்தரை ஆராதித்தார்கள். ஆகையினால், கர்த்தர் இங்கு வெளிப்படுத்துகிற ஆராதனை பிரமாணம், இனிமேல் வரப்போகிற காலத்தில் அனுசரிக்கப்படும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஆராதனை எங்கு நடைபெறவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேலின் அதிபதிக்கும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் கர்த்தர் ஆராதனை பிரமாணத்தைக் கொடுக்கிறார். கிழக்கு வாசல் ஓய்வுநாளிலும், மாதப்பிறப்பிலும் மாத்திரம் திறக்கப்பட்டிருக்கும். வேலை செய்கிற மற்ற ஆறுநாளிலும் கிழக்கு வாசல் பூட்டப்பட்டிருக்கும் (எசே 46:1).

இஸ்ரவேலின் அதிபதி கர்த்தருக்கு பலிசெலுத்த வரும்போது, அவனுக்கு கிழக்கு வாசல் திறக்கப்பட்டிருக்கும் (எசே 46:12). இஸ்ரவேலின் அதிபதி, பரிசுத்த ஸ்தலத்தின் உட்பிரகாரத்திற்குள், ஆசாரியரோடும் லேவியரோடும் பிரவேசிப்பான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். தேசத்தை ஆளுகை செய்கிற அதிகாரிகளும், கர்த்தருடைய ஊழியக்காரர்களும் இணைந்து வேலை செய்யவேண்டும். அவர்கள் ஒருவருக்கொருவர் கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆதரவாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் அதிபதி வெளிவாசல் மண்டபத்தின் வழியாய் பிரவேசித்து, வாசல் நிலையண்டையிலே நிற்கவேண்டும்; ஆசாரியர்கள் அவனுடைய தகனபலியையும், அவனுடைய சமாதான பலிகளையும் படைக்கவேண்டும்; இஸ்ரவேலின் அதிபதி வாசற்படியிலே ஆராதனை செய்து, பின்பு புறப்படவேண்டும்; அந்த வாசல் சாயங்காலமட்டும் பூட்டப்படாதிருக்கவேண்டும் (எசே 46:2) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேலின் அதிபதியோடு, ஆசாரியரும் லேவியரும், பரிசுத்த ஸ்தலத்தின் உட்பிரகாரத்திற்குள் ஒன்றாய் பிரவேசித்தார்கள் என்று சொல்ல வாய்ப்பில்லை.

இஸ்ரவேலின் அதிபதி வெளிவாசல் மண்டபத்தின் வழியாய் பிரவேசித்து, வாசல் நிலையண்டையிலே நிற்பான். உள்பிரகாரத்தில் ஆசாரியர்களும் லேவியர்களும், அதிபதி கொண்டு வந்த சமாதான பலிகளையும், தகனபலியையும் படைப்பார்கள். அவர்கள் தன்னுடைய பலிகளை படைப்பதை, இஸ்ரவேலின் அதிபதியால் வாசல் நிலையண்டையிலே நின்று தெளிவாகப் பார்க்க முடியும்.

இஸ்ரவேல் தேசத்து ஜனங்களும் வாசல் நிலையண்டையிலே நின்று கர்த்தரை ஆராதிப்பார்கள். ஆனால் அவர்கள் இஸ்ரவேலின் அதிபதிக்கு முன்பாக நிற்காமல், அவனுக்கு பின்பாக நிற்பார்கள். தேசத்து ஜனங்களும் ஒய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் அந்த வாசலின் நடையிலே கர்த்தருடைய சந்நிதியில் ஆராதனை செய்வார்கள் (எசே 46:3).

இஸ்ரவேலின் அதிபதி கர்த்தருக்கு செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றி, கர்த்தர் இங்கு எசேக்கியேலுக்கு வெளிப்படுத்துகிறார்.

அதிபதி ஓய்வுநாளிலே கர்த்தருக்குப் பலியிடும் தகனபலி, பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவுமாகும். ஆட்டுக்கடாவோடே போஜனபலியாக ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்குட்டிகளோடே போஜனபலியாகத் தன் திராணிக்குத்தக்கதாய்த் தருகிற ஈவையும், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கவேண்டும் (எசே 46:4,5).

இஸ்ரவேலின் அதிபதி மாதப்பிறப்பான நாளிலே, பழுதற்ற ஒரு இளங்காளையையும், பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளையும் ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டு, போஜனபலியாக இளங்காளையோடே ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்குட்டிகளோடே தன் திராணிக்குத்தக்கதாய், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கவேண்டும் (எசே 46:6,7).

இஸ்ரவேலின் அதிபதி, பரிசுத்த ஸ்தலத்திற்குள் வருகிறபோது, வாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து, அதன் வழியாகவே, திரும்ப புறப்பட்டுப்போகவேண்டும் (எசே 46:8).

இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்கள் குறிக்கப்பட்ட பண்டிகை நாட்களில் வடக்கு வாசல் வழியாகவோ அல்லது தெற்கு வாசல் வழியாகவோ பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கலாம். ஆனால் அவர்கள் பிரவேசித்த வாசல் வழியாக திரும்பிப்போகக் கூடாது. அவர்கள் எந்த வாசல் வழியாக பிரவேசித்தார்களோ, அதற்கு எதிரான வாசல் வழியாய் வெளியே புறப்பட்டுப்போகவேண்டும்.

இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்கள் குறிக்கப்பட்ட நாட்களில் கர்த்தருடைய சந்நிதியில் வரும்போது, ஆராதனை செய்கிறதற்காக வடக்கு வாசல்வழியாய் உட்பிரவேசித்தவன் தெற்கு வாசல்வழியாய்ப் புறப்படவும், தெற்கு வாசல்வழியாய் உட்பிரவேசித்தவன் வடக்கு வாசல்வழியாய்ப் புறப்படவேண்டும் (எசே 46:9). பண்டிகை நாட்களில், பரிசுத்த ஸ்தலத்தில் ஜனத்திரளின் கூட்டம் அதிகமாயிருக்கும். கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காக இதுபோன்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கலாம்.

இஸ்ரவேல் தேசத்து ஜனங்கள், எந்த வாசல் வழியாய் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தாலும், அவர்கள் அந்த வாசலின் நடையிலே, கர்த்தருடைய சந்நிதியில் ஆராதனை செய்யவேண்டும். ஒய்வு நாட்களிலும் மாதப்பிறப்புக்களிலும் இந்தப் பிரமாணத்தை இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் கைக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள், உட்பிரவேசிக்கும்போது, அதிபதி அவர்கள் நடுவிலே அவர்களோடேகூட உட்பிரவேசித்து, அவர்கள் புறப்படும்போது அவனும்கூடப் புறப்படவேண்டும் (எசே 46:10)

இஸ்ரவேலின் அதிபதி பண்டிகைகளிலும், குறிக்கப்பட்ட காலங்களிலும் செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றியும் கர்த்தர் வெளிப்படுத்துகிறார்.

இஸ்ரவேலின் அதிபதி, காளையோடே ஒரு மரக்கால் மாவும், ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவும், ஆட்டுக்குட்டிகளோடே அவன் திராணிக்குத்தக்கதாய்த் தருகிற ஒரு ஈவும், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயும் போஜனபலியாகக் கொடுக்கவேண்டும் (எசே 46:11).

இஸ்ரவேலின் அதிபதி, போஜனபலியோடு, தகனபலியையும், சமாதான பலிகளையும், கர்த்தருக்கு உற்சாகமாய்ச் செலுத்தவேண்டும். அதிபதி இந்தப் பலிகளை செலுத்த வரும்போது, அவனுக்கு கிழக்கு நோக்கிய எதிரான வாசல் திறக்கப்படும். அப்பொழுது அவன் ஓய்வுநாளில் செய்கிறது போல, தன் தகனபலியையும் தன் சமாதான பலியையும் செலுத்தி, பின்பு பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு புறப்படவேண்டும்; அவன் புறப்பட்டபின்பு வாசல் பூட்டப்படவேண்டும் (எசே 46:12).

பரிசுத்த ஸ்தலத்தில் நடைபெறவேண்டிய ஆராதனைகளையும் கர்த்தர் ஒழுங்கு படுத்துகிறார். தினந்தோறும் காலை வேளையிலே, ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியைக் கர்த்தருக்குத் தகனபலி யாகப் படைக்கவேண்டும். (எசே 46:13).

தினந்தோறும் காலையிலே படைக்கப்படும் ஆட்டுக்குட்டியோடு, காலைதோறும் போஜனபலியாக ஒரு மரக்கால் மாவிலே ஆறத்தொரு பங்கையும், மெல்லிய மாவைப் பிசையும்படிக்கு ஒருபடி எண்ணெயிலே மூன்றத்தொரு பங்கையும் படைக்கவேண்டும்; இது அன்றாடம் கர்த்தருக்குப் படைக்கவேண்டிய நித்திய கட்டளையான போஜனபலி (எசே 46:14). இவ்வாறாக காலைதோறும் அன்றாட தகனபலியாக ஆட்டுக்குட்டியையும், போஜனபலியையும், எண்ணெயையும் செலுத்தவேண்டும் (எசே 46:15).

மோசேயின் பிரமாணத்தின்படி, ஓய்வுநாட்களிலே இரண்டு ஆட்டுக்குட்டிகளை பலியிடவேண்டும். "ஓய்வுநாளிலோ போஜன பலிக்காக ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும், அதின் பானபலியையும் செலுத்தக்கடவீர்கள்" (எண் 28:9).

இஸ்ரவேலின் அதிபதி, மாதப்பிறப்பான நாளிலே, பழுதற்ற ஒரு இளங்காளையையும், பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளையும் ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிடவேண்டும். அவன் போஜனபலியாக இளங்காளையோடே ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக் குட்டிகளோடே தன் திராணிக்குத்தக்கதாய், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கவேண்டும் (எசே 46:6,7).

கர்த்தருக்கு பலியிடும் தகனபலி பழுதற்றதாயிருக்கவேண்டும். நம்முடைய பலியாகிய இயேசுகிறிஸ்துவிடம் எந்த பழுதுமில்லை. "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது 1:19).

விசுவாசிகளாகிய நாம், நம்மை கர்த்தருக்கு ஜீவபலிகளாக படைக்க வேண்டும். நாம் மாசில்லாதவர்களாயும், கறை திரையற்றவர்களாயும், குற்றமற்றவர்களாயும், நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தருக்கு தகனபலிகளை பலியிடும்போது, அதோடு சேர்ந்து, போஜனபலியும் செலுத்தப்படவேண்டும். நாம் கர்த்தருக்கு தகனபலிகளைச் செலுத்தும்போது, நம்முடைய மந்தைகளின் பெருக்கத்தினால் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம். நாம் போஜனபலிகளை செலுத்தும்போது, நம்முடைய நிலத்தின் விளைச்சலினால் கர்த்தரை கனம்பண்ணுகிறோம்.

"உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்" (உபா 28:4).

மோசேயின் பிரமாணத்திலும் போஜனபலியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் இங்கு சொல்லுகிற போஜனபலியின் அளவு, மோசே சொன்னதைவிட, அதிகமாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம், கர்த்தருடைய சமுகத்திலே தகனபலிகளை செலுத்தமாட்டோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்காக, தம்மையே பாவநிவாரணபலியாக செலுத்தி தீர்த்துவிட்டார். ஆகையினால் நாம் இனிமேல் வேறொரு பலியை செலுத்த வேண்டிய அவசியமில்லை. இனிமேலும் இரத்தஞ்சிந்துதல் தேவைப்படவில்லை. ஆகையினால், புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம், இரத்தம் கலக்காத பலிகளை, கர்த்தருக்கு அதிகமாக செலுத்தவேண்டும். நாம் செலுத்த வேண்டிய பலிகளின் அளவு அதிகமாயிருக்கிறது.

சுதந்தரவீதப்பிரமாணம்
எசே 46:16-18

எசே 46:16. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அதிபதி தன் குமாரரில் ஒருவனுக்குத் தன் சுதந்தரத்தில் ஒரு பங்கைக் கொடுத்தால், அது அவன் குமாரருடையதாயிருக்கும்; அது சுதந்தரவீதமாய் அவர்களுக்குச் சொந்தமாகும்.

எசே 46:17. அவன் தன் ஊழியக்காரரில் ஒருவனுக்குத் தன் சுதந்தரத்தில் ஒரு பங்கைக் கொடுத்தானேயாகில், அது விடுதலையின் வருஷமட்டும் அவனுடையதாயிருந்து, பின்பு திரும்ப அதிபதியின் வசமாய்ச் சேரும்; அதின் சுதந்தரம் அவன் குமாரருக்கே உரியது, அது அவர்களுடையதாயிருக்கும்.

எசே 46:18. அதிபதியானவன் ஜனத்தை இடுக்கண்செய்து, அவர்களின் சொந்தமானதற்கு அவர்களைப் புறம்பாக்கி, அவர்களுடைய சுதந்தரத்திலிருந்து ஒன்றும் எடுக்கலாகாது; என் ஜனத்தில் ஒருவரும் தங்கள் சொந்தமானதற்குப் புறம்பாக்கப்பட்டுச் சிதறடிக்கப்படாதபடிக்கு அவன் தன் சொந்தத்திலே தன் குமாரருக்குச் சுதந்தரம் கொடுக்கக்கடவன்.

இஸ்ரவேல் வம்சத்தார் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளும்படி சீட்டுப்போட்டு பங்கிடவேண்டும். தேசத்திலே அதிபதிக்கு ஒரு பங்கு கொடுக்கப்படவேண்டும். அதிபதிக்கு பாகமாக பிரித்துக்கொடுக்கப்பட்ட நிலம் அவனுக்கும், அவனுடைய குமாரருக்கும் உரியது. இந்த நிலத்தை அதிபதி தன் இஷ்டம்போல, யாருக்கு வேண்டுமானாலும் சுதந்தரவீதமாய்ப் பிரித்துக்கொடுக்க முடியாது. அதிபதியின் நிலத்தில் கர்த்தர் சில கட்டுப்பாடுகளை விதிக்கிறார்.

அதிபதி தன் குமாரரில் ஒருவனுக்குத் தன் சுதந்தரத்தில் ஒரு பங்கைக் கொடுத்தால், அது அவன் குமாரருடையதாயிருக்கும்; அது சுதந்தரவீதமாய் அவர்களுக்குச் சொந்தமாகும் (எசே 46:16). அதிபதியின் குமாரன் அவனுக்கும் தேசத்திற்கும் அநேக நன்மைகளை செய்திருக்கலாம். குமாரருடைய கடினமான வேலைகளுக்கு ஈடாக அல்லது வெகுமதியாக அதிபதி தன்னுடைய நிலத்திலிருந்து ஒரு பங்கை அவனுக்கு கொடுக்கலாம்.

அதிபதியின் ஊழியக்காரரில் ஒருவன், அதிபதிக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கலாம். அதிபதியும் அந்த ஊழியக்காரன்மேல் பிரியமாயிருக்கலாம். ஆனாலும் அதிபதி தன்னுடைய சுதந்தரத்தின் ஒரு பங்கை, தன்னுடைய ஊழியக்காரனுக்கு சுதந்தரவீதமாகக் கொடுக்க முடியாது.

அதிபதி தன்னுடைய ஊழியக்காரரில் ஒருவனுக்கு, தன்னுடைய சுதந்தரத்தில் ஒரு பங்கை கொடுக்கும்போது, அந்த நிலம் விடுதலையின் வருஷமட்டும் அந்த ஊழியக்காரனுடையதாயிருக்கும். அதன் பின்பு அந்த நிலம் திரும்ப அதிபதியின் வம்சமாய்ச் சேரும். அதிபதியின் சுதந்தரம் அவன் குமாரருக்கே உரியது. அது அவர்களுடையதாகவே இருக்கும் (எசே 46:17).

அதிபதி தன்னுடைய குமாரருக்கு சுதந்தரம் கொடுக்கும்போது, தன்னுடைய சொந்த நிலத்திலிருந்து எடுத்து அவர்களுக்கு கொடுக்கவேண்டும். பிறருக்கு சொந்தமானதை, அதிபதி அநியாயமாய் அபகரித்து, அதை தன் குமாரருக்கு சுதந்தரமாய்க் கொடுக்கக்கூடாது.

அதிபதியானவன் தன் ஜனத்திற்கு இடுக்கண் செய்யக்கூடாது. அவர்களின் சொந்தமானதற்கு அவர்களை புறம்பாக்கக் கூடாது. அவர்களுடைய சுதந்தரத்திலிருந்து அதிபதி ஒன்றையும் எடுக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனம். கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசத்திலே காணியாட்சியைக் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு சொந்தமான காணியாட்சியிலிருந்து அவர்களை வெளியேற்றக்கூடாது. கர்த்தருடைய ஜனத்தை சிதறடிக்கக்கூடாது. அவர்கள் கானான் தேசத்தில், தங்களுடைய சுதந்தரவீதத்தில் குடியிருக்கவேண்டும். தேசத்தின் அதிபதி ஜனத்தின் பாதுகாப்புக்கு துணையாயிருக்கவேண்டும். அவர்களைத் துன்பப்படுத்தக்கூடாது.

தேசத்தின் அதிபதி, தன்னுடைய தேசத்திலுள்ள ஜனங்களின் இருதயங்களில் இடம் பிடிக்கவேண்டும். தன்னுடைய குடிமக்களின் இருதயங்களை ஆளுகை செய்யவேண்டும். தேசத்து ஜனங்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஜனங்களுக்கு இடுக்கண் செய்து, அவர்களுடைய சொத்துக்களை அபகரிப்பதைவிட, அவர்களுக்கு நன்மை செய்து, அவர்களுடைய நன்மதிப்பை பெற்றுக்கொள்வது அதிபதியின் இலட்சணம்.

பாவநிவாரணம்
எசே. 46:19-24

எசே 46:19. பின்பு அவர் வாசலின் பக்கத்தில் இருந்த நடைவழியாய் என்னை வடக்குக்கு எதிரான ஆசாரியர்களுடைய பரிசுத்த அறைவீடுகளுக்கு அழைத்துக்கொண்டு போனார்; அவ்விடத்தில் மேற்கே இருபுறத்திலும் ஒரு இடம் இருந்தது.

எசே 46:20. அவர் என்னை நோக்கி: குற்றநிவாரணபலியையும் பாவநிவாரணபலியையும் போஜன பலியையும் ஆசாரியர்கள் வெளிப்பிராகாரத்திலே கொண்டுபோய் ஜனங்களைப் பரிசுத்தம் பண்ணாதபடிக்கு, அவர்கள் அவைகளைச் சமைக்கிறதற்கும் சுடுகிறதற்குமான ஸ்தலம் இதுவே என்றார்.

எசே 46:21. பின்பு அவர் என்னை வெளிப்பிராகாரத்தில் அழைத்துக்கொண்டுபோய், என்னைப் பிராகாரத்தின் நாலு மூலைகளையும் கடந்துபோகப்பண்ணினார்; பிராகாரத்து ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு முற்றம் இருந்தது.

எசே 46:22. பிராகாரத்தின் நாலு மூலைகளிலும் புகைத்துவாரங்களுள்ள இந்த முற்றங்கள் நாற்பது முழ நீளமும், முப்பது முழ அகலமுமானவைகள்; இந்த நாலு மூலை முற்றங்களுக்கும் ஒரே அளவு இருந்தது.

எசே 46:23. இந்த நாலுக்கும் சுற்றிலும் உள்ளே ஒரு சுற்றுக்கட்டு உண்டாயிருந்தது; இந்தச் சுற்றுக்கட்டுகளின் சுற்றிலும் அடுப்புகள் போடப்பட்டிருந்தது.

எசே 46:24. அவர் என்னை நோக்கி: இவைகள் ஜனங்கள் இடும் பலிகளை ஆலயத்தின் பணிவிடைக்காரர் சமைக்கிற வீடுகள் என்றார்.

பரிசுத்த ஸ்தலத்தின் வெளிப்பிரகாரத்தில், குற்றநிவாரணபலியையும், பாவநிவாரண பலியையும், போஜனபலியையும் சமைக்கிறதற்கும், சுடுகிறதற்கும் பிரத்தியேகமான ஸ்தலம் இருக்கிறது. ஆசாரியர்கள் இந்த பலிகளை வெளிப்பிரகாரத்திலே கொண்டுபோய், ஜனங்களை பரிசுத்தம் பண்ணாதபடிக்கு, அவைகளை சமைப்பார்கள். அவைகளை சுடுவார்கள் (எசே 46:20).

கர்த்தர் எசேக்கியேலை ஆசாரியர்களுடைய பரிசுத்த அறை வீடுகளுக்கு அழைத்துக்கொண்டு போகிறார். கர்த்தர் எசேக்கியேலை வாசலின் பக்கத்திலிருக்கிற நடைவழியாய் அழைத்துக் கொண்டு போகிறார். ஆசாரியர்களுடைய பரிசுத்த அறைவீடுகள் அங்கே வடக்குக்கு எதிராகயிருக்கிறது. அவ்விடத்தில் மேற்கே இருபுறத்திலும் ஒரு இடம் இருக்கிறது (எசே 46:19).

கர்த்தர் எசேக்கியேலை வெளிப்பிரகாரத்தில் அழைத்துக்கொண்டு போகிறார். அவரை பிரகாரத்தின் நாலு மூலைகளையும் கடந்துபோகப்பண்ணுகிறார். பிரகாரத்து ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு முற்றம் இருக்கிறது *(எசே 46:21).*

பிராகாரத்தின் நாலு மூலைகளிலும் புகைத்துவாரங்களுள்ள இந்த முற்றங்கள் நாற்பது முழ நீளமும், முப்பது முழ அகலமுமானவைகள்; இந்த நாலு மூலை முற்றங்களுக்கும் ஒரே அளவு இருக்கிறது. இந்த நாலுக்கும் சுற்றிலும் உள்ளே ஒரு சுற்றுக்கட்டு உண்டாயிருக்கிறது; இந்தச் சுற்றுக்கட்டுகளின் சுற்றிலும் அடுப்புகள் போடப்பட்டிருக்கிறது *(எசே 46:22,23).*

இவைகள் சமைக்கிற வீடுகள். ஜனங்கள் இடும் பலிகளை ஆலயத்தின் பணிவிடைக்காரர் இங்கு சுடுவார்கள் *(எசே 46:24).* இந்த ஸ்தலத்தில் ஆசாரியர்கள், ஜனங்கள் இடும் பலிகளை சமைப்பார்கள். சுடுவார்கள் *(எசே 46:24).*

47 அதிகாரம்

எசேக்கியேல் பரிசுத்தமான நதியை தரிசிக்கிறார். தண்ணீரின் ஆழம், அதன் விஸ்தாரம், அதன் ஆரோக்கியமாக்கும் வல்லமை, அதன் கரைகளிலுள்ள வெகுதிரளான விருட்சங்கள் ஆகியவற்றை எசேக்கியேல் தரிசிக்கிறார் (எசே 47:1-12).

கானான் தேசத்தின் எல்லைகள் வகுக்கப்படுகிறது. இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கும், இஸ்ரவேல் தேசத்திலே தங்கியிருக்கிற அந்நியருக்கும் தேசத்திலே பங்குவீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது (எசே 47:13-23).

நதி
எசே 47:1-12

எசே 47:1. பின்பு அவர் என்னை ஆலயத்தின் வாசலுக்குத் திரும்பிவரப்பண்ணினார்; இதோ, வாசற்படியின் கீழிருந்து தண்ணீர் புறப்பட்டுக் கிழக்கே ஓடுகிறதாயிருந்தது; ஆலயத்தின் முகப்பு கிழக்கு நோக்கியிருந்தது; அந்தத் தண்ணீர் ஆலயத்தின் வலதுபுறமாய்ப் பலிபீடத்துக்குத் தெற்கே பாய்ந்தது.

எசே 47:2. அவர் என்னை வடக்கு வாசல் வழியாய்ப் புறப்படப்பண்ணி, என்னை வெளியிலே கீழ்த்திசைக்கு எதிரான புறவாசல்மட்டும் சுற்றி நடத்திக்கொண்டுபோனார்; அங்கே தண்ணீர் வலதுபுறத்திலிருந்து பாய்கிறதாயிருந்தது.

எசே 47:3. அந்தப் புருஷன் தமது கையில் நூலைப் பிடித்துக்கொண்டு, கிழக்கே புறப்படுகையில் ஆயிரமுழம் அளந்து, என்னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார்; தண்ணீர் கணுக்கால் அளவாயிருந்தது.

எசே 47:4. பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்து, என்னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார்; அங்கே தண்ணீர் முழங்கால் அளவாயிருந்தது; பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்து என்னைக் கடக்கப்பண்ணினார்; அங்கே தண்ணீர் இடுப்பளவாயிருந்தது.

எசே 47:5. பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்தார்; அங்கே அது நான் கடக்கக்கூடாத நதியாயிருந்தது; தண்ணீர் நீச்சாழமும் கடக்கமுடியாத நதியுமாயிருந்தது.

எசே 47:6. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இதைக் கண்டாயா என்று சொல்லி, என்னை நதியோரமாய்த்திரும்ப நடத்திக்கொண்டுபோனார்.

எசே 47:7. நான் நடந்துவருகையில், இதோ, நதியோரத்தில் இக்கரையிலும் அக்கரையிலும் வெகு திரளான விருட்சங்கள் இருந்தது.

எசே 47:8. அவர் என்னை நோக்கி: இந்தத்தண்ணீர் கிழக்குதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், வனாந்தரவழியாய் ஓடி கடலில் விழும்; இது கடலில் பாய்ந்து, விழுந்தபின்பு, அதின் தண்ணீர் ஆரோக்கியமாகும்.

எசே 47:9. சம்பவிப்பது என்னவென்றால், இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவபிராணிகள் யாவும் பிழைக்கும்; இந்தத் தண்ணீர் அங்கே வந்தபடியினால் வெகு ஏராளமான மச்சங்களும் உண்டாயிருக்கும்; இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்.

எசே 47:10. அப்பொழுது என்கேதிதுவக்கி எனெக்லாயிம்மட்டும் மீன்பிடிக்கிறவர்கள் அதின் கரையிலே நிற்பார்கள்; அதெல்லாம் வலைகளை விரிக்கிற ஸ்தலமாயிருக்கும்; அதின் மச்சங்கள் பெரிய சமுத்திரத்தின் மச்சங்களைப்போலப் பல ஜாதியும் மகா ஏராளமுமாயிருக்கும்.

எசே 47:11. ஆனாலும் அதினுடைய உளையான பள்ளங்களும் அதினுடைய மடுக்களும் ஆரோக்கியமாகாமல், உப்பாகவே விட்டுவிடப்படும்.

எசே 47:12. நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்; அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள்.

எசேக்கியேலின் தரிசனத்திற்கு ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லவேண்டும். சகரியா சொன்ன தீர்க்கதரிசனம் எசேக்கியேல் தரிசித்த நதியைப்பற்றி ஓரளவு விவரிக்கும்.

"அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்" (சக 14:8).

அப்போஸ்தலர் யோவானும் தன்னுடைய தரிசனத்திலே ஜீவத்தண்ணீருள்ள நதியைப் பார்த்தார். "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதிதேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்" (வெளி 22:1).

தேவகிருபை பூரணமாயிருக்கும்போது, அங்கே கர்த்தருடைய மகிமையும் சந்தோஷமும் வெளிப்படும். கர்த்தருடைய மகிமை ஆரம்பமாகும்போது, அவருடைய கிருபையும் சந்தோஷமும் வெளிப்படும். எசேக்கியேல் தரிசித்த நதி கர்த்தருடைய கிருபைக்கும், மகிமைக்கும், சந்தோஷத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

எசேக்கியேல் தரிசித்த நதி, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் பொதுவாகச் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் எருசலேமிலிருந்து, உலகத்தின் முடிவுபரியந்தமும் பிரசங்கிக்கப்பட்டது. எல்லா தேசங்களிலும் கிறிஸ்துவின் நற்செய்தி பரவிற்று. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் வரங்களும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகளோடு கிரியை நடப்பித்தது. இதன் விளைவாக மனுஷருடைய ஆத்துமாவில் அற்புதமான விளைவுகள் உண்டாயிற்று.

கர்த்தர் எசேக்கியேலை ஆலயத்தின் வாசலுக்கு திரும்பி வரப்பண்ணுகிறார். அங்கே வாசற்படியின் கீழிருந்து தண்ணீர் புறப்பட்டுக் கிழக்கே ஓடுகிறது; ஆலயத்தின் முகப்பு கிழக்கு நோக்கியிருக்கிறது; அந்தத் தண்ணீர் ஆலயத்தின் வலதுபுறமாய்ப் பலி பீடத்துக்குத் தெற்கே பாய்கிறது (எசே 47:1).

கர்த்தர் எசேக்கியேலை வடக்கு வாசல் வழியாய்ப் புறப்படப்பண்ணுகிறார். அவரை வெளியிலே கீழ்த்திசைக்கு எதிரான புறவாசல் மட்டும் சுற்றி நடத்திக்கொண்டு போகிறார். அங்கே தண்ணீர் வலதுபுறத்திலிருந்து பாய்கிறது (எசே 47:2).

தண்ணீர் ஆலயத்தின் வலதுபுறத்திலிருந்து தெற்கே பாய்கிறது என்பது சீயோனிலிருந்து கர்த்தருடைய பிரமாணமும், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வார்த்தையும் புறப்பட்டுப்போகிறது என்பதற்கு அடையாளம்.

"திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசா 2:3).

பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் எருசலேமிலே ஒருமனப்பட்டு கூடியிருந்தார்கள். அப்போது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி அவர்கள்மீது ஊற்றப்பட்டது. அவர்கள் எல்லோரும் அந்நிய பாஷையிலே பேசி கர்த்தரை மகிமைப் படுத்தினார்கள். கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த இந்த ஜீவநதியை, அப்போஸ்தலர்கள் எல்லா தேசங்களுக்கும் எடுத்துச் செல்லும் வண்ணமாக, அவர்களெல்லோருக்கும் அந்நிய பாஷைகளின் வரங்கள் கொடுக்கப்பட்டது.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள், முதலாவதாக தேவாலயத்திலே எழும்பி நின்று இயேசு கிறிஸ்துவைப்பற்றிய ஜீவவார்த்தைகளை பிரசங்கம்பண்ணினார்கள்.

"கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டு வந்து: நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்" (அப் 5:19,20).

அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகம் முழுவதும் பிரசங்கம் பண்ணவேண்டும். அவர்களுடைய பிரசங்க ஊழியம் எருசலேமிலே ஆரம்பிக்கப்படவேண்டும்.

"அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக் 24:47).

இயேசுகிறிஸ்துவே ஆலயமாயிருக்கிறார். அவரே வாசலும் வழியுமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவிடத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் பாய்ந்து ஓடுகிறது. கிறிஸ்துவானவரின் குத்தப்பட்ட விலாவிலிருந்து, அவருடைய இரத்தம் பாய்ந்து வெளியேறுகிறது. நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவிடத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் பாய்ந்து ஓடுகிறது என்னும் சத்தியத்தை நாம் விசுவாசிக்கவேண்டும். அப்போது நாமும் இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்வோம்.

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" (யோவா 7:38,39).

தேவாலயத்தின் வாசற்படியிலிருந்து தண்ணீர் புறப்பட்டு கிழக்கே ஓடுகிறது. தண்ணீர் புறப்படும் இடத்தில், அது எல்லோருக்கும் தெரியும் வண்ணமாக, பூமிக்கு மேலே ஓடவில்லை. தண்ணீர் வாசற்படியின் கீழிருந்து புறப்படுகிறது. பூமிக்கு கீழே இருப்பதை நம்மால் பார்க்க முடியாது. கர்த்தர் விசுவாசிகளுடைய ஜீவியத்தில் கொடுக்கும் ஜீவஊற்றும், நாம் புரிந்துகொள்ள முடியாத இரகசியமாகவே இருக்கிறது. நம்முடைய ஜீவஊற்று கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைவாயிருக்கிறது.

"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோ 3:2,3).

அந்தப் புருஷன் தமது கையில் நூலைப் பிடித்துக்கொண்டு, கிழக்கே புறப்படுகையில் ஆயிரமுழம் அளக்கிறார். அவர் எசேக்கியேலைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணுகிறார்; தண்ணீர் கணுக்கால் அளவாயிருக்கிறது (எசே 47:3). இந்தத் தண்ணீர் கிழக்கு தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறது (எசே 47:8).

பரிசுத்த பர்வதங்களிலிருந்து ஜீவநதி புறப்படுகிறது. எசேக்கியேலும், அந்தப் புருஷனும், பரிசுத்த நதியை பின்தொடர்ந்து போகிறார்கள். அந்த நதி கிழக்காக புறப்படுகிறது. அந்தப் புருஷன், அந்த நதியில் ஆயிரம் முழம் கடந்துபோகிறார். அதன் பின்பு அதன் ஆழத்தை அளக்கிறார். தண்ணீரின் ஆழம் கணுக்கால் அளவாயிருக்கிறது.

அதன் பின்பு எசேக்கியேலும் அந்தப் புருஷனும், நதியின் கரை ஓரமாக தொடர்ந்து நடந்துபோகிறார்கள். அவர்கள் ஆயிரம் முழம் கடந்துபோன பின்பு நதியின் ஆழத்தை அளக்கிறார்கள். அங்கே தண்ணீர் முழங்கால் அளவாயிருக்கிறது.

அதன் பின்பு எசேக்கியேலும் அந்தப் புருஷனும், நதியின் கரை ஓரமாக தொடர்ந்து நடந்துபோகிறார்கள். அவர்கள் ஆயிரம் முழம் கடந்துபோன பின்பு நதியின் ஆழத்தை அளக்கிறார்கள். அங்கே தண்ணீர் இடுப்பளவாயிருக்கிறது (எசே 47:4).

அதன் பின்பு எசேக்கியேலும் அந்தப் புருஷனும், நதியின் கரை ஓரமாக தொடர்ந்து நடந்துபோகிறார்கள். அவர்கள் ஆயிரம் முழம் கடந்துபோன பின்பு நதியின் ஆழத்தை அளக்கிறார்கள். அங்கே தண்ணீர் நீச்சாளமும் கடக்க முடியாத நதியுமாயிருக்கிறது. எசேக்கியேலால் அந்த நதியை கடக்க முடியவில்லை (எசே 47:5).

தேவாலயத்தின் வாசற்படியிலிருந்து புறப்படுகிற தண்ணீர், ஓடுகிற நதியாயிருக்கிறது. இது ஓடாமல் கெட்டிக்கிடக்கிற தண்ணீரல்ல. இது ஓடுகிற நதியின் தண்ணீர். குளம் குட்டைகளில் தண்ணீர் ஓடாமல் கெட்டிக்கிடக்கும். இது அப்படிப்பட்ட தண்ணீரல்ல. இது ஓடுகிற நதியின் தண்ணீர்.

நம்முடைய ஆத்துமாவில் கர்த்தர் தம்முடைய கிருபையாகிய ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருக்கிறார். இந்தக் கிருபையானது தொடர்ந்து முன்னேறிப்போகவேண்டும். நமக்குள் தேவகிருபை பெருகவேண்டும். கிருபை பரிபூரணமடையும் வரையிலும், நாம் கிருபையில் வளர்ச்சி பெற்று முன்னேறவேண்டும்.

தேவாலயத்தின் வாசற்படியிலிருந்து புறப்படுகிற நதியின் ஆழம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஆழம் அதிகரிக்கும் போது அதன் தண்ணீரின் அளவும் அதிகரிக்கும். நதி தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நதி தூரமாய்ப்போகப்போக, நதியின் அளவும் அதிகரிக்கிறது. அதன் ஆழமும் அதிகரிக்கிறது. நதி வளர்ந்து பெருகுகிறது.

சுவிசேஷ சபை ஆரம்பத்தில் சிறிதாயிருக்கும். ஒரு நதியின் ஆரம்பம் சாதாரண நீரோடையாக இருப்பதுபோல, சபையின் ஆரம்பமும் சிறிதாயிருக்கும். அற்பமான ஆரம்பத்தை நாம் அசட்டைபண்ணக்கூடாது. அதன் முடிவு மகிமையானது.

தேவாலயத்தின் வாசற்படியிலிருந்து புறப்பட்டு ஓடுகிற நதியின் ஆழம் ஆரம்பத்தில் கணுக்கால் அளவாகவும், அதன் பின்பு முழங்கால் அளவாகவும், அதன் பின்பு இடுப்பளவாகவும், அதன் பின்பு நீச்சாளமும் கடக்க முடியாததுமாயிருக்கிறது.

சுவிசேஷ சபை ஆரம்பிக்கப்படும்போது, அதிலே விசுவாசிகளின் எண்ணிக்கை குறைவாகயிருக்கும். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வருவார். ஆவியானவரின் வரங்கள் அதிகமாய்ப் பயன்படுத்தப்படும். வரங்களும் பெருகும். சபையில் தேவகிருபையும் அதிகரிக்கும்.

காலையில் சூரியன் உதிக்கும்போது, பூமியில் வெளிச்சம் ஆரம்பமாகிறது. அந்த வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து, மதியவேளையில், வெளிச்சத்தின் அளவு உச்சநிலையிலிருக்கும். அதுபோலவே கர்த்தருடைய கிருபையும் வளர்ந்து பெருகும்.

அந்தப் புருஷனும் எசேக்கியேலும் நதியைப் பின்தொடர்ந்து போகிறார்கள். அவர்களைப்போலவே, நாமும் ஜீவநதியைப் பின்பற்றிப்போகவேண்டும். இந்த உலகத்தில் சுவிசேஷம் எப்படி கிரியை செய்கிறது என்பதை கவனித்துப் பார்க்கவேண்டும். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எவ்வாறு அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார் என்பதை நாம் தியானிக்கவேண்டும்.

நம்முடைய இருதயத்தில் கர்த்தருடைய கிருபை எவ்வாறு கிரியை நடப்பிக்கிறது என்பதையும், பரிசுத்த ஆவியானவர் நம்மை எவ்வாறு ஆளுகை செய்து ஆசீர்வதிக்கிறார் என்பதையும் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். எசேக்கியேல் நதியைப் பின்பற்றிப்போகிறார். அந்தப் புருஷனும் எசேக்கியேலும் கொஞ்ச தூரம் போனவுடன், நதியின் ஆழத்தை அளந்து பார்க்கிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நம்முடைய இருதயத்தைச் சோதித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவன் எப்படியிருக்கிறது என்பதை ஆராய்ந்து அறியவேண்டும்.

நாம் தேவனுடைய காரியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, ஒரு சில காரியங்கள் தெளிவாகவும், வெளிப்படையாகவும், புரிந்துகொள்வதற்கு எளிமையாகவும் இருக்கும். தண்ணீர் கணுக்கால் அளவாயிருக்கும்போது, அந்த தண்ணீரின் வழியாக தரையை தெளிவாகப் பார்க்க முடியும்.

தண்ணீரின் அளவு முழங்கால் அளவாகவும், இடுப்பளவாகவும் இருக்கும் போது, அதன் தரையை எளிதாகப் பார்க்க முடியாது. அதுபோலவே தேவனுடைய காரியங்கள் சில தெளிவாகவும், வெளிப்படையாகவும், புரிந்துகொள்வதற்கு எளிமையாகவும் இருக்காது.

எசேக்கியேலும் அந்தப் புருஷனும், அந்த நதியை தொடர்ந்து பின்பற்றிப்போன போது, ஒரு குறிப்பிட்ட தூரத்தில், எசேக்கியேலால் அந்த நதியை கடக்க முடியவில்லை. அதுபோலவே கர்த்தருடைய காரியங்களில் சிலவற்றை நம்மால் புரிந்துகொள்ள முடியாமல் போகலாம். அறியாத இரகசியங்கள் கர்த்தருக்கே உரியது.

கர்த்தருடைய இரகசியங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்றால் அவருடைய சமுகத்தில் அமர்ந்திருந்து, அவருடைய வார்த்தைகளைத் தியானிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் உதவியோடும், ஒத்தாசையோடும் கர்த்தருடைய பரமஇரகசியங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

"ஆ! தேவனே ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புக்கள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்?" (ரோம 11:33,34).

இந்தத்தண்ணீர் கிழக்குதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், வனாந்தரவழியாய் ஓடி கடலில் விழும்; இது கடலில் பாய்ந்து, விழுந்தபின்பு, அதின் தண்ணீர் ஆரோக்கியமாகும் (எசே 47:8). இந்த வாக்கியத்தில் "கடல்" என்று சொல்லப்பட்டிருப்பது சவக்கடலைக் குறிக்கலாம். இது தென்கிழக்கு திசையிலுள்ளது. அல்லது திபேரிய கடலைக் குறிக்கலாம். இது வடகிழக்கு திசையிலுள்ளது. அல்லது இது மேற்கு திசையிலுள்ள பெருங்கடலைக் குறிக்கலாம்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் யூதேயாவிலும், சமாரியாவிலும் பிரசங்கிக்கப்பட்டது. அதன் பின்பு, இதைச் சுற்றிலுமுள்ள எல்லா தேசங்களிலும், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. சமுத்திரங்களிலுள்ள தீவுகளிலும் கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது.

"அவனைக் கொலைசெய்கிதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்" (அப் 8:1).

இந்த நதியில் குணமாக்கும் வல்லமையுள்ளது. இந்த நதி கடலில் பாய்ந்து விழுந்த பின்பு, அதன் தண்ணீர் ஆரோக்கியமாகும். சவக்கடலில் உப்பு அதிகமாயிருக்கும். இந்த உப்புத்தன்மையெல்லாம் நீங்கி, இது இனிமையான தண்ணீராயிருக்கும். இதன் தண்ணீர் மனுஷருடைய சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மனுஷர் மத்தியிலே பிரசங்கம்பண்ணப் படுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் ஜீவனும் வல்லமையுமுள்ளது. இது மனுஷருடைய ஆத்துமாவில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவன் மரித்த நிலமையிலிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும்.

ஜீவநதி சவக்கடலில் பாயும்போது, சவக்கடலின் தண்ணீர் ஆரோக்கியமாகும். சவக்கடலிலிருந்து தோட்டங்களுக்கு நல்ல தண்ணீரைப் பாய்ச்சலாம். எலிசா உப்புப் போட்டு தண்ணீரை ஆரோக்கியமாக்கினார். அதுபோலவே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமும், நம்முடைய ஜீவனை ஆரோக்கியமாக்கும் உப்பாயிருக்கிறது.

"அப்பொழுது எலிசா: ஒரு புதுத்தோண்டியை எடுத்து, அதிலே உப்புப்போட்டுக் கொண்டுவாருங்கள் என்றான்; அதை அவனிடத்தில் கொண்டு வந்தபோது, அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்" (2இராஜா 2:20,21).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு பரமவைத்தியராய் வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமே பரமஔஷதம். கிறிஸ்துவின் வார்த்தை எல்லா வியாதிகளையும் குணப்படுத்தும். இந்த நதி போகும் இடம் எங்கும் உள்ள யாவும் ஆரோக்கியப்பட்டு பிழைக்கும். இந்த நதியிலுள்ள தண்ணீர் ஜீவத்தண்ணீர்.

இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவபிராணிகள் யாவும் பிழைக்கும்; இந்தத் தண்ணீர் அங்கே வந்தபடியினால் வெகு ஏராளமான மச்சங்களும் உண்டாயிருக்கும்; இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும் (எசே 47:9).

"பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதிதேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்" (வெளி 22:1)

"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக் கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளி 22:17).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கு ஜீவனைக் கொடுப்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார். இதற்காகவே தம்முடைய சுவிசேஷத்தை உலகம் முழுவதும் அனுப்புகிறார். தேவனுடைய கிருபையினால் பாவத்திற்கு மரித்துப்போன பாவிகள், நீதிக்கு பிழைக்கும் பரிசுத்தவான்களாக மாற்றப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் நம்முடைய இருதயத்திற்குள் பிரவேசிக்கும்போது, அது வேரூன்றி கனிதருகிறது. நம்முடைய ஜீவியம் நமக்கும் பிறருக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். நாம் கனிதந்து செழிப்பாயிருப்போம்.

இந்த நதியில் ஏராளமான மச்சங்கள் உண்டாயிருக்கும். மச்சங்கள் மாத்திரமல்ல, இந்த நதி போகுமிடமெங்கும் ஜீவப்பிராணிகள் ஏராளமாயிருக்கும். நதியோரத்தில், இக்கரையிலும் அக்கரையிலும் வெகுதிரளான விருட்சங்கள் இருக்கிறது. இவையெல்லாம் புசிப்புக்கான விருட்சங்கள் (எசே 47:7).

அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும்; அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள் (எசே 47:12).

எசேக்கியேல் இங்கு காண்கிற நகரத்து தரிசனமும், யோவான் கண்ட தரிசனமும் ஒன்றுபோலிருக்கிறது. "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதிதேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்" (எசே 22:1).

"வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்" (வெளி 22:2).

ஜீவவிருட்சத்தில் எல்லாமே பிரயோஜனமாயிருக்கிறது. அதன் இலைகளும் ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது. விசுவாசிகளும் ஜீவவிருட்சத்தைப்போல நற்கனிகளைக் கொடுப்பார்கள். அவர்கள் பலவீனரைப் பலப்படுத்துவார்கள். இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயம் கட்டுவார்கள்.

ஜீவவிருட்சத்தின் இலைகள் பட்டுப்போவதுமில்லை, உதிர்வதுமில்லை. அதன் கனிகள் கெடுவதுமில்லை. அவைகளுக்கு பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறது. இந்த விருட்சங்களுக்கு அதன் வேர் பகுதியிலிருந்து ஜீவன் வருவதுபோல, அதன் கிளைப்பகுதியிலிருந்தும் ஜீவன் வருகிறது. ஆகையினால் அவை மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. இந்த விருட்சங்கள் கனிகொடுப்பதினால் சோர்ந்துபோகாது.

விசுவாசிகளும் நற்கிரியைகளை செய்வதினால் சோர்ந்துபோகமாட்டார்கள். பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இந்த விருட்சங்களுக்கு தண்ணீர் பாய்வதுபோல, கர்த்தருடைய சமுகத்திலிருந்து நமக்கு தேவகிருபை கிடைக்கிறது. நாமும் தேவகிருபைகளைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய ஜீவியத்தில் ஆவியின் கனிகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

கானானின் எல்லை
எசே 47:13-23

எசே 47:13. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே தேசத்தைச்சுதந்தரித்துக் கொண்டு குறிக்கவேண்டிய எல்லையாவது: யோசேப்புக்கு இரண்டு பங்கு உண்டு.

எசே 47:14. சகோதரனோடே சகோதரனுக்குச் சரிபங்கு உண்டாக அதைச் சுதந்தரித்துக்கொள்ளக்கடவீர்கள்; அதை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்டுக் கொடுத்தேன்; ஆகையால் உங்களுக்கு இந்த தேசம் சுதந்தரமாகக் கிடைக்கும்.

எசே 47:15. தேசத்தின் எல்லையாவது: வடபுறம் பெரிய சமுத்திரந்துவக்கி, சேதாதுக்குப் போகிற எத்லோன் வழியாயிருக்கிற,

எசே 47:16. ஆமாத்தும், பேரொத்தாவும், தமஸ்குவின் எல்லைக்கும் ஆமாத்தின் எல்லைக்கும் நடுவான சிப்ராயிமும், ஆப்ரானின் எல்லையோடே சேர்ந்த ஆத்சார் அத்தீகோனுமானது.

எசே 47:17. அப்படியே சமுத்திரத்திலிருந்து போகிற எல்லை ஆத்சார் ஏனானும், தமஸ்குவின் எல்லையும், வடமுலையான வடக்கும் ஆமாத்தின் எல்லையுமானது; இது வடபுறம்.

எசே 47:18. கீழ்ப்புறத்தை ஆப்ரானுக்கும் தமஸ்குவுக்கும் நடுவாகவும், கீலேயாத்துக்கும் யோர்தானின் ஓரமான இஸ்ரவேல் தேசத்துக்கும் நடுவாகவும் கீழ்க்கடல்மட்டும் இருக்கும் எல்லையாய் அளப்பீர்களாக; இது கீழ்ப்புறம்.

எசே 47:19. தென்மூலையான தென்புறம் தாமார்துவக்கி, காதேசிலுள்ள சண்டைமூட்டுதலின் தண்ணீர்கள் மட்டாகவும், ஆறுமட்டாகவும், பெரிய சமுத்திரமட்டாகவும் இருப்பது; இது தென்மூலையான தென்புறம்.

எசே 47:20. மேற்புறம் அந்த எல்லைதுவக்கி ஆமாத்துக்கு எதிராக வந்து சேருமட்டும் இருக்கிற பெரிய சமுத்திரமே; இது மேற்புறம்.

எசே 47:21. இந்த தேசத்தை நீங்கள் இஸ்ரவேல் கோத்திரங்களின் படியே உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்வீர்களாக.

எசே 47:22. உங்களுக்கும், உங்களுக்குள்ளே தங்கி உங்களுக்குள்ளே பிள்ளைகளைப் பெறுகிற அந்நியர்களுக்கும், நீங்கள் அதைச் சீட்டுப்போட்டுச் சுதந்தரமாக்கிக் கொள்வீர்களாக; இவர்கள் உங்களுக்கு இஸ்ரவேல் புத்திரரில் பிறந்தவர்களைப் போல இருந்து, உங்களோடேகூட இஸ்ரவேல் கோத்திரங்களின் நடுவே சுதந்தரத்துக்கு உடன்படுவார்களாக.

எசே 47:23. அந்நியன் எந்தக் கோத்திரத்தோடே தங்கியிருக்கிறானோ, அதிலே அவனுடைய சுதந்தரத்தை அவனுக்குக் கொடுக்கக்கடவீர்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கானான் தேசம் இஸ்ரவேல் வம்சத்தாருக்குரியது. அவர்கள் கானான் தேசத்தை தங்களுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். கர்த்தர் ஒவ்வொரு கோத்திரத்தின் பங்குவீதத்திற்கும் எல்லைகளை நியமனம் பண்ணுகிறார். கர்த்தர் கானான் தேசத்தை அவர்களுடைய பிதாக்களுக்கு கொடுப்பதாக ஆணையிட்டுக்கொடுத்தார். ஆகையினால் கானான் தேசம் அவர்களுக்கு சுதந்தரமாகக் கிடைக்கும்.

கர்த்தர் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் எல்லைகளை குறித்துக் கொடுக்கிறார். இந்த எல்லைக்குறியை அவர்கள் மாற்றக் கூடாது. சகோதரனோடே சகோதரனுக்கு சரிபங்கு உண்டாயிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய தீர்மானம். யோசேப்புக்கு இரண்டு பங்கு உண்டு. லேவியருக்கு தேசத்திலே சுதந்தரமில்லை. இதன் பிரகாரம் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும், அவர்களுடைய இலக்கத்தின்படியே சுதந்தரவீதம் கிடைக்கும். இஸ்ரவேல் வம்சத்தார் கானான் தேசத்தை, தங்கள் கோத்திரங்களின்படியே, தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ள வேண்டும் (எசே 47:13,21).

வடபுறம் பெரிய சமுத்திரந்துவக்கி, சேதாதுக்குப் போகிற எத்லோன் வழியாயிருக்கிற, ஆமாத்தும், பேரொத்தாவும், தமஸ்குவின் எல்லைக்கும் ஆமாத்தின் எல்லைக்கும் நடுவான சிப்ராயிமும், ஆப்ரானின் எல்லையோடே சேர்ந்த ஆத்சார் அத்திகோனுமானது (எசே 47:15,16)

அப்படியே சமுத்திரத்திலிருந்து போகிற எல்லை ஆத்சார்ஏனானும், தமஸ்குவின் எல்லையும், வடமூலையான வடக்கும் ஆமாத்தின் எல்லையுமானது; இது வடபுறம் (எசே 47:17).

கீழ்ப்புறத்தை ஆப்ரானுக்கும் தமஸ்குவுக்கும் நடுவாகவும், கீலேயாத்துக்கும் யோர்தானின் ஓரமான இஸ்ரவேல் தேசத்துக்கும் நடுவாகவும் கீழ்க்கடல்மட்டும் இருக்கும் எல்லையாய் அளக்கவேண்டும்; இது கீழ்ப்புறம் (எசே 47:18).

தென்மூலையான தென்புறம் தாமார்துவக்கி, காதேசிலுள்ள சண்டை மூட்டுதலின் தண்ணீர்கள் மட்டாகவும், ஆறுமட்டாகவும், பெரிய சமுத்திரமட்டாகவும் இருப்பது; இது தென்மூலையான தென்புறம் (எசே 47:19).

மேற்புறம் அந்த எல்லைதுவக்கி ஆமாத்துக்கு எதிராக வந்து சேருமட்டும் இருக்கிற பெரிய சமுத்திரமே; இது மேற்புறம் (எசே 47:20). கானான் தேசத்தை, இஸ்ரவேல் வம்சத்தார், தங்கள் கோத்திரங்களின்படியே தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளவேண்டும் (எசே 47:21).

இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே அந்நியர்களும் தங்கியிருக்கிறார்கள். அந்நியர்கள், அவர்களுக்குள்ளே பிள்ளைகளைப் பெற்று, அவர்களோடே தங்கியிருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு, அவர்களுடைய புத்திரரில் பிறந்தவர்களைப்போல இருக்கவேண்டும். அந்நியர்களும், இஸ்ரவேல் வம்சத்தாரோடே கூட, அவர்களுடைய கோத்திரங்களின் நடுவே சுதந்தரத்துக்கு உடன்படவேண்டும் (எசே 47:22).

இஸ்ரவேல் வம்சத்தார் கானான் தேசத்தை, தங்கள் கோத்திரங்களின்படியே, தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளும்போது, அந்நியர்களுக்கும் சீட்டுப்போட்டு, அவர்களுடைய சுதந்தரத்தை அவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

அந்நியன் எந்தக் கோத்திரத்தோடே தங்கியிருக்கிறானோ, அதிலே அவனுடைய சுதந்தரத்தை அவனுக்குக் கொடுக்க வேண்டும் (எசே 47:23). அந்நியர்களும் இஸ்ரவேல் வம்சத்தார்போலவே பாவிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரவீதம் கிடைப்பதுபோல, அந்நிய புத்திரருக்கும் சுதந்தரவீதம் கிடைக்கிறது.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நிறைவேறும். புதிய ஏற்பாட்டில், யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையே, பிரிவினையாயிருந்த நடுச்சுவர் தகர்க்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சபையிலே, யூதருக்கும் புறஜாதியாருக்கும் வித்தியாசமில்லை. தேவனுக்கு முன்பாக எல்லோரும் சமம். கர்த்தரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை. யூதரும் புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள்.

"யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்" (ரோம 10:12).

48 அதிகாரம்

இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கு தேசத்தை பங்கிட்டுக்கொடுக்க வேண்டிய விவரம். பரிசுத்த ஸ்தலத்திற்கு வடக்கே இஸ்ரவேலின் ஏழுகோத்திரங்களுக்கு பங்குவீதம் கொடுக்கப்படுகிறது (எசே 48:1-7). மீதமுள்ள ஐந்து கோத்திரத்தாருக்கு பரிசுத்த ஸ்தலத்திற்கு தெற்கே பங்குவீதம் கொடுக்கப்படுகிறது (எசே 48:23-29).

பரிசுத்த ஸ்தலத்திற்கு அர்ப்பிதனாக்க வேண்டிய பங்கும், ஆசாரியரின் பங்குவீதமும் (எசே 48:8-11). லேவியரின் பங்குவீதம் (எசே 48:12-14). நகரத்தின் பங்குவீதம் (எசே 48:15-20). அதிபதியின் பங்குவீதம் (எசே 48:21,22).

நகரத்தின் அளவு, அதன் வாசல்கள், அதற்கு கொடுக்கப்படும் புதிய பெயர் (எசே 48:30-35). இத்துடன் எசேக்கியேலின் தரிசனம் நிறைவுபெறுகிறது.

இஸ்ரவேல் கோத்திரங்கள் எசே 48:1-29

எசே 48:1. கோத்திரங்களின் நாமங்களாவன: வடமுனைதுவக்கி ஆமாத்துக்குப்போகிற எத்லோன் வழியின் ஓரத்துக்கும், ஆத்சார் ஏனானுக்கும், ஆமாத்தருகே வடக்கேயிருக்கிற தமஸ்குவின் எல்லைக்கும் உள்ளாகக் கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் தாணுக்கு ஒரு பங்கும்,

எசே 48:2. தாணின் எல்லையருகே கீழ்த்திசைதுவக்கி மேற்றிசைமட்டும் ஆசேருக்கு ஒரு பங்கும்,

எசே 48:3. ஆசேரின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் நப்தலிக்கு ஒரு பங்கும்,

எசே 48:4. நப்தலியின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் மனாசேக்கு ஒரு பங்கும்,

எசே 48:5. மனாசேயின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் எப்பிராயீமுக்கு ஒரு பங்கும்,

எசே 48:6. எப்பிராயீமின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் ரூபனுக்கு ஒரு பங்கும்,

எசே 48:7. ரூபனின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் யூதாவுக்கு ஒரு பங்கும் உண்டாவதாக.

எசே 48:8. யூதாவின் எல்லையருகே கீழ்த்திசைதுவக்கி மேற்றிசைமட்டும் நீங்கள் அர்ப்பிதமாக்கவேண்டிய பங்கு இருக்கும்; அது, இருபத்தையாயிரங்கோல் அகலமும், கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் இருக்கிற பங்குகளில் ஒவ்வொன்றுக்கும் சரியான நீளமுமாம்; பரிசுத்த ஸ்தலம் அதின் நடுவிலே இருப்பதாக.

எசே 48:9. இதிலே கர்த்தருக்கு நீங்கள் அர்ப்பிதமாக்கவேண்டிய பங்கு இருபத்தையாயிரங்கோல் நீளமும், பதினாயிரங்கோல் அகலமுமாயிருப்பதாக.

எசே 48:10. வடக்கே இருபத்தையாயிரங்கோல் நீளமும், மேற்கே பதினாயிரங்கோல் அகலமும், கிழக்கே பதினாயிரங்கோல் அகலமும், தெற்கே இருபத்தையாயிரங்கோல் நீளமுமாகிய இந்தப் பரிசுத்த அர்ப்பிதநிலமானது ஆசாரியருடையதாயிருக்கும்; கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் அதின் நடுவிலே இருப்பதாக.

எசே 48:11. இஸ்ரவேல் புத்திரர் வழிதப்பிப்போகையில், லேவியர் வழிதப்பிப்போனதுபோல வழிதப்பிப் போகாமல், என் காவலைக் காத்துக் கொண்ட சாதோக்கின் புத்திரராகிய பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரியர்களுக்கு அது உரியதாகும்.

எசே 48:12. அப்படியே தேசத்தில் அர்ப்பிதமாக்கப்படுகிறதிலே மகா பரிசுத்தமான பங்கு அவர்களுக்கு லேவியருடைய எல்லையருகே இருப்பதாக.

எசே 48:13. ஆசாரியரின் எல்லைக்கு எதிராக லேவியர் அடையும் பங்கு இருபத்தையாயிரங்கோல் நீளமும், பதினாயிரங்கோல் அகலமுமாயிருக்கவேண்டும்; நீளம் இருபத்தையாயிரங்கோலும், அகலம் பதினாயிரங்கோலுமாயிருப்பதாக.

எசே 48:14. அவர்கள் அதில் ஒன்றையும் விற்கவும் தேசத்தின் முதல் விளைவை மாற்றவும் மற்றவர்களுக்குக் கொடுக்கவும் தகாது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது.

எசே 48:15. இருபத்தையாயிரங்கோலுக்கு எதிராக அகலத்தில் மீதியாயிருக்கும் ஐயாயிரங்கோலோவென்றால், பரிசுத்தமாயிராமல், குடியேறும் நகரத்துக்கும் வெளிநிலங்களுக்கும் விடவேண்டும்; நகரம் அதின் நடுவில் இருப்பதாக.

எசே 48:16. அதின் அளவுகளாவன: வடபுறம் நாலாயிரத்தைந்நூறு கோலும், தென்புறம் நாலாயிரத்தைந்நூறு கோலும் கீழ்ப்புறம் நாலாயிரத்தைந்நூறுகோலும், மேற்புறம் நாலாயிரத்தைந்நூறு கோலுமாம்.

எசே 48:17. நகரத்தின் வெளிநிலங்கள் வடக்கே இருநூற்றைம்பது கோலும், தெற்கே இருநூற்றைம்பது கோலும், கிழக்கே இருநூற்றைம்பது கோலும், மேற்கே இருநூற்றைம்பது கோலுமாயிருப்பதாக.

எசே 48:18. பரிசுத்த அர்ப்பிதநிலத்துக்கு எதிராக நீளத்தில் மீதியானது கிழக்கே பதினாயிரங்கோலும் மேற்கே பதினாயிரங்கோலுமாம்; அது பரிசுத்த அர்ப்பிதநிலத்துக்கு எதிராயிருக்கும்; அதின் வருமானம் நகரத்திற்காக ஊழியஞ்செய்கிறவர்களுக்கு ஆகாரமாயிருப்பதாக.

எசே 48:19. இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து குறிக்கப்பட்ட சிலர் நகரத்திற்காகப் பணிவிடை செய்வார்கள்.

எசே 48:20. அர்ப்பிதநிலமனைத்தும் இருபத்தையாயிரங்கோல் நீளமும், இருபத்தையாயிரங்கோல் அகலமுமாய் இருக்கக்கடவது; பட்டணத்தின் காணி உட்பட இந்தப் பரிசுத்த அர்ப்பிதநிலம் சதுரமாய் இருக்கவேண்டும்.

எசே 48:21. பரிசுத்த அர்ப்பிதநிலத்துக்கும் நகரத்தின் காணிக்கும் இந்தப்புறத்திலும் அந்தப் புறத்திலும், அர்ப்பிதநிலத்தினுடைய இருபத்தையாயிரங்கோலின் முன்பாகக் கிழக்கு எல்லைமட்டுக்கும், மேற்கிலே இருபத்தையாயிரங்கோலின் முன்பாக மேற்கு எல்லை மட்டுக்கும் மீதியாயிருப்பது அதிபதியினுடையது; பங்குகளுக்கு எதிரான அது அதிபதியினுடையதாயிருப்பதாக; அதற்கு நடுவாகப் பரிசுத்த அர்ப்பிதநிலமும் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலமும் இருக்கும்.

எசே 48:22. அதிபதியினுடையதற்கு நடுவேயிருக்கும் லேவியரின் காணிதுவக்கியும் நகரத்தின் காணிதுவக்கியும், யூதாவின் எல்லைக்கும் பென்யமீனின் எல்லைக்கும் நடுவேயிருக்கிறது அதிபதியினுடையது.

எசே 48:23. மற்றக்கோத்திரங்களுக்கு உண்டாகும் பங்குகளாவன: கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் பென்யமீனுக்கு ஒரு பங்கும்,

எசே 48:24. பென்யமீன் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் சிமியோனுக்கு ஒரு பங்கும்,

எசே 48:25. சிமியோனின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசை மட்டும் இசக்காருக்கு ஒரு பங்கும்,

எசே 48:26. இசக்காரின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் செபுலோனுக்கு ஒரு பங்கும்,

எசே 48:27. செபுலோனின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் காத்துக்கு ஒரு பங்கும் உண்டாயிருப்பதாக.

எசே 48:28. காத்தின் எல்லையருகே தென்மூலையாகிய தெற்கு எல்லை, தாமார்துவக்கி காதேசிலுள்ள சண்டைமூட்டுதலின் தண்ணீர்கள் மட்டாகவும் பெரிய சமுத்திரமட்டாகவும் போகும்.

எசே 48:29. சுதந்தரிக்கும்படி இதுவே நீங்கள் இஸ்ரவேல் கோத்திரங்களுக்குச் சீட்டுப்போட்டுப் பங்கிடும் தேசம், இவைகளே அவர்களின் பங்குகள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

கானான் தேசம் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு பாகம் பிரித்து கொடுக்கப்படுகிறது. பூர்வகாலத்தில், யோசுவா கானான் தேசத்தை, இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு பங்குவீதமாகப் பிரித்துக் கொடுத்தார். அப்போது பிரிக்கப்பட்டதற்கும், இங்கு பிரிக்கப்படுவதற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளது.

கானான் தேசம் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு இங்கு பங்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இதற்கு சரித்திரப்பிரகாரமான அல்லது பூகோள ரீதியான வியாக்கியானம் சொல்லுவதற்குப் பதிலாக, ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லவேண்டும். இதன் மறைபொருள் இன்னும் நமக்கு மறைவான இரகசியமாகவே இருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய புதிய பிரமாணத்தின்படி, கானான் தேசத்தை, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு பங்கு வீதமாகப் பிரித்துக்கொடுக்கிறார்.

யோசுவாவின் காலத்தில் கானான் தேசம் முதன்முதலாக பங்குவீதமாகப் பிரிக்கப்பட்டபோது, தாண் கோத்திரத்தாருக்கு கடைசி பங்குவீதம் கிடைத்தது. "ஏழாம் சீட்டு தாண் புத்திரருடைய கோத்திரத்திற்கு விழுந்தது" (யோசு 19:40).

இப்பொழுதோ தாண் கோத்திரத்தாரின் பங்குவீதம் முதலாவதாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது. "வடமுனை துவக்கி ஆமாத்துக்குப்போகிற எத்லோன் வழியின் ஓரத்துக்கும், ஆத்சார் ஏனானுக்கும், ஆமாத்தருகே வடக்கேயிருக்கிற தமஸ்குவின் எல்லைக்கும் உள்ளாகக் கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் தாணுக்கு ஒரு பங்கு உண்டாயிருக்கிறது (எசே 48:1).

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், தம்முடைய கிருபையினாலும், தம்முடைய சுதந்தரத்தை பங்கு பிரித்துக்கொடுப்பதற்கு, ஒரே முறைமையை கையாளவில்லை. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, புதிய முறைமையில், தம்முடைய சுதந்தரத்தை பங்கு பிரித்துக்கொடுக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் ஒரு காலத்தில் சமஸ்த இஸ்ரவேல் தேசமாயிருந்தார்கள். அதன் பின்பு அவர்கள் வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டு தேசங்களாகப் பிரிந்தார்கள். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கும், மீதமுள்ள இரண்டு கோத்திரத்தார் தெற்கு யூதாதேசத்திற்கும் பிரிந்துபோனார்கள்.

அசீரியாவின் ராஜா வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள பத்துக்கோத்திரத் தாரையும் தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போனான். அதன் பின்பு பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார்,தெற்கு யூதாதேசத்திலுள்ள இரண்டு கோத்திரங்களை, தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனான்.

கர்த்தர் கானான் தேசத்தை இப்பொழுது சுதந்தரவீதமாகப் பிரித்துக் கொடுக்கும்போது, அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போன, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும், பங்குவீதத்தைக் கொடுக்கிறார். இந்த தரிசன தேசத்தில் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பங்கு இருக்கிறது.

தாணின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் ஆசேருக்கு ஒரு பங்கும், ஆசேரின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் நப்தலிக்கு ஒரு பங்கும், நப்தலியின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் மனாசேக்கு ஒரு பங்கும், மனாசேயின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் எப்பிராயீமுக்கு ஒரு பங்கும், எப்பிராயீமின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் ரூபனுக்கு ஒரு பங்கும், ரூபனின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் யூதாவுக்கு ஒரு பங்கும் உண்டாயிருக்கும் (எசே 48:2-7).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் சுவிசேஷ சபை ஸ்தாபிக்கப்படும். அது பறந்து விரிந்திருக்கும். எல்லா தேசங்களிலும் சுவிசேஷ சபைகள் ஸ்தாபிக்கப்படும். இயேசுகிறிஸ்துவினுடைய புதிய உடன் படிக்கையின் பிரகாரம், எல்லா விசுவாசிகளுக்கும் அவருடைய சபையில் இடமுண்டு. விசுவாசிகளெல்லோரும் ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறார்கள்.

பூர்வகாலத்தில் புறஜாதியார் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம் பாயிருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லோருமே, அவருடைய காணியாட்சிக்கும், அவருடைய உடன்படிக்கைக்கும் உட்பட்டவர்களாயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தில் எல்லா விசுவாசிகளுக்கும் பங்கு உண்டு.

தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமே, இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் பங்குவீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. கர்த்தரே ஒவ்வொரு கோத்திரத்தின் பங்குக்கும் எல்லைகளை நியமிக்கிறார். கர்த்தர் தம்முடைய ராஜ்யத்தில், தமக்குப் பிரியமான பங்கை நமக்குக் கொடுப்பார். நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, நமக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியத்தின் பங்கை நிறைவேற்றவேண்டும்.

கர்த்தர் தமக்கு சித்தமான ஊழியத்தை நமக்குக் கொடுக்கிறார். நமக்கு என்ன தாலந்துகளைக் கொடுக்கவேண்டும் என்பது கர்த்தருக்குத் தெரியும். கர்த்தர் நமக்குக் கொடுக்கும் வரங்களை நாம் உண்மையாய்ப் பயன்படுத்தவேண்டும். கர்த்தரே நம்முடைய சுதந்தரவீதத்தை தெரிந்தெடுக்கிறார்.

"தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார். (சேலா)" (சங் 47:4).

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் அருகருகே குடியிருக்கிறார்கள். அவர்களுடைய குடியிருப்புக்கள் தொடர்ச்சியாயிருக்கிறது. ஒரு சுதந்தரவீதத்தின் எல்லை, அடுத்த சுதந்தரவீதத்தின் பங்கில் இருக்கிறது. சுதந்தரவீதங்களுக்கு நடுவே இடைவெளி இல்லை.

சபையிலுள்ள பரிசுத்தவான்கள் இசைவாயிருக்கவேண்டும். விசுவாசிகள் மத்தியிலே ஒற்றுமையும் ஐக்கியமும் காணப்படவேண்டும். சபைகளுக்குள்ளே ஒற்றுமை இருக்கவேண்டும். எல்லா விசுவாசிகளுமே இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்குரியவர்கள். கர்த்தரே நம் எல்லோரையும் ஆளுகை செய்கிறவர். நாம் ஒரே சரீரத்தின் வெவ்வேறு அவயவங்களைப் போல இருக்கிறோம். விசுவாசிகள் அனைவராகயிருந்தாலும், அவர்கள் பரிசுத்தமான அன்பிலும், அந்நியோன்னிய ஐக்கியத்திலும் ஒற்றுமையாயிருக்கவேண்டும்.

யோசுவாவின் காலத்தில், இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு பங்குவீதம் பிரிக்கப்பட்டபோது, ரூபனின் பங்கு யோர்தான் நதிக்கு அப்புறத்திலிருந்தது. ஆனால் இப்போதோ ரூபனின் பங்கு யூதாவின் பங்குக்கு அருகாமையிலுள்ளது. பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையில் ரூபனின் பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

யூதாவின் எல்லையருகே கீழ்த்திசைதுவக்கி மேற்றிசைமட்டும் அர்ப்பிதமாக்கவேண்டிய பங்கு இருக்கும்; அது, இருபத்தையாயிரங்கோல் அகலமும், கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் இருக்கிற பங்குகளில் ஒவ்வொன்றுக்கும் சரியான நீளமுமாம்; பரிசுத்த ஸ்தலம் அதின் நடுவிலே இருக்கிறது (எசே 48:8).

பரிசுத்த ஸ்தலம் கானான் தேசத்தின் நடுவிலிருக்கிறது. பரிசுத்த ஸ்தலத்திற்கு வடக்கே இஸ்ரவேலின் ஏழு கோத்திரத்தார் இருக்கிறார்கள். லேவியரும், பிரபுக்களும், நகரத்தின் பங்கும், இஸ்ரவேலின் மீதமுள்ள ஐந்து கோத்திரத்தாரின் பங்குவீதமும், பரிசுத்த ஸ்தலத்திற்கு தெற்கே உள்ளது. இவ்வாறாக பரிசுத்த ஸ்தலம் இஸ்ரவேல் தேசத்திற்கு நடுவிலே இருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு, இருபத்தையாயிரங் கோல் நீளமும், பதினாயிரங்கோல் அகலமுமுள்ள நிலத்தை அர்ப்பிதமாக படைக்கிறார்கள். இந்த நிலம் கானான் தேசத்திற்கு நடுவிலிருக்கிறது (எசே 48:9).

பரிசுத்த ஸ்தலம் எங்கே இருக்கிறதோ அங்கே ஆசாரியர்களும் இருக்கிறார்கள். வடக்கே இருபத்தையாயிரங்கோல் நீளமும், மேற்கே பதினாயிரங்கோல் அகலமும், கிழக்கே பதினாயிரங்கோல் அகலமும், தெற்கே இருபத்தையாயிரங்கோல் நீளமுமாகிய இந்தப் பரிசுத்த அர்ப்பித நிலமானது ஆசாரியருடையதாயிருக்கும்; கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் அதின் நடுவிலே இருக்கிறது (எசே 48:10).

ஆசாரியருக்கு அர்ப்பிதமாக பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கும் நிலம் சாதோக்கின் புத்திரருக்குரியது. இஸ்ரவேல் புத்திரர் வழிதப்பிப்போகையில், சாதோக்கின் புத்திரர் வழிதப்பிப்போகவில்லை. மற்ற லேவியர் வழிதப்பிப்போனதுபோல, சாதோக்கின் புத்திரர் வழிதப்பிப்போகாமல், கர்த்தருடைய காவலைக் காத்துக் கொண்டார்கள். ஆகையினால் ஆசாரியருக்கு அர்ப்பிதாக பிரித்துக்கொடுக்கப்பட்ட பரிசுத்த பங்கு சாதோக்கின் புத்திரராகிய பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரியர்களுக்குரியது (எசே 48:11).

தேசத்தில் அர்ப்பிதமாக்கப்படுகிறதிலே மகா பரிசுத்தமான பங்கு அவர்களுக்கு லேவியருடைய எல்லையருகே இருக்க வேண்டும். ஆசாரியரின் எல்லைக்கு எதிராக லேவியர் அடையும் பங்கு இருபத்தையாயிரங் கோல் நீளமும், பதினாயிரங்கோல் அகலமுமாயிருக்கவேண்டும்; நீளம் இருபத்தையாயிரங்கோலும், அகலம் பதினாயிரங்கோலுமாயிருக்கவேண்டும் (எசே 48:12,13).

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு அர்ப்பிதமாக பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிற நிலம் கர்த்தருக்கு பரிசுத்தமானது. அது பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையிலுள்ளது. ஆசாரியரும் லேவியரும் அந்த நிலத்தில் ஒன்றையும் விற்கக்கூடாது. தங்கள் விளைச்சல் நிலத்தின் முதல் விளைவை மாற்றவும், மற்றவர்களுக்கு கொடுக்கவும் கூடாது. அது கர்த்தருக்கு பரிசுத்தமானது (எசே 48:14). கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டதை மற்ற காரியங்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

கானான் தேசத்தில் நகரத்திற்கும், வெளி நிலங்களுக்கும் பங்குவீதம் பிரித்துக்கொடுக்கப்படுகிறது. இருபத்தையாயிரங்கோலுக்கு எதிராக அகலத்தில் மீதியாயிருக்கும் ஐயாயிரங் கோலோவென்றால், பரிசுத்தமாயிராமல், குடியேறும் நகரத்துக்கும் வெளிநிலங்களுக்கும் விடவேண்டும்; நகரம் அதின் நடுவில் இருக்கவேண்டும் (எசே 48:15). பரிசுத்த ஸ்தலத்தோடு ஒப்பிடும்போது, நகரத்தின் நிலம் வெளிநிலமாகவே இருக்கும். பரிசுத்த ஸ்தலத்தின் நிலத்தைப்போல, நகரத்தின் நிலம் பரிசுத்தமானதல்ல.

நகரம் சதுரமாயிருக்கும். நகரத்திற்கு வெளியே இருக்கும் வெளிநிலங்களின் அளவுகளும் ஒன்றுபோலிருக்கும்.

அதின் அளவுகளாவன: வடபுறம் நாலாயிரத்தைந்நூறு கோலும், தென்புறம் நாலாயிரத்தைந்நூறு கோலும் கீழ்ப்புறம் நாலாயிரத்தைந்நூறுகோலும், மேற்புறம் நாலாயிரத்தைந்நூறு கோலுமாம். நகரத்தின் வெளிநிலங்கள் வடக்கே இருநூற்றைம்பது கோலும், தெற்கே இருநூற்றைம்பது கோலும், கிழக்கே இருநூற்றைம்பது கோலும், மேற்கே இருநூற்றைம்பது கோலுமாம் (எசே 48:16,17).

கர்த்தர் இங்கு சொல்லுகிற அளவின் பிரகாரம், இதுவரையிலும் எந்த நகரமும் கட்டப்படவில்லை. ஆகையினால் வேதபண்டிதர்கள் இந்த நகரத்திற்கு ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இது ஜீவனுள்ள தேவனுடைய நகரம் என்றும், சுவிசேஷ சபையே அந்த நகரம் என்றும் வேதபண்டிதர்கள் இதற்கு விளக்கம் சொல்லுகிறார்கள். சபையின் ஆவிக்குரிய அழகையும், ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையையும் விவரிக்கும் வண்ணமாக, நகரம் சதுரமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து குறிக்கப்பட்ட சிலர் நகரத்திற்காகப் பணிவிடை செய்வார்கள் (எசே 48:19).

தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்கிற ஆசாரியர்களையும் லேவியர்களையும் கர்த்தர் பராமரிக்கிறார். "பரிசுத்த அர்ப்பிதநிலத்துக்கு எதிராக நீளத்தில் மீதியானது கிழக்கே பதினாயிரங்கோலும் மேற்கே பதினாயிரங் கோலுமாம்; அது பரிசுத்த அர்ப்பிதநிலத்துக்கு எதிராயிருக்கும்; அதின் வருமானம் நகரத்திற்காக ஊழியஞ்செய்கிறவர்களுக்கு ஆகாரமாயிருப்பதாக" (எசே 48:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அர்ப்பிதநிலமனைத்தும் இருபத்தையாயிரங்கோல் நீளமும், இருபத்தையாயிரங்கோல் அகலமுமாய் இருக்கவேண்டும்; பட்டணத்தின் காணி உட்பட இந்தப் பரிசுத்த அர்ப்பிதநிலம் சதுரமாய் இருக்கவேண்டும் (எசே 48:20).

கானான் தேசத்தில் அதிபதிக்கும் பங்கு வீதம் கொடுக்கப்படுகிறது. பரிசுத்த அர்ப்பிதநிலத்துக்கும் நகரத்தின் காணிக்கும் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்திலும், அர்ப்பித நிலத்தினுடைய இருபத்தையாயிரங்கோலின் முன்பாகக் கிழக்கு எல்லைமட்டுக்கும், மேற்கிலே இருபத்தையாயிரங்கோலின் முன்பாக மேற்கு எல்லை மட்டுக்கும் மீதியாயிருப்பது அதிபதியினுடையது; பங்குகளுக்கு எதிரான அது அதிபதியினுடையதாயிருக்கும். அதற்கு நடுவாகப் பரிசுத்த அர்ப்பிதநிலமும் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலமும் இருக்கும் (எசே 48:21).

யூதாவின் பங்குவீதம் பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையிலிருக்கிறது. பென்யமீனின் பங்குவீதமும் பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையிலிருக்கிறது. வடக்கு இஸ்ரவேல் தேசம் பிரிந்துபோனபோது, யூதாகோத்திரத்தாரும் பென்யமீன் கோத்திரத்தாரும், தாவீதின் வீட்டாரைப் பிரியாமல் யூதாதேசத்திலேயே இருந்துவிட்டார்கள். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரும் தேவாலயத்தையும், எருசலேமையும் விட்டுப் பிரிந்து, வடக்கு இஸ்ரவேலுக்குப்போனபோது, இவ்விரண்டு கோத்திரத்தாரும் யூதாதேசத்திலேயே தங்கிவிட்டார்கள். கர்த்தர் அவர்களுடைய உண்மையைக் கனம்பண்ணும் வண்ணமாக, அவர்களுக்கு பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையிலே பங்கு வீதங்களைக் கொடுக்கிறார்.

அதிபதியினுடையதற்கு நடுவேயிருக்கும் லேவியரின் காணிதுவக்கியும் நகரத்தின் காணிதுவக்கியும், யூதாவின் எல்லைக்கும் பென்யமீனின் எல்லைக்கும் நடுவேயிருக்கிறது அதிபதியினுடையது. (எசே 48:22).

மற்றக்கோத்திரங்களுக்கு உண்டாகும் பங்குகளாவன: கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் பென்யமீனுக்கு ஒரு பங்கும், பென்யமீன் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் சிமியோனுக்கு ஒரு பங்கும், சிமியோனின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசை மட்டும் இசக்காருக்கு ஒரு பங்கும், இசக்காரின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் செபுலோனுக்கு ஒரு பங்கும், செபுலோனின் எல்லையருகே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் காத்துக்கு ஒரு பங்கும் உண்டாயிருக்கும் (எசே 48:23-27).

காத்தின் எல்லையருகே தென்மூலையாகிய தெற்கு எல்லை, தாமார்துவக்கி காதேசிலுள்ள சண்டை மூட்டுதலின் தண்ணீர்கள் மட்டாகவும் பெரிய சமுத்திரமட்டாகவும் போகும். (எசே 48:28).

இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு சீட்டுப்போட்டு பங்கிடும் தேசத்தைப்பற்றி கர்த்தர் இதுவரையிலும் எசேக்கியேலுக்கு விரிவாகச் சொன்னார். இவைகளே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருடைய பங்குகள்.

யேகோவா ஷம்மா
எசே 48:30-35

எசே 48:30. நகரத்தினின்று புறப்படும் வழிகளாவன: வடபுறத்திலே நாலாயிரத்தைந்நூறு கோலாகிய அளவுண்டாயிருக்கும்.

எசே 48:31. நகரத்தின் வாசல்கள், இஸ்ரவேல் கோத்திரங்களுடைய நாமங்களின்படியே பெயர் பெறக்கடவது; வடக்கே ரூபனுக்கு ஒரு வாசல், யூதாவுக்கு ஒரு வாசல், லேவிக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள் இருப்பதாக.

எசே 48:32. கீழ்ப்புறத்திலே நாலாயிரத்தைந் நூறு கோல், அதில் யோசேப்புக்கு ஒரு வாசல், பென்யமீனுக்கு ஒரு வாசல், தாணுக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள் இருப்பதாக.

எசே 48:33. தென்புறத்திலே நாலாயிரத்தைந்நூறு கோல், அதில் சிமியோனுக்கு ஒரு வாசல், இசக்காருக்கு ஒரு வாசல், செபுலோனுக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள் இருப்பதாக.

எசே 48:34. மேற்புறத்திலே நாலாயிரத்தைந்நூறு கோல், அதில் காத்துக்கு ஒரு வாசல், ஆசேருக்கு ஒரு வாசல், நப்தலிக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள் இருப்பதாக.

எசே 48:35. சுற்றிலும் அதின் அளவு பதினெண்ணாயிரங்கோலாகும்; அந்நாள் முதல் நகரம் யேகோவா ஷம்மா என்னும் பெயர்பெறும்.

பரிசுத்த ஸ்தலத்திலே இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தரை ஆராதிக்க வருவார்கள். பரிசுத்த ஸ்தலத்தைச் சுற்றிலும் பரிசுத்தமான நகரம் கட்டப்படும். இந்த நகரத்திற்கு எருசலேம் என்றோ அல்லது கானான் என்றோ இங்கு பெயர் கொடுக்கப்படவில்லை. பழையவைகளெல்லாம் ஒழிந்துபோயின. இப்பொழுது எல்லாம் புதிதாயிருக்கிறது.

நகரத்திலிருந்து புறப்படும் வழி, வடபுறத்திலே நாலாயிரத்து ஐநூறு கோலாகிய அளவு உண்டாயிருக்கும். கர்த்தர் நகரத்தின் வாசல்களைப்பற்றியும் சொல்லுகிறார். நான்கு திசைகளிலும் வாசல்கள் இருக்கிறது. ஒவ்வொரு திசையிலும் மூன்று வாசல்கள் இருக்கிறது. மொத்தம் பன்னிரண்டு வாசல்கள். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத் தாருடைய பெயர்கள், இந்தப் பன்னிரண்டு வாசல்களுக்கும் பெயரிடப்பட்டிருக்கிறது.

நகரத்தின் வாசல்கள், இஸ்ரவேல் கோத்திரங்களுடைய நாமங்களின்படியே பெயர் பெறக்கடவது; வடக்கே ரூபனுக்கு ஒரு வாசல், யூதாவுக்கு ஒரு வாசல், லேவிக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள். கீழ்ப்புறத்திலே நாலாயிரத்தைந் நூறு கோல், அதில் யோசேப்புக்கு ஒரு வாசல், பென்யமீனுக்கு ஒரு வாசல், தாணுக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள். தென்புறத்திலே நாலாயிரத்தைந்நூறு கோல், அதில் சிமியோனுக்கு ஒரு வாசல், இசக்காருக்கு ஒரு வாசல், செபுலோனுக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள் மேற்புறத்திலே நாலாயிரத்தைந்நூறு கோல், அதில் காத்துக்கு ஒரு வாசல், ஆசேருக்கு ஒரு வாசல், நப்தலிக்கு ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள் (எசே 48:31-34).

யோவான் புதிய எருசலேமை தரிசித்தார். அதற்கு பன்னிரண்டு வாசல்கள் இருக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வாசல்கள்.

"அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன" (வெளி 21:12,13).

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையில், இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எல்லோருமே, சபையில் தாராளமாய்ப் பிரவேசிக்கலாம். எல்லா ஜாதியாரும், எல்லா தேசத்தாரும், உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் கர்த்தருடைய சபைக்கு வரலாம். கிறிஸ்துவானவர் பரலோகத்தின் ராஜ்யத்தை எல்லா விசுவாசிகளுக்கும் திறந்து கொடுத்திருக்கிறார்.

நகரத்தைச் சுற்றிலும் அதன் அளவு பதினெண்ணாயிரங்கோல் (எசே 48:35). இந்த அளவுகள் எந்த ஆதாரத்தின் பிரகாரமாக அளக்கப்படுகிறது என்று தெரியவில்லை. வேதபண்டிதர்கள் இதற்கும் ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

இந்தப் புதிய நகரம், யேகோவா ஷம்மா என்னும் பெயர்பெறும். பழைய நகரத்திற்கு எருசலேம் என்று பெயர். இதற்கு சமாதானத்தின் தரிசனம் என்று பொருள் சொல்லலாம். யேகோவா ஷம்மா என்னும் பெயருக்கு "கர்த்தர் இங்கே இருக்கிறார்" என்று பொருள்.

யூதர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வரும்போது, அவர்களுக்கு கர்த்தருடைய பிரசன்னம் தேவைப்படுகிறது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக அவருடைய வாசஸ்தலம் அவர்கள் மத்தியிலே இருக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில், கர்த்தருடைய பிரசன்னம் இருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசரிப்புக்கூடாரத்திலும், தேவாலயத்திலும் ஷேக்கைனா மகிமை தங்கியிருந்தது. அது கர்த்தருடைய மகிமை. யேகோவா ஷம்மா என்பது பரிசுத்த ஆவியானவருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூடயிருக்கிறேன்" என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார்.

நம்முடைய ஆத்துமாவில் கர்த்தருடைய கிருபை ஜீவனோடிருக்கிறது. நம்முடைய ஆத்துமாவிற்குள் மெய்யாகவே கர்த்தர் இருக்கிறார். நம்முடைய ஆத்துமா யேகோவா ஷம்மா என்னும் பெயர் பெறும். நாமே கர்த்தருடைய ஆலயம். கர்த்தர் நமக்குள்ளும், நம்மோடும் கூடவே இருக்கிறார்.

கர்த்தர் எங்கு இருக்கிறாரோ அங்கு பரலோகத்தின் மகிமையும், பரலோகத்தின் சந்தோஷமும் தங்கியிருக்கும். நம்முடைய ஆத்துமாவில் கர்த்தருடைய பிரசன்னம் இருக்கும்போது, அங்கு கர்த்தருடைய கிருபையும் சந்தோஷமும் நிறைவாய்த் தங்கியிருக்கும்.